Be as careful of the books you read as of the company you keep: for your habits and character will be as much influenced by the former as by the latter. —*Paxton Hood.*

Knowledge is destroyed by associating with the base; with equals equality is gained, and with the distinguished, distinction.

Experience keeps a dear school, but fools will learn in no other, and scarce in that; for it is true, we may give advice, but we cannot give conduct. —*Franklin.*

Though you may yourself abound in treasure, teach your son some handicraft; for a heavy purse of gold and silver may run to waste, but the purse of the artisan's industry can never get empty. —*Sa'di.*

What is the most profitable? *Fellowship with the good.* What is the worst thing in the world? *The society of evil men.* What is the greatest loss? *Failure in one's duty.* Where is the greatest peace? *In truth and righteousness.* Who is the hero? *The man who subdues his senses.* Who is the best beloved? *The faithful wife.* What is wealth? *Knowledge.* What is the most perfect happiness? *Staying at home.* —*Bhartrihari.*

He who has more learning than goodness is like a tree with many branches and few roots, which the first wind throws down; whilst he whose works are greater than his knowledge is like a tree with many roots and fewer branches, which all the winds of heaven cannot uproot. —*Talmud.*

By nature all men are alike, but by education very different. *Chinese.*

A man who has learnt little grows old like an ox; his flesh grows, but his knowledge does not

He who is full of faith and modesty, who shrinks from sin, and is full of learning, who is diligent, unremiss, and full of understanding, the being replete with these seven things, is esteemed a wise man. —*Burmese.*

A man of little learning deems that little a great deal: a frog never having seen the ocean, considers its well a great sea.—*Burmese.*

As the lotus floats on the surface of the pool, so the level of conduct is determined by what a man reads, and the character of those who surround him.

கடவுள் மகிமை.

"கற்ற தலைலாய பயனென்கொல் வாலறிவ
னற்ற டொழாஅ ரெனின்."

கல்வியின் பிரயோசன மெல்லாங்கூடி கடவுளை அறிவதுதான்.

"அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றேறயுலகு."

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலியுடையன. அது போல உலகு ஆதிபகவனாகிய முதலி யுடைத்து என்னும் கருத்தைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் வெளியிட்டருளியபடி,

சகல வஸ்துக்களுக்கும் மேலானவஸ்துவும், எல்லா ஒளிகளுக்கும் மேலான சோதிப்பிரகாசம் அமர்ந்திருக்கும் உத்தமகுணக் கடலும், மட்டற்ற நன்மைச் சொரூபியுமாகிய தேவனுடைய உன்னத மேன்மையையும், மகிமைப்பிரதாப சோபனத்தையும் தியானித்துணராவே ஆனந்த வெள்ளத்திற் படிந்து பரவசமாகாதவருளரோ?

எப்படித் தேவதாசனை மோசே பராபரனுடன் பேசுவதற்காக மேகங்களினிடையிற் புகுந்து உன்னத சிகரத்தின் உச்சிமேலேறி இவ்வுலக வஸ்துக்களை யெல்லாம் தன் கண்ணுக்கு மறைக்கும்படியான அந்தகாரத்திலிருந்து தேவனை அதிகக் காந்திப் பிரமையோடு கண்டாரோ, அப்படியே, கடவுளின் மகிமைப் பிரதாபத்தை உற்றுப் பார்க்க விரும்புவோர் இப்பிரபஞ்ச வஸ்துக்களெல்லாம் நிலையற்ற அநித்திய நீச வஸ்துக்களென்றும், தனதமையற்ற பொருட்களென்றும் எண்ணி அவைகளைப் பாராமல் புறக்கண்ணை மூடிக்கொண்டு அகக் கண்ணால் பரத்தை நோக்க ஸர்வ உத்தம சம்பன்னமும் பொருந்திய சுத்த சுயம்புவாகிய பரம்பொருளைத் தரிசிக்கலாம்.

"அற்றது பற்றெனின் உற்றது மோட்சம்"

இந்தப்பூமி எவ்வளவு பெரிதென்பதை நாமெல்லோரும் காட்சிப் பிரமாணமா யறிந்திருக்கிறோம். இப்பூமியிலும் சூரியன் பதின்மூன்றிலட்சம் பங்கு அதிகப் பெரியது. அச்சூரியனைப்போல அநேக கோடி சூரியர்களும், சந்திரர்களும் ஆகாயவிரிவில் நட்சத்திர வடிவமாக நமக்குக் காணப்படுகின்றன. நாம் பார்க்கிற நட்

சத்திரங்கள் தவிர நம்முடைய பார்வைக்கெட்டாத தூரத்திலும் அதற்கு மேலுங்கீழும் அடுக்கடுக்காக எண்ணிக்கையில்லாத நட்சத்திரக் கூட்டங்களிருக்கின்றன. அவைகள் ஒன்றிற்கொன்று சமீபம்போல் நமக்குக் காணப்படினும் அவைகளுக்கும் இந்தப்பூமிக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவைகள் ஒன்றுக்கொன்று இருக்கின்றன. இந்தச் சூரியனைச் சுற்றிப் பூமி முதலிய பல கிரகங்கள் ஓடுவனபோல், நட்சத்திரம்போல் சிறிதாய் நமது கண்களுக்குத் தோன்றும் ஒவ்வொரு சூரியனையும் பல புவனங்கள் சுற்றி யோடுகின்றன. அப்படியாயின் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சந்திரர் சூரியர்களையும் புவனகோடிகளையும் எண்ணத் தொலையுமா? எட்டில் அடங்குமா? அந்தப் பிரமாண்ட கோடிகளுக்குள் இந்தப்பூமி ஒரு அணுவுக்கும் சமானமல்லவே. சகல புவனங்களையுந் தாங்கிப் படியளக்கிற கர்த்தாவுக்குச் சிறிது கோபம் ஜனித்தால் அண்ட அடுக்குகள் குலைந்து ஒன்றோடொன்று மோதிச் சூரியமண்டலம் சந்திரமண்டலத்தின்மேலும் சந்திரமண்டலம் பூமண்டலத்தின்மேலும் விழுந்து சின்னபின்னமாய்ச் சிதறுண்டு போமென்பது சந்தேகமா?

பல அண்டகோடிகளும் பரமபதியின் பாதத்துகள். சூரியன், அக்கினி முதலிய சுடர்கள் கடவுளினுடைய திவ்யப் பிரகாசமேனியிலிருந்து சிதறிய சிறு பொறிகள். சமுத்திரங்களும் மேகங்களும் அவருடைய கிருபா சமுத்திரத்திலிருந்து தெறித்த சிறு துளிகள். பிரசண்டமாருதம் அவருடைய சிறுவிரலின் அசைவு. உன்னத பர்வதங்கள் அவர் விளையாடும் பந்துகள். அவருடைய பிள்ளைகளாகிய நமக்காக அவரால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரரே பஞ்சபூதாதிகள். கற்பகோடி காலங்கள் அவருக்குக் கணப்பொழுது. தமக்குத் தேகமில்லாதிருந்தும் சகல ஜீவன்களுக்கும் தேகங்களைக் கொடுப்பவர் அவரே. தாம் நித்திரை செய்யாமல் மன்னுயிர்களைந் தூங்க வைத்துக் காவலா யிருப்பவர் அவரே. தாம் நடவாமல் திரியாமல் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருப்பவர் அவரே. தாம் கைவேலை செய்யாமல் நினைத்த மாத்திரத்தில் அண்டகோடிகளை யுண்டாக்கி இரக்ஷிப்பவரும் அவரே. அந்த அண்டகோடிக

ளைச் சாட்டையில்லாப் பம்பரம்போல் ஆட்டுகின்றவரும் அவரே. கண்ணையிருந்து பொருளைக் காட்டுகின்றவரும் அவரே. ஐந்திரியானந்தங்களை யெல்லாம் நமக்கு ஊட்டுகின்றவரும் அவரே. கிருபா நோக்கத்தால் நம்மைப் பார்ப்பவரும் அவரே. துஷ்டசத்துருக்கள் மேல் சூஷாத்திரம் செய்கிற சூஷத்திரியரும் அவரே. பக்தர்களுக்கு மோக்ஷ வியாபாரம்செய்யும் வைசியரும் அவரே. அண்டங்களை இயக்குகின்ற சூத்திரதாரியும் அவரே. ஜீவகோடிகளுக்கு வேளாண்மை செய்கிற வேளாளரும் அவரே. அண்டவீடுகளைக் கட்டிய தெய்வத் தச்சனுருமவரே. தாசர்செய்யும் ஜெபத்துக்குக் கட்டுப்படுபவருமவரே. ஒரு சிறிய வஸ்துவைக்கொண்டு பெரிய விஷயங்களையும், சுக்கில சுரோணிதங் கலந்த சிறுதுளி மூலமாய்ப் பெரிய உடல்களையும், ஒரு தானியத்தைக் கொண்டு கோடி தானியங்களையும் செய்கிற ஜாலவித்தைக்காரருமவரே. மனுஷர்களுக்கும், மிலங்குகளுக்கும், பக்ஷிகளுக்கும், புஷ்பங்களுக்கும் பல வர்ணங்களையும், அலங்காரங்களையும், அமைத்தெழுதிய சித்திரக்காரருமவரே. ஆத்தும அரசன் குடியிருக்கும் பொருட்டு இருகால் நாட்டி, இரத்த நீர்சேர்த்து, மாம்ஸச்சுவர் எழுப்பி, என்புக்கழிகளைப் பாப்பி, நரம்புக் கயிற்றுகளால் கட்டித், தோலாகிய கூரைவேய்ந்து, ஒன்பது வாயில் அமைத்து, சரீரவீட்டைச் செய்த கொத்தனுருமவரே. அந்த வீட்டில் பிராணவாயு சஞ்சரிக்கச் செய்த மந்திரவாதியுமவரே. நமக்குத் தெரியாமல் நம்முடைய சித்தங்களில் வசிக்கின்ற சித்தருமவரே. தேகவீடு தானே வளரவும், நிமிரவும், குனியவும், நடக்கவும், ஓடவும், இருக்கவும், படுக்கவும், தூங்கவும், பலவேலைகளைச் செய்யவும், உண்ணவும், உண்ணுகிற பதார்த்தங்கள் ஜீரணித்து உடலெங்கும் பரவவும், மனமானது சஞ்சரிக்கவும், ஆலோசிக்கவும், சுகிக்கவும், துக்கிக்கவும், பஞ்சேந்திரியங்கள் பல இன்பங்களை அனுபவிக்கவும், நம்முடைய ஸ்வாதீனமில்லாமல் சுவாசந்தானே ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கவும், இருதயம் ஓயாமல் மணிக்கடியாரம்போல் அடித்துக் கொண்டிருக்கவும், செய்த பரமதயாநிதியுமவரே.

கடவுளின் மகிமைப் பிரதாபத்தை எடுத்துரைக்கக் கூடியதாவும் உள்ளதோ? கடவுள் சர்வக்ஞர், சர்வசக்தர், சர்வேசுரர்,

சர்வஜ்ஞாரணர், சர்வகற்பிதா, சர்வநியந்தர், சர்வாந்தரியாமி; அவர் தீனகிருபாகரர், சீலமேணைகரர், ஞானதிவாகரர், நற்குணசாகரர், ப்ரமபவித்தரர், பக்தர்கள் மித்தரர், அவர் தர்மசமுத்தரர், சகல விசித்தரர், அகில நிர்வாகரர், ஆனந்தபோகர், ஜீகபரத்தியாகர், இன்பப் பிரவாகர், அவர் மோட்சதாதா, மூலவேதா, சாட்சாத் மாதா, சர்வஞ்ஞாதா; அவர் ஆதிமத்தியாந்தரகிதர், சோதி நித்தி யானந்தசகிதர், வேதசித்தாந்தவிகிதர், போதவிருத்தாந்த லிகிதர், அவர் கபடநாடக சூத்தரர், தபனகோடி காத்தரர், உபஞான நேத் தரர், அபயமோக்ஷதீக்ஷித்தரர்; அவர் பாவநாசர், ஜீவநேசர், தேவ ராசர், மகாவிலாசர், இப்படிப்பட்ட அநந்த கல்யாண குணங்களை யுடைய பராபர வஸ்துவினுடைய மகோன்னதப் பிரதாபத்தை யார்தான் அறிவார்?

'அங்கின் கெனதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும்படிக் கிச்சைசெவத் துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மேலுவாக்கினிற்
றட்டாம னின்றதெது சமயகோடிக ளெல்லாந்
தந்தெய்வ மென்தெய்வமென்
றெங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல் பகலறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததது வே
கண்டனவெலா மோனவுரு வெளியதாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்.'

என்று தாயுமானவரும் சொல்வதும்போல்,

சகல சாஸ்திரங்களும், வேதங்களும், வேதாகமங்களும், சமயகோடிகளும் சொல்வதெல்லாம் கடவுளேயல்லாமல் வேறல்ல.

கல்விமானுக்குத் தெய்வபக்தியே சிறந்த பூஷணமாயிருக்கின்றது. ஒருவன் கல்விமானாயிருந்தாலும், தனவானாயிருந்தாலும், அவனிடத்தில் தெய்வநேசம் இல்லாவிட்டால் அவனைப்போல நிர்ப்பாக்கியர்கள் ஒருவருமில்லை. ஒருவன் தரித்திரனாயிருந்தாலும், பக்திமானாயிருப்பானானால் அவனைப்போல பாக்கியசாலிகள் ஒருவருமில்லை. ஒவ்வொரு நிமிஷமும் கடவுளிடத்தில் நாம் பெற்றுக்கொள்ளுகிற உபகாரங்களுக்குக் கணக்குண்டா? நாம் உண்பது அவருடைய அன்னம்; உடுப்பது அவருடைய வஸ்திரம்; குடிப்பது அவருடைய ஜலம்; நாம் வசிப்பது அவருடைய வீடு; சஞ்சரிப்பது அவருடைய பூமி; நாம் சுவாசிப்பது அவருடைய சுவாசம்; நாம் காண்பது அவருடைய பிரகாசம்; நாம் அனுபவிப்பது அவருடைய சுகம்; அந்தச் சுகங்களை அனுபவிக்கிற நமது தேகமும், பஞ்சேந்திரியங்களும், ஆத்மாவும் அவருடைய கொடை. அவருடைய கிருபை இல்லாவிட்டால் ஒரு நிமிஷமேனும் நாம் ஜீவிக்கக்கூடுமா? அவர் நம்மை அணைக்காமல் நாம் அணையக்கூடுமா? அவர் நம்மை நடப்பிக்காவிட்டால் நாம் நடக்கக்கூடுமா? பூமியைப் பார்த்தாலும், ஆகாசத்தைப் பார்த்தாலும், எங்கே பார்த்தாலும், அவருடைய உபகாரமயமேயன்றி வேறுண்டோ? ஆகாயம் நம்மைச் சூழ்ந்திருப்பதுபோல, அவருடைய உபகாரங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. சமுத்திரத்திலே பிறந்து, சமுத்திரத்திலே வளர்ந்து, சமுத்திரத்திலே ஜீவிக்கிற மீன்கள்போலக் கடவுளது கிருபா சமுத்திரத்துக்குள்ளாகவே நாம் ஜனித்து, வளர்ந்து, ஜீவிக்கிறோம்.

தெய்வத்தை அஞ்சலியா கை நெற் குற்றம் உலக்கை; தெய்வத்தைப் பணியாத முடி கம்பள நார் முடி; தெய்வத்தைத் தரிசிக்காத கண் பாம்புப் புற்றுக் கண்; தெய்வத்தை வாழ்த்தாத வாய் சண்ணும்புக் காளவாய்; தெய்வ ஸ்தலத்தைத் தேடிச்செல்லாத கால் புந்தற்கால்; தெய்வ ஸ்துதியைக் கேளாத செவித் தொளை பருத்த நுகத்தொளை. காற்றுக் கெதிரே ஏற்றிய விளக்குபோல, அடிக்கடி யலைந்து ஓயாமலாடும் பம்பரம்போல இடைவிடாது சுழன்று, ஒரு வேலையு மில்லா விட்டாலும் நிற்க நேரமில்லாமல் திரியும் நாய்போல அனாக்கணமும் தங்காது, காடு மலை

காணுறுக ளெல்லாங் கடந்து, லோகா லோகமெங்கும் ஓடிழுத்
கின்ற பொல்லாத மனமென்னுங் குரங்கு அஞ்ஞானமாகிய வலை
கொண்டு, ஆணவமாகிய மாத்திலேறி, பலவகை யெண்ணமாகிய
இலைகள் செறிந்த ஆசையாகிய கிளைகளைத் தாவி, தீவினையாகிய
கனிகளைக் கொள்ளை கொண்டு, சேஷ்டை செய்யவொட்டாமல்,
அதனை நிராசையாகிய கயிற்றினைற் கட்டி, அடக்கி வைத்தாலும்,
தெய்வம் அமைத்த இரகசியமார்க்கத்தை உணரும் ஞானமில்
லாதவர்களுக்கும் மோட்சத்திற்கும் வெகுதூரமே.

" ஐயறி வறிந்தவை யடங்கின வரோனு
மெய்யறி விலாதவர்கள் வீடதுபெறுரே."

தெய்வநிலை இத்தண்மைத்தென்று அத்தெய்வத்தின் அரு
ளாக்கொண் டறிந்தாலன்றி, மற்றொரு விதத்தில் தெளியக்கூடா
மையால் யானைகண்ட குருடர்போலவும்,

" தோள்கண்டார் தோளேகண்டார் தொடிகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாருமீதே
வாள்கொண்ட கண்ணுர்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னுனுருவு கண்டாரை யொத்தார்."

என்பதுபோல், உலகத்திலுள்ள பற்பலசமயத்தாரும் பற்பல அவ
சரமாகத் தாம் தாம் கண்டதையே பொருளென்று மதித்து அதற்
குத் தக்க யுக்தி சாதனங்களைக் கொண்டு சாதிப்பார்கள். பொறிக
ளாகிய மதயானைகளைப் புலன்களின்மேற் செல்ல வொட்டாமல்
அறிவென்னும் அங்குசத்தால் அடக்கி, நெஞ்சமாகிய குதிரை
யைப் பகிர்முகமாகிய வெட்ட வெளியில் ஓடவிடாது, பக்தியாகிய
கடிவாளத்தை யிறுக்கி, வைராக்கியமென்ற தளையைப்பூட்டி, அந்
தர்முகத்தில் நிறுத்தி, பரமகாருணியராகிய கடவுளைத் தியானி
த்து, அவருக்கடிமை பூண்டு " அற்றது பற்றெனி லுற்றது வீடு "
என்ற வண்ணம், அகங்கார மமகாரமாகிய பற்றுக்களை வாசனை
யோடே கைவிட்டு, இனி துஷ்கிருத்தியங்களைச் செய்யாது, கட
வுள் ஆணைக்கமைந்து அவருடைய திருவடித் தொண்டு செய்து,
எனக்கொன்று மில்லையென்னும் உபாயபாதந்திரனு பொழுதில்,
பந்தங் கெட்டு மோட்சங் காட்சியாகும்.

கல்விமரlessed are the pure in heart; for they shall see God.) ஒருருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்றார் இயேசு சுவாமி. தெய்வ பக்தியே தினையாகிய உலையைக் கடந்துசெல்லும் ஊன்றுகோல்; தெய்வதரிசனமே இப்பிறவிக் கடலைக் கரைகாணும் நாவாய்; தெய்வத்தியானமே முத்தியாகிய மேல்வீட்டிலேறும் நூலேணி. தெய்வத்தின் அருளுதயமே அஞ்ஞான யிருளை யொழிக்கும் ஆதித்தியோதயம்; தெய்வ வணக்கமே நாகவாசலை அடைக்குந் தாழ்; தெய்வத்தை வாழ்த்தும் வாழ்த்தே பாசவிலங்கைத் தறிக்கும் கருவியாம்; தெய்வபக்தி உதிக்காமல் உலகபாசம் ஒழியென்றாலும் ஒழியாது; பாவநிவாரண பலியாக தம்மையே தத்தம் செய்த தெய்வத்தைத் தொழாமற் பாவநிவாரணமாகிறது பிரயாசம். தெய்வத்தை ஆராதிப்பதல்லவோ தவஞ் செய்கை? அதற்கு அந்நியமாகச் செய்வனவெல்லாம் அவஞ் செய்கையே. ஒரு நொடிப் பொழுதாவது தெய்வத்தை ஸ்துதியாத நாவுக்குப்பரிசுத்தமேது? தெய்வச் சிந்தனையிலுலன்றிச் சித்தசுத்தி சொப்பனத்திலும் வருமா? சுயகாரிய துரந்தரனுஞ் சுவாமிகாரிய வழுவழுகணுமாயிருப்பவனுக்குத் தெய்வகடாக்ஷம் எவ்வாறுகிடைக்கும். "குழந்தையுந் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்கிறார்களே. புறக்கண்ணினாற் கடவுளை நிஜஸ்வரூபமாய்க் காணவே கூடாது; அகக்கண்ணினுல் ஒருவாறு காணலாம். அநேகர் அஞ்ஞான விருள் சூழ்ந்து அகங் குருடாயிருப்பதனால், அவர்களுக்கு அகக்கண்ணிலும் புலப்படுகிறதில்லை. என்றாலும், உள்ளமாகிய தகளியில் அன்பாகிய நெய்யைப் பெய்து, அருளாகிய திரியையிட்டு, அறிவாகிய விளக்கையேற்றினால் அவர்களுக்கும் புலப்படலாம்.

திருமந்திரம்.

"முத்தக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனூ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்வது எங்ஙனே."

கடவுளைத் தேடியடைந்து அவருக்கு அடிமை பூண்டு அவரைத் தொழுது அவராணையை அதிக்கிரமிக்காமல் நம்பிக்கை கொண்டு

அவர் சொன்ன வண்ணம் அகப்பற்று புறப்பற்றுக்களை ஒழித்
துப் பக்தி வைராக்கியத்தோடு நடந்து, நோயாளியானவன் நல்ல
வைத்தியனைத் தேடியடைந்து, அவன் சொல்லினிடத்தில் நம்பிக்
கை வைத்து, அவன் கொடுத்த மருந்தை யுண்டு, அவன் வைத்த
பத்திய பாகந் தவறாதிருந்தால், நோய் நீங்கிச் சரீர சௌஸ்தமாய்
ஆரோக்கியம் பெறுவதுபோல; துன்பம் அற்றச் சுகமூற்றுப்
பெரும்பேறு பெறுவானென்றும், ஆணவத்தால் தெய்வ கட்
டளையை மீறி அந்தத் தெய்வத்தையே நிந்தித்து, அங்குசமில்
லாத யானையும், கடிவாளமில்லாத குதிரையும்போல, ஒருவரையு
மதியாமல் நினைத்தபடி யெல்லாம் தன்னிஷ்டமாய் நடப்பவன்
யுக்தா யுக்தந்தெரியாமல் பாவச்செய்கையே பயின்று யாவராலும்
இகழப்பட்டு இகபரார்த்தங்களை யிழந்து பற்றுக்கோடின்றி இடும்
பைக்கின்ற தாய்போன்ற குடும்பச் சேற்றி லாழ்ந்து, பெண்டு
பிள்ளை பண்ட பதார்த்தங்களையே சதமென்றெண்ணி, விழலுக்
கிறைப்பதைபோல, அவற்றிற்கே உள்ள நாளெல்லாம் உழைத்து,
வைதீகத்தைப் பகைத்து, லௌகீக லோலனைய்த் தினையளவாவது
தெய்வ சிந்தை யில்லாமல் வியர்த்தனுவான். பள்ளமிறைத்தவர்
களுக்கல்லவோ பங்குண்டு? உழுகிற காலத்தில் ஊர் திரிந்து
அறுக்கிற காலத்தில் அரிவாளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டால்
என்ன கிடைக்கும்? ஈஸ்வராத் தியானம், மனுஷத்துவ லக்ஷணமா
யிருக்கின்றதாதலின், அதைத் தெய்வ பக்தர் மனங் கலங்காது
அபிவிர்த்தி செய்யவேண்டும். பளிங்குபோல் மனமானது எந்
தெந்தப் பொருளின் சார்பிலிருக்கின்றதோ அந்தந்தப்பொருளின்
தன்மையாகத் தக்கதா யிருக்கின்றதாகையால் சற்குண சமூக
மான கடவுள் மூர்த்தத்தின் தியானம் நமக்கு எல்லாவகையாலும்
நன்மையைப் பயக்குமென்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. உலக
சம்பந்தமாகிய பாச பந்தங்கள் ஒழிந்து, உலகத்திலுள்ள அக்கங்
களுக் கேதுவாகிய பற்பல விஷயங்களுக் கிணங்காமல் மனக்
கிளர்ச்சியுடன் சுகித்திருக்கவும் எவ்வகைப்பட்ட ஆபத்துகளுக்
கும் அஞ்சாமல் மனை தைரியத்துடனிருக்கவும் அது நம்மைத்
தண்டிவிடும். ஈஸ்வராத் தியானத்தில் சதா ஈடுபட்டிருந்த பெரி
யோர்கள் நாங்கள் ஒருவருக்கும் அடிமைகளல்ல வென்னுங் கரு
த்தை யுள்ளடக்கி,

"காமார்க்குங் குடியல்லோம் கமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
யேமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லால்
இன்பமே யெக்காலுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான,
தற்பரனின் புத்ராராக்க தாரணியுதித்த
கோமார்க்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே."

என்று கூறியிருக்கின்றனர். இதை யோசிக்கையில் பக்தர்களுக்குண்டாகும் தைரியமும், பரிசுத்ததன்மையும், மனக்கிளர்ச்சி முதலிய எல்லாக் குணங்களும் பகவத் தியானத்தினால் பகவானுடைய குண விசேஷங்கள் அவர்களுடைய மனதில் பிரதிபலிப்பதனாலுண்டாகின்றன வென்று தெளிவாய் விளங்குகிறது.

தியான யோக தீரான யோபு மகாத்மாவைப்போல் கைம்மாறு கருதாப் பக்தியின் சிறப்பை இந்து புராணங்களிலும் காணலாம். தர்மர், தனது சகோதரரான துரியோதனுதியாரால் துரத்தப்பட்டு, இமயமலைச் சாரலில், தனது தம்பிமார் நால்வர், திரௌபதி ஆகிய இவர்களோடு வனவாசம் செய்யும் காலத்தில், ஒருநாள் அவரைப் பார்த்து, "நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்குங் காலத்திலும் கடவுளை மறவாது பக்தி செய்து வருகிற தெவ்வாறு?" என்று திரௌபதி வினவினள். அதற்கு யுதிஷ்டிரர், "பெண்ணே! இதோ இந்த இமயமலையைப் பார். எவ்வளவோ மனோரம்மியமாயிருக்கிறது, எனக்கு இதை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் என்ற ஆவல் உண்டாகின்றது. எனக்கு எதாவது இந்தமலை பிரதியுபகாரம் செய்கின்றதா? இப்படியிருந்தபோதிலும், கம்பீரமாயும், மனோரம்மியமாயும், இருப்பவைகளிடத்தில் ஆவலிருப்பது என் ஸ்வாபவம், ஆனதினாலேதான் இதனை மிக விரும்புகிறேன். இதுபோலவே நான் கடவுளையும் பக்தி செய்கிறேன். அவர் இந்த உலகிலுள்ள ஸகல காம்பீர்யத்திற்கும் அழகிற்கும் மூல காரணம். மெய்யன்போடு விரும்பத்தக்க வஸ்து கடவுள் ஒருவரே; அவரை விரும்புவது என்னுடைய ஸ்வபாவம். ஆகையால் நான் அவரைப் பக்தி செய்கிறேன். இப்படிச் செய்வதற்கு நான் ஒரு கைம்மாறும் அபேக்ஷிக்கவில்லை. இப்படிப் பக்தி செய்வதே எனக்குத் திருப்திகரமாயும் சுகமாயும் இருப்பதால் நான் இவ்வாறு இருக்கிறேன். இந்தப் பக்தியை வியாபாரரூபமாய்க் கைம்மாறு கருதிச் செய்வது என்னால் முடியாது" என்று மறுமொழி சொன்னர். தெய்வநிந்திக்கும் தியபாவிக்கும் ஒப்புரவுண்டாக்கும்படி மனுடாவதாரமெடுத்த மேலுலஸ்வரன் கோடைகாலத்தில் கானலில் வருந்தி கன வியர்வை கொண்டு கனத்து இளைத்துத்தாகித்துச் சோகித்து வந்தவர்களுக்குக் குளிர்ந்த தாமரையோடையும், அதனருகில் சோலை நிழலும்போல தன்னால், பிறரால், தெய்வத்தால் வருவனவாகிய மூவகைத் தாபாக்கினியால் தகிக்கப்பட்டு விடாய்கொண்டு துன்பப் பாரத்தாலினைந்து நொந்து மூர்ச்சித்து வேறுகதியின்றித் திருவுளமே தஞ்சமென்று உண்மையாய் நம்பிவந் தடைபவர்களுக்குத் தாமே ரட்சகராய், கருணாநிதியாய், ஆபத்பாந்தவராய், தீனசகாயராய், இளங்கன்றுக்

[illegible] குகும் அன்னை

போலவும் திருவுளமிரங்கி, அவர்கள் பாவித்த வண்ணம் அப்பொழுதே தோன்றி, அவர்களைக் கைகழுவவிடாது அஞ்சேலென்று ஆதரித்து இம்மையிற் சகல பாக்கியமுந் தந்து, மறுமையில் ஈடுமெடுப்பு மில்லாத மோட்ச சாம்பிராச்சியத்தையும் அருளிச் செய்வார்.

எத்தன்மைக் குற்ற மியற்றிடினுந் தாய்பொறுக்கு
மத்தன்மை நின்னருளு மன்றே பராபரமே.
வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே.
எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.

" துட்ட வஞ்சக நெஞ்சக மேயொன்று
சொல்லக்கேள் கடல் சூழுலகத்தில்
யிட்டமென் கொவிறை யளவேனுமோ
நின்பமில்லை யிடைக்கிடை யின்னல்க
ணெட்டமிக் குறல் கண்டு கண்டோங்கினை
நாணுகின்றிலை நாய்க்குங் கடையை நீ
பட்ட வன்மைக ளெண்ணி லெனக்குடற்
பதைக்கு முள்ளம் பகீலென வேங்குமே."

பொல்லாத வஞ்சகத்தையுடைய மனமே! நான் சொல்லுவதைக் கேள். அது என்னவென்றால், இவ்வுலகத்தில் உனக்கு வாஞ்சனையென்? அடிக்கடி துன்பமே யல்லாமல் இன்பங் கிடையாதே. அநேக முறை அநேக ஜனங்கள் நஷ்டத்தை யடைந்து அதினால் வாடுவதைக் கண்டு கண்டு நீயும் வருந்தியிருக்கின்றாய். அங்ஙனமிருந்தும், உனக்கு இன்னுமெ கொஞ்சமேனும் ஞானம் வரவில்லை. ஆகையால், நீ நாயைப்பார்க்கிலுங் கீழ்ப்பட்டவனாயிருக்கின்றாய். நாம் படுகின்ற துன்பங்களை யெண்ணி யெண்ணிப் பார்க்கும்போதெல்லாம் என்னுடைய உடல் பதைக்கின்றது. நெஞ்சமே! பகீரென ஏங்குகின்றது. அந்தோ! அந்தோ!! இங்ஙனமிருந்தும் உனக்கு இன்னும் நம்புத்தி வரவில்லையே, என்ன விபரீதமோ?

" அண்ணலே நின்னை யெண்ணலே னென்னை
யாண்டு கொண்டனை மீண்டும் விண்டன
ணண்ணலே யறியேன் கடையேன்
சிறு நாயனையேன்
பெண்ணி லெனிய லாணலே னலிப்
பேயனேன் கொடும் பேதை யேன்பிழை
கண்ணலே புரியா தின்னு மீட்கக்
கருது தியோ."

பெருமையுடைய கடவுளே! உன்னைச் சிந்தியாத என்னையும் ஆண்டு கொண்டாய். அங்ஙனஞ் செய்திருந்தும் நான் உன்னை மறந்தேன். ஆகையால் நான் மீண்டும் உன்னைச் சிந்திக்காமல் விட்டு விட்டேனே யென்றெண்ணி சிறிய நாயினை யொத்தவனும், பெண், ஆண், அலி இவைகளல்லாத பேயினை யொப்பானவனும், கொடிய மூடனுமாகிய என்னுடைய பிழையைப் பொறுத்து மறுபடியும் தீயவழியினின்றும் நீக்கித் திருவருள் செய்ய என்னுவாயோ?

"ஆவித் துணையேயென் ஞாமுதே நின்வடிவைப்
பாவித் துணையேனிப் பாவியேன் — சேவித்து
வாழ்த்தேனின் பொன்னடியில் வந்தென் றலைகுனித்துத்
தாழ்த்தேனென் செய்கேன் றவம்."

என்னுடைய உயிர்க்குயிர்த் துணைவனே! அரிய அமிர்தம் போல்வானே! உன்னுடைய திருவடிகளைப் பாவனைசெய்து மனமிளகேன். அன்றி, சேவித்தும் துதியேன். அன்றி, உன்னுடைய திருவடிகளில் என்னுடைய தலையைக் குனித்து வணங்கேன். ஆகையால், நான் பாவியாயாவேன். இங்ஙன மிருத்தலால் நான் என்ன தவஞ் செய்யப்போகிறேன்? ஒன்றுமில்லை.

"உன்னைநினைந் திங்கே யுலாவுகின்றே னன்றி யெய்தாய்
பின்னை நினைப்பொன்றும் பெற்றிலே — னென்னை
விடாதேநின் பொன்னடியை மேவார்சேர் துன்பம்
கொடாதே யெனையேன்று கொள்."

இறைவனே! நான் உன்னைப் பலகாலுஞ் சிந்தித்தே திரிகின்றேன். ஆகையால், நீயும் என்னை மறந்துவிடாமல் காப்பாற்றவேண்டும்.

"என்னரசே நின்னடிக்கீ ழென்னிடரை நீக்கெனநான்
சொன்னதலாற் ரூயுடனுஞ் சொன்னேனே — வின்னுமிந்தத்
துன்பச் சுமையைச் சுமக்கமுடி யாதென்னு
லன்பர்க் கருள்வோ யருள்."

என்னரசே! நீ உனதன்பர்களுக்குச் செய்யுமாறு எனக்குந் திருவருள்செய் யாது விட்டுவிடுவாயாயுல் துன்பமாகிய பாரத்தைச் சுமக்க என்னுல முடியாது.

"கண்ணு ரமுதே கரும்பேயென் கண்ணேயென்
னண்ணு வுன் பொன்னருடா ளர்ந்திடுமோ வல்லதென்று
நண்ணுதோ யாதுநணுகுமோ வென்றுருகி
யெண்ணுத வெண்ணுமிந்த வேழைமுகம் பாராயோ."

இறைவனே! உன்னுடைய திருவருட்சத்தி என்னிடத்திற் பதியுமோ? பதியாதோ? என்று பன்னுளும் வருந்துகின்ற எனக்குக் கூடிய சீக்கிரத்தில் நீ திருவருள் செய்வாயாக.

1. Thou art the first cause of old, O Lord, and existest in everything. These crystalline veils, woven of beautiful rays of the sun, moon, and stars, are they not the curtains between the heavenly world and this? The discordant elements, sea, fire, earth and air are they not shadows of thy hand? Do they not all proclaim thy praise and the mighty power that encompasses thee? Does not the earth mark thy grandeur in the beauty of its flowers? Does not the wind, repeated in the echoes, proclaim by its accents that thou didst give it birth? The fire and the water fail not in thy praise; in every flame there is a tongue, in every wave there is a tongue to sound thy praise.
—*Calderon.*

2. "And a God there is! over space, over time,
While the human will rocks like a reed to and fro,
Lives the will of the Holy—a purpose sublime,
A thought woven over creation below;
Changing and shifting the all we inherit,
But changless through all one Immutable Spirit!"—*Bulwer.*

3. God is where the sun glows, God is where the violet blooms, is where yon bird is flapping its wings, is where this worm is moving. Though no friend, no man, be with thee, fear nothing. Thy God is here.
—*Dinter.*

4. Heaven's gate is narrow and minute,
It cannot be perceived by foolish men,
Blinded by vain illusions of the world.
E'en the clear-sighted who discern the way
And seek to enter, find the portal barred
And hard to be unlocked. Its massive bolts
Are pride and passion, avarice and lust.

5. Nothing can supersede for sweetness the singing of the lark on a summer's day; higher and yet higher as it rises in the air, sweeter and sweeter still is its song—a fitting simile of ourselves. The higher we rise towards God and holiness, the more sweetly shall we chant forth His praises and our thanks. *Ruby Ellis.*

6. As a fond mother, when the day is o'er,
Leads by the hand her little child to bed,
Half willing, half reluctant to be led
And leave his broken playthings on the floor,
Still gazing at them through the open door,
Nor wholly reassured, nor comforted
By promises of others in their stead,
Which, though more splendid, may not please him more:
So Nature deals with us and takes away
Our playthings one by one, and by the hand
Leads us to rest so gently, that we go,
Scarce knowing if we wished to go or stay,
Being too full of sleep to understand
How far the unknown transcends the what we know.
—*Longfellow.*

7. Just to be tender, just to be true,
Just to be glad the whole day through;
Just to be merciful, just to be mild,
Just to be truthful as a child
Just to be gentle, and kind and sweet,
Just to be helpful with willing feet,
Just to be cheery when things go wrong——
Just to drive sadness away with a song,
Whether the hour is dark or bright,
Just to be loyal to God and right.
Just to believe that God knows best,
Just in His promises even to rest—
Just to let love be our daily key,
That is God's will for you and me.

8. Sorrows, joys, worries, troubles, all look so differently when we see in them God's *will*—not our will, nor anybody else's fault, or our own mistakes—simply, this is God's will for me; this is what He has given to me to do; this is what He has given me to bear.
Mrs. Marshall.

9. Four things a man must learn to do,
If he would make his calling true;
To think without confusion, clearly,
To love his fellow-men sincerely,
To act from honest motives purely,
To trust in God and Heaven securely. —*Van Dyke.*

10. Every man is set upon an ascending line of human life. You never find God calling a man downwards, diminishing the volume of his manhood, checking his good aspirations, putting him down in the scale of his being. All the divine movement is an upward movement.

11. Some will hate thee, some will love thee,
Some will flatter, some will slight,
Cease from man, and look above thee
Trust in God and do the right! —*Norman Macleod.*

12. If your eye is on the Eternal, your intellect will grow, and your opinions and actions will have a beauty which no learning or combined advantages of other men can rival. —R. *W. Emerson.*

13. The best things in the divine life, as in the natural will not come to us merely for the asking; true prayer is *the whole strength of the whole man going out after his needs*, and the real secret of getting what you want in heaven, as on earth, lies in the fact that you give your whole heart to it or you cannot adequately value it when you get it. —R. *Collyer.*

14. O Thou that sit'st in Heaven, and see'st,
My deeds without, my thoughts within,
Be Thou my prince, be Thou my priest—
Command my soul and cure my sin:
How bitter my afflictions be
I care not so I rise to Thee. —*Quarles.*

விடாமுயற்சி.

காரிய சித்தி யடைவதற்கு முதல் ஆதாரம் உழைப்பே. "சோம்ப னென்பவர் தேம்பித் திரிவர்" என்பது பழமொழி. சோம்பலுள்ளவன் ஜீவியப்போரில் நிலைத்திருக்க முடியாது. கண் களைப் பறிக்கும் பிரகாச காந்தி யமைந்த விளக்கானது தன் திரி யையும் எண்ணெயையும் செலவழிக்கப் பின் வாங்காமல் இருப் பதிலேயே அலங்கார மகிமையை யடைகிறது. சுயநலத்தை விரும்பி, எண்ணெயையும் திரியையும் மீதி வைக்காமல் தன்னை மறந்து ஓயாமல் வேலைசெய்வதிலேயே பிரகாசமுண்டாகின்றது. நாம் சுகுமம டைய விரும்பின் நமது தினுபயோகச் செய்கைகளில் நமது தேகத்தையும் கசை நரம்புகளையும் நாசஞ் செய்யவேண் டும். உபயோகமென்னும் அக்கினியில் அவைகளைத் தகனஞ் செய்யவேண்டும். தன் மனதையும் தேகத்தையும் சிலுவையில் அறைந்து உழைப்பதே ஜெயமடையும் வழி. உண்மையான எல்லா வேலையிலும் ஓய்வும் அடங்கி யிருக்கிறது. தூரத்துப் பார்வைக் குப் பல வர்ணங்கள் பொருந்தி யிருப்பதாகத் தோன்றும் வான வில்லானது சமீபத்தில் நெருங்கிப் பார்த்தால் ஒன்றுமில்லாததா கத் தோன்றும். ஓய்வில்லாமல் வேலை செய்வதால் அகங்கார மம காரங்க ளடங்கி சுயநலம் சூன்யமாகி விடுவதால் விடாமுயற்சியே சிறந்த யோகமென்னலாம். நல்ல காரியங்கள் எவற்றில் நாம் பிர வேசிப்பினும் விடாமுயற்சி இன்றியமையாத சாதனமாகும். ஒரு காரியத்தை முடிக்க வேண்டுமாயின், மெய்வருத்தம், பசி, தூக் கம் முதலியவைகளைத் துறத்தல் வேண்டும். எறும்பூரக் கல்லுங் தேயுமாதலால், விடாது முயல்வோமாயின் முடியாத காரியமில்லை. இடைவிடாது முயலுகிறவனே மஹா புருஷன்.

நமக்குள்ளிருக்கும் கோபம், மோகம், அகங்காரம், அமைதி யின்மை, சுயநலப்பிரியம், முதலிய சகலவித துர்க்குணங்களினின் றும், இவ்வுலகினியின் கண்ணே நமக்கு நேரிடக்கூடிய சகல சோத னைகளினின்றும் தப்புவிக்கும் சிறந்த மருந்து வேலையே. உண் மையாக உழைக்கும்பொழுது ஓர் உறுதியான மகிழ்ச்சி யுண்டா கிறது. இந்த ஆனந்தந்தான் வேலை செய்வதினாலுண்டாகும் உத் தம சம்மானம். சுயநலத்தைக் கருதி, நமது மனதை வேலையில் செலுத்த மோட்ச பொக்கிஷமாகிய பேரின்பம் உண்டாகிறது. இந்த மாசற்ற, தூய இன்பமானது நம்மை கடவுளுருக்குகந்த பிள் ளைகளாக்குகின்றது. ஒரு சன்மானத்தையும் எதிர் பாராமல் பற் றில்லா வழியிலே பாடுபடுபவன் பரலோகத்திற்குப் பாத்திரனாகும் பாக்கியத்தை யடைவான். அவனுக்கு இகபர பாக்கிய சிலாக்கி யங்க ளனைத்தும் கைகூட கடவுள் துணை செய்வார்.

உழைமின்! உழைமின்!! ஓயாது உழைமின்!!!


ஊக்கமுடையார் தாமெடுத்த கருமங்கட்கு இடையூறுகள் அடுக்கி வரினும் இடையறாது முயன்று அவற்றை முடித்தேவிடுவர். அதமர் இடையூறுக்கு அஞ்சி ஒரு தொழிலையும் செய்யமுயலார். மத்திமர் தொழிலைத் தொடங்கி, இடையூறு வருங்கால் அதனை விலக்க வகையறியாது எடுத்த காரியத்தை விடுத்து வருந்துவர். உத்தமரோ, தமது கருமத்துக்கு இடையூறுகள் பலவாய் வரினும், அவற்றை அஞ்சிச் சிறிதும் மனந்தளராமல் முயன்று கருதிய பொருளைப் பெறுவர்.


"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்."

என்ற வெண்பாவில் சொல்லியிருப்பதுபோல், கருமமே கண்ணாயினராகிய ஊக்கமுடைய உத்தமர் பாயிற் படுக்க நேரினும், பஞ்சணையில் துயில நேரினும், அடைகாய் நுகரவரினும், அறுசுவை உண்டியே உண்ணக் கிடைப்பினும், கந்தையுடுப்பினும், கனகாம்பரம் தரிப்பினும், வெறுப்பு, விருப்புக்கொள்ளாது மனதைச் சமநிலைப்படுத்தி தம் முயற்சி கைகூடுந்தனையும் இன்ப துன்பங்களை இலட்சியம் செய்யார். இன்னும், நன்முயற்சியில் ஊக்கமுடைய உத்தமர் தம்மை ஒருவர் முன்புகழினும், இருவர் பின்பிகழினும், மெய்த்திரு வந்துற்றாலும், வெந்துயர் வந்துற்றாலும், மரணம் இன்றுவரினும், நின்றுவரினும் நன்னெறியினின்று ஒருக்காலும் விலகார். வானின்மேல் நின்றாடுவோர் தமது கண்ணையும் கருத்தையும் அதனிடத்துச் செலுத்தி ஆட்டந் தவறுமலும் பகுஜாக்ரதையுடன் ஆடியாவராலும் வியக்கப்படுதல்போல் தாங்கொண்ட கருமத்தில் மனதைச்செலுத்திக் காரியத்தை முடித்துப் பயனடைகின்றனர். அன்றியும் காற்றினால் அசைந்தாடும் சிறிய கொம்பும் வளர்ந்து முதிர்ந்தால் அதுவே மதங்கொண்ட யானையையும் கட்டுதற்குரிய கந்தாதல்போல், ஒருவன் இடைவிடாது முயன்று வருவானையின் அவனே காரியசித்தியையும் கீர்த்தியையும் அடைவான். ஆதலின் மேலான காரியத்தையே முயன்று முடித்தல் மேலோர் செய்கையாகும். அற்ப காரியத்தில் சிறவருக்குத் திருப்தியுண்டு.


Larger vessels may venture more, but little boats must stick to shore.

சிங்கத்தினின்றும் ஒரு குணத்தையும், கொக்கினிடத்திலிருந்து ஒரு குணத்தையும், கோழியினிடத்திலிருந்து நான்கு குணங்களையும், காக்கையினிடத்திலிருந்து ஐந்து குணங்களையும், நாயினிடத்திலிருந்து ஆறுகுணங்களையும், கழுதையினிடத்திலிருந்து மூன்று குணங்களையும் கிரகிக்க வேண்டும்.












காரியம் அற்பமாயினும் பெரிதாயினும், அதை முழுமுயற்சியோடு செய்வது சிங்கத்தின் குணம். "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு" என்பதுபோல், இந்திரியங்களை அடக்கிக் காத்திருந்து காலம், பலம் முதலியவற்றை அறிந்து எக்காரியத்தையும் செய்வது கொக்கின் குணம். தக்கசமயத்தில் மிகக் கடி



கொள்ளுதலும், சண்டையில் பின் வாங்காமையும் கிடைத்தவற்றைப் பந்துக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தலும், தானே வலிய ஆக்கிரமித்தலும் சோழியின் குணங்களாகும். தைரியமும், தக்க சமயத்தில் உணவு சேகரித்தலும், ஸாவதானமா யிருத்தலும், பிறரிடம் விசுவாசமின்மையும் காக்கையின் குணங்களாகும். கிடைத்த விடத்தில் உண்பதும், அற்ப வுணவைக்கொண்டு மகிழ்தலும், நினைத்தநேரத்தில் தூங்கி விழித்தலும், தலைவனிடம் விசுவாசமும், சௌரியமும் நாயினிடமுள்ள குணங்களாகும். தான் எவ்வளவு சிரமத்தை அடைந்திருந்தாலும் சுமையைத் தாங்குதலும், குளிர் வெப்பத்தைப் பொறுத்தலும், எப்பொழுதும் சந்தோஷமா யிருத்தலும் கழுதையினிடமுள்ள குணங்களாகும். மேற்கூறிய இருபது குணங்களையும் கைக்கொள்பவன் எக்காரியத்திலும் வெற்றி பெறுவான்.

பகீரதப் பிரயத்தனம்.

உலகத்தில் பெரிய காரியங்களைச் சாதித்தவர் அனைவரும் விடாமுயற்சி யுடையவர்களா யிருந்திருக்கிறார்கள் என்பது பல தேச சரித்திரத்தாலும் நன்றாய் விளங்கும் அரும் பெரும் முயற்சியுடன் அரிய காரியங்களைச் செய்து முடிப்பதற்கு பகீரதப் பிரயத்தனத்தினால் முடிவுபெற்றது என்பது சாதாரண தமிழ் வாக்கியமாயிருத்தலின், அப்பதம் உற்பத்தியான கதையை இங்குவிளக்குவோம். கிருதயுகத்தில் மிகவும் தர்மமாய் ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்த ஸகர சக்கிரவர்த்தி இந்திரப் பட்டமடைய வேண்டுமென்று அசுவமேதயாகஞ் செய்யத் தொடங்கினர். அதையறிந்து இந்திரன் பொறுமை மேற்கொண்டு அந்தயக்கிய குதிரையைப் பாதாள லோகத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த கபிலரிஷியின் பின்பக்கத்தில் ஒளித்து வைத்தான். இதனை யறிந்து ஸகர சக்கிரவர்த்தியின் அறுபதினாயிரம் மக்களும் பூமியைப் பிளந்துப் பாதாளத்திற்குச் சென்று கபிலரிஷியின் ஆசிரமம் புகுந்தனர். அவர்களுடைய சந்தடியைக் கேட்டு யோகநிஷ்டையிலிருந்த தபசி விழித்துக் கோபத்துடன் அவர்களை நோக்க அந்த அறுபதினாயிரம் பேரும் சாம்பலாயினர். அச்செய்தியைக் கேட்டுச் சக்கிரவர்த்தி துக்கம் மேலிட்டு மனம் புழுங்கி மாண்டனர். பின்பு சக்கிரவர்த்தியின் பேரனை அம்சுமந்தனுக்கு பட்டங் கிடைத்தது. அந்த அம்சுமந்தன் தன் சிற்றப்பன்மார் அநியாயமாய் மரித்துப் போனமையின், அவரது நீறை நீரிற்கரைத்து அவர்களுக்கு நற்கதியுண்டாக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு பிரயத்தனப்பட்டான். அச்சமயத்திற் கருடன்தோன்றி "அரசனே! தேவகங்கையைக் கொணர்ந்து அதனில் அந்தச் சாம்பலைக் கரைத்தால் உன் பிதுருக்களுக்கு நற்கதி வாய்க்கும்" என்று சொல்லிப் போயினன். அம்சுமந்தனும் அவன் புதல்வன் திலீபனும் கங்கையைக் கொண்டு வருவதற்குப் பெருமுயற்சிகள் செய்தார்கள். ஆயினும் அவர்களுடைய எண்ணம் கைகூடவில்லை.

கடையில் திலீபனுடைய வம்சத்தில் உதித்த பகீரத மகாராஜர் சிறிதுகாலம் அரசுபுரிந்து பின்னர் ராஜ்யபாரத்தைத் தன் மந்திரிகளின்

வசம் ஒப்புவித்துத் தம் முன்னோர்களுக்கு நற்கதி உண்டாக்க வேண்டு மென்று பிரம்மாவைக் குறித்துத் தவஞ் செய்தார். பிரம்மா பிரத்தி யட்சராகி "உனக்கு இஷ்டமான வரனைக் கேட்டுக்கொள்' என, பகீரத மகாராஜா "தேவகங்கையைப் பூமியில் விடவேண்டும்" என்று பிரார்த் தித்தார். பிரம்மா "ஐயா! கங்கையை யான் பூலோகத்தில்விடின் அவள் மிக்க ஆரவாரத்துடன் வருவாள், பூலோகம் நாசமாய்விடும். அவளது வேகத்தைத் தடுப்பதற்கு ஈஸ்வரரல்லாது மற்றெவராலும் முடியாது. அவ னைத் தரிக்குமாறு ஈசுவரரை வேண்டிக்கொள்" என்று சொல்லி மறைந் தார். உடனே பகீரதர் ஈசுவரரைக் குறித்துத் தவம் புரிய அவர் பிரத்தி யட்சராகி அரசரது இஷ்டப்படி கங்கையைத் தரித்துக்கொள்ள ஒப்புக் கொண்டார். பின்னர் பிரமலோகத்திலிருந்து அதிக ஆரவாரத்துடன் கங்கை வந்துகொண்டிருக்கையில், அவளுக்கு அவ்வளவு அகங்காரமா வென்று பரமசிவன் கோபமடைந்து தம் சடையினுல் அவளைக் கட்டினர். ஒரு துளி நீரும் இப்புறம் வராததாயிற்று. அப்போது பகீரத மகாராஜர் ஈசுவரரைக் குறித்து மறுபடியும் தவம்புரிந்து பூலோகத்திற்குக் கங்கை யைத் தயவு புரிந்து அனுப்ப வேண்டும். இல்லையெனின் தம் பிரயத் தனம் வீண்போகு மென்று முறையிட்டுக் கொண்டார். ஈசுவரர் அதற்கிணங்கி பகீரதரின் பின்னரே செல்லுமாறு கங்கைக்குக் கட்டளை யிட்டார். அரசர் பாதாள லோகத்திற்குப் புறப்பட்டு, ஜன்னு என்னும் ரிஷியின் ஆசிரமத்தின் வழியே போய்க்கொண்டிருந்தார். அவர் பின்னரே வந்துகொண்டிருந்த கங்கையானவள் ரிஷியின் ஆசிரமத்தின்மீது பரவிச் செல்வாளாயினள். பர்ணசாலை யெல்லாம் மிதக்கலுற்றது. அதைக்கண்டு ரிஷி கோபமுண்டு கங்கையை ஆபோசனம் செய்துவிட்டனர். பகீரத மகாராஜர் "ஸ்வாமி! அநேக வருஷங்களாய் எம் பிதுருக்கள் கதிகாணுது கிடக்கின்றனர். கங்கையைக் கொணர்ந்து அந்த மூலமாய் அவர்களது பிசாசத் தன்மையைப் போக்க வேண்டுமென்று எம் முன்னோர் வெகு பிரயாஸப்பட்டனர். எல்லாம் வீணாயிற்று. நான் ஒருமுறை பிரம்மாவை யும், இரண்டுமுறை ஈசுவரரையும் குறித்து அநேக வருஷங்கள் கடுந்தவம் புரிந்து மிக்க பிரயாசைப்பட்டு இந்தத் தேவகங்கையைக் கொணர்ந்தேன்! கடைசியில் எனது சிரமம் பயன்படாததாயிற்றே! இப்போது என் காரிய மெல்லாம் கெட்டுப்போயிற்று. இனி எனக்குக் கதியென்ன! தமது கிரு பையினுலேயே நானும் எம் பிதுருக்களும் கடைத்தேற வேண்டும்' என்று அந்த ரிஷியை நமஸ்கரித்துத் தம் விருத்தாந்தத்தை யுரைத்துக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். அந்தத் தபசியானவர் மனமிரங்கி தம் காதின் வழியே கங்கையை வெளிவிட்டனர். சந்தோஷத்துடன் பகீரதர் அந்தக் கங்கையை அழைத்துக்கொண்டுபோய், தம் பிதுருக்களின் சாம்பலின்மீது பாய்ந்தோடுமாறு செய்தனர். அதனுல் ஸகர மகாராஜரின் அறுபதினாயி ரம் மக்களும் நற்கதி யடைந்தனர். தாம் செய்த மகா பிரயத்தினம் நடந் தேறியதென்னும் மனவெழுச்சியுடன் பகீரதர் பிதுருகாரியங்களை நிறை வேற்றித் தம் ராஜ்யத்திற் கேகிக் குடிகளைப் பாதுகாத்துச் சுகமாயிருந்த னர். எத்தகைய காரியமாயினும் அதனைப் பகீரத மகாராஜரைப்போல் சிர மப்பட்டுச் சாதிக்கவேண்டும். விடாமுயற்சியென்பது நமக்கு இருக்கவேண் டிய நற்குணங்களுள் முக்கியமானது. பெரும் பிரயத்தினங்களுக்கே பகீரதப் பிரயத்தினம்' என்று பகீரதர் செய்த விடாமுயற்சியை உதகரித் துச் சொல்வது வழக்கம்.

வெப்ஸ்டர் பெரிய ஆங்கில அகராதி எழுதி முடிக்க முப்பத்தாறு வருஷம்விடாது உழைத்தார். ஸ்டீபென்ஸன் ஆகியில் ரயிலை ஓரு ஓழுங்குபடுத்த பதினைந்து வருஷம் விடாது உழைத்தார். எடிசன் எனபவர் தமது தூர ஸம்பாஷணை யந்திரத்தில் ஸகாரசப்தம நன்றாக உண்டாவதற்கு நாள் ஒன்றுககு 19-மணி விழுக்காடு அனேக மாதங்கள் உழைத்தாராம். விடாமுயற்சியால் விளையும் பயனுக்கு இவை சாக்ஷிகளன்றோ?

1. In God's world, for those who are in earnest, there is no failure. No work truly done, no word earnestly spoken, no sacrifice freely made, was ever made in vain. —*F. W. Robertson.*

2. If you wish for success in life, make perseverance your bosom friend, experience your wise counsellor, caution your elder brother, and hope your guardian genius. —*J. Addison.*

3. The higher must always come through the loss and death of the lower. Manhood can only be gained by the giving up of childhood. If the office and life-work are ever to be reached, the nursery must be left behind. The blossom must die before there can be any fruit. —*M. J. Savage.*

4. Earnestness means willingness to live with energy, though energy bring pain. The pain may be to other people or pain to one's self. —*R. W. Emerson.*

5. Nature never hurries: atom by atom, little by little she achieves her work. The lesson one learns in fishing, yachting, hunting, or planting is the manner of nature's patience with the delays of wind and sun, delays of the seasons, bad weather, excess or lack of water—patience with the slowness of our feet, with the parsimony of our strength, with the largeness of sea and land, we must traverse.
—R. *W. Emerson.*

6. It is the slowest and most painful lesson that faith has to learn—faith not indifference—to do steadfastly and patiently all that lies to her hand and there leave it, believing that the Almighty is able to govern His own world. The fool wonders, the wise man asks.
—*Lord Beaconsfield.*

7. The men of real power are always men of one idea, who send all the force of their being along one line; and it is possible for any of us to win a true success in life if we will early choose one sphere and persistently labour in it. —*R. W Emerson.*

8. The foolish undertake a trifling act, and soon desist, discouraged, wise men engage in mighty works, and persevere.—*Magha.*

9. There is nothing in this world which a resolute man, who exerts himself cannot attain. —*Somadeva.*

10. All the performances of human art, at which we look with praise or wonder, are instances of the resistless force of perseverance; it is by this that the quarry becomes a pyramid, and that distant countries are united by canals. If a man was to compare the effect of a single stroke of a pickaxe, or of one impression of the spade, with the general design and last result, he would be overwhelmed by the sense of their disproportion; yet those petty operations, incessantly continued, in time surmount the greatest difficulties, and mountains are levelled, and oceans bounded, by the slender force of human beings. —*Johnson.*

11. Patience is the guardian of faith, the preserver of peace, the cherisher of love, the teacher of humility: Patience governs the flesh, strengthens the spirit, sweetens the temper, stifles anger, extinguishes envy, subdues pride; she bridles the tongue, refrains the hand, tramples upon temptations, endures persecutions, consummates martyrdom: Patience produces unity in the church, loyalty in the state, harmony in families and societies; she comforts the poor and moderates the rich; she makes us humble in prosperity, cheerful in adversity, unmoved by calumny and reproach; she teaches us to forgive those who have injured us, and to be the first in asking forgiveness of those whom we haved injured; she delights the faithful, and invites the unbelieving; she adorns the woman, and approves the man; is loved in a child, praised in a young man, admired in an old man; she is beautiful in either sex and every age. —*Bishop Horne.*

12. Accustom yourself to master and overcome things of difficulty; for, if you observe, the left hand for want of practice is insignificant, and not adapted to general business, yet it holds the bridle better than the right from constant use. —*Pliny.*

13. The rewards of life depend upon diligence. —*Confucius.*

14. Our grand business is undoubtedly, not to *see* what lies dimly at a distance, but to *do* what lies clearly at hand. —*T. Carlyle.*

15. Impossible is a word only to be found in the dictionary of fools. —*Napolean Bonaparte.*

16. Upward! upward! let us climb,
In sublime endeavour;
Not forget our work in time
Acts on the forever.

17. An honest man is the noblest work of God. —*A. Pope.*

18. I go at what I am about as if there was nothing else in the world for the time being. That is the secret of all hard-working men. *C. Kingsley.*

19. Tact is the ability to use natural powers, acquisitions, and opportunities to the best advantage. Under its facile sway a single talent accomplishes—more than five, or even ten talents without it. It manipulates moderate abilities so as to outstrip real mental greatness proving that the race is not to the swift, nor the battle to the strong.' —*Thayer.*

20. Never despair nor hurry, but set to work with the steady purpose of one who knows that God is on his side; and that though He bids us "work while it is called to-day," yet the great husbandman is patient. —*Octavia Hill.*

21. Never suffer your energies to stagnate—the old adage of too many irons in the fire, conveys an abominable error. You cannot have too many—poker, tongs and all, keep them all a-going

22. Endeavour at the highest perfection, that not only at your studies, but in whatsoever you attempt; strive to excel in everything and you may perform many things worthy of praise. *Earl of Bedford.*

23. When thou dost purpose aught within thy power.
Be sure to do it, though it be but small,
Constancy knits the bones and makes us stout.—*G. Herbert.*

24. We are born with faculties and powers capable of almost anything—such as at least would carry us further than can be easily imagined; but it is only the exercise of those powers which gives us ability and skill in anything, and leads us towards perfection, —*John Locke.*

25. Do not gaze backward, nor pause to contemplate anxiously what is in front, but move. If you are faithful, God will carry you through. Work, and you shall believe, work and you shall know. You will be guided to the best convicitions by being heartily. engaged in an obedient service. —*O. B. Frothingham.*

சுய நம்பிக்கை.

மனிதர்களுக்கு உயர்வு அவரவர்களுடைய சுய முயற்சி, சுய நம்பிக்கை முதலியவற்றை அடித்தளமாகும். ஊக்கமும், மிக்க உரமும், ஒன்றிய சூழ்ச்சியுமுள்ளவனை விட்டு ஆக்கமகலாது. தானும் தனியுமாய் முயல்வதே உறுபயன் கொள்வதற்கு உலையா உபாயம். பக்கத்துணை பார்த்திருத்தல் பயனற்றது. தங்கள் தங்கள் தடக்கைகளே தக்க சமயத்தில் ஆதரிப்பனவாதலின் எக்காலத்திலும் உற்ற துணையாகும். இடுப்பில் கட்டிய துணி கழலும்பொழுது ஒருவனுக்கு உற்ற சமயத்தில் உதவுவன அவனுடைய கைகளன்றே!

ஊக்கமில்லாதார் உடையவராதலில்லை. இசையாத காரிய மாயினும் எவ்விதத்தேனும் தன் ஆற்றல் கொண்டு இயற்றி அசையாது நிற்பதே ஆண்மையாகும்.

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் தாய்த்தலால்
தானே தனக்குக் கரி"

என்றது பழமொழி வெண்பா.

தன் அலுவலை முடிக்க வேறு ஆளை அனுப்புதல் அதமம்; மகனைப் போகவிடுத்தல் மத்திமம்; உடையான் செல்லல் உத்தமம் என்ப. விளைந்த வயலில் கூடுகட்டிக் குஞ்சு பொறித்த வானம் பாடி வயலறுத்தற்குப் பிறருதவியை உடையவன் எதிர்பார்த்துப் பேசிய நாள் தன் குஞ்சுகளை இடம் பெயராமல் படுத்திருக்கச் சொன்னதும், தானும் தன் மக்களுமே கதிரறுக்கத் துணிந்தது செவியிற்படவும் வேற்றிடம் தேடிச் சென்றதும், இவ்வுண்மையை வெளிப்படுத்துதற்கு இயற்றப் பெற்ற கதை. 'உதட்டு னைமுப் பழத்தை உள்ளே தள்ளுவாருண்டோ' எனறிருப்பார் பசியாறிற க்க வேண்டியவர்களே. பிறன்கை பார்த்து நிற்பவன் பேதையிற் பதர். பொய்க்கால் கட்டிப் பகதடி நடப்பதற்குள் வெறுங்கால் வெகுதூரஞ் செல்லும். ஏனையோரை எதிர்பார்த்து ஏமாந்து போகாமல் கடவுளை நம்பிக் கைவினை கரவாமல் கருமம் புரிவோர் கைவிடப்படார்.

கையில் பொருள் மிகுந்திருந்தாலன்றே காரியங்களைத் தொடங்க வாய்க்கும், என்று ஏங்கி நில்லற்க. வினைவல்லானை வீசி யெறிந்தாலும் கீழ்விழாமல் குத்தித்துநின்று வேலைசெய்து வெற்றி கூறுவான். கைம்முதல் கனத்தவர் கையசியில் கந்தை உடுத்தலு முண்டு.

'முன்பெருகலின் பின் சிறுகாமை சிறந்தது'

'வித்து மேரு முளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே'

தாய் கைத் தனத்தைவிட தன் கைத் தனிதே மேலாம், தையலே! என்ற பாடல்போல் தான் தேடிய பொன்னுக்கே மாற்றும் உறையும் உண்டு. தந்தைதேடிவைத்த மணிகளும் கல்லாம், பொன்னும் மண்ணும். தன்வாழ்நாளை இன்மையோடு தொடங்குவோன் இனிமையோடு முடிப்பான். பசித்தவனுக்கே புசித்தல் சுவையுடைத்து. கடுத்தின்றேனே கட்டியின் சுவை கடிதில் காண்பன். தானி முதலானி கோடலவான் ஆவதும் உண்டு.

சுய நம்பிக்கையானது அதிசய வினைதங்களை வெளிப்படுத்தும். ஓர் வழி செல்லு மிருவரில் நானென்ன செய்வேனென்று ஏங்கி நிற்பவன் சேற்றில் காலழுந்தி வழிப்போக்கர்களுக்கும் இடறுகட் டையாய் நிற்பான். வருத்தம் பாராமல் முன்னேறிச் செல்லும் தணிவோடு நடப்பவன் நிரம்ப மூட்டையேற்கிய வண்டியைக்கூட கொடிய வழிகளிலும் இழுத்துச் செல்லுவான். மேலுக்கு வர வேண்டுமென்னும் முன்னேற்கமுள்ளவன் இடுப்பில் தணியை யெடுத்துக் கட்டி இடைவிடாது உழைப்பான். தொங்கவிட்டுக் கடுபவன் தொங்கியே போவான். உறவினை காய்பவன் உயர்வு வேண்டல் பொய். கலப்பையைக் கைப்பற்றிக் காடுகளை உழு

வோர் காணியாளராவதும், குயக்கலம் வனைவோர் குபேராவதும், நிலைகடலோடியுந் திரவியந் தேடுவோர் தேசங்கள் ஆளும் சக்தியடைவதும் சுய முயற்சியின் மாயமேயன்றே! விருப்பமிருந்தால் வேரிலும் காய்க்கும். ஆதலால் கடவுளை நம்பி தொடுத்த காரியத்தைத் தளராது கைப்பிடித்துச் சோர்வில்லாத ஊக்கமுடையவரை குன்றம் வழி தடுப்பதில்லை. கோழை நெஞ்சுடையோன் கோமளவல்லியைக் கைக்கொள்ளுவதுமுண்டோ!

குப்பைமேடு குப்பைமேடாய்த் திரிவதே மணியமாயிருப்பவன் காலமெல்லாம் கந்தைகட்டிக் கழிக்க வேண்டியவனே. அப்படிச் செய்வதை விட்டு சற்றே புதுமை செலுத்தி இங்கே கொஞ்சம் அங்கேகொஞ்சமாய்க் கைவிளக் கற்பாளுகிலை காட்டாளரும் வீட்டாளாகலாம். 'காலங் கெட்டுப்போச்சது' என்பார்கள். கசடர்கள். கோட்டாளி விட்டுக்கொண்டு குணம் இல்லாதவளுய்த் திரிவோனுக்கு எந்தக்காலமும் கெட்டுப்போன காலமே' நல்ல காலம் வாவே வாவே.

எந்தவிதத்திலும் காரியத்தைச் செய்துமுடித்தே தீரவேண்டும் என்ற மனத்துணிவோடு தொடங்காமையாலேயே மக்களிற் பலர் மேன்மையடைவதில்லை. அரைப்பணம் சேமிப்பதுதான் கஷ்டம்; பிறகு ஆயிரம் சேமித்தலெளிது. 'முதல்போடு போட்டதும் பாதிப்போர் முடிந்தது' என்பார்கள். 'முயல்வேன்' என்னும் கொடியையுயர்த்தி வினை செய்வதையே நாடிச் செல்வானுகில் சிறிது சிறிதாக மீதது வைத்து நிதி சேர்த்துக் கடைசியில் நிகரற்ற கோடீஸ்வரனுகலாம். என் தலைவிதி நான் தரித்திரனுகவே யிருக்க வேண்டும் என்று எண்ணி எங்கிற்போன் என்பதற்கும் ஏழையாகவே யிருப்பான். ஆரம்பக் கல்வியிற் கல்வியறிவு வறியனுக்கும் காணியாளனுகுதல் வழியுண்டு; பல்கலாசாலை யென்ற கல்விலங்கும் பெற்ற பிள்ளைகள் என்ற சுள்ளாணிகளும் கடுப்படுத்தாமுன், பகு ஜாக்கிரதையாய் உழைத்தது, முன்னதாகவே ஆயத்தம் பண்ணிக்கொண்டவன் பசியாறக் கஞ்சியும் கட்டக் கந்தையும் கிடைத்தால் அதுவே கோடி பாக்கியம் என்று சொல்லவேண்டியதில்லை. குஞ்சுகள் மிஞ்சினுல் கோழி குப்பை கிளறுவதும் அதிகம் தான். நெஞ்சழுத்தமுள்ள நெடியோன் குன்றின் நெடுமை கண்டு உள்ளம் அழிவனே? மலையேறிச் செல்லல் கஷ்டமானதே. ஆயினும் படிபார்த்துப் பாதை வழிபோய்ப் பதனமாய் நடந்து மனத்துணிவோடு மலையேறும் ஊக்கமுடையோன் தப்பாமல் உச்சியடைவான். பட்டபாடெல்லாம் நினைப்புக்கு இனிப்பு. சிறுவயதிலேயே வாலிபர்கள் காலத்தினருமை பாராமல், மெய்வருந்தி, கடுத முயன்று, கஷ்டப்பட்டு, காசு மீத்து வைப்பாரேல், எக்காலத்திலும் கஷ்டப்பட்டுக கஞ்சி குடிக்கக காணுமிராது.

தன் பொறுப்பு வந்தபிறகும் பிறர் உதவியையும் செயலையும் கொண்டு தம் காரியங்களைச் செய்ய ஊரப்பிப்பவர்கள் அம்மாடித்தன்; அப்பாடிமித்தன்; மித்திரன் டித்தன்; மந்திரி டிமித்தன் என்னப்படுவர். அதாவது, அம்மா சொல்லுகிறபடி நடக்கிறவன்; அப்பா சொல்லுகிறபடி நடக்கிறவன்; ஒரு சிநேகிதன் புத்திப்படி நடக்கிறவன்; ஒரு மந்திரி புத்திப்படி நடக்கிறவன் என்பதாம். இவ்வாறான அப்பா, அப்பா மித்திரன், மந்திரி இவர்கள் நல்லவர்களாக இருந்து நல்வழியிலேயே ஒருவனை நடத்தினபோதிலும் அவனுக்குப, கடியாரத்தில் நாம் நமதிஷ்டப்படி திருப்பி வைத்து ஓட்டும் நிமிஷ முள்ளுக்கும், விநாடி முள்ளுக்கும் வித்தியாசமே இல்லை. தன் ஸ்வய புத்தியைக் கொண்டு ஒரு காரியம் செய்யச் சக்தியற்று மற்றவர்கள் உதவியைநாடுகிறவன் மனிதனல்ல; மனித வடிவங்கொண்ட ஒரு கருவியாவான்.

"கட்டிக் கொடுத்த அழுதும் சொல்லிக் கொடுத்த புத்தியும் எத்தனை நாள் வரும்" "தென்னை மரத்தில் ஏறுகிறவனை எவ்வளவு தூரம் தாங்கலாம்."

'பாடில்லாமல் பலனில்லை.' தேங்காய் பறிக்க வேண்டுமானால் தென்னமரம் ஏறித்தான் தீரவேண்டும். கல்லின்மேல் கல்லை வைத்துத்தான் கட்டடமாக்க வேண்டும். ஒரே தாண்டில் ஊர்போய்ச் சேர முடியாது. தாண்டிக் குதித்துத் தலையுடைவதைப் பார்க்கிலும் அடிக்குப்பின் அடிவைத்து மெதுவாய் நடந்துபோவதே நலம்.

'மெல்ல மெல்லப் பாயுந் தண்ணீர்
கல்லு முருகப் பாயும்."

நடக்கப் படிக்குமுன் நகரவேண்டும். ஓடத் துவக்குமுன் நடக்கவேண்டும். கையை யூன்றியல்லவோ காணம் போடுவார்கள்.

ஒரு வேலையை விட்டு மறுவேலையைத் தேடுவது வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அணிந்ததற் கொப்பாகும். காட்டிலிருக்கிற குருவியைநம்பி கையிலிருக்கிற குருவியைவிடுவது புத்தியீனம். நாளைக்குவரும் பலாக்காயைவிட இன்றைகிருக்கிற களாக்காய் உத்தமமல்லவா? இக்கரைக்கு அக்கரை பச்சை என்றெண்ணுகிற ஆடு போலிருப்பது நன்றல்ல. இங்குள்ள பாடே எங்கும் இருக்கும். ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே. குதிக்குக் குதித்து மாவிடித்தாலும் குட்டைச்சிக்கு மூன்று கொழுக்கட்டைதானே கிடைக்கும். எத்தேசம் போனாலும் முகத்தின் வாலை நிலத்தில விழப் பாடுபட்டுத்தான் ஆகாரம் சம்பாதிக்கவேண்டும். கழுதை எங்கே போனாலும் மூட்டை சுமந்தே தீரவேண்டும். கறவை மாடு எங்கே போனாலும அதைக் கறவாமல் விடார்கள். அப்பன் வீட்டிலிருந்தாலும் கறனைதான், அம்மான் வீட்டிலிருந்தாலும் கறனைதான். அறபமான வேலையென்று அசட்டை பண்ணுவது அடாத காரியம். பாவம் ஒன்றுதவிர பரமன் முன் அசங்கியமானது ஒன்றுமில்லை. யோக்கியன் செய்யும் ஒவ்

வொரு வேலையும் உயர்ந்ததே. ஏரோட்டும் எளிசாவும், ஓடோட்டும் தாவீதும், ஆயக்காரமத்தேயும், தச்சவேலை யோசேப்பும், மீன் பிடிக்கும் பேதுருவும், தோல் பதனிடும் சீமோனும், சேர்வைகார கொர்நேலியுவும், அரிபொறுக்கும் ரூத்தும், தையல்கார தபீத்தாளும், இரத்சாட்பரம் விற்கும் லீதியாளுமாகிய பல வேலையாட்களும் கர்த்தருக்கு உகந்தவர்களே. யோக்கியமாய்ச் செய்யும் தொழிலில் வெட்கமானது ஒன்றுமில்லை. எலும்பு கடிக்க ஆசைப்பட்டு நாயாவோர் எவருமுண்டோ? சோற்றுக்கு ஆசைப்பட்டுச் சோரம் போகலாமா? ஆதாயத்தை நாடி அயோக்கியமாய் நடப்பதும், பணத்தை நாடி குணத்தைக் கெடுப்பதும், பொருளை நாடிப் பொய்வழி புகுவதும் பொருந்தாத விஷயங்கள. உண்மையற்ற முயற்சி தின்மையுற்ற இகழ்ச்சி. அயோக்கிய சம்பாத்தியம் ஆகாப்பேய்க்கு நைவேத்தியம்.

ஆகாயத்துப் பறவைகளுக்கும் ஆகாரங் கொடுப்பது ஆண்டவர். ஆனல் அவர் ஆகாரத்தைக் குருவிக்கூட்டில் கொட்டிவைக்கிறதில்லை. தேடிப்போகும் குருவிக்கு மாத்திரமே ஆகாரம் கிட்டும். சங்கடம் இருக்கிறதென்று முயற்சியில் தளர்வது சரியன்று.

தங்களிரு தோள்களையே தனித்துணையாகக் கொள்ளுவோர்களுக்கே பரம்பொருள் பக்கத் துணையாய் நிற்கும்.

" மணியே பொன்னே மண்ணே பொருளே
அணியே துணியே அகமே நலனே
இகமே சுகமே இவை தாமெல்லாம்
வகைமே யுன்னை யுரைகுறி யன்றே!

தன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங். 1.)

1. Persevere against discouragement. Keep your temper. Employ your leisure in study, and always have some work in hand. Be punctual and methodical in business, and never procrastinate. Never be in a hurry. Preserve self-possession, and do not be talked out of a conviction. Rise early, and be an economist of time. Maintain dignity without the appearance of pride; manner is something with everyb ody, and everything with some Be guarded in discourse, attenti ve and slow to speak Never acquiesce in immoral or pernicious opinio ns. Be not forward to assign rea ons to those who have not any right to ask. Think nothing in conduct unimportant or indifferent. Rather set than follow examples. Practise strict temperance; and in all your transactions remember the final account. —*Bp. Middleton.*

Daily Resolutions.

2. Order and determination are essential to the performance of many of our duties, and highly conducive to regularity and success in our moral and religious course. The following are the resolutions of the celebrated Lavater, who was as estimable for his devotional spirit and heavenly-mindedness as he was celebrated for his essay on physiognomy :—

"I will never, either in the morning or evening, proceed to any business, until I have first retired, at least for a few moments, to a private place, and implored God for his assistance and blessing.

தொழில் விர்த்தியைக் கருதி ஒரேவகைத் தொழிலாளிகள் ஒன்று சேர்க்கை இயற்கையாதலால், தொழிற் பிரிவினையைக் கருதியே ஜாதிப்பிரிவினை நேரிட்டதாகத் தெரிகிறது. தவிர, ஆரியக் குடியேற்றத்திற்குப் பின்னே ஜாதிப்பாகுபாடு உண்டானதென அடியில் வரும் பழைய நூலாகிய கபிலர் அகவலால் நன்கு விளங்கும்.

"ஒட்டியர் மிலேச்சர் ஓணர் சிங்களர்
இட்டிடைச் சோனகர் யவனர் சீனத்தர்
பற்பலர் நாட்டினும் பார்ப்பா ரிலையால்
மூற்படைப் பதனில் வேறுகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிற் காட்டினில் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்."

ஆரியரிற் சிலர் ஜனசமூகத்திற்கு மேதகோராதும் கல்வி கற்பதுமே தொழிலாகக் கொண்டனர். சிலர் தீபலிங்குகளாலும் அந்நிய அரசர்களாலும் தீங்குறுவண்ணம் பாதுகாத்தலைத் தலைமேற் கொண்டனர். சிலர் பண்டமாற்றலால் உலகுக் குதவிசெய்தும் தாங்களும் ஜீவித்தும் வந்தனர். எஞ்சிநின்ற சிலர் உணவுப் பொருளை விளைவித்தும் தச்சுவேலை, கொத்துவேலை, பொன்வேலை முதலிய கருமங்களையும் ஏற்றுக்கொண்டனர். நெடுநாள் இவ்வகுப்பினருக்குள் அந்நியோந்ய ஐக்கியம் குறையாமல் ஒருவருக்கொருவர் உதவியாய்க் காரியம் நடைபெற்று வந்தது. நால்வகைத் தொழிலாளருக்குள் யாதொரு உயர்வு, தாழ்வுமின்றி ஒவ்வொருவரும் ஜனசமூகத்தின் செளக்கியதனை நோக்கியே பாடுபட்டுவந்தனர். இவ்வாறு பலவாண்டு கழிந்தபின் நாளாகவே தேகவன்மையாலும், அறிவு முதிர்ச்சியாலும், செல்வச் செருக்காலும் ஒருவரையொருவர் விரோதித்து தங்களால் ஜனசமூகத்திற்கு விளையக்கூடிய நன்மையைக் கெடுத்தனர். ஒவ்வொருவரும் தாங்கள் பிறர்க்குச் செய்யவேண்டிய கடமையை மறந்தனர். சுயநலப்பிரியமும் அகங்காரமும் அதிகரிக்கவே ஜனசமூகத்தின் செளக்கியத்துக்கு நால்வகை வர்ணத்தாரின் ஏற்ற ஒற்றுமையே காரணமென ஒருவரும் கவனிக்கவில்லை. பிராமணன் பிரமாவின் முகத்திலும், க்ஷத்திரியன் மார்பிலும், வைசியன் இடையிலும், சூத்திரன் பாதத்திலும் உற்பத்தியாயினன் என்னும் சாஸ்திர வாக்கியத்தின் உருவத்தைத் தங்கள் தங்கள் சுயநன்மைக்கேற்ப அர்த்தங் கொள்வாராயினர். தேக, மனோ, செளக்கியங்கள் மேற்கூறிய நால்வகை அங்கங்களின் சுகநிலைமையை அடுத்ததெனக் கவனிக்கவில்லை.

"வெந்நீர் பொருதெனுடல் காலின்முள் தைக்கவும்
வெடுக்கென்று அனைத்தெடுத்தால்
விழியிமைத் தங்கனே தண்ணருள் காடுவேன்."

காலில் மூள் தைத்தாலும் தேகமுழுவதும் வருந்துமென முதி யோர் உரைத்ததையும் கைவிட்டனர்.

பின்னர், சைவம், வைஷ்ணவம், கௌமாரம் முதலிய அறு வகை சமய பேதத்தாலும், அகம்பாவத்தாலும், சுயநலப்பிரீதியா லும் கணக்கற்ற ஜாதிப்பிரிவுகள் உண்டாயின. "ப்ரமக்கியா னந்தோ ப்ராமணை" "சிறப்பும் சீலமும் அன்றிப் பிறப்பு நலந் தருமோ பேதையீரே" என்னும் கருணை வாக்கியங்களையும் "அந் தணர் என்போர் அறவோர் மற்றவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுதலான்" என்னும் திவ்விய குறளையும் மமதையால் மறந்துவிட்டனர்.

"சத்தியமின்றித் தனிஞானம் தானின்றி
ஒத்த விடயமனோவாக்கும் உணர்வின்றி
பத்தியுமின்றி பரவுண்மை யின்றி யூண
பித்தேறு மூடர் பிராமணர் தாமன்றே."

எனும் திருமந்திர பெருவாக்கையும் கவனிக்கிறதில்லை.

ஜாதி மதபேதம் குறைந்துவரும் தற்காலத்திலும் அநேகர் அற்ப சந்தோஷத்தாலும், அகம்பாவத்தாலும் குலத் தர்க்கமிட்டு ஜாதிப் பித்தைத் தலைக்கேற்றி கல்வியிழந்து, கனமிழந்து, பொரு ளிழந்து, அகாலமாய் ஆவியிழந்து, அல்லலுற்றுத் திரிகின்றனர். இவ்வித மிடியற்ற வாழ்க்கையை கல்வியறிவால் உய்த்துணர்ந்து, கைத்தொழிலால் சீர்ப்படுத்தி, நாணயத்தால் நன்மதிப்புப்பெற்று நம் இந்திய குலோத்தமர்கள் சீர்திருத்தப்பெற்று அந்திய தேசத் தாராலும் ஒருங்கே மதிக்கப்படும் கண்ணியத்தைப் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டாமா? கண்ணியமும் பிரபுத்வமும் பெற யோக்யதையில்லாத ஒருவன் தனது முன்னோர்களது பெருமை யையும் தான் பிறந்த ஜாதியையும் சொல்லிக் கௌரவம் தேடு வது, திருடன் ஒருவன் கோவிலுக்குள் நுழைந்துகொண்டு தன் னைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்திப்பதுபோலிருக்கிறது. தனது பெற்றோர் பார்வையுடையவர்கள் என்று சொல்வது கண் கெட்ட கபோதிக்கு என்ன பயனைத் தரும்? தன் பாட்டனர் நாவலாலால் வாய் பேசக்கூடாத ஊமைப் போனுக்கு என்ன பயன்? அதுபோலவே தமது முன்னோர்கள் நல்ல ஸ்திதி யிருந்தார்களென்பதுவும், தன் ஜாதி உயர்ந்ததென்பதுவும், தர்ம சிந்தனையில்லாத அற்பருக்கு என்ன பயனைத் தரும்?



பாரதமாதா.

அகிலகடற் சூழ்ந்த நிலமகட் கினிய முக மென மிளிரும் பாத கண்டமாகிய புண்ணிய தேசமென பாலலர் பல ரால்போற்றப்படும்பாக் கியம் பெற்ற பாரத மாதா தம்புத்திரர் ஜாதி மத பேதங்களால் பற் பல பிரிவுகள் ஏற்படுத் தி ஒற்றுமைநீங்கி இழி வான ஸ்திதிக்கு வந்து விட்டார்களே யென்று கலங்கி யழும் கண்ணீ ரானது பிரளயமாகிப் பிரமபுத்திரா, கங்கா நதி, இந்து நதிகளின் மூலமாய காரை தாரை யாய் சமுத்திரத்தின் பாய்கின்றது. ஓ! சகோதரரே! நாம் ஜாதி மதபேதங்களை வேரோடு களைந்து ஒற்றுமை நீங்கி பாரதமாதா வின் புத்திரர் அனைவருப் ஒரே தாயின் பிள்ளைகளான சகோதரர் என்று எண்ணுங் காலம் எப்பொழுது வரும்! அப்பொழுதே மனமகிழ்ச்சியின் கால்! அதுவே சுயராஜய சுதந்தரத்திற்கு நாம் பாத்தியஸ்தராகுங் காலம்.

"வந்தேமாதரம் என்போம்—எமது
மானிலத்தாயே வாழ்கவே என்போம்—வந்தே.

வேறிய ராயினும் ஒன்றே—இன்னும்
வேறுபிரிவின ராயினும் ஒன்றே—வந்தே.

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜென்மமே இந்தியர் யாவரும் என்போம்—வந்தே.

ஒத்திருந்தால் வரும் வாழ்வே—நமக்குள்
ஒற்றுமை நீங்கிடில் யாவர்க்கும் தாழ்வே—வந்தே.

"United we stand, Divided we fall."

ஜாதிபேதமே நம் தாய்நாடு கூறுதுண்டுகளாகி விட்டதற் குக் காரணமெனக் கண்டு பலரும் விசனித்து, மறுபடியும் இந்தி

யர்கள் ஒன்று சேர்ந்து நம் நாடு கேஷமதினசையை அடையும்படி உழைத்து வருகின்றனர். அதற்காகவே ஆரிய சமாஜம், பிரம சமாஜங்கள், ஆசார சீர்திருத்தக்காரர்கள் முதலிய பல கூட்டத் தார் இராப்பகலாய் உழைத்து வருகின்றனர். இதற்கென்று விசேஷமாய் தற்காலத்தில் பாடுபடுவது பிராமணேதரமர்களில் அனந்தம்பேர் என மனமகிழ்ச்சியுடன் கூறுவோம். ஜாதிக்கட்டுப் பாட்டை ஆதியில் ஏற்படுத்தி அதன்பலனை அனுபவித்தவர்களே அதனால் நம் பாரதமாதாவுக்கு சேர்ந்த இழிவைக் கவனித்து ஜாதிக்கட்டுப்பாட்டை அடியோடு தகர்க்கும்படி முன்னுக்கு வருவது நம் தாய்நாடு சுயராஜ்யம் பெற்று வாழ்வடையும் நற்காலம் வந்துவிட்ட தென்பதற் கரிகுறியாகும். தேசாபிமானம் மிகுத்தவர்கள் நாம் பிறந்த தேசம் கீர்த்தியாலும் வளத்தாலும் ஓங்கி வளர்வதற்கேற்ற உபயாங்களைக் கையாடவேண்டும். அப்படியே ஜாதியபிமானம் உடையவரும் உச்சாதியார் கல்வியும் செல்வமும் கீர்த்தியும் நாகரீகமுமுடையவர்களாகி, அனைத்துயிரொன்றென் றெண்ணி மேன்படுவதற்கேற்ற உபாயங்களைச் செய்தல்வேண்டும். அவ்வித நன்முயற்சிகளி லொன்றும் செய்யாமல், வீணே கூட்டங் கூட்டிக் கலகம் விளைவிப்பதும், ஜாதிக்கர்வம் பாராட்டி பிறஜாதி யாரைத் தாழ்வாகப் பேசுவதும், ஹிம்சிப்பதும், அபிமானிகளின் சுபாவமன்று. ஜாதியைக் கெடுக்கச் செய்யும் வழியேயாகும். ஜாதி முன்னேற்றத்திற்காக முயற்சிசெய்வதற்குப் பதிலாய் ஜாதிப் பெருமையைமாத்திரம் பாராட்டிக்கொண்டு, வீண்கர்வங்கொண்டு திரியும் மூடர்கள் யாவராலும் பழிக்கப்படுவார்களன்றோ? அவர்கள் அபிமானிகளன்று, பேமானிகளே. அறிவுடையோர் சிந்தித்துப் பார்த்து தக்க வழிகளில் முயல்வார்களானால் நமக்குள் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமைக் குறைவு ஒழிந்துபோம். நாம் ஒன்று சேர்ந்து உழைத்து வாவேண்டியது பாரதமாதாவின் புத்திரர் ஒவ்வொருவரையும் பொறுத்தக் கடமையாகும். "எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்."

நமசிவாய முதலியார் சொல்வதுபோல்,

மாரிதான் சிலரை வளர்த்து பெய்யுமோ
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ
மானிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ.

மேல்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ"
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலைத் தாணி யோர்க்கே.

குலமு மொன்றே குடியு மொன்றே
இறப்பு மொன்றே பிறப்பு மொன்றே
வழிபடும் தெய்வமும் ஒன்றே யாதலால்
முன்னே ருரைத்த மொழி தலைமைல்
எந்நாளாயினும் இரப்பவர்க் கிட்டு
புலையுங் கொலையுங் களவுந் தவிர்த்து
நிலைபெற வறத்தில் நிற்பதை யுணர்ந்து
ஆணும் பெண்ணும் அல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது பழையெனப் படாது
சிறப்பும் சீலமும் அல்ல வு.....
பிறப்பு நலம் தருமோ பேதையீரே.

ஔவைப் பிராட்டியார் நல்வழியில்

"சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி."

என்று வெண்பாவைப்பாடி உண்மையைப் புலப்படுத்தவில்லையா?

திருவருட் பிரகாச வள்ளலாகிய சிதம்பரம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் கூறிய திருவருட்பா என்னும் தெவிட்டாத பாடலில் "சாதியிலே மதங்களிலே, சாதகரச் சண்டிகளிலே கோத்திரச் சண்டையிலே, ஜாதியிலே அபிமானித்தலென்ற உலகீர் அஃதென்ன நீதி, வீணீர் ஏழ்த லழகலவே" எனபவை போன்ற இன்மொழி கூறி சத்தியங் காட்டிச் சமரசமார்க்கம் விளக்கவில்லையா?

ஆகவே, ஆசாரம், மோக்ஷதை, தர்மநெறி முதலியவற்றால் மாத்திரமே இவ்வுலகில் பேதங்கள் ஏற்படலாமெனவன்றி பிறபிறவிகளிலேயே விதிபாசங் காண்பிப்பது தர்மநெறிக்கு ஒவ்வாததாகும். கிணறுறுத் தவரே கிணற்றைச் சபிப்பதும் நமபுவதும் போல் பற்பல மதசாத்திரங்களும் தம் தம வழுகைகளையே ஆதாரமாய்ப் பாராட்டிகொள்வார்கள். காலதத்தையும் யுக்தாயுக்தத்தத்தையும் அனுசரித்தே யாதொன்றையும் செய்யவேண்டுமன்றி குருடு வழக்கத்தைச் சரியான முரட்டுத்தனமாய்ப் பிடிப்பதினாடே வழக்காகும். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" என்று பவணந்தி முனிவரும் பகுவாயப் பகர்ந்திருக்கின்றனரே.

1. Children we are all,
Of one great Father, in whatever clime.
Nature or chance hath cast the seeds of life—
All tongues, all colours; neither after death
Shall we be sorted into languages
And tints, white, black, and tawny, Greek and Goth,
Northmen, and offspring of hot Africa:

The All Father, He in whom we live and move,
He, the indifferent Judge of all, regards
Nations, and hues, and dialects alike;
According to their works shall they be judged,
When even-handed Justice in the scale
Their good and evil weighs. —*Southey.*

2. God will not seek thy race,
Nor will He ask thy birth;
Alone He will demand of thee,
What hast thou done on earth? —*Persian.*

3. He who mixes with unclean things, becomes unclean himself; he whose associations are pure becomes purer each day.
—*Talmud.*

4. The foundations of national glory are set in the homes of the people, and they will only remain unshaken while the family life of our race and nation is strong, simple and pure. —*King George V.*

5. It matters little where I was born;
If my parents were rich or poor;
Whether they shrank at the cold world's scorn,
Or walked in the pride of wealth secure;
But whether I live an honest man,
And hold my integrity firm in my touch,
I tell you, my brother, plain as I am,
It matters much!

6. Custom doth often reason over-rule,
And only serves for reason to the fool. —*Rochester.*

7. What custom wills, in all things should we do't,
The dust on antique time would lie unswept
And mountainous error be too highly heapt
For truth to over peer. —*W. Shakespeare.*

8. Custom doth so bleare us that we cannot distinguish the true visage of things. —*Montaigne.*

9. He serves his country best
Who lives pure life and doeth righteous deed,
And walks straight paths, however others stray.
And leaves his sons as uttermost bequest
A stainless record which all men may read.
This is the better way.

No drop but serves the slowly lifting tide;
No dew but has an errand to some flower;
No smallest star but sheds some helpful ray,
And, man by man, each helping all the rest,
Makes the firm bulwark of the country's power.
There is no better way. —*Susan Coolidge.*

நன்றி.

"நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லக்கன்றி
என்று தருங்கோ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தரும்."

ஒரு தென்னைமரத்தைத் தண்ணீரூற்றி வளர்த்தால் அது பெரிதான பின்பு நாம் வளர்த்திய நீரையும் இரத்தினப்புடன் இளபமாகப் பருகும்படி தலைபாலே தாங்கிக் கொடுக்கின்றது. காமும் "முன்னித் தவங் கிடந்து, பூந்தாது சாகமந்து, அந்தெகலாய்ச் சிவனை யாதரித்து, அங்கமெலாம் பூரித்துவபற்று, பையலன்ற போதே பரிந்தெடுத்து, ஆனபயமுந்தும் அருந்திக் கன்புற்றுக் குழந்தை யழுங்கால் வாட்டிலிலும் தொடடிலும் மார்மேலும், தோள்மேலுமவைத்துக் காதளித்து காராட்டிச் சீராட்டி, முன்பு முலையூட்டி, மூக்குச்சிந்தி, காசியூதி, செவியுநுவி, நீராட்டி, தெறிக்கு நிலக்காப்பிடடு, விழிக்கு அஞ்சனந் தீட்டி, பலபணிகளும் பூட்டி, கன்னங்கிளளி, உச்சிமோந்து, கண்ணேணுகண், வாயோடு வாய், முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சி முத்தாடி, மகவுற்ற நோய் காணிற்றான மருந்தருந்தி, குழந்தையின் குற்றமனத்தையும் குணமாகக்கொணடு, தாழ்நி தன் குஞ்சுகளைச் செட்டையின் கீழ்ச் சேர்த்து அணைப்பதுபோல ந மெய்க்காமலும், எறும்பு கடியாமலும், பசுவி பறவாமலும், வெயில்படாமலும், காற்று வீசாமலும், பனிபெய்யாமலும, மார்பிலுந் தோளிலும் வயிறறிலும் அணைத்துத் தன் கன்றுக்கிரங்கும் கறவைபோல் நெஞ்சுருகி, நோயணுகாது மருந்தளித்துப் பத்தியமிருந்து கண்ணேண இமை காப்பதுபோல் அபாயம வராமல் காத்து காளைாருமணியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து, தனையிரினும் மேம்பாடாகப் போற்றிக் காப்பாற்றிப் பல தீங்குகளினின்றும் காத்து வரும் தாய் தந்தை முதலியோர்களை நாம் பெரியவர்களானபின்பு, தெனனை தனக்கு வளர்ந்திய நீரைக் கொடுக்குமாம்போல் நம்மைக் காத்த அவர்களை நாமும் காக்கவேண்டும்.

"பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக்கொடுத்தோன்
சிறப்பி னுபதேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகிர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென வெண்."

"தன்னை யளித்தாள் தமையன் மனைதருவின்
பன்னி யரசன் பயிரவி—தன்மனையைப்
பெற்றருளிவ ரைவர் பேரிலுலகத் தெவர்க்கும்
கற்றூய வொன்றே நாவில்."

நமக்கு கன்மை செய்த பெரியோர்களுக்குப் பிழைசெய்ய நினைப் போமாயின், நமது பெருமைகள் அழிந்து நரகத்திற்காளாவோம். இதையறிந்திருந்தும் நம்மில் எத்தனையோபேர் தம்மை அன்போடு பெற்று வளர்த்து ஆற்றிப்போற்றி அருமையாய்க் காப்பாற்றிவந்த தாய் தந்தையரின் சொற்கேளாமல் பட்டிமாடுபோல் கெட்டலைந்து, கன்மனம்போன போக்கெல்லாம் போய் அவர்களைச் சதா துக்கசாகரத்தில் அமிழ்ந்து தவிக்க விடுகின்றனர். இது தர்ம மாகுமா? அறிஞர் தம் பெற்றோரை மிந்தித்து வீட்டைவிட்டுத் தூரத்துவதை அடிக்கடி பார்க்கிறோம்.

> "தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயின் றெறிவார்."

எனத் திருவள்ளுவர் தெரிவாய் மலர்ந்தருளியதை என்றும் மறவா திருப்பது நமது கடமை.

நம் முன்னோர் பெருநாள் முதலிய விசேஷ தினங்களில், அதி காலையிலெழுந்து நம்பெற்றோரிடஞ் சென்று, தீர்க்கதண்டம்செய் து வணங்கி, அவர்களாசீர்வாதமும் பெற்றுக்கொள்வர். சமு சாரிகளான பின்பும் அப்படியே செய்வார். தற்காலமிதை அநாக ரீகமென்றெண்ணி விட்டுவிட்டனர் போலும்! அவர்களைப் போற் றல் மிகவும் அவசியமானது. அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றால் அது நம் ஜீவியத்துக்கு துணையான சஞ்சீவியாகும். இதற்குப்பதிலாக சிலர் தமது மாதா பிதாக்களை தம்மைப் பெற்றுவளர்த்த அருமை பெருமைகளை எள்ளளவும் நினையாமல், அவர்கள் என்னைப் பெறு கிறதற்கு இரவும் பகலும் உடம்பை பொருத்து வேண்ட உறக்க மின்றி உபவாசித்து வேதனையில் நின்று தவஞ்செய்தார்களோ?
"அப்பன் மதுப்பட்டான், ஆத்தாள் எதிர்ப்பட்டாள். நான் வெளிப்பட்டேன்" வேறல்லாமல் வேறென்ன என்று வாய் கூசாமற் பிதற்றி தம் தாய் தந்தையரை சீர்கொண்டு மாட்டியும் திட்டி யும் மனமெரியப் பண்ணுகிறார்கள். "அவர்கள் மனம் நொந்த மாதிரியே இவர்கள் ஜீவியமும் நொந்தேபோம்." இவர்கட்கொரு போதும் மீட்சியில்லை.

"மாதா மனமெரிய வாழா பொருளானும்" பெற்றோரிடுஞ் சாபம், வாழ்க்கையைக் கெடுக்கும் விஷமாகும். அதோ! இதற்கோ இவர்களை இவ்வளவு பாடுபட்டு வளர்த்தார்கள். இவர்கள் மக்க ளல்ல, ஒன்றுக்கு முதலாத வெறுங்கற்களே யாவர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதனையும் "தந்தை தாய்ப்பேண்" என்பதனையும், அவர்களைத்தெய்வத்தைப்

போல் பாவித்து இகழாமல் வணங்கி அவர்கள்சொற்கேட்டு அவர் கள் குற்றங்களைப் பிறரிடந் தூற்றாமல் "தாய் சொலிற் சிறந்த வாசகமில்லை" "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" என்னும் வாச கங்களைக் கிணங்க, மாதரு பிதருவாக்கியப் பரிபாலகளைய் அவர் கள் சொல்லைக் கடவாமற் கைக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய அன்னவஸ்திராதிகளைக் குறைவில்லாமற் போஷித்து வரவேண் டும். "தாயிடப் பிள்ளையிடத் தானே மனமகிழ்" என்கின்றார் களே.

தனது கல்வி, முயற்சி, அறிவு, அண்மை, உண்மை, பொறு மை, ஒழுக்கம் முதலியவைகளைப் பார்த்து இந்த மகாஜபாவன் அறிவில் அதிசேஷமோ? விக்கதையில் அஸ்திபாரமோ? அண்ண யில் விக்கிரமாதித்தனோ? வாய்மையில் அரிச்சந்திரனோ? நீதியில் மனுச்சக்ரவர்த்தியோ? பொறுமையில் பூமாதேவியோ? சாந்த தில் தர்மராஜனோ? என்று அதிசயித்து இவனைப் பெறுவதற்கு இவன் பிதா என்ன தவத்தைச் செய்தானோ?

"மகன்றந்தைக் காற்றுமுதவி யிவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."

என்று நாயனார் சொல்வதுபோல் பிறர் சொல்லத்தக்கதாக, நல்ல கீர்த்தியைப் பிதாவுக்குச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும். தாய் தந்தையர் பெயரை நிலைநிறுத்துவது [illegible] பிள்ளையின் விசேஷித்த கடமை.

"என்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்."

தன்மகன் சகல கலைவல்லவன், சாதுரியக்குணச் சம்பன்னன், என்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாயானவள் தன்னைப் பெற்றபொழுதடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிக மகிழ்ச் சியை யடைவாள்." என்றார் நாயனார்.

பாரத மக்களிலொருவராயஃவீடுமர், தன் தந்தையின்பொரு ட்டு உலகிலனுபவிக்க வேண்டிய அநேக இன்பங்களைத் துறந்து அவரைக் களிக்கும்படி செய்து, பின்வருமாறு வாழ்த்தப்பெற்றார்.

"தந்தையர்க் குதவுமுதவியிற் சதமடங் குதவினை யுனக்கு
மைந்தருக் குதவுமுதவியிற் சிறிது மாதவஞ் செய்திலை யுதவச்
சிந்தையிற்றுறக்கம் வேண்டாமென் றெண்ணிச் செல்லுதுமன்னுயிர்மேன்
முந்துறக் காலன்வரப் பெறுனென்றே முடிவிலா வொருவரமீந்தான்."

இம்மைமந்தன்மேல் தந்தைக்குண்டான ஆனந்தத்தை இதனிளக்கு கின்றது

ஆதியாகம் 27-ம் அதிகாரத்தில் ஈசாக்கினுடைய அந்தியகாலத்தில் தன் மூத்த மகனாகிய ஏசாவை வாஞ்சித்தும்படி அழைத்து நான் புசித்து எனக்கு மரணம் வரும் முன்னே கர்த்தரை முன்னிட்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி நீ எனக்காக வேட்டையாடி அதை எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாக சமைத்துக்கொண்டு வா என்று சொல்ல யாக்கோபு எவ்வளவோ பாடுபட்டு ஏசாவை வஞ்சித்து, கானே அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுனைச் சொல்லி யிருக்கிறது. இவற்றால் பெற்றோரின் ஆசீர்வாதம் எவ்வளவு இன்பகரமானதென்றும், அன்னதானத்தின் மகிமை இன்னதென்றும் விளங்குகிறது. இன்னும் அன்னதானத்தால் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்களைப் பற்றி ஆபிரகாம். லோத்து முதலியவர்களின் சரித்திரத்தால் நன்கு விளங்கும். (ஆதி, 18,19)

இன்னும் அன்னதானத்தைப் பார், கிணர, மூப்பு மேலிட்டு பாயும் படுக்கையுமாய், ஆயுள் குன்றி வருந்துங்காலை மக்கள் உதவி அடையமல்லவா

"சின்னவோர் பொருள்தந்தோரை சிவனுள் ளளவுமுள்ளத்
துன்னவே வேண்டுமென்ன வுரைத்தனர் பெரியோர் தேசர்
தன்னையா ருயிரைச்சோர்ந் தாரணியின் வாழ்வைத்தந்த
வன்னதந்தையர்க்குச் செய்யுமருங் கைம்மாறுளதோ வம்மா."

எனப் பெரியோர் கூறியிருக்கின்றார்கள்.

"மனையவள் வியின் வேறோர் மனவியைக் கொளலாம்பெற்ற
தனையராதிய றிறப்பிற் றனித்தனிப் பெறலாம்பின்னும்
புனைபொரு ணீங்கின்மற்றோர் பொருளையும் பெறலாமத்த
னனையிறந்திடின் வேறத்தனை வருவாரோ நெஞ்சே."

என்றபடி மாதா பிதாக்கள் தவறிவிடின் அவர்கள் ஸ்தானத்தை நிறப்பத்தக்கவர் எவர்?

எட்டு என்ற எளிமலை கக்கியபோது அரும்பொருட்களனைத்தையும் கவனியாது தள்ளாப்பருவத் தந்தையரைத் தோள்மேல் சுமந்து ஓடிக்காத்த புத்ரசிகாமணியின் புகழ் உலகெலாம் பரவிற்றன்றோ! அவனைத் தம் நாவினால் வாழ்த்தாதவர் எவர்?

ஐந்தாம் கற்பனையில் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றதேவன் தாமே கட்டளையிட்டிருக்க பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் அவர்களுடைய விருப்பத்தையும் புத்திமதியையும் தள்ளி அவர்களிட

நில் மூட்டுத்தனமாயும் கோபமாயும் பேசுகிறதும், அவர்கள் திரவியத்தை நாசம்பண்ணி தன் இஷ்டப்படியே பிடிவாதமாய்த் திரிந்தலையும் பிள்ளைகட்கு தேவாசீர்வாதம் எங்ஙனம் கிட்டும்!

பாலிவனங்களில் திரியும் பக்ஷியாகிய நெருப்புக் கோழியின் வழக்கங்களைக் கவனித்துப் பார்ப்போம். தாயும் தந்தையும் தன் குஞ்சுகளைச் சிறுபிராயத்தில் தமதுசிறகில் தூக்கிக்கொண்டுபோனின்றன. அதேபிரகாரம் குஞ்சுகள் முதிர்ந்தவுடன் வயதுசென்ற தமது பெற்றோரைத் தமது சிறகில் தூக்கிக்கொண்டு போய் பத்திரமான யிடத்தில் வைத்து அவற்றிற்கு ஆகாரங் கொடுக்கின்றன. ஒரு அற்ப ஜீவ ஜெந்துவுங்கூட தனக்கு ஜீவனளித்துப் போஷித்த பெற்றோர்க்கு நன்றிபாராட்டும் சுபாவமுடையதாயிருக்க, நமது வாழ்வையும் சுகத்தையும் கருதி வளர்த்த பெற்றோரின் கடை திரை மூப்புக்காலத்தில் தக்க உபசாரணைகள் செய்யாதுவிடுவது மகா பெரிய பாவம்.

மரத்தின் கிளைகளுங்கூடத் தம்மைத் தாங்கும் வேருக்குச் சாரத்தைப் பிரதியாகக் கொடுக்கின்றன. அது தன் ஜீவாதாரமாயிருந்த கடலுக்குத் தன் நீரைத் திரும்பவும் கொடுத்துவிடுகிறது. இவ்விதமாய் உலகிலுள்ள வஸ்துக்கள் அனைத்தும் தாம் பெற்ற உபகாரத்துக்குப் பிரதியுபகாரம் செய்து சுழற்சி தொங்க வேண்டுமென்பது சிருஷ்டிகரின் கருத்து. இதற்கு மாறாக சுயநலம் பாராட்டுகிறவர்களும் பேராசையுள்ளவர்களும் தமக்குக் கிடைத்த நன்மைகளில் திருப்தியடையாமல் "பெய்த மழை முழுவதையும் ஆக்ருஷித்து தனக்குள்ளடக்கிக கொண்டு ஒரு பலனையும் தராத பாலைநிலத்துக் கொப்பாவார்கள்.

குறள்.

"என்னன்றி கொன்றார்க்கு முய்வுண்டு உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகார்க்கு"

"நன்றி மறப்பது நன்றன்று அஃதல்ல
தன்றே மறப்பது நன்று."

பழமோழி விளக்கம்.

"நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றுலும்
குலமுழுதும் நன்மையுண்டாம்
அன்றி யறிவில்லாத பிள்ளையொரு
நூறுபெற்று மாவதுண்டோ
மன்றில் நடம்புரிவாரே தண்டலையாரே
சொன்னேன் வருடந்தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதலைற் பலனுண்டாமே."

பெண்மதிமாலை.

1. மாதா பிதாவை வணங்கு—நாளும்
ஆதாரமாகவே அவர்சொல்லுக் கிணங்கு.

2. தந்தைதாய் சாபம் பொல்லாது—அவர்
சிந்தை நொந்தால் மக்கள் செல்வம்நில்லாது.

3. மாதா பிதாவுக்குத் துரோகம்—செய்யும்
பாதகனைச் சுற்றும் பாவம் அநேகம்.

4. பெற்றவர் நேசத்தைத் தேடு—அவர்
குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொண்டாடு.

5. உள்ளதாய் தந்தைக்குத் தீங்கு—செய்யும்
பிள்ளையைத் தன்பிள்ளையே பழிவாங்கும்.

6. கடலைப்போல் மாதா சகாயம்—அதற்
குடலைச் செருப்பாய் உதவலும் நியாயம் (மாதா பிதாவை)

Gratitude.

I. Gratitude is a virtue disposing the mind to an inward sense and an outward acknowledgement of a benefit received, together with a readiness to return the same, or the like, as occasions of the doer of it shall require, and the abilities of the receiver extend to. Ingratitude is an insensibility of kindness received, without any endeavour either to acknowledge or repay them. Ingratitude sits on its throne with pride at its right hand and cruelty at its left, each worthy supporters of such a state. There neither is, nor ever was, any person remarkably ungrateful who was not also insufferably proud; nor any one proud who was not equally ungrateful.

2. Ingratitude overlooks all kindnesses, and this is because pride makes it carry its head so high. Ingratitude is too base to return a kindness, and too proud to regard it; much like the tops of mountains barren indeed, but yet lofty, they produce nothing, they feed nobody, they clothe nobody, yet are high and stately, and look down upon all the world about them.

3. Friendship consists properly in mutual offices, and a generous strife in alternate acts of kindness. But he who does a kindness to an ungrateful person sets his seal to a flint, and sows his seed upon the sand:—Upon the former he makes no impression and from the latter he finds no production. —*Dr. Smith.*

4. When gratitude o'erflows the swelling heart
And breathes in free and uncorrupted praise
For benefits receiv'd, propitious Heaven
Takes such acknowledgements as fragrant incense,
And doubles all his blessings. —*G. Lille.*

5. Honour to those whose words or deeds,
Thus help us in our daily needs—
And by their overflow
Raise us from what is low. —*Longfellow.*

6. What causes such a miscalculation in the amount of gratitude which men expect for the favours they have done, is—that the pride of the giver and that of the receiver can never agree as to the value of the benefit. —*La Rochefoucauld.*

7. Love rules the universal heart of man,
Through all its range of age, rank, place, and mood;
But thou, since first in heaven her reign began,
Her holiest offspring art, O Gratitude!
Man's hard stern heart grows soft, with thee imbued,
And sweeter swells the fount of woman's love;—
Oh, let thy forms in dwellings wide and rude
Nor doubt, nor scorn in polished bosoms move;
Since, wheresoe'er thou be, thou comest from above!
—*Colton.*

8. Examples of ingratitude check and discourage voluntary beneficence; hence the cultivation of a grateful temper is a consideration of public importance. A second reason for cultivating in ourselves that temper is—that the same principle which is touched with the kindness of human benefactor is capable of being affected by the divine goodness, and of becoming, under the influence of that affection, a source of the purest and most exalted virtue.

9. On Napoleon's thirty-eighth birth-day, a brilliant party was assembled at the Tuileries. Taking the arm of his faithful friend Duroc, he wandered about the garden in disguise. A little boy was shouting—'*Vive l'Empereur!*" Napoleon took the child in his arms, and asked him why he shouted so "Because my father and mother taught me to love and bless the Emperor,' the child answered. Napoleon then spoke to the parents who testified to the blessings he had conferred upon France. The next day a present from the Emperor informed them to whom they had unbosomed their gratitude.
—*Bourrienne.*

10. Gratitude signifies sensibility, generosity, and a feeling of obligation. —*R. Cecil.*

11. The love of God is the sublimest gratitude. It is a mistake therefore, to imagine that this virtue is omitted in the scriptures; for every precept which commands us to love God because He first loved us, presupposes the principle of gratitude, and directs it to its proper object —*Adn. Paley.*

பெற்றோர்.

ஆசிரிய விருத்தம்.

"தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்தவரு
தருமங்கள் செய்து வாலும்
தன்மை மிகுதானங்கள் செய்தலுங் கணியோக
சாதக மெனப் படுதலும்
மங்குத லிலாததன் றந்தைதாய் குருமொழி
மாறாது வழிபாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா புத்திபுரி
மார்க்கமுங் தீர்க் காயுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியும்
ஈகையுஞ் சன் மார்க்கமும்
இவையெலா முடையவன் புதல்வனை மவனையே
யீன்றவன் புண்யவானும்."

குறள்.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

அதாவது தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது கற்றோ ரவையதின்கண் கலவியில வலலவனென முற்பட்டிருக்கச் செய்தலாம். அவ்வாறின்றி,

"கலை பயிற்றுது காதலர்க்கு மாநிதி
நிலையென வளித்திட னெறியில பித்தர்க்குக்
கொலைசெய்வா ளீவதுங் குழவி தன்னைமா
மலையி னோரத்து வைப்பது மாணுமே."

கல்வி கற்பிக்காமல் புதல்வருக்குத் திரண்ட ஐசுவரியத்தை நிலை யென்று கொடுத்தலானது நன்னெறியிலலாத பித்தர்க்குக் கொலை செய்வதற்குரிய வாளாயுததனைக கொடுபபபதையும், குழந்தையை பெரிய மலையின் உச்சியில் வைப்பதையும் ஒப்பாகும்.

ஞானதீபிகை.

துஷ்டப் பிள்ளை பிதாவுக்கு அவமானத்தைக்கொண்டு வருகி றான். ஆனால, சரியான காரியங்களைச் செய்பவன் தன் வயதி சென்ற பிதாவுக்குக் கௌரவதததைக் கொடுக்கிறான். பூமி புன் னுடையதே. அது பயிர் செயயப்படாம லிருக்க வேணடாம். நீ நாட்டப்படி உனக்கு அறுவடை யேறபடும்.

உன் மகனுக்குப் பணிவைக் கற்றுக்கொடு; அவன் உன்னை சதாகாலம் மனதார நினைப்பான். அவனுக்குத் தாழ்வைப்போதி; அவன் ஒருபோதும் அவமானம் அடைய நேராது. அவனுக்கு நன்றியறிவைக் கற்பி; அவன் பயன் பெறுவான். தர்மத்தை யுபதேசி; அன்பு பெறுவான். மிதத்தை யூட்டு; சுகம் பெறுவான். விவேகத்தைப் போதி; அவன் நல்ல ஞானத்தை யடைவான்.

ஊக்கத்தை யூட்டு; அவனது செல்வம் வளரும்; நன்மை செய்யக்கற்பி; அவன் மனம் உயரும். கலைஞானங்களைக் கற்றுக்கொடு; உலகத்துக்கு உபயோகமுள்ளவனாயிருப்பான். மதத்தைப்போதி; அவன் மனம் நிம்மதியாயிருக்கும். நீதியைப் போதி; உலகத்தாரால் நன்கு மதிக்கப்படுவான். நேர்மையைக் கற்றுக்கொடு; அவனது அகௌரவ அவனை நடைக்கக் காரணம் ஏற்படாது.

பிதா என்னும் பெருமை வாய்ந்த புருஷனே! நீ பெற்ற பிள்ளையைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமையன்றோ?

நீதிமொழிகள்.

22: 6. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன முதிர் வயதிலும அதைவிடாதிருப்பான்.

24: 15. பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டகற்றும்.

23: 13-14. பிள்ளையைத் தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால அடித்தால் அவனசாகான நீபிரம்பினால அவனை அடிக்கிறதினால பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே.

23: 24-25. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூறுவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெறுறவன் அவனால மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள். உன்னைப் பெற்றவள் மகிழுவாள்.

29: 15. பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன இஷ்டத்திறகு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்கு வெடகத்தை உண்டுபண்ணுகிறான்.

29: 17. உன் மகனைச் சிட்சை செய்; அவன் உனக்கு ஆறுதல் செயவான், உன ஆத்துமாவுக்கு இனிதானதையும் உண்டாக்குவான்.

"ஐயாண்டொறு மரையனு வாண்டிகள்
ஐம்மூன்று காறு மடியனு—எய்ததன்மேல்
மீத்திரணைக் கொண்டு மேவுக தாமீன்ற
புத்திரனே யன்பு புரிந்து."

பெற்றோர் தம்புத்திரரை ஐந்து வயதுவரை அரசரைப் போலவும், அதுமுதல் பதினைந்து வயதுவரை அடிமைகளைப் போலவும், பதினைந்து வயதிற்குமேல் சிநேகிதரைப் போலவும் நடத்தவேண்டும்.

"மக்களை மனதிற் காதலிப்பதே மதியுடைமை"யாகுமென்று பெரியோர் சொல்லியிருக்க, பெற்றோர் பிள்ளைகளைச் சிறுபிராயத்திலேயே ஊணும் உடையுந் தந்து ஊதரிப்பதுபோல் இளக்காரங் கொடுத்து துஷ்ட சகவாசம் செய்யவும், ஓடியொளித்துத் துஷ்டனுய்த்திரியவும, சூதாடி, பொய் பேசி புறங்கூறித் திரியவும், தாசிகாந்தனுய் வேசி வீடு நுழையவும், துர்வியாச்சியந் தொடுக்கவும், சோம்பரிப் பையன்களுடன் பெற்றோர் பணத்தைச் செலவிட்டு உல்லாசமாய்க் காலம் கழிக்கவும், குலத்தைக் கெடுக்கும் கோடாலிக் காம்புபோல் தன்னிச்சையாய்த் திரியவும் விட்டுவிடுவார்களானால், அவ்விதமாய் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தமது பிற்காலத்தில் கஷ்டப்படுமபொழுது,

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு மென்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை யாகிய பாதகனே."

என்று புலம்பி விசனப்படுவதற் கேதுவாகும்.

Parents.

1. A man takes contradiction and advice much more easily than people think, only he will not bear it when violently given, even though it be well founded. Hearts are flowers; they remain open to the softly falling dew, but shut up in the voilent downpour of rain.
—*J. P. Richter.*

2. He who is taught to live upon little owes more to his father's wisdom than he that has a great deal left him does to his father's care.
—W. *Penn.*

3. Who that has languished, even in advanced life, to sickness and despondency; who that has pined on a weary bed in the neglect and loneliness of a foreign land, but has thought of the mother "that looked on his childhood, that smoothered his pillow, and administered to his helplessness?" Oh; there is an enduring tenderness in the love of a mother to her son that transcends all other affections of the

heart. It is neither to be chilled by selfishness, ner daunted by danger nor weakened by worthlessness, nor stifled by ingratitude. She will sacrifice every comfort to his convenience; she will surrender every pleasure to his enjoyment, she will glory in his fame, and exult in his prosperity; and if misfortune overtake him, he will be the dearer to her from misfortune; and if disgrace settle upon his name, she will still love and cherish him in spite of his disgrace; and if all the world beside cast him off, she will be all the world to him.
—*Washington Irving.*

4. A mother's love is like fire which burns the hotter the more you stir it. It may be stirred with ingratitude, with disrespect, or even with neglect, but it only burns the brighter, and if possible, lasts the longer.
—*Ruby Ellis.*

5. Who can fathom the depth of a mother's love? No friendship so pure, so devoted; the wild storm of adversity and the bright sunshine of prosperity are all alike to her; however unworthy we may be of that affection, a mother never ceases to love her erring child. Often, when alone, as we gaze up to the starry heaven, can we in imagination catch a glimpse of the angels around the "great white throne," and among the brightest and fairest of them all is our sweet mother, ever beckoning us onward and upward to her celestial home.
—R. Smith.

6. The noblest thoughts my soul can claim,
The holiest words my tongue can frame,
Unworthy are to praise the name
More sacred than all other.
An infant, when her first love came,
A man, to find it just the same,
Reverently I breathe her name,
The blessed name of mother.
—*G. Helter.*

சங்கீதம் (Music.)

இன்னிசை கீதங்களையும் இனிய தாளமோள வாத்திய தொனிகளையும் கேட்டு ஆனந்தமுறாதவரெவர்? புல்லாங்குழலின் ஓசையைக்கேட்டு பசு முதலிய கன்றுகாலிகள் பிரமித்து நிற்கிறதில்லையோ? பாம்பாட்டிகளும் பாம்புகளை வசியஞ்செய்வது அதினலன்றோ? ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ருங்காரவேணுகானம் செய்த சமயம் பக்ஷி ஜாதிகளும், மிருக ஜாதிகளும், செடிகொடிகளுங் கூட சந்தோஷ குதூகலமடைந்து லயித்து நின்றதாக வாசிக்கிறோமே. எல்லார் உள்ளத்தையும் இன்ப வெள்ளத்தில் அழுந்தச் செய்யும் சக்தி அமைந்தது சங்கீதமே.

அற்ப ஜீவ ஜெந்துக்களே அரிய கீத தொனியைக் கேட்டு ஆனந்த பாவசமுறுகின்றனவெனின், அருமையிலும் அருமை

யான சிருஷ்டியாகிய மனிதன் மனைகர கீதங்களையும் இன்னிசை வாத்யங்களையும் கேட்ட மாத்திரத்தில் மெய்மறந்து பரவசமாவது அதிசயமாகுமோ ?

பால் விரும்பி அழுங் குழந்தையை கண் வளரச் செய்வதும், கொடிய விஷமுடைய நாகப்பாம்பைக் கூத்தாடச் செய்வதும் சங்கீதமே. மெய்க்களைப்புற்ற வேலையாளியும் குறுக்கெலும்பு ஒடியப் பாடுபட்ட கூலிகளும், பற்பல கஷ்டங்களால் சிந்தைமெலியப்பெற்ற மானிடரும் கத்தம் மெய்க்களைப்பும், மனத்துயரும் போகச் சங்கீத கற்முயினையே நாடிச் செல்கின்றனர்.

சங்கீதத்திற்கு மனதை ஏகாக்ரப்படுத்தும் சக்தி அமைந்திருப்பதால், புத்தியைக் கூர்மையாக்கும் சக்தியும் அதற்குண்டு. தற்காலத்திலுள்ள வைத்திய நிபுணர்கள் சிற்சில ராகங்களுக்கு சிற்சில நோய்களைக் குணப்படுத்தும் சக்தி அமைந்திருக்கிறதென்று கண்டு பிடித்திருக்கின்றனர். அவர்கள் கங்கள் பாட்டையே மருந்தாகக் கொண்டு சிற்சில வியாதிகளை சொஸ்தம் செய்திருக்கின்றனர்.

சங்கீதம் தெய்வீக சாஸ்திரம். தேவர்கட்கும் தேவதூதர்களுக்கும் பிரியமானது. தேவாதி தேவனுக்குகந்தது. பக்தர்கள் பகவான்மேல் பக்திரசம் நிரம்பிய பாசுரங்களைப் பாடிப் பரவசமாகின்றனர். சங்கீத ராஜனாகிய தாவீதரசன் அநேக சமயங்களில் கர்த்தருடைய பேழையின் முன் ஆடிப் பாடி ஆனந்த பரவசமடைந்தானெனவும், இராவணன் சாமவேதகானம் பாடி பரமசிவத்திடம் வரங்களைப் பெற்றனென்றும் கூறப்பட்டிருக்கிறது. பேரின்ப பரவசமூட்டும் சங்கீதமே, சிற்றின்ப சுகானுபோகங்களுக்கும் மனிதனை மையலுக்குள்ளாக்கும் சக்தியையுமுடையது. இக்காலத்தில் பாடப்படும் ஓடி ஆடி மெட்டுகள், டப்பாக்கள், தெம்பாங்கு முதலிய சிற்றின்ப கீதங்களுக்குச் செவி கொடுக்கிறவர்கள் கீக்கிரம சின்னமடைந்து அல்லோல கல்லோலப்படுவர். பக்தி ரசம் பொருந்திய ஆன்றோர்களது தோத்திரப்பாக்களையும் தேவாரங்களையும் பாடி வருவதால் பரமானந்தம் தினமுமேயன்றிச் சிற்றின்பக் கீதங்களால் சீக்கிரம் சின்னமுண்டாகும்.

தேவதூதர்களும், சம்மனசுகளும் சதா தெய்வ சன்னிதியின் முன்னின்று,

> " ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாய்ப் பரனைத்
> தேடுவதுமே தொழிலாய்த் திரிகின்றனர்."

ஓ! கீதமே! சங்கீதமே! நீ மானிடர்க்குச் சதா ஆனந்தத்தையும் அதன் மூலமாய் சுகஜீவனையும் புத்தி தீக்ஷ்ணியத்தையும் உண்டாக்கும் சக்தியை உன்னில் அமைத்த சர்வேஸ்பரனுடைய ஞானம் அளவிடற்கரியதன்றே? தெய்வசந்நிதியில் கேரூபீன்களும், சேராபீன்களும் இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர், பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்! என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் பாடிக்கொண்டிருக்கின்றன.

"தோழி! சங்கீத இனிமை கற்பாகின்
சுவையு மினையோ கண்ணே—அருள்
சுருதியின் க்யானம் இருதயம் மகிழ
செய்திடும் என் கண்ணே."

"தேனிலும் தேன்கூண் டொழுகல்கள் தனிலும்
திவ்ய மதுர மாமே—அது
ஜீவனுக் கமிர்தம் ஆவிக்குச் சுகிர்தம்
தினம் ருசித்திடு கண்ணே,'

தெய்வஸ்துதி.

"தாய, தாய, தாயா! ஜோதிப்பிரகாசா
தேவரீர்க் கெங்காளுஞ் சங்கீதம் எறுமே,
தாய, தாய, தாயா! சர்வவல்ல தேவா!
காருண்யரே! தாயத் திரியேகரே!"

சங்கீதம் தெய்வீக சாஸ்திரம். தேவர்கட்கும் தேவதூதர்களுக்கும் பிரியமானது. தேவாதி தேவனுக்குகந்தது. பக்தர்கள பகவான்மேல் பக்திரசம் நிறைய பாசுரங்களைப்பாடிப் பரவசமாகின்றனர். சங்கீத ராஜனாகிய தாவீதரசன் ஆகம சமயங்களில் கர்த்தருடைய பேழையின்முன் ஆனந்தபரவசமடைந்தானெனவும், இராவணன் சாமவேதகானம் பாடி பரமசிவனிடம் வரங்களைப் பெற்றானென்றும் கூறப்பட்டிருக்கிறது. பேரின்ப பரவசமூட்டும் சங்கீதம்மை சிற்றின்ப சுகானுபோகங்களுக்கும் மனிதனை யடிமைக்குள்ளாக்கும். இக்காலத்தில் பாடப்படும் ஓசை சாடி மெட்டுகள், டப்பாக்கள் தெருப்பாடு முதலிய சிற்றின்ப கீதங்களுக்குச் செவி கொடுக்கிறவர்கள் சிக்ஷாரம் சின்னமடைந்து அல்லோல கல்லோலப்படுவர். பக்திரசம் பொருந்திய ஞான்றோர்களது தோத்திரப்பாக்களைப் பாடி வருவதால் பரமானந்தம் விளையுமேயன்றிச் சிற்றின்பக் கீதங்கள் சிக்ஷாரத்தில் தெடுத்துவிடும்.

அன்பு.

பருவன் தன் மனைமீது ஏற்படும் அன்பைக் காதல் என்றும், சிநேகிதன்மீது ஏற்படும் அன்பை நேசமென்றும், ஏழைகள் மீது காட்டும் அன்பை கிருபாதோக்கமென்றும், பட்சி, மிருகங்கள் மீதண்டாகும் அன்பை ஜீவகாருண்யமென்றும், கடவுளிடம் செலுத்தும் அன்பை பக்தியென்றும் இன்னும் பற்பலவிதமாய் அன்பின் மாட்சி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

"முன்பு பின்பின்றி மூவுலகத்தினும்
அன்பினல்லதோ ராக்கமுண்டாகுமோ"?

என்று கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் கூறியுள்ளார்.

"இறவாத இன்பவன்பதவேண்டி" என்றும், "சிறில்லாப் பதங்கள் யாவையும் கடந்த வின்பமே என்னுடையன்பே" என்றும் ஆன்றோர் கூறிய அமுத அனுபவ வாக்கியங்களினாலும், நம் அனுபவத்தினாலுமே அன்பே இன்பமென்றும் அறிகின்றோம். ஆதரவற்ற ஏழையினிடத்து எவ்வித கைம்மாறும் எதிர்பாராமலே நாம் பரிதாபங்கொண்டு அன்பு செலுத்தி அவனுக்கு உணவாதிகள் தந்து உபசரிக்கும்போது, நம் உள்ளத்தில் இயற்கையிலே ஒருவகையான இன்பம் உண்டாவதை நாம் காண்கின்றோம். இது கல்வித் செல்வ சாதிசங்கச்சார்பு, கல்லொழுக்கம் முதலிய நற் செய்கைகளினாலுண்டாகும் ஒரு சிறப்பத்து. நிஷ்காரணமாய் பிறர்க்குத் தன்பஞ்செய்து வன்புபாராட்டி அவர்களை மனமொழிகளினால் அல்லற்படுத்தும்போது அவர்கள் வருந்துவதைக் கண்டு இன்பமடைகின்றவர்களையும் நாம் உலகத்திற் காண்கின்றோம். இவர்கள் மானிட மிருகங்களேயுன்றி காசாணஜாதியவயவங்கள் பெற்றிருக்குங் காரணத்தினாலேயே மானிடராகார்.

உற்பனை பிறர்க்கு உபயோகமாகும்பொருட்டு எவ்விதம் தண்ணீரில் கரைந்து அழிந்துவிடுகிறதோ, அதேவிதமாக தன்னலத்தையும் சுயப்பிரயோஜனத்தையும் முற்றிலும் அழித்து, பிறர்க்கு உபயோகமாகும்பொருட்டுத் தம்மையே தத்தம் செய்து பரித்தியாசம் செய்வதே அன்பின் சிறந்த தன்மையாம்.

அன்பென்னும் வித்து நம் பெருமானருளால் நம் மனமெனும் புலத்தில் மெல்ல அங்குரிக்கும்போது, அதனை நல்லொழுக்கமென்னும் நீர்கொண்டு பாய்ச்சி, அது தலையெடுக்கவொட்டாது தோன்றும் சுயப்பிரயோஜனமென்னுந் தீயகளையைக் கல்வியறிவென்னுங் கோடரியைக்கொண்டு கிண்டியெறிந்து, காமக்குரோதாதி வன்பற

வைகள் அதற்குத் தீங்குசெய்ய அணுகாதபடி, கடவுளாக்ஞை யென்னும் பெரும்பாறையை முழுகலீயாட்டியபின் அருவெறு ணும் பயிர்தழைக்க அதில் விளையும் இன்பமென்னும் போகதை யனுபவித்தலைச் சுவைப்பது ஒவ்வொருவருடைய பெருங்கடனையா கும். பிறவுயிர்களை வருத்தஞ் சிகசும, புலி முதலிய தவிடமிரு கங்களும் தம்முடைய குட்டிகளிடத்து அனபுபாராட்டி அவற றைப் போஷிக்கவிலலையா? ஆகலே, அன்பு யெனனும் இவ்வரிய பொருள் பிரதமத்தில் தன் சுயநலதனைத்ய காடுன்று, பிறகு தன் மனைவி, மகள முதலிய தொடர்புடையாரிடத்துப பரவுவ தாகும். இது ஏனைபயாரிடத்தும் விபாபித்து எவரையும் நம்மைப் போலவே பாவித்து வாஞ்சை பாராட்டுமபாது இவ்வனபுக்கு அருளென்று பெயர். ஆகையாற்றுன அருளென்னும் அன்பீற் குழவி (அன்பெனனும் தாய்பெறற அருளனனுய குழநை) எனறு தெயவபபுலமைத் திருவள்ளுவ நாயனார் கூறுகினறனர். உலகத்திலுள்ள எலலாரையும நமமவாகளாகப பாவித்து அவர் களிடதது அருள் பாராட்ட வேணடுவது ஒவ்வொருவருடைய செய்கடனு யிருபபதால, முனனான நமமிடத்தும நமக்கு மருமை கினவர்களாகிய மனனவி, மகள், அவாகள மூலமாக வரும சமபந் திகள், நணபாகள் ஆகிய இவாகளபால் இயறகையிலுண்டாகும் அனபை வளாக்கும நிமித்தமம இலலாழுக்கைத தருமதனை இன றியணமையாத ஆசரம தருமமாகப பெரியோா எறபடுத்தினாகள். "அறவினனப்பட்டமீத யிலவாழ்க்கை" யென்றும, "இலலற மல் லது கல்லறமனறு" என்றும அறிஞா அறுதியிட்டுக் கூறியதன் காரணம் இதுவேயாம்.

"என்பிலதனை வெயிற்போலக் காயுமே
அன்பிலதனை யறம்."

(என்பு அமையப்பெறற புழுவை வெயினில் சுட்டெரிப்பது போல் (அறக்கடவுள) தருமததவதை அன்பிலலாதவனைச சுடடெரித் துத் தணடிக்கும்.) எனறு வதபபடபுலவா திருவள்ளுவ நாயனார் கட்டளையிட்டிருகினறனர். "அனபிலவன" அலலது "அனபி லவரை" என்றது "அனபிலதனை" எனறமைபால, அனபிலாளரை உயாதிணைப் பொருளாக மதிக்க மனமின்றிச் சுகவுடம அஃறி னைப பொருளாகவே இழிவுபடுததிக் கூறியதாகும.

இப்படிப்பட்ட அருமபொருளாகிய அன்பென்பது தலை யன்பு, கடையன்பு, இடையன்பு என மூவகைபபடும. தலைபன் பென்பது முதல்தரமான சுயலான அனபு. இது இக்காலததுக் காண்பதரிது. தன்னை முற்றும் மறந்து பிறராத தன்னினும்

மேலாகப்பாவிக்கும் தன்மையது. தைலதாரைபோல் இடைவிடாது எவ்வகைப்பட்ட இடுக்கணுக்கும் கலையாமல் விளங்குவது. கண்ணப்ப நாயனார் தம்முடைய ஆன்மார்த்தமாகிய காளத்தியப்பரை கண்டபோது தம்மை மறந்து அவர் வயமாகிய நின்ற நிலைதான் தலையன்பெனப்படும். காளத்தியப்பர் கண்ணில் உதிரம் பெருகுவதைக் கண்ட மாத்திரத்தில்லேயே தன்னையொரு பொருளெனமதியாமல், வடிவுக்கு வடிவமருந்தாகும்மென்னும் நினைவுமேதான்ற, உடனே அடியிலை தமது கண்ணை இடர்ந்து அப்பியதும்; பெருமான் அவருடைய பாலைபின் திறத்தை உலகத்தார்கு விளகும் பொருட்டு மற்றொரு கண்ணையின்றும் குருதி சோரும்படியையப்ப, அதைக்கண்ட மாத்திரத்தில் "கண்ம்டன கண்டம்தார் ஏளதநம்" என்று குதூகலத்துடன்ன அனபா தம்முடைய மற்றொரு கண்ணையும் அம்பிலால் தகாத்தலிப்பட்டதும் தலையனபாகும்.

"கண்ணப்ப னெப்ப தோரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தியாறி தல்லது மற்
றாறியு மன்பன்றது."

என்று அறிஞர் வியக்கின்றார்கள். இவ்வன்பருடைய தேக முழுவதும அன்புருவம்ம யன்றிச் சபத தாதுக்களாலாகிய சாதாரண ம்தகமாககலகாள்ளகூடாது. ஆனகயாற்றன, "கணணப்பனெப்ப தோரனபு" என்று பூர் மாணிகவாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் வியகனறனை. "கணணபபனறுக்கு ம்மானபன" என்று மசாலல ம்வணறுவது இயலபாயிருக்க, அவவாறு கூறாது, "கண்ணப்பனெப்ப ம்தானபு" என்று கூறியதனகாரணம் யாதெனில், கணணபபன் மீவறு, அன்புமீவறு என்று கருதுவதி கூடாது; கணணப்பன அன்பினுருவ்வபன்றி மவறலல என்னும் பரமரகசியத்தைச சூசிபபிக்கும பொருட்டேயாம். இததகைய தலையன்பானது அனபுகுரிய பொருளுக காணுங்காலும காணுக்காலும் இடைவிடாது உயிர நிலபாய்ப் பெருகுமசலவமாகும.

இடையன்பு என்பது அன்புக்குரிய பொருளை கேரிற் காணும போது மாதத்திரம் சுரப்பதானறாகும. நெருப்புக்குமுன அரக்கையாவது மெழுகையாவது காடடுமம்போது அது மெலல வுருகுவதம்பால, ம்நாரம காணும்ம்போது மாத்திரம மனமுருகிப் பாலன மடைதல்ல இடையனபாகும. அனபுக்குரிய பொருளைவிடடுப் பிரிந்தகாலதது நந்த இடையன்பு சுருங்கும.

கடையன்பு என்பது இரண்டுகட்டைகளை ஒன்றோடொன்று நெடுநேரம் ம்தயகக்கும்போதண்டாகும் தீப்பொறிபோல் அன்ப

னும் அன்புக்குரிய பொருளும் கேரில் நெடுங்காலம் பழகிய பின்னர் தோன்றும் அன்பாகும். இதுவும் பிரியும்போது; பையப்பைய மறைவதாகும்.

தன் பிராணநாயகன் இறந்தானென்று கேட்ட மாத்திரம் உயிர் துறக்கும் தலைவியின் அன்பு தலையன்பெனப்படும். பூர்வம் சூரபத்மனென்னும் மஹா சூரனைய அசுரேந்திரன் முருகக் கடவுள் வேலாயுதத்தால் மாண்டானென்று கேளவியுற்றவுடனே அவனதுமனையாட்டி பத்மகோமளை உயிர்துறந்தானென்று அறிகிறோம். இவ்வாறே தலையன்புடைய ஸ்திரீ பூமான்கள், "ஒருங்கிய இரண்டுடற்கு யிரொன்றுயினர்" எனறு கம்பர் சக்ரவாதத்திருமகனையும் ஜானகியாரையும் குறிப்பிட்டு விபக்கும் விதமாக இருப்பார்கள். இத்தகைய மேம்பாடுடைய தலையன்புக்கு அடியில்வரும் சரித்திரமே நிதரிசனமாகும்.—

கனகாம்புஜம்.

உத்தமதானபுரம் என்னும் நகரத்தை இராஜதானியாகக் கொண்ட சுசீலமென்னும் பல்வளஞ் சிறந்த பெருநாட்டை முறை தவறாது பத்மநாபன் எனனும் அரசன் ஆண்டு வந்தனன். தன் அரசாட்சிக்குட்பட்ட உயிர் வர்க்கங்கட்குத தன்னாலாவது, தன் பரிஜனத்தாலாவது, பகைவர்களாலாவது, கள்வர் முதலிய துன்மார்க்கர்களாலாவது, தீபவிலங்குகள் முதலியவற்றாலாவது எவ்வித துன்பமும் நேரிடாத வகைகு மன்னுயிரைத் தன்னுயிர் போற் கருதிக், காவலனெனனும் பெயர்க்குப் பாத்திரனானன். துஷ்டநிகரமும், சிஷ்டபரிபாலனமுஞ் செய்து செங்கோல் வழுவாது அரசாண்டுவந்த அவ்வரசனுக்கு வாழ்க்கைத துணைபாயமைந்த மனைபாளாகிய பட்டஸ்திரீ கனகாம்புஜம் என்னும் பெயர்பெற்ற கற்பிற் சிறந்தவள். பத்மநாபனும் கனகாம்புஜமும் அன்றிற் பறவைகளைப்போற் பிரியா அன்புடையர்களாகி "காதலிருவர் கருத்தொக்க வாதரவு பட்டதே யின்பம்" என்றபடி இல்வாழ்க்கையின்பத்தை யெபதி வருங்காலத்தும,—

'வித்தகமாய்த்
காதிவிளையாடி யிருகை வீசிவந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்."

சாதுரியமாகக் கதை பேசிக்கொண்டும், விளையாடிக்கொண்டும், கைவீசிக்கொண்டும் வந்தாளாயினும், தலைமேலிருக்கும் நீர்க்குடம் கீழே விழ்ந்துடையாதபடி மல்லைக்காரி தன் மனதை அந

ணிடத்தே வைத்துப் போவதுபோல், சர்வேசுவர ரிடத்தில் அயர் வில்லா அன்புபாராட்டி வந்தனர். இப்படியிருக்க, ஒருநாள் மாலைப் போது அவ்விருவரும் சந்திரகாந்த மேனைகளனமந்த மேலுப்பரி கையிலிருந்து உலலாசமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கையி லே, வடக்கே தெடுந்தூரத்தில் தகைகளுடைய அதிகாரப் பிரதேச எல்லைக்கப்பால் ஒருபெருஞ் சோதியும் வெளிச்சமும் தோன்றின. அவற்றின் காரணம அவாகளுக்குப் புலப்படாமையினல் அரசன் உடனே தன்னுடைய ஒற்ற னை அழைத்துக் காரணதனை அறிந்து வெகாண்டியருமாறு கட்டளையிட்டனன். அன் றிரவு சுமார் பதினைந்து காழி கைக்கு ஒற்றர் திருமபிவந்து, ஐயனே! அரசசிரோமணி! நீ தவ கட்டளையைச் சிரமமற்ற ங்கி அதிவிரைவாகச் சென்று பார்தசோம். சோதவரீருடைய ஆசாட்சிப் பிரதேசவெல்லைக் கபபாலுள்ள ஒருகிராமததில் ஒருவன் இறநதுவிட்டதாக வும, அவனைத் தகனஞ செய்யு மகாலததில்லை அவனுடைய கற்பிற சிறந்த மனையாள் இனனும் எராளமாகக் கட் டைகளை மலைபோற் குவித் துப் பெருந் தீமூடடித் தன் கணவனுடனே இனறுடன் கட்டையேறுவதாகவும் இருப்பதால், அனேகபிரஜைகள் அவ்வதி சயத்தைப பார்ககப் பெருங்கூட்டமாகக் கூடியிருக்கின்றனர்; அத் தீயின் சோதியும் அதனல் தெரிந்தூரம்வரையில்ல ஆகாயத்தில் தோன்றிய வெளிச்சமுமே தேவரீர் கண்ணுக்குப் புலப்பட்ட சோதியும் வெளிச்சமுமாகும். எனறு விடைகூறிப் பணிந்து நின் றார்கள். அரசன் அவர்களை யனுப்பிவிட்டு, அவ்விருத்தாந்தத் தைக் கேட்டுகொண்டிருந்த தன்னருமைக்காதலிபாகிய கனகாம் புஜத்தை நோக்கி—"எனனுயிர்க்காதலியே! அந்தக் கிராமத்தில் கணவனோடு உடன்கட்டையேறும் மாதரசிரோன்மணிபல்லவோ கறபுடையாள். என்ன அன்பு! என்ன மனவுறுதி! மஹா அதி சயம்! இத்தகைய அன்பிற் சிறந்த மனையாளும் இக்கலியுகத்தி



நிருக்கின்றனளே! பார். இவளுக்கு நிகராக எவளைச் சொல்லக் டும்." என்று பலவாறு வியந்துகொண்டிருந்தான். அதைக் ;கட்ட பட்டஸ்திரீயாகிய கனகாம்புஜம் கலகலவென்று சிரித்து, ந்த சோகியும் வெளிச்சமும் தோன்றிய இசைசையை நோக்கிக் ாரியுமிழ்ந்து, "இவளும் ஒரு பகினாகையா! கணவனிறந்து இர ண்டு காளாகிவிட்டது. இதுவரையிலே உயிர்தாங்கி வைரல்லாம் தன்னைப் பார்த்து வியக்கும்படிப் பொருந்தி மூட்டிக் கணவனுடன் க்கினிப் பிரவேசஞ் செய்து தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் கவலமான இவளையும் என்னுயிர்க் காதலனே! நீர் வியந்தது னக்கு வியப்பாயிருக்கின்றது! இவளது அன்பும் அன்பெனப் படுமா, இவள் செய்கை வீண்பொருமை விருப்பத்தைக் காட்டுகிற தே யன்றிக் கணவனிடத்திலிருக்கும் உள்ளன்பைக் காட்டவே யில்லை. தன் பிராணநாயகன் இறந்தானென்று கேட்டபோதே அல்லது கண்டபோதே தன்னை யறியாமலே உயிர் நீங்கப்பெறும் மடந்தையல்லவோ உத்தமி! கற்பிற் சிறந்தவள்! தலையன்புருவா னவள்!" என்று விடை பகர்ந்தாள். அதுகேட்ட பத்மநாபன் ன்றுந் தோன்றாதவனாகி எவ்வித மறுமொழியுங் கூறாமலே சய னத்திற்குச் சென்றான். கனகாம்புஜமும் ஒருபுறமாகச் சயனித் துக்கொண்டு, அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தனள். அர சனுக்கோ நித்திரை வராமல் பெருங்கவலையும், சந்தேகமும், வக்க மும் உண்டாயின.

கணவனேடு உடன்கட்டையேறும் உத்தமனையே அன்பற்ற வளென்றும், கணவனிறந்தானென்று தெரிந்தவுடனே உயிர்நீங் கப் பெறாமலே கற்புடையாளென்றும் வற்புறுத்திக்கூறிய னன் மனையாட்டிக்கு என்பால் அத்தகைய தலையன்புண்டா? நானிறந் தேனென்று கேட்ட மாத்திரத்தில் இவளும் உயிர் துறப்பாளோ? ன்னுஞ் சந்தேகமும் அதனையாகிய எக்கமும் தாக்கத்துக்கிடை யுமாயின. அன்றுமுதல் சிலதினங்களாக அரசனுக்கு இதுவே பெறும் எக்கத்துக்குக் காரணமா யிருந்தபடியால் அவன் தன் னனியின் அன்பைப் பரிசோதிக்க வேண்டுமென்றெண்ணித் தன் னுடைய அமைச்சனிய சுமதி என்பவனிடத்து அந்தரங்கமாக ஆலோசித்து பின்னர் இருவரும் ஒரு சூழ்ச்சி செய்யலுற்றார்கள்.

அஃதென்னவெனில்:—ஒருநாட் காலையில் பத்மநாபனும், சுமதியும் தங்கள் சேனை சகிதமாக வனத்திற்கு வேட்டையாடச் செல்லப் புறப்படும்போது, அரசன் தன் மனனியை நோக்கி, என் கண்மணியே! ஆரணியத்திலனேக துஷ்ட மிருகங்களிருப்பனவா கவும், அவை நம் பிரஜைகளுக்கு தீங்கு செய்வனவாகவும் தெ

நிய வருகிறபடியால், நானும் மந்திரியாகிய சுமதியும் சேனை சகித மாக வேட்டைக்குச் சென்று மாலைப்போது திரும்புவோம்." என் று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சென்று இருளடர்ந்த காட் டிற் பிரவேசித்தான்.

அரசனும் மந்திரியும் முன்னமே ஒருவருக்குந் தெரியாத வகைக்கு மஹா அந்தரங்கமாகச் செய்துகொண்ட ஏற்பாட்டின் படி சேனையை ஓரிடத்திலேயே யிருக்கும்படியாகக் கட்டளையிட்டு விட்டு அவ்விருவரும் மாத்திரம் ஒரு புலியைத் துரத்திக்கொண்டு போவதுபோல் நடித்துக் காட்டுக்குள் நெடுந்தூரம் ஒருவர் கண் ணுக்குந் தெரியாத இடத்திற்குக் குதிரைமேலேறிச் சென்றார் கள். அங்கு சுவாசம் நன்றாய் விடுவதற்கேற்ற சிறு துவாரங்க ளமைந்த பெட்டியொன்று முன்னமே யமைக்கப்பட்டிருந்தபடி யால் அதற்குள் அரசன் படுத்துக்கொண்டான். அப்பேழையைக் குதிரைமேலேற்றிக்கொண்டு அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக மந்திரி சேனையிருந்த இடத்திற்குவந்து, "பரிஜனங்களே! என் சொல்வேன்! என் சொல்வேன்!! என் செய்வோம்!!! ஒரு கொ டும் புலி நம் அரசன்மேற் பாய்ந்து கொன்றுவிட்டது. இதோ அவர் பிரேதம் இப்பெட்டியிலிருக்கின்றது. விரைவில் நாம் நக ரைப் போய்ச் சேருவோம்" என்றனன். அதுகேட்ட சேனையெ ல்லாம் இடியோசை கேட்ட அரவுபோல மனங்கலங்கி மஹாத் தக் கூறிகளோடு சாப்பறைகளை அறைந்துகொண்டும், கறுப்புக் கொடிகளைப் பிடித்துக்கொண்டும் உத்தமதானபுரமாகிய இராஜ தானியை நோக்கி வாத் திரும்பினர்கள். அந்தச் சமயம் பட்ட ஸ்திரீயாகிய கனகாம்புஜம் நறுமஞ்சணை நீராடி,

"கட்கினியாள் காதலன், காதல்வகை புரிவான்,
உட்கொழி மாதராள் பெண்."

(கண்ணுக்கினியவளாகவும், தன்னையனுக்கு விருப்பமான பொருள்களையே யணிந்து அவன் தன்னிடத்தன்பு செலுத்தும் வகைக்குத் தன்னை யலங்கரித்துக் கொள்பவளாகவு மிருப்பவளே பெண்.) என்னும் பிரமாணப்படித் தன்னை யலங்கரித்துக்கொண் டும் மேலுப்பரிகையில் தாதிமார்களோடு பந்து விளையாடிக்கொண் டும, தன்னுயிர்க் காதலனாகிய பத்மநாபன் சென்ற திசையை நோக்கிக்கொண்டும், அவனுடைய நல்வருகையை எதிர்பார்த்த வண்ணமாகவே யிருந்தனள். அத்தருணம் சாப்பறை முழங்கிக் கொண்டு துக்கக் குறிகளோடு நகர்நோக்கித் திரும்பிவரும் சேனை யத்தை இராஜஸ்திரீ கண்ணுற்றபோது, "ஓகோ! என்னுயிர்க்காத லனாகிய இவ்வூர் ராஜன் இறந்தான்." என்று குறிப்பாலுணர்ந் தும் திடீரென்று கீழ்வீழ்ந்து உயிர் துறந்தனள்.

இதைக்கண்ட தாதிமார் "அம்மவோ! நிஷ்காரணமாக மூர்ச்சையாய் விட்டனையே" என்று புலம்பிப் பலவகையான சிகிச்சைகள் செய்தும் பய---றி அவள் பிரேதமாய் விட்டதை யறிந்து கோவெனக் கதறத் தலைப்பட்டார்கள். இவ்வாறு பட்ட ஸ்திரீ மரித்தனளென்னுஞ் சங்கதி நகர் முழுவதும் பரவி, அங்கார்நோக்கித் திரும்பிவரும் சைனியத்துக்கும் சுமதியென்னும் மந்திரிக்கும் பேழைக்குள்ளிருந்த அரசனுக்கும் எட்டிவிட்டது. துக்கசாகர மூழ்கமே நகர் முழுமைக்கும் ஒலித்துக்கொண்டிருந்தது.

"ஒருனலுன ஞெருவனின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

(நேற்றிருந்த ஒருவன் இன்றில்லை யென்னும் அநித்தியப் பெருமை இவ்வுலகுக்குண்டு) என்றும்,

"இன்றைக்கிருந்தானை நானைக்கிருப்ப னென்றெண்ணலோ கடமில்லை" என்றும், பெரியோர் கூறிய அனுபவ வசனங்கட்கு இன்று நாம் இரண்டு பேருதாரணமான்கள் காட்சிப்பிரமாணத்தினல் இதோ கண்டோமென்று சர்வ ஜனங்களும் ஆரவாரித்துக் கொண்டிருக்கையிலம்ம, மந்திரி சேனை சகிதமாக அரண்மனை பண்டை வந்திறங்கியவுடனே, பேழையினிருந்த அரசவள்ளல் வெளிபபட்டுத் திடீரென்று, தன்னுயிர்க் காதலியை வளர்த்திவைததிருந்த இடதகிறகுச சென்று பிரேதத்தைக் கண்ணுற்று முகத்திலறைந்துகொண்டு நிலத்தில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து புரண்டு புரண்டும் பிரேதத்தைப பனமுறை முதகமிட்டும, என் கண்ணே! என் கண்ணிறகுமணியே! கரும்பே! கரும்பின்சுவையே! நித்திக்குந் தெள்ளமுத! செந்தேன! பாகே! ஐயகோ! அம்மா! அசம்சா! என செய்தேன்! என் செய்தேன்! என் பதமை இருந்தவாறு என்சொல்லுக்கன்! என் சொல்லுகேன்! பேதையனை; உன கறபினிலக்கணத்தைச் சோதிக்குமாறு செய்த பரீட்[redacted]விஷபரீட்சையாய் முடிந்ததே; தெய்வமே இப்படியுஞ் செய்வாரோ! என்னே இருந்தவாறு எனனே! என்னே! இன்னைப் பிரிந்து ஆற்றகில்லேன்! துணைபிரிந்த அன்றில்போல் யான் வருந்துவதழகா; இமைபை யெனபது எத்துணையும் இதுவரையும் அறியா எனக்கு இப்பரிதபனை வாய்ந்ததும் விதிவசமோ! அலலது தெயவ சுதகறபமோ! அறிவேன்! என்னைப்பிரிந்து எங்குற்றாய! எங்குற்றாய! இனி எப்பிறபபிலுனைக் காண்பேனோ? பொன்னாட்டின் மடவாருடன் பந்தாடத்தான் சென்றனையோ! இவ்வுலக வாழ்க்கை உனக்குக் கைத்ததோ! என்று பலவாறு கதறி,

"என்னுயிர் நீயேயன்றே வென்னுளம் நீயேயன்றே
உன்னையான் பிரியாவின்னுமுயிர் கொடேயிருந் தேனீயென்
முன்னரே வாராயாயின் முடிவனீ யிருக்குந்தானந்
தன்னையே சாற்றுகென்றே தளர்ச்சியோ டழைக்கின்றேனே."

என்னுயிர்நிலை நீயல்லவா. (நம் இருவருக்கும் உண்டாயிருந்த அன்னியோன்னியங் காரணமாக) என்னுள்ளம் நீயேயல்லவா! உன்னைப் பிரிந்து இன்னும் நான் உயிர் தரித்திருக்கின்றேனே! நீ (உடனே!) எனக்கு முன்வராவிடில் நானும் இறந்துவிடுவேன். நீ (அவ்வாறு வராவிடினும்) போயிருக்கும்இடத்தையாவது அறிவித்தால் அங்கு வந்தேனும் உன்னைக் காண்பேன் என்று உன்னை உள்ளன்போடு அழைக்கின்றேன். எனப் பெரியோர் வாக்கினாலும் பிரலாபித்தும், பிரதம பிரேதமாகவே யிருந்தபடியினால், அரசன் மனஞ்சகியாதவனாகித் தன்னுடைவாளை யுருவித்தற்கோலே புரிந்து கொள்ள மார்பினிடத்துக் கொண்டுபோனான். அப்போது சர்வ ஜீவசாட்சிச் சொரூபராகவும், அகிலலோக காரணாதிகியும, தீர்ந்த "அன்பாய அன்பர்க்கு அவனபினும் அன்பர்" ஆகியும், சர்வ சக்திபராயிருந்தும் அன்பர் மனமவருந்தச் சகிக்கச்சக்தி இல்லாதவராயுமுள்ள தயாநிதிபாம் நம்பெருமான் தம் அருட்சகதி சகிதமாக அங்கு கோடிசூரியப் பிரகாசத்தோடு எதிர்தோன்றி அவ்வரசனுக்கு தெரிசன மனுக்கிரகித்து, "அன்பனே! நில்! நில்!! நில்!!! பத்மநாப! பதறவ்வண்டாம். பன்னெடுகாள் நீயும் உன் காதலியாகிய கனகாம்புஜமும் நம்பால் இடையறாத அன்பு செலுத்தியும் நீயா செங்கோல வ்காடாது அரசு புரிந்ததும் வந்தமையால், யாம் மனமகிழ்ந்தோம். உன் பிராணநாயகியினுயிரை மீண்டும் அனுக்கிரகித்தோம். கற்பிற் சிறந்த அவளும அனபிற் சிறந்த நீயும் இன்னும் பெடுங்காலம் சுகஜீவிகளாய் வாழ்வீர்கள்." என்று திருவாய் மலர்ந்தருளினர். உடனே உயிர்நீங்கிய இராஜஸ்திரீ ஒலலென வெழுந்து தனனுயிர்க் காதலனை யண்ணத்து முத்தமிட அவனும் தன்னைமறந்து பரவசமாகி, இதுகாறுமயானகண்டமதலாம் கனவோ அல்லது னவ்வா என்று சிறிதுநேரம் ஐயுற்றுப் பிறகு தெளிந்து தனனுயிர்க்காதலியையார்வமுடன ஆ[redacted]ந் செயது தன் பரிசோதனை விஷயத்தை மன்னிக்குமாறு வேண்டிய உபசார வார்த்தைகள் கூறி ஆனந்தக்கடலிலாழ்ந்தான்.

"வானுகி மண்ணுகி வளியாகி யொளியாகி
ஊனுகி யுயிராகி யுண்மையுமாயின் மையுமாய்க்
கோனுகி யானென தென்றவா வரைக் கூத்தாட்டு
வானுகி நின்றுனை யென்சொல்லி வாழ்த்துவனே!"

என்று அவ்விருவரும் தனித்தனியே பெரியோர் வாக்கால் ஆனந்தக் கண்ணீர் அருவிபோற்பாயவும், சொற்கள் குழறவும்

பன்முறைத் தேவ தேவரை வணங்க அத்தயாரிதியும் அவர்கட்கு வாழ்க என்று ஆசிகூறி மறைந்தனர். "யார்க்கும் முன்னவனே முன்னின்றூல் முடியாத பொருளுளதோ!" என்று பெரியோர் பெருமையை உலகறிய விரித்துரைத்த பெரியோர் கூறிய அமுத வாக்கும் பொய்யாமோ? "அன்பின் வழியதுயர் நிலை" என்று தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனர் கூறிய அற்புத வசனத்திற்கு இச்சரித்திரம் ஒருதாரணமாகயிருத்தலை இதனைவாசிப்போர் கவனித்தல் வேண்டும்.

பால் மஹாமுனிவர் கொருந்தியருக்கு எழுதிய நிருபத்தில் அன்பின் தன்மையைப்பற்றி சொல்லியிருப்பதாவது:—

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஒசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன். நான் தீர்க்கத் தரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல ரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருகாலும் ஒழியாது.

இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.

"அன்புசிவ மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்திலர்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருட்பாரே."

என்ற திருமந்திரத்தையும நோக்குக.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு."

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் கூறியதையும் அறிக.

மாச்சி மாச்சித் தம்பனம்.



இதுகாறும் வளரும் பருவத்தைப் பற்றிச் சிந்தித்தோம். இனிமேல் தளரும் பருவத்தைப் பற்றிச் சிந்திப்போமாக. இது வரையும் சாலக் களிப்புற்றுத் துள்ளித் துடிக்குடன் கொக்கரித்துத் திரியும்படி மனுஷனை வித்தையாட்டிய வாலிப்பருவம் நம்மிடம் வழிமுதலா யனுப்பிக்கொண்டு போகாமல் நம்மைவிட்டு மெல்லக் கடந்துவிடுகிறது.

"நீரிற் குமிழி யிளமை நிலை செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே
வழுத்தா தெம்பிரான் மன்று."

நாம் போற்றிப் புனைந்து சீவிச்சிணுக்கெடுத்த முடிகள் நரைத்து உதிருகின்றன. நாம் அத்தர், பன்னீர், ரோஸ்வாட்டர், சுகந்தவர்க்கத் திரவங்களில் கைக்குட்டைகளை நனைத்துத் துடைத்துத் துடைத்து நிலக்கண்ணாடிகளில் அலுக்கிக் குலுக்கி மிமிர்த்துச் சரித்து மீசையை முறுக்கி திருப்பத் திரும்ப அழகுபார்த்த பானிலாக் குழவிபோன்ற முகங்களின் அழகு குறைந்து சுரிப்பு விழத் தொடங்கிவிடுகின்றது. மேலும், சம்சார சாகரமென்னப் படும் இல்லற வாழ்க்கையை அனுசரித்தவருவோர் மிஞ்சியது நாற்பத்தைந்து வயது மட்டுந்தான் பொருள் சேர்க்கக்கூடும். பின்பு செலவு வரவைவிட அதிகமாகவே யிருக்கும்.

செல்வம்.

"மூனிவரும் மன்னவரு முன்னுல பொன்னுன் முடியும்" என்று ஸ்ரீ மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் கூறுவதுபோல், தபோதனர்களாயினும், அரசர்களாயினும் தாம் விரும்பியவற்றைச் செய்து முடிப்பதற்குப் பொருள் அவசியம். தருமத்திற்கு மின்பத்திற்கும் துணைக்காரணம் செல்வமாகும். அழியாப் பொருளாகிய கல்வியைச் சம்பாதிப்பதற்கும், கற்ற கல்வியைத் தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்துவதற்கும் கருவி செல்வமே.

பஞ்சதந்திரம்.

" நிரவியந்தானே புத்தி நிரவியந்தானே வித்தை
நிரவியந்தானே சுத்தந் நிரவியந்தானே சித்தி
நிரவியந்தானே சுத்தி நிரவியந்தானே முத்தி
நிரவியந்தானே யாதனுஞ் செய்வதல்லாது முண்டோ."

" சத்துவம் புத்திவித்தை சதுர்விதார்த் தங்களான
இத்தனை விதமுஞ்செல்வ மில்லையே வில்லையாருஞ்
சத்துவம் புத்திவித்தை சதுர்விதார்த் தங்களான
இத்தனை விதமுஞ்செல்வ மெய்திடி லெய்துமன்றே."

" நற்பொரு ளறத்தையின்ப நலத்தை ஞானத்தைமிக்க
சொற்பெறு புகழையென்றுந் துகளறு பெருமைதன்னைப்
பற்பல ருறவைவாட்டைப் பகைதவிர்த்திடுந் திறத்தைப்
பொற்புறு கதியையெல்லாம் பொருளலாற் றருவதின்றே."

சீவகசிந்தாமணி.

" வென்றி யூக்கமும், மேதக வாக்கமும்,
அன்றியுங் கல்வி யோடழ காக்கமும்,
குன்றினூர் தமைக் குன்றென வூக்கமும்
பொன்றுஞ் சாகத்தினுய் ! பொருள் செய்யுமே."

சீராப்புராணம்.

" குடித்தனம் பெருமைசேர்ந்த குலத்தினுக் குயர்ந்தமேன்மை
படித்தலம் புகழுஞ்செங்கோற் பார்த்திவாத நேய்ந்து
மிடித்தவர் பெரியாதன் மிகுபுகழ் கிடைத்தல்கையிற்
பிடித்திடும் பொருளதன்றி பிறிதிலை உலகத்தன்றே."

" அறனின்பங் கல்வி யழகுகுல வுண்மை
யுறவுண்டாஞ் செல்வமுளதேன்—முறையாகச்
சேரின் வளமின்றேற் றேயுமிருணைக் கருவி
யாரும் பொருணெறி யிஃதாம்."

என்று நீதியியலில் சொல்லியிருப்பதுபோல் ஒருவனுக்குச் செல்வமுளதேல் தருமமும், இன்பமும், கல்வியும், அழகும், குலப்பெருமையும், ஆண்தன்மையும் உறவும் உண்டாகும். அச் செல்வம் நீதிமுறைப்படி சேருமாலல் விர்த்தியாம். அங்ஙனமின்றித் தீயவழியாகச் சேருமாயின் அழியும். இம்மை, மறுமையாகிய இருவகை இன்பத்திற்கும் செல்வமே காரணமாம்.

சிறிய திருமடல்.

" அறம் பொரு ளின்ப மென்
ரூாரிவற்றி னிடையதனை யெய்துவார்
சோ ரிருதலையு மெய்துவார்."

அரப்பளீச்சுரசதகம்.

" மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
வெகுவித்தை கற்றுமென்ன
மிக்கவதி ரூபமொரு சற்குண மிருந்தென்ன
மிகுமானி யாகிலென்ன
பாலான மொழியுடைய வனையென்ன வாசாரப்
பரணையிருந்து மென்ன
பார்மீது வீரமொடு ஞானவாளு யென்ன
பாக்கிய மிலாதபோது
வாலாய மாய்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற்றமு மிகழுமே
மரியாதை யில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுங் னருசொல்வாள்
ஆலால முண்ட கனிவாயனே நேயனே
வைய னெமதருமை மதனே
ளனுதினமும் மனதுனினை தருசுதர கிரிவள
ரறப்பளீச்சுர தேவனே."

என அம்பலவாண கவிராயர் கூறியிருக்கின்றனர்.

திருக்குறள்.

" அருளிலார்க் கவ்வுலக மில்லை
பொருளிலார்க் கிவ்வுலகமில்லா தியாங்கு."

இதில் செல்வமில்லாதவர்க்கு இவ்வுலகத்தின்கண் இன்பம் இல்லை யாயினுர்போல் என்றார் திருவள்ளுவரும். இதனாலேயே ஔவை யார், " திரைகடலோடியுந் திரவியந்தேடு " " தேடாதழிக்கிற் பாடாய்முடியும்" எனறனர். ஏனெனில் இவ்வுலகில் பொருளுள்ள வர்களே சிறப்பாக மதிக்கப்படுகின்றனர். அவர்கள் அழகற்ற குரூபியாயிருக்கினும் அழகுற்ற மன்மதனைகவும், அவர்கள் இழிந்த நடையுடையவராயினும் அஃதை சிறப்புற்ற ஒழுக்க நடையாகவும் இவ்வுலகோர் எண்ணுவதால்,

வேமன்னகவி.

"கைப்பொரு ளொன்றுள்ளானே காமவேளென்று ரைப்பார்
அப்பொருள்தான் இல்லா தருக்குயாம்—தப்பானைக்
கள்ளத் சிலவேளே யானுலும் கைத்திடுவர்
இன்னற் புலையோனில் ஈங்கு."

எனவும்,

பழமொழிவிளக்கம்.

"பணந்தானே யறிவாகும் பணந்தானே
வித்தையுமாம் பரிந்துதேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா
தவர்பிணமாம் பான்மைசேர்வர்
பணந்தானே பேசுவிக்கும் தண்டலிலீள்
நெறியாமோ பாரின்மீது
பணந்தானே பந்தியுறங் குலங்கீழாங்
குப்பையில்ல பகைகுந்தானே."

கல்வியுடையவரும் வறியவராயின் தீராக்கவலையினுலும், பசி நோயினுலும் வருந்துவதுடன ஏணம்யா சிம்கதனையும் மறந்து விடம்வணடியதாகும். ம்மலும், செலவமிலலாதவா "கைத்தடை யான காறகீழ ஒதுங்குகும் கடல ஞாலம்." எனபது உண்மை யாதலின செலவர் வீடமவாயில ம்ாக்கச் செலலுதல தனபமும், அவரைக காணுதல தினபமும, கண்டாலும அவர் மறுதம்பா தண்டாகுந தினபமும, மறுதண்டதலும அவாவெகாடுததனை வாங் குதல தினபமும, அதன்க ணெகாணடவரது போஜனத்திககு வே ணடுமனவைகளைக கூடமதல தினபமும முதலிய பலதினபங்களா லும நாம்டாறும வருந்துவா.



"அன்ன விசாரமதுவே விசார மது வொழிந்தாற்
சென்ன விசாரமதாலேயா விசாரம் நறமிருகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாவி மனஞ்சுக்
கென்ன விசாரமவைத்தா யிறைவா கச்சியேகம்பனே."

பொருளைத் தேடுவது பெருந்துன்பம், அதைக் காப்பா ற்றுவது அதனினுங தன்பம், அதைச் செலவழிக்கும்போதும் மகாதன்பம். இவ்விதமாக, செல்வமானது நமது கைக்கு வரத் தொடங்கிய காலமுதல அது நமதுகையைவிட்டு அகன்றும்போகுங் காலம் வரையில் தினபத்தைக் கொடுத்துக்கொண்டே வந்து பல வகைக் கிலேசங்கட்குங் காரணமாகின்றது. இதுபற்றியே பெரி யோரும்,

"இன்னறரும் பொருளை யீட்டுதலுந் தன்பமே
பின்னதனைப் பேணுதலுந் தன்பமே—யன்ன
தழித்தலுந் தன்பமே யந்தோ பிறர்பா
ழிழுத்தலுந் தன்பமே யாம்."

என்று கூறியிருக்கின்றனர்.

ஆஸ்தி கல்வியும், தருமமும், இன்பமும், கீர்த்தியும், மனிதருக்குள்ளே பெருமையும், உறவும், நினைத்ததை முடித்தலும், வெற்றியுமாகிய எல்லாம் திரளாகப் பணங் குவித்தவருக்கேயுண்டு. செல்வமில்லாதவர் உலகத்திலே நடைப்பிணமாவர். எல்லா நன்மையுமுடையவராயினும் பொருளில்லாதவரை அவருடைய தாய் தந்தை, மனைவி, மைந்தர் முதலானோரும் அவமதிப்பர்.

கல்வழி.

"கல்லானே யானாலும் கைப்பொரு ளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லானே
யில்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்."

எனவும் கூறினர்.

ஒரு நன்மையுமில்லாதவராயினும் பொருளுடையவரை அவர் பகைஞரும் நன்குமதிப்பர். ஏனெனில், "சுடி எட்டுமட்டுங் குத்தும் பணம் பாதாளம் மட்டும் பாயும்." ஆதலால் தக்க காலத்திலேயே

புண்ணியவசத்தினுல்செல்வமதுபெறவேண்டும்;பொருளாரட்சிக்கவேண்டும்
புத்தியுடனது ஒன்று நூறுகவேசெய்து போதவும்வளர்க்கவேண்டும்,
உண்ணவேண்டும் பின்பு கல்ல வஸ்திராபரணம் உடலில் தரிக்கவேண்டும்
உற்றபெரியோர் கவிஞர் தமராதுலர்க்குதவி ஒங்குபுகழ் தேடவேண்டும்
மண்ணில்வெகுதர்மங்கள்செயவேண்டுமுயர்மோட்சவழிதேடவேண்டுமென்றி
வீணில் புதைத்துவைத்தியாத பேர்களே மார்க்கமறியாக் குருடராம்."

என்று சொல்லியிருக்கும் வண்ணம், தருமநெறியாலே சம்பாதிக்கப்படும் பொருளை நான்குபாகமாகப் பகுத்து அவைகளுள் இரண்டு பாகத்தைதத் தமது அனுபோகத்திற்காக்கி, ஒரு பாகத்தை ஆஸ்தியின் பொருட்டுச் சேர்த்து எஞ்சிநின்ற ஒரு பாகத்தைக் கொண்டே தருமம் செயல்வேண்டும். "ஏனெனில தருமமே என்றும் தலைகாக்கும். ஆஸ்தியின் பொருட்டுச் சேர்க்காது "வரவரப் போக்கி வரப்போக்கி" என்பதுபோல் தான் சம்பாத்தியம் பண்ணினதை யெல்லாஞ் செலவிட்டவர், பின்பு வியாதியிலுலேனும்

திருத்தாப்பியத்திலுலேனும் பொருள் சம்பாதிக்கும் திறமையில்லாதபோது பெண்டிர் பிள்ளைகளோடு வருத்தமடைவர். மூதலிற் செலவு சுருங்கினால் பொருள் ஒருகாலத்தும் நீங்காது. எவனுக்கு மூதலிற் செலவு மிகுமோ அவன் வாழ்க்கை உள்ளதுபோலத் தோன்றிக் கெட்டுவிடும்.

"ஆனமுதலில் அதிகஞ் செலவாலுல்
மானமழித்து மதிகெட்டுப் போனதிசை—எல்லார்க்கும்
தீயலுய் எழ்பிறப்புங் கள்ளலுய்
நல்லார்க்கும் பொல்லலும் நாடு."

எனெனில்,

"மெத்தவுந் தானேகுவித்து வீட்டில்லைத்த நெல்லதனை
நித்த மெடுக்கிலுந்த நெல்லுமற்றுப் போவதுபோல்
பொருள்தேடத் தக்கமதைப் போற்றிவைக்கத் தக்கமதாம்
பொருளைச் செலவழிக்கப் போம்போதும் தக்கமதாம்."

By ever taking out and never putting in, one soon reaches the bottom.

ஆதலால் அறிவும், ஆண்மையும், மானமுமுடையவர்க்கழகு காமமே வருந்திச் சம்பாதித்த பொருளை தாமுமனுபவித்துச் சற்பாத்திரத்தில் செலவிடுவதாம். அப்படிச் செய்பவனுடைய நாமம் இவ்வுலகத்தில் சந்திராதித்தர் உள்ளளவும் கீர்த்திபெற்று ஒங்குவதுமல்லாமல், மறுமையிலும் ஆச்சரியமாய்ப் பிரகாசிக்கின்ற சம்மனசுகள் அவனைச் சுற்றிலும் நின்று ஜய! ஜய! விஜீபவ! என வாழ்த்திப் பூமாரி பொழிவார்.

பழமொழிவிளக்கம்.

"தன்மமது செயல்வேண்டுந் தண்டலேரீன்
றெறியாரே தயவுசெய்வார்
வன்மவினை செயல்வேண்டாம் பொய்வேண்டாம்
பிறரையொன்றும் வருத்தல்வேண்டாம்
கன்மமெறி வரவேண்டாம் வேண்டுவது
பலர்க்கு முபகாரமாகும்
கன்மைசெய்தார் தலம்பெறுவர் தீமைசெய்தார்
தீமைபெற்று தலிவர்தாமே.

"விற்பன்னரீக்கு வாழ்வுவந்தால் மிகவணங்கிக்
கண்ணேட்ட மிகவுஞ்செய்வார்
சொற்பருக்கு வாழ்வுவந்தாற் கண்தெரியா
திறுமாந்து தன்பஞ்செய்வார்
பற்பலரீக்கு வாழ்வுதருந் தண்டலையாரே
சொன்னேன் பண்பில்லாத
அற்பருக்கு வாழ்வுவந்தா லரீத்தராத்
கிரிகடைமே லாகுர்காணே.

ஈ ஸை க.

"பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்ற சுலோகத்தின்படி பரோபகாரத்தின் பொருட்டு இச்சரீரம் உழைத்து வரவேண்டு மென்னும் ஆன்றோர் மொழியை அணுவளவும் மனதில் நினையாது தாமும் தம் குடும்பஸ்தர்களும் உண்டுடுத்திக் கண்டுகளித்துப் பெண்டு பிள்ளைகளுடன் உலகில் வாழ்ந்திருந்தாற் போதுமானது, பிறர் கெட்டாலென்ன, வாழ்ந்தாலென்ன, அதனால் நமக்கென்ன பயனென்று தற்சுகம் நினைந்து உற்சாகமாய் வாழ்ந்திருத்தல் உத்தமர்க்குற்ற உயர்ந்த வாழ்வாகாதென்பது ஆதிபகவானின் அருங் கருத்தாகிய நீதிநூல்களின் கட்டளையாகும். இதுபற்றியன்றே?

"எல்லாரும் இவ்வுலகில் இன்புற்றிருப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."

என்று தாயுமானவரும்,

"நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை."

என்று ஔவையாரும் கூறியிருப்பதோடு,

"ஆறிடும் மேடும் மடுவும்போலாஞ் செல்வம்
மாறிடும் ஏறிடும் மானிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாருந் தர்மமே சார்பாக
உண்ணீர்மை லீறும் உயர்ந்து."

என்றும் அதாவது:—செல்வம் ஆறிடு மேடுபோல் அழிந்தழிந்து உற்பத்தியாவதனால்,

"கைத்துண்டாம் போழ்தே கறவாதறஞ்செய்க."

என்னும் முதுமொழிக்கிணங்க, பொருளிருக்கும்போழ்தே புண்ணியந் தேடுதற்கெண்ணி, ஏழைகட்கிரங்கி இனியமொழிகூறி, உண்ணீர் உண்ணீர் என்று உபசாரம்புரிந்து, தண்ணீரும் சோறும் தயையுடனளித்து புண்ணியஞ்செய்யும் புகழுடம்பெடுக்கவேண்டு மென்னும் கருத்தையுள்ளடக்கி, ஔவையானவள், புகழேந்தி யென்னும் புலவனைநோக்கி, தன் ஐந்துவிரலையு முடக்காமல் கொருக்கி உள்ளங்கையைக் குவித்தும், ஐந்துவிரலையு முடக்கிப் பிடித்தும், கடைவிரல்மாண்டையும் முடக்கி, மற்ற மூவிரலையுங் கோணமாக நிறுத்தியும், நால்விரலை முடக்கிச் சுட்டுவிரலை வளர்த்தவமுகமாக நிறுத்தியும, ஐந்துவிரலையு குவித்தும் காட்டி, இந்த ஐந்து சமிக்கையைக் குறித்து ஒரு வெண்பாப் பாடவேண்டும் என்ற மாத்திரத்தில் அவர்,

"ஐயமிடுமின் அறவெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவேனும் அன்னம் இட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே யென்று முணர வல்லீரேல்
அருவினைகள் வந்து மறும்."

என்று பாடியிருக்கிறார். அளவேனும் தர்மம் அன்புடன் செய்ய வேண்டுமென்றும், கடவுளடியைக் கனவிலும் மறக்கக்கூடாதென்றும் உபதேசஞ் செய்தாள் ஞானத்தாய் ஔவைபிராட்டி.

"பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர்-விருந்தோம்பி
வேள்வி தலைப்படாதார்."

என்னும் நாயனார் அமுதவாக்கின்படி, பொருளை மிகவிரும்பி அறஞ்செய்யாது சேர்த்து, முடிவிற் புகழின்றி வீணே யிழந்தாமெனறுமிகவுந் தளிப்பவர்கள், பச்சைத்தண்ணீரை வேரிற்காணுத பசுங்கொடிபோல் வாடி, துயரென்கிற கலியாற் பீடிக்கப்பட்டு, வறுமையென்னு மறலியின் வாதைபாற் சிக்கி, லோபியென்னும் பெயரால் உலகத்தாரிகழ புண்ணியமென்னும் அலங்காரப்பிலலாப் புருடராகிப் பூமியில் திரிவர். அவாகள் ஆடையில்லாப் பெண் மணிபோலும், அலங்காரப்பில்லா அரண்மணைபோலும், அன்பில்லா அறம்போலும், வினையமில்லாத வித்தைபோலும், கூட்டுறவில்லா குடிவாழ்க்கைபோலும், ஒற்றுமையிலலா மந்திரிபோலும், கதிர்ம தியில்லாக் கணகத்தைபபோலும், புலவர்களில்லாச் சபையைபபோலும், வஞ்சகரியற்றும் மாதவம்போலும், இங்கிதமிலலாச் சங்கீதம்போலும், மந்திரியில்லா மகிபரணைபபோலும், தொந்தாவண்டாத தெய்வ அருள்பெறுத தலஜென்மமென்னுத அவஜென்மமாய் நாஜென்மமென்பது நாக ஜென்மமாகி புகழொளியிலலா இகழிருள் சூழ்ந்து புவியில் வாழ்கின்றனர். பிச்சையிட்டுக் கெட்டவர்களும் பிள்ளைபெற்றுக் கெட்டவர்களுமில்லை. ஆதலால்,

"பகுத்துண்டு பல்லுயிரோம் புதல்நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந்தலை."[2]

அதாவது, தனக்குக் கிடைத்த பொருளை பையாய் தூகிக் கொடுக்கவேண்டுமென்றல்ல, தேடியென்று வந்தவர்களுக்கு நான் தியென்று சொல்லாமல், ஜீவகாருண்யத்தின் பொருட்டு பகிர்ந்து கொடுத்துத் தானும் உணணுதலானது விதிக்கப்பட்ட உத்தம தர்மங்களிலெல்லாம் முதன்மையான உன்னத தர்மமாகும்.

தாம் சம்பாதித்த பொருளை சத்விஷயத்தில் கிஞ்சித்தேனும் செலவுசெய்யாமல் பரமலோபியா யிருப்பவன் 'எட்டி பழுதென்ன ஈயாதார் வாழ்க்தென்ன?" என்னும் பழமொழிபோலும்,

"ஈக்கள் தேன்கூட்டி லெடுப்பா ரிடங்கொடுத்துப்
போயலகின்ற தொருபுத்தி யீனம்போலும்,
சோரத்திற் பெற்றபிள்ளை சொந்தமென்று முத்தாடி
பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும்."

"காகத்தின் கூட்டில் கருங்குயில்கள் முட்டையிட
மோகமுடன் காகமுந்தான் முட்டையென்றே எண்ணுதல்போல்
இன்னெங்கு காளிருப்போம் இதுவே சதமென்று
பொன்னெமிகத்தேடிப் புதைத்து வைக்கு மாந்தர்களைச்
சேதவி பூதேவி சிரிப்பாரிவன் றனீபாம்
மூதேவி யிஜன்மமென்று மொழிந்தார் மனுநூலோர்."

மேலும்,

"பொன்னுலை யுள்ளவர்க்குப் போசனத்தி லிச்சையில்லை
அன்னைசுற்றம் தருமமான திலு மிச்சையில்லை
வெட்கமில்லைப் போகலாம் வேளையின்ன தென்றுமில்லை
இக்குணமுள்ளோர்ப் பேய்க்கிணையாகு மென்றனரே."

"தின்னுமை யுண்ணுமற் றேடி மிகச்சேர்த்துப்
புண்ணிய முஞ் செய்யாமல் புதைத்துவைக்கும் லுத்தர்பொருள்
தெண்டம் பெரும்பிடிக்கும் தீக்கும் திருடருக்கும்
வண்டமான வேசைகட்கும் வலுவந்தக்காரருக்கும்
இதமிலாப் பேடிகட்கும் எல்லாப் பிசாசுகட்கும்
உதவுமே யீயாவுலுத்தர் பொருளதுதான்."

"நாயானது கொழுத்தால் காட்டிலதை யார்புசிப்பார்
ஈயாத லோபியர்க்கு எல்லா மிருந்துமென்ன
வாறுகோலாலுலும் மாளிகையெல்லாம் விளக்கும்
பேராய்க் குரங்கு பிடித்தாற் குதவிசெய்யும்
ஈயாதார் லோபிகளால் எவர்க்கும் உபகாரம்
வாயாதவர் கொடுக்கமாட்டா ரொருநாளும்."

"சித்திரமும் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்க மட்டுந் தயையும்
கொடையும் பிறவிக்குணம்."

என்பதுபோல் புண்ணியவசத்தினாற் பெற்ற செல்வத்தைத் தாமு மனுபவித்துச் சத்பாதனிதத்தில் செலவிடாதவர்கள் பொருளினால் யாதொரு பயனும் பெறமாட்டார்கள்.

அவ்விதஞ் செய்யாது ஜீவகாருண்யமின்றித் தாமே அதை உண்ணுதலானது ஒருவனிடத்திற்போய் தாம் ஒன்றுமில்லையென் று இரக்குந் தினபத்திலும் அதிகமான தன்பமென்றும், இதனி விட சாகுங்காலத்தில ஐமபொறி மயங்கி அறிவழிந்து அவயவங்க

எல்லாம் அயர்ந்து பலவிதமான துன்பமடைவது இதனினும் மிகவும் கல்லதென்று நமக்குப் பொருள் விளக்கும்படி,

"இறத்திலி னின்னாது மன்றம்மிரம்பிய
தாமேத மியருணல்."—என்றும்,

"சாதலி னின்னாததில்லை இனிது அஃதாகும்
ஈதலியை யாக்கடை."

என்றும், இயம்பி இருக்கின்றனர். இதனல் வறியவர்க்கு இல்லை யென்பதைவிட வேறு துன்பம் உலகில் இல்லையென்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்.

"தண்டாமலீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்காலீவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்றூலீவது காற்கூலி பின்சென்றும்
ஈயா னெச்சம் போலறு."

"அன்பில்லாரொல்லாந் தமக்குரியர்-அன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு."

அன்பற்றவர்கள் எல்லாம் தமக்கு வேண்டுமென்று ஆத்திரத்துடன் சேர்த்துவைப்பர். அன்புடையவர்களோ தமது எலும்பையுங்கூடப் பிறர்க்குத் தத்தம செய்துவிடுவர்.

"உத்தமர்தா மியுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
மாங்கமுகு போல்வா ரதமரவர்களே
தேங்கதலியும் போல்வார் தேர்."

பனைமரம் நீரைவிரும்பாமலே பலனைத்தரும், அதுபோல உத்தமர் பயனை எதிர்பாராமலே கொடுப்பார், தெங்கு நீர்விட்டளவுக்குப் பயன்தரும், அதுபோல மத்திமர் பயனளவை விரும்பியே கொடுப்பர். கமுகும் வாழையும் மாறுமல் நீர்விட்டால் பயன்தரும், அதுபோல அதமர் மாறுமல் பயனை எதிர்பார்த்தேகொடுப்பர்.

"உண்ணுவிருந்து முதவிகொள்ளாத வுறவும் பொன்னை
எண்ணுக் கணிகையுமின் புலவோருரல் லேவலரும்
தண்ணரம்புல்லரும் தாமாவும் காலுண்ணுஞ் சற்குருவும்
கண்ணரக்காணின் மகிழ்வார்கள் செல்வக் கயவர்களை."

உண்ணுத விருந்தினரும், உதவியை யேற்றுக்கொள்ளாத உறவினரும், பொன்னை மதியாத வேசியரும், இனிய புலவோரும், நல்ல வேலாளிகளும், குளிர்ச்சிபொருந்திய புல்லுத் தின்னுத குதிரை

யும், காற்றையுண்ணுகின்ற சற்குருவும் ஆகிய இவர்களை செல்வத்தையுடைய கீழ்மக்கள் கண்ணாரக்கண்டால் களிப்படைவார்கள். அவர்கள் அவ்விதம் மகிழுதற்குக் காரணம் செல்வில்லாமையே.

அன்பு முதிர்ச்சியால் என்புருகிக் கசிந்து இறைவனருளைப் பெறவேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யாமல் மாய்மால மேவுதாரிகளாய் செய்பவர்கள் சேற்றிலூன்றிய கம்பம்போலும், ஆற்றிற் கிடந்து தாறறும் பஞ்சின்றுகளைபோலும், மாறறுணக்கஞ் சும வறுங்குடம்போலும், சோற்றுவியற்றுத் துணியுமற்று என்பது போலும், வேற்றாரிலுமலக்கு விருதாவாக காற்றுடிபோலக் காற்றிலுழன்று, கடையாணியில்லாத் தேரினைப்போலக் கவலையுறுவார்கள். இதுபற்றியன்றே நாயனாரும்,

"அன்பகத்தில்லா வுயிர்வாழ்க்கை-வன்பாற்கண்
வற்றல் மாந்தளிர் தற்று."

அதாவது பகுத்துண்டு வாழாதவன் இல்வாழ்க்கை நிலையானது கடினநிலத்தில் உலர்ந்த மாந்தளிர்த்தை தழைவதைபோலும்எனக் கூறியிருக்கின்றார். ஆதலால் தறபுகழ்ச்சியையே நாடி செய்யும் தர்மங்களெல்லாம அதர்மமாகும்.

சில கிராமங்களில தச்சணடித்த தலைவாசலெல்லாம் உச்சியிடிக்க உலாவித்திரிந்தாலும், எச்சிறகையாலும் காக்கையோட்டுவாரில்லாமற் பிச்சைக்காரரெல்லாம் பொச்சைசவற்றி லச்சைகெட்டுத் திரிகிறார்கள். இவ்விதம் தர்மசிந்தை யிலலாத மூடபிசுனப்பற்றி பல வித்வான்கள பாடியிருப்பதை இங்கு கூறுவோம.

"தாமுங்கொடாரர் கொடுப்போர் தம்மையு மீயாதவகை
சேமஞ் செய்வாருஞ் சிலருண்டே—யேமநிழல்
இட்டுமலர் காய்கனிக ளீந்ததவு மாமரத்தைக்
கட்டுபுடை முள்ளெனவே காண்."

"கலெயெல்லா முணர்ந்தாரேனும் கரிசறத் தெளிந்தாரேனும்
மலெயென உயர்ந்தாரேனு மனமயல கன்றாரேனும்
உலகெலாம் புகழப்பல்லோர்க் குதவிய கையரேனும்
இலகிய விரக்கமின்றே லெழுசா கடைவான்றே."

என்றும்,

செல்வம் நிலையாமை.

காலடியார்.

"உண்ணுன், ஒளிசிருன், ஓங்குபுகழ் செய்யான்
தன்னருங் கேளிர் துயர்கலையான்—கொன்னே
வழங்கான், பொருள்காத் திருப்பான்வல், அ ஆ!
இழந்தான் என்றெண்ணப்படும்."

ஒருவன் தானும் அனுபவியாமல், பிறர்க்கும் கொடாமல் பொரு ளைச் சேர்த்து வைத்திருப்பானுயின், அவன் அந்தப் பொருளை இழந்தவனென்றே சொல்லவேண்டும்.

"கெட்டசோறு தவிடுகஞ்சி கிருமியுண்ட மாவலைத்
கீரைவேர் தெளிந்தமோர் மூறிந்தபாகு கிண்டிமா
இட்டசோறு கொழியலுப்பி டாதபுற்கை யாயினும்
எங்குமன்ப தாகநுங்க வின்பமா யிருக்குமே
வட்டபாகு பசுவின்நெய் பருப்புமுக் கனிக்கூழாம்
பாளிதங் கடாளிதங்கள் பண்ணியார வகையுடன்
அட்டபாற் குழம்புகன்ன லமுதமோடு முதவினும்
அன்பிலே டளித்திடாத வசுனமென்ன வசுனமே."

கெட்டசோறு, தவிடு, கஞ்சி, புழுவுண்டமா, அரைக்கீரைவேர், தெளிந்தமோர், மூறிந்தபாகு, கேழ்வரகுக்களி, உப்புப்போடாத கொழியற் சோறுகளும் எவ்விடத்திலும் அன்போடு இட்டதாக உண்ண இன்பந்தரும். ஆலில் பதப்பட்ட பாகு, பசுவின்நெய், பருப்பு, முக்கனிகள், பாற்சோற்று வகைகள், தாளிதங்கள், பண்ணியாரங்கள், பால் குழம்பு, சர்க்கரை, சோற்றுடனே கொடுத்தாலும் அன்போடு படைக்காத சோறு சோறல்ல.

"நல்லவர்கள் வாயா னலிலுமொழி பொய்யாமல்
இல்லையெனு தண்ணைமட்டு மீவார்கள்—நல்லகுணம்
அல்லவர்கள் போவானென் றுசைசொல்லி நாட்கழித்தே
இல்லையென்பா ரிப்பாரிலே."

"தன்னைப் புகழ்வானுஞ் சாகுதிசொல்லி நிற்பானும்
பொன்னை மிகத்தேடிப் புதைப்பானும்—என்னலர்த்தம்
நண்புத்தி கேட்பானு நாணமில்லா தானும்
பெண்புத்தி கேட்பானும் பேய்."

"கட்டி யடிப்போர்க்குங் கன்மீதி லேற்றுவர்க்கும்
எட்டி யடிப்போர்க்கு மீவீரே—திட்டமுடன்
பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையினிற்
போடுவோர்க் கீவார் பொருள்."

"எண்ணெண்கு மூப்பத்திரண்டு பற்காட்டி யிசையுடனே
பண்ணுகச் சொற்றமிழ்பாடி விக்காலுமிப் பாரிலுள்ளோர்
அண்ணுந்து கேட்ப ரழகழகென்ப ரதன்பிறகு
சுண்ணும்பு பட்டஇலையுங் கொடார்கவி சொன்னவர்க்கே."

"பாவிதனந் தண்டிப்போர் பாலாகு மல்லதருள்
மேவுபர னன்பர்பான் மேவாதே—யோவியமே
காயின்பாலத்தனையு நாய்தனக்கா மன்றியே
தூயவருக் காமோ சொல்."

பாவியின் பொருள் தண்டிப்பவர்களிடத்தில் சேருமேயல்லது அருள்பெற்ற தெய்வபக்தரிடத்தில் சேராது. பாவையே! நாயின் பால் மூழுதும் நாய்க்குட்டிக்கேயல்லது பரிசுத்தருக்கு உதவுமோ சொல்லு.

"போற்று குருகிலைகள் பொன்னுசை யோர்க்கில்லை
தோற்று பசிக்கில்லை சுவைபாகம்—தேற்றுகவி
சேசற்கிலை சுகமுநித்திரையுங் காமுகர்தம்
ஆசைக்கிலை பயமானம்."

பூசிக்கத்தகுந்த குருவும், பந்துக்களும் பொன்னுசையுடையோர்க்கு இல்லையாம். ருசியும் பாசமும் மிகுந்த பசிக்கில்லையாம். சுகமும் தூக்கமும் தெளிந்த கவிவாணருக்கு இல்லை. பயமும் மானமும் காமிகளுடைய ஆசைக்கு இல்லை.

"என்பே விறகாய் இறைச்சியறுத்திட்டு
பொன்போற் சுணவிற் பொரியவறுப்பினும்
அன்போ டருகி அகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியை எய்தவொண்ணுதே."—என்றும்,

"இருமலும் சோகையும் ஈளையுஞ் வெப்பந்
தருமஞ் செய்யாதவர்தம் பாலதாகும்
உருமிடி நாகம் உரோணி கழலைத்
தருமஞ் செய்வார் பக்கற் ருழலிலாவே."—என்றும்,

"ஆவியை யத்திரனென் ஆதித்தன்மய மானுலென்
சேவைசெய் தின்புற்ருலென் திருக்குவாம் விழிபெற்ருலென்
ஓவியம்போ தற்ருலென் உத்தமோத் தமனுலென்
சிவகாருணிய மின்றேற் றியலொன் றுரைக்கலாமே."—என்றும்,

"சிவகாருண்ய முள்ளோர் செய்வதே தபஞ்செபங்கள்
சிவகாருண்ய முள்ளோர் செய்வதே தியானந் தானஞ்
சிவகாருண்ய முள்ளோர் செய்வதே தியாகம் யாகம்
சிவகாருண்ய மென்ருற் சிற்சுக மடையலாமே."—என்றும்,

"கற்றவர் கடவுட்டானஞ் சேர்ந்தவர் களைகணில்லார்
அற்றவர் அந்தணுளர் அன்றியு மவர்போல் வாக்கு
உற்றதோ ரிடுக்கண் வந்தால் உதவுதற் குரித்தன்ருகிற்
பெற்ற யிவ்வுடம்பு தன்னுற் பெரும்பய னில்லைமன்னே."

என்றும்,

இன்னும் பட்டினத்தாரும்,

"வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவர் வழக்குரைப்பர்
நீதுக் குதவியஞ் செய்திடுவார் தினந்தேடியென்றும்
மாதுக் களித்து மயங்கிடுவார் விதிமாளு மட்டும்
ஏதுக் கிவர் பிறந்தார் இறைவா கச்சி ஏகம்பனே."—என்றும்

"ஓயாமற் பொய்சொல்வர் கல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சாதியாயிருஞ் செய்வர் சாத்திரக்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார்தமை அண்டினர்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன போயென்னகாண் கச்சி ஏகம்பனே."

எனறும்,

"ஈயா மனிதரை என்படைத்தாய் கச்சி ஏகம்பனே!"

என்றும், பற்பலவாறு ஈயாதவரைப்பற்றி எடுத்தெடுத்துக் கூறி அவரெடுத்த ஜென்மமும், அவரியற்றுங் குடிவாழ்க்கையும் இன்பிலாதென இயம்பி இருக்கின்றார்கள். அன்றியும் நம் ஔவைப் பிராட்டியாரும், "ஐயமிட்டுண்" என்று பொதுவினமாய் எல்லோர்க்குங் கூறியிருப்பினும் மிகப் பொருளுடையோர் ஏழைகளுக் கவனியாதிறுமாந் திருப்பரென்றெண்ணி அவர்கட்குத் தனியே வற்புறுத்தவேண்டுமென்ற குறிப்பால் "கையொத்திருந்தால் ஐயமிட்டுண்" என்றும் கூறியிருக்கிறார். ஆதலால் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதர்களும் தத்தம் சக்திக்கேற்ப, சபைகள், வித்தியாசாலைகள், தேவாலயங்கள், அன்னசத்திரங்கள், ஔஷத சாலைகள் முதலிய பொதுஜனோபகாரப் புண்ணிய விஷயத்திற்குப் பொருளுதவிபுரிந்து, தாபெடுத்த மானிடஜென்ம மகிமைக்கேற்ப புருடார்த்தம் என்னும் புகழ்ப்பொருளணிந்த தெய்வ திருவருட் கருணைக்குப் பாத்திரர்களாகி, செழித்துத் தமது பூத உடம்பழியினும் புகழுடம்பழியாது தமதுகுலம் என்றுந் தழைத்து இன்புற்று வாழ்வர்.

ஆனால் பாத்திரமறிந்து பிச்சையிடவேண்டும். உண்மையான துறவிகள், குருடர், அங்கவீனர், நோயாளர், அனுதிகள், விருத்தாப்பியர், முதலியோரே தானம் வாங்குகிறதற்கு அருகான சற்பாத்திரர் என்னலாம். வேஷதாரிகளுக்கும், வேலைசெய்து பிழைக்கக்கூடியவர்களுக்கும் பொருளீதலால் அவர்கள் சோம்பலாண்டிகளாகிப் பூமிக்குப் பாரமும் சோற்றுக்குத் கேடுமாகிவிடுகின்றார்கள். தங்களால் உலகத்திற்கு விளைக்கக்கூடிய தானியப் பொருள்களை விளையாமலிருத்தலுடனே மையாது, பிறரால் விளைக்கப்படுந்

தானியங்களையும் தங்கள் வயிற்றிலிடுவதால், அவைகளை மற்றை யோர்க்கில்லாதபடி குறைத்தும் விடுகின்றார்கள். இவர்களைப் பார்த்து ஏனைய தடியர்களும் சோம்பலாண்டிகளும் இதுவே நல்ல பிழைப்பு என்று பற்பல கபடவேடங்கள் பூண்டுகொண்டு உலகத்தைக் கெடுக்கப் பறப்பட்டுவிடுகின்றார்கள். இத்தீமைகளெல்லாவற்றிற்கும் காரணர் இன்னாரை ஆதரித்து சேவோசையாதலால் அப்பாத்திரர்க்குக் கொடுப்போரும் பாவசம்பந்தமுறவர். இக்கருத்தைப்பற்றியே சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறியில்,

"தக்கார்க்கே யீவர் தகார்க்களிப் பாரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
கொல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுழுளி
புல்லுக் கிறைப்பரோ போய்."—என்று கூறினர்.

மேலும், நாம் உபகாரஞ் செய்யின், நல்லோர்களுக்குச் செய்ய வேண்டுமேயன்றி, தீயோர்களுக்குச் செய்யக்கூடாது. இக்கருத்தை நமது பூதானைதகள்,

"வேங்கை வரிப்புலி நோய்தீர்த்த வீட்டாரி
ஆங்கதனுக் காகாரா மாறுற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின் மேலிட்ட கலம்."

என்னும் செய்யுளில் விளக்கியிருக்கின்றனர். இதன் பொருள் யாதெனில், ஓர் ஆரண்யத்தில் ஒரு புலி காலில் முள்ளைதைத்து வருந்துவதைக் கண்ட வேடனொருவன் அதைப்பார்த்து மனமிரங்கி அதன் முள்ளைப் பிடுங்கி அதன் நோயை நீக்கினன். அப்புலி தன் காலில் முள் தைத்திருந்த சமயதால் வெளியிற் செல்ல முடியாமல் உணவில்லாது வருந்திற்று. பின்பு தனக்குதவி புரிந்தவனும் தனதருகிலிருப்பவனுமான வேடனையே கொன்றுதின்றுவிட்டது. ஆதலின், மூர்க்கர்களுக்கும் தவ்ட விலங்குகடகும் உபகாரஞ் செய்தல் கல்லின்மேல் போடப்பட்ட குடம்போல் காசத்திற் கேதுவாகும். நல்லோர்களுக்கு நன்னமசெயயின் சிலையிற் செதுக்கிய எழுத்துப்போல் என்றும் பிரகாசிக்கும். தீயோர்களுக்கு நன்மை செய்யின் நீரிலெழுதிய வெழுத்துப்போல் அன்றே அழிந்துவிடும். இதுபற்றியே பெரியோர்,

"நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கல்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்."

எனக் கூறியிருக்கினறனர்.

கீர்த்தி. (REPUTATION.)

பூரண சம்பன்ன குணச் சுயம்பாப் பொருளுமாய், சகல பொருட்களுக்கும் மேலான வஸ்துவுமாய், எல்லா ஒளிகளுக்கும் மேலான ஒளியுமாய், தன்னெளிக்குமுன் எவ்வொளியும் மங்கி இருளச் செய்யும் சோதிப் பிரகாசமுமாய், எல்லா அழகுக்கும் மேலான அழகுமாய், எச்சமயங்கட்கும் பொதுவாகிச் சிறபபாகி னங்கும் கடவுளுக்கே எல்லா மகிமையும் கனமும் புகழ்ச்சியு முரியது. அப்பெரிய பரஞ்சோதியின் அணுப்பிரமாணமான சிற் ச்சோதியாகிய ஆத்மா நமக்குள் அமைந்திருக்கின்றமையால் இப் பிரபஞ்சத்தின்கண் உதித்த மனிதர்களும் புகழ்ச்சியை விரும்பு வார்களெயொழிய இகழ்ச்சியை ஒருவரும் விரும்பார்களென்பது சர்வ ஜன சம்மதமான விஷயம். எவனெனில் ஒவ்வொரு நோக்கத் திற்காகவே கடவுள் நமமை சிருஷ்டித்திருக்கிறார். அந்நோக்கம் இன்னதென்பதைக் கண்டு தெளிந்து அதை நிறைவேற்றுவதே நமது கடமையாகும். அதுவே கீர்த்தியைத் தரும். இதுபற்றியே தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனாரும்,

"தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதில்லார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

என்ற சத்தியவாக்கை வெகு தீரமாய் வற்புறுத்திக் கூறி யிருக் கின்றனர்.

"அழிவுறு மூடம்பையென்று மாசையாற் பேணலின்றி
அழிவுறுப் புகழைத் தேடியன்பொடு பேணுர் மூடர்
விழுமிய கல்வி கேள்வி விகுகொடை செய்து தேடிக்
கழு பெரும்புகழே நாளுங் காப்பர் கல்லறிவினோரே."

பொன்னுபரணத்திலும் புகழ்ச்சி யாபரணமே பெரிதென மதிக கும் பெரியோர்,
"புண்ணியவசத்தினுல்செல்வமதுபெறவேண்டும்; பொருளோரட்சிக்கவேண் புத்தியுடனதுஒன்றுநூறுகவேசெய்து போதவும்வளர்க்கவேண்டும், [டும் உண்ணவேண்டுமே பின்புநல்ல வஸ்திராபரணம் உடலில் தரிக்கவேண்டும் உற்ற பெரியோர் கவிஞர் தமாதுலர்க்குதவி ஓங்குபுகழ் தேடவேண்டும் மண்ணில்வெகுதருமவகள்செயவேண்டுமுயர்மோட்சவழிதேடவேண்டுமன்

வீணில்புதைத்துவைத்தியாத போர்களே மார்க்கமறியாக்குருடராம்." [நி என்ற பாவின ஆதரிக்க கருத்தை உள்ளுணர்ந்து தாம புண்ணிய வசத்தினுல சம்பாதித்த பொருளை வீணிற் புதைத்து வைத்து "வீணன சொத்து வம்பன் கையாஞ்சி" என்று தம்

ஆயுள் காலத்துக்குப் பின்பு கண்டவர்களெல்லாம் சூறையாடிப் பங்கிட்டுக் கூத்தாடுவதற் கிடங் கொடாமல், தாம் சம்பாதித்த பொருளை தமது ஆயுள் காலத்திலேயே இகபர சௌக்கியங்களை யடையும் பொருட்டு கல்வி, கேள்வி, ஆராய்ச்சியிலும, புண்ணிய மார்க்கங்களிலும் செலவிட்டுப் புகழ்ச்சியையும் கீர்த்தியையும் அடைவர்.

"மட்டில்லாமல் வட்டிவாங்கி கட்டிப்பைகள் சேர்த்தவன்
இட்டுணது செட்டதாகப் பட்டினி கிடந்தவன்
திட்டமான கீர்த்திநாட்டத் தினையள வெண்ணுதவன்
மட்டியென்ற பேர்வகித்து துஷ்டனென பாதகன்."

"பாடல் பெறனே பலர்மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்க ணுடானே—சேட்சென்
இவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தேன்ன மலர்ந்தேன்ன காண்."

என்று சொல்வதற் கிணங்க, புண்ணிய மாக்க மறியாத மூடர்க ளோ தமது சரீரமானது அழிந்து மண்மேடு மண்ணைப்போகுங் காலம் நிச்சய மென்பதை யுணராது சுடலையில் வைக்கும் உடலை வளர்ப்பதற்கு மாத்திரமே செலவிடுவர். சிலர் அதற்குங் கூடச் செலவிடாமல் உண்ணுமல், தின்னுமல், வாயையும் வயிற் றையுங் கருங்கித் திராகத் தேடி கடைப்பக்கட்டைபோல் குவித்து வைப்பர். அவர் ஆயுளுக்குப்பின் "காகவாயன் தேடினதை கல்லவாயன் அனுபவிக்கிறான" என்று சொல்லி வீணர்கள் கையாண்டுகொள்ள, அவர்கள் பெண்சாதி பிள்ளைகளோ கோடுங்கச் சேரியுமாய் அலைந்து திரிந்து வக்கீல்களுக்கும் சாட்சிக்காரர் என வரும் பல சண்டாளர்களுக்கும் பங்கிடுக் கொடுத்து விட்டு "கோடி கண்டவன் ஓடி எடுப்பான்" என்ற பிரகாரம் ஓலமிட்டுத் திரிவது நாம் அனுபவ சாக்ஷியாய் அறிந்த விஷயம்.

"பெருமையுஞ் சிறுமையுந் தானவருமே." என்ற முது மொழிக் கிணங்கப் புகழ்ச்சியடைய விரும்புவார் அதற்குத் தக்க வாறு நடந்துகொண்டா லொழிய அது சுமமா கிடைப்பதரிது. ஆதலால் கீர்த்திமானுக விரும்புவான் பல நன்மைகளை முன்னம்ம செய்திருக்கவேண்டும். உலகில் பொதுஜன நன்மை யாதேனும் செய்தாலன்றி 'வெறும்பானை பொங்குமோ மேல்." என்பது போல் அரிய பெருங் காரியத்தைச்செய்ய வலாதவன் கீர்த்தி மானுக முடியாது.

"மெய்வருத்தம் பாராார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாராார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்."

என்னும் நீதிவாக்கியத்துக் கிணங்கப் பிறர் நமக்கு செய்யுந் தீமைக்குப் பிரதி தீமை செய்யாமல்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."

என்பதன்போல், அடித்தவர்களுக்கு ஒருநாளைக்கின்பம், பொறுத்தவர்களுக்கோ சாகுமளவும் புகழ் என்று பொறுமையோடு தலை குனிந்துகொண்டு தமது காரியத்தின்மேற் கண்ணையிருப்பவர்கள் கீர்த்தி யடைவார்க ளென்பதற்குச் சந்தேகமில்லை. நன்மை விதைத்தால் நன்மையும் தீமை விதைத்தால் தீமையும்விளைவது நிச்சயம். "அவரை விதைத்தால் துவரை முளைக்குமா?" ஆகையால் இசையும் வசையும் அவரவர் செய்கையினாலேயே உண்டாகும்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தந்தம்
கருமமே கட்டளைக்கல்."

என்னும் சான்றோர் வாக்கின்படி, மேன்மையும் தாழ்மையும் அவரவர்களுடையசெய்கைகளினாலேயே உண்டாகுமென்பதுதிண்ணம். "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததும் இல்லை, இதினிருந்து நாம் ஒன்றும்கொண்டு போகவும்கூடாதென்பது நிச்சயம்." ஆனால் நாம் விட்டுப் போகும் விஷயங்களோ அனந்தம். நாம் இவ்வுலகினிருந்தும் நாட்களில் நன்மை விதைத்திருந்தால் அதினிருந்து அனேகருக்கு நன்மையும், அதின் மூலமாய் பொதுஜன வாழ்த்தே புண்ணியன் வாக்காத நமக்கு அனந்தம் பாக்கியத்தையுங் கீர்த்தியையும் தரும். அந்த பிரகாரம் நாம் தீமை விதைத்திருந்தால் தீமை விளைந்து நமக்கு பழிபாவி என்ற பெயரையும் அபகீர்த்தியையுந் தரும்.

ஆகவே நாம் செய்து வந்த பாவ புண்ணியங்கள் இரண்டுமாத்திரமே கடைசியில் நமைமைப் பின் தொடரும். ஆகலால் இவ்வுலகிலிருக்குங் காலத்திலேயே பிறர் பொருட்டு நமது உடல், பொருள், ஆவி, மூன்றையும் தத்தஞ் செய்து, சுயநல வெறுப்பும் பொதுநல விருப்புமுடையவர்களா யிருந்து, நமது சுயநன்மையை பரித்தியாகஞ் செய்து, பொய்யுடம் பழியினும் புகழுடம் பழியாத சதா கீர்த்தியை நிலைநாட்டக் கருத வேண்டும்.


பாரதமாதாவின் புத்திரரி னுபயோகத்திற்காக உதார குண பிரபுண்ணிய கண்ணியம் நிறைந்து கீர்த்திமான்களாக பிரபல்யம் வாய்ந்த சில உத்தமாகளின் ஜீவிய சரிதையை மற்றவர்களுக்கு பிரயோஜனமாக இங்கு கூறுவோம்.

இராயப்பறைதூர்

பெ. மா. மதுரைப்பிள்ளை.

நம் சென்னைப் பிரதேசத்திற் பிறந்து பர்மா தேசவாசியாகிப் பொருளும் பூஷணையும் பெற்று தருமப் பிரபல்ய சீமானாகவும், தேசாபிமானியாகவும், ஐக்கியகாரியாகவும், வித்யாதான விசேஷ பூஜிதராகவும் விளங்கிவந்த மதுரைப்பிள்ளையின் பெருந்தகைமையைப் பற்றியும், குண விசேஷங்களைப் பற்றியும், எல்லாரும் நன்கறிந்திருப்பார்கள்.

"கொடையும் பிறவிக் குணம்" என்றபடி. இவரது வள்ளல் தன்மையைக் கண்டு வித்வஜனர்கள் இவரை "இராஜா" வென்று அழைத்தனர்; கல்வியறிவுடம்பாரை மதிக்கும் குணம் இவரிடம் விசேஷமாக விருந்ததால் புலவர்களுடைய வாழ்த்துதலை இவருடைய கேசாதிபாதம் முழுதும் பூஷணமாய் நிறைந்திருந்தன.



நாம் மானிட மர்ம சாஸ்திரத்தைத் தயாரித்துக் காண்பித்த மாத்திரத்தில் அதனருமையை உடனே தெரிந்து நமது மேனேஜிங் டைரக்டர் தமதுசொந்த அச்சுயந்திரசாலையில் ஆறுவாரத்திற்குள் புதிய எழுத்துக்களால் அச்சிட்டு வெளிபாக்கத்தக்க ஏற்பாடுகளை எளிதில் செய்ததுடன், புஸ்தகம் முடிந்தவுடன் பல வித்வ ஜன சமூகத்தில் அதை அரங்கேற்ற முயற்சித்து நமக்கும் தங்கப் பதக்கம் (*Gold Medal*) ஒன்று பலர் சம்மதத்தின்பேரில்



ராய்பஹதூர் பெ. மா. மதுரைப்பிள்ளை.

பரிசளித்தவரும் இவரே. அந்தப் பதக்கத்தின் பரிமாணமும் அதிலடங்கிய விஷயங்களும் முன் பக்கத்தில் காண்பித்திருக்கிறது.

தமிழின் உருமை பெருமைகளைத் தெரிந்த பெருமழைபோல் நிதி மழை பொழிந்த உதாரகுணமுள்ள இந்தப் புருஷோத்தமரைப் பற்றி வித்வதீரரான கவிவாணர் பலர் பற்பல சமயங்களில் பாடிய மிகு மாதுர்யமான திவ்யப் பிரபந்தங்களனைத்தையும் ஒன்று சேர்த்து சுமார் 1500-பக்கங் கொண்ட மதுரைப் பிரபந்தமென வெளியாகி யிருக்கிறது.

இவர் தனது மகோன்னத நிலைமையையும், கௌரவத்தையும் காப்பாற்றி தினே தினே விர்த்தி செய்துகொண்டு பற்பலவழிகளிலும் நமது தேசத்தார்க்கு உபகாரர் புரிந்துவரும் இயல்புடையவரா யிருந்தமையால், அரசினரிடத்தும் நன்கு மதிக்கப் பெற்று சுமார் 37-வருஷமாக முனிசிபல் கமிஷனராகவும், 30-வருஷம் ஆனரரிமாஜிஸ்ற்றிரேட்டாகவும் உத்தியோகம் கைத்து வந்ததுடன் உத்தம சென்கோலோச்சும் உன்னத ஆங்கிலேய அரசரால் "ராய்பஹதூர்" என்னுங் கண்ணிய கௌரவப்பட்டப் பெயர் சூட்டப்பெற்று சகல சுகானுபோக முடையவராய் விளங்கி இலங்கி 1913-ம் வருஷம் சூன்மீ 17-ந் தேதி மறுபதவி யடைந்தார்.

உதார கெப்பீர புண்ணிய கண்ணியம் நிறைந்த தமிழ் வளர்க்குந் தாதாவெனக் காரணப் பெயர்பூண்ட இவரைப்பற்றி வித்வ சிரோன்மணிகளிபற்றிய சில பாக்களை இங்கு கூறுவோம்.

பொன்.

அகவற்பா.

தரைமிசைக் கனியிதழ் குருமணி நிகர்க்கும்
பூவைய ரொருத்தி புனைபெயர் தின்பெயர்
கம்மிய ளுலைவாய்க் கனலுருவாகிக்
கம்பித்திடவே காய்ச்சுவன்மீள
அடிமேலடிக்க வடிதாளாமற்
பிடிநடை துடியிடைப் பெண்களைத் தேடி
நாடி யொளிக்கையி னனிலமயக்க
வஞ்சனைசெய்வோர் வழங்குமாப்போல்
விஞ்சிடு நாமம் வினம்பினை பேதாய்
மதுரையைக் காவளி வந்தடுப்பதுபோன்
மதுரையைத் தென்கவி வல்லோ ரடுக்கத்
தன்பெயர் மாறுத் தகைமை
மன்னிடப் புரிந்தனன் மாண்புறமாதோ.

இவ்வையகத்திற் கோவைவப் பழம்போன்ற இதழ்களையுடையவளாய், பெண்ணரசிற் சிரோரத்நமாய் விளங்கும் பூம்பாவையாகிய திருமகட்குப் பொன்னெனு நாமதேயம் வந்திருப்பதாலப்பெயர்கொண்ட சொர்ணமே! கல்வி கேள்வியுடையவர்கள் மாட்சியுற்றோரைப் பொன்போன்றவரென வர்ணித்தலைக் கண்டு நீ செருக்கடையேல். என்னையெனின் நீ கம்மியன் காத்திலகப்பட்ட மாத்திரத்தில் நின்னைப் பணையிற் கிடத்தி யடிமேலடி

யடித்து மூசைக்குள்ளிட்டு உலைவாயில் வைத்து வன்னி நிறமாக்கிக் கம்பி புருவாய்த் திரட்டிக்கொண்டு உலையில் வைப்பதும், எடுப்பதும், அடிப்பதுமாக இம்சிப்பதாலவற்றைச் சகிக்க வலிமையின்மையால் அவன் காத்தினின்று தப்பிப் பெண்யானையின் நடையையும், துடிபோன்ற சிற்றிடையையும் உடைய பெண்கள்பாற் சென்று சரண்புகுந்து, மாதர்காள்! நீவீர் அடைக்கல ஸ்தானந் தந்ததுபோற் காப்பாற்ற வேண்டுமென்பதாய் நிற்கையில் அம்மாதர் நீ யாரென, நீ ரின்பெயராகிய பொன், சொர்ணம், கனக முதலிய நாமத்தைக் குறிக்காமல் ஒருத்தியிடம் காப்பென்றும், ஒருத்தியிடம் கொப்பென்றும், ஒருத்தியிடம் வடமென்றும், ஒருத்தியிடஞ் சங்கிலியென்றும், ஒருத்தியிடம் சரப்பளி யென்றும் இன்னன விதமாய்ப் பலபல பூஷணங்கள் பெயர்சொல்லி, உலகை வஞ்சிக்கக் கடன்படுவோர் பிரயோகிக்கும் பித்தலாட்ட வாக்கைப்போல மாறிமாறிப் பெயர் கூறுகின்றனை. தீர கெம்பீர வீரமற்ற பேதாய்! கானகமுள்ள களியவண்டுகள் பூக்களைத் தேடி வந்து மதுரையாகிய மதுவை யுண்பதுபோல, மதுரகவி பாடி வாழுங் கவிஞர்கள் தியாகம்பெற அடுக்குங்கால் நின்னைப்போல ஓடி ஒளியாது முன்னுக்கு வந்து சொர்ணமாரி பொழியுஞ் சஜனரஞ்சித மதுரைப் பெருமானே யெவ்வாறு நினக் கொப்பிடுவோம். எம்பிரபு நிலைபெற்ற கீர்த்தியான தென்பதற் கையமில்லை. ஆதலாலிவரே நிலைபெறுந் தங்கம் என்பது பொருள்.

தாலம்.

அ க வ ற் ப ா.

இருநிலத்தவர்க்குப் பெருபயம் பயக்குந்
தருவெனி னின்னை விரிவினிற் சொல்வர்
தாலமே யுன்றன் பாற்பெறு நிழலிலை
பாலினை யடியிற் பருவிளுங் கள்ளை
யருந்தின ரென்ப ரஃதொரு நிச்சை
தருங்குணத்தியல்பிற் பெறு மிதமில்லை
வடம்புனை வீரன் படையுட னூர்ந்து
சிகையினைப் பிடித்துத் திகிலுற வடித்துக்
கருக்குலை யழித்துக் கலையினை யுரித்துக்
கொடுத்திடுகாவுகிர் கடுத்திடவறுத்தும்
இடுக்கண் செய்தபி னீவதாலுன்னை
யாரணி மன்னர்க் காரணியாமென்
றஞ்சமெண்ணேதி யஞ்சலி செய்வோர்க்
கெஞ்சா திகோற் றஞ்சைமா மன்னர்
கெஞ்சுக மென்றே கொஞ்சிடு விஞ்சையன்
சிங்கை வனத்துச் சிங்காதனத்தோர்
தங்கை யளிக்கு மங்கள குணாகரன்
கந்தடை வாரண முந்தூர்ந்திந்த
இந்திரையாள வந்தெழு டப்பின்
தேசமாள் பதியை நேசமோ டணைத்து
வாசமார் வளவில் வீசொளி செய்தோன்
பெருநிதி படைத்த பருமியர் சினர்
திருநிதி படைத்த செல்வருந் தம்பொருட்
டவைகளிற் பேச வுமோ திந்த
சபையலங்காரச் சற்குணப்பெருமான்

முதலுள பண்டங் கொண்டுவாணிபஞ்செய்
தநிவாரங்கொள் எதிபருட்டலெவன்
வணையா தனிக்குமெம் மதுரை
துணைக்கிணையென்று சொற்றல் வழுஉமே.

ஓ பனையே! "உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வர்" எனப் பெரியோர் நின்னுல் விளையும் பலாபலன்களைக் கண்டு வியந்து, கொடுப்ப தில் நின்னை விசேடித்துத் தயாளுக்களுக் கொப்பிட்டுக் கூறி யிருப்பதி லெமக்குத் திருப்திகாமின்று; அஃதேனெனில், விருட்சமாகிய நின்னி டம் ஒருவர் தங்கற்கேனும் போதுமான நிழலில்லை. நின்னிழலடியிற் குந்தி பாலை யருந்தினபோதிலும், அடா நிந்தையாய்க் கட்குடித்தா னெனும் அபாண்ட மேற்கொள்ளும், இதன்றி நின்னீகையின் திறமோ கொடிது! கொடிது!! அஃதெங்ஙனமெனிற் கொடையாளர் வலியச் சென்று தம்மா லியலுதவி தாம் புரிதலே மரபு. அவர்கள் வயின் கண்ணீர்மை மாறுக் கருணையைக் காண்பாம். நின்பாலோ அஃதின்று. சாணங் கொடுப்பார்க் கியாமல் இரணங் கொடுப்பார்க் கீயும் உலோபியின் றன்மைப் பூண்டனை. நின்பலன்களை யடையுமாறு யுத்தவீரன்போல் ஆயுதபாணியான கள்வினை ஞன் வேண்டுமான கருவிகளுடன் நின்னையுதைத்து மிதிப்பதுபோல் நின் மீதேறி, நின் னுச்சியைத் தாவிப்பிடித்து, நீ குலை நடுக்கமுற அடிமேலடி யடித்து, நின் லோபத்துவ இனம் பலுகாவண்ணம் நின் கருக்குலையை யழித்து, நின் படாடோபத்தை யழிக்க நின்னுடையாகிய பன்னாடைகளைக் களைந்து, உலோபி யெடுத்துக் கொடானென அவன் காவிரல் நகங்க ளைக் கள்வர் அறுத்து வருந்துதற்போல் நின் காம்போன்ற பாளையைத் தினந் தினஞ் சீவி யிம்சித்து, மதுரைக் கிருகித்து வருதலானும் நின்னை யாமெங்ஙனம் எமது பிரபுக் கிணையென்போம். பிரபு ஆரணி ஜாகீர் ராஜ யோகருக்கோர் சிரோமணி போன்றவராயும், தஞ்சமென நடுத்தவரை யஞ் சல்மின் அஞ்சல்மின் என அபயாஸ்தந் தரும் தஞ்சை சமஸ்தான மகாராஜ ராஜ கெம்பீர சரபோஜி ராஜா சாயிபு அவர்கள் மனதுவந்து வார்த்தை யாடுங் கிளிமொழியோனெனைப் பாவித்தே அன்பு பாராட்டும் வித்தியாடம் பராயும், சிங்கை வனத்தார் எம்பிரபுவைக் கண்டளவிற் சிம்மாசனத்தி னின்றெழுந்து எதிர்கொண்டுவந்து மெய்யன்போடு கரமளித்துச் சோடச உபசாரத்துடன் வரப்பெறுந்தகமை வாய்ந்தவராயும், இந்திய தேசாதிபதி யாக விளங்கும் லாட்டப்பரின் பிரபு அவர்கள் தம் இரதகஜ துரகபதாதி களோடும், யுகியசோடும் இரங்கோன் பதிக்கு விஜயஞ் செய்த காலத்தில் அப்பிரபுவை வெகு மரியாதையுடன் வரப்பெற்று அவர்கள் கண்டிலாக் காட்சியைத் தீபஜோதிதாலங்காரத்துடன் காண்புவித்துப் பூப்பந்தரிடை நிறுத்தி யவர்களுக்கு மங்களோபசாரப் பத்திரங்கள் வாசித்தவரும், அத் தகையோரைப் போன்ற மகா கெம்பீர ஆர்க்காட்டாரச புத்திர சிரோன் மணிகளால் மெதாயிற பதக்கம் பூஷ்ணம் பெற்றவராயும், இரங்கோன் பதி யில உண்டாகும் மஞ்ஞைகரச் சபைகளின் கண்ணும் முனிசிபல் சபையின் கண்ணும் சுதேசிகள்பாற் பரிந்து பேசும் உரிமையுடையோர் இவரே யென்று அப்பதியில் தனகனவான்களாய் விளங்குபவர்கள் ஆமோதிக்க அசசபைகளில் நாயகமாய், அம்சமாய் ஜொலிப்பவராயும், பெருமுதற் கொண்டு வியாபாரங்களை நடத்துந் திறத்தின் முதன்மையானவராயும், இரானின்ற மதுரைப்பிள்ளை மனபதி முதலேழுவள்ளல்களின் றன்மை யுடைய சற்குணாலயராய் விளங்குலகயில் நின்னை யவருக் கொப்பிடற் பெருந்தோஷமெனவே ஒப்பிடாது விடுத்தனம். ஆதலாலிவரே வேண்டு

சாது சுந்தர்சிங்.

உன்னத தேவ ஊழியத்திற்காகத் தம்மைப் பூரண தத்தம் செய்து உலகப்பற்றறுத்தனையும் துறந்த உத்தம தாசனை சாது சுந்தாசிங் சீகியர் என்னும் வடநாட்டு போர்வீரர் பரம்பரையில் பிறந்தவர். இவர் பிறந்தது ஐந்நூறதிகம் பாயும் பஞ்சாப் தேசத்தில் பட்டியாலா ராஜ்யத்திலுள்ள ராம்பூர் என்னும் பட்டணம். 1889-ம் வருஷம் செப்டம்பர்மீ 3-ம் தேதி சுந்தர் தோன்றினார். அவர் தகப்பனார் ஓர் தனவந்தர். அவர் சமீபாதரில் ஒருவர் சீக்கிய ராஜ்யங்களொன்றின் தளகர்த்தரு மிருக்கிறார். மற்றவர்கள் இதனிலும் உயர்ந்த உத்தியோகங்களை வகித்து வருகின்றனர். இவர் கடைசிப் பிள்ளையாயிருந்ததினால் தன் தாயைவிடுப பிரிவதில்லை. வேனிற் காலத்தில இமயமலைச் சாரலிலுள்ள சிம்லா முதலிய குளிர்ந்த பிரதேசங்களுக்குத் தமது பெற்றோருடன் போவது வழக்கம். இவர் தாயார் நல்லொழுக்கமும், சாமர்த்தியமும், தெயவபக்தியும், தெளிந்த புத்தியுமுள்ள ஓர் மாது. அமெரிக்க பெண்மிஷனரிமார் இவர்கள் வீட்டிற்குத் தாராளமாய் வந்து சினேகம் பாராட்டி வருதனர். இந்த அம்மாளிடம் பக்தி யென்பது பரிளனித்து வந்ததினால் தமது பரிவோடு காப்பாற்றி வந்த கடைசிப் பிள்ளையாகிய சுந்தருக்கு அடிக்கடி போதித்து "நீ உன அண்ணன்மாரைப்போல் உலக சிந்தையில் உன மனதைச் செலுத்தாமல் உன் ஆத்மாவுக்குச் சமாதானத்தைத் தரத்தக்க நன் மார்க்கத்தை ஆராய்ந்து சாதுவாகிச் சிற்றின்பம் யாவையும் வெறுத்து தள்ளி பரலோகத்தையடக்கி உள்ளத்தை ஒருவழி நியத்தி ஞானமார்க்கத்தில் நடந்தால் நாதனடி கிட்டும." என்பது போன்ற பல போதனைகளைச் சொல்லி வந்தாள். சுந்தர் ஏழு வயதாயிருக்கையிலே சபஸ்திரு தத்தில் பகவத்சேவை முழுவதையும் பாராயணம் பண்ணியிருந்தார். கண்ணும் கருத்துமாயத் தன் சரீரத்தைப் பேணினதாடு கூட தனக்கு ஞானபோதனை செய்த ஆத்ம போதனாசிரியராகவு மிருந்த தன் மாதாவை சுந்தர் பதினாலு வயதில் இழந்து கொந்தார்.

சுந்தர் தன் தாயோடு கோவில்களுக்குப்போனர். தெய்வ பக்தர்களைக் கண்ட மாத்திரத்தில் அவர்களிடமிருந்து வசன வழிபாடுகள் செய்து நல்வழி காட்டுதனென்று தன் தாய் நடந்து போற்றி நிற்பதைப் பார்த்த சுந்தர் மனதில் சாதுவாய் ஜீவிப்பதே உசித மென்று தோன்றியது. உலகத் விஷயங்களுக்கு வெகுதூரம் மேலான நிரதியம் மனச் சமாதானமென்றும் அதை தரத்தக்கது தெய்வம் ஒருவர் மாத்திரமே என்றும் உணர்ந்தார். சிசுவருடைய கர்



சாது ஸ்ரீ சுந்தர்சிங்.

னையும், ஹிதகுமத ன்மிரதி சுருதிகளையும், மகபதிபருடைய கொள்ளையும் சுந்தர் ஒய்வின்றிப் படித்து வந்தார். அதேக வாக்யங்களையும் மனனம் பண்ணியும் வந்தார். இவற்றைப் படிக்கப் படிக்க இவருக்கு மனக்கலக்க மேலிட்டுதையொழிய தாண்டிய சமாதானம் கிட்டுவதாயில்லை. கோயில் பூசாரிகளும், சாதுக்களும், தன் தாயும் பாராட்டிய பக்தியால் இவர் உளத்தில் பிறந்த தெய்வநாட்டம் மனச்குளப்பத்தை யுண்டுபண்ணிக் கொண்டிருக்கையில் தன் கிராமத்திலுள்ள கிறிஸ்தவ பாடசாலையில் கல்வி பயின்று வந்தார். அதேகற்பிக்கப்பட்ட வேதபாடங்களை ஏற்றுக் கொள்ள மனமற்று அவற்றைச் சுந்தர் சினத்துடன் வெகிழ்ந்து தள்ளினார். மார்க்க வைராக்கியம் பொங்கி இரத்தம் கொதித்தது தான கருத்தோடனுசரித்து வந்த மதத்தைத் தகர்க்கும் சபமட்டி போல்தான்றின கிறிஸ்தமதத்தை முழுப்பகையாய் பகைத்தார். தமது உடன் மாணவரையும் பகைக்கத் தூண்டிவிட்டார். இவர் கள் கண்முன் புதிய ஏற்பாட்டைக் கிழித்து நெருப்பிற்கிரையாக்கினர். இதைக் கேளுற்ற அவர் தகப்பன் தன மகனைப் பார்த்து நீ செயவது சரியன்று. அப்புஸ்தகத்தை நாசம் பண்ணுமல் மிஷனரியிடம் திருப்பிக் கொடுத்திருக்கலாமே யென்று புத்தி புகட்டினர். கிறஸ்தவையும் கிறிஸ்து மார்க்கத்தையும் மிதகதனையும் முனனிலும் அதிமாய் வெறுத்துப் பகைத்த இவரின் உள்ளம் "சாந்தி, சாந்தி" என்ற கதறிக்கொண்டிருந்தது. சாந்தி என்ற ஹிந்தி பதம் "சமாதானம், பூரண ஆசீர்வாதம்" என்று பொருளபடும். இவர் எவ்வளவுக்கு அதிக வைராக்கியமாய்த் தேடினாரோ அவ்வளவுக்கு அவருக்கு ஆதம பசி அதிகரித்தமதையொழியத் தீரவில்லை. அவர் வாஞ்சித்த சாந்தியைப் பெறுமல் ஏமாந்தபோனதோடலுமல அவருடைய இருதயம் சலித்துப்போகவில்லை. தான் இதுவரைப் பழிதகும் அழித்தும் வந்த புதிய ஏற்பாட்டை வாசிக்க ஆரமபித்தார்.

"சன்னி-த்தில் வாம் நான் உனக்கு இரப்பாறுதல் தருவேன்" என்ற இனிய சப்தமொன்று அவர் காதிலபட அதை முதல கிறிஸ்துமதத்தைப் பழிபபதை விடுவிட்டார். கிறஸ்தவ உபாத்தியாயரோடு கருத்தாய்ச சமாசரித்தறிந்து கொண்டிருப்பார். "மத்தவன் தம்முடைய ஒரேபறூன குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெடுபோகாமல் நித்திய ஜீவனையடையபடிக்கு அவனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அனபு கூர்ந்தார்" என்ற மெய்யாகத புணணுயிருந்த சுருதினை மனதுக்கு ஆரம்பாகமாயத தரும் தைலமாயிருந்தது. ஆனல் பயமொரு பக்கம், சந்தேகமொரு பக்கம் அவர் மனதைப் புணணு

க்க காலை 5-மணிக்குத் தன் வீட்டோரம் போகும் புகைவண்டி யினடியில் வீழ்ந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ள நிர்ணயம் பண்ணிக் கொண்டார்.

இதற்காக ஸ்நானம் செய்துகொண்டு இரவை வேதபாராயணத்திலும் தியானத்திலும் ஜபத்திலும் கழித்தார். கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. அன்பு பெருகிற்று. உள்ளமுருகிற்று. சண்டமாருத வேகத்துடன் ஜபதியானம் வெள்ளமாய்ப் பெருகிறது. "ஹே; ஜகதீசனே! ஹே! ஆபத்பாந்தவா! ஹே! அனாதரக்ஷகா! பக்தர்கள் மனதில் சுகத்தைக்கொள்ளும் நீ எப்படிதப்பி யோடி என்னை ஏமாற்றக்கூடும்? அன்பர்கள் மனதில் இன்புற்றவனே! ஆராத காதலுக்கு நீராயுருகுவானே! கருணை நிறைந்த கற்பகத்தருவே! அருள் பழுத்த அற்புதனாதா! இங்கே தோன்றி இங்கே வந்து என்னைக் காக்க உன்னருள் புரிவாய். எங்கும் பாதி எங்கும் காதி, எள்ளுக்குள் எண்ணெய்போல் இயங்கி நிற்கும் நீ எங்கிருந்தாலும் இச்சணம் வந்து என்னைக் காப்பதுனுடைய கடனே. இந்தச்சணமே வந்து எந்தனைக் காத்தல்வேண்டுமே. இல்லையெல் என்னுயிரை இருப்புப்பாதையில் மாயத்து இப்புன் புலால் யாக்கையைத் துறக்க ஆவியாய்ப் பிரிந்து உன்னை ஆலிங்கனம் செய்வேன். அஞ்ஞானக் கண்ணால் அந்தகாதனையே பார்த்து ஏன்றும் தோன்றுது விழிக்கின்றேன். எதுந் தோன்றுதனை." என்று பரிதபித்து நிற்குஞ் சமயத்தில் ஓர் அற்புதக காட்சி கிடைத்தது. அவனைச் சுற்றிலும் மேகம் நிறைந்திருக்க அதன்மத்தியில் கறிஸ்துவின் ஜோலிக்கின்ற அங்கமும் குளிர்ந்த முகமும் இவர் கண்ணுக்குத் தென்பட்டது.

அந்நிமிஷமே சுந்தர் இத்தனை வருஷங்களாகத் தேடிக்கொண்டிருந்த சாந்தி அவர் உள்ளத்திலே ஒளித்தது. கண்ட காட்சியை கையெடுத்துக் கும்பிட்டு இரட்சண்யா மூர்த்தியை நாவாரத் துதித்தனர். முளமுடி சூடின இயேசு பகவான் தம அடிச்சுவடு கண்டப் பின்பற்ற சுந்தரை யழைத்த அந்த நிமிஷத்திலேயே அவர் உள்ளத்தைப் பூரிக்கச் செய்தது. அது முதல் அவர் உள்ளத்தில் தங்கியிருக்கும மனச்சமாதானம், பிரகாசம பொருந்திய அவரது திவ்ய முகத்தைத் தரிசித்தவருக்கன்றோ விளங்கும.

சாது சுந்தர்சிங் கும்மி.

ஆகமங்கள் சொன்ன யோகாப் பியாசங்கள்
அனைத்தும் நிஷ்டை முதலியவும்
தேகம் கனியவே செய்துக்தன முத்தமா
ஏக நிஷ்டையேறு மில்லையெனறான்.

எந்த வித்தத்திலும் ஆத்ம சாதனம்
இல்லையென மனச் சஞ்சலத்தால்
சிந்தைநொந்து கொடு வேதனையால் உளம்
வெந்துபோய் வீசங் குலைந்தவனாய்,

இம்மையிற் கைக்கெட்டா இன்பமது கான்
இறந்தாற் கிட்டுவதா யிருக்கும்,
கம்முயிர் மாய்ப்பதே நியாயமென வெண்ணி
காளுங் குறித்துமுன் வைத்துக்கொண்டான்.

முன்குறித்த நாளில் மூன்றுமணி காலை
முழுகி நீரில் எழுந்துபின்னர்
தென்புறஞ் செல்லும் புகைவண்டிப் பாதையில்
சென்றுயிர் நீக்கசீவ சிதகங்கொண்டான்.

ஐந்து மணிக்குப் புகைரதம் முனைதாய்
ஐயன் பதத்தைத் தொழுதுகொள்வோம்
இந்தச் சடலம் மடியுமுன்ன மாசை
இரட்சித குருநாதர் ஓர்வீசினர்.

என்று மனதிலே யெண்ணிக்கொண்டு சுந்தர்
ஈசன் நிருவடி தாணபோற்றி
எங்கு மயமாய் இலங்கும் பரம்பொருள்
ஏக தத்துவனே யுனை நான்.

"எந்த வித்தத்திலுங் கண்டு களித்து—
எண்ணித் துயர்தீர மார்க்கமின்றி
நொந்து மடியத் துணிவுகொண்டேடன எனை
நோக்கி நின்னருள் காட்டுமையா."

"அண்ட சராசரம் யாவும் படைத்தவா
ஆண்டவா உண்டென்ப தண்மையாலுல்
மண்டல நாதனே, காட்சிதந்தால் உனைத்
தொண்டு செய்வேனுயிர் உள்ளளவும்."

காட்சி தந்தாரீசன் மாட்சிதந்தார் சுந்தர்
கண்கள் மயங்கிடும் வேளையிலே
ஆச்சரிய மாகத் தானிருக்கும் அறை
அந்தகாரம் புகை சூழக்கண்டார்.

ஆன புகையின் நடுவில வெளிச்சமும்
ஆணுரு வொன்றும் புலப்படவே
"சுணன்செய் வேண்டுத லுக்கிரங்கி வந்த
மோனமே யார்நீர்?" எனக்கேட்டான்.

காட்சிகொடுத்த மகான் கைகள் கால்விலா
காயங்கள் ஐந்தையும் காட்டி "யுனை
ஆட்சி செய்யக்கு நிலமரித்த யேசு
அன்பன் நான்" என்று சொல்லிமறைந்தார்.

"எசுக் கிறிஸ்துவே மெய்த் தெய்வமினி
எசுக் கிறிஸ்துவே யென்னை ஆன்ம
எசுக் கிறிஸ்துவுக் காய்வாழ்வே னுயிர்
எசுக் கிறிஸ்துமில் லுறப்போன."

என்று சுதனைப் பணிந்தேபோற்றி சுந்தர்
என்றுமறியா வானந்தத் திடன்
சென்றுதன் தந்தை யடிவணங்கி யிந்த
சேதிகள் சொல்லி மனமகிழ்ந்தார்.

"பாரஞ் சுமந்திடும் பாவிகளே வாரும்
பாரம் தீர்த்தாறுதல் தந்திடுவேன்
கூறும் வேதாகம வாக்கியத்தைக் கண்டு
குதித்து நாதனைப் போற்றி செய்தார்.

பாவிகளை மீட்கத் தந்தைபரன் வார்தன்
ஆவி கொடுத்தார் மரக்குருசில்
தானிவரும் பல பாவிகளைச் சேர்க்கத்
தாதா உண்டென் றகமகிழ்ந்தார்,

தோழருடன் சேர்ந்து ஏசுவின் நாமத்தை
ஏளனம் செய்து திரிந்தசுந்தர்
தோழர் ஏதனுவ் கிறிஸ்துவைத் தாவித்தால்
தணிந்தவா செய்கை கண்டிதனா.

இதுமுதல் இவரது பந்துக்களும், சகோதரர்களும், இனத்தாரும் சதாநருக்களாகி இராஜாளி புறுவை வெநட்டுவதுபோல் இவரை விரட்டினார்கள். அவர் படித்த பள்ளிக்கூடமும் அடைபட்டுப் போனது. அங்குள்ள கிறிஸ்தவாகளையும் ஊரைவிட்டுத் தாத்தினர்கள். சுந்தரும் பாதேசியாய் தன்னந்தனியே உபதேசங்களைச் சகிக்க நேர்ந்தது. இவருக்கு நேர்ந்த துன்பம் ஏவ்வொன்றும் அன்பு, அமரிக்கை முதலிய நற்குணங்களை ஆழமாய் இவரில் பதிப்பித்தது. அக்கினிபிரவ் புடமிடப்பட்ட தங்கம் பிரகாசிப்பதுபோல் சுந்தாவதனம பிரகாசித்தது. தம்மை இட்டித்த ஆடையைகொண்டு— கிறிஸ்துவின் அன்பின் மகிமையை மற்ற

வர்களுக்கும் எடுத்துக் காட்ட வேண்டுமென்ற அபேக்ஷை அதி கரித்ததினால் 1905-ம் வருஷம் அக்டோபர்மாதம் 6-ந் தேதி ஞான வருஷம் பிறந்து 33-ம் நாள் சன்னியாசியாய்த் திரிந்து சுவிசேஷத் தைப் பிரசங்கிக்கும் பிரதிக்கினை பண்ணிக்கொண்டதின் அடை யாளமாகக் காவியுடை பூண்டார். ஏகாந்தஜெப பனிப் போர்வை யால் மூடப்பட்ட காடுகளுக்குள்ளும், சண்டமாருத படித்திக் கொண்டிருக்கும் தீபெத்தன்னும் பிடபூமியிலும் பசியாலும் குளிரலும் நலிந்து மல்லழுழக்சகனன்று அரற்றிய சபவர்கள் மத்தியிலும் இவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். இவருக்கு அற்புத தெய்வ தரிசனங்களுண்டாகிறதுண்டு. இவர் ஓர் சாதாரி யப் பிரசங்கி. தமது மனஸ்துள்ளதை நேராயும் தெளிவாயும் சொல்லிக் சொல்லி விளங்க வைக்கக்கூடிய ஆற்றலுடையவர். பசும்பொல் குளிர்ந்த முகத்தையுடைய சுந்தர் பிரசங்கம் செய் யும்போது வைராக்கியம் கொண்டு சிங்கம்போல் கெம்பீர தோற் றத்தையும் மனோதிடத்தையும் வைராக்கியத்தையும் காட்டுவார்.

இவர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் மணி போல் பொருள் நிறைந்து விளங்குவதால் இவரைக் கேட்போரின் சிக்கனே சிகறுவதற்கு இடமிராது. சபாரத்னமாகிய இவர் உப மானங்களிலும் சொந்த அனுபவத்தில் கண்ட சத்தியங்களா லும் தம் கருத்தை நிருஷ்டாந்தப்படுத்தும் வல்லமையுடையவர். சமயாசாரத்தின உணர்ச்சியைத் தர்க்கத்தால் அனுமானித்துக் கொள்ள முயல்வது தவறென்று சாதிப்பார். பாலைக் கண்டிராத பிறவிக் குருடனுக்கு பொகின் உண்மையைக் கொண்டு பாலின் நிறத்தைக் காட்ட முயல்வது மதியீனமல்லவோ? அவ்வாறே ஆனம வாழ்விற்குதவும உணர்மைப் பொருள்களைப் பரிசுத்த சாதியற்றவனுக்கு நியாயதாரணைகள் பயன்படா. சமயாசாரத் தின் மன்மையை எடுத்துக் காட்டக்கூடியது அனுபவ சாட்சி யொன்றே என்று சுந்தர் ஐயமறக் காட்டுவர். தமது உபதேசத் தின் வல்லமையாலும், தமது சிறந்த தபோமகிமையினாலும் சுந்தர் கிறிஸ்தவர்களைக் கிறிஸ்துவின உத்தம கொண்டாக்குகின்றார். தத்துவ ஞானத்தாலுமல்ல, நியாயதாரணையினாலுமல, அனு பவ சாட்சியாய் இவர் சொல்லும உறுதிமொழிகளால் மாத்திர ஏசுவென்ற புருஷோத்தமனில குரு அவதாரம் செய்த தெய்வம் பாவப்பாசங்களை யறுத்து நமக்கு விமோசன மளிக்க திருவுளச் சித்தங் கொண்டிருக்கிறதென சுந்தர் அறிவிக்கிறார். கிறிஸ்து வின பாதாரவிந்தத்திற்கு இதர மதஸ்தரை சுந்தர் அழைக்கும் முறை இதுவே.

அன்பே ஈஸ்வர சொரூபமென்ற சம்பிரதாயமும், இயேசு நமது ஜீவியத்தாலும் மரணத்தாலும் உயிர்த்தெழுதலினாலும்

அதை நிலைநாட்டியதும், தெய்வ அன்பில் அடைக்கலம் புகுந்த வரை அவ்வன்பி தவறாது புரப்பதும், இச்சத்தியத்தைப் பரிஷ் காரப்படுத்த வந்த கிறிஸ்துவையும் அவர் மரணமும் உயிர்த் தெழுதலுமாகிய கிறிஸ்துமத மூலாதாரக் கொள்கைகளை மாத் திரம்தான் சுந்தர் உபதேசிக்கிறார். இவரைப் பதினைந்தும் வயதில் தம் தெரிசனந் தந்து தொண்டாக்கிக் கொண்ட இச்சிகாமணி யின் பிரசன்ன மகத்துவத்தை இவர் நாள்தோறும் காண்கிறாராம். இப்புனித சுந்தரன் இவருடைய இணைபிரியாத உத்தம நண்ப னும்; இவருடைய சிநேகத்தைப் பெற்றனுபவிப்பதற்காக சுந்தர் உலகப்பற்றனைத்தையும் துறந்தாராம். இதுதான் சுந்தர் பகரும் அனுபவ சாட்சி. இதைக் கேட்பவர் எவரும், சுந்தர் கிறிஸ்து வைப் பற்றிப் பேசுவ ஓர் சாதாரியப் பிரசங்கம் மட்டுமல்ல, கிறிஸ் துவோடு ஒன்றித்து வாழும் சாயுச்சிய நிலையையடைந்த ததாகதர் என்றும் உணருகிறார்கள்.

சுந்தருடைய வாக்கு வல்லபம், அவருடைய பிரசங்கப் பொருளாலுண்டான தென்பது போதாது; அவருடைய முகக் களையும் இவர் சொற்களுக்கு சுவையைக் கொடுக்கின்றது.

'சாந்தகுணமுடையவனை விரும்புமொருவன் எடுக்கவேண் டிய முதல் அடியாதெனின், அக்குணம் சிறந்து விளங்கும் ஒரு குருவைச் சேருவதுதான். தன சாதகுருவைக் கண்டு, அவர் சொற் கேட்டு, அவரோடிணங்கி யிருப்பதால், இவனும் அவருடைய சுகுண சமபண்ணத்தில் பங்கடைந்து தேறுவான்.

சுந்தர் தமது பதினாறு வயதில் ஏகபகவானின் திருமுகத் தரிசனங் கண்ட நாள் முதல், அவராச் சதா தமது உள்ளத்தில் நிறுத்தி ஸ்மரணை செய்துவருவதாலும் அடிக்கடி தரிசனங் காண் பதாலும் சுந்தர் முகத்தில் ஜோதிபகவானின் திருமுகப் பிரகாசம் பிரதிபிம்பித்து ஜொலிக்கிறதைக்காணலாம். இது நமது அனு பவ சாட்சி.

இவர் 1918-ம் வருஷம் இலங்கை, திருநெல்வேலி, திருவாங் கூர் முதலிய இடங்களில் தினம் தினமாகவந்த கூட்டங்களுக்குப தேசித்தார்.

இந்நியத் திருச்சபையை ஓர் மனிதனுக்கு ஒப்பிட்டு, வட இந்தியா சிரமென்றும், தென்னிந்தியா கால்களென்றும் உருவகப் படுத்தினர். கிறிஸ்தவக்கழகம் இந்தியாவில் முன்னேறிச் செல்ல வேண்டுமானால் கால்களாகவிருக்கும் தென்சபையின் தினை யவ

தியம். ஆனால் இந்தக் கால்கள் யானைக்கால் வாதத்தால் வீங்கிப் போயிருப்பதுபற்றி சபை முன்னேறிச் செல்லக்கூடாதிருக்கிறது. இந்தப் பீடை யாதெனில், தென்னிந்திய கிறிஸ்தவர்களுக்குள் காணப்படும் ஜாதிப்பிரிவினை யென்று சுந்தர் கூறினர்.

தென்னிந்தியக் கிறிஸ்தவர்களுகுள காணப்படும இந்தப் பெரிய மூடத்தனதனைக் கண்டனம் பண்ணக்கூடிய சுதந்தரம் சுந்தருக்கிருக்கிறது. ஏனெனில, சிக்கியரில பிறந்த சிக்கியனென்று கருவமு கொள்ளக்கூடிய இவா ஜாதிப் பெருமையைக் கட்டோடே யொழித்துவிட்டார். 'நாமே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்போமாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்' என பரிசுத்த பவுல் சொன்னதுபோல் இவரும் சொல்லக்கூடியவரா யிருக்கிறார்.

இலங்கையிலும் தென்னிந்தியாவிலுமுள்ள கிறிஸ்தவர்கள் தம் மதக்கோட்பாடுகளுக்கு முற்றும் விரோதமான ஜாதிபெருமையை ஒழித்துவிட வேண்டுமென்று எண்டிப்பாய்ச் சுந்தர் சொன்னார். இவ்விஷயத்தில் யாவரும் சுந்தருடைய சிறந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டியவர்களா யிருக்கிறார்கள். யுகா யுகங்களாக நமது தேசத்தாரின் கால் கரங்களைக் கட்டிப்போட்டிருக்கும் இருப்புச் சங்கிலியாகிய ஜாதிபேதத்தைத் தகர்த்து, சுந்தர் பெற்றனுபவிப்பதும், சகல கிறிஸ்தவ தென்னாண்டார்களுக்கு உரியதுமான சகோதர ஐக்கிய சுயாதீனத்தைக் கிறிஸ்தவசபை எப்பொழுது அடையுமோ? இந்த பந்தத்தைக் களைந்தபிறகு தான் நாம இத்தேசத்தில் இயேசுவின் நிருநாமத்திற்குப் புகழ் படைக்கத் திறமைகொள்வோம்.

சுந்தர் தென்னிந்தியாவின் வெயிலைத் தாங்கக்கூடாமல் வேர்த்து அலுத்துப போவார். 'நான் இங்கே உப்பைப்போல் கரைந்து போகிறேன்; தென்தேசம் நான் கரைந்துபோவதால் உப்பின் சுவையைப் பெற்றுக்கொள்ளுமானால், கஷ்டத்தின் பலனைக்கண்டு கொண்டேனெனக் களிப்பேன்' என்று சுந்தர் தம் சிநேகிதருக்கு எழுகினர். இந்தியாவின்பக்திமலர்க்கொத்தை கிறிஸ்துவின் இணையடிகளில் படைத்து, அவரை யேற்றித் துதிப்பது இந்தியாவாசிகளுக் கழகன்றே என்ற எண்ணம் சுந்தரின் ஜீவியத்தைப் பார்ப்பவர் மனதில் பிறக்கிறது.

சாது சுந்தர்சிங் ஜீவிய விருத்தாந்தத்தை அறிய விரும்புவோர் *The Christian Literature Society, Madras* என்ற விலாசத்திற்கு எழுதி இங்கிலீஷ் அல்லது தமிழில் பெற்றுக்கொள்ளலாம்.

சாது சுந்தர்சிங் தும்மி **by Mr. G. Joseph, M.A.** அணா **2.**

எஸ். சாமிவேல் அண்ட் சன்ஸ், தென்காஞ்சி, இரங்கோன்,

என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கால்ட்வெல் அத்தியகூர்.

The Right Revd. Bishop CALDWELL, M.A., D.D., L.L D.

பிரதாப மிகுந்த பெரியவனென்றும், பக்தியும், சக்தியும், சாமர்த்தியமும் பொருந்தியவனென்றும் பிரபல்யம் வாய்ந்த கால்ட்வெல் அத்தியகூர் 1814-ம் வருஷம் மேய் மாதம் அயர்லாந்தில் பிறந்தார். அவர் பெற்றோர் ஸ்கோத்துலாந்துகாரரா யிருந்தபடியால் அவர் கிளாஸ்கோ சர்வகலாசாலையில் கல்வி பயின்று தெய்வ ஊழியத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்து, லண்டன் மிஷன் சம்பந்தமாய் வேலையமர்ந்து 1838-ம் வருஷம் ஜனுவரிமாதம் சென்னையில் வந்து சேர்ந்தார். லண்டன் மிஷன் சம்பந்தமாய் மூன்றுவருஷம் ணிணிடை செய்தபின், இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்து திருநெல்வேலி அபிசேஷகராய் வந்தார். இடையன்குடி மக்கமான அவர் ஊழியத்தின் உறதி ஸ்தலமாய் சேர்ந்தது. என்றுஞ் சலிக்காது எப்போதும் மிணைக்காது நன்றான தொழிலை நலமாய்ச் செய்தார். கிறிஸ்து மார்க்கத்தைத் திறமாய் ஊன்றினார். சிறத்தை என்னும் பூவில் பக்தி என்னும் மணம்பூட்டி, வெறுப்புஞ் சலிப்புமில்லாது வெகு ஆத்திரத்துடனும் லவராக்கியத்துடனும் கிறிஸ்துவைப் பற்றிய அறிவைப் புகட்டினர். அவாது வண்ணத் திருமேனியும், பாவம் போக்கும் டல்லழகும், கோபம் போக்கும் குளிர்ந்த பார்வையும் பார்ப்போர் மனதைப் பரவசமாக்கின. பக்தி யொளியைப் பௌர்ணமிபோல் பிரகாசிக்கச் செய்தனர். அறிவுக் கடலில் ஆனந்த அமிர்தமுண்டாக்கிய ஐயர் தயவை அனைவரும் தேடினர்.

ஆடு மேய்க்கும் இடையன்குடியெனக் காடாய்க் கிடந்த அந்த இடம் ஜடப்பிரகாரமும் ஆத்மப் பிரகாரமும் செந்தாமரை போல சிறந்து விளங்கினது. படிப்பிலே பாண்டித்தியமும், பக்தியிலே பலமுமுள்ள இந்த மேய்ப்பனை அவர் மந்தையின் மத்தியிலே கண்டவர்கள் அவருண்டாக்கிய அற்புத செயல்களைக்கண்டு ஆனந்தகாகோஷ்டம் செய்வார். அவர் திவ்விய பணிணிடை இயற்றி வரும் காலத்தில் கிறிஸ்தவ சமுதாயம் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய்ப் புரோகதி யடைந்துவந்தது. அகன்ற அறிவும், அரிய ஆராய்ச்சியுமுள்ள கர்த்தகர்த்தாவாகவும் அவர் செய்திருக்கும் பணிணிடை மிகவும் சிரேஷ்டமானது.

தமிழ்ப்பாஷையில் சாதுரியமான பிரசங்கியா யிருந்த அவர் தென்னிந்தியாவின் சீர்திருத்தத்திற்கென்றே தமது சர்வ சாமர்த்தியங்களையும் வியயஞ் செய்தார்.

கால்ட்வெல் அதிபகர்.

இந்த மகான் 1877-ம் வருஷம் அத்தியந்தர் அபிஷேகம் பெற்றார். இதற்கு முன்னதாக 40 வருஷமாய் தாம் நிறுஸ்துவின் தாசனுய் எவ்விதம் உழைத்து வந்தாரோ அவ்விதமாகவே கண் காணியரான பின்னும் ஊக்கமாய் உழைத்து உண்மையான பக் தரைச் சேர்த்து உயர்ந்த பதவிக்குக் கொண்டு வந்தார். இவ்வித மாய் நம் தேசத்தின் ஆத்ம வாழ்வுக்காக 54 வருஷமாக தமது ஜீவியத்தைத் தத்தம் செய்து 1892-ம் வருஷம் பழனிமலையில் பர லோக ப்ராப்தியானர். அவரது விருத்தாப்பிய நிலையில் தமது சொந்த தேசம் நாடிச் செல்லும்படி அவரது நண்பரான பலடாக் டர்கள் வெகு பரிவுடன் வேண்டிக்கொண்டனர். அவரோ "என் தேசம் இந்துதேசம், என் ஜனங்கள் இடையன் குடியிலிருக்கின் றனர். அங்கு என் ஜனங்களின் மத்தியில் நான் கட்டிய தேவா லயத்தில் நான் சமாதியாக வேண்டும் என்பது ஒன்றே எனது விருப்பம்" என்று பலதடவைகளில் சொல்லி வந்த பிரகாரம் பழ னியிலிருந்து அவர் பிரேதத்தை இடையன்குடிக்குக் கொண்டு போய் அங்குள்ள தேவாலயத்தில் வெகுமகிமையுடன் அடக்கஞ் செய்தனர்.

அநேக போதகன்மார் அவர்காலத்தில் பிறந்து வளர்ந்து பட் டம் பெற்று அவரைத் தங்கள் ஆலோசனைக்காராகவும் அன்பான பிதாவாகவும் மதித்து வந்தார்கள். இந்துதேசத்தோடும் இந்து தேச ஜனங்களோடும் அவர் உள்ளம் பலமான பாசத்தில் கட்டுண் டிருந்தபடியால், அவர் இந்தியாவை அந்திய தேசமென்றும், இந் துக்களை அந்திய தேசத்தாரென்றும் கனவிலும் நினைக்கவில்லை. அறிவும் அறமும், விசுவாசமும் விற்பன்னமும், ஊக்கமும், உப காரமுமுள்ள இப்பேர்ப்பட்ட அநேக போதகன்மாரைத் தேவன் ஐரோப்பியருக்குள்ளும் சுதேசிகளுக்குள்ளும் எழுப்பி யருளுவா ராக.

தெய்வநீதிக்கும் தியபாவிக்கும் ஒப்புரவுண்டாக்கும்படி தேவ மனிதனாக இயேசுகிறிஸ்து உலகில் அவதாரமெடுத்தார். இவர் தெய்வமாயிருந்தும் தமது தேவமகிமையைக் கனிந்து வைத்து விட்டு எழை மனிதனுகி நாம் படவேண்டிய கஸ்திக எனைத்தை யும் உத்தரித்து சாதாரண மனுஷனைப்போல் சிலுவையில் மரிக்கத் தம்மை ஒப்புக்கொடுத்த அனுதாபங் காட்டிய அன்பின் ஆழ த்தை இந்த மகாத்மா ஆராய்ந்தறிந்தார்.

அன்பே சிவம், தேவன் அன்பின் மயமாகவே யிருக்கிறார் என்பதை அறிவாளர் தெளிந்த முடிவு. அன்பிற்கு அடையாளம் கொடுத்தல்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நசட்டுப்போகாமல் நித்திய ஜீவனை யடையும் படிக்கு அவனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

தேவன் எழைப் பாவிகளாகிய நம்மில் அன்பு கூர்ந்ததால் நமது பாவத்தின் பலனைச் சுமந்து தீர்க்க தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்தார் என்ற தெய்வ அன்பின் ஆந்திரீகத்தை அறிந்த இவர் (Love alone can repay Love) 'அன்பிற்கு ஈடு அன்பே' என்றுணர்ந்து தமது சகோதரியா மூலத்தியின் அன்பைப் பிரகிக்க மாக்குவதற்காக தமது வாலிபப் பிராயத்திலேயே தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் தேவஊழியத்திற்கென்று அர்ப்பணஞ் செய்தார்.

இவரைப்போல் தென்னிந்தியாவின் ஈடேற்றத்திற்காக உழைத்து உலகாபரணத் துறந்து உழைத்த உத்தம புருஷர் பலருளர். Revd T. Adamson, ஆடம்சன் ஐயர், Revd. Kernis கேனிஸ் ஐயர், Dr. Bower டாக்டர் பவர், Revd. Thomas தாமஸ் ஐயர், Revd. Walker உவாக்கர் ஐயர், Revd. Margoschios மர்காஸ் ஐயர், Bishop Stracheon ஸ்டிரான் அதிபரியகூர், Dr. Pope போப் ஐயர், Revd. Father Beschey வீரமாமுனிவ ரென்ற பெஸ்கிமியார் முதலிய அனந்தம் ஐரோப்பியர்கள் தற்காலத்தில ஆந்திருஸ் பாதிரியார் (Revd. Andrews) இந்தியர் களுக்கு சுயராஜ்யம் கிடைப்பதற்காகவும் இந்தியாவில் ஜாதிவித் தியாசம் ஒழிந்து சகோதர பாந்தமும் சமரசமும் ஏற்படுவதற்கா கவும் மஹாத்மா காந்தியுடன் சேர்ந்து உழைத்து வருகிறார். தாங்களடைந்த அனுகூலத்தைப் பிரஸ்தாபித்து ஆத்மாக்கள் ஈடேற்ற விரதம் பூண்டு சுயசௌகரியத்தையும், இன ஜனத்தையும், அந்தஸ்தையும் வெறுத்து சகிக்கக்கூடாத வெயிலுள்ள மணற் பூமியாகிய திருநெல்வேலி நாட்டில் தன்னய மறுப்பின் மேன்மை யையும் தெய்வ ஊழியத்திற்காகத தனனைக் கையளித்து உடல், உயிர், பொருள் யாவையும் கதகதஞ் செய்வதன் லாபத்தையும் திருஷ்டாந்தப்படுத்தி யிருக்கின்றனர்.

தேவநாமசங்கீர்த்தனம்,

இயேசு மஹாதேவா.



நம் நாட்டினர்களுக்கு

உலம் பல விளைவிப்பதென்னும் காட்டங்கொண்டு
உடல், பொருள், ஆவி மூன்றையும் ஜன ஆதிக்கத்திற்கென
பாரதமாதாவின் திருவோலக்கத்தில் அர்ப்பணஞ்செய்து
தரணியா யிருக்கும் பாரதபூஷணம்

டாக்டர், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர்.



இந்தியாவின் கவிச் சக்ரவர்த்தியும்
பாரதமாதாவின் அபிமான பிரத்தியக்ஷ புத்திரருமாகிய

ஸர் ரவீந்திரநாத் டகோர்.

டாக்டர் ஸர் சுப்பிரமணிய ஐயர்.

அறமும் மறமும் மிக்க வள்ளலார் பலரும் வசித்துவந்ததும் ஈழும்எடுப்பு மில்லாததுமான மதுரைமா நகரின்கண் கி. பி 1842-ம் வருஷம் நீதி மணி ஐயர் ஜனனமானார். சுப்பிரமணிய ஐயர் இரண்டு வயதா யிருக்கையில் அவர் தகப்பனார் சூராவளி சுப்பய்யர் உயிர் துறந்தார். சிறு பிராயத்தி லேயே படிப்பில் முதன்மையுள்ளவராயிருந்ததால் பல பரிசுகளும் மாதம் ரூபாய் 5. உபகாரச் சம்பளமும் கவர்ன்மெண்டாரிடம் பெற்று, படித்து பிரவேச பரீக்ஷையில் கீர்த்தியுடன் தேறினார். 17 வயதில் கலெக்டர் ஆபீ சில் 0 ரூ. சம்பளத்தில் உத்தியோகம் புரிந்துகொண்டே சட்டப்பரீக்ஷைக் குப் படித்து முதல்வகுப்பில் தேறினார் தமது 22-ம் வயதில் எவ் ஏ. பரீட் சையும், 24-ம் வயதில் பீ. ஏ. பரீட்சையும் தேறி சென்னைக்கேகி அங்கே சிலகாலும், பின்பு மதுரையிலும் வக்கீல் வேலை பார்த்து விவேகத்தையும், நியாயவாதங்களையும், சூட்சம அறிவையும் விளக்கிக் காட்டினார். பின்பு 10-வருட காலம் முனிசிபல் கமிஷனராகவும், ஜில்லா போர்ட் மெம்பரா கவு மிருந்துவந்தார். இவர் மதுரை நகருக்கு சேர்மனாக வேலைபார்க்கை யில் பொன்னின் சூடத்திற்குப் பொட்டிட்டதுபோல் மதுரை நகர் நடுவில் சிங்காரத் தோட்டமொன்று ஏற்படுத்தினர். தர்ம ஔஷதாலய சபை ஒன்று ஸ்தாபித்தார். மேலும் வைகைநதி பாலங் கட்டவும் ஏற்பாடுசெய் தார் 1884-ம் வருஷத்தில் சென்னையில் சட்டசபை மெம்பராக நியமித் தார்கள். அதே வருடத்தில் தமது வாழ்க்கைத் துணை நலமாயிருக்க அவ ரது மனைவியார் மணிஐயரைத் தன்னந் தனியே வி[illegible]யிர் துறந்தார். இக்காலத்தில் இவர் சதா தத்துவ நூல்களையும், வேதாந்த நூல்களையுமே ஆராய்ச்சி செய்து வந்தார். பிரஹ்மஞான சங்கத்தில் சர்வ மத சமரச கொள்கை யிருப்பதைக் கண்டு அதில் சேர்ந்தார்.

1888-ம் வருடத்தில் சென்னை உயர்தர நியாயஸ்தலத்தில் சர்க்கார் வக்கீலாக நியமனம் பெற்றார்.

1885-ம் வருடத்தில் காங்கிரஸ் மகாசபையை ஸ்தாபித்தவர்களில் சுப் பிரமணிய அய்யரும் ஒருவர். அன்றுமுதல் இன்றுவரை தன் மனதிலிருக் கும் எண்ணத்தைத் தாராளமாய் எவர்க்கும் பயப்படாமல் உள்ளபடி உரை த்து வருவதுடன், அதிகார வர்க்கத்தார்கள் நியாயவரம்பு கடந்து செய்யும் காரியங்களையும் தவறுதல்களையும் வெகு கண்டிப்பாய் எடுத்துக் கூறுகிறார். வித்யா விற்பன்னரும் கல்வியினபிவிர்த்திக்குப் பாடுபடுபவருமாகிய சுப் பிரமணிய ஐயர் 1885 ம் வருடமுதல் 22 வருடகாலம் சென்னை சர்வகலா சங்கத்தின் அங்கத்தினரு ளொருவராய் உழைத்து வந்தார் இளம்பிராய முள்ள மாணவர்களுக்கு அதிகக் கடினமும் அளவுக்கு மேற்பட்டதுமான பாடங்களைப் படிக்கச் செய்வதால் சுகவீனமும், புத்தி கதிமாற்றமும் உண் டாகுமாதலால், படிப்பின் திட்டங்களைக் குறைக்க வேண்டுமென்று அடிக் கடி எச்சரித்திருக்கிறார். உழைப்பும் சாமர்த்தியமுமுடையவ ரானதால் சர்வகலா சங்க உதவி அத்தியக்ஷராக (Vice-Chancellor) நியமனம்பெற்ற முதல் இந்தியர் இவரே.

2908-ம் வருடத்தில் சட்டநிபுணர் பட்டம் (Doctor of Laws) அவ ருக்குத் தரிக்கப்பட்டது. 1896-ம் வருடத்தில் நடந்த வித்யா சங்கத்தி

ற்கு நாயகராக அவர் பேசியபொழுது "கற்றவர்கள் கைத்தொழில்கள், சமஸ்கிருதபாஷை, சுயபாஷை முதலியவற்றை விர்த்திசெய்து வருவது கடமை என்றும், விர்த்தியார்த்திகள் அடிக்கடி தேசாந்தரம் போவதனால் பலநாட்டின் நிலைமைகளை யறிந்து தமக்குண்டாயிருக்கும் குற்றம் குறைவுகளையும் நிவர்த்திக்கப் போதுமான முகாந்தரம் ஏற்படுமென்று போதித்தார்.

நீண்ட அனுபோகமும், திரண்ட ஞாபகசக்தியும், அகண்ட காருண்யமும் பொருந்திய சுப்பிரமணிய ஐயர் 1895-ம் வருடம் சென்னை உயர்தர நியாயஸ்தலத்திற்கு நியாயாதிபதியாக நியமனம் பெற்றார்.

அக்காலத்தில் 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போலமைந்து ஒருபாற் கோடாமை சான்றோர்க்கணி" என்னும் பெரியோரின் வாக்கியப்படி வாதி பிரதிவாதிகளால் அறிவிக்கப்பட்டவற்றை முறையாலுள்ளபடி யறிந்து மனச்சாட்சிக்கு விரோதமின்றி தைரியத்துடனும் நிதானத்துடனும் நியாய தீர்ப்புச் செய்தார். இவருடைய நன்முயற்சியையும் ஊக்கத்தையும் கண்ட கவர்ன்மெண்டார் இவருக்குத் திவான்பஹதூர் பட்டமொன்றும், இந்திய ராஜ்யாதிபத்தியத்தின் கௌரவ தளகர்த்தர் என்றபுலப்படும் (K. C. I. E.) பட்டமொன்றும் கொடுத்தார்கள்.

இவர் பிரதம ஜட்ஜியாய் நியமிக்கப்பட்ட 1900-வருடப்பிறப்பு தினத்தன்று "நைட்ஹூட்" என்கிற பிரபு பட்டமும் பெற்றார். 1907-ம் வருடம் ஹைக்கோர்ட் ஸ்தானத்திலிருந்து வேலையைவிட்டு பென்ஷன் பெற்றார். மாதம் ஒன்றுக்கு ரூ. 1100 பென்ஷன் பெற்று வருகிறார்.

கீழ்நாட்டுப் படிப்பும் மேல்நாட்டுப் படிப்பும் ஒன்றையொன்று தழுவ வேண்டும். சாத்தியமான புராதன கருமங்களை விலக்கி காலத்தையொட்டிய ஆசார அனுஷ்டானங்களைக் கைக்கொண்டு நவீன கருமங்களை நன்கு அனுஷ்டித்தல் நன்று என்பதே இவர் துணிவு. இந்தியாவை யொத்த அனேக நாடுகள் கல்வியிலும் ஐசுவரியத்திலும் தினேதினே விர்த்தியாகிக் கொண்டு வருகையில் நாம் மட்டும் சமுத்திரம் தாண்டக்கூடாது. பால்ய விதவா விவாகம் செய்யக்கூடாது. பிரௌடா விவாகஞ் செய்யக்கூடாது. சமபந்தி போஜனம் கூடாது. என்று சாதித்துச் சண்டை சச்சரவு செய்தல் சரியன்று. எடுத்ததற்கெல்லாம் சாஸ்திரமென்றும் கொடுத்ததற்கெல்லாம் ஸ்மிருதிவாக்கியமென்றும் கூறி பழைய சாஸ்திரங்களையே அனுசரிப்பது மின்சார வண்டிகள், ஆகாயவிமானங்கள், முதலிய துரிதவாகனங்கள் எற்பட்டிருக்கும் இக்காலத்தில், இரட்டைக்காளை கட்டிய மூலக்குச்சு வண்டிகளில் ஏறிச் செல்ல சம்மதிப்பதற் கொப்பாகும். காலசக்கரம் எப்பொழுதும் மாறிக்கொண்டே வருகிறது. நேற்றைய ஆசாரம் இன்றைக்கில்லை. நேற்றுக் குடிசையா யிருந்த வீடு இன்று உப்பரிகை ஆகின்றது. நாயும், நரியும் ஓடி ஊளையிட்டிருந்த ஊர் இன்று யானையும், பரியும் அம்பாரியிட்டுப் பவனிவரும் நிலைமையிலிருக்கின்றது. முப்பது வருடங்களுக்குமுன் காதிலுங் கேட்டிராத ஜப்பான் இன்றைக்குச் சகல ஐசுவரியத்துடனும், வீரத்துடனும், கீர்த்தியுடனும் விளங்குகின்றது. கல்வி

கேள்விகளற்றுக் கானகத்தே திரிந்து ஓடின பிலிப்பைனர், நீக்ரோவியர் காபிரிகள்முதலிய நாகரீகமற்றஜாதியார்கள் இந்தியர்களின் நிலைமையைக் கண்டு ஏளனஞ் செய்கின்றார்கள். பிரபஞ்சமனைத்தும் இங்ஙனமிருக்க, இந்தியா மட்டும் பழைய கதையைக் கொண்டிருத்தல் அழகல்ல வென்பதைக் கண்ட சுப்பிரமணிஐயர் நாட்டை உபிவிர்த்தி செய்வதற்கு வைதிகர்கள் அவசியமென்பதைக் கொண்டதான், இவர்களைக் காஞ்சிபுரத்தில் 1912-ம் வருடத்தில் வரவழைத்துப் பெரிய பரிஷத் ஒன்று கூட்டினார். இதல்லாமல் தர்மரக்ஷண சபையொன்றும் இவர் ஸ்தாபித்தார். யோகாப்பியாசத்தில் இவருக்கு வெகு பிரீதி. இவர் அடிக்கடி கதவைப் பூட்டிக்கொண்டு ஒருவருடனும் வாய் பேசாமல் நாள் முழுவதும் இருப்பது வழக்கம். தான் உண்டு, தன் அறையுண்டு, தன்னுடைய தியானமுண்டு என்றிருப்பார் இவர். சரியான வேளையில் போஜனஞ் செய்யாமலும், நித்திரைகொள்ளாமலும் சதா யோக நிஷ்டையிலே யிருப்பது வழக்கம், ஆரம்பத்தில் இவர் காங்கிரஸ் மூலமாகவே ராஜ்ய விஷயங்களிலும் போராடி வந்த போதிலும், மத்தியில் வெளிப்படையாக ராஜ்ஜிய விஷயங்களில் ஊடாடாதவராயிருக்கவேண்டியது கோர்ந்தது; என்றாலும் கொழுந்துவிட்டெரியும் அக்கினியின்மேல் சாம்பலை எவ்வளவு கனமாகப் போட்டு மூடியிருப்பினும் காற்று வரும் தறுவாயில், அக்கினி சுடரென்று கிழம்பித் தன் சுவாலை வீசுவதுபோல் ராஜ்ஜிய புரட்சி வந்தவுடன் இவர் வெளிக்கிளம்பினார். இந்த ராஜாங்கமானது எவ்வளவு தூரம் குடிகளது சுதந்தரத்தில் மதிப்பு வைக்கிறதோ அவ்வளவு தூரந்தான் அந்த ராஜ சட்டங்களிலும் நமக்கு மதிப்பிருக்கும். நமக்கே உரியதான பயிற்சி, நாகரீகம், மனோராஜ்யம் ஆகிய இவ்வுணவுகளைக் கொண்டு பிரபஞ்ச ஜீவாத்மாக்களுக்கு உரிய உரிமைகளை நன்றாய் அடையவேண்டும் என்கிற ஆவலும் ஜனங்களுக்கு உண்டாய்விட்டது. சுயஆட்சிச் சங்கம் காளுக்கு நாள் வளர்மதியம்போல் பிரகாசிக்கத் தொடங்கிற்று. காட்டுத்தீபம்போல் நாடெங்கும் பரவிற்று. குடிகளுக்குச் சில சுதந்தரங்களிருக்கின்றன. அவை இராஜாங்கத்தாரால் உண்டாக்கப்பட்டதல்ல. இராஜாங்கம் நிலைத்திருப்பதற்கு அவை காரணமாய் நிற்கும். அந்தச் சுதந்தரங்கள் யாராலும் சிருஷ்டிக்கப்பட்டதல்ல. அவை சுயமாகவே உண்டானவை. அவை ஜகத்காரணரான பகவானால் கொடுக்கப்பட்டன. நமக்குக் கைகால் முதலிய அவயவங்களையும் புத்திக் கூர்மையையும் கொடுத்திருப்பதுபோல உலக வாழ்க்கையில் நமக்கென்றே [illegible]களும் கொடுத்தனுப்பி யிருக்கிறார். அந்தச் சுதந்தரங்களின் [illegible]ங்கள் பொன்முடி தரித்த பூபாலரிடத்திலிருந்து வந்ததல்ல. அரசர்க்கரசராய் ஜகத்காரணராய் விளங்கும் பகவானிடத்தினின்றே வந்தனவு. ஆகவே நமது குழப்பம் நியாயத்திற்கு அடங்கியதாகவே யிருக்கும்.

நமது மனமானது கவர்ன்மெண்டினின்றும், இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டிலிருந்தும், டில்லியிலும், சிம்லாவிலும் அமைந்துள்ள ராஜாங்கத்திலிருந்தும் திரும்பிவிட்டது. நமது மனமானது பசியினாலும், வியாதியினாலும் வருத்தமடைந்து வயிற்றிற்குக் கஞ்சியும் கட்டுக் கந்தையுமின்றிப் பலகாலமாய் வருந்தும் 31½ கோடியடங்கிய நமது இந்திய சகோதரர்களிடம் திரும்பிவிட்டது. நமது மனமானது அப்படித் திரும்பி அடையப்போகும் பலனை உளனங்கை நெல்லிக்கனிபோல் காண்கிறோம். அதை இது

வரையி வில்லாமல் நமக்குண்டாயிருக்கிற தேசாபிமானமும் சகோதரவாஞ்சையுமே நன்றாய் எடுத்துக்காட்டுகிறது. ஜனசங்கையில் அதிகரித்திருப்பினும், கஷ்டத்திலாழ்ந்தியும் சோறு கூறைக்குக் கதியின்றி வருந்தும் நமது சகோதர கோடிகளில் இதுவரையில் கண்டிராத ஒருவிதமான நம்பிக்கையையும், பலத்தையும் காண்கிறோம். இப்பொழுது கிளம்பியிருக்கும் புதிய கிளர்ச்சிக்குக் காரணம் அந்த நம்பிக்கையே. இக்கப் புதிய கிளர்ச்சிக்கு ஆதாரமாய் நிற்பது அந்த நம்பிக்கையேதான். இந்த நம்பிக்கையை நனகறிந்ததும் சுப்பிரமணிய ஐயர் இதர விஷயங்களில் சிரானசை கொண்டு ஜன அபிவிர்த்தியை நாட விரதம் பூண்டனர்.

சாமிவேலின் சிங்கமார்க்கு

சிந்தாமணி பாரிமள கூந்தல் தைலம்.



இந்த மகா அருமையான தூதலம் கூந்தலை வளரச் செய்வதில் மிக ஆச்சரியமான குணமுடையது. இதைக்காலை மாலை இருவேளை களிலும் தடவி வர மயிர்க்கால் களுக்குக் குளிர்ச்சியையும் போஷிப்பையும் தந்து, கூந்தலை அதிவிரைவில் கருமையாயும், செழிப்பாயும் அடர்த்தியாயும் வளரச் செய்து, கண், மூளை, இவைகளுக்குக் குளிர்ச்சியையும் தந்து, பித்த மயக்கம் கண்ணில் நீர்வடிதல், சிரோக காந்தல் முதலிய ரோகங்களையும் நிவர்த்தி செய்யும். சுகந்த வாசனையுள்ள இந்தத் தைலத்தை உபயோகித்தவரின் பருவம் வருமுன் பித்தத்தால் நரைத்த மயிர்களும் காளைடவில் கறுக்கும்.

விலை அணை 12.

சாமிவேல் வைத்தியசாலை,

தென்காஞ்சி, இரங்கோன்.

மஹாத்மா காந்தி.

மனுஷர் உங்களுக்கு எவைகளாச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். —கிறிஸ்து.
மத்தேயு. 7: 12.

"எல்லாரும் இவ்வுலகில் இன்புற்றிருப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."
தாயுமானவர்.

மோகனதாஸ் கரீம் சந்திரகாந்தி ஓர் மஹாத்மா. சன்னியாசி குத்தவையாகிய அஹிம்ஸா தர்மத்தை ராஜ்ஜிய காரியங்களில் உபயோகப்படுத்தி ஜயம் பெற்று வரும் தற்காலத்திய தீர்க்கதரிசி. பரிசுத்த குணமும் கருணையின் பிரகாசமும் நிறைந்த முகவசீகரமும் அடைந்த தெய்வீகக் குணாங்களோடு திகழ்ந்து விளங்கிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி—"அவருடைய எதிரிகளும் அவரிடத்தில் குற்றஞ் சாட்டத் தகுதியில்லை" எனக் சொல்லியிருப்பதுபோல் அதிசயிகளும் புகழும் மன உறுதியடைந்த மஹான். மத்-27, மார்க் 15. லூக் 23. யோவான் 18: 38.

இவர் பிறந்தது கி. பி. 1869-ம் வருஷம் அக்டோபர் மாதம். இவர் பாட்டனாரும் தகப்பனாரும் கத்தியவார் மாகாணத்தைச்சேர்ந்த போர்பந்தர் என்ற சமஸ்தான ராஜாங்கத்தில் மந்திரிவேலை பார்த்தவர்கள். அவ்விருவரும் மகா சத்தியவந்தர்கள். மிகுதியான மதிநுட்பமுள்ளவர்கள்.

மோகனதாசருடைய தாயார் புத்திக்கூர்மையும் தர்மசிந்தையுமுடைய ஒரு ஸ்திரீ ரத்னம். அந்த அம்மையின் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. அவர் வசித்தும மதுரத்தில் அஷ்டலட்சுமிகளும் குடிபுகுந்து ஆசுகத்தால் யாவரையும் பூரிக்கச் செய்வார்கள். இந்தத் தாயாருடைய அன்பே மோகனதாசரைத் தியாகவழியினில் செல்லவொட்டாமல் தடைசெய்யப் பெருந்தூண்டுகோலாக இருந்ததென்பது பின்னல் தெரியவரும்.

காந்திக்கு 12 வயதிலேயே கலியாணமாகிவிட்டது. பாலியத்திலேயே விவாகம் நடந்தும் வழக்கத்திலுலேதான் இந்திய ஜன சமூகம் இவ்வளவு தாழ்ந்த ஸ்திதிக்கு வந்ததென்பது காந்தியின் அபிப்பிராயம். இவருடைய பத்னி கஸ்தூரிபாயும் மிகுந்த வள். தேசாபிமானத்தை முன்னிட்டுத் தன்புருஷன் அனுபவித்துவரும் கஷ்டங்களை யெல்லாம் தானும் அனுபவிக்கத் தயாராகவே யிருக்கிறாள். காந்தியின் ஜெயில்வாசங்களில் தானும் பங்கெடுத்

கொள்ள முடியவில்லையே யென்பது மாத்திரமே இந்தப்பதிவிரதா சிரோன்மணியின் ஒரே குறை. தன் மூத்தகுமாரனுகிய அரிலால் எண்பவனை ஜெயிலுக்கு அனுப்பியதில் அவள் காட்டிய தைரியத்தின் மூலமாய் அவளின் தேசபக்தி விளங்கும்.

நமது காந்தி 17 வயதில் மெற்றிக்குலேஷன் என்ற பிரவேச பரீட்சையில் தேறி லண்டன் நகரத்தில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கப்போக எண்ணங்கொண்டார் தாயாருக்கு அனுப்பச் சம்மதமில்லை. தாயார் உத்தரவு கொடாவிட்டால் நம்முடைய மேலான லாபங்களெல்லாம் வீண்போவதாயிருக்கிறதே என்று பிள்ளையும், உத்தரவு கொடுத்தால் சீமையில் பிள்ளை கெடாமலிருக்க என்ன செய்யலாமென்று தாயும் ஆலோசிக்கலானார்கள். சில நாட்கள் இவ்விதம் கழிந்தபிறகு கடைசியில் ஒரு முடிவு ஏற்பட்டது. தெய்வத்தின் முன்பாக ஒருவிதமாகச் சத்தியஞ் செய்யச் சொல்லிவிட்டு இங்கிலாந்திற்குப் போக உத்தரவு கொடுப்பதென்று தாயார் தீர்மானித்தாள். லண்டன் நகரத்தில் இருக்கும் வரையிலும் மாமிசபோஜனம், சுராபானம், பின்மார்க்கஸ்திரீயின் சகவாசம்; இம்மூன்றையும் தியாகம் செய்வேனென்று காந்தியைச் சத்தியஞ் செய்து கொடுக்கச் செய்தாள். அவ்விதமே காந்தியும் செய்தார். இயற்கையிலேயே சத்தியந் தவறுதலவராகிய மோகன்தாஸ் காந்தி தெய்வத்தின்முன் சத்தியஞ் செய்து கொடுத்தால் கேட்கவும் வேண்டுமா? அதிலும் தாயார் விருப்பத்திற்காக இவ்விதம் செய்திருக்கிறார். பெற்றோர்களிடம் நமது காந்திக்கு இருக்கும் அன்பிற்கு அளவில்லை. தாயாரிடத்தில் ஆணையில் செய்து கொடுத்த சத்தியமே லண்டன் பட்டணத்திலுள்ள தீமைகளுக்கு அவரை விலக்கிக் காத்தது. அங்குள்ள டாம்பீகமான வழக்கங்களை சிறிதகாலம் அனுபவித்துப் பார்த்து அவைகளில் வெறுப்படைந்தார். மனிதன் தன் சௌகரியங்களை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் குறைத்தே உயிர் வாழவேண்டுமென்பது அவருடைய கொள்கையாயிற்று. தன் போஜன பதார்த்தங்களைத் தன் கைகளாலேயே ஒரு சிறிய எண்ணெய் அடுப்பில் தயார் செய்துகொள்வார். அதேக சமயங்களில் ஒருவேளை போஜனம் மாத்திரமே இளப்பில் சாப்பிடுவார். மாதச் செலவுகளை நான்கு பவுனில் அடக்கஞ் செய்துகொண்டார். மதவுண்மைகளைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவும் அதிகரித்தது. உண்மையை அறிய அதிக ஆவலுண்டாயிற்று. அனந்தம் கிறிஸ்தவப் பாதிரிமார்களிடம் பழகிவந்தார். கிறிஸ்தவ யோகீஸ்வராகத் தம் காலத்தைச் செலவிட்ட ருஷியா தேசத்துப்பிரபுவாகிய டால்ஸ்டாய் தற்காலத்தியாகரீகத்தை

கண்டித்துப் பேசி மெய்யான கிறிஸ்தவ பக்தனிடங் காணவேண்டிய மனத்தாழ்மை, சகோதரவாஞ்சை, ஜீவகாருண்ணியம், சுயநலவெறுப்பு, பொதுநல விருப்பு, நித்திய ஜீவசிரீடத்தைப்பெறும்படி பால்டஹராமுனிவர் போன்ற தபோநிதிகளை தமது சரீரத்தை அடக்கியாண்டதை முதலிய பல விஷயங்களை கதியருபயோகஎழுதி வெளியாக்கியிருப்பதைப் பாராயணஞ் செய்துகொண்டு வருவது வழக்கம். பகவதகீதையையும் இக்காலத்திலேதான் படித்து அதின் சூட்சும அர்த்தங்களையும் தெரிந்துகொண்டார். இவ்விதமாக லண்டன் நகரில் மூன்று வருஷகாலமிருந்து பாரிஸ்டர் வேலைக்காக வேண்டிய பயிற்சியையும் ஆத்மபோதனைகளையும் அடைந்து கடைசியில் இந்தியாவிற்குத் திரும்பி வந்து வக்கீல் தொழிலிலேயே அமர்ந்து பதினெட்டுமாதகாலம் இந்தியாவிலிருந்தார்.

தென்ஆப்பிரிக்காவில் ஒரு வருஷக்காலமிருந்து அங்குள்ள ஒரு இந்திய வியாபாரக் கம்பெனியின் வியாஜ்ஜியத்தை நடத்துவதாக ஒப்புக்கொண்டு அங்கு சென்றார். துறைமுகத்திலிறங்கியவுடன் எல்லாம் பார்ப்பதற்கு ரமணீயமாகவே தெரிந்ததாம். ஆனால் அங்குள்ள வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை நாகரீகமற்ற தாழ்ந்த வகுப்பினரெனக் கருதி சட்டத்தின் மூலமாகவே அடிமைகளைப்போல் நடத்துவதைக் கண்ணுற்றார். ரயில்வே, வாடகைவண்டி முதலியவைகளில் பிரயாணம் பண்ணுவது கஷ்டமாகிவிட்டது. எல்லாவற்றையும் சகித்தார். இதற்குமுன் இவருக்கிருந்த சொற்ப அகந்தையும் நீங்கிற்று. மனைபலம், பொறுமை, அடக்கம் முதலியவற்றைக் கையாடி ஆத்மசக்தியை அதிகரிக்கச் செய்தார். நடுத்தெருவில் போகும்போது ஒரு காவலாளன் இவரைக் காலாலுதைத்தான். பொறுமையுடன் சகித்துக்கொண்டு போனார். துன்பங்களைத் தாங்குவதற்குப் போதுமான சக்தியை உண்டாக்கிக்கொள்ள வேண்டும் என்பதே இவருடையகொள்கை.

இந்தக் காலத்தில்தான் இவர் கிறிஸ்தவ மதத்தின் பெருமைகளையும், மேலோட்டத் தத்துவங்களையும் நன்றாய்ப் படித்துத் தெரிந்துகொண்டது. ஐரோப்பாக் கண்டத்திற்கே உண்மையான மகரிஷி யென்று பெயர்பெற்றுக் காலஞ்சென்ற கௌண்ட் லியோ டால்ஸ்ராய் என்பவரின் தத்துவங்கள் உயர்ந்தவைகளென்பது இவருடைய அபிப்பிராயம். இன்னும் அவருடைய கல்வித்திறமையைப் பற்றியும் சிலாகித்திருக்கிறார். இவருடைய சத்தியநிஷ்டையும் உண்மையை அறிய இவர் கொண்டிருக்கும் ஆவலுமே அந்தத் தென்ஆப்பிரிக்காவில்கூட இவருக்கு அவர் ஐரோப்பிய கனவான்களுடைய சிநேகத்தை உண்டுபண்ணின.

தென்ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்குண்டா யிருந்த சுதந்தரங்களையும், சுகங்களையும் பல சட்டங்களின் மூல மாக குறைத்துக்கொண்டே வரப் பிரயத்தனஞ் செய்தார்கள். இந்தத் தென்ஆப்பிரிக்கா வெள்ளையர்களுடைய எண்ணங்களை யெல்லாம் மோகனதாஸ் அங்குள்ள இந்தியர்களுக்கு எடுத்துக் காட்டினர். அதற்குமுன் அஞ்ஞானக் கடலில் ஆழ்ந்திருந்த கண் கள் திறக்கப்பட்டன. தைரியமும் அவர்களிடம் விர்த்தியாக ஆரம்பித்துவிட்டது. காந்தியின் முயற்சியாலேயே தெற்றல் இந் தியர்களின் காங்கிரஸும், கல்வி அபிவிர்த்திச் சங்கமும் ஏற்பட்டன. ஒற்றுமையின் பலத்தைப்பற்றி இந்தியர்களுக்கு எடுத்துச் சொல்லுவதும், அவர்களுக்காகவே பல சங்கங்கள் ஏற் படுத்தி பல காரியங்களைச் செய்வதும், இதற்கிடையில் தம்மு டைய வக்கீல் தொழிலைப் பார்த்துக்கொள்வதும் இப்படியே தன் காலமுழுமையும் செலவு செய்து மனப்பூர்வமாகப் பாடுபட்டு வந் தார். தென்ஆப்பிரிக்காவில் இந்தியர்களை வெள்ளையர்கள் கேள்வி முறையின்றி கொள்ளையடித்து வருவதாக காந்தி இந்தி யர்களுக்குச் சொன்னார் என்று ராய்ட்டர் ஏஜண்டுகள் தந்திமூல மாய உலகம் முழுவதும் தெரியப்படுத்தினார்கள்.

தெற்றல் முழுமையும் காந்திக்கு விரோதமாகக் கிளம்பிவிட் டது. மேலும் இந்தியர்களைப் பற்றி அவதூறான வதந்திகளும் பரவ ஆரம்பித்தன. பல உபத்திரவங்களும், சட்டங்களும் ஏற் பட்டன.

அதிகாரிகளுக்கு காந்தியைப்பற்றி வெறுப்பும் பயமுமுண் டாயிற்று. வியாபாரிகளான வெள்ளையர்களுக்கு இந்தியர்கள் தமது சம்பாதனையைக் கெடுத்து வருகிறார்களே என்ற அருவருப் பும் போட்டியும் உண்டாயிற்று. இந்தியர்களுக்கு அதிகாரிகளைப் பற்றிய அவநம்பிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வந் தது. இந்தியர்களிடம் காந்தியின் செல்வாக்கு செல்லக்கூடா தென்று தம்மால் ஆனமட்டும் பிரயத்தனஞ்செய்து பார்த்தார்கள். பலிக்கவில்லை. இவரால் தாம் அடைந்த லாபங்களும் யோக்கிய தைகளும் இந்தியர்களுக்கு நன்றாய்த் தெரியும். இவரைவிட்டால் மோசம் வருமென்று நினைத்தார்கள். அதிகாரிகள் விரோதித்தா லும் காந்தியின் புத்திமதியையே கேட்டு நடப்பது உசிதமென்று தீர்மானித்தார்கள். இந்தியர்களுக்குள் எல்லோரும் சேர்ந்து தகு ந்த மார்க்கங்களில் ஏகோபித்து நடந்தாலொழிய வேறுகதியில்லை யென்று விளங்கியது. அதற்காக 1903-ம் வருஷம் இந்தியர்களின் அபிப்பிராயம் என்று பேர்கொண்ட ஒரு பத்திரிகையை ஆரம்பித் தார். பத்திரிகை ஏற்பட்ட முதல் வருஷத்தில் காந்திக்கு மூப்ப

தாயிரம் ரூபாய் நஷ்டம் வந்தது. இங்கிலீஷ், தமிழ், குஜராத்தி, இந்தி என்ற நான்கு பாஷைகளிலும் பத்திரிகை நடத்தப்பட்டது. ரௌலட் சட்டமானாலும் மனம் தளராமல் தைரியத்தோடு இந்தியர்களுள் எல்லோருக்கும் ஒற்றுமை உணர்ச்சியைப் புகட்டிவந்தார். இந்தப் பத்திரிகை இல்லாவிட்டால் பொறுமை எதிர்ப்பு வல்லது ஆத்மசக்தி என்பது இவ்வளவு இலகுவாக நடைபெற்றிராது. சீக்கிரத்திலேயே காந்தியுடன் ஒற்றுமைப்படுதற்கு அதிகார் சேர்ந்துகொண்டனர். உடல், பொருள், ஆவி முதலியவாவற்றையும் தேசத்திற்காகத் தத்தஞ் செய்யத் தயாராக இருந்தனர். நாளடைவில் இந்தியர்களின் பலம் அதிகரித்துக்கொண்டு வந்தது. விடாப்பிடியாய் வேலை செய்து கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள மனதிடமடைந்தார்கள். போர்வீரனுடைய தீரத்தைக் காட்டிலும் இவர்கள் காட்டிய தீரம் எவ்வளவோ பங்கு உயர்ந்தது.

போர்வீரனுடைய பெருமையெல்லாம் கொடிய யுத்தத்தில் அதிகரைக் கொன்ற தைரியத்தால் உண்டாகிறது. மேலும் யுத்த காலங்களில் வெறிகொண்டு தைரியமடைவது சாமான்னியருக்கும் இலகுவான காரியமாகும். ஆனால் பிறர் நமக்குத் தீங்குசெய்யும்போது மனதில் கோபங்கொள்ளாமலும், சரீரபலத்தால் எதிர்க்காமலும், தைரியமாகவும் கம்பீரமாகவும் முகங்களை வைத்துக் கொண்டு சகல துக்கங்களையும் சகித்தல் என்பது அனுபவிக்தவர்களுக்கே தெரியும். இதுவே எப்போதும் உண்மையான பெருமையைத் தரும். இப்படிப்பட்ட குணத்தையுடையவன் துக்கங்களுக்காளாகியிருக்கும்போதும் கிறிஸ்துவைப்போல் ஆநந்தரூபியாகவே யிருப்பான். சகல துக்கங்களுடன் அவனை விட்டு நீங்கிவிடுகின்றன. கிறிஸ்துவானவர் சிலுவையில் உயிர்விடுந்தறுவாயில் 'பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று தமது சத்துருக்களுக்காக ஜெபம் பண்ணினதுபோன்ற உன்னத நிலைக்கு பாரதமாதாவின் புதல்வர் அனைவரும் வரவேண்டுமென்பது காந்தி மஹாத்மாவின் நோக்கம். அதற்காகவே அவர் தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியாவிற்கு வர நேர்ந்தபோதும். 1906-வது வருஷ முதல் 1914-வது வருஷம் வரையில் ஆத்மசக்திப் பிரயோகஞ் செய்து தென்னாப்பிரிக்காவில் வெற்றி அடைந்திருக்கிறார். இந்தியாவில் இந்தியர்களின் கௌரவத்தையும், பிரிட்டிஷாரின் யோக்கியதையையும் காப்பாற்றுவதற்காக பாடுபட்டு வருகிற இந்த உத்தம புருஷரின் குணநிசயங்களை எடுத்துரைக்க எவரால் முடியும்.

ஆத்ம சக்தி.

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். மத். 5-44.

"நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோம. 12) என்று போதித்த இயேசுக்கிறிஸ்துவின் உத்தமதாசனான டால்ஸ்ரூய் (Tolstoy) என்ற ருஷிய தேசத்து பிரபு கடவுளிடத்தில் நமக்கிருக்கும் சுவாசத்தை ஆதாரமாகக் கொண்டு மாத்திரமே உலகத்திலுள்ள உழைப்பாளிகளின் பழுவை இலேசாக்கலாம். மனுஷனைப் பிறந்த ஒவ்வொருவனும் சுகித்தனுபவிக்க வேண்டிய சுகானுபவங்களைப் பெறலாம்; இஜ்ஜீவியத்திலுண்டாகக்கூடிய உபத்திரவங்களையும் மரணத்தின்கசப்பையும் மாற்றலாம் என்று போதித்தார்.

இந்த டால்ஸ்ரூப் (Tolstoy) என்ற பிரபு உலகத்திலுள்ள சர்வாதிகாரிகளும் இன்பத்தை அடையும் மார்க்கங்களை ஏட்டிய உபாயங்களை உலகத்தில் பரவச்செய்யும்படி நீதிக்கதைகளும், உபமானங்களும், உபாயங்களும் அடங்கிய பல கிரந்தங்களை எழுதிவைத்திருக்கிறார். அவற்றின் மூலமாக ஒருவன் செய்யவேண்டிய சரியான காரியமெது? அதை எந்த சமயத்தில் எவ்விதமாக ஆரம்பிக்கிறது? அதைச் செய்யும்படி போதிக்கத் தகுந்த சரியான மனுஷன் யார்? என்ற விவரங்களைத் தெளிவாய்க் காண்பித்திருக்கிறார். இவர் எழுதிய கிரந்தங்களை அடிக்கடி வாசித்து வருவது மோகனதாஸருக்கு வழக்கம். ஆகவே மஹாத்மா காந்தியை டால்ஸ்ரூய் (Tolstoy) என்ற கிறிஸ்தவ சன்னியாசியின் சீஷன் என்று சொல்லலாம். இவர் ஆத்மசக்தியைப் பெற்றுக்கொள்ளும் விதத்தையும், அதை உபயோகிப்பதனால் அடையக்கூடிய பாத்திய சிலாக்கியங்களையும்; போதனையின் மூலமாகவும், சாதனையின் மூலமாகவும் பிரபல்யப்படுத்துகின்றார். இவர் சொல்லுவதாவது:- எதிரிகளிடம் விரோதமான எண்ணங்கூட நமக்குத் தோன்றக் கூடாது. சர்வ ஜீவராசிகளிடத்தும் அன்புபாராட்ட வேண்டியதொன்றே நமது கடமை. தீமைசெய்வதும் மற்றவர்களை அடிமைகளாகப் பாவித்து நடத்துவதும் ஆத்ம சக்தி அமைந்த தெய்வதாசருக்குகந்த குணங்களன்று. சாத்தானின் குணங்களாகும்.

ஒருவர் நமக்கு இடம் கட்டளை அக்கிரமமென்று தோன்றினால் அத்தகைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமலே இருந்துவிட்டு



பாரதமாதாவின் புத்திரரில் பழுத்த தேசாபிமானியும் உயர்திலகக்காண
ஒப்பற்ற தேசத்தொண்டு புரிந்து வருபவரும்,
அபார சக்தியின் அற்புத வெற்றியால்
தீர்க்கியாவை உண்ணத திலகக்குக் கொண்டுவர உழைத்து வருபவருமாகிய

மஹாத்மா காந்தி.

அதனால் நேரும் துன்பங்களைப் பொறுமையுடன் சகிப்பதே ஆத்ம சக்தி அல்லது பொறுமை எதிர்ப்பு (Passive resistance.) புண்ணிய கருமங்களையே சாந்தத்துடன் அனுசரித்து பிறர் செய்யும் தீமையை சகித்துக்கொள்ள பழகிவிட்டால் நம்மிடம் ஆத்மசக்தி அதிகரிக்கும். ஆத்மசக்திக்கு முடாக வேறெந்த சக்தியும் எதிர் நிற்க முடியாது என்பது நிச்சயம். இந்த ஆத்மசக்தி மார்க்கத்தை அனுசரிப்பவன் ஒருபோதும பிறருக்கு தீமை செய்வதேயில்லை. அப்படித் தீமை செய்தால் அது அவனையும் அவன் கோரிக்கையையும கெடுத்துவிடும். ஆதலால் ஆத்மசக்தி ஓர் புண்ணிய கருமாவுக்கு சமமாகும். அதை உபயோகிப்பவர்களும் அவர் விரோதிகளும் நன்மையையே அடைவார்கள். இவ்வழி யனுசரிப்பவர்களுக்கு அபஜயமென்பதே கிடையாது. "தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்" மத் 5: 39. என்று கிறிஸ்து சொல்லியிருப்பதுபோல் பலவந்த சகதியை நமமிடம் ஒருவன் பிரயோகம் செய்தால் அதற்குப் பதில் நாமும் பலவந்த சகதியை உபயோகித்து எதிர்த்து நிற்கக்கூடாது. ஆத்மசக்தியே அதறகுச் சரியான மார்க்கம். இந்த மார்க்கதிறகு, சாத்வீக பரிகாரம சாத்வீக எதிர்ப்பு எனறு சொல்லப்படும். சாதவீக எதிர்ப்பை கையாடுபவன் தனக்குத் தானே எதிரிடையான முயற்சி செய்வானேயல்லாது பிறருக்கு எதிரிடையான முயறசியைசெய்வதிலலை. இந்த மார்க்கத்தில் நாம் நடந்து வருமபோது நமக்கு சரீர அசௌகரியங்கள் அதிகம் என்பது வாஸ்தவம். ஆனால உலக வாழ்க்கையில் இந்த உபத்திரவங்களும் கஷ்டங்களும் குறைவல்லவே, உலகமே உபத்திரவம் நிறைந்ததுதானே. இதை மெய்யாய் உணர்ந்து பரிசுத்தமாக இந்தக் கஷ்டங்களைத் தாங்கக்கூடிய சக்தியை வரவழைத்துக் கொள்வதே ஆத்மசக்தியாம். இதுவே கிறிஸ்துவின் மார்க்கம். மகாத்மா காந்தி அனுபவத்தில் கொண்டுவந்து ஜயமடைவது,

இந்த மார்க்கமே மேலானதன்று நமக்குத் தெரிந்தபிறகு கஷ்டங்களை சகிக்கவும், சரீர சுகங்களை தியாகம் செய்யவும் தக்க சக்தியைப் பெற்று அனுபவத்தில காண்பிக்க முயற்சிப்போம். "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமா யிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனைக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன்." என்று பால்மகாமுனிவர் கொரிந்தியருக்கு

எழுதின முதலாம் நிருபம், 9-ம் அத்தியாயத்தில் சொல்லியிருப்பதுபோல் இயேசுகிறிஸ்து நாதரின உபதேசங்களி லடங்கிய ஆத்திரீகக் கருத்தை மகாத்மா காந்தி தமது சாதனையாலும் போதனையாலும் உலகத்தினர்க்குத் தற்காலத்தில் பகிரங்கப்படுத்தி வரு-

சரீர சுகங்களை வெறுத்து பஞ்சேந்திரியங்களை யடக்கி ஒடுக்கி கஷ்டங்களையே பொறுமையுடன் நமது கதியாக் அங்கீகாரம் செய்வதே ஆத்ம சக்தியின் உன்னத நிலையைக் குறிக்கும். பலவந்த சக்தி (Physical force) யை உபயோகிப்பதற்கு வேண்டி யதைப் பார்க்கிலும் அதிக தைரியம் ஆத்மசக்திக்கு வேண்டும். ஆதலால் ஆத்மசக்தியை உபயோகிப்பவர்கள் பலவந்த சக்தியை உபயோகிக்க கனவிலும் எண்ணார்கள். இந்த ஆயுதத்தை எக் காலத்திலும் எந்த விஷயத்திற்கும் உபயோகிக்கலாம். இந்தஆயுதம் தம் தவறுபிடிப்பதில்லை. எவராலும் திருடவும் முடியாது. இதை உபயோகம் செய்வதனல் உபயோகிக்கிறவனும் அவனுடைய எதிரியும் லாபமடைகிறார்கள். பலவந்த சக்திக்குச் சோர்வும் குறைவும் உண்டு. ஆத்மசக்திக்கோ குறைவே கிடையாது. போட்டியினல் ஆத்மபலம் அதிகரிக்கும். ஒருவர் நமக்கு இடும் கட்டளை அந்நியமென்று தோன்றினல் அத்தனைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமலே யிருந்துவிட்டு அதனல் வரும் துன்பங்களைப் பொறுமையுடன் சகிப்பதே ஆத்மசக்தி (Soul Force.) அச்சக்தி குடிகொண்டிருப்பவன் கையாடும் முறையே பொறுமை எதிர்ப்பு (Passive Resistance) எனப்படும்.

சுதேச சேஷமத்தை முன்னிட்டு எதிரிகளிடம் போராடுவதில் பொறுமை, என்ற சாத்வீக பரிகார மார்க்கத்தைக் கையாடுபவர்களிடம் அவசியம் இருக்கவேண்டிய நான்கு குணங்களாவன:—சத்தியநெறி, அஞ்சாமை; வழுமை, பிரம்மசரிய விரதம்.

ஒவ்வொருவரும் தமது கடமையைச் செய்து முடிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து தமது முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் கடமையைக் கைவிடக்கூடாது என்று மகாத்மா காந்தி சொல்லுகிறார்.

1. சத்தியவந்தராக இருந்து முழுநியாயமும் நம்மிடம் இருக்கிறதாவெனப் பார்க்கவேண்டும். பின்பு சத்தியத்திற்காக சாத்வீக பரிகாரத்தைத் தேடவேண்டும். அக்காம வழிகள் அதில் கலந்திருக்கக்கூடாது.

2. சுயநலப்பிரியனும் ஐசுவரியம், கௌரவப்பட்டம் முதலியவற்றில் தன் மனத்தைச் செலுத்துபவனும் தேசாபிமானியாக முடியாது. பாரதமாதாவுக்குச் சேவைசெய் தழைக்க விரும்புபவன் தனத்திற்கும் கனத்திற்கும் ஆசைப்படலாகாது. தன்னுடையது என்று நினைக்கப்படும் உடல், பொருள், ஆவி மூன்றையும் பாரதமாதாவின் சேவைக்காக தியாகம் செய்யச் சக்தியுள்ளவனே தேசகாரியத்தில் பிரவேசிக்க வேண்டும். நமது முற்பிதாக்கள் கையாடிவந்த சாமான்ய வாழ்க்கையில் திருப்தியுள்ளவனே தேசபக்தனுவான், சரீரத்தை வீணே கொழுக்க வைக்கின்ற அன்ன பானாதிகளில் தன் மனதைச் செலுத்துவதைப்போன்ற பலஹீனம் வேறில்லை. வானும் உதிரமும் கலந்த புண்புலால் யாக்கையாகிய சரீரத்தைத் திருப்தி செய்பவனுக்கு ஆத்மசக்தியாகிய புருஷத் தன்மை நீங்கிவிடும். இவ்விஷயத்தில் இந்தியாவைப் போன்ற உஷ்ண தேசங்களில்வசிப்பவர்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சரீரத்தைப் போஷிப்பதில் சுவலையைச் செலுத்தலாகாது. ஐரோப்பியரின் டாபகீங்களுக்கு ஆசைப்படடால் இந்தியா தேசம் சீர்குலைந்துவிடும்.

3. ஆத்மபலம் அதிகரிப்பதற்கு தைரியம் அவசியம். சத்தியத்திற்காகப் போபட்டு உழைப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தாலும் "இனி நமக்குளதென நினைக்கும் சுதி இழக்கினுமே கட்டுரை இழக்கலேய" எனறு சாதித்த சத்தியவாக்கு அரிச்சந்திரனைப்போல் தைரியத்தைக் கைவிடப்படாது. நிரப்பயமாக வந்தே மாதரம் என்று எதற்கும் அஞ்சாமல் தன்மார்க்கத்திலேயே உறுதியாக நிற்கவேண்டும்.

ஜெயில்வாசம் கிடைத்தாலும் சரியே; ஜெயிலுக்குள் அநேக கொடுமைகள் நேர்ந்தாலும் சரியே, தன் வழியினின்றும் பிறழக் கூடாது.

இந்த மூன்று குணங்களும் மனிதர்களுக்கு வேண்டியனவே களே; சத்தியப், ஏழுமை, தைரியப், இவையில்லாமல் பொறுமை எதிர்ப்பு மார்க்கம் கைகூடாது. இவ்வளவாடுங்கூட காமத்தை யடக்கும் சக்தியும வேண்டுமென்பது காந்தியின் கருத்து. பெண் ணாசையை அடக்கக்கூடியவ னெவனே அவனே சகல ஆசைகளை யும அடக்கும் சக்தி பொருந்தியவனென்று சொல்லவேண்டாம். பிரம்மசரிய விரதமே எல்லா விரதத்திலும் உயர்ந்தது; உண்மை யான பிரம்மசாரியினிடம மேலே சொல்லிய மூன்று குணங்களும் அதிகமாக இருக்கும். இவர்களே பொறுமை எதிர்ப்பு மார்க்கத் தில் நிற்க வேண்டியவர்கள்.

பொறுமை எதிர்ப்பு என்னும் மார்க்கத்தை மகாத்மா காந்தி ஆரம்பித்ததைப் பற்றி சொல்லி யிருப்பதாவது:—"சில வருஷங்களுக்குமுன் தென்னாப்பிரிக்காவில் நான் பொதுஜன காரியமாக பாடுபடுவதற்கு ஆரம்பித்ததபோது இந்த மார்க்கமே உயர்ந்ததென எனக்குத் தோன்றிற்று. அப்போது இந்தியர்கள் ஒத்துவந்து வேலை செய்யத் தெரியாதவர்களாக விருந்தபடியால் நான் வெளிப்படுத்த வில்லை. ஜோகான்ஸ்பர்க்கில் ரிஜிஸ்டிரேஷன் சட்டம் உண்டான போது காலம பக்குவமாயிருந்தது. இந்தியர்கள் ஒன்றுசேர்ந்து எதையும் செய்யத் தயாராக இருந்தார்கள். அவர்களுக்குள் மன வருத்தமும் அதிகரித்திருந்தது. குடியேற்றாட்டுக்கும் நன்மையைக் கொடுத்து மற்றக் கெடுதல்களுப எங்குப் உண்டாகாபலிருப்பதற்கு கலகம் முதலிய சம்பவங்கள் கூடாதெனவேதான்றிற்று. ஆதலால் பொறுமை எதிர்ப்பு உயர்ந்த மார்க்கமெனத் தோன்றி வெளிப்படுதினேன். 1906-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஜோகானஸ்பர்கில் கூடிய கூட்டத்தில் பலமான தர்க்கத்தின் பிறகு இதமார்க்கம அங்கீகரிக்கப்பட்டது. எல்லோரும் உறுதி கவே பின்பற்றுகிறார்கள்."

1909-ம் வருஷத்தில் லாகூரில் கூடிய இந்தியன் நாஷனல் காங்கிரஸுக்கு காந்தி அனுப்பிய கடிதத்தில் பின்வரும் கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை:—".....தென் ஆப்பிரிக்கா இந்தியர்கள் மிருகத்தன்மையான பலவந்த சுதந்திரத்தை ஆத்மசக்தியால் எதிர்க்கிறார்கள். கவர்ன்மெண்ட் முதலிய ஸ்தாபனங்களைக் காட்டிலும் கடவுளும் அவரால் வெளிப்படுத்தப்பட்ட விதிகளும் உயர்ந்தவை களென்பதும, அதனல் கடவுளால் ஏற்பட்ட கடமைகளுக்குக் கீழ்படிவதே முதல் கடமை என்பதும் அவர்களுடைய கொள்கை. ஆனல கடவுளால் ஏற்பட்ட விதிகளை நன்மனச் சாட்சியின் மூலமாக அறியவேண்டி யிருக்கிறது. அதல் நாம் பிசகியிருக்கலாமென்கிறார்கள். ஆதலால் கடவுளின் விதிக்கு மாறுபட்டிருப்பதாக நினைத்து மனிதர்களின் சட்டத்தை அட்சரபிக்கையில் சட்டத்தன் தண்டனைகளைப் பொறுமையுடன் சகித்துவிடுவது நல்லது என்று அபிப்பிராயப்பட்டு நடக்கிறார்கள். இப்படி நடக்கும்போது தாம்போகும் வழி தப்பிதமாக இருந்தால் கஷ்டங்கள் நமமோடு இருந்துவிடட்டும; பிறருக்குப் போகக்கூடாது; என்பது அவர்களது கருதது.

இவ்வித எண்ணத்தோடு நடந்து வந்தால் உண்மையான மார்க்கமே முடிவில நிலைபெற்று நிற்கும் என்பது அவர்களுடைய நமபிக்கை.

ஆத்மசக்திப் பிரயோகத்தினால் உண்டாகும் பலன்களைப்பற்றி மகாத்மா காந்தி சொல்லுவதாவது:—"இந்தப் போராட்டத்தினால் இந்தியர்களுக்கு தன்மதிப்பு அதிகரித்திருக்கிறது. தன்னிடம் தனக்குக் கௌரவ புத்தி உயர்ந்தது. சுயமதிப்புள்ளவன் தனக்கு இழுக்கினை உண்டாக்கத்தக்க விஷயத்தில் பிரமேவசிக்கமாட்டான். பெருமைகளும் பணமும் கிடைப்பதைப் பார்க்கிலும் இக் குணமே உயர்ந்தது.

பொறுமை எதிர்ப்பைக் கையாடி வந்ததினால் அநேகருக்குச் சொத்து முழுமையும் போனது வாஸ்தவமேயாகிலும் அவர்களிடைந்த மனோபலமும் சுயமதிப்பும் சுயநலவெறுப்பும் மற்றும் சிறந்த குணங்களும் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

"மன்பெரும் புவியினில் வாழு மாந்தரிற்
றன்புரு தவரிலைத் தன்மைபத் தன்புரு
தின்பமே கொன்பவ ரிலங்கு பொற்பதிக்
கன்பரா யிருப்பரென் றறிவு சொற்றதே."—சீராப்புராணம்.

உலகமெங்குமே இந்தக் கட்சியாரின் நடவடிக்கை நியாயமென்பது தெரிந்து எல்லோரும் அனுதாபம் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டார் ஒப்பந்தக்கூலிகள் வெளிநாடுகளைத்தடுத்திருப்பது இந்தப் பிரயத்தனத்தின்மூலமாகவந்தபலன்தான். ரிஜிஸ்டிரேஷன் சட்டத்தை இவ்விதம் டிராணஸ்வால் இந்தியர்கள் எதிர்க்காவிட்டால் தென்ஆபிரிக்காவிலுள்ள இதரதேசங்களும் இந்த மார்க்கத்தைப் பின்பற்றியிருக்கும். அதனால் எல்லா இந்தியர்களையும் சனி பிடித்திருக்கும். இதற்குமுன தென் ஆபிரிக்காவில் இருந்த இந்தியாகள் பயந்தவர்களாயிருந்தார்கள். இந்தப் போராட்டம் அவர்களுக்கு தைரியத்தையும் பலத்தையும் கொடுத்திருக்கிறது. இதற்குமுன் தங்களுடைய அபிப்பிராயத்தை இரகசியமாகப் பேசக்கூடப்பயந்தவர்கள் இப்போது தைரியமாகவே வெளிப்படுத்துகிறார்கள்." இந்தியர்களென்றால மதிப்பு உண்டாக ஆரம்பித்துவிட்டது. இந்தியர்களைக் கண்டு வெறுப்படையும் குணமுள்ள ஐரோப்பியர்கள் இப்போது இவர்களிடம் மரியாதை செலுத்துகிறார்கள். அநேக ஐரோப்பியர்கள் இவர்களுடைய கட்சியைத் தாங்கிப்பேசவும் ஆரம்பித்துவிட்டார்கள்."

ஐரோப்பாவின் போகிஸ்பாரான டால்ஸ்டாய் போதித்தது போலவே காந்தியும் பிரமசாரிய விரதத்தை அனுஷ்டிக்க நமமவர்களுக்குப் போதிக்கும்போது "விவாக நிலைமைக்குட்பட்டவாகளுகூட சமயோக கேளிக்கைகள் புரியாதிருப்பதே நன்று. ஏனெனில் அன்னியநாட்டவர்க்கு அடிமைகளாகும பிள்ளைகளைப் பிறப்பிப்பதைவிட பிள்ளையில்லாதிருப்பதே நலம்" என்கிறார்.

பொறுமை எதிர்ப்பைப் பற்றிய போதனைகளுங்கூட டால்ஸ்டாயின் உபதேசமாகவே தெரிகிறது. அவர் எழுதிய வியாசங்கள் அனைத்தையும் திரட்டிய 23-வது பிரபந்தம் 182-வது பக்கத்தில் கண்ட (Biryukov's edition of Tolstoy's Collected Works, Vol XXIII, page 182f.) ஓர் இந்துவுக்கு எழுதிய கடிதம் என்ற தலைப்பின்கீழ் 1908-ம் வருஷம் டிசம்பர்மாதம் 17-ம் தேதியில் டால்ஸ்டாய் எழுதியிருப்பதாவது:—

"இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சி அநேக தீமைகளைக் கொண்டு வந்திருக்கிறது. அந்தத் தீமையை விலக்குவதற்கான உபாயமாவது:—

தீமைக்கு எதிர்த்து நிற்கப்படாது. ஆனால் அதற்குப் பதிலாக அதற்கு இணங்காமலிருப்பதே தான்று. அரசாட்சி வகையிலும், நியாயஸ்தலங்களிலும், வரி தண்டுவதிலும், சேனையிலும், அதிகார வர்க்கத்தினரோடு ஒற்றுழைக்க மாட்டோமென்று எதிர்த்து நின்றால் உலகத்தில் ஒருவரும் உங்களை ஜெயிக்கமுடியாது. எவ்வளவோ நூற்றாண்டுகளாக புத்தமதத்தில் பொதிந்துள்ள சன்மார்க்க போதனைகள் உட்பட தெய்வீக நீதி பொக்கிஷங்களடங்கிய நாகரீகத்தையுடைய இந்தியாவை தற்காலத்திய ஐரோப்பிய நாகரீகத்தினாலும், தற்காலத்தில் பலவந்த சக்திகளினாலும் அடக்கி ஆள முயற்சிப்பது எக்காலும் சரித்தரத்திலும் இல்லாத மகா கொடிய மதியீனம்" என்று டால்ஸ்டாய் எழுதியிருக்கிறார்.

மஹாத்மா காந்தி ராஜாங்க சம்பந்தமாகவும் மற்றும் சமூக வாழ்க்கையின் அபிவிர்த்தி சம்பந்தமாகவும் கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் யாதெனில்:—

(1) கீழ்நாட்டாருக்கும் மேல்நாட்டாருக்கும் நடுவில் நீக்க முடியாத கடைகள் யாதொன்றுமில்லை ஐரோப்பியர்கள் நாகரீகமென்றுவது மேல்நாட்டாரின் நாகரீகமென்றுவது தனியே யாதொன்றுங் கிடையாது. ஆனால் தற்கால நாகரீகமென்று ஒன்று உள்ளது. அது ஜடதத்துவ சம்பந்தமானது. இந்தத் தற்கால நாகரீகமே ஐரோப்பியர்களைத் தாக்குவதற்குமுன் மேல்நாட்டவர்களும், கீழ்நாட்டவர்களும் அநேக சமயங்களில பொதுவான குணங்களுடையவர்களாயிருந்தார்கள். இப்போது தற்கால நாகரீகத்தில் சம்பந்தப்படாத ஐரோப்பியர்களும் இந்தியர்களுமே யாதொரு கஷ்டமின்றித் தாராளமாய்க் கலந்துகொள்கிறார்கள்.

(2) இந்தியாவை ஆளுவது பிரிட்டிஷ் ஜனமல்ல. ஆனால் தற்காலதனிய ஜடதத்துவ சம்பந்தமான நாகரீகமே தற்காலதனிய

நவீன சாஸ்திர ஆராய்ச்சியின் பலன்களாகிய ரெயில்வே, தந்தி முதலியவற்றைக் கொண்டு ஆளுகின்றது.

(3) தற்காலராகரீகம் முற்றிலும் நீங்கும்வரையில் சுயராஜ்ஜியத்தினால் நமது தேசத்திற்கு நன்மையுண்டாகாது. நமது நாட்டுப் பணமெல்லாம் வெளிதேசங்களுக்குப் போகாமல் இங்கேயே தங்கிவிட்டாலும் அதனால் ஐரோப்பிய தேசங்களைப்போலாவது அமெரிக்காவைப் போலாவது ஆகலாம். அவ்வளவுதான். அந்த நிலைமையில் யாதொரு பயனுமில்லை.

(4) கீழ்நாட்டவர்களும், மேல்நாட்டவர்களும் உண்மையில் சிநேகத்தோடு கொருங்கவேண்டுமானால் மேல்நாட்டவர்களிடம் இப்போது இருக்கும் தற்கால ராகரீகம் நீங்கவேண்டும். அப்படியில்லாமல் தற்கால ராகரீகத்தைக் காப்பாற்றிக்கொண்டு சிநேகபான்மை பாராட்டுவதென்றால் இங்கிலாந்தும் ஜர்மனியும் போலாகிவிடும். அவ்விரண்டு தேசங்களும் ஒன்றை மற்றொன்று அழிக்காமல் இருப்பதற்காக (யுத்தத்திற்கு வேண்டிய சாமான்களும் சைனியங்களும் தயார் செய்வதிலேயே ராளமான தனத்தைச் செலவழித்து) தங்களைத் தாங்களே மாய்த்துக்கொள்கிறார்கள். [இதல் உண்மை இக்காலம் நன்கு விளங்குகிறதல்லவா?]

(5) இந்தியர்களாகிய நாம் சென்ற 50 வருஷங்களாக கற்றுக்கொண்டவைகளை மறந்துவிட்டபிறகே இந்தியாவிற்கு நற்கதியுண்டு. ரெயில்வேக்கள், தந்திகள், ஆஸ்பத்திரிகள், வக்கீல்கள், டாக்டர்கள் முதலியவர்களைப்போன்ற நூதனசாதனங்களெல்லாம் போய்விடவேண்டும். உயர்குடிப் பிறந்தார்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் எல்லோரும் சன்மார்க்க வழிகளில மனதைச் செலுத்தி மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும். டாம்பீகமற்ற சாமான்யமான வாழ்க்கையே உண்மையில் சுகத்தையும் திடத்தையும் கொடுக்கக்கூடியது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

(6) சுகஜீவியத்திற்கு வேண்டிய சாமான்களை மாத்திரம் வைத்துக்கொண்டு அனுபவிக்கும்படி பூர்வகாலத்து மகரிஷிகள் ஜனசமூகத்தை ஒழுங்குபடுத்தியிருந்தது எவ்வளவோ உயர்வாகத் தோன்றுகிறது, அப்படிச் செய்ததில் மேலான ஞானம் வெளிப்படுகிறது. டாம்பீகமில்லாத சாமான்னிய வாழ்க்கையே உயர்ந்தது. மேல்நாட்டவர்கள் தற்கால சுதந்தர வாழ்க்கையில் அனுபவிக்கிற சுகங்களைப் பார்க்கிலும் அதிகமாக மேலே சொல்லிய சாமான்னிய வாழ்க்கையில் கிடைக்கும். அவ்விதநிலைமையில் ஜனங்கள் சாந்தமாக நீண்டகாலம் சுகமாய்வசிக்கிறார்கள்.

(7) உண்மையான நாகரீகத்தின் அபிப்பிராயமே தற்காலம் கெட்டுவிட்டது. எந்த பிரயத்தனத்தாலாவது பெரிய பங்களாக்களில் குடியிருந்து, டாம்பீக உடைதரித்து, உயர்ந்த சாப்பாட்டையே அபேட்சித்து, உயர்ந்த சாராயங்களைச் சாப்பிட்டுக்கொண்டு தன் வாழ்நாள் முழுவதிலும் இவ்விதமே குறைவடையாமல் நிற்பதற்கு முயற்சிப்பவனே அவனே மேலானவனெனக் கருதப்படுகிறான். எப்பாவது தங்களுடைய டாம்பீகங்களைக் குறைக்காமலிருந்தாலே போதும். தற்கால நாகரீகத்தால் ஐரோப்பிய தேசங்களும் அமெரிக்காவும் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. ஜனங்களிடம் குடிகொண்டிருக்கும் துக்கம் தாங்க முடியவில்லை. முதலாளிகளும் கூலிக்காரர்களும் என இருபிரிவாக ஜனங்கள் பிரிக்கப்பட்டு அதனால் உண்டாகும் வனர்த்தங்களுக்கு அளவில்லை. நூதன யந்திரங்களெல்லாம் கூலிகளைக் குறைப்பதற்கு உதவி செய்கிறது. அதனால் அநேக கூலிக்காரர்கள் வேலையில்லாமல் பஞ்சத்திற்கு ஆட்களாகிறார்கள். முதலாளிகளோ ஏராளமான சொத்துக்களையுடையவர்களாயிருக்கிறார்கள்.

(8) மெயில்வேக்கள், தந்திகள் முதலியனவைகளும் புகைக்கப்பல்களும் எவ்வளவு கெடுதலகளைச் செய்திருகின்றனவென்று சொல்லமுடியாது. தூரதேசப் பிரயாணங்கள் இலகுவில் கைகூடுவதாக யிருப்பதால் ஓர் குடும்பமாயிருகும் தன்மை, சகோதர வாஞ்சை, பந்துக்களிடம் அன்பு முதலிய அபூர்வ குணங்களெல்லாம் நமது தேசத்தைவிட்டுப் போய்க்கொண்டிருக்கின்றன வென்கிறார். தேசாபிமானங்கூட குறைவதற்கு இது உதவி செய்கிறது. இவைகளுக்குப் பதிலாக தன்னயமே முழுமையும் குடிகொள்கிறது. நாம் சுகமாயிருந்தால் போதும். மற்றவை எப்படியாவும் சரிதான்.

(9) இவ்விதநிலைமையில் தேசங்களை தத்தளித்துக்கொண்டு வருகின்றன. அந்தக் கதைகளையெல்லாம் இங்கெடுத்தெழுதுவது அவசியம். பொதுவாகப் பார்த்தால் தற்கால நாகரீகத்தால தேசத்திற்கு கெடுதியே யொழிய நன்மை எள்ளளவுமிலலை என்பது மோகனதாஸ் காந்தியின் கருத்து. இந்தியா தேசமுன்னுக்கு வரவேண்டுமானால் கல்வி, தொழில் முதலிய சகல காரியத்திலும் சுதேசக் கொள்கைகளை பாவிக்கவேண்டும். நமது கருத்துகளும் இந்தியாவின் சொந்தமாக இருக்கவேண்டும். சகலவிதத்திலும் சுதேசியாக இருந்தால் மாதரம் தேசத்திற்கு சுகம் முண்டு என்பது காந்தியின் அபிப்பிராயம்.

தற்கால நாகரீகத்தில் விழுந்து மயங்கி தலைகால் தெரியாமல் புரண்டு கொண்டிருக்கும் ஜனங்களுக்குள் இவ்வளவு பெரிய சீர் திருத்தங்கள் செய்வதற்கு நான் முந்தவில்லை.

பொறுமை எதிர்ப்புக்கட்சியில் வேலைசெய்யும் எனக்கு அந்த விசாரம் பிரயோஜனப்படாது. ஆனல் ஒருவிஷயம் உண்மை. மேலே என்னல் சொல்லப்பட்டனவைகள் அப்படியே உண்மையில் உயர்வென எனக்குத் தோன்றினல் அவைகளின்படி நடந்து கொள்வதில் நான் சந்தோஷப்பட வேண்டியவன். ஜனங்களெல் லோரும் பின் தொடர்வதற்காக அதுவரையில் நான் காத்துக் கொண்டிருக்கக்கூடாது. இந்த மார்க்கம் சரியெனத் தோன்றுகிற வர்களெல்லோரும் ஒன்று சோந்து நடந்து வருவோம். அனுஷ்டா னத்தால் காட்டுவோம். நாம் போவது உணமையில் சரியான மார்க்க மானல் மற்றவர்களும் அவசியம் பின் தொடர்வார்கள். கொள் கையைத் தெரிவித்தாய்விட்டது; அந்தக கொள்கையை நம்மால் முடிந்தவரையில் அனுசரித்து வரவேண்டியது. தறகால நாகரீ கங்கள் தலைக்குமேல முழுகிக் கிடக்கையில் அவைகளுக்கு மத்தி யில் நாம் முழுமையும் நம்வழிகளில் நடக்க முடியாமலிருக்கலாம்.

நம்முடைய மனதில் உயர்ந்தமார்க்கம் இன்னதென்று தெளி வாய் இருக்கவேண்டும். என்வழி சரியல்லவென்று உனக்குத் தோன் றினல் கலகஞ் செய்பவர்களிடம் நீ அதைத தெரிவித்துவிடு. அவர் கள் விரும்புகிற சுகந்தரம் மனிதர்களைக் கொல்வதாலும், கொடு மைகளைச் செய்வதாலும் கிடைக்காது. ஆனல தாங்கள சரியான மார்க்கத்தில் நடப்பதாலும் உண்மையான இந்தியராகத் தங்களைச் செய்துகொள்வதாலும் கிடைக்கும். அப்போது பிரிடிஷ் அதி காரிகள எஜமானர்களாகாமல் வேலைக்காரர்களாகி விடுவார்கள். அவர்களால் கொடுமைகளைச் செய்ய முடியாது; ஆனல் டாஸ்டி களுக்குச் சமமாகப் பாதுகாத்து வருவார்கள். இந்திய ஜனங்க ளோடு அமைதியாகவே வாழ்வார்கள். ஆதலால் நமது பிற்கால ஸ்திதி பிரிட்டிஷ் ஜனங்களின் கையசமில்லை. நமது சக்தியிலேயே இருக்கிறது. இந்தியர்களிடம் தேவையான தன்மறுப்பும், சன் மார்க்க நடவடிக்கைகளும் உண்டானல் இப்போதே அவர்கள் சுதந்தர புருஷர்கள்தான். கொஞ்சக்காலத்திறகு முந்தி வரையில் இந்தியர்களிடம் அடக்கமான வாழ்க்கை என்பது பூர்வமாகக் குடி கொண்டிருந்தது. இப்போதும் அவ்வித வாழ்க்கை அதிகமாகக் கெடவில்லை. இந்த வாழ்க்கையை மறுபடியும் நாம் பூர்வ ஸ்திதிக் குக் கொண்டுவந்தால் இந்தியாவெங்கும் இந்தியர்களும், ஐரோப் பியர்களும் வெகு சாசமாக வாழ்வார்கள் என்பதில் தடையில்லை."

மஹாத்மாவின் இல்லற ஒழுக்கம்.

அதிகாலையில் எழுந்திருந்து குளிர்காலங்களிலும் தண்ணீரிலேயே ஸ்நானம் செய்கிறார். சுடுதண்ணீரென்பதே கூடாது. படுக்கும்போதுகூட போர்வையைத் தேவையானபடி உபயோகிக்க மாட்டார். எவ்வளவு ஆபத்துகள் வந்தாலும் ஆள் இழுக்கக் கூடிய ரிக்ஷா வண்டியில் ஏறவேமாட்டார். தன் மூட்டையைப் பிறர்தூக்க விடமாட்டார். தனக்கு வேண்டிய எந்தக் காரியத்தையும் பிறர்செய்யும்படி விடமாட்டார். ஜீவப் பிராணிகளிடம் மிகுந்த இரக்கத்தையே காண்பிப்பார். இந்தியர்களுக்கு விரோதப் பாண்மை கொண்டாடிய சில ஐரோப்பியர்களிடமும் மிகுந்த அபிமானமே செலுத்துகிறவர். தான் வசித்த காலனியின் க்ஷேமத்திலேயே கருத்துடையவரா யிருந்தார். இது வீண் பெருமைக்காக அல்ல. இந்தியர்களிடம் எவ்வளவுதான் வெள்ளையர்கள் விரோதப்பாண்மை கொண்டபோதிலும் அதற்காக நாமும் விரோதகுணத்தையே காட்டுவது அறிவீனமென்பதே இவருடைய கொள்கை. பகல் முழுமையும் ஏதேனும் வேலைசெய்துகொண்டேதானிருப்பார். இவர் செய்துவரும் காரியங்கள் அபாரமானவை. சத்தியாகிரக சிண்மமாகிய காந்தி தம்மைப் பின்பற்றுவோர்க்கு அடிக்கடி இடித்துக் காட்டுவதாவது,—என்ன நேர்ந்தபோதிலும் சத்தியத்தையே கடைப்பிடிக்கவேண்டும். எதிரிகளிடத்தில் எப்பொழுதும் அன்பு பாராட்டி இடைவிடாமல் பிரயத்தனஞ் செய்யவேண்டும். நம்மை எதிர்க்கும் எதிரிகளிடம் அன்பைச் செலுத்தியபடி நீதியைக் கைப்பற்றவேண்டும். அன்பைத் தவிர வேறுவிதமாக கிடைக்கக்கூடிய நீதிமுறைகள் நமக்கு வேண்டாம் என்பதேயாகும். இந்தக் கொள்கையின் அவதாரமாகவே காந்தியிருக்கிறார். மேலும் ஒவ்வொருவரும் சகலவித தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கவேண்டும் என்பதே இவருடைய கொள்கை.

"மகாத்மாவுக்குப் பட்டினி கிடப்பதில் பிரியமதிகம். அவர் ஒல்லியாயும் பலவீனராயும் குள்ளமாயும் காணப்படுகிறார். எவனும் குழந்தையைப்போல் அவரைத் தூக்கிக்கொண்டு போய்விடலாம். மகாத்மா களங்கமற்ற தூய்மையான நெஞ்சமுடையவர். இத்தகைய நற்குணங்கள் பல அவரிடமுள்ளமையால் இந்தியாவிலுள்ள ஜனங்கள் அவரைப்பின்பற்றுகிறார்கள். மகாத்மாவை இயேசுகிறிஸ்துநாதருக்கு ஒப்பிடுவதை எவரும் மறுக்கமாட்டார்," என்று கர்னல் வெட்ஜ்வுட் எழுதுகிறார்.

இயேசுக் கிறிஸ்துவின் பொறுமையை அப்படியே அனுஷ்டிப்பவர். பிரஹ்லாதனைப்போல் நாம் நிறை உறுதியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற ஓரே படிவாதம். பேலும் ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் உதவிசெய்ய சந்தர்ப்பம் கோர்ந்தால் விடமாட்டார்.

"இயேசுகிறிஸ்துவின் பேரைச் சொல்லிக்கொண்டு காந்தியை ஜெயிலில் அடைத்து விடுகின்ற (தென்ஆப்பிரிக்கா) மனிதனைக் காட்டிலும், தர்மத்திற்காகவும் அன்பைக் காக்கவும் பொறுமையுடன் அக்கஷ்டனைச் சகித்துவரும் காந்தியே சிலுவையில் அறையப்பட்ட கர்த்தாவின் உத்தமமான பிரதிநிதி என்று நான் சொல்லுவேன்" என்று சென்னை அதிபட்சர் காந்தியைப் புகழ்ந்து நற்சாட்சி பகர்ந்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் நீதிக்கு விரோதமான காரியங்களுக்கு பிரிட்டிஷ் ராஜ்யத்திலேயே நாம் இடம் கொடுக்கக்கூடாது. பொறுமை எதிர்ப்பினால் பிரிட்டிஷ் ராஜ்யத்திற்குள் நடந்துவரும் அநீதிகளை நம்மால் கூடிய அளவு தொலைத்துவிட முயற்சிக்கவேண்டியது. அப்போது மாத்திரமே நாம் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் உண்மையான பிரஜைகளாவோம்.

சுயராஜ்யம்.

"தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது" கிறிஸ்து.
"The Kingdom of God is within you" *Christ.*
"அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும்." ஏசாயா 11: 6.

ஆலகால விஷத்தின் வாடைபட்ட மாத்திரத்தில் ஜீவராசிகள் மடிந்து போவதுபோல் அச்சுச்சட்டம், தேசப்பிரஷ்ட சட்டம், மௌலற்சட்டம் முதலிய அடக்குமுறை சட்டங்கள் இந்தியரின் சுதந்தரங்களைப் பட்டுப்போகச் செய்துவிட்டன. இந்தியரின் புருஷத்தன்மையை அச்சுச்சட்டங்கள் உறிஞ்சிவிட்டன. தங்களது அபிப்பிராயங்களை மனதில் உள்ளபடி வெளிச்சொல்ல முடியாமலும் எழுதமுடியாமலும், சுயாதீனம் பெறுவதற்கான யோசனைகளைக் கூடிச் செய்ய முடியாமலும் இந்தியர்களை தளர்த்திக்கொண்டிருக்கிறார்கள்; இந்தச் சட்டங்களின் பலனாக ஜனங்கள் குன்றிப் போய்விட்டார்கள்.

இந்தியா சுயாதீனமடைந்து சுகம் பெற்று வாழும் முறைகளையும், தொழிலும், செல்வமும் விர்த்திபோகும் விதங்களையும், தரத்துக்க சுயராஜ்ய நிலையின் மேன்மையையும், இனபத்தையும் வெகு

காலமாக மடக்கி ஆளப்பட்டுவரும் பிரஜைகள் அறிவதற்கு உணர்வதும் உரைத்து பெறுவதற்கான முறைகளைக் கையாடுவதும் எளிதல்ல. "என்னி அறிவாளோ காடசுகத்தை." ஆகலால் சுயராஜ்ய அறிவை ஜனங்களுக்கு ஊட்டுவது தேசபக்தர்களின் கடமையாகும். சுயராஜ்யமென்றால் பணம் வசூலிப்பதும், செலவிடுவதுமான அதிகாரத்தை குட்பட்டிருக்கும் ஆசியலாகும். பணத்தைப் பற்றிய அதிகாரம ஜனங்களிடமிருந்தால் எவ்வளவோ நன்மையுண்டாகும். உள்நாட்டுத் தொழில்களுக்குப் பணஉதவி செய்து அவைகளை வளப்படுத்தி விர்த்தி செயயலாம். அந்நிய சாமான்களுக்கு அதிகவரிப்போட்டுத் தடுக்கலாம. விபசாயத்தையும் நிபுணர்களைக் கொண்டு ஆபிவர்த்தி செய்யலாம். அதனால் தொழிலாளர்களுக்கு போல் விபசாயிகளும் சுகம் பெற்று வாழுவர். ஜன்மாரியம் விதமாகும். பொலைசுரங்கங்களையும் நிலக்கரி சுரங்கங்களையும் தொண்டியெடுத்து லாபம் பெறுவ சுதந்தரம் இந்தியர்களுக்கு கிடைக்கும். நம் தேசபாதுகாப்புக்குப் போதுமான சர்வ்வையை மாதந்திரம் தயார்செய்து வைத்துக்கொள்ளலாம். வெளிய விஷயத்தில் தற்காலத்தில் செலவாகும் பணங்களெல்லாம் மீதியாகும். சுயபாதுகாப்புக்கும் பொருள பற்றாக்குறை ஏற்படாது. அவசியமான ஆயுதங்களிருக்கும் உரிமம எல்லோருக்குமுண்டாகும். அனவசியமான அந்நிய பாஷைகளைக் கற்பிபபதால் நம பிள்ளைகளின் பார்வையையும் பலத்தையும ஆயுசையும் குறைப்பதற்குப் பதிலாக பிழையேஜனமான வல்ல விதைதகளை மட்டும் கற்றுக் கொடுக்கலாம். நாம் நமது அபிபிராயங்களை பயமின்றி பேசவும் எழுதவும் சுயராஜ்ய முண்டாகும். அன்னிய நாடுகளில் நம்மிடமிருக்கிடங்களை நியாயம் நீக்கும். குடியேற்ற நாடுகளுக்கு நம பிரிட்டிஷ பிரஜைகளுக்கு ஆகும். வெளிநாட்டில் சுயராஜ்யம் நடத்தும நாம் அவர்களைப் பழிக்குப் பழி வாங்கலாம் என்னும் அச்சம் அவர்களுக்கு உண்டாகும். எனவே சம அந்தஸ்து உண்டாகும்.

கல்விச்சாலைகளிலும், நியாயஸ்தலங்களிலும், ஜெயில்களிலும் காட்டப்படும பாரபட்சம் நீங்கும். நாம் உலகத்தவர் முன்னம் பெருமையுடன் நிற்கலாம். சமத்வம் உண்டாகுமே. இத்தனைக்கு உயர்ந்த பதவியைத்தரும் சுயராஜ்யத்தைப்பெறும் பொருட்டு தகுந்த முயற்சி எடுக்கப் பரியபில்லாத இந்தியரு உளரோ? ஆனால் அது எளிதில் கிடைப்பதன்று. ஒவ்வொருவரும் செயய வேண்டிய தியாகங்கள் பல உண்டு. அதற்காக, உடல், பொருள், ஆவி மூன்றையும் தகசரு செய்ய தோதாலும் தீரஞ் சென்ற போகாதவர்கள் புதுதிர் பின் வாங்குவரோ?

ஆனால், சுயராஜ்யத்தை நமக்கு எல்லா வகையிலும் பூர்த்தியான மஹாத்மா காந்தி இதனையடையும் பெரும் வழியையும் நமக்கு மிகவும் சுலபமான வழிகளைக் காட்டுகின்றார். ஒத்துழையாமை மார்க்கம் மிகவும் சாந்தமான வழி; இதை அனுஷ்டிப்பதில் பிரமாதமான சிரமமோ, அபாயமோ ஒருபோதும் கிட்டாது. அஹிம்சாதர்மம் பொருந்திய பஹிஷ்காரம் செயலிலன்றோ அஹிம்சாதர்மமிருக்கிறது. ஆதலின் பஹிஷ்காரத்தை ஒத்துழையாமை வழிநின்று சுயராஜ்யத்திற்குப் பாடுபடுவோமாக! என்று ஓர் நிருபர் அழைத்தினில் எழுதுகிறார்.

சுயராஜ்யத்தை யடையும் எளிய வழிகளாக மஹாத்மா சொல்லும் மார்க்கங்களாவன:—கடந்த 150 வருஷங்களாக ஆங்கிலேயர் இந்தியாவின் பணத்தை அபகரித்துக்கொண்டு போவதற்கு இடங்கொடுத்ததுபோல் நாம் அவர்களை ஒரு நிமிஷமாயினும் சுயராஜ்யம் ஒருபோதும் கிட்டாது. அஹிம்சாதர்மம் பொருந்திய பஹிஷ்காரஞ் செயலிலன்றோ அஹிம்சாதர்மமிருக்கிறது. ஆதலின் பஹிஷ்காரத்தை மனஸ்தாபப்பட்டு அலைக்கழிக்கவேண்டாம்.

உண்பதற்கு உணவும் உடுத்துவதற்கு உடையும் உட்கொள்ளக் கூறையும், மனுஷ்ய ஜீவபதத்திற்கு இன்றியமையாதனவாகும். இவை கிளைஸ்லாம் இந்தியாவில் ஏராளமாய் இருக்கின்றன.

தற்காலநாகரீகத்தின் தூண்டுதலினாலேயே நமது தேசியவஸ்துக்களெல்லாம் அன்னியதேசங்களுக்கு வாரியிறைத்து அங்குள்ள ஆபாசங்களை வாங்கி அனுபவித்து அக்கிரமமிகுதமும் அன்னியருக்கு அடிமைகளாகிவிட்டோம். இனிப்பயம் இந்த அடிமைதனத்தினின்றும் நீங்கி சுயாதீனம் பெறுவதற்காக நமது அதிகாரமங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அலைக்கழிக்க வேண்டாம்.

அன்னிய வஸ்துக்களை அனுபவித்து ஆசரிக்கும் ஆடம்பரம் பண்ணுவதை அறவே அடியோடு விடவேண்டும். சாமான்யவாழ்க்கையும் சொல்லிலும் செயலிலும் தைரியத்தையும் திடத்தையும் கடைப்பிடித்தலன்றோ சுயராஜ்யமாயறியவேண்டும்.

நாம் மனதார அன்னிய தேசத்து வஸ்துக்களில் ஆசை எறிவது துணிக்காகத்தான். வருஷந்தோறும் 64 கோடி ரூபாய் இந்தியாவிலிருந்து துணிகளாக அந்திய தேசங்களுக்குப் போகிறது. இது ஒன்றை மாதத்திலும் நிறுத்திவிட்டால் இந்தியாவிற்கு சுயராஜ்யம் உடனே கிடைக்கும். வெளுக்காரர் இந்தியாவிற்கு வருவதற்கு முன் நமக்குவேண்டிய துணிகளெல்லாம் நாமேநெய்து

கொண்டோம். இப்பொழுதோ நமது வஸ்திரங்களெல்லாம் அன்னிடமேசப் பொருள்கள். அதை நிறுத்துமபொருட்டு முதலாவதாக நமது வியாபாரிகள் அந்நியதேசத்துத் துணிகளை வரவழைக்கக்கூடாது. தங்களிடம் இருப்பனவற்றை அந்நிய தேசத்தவர்களுக்கு சொறபவிலைக்காவது கொடுத்துவிடவேண்டும். பருத்தியை மற்ற தேசங்களுக்கு அனுப்பவுங் கூடாது. மற்ற தேசங்களிலிருந்து வாங்கவுங் கூடாது. ஒவ்வொருவரும் சுதேசித்துணியையே உடுத்த வேண்டும். நாம் இப்பொழுது கையாடும் யுதந்தம் ஆயிக்குரியது. மகா மாறுதல்களை யுண்டாக்கும் இக்காலத்தில் சாதாரண சுசஜீவியம் உதவாது. ஒரே வருஷத்தில் சுயராஜ்யங் கிடைக்கவேண்டுமாலால் நமது நோக்கத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து மற்றவைகளெவையுங் கவனிக்கக்கூடாது. பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்களெல்லாம் ஒரு வருஷத்திற்கு படிப்பை நிறுத்திவிட்டு நெசவு செயயப் பழகவேண்டும். கடந்த ஐரோப்பிய யுத்தத்தில் யந்திரசாலைகளை யெல்லாம் சயக்குண்டுசெயது எதிரிகளை எதிர்க்க உபயோகித்தார்களலையா? அதே பிரகாரம் பாட்சாலைகளும் வித்தியாசாலைகளும் இந்தியர்களுக்குத் துணி சவதரிப்பதற்கான நெசவுசாலைகளாக மறவேண்டும். இதனால் மாணவர்கள் இழந்துவிடுவது ஒன்றுமில்லை. ஆனால் அவர்களுக்கு நிம்மையிலும் மறுமையிலும் ராஜரீகம் கிடைக்கும். இந்தியாவில் துணிப்பஞ்சம் அதிகரித்துவிட்டது. ஆகலால் நெசவுத் தொழிலைக் கற்றுக்கொள்வதே புண்ணியமாகுப. பூர்வீகத்தில் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள ஸ்திரீகள் நூல் நூற்பது வழக்கம். இதுவே அவர்கள் சற்லைக் காத்துவந்தது. இதுவே பஞ்சநிவர்த்திக்குக் காரணமாயிருந்தது. இதுவே விலைகளைச் சரசமாக்குவது. இதுவே சுயராஜ்யம் அடையுமசுலபமான வழி. சாத்தானின் தந்திரமாகிய அந்நியதேசத்துத் தொழிலாளிகளின் வலையில் சிக்கிக்கொண்டோம்மை முறபிதாக்கள் செயதபாவத்திற்கு நாம் உத்தரித்துத்தீரவேண்டிய தண்டனை கை நெசவைச் சீர்படுத்துவதே. விதயார்த்திகளுக்குச் செல்லும மாணவர்களே கை நெசவை முன்னுக்குக் கொண்டுவரக்கூடியவர்கள். அவர்கள் நெய்த துணியைப பெற்றோர் உபயோகிக்க விரும்புவார்களல்லவா? கை நெசவை உடனே தறபிக்கவேண்டும் என்று நான்சொல்வது ஜீவனோர்த்தத்தைத்தேடிவைக்கும்பொருட்டல்ல. உடனே சுயராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ளும் ஏதுவான கடமையாக இதை ஒவ்வொருவரும கைபாடிவர சுயராஜ்பம் உடனே கிட்டும். இது உண்மை என்கிறேன்.

இந்தியா முழுவதிற்கும் பொதுவான ஒரே சுதேசிய பாஷை அவசியம். இந்தி பாஷையை நாமிடநாடு தவிர மற்ற நாட்டி

ஸ்ள்ளவர்களெல்லாம் உபயோகித்து வருவதால் சுயாதீனத்தின் பொருட்டு பாடசாலையை விட்டிருக்கு பாணவர் அனைவரும் இந்தி பாஷையையும் தறி நெய்தலையும் கற்றுக்கொள்வதில் சுயராஜ்ய நபசு காலமாகிய இந்த வருஷததைச் செலவிடவேண்டும். கைத் தொழில், சாஸ்திர ஆராய்ச்சி, இதர நாட்டவர்களின் அபிவிர்த்தி முதலியவற்றைக் கற்று அவர்களைவிட மேலான பதவிக்கு வருதல் முதலியவற்றைப் பற்றி நமக்கு சுயராஜ்யம் கிடைத்தபின் பார்த் துக்கொள்ளலாம். இந்த இக்கட்டான வருஷத்தில் இந்தியர் அனை வரும் ஜாதி மதபேதங்களைத் தவிர்த்து ஏகமனதாய் என்றெடு உழைத்தால் சுயராஜ்யம் எளிதில் கிட்டும் என்கிறார் மகாத்மா.

தீண்டாத்தீதாஷம்.

The Sin of untouchability.)

"மனுஷர் உங்களுக்கு எதைச் செய்ய விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." —கிறிஸ்து.

மஹாத்மா காந்தி சொல்வதாவது:—

சுயராஜ்யம் அடையப் பொருட்டு இந்த மார்க்கத்திலுள்ள தறையாகிய ஜாதி விக்கியாசத்தை உடனே நீக்கவேண்டுமென்ற இந்த வருஷத்திய (National Congress) நாஷனல் காங்கிரஸின் தீர்மானம் கனிக்கததக்கது. தனித்தாழரின் ஏகதாசையைக் கொண்டே சாத்தான் ஜயமடைகிறான். நமது பலவீனங்கள் எவ் வளவோ அவற்றின் மூலமாகவே அவன் நமக்கு எஜமானாகப் பார்க்கின்றன. அதுபோலவே, அதிகார வர்க்கத்தினரும் நமது பலவீனங்கள் பாதகச் செயல்கள் மூலமாகவே நம்மை ஆளுகின் றனர். நாம் அவர்கள் கண்ணிக்குத் தபபவேண்டுமானல் நமது பலவீனங்களை நீக்கவேண்டும். இதற்காகவே ஒத்துழையாமையை சுத்திகரிப்பு மார்க்கம் என்கிறேன். நமது பலவீனங்களை அறவே நீக்கி நாம் சுதந்தரவான்கள் ஆனவுடன், இந்த ராஜாங்கம் நிற்பதற்கு ஆதாரமில்லாமல் தலிடுபொடியாகிவிடும். அது எதுபோலெனில், நாற்றமுள்ள குளங்களில் கொசுக்கள் வித்தியாகின்றன. குளத் தைத் தூர்த்து காயவைத்துவிடின் கொசுக்கள் பிறபதற்கு ஆதார மில்லாதபடியால் மறைந்துவிடுமல்லவா? தீண்டாத்தீதாஷத்தைக் கையாடினதின் பயனாக தகுந்த தண்டனையை அனுபவிக்கிறோ மன்றோ? நாம் விதைத்ததைத்தானே அறுக்கிறோம்? டையர், ஓடி யர் என்ற இரு துஷ்டரும் கையாடின தன்மார்க்கத்தையே நாம் நபதுசொந்த ஜனங்களுக்கு விரோதமாகக் கையாடுவது தகுமோ? பறையனைத் தள்ளி நிற்கச் செய்கிறோம். அதுபோலவே, பிரிட் டிஷ் குடியேற்ற நாடுகளிலும் நம்மைத் தள்ளி நிற்கச் சொல்லு கிறார்கள்.

பொதுக்கிணற்றில் பறையர் தண்ணீர் பொள்ளக்கூடாதென் கிறோம். நமது எச்சில் அயன்மேல் எறிகிறோம். அவன் நிழலை நம்மைத் தீட்டுப்படுத்துகிறது. நாம் வெளிலோகாரர்மேல் என் னென்ன குற்றங்கள சாட்டுகிறோமோ அந்த குற்றங்களெ யெல் லாம் பறையன நம்மேல சாட்டுவதற்கு இடமில்லையோ?

இந்த மார்க்கத்திலுள்ள இந்தக் கறையை நீக்குவதெப்படி? "மற்றவர்கள் உங்களுக்கு எதைச் செய்ய விரும்புகிறீர்களோ அதைச்ய நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." நாம் ஆங் கிலேய உத்தியோகஸ்தரைப் பார்த்து நீங்கள் இந்தியாவின் தொழு ரும், ஊழியருமாயிருந்தால் உங்களது உயர்ந்த ஆசனங்களினின் றும் கீழ் இறங்க வேண்டும். கௌரவத்தைக் குணிக்கவேண்டும். இதர ஆங்கிலேயர்களை எவ்விதம் சமமாகப் பாவித்து உபசரிக்கின் றீர்களோ அவ்விதமாக இந்தியர்களையும் சமமாகப்பாவித்து அவ் வின கிரியைகளிலும் நடப்பு பார்க்க வேண்டும் என்கிறோம். பஞ்சாப் குழப்பத்திற்கு, கிலாபத்து விஷயத்திற்கும் பிரபு நாம் வெள்ளைக்காரரை நோக்கி, உங்கள் இருதயங்களை மாற்றி மனந் திரும்புங்கள் என்று சொன்னதாயிற்று. அந்தரங்கமும் இருக்கிற படியும் செய்த தப்பிதங்களுக்காக மனஸ்தாபப்பட்டு பசாதின் தங்கிரகங்களுக்கு ஆளாகி தாழ்ச்சியடைந்த ஜாதியாரிடத்தில் நடந்து கொள்ளுகிற முறையை மாற்றவேண்டும். அவர்கள் முன்மேன்மை பாராட்டி அவர்களை தாழ்மையாக நடத்துவது தகுதியன்று. அவர் கள் நமது சொந்த இரத்தத்தை வியாட்டிய சகோதரர் என்று நினை க்க வேண்டும். நாம் அவர்களிடமிருந்து திருடிக்கொண்ட — அவர்கள் சுதந்தரத்தை திருப்பக் கொடுத்துவிட வேண்டும்; ஆங்கிலேய பாஷையைத் தெரிந்த சில சிற்றிருத்தக்காரர்களை மட்டும் அப்படிச் செய்தால் போதாது. பொதுஜனங்கள் அனைவரும் தங்கள் முழுமனதோடும் செய்யவேண்டிய கிரியை இதுவாகும். எவ் ளவோ காலதாமதத்திற்கு முன் நடந்திருக்க வேண்டிய இந்த நீதிக்குத் தத்திற்காக நாம் காத்திருக்க வேண்டியதில்லை. கிருபையின் கால மும், ஆயத்தத்தின் காலமும், தபசுகாலமுமாகிய இந்த வருஷத்தி லேயே இது நடந்தேற வேண்டும். சுயராஜ்யம் அடைந்த பிறகல்ல. அதற்கு முன்னதாகவே இந்த சிற்றிருத்தம் நடந்தேற வேண்டும்.

தீண்டாத்தோஷமானது மார்க்கங்களினால் ஏற்படுத்தப்பட்ட தல்ல. சாத்தான் நாட்டி வைத்த கண்ணி. ("சாத்தானின நோக்கு டம் அதிகம்.") பரிசுத்த வேதாகமங்களிலிருந்தேகூட தனக்கு வேண்டிய வேதவாக்கியங்களைப் பொறுக்கி எடுத்துக் காட்டும சக்தியையுடையவன் அவன். ஆனால், வேதாகமங்கள் பகுத்தறி

கிற்கும், சத்தியத்திற்கும் விரோதமானவைக ளென்பதற் கிடமில்லையே. சத்திய வேதமே அறிவைப் புதுப்பித்து சத்தியத்தைப் பிரகாசிப்பிக்கின்றது. வேதங்களிலே பலியிட வேண்டுமென்று சற்பித்து, போதித்து, அனுபவத்தில் கொண்டு வந்திருப்பதனால் மாசற்ற ஒரு குதிரையை நான் அக்கினிக் கிரையாக்கப் போகிற தில்லை. எனக்கு வேதங்கள் தெய்வத்தினிடத்திலிருந்து வருபவை யாதலினாலே. எழுதப்பட்டனவைகளல்ல "எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" 2 கொரி: 3: 6) வேதங்களிலடங்கிய "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலா: 5-22-23,) அதனாலே ஒரு பெண்ணுக்கு உள்ளது ஒரு ஸ்திரீக்கு சமானமாயுள்ள பெண்மையாயுள்ள தாக்கூடியது. பரிசுத்த முழுமுற்றும் குறைவுஞ் சொல்லாமல் தன் கள்ளத்தில் நிறுத்திகொண்டிருக்கும் பிரகாசமுள்ள ஆயிரக்கணக்கான தோட்டிகளை கர்வங்கொண்டு கலகமாய் மதித்துத் தூஷிப்பது சுதந்தரமுள்ள பெண்களின் குணமன்று. தேவனுடைய சாதியார் கட்டளையத்தின்கீழ் செய்யும் தொழிலை நாம் பரிபூர்த்தியடையச் செய்யத்தக்க ஞானத்தையும் சக்தியையும் கடவுள் அருள்வாராக. நாம் சுத்தி செய்யவேண்டிய, அசுத்தமான குதிரைகளைப் பற்றி அனந்தம் உள்ளன.

சென்னை கவர்னருக்கு சுதேசியின் லிகிதம்.

சுதேசமித்திரன் கல்கத்தா, 1921- வது பிப்ரவரி 1உ

சுதேசமித்திரன் சென்னை கோமகனுக்கு அடியில் வருமாறு மகாத்மா காந்தி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்:—

ராஜசம்பிரமான கவர்னருக்கு,

ஐயா!

தாங்கள் ஒற்றுமையாண்மை தர்மத்தைப் பற்றியும், ஒற்றுமை யாண்மைக்காரர்களைப் பற்றியும், அவர்களுடைய முறைகளைப் பற்றியும், அவ்வியக்கத்தின் பிரதானமான கர்த்தாவாகிய என்னைக் குறித்தும், விசேஷமாய்க் கேள்விப்பட்டிருக்க வேண்டும். இது விஷயமாய்க் கூடத்திருக்கக்கூடிய தகவல்கள் ஒருதலைப் பட்சமாகவே யிருந்திருக்க வேண்டும். ஆகையால் ஒற்றுமையாண்மை தர்மத்தின் அர்த்தத்தைத் தங்களுக்கு எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத் தர்மத்தை நான் எப்படிக் கையாடி வருகிறேன் என்பதை மாத்திரமல்ல எனது பெருங்கிய தோழர்களான மௌல்ஸ்

வஹுகத் அலி, முகமத் அலி ஆகியவர்கள் எப்படி அணுஷ்டிக்கி றார்க ளென்பதையும், தங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். நான் சம்பந்தப்பட்டவரையில, தங்களுடைய விஷயத்தை பஹிஷ் காரம் செய்யும் விஷயத்தில் தீவிரமாய் சம்பந்தப்படுவது எனக் குண்மையில் சந்தோஷத்தை புண்டுபண்ணவில்லை. கவர்ன்மெண் டாருடன் ஒற்றுமைழப்பதனல் எனது நாட்டாருக்கு சுயேச்சை கிடைக்குமென்ற பூரா நம்பிக்கையுடனே 30 வருஷகாலம் நான் பரம ராஜவிசுவாசத்துடன் இந்த கவர்ன்மெண்டுக்கு எவ்வளவோ உதவி புரிந்து வந்திருக்கிறேன். ஆகையால் தங்கள் வரலாறு பஹிஷ்காரம் செய்யும்படி எனது தேசத்தாருக்கு இப்போது யோசனை சொல்லத் துணிந்தது கேவலம் விளையாட்டுக்கு அல்ல; அற்பமான காரணங்களை யுத்தேசித்துமல்ல. ஓர் ஆங்கிலப் பிரபு என்ற முறையில் தங்களிடமெங்களுக்கு விரோதம் கிடையாது. நெருங்கிய நண்பர்களை நாங்கள் எப்படி பாவிப்போமோ, அது போல தகைகளுடைய சன்னிதானத்தையும் நாங்கள் கட்டாயம் பாவிக்கிறோம். தங்கள் உயிருக்கு ஆபத்து வந்தால்கூட எங்க ளுயிருக்கு ஆபத்து வந்ததாகவ்வ நாங்கள் மதிப்போம். தனிப் பட்ட ஆங்கிலேயர்களோடு எங்களுக்குச் சண்டையே கிடை யாது. ஆங்கிலேயரின் உயிரை நாங்கள் அழிக்க விரும்பவில்லை.

எனது தேசத்தாரின் உடல், மனப், ஆவி ஆகிய மூன்றையும் ஆண்மையற்றதாய்ச் செய்துவிட்ட அந்த ஆட்சி முறையை நாசமாக்குவதே எங்களின் உத்தேசம்.

பஞ்சாப்பில் ஒரு டயரும், ஓட்வியரும் அட்டூழியம் செய்யும் படி விட்டதும், 7 கோடி முஸ்லீம்களால் அணுஷ்டிக்கப்படுகிற இஸ்லாத்தை வேண்டுமென்று அவ்மானப்படுத்தியதுமான அந்தக் கெட்ட ஆங்கில குணத்தை ஒழித்ததுப்போடவே நாம் சம்மை யாய்ச் சண்டைபோடத் தீர்மானித்திருக்கிறோம். முதல் மந்திரி யின் உறுதி மொழிப்படி ஒன்றுமே நடக்கவில்லை. ஹிந்தாதி களான 30-கோடி இந்தியரின உணர்ச்சியையும் ஒரு மகா முக் கியமான விஷயத்தில புறக்கணித்து அவமதிக்கும்படி செய்த அந்த ஜாதிப பெருமையையும், நாமே பெரியவர்களென்ற இறு மாப் புணர்ச்சியையும்; இனி நாங்கள் சகித்திருக்க முடியாது. சகித்தால் எங்கள்மதிப்பையும் மானத்தையும் கெடுத்துக் கொண் டவர்களாவோம்

கேவலம் ஒரு லட்சம் ஆங்கிலேயரிடத்தில் சதாகாலமும் நடுங்கிக்கொண்டு, அவர்களுக்குப பணிந்து, 30 கோடி மக்கள் வாழ்ந்து வரவேண்டி யிருக்கிறதென்றால், தங்களுக்

கதை பெருமையாகாது. தாங்கள் இங்கு வந்திருக்கும் உத்தேசம் அத்தகைய ஆட்சி முறையை ஒழிப்பதற்காக அல்ல. அதை இன்னும் கொஞ்சதூரம் தூக்கிவிடுப்போவதற்கேயாகும். லார்டு விலிங்டனை தாங்கள் முதல் முதலாய்ச் சிலாகித்தீர்கள். அவர் கண்ணியமான குணமுடையவர்தான். எனக்கும் அவரைத்தெரியும். ஒரு சமயினிடத்தில்கூட அவருக்கு ஜீவகாருண்யமுண்டு. ஆனல் ஒழுங்காய் ஆட்சி செலுத்த அவரால் முடியவில்லை. அவர் சில சுயநலக்காரர்களின் வலையிலகப்பட்டு, சுயமாய் எதுவும் செய்யாமலிருந்துவிட்டார்.

இராஜிட மாகாணத்தின் உண்மையான உணர்ச்சியை அவர் அறிந்திருக்கிறாரில்லை. நிற்க, வங்காளத்துக்கு வந்தபின்பும், தாங்கள் கவர்னருக்கு யோக்கியதா பத்திரம் அளித்திருக்கிறீர்கள். வங்காளதாரின் உணர்ச்சியை அவரும் அறியமாட்டார். சல்சுத்தாணைப் பார்த்துவிட்டு, தாங்கள் வங்காளத்தைப் பார்த்ததாக நினைத்துவிடக்கூடாது. போர்ட் வில்லியம் கோட்டையும் மாடமாளிகைகளும் இந்தேசத்தின் வனமைக்கோடிகளான ஏழை விபசாயிகளின் சிரமத்தில்தல் கட்டப்பட்டனவாதும்.

இவ்வழகிய மாகாணத்தின் பொருளாதாய மூலங்களைக்கேவலமாய்த் தோண்டியெடுத்த பணத்தைக்கொண்டுதான் மேற்படி அரண்மனைகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தியரின் தரித்திரத்தையும் அவமானத்தையும் போக்கடிக்க முடியாத இந்த அரசியல் திருத்தத்தின் உண்மையான யோக்கியதையை ஒற்றுமையாமைக்காரர்கள் நன்கு அறிவார்கள். ஆனல் அதற்காக ஆதரிப்பட்டு நாங்கள் பலாத்காரத்தில் இறங்கமாட்டோம். நாங்கள் இதுவரை ஒற்றுமைதத்து வந்ததன காரணமாகவே இவ்வளவு தூரம் சுவட்டதற்குக் காளாகி விட்டோம். பிரிட்டிஷ் பிரஜைகள் மட்டும் அதற்கு ஜவாப்தாரியல்ல. தங்களுடைய விஷயத்தை பகிஷ்காரம் செய்வதனல், தாங்கள் மேன்மைப்படுத்தவந்திருக்கும் ஆட்சி முறையை இந்தியர் விரும்பவில்லை யென்ற உணர்ச்சியைத் தெரிவிக்க வேண்டியே யன்றித் தங்களை அவமானப்படுத்துவதற்காக அல்ல. தனிப்பட்ட சில ஆங்கிலேயர் இழப்பட்டால்கூட ஆங்கில ஜாதியின் குணத்தைத் திடமென்று திருத்திவிட முடியாது. ஆங்கிலேயருக்குச் சமமாய் நாங்கள் இருக்கவேண்டுமானல் சுயநபயிக்கையைதான் நாங்கள் உண்டுபண்ணிக்கொள்ள வேண்டும். இந்தக் கவர்ன்மெண்டின் ஆதீனத்திலுள்ள கல்விச்சாலைகளையும் நியாயஸ்தலங்களையும் நாங்கள் நபயிபிருக்கக்கூடாது. இந்த ஆட்சி முறையைத் திருத்த முடியாதென்றல்; அதை ஒழித்து விடுவதாகவே எங்களுடைய உத்தேசம். ஆகையால்தான்

பலாத்காரமற்ற ஒத்துழையாமையை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். பலாத்காரமற்ற உணர்ச்சி பூராவாக எல்லோருக்கும் இன்னும் ஏற்பட்டு விடவில்லை யென்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆயினும், இதுவரை அனுபவத்தில் கிடைத்திருக்கிற வெற்றி ஆச்சரியமாகவே யிருக்கிறது. பலாத்காரமற்ற இந்த இயக்கத்தின் மேன்மையை ஜனங்கள் வாஸ்தவத்தில் உணர ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த இயக்கம் மதசம்பந்தமானது; எங்களையே பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்காகவே இவ்வியக்கம் ஏற்பட்டது. குடியை நாங்கள் விட்டுவருகிறோம். தீண்டாதாரித்யாசம் தேசத்தில் இல்லாதபடி நாங்கள் ஏற்பாடு செய்து வருகிறோம். அன்னியதாட்டுச் சாமான்களை நாங்கள் உதறித் தள்ளி வருகிறோம். கைராட்டினங்களால் நெசவும் செய்து வருகிறோம். சட்டாயும் அழகாயும் வாழும்பொருட்டு எங்கள் மூதாதையர்களைப் பின்பற்றப் பார்க்கிறோம்.

ஓர் ஆங்கிலேயர் என்ற முறையில் நாங்கள் இந்த இயக்கத்தின் மர்மத்தைத் படித்தறிந்து, அதன் மூலமாய் இந்த உலகத்துக்கும் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்துக்கும் ஏற்படக்கூடிய நன்மையை உணர்ந்துகொள்ளும்படி நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். உலகத்தில் நலலதே இருக்கக்கூடாதென்பது எங்கள் நோக்கமல்ல. மனித வர்க்கத்தைத்தீய நாங்கள் மேன்மைப்படுத்த விரும்புகிறோம். யாருக்கும் உபத்திரவம் விளைவிக்கமாட்டோம்.

ஆங்கிலேயர்களோடு நேசபாவமாய்ப் பழக எங்களுக்கிஷ்டந்தான். ஆனல் சமமான அந்தஸ்து எங்களுக்கேற்படாத வரையில், ஒத்துழையாமையை நாங்கள் கடைதிதான் தீருவோம். அதாவது எங்களையே பரிசுத்தப்படுத்திக்கொள்வோம். ஆகையால் ஒத்துழையாமைக்காரர்களின் இந்த லட்சியத்தைத் தாங்களும் மற்றுமுள்ள ஆங்கில கனவான்களும் சம்மையாய் அறிந்துகொள்ள வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

இங்ஙனம்.

தங்கள் உண்மையுள்ள ஊழியன்,

(ஒப்பம்) எம். கே. காந்தி.

(சு. மி. 2-2-21.)

கல்கத்தாவில் மஹாத்மா காந்தி மாணவருக்குச் சொல்லிய அரிய புத்திமதி.

1921-ம் வருட ஜனுவரி 24-ந் தேதி மாலை கல்கத்தாவில் தேசீய மாணவர்களின் முன்னாக மகாத்மா காந்தி ஓர் அரிய உபந்யாசம் செய்தார். மிஸ்டர் வி. ஆர். தாஸ் அச்சமயம் அக்கிராசனம் வஹித்திருந்தார். மகாத்மா காந்தி பேசியதாவது:—நண்பர்களே! பிரஸவ காலத்தில் ஸ்திரீக்கு ஏற்படும் கஷ்டமும் சுவலியும் எப்படிப்பட்டனவோ, அதைப்போன்ற கஷ்டத்துக்கும் சுவலைக்கும் நாம ஆளாகி வருகிறோம். ஒரு மஹத்தான மாறுதல் தேசத்தில் தோன்றி யிருக்கிறது. தேசத்தின் கட்டளைக் கிணங்க நீங்கள் கல்வியை விட்டுவிடலாகாது. அதைத் தடுத்து உங்களை நான் மிகுதியும் பாராட்டுகின்றேன். மிஸ்டர் வி. ஆர். தாஸ் உங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்றே நீங்கள் இத்தனை காலமாய்க் காத்திருந்தீர்களென்பதும் எனக்குத் தெரியும். அவரையும் நான் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன். உங்கள் வேலை இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது. படிப்பை விடுவதுமட்டும் உங்களுடைய வேலையல்ல. சிறிதுகாலம் நீங்கள் உபாத்யாயர்களாயிருந்து ஆக்ம சோதனைக்கும் ஸ்வயச்சித்தத்துக்கும் ஆளாகவேண்டும். இன்ன வேலைதான உங்களுக்குக் கிடைப்பதென்று தெரிந்து கொள்ளும் வரையில், கலாசாலைக்கு யாரும் போய்விடாதீர்கள்.

நீடித்த வேலைக்கு வழி.

பள்ளிக்கூடத்தினின்றும் நீங்கள் விலகியாய் விட்டது. ஆனால் நீடித்த மேலை இனிச் செய்யவேண்டி யிருக்கிறது. சுயராஜ்யம் பெற உங்களுதவி வேண்டும். ஆசிரியர்களும், கல்விமான்களும், கலாசாலை டிரஸ்டிகளும் உங்களைப் பார்த்துபின்புகூட அனுசரிக்கும் நிலைமை எனக்கு வருத்தமாயிருக்கிறது. என்னுடைய துக்கத்தை நீங்கள் அளவிட முடியாது. ஆசிரியர்களுக்கு மேதாவி மான மில்லையென்று நான் கண்டிப்பதாக நினைத்துவிடக்கூடாது. தேசத்தின் கட்டளைக்கு நீங்கள் இணங்கும்படியும், எனச்சாட்சியை மதித்து நீங்கள் பதுங்கக்கூடாதென்றும், மிஸ்டர் வி. ஆர். தாஸ் சொல்லியது அவர்களுக்குப பிசகென்று படுகிறது.

கல்விச்சாலை பஹிஷ்காரத்தை நான் ஆதரித்துப் பேசுவதைக் கூட அவர்கள் விரும்பாமலிருக்கலாம். ஏதோ எனது அனுபோகம் சம்பந்தப்பட்ட வரையில், உங்கள் மூத்தோர்களுக்கும் நமது தலைவர்களுக்கும் சில புத்திமதிகள் சொல்ல எனக்கு யோக்கியதை

யுண்டு. நான் செல்லிய யோசனை சரியானதென்ற ஒரு நிச்சய மான நம்பிகைக எனக்கில்லாமற போகவில்லை.

இந்தியாவின் சௌரவத்தைக் காப்பாற்றவும், சுயராஜ்யம் ஏற்படச் செய்யவும், ஸ்வராத்திய மந்திரமையைக் காகவும், இந்த சவர்ணமெண்டோடு நாம் ஒற்றுமை பாராட்டக்கூடாது. நமது நமபிக் கையை இழந்துவிட்ட ஒரு கவர்ன்மெண்டோடு உலகருக்கு என்ன சம்பந்தம்? உண்மைக்கு ஒரு முகந்தான் உண்டு; எத் தனை தடவை வேண்டுமானாலும் உண்மையைச் சொல்ல நான ஏன் பின வாங்கவேண்டும்? ஒற்றுமை பாரமையை நாம் அனுஷ்டித்தா லன்றி, இழந்துபான சௌரவத்தை மீண்டும் பெற முடியாது. (காரகோஷம்) என் பொருட்டு தேசத்தாரனவரும் ஒற்றுமை யாமை தர்மத்துக்குச் சம்மதித்து வி—வில்லை. அவர்களுடைய உள்ளெலும்பிலேய அதர்மம ஊடிக்கிடக்கின்றது. ஒற்றுமை யாமை நமது ஹிந்து தர்மம். அது இஸ்லாதினை தர்மமுமாகும். தூக்கத்திலிருந்து நமமை எழுப்பவிட்டதும் ஒற்றுமையாமை தர்மமேபாகும். ஒரு பெரிய காரியத்தையும் நபபிக்கையையும் அது நமகுள் உண்டபண்ணி விட்டது. ஒற்றுமை பாரமையில் சோதவர்களுக்கு மதவுணர்ச்சி யில்லையென்றே சொல்லவேண் டும்.

படித்த தலைவர்கள் பலர் நவீன நாகரீகத்தில் முழுகிக் கிடக் கிறார்கள். அந்த மேலைட்டு நாகரீகம் நமக்கு வேண்டாம். மேலைட் டுக் கல்வியும் நாகரீகமும் எனக்கொன்றுமே கற்பிக்கவில்லையென்று நான் சொலல வரவில்லை. அக்கல்வியும் நாகரீகமும கூடவே கூடா தென்று கண்டு பிடித்துச் சொல்லவே அது எனக்குக் கற்றுக் கொடுத்தது. அதிலிருந்து நான் கற்றுக்கொண்டது இதுதான். மேலைட்டு நாகரீகம சாபம். (கேளுங்கள், கேளுங்கள்) அச்சாபத் தை எதற்காக ஏற்றுக்கொள்ள வேண்டும? ஒரு மத யுத்தத்தில் வெற்றிபெற அது அனுகூலமாயிராது. நமது இயக்கம் ஒரு மதப் போரென்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். பிரிட்டிஷாரின் தற் போதைய ஆட்சி முறையைக் கண்டு ஜனத்திரள்கள் ஜாடாவும் கலைத்துப் போய் விட்டதால், ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் ஏன் கிடைக்காது? (காரகோஷம்.) ஏழுகளவே 4 மாதங்கள் கழிந்தும்போய்விட்டன. எனது நபபிக்கை மட்டும் குறையவே யில்லை. உங்களைக் கண்டதாலும அதிகமான நம்பிக்கை எனக்கேற் படுகின்றது. தேசியக் கல்வியோ, நூல் நூற்கும் வேலையோ எதா வது ஒன்றில் ஈடுபட்டிருங்கள். அலி சகோதரர்களும் நானும் சேர்ந்து, சுயராஜ்யக் கொடியை இவ்வருஷந் கோடிக்குள் நாட்டிவிடுவதை சாத்யமாகும்படி ஆண்டவன் எங்களுக்குயிர்

கொடுப்பாராக. அடுத்த 8 மாதத்திற்குள் எனதாவி போய்விட்டாலுகூட, வருஷக்கோடிகளான சுயராஜ்யம் நிச்சயமென்ற உணர்ச்சியோடுதான் இருப்பேன். (கரகோஷம்.)

நண்பர்களே!

இங்கிலாந்தில் மகா யுத்தத்தின்போது மாணவச் சிறுவர்கள் தங்கள் சித்தியமில்லை ஓளவு பியுத்தி பகசகிசனவயில் கவலை காட்டிய விஷயம உங்களனவருக்கும தெரிந்திருக்கவேண்டும். மாணவர் சிறுமிகள்கூட நேச சேனை செய்யப் புகுந்ததை நான் இவகு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. —கெயிரா ஜில்லாவில் நான் யுதததத்துக்கு ஆள் சேர்த்தபோதும் கவர்ன்மெண்டுக்குச் சந்தோஷமாயிருந்தது. அதெலலடம் யுத்தகால தர்மம். மாணவச் சிறுவர்களை யுத்தவேலைக்குத் தயார் பண்ணக்கூடாதென்று பெற்றோர்களாவது கவர்ன்மெணடாவாவது அச்சமயம் எனக்கு எச்சரிக்கை செய்ய முனவரவில்லை.

நமது ஏற்றுமதியாமை யுத்தம் சாமான்யமானதல்ல. மாணவச் சிறுவர்களை இநத யுதததத்துக்கு நான் அழைக்கும்போது மட்டும் சிலர் ஆட்சேபிக்க வருவதை முற்றிலும நியாயமாகப்படவில்லை. ஒவவொரு மனிதனும், ஒவவொரு ஸதிரீ குழநதையும் சொந்தத்தில் நூல் நூறறுத தனி செய்துகொணடாலொழிய, அனனிய வஸ்து பஹஷ்காரம் ஒரும்பாதது சாத்தியமில்லை. காங்கிரஸின் மேடையில ஏறி நின்றகொணடு நூல நூறறல் மடடும் அது போதாது. 35-வருஷமாய் காங்கிரஸ் அவவேலையைச் செய்தாகி விட்டது. உணமையான நூல இனியாவது நூற்போம். (கரகோஷம்.)

அனனியநாட்டுத் துணி ஸோ நாம் வாங்காதிருக்கும் பஹஷ்கரிப்; பார்லிமெண்டிலுள்ள 55 மதாழிலாளர் பிரதிநிதிகளுக்கும் ஐம்பான தேசனியாபாரிகளுக்கும, இநதியாவைத் தொணடியெடுக்கும மற்றும் முகலாளிகளுககும வேலையில்லாமற் போய்விடும். உடுப்புக்கும உணவுக்கும நாம பிறரை நம்பியிருப்பது மகா மோசமான காரியம். 2000 மைல நீளமும, 1500 மைல் அகலமும் விஸ்தாரணமுள்ள இநநாடு சோற்றுக்கும் துணிக்கும் அனனியநாடுகளை நம்பியிருப்பதா? சிறுவர்களாகிய நீங்கள் எனது புத்திப்படி நடநதால் ஒரு வாரஷத்தில் சுயராஜ்யம் வாங்கித்தருவேன் என்று சொலலிவிட்டு ஹிந்துஸ்தானி பாஷையை மாணவர் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மௌலானா முகமது அலியும் மேற்சொனன விஷயங்களையே வற்புறுத்திப் பேசினார்.

கவுண்ட் லியோ டால்ஸ்டாய்.

ஐரோப்பிய மகரிஷியும் மகாத்மா காந்தியின் குருவும் சமரச ஞான தத்துவத்தை உலகில் பரவச் செய்தவருமான கவுண்ட் லியோ டால்ஸ்டாய் ருஷியா தேசத்தில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்த ஓர் பிரபு. இவர் பிறந்தது 1828-ல். இறந்தது 1911-ல்.

வித்யாசாலையில் கலைக்கியானங்களைக் கற்றுத்தேர்ந்தபின் காக்கேஷியா மலையிலும் கிரிமியா யுத்தத்திலும் சிலகாலம் போர்வீரனாகத் சேவித்தார். அதன்பின் 1862-ம் வருஷ முதல் சாகும்வரை மாஸ்கோ நகரத்தின் பக்கத்திலுள்ள தமதுபூமியில் வாசஞ்செய்து கொண்டிருந்தவதிலும் தமது சொத்துக்களை மேற்பார்ப்பதிலும் தமது காலத்தைச் செலவிட்டார். இவரெழுதிய நூல்கள், கதைகள், உபமானங்கள், கடிதங்கள் முதலியவற்றைச் சேர்த்துக் கட்டி முப்பது பெரிய புஸ்தகங்களாக ருஷிய பாஷையில் வெளியாக்கி யிருக்கிறார்கள். அவற்றைப் பற்பல பாஷைகளிலும் மொழி பெயர்த்தும் பிரசுரித்திருக்கின்றனர். இங்கிலீஷ் மொழி பெயர்ப்பான சில புஸ்தகங்களை நாம் வாசித்துப் பார்த்திருக்கிறோம். சமரச ஞானம் உலகில் பரவும்படி பகவானால் அனுப்பப்பட்ட ஓர் ஞானியாகத் தெரிகிறது. கிறிஸ்து போதித்த ஞானோபதேசங்களிலடங்கிய ஆத்மீகக் கருத்தை வெளியாக்கி தற்காலத்தில் உலகில் பரவிவரும் தற்கால நாகரீகத்தினால் விளையும் கெடுதிகளை எடுத்துக் காட்டி அதைக் கண்டித்திருக்கிறார். ஐசுவரியத்தைத் தாட்டி சீமான்களாக சகல சம்பிரமத்துடன் வாழ்பவர்கள் மற்றவர்களை அடிமைகளாக நடத்தி வதியஞ் சம்பாதிப்பது தகாதெனக் காண்பித்தார். தம்மிடத்தில் வேலையஞ் செய்து வந்த அடிமைகளுக்கும் சுயாதீனம் கொடுத்தார். அதன்பயனாக ருஷியா தேசத்தில் அதுவரை நடந்துவந்த அடிமை வியாபாரம் நீங்கிற்று.

இந்த மெய்யான கிறிஸ்தவ பக்தசிகாமணி, கிறிஸ்துவானவர் திருவாய் மலர்ந்தருளிய ஒவ்வொரு மொழிகளையும் தம் முன் நிறுத்தி அவற்றில் புதை பொருளாய் அடங்கியுள்ள ஆழ்ந்த கருத்துக்களைப் பற்றி சதா தியானஞ் செய்துகொண்டே யிருப்பார். உடனே ஒவ்வொரு கருத்தையும் உலகத்தவர்க்கு எடுத்துக் காண்பிக்க உதாரணங்கள், உபமானங்கள், கதைகள முதலியவற்றை எழுதுவார். அவற்றில் சிலவற்றை நாம் இப்பொழுது அச்சிட்டு வரும் "டால்ஸ்டாயின் கதைகள்" என்ற புஸ்தகத்தில் காணலாம்.

இவரெழுதிய புஸ்தகங்களை சிறுவயதுமுதல் வாசித்து தியானித்து வந்தமே மஹாத்மா காந்திக்கு சமரச ஞானமும் சுயராஜ



கவுண்ட்லியோ டால்ஸ்ரோய்.

வெறுப்பாலானிய சுயசிந்தனையே சுயராஜ்யம் அடையும் வழி என்ற ஞானமும் அடைந்தது போதும்.

"சகலசொத்துக்களும் சகலமனுஷ்யருக்கும் பொதுவாதலால் உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஐசுவரியவான் ஏழை, அரசன் குடிகள் என்ற பித்தியாசம் இருக்கவேபடாது." "பரமண்டலங்களிலிருக்கும் எங்கள் பிதாவே....." "Our Father which art in heaven." என்ற சுதா உச்சாடனஞ் செய்யச் சொல்லி இறை யருள் போதித்த மூலமந்திரத்தில் கடவுள் ஒருவரே சமதிபிதா. மனுஷ்யரனைவரும் அவருடைய பிள்ளைகளாதலின் சகோதரர். இந்த வெல் யாவருக்கும் சகலத்திலும் சம பங்கியமுள்ள உடையவர்களென்ற வொருள்களையே உலகுக்கும் ... சமூகமும் பரவ வேண்டுமென்ற விளைதகார் (Bolshevism) உற்பத்தி இவ்வுலகிலிருந்து இவ்வுலகை முதல் காரணமாயிருக்கலாம். அந்தக் ரஷியாவின் தலைவர்களை முதலாகக் கொண்டு ஆரம்பமாகி இவ்வுலகிலுள்ள உலகங்களுக்கு பரவி வருவதைத் தடுக்கவேண்டுமே.

ஆனால் இவர்கள் பலாத்காரத்தாலும் யுத்தத்தின் மூலமாயும் இரத்தந் சிந்தாமலும் அமைதி "சமாதி" கொள்கையை நிலைக்க முயலுகின்றனர், இது சாத்தியமாகுமா? நமது மகான்களான "ஆகிம்சையின் பலத்தால் "சமாதி" ஞானத்தை இந்த இந்தியாவில் உதயமாகி பிரகாசித்தார். இவர் கொள்கையே உலகுக்கும் பரவி, அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி 2-ம் அதிகாரத்திலும், மீ தீர்க்கதரிசி 4-ம் அதிகாரத்திலும் உரைத்திருக்கிறபடி "கடைசி நாட்களில்.....அவர் ஜாதிகளுக்குள் நியாயம் பண்ணி, திரளான ஜனங்களுக்குக் குறிகொள்வார்கள் அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள் ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதுமில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை."

என்ற வசனங்கள் நிறைவேறுவதற்கு காலம் கிட்டிவிட்டதோ? தீர்க்கதரிசனங்கள் காம எதிர்நோக்கி பிரார்த்தனை நிறைவேறுவதோ? அவற்றினர்த்தமும் அருமையும் விளங்குவதோ? மகாத்மா காந்தியின் தீர்க்கதரிசனமும் அப்படித்தானோ? ஆனால் அதன் நிறைவேற்றத்திற்காக மற்றத் தீர்க்கதரிசனங்களைப்போல யுகாயுகங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. இந்த வருஷத்துக்குள் நிறைவேறிவிடும் எனகிறார்.

இந்தியர் எல்லோரும் ஏக ஜாதியாகி ஏக பாஷை பேசி ஒரு நாட்டை நாற்பது கோடி மாதத்தில் சுவாதீனம் அடைவதும் சாத்தியமாகுமோ? எப்படியும் இதற்காக நாம் காத்திருக்க வேண்டியதுதானோ.

நமது காருண்ய கவர்ன்மெண்டார் குருட்டுத்தனமாய் முரட்டுப்பிடி பிடிப்பவர்களல்லவே. அதனால் அவர்கள் பிரஜைகளின் விருப்பத்திற் கிணங்கி அடக்குச் சட்டங்களையும் தற்காலத்திய ஆட்சி முறைமையையும் திருத்தி நமக்கு மனதார தானாகவே சமபாத்யதையும் சுவாதீனமும் தந்துவிடுவார்களானால் "சாக்கரைப் பந்தலில் தேனை மாரி பொழிவதுபோல் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவதற் கடமாகுமல்லவா"? நமக்கு வேண்டியதெல்லாம் சமபாத்யதை யொன்றுதானே.



பாரதமாதா.

"நீங்கள் எந்த அளவினல் அளக்கிறீர்களோ, அந்த அளவினல் உங்களுக்கும் அளக்கப்படும்."

—கிறிஸ்து.

"மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கத் தரிசனங்களுமாம்."

—கிறிஸ்து



ராவசாகிப் டாக்டர் J. S. ராமேக் L.R.C.P. & S. & C. &c

இவர் "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க சுயமுயற்சியினாலும் சுத்தசாலித்தனத்தினாலும் லண்டன்மா நகருக்கேகி அங்குள்ள பெரிய ஆஸ்பத்திரிகளில் கண், காது, தொண்டை முதலிய அவயவங்களில் லண்டாகக் கூடிய வியாதிகளைப்பற்றி நுட்ப ஆராய்ச்சி செய்து வந்ததுடன் ஆயுள்வேத மந்திரத்தையும் கற்று L.R.C.P. & S; L.M.L.F.P.S. முதலிய கௌரவப் பட்டங்கள் பெற்று இரங்கோன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் உத்தியோகம் வகித்து வருகின்றார்.

இவர் தம் தொழிலில் தோய்ந்த ஆராய்ச்சி சக்தியுடையவராதலால் 1919 ம் வருஷம் இவருக்கு (RAO SAHIB) ராவ்சாகிப் பட்டம் கிடைத்தது.

இந்நூலாசிரியனுக்கு ஔஷதப் பிரயோகங்களின் அருமையைப் பற்றி அடிக்கடி போதித்து வரும் ஆப்த நண்பர்களிலொருவர். இரங்கோனில் இவருக்கு வியாதி அதிகம்.



வேளாளரும் தேவரும்.



வி. சங்கரநாயர்.

உலோபம்.

உலோபமென்பது மிதமிஞ்சிய பொருளாசை. பிறர் பொருளைக் கவர்கின்றவனும் அதனை அநீதமாய் ஆசிக்கின்றவனு மாத்திரமல்ல, தன் சொந்தப் பொருளைக் காப்பாற்றுவதிலேயே மிதமிஞ்சியகவலைகொள்பவனும், அங்கத்தைக் கட்டி தங்கத்தைச் சேர்ப்பவனும் உலோபி எனப்படுவர். மகாராஜாக்களிருப்பினும் தங்களின் கஞ்சிரத்திலுங் கண்ணியிலும் வீழ்வதுமன்றி, மனிதரைக் கேடுந் தின்மையும் நிறைந்த படுகுழியிற் தள்ளிப்புகுத்தும் அநேக வீணாசைகளிலும் வீழ்கின்றார்கள். எனெனில் பொருளாசை எல்லாத் தீமைகளுக்கும் வேராயிருக்கின்றது, என்று பரிசுத்த பேதுரு அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில் இக்குற்றத்தைக் கண்டனம் பண்ணுகின்றார். பொய்பேசுதல், பொய்ப்பத்திரம் பிறப்பித்தல், அநியாயவர்த்தகம், லஞ்சம், வஞ்சகம், களவு, மாய்மாலம், இரண்டகம், புறட்டு, உருட்டு, அநியாயவட்டி வாங்கல் முதலிய பல பாவநெறியால் வந்தபொருள், தான் செய்த புண்ணியத்தையும் கெடுத்து இம்மையிலே தீராத வசையையும், மறுமையிலே நரகத்தையும் விளைவிக்கும்.

மெய்யான செல்வங்கள் செம்பொன்னிலும், வெண்பொன்னிலும், விலையுயர்ந்த ரத்தினங்களிலும் அடங்கியிராமல் புண்ணியங்களோடுங் கூடிய நல் மனச்சாக்ஷியில் அடங்கும். ஆராய்ந்து பார்க்கில் பொன்னுவது என்ன? வெள்ளியாவது என்ன? லௌகீக நலங்களைத் தேடுவதில் சொருகிச் சொக்கிப்போன இருதயமுடைய மனிதர் மதிமயங்கி, தப்பெண்ணத்தாலும், பைத்தியத்தாலும் விலையேறப்பெற்றதென்றெண்ணும் சிறிது வெண்மண், செம்மண் அல்லது வேறொன்றுமில்லை யென்பது தெள்ளென விளங்கும். இப்பொருட்களைத் தேடுவதில் தன் முழு இருதயத்தையும் புகுத்துகின்றவன் வருந்தி உளைத்து இளைப்படைவானேயன்றி திருப்தியடையான். தண்ணீரைக் குடிக்கக் குடிக்க தாகந்தணியாமகோதானுடைய நீர்வேட்கையைப்போல் அவன் தாகம் ஒருபோதும் தணியாது. பொருளைக் குவிக்கக் குவிக்க இன்னும் அதிகமாய்க் குவித்துச் சேர்க்க விரும்புகிறானேயன்றி, சம்பாதித்த பொருளைப்பற்றிச் சந்தோஷமடையான். தன் கைக்கெட்டாத பொருளின் குறையிலல் மனம் வருந்தித் தயாழுருகின்றான். மிருகம் தன் இச்சைகளுக்கு எல்லைகண்டறிகின்றது. பசியால்தான் டப்பட்டால் மாத்திரம் இரையைத்தேடி ஓடுகின்றது. பசிதீர்ந்த மாத்திரத்தில் அமர்ந்திளைப்பாறுகின்றது. மகாராஜருடைய பொருளாசைக்கோவெனில் எல்லையேயில்லை. எவ்வளவு போட்டாலும் விழுங்கி ஒருக்காலும் திருப்தியடையாமல் அலைவர்.

எவ்வளவோ சுவ்டப்பட்டு செல்வத்தைச் சேகரித்து வயிற்றிற்கு வஞ்சகம் செய்து உலகத்திற்கும் உபகாரஞ் செய்யாமல் மறஞ்சியறியாது மறஞ்சிவைத்தும் பொற்கிளிகாக்கும் பூதத்தைப் போன்று உலோபியென்றும் பலரால் இகழப்பட்டு தம் காலத்தைச்சழிக்கின்றனர். இதனாலன்றே?

சூசேலோபாக்கியானம்.

"உயிர்க்கொலை புரிதலுண்ணு முணவு மாராட்டஞ் செய்தல்
அயர்ப்பிலா நண்பர்மாட்டு மனமதரக் குய்யஞ் செய்தல்
பயிர்ப்புமிக் கூறாகல்லோரைப் பழித்தல்பொய்க்கரி யுரைத்தல்
செயிர்ப்பிலா லயத்திடத்துஞ் சென்றுபட்டிமை யியற்றல்."

"இளமுதற் பலவுமாந்த ரியற்றினாள் கழியாநிற்பர்
அவையெலாம் பொருணிமித்த மாகுமப் பொருளைப்பெற்றுக்
குவையுறப் பதைத்தலைவத்துக் குதுகுதுப் படைந்துகாத்து
அவையுறு பணப்பேயென்னு நாமமும் பெறுவர்மாதோ."

எனவும்,

[illegible] நற்பழக்கத்தையே [illegible] நிலைமையை மறந்து [illegible] ஈனத்தன்மையாடுகின்றனர்.

"[illegible]
[illegible]
மருந்தளதோ வெனில்வாகடத்துலே
தரித்திரமென்னுமோர் மருந்திற் றீருமே."

என்றனள். மேலும், பொருளின் மேம்பாட்டையே டம்பந்தேசி, எம்பொருள், எம்பொருளென்று அகங்கரித்து இறுமாப்படைகின்றனர். சகல ஐஸ்வரியத்திற்கும் காரணர் கடவுள் என்பதை மறந்து என் சுபாத்தியம், என் பாட்டன் வைத்த திரவியம், என் பெற்றோர் சுபாதித்த பெரும்பாக்கியம் எனறு இறுமாப்படைகின்றனர். இதுபற்றியன்றே,

சீரா புராணம்.

"தாயளித்த செல்வமென்றுந் தந்தைதருஞ் செல்வமென்றும்
தூயதிரு வேய்ந்த
சேயளித்த செல்வமென்றும் பிறாளித்த செல்வமென்றும்
திறமை வேந்தர்
ஈயளித்த செல்வமென்றுஞ் சிறியோர்க ளறியாது
குரைப்ப தெல்லாம்
நீயளித்த செல்வமன்றே பெரியோர் கன்தம்
மனத்துளிமிர்ந்து நின்றேஞ்."

எனவும்.

நீதி நூல்.

"என்பொரு ளென்பொரு ளென்றுசீவன் விடுமனமே
யொன் றியம்பக்கேளா யுன்பொருளாரு லதண்மே
லுன்னுமம் வரைந் துளதோ வுன்தலேழே
முன்பிறந் து வளர்ந்ததோ வினையுனைவிட் டகலாதோ
முதிர்ந் து நீதான் பின்பிறக்கும் போததுவுங்
கூட விறந்திடும் கொல்லோ பேசுவாயே."

"எத்தனைபேர்கையின் முனமிப்பொருடா னிருந்தவை யெல்லாம்
தத்தம் அத்தமென நம்பிரைவர்களை விட்டகன்றுன்னை
யமர்ந்தினுலுஞ் சத்தமின்றி யுனைமோசஞ் செய்தனந்தம்
பேரகத்திற் சாறுஞ்சொன்னேன் சித்தமே யதுசெல்லு
முன்னீசற் பாத்திரத்திற் செலவிடாயே."

எனவும் கூறினர்.

'தட்டுக்கு எட்டு சட்டி வாங்கி, சட்டி ஒன்று எட்டுத்தட்டாக விற்றாலும் வட்டிக்குமிஞ்சாது வரவில்' என்று சாதித்து அறியாயவட்டி முதலியவற்றால் பொருள சம்பாதித்து பிரபுவான ஒரு உலோபிக்கு ஓர் மகான் எழுதிய கடிதமாவது:—

கனவானே! நீர் அநீதமாய்ச் சம்பாதித்த ஆஸ்திகளை இவ்கையே போட்டுவிட்டு அவற்றை யுமக்குத் தருவித்த பாவப்பொதியை மாத்திரம் சுமந்து உம்முடன் கொண்டுபோவீரென்று நினைத்துக்கொள்ளும். ஆதலால் நன்மையைக் கைதழுவவிட்டுத் தின்மையைப் பத்திரமாய்ச் சேகரித்து வைத்துக்கொள்வதும், அழுபோக சுகத்தை மற்றவர்கட்கு விற்று ஆக்கினைக்கு உமமை உள்ளாக்குவதும், இச்சீவியத்திலேயே நீர் வேதனைப்பட்டு உத்தரிக்க, உடன்படுவதும் என்ன பெரும் பைத்தியம!

உம்மைப் பார்க்கிலும் உமது ஆஸ்திகளை அதிகமாய்க் கனம் பண்ணுவதும, உமது ஐஸ்வரியத்தில் யாதேனும் நஷ்டம் அழுபவிப்பதைப்பார்க்கிலும், உமது ஆண்மாவில் நஷ்டப்படுவது தானே என்றெண்ணுவதும, உமது போர்வையைக் கழியாமல் பத்திரப்படுத்துமபொருட்டு, உமது உடலைக் கூரியவாளின் வெட்டுக்குள்ளாக்குவதும் எவ்வளவு மதியினம! இப்படிச் செய்வது சிலவென்னிக்காசுகளி னிமித்தம் நீதியையும், தேவகிருபையையும், தன்னுதுமத்தையுமே விற்றவனுகிய யூதாஸ்காரியோத்துக்குச் சமானமாவதன்றே? மேலும், மரணதினம் வரையில பாவத்தில் நிலைனறும், பாவத்தில் விழுந்தும், எழுந்தும், பதித்தும் சம்பாதித்த பொருள்கள் அனைத்தோடும், உச்சித காலத்தைத் தப்பாமல் இழந்துவிடவும் சித்தமாயிருப்பது எவ்வளவு பெரும்பைத்தியம்" என்பதே. ஏனெனில், இச்செல்வமே மக்களின் மனோபாட்டிலால் நீயனப் பயக்கின்றது.

அதனைத் தக்கவாறு பிரயோஜனப்படுத்தாமல் கெடுதி விளையுங்களிற் செலவிட்டாலதைவிடத் தீங்கிழைக்கக்கூடியது வேறொன்றுமின்று. பெரியோர்களைப் பழிப்பதும், தனது கவுரவத்தை யழிப்பதும், வாய்மையைப் போக்கடிப்பதும், மனுஷரின் உயிரை மாய்ப்பதும், காரிகையின் கற்பைக் கெடிப்பதும், சஞ்சலம், பிணி முதலியவற்றை வரவழைப்பதும், இராஜ காவலுக்குள்ளாக்குவதும் இச்செல்வமேயாம். இதனுலன்றே:—

குசேலோபாக்கியானம்.

"நல்லொழுக்கினனை தீயவொழுக்கனென் றுரைக்கச் செய்யும்
புல்லொழுக்கினனைத் தூயதவத்தனென் றுரைக்கச் செய்யும்
நல்லகற்புடைய மாதர்நலத்தை யஞ்சாமைசெய்யும்
பல்வகைத் தியருஞ்செய்யும் பாழ்மபொருள் பற்றுலார்க்கே."

எனவும்,

நீதிநூல்.

"ஒப்பரு நற்குணத்தவர்க்கும் கொலைகாமம் கட்களவை
யுபதேசிக்கும் அப்பனுப் நேயர்க்குட் பகைவிளக்குஞ்
சத்துருவா யகிலத்துற்ற செப்பரிய துயர்க்கெல்லா
மாதாவாய் நீவினைக்கோர் செவிலியாய
இப்பொருளை நற்பொருளென் றெப்படிதீ யொப்புகின்று
யேழை நெஞ்சே."

எனவும் பாடியிருக்கின்றனர். ஆனல்,

இராமசந்திர கவிராயர்.

"புல்லுக்கட்டும் விறகுஞ் சுமந்தபேர் பூர்வகாலத்துப்
புண்ணிய வசத்தினுல்
நெல்லுக்கட்டும் பணக்கட்டுங் கண்டபின் நீலக்கல்லிற்
கடுக்கனும் போடுவார்
சொல்லுக்கட்டும் புலவரைக் கண்டக்காற் றூறிப்பாய்ந்து
கதவை யடைத்திடுவர்
மல்லுக்கட்டும் மடையரைப் பாடுவோ மலையச்சாலில்
வாழ்பெரி யம்மையே."

"கள்ளிக்கேன் முன்வேலி, கழுதைக்கேன் கடிவாளங்
கறுப்பில்லாத
உள்ளிக்கேன் பரிமளங்க ளுலர்ந்திலத்துக் கேன்விதைக
னொடித்துப்போடும்
சுள்ளிக்கேன் கோடாலி துடைப்பத்திற் கேன்கவசஞ்
சும்மாவோட்டித்
தள்ளிக்கே னதிவீர மழுவாங்க பூபனெனும்
பட்டந்தானே."

கடவுளுடைய சிருஷ்டியில் மக்கள், விலங்கினங்கள், அஃறிணைப் பொருள்களாகியவற்றுள் எவ்விதத்தினும் பிரயோஜனமற்றதும் யாவற்றினும் தாழ்ந்ததுமான சிருஷ்டி மக்களுடம்பெடுத்த உலோபிகளாகவிருப்போரே யாவென்று கூறலாம். எப்படியென்றால்,

' கல்லாலயமாம் தேவருமாம், கழுதைகசடர் பொதிசுமக்கும்,
கடாவோ வுழுதபயிரிடற்காம், கட்டம் பன்றிக்கினையாகும்
புல்லேறீசர் வாகனமாம் பொதியுஞ்சுமக்கும், பிணமெனிலோ
பூசிமுழுத்து மறையோர்க்குப் பொருளாயீத்து புகழெய்தும்,
மல்லார்குட்டிச் சுவரெனிலோ மாடுமுரைஞ்சு மறைவாகும்
மதியாத்துடைப்பக் தானெனினிலா மாடகூடந்தனை விளக்கும்
அல்லாது லுத்தன்றனக்கினையா யாரையுரைப்பேன் புவிமீதில்
அவனைக்குறித்துக் கூறுமிடத் தவனுக்கவனே சரிதானே.''

கல்லானது கோயில் விக்கிரகம் முதலியன நிர்மாணிப்பதற்கு உபயோகப்படுகிறது. கழுதை வண்ணானுடைய பொதியைச் சுமக்கிறது. எருமைமாடோ உழுது பயிர்செய்ய உதவுகிறது. மலம் பன்றிக்கு இரையாகிறது. அற்பமான எருது ஈஸ்வரனுடைய வாகனமாகவிருப்பதாம் மற்றவர்க்குப் பொதிசுமந்து உதவிசெய்கிறது. செத்த பிணமோ சந்தன முதலியவற்றைப் பூசி மலர்முதலியவற்றை அணிவித்து மேதியருக்குப பணம் கிடைக்கும்படி செய்து கீர்த்தியடைகிறது. வளமான் குட்டிச்சுவரோவெனில் மாடுகள் உரைஞ்சுதற்கு உதவுகிறது, மறைவாகவும் ஆகிறது. ஒருவராலும் மதிக்கப்படாத விளக்குமாறு மாடகூடமாளிகைகளைத் துலக்கும் கருவியாக உபயோகப்படுகிறது. உலோபிக்குச் சமமாக உலகத்தில் யாரைச் சொல்லுவதென்றால் (அவனுக்கம்பால பிரயோசனமற்ற எந்த வஸ்துவும் இல்லையாகையால்) அவனுக்கு அவனேதான் சமம்.

அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர்.

1. ஏதுபுல வீர்விளவு தழைவிலாக் காலத்தில்
எமதும்ப ரூர்விசாரித்
திவ்வளவு தொல்லவந்த தொல்லையென வப்பொழுது
இரண்டுபதி றுறுபல்லில்
லெவ்வளவு மறையாம லவ்வளவு மேதெரிய
விருகாழு மேந்திவாய்விட்
டின்புறப் புன்சிரிப் புற்றுமது சற்கீர்த்தி
யெல்லாந் தெரிந்துளத்திற
கொ்தல்லைவத் தத்தமிழ்ப் பாடிவந் தோமெனக்
கழறினற் செம்பிருதலான்

காய்ச்சியே காதிலிட் டதுபோலு மிம்மொழி
கலக்கமாய்க் கேட்டுமையா
கனிராஜ ரேவிட்டி லொருமாத மாகநோய்
கண்டுபெண் பிணைபிணைழத்தல்
கடினம்வெகு கடினமத னலவரும் விருத்துகள்
கணக்கில்லை யிவ்வூரிலோர்
பாதக வயித்தியன் கைத்தாது பற்றுமுன்
பைத்தாது பற்றியின்னம்
பற்றுது பற்று தெனச்சொலியெ னடிவயிறு
பற்றநா னூறுமெகாத்துப்
பனையே டெலாம்வாரி வாரிமுன் வாகடப்
பாவிலுள வவிழ்த்தமெலலாம்
பாவிமக னெழுதியொரு காசும்வை யாமற்
பருங்காடி யீசலவனாயின்
மோதியே வாயவைத் தறிஞ்சியது போற்றடைய
முழுவது முறிஞ்சிவிட்டான்
மூத்தகுடி யாணமக மீகற்றகுடி யலவென்று
முறைமுறை யெடுத்துரைக்கும்
முழுமூட ராங்கொடிய மீலாபியர்கண் மேற்றமிழ்
மொழிந்தவ ரிடஞ்செலாமல்
மூப்பொழுது போற்றுமெற் கருள்புரிவை யெங்குறிறை
முதலான பாமலிவமீம.

2. வெண்பாச்சொல் கவிஞரே வந்தேத தம்மீது
மெய்த்தமிழ் பாடி வந்தோம்
வெகுசோர்த்தி முன்னமீம நானூறு கோவையொரு
வித்துவான் பாடிவந்தான்
நண்பாக மனம்வைத்து மூன்றுபடி பெருவாகு
நான்கொடுத் தேனதறகுக்
காடெலாந் தெரியுமென் மணியாட்டி மூன்றுதர
நான்றுகொண் டுயிர்பிழைத்தல்
புண்பா டெலாமறிந் தின்னநீர் கவிசொலும்
புலவரென் றிங்குவந்தீர்
போம்போ மெனச்சொலி புலியாடு புலியதொடு
போராட வோபடைத்தாய்
தெண்பா வெனும்பொருட் பாமாலை பூண்பெத
சேலைதந் தருள்புரிகுவாய்
தேசிகம் பூததவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்நமே.

3. வந்தவரி பாவர்காண் கவிராஜ சொந்தவூர்
வடகாசி யென்குவந்தீர்
மகாராஜ னென்றனது கீர்த்தியைக் கேட்டுன்மேன்
மதுராகவி பாடிவந்தோஞ்
சந்ததமும் வித்துவா னல்லரீ யென்னுடைய
தாதைதூ தாதைதவழியில்
தமிழ்கேட்ட தியாவர்காண் டலைமுறையி லில்லாத
தாழ்வினைதச் செய்துவந்தீர்
இந்தமொழி மற்றுமொரு தாரீ யுரைக்கிலோ
வினைகள மாகுமப்பால்
ஏகுமென் றேதிடும் புல்லர்கம் பாற்செலா
தெனையாள வித்தகருணமே
சிந்திக்கு மன்பருக் கருண்மழை சொரிந்தளிக
செல்வங் கொடுக்குமுதலே
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்நமே.

4. ஓடி வீதியிலொ ரேடுகொண் டோடியே
யவசரம தாய்வருகிறார்
ஐயையோ புலவன்மார் போலேயி ருக்கின்ற
தியாரென்று மெள்ளவெட்டிப்
பாடி தலைமறைய நின்றுகொண் டவர்நெடும்
பாதைவழி போகிறதுதான்
பாண்மே லெனைத்தூக்க விட்டுவிடு தாளையடை
பழிகாரி கதவுபோடு
கூர்மைமொழி கேட்டதிக சீக்கிரம் வந்திடுவர்
குதிருக்குள் ளேயொழித்துக்
கொள்ளடி யெனப்புகலும் லோபியர்கண் மேற்றமிழ்
கொண்டுபோ யலையாமலே
சீடுதுதி த்துநற் பாமாலை சாற்றியே
தெரிசிக்க முத்திதருவாய்
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்நமே.

5. தலைவாச லின்கதவை யாரடி திறந்தவர்கள்
தமிழ்வாணர் வரில்லிடுவரோ
தாமல நீரோக சாமோ வட்டமச்
சனியனே வேதுகுறையோ
அலையா தலைந்தாள்கவிவாணர் தங்களா
லானந்த வருடத்திலே

பான்பட்ட பாட்டைபோ யாவரறி வாரந்த
ஆதிபக வானறிகுவார்
மலையாம லுன்மன மிருப்பதேன் புலவன்மார்
வரிற்சுமா போவரோதான்
மனம்பதறு தேயெனப் புகல்பவ ரிடஞ்சொலா
மற்காக்க விதுதருணமே
சிலையாரு நுதல்வீரிக் கௌரிகௌ மாரிஜக
தீஸ்வரி வராகிதிமிலி
தேசிகம் பூத்தவுமை கேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்நமே.

6. உலகி லெதிர்பட்டவ ரென்றுனை வுங்களுக்
கொருதொழிற் றுணைமிலையோ
வொட்டாரங் காட்டியே நித்தநித் தம்வந்து
உபாதிக்கி றீர்களோயோ
புலவரென் றுற்றணங் கொட்டி வைத்தீர்களோ
புதையல்யா னெடுத்ததுண்டோ
புருகக்கற் றதுபோலொர்தொழில்கற்க வொண்ணுதா
புகழ்வதாற் பயனேதுகாண்
கலைகறவர்களென்னி னெஞ்சமெரி கின்றதே
கவிராஜரே சொல்லுவீர்
காசென் னிடத்தில்லை சபிக்கிலெ னேசெலுங்
கசடர்மேற் றமிழ்ப்பாடியே
செலும்வழி மறித்தென்னை யாளவிது தருணமே
சிற்சபை நடிக்குமுக்கண்
டேசிகம் பூத்தவுமை மேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்நமே.

7. வாருநீர் யாரென்ன வித்துவா னென்னவும்
மதிபோசம் வந்ததென்றே
வாய்குளறி மெய்யெலா மிகநடுக் குற்றுநீர்
யந்தகா ரியமேதெனச்
சிருலா வியகாம தேனுவே தாருவே
சிந்தா மணிக்குநிகரே
செப்புவச னத்தரிச் சந்த்ரனே யெனலுஞ்
சினந்திருக லுஞ்சியாதே
யாரைநீ மாடுகல் மாமென்று சொன்னது
மலாலரிச் சந்த்ரனென்றே
யடாதசொற் சொன்னையே யார்க்கடிமை யாகினே
ணற்கையிற் பெண்டிகிற்றேன்

தீருமோ விந்தவனை யென்றுரைசெய் வெருகொடிய
தீயரைப் பாடிகொந்தேன்
றிருமன்று ணைடுநின்று நடமொன்று புரிகின்ற
தொன்றில்லை நடராஜனே.

8. மாபுகழி ராதவன் சோமசுந் தாகுரு
மலர்ப்பதம் பரவுதாசன்
வண்டமிழ்ச் சரவணப் பெருமாள் கவிச்சக்ர
வர்த்திதேர்ந் தெழுதிருடம்
வளர்காரை யம்பதியின் மேவுதுரை லட்சுமண
மந்திரியெதிர் கொடுகாண்க பா
வாணருக் குபகாரி நீயாகை யாலெமது
வல்லமையு மகிமையுங்கேள்
கருணீகர் நல்வர்க்கு நாற்கவிதை சொல்லவாய்
கனவேலு மயிலுமென்னைக்
காலிலொரு கவிதையுயர் தோளிலொரு கவிதையிரு
கையிலொரு கவிதையெழுதக்
கணக்கொரு பறஞ்சொல விலகமொரு புறஞ்சொலக்
காணுத் திரைமறைவிலே
கனகூது சதுரங்க பொதிகுதிரை யடிசொலக்
கன்னெலு முதுகிலெண்ணப்
பரிவுபெற் றப்பதுச் சேரியிற் சென்றினிய
பண்பரிற் சிலையவாதனி
பண்புள குமரபார தியுரை கவி வீர
பத்ரகவி கொண்டாடவே
பாக்கியனு னந்தரா தன்சபையி லுஞ்செய்து
பல்லக்கு வரிசைபெற்றேன்
பலகாவி யங்களுந் தெரிவெனளப்பரிய
பஞ்சலட் சணமுமறிவேன்
ஆசரி யுயர்ந்ததுரை யாரெனிற் சேதுபதி
யாகுபவன் மணிவாயிலில்
அகத்திய முனிக்குமதி கங்கற்ற பேர்களா
யாயிரங் கவிவாணருண்
டவரிலொரு சிறுவன்யான் பாடவறி யெனென்
றகற்றிவிட் டார்களென்னை
யாதலாற் பூமியிற் சஞ்சரித் தேனின்
னகந்தனின் மகிழ்ந்தருள்வையே.

9. கல்விச் சமுத்திரங் கமலா லயந்தமிழ்க்
கடன்மடை திறந்தவெள்ளங்
கற்பனை பிறப்பிடங் கலிமக ளிருப்பிடங்
கவிமாரி பொழியுமேகம்
சொல்லிற் பனபதினையு மதுரக் களஞ்சியந்
தொன்று கற்பூரதீபஞ்
சுகிர்தகுண வவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்டசனது
வில்லுக் கரிச்சுனன் சொல்லுக கரிச்சந்தான்
வெற்றிக்கு விக்ரமார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக் கருப்பண
[illegible]
டல்வெற்றி யாயென்று தாயென்று நீயென்று
மாலென்று வேலென்று கா
டாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்புரியவே.

10. எவ்வன மதேனுண்மணி பதப்பணிகொள் சேதுபதி
யிறைவன்மணி வாசன்மணிவா
யிலகுமணி னைசவமணி சோமசுந் தாகுருவென்
ஐயன்மகிழ் சிந்தாமணி
செவ்வசன மொழிதமிழ்ச் சரவணப் பெருமாள்
சிரோமணி யணுப்புமோலை
செய்யதிரு டலைராயன் பட்டணத் தவரொலாஞ்
சிரசுமேற் கொண்டுகாண்க
இவ்வூரில் வந்துதிரு மலைராய ரைப்போற்றி
யிலகுகவி காளமேக
மெமகண்ட மொருதினுசு பாடிணை னைமுமிங்
கிசொட்டு வகைபாடுவோம்
ஒவ்விதை யறிந்துகன தனவரிசை யுதவிரு
ளுமதிருகுடி வாழிவாழி
யுதவா திருப்பிசொனி ளுமதுபட் டணமின்னு
மொருமிக்க மண்மாரியே.

11. அவ்வொன்று மவதானி தமிழொன்று வெகுமானி
யறிவொன்று சேதுபதிபால்
அணியொன்று வெகுமானி சோமசுந் தாகுருவி
னருளொன்று மடிமைவெள்ளைக்

கவ்வொன்று மலைநாவ னதியொன்று கோத்திரன்
கணியொன்று குவளைமார்பன்
கதியொன்று சரவணப் பெருமாட் கவிச்சுரன்
கையொன்று மெழுதுமோலை
தெவ்வொன்று சமர்வென்று திகழ்மகம் மதுதம்பி
தீரனெதி ரொண்டுகாணக
செழுஞ்சென்ன பட்டண மதிற்கேகு வோம்வழிச்
செலவுக்கு வேண்டுமதனால்
உவ்வொன்று யவ்வொன்று லவ்வொன்று டவ்வொன்று
சவ்வொன்று மவ்வொன்று ஞவ்
வொன்றுரவ் வொன்றுரவ் வொன்றுகவ் வொன்றுனவ்
வொன்றுவர விடல்வேண்டுமே.

செல்வத்தைப் பற்றி வெகுசாதுரியமாய் சொல்லயம், பொருள் லயத்துடனும், ஆழ்ந்த அறிவுடனும இகழும் ஞானிகளும், அதைப் பழிக்கும் கவிஞர்களும் ஒருவ'ள சந்தர்ப்பம் பலித்து தாங்கள் திரவியமடைய வழிகண்டால் இவ்வாசைவலைகளுள் பெரும்பாலும் சிக்கிவிழுகின்றனர். செலவம் பெறச் சக்தியைப் படைத்த எம்மனுஷனும அதை வேண்டாமென மறுத்ததாகக் காண்பதருமை. மன அமைதியையும் சாவகாசத்தையும தரும் தரித்திரத்தை இச்சித்துத் தனதிரவியத்தைச் சூறையிட்டவர்களை யுங் காணேம். ஆனால சிலர் கௌரவமும் செலவமும் சம்பாதிப்பதற் கனுகூலமான சந்தர்பபங்களை நழுவவிட்டு, அதிர்ஷ்டம் அனபுடன் அளிக்கும் ஐசுவரிதனை அசட்டைசெய்து அகறறியிருக்கின்றனா என்பதி உணமையே. இவாகள செல்வமீசர்ப்பதற்கு அவசியமான உழைபபையும் கவலையையும் அனுசரிக்க அஞ்சினவர்களேயன்றி செல்வம என்னும் மலையின் சிகரத்தையடைய இச்சையில்லாதவர்க ளெனபதற்கிடமில்லை. சரீர உழைப்பாலன்றி அடையக்கூடாதனை வேறுவிதமாய்ப் பெற்றுக்கொண்டால் அதை அனுபவித்தல் அவர்களுக்குச் சம்மதமே.

ஆதலால், செல்வத்தினமேல் சிந்தனை செலுத்தலாகாது என்னும் சித்தாந்தத்தின் கருத்து யாதெனில், செலவம் நம்மைவிட்டுச் செல்லும்பொழுதி அது பயனபடுவதேயன்றித் திரவியம் நம்மிடமிருக்குமபோது பயனற்றது. அதனால வாங்கப்படும் பொருள்கள நமக்கு உபயோகப்படுவன. செல்வம சரீரசுகத்திற் கெவ்வளவு அனுகூலம் அளிகக்குமோ மனபையும வலியையும் தீர்கக சக்தியற்றது. அதிக சுகஜீவனம்செயவதால் தனவான்கள் சரீரம் பலவீனமாயும் நோய்க்கிடமாயும ஆகிவிடுகிறது. செல்வம் மனதை விசாலப்படுத்தி, உணரும் வலலமைய அதிகரித்து, மேலு

பாவஞ் சக்தியை மேல்படுத்தியதாக நாம் எப்பொழுதும் கேட்டதில்லை, அவ்வாறின்றி, கனவான்கள் முகஸ்துதி செய்வோரால் சூழப்பட்டும், உழைக்க அவசியமில்லாதவராயு மிருத்தலால், தம் பொய் எண்ணங்களே உண்மையென்று நம்பியும் தம் மடமையை திடம் செய்தும் வருவதற்கு செலவம் சுகாயமாயிருக்கிறது. ஆதலால், பணத்தாசை மனதைப்பற்றுந்தோறும் நாம் நிதானித்து யோசித்து நடக்கவேண்டும்.

தரித்திரம்.

உழைக்கும் வழியுணராது பிழைக்க வழிதேடும் தப்பிலிகளாக உடம்பெடுத்தவர்களெல்லாம் ஓடெடுத்தத் திரிந்து, உழுகிற காலத்தில் ஊர்வழியே போனல் அறுக்கிறகாலம் அழுதாலும் வராது, என்று சொல்லியிருப்பதுபோல், குண்டாக்கரணம் போட்டாலும் பிண்டாச் சோற்றுக்கு வழியில்லாமல், எட்டாத பழத்தைப் பார்த்துக் கொட்டாவி கொள்வதுபோல பெருஞ்செலவு முடையவர்களைப் பார்த்துப் பெருமூச்செரிந்து, குழிப்பிள்ளையை எரிசுற்றுவதுபோல அவர்களை விடாதடித்திருந்தும்,

"அன்னமுணற் கரிதாம்ஆறு மூன்றும் மரிதாம்
பன்னமரிதாம் பகலின்கண்—துன்னிசியில்
நேய மரிதாகு நித்திரைக்குப் பாயரிதாம்
காயக் கரிதாங் கலை."

பகற்காலத்தில் உண்ணுதற்கு அன்னமும், அறுசுவைக் கரிகளும், நெய், தயிர், பால் ஆகிய இமமூன்றும், வெற்றிலையும் அரிதாகும். இருளடர்ந்த இராக்காலத்தில் மனைவி யருமையாகும். நிதநிரைக்குப் பாயும், உடம்பு மூடுதற்கு ஆடையுமரிதாகும் என்று தம் வறுமையைப் பற்றி முறையிடுவர்.

"கவி கற்றவர்க்கும் கணிகற்றவர்க்கும் கம்மாளருக்கும்
ஓவிகற்றவர்க்கு முபாத்திகளுக்கு முயர்ந்த மட்டும்
சுவிவைக்கு மொட்டர்க்கும் கூத்தாடிகட்கும் குருக்களுக்கும்
இவரெட்டுப் பேர்கட்கு நீங்காத்தரித்திர மென்றைக்குமே."

கவிசொல்லக் கற்றவர்களுக்கும், சோதிடம் கற்றவர்களுக்கும், கம்மாளருக்கும், சித்திர மெழுதுவோர்க்கும், உபாத்தியாயர்களுக்கும், உயர்ந்த அளவு சுவர்வைக்கும் ஓட்டருக்கும், கூத்தாடிகளுக்கும், குருக்களுக்கும் இவரெட்டுப் பேர்களுக்கும் தரித்திரம் நீங்காமல் குடிகொண்டிருக்கும்.

செல்வமில்லாதவர் உலகத்திலே நடைப்பிணமாவர். எல்லா நன்மையுமுடையவராயினும் பொருளில்லாதவரை அவருடைய தாய், தந்தை, மனைவி, மைந்தர் முதலானேரும் அவமதிப்பர்,

"கிலேதளர்ந் திட்டபோது நீணிலத்துறவுமில்லை
சலமிருந் தகன்றபோது தாமரைக்கருக்கன் கூற்றம்
பலவன மெரியும்போது பற்றுதீக் குறவாங்காற்று
மெலிவது விளக்கேயாகின் மீண்டுமக் காற்றேகூற்றம்."

"தரித்திர மிக்கவனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுலர்தரவாட்டும்
தரித்திரமளவாச்சோம்பலையெழுப்புஞ் சாற்றருமூலோபத்தை மிகுக்கும்
தரித்திரந்தலைவன் றலைவியர்க்கிடையே தடுப்பருங்கலாம் பல விளக்கும்
தரித்திரமவமானம் பொய்பேராசை தருமிதிற்கொடிய தொன்றிலையே."

"ஆவீன மழைபொழிய லில்லம்வீழ
அகமுடையாள் மெய்நோவ வடிமைசாவ
மாவீரம் போகுதென்று விசைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டொருவ னெதிரசெல்லத்
தள்ளவொண்ணு விருத்துவரச சர்ப்பந்தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடனமகேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென்றுரே."

"கல்லெத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானு
இல்லெத்தான் பொன்னைத்தா னெனைக்குத்தான்
கொடுத்தத்தா னிரட்சித்தானு
அல்லெத்தான் சொல்லித்தா னுரைத்தான்
னுவத்தா னெயோவெனுகும்
பல்லெத்தான் றிறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்ருன் பண்ணினுனே."

"வஞ்சகர்பா னடந்தலைந்த காலிற்புண்ணும்
வாசறுறு முட்டின்ன்ட தலையிற்புண்ணும்
செஞ்சொல்லை நிந்ன்துருகு நெஞ்சிற்புண்ணும்
தீருமென்றே சங்கரனபாற் சேர்ந்தேனப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணுமவேடன்
கொடுங்காலா லுதைத்தபுண்ணுங் கோபமாகப்
பஞ்சவரி லொருவன்வில்லா லடித்தபுண்ணும்
பாரென்றே காட்டிநின்ருன் பாமன்ருனே."

ன்ற வண்ணமாக உதர நிமித்தத்தினால் எனிய குடி ஜனங்கள் கவும் துக்கிக்கின்றனர்.

சத்திமுத்தப்புலவர் வறுமையினால் இருக்கவிடமும், உடுக்க ஆடையும், உண்ணச்சோறுமின்றி அலைந்து திரிந்த காலத்தில் பாடியதாவது:—

"நாராய் நாராய் செங்கா ணாராய்
பழம்படு பனையின் கிழங்கு பினந்தின்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா ணாராய்
நீயுநின் மனையியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின
எம்மூர் சத்திமுத்த வாவியுட் டங்கி
நுண்சுவர்க் கூரை கண்குரற் பலவி
பாடுபார்த் திருக்குமெம் மனவியைக் கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொணடு மேலது தழீஇப்
பேழையு ளிருக்கும் பாமபென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே."

"ஆடெரி படர்ந்த கோடிய நடுப்பில்
ஆமபி பூம்பத் தேம்பசி யுழல
இல்லி னார்ந்த வொல்லா வறுமுலை
சுவைதொறுஞ் சுவைதரும் பால்காணுமற்
குழவிதாய் முகம்நோக்க மனைவியென் முகம்நோக்க-யானும்
உன்முகம் நோக்கி வந்தனன் குமுணை."

என்பதனுள், ஒரு வித்வானனவர் "என வீட்டில் அடுப்பு மூட்டவிலக்கு, என் வயிறறிற பசி கிடிகளறது, பிரசவித்த என் மனைவிக்குத் தாரகம்பண்ண வழியிலலை, பிறந்த குழந்தைக்குப் பாலுமிலலை" யென்று குமுண ராஜனிடத்தில் விசனப்பட்டாரெனத் தெரிகிறது. இனனும,

"வணக்கம்வருஞ் சிலநேரங் குமரகண்ட
வலிப்புவருஞ் சிலநேரம் வலிபசசெய்யக்
கணக்குவருஞ் சிலநேரம் வேட்டைநாய்போற்
கடிக்கவருஞ் சிலநேரம் கயவர்க்கெல்லாம்
இணக்கம்வரும் படிதமிழைப் பாடிப்பாடி
யெத்தனைநாட் டிரிந்துதிரிந் தேளப்பேனையா
குணக்கடலே யருட்கடலே யசுரரான
குரைகடலை வென்ற பாக்குன்றனானே."

என்று செல்வருனை—ப மனம் சமபத்திற்குத் தக்கதாக மாறும் சுபாவமுடையதாதலால் அவர்கள் மனதை இளக்கும்படி பாடித் துதிக்க பாடுபட்ட ஒருவர் பாடியிருக்கிறார்.

ஒருவன் தன் உத்தியோகமிழந்தபோது, குற்றம் தங்கின உத்தியோகமை ஒன்றுமே நீக்கிவிட்ட தல்லாது என்னுடைய அறிவு, ஒழுக்கம், நற்குணங்களோடு வார்த்தை சொல்ல நானிருந்தேன், எனக்கு நாவுமிருந்தது, பழைய சிநேகிதரும் இருந்தார்கள். அவர்களுக்கு நடந்தவரக் கால்களுமிருந்தன. யாதொரு தடைகளுமின்றி நமக்கிடமாயிருக்கிற வீடும் திறந்திருக்கின்றது. இப்படிக்கெல்லா மிருக்க அந்த நடபினர் வரானமக்குக் காரணமென்னே? என்னும் கருத்தை யடக்கிப் பாடியதாவது:—

"தோமிருந்த தொழிலொன்றே தொலைந்ததன்றி
யறிவொழுக்கஞ் சுகுணமோடு
நாமிருந்தோ முரையாட நாவு மிருந்தது
பழைய நட்பினரும்
தாமிருந்தாரவர் நடக்கத்தாளு மிருந்தனயேதுந்
தடையொன் றின்றித்
தேமிருந்த நம்மனைதான றிறந்திருந்த தவர்வராச்
செய்கை யென்னே."

முற்காலத்தில் தடியாலடித்துத் தரத்திலுரு போகாமல் நம்மைத் தரிசிக்க வந்தோர்க்கு இப்போது தாம்பூலம் வைத்து விருபபி அழைத்தாலும் சாக்குபோக்குஞ் சொல்லி வராதொழிந்தார்கள். உலகத்தின் பொய்ச் செயல்களெல்லாம் கண்டுகொண்டோம். இனி நமது கடவுளின தருத்தொண்டு பூண்டுகண்டோம். எனறு ஒரு சீமான் தமது நிலை மாறி வறுமையான காலத்தில் பாடியதாவது:—

"கண்டுகொண் டோட்டினும் போகாது நம்மைத் தரிசிக்கவே
பண்டுவந் தோர்க்கின்று தாம்பூலம் வைத்துப் பரிந்தழைத்தும்
நின்டுமின்டுஞ் சொல்லி வராதொழிந்தனர் செயகையெல்லாம்
கண்டுகொண் டோமினித் தொண்டுகொண் டோங் கடவுளுக்கே."

யாசிப்பவர்கள்.

"எண்சாணுக மிடியனுக் கிங்கிதத்துணி லேழ்நடையாகும்
கண்காணுமுன் னேந்தாகுங் காணில் நான்காங் கையேந்தில்
தண்காவிரியே யெனவோதிற் றவர்போன்மூன்று மிரண்டாகும்
நண்பாவீதலிலை யென்ரு ணமன்பாலாம் பொன்பாலுயிரே."[2]

இவ்வுலகத்தில் தரித்திரனுக்கு எட்டுச்சாண் அளவுகொண்ட உடம்பு யாசித்தலை நினைத்தவளவில ஏழு சாணாகும். யாசிக்கும் பொருட்டு நடக்குங்கால் ஆறு சாணாகும். கொடையாளியைக் கண்ணினால் காண்பதற்கு முன்னே ஐந்து சாணாகும். கண்டால்

நான்கு சாணகும். கையேந்திநல் தவசிகள்போல் மூன்று சாணகும். குளிர்ந்த மேகமே, நவநிதியே, என்று அவனைப்புகழ்ந்து சொல்லுங்கால் இரண்டு சாணகும். நண்பா, கொடுத்தலில்லை யென்று சொல்வாணையின் அந்த யாசகனது பொன்னிடத்துள்ள உயிரானது யமனிடத்திற் சேரும்.

வறுமையானது:—

"தாங்கொணு வறுமைவந்தாற் சபைதனில் செல்லாதானும்
வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினர் காணாதானும்
பூங்கொடி மனையாட்கஞ்சும் புல்லருக் கிணங்கச்செய்யும்
ஓங்கிய வறிவுகுன்றும் உலகெலாம் பழிக்குந்தானே."

அந்தோ இவ்விந வறுமை வந்துவிட்டால்:—

"வனப்பழிக்கும் வாய்மை நலனழிக்கும் மானம்
நினைப்பழிக்கும் நெஞ்சஞ் சிதைக்கும்—வினைம்பகுத்தும்
காதலி காந்தர்க்குள்கலாம் விளாவிக்குங் காசினியில்
வேதனைகள் செய்யுமிடி."

என்ற உண்மை வாக்கினும் கூட "வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை" என்ற வாக்கை குசேலர் முதலியவர்களின் சரிதங்களால் படித்துணர்ந்துள்ளோம்.

"புல்லரிடத்நிற்போய் பொருள் தனக்குக் கையேந்தி
பல்லுமிகக் காட்டிப் பறக்க விழிக்கிறேன்டி!
பல்லுமிகக் காட்டாமல் பறக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல்—என் கண்ணம்மா
டொருவனைக்குத் தாராயோ!"

என்று சித்தர் பாடியிருக்கின்றனர்.

பஞ்சதந்திரம்.

சுதியிலார் பாட்டுந் தங்கள் சுற்றமில்லாத காடும்
மதியிலார் கவியு நல்லமனவி யில்லாத வீடும்
பதியிலா ரழகும் பாழே பார்க்கிலிங் கிவைபோலல்ல
நிதியிலார்க் கெவையும் பாழே நினைக்கின் மூவுலகினுள்ளும்.

கதிரவ னிலையேயற் கண்ணிற் காண்பன மறையுமாபோல்
நிதிய மொன்றிலையேல் யார்க்கு நீதிமா ஞானம்போதம்
கதிபெறு கீர்த்தியாண்மை சூழ்ச்சி மந்திர விசாரம்
சதுராயி மானமெல்லாந் தன்னிலே மறைந்து போமால்.

வறுமையாலே யாசிக்க வருமவர் தமக்கு மாவி
இறுமவர் தமக்குஞ்செய்யு மியற்கை யொன்றுமே தென்னில்
உறுதிபோங் கைகால்சோரு முள்ளமுங் கலங்குமெய்யும்
குறுகியே நடுங்கும் வாயுங் குழறுநல் லறிவும்போமே.

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணியமில்லை யென்றும்
மருவுறு கீர்த்தியில்லை மாந்தருட் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெறு வழியுமில்லை
பெருநிலத்திடை நடக்கும் பிணமெனப் படுவரன்றே.

ஆதலாற் றருமவாற்ற லரும்பொரு ளீட்டிமேலும்
ஊதியங் கொண்டறஞ்செய் துரியவப்பொருளைக் காத்தல்
நீதியிவ்வாறு செய்யார் நிதியமும் தேய்ந்தமற்றும்
ஓதுமெஞ் கலமுமின்றி யுறுதுய ரடைகுவாரே.

ஆதலால், அறிவும், ஆற்றலுமுடைய அறிஞர்கள் தமது சிறு பிராயத்திலேயே விடாமுயற்சியுடன் உழைத்து புண்ணியவசத் தினால் பொருளைச் சம்பாதித்து அதனால புகழையும் கீர்த்தியை யும் அடைந்து வெறுமையைத் தரும வறுமைக்கு நீங்கி வாழ முயற்சிப்பர். அவ்வித சுயநலமற்றவர்களிடம்சென்று தமது பலலோகாடம்பிக்கை ஏதுவாகாது.

"சினக்கதிர்வேல் கண்மடவாய் செல்வர்பாற் சென்று
ஈயெனுக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்தத் தருமத்தை வேர்ப்பரித்து
மானந் துடைப்பதோர் வாழ்."

கடன்.

"வரவுக்கு மேலே செலவு செய்யப் புகுவோர் வட்டிக்குக் கடன்பட்டுத் தலைப்படும் பெருந் துன்பத்தையும் அவமானத்தை யும் அடைவார். அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன் பமே இல்லை. பெருத்த செல்வரையும் சீக்கிரம் தரித்திரராகும் சக்தி அதற்குண்டு. ஏனெனில் "வட்டிக்குத் தாக்கமில்லை" ஆரம் பத்தில் வெகு அற்பமாகத் தோன்றும் வட்டியானது இரவும் பக லும் வளர்ந்துகொண்டேபோய் கடைசியில் பெரியதொரு சுமையை யும் ஆபத்தையும்.

பெரும் உத்தியோகம் வகிக்கும் பலகற்றறி மூடருங்கூட வட் டிக் கணக்கை எழுதிக் கணித்துப் பார்க்கச் சோம்பி அற்பமென அலட்சியஞ்செய்து, அகப்பட்டுக்கொண்டு கடனாளியாகி கடுமையிழி

விழிக்கிறதைக் கண்டிருக்கிறோம். இவனுக்கு ரூபாய் 1-க்கு ஒரு அணு வட்டி, 100-க்கு வட்டி ஆயிரம் என்பதின் ஆதிக்க அர்த்தம் புலப்படாததால் 1-அணு [illegible]னாக்கு வெற்றிலைபாக்குச் செலவு, ஆறேகால் ரூபாய் ஒரு [illegible]ப்செலவு. இந்த வற்பத் தொகையைக் கொடுப்பதற்கு [illegible]ருந்த வரும்படியுள்ள எனக்குப் பாரமோ? இந்த வட்டியையும் முதலையும் சில மாதங்களுக்குள் கொடுத்து சரிபண்ணிவிடலாமென்ற மேலிகழ்ச்சியுடன் தீர்மானம்பண்ணி வாக்குக் கொடுத்துவிட்டு, கொடுக்குங்காலம் வரும் பொழுது திகைக்கின்றனர்.

"நூட்டுக்கு எட்டுச்சட்டி வாங்கி, சட்டி ஒன்று எட்டுத்துட்டாக யிற்றாலும் வட்டிக்கு மிஞ்சாது வாவில்" அதாவது, எந்தப் பெருந்தன வியாபாரத்தினாலும் வருமானத்தைவிட வட்டிவரவே அதிக ஆதாயந்தருமென்பது அனுபோகஸ்தர் அறிந்த விஷயம். அப்படியிருக்க, மேலிகழ்ச்சியினாலும், மௌடீகத்தினாலும், பணத்தைப் பணமென்று மதிக்காமல் அசீநகர் மகா படாடோபமுடையவர்களாய் சுபாசுப கருமங்களை பிறர்மதிக்கநடத்தவேணுமென்றெண்ணி கடனபட்டு, சமயோசித விருந்துகளை கொண்டாடி, வட்டி வளர்ந்தபின் கொண்ட கடனை கொடுக்க முடியாமல் திண்டாடி, கடனைகொடுத்தவன் வாயில வந்தபடி பேச அவமானமடைந்து தங்களை தாவர சங்கமப்பொருளை விற்றுக்கொடுத்துவிட்டு அன்னத்திற்கு அலைந்து திரிகின்றனர். வேறுசிலர், பிறர்பார்த்து பிரபல்யானகளெனத தமமை மெச்சிப் புகழவேண்டும் எனனும் எண்ணமகொண்டு விநயிதமான ஆடை, ஆபரணங்களுக்காகவும், வண்டி குதிரைகளுக்காகவும், மாடமாளிகைகளுக்காகவும், தோட்டம், புருஷை முதலியனவை வாங்குவதற்காகவும் கடன்படுகின்றனர். வட்டி வளர்ந்தபின் கடன்தீர்க்கச் சக்தியற்று வாங்கினபொருளையும் கொள்வாரிலலாமையால ஒற்றிவைத்தும் போதாமையால தங்களிடத்தில முன்னுள்ள தாவர சங்கமப் பொருளையும் விற்றுக் மகாமதவிடடு வறியவர்களாய் வருந்துகின்றனர். பிறர்பார்த்து ஆனந்தமக மேலுமெனக் கருதி செய்யும் மதிமோட்டினால் தாங்கள் துன்பக்கடலில் மூழ்கியும, தங்கள் கடனை நிவர்த்தி நிவர்த்தி செய்யும திடக்குதனமக்கெனப பெருமூசசெரிந்து திரியும் பேதை மக்களின் மதியை எனனென்று சொலலுவாம்!

வேறு சிலர், நிலத்திற்கென்றும், மாட்டிற்கென்றும், கலப்பைக்கென்றும், விதைக்கென்றும், போஜனத்திற்கென்றும கடன்பட்டுப் பயிர்த்தொழில் செயகினறார்கள். அறுப்புக்காலத்தில் கடனகொடுத்தவர்கள் வந்திருந்துகொண்டு ஒற்றைக்கு இரட்டையாக அளந்துகொண்டுபோக, தாங்கள் போஜனத்திற்கு முட்டுப்

பட்டு வருந்துகின்றனர். வாணிபஞ் செய்யத் தலைப்படும் வேறு சிலர், கடன்சொல்லிச் சரக்குகளை வாங்கி விற்க முயலுகின்றனர். கடன் கொடுத்தவன் வட்டிவாசிகளை அச்சரக்கின் விலையோடு சேர்த்துக் கொடுப்பதால், சரக்கு சரியானபடி விற்பனையாகாமல் நஷ்டமடைகின்றனர்.

வேறு சிலர், தாம் சிறிதும் கடன்படாதவர்களேயாயினும், கடன்படத் தலைப்பட்டு பிறர்பொருளை நம்பித் தியும் பித்தரோடு சிநேகம் செய்து அவர்களுக்காகப் பிணைநின்று கடைசியில் அந்தக் கடனைத் தாங்களே கொடுக்க வேண்டியவர்களாகி தங்கள் சொத்தெல்லா மிழந்து பெண்டீர் பிள்ளைகளுடன் பரிதாபமாய் வருந்துகின்றனர். என்ன பரிதாபம்!

கடன்பட்டுத்தன் வறுமையைக் கெடுத்துத் தருமஞ் செய்கின்ற சிலருமுண்டு. பொருளில்லாதவன் கடன்வாங்கித் தருமம் செய்வது தருமமன்று. அதர்மமே. தனக்குப் போய்த் தானம் என்பதின் கருத்தை இவர்கள் அறியார்போலும்! "Generosity must be mixed with justice." என்செய்வேன், சான் செய்வேன், என்று பெருமூச்செறிந்து கவலைக்கடலில் மூழ்கி, தன் மனைவி மக்களோடு கஷ்டப்படும் ஒருவன் கடன்வாங்கித் தருமஞ் செய்வது நியாயமன்று, புண்ணியமுமன்று. ஆனால் தனது பெண்டுபிள்ளைகளுக்கும் தனக்கும் செய்யும் மகாதுரோகம் இதுவாகும்.

வேறு சிலர், பலர் குடியைக் கெடுத்துத் தாமே வாழநினைத்து அவரிடத்தே கடன் வாங்கிக்கொண்டு அவரை வஞ்சிக்கும்பொருட்டு எல்லாப் பொருளையும் தங்கள் மனைவி, பந்துக்களுள் எவரிடத்தும் வைத்துவிட்டு இன்சால்வென்ஸிக் கோட்டுக்குப்போய் அவயங் கொடுத்துக் காப்பாற்றக் கேடுகின்றனர். இது மகா கொடிய பாவமும் நம்பிக்கைத் துரோகமுமாகும். வாங்கின கடனைக் கொடாதவனுடைய புண்ணியமெல்லாம் கடன் கொடுத்தவனைச் சாரும் என்பது தர்மநெறி.

எத்தனையோ உத்தியோகஸ்தர் வரவுக்குமேல் செலவுசெய்து கடன் வாங்குவதினாலும், கூடாத நட்பினரோடு சேர்ந்து அவர்களுக்காகப் பிணைப்பட்டு கையெழுத்துக் கொடுப்பதினாலும், கடன் தீர்க்க வழியில்லாமல் உத்தியோகத்தைவிட்டு ஒழித்துக் கொண்டு திரிகின்றனர். வேறு சிலர் உத்தியோகமிழந்து ஊரைவிட்டு ஓடிப்போகின்றனர். என்ன பரிதாபம்! வரவுக்கேற்ப மட்டாக செலவுசெய்து குடன்று வாழுதல் இவர்களுக்கு அவமானமாம். என்ன பைத்தியம்!

இவ்வளவு தன்பங்களையும் வினைக்குங் கடலைப் பற்றிக் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பரும் தாம் பாடிய இராமாயணத்தில் இராமபாணம் ராவணனை ஊடுருவச் செல்லுகையில் அவன் தாண்டில் முள்ளில் புகட்டியிருந்த இரையையுண்ட மீனைப்போலவும். கொடிய அக்கினியில் பட்ட மெழுகைப்போலவும், படத்தையுடைய சர்ப்பத்தின் வாயிலகப்பட்ட தேரையைப்போலவும், கடன்பட்டவர்கள் மனதைப்போலவும் கலங்கினன் என்னுங் கருத்தை யமைத்து,



" விடங்கொண்ட மீனைப்போலும் வெந்தழன் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள்வாயிற் பற்றிய தேரைபோலும்
திடங்கொண்ட ராமபாணஞ் செருக்களத் துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம்போலக் கலங்கிஞ னிலங்கைவேந்தன்."

எனக்கூறினர்.

" ஆனமுதலில் அதிகஞ் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை—எல்லார்க்கும்
தீயனுய் யேழ்றப்பும் கள்ளனுய்
நல்லார்க்கும் பொல்லனுய் நாடு."

கடனுக்குத் தப்பும் வகை.

(How to Keep out of Debt.)

சம்பாதித்த பொருளில் ஓர் பாகத்தை மிச்சம்பிடித்துச் செலவு செய்வதே கடனுகாதத் தப்பும் வகையாம் அப்படி நடந்துகொள் ளும்படி அநுசரிக்க வேண்டிய விஷயங்களாவன:—

(1) (Budget) வரவையும் செலவையும் திட்டவட்டமாய் மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ராஜ்யத்திலும் (Budget) என்னும் ஆசிறைக் கணக்கு அதாவது வருவாரி வரவு செலவு கணக்குண்டு. அப்படியே ஒவ்வொரு குடும்பத்திற் கும் வரவு செலவு கணக்கிருக்கவேண்டும். அதில் குறிப்பிடவேண் டிய முக்கியமான விஷயங்கள் யாதெனில், வீட்டுக்குடிகூலி, வீட் டுக்குரிய சாமான்கள், வரிகள், வஸ்திரங்கள், போசன சாமான் கள, படிப்பு, கர்மம், சிலறைச் செலவுகள், மீதமானது என்ப னவாகளே. ஒவ்வொரு விஷயத்தையும் சரியானபடி யோசித்து முன்னதாகவே திட்டஞ்செய்துகொள்ளவேண்டும.

(2) Accounts: ஒவ்வொருவரும் வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்வதினால் தமது காரியம் எப்படியிருக்கிறதென்பது நன்றாய் விளங்கும். கணக்குப் புஸ்தகத்தைத் திறந்து தன் கண் முன் வைத்துக்கொள்ளைதவிட வேறொன்றும் மனிதனைச் சரிப் படுத்தாது என்று ஒருவர் சொல்லுகிறார்.

(3) Cash Payment: தான் வாங்கும் பொருட்களுக்கெல் லாம் அவற்றின் விலையை உடனே கொடுப்பவன்தான் வாங்கியவை களை தனக்கு அதிசயமா யென்று கவனிக்கிறான். கையில் பணங் கொண்டு போகிறவன் எங்கே நல்ல சாமானிருக்கிறது. எங்கே நியாயம் விலை என்று பார்த்துத் தேர்ந்து தெளிந்து வாங்க லாம். கடைக்காரனிடம் பதிவுச்சீட்டு வைத்துக்கொண்டு கடன் வாங்குகிறவன் அவன் சொல்லுகிற விலைக்கு அவன் கொடுக்கிற வைகளை மாத்திரம் வாங்கக்கூடும்.

(4) Avoid unnecessary expenses: ஒரு சாமானை வாங் கும்போது இதை வாங்கப் பணமிருக்கிறதா வென்று கவனிக்கா மல் இந்தச் சாமான் இல்லாமல் காரியம் நடக்காதாவென்று கவ னிக்கவேண்டும். அப்படியே கலியாணச் செலவுகளையும் கணக் குப் பார்த்து பிறர் மெச்சுவதற்காகவன்று, காரியம் கைகூடுவதற் கவசியமானவை யின்னவையென்று கணித்துப் பார்த்துச் செலவு செய்வதே புதனியாகும்.

(5) Savings Bank: அடிக்கடி வரும் வரும்படியில் ஓர் பாகத்தை பிற்கால உபயோகத்தின் பொருட்டும் அவசரத்திற் குதவும் பொருட்டும் மீதி பிடித்து வைத்து சர்க்கார் சேவிங்ஸ் பாங்கியில் போட்டுவைத்தால் எந்தச் சமயத்திலும் உபயோகித் துக்கொள்ளக் கூடியதாயிருப்பதுமன்றி அதிகப் பத்திரமாயுமிருக் கும்.

(6) Calculate before borrowing: அவசர நிமித்தமாக வாவது, வியாபார நிமித்தமாகவாவது கடன்படத் தலைப்படுவோர் முன்னதாகவே இந்தப் பணம் நமக்கு அவசியமா? இந்தக் கட னைத் தீர்ப்பதற்குப் பொருள்வரும் வழியுண்டா? பொருள் வரை வில் வருமா? தாமதத்தில் வருமா? தாமதத்தில் வருமாயின், வட்டி வளர்ந்துவிடுமே. பொருள் வராவிடில் இக்கடனைத் தீர்க்க வேறு வழிண்டோ? வட்டிக்குக் கடன் வாங்குவதைவிட இருக் கும் தாவர சங்கமப்பொருளை விற்றுச் செலவு செய்தால் வட்டி மிஞ்சுமே. இப்படிச் செய்யாவிடில் வட்டி வளர்ந்தப்பின் நமது சொத்து முழுவதும் போய்விடுமே. அதன்பின்பு ஜீவனத்துக்கு என் செய்யலாம் என்று பல விஷயங்களையும் தீர்க்க ஆலோசித்து அதன்பின்பே கடன்படலாம்.

(7) Learn to say "No". அவசரமில்லாததை வாங்க நேரி டும்பொழுது இல்லையென்று சொல்லு. வீண் வேடிக்கைகளில் பணம் செலவிட ஏவப்படும்பொழுது இல்லையென்றுசொல். துன் மார்க்கக் காரியத்தைச் செய்ய ஆசையுண்டாகும்போது இல்லை யென்று சொல். சோம்பலிலும், சுகபோகத்திலும், மூடத் தனத்திலும், கெட்ட வழக்கத்திலும் பணஞ்செலவிட நேரும் போது உடனே எரிச்சலோடு இல்லையென்று சொல். துவக்கத்தில் சற்று வருத்தமா யிருந்தாலும் வரவாத் தைரியமுண்டாகும். ஆனல் லோபிகளைப்போல் பொருளாசையால் பணத்தைக் குவி த்து வைக்காமல் எச்சரிக்கையாய் நடந்து நன்மையான காரியங்க ளில் செலவுசெய்யப் பிரயாசப்படவேண்டும்.

ஜான் வெஸ்லி என்னும் மகான் பணத்தைப் பற்றிச் சொல் லிய மூன்று விதிகளாவன:—

1. உன்னால் கூடியதை எல்லாம் சம்பாதி.
2. உன்னால் கூடியதை எல்லாம் சேர்த்திவை.
3. உன்னால் கூடியதை எல்லாம் கொடு.

Get all you can; Save all you can; Give all you can.

பஞ்சதந்திரம்.

"கடன்படிற் கொடுத்தசேடம் கனல்படில் விடுத்தசேடம்
விடந்தொடின் மீட்டசேட மேவலர்ச் செற்றசேடம்
படர்ந்துபின் கெடுக்குமுன்னே பற்றறக் களைந்துபோட்டால்
நிடம்பெறச் செல்வந் தப்பத் செருக்கி வாழ்ந்திருக்கலாமே."

மூடன்.

குசேலோபாக்கியானம்.

"வளர்நிதி படைத்தோ மென்றும் வடிவுதில்
லுடையோ மென்றும்
அளவில் சேயீன்றோ மென்றும் அனுபவத்
தமைந்தோ மென்றும்
இளமையிற் சிறந்தோ மென்றும் எழில்கல
முடையோ மென்றும்
உளமகிழ் கூர்வர் சற்றும் உண்மைநூ
லுணர்ச்சி யில்லார்.

பழமொழி விளக்கம்.

"கானமருங் கவரியொரு மயிர்படினு
மிறக்குமது கழுதைக்குண்டோ
மானமுடன் வாழ்பவனே மாபுருடன்
சுயோதனனே மறந்தாருண்டோ
ஆனகஞ்சே ரொலிமுழங்குந் தண்டலையாரே
சொன்னே னரைக்காசுக்குதப்
போனதொரு மானம்பின் னுயிரம்பொன்
கொடுத்தாலும் பொருந்திடாதே."


அறப்பளீச்சுரசதகம்.

"பெண்புத்தி கேட்கின்ற மூடருந் தன்னைதாய்
பிழைபுறஞ் சொலுமூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது
பிதற்றிடும் பெருமூடரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில் செய்திடுமூடரும்
பற்றற்ற பேர்க்கு முன்பிணின்று பின்புபோய்ப்
பதவித்திடு மூடரும்
கண்கெட்ட மாடென்ன வோடி யிலவலர்மீது
காய்ந்து வீழ்ந்திடுமூடரும்
கற்றறிவிலாத முழுமூடருக் கிவரெலாங்
கான்முட ராமுழுடர்காண்."

"தனக்கு வெகுபுத்தியுண் டானினும் வேறுவர்
தன்புத்தி கேட்கவேண்டும்
தானந்த சூரனே யானினுங் கூடவே
தனசேகரன்கள் வேண்டும்
கணக்கின்ற வித்துவா னுனினுந் தன்னிலும்
கற்றோரை யாத்தவேண்டும்

காரினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருதத்துள்ள மந்திரிவேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்ய மெகிலுஞ்
சுதிகூட்ட வொருவன்வேண்டும்
சுடர்விளக் காயினும் நன்றாய் விளங்கிட
தூண்டுகோ லொன்றுவேண்டும்.''

மூடன் தன் மனோரதத்தின் டம்பத்தால் கர்வமெகொள்கிறான்; தன்னைப்பற்றி நாள் முழுவதும் மிகைகளே பேசுவதும், பேசுவதுமே அவனுக்கு ஆனந்தம். பிறர் சொல்லும் நியாயமொழிகளை அவன் காதிலேறமாட்டாதாதலால், தானபிடித்த பிடிமிகை மெய்யெனசாதிப்பான். தான் கொண்ட அபிப்பிராயமே மெய்யென்று திருகுகுள்ளாகிறான். தன் தலையை ஆடிக்கடி நிமிர்த்தி உலகோரை நடந்து தன்னிலும் தாழ்ந்தவர்களையும் ஏழைகளையும் அவமானையாய் நடத்துகிறான். பெரியோரையும் முதியோரையும் அலட்சியஞ் செய்வதே அவன் வழக்கம். பிறர் தன்னை புகழுமளவு செல்கொடுத்து நமபுகிறான். முகஸ்துதி செய்பவர்களை அவன் சிநேகிதராவர்.



''கெடுமதி கண்ணுக்குத்தோன்
றுகு'' விளக்கெரிகாணி பாக்கவிட்
டிற்பூச்சி விரைந்துபறந்துசுட்ட
நிறுகாபல் கட்டடமேபாய் தின்டா
விளக்கைத் தீண்டி சுடர்பட்டுச்
சிறகெரிந்து விழுவதுமேபால்
''கண்ணை மயக்கி உயிரை மடி
விக்கும்'' மாயதேதாற்றங்களும்
இவ்வுலகலுண்டென்பதை அறி
யாமல் இதஞ்சொல்லி அதஞ்செய்
வாரை நம்பி மோசமேபோவான்.

ஒருபயனுமில்லாத விஷயங்களில் மூடன் தனது முழுத்திறமையையும், காலத்தையும், பணத்தையும் விரயம்பண்ணி மிகிழ்ச்சியடைகிறான். பின்பு தான் அறியாமையால் செலவிட்ட விஷயங்களுக்காக வெட்கத்துக்குள்ளாவான். ஞானவழிகளில் ஓடும்போதுகூட அவன் தற்புகழ்ச்சியை நாடி மூடத்தனமாகவே உழைக்கிறான். முடிவில் அவன் சிரமத்திற்குக் கடைக்கும் வெகுமதி அவமானமும் காரியபங்கமுமே.

அவசரப்பட்டு ஓடி ஒருவேலியைத் தாண்டினவன் அவ்வேலிக்குப் பின் மறைந்திருந்த குழியில் விழுவதுபோல, மாயத்

த்தை உள்ளதென்றெண்ணி காரியத்தின்முடிவை ஆராயாது அவசரமாய்ச் செய்யப் புகுந்து தீமையில் விழுந்து கெடுவான்.

கூடாத கூட்டத்திற் கூடாமலும், பாடாய்முடியும் பயங்கரச் செய்கைகளுக்குட்படாமலும் இருப்பவனே புத்திசாலி. அவன் தெய்வம் நமைக்கண் திறந்து பார்த்துக்கொண்டிருக்கிறதென்பதை எப்பொழுதும மனதில வைத்து, சினாத கடுஞ்சொல் சொலலவும், பேசாத பேச்சுப் பேசவும் ஏதுவுண்டாகுங் காரணத்தில் அதற்கிடங்கொடாமல் "கூடாது" என்ற மூன்று எழுத்துப் பதத்தைத் தடையின்றி மொழிவான்.

சாலமோன் ஞானராஜா எழுதிய நீதிமொழிகளை வாசித்து தியானிப்பவாகள மூடனின மதிக்கடினனதெனபதை கண்டுயறிந்து அவற்றிற்கு விலகி ஞானமார்க்கத்தில் தம் ஜீவிய ஓட்டத்தைச் செலுத்தப்பழகுவார்கள்.

நீதி 9: 13. மதியற்ற ஸ்திரீ வாயாடியும் ஒன்றுமறியாத மூடருமாயிருக்கிறாள்.

நீதி 10: 1. ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான். மூடதனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான்.

நீதி 11: 29 மூடன் ஞானமுள்ளவனுக்கு அடிமையாவான்.

நீதி 11: 22. மதிகெடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன மூக்குத்திக்குச் சமானம்.

நீதி 17: 21. மூடபுதல்வனைப் பெறுகிறவன் தனக்கு சஞ்சலமுண்டாக அவனைப் பெறுகிறான; மதியீனனுடைய தகப்பனுக்கு மகிழ்ச்சியில்லை.

நீதி 17: 25. மூடபுத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும், தன்னைப் பெற்றவளுக்குக் கசப்புமானவன்.

நீதி 19: 13. மூடனுடைய மகன் தன் தகப்பனுக்கு மிகுந்த நாசம். மனைவியின சண்டைகள் ஓயாத ஒழுக்கு.

"வெய்யோன் கொணமிகச் சுடுமே வெய்யவனில்
செய்யோன் கொணமிகத் தீதாமே—வெய்யதிர்
எல்லோன் கொணத்தெரியினிலு மெண்ணமிலார்
சொல்லே மிகவுஞ் சுடும்."

சூரியனது கிரணம் மிகவும் சுடும். அதைப் பார்க்கிலும் அங்காரகன் கிரணமானது மிகவும் சூடாகும். இவ்விரண்டு கிரணங்களிட நல்லெண்ணமில்லாத மூடனது சொல்லே மிகுதியாகச் சுடும்.

பஞ்சதந்திரம்.

"மூடருக் குபகாரந்தான் மூந்துறச் செய்து தம்மை
பீடுசெய்தவர்க்குத் தாமும் பெரிது கைம்மாறு செய்யார்
நீடிய வுபகாரங்க ணிகழ்த்தியே தமக்குத் தாமே
கேடுசெ டேடிக் கொள்வார் கேண்மையை நினைக்கொணாதே."

"நஞ்சொடு கலந்தசோற்றை நடுக்குற வசைந்த பல்லை
வஞ்சகர் நட்பைமிஞ்சு மந்தி தன்னைச் சற்றும்
மிஞ்சிட வைத்திடாம லெடுக்கவே வேண்டும் வைத்தால்
அஞ்சிய துன்பமெல்லா மாக்குமென் றறையலாமே."


நன் னெறி.

"அறிவுடையா ரன்றி யதுபெரூர் தம்பாற்
செறிபழிலை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ் செய்வாள் விழியேயன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு."


அழகுசெய்யும் ஒளியையுடைய கண்களையல்லாமல் ஒளிமறைந்த குருட்டுக் கண்கள் இருடலடைக் கண்டு அஞ்சமாட்டாவாம். அதுபோல அறிவுடையோர் பழிகளு அஞ்சுவார்களே யல்லாது, அவ்வறிவைப் பெறுத மூடர் தம்மிடத்தில் நெருங்கிவரும் பழிக்கு சிறிதும் அஞ்சார்.


"வெண்ணெய்க் கட்டியுஞ் சீனியு மூட்டலாம்
விலக்கிக் கொள்வதற் கென்செய்ய லாமொரு
பெண்ணைக் கட்டிக் கொடுத்திட லாம்பிள்ளை
பெறுவ தற்கு முடன்படு வார்களோ
கண்ணைக் கட்டிதண் ணீர்க்கரை சேர்க்கலாம்
தாகத் தீர்ப்பது தாமன்றி யாவதோ."

குதிரைகளெவ்வளவுதான் பலவந்தப்படுத்தி தண்ணீர்க்கரையிலழைத்துப்போய்விட்டாலும் அது தானே தண்ணீரபருகி தாகந் தணித்துக்கொள்ள வேண்டுமேயன்றி மற்றவர்கள் அதன் தாகத்தைத் தணிக்கமுடியாது. அதேபிரகாரம் மூடருக்குப் புத்திமதியிதுவெனக் கூறலாமேயன்றி அதைக் கைக்கொண்டு அதனபயன் அனுபவிக்குட சக்தி அவர்களிடத்திலேயே அமைந்திருக்கின்றது.



























"தெருகொலைப் பவங்கள்யாவுஞ் சிதைத்து நற்கதியிற் சேர்க்கு
முருபொரு டந்தைதாய ருயிரொளு மனைவி கேளிர்
பெறுமனைக் குரியமக்கள் பெறுவதற் குரைத்துக் காட்டா
நிறுநியி லெளியாத்துன்பத் தெரிகர கிடையின் வீழ்வார்."

அதாவது, மோட்சத்துக்கு வழியைப் புதல்வ ரதியோர்க்குக் காட்டாத தாய் தந்தையர் நரகில் வீழ்வார்.

"மதிக்கு கல்லற முண்டாதன் மானிட்டராகிச் செம்பொற்
பதிக்குறுங்கதி பேபெறய்தல் பாரினிற் றந்தை என்போன்
விதித்த சொற் கடவாதன்றி வேறு மந்திரமு முண்டோ."

அதாவது, தந்தை சொன்மிக்க மந்திரமில்லை.

துஷ்டன்.

துஷ்டனைவன் தெய்வகோபத்திற்கும் இராஜநீதி ஆக்கினைக்கும் நிதமும் அஞ்சமாட்டான். பாவமிது, புண்ணியமிது என்று பகுத்தறியும் அறிவு அவனிடம் கிடைக்காது. யாவரிடத்திலும் அசூயையும், டம்பம், பெருமை, தன்னீரம் முதலியவற்றைக் காட்டுதல் நிரிவான். தன் வல்லமையே பெரிதென மௌட்டீகம் பாராட்டி அடாத காரியங்களைச்செய்து படாத பாடுபடுவான். கொடிய செய்கைகளைச் செய்வது பாவம். பழி பாவஞ் செய்கிறவன் கட்டாலனெனப் பெயரெடுக்கிறான். உனக்கேன் இந்தத் துஷ்ட சிருஷ்டியமென எவரேனும் மனமிரங்கி நல்வார்த்தை யாடினால் அவர்களுக்கே பெரும்பகை நினைத்துப் பல இடையூறுசெய்து கண்ணேத்தானே புகழ்ந்திருப்பான். மேலும், உலகவழக்கத்தைப் போல ஒருவிஷயமும் கிரமப்படி அறிக்க செய்ய மனமிலலாதவனாய் பெரியோர் விதித்த சன்மார்க்க விதிகளைவிட்டு அவர் விலக்கியே அநீதிகளைச்செய்ய வல்லவன். மனம, சொல், செய்கை, இம்மூன்றும் அவனிடத்தில் வேறுபட்டிருக்கும். தீக்கமனம், சொல் அறாதி, புண்ணியச்செய்கை இன்னதென்றறியாதவனாய் அகங்காரத்தை வளர்த்து அறிவை அழித்துக்கொள்வான். அவனிடத்தில் மனோவேதனையே சதா குடிகொண்டிருக்கும். காரணமின்றி யார்க்கும் தீங்குசெய்வதே அவனுக்கு இன்பமாகும். அவனைக்காணவாலரும் வெறுப்புற்று அஞ்சுவர்.

துஷ்டன் மனதில் அதிகார இச்சை புதைந்துகிடக்கிறது. கபடம் அவன்முகத்தைத் திரையால் மறைப்பதுபோல் மறைக்கிறது. மிக்காபேதம் மிருதுவான சொற்களை யூட்டுகிறது. ஆனால், மு

வில் ஜனங்களுக்கு உண்மை வெளியாகிவிடும். பனியால் விலகத் தப்போனலும் பாம்பு தன் விஷத்தை யிழப்பதில்லை. குள்ளனரி வாய் மூடிப்போனலும் அதன் விஷப்பல் ஒடிவதில்லை. அதனிடத்து இரக்கங்கொள். அதன் உண்மை ஸ்வபாவத்தைதக் காண்பிடும் அகற்குச் சூடுகாட்டிப் பால் ஊற்றினலும் உன் கோபம் கொன்றே தீரும்.

காட்டில் திரியும் மிருகங்களுக்குச் சமானமாக ஒப்பிடுவதும், துஷ்ட மிருகங்களைக் கண்டால் ஓதுங்க வெல்லையுண்டு, துஷ்டனுக்குத் தப்புவிக்க வழியில்லை.

"சுக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்தவிடங் கொடுக்கில் வாழுமே—நோக்கின்
பைங்கணை ரவிற்குப் பல்லளவே தூர்ச்சனர்க்கு
அங்க முழுதும் விடமேயாம்"

என்றபடி, ஒவ்வொரு ஜந்துவுக்கும் விஷம் ஒவ்வொரிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. துஷ்டனுக்கோ அங்கமுழுவதும் விஷமாயிருக்கிறது ஆதலால், துஷ்டன் பகுத்தறிவில்லாத மிருகங்களைக் காட்டிலும் இழிந்தவனகிறன்.

"கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்லோர் நெறி."

கொம்புளதற்கு ஐந்துமுழம், குதிரைக்குப் பத்துமுழம், மதங்கொண்ட யானைக்காயிரம் முழம் எனத் துஷ்டமிருகங்களைக் கண்டால் தூரவிலக ஒளெல்லை காட்டியிருக்கிறது. தூர்ச்சனர்க்கோ எல்லையே வகுக்கப்படவில்லை. மேற்கூறிய விலங்குகளைப் பரிசிக்காவிட்டாலும் சொல்லிய விதிப்படி சிறிது தூரத்திலாவது அவைகளைக் கண்ணுற் றரிசிக்கலாம். அப்படி அத்துஷ்ட மிருகங்களைவிட கேடியாகிய வம்பனது வரவைத் தென்படாமலிருந்து சுகமெய்துவது உத்தமமெனப் பெரியோர் பெரிதும் பேசியுள்ளார்.

சங். 1: 1—2 துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிறவன் மனுஷன் பாக்கியவான்.

குச்சிநாய்களைப்போல் யாதொரு காரணமுமின்றி சதா குலைத்துக்கொண்டு திரியும் துன்மார்க்கரைக் கண்ட மாத்திரத்தில் கருடனைக் கண்ட சர்ப்பம்போல் அடங்கி ஒடுங்கி மறைந்திருப்பதே உத்தமம். ஏனெனில், அவர்கள் பழக்கத்தால் நமக்குள்ள நற்குணம் மூழுவதும் நாசமாகும். "கழுதையோடு சேர்ந்த கன்றும் மலந் தின்னும். தீயருறவினல் தெய்வநிந்தனை மூற்றுமே அற்றுப் போகும். ஆசாரம் அடியோடு வேகும். மானம் மடிந்துபோம். பரத்தையர்மேல் பட்சம் ஏற்படும். நற்குணமும் நன்னடக்கையும் நாசமடைய துர்க்குணமும் அனர்நடத்தையுமே விர்த்தியாகும். தூஷணை வார்த்தையே பூஷணமாகிவிடும். ஆகவே, துன்மார்க்கர் உறவு பெருந் தின்பத்தையும் பல கஷ்டங்களையும் விளைவிக்கும்.

"தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயோர் சொற்கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது."

என்று ஔவை சொன்ன அமுதவாக்குப் பொய்யன்று.

பஞ்சதந்திரம்.

துச்சன ருடனேகூடிச் சுகமடைந் தாருமில்லை
இச்சையா சகத்திலுலே யிடருறு தவருமில்லை
குச்சிதக் களவினுலே கொழுந்தி படைத்தாரில்லை
அச்சமி லாசாலே யழிபடா வாழ்வுமில்லை.

கல்லறி வமைச்சர்புத்தி நஞ்சுபோ லிருந்து பின்னர்
எல்லையில் செல்வமாவி யின்பமு முதவு நல்லோர்
அல்லவர் புத்திமுன்ன மமுதெனத் தோன்றிப் பின்னர்
ஒல்லையிற் செல்வமின்ப முயிரையு மிழக்கப் பண்ணும்.

கச்சுமா மரத்தையவத்து களிகட லமிர்தம் பெய்தும்
பச்சிலை முதலாக் கொல்லும் பாம்புபால் பெய்திட்டாலும்
குச்சித விடத்தை நல்குங் குவிதசர்க் கரைமேனட்டு
மிச்சமாத் தேன் பெய்தாலும் வேம்புதன் கசப்புமாறு.

இன்னவை போலுந் துஷ்டர்க் கிதம்பல விதஞ்செய்தாலும்
பின்னுமங் கவர்துன்மார்க்கம் பெருகுநற் குணத்த ராகார்
அன்னரை மூலத்தோடே யழிக்கினுஞ் சயமார் துஷ்டர்
மன்னுயி ரழித்தா லேதன் மார்க்கமு மழியுந்தானே.

ஆதலால், துஷ்டநிக்ரமும், சிஷ்டபரிபாலனமே அரசர்க்குத் தகுந்த நீதிநெறியென பஞ்சதந்திரம் ஆசிரியர் கூறுகிறார்.

"நல்லவனுக்கு எல்லோரும் நல்லவர்களே" என்ற பழமொழிப் படி, நம்பிடத்தில் துஷ்ட குணங்களிருக்கின்றனவா வென்று கவனிப்பது மிக்க அவசியம. உள்ளிருக்கும் துஷ்டனை யறியாமல் வெளிருக்கும் துஷ்டனைப்பற்றிப் பேசுவது பெருங் கவறுகும்.

அறிவின் ரூபமாகிய ஆத்துமாவுக்கும் பஞ்சேந்திரியங்களுக்கும் சதா கலகம் நடந்துகொண்டே யிருக்கின்றன. இவற்றில் எது மேற்கொள்ளுமோ அதற்குத் தக்கபடிதான் நாம் நல்லோராவதும் தீயோராவதும். பகைவரது கூரிய அம்பினும் அடங்காப் புலன்களே கொடியனவாம். அவற்றிற்கு ஆட்பட்டு,

தண்ணெக்-"குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்
பிடிபடுக் கப்பட்ட களிறு."

என்றபடி மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் பஞ்சேந்திரியங்களின் மூலமாக உண்டாகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலாதிகளையும் அடக்கி இந்திரிய நிக்கிரகம் செய்து அதை அறிவோடு இணங்கச் செய்ய வல்லோமாயின், அதைப்போல பேரின்பம் வேறொன்றில்லை.

தன் மனைவியை சொகுசாய் யூட்டி வளர்க்கின்றவன் கொஞ்சத்திறகுள் அவளைத் தன்மேல் எதிர்க்கக் காண்பான் என்பது ஞானராஜன் உரைத்த பழமொழி. குலமக்கள் தங்களை இடைவிடாமல் நிர்மையிற் புகுத்தவும் நன்மையை விட்டகற்றவும் நேடுமே. அஞ்சதத்தக்க சதகுருவாகிய உடலின்மேல் எப்போதும் நன்னூல் கருத்துமாயிருந்து அவ்வுடலின் துர்நாட்டங்களையும் துர்சிந்தனையும் எதிர்த்து மறிப்பதினாலும் ஆன்மா புண்ணியமார்க்கமென்றெண்ணுமே காரியமளவுந்நிலும் அவ்வுடல் அதன்சித்தத்திற்கு அமைந்து தாழ்மையுடன் பணிவிடை தொண்டுபுரியும்படி அவ்வுடலைக் கண்டிப்பாய் நடத்துவார்கள்.

வென்றடக்கப்படாத துஷ்டமிருகம் நம்மைக்கொன்று விழுங்காதபடி அதனை இருப்புத்தூண்களால் இறுகப் பிணித்துத் தடிகொண்டு அடிக்குமாப்போல் நாம் நமதுடலிச்சையை அடக்கி அடக்கி நடத்தவேண்டும்.

தன் உயிரைச் சிநேகிக்கிறவன் அதனைப் போக்கடிக்கிறான். தன்னையினறவன் சித்தியத்திற்கும் அதனைக் காப்பாற்றுகின்றான். என்று இயேசுவானவர் திருவுளம்பற்றினதின் கருத்தும் இதுவே.

ஜய விஜய மகிமைப் பிரதாபங்கள் அனைத்திலும் மிக்க அருமையும் மகத்துவமுமான ஜய விஜயம் நம் பேரோடும் நம்மோடும் பேராடி அடையும் ஜய விஜயமாதலால் மகா சண்டவேகத்துடன் அவ்வப்பியாசத்தைக் கையாண்டு வருவோமாக.

"தங்கம் காய்க்கின்ற மரமாயினும், தலையில் தட்டிலில் அதை வெட்டியெறியும் தீதிமுறையாகும்." ஆதலால், துஷ்டரின் உதவியால் எவ்வளவு லாபங் கிடைக்கினும் அதைக் கவனிக்காது அவர்கள் சகவாசத்தைக் கட்டோடு நீக்குவதே நல்லோர்க்குத் தகுந்தது. இதுபற்றியன்றே!

"நிந்தையிலாத் தாயவரும் நிந்தையரைச் சேரிலிவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்து தண்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்."

தாயவரும் நிந்தனையுடையவரைச் சேர்ந்தால் அவர் நிந்தை தம்மிடத்திலிருக்கும். பனைநிழலின் கீழிருந்து பாலபருகினாலும் அதைப பாலென்று சொல்லுவார்களோ?

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தற் றலை."

பிறரிழைத்த சிறுபிழைகளை எண்ணாமல் மறப்பதே நன்று. அவற்றை மறப்பதினால உபகாரம் ஆகிவாம்.

"சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பதுகடனே."

பிறர் செய்த தீங்கை மறக்துவிடாமல மனதில வைத்துப் பதிலுக்குப் பதில தீங்கிழைப்பது துஷ்டரின இழிவான சுபாவம். ஒருவரிடமுள்ள குணகுணங்களைக் கவனியாது நற்குணங்களையே கைக்கொள்வது மேலோர்கள் சுபாவம்.

பழமொழிவிளக்கம்.

"தன்மார்க்கர்க் காயிரந்தான் சொன்னலும்
மறந்துவிட்டுத் துடக்கே செய்வார்
சன்மார்க்கர்க் கொருவார்த்தை சொலுமளவே
மெய்யதனிற் றழும்பாக் கொள்வார்
பன்மார்க்க மறைபுகழுந் தண்டலையாரே
சொன்னேன் பண்பு வாய்ந்த
கன்மாடி தனக்கொரடி நற்பெண்டிர்க்
கொருவார்த்தை கடத்தை யாமே."

"செங்கமலப் போதலர்ந்த செவ்விபோலும் வதனம்
தங்குமொழி சந்தன சீதம்போலும்—பொங்கிதயம்
கத்திரிகை போலுமால் காரிகையே வஞ்சர்மனக்
குத்திரர்பான் மூன்று குணம்."

தஷ்ட! வஞ்சகமான மனத்தினையுடைய தஷ்டரிடத்தில் மூன்று குணங்களுண்டு. அவையாவன:—

அவர்கள் முகம் செந்தாமரை மலர் மலர்ந்தாற்போல அழகாயிருக்கும். அவர்களுக்குள்ள சொல் சந்தனம்போலக் குளிர்ச்சியாயிருக்கும். அவர்களுடைய கொதிக்கின்ற இதயம் மயிலை வெட்டுகிற கத்திரிகைபோலக் கடினமாயிருக்கும்.

"தர்ச்சனரும் பாம்புந்தொழி லொக்கினும் பாம்பு
தர்ச்சனரை யொக்குமோ தோகையே—தர்ச்சனர்தாம்
எந்த விதத்தாலு மிணங்காரே பாம்புமணி
மந்திரத்தா லாமே வசம்."

தர்ச்சனரும் பாம்பும் தஷ்டச் செய்கையில் ஒத்திருந்தாலும், பாம்பானது மணிமந்திரத்தால் வசமாகும். தஷ்டரோ எந்த வகைக்கு மிசைந்து வரமாட்டார்கள்.

"தர்ச்சனரும் பொன்னுந் துடியும் தரகதமும்
அச்சமற முன்னிற்கு மாயிழையும்—நச்சரவும்
கண்டித்த வெள்ளருவ கரும்பு மிளநீரும்
தண்டித்தார்க் கண்றே சயம்."

தஷ்டரும், பொன்னும், உடுக்கையும், குதிரையும், பயமில்லாமல் எதிரே நிற்கிற பெண்ணும், நஞ்சையுடைய பாம்பும், கருங்கினாளும், கரும்பும், இளநீரும் ஆகிய இவைகளைத் தண்டித்தவர் கருத்தே பயன் கிடைக்கும்.

"தியவர்பால் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தயவரென் றெண்ணியே தன்னற்க—செயிழையே
தண்ணெளிய மாணிக்கஞ் சார்ப்பர் தரித்தாலும்
கண்ணுவரோ மற்றதனை நாடு."

தீயவரிடத்தில் கல்வி யதிகமாயிருந்தாலும் அவர்களை நல்லோரென்று நினைத்து அணுகாதிருக்கவேண்டும். பாம்பினிடத்தில் மாணிக்கமிருந்தாலும் அதை யெடுப்பார்களா?

தன் காரியத்திற்கு தஷ்டன் சகாயம் வேண்டியிருந்தால் அவனை தஷ்டன் கொஞ்சமாகவே நினைக்கவேண்டும். அதிகமாய் நினை

கித்தால் அவன் வருத்தமுண்டாக்குவான்—வெற்றிலைபாக்குடன் சுண்ணாம்பு கொஞ்சமே சேர்க்கவேண்டும். அதிகம் சேர்த்தால் வாயில புண்ணையுண்டாக்கும்.

மேலோர்க்கு உபகாரம் செய்தால் அவர் பிரதியுபகாரம் செய்வர். கீழோர்க்கு உபகாரம் செய்தால் அவர் அபகாரமே செய்வார்—பசுவுக்கிரைகொடுத்தால் மதுரமான பாலைத்தரும். பாம்புக்கிரைகொடுத்தால் கொடிய விஷத்தையே தரும்.

உத்தமர்க்குச் செய்த வுபகாரம் நன்றாய் பிரயோஜனப்படும். மத்திமர்களுச் செய்த வுபகாரம் பிரகாசிப்பதுபோல தெரியும். அதமர்களுச் செய்த வுபகாரம் அப்படியே மறைந்துபோம். சிப்பியில் விழுந்த மழைத்துளி முத்தாகும். கானலில் விழுந்த மழைத்துளி முத்தைப்போல பிரகாசிக்கும். மண்ணில் விழுந்த மழைத்துளி அப்படியே மறைந்துபோம்.

"கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும புல்லியர்தாம்
புண்ணிய ராவாரோ புகல்."

"சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரென்று மொழியாரே வெற்றிவெயர்
வெண்கலத்தி லேரைசி யிகுமீம விரிபசும்பொன
ணென்கலத்தி லுண்டோ வுரை.

சீராப்புராணம்.

"பாரிடைப் பெரியவர்களுக் கிடர் படுத்திடவென்
ரோரும் வன்மனத்தவர்களுக தூறு பாருலகிற்
சாருமக்களு மனைவியுந் தாமுந் தமபொருளும
வேரொடுங் கெடுமென்பது நிசமென விரிதனார்."

பெரியோருக் கிடர்விளைப்பவர் கெடுவர்.

"ஓங்குமானில மாக்களி லொருவருக் கொருவர்
தீங்கியற்றிட நினைத்திடின் கொடிய வதனீமை
நீங்கிடாதவ ருயிரினைப் பருக நீரலாகை
தாங்கும்வாளென வொல்லையி லுறச் சமைந்திடுமே."

அதாவது, ஒருவர்க்குத் தீங்கு நினைத்தால் அதனீவகு தம்முயிரையே கொலலும். அலலது வாளாய்ச் சமையும்.

"ஈமமற்ற புன்மனச் சிறியவர் திரண்டிகலிக்
கோரமாகிய பழியை யென்றுக்கொடுங் கொலையாய்த்
தேருநல் லறிவாளருக் கிழைத்திடுந் தீங்கு
நீரிடைக் கன நெருப்புருத்திவை தொத்திடுமே."

அதாவது, பெரியோர்க்குத் தீங்கிழைத்தல் நீரில் நெருப்பைப் புகுத்த லொக்கும்.

"பகையினை நல்லுடல் வருத்து நோயதனைக்
கொடுநெருப்பைப் பாரின்மீதிற்
றெருவு விடத்தைதத் தோற்றரவிற் பரிகரித்த
லியாவர்க்குஞ் சூழ்ச்சித்தாகு
மிருமெனி லிந்நில மாக்கள் மதியாலும்
லியாலும் வெல்வதாகா
நிகாரும் வெஞ்சமர் தொலைத்து நிறங்குருதி
பிறங்கியொளிர் நினைங்கொள்வேளிர்."

பகை, நோய், நெருப்பு, விஷம் முதலிய வற்றை தோன்றியவுடனே நீக்கவேண்டும். காலதாமதஞ் செய்தால் அவைகள் பெருகிக் கொல்லும்.

"சிலமறியாத சிறியோர்கள் பிழை செய்யின்
மேலவர்கள் கண்டவை விலக்கல் கடனல்லாற்
கோலிய பெரும்பகை குலத்தினில் விளைத்தன்
மாலுற வனர்த்தன் மடமைத்தகை மையாமால்."

அதாவது, சிறியோர் பிழைசெய்யக் கண்டால் உடனே விலக்க வேண்டியது பெரியோரது கடமை.

"தன்றுணைத் தவத்தினர் தீயர் தன்மையிற்
குன்றிலர் காடொறுங் குளத்தைப் பல்லுறத்
தின்றிடி லிரதமே செனிக்கு மியாவரு
மென்றிடி லினியவை வேம்புக் கில்லையால்."

அதாவது, நல்லோரும் தீயோரும் தங்கள் செய்கை மாறமாட்டார்கள்.

"இறையவன் அருட்படிக் கிடரடைந் ததென்னிடத்திற்
குறையிதென்று மாநிலத் தவர்தமைக் குறைப்பதென்றன்
மறையி னேரல வெகுளியை மனத்திலடக்கி
நிறையி னிற்பது பெரியவர்க்குரிய நன்னிலையே."

தீங்கிழக்கப்பட்ட பெரியோர் நிற்கவேண்டிய நிலை யின்னதெனக் காண்பித்திருக்கிறது.

" சாலவு கட்பினைத் தணப்பி யாதலர்
மேலவர் கட்பினை வெறுக்கும் வாய்மையர்
சிலமொன் நின்றிய சிறமை யாரென
நாலினும் வழக்கினும் நவலுகின்றதே."

அதாவது, மேலோர் கட்பினை வெறுப்பவர் இழிஞராவர்.

"| ஆலைப் பலா வாக்கலாமோ வருஞ் சணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—சீலநிறக்
காக்கைதனைப் பேசவிக்கலாமோ கருணையிலா
மூர்க்கரைச் சோக்கலாமோ."

" பாவிதனைத் தண்மைப்போர் பாலாகு மல்லதருள்
மேவுவெ னண்பர்பான் மேலாதை—யோவியமே
காயின்பா லத்தனைபு காய்தனக்கா மண்றியே
தூயவருக் காகுமோ சொல்."

" நம்ப னடியவர்க்கு நல்காத் நிரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காங் நிக்காகுங் காண்."

என்று, ஔவையார் கல்வழியிற் செலவழியாத செல்வம் சோழிய மெனப் பாடியிருக்கிறாள்.

பராசை.

மனித வாழ்வைப்போல் நிலையற்றதும், கவலையுடையதும், நம்பிக்கையற்றதும், மயக்கமுடையதும், பலவீன முடையதும் வேறெதுவும் இல்லை. வீடுகள், குளங்கள், மாங்கள் முதலிய உலகத்திலுள்ள அசேதன வஸ்துக்களுக்குள்ள நிச்சயங்கூட அவற்றிற்குக் காணகர்த்தர்களா யிருந்த மனிதருக்கில்லை.

" இவ்வுறைக் கிருந்தாரை காளைக் கிருப்ப
ரென்றெண்ணவோ நிடமில்லையே."

என்றபடி, மிகவும் அநித்தியமான வாழ்வையுடைய மானிடப்பிறவிகள் இவ்வுலகில் அநேக யுகங்கட்கிருந்து ஏராளமான செல்வத்தையும் ஒப்பற்ற கீர்த்தியையும் பெற்று மாடமாளிகை கூடகோபுரங்களைக் கட்டி, யாதொரு குறையுமின்றி சகல சம்பத்துடன் வாழ்வதாக மநோராஜ்யம் செய்கின்றனர்.

மேலும், அகங்காரமும், கர்வமும் மேலிட்டு பரோபகாரம், ஜீவதயை, கல்லெண்ணம், கடுநிலைமை, கல்லொழுக்கம் முதலிய உத்தம குணங்களையகற்றி உலோபம், வஞ்சகம், கபடு, மாய்மாலம், இரண்டகம், பொறுமை, நன்றிமறத்தல் முதலிய தீர்குணங்களை

யுடையவர்களாய் தாழ்ந்தோ ரென்றும், உயர்ந்தோ ரென்றும், ஏழையென்றும், செல்வர் என்றும், எளியார் என்றும், வலியார் என்றும் பற்பல பேதங்களைக் கற்பித்து மனத்தையே குலதெய்வ மாகக் கொண்டு,

" கைத்தலையான் காற்கீழ் ஒதுங்கும் கடல்ஞாலம்
பித்தலைய வல்ல பிற."

என்ற நீதிவாக்கியத்திற் கிணங்க பணமுள்ளவர்களையே மனிதர்க ளெனக் கருதி, அவர்கள் கால்களின்கீழ் ஒதுங்கி சேவைசெய்து அவர்களைப் புகழுவதும், அஃதில்லாரை இகழுவதும், அடிமை செய்வதும் அயுள்காலமெல்லாம் பணப்பேய்பிடித் தலைந்து தமது வாணாளை வீணாக்கி பெரும் பாவிகளாகின்றனர். ஆராய்ந்து பார்க்கில், "உண்பது நாழி உடுப்பது நான்குழமும். ஆனல், என் னுவதோ இந்த உலகத்தை யெல்லாம் கட்டி யாளவேண்டுமென் று." வச்சிரகாயமும் சிரஞ்சீவியாக முடிவற்ற ஆயுளும் பெற் றாலும் ஆசை யடங்கினபாடில்லை.

தாயுமான சுவாமிகள்.

" ஆசைக்கோ ரளவில்லை யதிலுமெல் லாங்கடடி
யாளினும் கடன்மீ திலே
ஆணைசெல வேகினவ ரழகேச னிகராக
வம்பொன்மி கவைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திவர்
நெடோளிருந்த பேரும்
கிலையாக வேயினும் காயகற் பந்தேடி
நெஞ்சபுண் ணைவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
மூறங்குவ தாகமுடியும்
உள்ளதே போதுகா லனைனைக் குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே."

என்றபடி, மேலேற மேலேற ஆசை அதிகரித்துக்கொண்டே போ கிறது. போதுமென்ற மனதிடனேகூடிய தெய்வபக்தியே மிகு ந்த ஆதாயம்.

யோசிக்கும் வேளையில் "பசிதீர வுண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்ற பெரியோர் வாக்கு ஒரு நிமிஷமேனும் மனிதரின்

மனதில் கஸ்தியிருப்பதில்லை. திருட்டோடு திருப்தி யென்ற எண்ணமில்லை. பரிசுத்த சுகம் புறப்படுவதுபோல் மனத்தினிடத்தின்றி முகமாகவும். அதி கினமாகவும் மழமழவென்று சுங்குதடையிற்றி யெள்ளம்போல பரவெடுமும்பி மனிதர்களை வரிப்பிக்கிறது. அந்த வரிப்பைக்கு அஞ்சி மனிதர்களும்போடு கொஞ்சமன்று. மனமென்னும் பேய்க்குரங்கு சாமான்யத்தில் சிப்படுவதன்று. பாய் மரத்திலிருந்து கொம மரத்திலும், கொம மரத்திலிருந்து கூட்டச் சுவரிலும் ஒரு கணத்தில் தாவுகிற அக்குரங்கு கான் விரும்பும் பொருளைப் பெறாவிட்டையில் தனது எஜமானராகிய ஆசைபெண் ணுங் கலகக்காரர்களை மென்மேலும் தூண்டி மனிதரை அல்லோல கல்லோலப்படுத்துகிறது. தனது பரிவாரங்களாகிய வஞ்சகன், பொய்யன், உலோபன் முதலிய துஷ்டர்களை எழுப்பிவிடுகிறது. இப்பாவ துஷ்டர்கள் மனிதரை தம் வசப்படுத்தி படாத பாடு படுத்துகின்றனர்

நாலடியார்.

"உண்ணுன் வெளிநிற்பன் ஒன்று புகழ் செய்யான்
தன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பனேல் அஃது
இழந்தானென் றெண்ணப் படும்"

கணங்கொண்டு சுற்றத்தார் கள்ளென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப் பார்க்கண்டு—மணங்கொண்டீண்
டுண்டுண்ண டுண்டெண்ணும் உணர்விலைச் சாற்றுமே
தொண்டொண் டொண்டெண்ணும் பறை."

தெய்வ சந்நிதானத்திற்கும், இராஜ சமுகத்திற்கும் ஆசிரியர் பாவலர், கர்ப்பஸ்திரீகள், முதலானவர்கள் உள்ள இடத்திற்கும் வெறுங்கையோடு ஏகலாகாது. கையுறை ஏதேனும் கொண்டு போகவேண்டும்.

புண்ணியா புண்ணியம்.

உண்மை, சாந்தம், பொறுமை முதலிய புண்ணியங்களைச் செய்வது மகா பிரயாசமென்று சிலர் நினைப்பார்கள். அப்படி நினைப்பது தப்பு. ஒரு ஜாண் வயிறு வளர்க்க "திரைகடலோடியும் திரவியந் தேடு" என்று ஔவை சொல்வதுபோல் மனிதர் சமுத்திர யாத்திரை செய்தும், மலைகளேறியும், ஆரண்யங்களைக் கடந்தும், பற்பல தேசங்களெல்லாஞ் சுற்றித் திரிந்தும் பல தொ

முல்கனேயுஞ் செய்கிறார்கள். வேறு சிலர் யுத்தக் களத்திலும், சாகசகங்களிலும், சமுதாயங்கள் நடுவிலும் தங்கள் உயிர்களை வெறுதகிக் கஷ்டப்பட்டுச் சம்பாதிகிறார்கள். ஆனால் புண்ணியஞ் செய்வதறகு இவ்வளவு கஷ்டம் வேண்டியதிலலை. உள்ளதை உளளபடி கூட்டாமல குறைக்காமல் நடந்ததை நடந்தபடி சொல்லுவது எவ்வளவு எளிதான காரியம்.

ஆனல் நடவாத காரியத்தை நடந்ததுபோலே பொய் சொல்லுகிறதா யிருந்தால், ஒரு பொய்யை ஸ்தாபிக்க அநேகம் பொய்களைச் சொலலியும் பிரபோஜனமிலலாமல "கெடடிககாரன் புளுகு எடடு நாளையில் தெரியும்" எனறபடி பொய் எப்படியாவது வெளியாகிவிடும். இந்தமாதிரியாய்க கொலை, களவு, மோகம, வஞ்சகம, புரடடு, உருட்டு, பரஸ்திரீ கமனம முதலிய கொடிய பாபச் செயல்களைச் செயவது மகா கஷ்டம். ஏனெனில் அவறறைச் செயவதறகுத் தகுந்த சமயங்களும், ஆயுதங்களும், சகாயங்களும, சதகங்களும் அமைதது வைத்துகொண்டு ஜாக்கிரதையுடன அவற்றைச செயதாலும், அவ்வழிகளில கஷ்டமும், அசசமும், வருத்தமும், பிராண சங்கடங்களும ஏறபடுகின்றன.

"அவரவர் வினையில் அவரவர் படுவார்
அவரவர் வினை யளவுக்கே."

துஷ்டர்களுக்கு அவர்களுடைய துன்மார்கக் செய்கைகளே அவர்களைத தணடிககிற ஆயுதங்களாகினறன. நாம் எதை விதைக்கிறோமோ அதைதய அறுப்போம். வேமபை விதைத்தவனுக்கு வேபபலலாமல கருமபு வினையமாட்டாது. பாமபை வளர்த்தவனுக்கு விஷமில்லாமல் அமிர்தம கிடைக்கமாட்டாது. பேருண்டி, சாமபல், முதலிய துர்வழக்கங்களுக் காளானவர்கள் அஜீரணம, வியாதி, ஆயுளநஷ்டம முதலிய பல தணபாகனியறுபவிக்கிறார்கள.

பஞ்சதந்திரம்.

"தருமமே விரும்புவாரைத் தருமமே விரும்பிக் காக்கும்
தருமமே யிகழுவாரைத் தருமமே யிகழ்ந்து நிற்கும்
தருமமே மெய்யாய் நின்று சகலமுஞ் செய்தலாலே
தருமமே சொல்வதல்லாற் சற்றுமாம பொய் சொல்லோமே."

"எண்ணிய விரதமெல்லா மியற்றினு மிலலக்கு மேலாம்
புண்ணிய விரதமென்னும் பொய்சொலா விரத மொன்று
கண்ணிய வுயிரைக் கொலலா கலந்தரு விரதமொன்று
மண்ணினிலனுஷ்டிப்போம் நாம்வழுவிலோரஞ் சொலோமே."

சீறாப்புராணம்.

" பொய்மையோர் கொடிவரைப் பொழுதிற் நீர்த்திடும்
மெய்மைசூழ் கடலினும் விளங்கித் தோன்றுமால்
கைமத கரியினைக் கருப்பை மாய்த்திடா
தய்மதிப் பெரியவ ருளத்திற் காண்பரால்."

அதாவது, பொய்மை கொஷியில் அழியும். மெய்மை என்றும் விளக்கும்.

ஆசாரம்.

" திங்க ளமிர்த கிரணமிகச் சீதளமாம்
திங்களினுஞ் சந்தனமே சீதளமாம்—இங்கிவற்றின்
அன்பறிவு சாந்த மருளுடையார் நல்வசனம்
இன்ப மிகுஞ்சீதள மாம்ம."

" ஞானம் பெருமை தயங்கருணை யுண்மையபி
மானம் பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குண மாசாரந் தருகல்வி நீதிதெறி
சற்குணருக் குண்டென்றே சாற்று."

பெரியோர்.

" பெரியோ ருழையும் பிழைசிறி தண்டாயின்
இருநிலத்தன் யாரு மறிதல்—தெரிவிக்கும்
மீதக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு."

சந்திரனிடத்துள்ள மறுவானது உலகமெங்கும் பகிரங்கமாகத் தெரிவதுபோல் பெரியோரிடதத்துள்ள சிறிய குற்றங்களும யாவர்க்கும் பகிரங்கமாகிவிடுமாதலின பெரியோர். எவகு ஜாக்கிரதையாயொழுகவேண்டும்.

Men who have a reputation to lose must be careful about what they say and do.

ஔவையார்.

" வெட்டெனவை மெத்தனவை வெல்வாவாம் வேழத்தில்
பட்டிருவும் கோல்பஞ்சிற் பாயாது—கெட்டிருப்புப்
பாரைக்கு சொக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு சொக்கு விடும்."

" அரிமந்திரம் புகுந்தால் ஆனை மருப்பும்
பெருகொளி சேர்முத்தம் பெறலாம்—சரிநுழையில்
வாலுஞ்சிறிய மயிரெலும்புங் கத்த பத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்."

குடிவெறி.

மதுபானப் பிரியர் பணத்தைக் கொடுத்துப் பைத்தியத்தை விலைக்கு வாங்குகிறார்கள். அவர்கள் அறிவு மயக்கத்தால் ஐம்புல உணர்ச்சிகளின் ஒழி மழுங்கி, கல்வியிருந்தும் மூடராகவும், தனமிருந்தும் தரித்திராகவுந் தோன்றுவார்களேயொழிய, எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் முன்னுக்கு வரமாட்டார்கள். இதைப்பற்றியே,

" அறிவை யழிக்குஞ் செயலழிக்கு மழியாமானத்தினை யழிக்குஞ்
செறியு மறிஞர் மதியாத செருக்கை விளைக்கும் சான்றோரு
முறியும் வெறுப்பு மிகவினைக்கு முனிவு வினைக்கும் பகையஞ்சாக்
குறிகள் வினைக்கு மனைவினைக்குங் கொள்ளேல் கள்ளுண்டலை யமைந்தா."

என முதியோர், குடி வெறியானது அறிவு, முயற்சி, மானம் முதலியவற்றை யழிபடனுடன் தன்னையின்ற மாதாவுங்கூட வெறுத்து விடத்தக்க ஸ்திதிக்குக் கொண்டுவருதலே குடியே குடியைக் கெடுத்து விடுமென்று எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

இவ்விதமாய் மதுபானப் பிரியர் தமது வீட்டைவிற்று, மாட்டை விற்று, ஆடையாபரணங்களை விற்று, மானங் கெட்டு, மரியாதை கெடடு, மதிகெட்டு, விதிகெட்டு, பெண்சாதி யொருபக்கம், பிள்ளை யொருபக்கம், தாங்க ளொருபக்கமாகத் திரிகிறபடி பவத்தை என்னென்று சொல்லலாம்!

" மலர்தலை யுழுதென மாந்தச் செய்திடும்
மலர்ந்த பூவென வனலள்ளச் செய்யும் வெஞ்
சலந்தரும் பகைவர்தை தனக்குள்ளாக்கு மான்
னலந்தனை யழித்திடு நறவு கொஞ்சமே."

என்றபடி, வெறியர்களின் அறிவு மயங்கிப் போவதால் மலத்தை யமுதாகப் புசிக்கவும், அக்கினியை மலர்ந்த புஷ்பமென்று கையிலெடுக்கவும், கொடுமையை விளக்கத்தக்க பகைவர் காரகளில் அகப்பட்டுக் கொள்ளவுஞ் செய்து, சகல நன்மையுகளையு மழித்து தீங்கையே விளைவிக்கும். அவ்வெறியர்க்குக் கள்ளுக்கடையே காணியாட்சி, குப்பைமேடே அவர்கள் குடியிருப்பு, புழுதியே யவர்கள் போர்வை, சாம்பலே யவர்கள் சப்பிரமஞ்சம், சாணமே யவர்கள் சாயும் மெத்தை, கள்ளே யவர்கள் ஸ்நான பானம், மலமே யவர்கள் போஜனம், ஆகாயமே யவர்கள் ஆடை, நண்பர்களே யவர்கள் துணை. மேலும்,

"வறுமையாற் களவு செய்வர் மையலார் காமத்தாழ்வார்
குறுமை சேர் பகையினுல் வெங்கொலை செய்வர் வசையி னோடுஞ்
சிறுமை தந்துயி ரிருந்துஞ் செத்தவ ராக்கி யிம்மை
மறுமையை யழிக்குங் கள்ளை மாந்தலெப் பயன் வேட்டம்மா!"

என நீதிநூல் கூறுகின்றது.

குரங்கு செய்யாத கோரணிகளைக் குடியன் செய்கிறான்.

குடிவெறியானது இவ்வளவு தீங்கினை விளைவிக்கக்கூடிய தென அறிந்தும், மிருகத்தினும் கேடான சன குணமுள்ள மனுஷர் இதனை மேலும் மேலும் விரும்புவதற்குக்காரணம் யாதெனில்,

விரும்பினுல் கரும்பு, வெறுத்தால் செருப்பு என்று மனுஷன் ஆரம்பத்தில் சொல்லக்கூடிய எந்த வழக்கமும் சுகத்தின் காரண மாகவோ, சோகுசின் காரணமாகவோ ஆரம்பிக்கப்பட்டு வரவரக் கடினமான பழக்கமாகி மனுஷனை அடிமையாக்கிவிடுகின்றது.

மனுஷ தேகத்துக்கு நேரிடக்கூடிய வயிற்றுப்பிசம், அஜீரணம், அசமந்தம், மண்ணியாகூலங்கள், இருதயத்துடிப்பு, அவயவங்களில் நேரிடக்கூடிய பலவித வலிகள், பலவீனம் முதலியவற்றை நீக்கி, சமயசாந்தி யுண்டாக்கும் தன்மை சாராயத்திற் கிருப்பதால் அதைத் திடீரென நிறுத்தினுல் மேற் வியாதிகளின் குறிகள் தோன்றலாம். ஆதலால் ஔஷத முதலியவற்றை யுபயோகித்து நாளடைவில் அதை நிறுத்தப் பழகவேண்டும்.

நமது சங்கமார்க் குடிவெறி நிவாரணியை உபயோகித்து அநேகர் பலனடைந்திருக்கின்றனர்.

சாராயமானது நரம்புகளுக்கும் அவை சம்பந்தமான மூளைக்கும் கிளர்ச்சியைத் தருவதால் அதனு லுண்டாகும் ஆனந்தலகிரியானது சரீர மனோ உபத்திரவங்க ளனைத்தையும் நீக்கி உற்சாகந் தரும் சக்தியையுடையது. ஆதலால் அதைத் தடுக்க முயலுவோர் யோகாப்பியாச முதலிய மார்க்க சம்பந்தமான அப்பியாசங்களால் பரமாத்மாவுடன் ஐக்யமாகி ஆனந்த நிஷ்டையிலிருந்தால் மாத்திரமே குடிவெறியை முற்றிலும் நீக்கக்கூடும்.

"மங்காப்பால் குடித்து மலைமேம விருப்போர்க்குத்
தெங்காப்பா லேறுக்கடி—குதம்பாய்
தெங்காப்பா லேறுக்கடி."

என்று குதம்பை சித்தர் பாடியிருக்கின்றனர்.

காமம்.

" தந்தாய மன்றியே பாதாய மேனினைவு
தனைவைத்த காமுகர்க்குத்
தணையில்லை நிசமில்லை வெட்கமில்லை சமரினில்
தயிரியஞ் சற்றுமில்லை
அந்தாரமில்லை தொடர் முறையில்லை நிலையில்லை
யறிவில்லை மாபுமில்லை
யறமில்லை நிதியில்லை யிரவினிற் றனிவழிக்
கச்சமோ மனதிலில்லை
ஈந்தாத சனமில்லை யினமில்லை யெவருக்கும்
நட்பில்லை கனதையில்லை
நயமில்லை யிளமைதனில் வலிமையில்லை முத்திபெற
ஞானமில்லை யென்பர்கண்டாய்."

நாலடியார்.

" அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றூ நச்சுவார்ச் சேரா—பிறன்றூரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்."

" புக்கவிடத் தச்சம் போதரும் போதச்சந்
தூய்க்குமிடத் தச்சந் தோன்றுமற்—காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்."

" காணிற் குடிப்பழிஆங், கைஉறிற் கால்குறையும்,
மாணின்மை செய்யுங்கால் அச்சம் ஆம்;—நீணிரயத்
தன்பம் பயக்குமாற் றுச்சாரி, நீகண்ட
இன்பம் எனக்கெனைத்தாற் கூறு!"

பிறன்மனையாளை நற்றவத்தினை மற்றவர் கண்டால் பழிப்புக் கிடமாகும். அவர்கள் பிடித்தால் காலை வெட்டிவிடுவார்கள். மானங்கெட்ட அத்தொழிலினால் அச்சமுண்டாகும். நரகவேதனையைத் தரும். ஆதலால் தன்மார்க்கனே, உனக்குக் கிடைக்கும் இன்பம் இன்னதெனக்கூறு.

' அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்;—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்.'

நீதி நூல்:

"பண்டோரான் பெண்ணைமைத்தவ் விருவருக்கும்
மணமியற்றிப் பரனிரக்கங்
கொண்டளித்த முறைகடந்து கள்ளவழிப்
புணர்ன்ற கொடியோர்தம்மை
மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ
அவர்தலைமேல் வானுலாவுங்
கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ
யிதுசெய்யிற் குற்றமுண்டோ."

"தன்னைப்போற் பிறரையெண்ணைத் தகுதியான் தான்மணந்த
மின்னைப்போ லிடையினாளை விழியினால் நோக்குவோனைத்
தின்னல்போன் முனிவகொள்வோ ரயலவன் தேவிதன்னை
அன்னைசோ தரிபோலெண்ணு தணைந்திடல்விரும்பலென்னே."

"சென்குலமடியா டுண்டிற் கெடுங் கணிகை
ஆவிங்கனந் தனநாச மதாகும்—நூலிழந்த
வல்லிதழுவக் குறையும் வாழ்நாள் பிறர்தாரம்
புல்லினர்க் கெல்லா நலமும்போம்."

"போற்று குருகினைகள் பொன்னுசை யோர்க்கில்லை
தோற்று பசிக்கில்லை சுவைபாகம்—தேற்றுகவி
சோதிலை சுகமு நித்திரையுங் காமுகர்தம்
ஆசைக்கிலை பய மானம்."



கோத சிற்றின்பங்களின் நேசமே மோகமெனப் படும். தர்க்குணங்க ளெல்லாவற்றிலும் அதிகமாய்ப் பரப்பியும், அதிகக் கொடூர ஆட்சிக் கோலோச்சியும், தன் தாக்கடிகளில் மகா உத்தண்ட வலுமை செலுத்தியும் வரும் தர்க்குண மிதுவே. மனிதன் வேறெந்தப் பாவஞ் செய்தாலும் அப்பாவம் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கிறது. மோகப் பாவமோவெனில்:—அவன் சொந்த உடலை அசுசியாக்கிப் பங்கப்படுத்துகின்றது. காமாதுரர் படுங் கஷ்டங்களுக்கு அவர்களுடைய தேகங்களே சாட்சியாதலால் வேறு சாகஷி அவசியம். சு, எறும்பு, கிருமி முதலியவற்றிற்கு மகோற்சவப் பிரசாத மளிப்பதுபோல் அவர்கள் சரீரங்களில் நாணங்களுங் கட்டிகளும், வேறு பல வியாதிகளுங் கண்டு அந்தோ! வேப்பிலையுங் கையுமாய்த் திரிகிறார்கள்.

"மேகங்கள் யாவுமுயர் விண்ணீங்கி வேசையர் தம்
தேகங்களில் வாசஞ் செய்கையான்—மாகமிசை
யாசைக்குங் கார்காலை மவ்வேசை யார்கொடுப்பர்
காசைக் கொடுப்பார்க்குக் காண்."



என்றபடி, மேகங்களெல்லாம் ஆகாயத்தைதவிட் டுத் தாசிகளுடைய சரீரங்களில் லயித்தின்றமை யால், சில சமயங்களில் ஆகாயத்தில் அரைக் குங்கூட மேக சஞ்சாரமில்லாமல் போய்விடு கிறது. ஆனல், வேசிகட்கு யார் காசு கொடுப் பாரோ அவர்கட்கே அந்தத் தாசிகள் அம்மே கங்களைக் கொடுப்பார்களென வித்வசிரோன் மணியாகிய வேதநாயகம்பிள்ளை வேடிக்கையாக பாடியிருக்கிறார்.

ஆகையால் காமுகர்கள் மேற்கூறிய நோய்களுடன் மூலம், பௌத்திரம், அரையாப்பு, நீர்த்தாரையில் குத்தல், எரிச்சல், வீக்கம், இரணம், வெள்ளை, வெட்டை, மதுமேகம், நீரிழிவு, நீரடைப்பு, குஷ்டம் முதலிய நோய்களைப்பெற்று வாணுளை வீணளாக்கி, தங்கள் அளித்திய காலம் முழுவதும் தீராத நோயையுடையவராய் இருக்கின்றார்கள். இது பற்றியே,

"மெய்ம் காமமுற் பயக்குஞ் சின்னீர் வின்பத்தின்-மும்மிழாய்
பீற் பயக்கும் பீழை பெரிது."

எனச் சான்றோர் கூறினர். தொடக்கத்தில் காமத்தைவிட இன் பமும், பிரியமுமானது வேறொன்றுமில்லையெனத் தோன்றும் பிறகோவெனில் அதைப் பார்க்க அருவருப்பக் குரியதும், கைப் புடையதும், வேறொன்றுங் கிடையாதே. இன்பம் பயக்கும் தல வாசல் உள்ளதாயினும் புகுந்தபின் பறப்படப் போக்குவழி கிடைப்பதரிதாகிய சுழல் சுற்றுடைய மானிகை காமமே. இதைப் பற்றியன்றே ஞானிகள் விபசாரஸ்திரீயை "பாதாளப் படுகுழிக் கும் நெருக்கிடையான கிணற்றிற்கும்" ஒப்பிட்டிருக்கின்றனர். மோகமானது முதலில் ஒப்பற்ற விதமாய்ப் பசப்பி பயக்கும் வலி யைப் போலிருக்கின்றது. ஆனல், அவற்றில் தன்னைப் பிடிபட் டிருக்கின்றவனுக்கு ஐயோ கேடு! ஒருதாம் நாணத்தின் போர்வை நிழிபட்டால், ஒருதாம் மோக வலைகளில் சிக்கிக்கொண்டால் ஐயோ அவைகளை அறுத்தெரிந்து தன்னை விடுவித்துக்கொள்வது எவ்வளவோ அருமை!

கந்தபுராணம்.

"கூடலு வெதிரே பங்கு குருடு பேருமை யாளுர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டழியுமம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் தலகில் வைகும்
ஏனையர் வலையின் மாற்ற மெழுமையு மகல்வ தண்டோ."

மீன் வேட்டை ஞாற்றுலதே. அதன் வாய் விரிந்த தாயும் புரு தற்கெனிதாயு மிருக்கின்றது. ஆனல் அதில் பிரவேசிக்கும் ஆயிர மாயிரம் சல சாங்களில் அதினின்றுந் தப்பிப் புறப்படும் மீன் ஒன் றேனு மூளதோ? ஆகவே இக்கொடிய தார்க்குண மொன்றினல் வினையும் பாவங்களனைத்தையும், ஆசைகளனைத்தையும், கருமங்க ளனைத்தையும், யார் எண்ணித் தொகைபிட வல்லவர்? விஷந் தோய்ந்த அதன் வாடைபட்ட மாத்திரத்தில் இவ்வுலகச் செல்வங் களில் மிக்க விலையேறப்பெற்ற மானுபாணத்தை அவனிடத்தி னின்று உரிந்துவிடுகின்றது.



கைகேயி தசரதர் யாசித்தனை

ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகத்திற்கு நியமித்தாகுக்கு மூன் தின இரவு தசரத சக்ரவர்த்தி மனம்பூரித்து ஆனந்த சாகரத்தில் மூழ்கி வானமென்றெண்ணிக் கைகேசியி னந்தப்புரத்திற்குச் சென்றார். கைகேசியோ மந்தரை யென்னும் கூனியின் தூண்டு லால் தன் மகனுடைய பாதனுக்கு மருடன் தரிக்கவும், இராமனைக் காட்டுக்கு அனுப்பவும் வரந்தாவேண்டுமென் றழுது தன் மயிர் கனை விரித்து பூமியில்விழுந்து புரண்டாள். அப்பொழுது தசரதர் துடிதுடித்து,

"காமமேது புவிக்கென தோன்றிய
வாமமே கலை மங்கையரால் வரும்
காம மில்லை பெனிற் கடுங்கேடெனும்
நாமமில்லை நரகமு மில்லையே."

என்று சொல்லிப் புலம்பினரென்று கம்ப ராமாயணத்தில் வரிக்கிறோம்.

கம்பர் புதல்வராகிய அம்பிகாபதி சோழன் மகளைக் காதலிக்க, அஃது அரசனுக்கு எட்ட, அவன் அம்பிகாபதியைக் கழுவேற்ற ஆக்ஞாபிக்க அம்பிகாபதி கழுவினிருந்து பாடியதாக வழங்கும் செய்யுள்:—

"உருகி யுடல்கருகி யுள்ளீரல் பற்றி
எரிவ தலியாதென் செய்வேன்—வரியர
வஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்ணணங்கென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு."

இத்தீவினையைப்போல் தர்க்கந்தம் நாறுகின்றதும் உலகினர் கண்களுக்கே ரனப்படுத்துகினறதுமான தர்க்குணங் கிடையாது. உடல்வலியை மெலிதது அழகின் தளுக்கை மடகல் செயது தேக நாஷ்டிகத்தைத் குலைதது ச் சௌக்கியத்தைக்கெடுத்து பிக வெட்கக் கேடான வியாதிகளை யுண்டாக்கி, வாலப்பருவதனை பூமுனையை காலம் வராமுன் வாட்டி வதங்கடிதது, வயது வராமுன் பிஞ்சிற் பழுத்தாறபோல் நிஸ்தைக்குரிய ரை, நிரை, மூப்பினை ஓடிவரச் சொல்லிக் கூப்பிடுகின்றது. மேலும் அது மதியின் கூர்மையை மழுக்கி, புத்தியை மந்தப்படுதனி, மனதனிளகன் நலனுணர்ச்சிகளின வேற்றை வற்றடித்து, மேனமை பயகுகும அப்பியாசங்களின்மேல் அருவருப்பைத் தரது, மனிதனை முறறும சரீரச் சிற்றின்பக் கசுமாலச் சேற்றிற புலைதத்துத் தன் அசுசியான வெட்கக் கேடுகளைக் குறித்துச் சிந்திப்பதும, பேசுவதும, பாடுவதம், மறிழ்வதற் தவிர வேறு சுகத்திற் கவனைச் சாரணயறறவ ஆக்கி மூப்பு, நிஸ்தை, அவமானம், பிணி, வறுமை, மூதலியவறறால் அழுத்துகின்றது.

மேலும் இந்த நிர்ப்பாக்கியமான விஷயம் மானத்தருவாயில் அவன் முன்னுக்குத் தோன்றி, அவன பாவத்தின் பலனை யெகுவாய் அநுபவப்படுததுகின்றது. "விறகு தீயை வளாப்பதுப்போல நினைவுகள ஆசைகளை வளர்க்கும்" எனறறிந்து, பொலலாத நினைவுகள் நம் புதியில் தோன்றினமாத்திரதில் புறக்கணித்துத்தள்ள வேண்டியது. சாணமோன ஞானி சொல்வதாவது:—

"பட்டணத்தின் வீதிகளில் பலபக்கங்களிலும் கண்ணைச் செலுத்தாதே. இடங்கோடாறும் உலாவித்திரியாதே. அலங்கார மூள்ள ஸ்திரீயை நோக்காமல், உன் கண்களைத் திருப்பிக்கொள்; அன்னிய ஸ்திரீயின் அழகை இச்சையோடு பாராதே." இந்தச் சுகிர்த ஆலோசனையின்படி யோபு மகாத்மாவைப்போல் சுறுசுறுப்பாய் நமது காலத்தை வேலைகளில் இடைவிடாமல் செலுத்தி, நமது நேத்திரங்களை யடக்கிக் காப்பதில் வெகு ஜாக்ரதையாயிராவிடில் தாவீதைப்போல் அவமாவோம். தேவனிஷ்டப்படிச் சுமுத்தினாயாய் நடந்துகொண்ட இப்புனிதவான் சோம்பலுக்கிடங் கொடுத்து ஓர் ஸ்திரீயின்மேல் தன் பார்வையை விழவிட்டதனால் உடனே விரகாக்கினியால் வெந்தெரிந்து, பயங்காமான பாதாரக குற்றம, தூர்மாதிரிகை, கொலைபாதகங்களாகிய முக்குற்றங்களுக் குள்ளானார்.

"உணங்கி யொருகான் முடமாகி யொருகண்ணின்றிச் செவிபிழந்து
வணங்கு நெடுவா லறுப்புண்டு மன்னுழுதுகில் வயிறொட்டி
அணங்கு நலிய மெலிவெய்தி யகல்வாயோடு கழுத்தேந்திச்
சுணங்கன் முடுவல்பின் சென்றூல் யாரைக்காமன்றுயர்செய்யான்.

காயானது வற்றி, ஒருகால் முடமாகி, ஒரு கண் கெட்டுச் செவியிழந்து, வளைவாகிய நெடுவால அறுப்புண்டு, பொருந்திய முதுகில்ல வயிறொடிடி, நோய் வருத்தத் துன்பமடைந்து, பிள நத வாயுடன் கழுதது ஏநதி பெண்ணுபின் பின்னே போலுல யாரைத்தான் மனமதன் துன்பப்படுத்தமாட்டான்?

"கண்டிருந்துங் கேட்டிருந்துங் கற்றிருந்துந் தோயுமலர்
வண்டிருந்த பூங்குழன்மேல் மாலாகினும்—பண்டை
வெறியோ விதியோ வெளிமயக் கோவையோ
முறையோ வகியாய மோ."

"காரைப்பழித்த கையான் கருமாணிக்கன் கற்பவெற்பில்
ஆரைச் சுடாதிந்தக் காமச்செந்தீ யிதனுல்லலோ
வாரிக்குண்மாய வெளித்தா னயனு மலர்புகுந்தான்
நீரைச்சுமந்து நின்றான் கொன்றைசூடிய நின்மலனே."

கைம்மாறு கருதாது கொடுப்பதில் மேகத்தைப்பழிக்கும் கையினை யுடைய கருமாணிக்கன் கற்பவெற்பில் காமமாகிய செந்தீயானது யாரைத்தான சுடாது. இதனுலல்லவோ திருமால் கடலில் ஒளித் துக்கொண்டான், பிரமாவும் தாமரைமலரில புகுந்தான், கொன் றை மலரைத் தரித்த சிவனும கங்கையைச் சுமந்து நின்றான்.

"ஒருகோட்டுக் கலைமுனியு மொளிதிகழும் புலியாடை யுடுத்தகோவும்
வருமலர்வாழ் திசைமுகனும் வானவர்கணாயகனு மகுடன்முனும்
கரியநிறத் திருமாலும் வாலியும் பராசரனுங் காமனம்பால்,
பெருமையிழந்தனரென்றால் சிறுமனிதர்க் கெப்படியோ பேசுங்காலே.",

ஒற்றைக் கொம்பையுடைய கலைக்கோட்டு முனிவரும், ஒளி வினங்குகின்ற புலித்தோலையுடைய சிவபெருமானும், மணம் பொருந்திய தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனும், தேவராஜனாகிய இந்திரனும், மகிடாசுரனும், கரியநிறத்தையுடைய திருமாலும், வாலியும், பராசரனும், மன்மத பாணத்தால் தமது பெருமையிழந்தார்களானால் அற்ப மனிதருக்கு எப்படி யிருக்குமோ?

தவத்தின் மகிமையால் அரிய வரங்களைப் பெற்றிருந்த விஸ்வாமித்திரர் அகோர தவம் புரிந்து கொண்டிருக்கையில் தபோக்கினியால் திரிபுனைங்களும் பற்றி யெரிந்தன. தேவர்களெலலாரும் இந்திரனிடம் தம்மை ரட்சிக்கும்படி முறையிட இந்திரன் ரோசாமலர்களைபோல் மலர்ந்த முக விலட்சணமுடைய மேனகையை யழைத்து விஸ்வாமித்திரரின் தவத்தைக் குலைத்து உலகங்களை ரட்சிக்க ஆக்ஞாபித்தார். அவள் தன் அளகபாரத்தில் வண்டுகளமாயக் கற்பாரிஜாதப் புஷ்பம் முடிதனி, கஸ்தூரி பாமளாதிகள வாசிக்க, ஆடைகுலுங்க, நவரத்தின மேகலாபரணங்கள் சொலிக்க, தண்டை காற்சிலம்புகள்சப்திக்க, அன்னநடை நடந்தும்பாய், மயில்சாயலாய்த் தபோதனாமுனினிறு காட்டிய வரிசையுடனாடி, மகரவீணை வேலுமாதகமகளைப் பழிக்கவல்ல குயிற குலால் சுதிகானப்பிரமாணத்துடன்ன அபிநயங்கள் தவறாது மங்களகரமான கீர்தனங்கள பாடி, நயவார்த்தையாடிக்கண்மயக்கும பல சம்பிரமைகளுங்காட்டிக் காமவில்லை நாண்ணறினாய்து ஆசையை மூட்டினாள். அப்பொழுது "நெருப்பிலும் சமையக்கும்மா?" வென்று சொல்லத்தக்கதாக அரிய தியான நிஷ்டையிலிருந்த தபோதனர் தமது கண்களைத் திறந்து அவளைப் பார்த்தார். உடன்ன விபகாகினியால வெந்தெரிந்து, அவளைக்கூடித் தாம்கொண்ட விரதத்தை அழித்



தார். "ரிஷிப்பிண்டம் ஜராத்தங்கா" தானைகயால் மேனகை உடனே கர்ப்பந்தரித்துச் சகுந்தலையைப் பெறறு ரிஷீஸ்வரர் கையிலெகா டுத்து, விஸ்வாமித்தரனை வெடகப்படுத்தினதாக வாசிகக்கிறோம்.



ஸ்திரீ ஜனங்களுடன் தனித்துச் சம்பாஷிப்பது ஆபத்தை வாய்ஷனறு கூறியழைபபதாகும். அவாகளை பபாப்பது துரதயதிறகுகக்கடடாகும். அவர்கள் மொழிகளைக கேகடபதும, சிறறின்ப சாச சலலாப உல்லாசங்களுக்குக தமது மனவிகளைத திறநதிருப பதும மனைகத தாணடியினதாகும். அவாகள சகவாசம காமதத்தினை மூட்டும. இவ்விதமாய அவாகளிடதிலுள்ள யாவும் அவர்களுடனை உறவு பசய்வோரைப பிடிக்கும கண்ணிகளாம்.

"பிறர்மனைக் கேகல்தற்றம் பெண்களைப் பார்த்தல் குற்றம்
முறைதப்பி மின்னுரை மோகித்தல் பெரியகுற்றம்—இறைவரில்
கன்னிமாரை யிசைத்த லிதன்மேல் குற்றம் நிறையுலகத்து
லென்ற நீதி நீ யறிந்திடாயே."

ஏனெனில் உடலில் சுபாவ உஷ்ணங் குடிகொண்டிருக்கு மளவும் எவனும் எங்ஙனிடை அக்கினி முறறுமே அவிந்தவனென்று எண்ணியிருக்கத்தகாது அகனியிலை பக்கய பஞ்சுகளெகொண்டு வந்தால் தப்பாமல் பற்றிக்கொள்ளும்.

ஆதலால் ஸ்திரீகளுடன் எவ்வித தொந்தபந்தத்தையு மகற்றி விடவேண்டும்.

"எய்யவந்த காமா வுனக்கிங் கிடமில்லை
உய்ய வந்தா னென்மீ றுறவானன்
தேனவிழி பூவைமுடி தினறவிழி கைக்கரும்பை
மீனையொரு காசாக வில்."

என்னை சமீடற்ற வந்த சதனுடன் நான் ஐக்யமாகிவிட்டமையால், இதுவரை என்னை வருத்திகொண்டிருந்த மன்மதனே! இனி உன் தூற்றல் செல்லாது. ஆதலால், உன் வில்லுக்கு காணபிருந்த செவ்விய மலர்களில வாழ்கின்ற வண்டுகளை விட்டுவிடு. உனகுக் கணைகளாயிருந்த மலர்களை முடிதது்க்கொள். உனக்கு வில்லமபாயிருந்த கருமபைத தின்றுவிடு, உனகுக் கொடியாயிருந்த மீனை ஒரு காசுக்கு விறபாயாக.

மாதர் கண்கள்.

" அன்று கண்டோனுன் சுழுதத்தை யாழியி லம்பயன்மால்
சென்று கண்டேத்துந் தென்னரூர்த் தியாகர் திருமிடத்தில்
ஒன்று கண்டோமற் றங்கொன்று விண்ணுட நுலகிற் கண்டோம்
இன்று கண்டோ மிரண்டும் இவள் பார்வை யிரண்டினுமே."

நஞ்சையும் அமிர்தத்தையும் அன்னளில் திருப்பாற்கடலில் ஒருங் கே கண்டோம். அதன்பிறகு பிரமனும் திருமாலும் போய்த்தரிசித் துத் துதிக்கின்ற தென்னரூர் தியாகரது திருக்கழுத்தில் நஞ்சைத் தனியே கண்டோம். மற்றொண்ணுகிய அமிர்தத்தைத் தெய்வ லோகத்தில் கண்டோம். இக்காளில் நஞ்சு, அமிர்தம் என்னும் இரண்டினையும் இவளுடைய பொதுநோக்கு, சிறப்புநோக்கு என் னும் இருபார்வையினிடத்தும் ஒருங்கே கண்டோம்.

" நானஞ் செறியுயர் காளத்தி காதர்நன் னாட்டினிலே
கானஞ் செறிகுழற் காரிகையா ரிரு கண்களுக்கு
மானஞ்சும், அம்பஞ்சும் மாவஞ்சும், வண்டஞ்சும், வாரியஞ்சும்,
மீனஞ்சும், நஞ்சஞ்சும், வேளஞ்சும், வாளஞ்சும், வேலஞ்சுமே."

கஸ்தூரி பூசப்பட்ட புயங்களையுடைய காளத்திநாதர் மலை யில் வாழ்கின்ற பெண்களின் கண்ணழகைப் பார்த்து மானஞ்சும், அம்பு அஞ்சும், மாவடு அஞ்சும், வண்டு அஞ்சும், கடல் அஞ்சும், மீன் அஞ்சும், நஞ்சு அஞ்சும், மன்மதன் அஞ்சுவான், வாளஞ்சும், வேலஞ்சும்.

" சேலுங் கலையுஞ் சிலையம்பும் வண்டுஞ் செழித்தவொரு
வேலும் பழித்தவிம் மெல்லிய லெய்தவிழி யம்பினுல்
மாலுள தாகி மயக்கித் தியங்கி மதிதின மென்
பாலுன வேலைவிட் டெய்த்தேன் மருந்தென்ன பைங்கிளியே."

சேல்மீனையும், மானையும் வில்லிற் கோத்த அம்பையும், வண் டையும், வேலாயுதத்தையும் பழித்த இந்த மெல்லியலாள் எய்த விழியம்பினால் காம மயக்கமுண்டாகி மதிமயங்கித் திகைத்து நான் கோறும் செய்யும் வேலையைவிட்டு இளைத்தேன். நீ தந்த இந்த நோய்க்கு நீயே மருந்து சொல்லவேண்டும் பைங்கிளியே!

" வேலோ கடலோ விடமோ கருவண்டோ
சேலோ கணையோ சிறுவாளோ—கோலமுடன்
தண்டங்கித் துண்டருளத் தத்திவிழுக் குத்துமுழிழ்க்
கண்டங்கிக் காரிகடைக் கண்."

"நீலமோ வேலோ நெடுங்கயலோ வாரிதிசேர்
ஆலமோ வம்புயமோ வைங்கணையோ—நீலநிற
வாவிச் சோலைக்கருகில் வந்துபுன லாடுகின்ற
காவிச் சேலைக்காரிக் கண்."

"சேலோ கணையோ பிணையோநற் றென்னவன்கை
வேலோ நமனே மிளிர்வண்டோ—சாலப்
பளபளென்ற வொளிமிகுந்து பவளமிருங் கனைகபுனைந்த
களபகும்ப முகிழ்மடந்தை கண்."

"அம்பள வெவ்வள வவ்வளவேவிழி யார்ந்த கொவ்வைவாய்
செம்பழ மெவ்வள வவ்வளவேயிதழ் சீர்கொள் வஞ்சிக்
கொம்பள வெவ்வள வவ்வளவேயிடை கூறெலு மிச்
சம்பழ மெவ்வள வவ்வளவே தனந் தையலுக்கே."

"செங்கயலோ நீலவண்டோ சித்தசன்கை நீலவண்டோ
பங்கயமோ மால்வளரும் பாற்கடலோ—தங்கமலி
வச்சிர கைகச்சிகன வச்சிரவின் மெச்சபுரு
வச்சின விடைச்சிவிழி பார்."

பொன்னிறம் மிகுந்த வயிரமணி போன்ற பற்களையுடையவளும், மேகத்திலுள்ள உறுதியாகிய இந்திரவில்லும், மெச்சும்படியான புருவத்தையும், சிறிய இடையையும் உடையவளுமாகிய இந்தப் பெண்ணின் கண்ணானது சிவந்த கெண்டைமீனோ, நீலநிறமுள்ள வண்டுதானோ, மன்மதன் கையிலுள்ள கருங்குவளை மலர்க்கணையோ, தாமரை மலரோ, திருமால் கண் வளராநின்ற திருப்பாற்கடலோ?

"ஆலமோ வேலோ வலைகடலோ வம்புயமோ
நீலமோ மார னெடுங்கணையோ—சாலச்
சிறுத்தவிடை பருத்தமுகிழ் சிவத்தவிதழ் வெளுத்தநகை
கறுத்த குழலொருத்தி கடைக்கண்."

மாதர்மேல் மையல்கொண்டு மயக்கமுற்ற மானிடரின் பாடல்கள்.

"சோன வேதபுரி நாதர் கோயிற் றிருக்குளத்தில்
நீராடிப் போகின்ற நேரிழையே யென்ற னெஞ்சுவிடாய்
தீராம லாம்பற்செவ் வாய்திறவாமற் றிரும்பி முகம்
பாராமற் போவதனை லேகிடைக்கும் பழி யுனக்கே."

"கூரிட்ட வேல்விழி மாதரசே யுன்றன் கோவமெல்லாம்
ஆரிட்ட வஞ்சனையோ வறியே னடியா யிழையே
எரிட்டிவ் கென்முகம் பாராம னீயுமிருப் பதனல்
கோரிட்டு ஞாயத்தைச் சொல்லுவன் பாரடி கோமளமே."

"மறக்கப் பதிதில்லை கச்சியில்வா ழிளவஞ்சியை விட்-
டுறக்கம் வருதில்லை யுணில்லை யானந்தவூர் சூறித்துப்
பறக்க வென்றுலுஞ் சிறகில்லையே பஞ்சபாணன் றன்பம்
பொறுக்கப்படவில்லை யென்ற வண்டே செலப் பூக்கின்றதே."

"கெஞ்சோழும் வற்றி யள்வாய் வரண்ட நீலவதப்பி
எஞ்சிவணும் விட்டுப் போருதையோ வள மாமயிலே
வஞ்சிக் கொடியிடைப் பெண்ணுள் சுமுதல் வாயமுத
சஞ்சீவி கொண்டு வந்தாற் பிழைப்பேனினிச் சாவில்லையே."

"மாலே நிகர்க்குநற் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேறிப் பாய்ந்திடத் தேன்மாரி பெய்யநற் பாருகற்கண்
டாலே யெருவிட முப்பழச் சாற்றி னமுதவயல்
மேலே முளைத்த கரும்போவிம் மங்கைக்கு மெய்யெங்குமே."

திருமாலையே நிகர்க்கின்ற சந்திரவாணனது மலையினிடத்தே பால் மிஞ்சிப் பாய, தேன்மாரி பொழிய, நல்ல பாகு கற்கண்டு என்ப வற்றுலே யெருவிட, வாழை, மா, பலா முதலான முப்பழச் சாறு யே அமுதம் நீர்ப்பாய்ச்சலையுடைய வயலில் முளைத்த கரும்போ நிம்மாதின் சரீரம முழுதும்.

"என்று திரும்பி வருவீரெனத் துயிலேந் நிழையாள்
நின்று சுழலொரு கையாலொதக்கிக் கண்ணீர் ததும்பி
குன்று நிகர் கொங்கை மீதேயனைத்துக் கொடுத்தவிடை
ஒன்று நினைத்தல்ல வோவின்ற னெஞ்ச முருகுவதே."

"அற்புத மானநம் மம்பலவாண ரணிவனை மேல்
பொற்கொடி யுன்னவிட் டெப்படிப் போவது போகவென்று
நெற்கிடை தாரமொரு காலத்துக்கி நிலத்தில் வைத்தால்
விற்கிடை தாரமிழுக்கு தென்னைசை விதிவசமே."

"கனம் பிரிந்தாலுமின் வான்பிரிந்தாலுங் கதிர்புனல்விட்
டனம் பிரிந்தாலும் புயல்போலு மேனியரம் புயமின்
தனம் பிரிந்தாலுந் தென்னூரர்த் தியாகர் தமதடியார்
மனம் பிரிந்தாலு முனைப்பிரியே னடி மாதங்கமே."

மின்னல் மேகத்தைவிட் டகன்றாலும், சூரிய சந்திரர் ஆகாயத்தை விட்டுப் பிரிந்தாலும், அன்னப்பறவை நீரைவிட்டுப் பிரிந்தாலும், நீலமேகம்போலும் மேனியையுடைய திருமால் திருமகளை விட்டுப் பிரிந்தாலும், தென்னூரர் தியாகர் தமதடியார் மனதை விட்டுப் பிரிந்தாலும் உன்னைப் பிரியேன.

"கட்பூக்குழல் மாவடுவண்டாங் கழைவிற் புதல்கூ ரசிநாட்டம்
எட்பூத் துண்டமுருக் கோட்டமிலகு வீதவான நம்பாணி
தட்பூச்சுவர்க்கஞ் சிலம்பிடைதூ ளிதம்பமகிப்பைவ ராத்ருள்சொல்
வெட்பால் குரல்கோகில மன்னதடையும் வடமீன் கற்பை யாச்

தனுள்ள பூங்குழல் அழகுள்ள வண்டை நிகர்க்கும், புருவம் மன்மதனது கரும்புவில்லை நிகர்க்கும். கண் கூர்மையாயிய வாளை நிகர்க்கும், நாசி எள்ளின் பூப்போலும், அதரம் முருக்கம் பூப்போலும், முகம் இலங்குகின்ற பூரணசந்திரன்போலும், கை தாமரைப் பூவைப்போலும், தனம் மலையைப்போலும, இடையானது நூலிழைபோலும், நிதம்பம் பாம்பின்படம்போலும், கணைக்கால் விரால் மீனைப்போலும், சொல் வெண்மையாகிய பாலின் சுவைபோலும், குரல் குயிலை நிகர்க்கும், நடை அன்னம்போலும் உடைய இவள் கற்பு அருந்ததியை நிகர்க்கும்.

" வண்டோ விழிநுதல் வான்பிறையோ வல்குன் மான்குளம்போ
சென்டோ மூலத்திலமோ நகையிசை சேர் துடியோ
கண்டோ மொழிகுழல் காரோமுகங் கமலம் பவளத்
தண்டோவிதழ்கன்னித்தண்டோ தொடையிந்தத்தோகையர்க்கே.

" பங்கயக்கண் வேலவனே பைந்தொடியாள் தேடிநிதம்
மங்கி மிகவுந் தளர்ந்தவாகிறாள்—செங்கைமலர்
அன்னநடை மின்னலொலி சின்னவிடை வன்னமுலை
கன்னன்மொழி மன்னுமிவள் காண்."

' அத்தி மலரு மருங்காக்கை வெண்ணிறமும்
கத்துபுனன் மீன்பதமுங் கண்டாலும்—பித்தரோ
காளுர் தெரியற் கடவுளருங் காண்பரோ
மானுர் விழியார் மனம்.'

கோபம்.

கோபம், பகை, குரோதம், முதலிய தூர்க்குணங்களையுடையவர்கள் பாம்புகளையும் தேள்களையும் பிடித்துத் தங்கள்மேல் விட்டுக் கொண்டால் எவ்வளவு உபத்திரவம் அடைவார்களோ அவ்வளவு உபத்திரவத்திற் காளாகிறார்கள். மனிதனிடத்திலுள்ள ஒவ்வொரு தூர்க்குணமும் பிறர்க்குத் தீமையை விளைப்பதோடு தனக்கும் ஹானியைத் தரத்தக்கது. ஆகையால்தான்,

" தன்னைத் தான்காக்கில் சினங்காக்க—காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்."

என்றும், "கோபமே பாவங்கட்கெல்லாம் தாய்தந்தை, கோபமே குடிகெடுக்கும், கோபமே யொன்றையும் கூடிவரவொட்டாது, கோபமே பொலலாது, கோபமே சீர்கெடு, கோபமே யுறவறுக்கும், கோபமே பழிசெயயும், கோபமே பகையாழி, கோபமே கருவினை [illegible] கோபமே யெவரையும் கூடாம

லொருவனைக்கும், கோபமே மறவிழுன் கொண்டுபோய்த் தீய நரகக் குழியினிற் றள்ளுமாம்" எனறும் கூன்மீரர் அறைந்திருக்கின்றனர். மேலும,

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டமோய்
கோபமே தாயையுங் கொல்லுந் தண்பகை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயதோ."

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைநக் கொட்டிலுன்
கோபத்தா னகுடனும் கோல மாறினான்
கோபத்தா லிந்திரான் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே."

எனறு கோபத்தால் விளையும் பெருங்கேட்டைக் குறித்துப் பல வாறுகப் பெரியோர் கூறியிருக்கினறனர்.

இராமாயணம்.

"மூங்கிலிற் பிறந்த முழுந்தீ மூங்கின்
முதலற முழிக்கு மாபோல்
தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து
தன்னுறு வினையெலாந் தவிர்க்கும்
ஆங்கதன் வலிம்மை யறிந்தவர் கமையால்
அதனையுள் ளடக்கலு மடங்காது
ஓங்கிய கோபத் தீயினை யொக்கும்
உட்பகை யுலகில் வேறுண்டோ."

ஸ்ரீராமர் தம்மைக் காட்டுக்குப் போக ஏவிய கைகேயியிடத்தும், அதற்குக் காரணமாயிருந்த கூனியிடத்தும் கோபங்கொண்டாரல்லர். கிட்கிந்தையிலே சுக்ரீவன் முதலிய குரங்குச் சேனைகள் குறித்த காலத்தில் வந்து தவறினபோதிலும் கோபத்தைக் காண்பிக்காமல் சாந்தமாகவே வார்த்தை யாடினதாக வாசிக்கிறோம். எனனில் மூங்கிலிற பிறக்கினற மருபபானது அம்மூங்கிலையும அதனைச் சார்ந்தலைகளையும சுட்டு நாசமாக்குகினறது. அதுபோல, கோபமும் எவனி—த்து காணப்படுகின்றதோ அவனையே நாசத்துக்காளாக்கும.

மூதுரை.

"கற்பினவோ டொப்பர் கயவர் கலந்தினத்து
பொற்பினவோ டொப்பாரும் போல்லவாரே—விற்பிடித்து
நீர்க்கிழிய வெய்த வம்புபோல் மாறுமே
சொரழுகு சான்றோர் சினம்."

காய்மகாரம்.

பிறர் வாழ்வையும், சம்பத்துகளையுங் கண்டு, மனம் பதை பதைத்து, சஞ்சலபடுவதே காய்மகாரம், பொறுமை அல்லது அழுக்காறு எனப்படும். அழுக்காறு என்றால் அழுக்கின் வழி அல்லது அழுக்குளள வழி என்று பொருட்படும். அயல் வீட் டார் வாழ்ந்தால் அதைக்கண்டு கொள்ளும் வெறுப்பு, பொறுமை யின் முதல் சுபாவம். அவ்வாழ்வைக் கெடுக்க முயல்வது இதன் செயற்கையாகும். பொறுமையுள்ளவன் தனக்கு உயர்ந்தவர்களை நிகர்க்கக்கூடாமையால் அவர்களுக்கும், தனக்குத் தாழ்ந்தவர்கள் தன்னைப்போல் உயர விரும்புகின்றமையால் அவர்களுக்கும், தனக் குச் சரியொத்தவர்கள் தன்மேலுடு சமரைய் நடக்க எண்ணுகின்ற மையால் அவர்களுக்கும் விரோதியாய் இருக்கின்றனன்.

ஒருப்பிற்கு "சோர்த்தாரைக் கொல்லி" என்று பெயருண்டு, தன்னையுடையாரைக் கொல்லுங் கருவியாகிய பொறுமைக்கும் அது பொருந்துமென்னலாம். பிறர்பால் காய்மகாரங் கொள்வ தினால் கோபதாபிற் கிடமாகும். கோபம் உண்டானவுடன் மதி மயங்குகும், மதிமயங்கித் தனக்குந் தெரியாது பெருங் குற்றம் செய்ய நேரும். அக்குற்றங்களைப் பற்றிப் பின் என் செய்தா மென்ற மனக்கவலையுறத் தானெனஞ்சே தன்னைக்கடும். பின் பித் தப் பிடித்தாற்போல் மயங்கி, அப்பித்தால் மனவெறியுண்டாகி, மதி மயங்கித் தனக்குந் தெரியாது செய்யும் தொழில்கள் அவன அழிவைத் தேடிவிடும். இவ்விதமாய் ஒருவனுடைய நெஞ்சை எரித்து உடலைவாட்டி, சிந்தனையை வருத்தி, மனச்சமாதான அமை நிக்கையைக் கலங்கடித்து அவன் உயிர்த்திருக்கும் நாளெல்லாம் அவனைச் சஞ்சலத் துயரத்தில் மிழ்த்தி, அவனது ஆத்தும சமா தானம், சந்தோஷம் அனைத்தையும பறக்கடித்துத் தாத்துகின் றது இந்த நீசத் தர்க்குணமே. தான் உதித்துப் பிறந்த விருஷத் தைக்குடைந்து அரிக்கின்ற கிருமியைப்போல காய்மகாரமும் தன் னைப் பிறப்பித்த நெஞ்சினை முதலாவதாகக் குடைந்து வாதிக்கின் றது. பிறகு புறத்திலும் சென்று [illegible] துங்கின்றது. காய் மகாரியின் முகத்தின் தேஜஸை மாறியிருப்பதும் அவன் உள்ளத் தில் பட்டிருக்கும் கனத்த காயங்களைச் [illegible] பிறர் காட்டுகின் றது.

உலகெங்கும் பரம்பி மிருந்த [illegible] விரோத்து கொடுங் கோல் ஆண்மை செலுத்தும் தர்க்குண [illegible] ல் காய்மகாரத்தை யும் ஒன்றென்னலாம், மன்னர் பிரபுக்கள் [illegible] ராண்மக்களிலும், வலியோர், பெரியோர் வாசஸ்தலங்களி [illegible] குடிகொண்டிருப்பதே

அதற்கு இன்பமாயினும், எங்கும் [illegible] படிந்து சகியா மடங்களையும், தபோதனர் [illegible] யும் முதலாய் அது சாடாமல் விடுகிறதில்லை. கபடமுனிக்கு [illegible] தக்கையரின் முதல் இருபுத்திரர்களுக்குள்ளும் [illegible] ருவன்மே லொருவன் கையெடுத் தடித்துக் கொல்லச்செய்தது காய்மகாரமே. யோசேப்பின் அண்ணன்மார் அவனை ஓர் அடிமையைப்போல் விற்பதற்கு அவர்சனைத் தூண்டினதும், ஆண்டவர்க்குகந்த ஆரோனையும், மீரியாமையும் அவர்கள் சகோதரரெகிய மோசேயின்மேல் அவதூறு சொல்லும்படி ஏவினதும், காய்மகாரமே. இன்னும் காய்மகாரமே சவுலாசனைத் தாவீதின்மேல் இளப்பிவிட்டது. காய்மகாரமே உலகரசுகர்மேல் பரிசேயரை மூட்டி எழுப்பி அவரைக் கொலைக்கும் கையளிக்க உடன்படுத்திற்று. காய்மகாரமே நமது ரசுகளின் சிஷரருக்குள் மூடத்தனமான போட்டியைக் கிளப்பிவிட்டது. இன்னும் இக்கதைகள் புராணங்களைப் பார்த்தால் துரியோதனன், பீமன் வலிவைப் பொறுத்த பலதீங்கடைந்து,

"ஆற்றி னீர்வினை யாடிய காண்முதற்
காற்றின் மைந்தனே டெத்தினை கன்றினேன்
சாற்றி னென்வினை தானென்னை யேசுடக்
கூற்றின் வாய்ப்புகுந் தேற்கென்ன கூற்றையா."

என்று கூறி உயிர்விட நேர்ந்தது. "அயல்வீடு வாழ்ந்தால் ஐந்நாள் பட்டினி" என்றாற்போல, வசிட்டனிட்ட உணவால் அவன் மேல் பொறாமைகொண்டு காமதேனுவைக் கவரமுயன்ற கௌசிகன் கதையையும் எல்லாரும் அறிவர். காமவியற்கையால் பொறாமைப்பட்ட ஸுந்தோபஸுந்தர் வரலாறும் தெரிந்ததே! கற்பிற் சிறந்த அருந்ததிப்பால் பொறாமைகொண்ட லக்ஷ்மி, ஸரஸ்வதி, பார்வதி இவர்கள் மாங்கல்யப் பிரகஸ்பதி கேட்க நேரிட்ட கதையையும் நாம் படித்திருக்கிறோம். * குந்தி மகப்பேறு அடைந்தாள் என்று கேட்ட காந்தாரித் தன் கருவைத் தாக்கிப் பிறற்ற மைந்தரைக் கடையில் நூறக்கவேண்டி முடிந்ததை எல்லாரும் அறிவர். கல்விச் செருக்காற் கொண்ட பொறாமையால் புகழ்ந்தினையைச் சிறையில் வைத்து ஓட்டக்கூத்தர் பட்ட பாடும் நாமறியோமா?

இதனாலன்றோ, திருவள்ளுவநாயனாரும்,

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்."

என்றார். அதாவது, அழுக்காறென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி தன்னையுடையாரை இம்மையில் செல்வத்தைக் கெடுத்து, மறுமையிலும் நரகத்திற் செலுத்திவிடும்.

* மானிட மர்ம சாஸ்திரம், 2-வது புஸ்தகம், 74-வது பக்கத்தில் மாங்கல்யப் பிரகஸ்பியினுடைய சரித்திரம் பார்க்கலாம்.

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்பவன்
தவ்வையைக் காட்டி விடும்."

திருப்பாற்கடல் கடைந்தபோது அதினின்று மூதேவி முன்னும் இலக்குமி பின்னும் பிறந்ததினாலே மூதேவிக்கு மூத்தவள் என்னும் பெயருண்டாயிற்று. (பிறர் செல்வங் கண்ட விடத்தே) பொறுமையுடையவனை செய்யவளாகிய திருவானவள் (அவ்வித்து) தானும் பொறுமைப்பட்டுத் தனது சமைக்கைக்குக் காண்பித்து விட்டு நீங்குவாள்.

அதாவது பொறுமையுடையவனிடத்து லக்ஷ்மி கடாக்ஷம் தங்குவதரிது.

தான் சேர்த்த பொருளைச் சுட்டு நாசமாக்குகிற நெருப்பைப் போல் பொறுமை, பகை, மூதலியதார்க்குணங்கள் யாரிடங்காணப் படுகின்றனவோ அவர்கள் மனதில் எப்பொழுதும் துக்கமும், சஞ்சலமும், துன்பமும் குடிகொண்டிருப்பதால் அவர்களுக்கு வேறு தண்டனை வேண்டியதில்லை. அந்நியர்களுக்குண்டாகிற பாக்கியம், இன்பம் சுகமெல்லாம் பொறுமையுள்ளவனுக்கு மனவருத்தத்தை கொடுப்பதால், நெருப்புப்பற்றி யெரிகிறவீட்டில் குடியிருப்பவன் போல் தானே பல துன்பங்களை யநுபவிக்கிறான். இத்தன்மையாக மனிதருக்குள் குடியிருக்கும் தார்க்குணமே அவர்களுக்குத் தண்டனை யாயிருக்கும்படி கடவுள் விதித்திருக்கும் வேடிக்கை ஆச்சரியமன்றோ?

தியாருக்கு அவர்கள் தீமையே தண்டனையாயிருப்பதுபோல் புண்ணியவான்களுக்கு அவர்கள் புண்ணியமே சன்மானமாயிருக்கின்றது. அவர்கள் ஒருவரையும் விரோதியாத சர்வஜனமித்திரர்களாகையால் சர்வகாலமும் சமாதானமும், மனோபாக்யமும் நிர்மலமான ஆத்மாநந்தமுமடைந்து வாழ்கிறார்கள்.

துன்பம்.

சீராப்புராணம்.

"மன்பெரும் புவியினில் வாழு மாந்தரிற்
றுன்புறுதவ ரிலைத் துன்பைத் துன்புறு
தின்பமே கொள்பவ ரிலங்கு பொற்பதிக்
கன்பரா யிருப்பரென் றறிவு சொற்றதே."

அதாவது, உலகில் இன்பப்படாதவர்கள் இல்லை. இவ்வுலகில் அனுபவிக்கும் துன்பத்தை இன்பத்தின் ஏணியாகப் பாவித்து நடப்பவர்கள் பரலோக பாக்கியத்திற்கு பாத்தியஸ்தராவர்.

" தன்மமே பொருளெனத் தனத்தின் மேற்செலு
நன்மனத் தவர்க்கொரு நாளுந் தீங்கெணும்
புன்மையவர் தடைந்திடா தென்னப்பூவினின்
மூன்மறை யாய்ந்தவர் மொழிந்த வாய்மையே."

தர்மமே கதியென்றிருப்போர்க்கு தீங்கு அடையாது.

" இகத்தினி லெவர்க்கு முடித்திட வரிதென்றிருக்கு
மோர்வல் வினையெனினு
மகத்தினி லொருமித் தொருதுணிவா யபேப்பதோர்
முயற்சி யுண்டாயின்
ஜெகத்தினில் விளக்கும் புகழொடு முடியும்.'

சலியாத முயற்சியிருந்தால் எதையும் முடிக்கலாம்.

தெய்வச்செயல்.

" நினைத்த வதுவொழிந்து நேரிடும் வேறொன்று
மனித்த கருமங்கள் வாயா—கனத்த
அயனமரா லுமரியாலுந் தெய்வச்
செயலினைக் காணப் படாதே."

து ன் ப ம்.

" கலங்காத வீரியராலுலும் போன்ற காலம் வந்தால்
கலங்காமலே வெல்ல மாட்டுவரோ விந்த கானிலத்தில்
சலங்காணும் கோட்டை மதிலேழ் தலைபத்துத் தானிருந்தும்
இலங்காபுரி யின்றதோ வெள்ளை யாவி லிருப்பவனே."

சுகதேலோபாக்கியானம்.

" கல்லினுட் சிறுதேரைக்கும் கருப்பை யண்டத் துயிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புனத்துழாய்க் கண்ணி யண்ணல்
ஒல்லுகின் மைந்தர்க் காவா தொழிவனே வொழியா வுண்மை
மெல்லியால் கொண்ட தன்பம் விடுவிடு மதந்து மெண்ணல்."

" பிரம்பைக் கையாடதவன் தன் மகனைப் பகைக்கிறான்." என்று ஞானி சொல்வதுபோல் புண்ணியவான்களை ஞானத்தில் அதிகரிக்கச் செய்யக் கடவுள் சிலசமயம் அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பதுமுண்டு. அதற்காகச் சாதிக்கள பின்வாங்கார், துன்பமே ஞானத்தின் வித்யாசாலை, துன்பங்கலவாத இன்பம் உலகத்திலில்லை, மருந்து கசப்பென்று உண்ணப் பயந்தால் சரீரசுகம்

கிடைக்குமேக? குளிருக்குப் பயந்தால் குளித்துச் சுகம் பெறுவ தெப்படி? பிரசவ வேதனைக்குப் பயந்தால் புத்ரபாக்யம் கிடைப்ப தெப்படி? பாடில்லாமற் பலனுண்டோ? புடமிடப் புடமிடப் பிரகாசிக்கும் பொன்னைப் போலவும், சாணையில் தேய்க்கத் தேய்க்க ஒளிமிகும் இரத்னங்கள் போலவும் எண்ண தின்பம் வந்தாலும் பின்னிடாமல் புண்ணியத்தில் நிலைத்திருப்பவர்களே உத்தமர். ஏனெனில்,

தனிப்பாடல்.

"பாலுக்குச் சர்க்கரை யில்லையென்பார்க்கும்-பருக்கையற்ற
கூழுக்குப்போட உப்பில்லை யென்பார்க்கும்-குத்திக்கைதத்த
காலுக்குத்தோற் செருப்பில்லை யென்பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென்பார்க்கும் விசனமொன்றே."

இன்றைக்கே. (To-day)

"காணக் தப்பிலுல் மரணம், தருணக் தப்பிலுல் மரணம்" என்பது தமிழ் பழமொழிகளு. "அரைக்கடுகு வெளளம் அழுதாலும் வராது." எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தக் காரியங்களை செய்யப்பட வேண்டுமோ, அவற்றை அப்போதைக்கப்போதே செய்து முடிப்பதே உசிதம்.

சூரியன் உதித்து உச்சிமதியமாகி அஸ்தமிக்கநாள் முடிவது போல அனுக்கிரக காலமும் சீக்கிரமாய் முடிவுபெறும். கடந்த காலம் திரும்பவராது. ஆகையால், Take time by the forelock, நமக்கெதிரில் ஓடிவரும் குதிரையின் முன்முடியைப் பிடித்து நிறுத்தினால் மட்டுமே அதை நிறுத்தமுடியும். தவறவிட்டால் ஓடிப் போய்விடும். காலத்தின் கோலாகலமும் அப்படியே. இதை நிரூபிக்கும் கதையொன்றுண்டு.

ஓர் ராஜ புத்திரியை ஓர் தேவதூதன் மகா அழகாய் வினைந்து கடக்கிற ஓர் வயதுக்குக் கூட்டிச் சென்றனன். அங்கே அதன் ஓரத்தில் அவளை நிறுத்திக்கொண்டு, அவளைப்பார்த்து நீ இவ்வயதினை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் மட்டும் நடந்துபோகையில், முதிர்ந்த மணிகளுள்ள ஓர் கதிரைப் பிடுங்கிக்கொள்வாயானால் அதன் தானியங்களை முத்துக்களாக மாற்றித் தருவேன். ஆனால் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்திற்கு ஒரே தடவை மட்டும் நீ போகலாம் என்று சொன்னனன். அப்பெண் வயதுக்குள் இறங்கினாள், அவளைச் சுற்றிலும் நடுங்கிறமுள்ள கதிர்கள் திரட்சியாய் நின்றன. அவற்றைப் பார்க்க அவளுக்கு மனமில்லை. சற்றுத் தூரத்திலுள்ளவை அவற்றைவிடப் பெரிதும் அலங்காரமுமாய்த் தோன்றின. அவற்றைப் பிடுங்கப் போகையில் அவற்றிற்

கப்பாலுள்ள கதிர்கள் அவற்றைவிடப் பகட்டாகத் தோன்றின. இவ்விதமாய் ஏமாந்து அவள் வெகுதூரம் கடந்துபோய் அங்கே கதிர்கள் சிறுத்திருப்பதைக்கண்டு ஒருவேளை அக்கரையில் பெரிய கதிர்கள் கிடைக்குமென்றெண்ணி அங்கே செல்ல, கதிர்களெல்லாம் தீப்த்துபோய் நின்றதைக் கண்டு திகைத்தாள். ஒரு கதிரும் பிடுங்கவில்லையே திரும்பிப் போயாவது பார்க்கலாமென்றெண்ணித் திரும்புகையில் தெய்வாதீனம் தடுத்தான். நற்காலம் வரட்டுமென்று காலங்கடத்தி நற்காலத்தைப் பிரயோஜனப்படுத்தாத கசடர் எக்காலத்தையும் வீணாய்க் கழித்து வெட்கத்திற்காளாவர் என்பது திண்ணம்

இளமை நிலையாமை.

"பனிபடுசோலைப் பயன்மரமெல்லாம்
கனியுதிர்ந்து வீழ்ந்தற்று இளமை—கனிபெறி
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோற்கண்ணளாகும் குனிந்து."

என்னும் பாவில் சொல்லி யிருப்பதுபோல் இரத்ன பாணதி முதலிய நவமணி யணி அணிந்து, நல்வாணப் பட்டுடுத்தி, நாணத்தோடு களபம் பூசி, மந்தாரப் பூ மாலை சூடி, இந்திரநீல பருவதத்தில நிலவுபட்டதென்ன மூறுவலித்து மங்கையர்கள் எவ்வளவாய் மதியை யொத்திலங்கினும், வயது செல்லச்செல்ல பூவானது பிஞ்சியாகிக் காயாகிக் கனியானவுடன் உதிர்ந்து போவதுபோல், தாழ்ந்து தளர்ந்து தண்டென்று வீழ்ந்து கூனிக் குனிந்து கோலூன்றித் தளர்நடைப் பருவத்தை யடைவாராத தின, இம்மனுஷீகத்தினழகை யொருபொருளெனக் கருதுவது மூற்றும் மதிமயக்கமேயன்றி வேறல்ல.



இவ்விதமாய் வெள்ளிக்கயிறு கட்டிவிட்டுப் பொற்கிண்ணி கவிழ்ந்

வாற்றினருகே சால் உடைந்து, நிறவண்டையில் உருளை கொறுங்கி, நிரை தேகத்தைக் கவர்ந்து, உரோமம் கயல்முட்போன்று, நரைமுதிர்ந்து, கண்பூத்துச் சொற்றளர்ந்து, கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப், பற்கழன்று, பாண்டம் பழிக்கப்படுங்காலமும் வரும்.

மனித ஆயுளின் அளவு.

மனிதனுடைய ஆயுளாகச் சாதாரணமாய்க் கணிக்கப்படுவது நூறுவருஷகாலம். ஒருவன அவ்வாறு நூறுவருஷம் ஜீவித்திருந்தாலும் அவன் ஆயுள் காலத்தில் பாதி, அதாவது ஐம்பது வருஷங்கள் இரவாய் ஒழிந்துவிடுகின்றன. மிகுதியான ஐம்பது வருஷங்களில் அநேக வருஷங்கள் சிசுப்பருவம, பாலப்பருவம் முதலியனவைகளிலும, மற்று மநேக வருஷங்கள் நோய் முதலிய தண்பத்திலும், பலவித தொந்தரவுகளிலும், விருத்தாப்பியப் பருவத்திலும் ஒழிந்து விடுகின்றன. ஆதலால் நமதென்னப்படுமை சுகமாய் வாழ்நகூடிய சொற்பக்காலத்தை வீண்விளையாட்டுகளிலும், சோம்பலிலும் செலவழித்து விடாமல் நன்மையான விஷயங்களில் செலவிட்டுக் காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டியது அத்யாவசியம.

"வேதனைப் பிராயம் நூறு, மனிதர்தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப்போகும், நின்றதில் பதினேயாண்டு,
பேதை, பாலகனுந் தன்மை, பிணி, பசி, மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே."

என்று ஆள்வாரும்,

மனிதர்க்கு வயது நூறல்லதில்லை
ஐம்பது இரவில் அகலும் துயிலினுல்
ஓட்டிய இளமையில் ஓரைந்து நீங்கும்
யாக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்
எழுபதுபோக நீக்கு இருப்பது மூப்பதே,

ஆவற்றுள்,

இன்புறு நாளும் சிலவே அதா அன்று
துன்புறு நாளும் சிலவே, ஆதலால்
பெருக்காறு ஒத்தது செல்வம், பெருக்காற்று
இடிகரை ஒத்தது இளமை, இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள், ஆதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும்
இன்றே செய்யவும் வேண்டும், இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும், இன்னும்
நானே நானே என்பீராயில்

நமனுடை முறைதான் ஆவதும் அறியீர்,
நம்முடை முறைதான் ஆவதும் அறியீர்,
எப்போதாயினும் கூற்றுவன் வருவான்
அப்போது அந்தக் கூற்றுவன் தன்னைச்
சாற்றினும் போகான் தமரொடும் போகான்
போற்றினும் போகான் பொருளொடும் போகான்
நல்லார் என்னான், நல்கூர்வு அறியான்
தீயார் என்னான், செல்வர் என்று உன்னான்
தரியான் ஒருகணம் தறுகணுளன்
உயிர்கொடு போவான் உடல்கொடு போகான்.

என்று கபிலரும், நமது ஆயுள் நாட்களின் பல பருவங்களையும், அவற்றுள் நாம் ஆதாயப்படுத்தவேண்டிய காலங்களையும் தெளிவாய் விளக்கியிருக்கும் பிரகாரம் உணர்ந்து நன்னெறியைக்கடைப்பிடித்து ஒழுகக் கடவோம். ஏனெனில், புத்திமான் பலவானுவான், பலமுளான் புத்தியற்றால், எல்லாப்படியாலும் இடருற்று ஏங்கி நிற்பான்.

"மண்ணுமை மன்னவரு மவர்தணமும் மாண்டன நுண்மணலு யொக்கும்
விண்ணுமிழ்நிரரு மவர் வாழ்வும் போயினவின் மீனையொக்கும்
எண்ணுருவும் பிரமரு மண்டலமும் பூதங்களு மிறந்தன வெல்லையில்லை
கண்ணுரு வியெங்கே நின்வாழ்க்கை நிஜமென்றே கவரும் நெஞ்சே."

"முற்றியபின் கனியுதிரும் பழுப்புற்ற லிலையுதிரு முழுதுமேநெய்
வற்றியபின் விளக்கவியு மென்னவுமோர் திடமுண்டு மக்கள்காயம்
பற்றியதற் கருப்பதுதோ மூப்புற்றே விழுவதென்ன நியமியலையால்
மற்றிதனை நிஜமென்றே னினைப்பதெங்கே மடமைநெஞ்சே."

"சொல்லறுக்க வோர்கால மலர்கொய்ய வோர்காலம் நெடியபாராங்
கல்லறுக்க வோர்கால மரமறுக்க வோர்காலங் கனிதருண்டே
வல்லரக்க னனைய நமனினைத்த பொழுதெலா நம்மவாழ் நாளென்னும்
புல்லறுக்க வருதனெனின் மற்றினிரு மிதன்பெருமை புகல்வதென்னை."

உண்ணும்போதோ, உறங்கும்போதோ, உலாவும்போதோ, திரியும்போதோ, இச்சமயமென்றில்லாது நிமைப்பொழுதில் பிராணன் நீங்கிவிடுவது ஆச்சரியமல்லவா? என்றைக்கிருந்தாலும் மண்ணிற்கிரையாவது நிச்சயமென்று அறிந்திருந்தும் ஒருவரையொருவர் மோசஞ்செய்வதும், பொய் புரட்டு பொல்லாங்கு சொல்வதுப், பிறர்பொருளை ஆசிப்பதும், எவரையும் மதியாது மனந்திறக்கிட்டு ஏசப் பேசுவதும் ஆச்சரியத்திலும் ஆச்சரியமன்றே?

ஆதலால் நம்முடைய வாலிபப்பிராயத்தில் சும்மை இதுவரை மர்க்கடகத்தையடக்கி யாளுமாப்போல் தடுத்தாட்கொண்ட ஜெகதீசனைஸ்துதிப்பது அவசியம்.

"மாயா மாயாத் தம்பனம்."



ஆ! சகலமும் மாயையே, கல்வி மாயையே, செல்வம் மாயையே, சதகஜதுரகபதாதிச் சேனைகளெல்லாம் மாயையே. "மாதா பிதாமற்றும் செல்வமிருந்தாலும், மரணம் வந்து உன்றன் வாழ்வைக் குலைக்கும் உலகம் உன் சதமல்ல." யமனானவன் நினையாத காலத்தில் வந்து பூ உதிர, பிஞ்சு உதிர, காயுதிர, கனியுதிர, காலதண்டத்தாலடிப்பான்.

"தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேமில்லை மணிமாட மாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்தோர் வாழ்வுமோ நிந்திரசாலக் கோலம்
வஞ்சனை பொருமை லோபம்
வைத்த மனமாங்கருமி சேர்ந்த மலபாண்டமே
வாஞ்சனையிலாத கனவே."

"சந்தைக்கூட்டம், பொம்மலாட்டு, மாதர்சந்தடி செய்யும் சோட்டு, பிஞ்சையான விளையாட்டு, மந்தை வேடிக்கையென்று விட்டோட்டு."

"அழுதாற் பயனென்ன வொந்தாற் பயனென்ன வாவதிலை
தொழுதாற் பயனென்ன தொட்டென்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன. நன்மையுந் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப்படிக்கு வருமோ சலியாதிரு யேழை நெஞ்சே."

"பணந்தேடியாரிருந்தார் பாழ் லோகத்திற்
பாவி கிரியோதிரணும் பாட்டனருமும்
குணநிறைந்த மகுடமன்னர் கருணன் பூரி
சூரியதோர் தேத்தரசன் சகுனி சல்லி

பிணமாரு ரார்ச்சுனன் கை யம்பிலுலே
பிலமான வவர்களாயுங் தூணையும் போச்சா
மணமான மக்கள் பெண்டீர் சுற்றமெல்லாம்
மாய்கையடா சற்றுங் மதித்துப்பாரே."

இறப்பதும் பிறப்பதும் நம்மாலியன்ற காரியமேயல்ல. "பேரினமை, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு ஆறும் கருவிலமைத்தபடி." என்னும் ஆன்றோர் வாக்கின்படி ஆராய்ந்து பார்க்கில். பிறப்பென்பதற்குச் சந்தோஷமும், இறப்பென்பதற்கு விசனமும் சேரிடுவதற் கவசியமில்லை. நமது தாயின் கர்ப்பத்தில் உற்பவித்தானிலேயே இன்ப துன்ப முதலிய சகல சுகதுக்கங்களும் அமைதலேயன்றி, கருக்குழியை நீற்றபின்னர் நம்மாலாவ தொன்றுமில்லை. ஒருவன் சம்பாதிப்பதும், தரித்திரனாவதும், யோகியாய், ஞானியாய் சாந்தகுண மடைவதும், மூர்க்கவெறியினால், பிறரைக் கெடுக்க முயலுவதும் ஆகிய பலபேதா பேதங்கள் கருவிலேயே அமைந்துவிடுவதால் நம்மால் யாதொரு காரியமும் முடியாது.

" ஆவாரை யாரே யாழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பார்—ஏவாம
லேயம் புருவாரெ யாரே விலக்குவார்
மெய்யம் புலியதன் மேல்."

" இருப்பது பொய்! போவது மெய்!
யாதிருந்து மென்னும்?
எவரிருந்து மென் செய்வார்?
எமன்வருங் காற்றேறும்
பொருள் கொடுத்துப் பிழைப்பாயோ?
தமரை யனுப்புனையோ?
பொய்யுரைத்தாற் சென்றிடுமோ;
பிற்கணத்தே வருவேன்.
உருக்கம் வையுமையா வென்
றழுதும் விடுவாரே?
ஊட்டி வளர்த்திடு முடம்பி
லெடுகொடி போகாதே?
செருக்கெதுவோ நிலையில்லாப்
பொருட் கழுவாய் மனமே
சிச்சீ யறிந்து கெட்டாற்
செப்புவர் யாருனக்கே."

இந்த உலகத்தில் நாம் சொற்பக் காலமாக அனுபவிக்கும் சுகதுக்கங்கள் யாவும் சந்தைக் கூட்டமானது காலையில்கூடி மாலையில் குலைந்து போவதுபோலும், சிறு பிள்ளைகள் சிறு வீடுகட்டி, பெண்மாப்பிள்ளை யென்று வைத்து, உங்களாயா ஆண அம்மான்

ஆகிலை, நீ என் வீட்டுக்கு வராதே. நான் உன் வீட்டுக்கு வரமாட்டேன் என்று சொல்லி விளையாடி விட்டுக் கடைசியாக, நா, ஆகிலையழித்தேன். ஆகிலையழித்தேன் மூக்காலும் மூன்றாம் ஆகிலையழித்தேன் என்று சொல்லிக் கையாலும் காலாலுந் தங்களாண்மனை சலையழித்தனிட்டுக் களையத் தட்டிக்கொண்டு அவரவர் தம்தம் வீடுகளுக்குச் செல்வதுபோல்லவா நம் வாழ்க்கை இருக்கிறது? ஆகையால்தான் இவ்வுலகத்தின் காரியாதிகள் யாவையுமாராய்ந்தறிந்தணர்ந்த ஞானிகள் இவ்வுலகமொரு சதமல்லவென்று தினைந்து "சம்சார சாகரோ தக்கம் அனந்தக் கிலேசோ பாஜனம்" என்பதன் கருத்தை யுணர்ந்து இல்லறத்தைத் துறந்து, துறவறவாசிகளாகின்றனர். இவ்விதம் உணர்ந்து தம் ராஜ்யத்தையும் மனைவியையும் துறந்த கவம்புரியும் பொருட்டு ஆரண்ணியஞ் சென்ற ஓர் மகாராஜாவினிடத்தில் அவனுடைய மந்திரி இல்லறமே நல்லதென்று பல நீதிவாக்கியங்களாலும் போதிக்க அரசன் விடுத்த விடை யாதெனில்:—

மகாராஜா துறவு.

பாலனை பருவம்போம் பன்னுகுமாரப் பருவம்போம்
கோலமான தருணைப்போகங் கோலியூன்றிக் குனிந்தெழுந்து
காலன்மாய்க்க வனைவர்களுங் கல்லென்றழுது போர்மாற்றி
வலப்பினமென்றெருது பெயரிட்டிடு காட்டிடுதலொருதலையே.

கருவினின்று மழிந்துபோன் கண்டகுழந்தையினும் குமரப்
பருவத்தனிலும் போந்தருணைப் பருவத்தனிலு மழிந்துபோம்
முருவநன்கு மூப்பதுறை மொகிங்கு மெந்தக்காலையினும்
வருவியப்பி தலியல்பாகு மூலகத்துடலின் வாழ்க்கையுமே.

இந்த விரிவையுடைய விந்தமாயை யசத்தே
அந்த வியல்வையுடைய வந்தப் பிரமஞ்சத்தே
தந்தமனத்திற் தேர்ந்தோர் தள்ளி யெஃதைதிற்பர்
உந்தன் மனத்தினல்ல யுனித்தமைச்ச பாராய்.

பொய்யென் றிதனையறிந்தோர் பொருந்தி நிற்பதனதோ
மெய்யன் றதனை யறிந்தோர் மேவா திருப்பதனதோ
நுயரூனதோ விதனி லமைச்சபாராய் நன்றாய்
உய்ய வறிவிலாதோ ருழல்வர் கீங்கமாட்டார்.

பொய்யை மெய்யென்றறிந்து போதமின்மையாலே
மெய்யைப் பொய்யென்றெண்ணி மெலிந்தே யுழல்வ ருலகர்
பொய்யைப் பொய்யென்றறிந்து போதருருவினருளின்
மெய்யை மெய்யென்றறிந்தே மெலிவுதீர்வ ருயர்ந்தோர்.

தன்பந் தோன்றி லெவரும் தரக்தேகராய்த் தனித்தே
இன்பந் தேடலியற்கை யின்பமென்றே தோன்றில்
அன்பதாக நீங்கா ரவர்கட்கெங்கண் கூடும்
நன்பரம ஞானநாட்ட மமைச்ச சொல்லாய்.

இழிவை யணைர்ந்தா லுயர்வை யெவருந்தேடிநோக்கும்
இழிவை யணராருயர்வை யெய்துதோக்கா ரென்றும்
இழிவையிழி வென்றுணர வெந்தக்காலம் வாய்க்கும்
இழிவையுடையோர்க் கமைச்ச விதிதனை யுரைத்துணராய்.

இல்லறமதனி லுறைந்தாளோரிடத்தி லிருப்பினும் ஞானங்கிழிரும்பித்
புல்லியமாரத்தினமென விளங்கும் போக்கியில் லினத்துறவென்னும்
கல்லறமடைந்தோரிடத்துரை ஞான நற்றங்கமிசை யிரத்தினம்போல்
வல்லையிலொளியாய் விளங்கிடுமாயி னில்சிறப்பன்று ஞானிகட்கே.

ஆ! எமதிஷ்டர்களே! நாம் இப்போல்ய நிலையிலேயே இவ்வுலகத்தின் வாழ்வு அறிந்திருமெனக் கருதி,

உன்னதத்தை நோக்கி யொருபொருளைச் சிந்தனைசெய்
பொன்னுலகைப் போக்கடித்துப் போடாதே—மின்னலொத்த
தாழ்வுதனைதும் பாழ்லகச் சனைடாள மாமாய
வாழ்வை நம்பாதே மனமே

கண்ணுப் பாட்டை மனதில் தியானித்து பக்திநெறி முக்திநெறியின பக்குவ நிலைமைக்குட்பட்டு நடக்கத் தொடங்குவோமாயின் என்ன பாக்கியம்! எவருக்குண்டிந்த சிலாக்கியம்!

இங்ஙனம் தயாதாகூரின்னெனிய வைதரிய வெளரியாதி சகல கல்யாணகுண பூரணரும், அமிதசக்தியபரும், நிஜஸ்வரூபரும், மங்களமான கீர்த்தி சம்பன்னருமான சச்சிதானந்த மூர்த்தியாகிய சாயத்தி தேஜகதீசருடைய பாதாரவிந்தங்களை அஞ்சலி செய்து என்னுடைய உபந்யாசத்தை முடிக்கிறேன்.

அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி அரும்பரி யெவர்க்குமாற்றி
மனத்திலே பேதாபேதம் வஞ்சனை களவும் பொய்யும்
நினைத்தலுந் தவிர்ப்பாயாகில் செய்தவம் பின் வேறுண்டோ
உனக்கிது உறுதியான உபதேசம் சொன்னேன் கண்டாய்.

ஒன்றென்றிரு தெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லா
மன்றென் றிரு பசித்தோர் முகம்பார் கல்லறமு கட்டு
நன்றென்றிரு நமு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிரு மனமே யுனக்கே யுபதேசமிதே.



சாமிவேல் வைத்யசாலையில் மருந்து ஆர்டர் செய்பவர்களுக்கு வருடந்தோ றும் கியாலண்டர் மற்றும் வெகுமதிகளு ங்கிடைக்கும்.

சாமிவேல் வைத்யசாலை,
தென்காஞ்சி, இரங்கோன்.

கடவுள் துணை.

மானிட
மர்ம சாஸ்திரம்.

இரண்டாம் புஸ்தகம்.

இல்லற இன்ப ரகசியம்.

அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்பதில்லா யினன்று.—குறள்.

இஃது

யாவர்க்கும்

சகலசெல்வ நன்மைகளையும் சுகிர்த பாக்கிய
போகஜீவதசையையும் நீடிழி பெருதலிக்க
விரும்பியும்

கல்கத்தா சர்வகலா சாலத்தின் தமிழ்ப் பரீக்ஷகரும்,
ரங்கூன் சென் ஜான்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியருமாயிருக்கையும்,
கணிதசாஸ்திரம், ஜியோஸ்திரக்ஸினின், ஜரக்த கர்த்தாவும்,
மானஸ மர்ம சாஸ்திரப் பண்டிதரும்,
சாமிவேல் வைத்தியசாலைத் தலைவருமாகிய

எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது


புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,
தென்காஞ்சி, ரங்கூன்.
1918.

All Rights Reserved.



ராஜயோகத்திலமர்ந்த தபோதனரிருவர்.



இல்லற இன்ப இரகசியம்.

துறவறம்.



அன்றுமலர்ந்து அன்றே வாடும் புட்பத்துக்குச் சமான மான அநித்திய உலகச்செல்வத்தையும், அழிவுள்ள பிரக்கியாதியையும் அற்பமெனக் கள்ளி, அட்சய வீட்டகம் நிச்சயமாய்ச் செல்லும் வழியாகிய அருந் தவ முனிவாகள் அடைந்த சந்நியாசமே துறவற மாகும்.

துறவறத்தையே சிலாக்கியமாய்ப் பேசுகிறவர்கள் உலகவாழ்வு களினின்பம் நிலையற்றதென்றும், கடவுளிடத்து அன்பு செலுத்தி அவருடைய அருளோட் பெறுவதே ஆனந்த பாக்கிய மென்றுங் கொள்வர்.

தணிகைப்புராணம்.

மனைக்குரிமனையாடன்னைவாய்த்தநன்மைத்தாதம்மைக்
கனைத்தலைசுருட்டம்மேவுகக்கடனிகர்செல்வந்தன்னை
யெனைத்தையுமிலம்பாடென்றேயிம்மனத்துறந்தபெம்மான்
றனைச்சரணடைந்துளாரேதணங்கரில்லாசெல்வர்.

சிற்றிலிழைத்தாடுநர்பாற்சிறந்தாடும்விளையாட்டுப்
பொற்றமனையறம்புரிகாற்புந்தெயினைதரல்போ
லற்றமிலாவில்லறமென்றுதரிக்கப்பகிவதருட்
பற்றுமிகும்போதுன்னிற்பழுதென்தேதாற்றவதன்றே.

சிவ-மெய்ஞ்ஞானவிளக்கம்.

சிறப்புறுநோயாற்றன்பஞ்செடிகொண்மூப்பதனாற்றன்ப
மறப்புறத்தியக்கஞ்செய்யுமரணவேதனையாற்றன்பம்
பிறப்பவரெக்காலத்துமபெறுவதுதன்பமானாற்
றுறப்பதேகருமந்தன்பப்பிறவியாந்தியாந்தீர.

எவ்விடத்தினுமெக்காலுமியாவையுந்தன்பமானாற்
பொய்வகைப்பிறவிநீங்கப்போகுமாறதனைநாடி
யைவகைத்துவந்துவந்கண்மயக்கினையறத்துறந்தே
யுய்வகைத்திறத்தையேயார்வாரெனருப்படலவிப்பதையா.

தாயுமானவர்பாடல்.

அந்தக்கரணமடங்கத்துறப்பமே
யெந்தத்துறவினுனன்றெந்தாய்பராபரமே

சித்திரையிற்செத்தபிணம்போருமுடற்சிச்சைவையாச்
சுத்தர்களேகல்லதுறவேவார்பராபரமே.

திருக்குறள்.

யாதொன்றுதன்னுஞ்செருக்கறுப்பான்வானோர்
குடர்ந்தவுலகம்புகும்.

தலைப்பட்டார்தீரத்துறந்தார்மயல்மி
லலைப்பட்டார்மற்றையவர்.

காஞ்சிப்புராணம்.

துறவேயறங்களெவற்றிலுக்கும்பரிதாம்விடையூர்தான்றலுக்குத்
துறவேயுவகைவரச்செய்யுந்துறவேயயன்மாலுலகளிக்குத்
துறவேயினிடத்திருத்துமெவருமேமலாச்சொல்லுவதுந்
துறவேயாமென்றெழுந்தகின்றுயிசாற்றுன்னைசவத்துருவாசன்.

சிவ-குறுந்தொட்டு.

கருப்பமென்னுமக்காரிருட்சிறையினிற்கதுவு
கெருப்பில்வெந்துளிலைகடத்துலதகர்ந்திடவே
பொருப்பினின்றுவீழ்பவனனப்போந்தமைநினையா
விருப்புகெஞ்சினர்க்கென்னையாமினியியம்புவதே.

குழவியிலறியாத்துன்பங்குரவராற்குமாரத்துன்பங்
கழிதருகாமநோயாற்காளையாம்பருவத்துன்பம்
விழைவுறுபோகஞ்சுட்டிவெறுக்கையெவிருப்பிமேவுந்
தொழிலுறற்றுன்பமந்தத்தொழிலிடையூராற்றுன்பம்.

அல்லலாற்சில்வத்துன்பமதினுங்கல்குரவுதுன்பங்
கல்வியாங்காரத்துன்பங்கற்றிலரெனுமிற்றுன்ப
மல்லன்மாருலகந்தன்னில்வவ்விமிகுமதத்தாற்றுன்ப
மில்லையெலையெவிழியார்தம்மாலிடர்வுறலாற்றுன்பம்.

சிறப்பறுநோயாற்றுன்பஞ்செடிகொண்மூப்பதனாற்றுன்ப
மறப்புறத்துயக்கருவெய்யுமரணவேதனையாற்றுன்பம்
பிறப்பவரொக்காலத்தும்பெறுவதுதுன்பமானுற்
றுறப்பமேதகருமத்துன்பப்பிறவியாத்துயராங்க.

ஞானவாசிட்டம்.

வருத்தமற்றச்சுந்தோகமதின்றிநன்னூற்பின்போ
யொருத்தராம்லவல்லின்றியுலாவுகாசிக்கண்வண்டா
வருத்தலுங்களைகர்த்தையாகுமளவில்லைபோகக்கண்ணுயாம்
பெருத்தகுவாபத்தாருவெல்வம்பரின்பநிராசைதானே.

இடும்பைகூர்சங்கமின்றியியற்கையாசாரமெய்திக்
குடும்பமாத்துயர்சிற்றின்பங்குறித்திடாப்பெருமையோர்க்கு
நெடும்புகழ்வானுளல்செல்வத்தைறகுணமனைத்துமுண்டாய்ப்
படும்பலென்னசதகாலங்கோடிகள்போற்பலிக்குமன்றே.

இராமாயணம்.

மக்களனக்குருக்கடம்மைமாசரைமற்றுளோரை
யொக்குமின்னுயிரன்னரையுதவிசெய்தாரோடொன்றத்
தக்கமந்தெதாடர்ச்சியன்றுதுறப்பராற்றுணிவுபூண்டோர்
மக்கதிநலமெனயாஇவ்வுமேபறளிக்குமன்றே.

சிவ-விஞவிளக்கம்.

உடலினப்பேணல்விட்டாரொன்றியசெல்வம்விட்டார்
விடலருஞ்சுற்றம்விட்டார்வேட்கைவெகோடும்விட்டா
ரிடனுடைக்குலமும்விட்டார்யானனதறவேவிட்டார்
கடனுடைக்கல்விவிட்டார்கற்பனைமுழுதும்விட்டார்.

ஊனொடும்பேரும்விட்டாருலகியன்முழுதும்விட்டா
ராவொடுமார்வம்விட்டாராகளி மூக்கிசற்றம்விட்டார்
பாவொடும்வினை ஞெக்கண்பிமணப்பழுதறவேவிட்டார்
தேவியவெலையும்பொய்த்தேனெனகைசெய்துவிட்டார்.

அறநெறிச்சாரம்.

கீக்கருகோய்மூப்புத்தலைபிரிவுகல்குரவு
சாக்காடென்றைந்துங்களிறுழக்கப்—போக்கரிய
துன்பத்துட்டின்பமுழப்பார்துறக்கெய்து
மின்பத்தியற்பறியாதார்

திருக்கூவப்புராணம்.

உறவுதந்தைதாயொண்டொடிமாதரார்
சிறுவர்வண்புவிசெல்வம்பெரும்புகழ்
பிறவுமும்பருமாசைபிரிந்தமெய்த்
துறவினல்லதுதுன்பமகலுமோ.

கந்தபுராணம்.

செம்மையாகியசிந்தையர்சீரியோர்
வெம்மையென்பதைவிட்டிவிளங்கினோர்
தம்மையுந்துறந்தீதலின்றவ
நிம்மைதன்னினுய்மின்பத்தைதமேவுவார்.

இம்மையாவதியாண்டுமில்லாதவர்
கன்மையென்பதியல்பெனகண்ணினோர்
புன்மையானபொருள்விரும்பாரவர்
தன்மையாவரேசாற்றவல்லார்களே.

சிவதருமோத்தரம்.

மண்ணினுந்தனத்தினுமனக்குவாய்த்தகற்
பெண்ணினுமகவினும்பெரியமேதினுந்
துண்ணெனவனவழிவினத்துறந்தனயமே
வண்ணினுமின்புடன்விளங்கிமேவுவார்

நீதிநெறிவிளக்கம்.

பெண்மைவியவார்பெயருமெடுத்தோதார்
கண்ணெடுமெருகுகுறைப்பமோக்குரு—பண்ணெடு
பாடல்வசவிமடார்பணபல்லபாராட்டார்
வீடில்புலப்பகையினர்.

ஒழிவிலொடுக்கம்.

கத்திரைசெய்வீட்டினெருப்பும்பெரும்படையு
முட்டிப்புறப்பட்டாமுற்றுதம்மை—பத்தரைபம்பா
னில்லெனுசொன்னுலுரிதபோவப்படிக்கா
ணில்லறனைதீத்தாரியலபு.

மகாராஜாதுறவு.

இல்லறமதனிலுறைந்துளோரிடத்திலிருப்பினும்ஞானங்கீழிருந்பிற்
புல்லியமாரத்தினமென விளங்கும்போக்கியில்லினத்துறவென்னும்
கல்லறமடைந்தோரிடத்துறைஞானரற்றங்கமிகையிரத்தினம்போல்
எல்லையிலொளிபாய்விளங்குமாயினில்சிறப்பன்றுஞானிகட்கே.

இல்லறத்தைத அநுசரிப்பவரிடத்தண்டாகும் ஞான அறிவானது மிகவும் நாற்வான இருும்பின்கண்ணம்ணபதிப்பிக்கப்பட்ட இரத்தினத்தைப்போல் துலங்கும். இல்வாழ்க்கையைத் துறந்து துறவற வாசிகளானவர்களிடத்திற்தோன்றும் ஞானவொளியானதுசுத்தத் தங்கத்தகட்டின்மேல் பதித்த இரத்தினம்போல் எங்கும் பிரகாசமாய் பிரகாசிக்கும். ஆகலால் ஞானிகள் இல்லறத்தைவிடத் துறவறமே மேலானது என்றுசொல்லி உலக ஆசாபாசங்களைத்துறந்து துறவறவாசிகளாகின்றனர்.

தாயுமானவர்.

பொன்னை மாதரைப் பூமியை காடிமேடன்
என்னை காடிய என்றுயிர் காதினை
உன்னை காகுவன் உன்னருட்பெளி
தன்னை காவென் தன்னைத் தனியனே.

தன்னை யகல்றுலை சாற்றுவான எல்லாம்
தின்னை தென்றவென தின்னமிடத்தித தந்தீதன்
இன்னம் என்னை றுடர் உறக் கூட்டிறைற்
பின்னை உய்கிலென் பேதையன் ஆவியே.

செய்யுற்ற செய்கையுஞ் சிக்கிக்குற்ற சிந்தையும்
ஜய நின்னை தென் றிறண்ணும் அறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கம் ஆம்
பொய்யிலே சுழன்மீறன் என்ன புன்மையே.

இல்லை உண்டென் றிரவர் புக்கம் ஆயினும்
சொல்லவோ அறியாத தொழும்பன் யான்
செல்ல வேறொரு திக்கறியேன் எலாம்
வல்ல நீ என்னை வாழ்விக்க வேண்டுமே.

கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிர் எனப்
பண்பும் இன்னமும் என்பா னின் றுணர்ந்திடும்
அண்டமின உனக்கோர் பதுமபித்
தென்டன் என் பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே.

உண்ட வர்க்கன்றி உட்பசி ஓயுமோ
கண்ட வர்க்கன்றி காதல் அடங்குமோ
தொண்ட ருக்கெளியன் என்று மீதான்றுவான்
வண்ட மிழ்க் கிளை வாக மதிக்கவே.

விரக்தாயிருக்கும் அந்த விசேஷ வரப்பிரசாதம் யாவருக்கு முரியதன்று. கடவுளால் துறவறத்திற்கென்று நியமிக்கப்பட்டவர்களுக்குக் கடவுளைப்பற்றிய வாஞ்சையும் விசேஷ பக்தி

பொழுக்கத்தாற்பரிபவமும், ஜெபதபஆசையும், உலகசுகசந்தோஷ வாழ்வுகளெல்லாம் புகைபோற் சகிக்கத் தளர்போற் மாறி யொழிந்து விடுகின்றனவென்ற எண்ணமும், கல்யாணத்தின்மேல் வைராக்கியமும், மாறுதகற்பு அனுசரித்துப் பரலோகநன்மைப் பாக்கியத்தின் மேல் அவாவும் நெடுநாட்களாக விருக்கும். இவ்விதகுணம் வாய்க்கப் பெற்றவர்கள் உலகத்தையும் உலகசம்பந்தங்களையும் பற்றறத் துறக்கலாகுமா. வீண் வார்த்தைகளாடாதவர்களாய், தமதுசரீரதிடசனநிலைமையையறிந்து பராபரத்தின் கேற்றவழிகளை அநுஷ்டிப்பவர்களாய் ஒருவனையும் எதிர்பாராதவர்களாய் அல்லும் பகலும் ஜெபத்தியான நிஷ்டாபரராய்த் தேகமெலிந்தும் முகவசீகரங்குன்றுகிறவராய்ப் பிரகாசித்து நிற் பார்களாயின் அவர்களே துறவறமாகிறவர்.

* ராஜயோகம்.

யோகிகள் கடவுளைக் கண்டு களிக்க அவரோடு ஒன்றுகும்படி எளிதில் செய்யும் ராஜ மார்கமாகிய யோகாப்பியாசம் யாதெனில், இவர்கள் முதலாவது பல இடங்களுக்கும் ஓடிக்கொண்டே யிருக்கு மனதைச் சிதறவிடாமல் தம் வசப்படுத்தும் பொருட்டு ஸகல லக்ஷம் உருவெஜபிப்பதாலெல்லாது ஒருவஸ்துவையே நோக்கிப்பார்த் துக்கொண்டே யிருப்பதால் தம் சித்தத்தை ஒரேநிலையில் நிறுத்தி, அடக்கியாண்டு, அதைத்தமக்கிஷ்டமானபடி எந்த இடத்தில் எவ் வளவு நேரம் நிறுத்தி வைக்கவேண்டுமோ அவ்வளவு காலம் நிறு த்தி வைக்குஞ் சக்தியை யடைகிறார்கள். அதன்பின்பு பிரதிதின மும் சந்தடி யில்லாத இடங்களுக்குப் போய் அங்கே சிலகாலம் ஏகாந்தமாயிருந்து மனதை ஒருவழிப்படுத்தி, யாதேனுமொரு பட த்தை அல்லது ஓர் அரிய பெரிய விஷயத்தைத் தம் முகம் நிறுத்தி அதையே தியானிக்கப் பழகுகிறார்கள். இவ்வாறு சிலகாலம் அப் பியாசம் செய்து மனதைத் தம் வசப்படுத்தும் தன்மை யடைந்த பின் பரமநிஷ்டை செய்யப் பழகுகிறார்கள். அதாவது தங்களுக் கெந்தக் கடவுள் மூர்த்தத்தில் மதிப்பும் பக்தியு நிருக்குமோ அந் தக் கடவுளின் பிம்பத்தையாவது, மனப்படத்தையாவது தம்முன் நிறுத்தி அதனிடத்திலேயே தம் மனதைச் செலுத்திக் தியானம் செய்துவரின் ஓர் காலத்தில் நிஷ்டை செய்பவர்களும் அவர்களு டைய தியேயப் பொருள்களாகிய தெய்வமூர்த்தங்களும் ஒன் றுகி அத்வைத மாவார்கள். அப்பொழுது அவர்களுக்குப் புது வாழ்வு உண்டாகி, நினைத்த தெல்லாங் கை கூடி ஆனந்தக்கடலில் மூழ்குவார்கள். இது இல்லற வாசிகளான யாவரும் துறவறவாசி களும் எளிதில் செய்யக்கூடிய ராஜயோக மென்னப்படும். இவ்விதத் தப்பியாசங்களால் யாவரும் நன்மை யடைவார்களே யன்றித் தீமை யொன்றும் நேரிடாது.

* இதன் விரிவை மலேஷிய சாஸ்திராஸ்ரீ [illegible]

* தேவாரம்.

கற்பகத் தருவேலுனாணக் கடன்மடைத் திறப்பேபெயெட்டா
அற்புத வெற்பேபயாரும் அளவிடற் கரியமுத்தே
சிற்பர வுருவே வொஞ்சந் திருத்திடுங் குருவேவெயென்தாய்
தற்பரா யேசுநாதா தண்ணடி போற்றி போற்றி.

வன்னேயோர் பொருளாயேற்று எனதுபன் உடலேப் போர்த்து
மன்னிய புவியுட் வாணம் மகிழ்ந்தநி சயிக்குமாறே
நின்னேயே தங்காய் அந்தோ நினேக்கையில் இனிக்குதுள்ளம்
பொன்னேயா யேசுநாதா பொன்னடி போற்றி போற்றி.

பொன்றுர் மேனியனே புவிவாணப் படைத்தவனே
மின்றுர் செஞ்டாக்தில் மிளிர் ஆணி அளிந்தவனே
மன்னே மாமணியே மகிழ்மாமறை மாணிக்கமே
அன்னே நின்னேயல்லா வினியாரை நினேக்கேனே.

பண்டே நின்னடியா ரடியாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டணிந்தேன் நின்தாளடி சரணமென்றே
வண்டார் பூம்பொழில்சூழ் பெத்தலேகமின் மாணிக்கமே
யண்டா நின்னேயல்லா வினியாரைப் பணிந்திடுவேன்.

தெறியே நின்மலனே தெய்வ பாலர் போற்றிசெய்யும்
குறியே கீர்மையனே கொடியேனேமீட்டாள் தலேவா
நிறியேகராய்த் தோன்றி எமைத்தடுத்தாட் கொன்பவனே
அறிவே நின்னேயல்லா வினியாரைப் பணிந்திடுவேன்.

ஐங்கா யத்தினடைக் கலமளிக்கு மற்புதனே
மெய்யா யுன்னடிமை சாரி யேலுளம் வஞ்சகேராய்
பொய்யா தன்னருளேப் பொழிந்தாட்கொள்வா யிஸ்வாரே
ஐயா வென்னமுதே எனக்கார்துணே நீயலதே.

கியானமாலே.

கண்ணிமரியின்ற யெங்கள்கோவே அன்புக்
கரும்பேயென் கண்ணே மெய்க்கருனேவாழ்வே
புண்ணிய நன்னிலே யுடையோருளத்தில் வாய்க்கும்
புத்தமுதே யானந்த போகமேசீர்.
எண்ணிய மெய்த்தவர்க்கெல்லா மெளிதிலீந்த
வென்னரசே ஐங்கா யத்திறையாம் விக்தே,
தின்னியவென் மனமுருக்கிக் குருவாயென்னச்
சிறுகாலே யாட்கொண்ட தேவ தேவே.

நின்னிருதாட்டினே பிடித்தே வாழ்கின்றேனுன்
கின்னேயலாற் பின்னேயொரு நேயங்காணே.
னென்னேயினித் திருவுளத்தி னினேதியோகா
னேழையினு மேழைகண்டா யெந்தா யெந்தாய்.

---

* இந்தக்களுக்குள் தேவார முதலியன அனந்தம் உண்டு. கிரிஸ்தமார்க்கம் மேலைநா மூலமாய் இந்தியாவுக்கு வந்தமையால் கிரிஸ்தவர்களி லனேகருக்குத் தேவாரத்தினருமை தெரியாத வேதாயக சாஸ்திரியார் இவ்விஷயத்தில் செய்திருப்பது விபரீதக்குரியதே. திருவருட்பா முதலி வற்றிலுள்ள பிலபாடல்களே கிரிஸ்தவர்களிலுபயோகத்திற்காக வேண்டியவண்ணம் அமைத்தபோ

பொன்னையன்றி விரும்பாத புல்லர்தம்பாற்
போகவொழிந் தன்பதமே போற்றும் வண்ணஞ்
சின்னமளித் தருட்குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே.

எந்தை பிரானென்னிறவ னிருக்கவிங்கே
யென்னகுறை நமக்கென்றே யிறுமாப்புற்றேன்,
மக்கவலகினிற் பிறவாயொரு காசுக்கு
மதியாமல் சின்னடியே மதிக்கின்றேன்யா,
னிந்தவடி யேனிடத்துன் றிருவளர்த்தா
னெவ்வாறே வறிகிலேனே னழியேனுற்,
சிந்தைமகிழ்ந்தருட் குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே.

பன்னீர்க்கண் மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே பாவிகளைக் காக்கும் கோவே,
யென்னிரு கண்மணியே யெந்தாயே யென்னை,
யீன்றானே யென்னாசே யென்றன் வாழ்வே,
பன்னிருவர் புடைவினங்கப் பக்தராக
விருப்பு மடியார்களாண மேவுந் தேவே,
சென்னியினின் னடிமலர் வைத்தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே.

அருணிறைந்த பெருந்தனையே யாநந்தவமுதே
அன்பருளக் கோயிலிலே யமர்ந்தருளும் பதியே,
தெருணிறைந்த சிந்தையிலே திருத்திக்குந் தேனே
செக்கனியே யென்னிருகண் மயங்குமொளி மணியே,
மருணிறைந்த மனக்கோடியேன் வஞ்சமலாங் கண்டு
மகிழ்ந்தினிய வாழ்வளித்த மாகருணைக் கடலே,
யிருணிறைந்த மயக்கமின்னுந் தீர்த்தருளல் வேண்டு
மென்னுடைய நாயகனே யிதுதருணங் காணே.

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துளநெகிழ்ந்தாலும்,
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத்தாலு
மித்தனைக்குந் திருத்திக்கு மினித்தசுவைக் கரும்பே,
வேர்த்தாவி மெலிக்காது கனிந்த நறுங்கனியே
மெய்ஞ்ஞா யறிவானந்த விளக்கு மருளமுதே,
தீர்த்தாவென் றன்பரெலாந் தொழுது தொழுதேத்தும்
தெய்வசிகா மணியேயென் சிறுமொழி யேற்றருளே.

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே,
வல்லார்க்கு மாட்டார்க்கும் வாமனிக்கும் வாமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கு மதியே,
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே,
யெல்லார்க்கும் பலவிதமா யீவருளும் பரமே
யென்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே.

ஹடயோகம்.




இந்து தபோநிதிகளின் கொள்கையாதெனில், தூறலுறமானது—அறம், பொருள், இன்பங்களை அநித்தியமென்றுதறுத்துவிட்டு நித்தியமாகிய வீட்டையடையும் பொருட்டு யோகநிலையிலிருந்து யோக முயற்சி செய்கலாம். மூச்சோடியடக்கி, மூலவாயுவை யெழுப்பி, இடைபிங்கலை வழியை இறவாவகைடைத்துச் சுழிமுனை வழியைத் தூயந்து, பிராணவநாதத்தோடுபோய் ஐந்தெழுத்தும் பிரணவ ரூபமாகுந் தண்மைகண்டு, சிதாகாசத்திற் கலந்திருக்கை யோகநிலையென்பார்கள். யோக முயற்சியாவது—இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி முதலியவற்றை யநுசரித்து, ஜலத்திலும், அக்கினியிலும், பனியிலும், மழையிலும், வெயிலிலும் வருந்திக் கந்தமூல பலாதிகளைப் புசித்துத் தேகத்தை மெலிவித்துப், பிராணவாயுவை வருத்திக், கண்டம், இருதயம், நெற்றி, கபாலம், நாபி இவைகளிலொன்றிற் சித்தத்தை வைத்து ஐம்புலனடக்கித் தன்பப்படுவதாம்.

இது ஹடயோகமென்னப்படும். இந்த வழியில் ஒருவன் தக்க ஆசான் உதவியின்றி நடக்கமுடியாது. இவ்விதப் பிராணயாமம் சிலருக்குச் சாதகமாகமுடிந்தாலும் பலருக்குப் பாதகமாகமுடியும். எனெனில், இவ்வரிய அநுஷ்டானத்தில் யாதொரு காரணத்தால் எவ்வளவேனும் மனவு சஞ்சலம் உண்டாயின், அதனாலடைவோ மென்று நம்பியிருந்த மோக்ஷத்தை யிழப்பதுமன்றி, பந்திக்கப்பட்ட பிராணவாயு நெறிதவறி வெளிப்படுகையில் சரீரத்தை வருத்துவ முகதாதி லெழுப்பித் தலையில் மோதுவதும், கண்கள் பிதுங்குவதும், நாபிலப் பிடிப்பதும், மயிர் சிரிவதும், நாவின் வலிமை குறைந்து குதலைச் சொல்லாவதும், சுவாசக்கருவி சம்பந்தமான அநேகவித வியாதிகட்குப் பாத்தியதைதற்கும் உட்படுவதுமாகிய இழிவுகளைப் மனைவோர்கள். இவ்வாறு வருத்தமூறுந் துறவறத்தைப் பார்க்கிலும் இல்லறத்தால் இகத்திலும் லோகாந்தரத்திலும் அறம்பொருளின்பங்களை யுண்டாகும் ஆனந்தத்தை யநுபவிப்பதுமன்றி சர்வஞாத்ய சித்தியும் பரமானந்தப் பிராப்தியுமாகிய நித்தியானந்த மோக்ஷத்தையும் எளிதில் அடையலாமென்பது பற்றியே இல்லறம் மே நானெனினும் சிறந்ததெனப் பெரியோருரைத்த பிரமாணங்கள் பற்பல உள.

மேலும், கடவுள் நம்மைச் சிருஷ்டித்து இவ்வுலகத்திற் கனுப்பியது துறவறத்தால் நாம் சம்பாதிக்கக்கூடிய நமது சொந்த ஆத்ம

ரட்சிப்புக்காக மாத்திரமென்று, நம் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பவும், நமது உற்றார், பெற்றார், உறவின் முறையார், மனைவி, மக்கள் முதலியவர்கட்குத் தக்கபடி கடமைகளைச்செய்து அவர்களைச் சந்தோஷப்படுத்தவும், இன்னும் பிறருபகாரங்களுக்கும் உபயோகமானதற்குச் [illegible] செய்யக்கூடிய நன்மைகளெல்லாம் செய்ய இகபர யிசுவரனுடைய [illegible] தலின், " இல்லற மல்லது நல்லற மன்று.' என்னும் பிரமாணமே மெய்யானதென்னலாம், ஆனால் தாமரை யிலையில் நீரைப்போலும், புளியம் பழமுந் தோடும் போலும், இல்வாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாமலு மிருந்து, இவ்வுலக வைபவங்களை யநுபவிக்க வேண்டுமென்றும், போதித்ததுடன் தாமே யவ்விதமாகவிருந்து வாழ்ந்து இல்வாழ்க்கையின் மேன்மையைப் பரிந்துரைத்தாட்டிரைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும்,



சிதம்பர மும்மணிக்கோவை.

நல்லறனூல்களிற்சொல்லறம்பலசில
வில்லறத்துறவறமெனச்சிறந்தனவே
யக்கினிலையிரண்டினுண்முன்னதுகிளப்பிற்
கற்றதூற்றலைறபோய்க்கடிமனைக்கிழவ
னற்குணநிறைந்தகற்புடைமனைவியோ
டன்புமருவுநந்தாங்கியின்சொலின்
விருந்துபுறந்தந்தருந்தவர்ப்பேணி
னையவைகளெள்ளியுமாற்றியிவ்வகை
நல்லறமிரப்பிப்பல்புகழ்நிறுப்
பிறன்மனைநயவாப்பெண்ணலன்மேவாவழக்கைகக்கு
வணையாகாளிளம்பகைப்பேதுருறினதுப்
பெருகலத்துய்க்கும்பெற்றிநன்றே.

சிவ-பரமார்த்ததரிசனம்.

துறந்தவர்முவர்தேவர்தொளக்கமிலபிதிரர்நோய
ரறந்திகழ்விருதர்பாலரந்தணர்கல்விருத்தர்
சிறந்ததாய்தந்தைசுற்றந்திருந்தமுற்றதற்பின்மிக்க
வறந்தருமில்லாளோடுமருந்தலில்லறமதன்றே,
கொலையொடுகளவுகட்காமங்கோபமென்
புலைகடிந்தவகைப்புலனுமோம்பின
னிலையினிலணுவதுவழுவினில்லற
மலைவுறாரகிடையடைக்குமவ்வலவே.

திருக்குற்றாலப்புராணம்.

இத்தகையநூல்வர்களின் மூவருக்குமிறந்தார்க்கு
மத்தமுதலற்றார்க்குமாதாரமாதலினை
லுத்தமமாமில்லறமேவாழ்வினுக்குமுபகாரிக்கும்
விந்துமான்கிறவறத்தின்வேரும்மாமெனுமேவதம்;

கருமமெனும்பண்டமிருஞ்சகடமாமனைவாழ்க்கை
கருமநுகமபிணித்துமனைக்காதலியுந்தானுமென
விருவராய்முறைசெலுத்தினத்தனத்தாரமுஞ்செல் லு
மொருவராய்ப்பூண்டிழுப்பினேரிணையுஞ்செல்லாதால்.

நன்னெறி.

காதன்மனையாளுங்காதலனுமாறின்றித்
தீதிலொருகருமஞ்செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டுமொன்றுமதியெண்முகத்தாய்கோக்கனுன்
கண்ணிரண்டுமொன்றையேகாண்.

நான்மணிக்கடிகை.

கல்லாவிவாருவர்க்குத்தம்வாயிற்சொற்கூற்ற
மெல்லிலைவாளழக்குத்தானின்றகாய்கூற்ற
மல்லனைவசெய்வார்க்கரங்கூற்றங்கூற்றமே
யில்லத்துத்தீங்கொழுகுவாள்.

மழையின்றிமாநிலத்தார்க்கில்லைமழையுங்
கவுளிலானில்வழியில்லைதவமு
மாசையிலில்வழியில்லையாசனு
மில்வாழ்வானில்வழியில்.

கணவெலுக்குந்தான்றோர்மீ லியாறிற்றானமை
புணவெலுக்கும்போற்றருடனுறைதவு—பண்ணிய
யாழொக்குங்கட்டாக்கழுவுஞ்சொல்பாழொக்கும்
புடையானில்லாமனை.

மனுநீதிகாதல்.

யெல்லாறங்கள் செய்துகன மேவள்வி முடித்தாலும்
இல்லாறத்தின் வாழ்வுக்கிணையாவ தொன்றுமில்லை,
மட்டில்லா வாழ்விருந்தென்ன மனைதனக்கு முக்கியமாம்
இட்டமுற பெண்சாதி யென்பவளே முக்கியமாம்,
சற்குணமும் தெய்வபக்தி தர்மசிக்தை கற்புடைமை
இக்குணங்களுள்ளா னிருக்குமந்த வீட்டினிலே,
வற்றாது செல்வமவன் வாயால் பாரிபெய்யென்ற
உற்றாருஞ்சொன்ன லுலகெலா மாரிபெய்யும்,
தானுமனையாளுமமரு தர்மமது செய்யரன்று
தானவர்கள் வேறுபட்ட தர்மமது தர்மமல்ல.

துல்லறமாவது மெய்வினாக மெஞ்ஞான்றும் தீகயதிரவிய அநுமானத் தெய்வ பிரசாதத்தாற்கிடைத்த பொருள்களையும், கடவுளால் நியமிக்கப்பட்ட அந்தஸ்தாயிருப்பதையும், அவைதக் குறவறதிற்குத் தாழ்வினை நினையாமை முயற்சியாகும். ஆயுள் அதிலுட்பட விரும்பு கிறவர்கள் வீடு தாமீரயிலை நடத்தியாயிராமல் தக்க காலத்தில் தருந்த ஆயத்தத்தோடு அதில் பிரவேசிக்கால்மட்டுமே அவர் கருத்து ஜெயிவதாகுமாம். இதற்கு ரூக்கியங்களை யடைவதற்காகப் பத்தாவது பத்தினியும் நடைபெற விவகாரங்களை நடத்துவதில் சுகித்து வாழுங்கள் தயாரும் ஸஹாயிக்க வேண்டிய கடமைகள் அனந்தமுண்டு. ஆகலால இல்லறத்திற்குள்ளாகத்தக்க சுகித்து முயற்சியையும், இல்லற அந்தஸ்தில அனுசரிக்க வேண்டிய புண்ணிய ஒழுக்கங்களையும் கூடியமட்டும் விவரமாய்க் கூறுவோம்.

இன்ப இரகசியம்.



இப்பிரபஞ்சத்தின்கண்மேல யுதித்த சகல பிராணி களும் இன்பத்தை நாடியதும், துன்பத்தை வெறுப்பதும் மிடற்றல்ல. ஆனால் பரிபூரண இன்ப மெய்வதற்கு மிதன்பது யாவருமறிந்த விஷய மல்ல. அதிபுறம்ய சிறிய தூக்கங்களை விளக்கவிளைவிய விழுக்கப் பட்டு, இந்தப்பிரகாசக்காந்தி பொருந்தி கண்களுக் கானந்தத்தை யுண்டுபண்ணுமிடத்திலம்ய சகல இன்பமும் பொருந்தி யிருக்கு மென்றெண்ணி, அதனுள்ள தீபாயணத்தை நுசித்துப் பார்க்க ஆவல் கொண்டு, சமீபமென்ற நெருப்பினுட் பாய்ந்து எரிந்து சாம்பலாய் நிர்மூலமாகினறன. அப்படியே பட்சிகளும் மீன்களும் தங்களைப் பிடிக்குப்படி விட்டிருக்கிற இரையின்மேல் ஆசைப்பட்டு, அதை யுட்கொளருகிறதனால் வலையிலகப்பட்டு மடிகின்றன.

1. சிற்றின்பம்.

கீழ்மருமபபடியே கண்களைப் பசப்பி யிழுக்குங் கணிகை யாரிடத்திலம்ய, இன்பம் குடிகொண்டிருக்கிற தென்றெண்ணி மயங்கிச் சிற்றின்ப வலையிலகப்பட்டு அமிழ்ந்து ஆழ்ந்து தமது ஆகம சீரழகுகளைக் கெடுத்து வீணைப் மடிகிறார்கள்.

சிற்றைப்பாடலகள், கதைகள, வீண்விளையாட்டு, ஆடல் பல், கூத்துவகையாட்டு முதலியவற்றினால் ஆசாபாசத்தைத் தளர்த்தி, அவ்வகளைக்கெடுத்து வாதிகற்ற விகாற்று வியாதியாகிய சிற்றின்பதனை லுண்டாகு மின்பம்—நச்சுக்கட்டியை கல்ல அமிர் தமென்று நினைத்து உட்கொளருவதா லுண்டாகுஞ் சுகத்திற் கொப் பாகுமன்றோ? இதைக் கருதியன்றோ முன்னெருவர்:—

"நச்சுக்கட்டிய கல்லுழுதமிக
வச்சுக்கட்டிய மாடுகோபாறுல
கச்சுக்கெட்டுபுடிய மழியுமென
கச்சுக்கட்டி மறைத்தனர் கண்களை."

என மேற்படுத்தில் மோகப்பபாய் பாபாறுல கழுழுவதுமம அழி வதற் கிடமாகு மென்றனர்.

2. ஐசுவரியத்தாலுண்டாகு மின்பம். *

வேறு சிலர் ஜஸ்திசயிலை திவாரப் சூவிப்பபாலும் மாத்திரமே இன்பப் பாக்கியம் பெற்றுச் சொகுசாய் வாழுலாமென்வறண்ணித் தங்கள் வாணாளையெல்லாம் வீண்காலாய செலவழிக்கிறார்கள். புண் ணிய வசமாய்ப் பொருளைச் சம்பாதித்து, அதைக் சற்பாத்திரத் தில் செலவிட்டுப் புண்ணியத்தைத்தேடிக்கொள்வதும் கர்தவ்யமாயினும், அதிலேயே காலத்தைப் பல்லாகு மிசயம்வை டன், ஆசை, வாத, தந்திரங்களை உபயோகித்தும் பொருள் தேடப் பிரயாசப்படுகிறார் கள். ஆனலபாடுபட்டவர்களிலேகர், "காலேவரியாறு கஞ்சி யாய்ப் பபருகுமுன் காய்ச்சத்தானை குடிக்கவேண்டும்." என் பதுபோலும், "குளத்துக் குளித்து மாவிடித்தாலும் குட்டைச்சி க்கு மூன்று கொழுக்கட்டைதான் கிடைக்கும்." என்பதுபோலும், "உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக மாட்டாது." என்பதுபோலும் தாம் எம்மாத்திரத்தில் உழைத்தாலுந் தம் பி யாசமெல்லாம் வீணாகி, எப்பொழுதும் வறுமையிலேயே யிருக் கிறார்கள்.

"ஆழியெல்லாம் வயலாகி யவனியெல்லா மன்னமய மாகுலென்ன
சூழவந்தே யிரப்பவர்க்குப் பசிதீரவுண்டருக்குஞ் சுகந்தானுண்டோ
எழுலகும்பணியவரும் தண்டலையாசீ வொளமென வெத்தனாளும்
காழிகெல்லுக் கொருபுடவை விற்றுலுனிருவானை காய்க்குத்தானே."

சிலர் ஐஸ்வரியவான்களான பாதிலும்

"பொருள்தேடும் திக்கமறைப் போற்றினவைக்குந் திக்கமதாம்
பொருளைச செலவழிக்கப் போம்போதுந் திக்கமதாம்."

---

* President Roosevelt Condemns the millionaire as the least enviable of citizens, as a man whose face has grown hard and body soft, whose son is a fool, and whose daughter is a foreign princess, whose nominal pleasures are tasteless and extravagant luxury, and whose real delight is the accumulation and use of power in its most sordid form.

என்பதுபோல், அவர்களதனில் சுகமடையாமல் நிற்பாக்கியரா கின்றனர். எனெனில் தாசமுள்ளவன் சமுத்திர ஜலத்தை யருந் துவதால் அவன் தாகம் நிவர்த்தியாகாமல் அதிகரித்துக்கொண் டே வருவதுபோல், பொன்னையே யுடையவர்களுக்குப் போச னத்திலிச்சையில்லை, அன்னோ மற்றுந் தருமமானதிலுமிச்சையில்லை ஆனால் தமக்கிருக்கும் பொருள் போதாதென்ற நினைவால் அதிக மதிகமாய்ச் சம்பாதிக்க விரும்பி பிரயாசப்படுகிறார்கள். அதனை லவர்க ளடையுங் கவி கஷ்டங்கள், விசாரம், சஞ்சலம் முதலியவற் றிற் களைப்புற்றோ அலைக்குள் பிடித்துப் பறிக்கால் அபிர்தமும் நஞ்சாகிவிடும். அதி பயபக்தியோடும் பலனை யும் புருஷ்தமுமாகும். சம்பிரமமாய் உதிப்பதாகி, சர்வர் அதற்குரு கொண்டுத் சரீரங் கொழுத்துச் திற்றிப்பா இடர்களுக்கு இடங்கொடுக்குமல்லவோ?

"போதுத்தனங்கல்வி போந்தவருங் காலமதில்
மாதர்மேல் வைக்குமனம்."

உலகரட்சகர் ஓர்காலத்தில் "ஐஸ்வரியவான்கள் பரலோக ராஜ் யத்தில் பிரவேசிப்பதைவிட ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று சொல்லியிருக்கிறார். நாம் சம்பாதிக்கும் பொருள்களால் நிகரா பாக்கியங்களைப் பெற்றுக் கொள்ளும்படி நாம் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி வேத வாக்கியங்களிற் சொல்லியிருப்பது யாதெனில்:—

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங் கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பா கப் பிரகாசிக்கக்கடவது

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவை களை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், இதுவே நியாயப் பிரமாண மும் தீர்க்கதரிசனங்களுமாம்.

போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றுங் கொண்டவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன் றுங் கொண்டுபோகவுங் கூடாதென்பது நிச்சயம்

இவ்வுலகத்திலே ஐஸ்வரியமுள்ளவர்கள் தாராளமாய்ச் கொடுக்கிற வர்களும் உதாரகுணமுள்ளவர்களுமா யிருக்கவும், நித்திய ஜீவனைப்பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப்பொக் ஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு

உங்கள்கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததனை லும் செய்து வருகிறதனையும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவர் அல்லவே.

நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப் படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

சிறுக வினைதக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக வினைதக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயு மல்ல. கட்டாயமாய மல்ல. தன்மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

உன் ஆஸ்திகளில் தர்மஞ்செய்: எந்த ஏழைக்கும் உன் முகத்தை மறையாதே; அப்பொழுது கர்த்தர் உனக்குத் தமது முகத்தை மறைக்கமாட்டார்.

உன் திராணிக்குத் தக்கதாய்த் தர்மசிந்தை யுள்ளவனையிரு; உனக்கு மிகுதியா யிருந்தால் மிகுதியாய்க் கொடு. உனக்குக் கொஞ்சமா யிருந்தால் அந்தக் கொஞ்சத்தில் சந்தோஷமாய்க் கொடுக்க ஆக்கினைத்தையாயிரு. இப்படிச் செய்வதினாலே அவசரம் வருங் காலத்திற்கு நற்பலனைக் கூட்டிச் சேர்க்கிறாய்.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்: தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

என் ஆலயத்தில் ஆகாரமுண்டாயிருக்கும்படிக் தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பல கணிகளைத் திறந்து இடம் கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோ என்று அசரீரி என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

உன் ஆகாரத்தைத் தண்ணீர்மேல் போடு: அநேக நாட்களுக்குப் பின் அதன் பலனைக் காண்பாய்.

---

3. கீர்த்தியா லுண்டாகுமின்பம். *

அநேகர் மேன்மை, பெருமை, கீர்த்தி, உத்தியோகங்களினால் பாக்கியம் வருமென்று நினைப்பதுண்டு. ஆராய்ந்து பார்க்கின் பெரிய அதிகார உத்தியோகங்களில் காட்டிலும் தொந்தரவு, அலுவல், கவலை, விசாரங்களுண்டு. அநேகர் அகங்காரத்தினாலும், விரோதத்தினாலும் உத்தியோகஸ்தரைப் பகைத்து, நிந்தித்து, அவர்கள்மேல் கோள் குண்டணி சொல்லி, அவர்களைக் தாழ்மைப் படுத்த முயற்சித்து பிருகு இடைஞ்சலுண்டு பண்ணுவதுண்டு. அவர்களுக்குத்தான் பழும் கலக்கமும் உண்டாகி அவர்கள் மகிமை பெருமை யெல்லாம் சூரியன் முன் பனிபோல் மறைந்துவிடுகின்றன. அதிகக் கீர்த்தியில் அதிகத் தன்பமுண்டு. பொருந்தாற்போல் பெரிய மரங்களைச் சாய்த்துக் கீழே தள்ளிவிடும். அற்பச் செடிகளோ வெனில் வளைந்து மறபடி நிமிரும்.

" FAME is that fickle, fleeting, shadowy wreath, that crown made of rainbow, that vainest of all earthly pleasures, but which yet is a pleasure " MITFORD. Fame is the spur which the clear spirit doth raise, that last infirmity of the noble mind to shun delght & live laborious days."

இப்பிரபஞ்சத்தின் கண்ணுள்ள சகல ஜீவராசிகளும் பல்கிப் பெருகிப் பூமியை நிரப்பும்படி அற்புதராதன் செய்திருக்கும் ஆச்சரியமான சூழ்ச்சியை விளக்கிக்காட்டும் பொருட்டு, ஒவ்வொரு வஸ்துவும் எப்படித் தத்தம் இனத்தைப் பிறப்பிக்கிற தென்பதைச் சுருக்கிச் சொன்னேம். இப்பிரமாணம் ஆதியிலேயே ஏற்படுத்தப்பட்டது. இதுவே எக்காலத்திலும் எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் உறுதியாய் நிலைக்கும் நித்தியப் பிரமாணமாகும். அற்பப்புல் முதல் சிருஷ்டி கர்த்தாவின் சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷன் வரையிலே சகலமும் இப்பிரமாணிக்கத்தின்படியே உலகத்தில் தோன்றுகின்றன. நம்மில் ஒவ்வொருவரும் அப்படிப்பிறந்தவர்களேயாம். அவ்விதமாகத் தாயின் வயிற்றில் உற்பவித்து அங்கேயே நாற்பது வாரம் தலைகீழும் மேலுமாய்த்தொங்கி, தாய் வயிற்றினுட்செலலும் அன்னபானாதிகளின் சத்தின் மூலமாய்ப் போஷிக்கப்பட்டு, தன்னுடைய குணங்களையும் புத்திதீக்ஷணியத்தையும், அழகு சௌந்தரியத்தையும், ஒழுக்க பழக்கங்களையும் அவளிடமிருந்தே பெற்று பக்குவமடைந்து அதற்குப் பின் இவ்வுலகத்தில் தோன்றினவர்களேயாம். நாம் பிறந்த இடம், நாம் வளர்ந்த இடம், அசங்கியமான தென்றும் அருவருப்பான தென்றஞ் சொல்லி அசட்டை பண்ணுவதற்கென்ன நியாயமுண்டு?

அண்டபகிரண்ட புவனங்களைச் சிருஷ்டித்து, ஊர்வன, பறப்பன, நடப்பனமுதலிய ஜீவகோடிகளிலும், தருகரண புவனபோகங்களிலும் பிரகாசித்து, பூதபௌதிக சராசரங்களிலும் நிறைந்து, மனிதன் புத்தியால் அளக்கவுந் தொடுக்கவும் வரம்புகட்டவும் முடியாத சகலபரிபூரண கன்மைச் சம்பன்னர் செய்துவைத்த ஏற்பாட்டில் எதுவும் அசங்கியமுளதோ? அவருடைய ஏற்பாடின் னெவ்வாறாய்ச்சி செய்து அறிந்துகொள்ளு மறிவே ஞானமாகும்.

குறிப்பு.


இதுவரை நாம் கவனித்தியா தெனில் :—

1. ஜீவஜந்துக்களநேகவற்றில் • ஆணும் பெண்ணுஞ் சேர்வது தத்தம் இனத்தைப் பிறப்பிக்கும் பொருட்டேயன்றி வேறெந்தக் காரணத்தினுமல்ல.

2 மிருகங்கள். பக்ஷிகள், ஊர்வன முதலியவை பல்கிப்பெருகும் பொருட்டு ஆணும் பெண்ணுஞ் சேருவதேயன்றி, வேறெவ்விதத் தர்க்கிர்த்தியங்களாலும் தமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கும் ஜனனேந்திரியங்களை அலங்கோலப் படுத்துகிறதில்லை.

3. சர்வவல்ல சாகூாத் ஜெகதீசருடைய ஆக்ஞைப்படிக்கு தக்கம் இனத்தை ஜனிப்பித்தவுடன், அநேகஞ் செடிகளும் ஜீவஜந்துக்களும் கடவுள் தன்மை யிவ்வுலகத்திலுண்டாக்கிய நோக்கத்தை நிறைவேற்றி விட்டனபோல் மாண்டு மறைந்து விடுகின்றன. இவ்விதமாய்த் தக்கம் இனத்தைப் பிறப்பிப்பதால் மிருகங்களும் மானிடரும் மரணமடையாதிருந்தாலும் ஜனிப்பிக்குந் தொழிலில் சக்தியும் வலுவுங் குறைந்து விடுகின்றன வென்பது திண்ணம்.


4. தக்கம் இனத்தை விரைவிலே ஜனிப்பிக்க ஆரம்பிக்கும் வஸ்துக்களும் ஜந்துக்களும் விரைவில் மாண்டுபோகின்றன. அதிகக்காலஞ்சென்று ஜனனேந்திரியத்தை நடப்பிக்கும் வஸ்துக்களெல்லாம் அநேக வருஷங்களுக்கு உயிரோடிருக்கின்றன. பிறந்த இரண்டு மாதத்தில் குட்டிபோட ஆரம்பிக்கும் சீமைப் பெருச்சாளி ஒருவருஷத்துக்குமேல் உயிரோடிராது. நாலுவயதில் குட்டிபோடும் குதிரை முப்பது வயதில் கிழமாகிறது. எண்பது முதல் நூறுவயது வரை உயிரோடிருக்கும் மனுஷன் இருபது வயதுக்குள் தக்கம் பிறப்பிக்கிறான். சித்திரம் தங்கள் ஜனனேந்திரியங்களை உபயோகிக்க ஆரம்பிக்கிறவர்கள் சீக்கிரம் மாண்டுபோவார்கள்.



சிலவஸ்துக்களிலும் முட்டைகளில் தாழ்வான தாவர சங்கங்களும் ஊறும் பிராணிகளும் பக்ஷங்களும் தக்கம் இனங்களைக் கோடிக்கணக்காய்ப் பிறப்பிக்கின்றன. கோழிகள் தினம் ஒரு முட்டையாக அநேக மாதங்களுக்கு முட்டையிடும்.








முசல், நாய், பூனை, காய் முதலிய மிருகங்கள் அடிக்கடி அநேகம் குட்டிகளைப் போடுகின்றன. அவற்றிலும் மேலானவைகள் வருஷத்துக்கொரு தடவை ஒன்று அல்லது இரண்டு குட்டிகள் போடும்.




உதாரணமாக:— புறாவினங்கள் ஜோடி ஜோடியாய்த் தம தருமபடைகளுடன் வெகு சாகசல்லாபமாய்த் திரிந்து ஆடும் இருமுட்டைகளினின்றும் ஆணொன்று பெண்ணொன்றுமாய்க் குஞ்சுகள் உற்பத்தியாகின்றன. அதேமாதிரியாய் மிருகேந்திரன் என்னப்படும் சிங்கமானது தன் ஆயுள்காலத்தில் ஏறீரவையாருதடவைமடுமே குட்டிகளை ஈன்று அதன் பிழைகொர்ப்பை முனைடாகாமல் இருப்பதால் நேநாள் ஜீவிக்கிறது.



மனுஷருமப்படியே சிங்கமும் கர்ப்பதரித்தில் நாற்பது வாரம் வளர்தது, பிறக்தபின்பு ஒருவருஷம் பால்கொடுத்து வளர்தது அதற்குப்பின் கருத்தரித்துப் பிள்ளைபெறுவதால் இரண்டு அல்லது மூன்று வருஷத்திக் கொருதடவை குழந்தைபிறகிறது. அடிக்கடி குழந்தை பிறப்பதால் தாய்க்குப் பலவீனம் மேலிடாதபடிமல்லாமல், தம் பிள்ளைக்கும் பலம, சக்தி, உயிர் முதலியவை கொடுக்கத்தக்க பால் தருவதற்கு வலாமற் போவதுடன், தாயைபன்றி வேறொருவராலும் கொடுக்கக் கூடாததும், பணதினால் வாங்கக் கூடாததுமான ஆத்ம, சன்மார்க்க உணவுகளையும் ஊட்டமுடியாது.

ஆணின் ஜனனேந்திரியங்கள்.

ஆணின் ஜனனேந்திரியங்கள் ஆண்குறி, பீஜம், சுக்கிலாசயம் (Seminal Vesicles), சுக்கிலக்குமிழ் (The Prostate Gland, சுக்கிலக் கோளங்கள் (Cowper's glands), ஸ்கலிதக்குழல் எனப பலபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.



1. குண்டிக்காய் 2. ஜலாசயம்
3. மலக்குடல் 4. சுக்கிலாசயம்
5. சுக்கிலக்குமிழ் (Prostate gland)
6. சுக்கில கோளங்கள்
7. இரத்த நாளங்கள்
8. இரத்த நாளங்களிலிருந்து இந்திரிய நாண்பிரித்து சுக்கிலாசயத்திற்குச் செல்வது.

இந்தப்படத்தில் ஆணின் ஜனனேந்திரியங்களின் நிலையைத்தெளிவாய்க்காண்பிக்கும் பொருட்டு ஆசனவாய் தவிர மற்றக்குடல் பாகங்களைக் காண்பிக்கவில்லை.

1. வயிற்றினுள் அதிக உயரத்தில் முதுகு பக்கமாய் வலது குண்டிக்காய் (Kidney) இருக்கிறதைக் காண்கிறோம். அதிலிருந்து சேரும் இரத்தக் கழிவுகளிலிருந்து மூத்திரம் சுவர்ந்து நீர்க்குழாயின (Ureter) வழியாய் மூத்திரப்பையாகிய 2) ஜலாசயத்தில் கூடி நின்று, நீர்விடமிணைடிய சமயத்தில மூத்திரக்குழாய் வழியாய் ஆண் குறியினுடசென்று வெளியாகிறது. ஜலாசயத்தில மூத்திரம் நிறைந்தவுடனே அதன் பாரம் மாதிரி யாரிக்கு மெலுகுதும். இவ்விதமாய்க் குண்டிக்காய, நீர்க்குழாய, ஜலாசயம, நீரத்தாரை முதலியவை நீர்விடுங் கருவிகளாகுனறன.

இனிமேல் சுக்கிலம் வெளியாகும் வகையைக் கவனிப்போம். சுக்கிலமானது பீஜங்களிலும் சுரக்கும் இந்திரிய நாண்வழியாய் ஜலாசயத்தைச் சுற்றிப்போய், (4) சுக்கிலாசயத்தில் சேருகிறது. இந்திரியநாணுடன் பீஜப்பைகளிலிருந்து வெளிப்படும் பத்தநாளங்களும் நாடிகளும் 8-வது இடத்தில் பிரிந்து, (7) எழின வழியாய் ரத்தாசயத்திற்குச் செல்லுகினறன. ஜலாசயத்திலிருந்து நீர்த்தாரை பிரிகிற இடத்திலுள்ள சிறு புள்ளியாகிய (5) சுக்கிலக்

மிழ் நீர்த்தாரையைச் சுற்றியிருப்பதைக் காண்பிக்கிறது. (6) சுக்கிலக்கோளங்கள் நீர்த்தாரைக்குக் கீழ் இருக்கும் நிலை,

அதிகாலையில் பசிக்கையைவிட்டெழுந்திருக்குமுன் (2) ஜலாசயமும் (3) மலக்குடலும் நிறைந்திருக்கும பொழுது அவற்றின மேலுள்ள (4) சுக்கிலாசயத்தை நெருக்குவதால் அதன்மெல்லிய நரம்புகளுக்குக் கிளர்ச்சி யுண்டாகி ஆண்குறி ஹராப்நிற்குந் தன்மையடைகிறது.

மல்லாந்து படுத்திருக்கும் பொழுது ஜலாசயம் சுக்கிலாசயத்தை அழுத்துவதால் அவ்வித்தக் கிளர்ச்சியுண்டாகும். ஆகலால் மலஜலம அடக்காதிருப்பதனலும், ஒருபக்கமாய்ச் சாய்ந்து சரிந்து படுத்திருப்பதனலும் அனுவசியமான கிளாச்சிக் கிடங்கொடாமல் சுகமாயிருக்கலாம்.

ஆண் குறி.

ஆண்குறியில் நேராய் நிற்கும் சக்தியையுடைய மாம்சாம்சங்களையும் (Erectile Tissues) அவற்றை மூடிருவச்செல்லும் மெல்லிய இரத்தக் குழாய்களையும் மிக உறுதியான நார்போன்ற மூன்று குழாய்கள் (Cylindrical Fibrous Compartments) சுறறிக்கொண்டிருக்கின்றன. இதில் நரம்புகள் ஏராளமாகவும மாம்சம் குறைவாகவு மிருக்கின்றன. காமத்தாலுண்டாகும் உத்தீபனத்தால் ஏராளமான இரததம திடீரென்று இரத்ததாரைகளின வழியாய்ச் செல்லவே ஆண்குறி ஹராய் நிற்கின்றது. துஷ்டசுகவாசத்தால் சிறுபிராயத்தில் செய்யும் ஹஸ்தப்பிரயோக முதலிய புத்தியீனமான கிருத்தியங்களால் மேற்படி மாம்சாம்சங்களின வலிமைகுன்றி, நரம்புகள் தளர்ச்சியடையதால அநேக வாலிபர் தமது ஆண்தன்மையின் சக்தியைக் காண்பிக்க வலாதவர்களாய் மிவுடகத்திற் காளாகின்றனர். சிறுவர்களுக்கு இது எச்சரிக்கையாகும.

பீ ஜ ம்.

ஆண்குறிக்குக் கீழ் பீஜப்பையினுள் விதை என்று சொல்லப்படும் இரண்டு பீஜங்கள் பீஜக்கொடியிணலும் இந்திரிய நாணென்னப்படும (Spermatic Cord) ஓர்ந்தத்தசை நரம்பிணலும் தொங்குகின்றன. பீஜத்தைச் சோதித்துப்பார்த்தால் அவைகள் மூனணுறு கெஜத்துக்குமேல் நீளக்கூடிய சிறு மெல்லிய குழாய்களால் உண்டாக்கப்பட்டனவாகத் தோன்றும். இவை இந்திரிய

தாரை என்னப்படும். இந்திரிய தாரையானது பீஜக்கோடியோடு சேர்ந்து மேலேயேறி, மூத்திரப்பையின் பக்கத்திலிருக்கும் சுக்கிலாசயத்துட் சென்று ஒரே குழலாகி, ஸ்கலிதக் குழலோடு சேர்ந்து நீர்த்தாரையில் முடிந்திலிடும். இக்குழாய்களில்தான் சுக்கிலம் உற்பத்தியாகிப் பக்குவமடைந்து, மூத்திரப்பைக்கு அடியிலிருக்கும் சுக்கிலாசயத்துட் சென்று அங்கேயே தங்கியிருக்கும்.

நீர்த்தாரை. (Urethra).

ஆண்குறியை ஊடுருவிச் சென்று மூத்திரப் பையிலிருந்து மூத்திரத்தை வெளியாக்கும் மூத்திரக் குழாய்க்கு நீர்த்தாரை யென்று பெயர். அது மூத்திரப் பையோடு சேருகிற இடத்தில் ஸ்கலிதக் குழல்களும் முடிகின்றன.

சுக்கிலாசயம், (Seminal Vesicles).

ஒவ்வொருவர்க்கும் உதித்த ஜவ்வினாலுண்டாக்கப்பட்ட இரண்டு சுக்கிலாசயங்கள் உண்டு. அவை மூத்திரப்பைக்கு அடியில் ஆசனக்குடலோடு சேர்ந்திருக்கின்றன. பீஜங்களிலிருந்து இந்திரியமானதைச் சுக்கிலாசயங்களுக்குக் கொண்டுபோகும் குழலுக்கு இந்திரிய நாணென்று (spermatic cord.) பெயர். சுக்கிலாசயங்களிலிருந்து இந்திரியத்தை நீர்த்தாரைக்குக் கொண்டுபோகுங் குழலுக்கு ஸ்கலிதக் குழலென்று பெயர்.


சுக்கிலக் குமிழ். (The Prostate Gland).

சுக்கிலக் குமிழ் உதித்த ஜவ்வுகளினாலுண்டாக்கப்பட்டு ஜலாசயத்தின் வாலையச் சுற்றிச் சேர்ந்திருக்கிறது. அடிக்கடி சம்போகஞ் செய்வதனாலும், சுக்கிலத்தை வீணில் செலவழிப்பதனாலும் இக்குமிழ் வீங்கி நீர்த்தாரையை யிருக்குவதால் நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு முதலிய பலவித வியாதிகள் உண்டாகும். இவைகளிலிருந்து வடியும் வெள்ளை நிறமான சீழைத்தான் பலவிதமான மேகரோகங்களென்று சொல்வார்கள். இதுவும் பலர்க்கு எச்சரிக்கையே.


சுக்கிலக் கோளங்கள். (The Cowper's Glands).

நீர்த்தாரைக்குக் கீழ்ப்பாகத்தில் இரண்டு சிறு கோளங்களிருக்கின்றன. காம உத்தீபன முண்டாகும் பொழுது இவைகளிலிருந்தும் சுக்கிலக்குமிழிலிருந்தும் பிசின்போன்ற ஓர்வித நீர்சாரம் வெளிப்படும்.

சுக்கிலம்.



மனுஷ சுக்கிலம்



பாம்பின் சுக்கிலம்

சுக்கிலத்தைப் பூதக்கண்ணாடியால் சோதித்துப் பார்த்தால்மூட்டை வடிவமானபருத்ததலையும் நீண்டவொல்களுமுள்ள நூற்றுக்கணக்கான கிருமிகள் லர்ந்த ஜலத்தில் தங்கள் வொல்களை யாட்டிக்கொண்டு எப்போதும் முன்னேக்கியே நீந்துவதாகத்தோன்றும். இக்கிருமிகள் சிசுவுற்பத்திக்குமுதற்காரணமாகும். இவைகள் ஸ்திரீயின் சுரோணிதத்திலுள்ளமுட்டைகளில் சேர்வதனால் தான் அம்முட்டைகளுக்குயிருண்டாகிக்கருத்தரிக்கும்.

தத்தினுடைய சிருஷ்டி விநோதமென்னே! இதில் நன்கு புலப்படும். இந்நரனைவிட வெகுதூரத்திலுள்ள அலைகளினாலும் சந்தானத்தைதனிட்டு வெளியே கொண்டுவந்தால் ஐந்து நிமிஷத்துக்குமேல் உயிரோடிருப்பதரிது. குளிர்ந்த அல்லது துவர்ப்பான வஸ்துக்கலந்த ஜலம் அலைகளின்மேல் பட்டால் உடனே மாண்டுபோகும்.

மனிதனுடைய சுத்த இரத்தத்தில் எழுபது அல்லது எண்பது தூளியின் அத்து வயிடங்களில் ஒர் தூளி சுக்கிலமாகிறது. ஆகையால் சுக்கிலத்தை விரயப்படுத்தும் சில மதியீனர்கள் தங்கள் தேகத்தைத் தெரிந்துகொள்ளாதவர்களாகிறார்கள். சுக்கிலம் நடுத்தரப் பிராயம் வரைக்கும் சரீரத்தைக் காப்பாற்றுகிறது. சுக்கிலத்தினால் கண்ணை ஸம்ரக்ஷணம்பண்ணுகிறது. ஆயுளை விருத்தியாக்குகிறது. சுக்கிலத்தினால் ஏற்படும் ஸ்திரீகளுக்கு முகத்தில் ஒளியும் ஸ்தனங்களில் பாலும் உண்டாகிறது. பால், தயிர், நெய், பாற்கோவா, பாலைக்கட்டி (Cheese), பாதிரசம், மஸ்தம், முட்டை, உளுந்து, கடலை, பாசிபயறு முதலிய தானியவகைகளில் வைத்தியசாஸ்திரப்படி வஸ்துக்களைச் சாப்பிடுவதால் தாது விர்த்தியாவதால் மன்மதசக்தியும் அதிகரிக்கும். இந்தியம் சம்பந்தமான விஷயங்களை இன்னும் விரிவாகச் சொல்லுகிறோம்.

அதற்குமுன்பு முக்குணங்களின் வஸ்துக்களில் இந்திரியம் தழைப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் பிடரிப்பக்கத்திலுள்ள மூளையோடி (Medulla Oblongata) சம்பந்தப்பட்டு மூளுவதாலும்பாதிய முள்ளந்தண்டை யுற்பத்தியாக்கும் தாயுடன் (Spinal-Cord) சுக்கிலத்திற்கும் அதிக சம்பந்தமிருப்பதாக விளங்கிறது.

ஆண் மலம், பெண் நிலம் முதலிய தோஷங்களை நிவர்த்திக்கும் பொருட்டும் தூய்மை சோமம் குளம்பிலிருந்து வரிணல் அல்லது மகரிஷல் முடிப்பார்களாம். பிள்ளைகளின் குளம்பிலிருந்து பிரம்மிலடிப்படுதலும், குறவானிகளைச் சுவதகிரலடிப்படுதலும் இந்திரியம் தன் நிலைகாவிட்டு வயதுக்கு வரையில் ஸ்கலிதமாகின்றன்றென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இதுகாரணம் பற்றி ஆண் தன்மையற்ற ஆடவர்க்கும் மலடான ஸ்திரீகளுக்கும் மூளைதண்டின் மேற்பாகத்தையும் குளம்பின் மேலபாகத்தையும் பிடித்துப் பிசைந்து விலக்குதால் ஜனனேந்திரியங்கள் உறுதியாகி இந்திரியம் அதிகரித்துப் புத்ர பாக்கியம் அடைவார்கள்.

இந்திரியத்திற்கும் மூளைக்கும் அதிக சம்பந்தமுண்டு. மூளையானது நினைவு நிற்கும் ஸ்தானமும் யோசனையை யுண்டுபண்ணுமிடமுமாயிருக்கிறது. சரீர முழுமைக்கும் மூலாதாரம் மூளையே. சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் நரம்புகளால் மூளையோடு சேர்க்கப்பட்டிருக்கின்றது. மூளையைப்போலவே இந்திரியமும் மூட்டையின் வெளிக்கருப்பு பிளான் முடை நிலவத்தையுடையதாகி,

க்குள்ளதும், சுத்தப்பொருந்தியதும், ஜீவசிலையுமாயிருக்கிறது. இந்திரியத்தை வெளியே விடுவதால் சரீரமுழுவதிலுமுள்ள ரசம் புகளின் சத்துக்குறைந்து ரோகியின் வலுவுங் குன்றிப்போகும். ஆதலால் வாலிபத்தில புத்தியீனத்தாலும், துஷ்ட சகவாசத்தினாலும், காமவிகாரத்திலமிழ்ந்து, இந்திரியத்தை வீணில் சேதப்படுத்துபவர்கள் நீரிழிவு, ஜயரோகம், காமாலை முதலிய நோய்களுக்காளாகி, பெலன் குன்றி, புத்தி மழுங்கி, ஞாபகச் சக்தியற்றுச் சித்தமுங் கெட்டு, பைத்தியக்காரரைப்போல் திரிவார்கள். பைத்தியக்காரனாவதுமுண்டு. "விந்து விட்டாயா நொந்து கெட்டாயா." என்னும் பழமொழி பொய்யன்று உண்மையே.

ஸ்திரீயின் ஜனனேந்திரியங்கள்.

ஸ்திரீயின் ஜனனேந்திரியங்கள்:— கடிதடம் (Monsveneris), நிதம்பம் அல்லது உகடு (labia Majora and Minora), பூசாம்பு (Clitoris), யோனித்துவாரம் (Orifice of the Vagina), கருப்பை (Uterus), சினைப்பை (Ovaries), சினைப்பாலத (Fallopian tubes) என பல பிரிவுகளையுடையன.



1. மலக்குடல். 2. கருப்பை, 3. மூத்திரப்பை. 4. பூசாம்பு. 5. யோனித்துவாரம். 4-க்கும் 5-க்கும் நடுவிலிருப்பது நீர்த்தாரை.

கடிதடம். (Mons veneris).

ஸ்திரீயின் அடிவயிற்றின் கீழ் மிருதுவாய் உரோமங்களுடனிருக்கும் மேடான பாகத்திற்குக் கடிதடமென்று பெயர். அதன் தோலுக்குக் கீழ் கொழுப்படர்ந்திருக்கும். கோயாளிகளுக்கும் சிருத்தாப்பியருக்கும் அந்தக் கொழுப்பு கரைந்து விடுவதால் எலும்பின்மேல் தோல் ஒட்டியிருப்பதாகத் தோன்றும்.

நிதம்பம் அல்லது உதடு. (Labia Majora and Minora)

கடிதடத்திற்குக் கீழ் சேவற் சூட்டுப்போன்ற இரு உதடுகள் மேலெழும்பி, மடிந்து, நீண்டு, பக்கத்திற்கொன்றாக யிருக்கும். அவற்றிற்கு நிதம்பம் அல்லது உதடு என்று பெயர். இவைகளிலிருந்து ஓர்வித நீர் சுரப்பதுண்டு, சம்போக சமயத்தில் இவற்றின நடுவிலுள்ள பூ நரம்பை இது வலுத்து ஆண்குறியோடு பொருந்தச் செய்வதால் ஸ்திரீக்கு இன்பமுண்டாகும். இதன் தசை நரம்புகள் தளர்ச்சியடையுமாயின் ஸ்திரீயின இன்பம் குறைவுபடுமென டாக்டர் றிரால் (Dr. Trall), என்பவர் சொல்லுகிறார்.

பூ நாம்பு. (Clitoris).

மேற்கூறிய இரு உதடுகளின் நடுவில் ஆண்குறிபோல் கூர்மையாய் மறைந்திருக்கும் ஓர் சிறிய உறுப்பிற்கு பூ நரம்பு என்று பெயர். அதை யோனிலிங்கம, மன்மத பீடம், காமதலஜம், மன்மதன் வெற்றிக்கொடை. மொக்குள், கிளி மூக்கு, மணி மூக்கு, சுனி மூனை, மன்மதன மண்டபம் எனப்பலரும் பலவிதமாய்ச்சொல்வார்கள். ஆண்குறியைப்போலவே இதிலும் நரம்புக் கூட்டங்கள் திரளாய்வந்து சேர்ந்திருப்பதால், ஸ்திரீக்கு மகா கூச்சதனையுண்டாக்கி இன்பம் கொடுக்கக்கூடிய உறுப்புகளில் விசேஷித்தது இதுவே. இதன் நுனிப்பாகம் திராக்ஷாபிப் பிரமாணம் உருண்டையாயிருக்கும். அதுவே ஸ்திரீயின இன்பநிலை.

மூத்திரத்தாரை (Urethra).


பூ நாம்பிற்குக் கீழும் யோனி வாசலுக்கு மேலுமாக விருக்கிற பள்ளத்தில் மூத்திரத்தாரை வந்து முடிகின்றது. இதன்வழியாகவே மூத்திரம் வெளியாகும்.

யோனித்துவாரம் (Orifice of the Vagina).

மேற்கூறிய மூத்திரத் துவாரத்திற்குக் கீழ் அல்குல் துவாரமுண்டு. அது ஏறக்குறைய நாலங்குல நீளமுள்ளதாய கருப்பையின் வாயளவு சென்று எட்டுகிறது.

இவ்வுறுப்பு முழுவதும் ரப்பர் மாதிரி நீண்டு சுருங்கத்தக்கதான நரம்புகளால் சுற்றப்பட்டிருப்பதால், பேறுகாலத்தில் சிசுவானது அதன் வழியாய்ச் செலலத்தக்கதாய் விரிந்து கொடுக்கும். மற்றக் காலங்களில் அவ்வுறுப்பு எப்பொழுதும் சுருங்கியிருக்கும். சாதாரணமாய் கன்னிபஸ்திரீகளில் மேற்சொன்ன உறுப்புக்கும் கருப்பைக்கும் நடுவில் வஸ்காபத்திகால் போன்ற ஓர் மெல்லிய ஜவ்வு (Hymen) இருக்கிறது. அதில் துவாரமுமுண்டு. அந்தத் துவாரத்தின் மூலமாய் ரூதகம் வெளிப்படும். அது சிலருக்கு உறுதியாயும், சிலருக்கு மெல்லிதாயும் சிலருக்கு இல்லாமலுமிருக்கும். அதில் துவாரமில்லாமல் கடினமாயிருக்கின், ரூதகம் அடைபட்டு மெத்த உபத்திரவம் உண்டாவதுடன், சம போகத்திற்கும், சிசுவுற்பத்திக்கும் இடையூறாகவுமிருக்கும். அந்த ஜவ்வு இருப்பதனால் ஓர் ஸ்திரீ கன்னிபழியாதவளென்றும், அது இல்லாமற்போவதால் அவள் கன்னியற்றவளென்றும் சிலர் சொல்லுவார்கள். அது தப்பிதம். ஏனெனில், சிலருக்கு அது இருக்கவேமாட்டாது சிலருக்கு இருந்தாலும் வியாதியினால் அழிந்துபோவதுமுண்டு. என்றாலும் அநேகருக்கு முதல முதலாகச் சேரும்போது இந்த ஜவ்வு கிழிந்து போவதால கொஞ்சம் நோவு உண்டாகும்.


கருப்பை. (Uterus).




கருப்பை.

கருப்பையானது, பெண்கள் கர்ப்பமில்லாத காலத்தில் மேற்பாகம் மூன்றங்குல நீளமும் இரண்டங்குல அகலமுமுள்ளது. ஆனல் அதன கீழ்ப்பாகமாகிய கருப்பையின கழுத்து அரையங்குலமாகவிருக்கும். மேற்பாகத்திற்கும் கீழ்ப்பாகத்திற்கும் நடுவில் உள்ள பாகத்திற்குத்தான் கருபபையென்று பெயர். அதுமார் ஒரு அங்குலத்தின் மையுள்ளது. கருப்பையின கீழ்ப்பாகமாகிய கழுத்து அல்குலின் உட்பாகத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. யோனியுள்ள மேற்பாகமோ அடிவயிற்றைச் சுற்றி

ள் கோப்பைபக்கும் மலக்குடலுக்கும் மத்தியில் இருக்கிறது. இக்கருப்பையில் இரண்டு அறைகளுண்டு. அவ்விரண்டறைகளும் ஓர் நாண்னியத் திவாரத்தால் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வறைகளை சுமார் பத்தினத்தளவு ஜலத்திற்கு அதிகம் தங்கக் கூடாத சிறியவைகள். விந்துவைவிட்டு கர்ப்பத்தை, கர்ப்பவயுண்டாக்கிப் பருவப்படுத்தித் தக்ககாலத்தில் வெளிப்படுத்துவதே கருப்பையின் பிரயோசனமாகும்.



கருப்பையும் சினைப்பையும்.




சினைப்பையிலிருந்து கர்ப்பகருவாகிய முட்டை குழாயினை வழியாய்ச் சினைப்பாதைக்குள்சென்று அங்கிருந்து கருப்பைக்குள் சேரும் வகை.

சினைப்பைகள். (Ovaries).

ஆண்பிள்ளைகளுக்குச் சுக்கிலம் உற்பத்தியாகும் ஸ்தானமாகிய பீஜம் இருக்குமாப்போல், ஸ்திரீகளுக்கும் சுரோணிதம் உற்பத்தியாகும் இரண்டு சினைப்பைகள் கருப்பையின் இருபக்கங்களிலும் தசைகளினால் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சுமார் ஒன்றரை அங்குல நீளமும், முக்கால் அங்குல அகலமும்,

அவை அங்குலத்தடிப்புமுள்ள மிகவுங்நுங்கிய பைகள். கருப்பையினிருந்து சினைப்பாதைகள் (Fallopian Tubes) என்னும் இரண்டு குழாய்கள் சினைப்பையருகுக்குச் சமீபித்தில் குஞ்சம்போல் விரிந்து அந்தமாய்ச் சினைபோலவே நுண் நரம்பினால் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சினைப்பையினிருந்து ஓர் சினை முற்றி வெளிப் புறப்படுஞ் சமயத்தில் இக்குழாய்களை யுடனே அதைப் பிடித்துக் கருப்பையில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. கருப்பையின் மறுகூ றுடைய இந்திரியமாகிய கர்ப்பாறும், ஸ்திரீயின் இந்திரியமாகிய சுரோணிதமும் ஒன்று சேர்ந்து கருத்தரிக்கிறது. சினைப்பையினி ருந்து சுரோணிதம் உற்பத்தியாகிச் சினைபோதாதையின மூலமாய்க் கருப்பைக்குட் செல்லுகின்றது.

சுரோணிதம்.



Graafian follicles.

சுரோணிதக் குமிழ்முதிர்ந்து வெடித்துச்சுரோணிதத்தையும் முட்டையையும் வெளியாக்குவது.

சன்னல் பின்னலான ஜவ்வாலினைக்கப்பட்ட ஒவ்வொரு சினைப்பையினுமுள்ள நுண்ணிய பொன்ற 50,000 சினை அம்சங்கள் காணப்படும். அவற்றிற்குச் சுரோணிதக்குமிழ்கள் (Ovisacs, or Graafian Vesicles) என்று பெயர். அவற்றில் சுமார் பதினாறுதல் முப்பதுவரை நன்றாய் முதிர்ந்து பக்குவமாகி ஜலப்பை போல காணப்படும். ஸ்திரீகளுக்கு இருபத்தைடு வயதுக்கொருதடவைச்சுரோணிதக் குமிழ் பெருத்து முற்றிவெடிப்பதனால் அதனுள்ளிருந்தும் கருவுமை சுரோணித நீரும் சினைபோதாதையில குஞ்சுமுனையின் வழியாய் இறங்கிக் கருக்குழியில் விழுந்து அங்குள்ள மாதாந்தரு துஸ்ரீலாடுகலத்து அல்குல் வழியாய் வெளியாகிறதும். சினைப்போதாதையின தவாரங்கள் மகச்சன்னமாயிருப்பதால் ஸ்திரீ கருக்கு ஒரேதடவையில் புருஷருக்கு விந்து ஸ்கலிதமாவதும்போல் ஏராளமாய் ஸ்கலிதமாகாமல் கொஞ்சங் கொஞ்சமாய் இறங்கும். இக்காரணத்தினால்தான் ஒரேசமயத்தில் அநேகந்தடவை சமீபங் கஞ் செய்தபோதிலும் புருஷரைப்போல் ஸ்திரீகள் சோர்வடைகிறதில்லை. மாதாந்தரு துகுகாலங்களில் தான் ஸ்திரீகளுக்கதிகமாய்ச் சம்போகத்தில் பிரீதியுண்டு. இக்காலங்களில்தான் அவர்கள் கருத்தரிக்குஞ் சமயம். ஸ்திரீயினுடைய சுகத்திற்கும் அவள் சாப்பிடும் ஆகாரத்திற்கும் ஏற்றபடி முட்டை நல்ல சக்தியும் சரியான பக்குவமுமுள்ளதாகும்.

மாதவிடாய்.

ஸ்திரீகளுடைய தேக சௌக்கியத்தைத் தெரிவிக்கும் முக்கிய அடையாளம் அவர்களின் மாதாந்தரு துதான். மாதவிடாய் ரோஜா புஷ்பம் போன்ற நிறமுடையதாயும், மாதமொருதடவை கிரமந்தவறாமலும் வந்தால் ஸ்திரீகளின் சரீர ஆரோக்கியத்தையும் அவர்களின் ஜனனேந்திரிய உறுப்புகளின் சௌக்கிய ஸ்திதியை யுங் காண்பிக்கும். உதிரம் மஞ்சள் நிறமாய் அல்லது கறுப்பாய் அல்லது உறைந்திருந்தால் அல்லது கிரமந்தப்பிவந்தால், அந்த ஸ்திரீயின் ஜனனேந்திரிய உறுப்புகள் நோய்கொண்டிருக்கின்ற னவென்றும் சரீரசௌக்கியமில்லையென்றுந் தெரிந்துகொள்ளலா ம். மாதவிடாய் தோன்றுவதற்கு முன்னும், அது சுத்தமாயும் நின்றுவிட்டபின்னும் புத்திரோற்பத்தியாகாது.

பூர்வீக யூதர்களும் இந்துக்களும் மாதவிடாயான து சரீரத் திலுள்ள சகலவிதமான அசுசியையும் தீட்டையும் வெளிப்பாக்கிச் சுத்தப்படுத்துகிறதென்று மாதவிடாயைப்பற்றி விபரீத எண்ணங் கொண்டிருந்த படியினால் ஸ்திரீயைத் தீட்டானவளென்று விட்டு க்கு விலக்கமாக்கி வைப்பது வழக்கம். ஆனால் தற்கால ஆயுள் வேத பாஸ்கர பண்டிதர்கள் சொல்வதிபாதெனில்:—சூதக உதிரம் கருப்பையிலிருந்து வருகிறது. மாசத்துக்கொருமுறை கருப்பை யானது தாமுகமேல் தடித்ததைச் சிசு உற்பத்திக்குத்தன் மை ஆயத்தமாக்கிக் கொள்ளுகிறது. அச்சமயத்தில் முதிர்ந்த சினைகளில் ஒன்று, சுக்கிலக்கருமி உட்சேல்லுவதால் கருவாகி அங்ஙனம் வரப்பெறின அதைக் கருப்பையானது உடனே பிடித் து வளரச்செய்கிறது. அவ்விதம் கருவான சினை வரத்தவறினால் கருப்பையின் தடிப்புக்களைந்து இரத்தத்தோடு கலந்து வெளியா கி விடுவதால் சிசுவின் வீடு மாசுநீர்தோறும் புதுப்பிக்கப்படுகிறது.

மாதாந்தரு துது வெளியானவுடன கருப்பை திரும்பவும் ஆய த்தமாகி தன்னுடைய விருந்தாளிக்காகக காத்திருக்கிறது. இவ் விதமாய்க் காலம் வருமட்டும் அநேக வருஷங்களாய்க் காத்திரு ந் து கருப்பையானது சிசு உற்பத்திக்காகத் தன்னை மாதந்தோறும் சுத்திசெய்து கொள்வதே மாதவிடாயென்றும் சொல்லப்படுகிறது. அது கிரமமாய் இருபத்தெட்டு நாளுக்கொருமுறை காணப்படும். ஆனல் சிலருக்கு அதற்கு முன்னதாகவும், வேறுசிலருக்கு அதற் குப் பின்னதாகவும் அவரவர்கள் தேக ஸ்திதிக்குத்தக்கபடி மீதா ன்றும். சிலருக்கு மூன்று நாள் மட்டும், வேறு சிலருக்கு ஐந்து, ஆறு அல்லது ஏழுதினங்கள் வரையுமிருக்கும். சாதாரணமாய சுமார் மூன்றுபடி வெளிப்படுவது கிரமம். சிலருக்கு அதிக மாகவும், வேறு சிலருக்குக் கொஞ்சமாகவும் காணும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் நோய்களில் பெரும்பான்மை சூதக பந்தத்தை ஒட்டினதாகவேயிருக்கும். சூதகம் சொல்லமாத்து வெளிப்படுவதால் ஸ்திரீயின் தேகத்திலுள்ள சிதோஷ்ணம் சமமடைந்து அவளுடைய காமமும் மட்டுப்படும்.

சூதகமானது சரீரத்திலுள்ள அசுத்த நீர் முதலியனவற்றையும், சரீரக்கழிவாகிய அசுத்த இரத்தத்தையும் மாதந்தோறும் ஒழுங்காய் வெளிப்படுத்துகிறது என்பது இந்துக்களின் கொள்கை. அது சரியாயிருக்குமாயின், ஸ்திரீயானவள் கர்ப்பவதியாயிருக்கும்பொழுதும், பிள்ளைக்குப் பால் கொடுக்கும் பொழுதும் அவ்விதமான அசுத்தங்களெல்லாம் எவ்விதமாய் வெளியாகின்றன?

கருப்பையை மாதந்தோறும் சுத்தஞ்செய்து சிசுவுற்பத்திக்கு ஆயத்தம் பண்ணுவதும், கருதரித்தவுடனே அதை வளர்ப்பதும், பிரசவித்தவுடன் பாலாகமாறிச் சிசுவைக் காப்பாற்றுவதுமே சூதகத்தினது தொழில் என அற்புதாகந்த மூர்த்தியால் அமைக்கப்பட்டிருக்கிறதெனபது ஆங்கிலேய டாக்டர்களின் அபிப்பிராயம். மாதாந்தரும் வெளியாகுங்காலத்தில் சிசுப்பிறப்பினிமித்தம் சிசுற்பத்திக்காகத் தாம்செய்ய வேண்டிய கடமைகளைச்செய்ய ஆரம்பித்துக் கிரமந்தவறாமல் மாசத்துக் கொருமுறை ஒவ்வொரு முட்டையைப் பக்குவப்படுத்தி வெளியாக்குகின்றன.

ஏறக்குறைய அறுபது வருஷங்களுக்குமுன், மாதவிடாய்காலத்திலேய அண்டமும் பக்குவமாகி வெளியாகிறதென்று எண்ணப்பட்டது. ஆனால் முட்டை வெளியாவதற்கும் மாதவிடாய்க்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும் அநேக சமயங்களில் அவைகள் வேறுகாலத்தில் உண்டாகலாமென்றும் இப்பொழுது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. வருஷத்தில் சிலகாலங்களிலே மட்டும் துணைசேர்க்கும் மான, மாடு, முதலிய பிராணிகளுக்கு அடிக்கடி கருப்பையைப் புதுப்பிக்க அவசியமில்லாதிருப்பதால் அவைகளுக்கு மாதருது தோன்றுகிறதில்லை. ஆனால் பெண் ஜாதிக்கு வருஷத்திற்கு ஒரு முறைமட்டும் சினையாணது முதிர்ந்து மதம்பொழியும் அக்காலத்தில மாத்திரம் ஆண்மிருகத்தைத் தன்னிடஞ் சேரவிடும்.

ருதுகாலம்.

குழந்தையானது பிறக்கும் பொழுதே அதை ஆணெ பெண்ணெவென்று குறிபபிடுவதும, சிருஷ்டித் தொழிலுக் காதாரமுமான ஜனனேந்திரியங்களினுடன் பிறக்கிறது. ஆனால் பன்னிரண்டு வயதாகுமட்டும் அவைகள் தமதொழிலை நிறைவேற்றத்தக்க நிலைமைக்கு வருகிறதில்லை. இத்தாமதத்திற்குக் காரணங்கள்

அனர்த்தம் உள. முக்கலானது, ஜனனேந்திரியங்களை உறுதியாக்க ஏராளமான சக்தி வேண்டும். அந்தச் சக்து சேர்வதற்கு ஏராளமான பலமிய ஆகாரம் உட்கொண்டு அது ஜீரணிக்க வேண்டும். அதலால் ஜீரணக்கருவிகள் பலமடைந்து ஜீரண சக்தி னித்தியாகும் வரையில் ஜனனேந்திரியங்கள் விர்த்தியடைகிற தில்லை.

இன்னுமொரு காரணம் யாதெனில்:- ஜனனேந்திரியங்கள் பக்குவமானவுடன் அசுதியாயிருக்காமல் தம்தொழிலை ஆரம்பிக்க ஆசையுண்டாகி அதற்குரிய சமயத்திற்காக ஆவலுடன் காத்திருக் கின்றன. இக்காலத்தில் வாலிபர் உடங்காக் குதிரைகள் போல் தாம் செய்வதை இன்னதென்றறிர், அதனாலுண்டாகும் பயனின்ன தென்று மறியாமல் பட்டிமாடுபோல் கெட்டகேவதற்கு இடமுண் டு. எனெனில் சுன்னத்தானடங்கித் தன் சரீரத்தைக் கட்டியா ள்வதற்குப் போதுமான புத்தறிவர், புத்தியுர், ஞானமுர், அனுபோகமும், மனச்சாகூியின் வினையும் அவசியம் தேவை. இத்தன்மைகள் பன்னிரண்டு வயதுக்குமேல்தான் சிறிது சிறிதாக விர்த்தியாகும்.

மூன்றாவது காரணம் யாதெனில்:- இந்நீரிய போராட்டத் தில் ஒருவன் ஜெயகெப்பிர வீரனாய் வெளியேற வேண்டுமெனில் குறைந்தது இருபத்தைந்து வருடமாவது கல்வி கேள்விகளின் விர்த்தியம் பயிற்சியும் வேண்டியர். அதற்கு முன்னதாக சிறு பிரா யத்திலேயே ஜனனேந்திரியங்களின் விர்த்தியால் குழந்தைகளோ பெற்றுக் குடும்பப் பாரத்தைத் தலைமேலேற்றிக் கொள்வார்களா யின், அக்குடும்பத்தைத் சாங்கவும், அதற்காக உழைக்கவும், போதுமான சக்தி யில்லாமல் சீக்கிரம் மடிந்து போவார்கள். மேலும், பலவீனத்திற் பிறந்த பலவீனரான எலிக்குஞ்சுகள் போன்ற வாளமான சிசுக்கள் உலகத்தை நிரப்பிப் பூலோகமே விர்த்தி யடையாது கெட்டுப் போவதற்கிடமாகும்.

ஆகலால் அண்ட கோடி சகல சராட்டையில்லாப் பரப்பிரா லாட்டுகின்றவரும், தற்காரண புவனபோகங்களிலும் பிரகாசித்து சூக்கபௌதிக சராசரங்களில் எல்லாருக்குள் எண்ணெணையப்போல் றை எங்கும் நிறைந்து நிற்கும் சர்வவியாபக லக்ஷணங் கொண்ட ருமான இறைவரது எற்பாட்டினால் இளம்பிராயத்தில் படிப்ப டைய சகல உறப்புக்களும் காலுக்கு நாள் பலமும் உறதியும் டைந்து விர்த்தியாகி வருகின்றன. அவற்றோடு ஜனனேந்திரி களும் விர்த்தியாகிக் கொண்டவந்து பன்னிரண்டு வயதுக்குமேல்

தம் தொழிலைச் செய்யும் பக்குவ நிலைமைக்கு வந்தவுடன், சரீர முழுவதிலும் ஓர்வித மாறுதல் உண்டாகிறது. பெண்களிடத்தில் அம்மாறுதல் அதிகப் பிரகாசமாய்த் தோன்றுவதால், பெண்ருது வாகி விட்டாள் அல்லது புஷ்பவதியாகி விட்டாளென்று சொல் வார்கள். ருதுகாலம் சீதள தேசங்களில் அதிகவயசிலும், உஷ்ண தேசங்களில் குறைந்தவயசிலும் சம்பவிப்பதால் உஷ்ண தேசத்திலுள்ளவர்களிடச் சீதள தேசத்திலுள்ளவர்கள் ஆயுள் விர்த்தியுடையவர்களாய் இருக்கிறார்கள். சாப்பாட்டிற்கும், சௌகரியத்துக்கும், அந்தஸ்துக்கும், வேலைக்கும், தேசத்தின் உஷ்ணத்திற் நேர் தக்கதாக நமது நாட்டுப் பெண்கள் பத்து வயது முதல் பதி னேழு வயது வரை ருதுவாகிறார்கள். ஸ்நானகளும், கஷ்டவேலை செய்பவர்களும், சரீரநிடமுள்ளவர்களும் அதிக நாட்களென்ற ருதுவாகிறார்கள். நாடகம், கூத்து, நகரவாசம் முதலிய கிளர்ச்சி யைக் கொடுக்கக்கூடிய விஷயங்களால் சீக்கிரம் ருதுவாவார்கள். எவ்வளவு சீக்கிரம் ருதுவாகிறார்களோ அவ்வளவுக்குக் கெடுதியே யன்றி நன்மையில்லை. ஆதலால் சிறுவர்களைக் கூத்து, நாடகசாலை, பயாஸ்கோப் முதலிய இடங்களுக்குப் போகவிடாமல் தடுப்பதுட ன், சரீரத்தைச் சீக்கிரம் புஷ்டியாக்கும் நிறைச்சி, முட்டை முத லிய தாதுபுஷ்டியை உண்டாக்கக்கூடிய வஸ்துக்களையும் உஷ்ண மான ஆகாரங்களையும் பட்டுப் போகாமல், சரீரத்துக்கும் மனதுக்கு ம் போதுமான உழைப்பைக் கொடுக்கக்கூடிய வாசிப்பு முதலிய வேலையிலும் விளையாட்டிலும் அப்பியாசிக்க வேண்டும்.



ஆணின் ருதுகாலம்.

பிராயமாகுமட்டும் ஆண் பெண் களின் நடவடிக்கைகளில் யாதொரு விசித்தியாசமும் தெரியாது. ஆனால் வயதானவுடன் ஆண்கள் சௌரிய தைரியவீரிய சம்பன்னராவதுடன், சரீர காஷ்டசுமைடைந்து, மார்பகன்று, புயபலமுடையவர்களாகிறார்கள். தலையிர் தடித்துச் சரீரமெல்லாங் கறுப்பு ரோமந் தோன்றும். முகத்தில் மீசையரும்பும் இரகஸ்ய ஸ்தானத்திலும் அக்குளிலும் ரோமமுந்தோன்றும். தொண்டையிலிருந்து முடிச்சு (Adam's Apple) தோன்றி கீச்

சுக்குரல் மாறிப் புருஷசத்த மூண்டாகும். இவ்வித மாறுதல் களுக்குக் காரணம் யாதெனில்:- புருஷத்தன்மையை விளக்குவ தும், சிருஷ்டிக்கிதாரிலுக் காதாரமான தும், ஜீவசத்தினமுமான சுக்கிலம் பீஜப்பைகளில் சுரப்பதேயாம். இப்பருவந்தான் அவர் களுக்குச் சோதனைப் பருவமாகும்.

இக்காலத்தில் பலமும், தேஜசும், ஊக்கமும் அதிகரிப்பதா ல், ஆண்களுக்கு மற்றவர் செய்யும் அநியாயம், தப்பிதம், குரூரச் செயல் முதலியவற்றைக் காணும்போது மகா உக்கிர கோபமுண் டாவதுடன், ஏளனசொல்லையும், பலவீனரையும், நோயாளிகளையுங் காப்பாற்றி அவர்களுக்குதவி செய்ய ஆவலுமுண்டாகும். இப் பருவத்தைப்பற்றி முதற் புஸ்தகத்தில் கீயாச்சீயாப் பருவத்தின் கீழ் சவிஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறோம்.

இக்காலத்தில் தன் சரீரத்தின் ஆசாபாசங்களை யடக்கியாள் கூடியவன் மட்டுமே கல்வியிலும் பலத்திலும் கீர்த்தியடைக்கு பிற்காலத்தில் கீர்த்திமானாவான். தன் சரீரத்தை யடக்கக்கூடிய பலசாலிதானே என்ன செய்வதென்றறியாமல் பிதற்றப் பிடித்த வன்போல் திரிவான். புதிய ஆசையும் புதிய எண்ணங்களும் புதிய விரும்பங்களும் முண்டாகிக் கன்னை யடக்க முடியாமலும், பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குட்படாமலும் தன் அற்பக்காரணங்களை என்னிட்டும் பள்ளிக்கூடத்தை விட்ட லும் வீட்டை விட்டேனும் ஓடிப்போய் விடுவான். இச்சமயம் பெற்றோர் வெறுப்புடனாயினும் அதிகம் கோபிக்காமலும் அ திக தினக்காயங் கொடுக்காமலும் அன்பான வார்த்தைகளால் அப்பையனை யழைத்துத் தக்கசமயங்களில் அவன தது இஷ்டர்களில் கவ்விதமாகக் கெட்டுப்போனவர்களின் நடை கையையும் உதாரணமாக எடுத்துக்காட்டி, முன்னேறவேண்டுமெ ன்னும் ஆவலை அவனமனதில் உண்டாக்கவேண்டும். அப்படிச் செய்து வசப்படுத்தாவிடில் பட்டமாடுபோல் மகட்டலுறது போ வான். எனெனில், இப்பிராயத்தில் சுயாதீனத்தின்மேல் அதிக ப்பிரீதியும், தானேயே ஆகக் காரியங்களைச் செய்யவேண்டுமென் கிற அவாவும், மற்றவர்களால் செய்ய முடியாத அரியபெரியகா யங்களைச் செய்து கீர்த்திமானாக வேண்டுமென்கிற விருப்பமும், தன் ஜனத்தாரில் எவருக்கும் கிடைத்திராத ரூபலாவண்யம பொருந்திய ஓர் சுந்தரமாதைத் தனக்குப் பாரியாகப் பெற்றுக் கொள்ளவும் பொருட்டுச் செய்யவேண்டிய பகீரதப் பிரயத்தனங் களையெல்லாம் தன் உயிரை வெறுத்துத் தனக்குண்டாகும கவ் டாகவுங்களையெல்லாங் கவனியாமல் செய்யவேண்டுமென்கிற எண்ணமும் உதிக்கும். இக்காலத்தில் பெற்றோருங் குருமாரும் நல்வசனிப்பினாலும் திடமான நடத்தையினாலும் அவனைக்கவர்ப் பதித்துச் சரியான வழிகளில் நடத்தத் தவறினால் ஒருவர் கட்டுக்

அன்று மடங்காமல் வீட்டை விட்டு வெளியில் ஓடிக்கூட்டுப் போவானென்பது நிச்சயம். இதாய் கடைந்தெடுத்த, பேரிளம் பாலவர்களின் கடவுட்கைகளை யறிந்தவர் பிரபஞ்சமும், பராக்கிரமசாலிகளின் கற்புணர்ச்சியைச் சுட்டிக் காட்டுவதுமே அவள் சிருஷ்டிக்கப்பட்டாள்! சகலசாஸ்திரங்களும் கவனிப்பது மல்லால் உன்னத உலைமுப்பிலுள் ஆணுக்கு வந்த சக்தி பாரை வென்பது நிச்சயம். இக்காலத்தின் பிரதிபிம்பமுங் காலை மாலை ஆறுமுக பட்சம் அனைவரும் ஓதிப்பாடுங் கந்தர் ஷஷ்டி கவசம் செய்தவர்வென்பது. மற்றும் புனைவில், சிகரட், காப்பி, தேநீர், ஐகாக்கோ, மிட்டாய், மாம்சம் முதலியவற்றை உபயோகியாமலிருப்பது மகாசத்தமம். அழுக்கடை வெளியில் சஞ்சரித்துத் தேகாப்பியாசஞ்செய்து வருவதால் தனது சரீரத்தை அடக்கியாளுஞ் சக்தியுள்ளவளாம், "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்." நீய வழியில் நடந்தால் நிமையும், நல்ல வழியில் நடந்தால் நன்மையுமுண்டாகும்.

பெண்ணின் முதுகாலம்.

ஸ்திரீகள் புஷ்பவதிகளாகும் முன்னும், நாற்பது நாற்பத்தைந்து வயதில் மாதாந்தர முதுநின்றபின்னும் கருத்தரிக்க மாட்டார்கள். புஷ்பவதியாகிற மதனரூல சுரப்பையிலிருந்து சிவந்த உதிரம்போன்ற ஓர் திரவம் வெளிப்படுவதுதான். இந்தச் சூதக நீர் உதிரத்தைப்போல உறைந்து கட்டியாகுற்றில்லை. இந்த மாதாந்தர முது இருபத்தெட்டு நாளுக் மகாருமுறை வெளிப்படும். ஸ்திரீ புஷ்பவதியாகுந் சமயத்தில் அவள் சரீர முழுவதும் ஓர்வித மாறுதல் தோன்றும். அச்சமயம் ஏராளமான உதிரமும் சரம்புச் சக்தியும், ஜனனேந்திரியங்களுக்கு செல்வதால் அவயவித்தியாவதுடன் கை கால்கள் பருத்து உருண்டை வடிவமாகின்றன. முகத்தில் மலர்ந்த ரோஜா புஷ்பத்தைப் போன்ற தேஜஸ் உண்டாகிறது. ஸ்தனங்களிரண்டும் விம்மிப் பருக்கின்றன. இவ்வித மாறுதல்கள் சரீரத்தில் உண்டாகும்பொழுது மனதிலும் ஓர்வித மாறுதல் உண்டாக, சிறுபிள்



லோத் தண்ணையையில் விட்டு, நாணம், பயம், அச்சம், பயிர்ப்பு என்னும் ஸ்திரீகளுக்குரிய லக்ஷணங்கள் தோன்றுகின்றன. தனக்குண்டாயிருக்கும் மாறுதலுணர்வைப் பற்றி நன்றாய்த் தெரிந்திருப்பதால் ஆண்களைக் கண்டவுடன் ஓர்விதமான வெட்கத்தால் தலை கவிழ்ந்து நடப்பாள். மாதாந்தரு துவை அவரவர் சரீர கூறுகளுக்குத் தக்கபடி அதிகமாகவாவது குறைவாகவாவது இருக்கும். சிலருக்கு இரண்டு அல்லது மூன்று தினங்கள் வரையும், வேறு சிலருக்கு ஐந்து அல்லது ஆறு தினங்கள் வரையும் இருக்கும். மாதாந்தரு துவு வெளிப்படுவதற்கு முன் சில பெண்களுக்கு அதிக பலவீனமுண்டாகி மார்பில் சுருங்கச் சுருங்கென்று நீர்வுண்டாகும். பசியிராது. மற்றவர்களோடு பழகவாவது தன கிரமமான வேலையைச் செய்யவாவது மனமொராது தலைநோவும், இடுப்பு, தொடை முதலியவற்றில் ஓர்விதமான உளைச்சலு முண்டாகும். அஜீரணமும் உண்டாகலாம். இக்காலத்தில் மிகசாய் ஜாக்கிரதையாக சுத்த ஆகாரங் கொடுப்பதுடன், படிப்பு, சரீர உழைப்பு முதலியவைகளைக் கட்டாயம் நிறுத்தவேண்டும். புஷ்பவதியாகும் முதல் துவில் பெண் படுத்திருக்கவேண்டும். பிற்காலங்களிலுங்கூட வலியிருந்தாலாயின் படுத்திருப்பதே நலம். அஜாக்ரதையாயிருந்தால் அவள் ஜீவியகாலம் முழுதும் நோயாளியாகவேயிருப்பாள்.

எச்சரிப்பு :—மாதாந்தரு துகாலத்தில் எந்தமுகாந்தரத்தைக் முன்னிட்டேனும், எவ்வளவு பலசாலியாயும் சுகதேகியாயுமிருந்தபோதிலும், ஸ்நானி குளிர்ந்த ஜல ஸ்நானம் செயவேகூடாது. மேலும சாப்பிட்டு இரண்டரைமணி நேரமாகுமட்டும் ஸ்நானஞ் செயயக்கூடாது.

தூதகக்கட்டுண்டாவதற்குக் காரணங்கள்.

குளிர்ந்த ஜலத்தில் கடதல், உட்கார்ந்திருத்தல், ஸ்நானம் செய்தல், ஜலதாவம் பிடித்தல், மனதில் நன்றாக முதலியவற்றுலுண்டாகுஞ் சீதளதினால் மாதாந்தரு துவு டுறையும் அல்லது சிலபாகம மறிப—டு வெளிப்படாமல் நின்றுபோம் அடக்குடிக கர்ப்பம் கலைந்து போவதனாலும், வெள்ளை எனனப்பட்ட வியாதியினாலும, மிதமிஞ்சிய சுடுபோகத்தினாலும், கெட்ட ஆகாயதனைச் சுவாசிப்பதனாலும, மிகுந்த வீசனதத்தினாலும, திடீரென்று பயப்படுகிறதினாலும, சரியான சாப்பாடில்லாததினாலும, மிகுதியான மனஉழைப்பினாலும், மாதாந்தரு துவு சிலர்க்கு நின்றுபோவதுண்டு. அபபடி நின்றுபோனது வியாதியென் றெண்ணமல் சந்தோஷமாய்ந திரிவதுண்டு. அது தப்பிதம். ஆற்றலை முந்

னிய இடங்களில் வசிக்கும் சில பெண்கள் அறியாமையினால் மாதாந்த ருது கண்டவுடனே, அது அசுத்தமென்றெண்ணி அந்தத் தண்ணீரில் போய் உட்காருவதுண்டு. இது மகா தப்பிதம். இதனால் பின்னாளில் அநேக வித்தியாசமான நோய்கள் முண்டாகும். அக்காலத்தில் மாங்காளை முதலாய்க் குளிர்ந்த இலத்தில் உண்ணாதிருப்பதே மிக உத்தமம்.

ருதகாலத்தினால் சிலவுத்பத்தியாகுந் தலைபாரி நோய்களென்றிலிருந்தெழுந்து மிகுந்த உபத்திரவப்படுத்தும் உபாதைகளாகும் அவைபாவன :—கர்ப்பாசயத்தைச் சார்ந்த வியாதிகள், அழற்சி முதலிய பலரோகங்களும், மூளையைச் சார்ந்த நோய்களாகிய கிறுகிறுப்பு, மறதி, தலைவலி முற்றாகத்தலைவலி, காணாவலி, வாதசுரம் முதலியவைகளுந், நரம்பாலிகளைச் சார்ந்த வலிப்பு, இருமல், சுவாசகாசம், விக்கல் முதலியவைகளும்; இரணாவிலை, சுவல் முதலியவற்றைச் சார்ந்த நோய்களாகிய சூதீரணம், பிரமேகம், வாதபித்தம், குமட்டல், அதிதாகம், குன்மவலி முதலியவைகளுந், இளைப்பு ஜன்னி, ஜாலம், கழுத்துவலி, முகுது முள்ளந்தண்டுவலி, பிடரிவலி முதலிய பலரோகங்களுந் தாட்சென்சுச் செல்ல ஒவ்வொன்றாய்த் தோன்றி உபத்திரவப்படுத்தும். ஆதலால் ருதகாலத்தை ஏழுநாளென்று அபாண்டமாய் செய்யக்கூடாது.

ருதுவாகாத பூப்பிலிகள்.

சில பெண்கள் புஷ்டியான சரீரமுடையிருப்பதால், அவர்களுக்குப் பூப்பிலிகளென்று பெயர். இதற்குக் காரணம் சரீரமையாலானவிருத்தியாகியினால் யாதொரு காலத்திலும் ருதுவாகாதிருப்பதாம். இப்படிப்பட்ட ஸ்திரீகளுக்குச் சரீரத்தில் முகவுஸ் இராது. பசியின்மை, ஆயாசம், கைகால் ஜில்லிட்டிருத்தல் முதலிய குணங்களிருக்கும். இவர்களுக்கு இந்திரியமானது மிகுந்திருப்பதுடன், ஆணைமையில் விருத்தியிருப்பதால் ஆணைகளைக்கண்டால் ஓர்வித்தியாசமும் கலியாணத்தின்மேல் ஓர்வகைமுமில்லாமல் போயவிடும். இதனால் மாதவிகாலம் நில்லாதிருந்தால் சுகப்படுத்த முடியாது. ஆதலால்கூடிய சிக்கிரம் இவர்களுக்குச் சரீரபுஷ்டியும் இரத்தச் சுறுப்புமுண்டாகத்தக்க சிங்கவிரிய மாத்திரைகளை மகாபித்தியமாகக் கொடுத்து வருவதுடன், புஷ்டிணைத் தரத்தக்க பால, தயிர், மாம்சம், மச்சம் முதலிய ஆகாரங்களும் மகாபத்தியமாகவேணுமம். பிரதினமும் காலை, மாலையில் ஐந்தாறுமைல் தூரம் சுற்றவைத்த உப்புஜலத்தில் ஆசனஸ்நானஞ் செய்து வருவதுடன் சுத்த ஆகாயத்தையும் சுவாசித்து வரவேண்டுமம். பிரதினமும் ஓர் ஆள் அவர்கள் சரீரமுழுவதையும் அழுக்

கிப் பிடிப்பதுடன், கருப்பையிருக்கும் ஸ்தானத்தையும், மார்பையும், இடுப்பையும், தொடையையும் பிரசங்கு விடுவது அவசியம்.

12-ம் புஸ்தகத்தில் சொல்லியிருக்கும் கர்ப்பாசய சுருக்கியில் வேளைக்கு ஒரு தேக்கரண்டியளவு காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு வருவதுடன் சிங்கவீரிய மாத்திரைகளில் இரண்டை மத்தியான போஜனமான காலமணி பேரளத்திற்குப் பின் சாப்பிட்டு வர மேகபுஷ்டியும் இரத்தச்சுரப்பு முண்டாகி ருது வெளியாகும். ஆனால் இடுப்பிலுள்ள எலும்புகளிலுண்டான பீதங்களினால் ருதுவாகாதிருக்கும் பூப்பில் பலருக்கு எதனித சிகிச்சையும் பயன்படாது.

ருதுரோதம் தடைப்படல்.

(Amenorrhoea or Abece of Menses.)

மாதாந்தர ருது ஸ்திரீ கர்ப்பமாயிருக்கும்போதும் பிள்ளைக்குப் பால் கொடுக்கும்போதும் நின்றிருப்பது இயற்கை. சிலருக்கு இவ்விரு சமயங்களிலுங்கூட ருதுரோதம் வருவதுண்டு. கர்ப்பமாயிருக்கும்போது ருதுரோதம் வந்தால் அது மயானியினிருந்து மாத்திரமே வரும். ஏனெனில் அக்காலத்தில் கருப்பையின் வாய் அடைபட்டிருக்கும்.

சில ஸ்திரீகளுக்குக் கருப்பையிலுண்டான தோயினாலும், பல முகாந்தரங்களாலும், ருதுரோதம் வரவேண்டிய காலத்தில் வராமல் ருதுரோதம் வருவதற்குரிய குறிகளாகிய முகதலைவலி, தலைவலி, சோம்பல், சோர்பு, பசிமந்தம், இடுப்புச்சோவு, மூக்கடைபடி, முதலிய பல குணங்களிருந்தும் ருதுரோதம் வராமல் தடைப்படுவதுண்டு. அவர்கள் படுக்கைக்குப் போகுமுன் வெந்நீரை கணக்கிய 110-டிகிரி வரைச் சூடாவைத்துப் பாதஸ்நானத் தொட்டியில்விட்டு, இரண்டு தேக்கரண்டியளவு கடுகை யரைத்து அத்தண்ணீரில் கலக்கி, அதில் கணுக்கால் மறைபத்தக்கதாக இரு பாதங்களையும் வைத்துக்கொண்டு அரை மணிநேரம் பாதஸ்நானம் செய்யவேண்டும். வெந்நீர் குளிர்ந்துவிடாதபடிக்கும், குளிர்ந்த காற்றுக் காயில்படாதபடிக்கும் பாதத்தையும், பாதஸ்நானத் தொட்டியையுஞ் சுற்றி ஒரு பெரிய கம்பளியால் மூடவேண்டும்.

1. ஏனைநாதம் தேனையாயிருந்தால், ஸ்திரீயானவள் முதுகுவலி, தலைபெரிச்சல, அசதி, காலில் வியர்வை, ஜனனேந்திரிய

களில் நினைவு அல்லது ஞாபகசக்தி குறிகளுள்ளவாய் பிறந்தல் சில Sil.) என்னும் மருந்தில் பன்னிரண்டுமாத்திரை வீதம் சுளாஸ் தண்ணீரில் கலந்து இரவும் பகலும் கொடுத்து வரவேண்டும்.

2. சிலஸ்திரீகள் நடந்தாலல்லது களிர்பட்டதால் மாதாந்தர சூதுகோன்றல், பசியின்மை, குளிர்ச்சி கோன்றல், கொழுப்புப் பகார்க்தங்களின்மேல் வெறுப்பு, பற்பல இடங்களிலும் மாறி மாறி வலித்தல், வெளியிலுள்ள சத்த ஆகாயம் பட்டவுடன் சுகமாய்த் தோன்றுதல், ரோகினிய குறிகள் தோன்றுவதும் சிப்படிப்பட்டவர்களுக்கு பல்ஸ் (Pulse) என்ற மருந்தில் பன்னிரண்டு மாத்திரை வீதம் தண்ணீரில் கலந்து தினம் நான்கு முறை கொடுத்து வரவேண்டும்.

12-ம் பல்சதசுத்தில் சொல்லியிருக்கும் சூதகபந்த நிவாரணியை (Emmenagogue) மாதாந்தர சூதுகாலவுகற்கு மூன்று நாளைக்கு முன்னதாகவிரதிதினமாகிலாயும் வெள்ளாவரு மாத்திரை சாப்பிடவேண்டியது. சூதுகண்ட நாள்முதல் நாலு அல்லது ஐந்துநாளைக்கு வெள்ளாவரு தோத்திற்கு (2 or 3) பிள்ளை நள்ளி தம் எறன்ற வீதமாயும் சாப்பிட்டுவர பல காரணங்களினால் சூதகம்தள்ளாமல் தடைபட்டிருப்பதும், தோன்கப்பிறவாமலிருப்பதும் பல நோய்கள் நீங்கி, அற்ற தினங்களும் வயிற்றவலி, முதுகுவலி, இடுப்புவலி, அசதி, சோர்வு, சோர்வு, நரம்பிறப்பு, கண்ணெரிவு, தாகம், பசியடக்கம், கால்வீக்கம், ஜனனேந்திரியங்களின் தினவு, கைகாலெரிவு, தூர்ப்பலம், பாரமடைப்பு, இசிவு முதலியவற்றைச் சுகமாக்கும்.

குறிப்பு :— இம்மாத்திரைகளைச் சாப்பிடுவதால் மலசுத்தி தாராளமாயுண்டாகும். அதிகப்படின், மருந்தின் அளவைக் குறைத்துச் சாப்பிடவும்.

குத்தோடு கூடிய சூதகம்.
(Dysmenorrhoea or Painful Menstruation.)

ஜனனேந்திரியங்களின் அங்கக்குறைவு, ஜனனேந்திரியங்களிலுள்ள வியாதிகள், கருப்பையிடமாறி அல்லது அமைடபட்டிருத்தல், குளிர், அக்கிரமசுத்தியங்கள், பலத்தகேடு முதலிய காரணங்களில் ஏதாவதொன்றினால் குத்தோடு கூடிய சூதகமுண்டாகலாம். அந்தக்குத்து முதுகில் அல்லது தலையில் அல்லது மேலிருந்து கீழாகப் பலவிதமாயுண்டாகலாம். சூதகத்தோடு ஏதாவது

கட்டி வெளியேறலாம். சூதகம் தடைப்பட்டுக் கொஞ்சமாகவே னும். சில நாட்கள் விட்டு விட்டேனும், சில சமயங் கொஞ்சமாக வும் சிலசமயம் அதிகமாகவும் வந்துகொண்டேயிருந்து தொந்தரவு செய்யலாம்.

சிகிச்சை:

சூதகம் குத்தோடுகூடி வெளியேறும்பொழுஸ்திரீ தனக்கு வசதியான பிரகாரம் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கவேண்டும். தலைக் குத் தலையணை வைக்காமல் மற்றப் பாகங்களினிடத் தாழ்வாக வைத்துப் படுக்கவேண்டும், அதற்குப்பின் வலியிருக்கிற இடத் தில் கர்ப்பனியை நன்றாய்ச் சுடுகிற வெந்நீரில் தோய்த்துப் பிழிந்து விட்டு ஒற்றடங் கொடுக்கவேண்டும். அப்படிப் பிழிவது கஷ்டமா யிருக்குமானதால், பிரிதிரவங்கள் குளிர்ந்த ஜலத்தில் கையை நனைத்துக்கொண்டு அல்லது சாதில்லாத ஒருதுவாலைத் தண்ணீரில் கையில் பிழிந்துக்கொண்டு பிழியவேண்டும். நன்றாய்க் கடுகிற தேயிலை முதலிய உஷ்ணமான பானங்களைப் பருகுவதனாலும், சுடு கிற வெண்ணீரில் பாதஸ்நானஞ் செய்வதனாலும், கர்ப்பாசயப்பக்கத் தில் வெண்ணீர் ஒற்றடங் கொடுப்பதனாலும், வியர்வை இளம்பச் செய்யவேண்டும். வயிற்றுவலியோடு சேர்ந்த சூதகமிருந்தால் மதர்டிங்க்சர் ஆவ்வைபர்ன் ஓப் (Mother tincture of viburn Op.) என்ற ஔஷதத்தில் பத்துத்துளியை ஒரு மேஜைகரண்டி யளவு வெந்நீரில் கலந்து வலிநிற்குமட்டும் இரண்டுமணி நேரத்துக் கொருதட வை சாப்பிட்டு வரவேண்டும். இதனால் பிரசவ வேதனை தோன்றினால், அடுத்த சூதகங் காணுமட்டிலும் அளவைக் குறைத்துக் காலை மாலை ஐந்து துளி வெந்நீரில் கலந்து சாப்பிட்டு வரலாம்.

தலைவலியும் சோர்வுமுண்டாகிக் கண்ணெரிச்சல் மழுங்கி, சிறு நீர்பெருத்து, அடிக்கடி வலியுண்டாவதுடன், கருப்பையிலிருந்து உதிரக்கட்டியும்வெளியேறினால், மதர்டிங்க்சர் ஆவ்ஜில்ஸ் (Mother tincture of Gels) என்ற ஔஷதத்தில் 5 துளியை ஒருமேஜைக் கரண்டி வெந்நீரோடு கலந்து இரண்டுமணி நேரத்துக் கொருதட வை சாப்பிட்டு வரவேண்டும். இதனால் சுகமுண்டாயின், அடுத்த சூதகங் காணுமட்டிலும் அளவைக் குறைத்து, ஒரு மேஜைக் கரண்டி தண்ணீரில் இரண்டு துளி மட்டிங் கலந்து காலை மாலை சாப்பிட்டு வரலாம்.

கையினல் தொட்டால், அல்லது நடந்தால், அல்லது குளிர் பட்டால் வலியுண்டாகிச் சூதகம் விட்டு விட்டு வந்துகொண்

டிருந்து. கொக்குய்லஸ் (Cocculus) என்ற ஔஷதத்தில். பன்னிரண்டு மாத்திரை கலந்து இரண்டுமணி நேரத்துக் கொருமுறை ஒரு மேனைஜக்கரண்டியளவு கொடுக்கவேண்டும்.

குத்தோடு கூடிய சூதகத்திற்கு டாக்டர் பிளாக் என்பவரின் கைகண்ட ஔஷதம் யாதெனில்:—வாலன்றயில் டிங்க்சர் ஆவ் கொய்யாக்கம் (Volatile tincture of Guaiacum) என்ற ஔஷதத்தில் முப்பது முதல் ஐம்பது துளிவரை சர்க்கரையில் அல்லது பாலுடன் கண்ணீரில் கலந்து மிததினமும் மூன்றுதடவை சாப்பிட்டு வரவேண்டும். ஒருகாள்விட்டொருநாள் இரவில். அதிக மாய்ப் பேதியாகாமல் மலசுத்தியாகக்கூடிய சுகபேதி மாத்திரை சாப்பிட்டு வருவதுடன். வெளியிலுள்ள சுத்த ஆகாயக் கைக் கலாசித்து உலாவுதல் முதலிய தேகாப்பியாசஞ் செய்துவரவேண்டும் மேலும் லேசாய் நீராணாகத்தச்ச வெள்ளாட்டுப் பாலைக் குடித்து, ஒருநாள்விட்டொருநாள் சாகையில் வெந்நீரில் ஸ்நானஞ் செய்து, சந்தோஷமாய்ப் பேசுகிறவர்களோடு பேசியிருக்கவேண்டும்.

கொழுத்துப் புஷ்டியான தேகமுடைய சிலருக்குச் சரசுப் பக்கம் அதிகமாய் வியர்வை தோன்றி பாதங்கள் குளிர்ந்து தேகம் வெளிறி, சக்தியற்றிருப்பதால் சூதகந் தோன்றாதிருக்கலாம். இவர்களுக்குக் கால்சியம் கார்போனேட் (Calcium Carbonate) என்ற மருந்தைத் தண்ணீரில் கலந்து ஒரு மேனைசக் கரண்டியளவு தினம் ஒன்றுக்கு நாலுதடவை கொடுக்கச் சுகமாகும்.

புஷ்பவதியாகவேண்டிய சமயத்தில் சகலகுறிகளுந் தோன்றினபோதிலும் சூதகம் மட்டும் வராமல் தடைப்பட்டு. வயிறுவிம்மித் தெரியுமாயின் உடனே டாக்டருக்குத் தெரிவிக்கவேண்டும். அவர் மாத்திரம் ருதுவை வெளியாக்க வேண்டிய விதஞ் செய்யக்கூடும்.

சில சமயம் மாதாந்தர ருது திடீரென்று நின்று போகலாம். அப்பொழுது வெந்நீரில் ஆசனஸ்நானமாவது பாதஸ்நானமாவது செய்வதுடன், தேகத்தை உஷ்ணமான கப்பளியால் சுற்றிக்கொண்டு ஏதாவது சுடுகிற பானத்தைப் பருகுவதால் வியர்வை உண்டாகும்படி செய்யவேண்டும். அடிவயிறு, தொடை, கால், கைகளில் சுடுசெங்கல் அல்லது வெந்நீர்ப்பை முதலியவற்றால் வேது ஒற்றடங் கொடுக்கவேண்டும். இப்படிச் சூதகந் தடைப்படுவது வழக்கமாகிவிடின் அது நாக வருத்தங்களுக்கிடமாகுமாதலால், மாதாந்தர ருது வரவேண்டியதற்கு ஒரு வாரத்திற்கு முன்னமே மேற்சொன்னபடி வெந்நீரில் ஆசனஸ்நானஞ் செய்துவருவதுடன்,

பிரதினமும் குடலையும் கருப்பையையும் பிசைந்து (massage) விடவேண்டும்.

கோஷ்டம், குங்கிலியம், விலவேம்பு, பெருங்காயம், காட்டுச் சீரகம், சன்னலவங்கப்பட்டை இவை வகைக்குக் கால்பலம், அரிசி பாளம் அரைப்பலம், குங்குமப்பூ முக்கால்பலம், இவைகளை நன்றாய் அரைத்துப் பதினெட்டுப் பல நல்லெண்ணெயில் கலக்கிப் பத்து நாளைக்கு வெயிலில்வலக்கிக் கலக்கி வைத்துப்பின் அதோடு அரைப்படி சுத்த ஜலம்சேர்த்து நீர்வற்றக் காய்ச்சி வைத்துக்கொண்டு சரீரத்துக்குத் தக்கபடி இரண்டு அல்லது மூன்று தோலா வீதம் பாலில் கலந்து காலையில் மட்டுஞ் சாப்பிட்டு அதே எண்ணெயை அடிவயிற்றிலும் பூசிவரச் சர்வ சூதகக்கட்டும் விலகும். (யூனானி.)

நமது சூதகபந்த நிவாரணியை மாதாந்தர ருது காணுவதற்கு மூன்றுநாளைக்கு முன்னமே பிரதிதினமும் காலை, மத்தியானம், மாலை ஆகிய மூன்றுவேளையும் ஒவ்வொரு மாத்திரை சாப்பிடவேண்டும். ருது காண்பதற்கு முந்தின நாள் ஒவ்வொருநேரமும் இரண்டு மாத்திரை சாப்பிடவேண்டியது. ருது கண்ட நாள் முதல் நாலு அல்லது ஐந்துநாளைக்கு ஒவ்வொருநேரத்திற்கு மூன்று பில்லைகள் வீதம் மூன்றுவேளையும் சாப்பிடவேண்டியது. இம்மாத்திரைகளால் மலசுத்தி தாராளமாயுண்டாகும். அதிகப்படின் மருந்தின் அளவைக் குறைத்துச் சாப்பிடவும்.

இம்மருந்தினால் குணங்காணுவிடில் கர்ப்பாசயம் மாறி விழுந்திருக்கும். அல்லது சினைப்பாதை சிறிதாக யிருக்கும். இதை டாக்டர்கள் பரீக்ஷை செய்துச் சீர்ப்படுத்தக்கூடும்.

விகாரச் சூதகத் தோற்றம். (Vicarious Menstruation)

சில ஸ்திரீகளுக்குச் சூதகம் வெளிப்படுவதற்குரிய குறிகளெல்லாந் தோன்றினபோதிலும், சூதகந் தோன்றுகிறதில்லை. தோன்றினும் மிக அற்பமாய் மூக்கிலிருந்தாவது ஆசனத்தின் வழியாவது உதிரம் வெளிப்படும். சிலருக்கு எச்சில் உமிழும்போது இரத்தந் சேர்ந்து வரலாம். வேறு சிலர் இரத்தமாகவே வாந்தியெடுக்கலாம், மூக்கு, கண், காது, கை. கால், நரையீரல், வயிறு, மார்பு, தொப்புள் முதலிய இடங்களிலிருந்தேனும், புண், கட்டிகளிலிருந்தேனும் உதிரம் வெளியேறுவதுண்டு.

சிகிச்சை:-இவ்வியாதி எளிதில் சுகமாகக் கூடியதல்ல. அநேக வருஷங்களுக்கு இவ்வியாதியாயிருந்து மரணத்தை உண்டுபண்ணலாம். இதற்கும் முன்சொன்னபடியே வெந்நீரில் ஆசனஸ்நானம்

அல்லது பாதஸ்நானஞ் செய்வதுடன், வேது ஒற்றடமுங்கொடுத்து வியர்வை யுண்டாகுப்படி செய்து, புஷ்டியை உண்டாக்கக்கூடிய ஆகாரங்களைக் கொடுத்துவர வேண்டும். உதிரம் வெளியாகும் இடங்களில் சொஸ்தமாக்கக்கூடிய ஔஷதங்களை உபயோகித்து உதிரத்தை நிறுத்தவேண்டும்.

●

சூதகங்காணும் காலத்தில் பிரை (Bry) என்னும் ஔஷதத்தை ஒரு தேக்கரண்டித் தண்ணீரில் கலந்து இரண்டுமணி நேரத்துக் கொருதடவை கொடுத்துவர வேண்டும். சூதகங் காணுத காலத்திலும் மேற்படி ஔஷதத்தை வேளைக்கு ஒரு மேஜைக் கரண்டி யளவு பிரதினமும் இருவேளை சாப்பிடவேண்டும்.

சூதகப் பெரும்பாடு.

(Menorrhagia or Profuse Flow of Menses.)

ஓர் காலத்தில் வராளமாய்ச் சூதகம் வெளிப்படுவதற்கும், ஓரிதரம் வந்த சூதகம் நெடுங்காலம் நீடித்திருப்பதற்கும், வர வேண்டிய காலத்திற்கு முன்னமே வருவதற்கும், சூதகப் பெரும் பாடென்று பெயர்.

காரணம். கருப்பையில் விசித்திர தசைகள் வளர்வதனாலும், புத்தியீனமான பலவித அக்கிரமக் கிரித்தியங்கள் நடப்பிப்பதனால் கருப்பையிலுண்டாகும் வீக்கத்தினாலும, உதிரம் கெட்டுப்போயிருப்பதனாலும், வாதசரீரமுள்ள ஸ்திரீகளுக்கு கருப்பையின் நரம்பிலுள்ள இரத்தநாளங்கள் பலவகுன்றிப்போயிருப்பதால் கருப்பையில இரத்தங் கட்டிப்போவதனாலும், இவ்விதப பெரும் பாடுண்டாகும. சரீரத்திலுள்ள ஜீவாதாரமாகிய உதிரம் வெளிப் பட்டுவிடுவதால உயிருக்கு ஹானியாகுமாதலால இவ்வித நோயை அசட்டை பண்ணல கூடாயம் நமது சிங்கவீரிய மாத்திரையில் வேளைக்கு இரண்டு வீதம மூன்றுவேளையும் போஜனத்திற்குமேல சாப்பிட்டு நாம்புகளுக்கு முறுக்கேற்றி சுகத்தைக் காப்பாற்ற வேண்டும்.

சிகிச்சை:—நோயாளி எப்பொழுதும் இடுப்பின்கீழ் ஒரு தலையணையை வைத்துத் தலை பளளத்திலும் இடுப்பு உயரத்திலும் இருக்கத்தக்கதாக ஆறுதலாய் நிமிர்ந்து படுத்திருக்கவேண்டும். நடமாடுதலும், உட்காருதலுங்கொண்டிருத்தலுங் கூடாது. எழுந்தாலும் உட்கார்ந்தாலும் திடீரென்று மூர்ச்சை போயவிடும். உஷ்ணத்தைத் தணிப்பதற்காக வயிற்றின்மேலும், இடுப்பின்மேலும்

பனிக்கட்டி ஒற்றடங் கொடுக்கவேண்டும். பாதங்களை வெள்ளீரில் வைக்கவேண்டும். அல்லது காடி (Vinegar) யைத் தண்ணீரில் கலந்து அதில் துணியை நனைத்து அடியடியிற்றில் கட்டவேண்டும்.

முதுகில் வலியிருந்தால் நமது மகா சஞ்சீவித் தைல (Magnetic Balm) தைதத் தேய்த்து முன்சொன்னபடி வெந்நீரில் நனைத்துப் பிழிந்த கம்பளி ஒற்றடங் கொடுக்கவேண்டும். உதிரப் பெருக்கினால் ஸ்திரீ பெலவீனமடைந்து முகம் வெளிறி, ஜுரசமனடைவாளாயின், சைனா (China) என்கிற மருந்தில் பன்னிரண்டு மாத்திரை அனைக்ளாஸ் சுத்த ஜலத்தில் போட்டு வைத்துக்கொண்டு இரண்டுமணிநேரத்திற் கொருதடவை ஒரு மேஜைக்கரண்டியளவு சாப்பிடவேண்டும். வெளியேறின ரத்தம் சுத்த சுவப்பு நிறமாயிருந்து ஸ்திரீக்குக் குமட்டலுண்டானால் மேற்சொன்ன மருந்துக்குப் பதிலாக இப்பிககாகியுன்கா (Ipecacuanha) என்ற மருந்தை முன்சொன்ன பிரகாரம் உபயோகிக்கலாம்.

மாதாந்த ருது ஏராளமாயும் நெடுங்காலத்திற்கும் வந்து கொண்டிருப்பதனால் ஸ்திரீ வெளிறி, பெலவீனமும் மேசாம்பலுமடைந்து, சரீரம் விம்மிக கொழுத்துக் கால்களில் குளிர்ச்சிகாணுமாயின், ருதுகாலங்களுக் கிடையிலுள்ள நாட்களில் கால்க் கார்ப் (Calc Carb.) என்ற ஔஷதத்தில் பன்னிரண்டு மாத்திரை அனைக்ளாஸ் ஜலத்தில் போட்டு, காலை மாலை ஒரு மேஜைக்கரண்டியளவு சில மாதங்களாகச் சாப்பிட்டு வரவேண்டும். உஷ்ணமுண்டாக்கும் பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது.

இது அபாயத்தை உண்டுபண்ணக்கூடிய வியாதியாதலால் அநுபவமுள்ள டாக்டர்களுக்கு உடனே தெரிவித்தால் அவர்கள் காரணத்தை யறிந்து தகுந்த சிகிச்சை செயவார்கள். மாதாந்த ருது நின்று மறுபடியும் வருவதற்கிடையில் ஸ்திரீயின் மர்ம ஸ்தானத்தில் படிக்காரஜலத்தைப் பீச்சாங்குழலால் உபயோகிக்கவேண்டும். வேளா வேளைகளில் சாப்பிட்டு சுத்த ஆகாயத்தைச் சுவாசித்து வரவேண்டும். இச்சாபத்தியத்துடன் சமுத்திரஸ்நானஞ் செய்வது நல்லது. அதிகமாய்த் தண்ணீர் குடிக்கக்கூடாது.

ஏராளமான உதிரப் பெருக்கினால், கால்கள் ஜிலலிட்டுப் போனால் நமது மகா சஞ்சீவித் தைலம், அல்லது கற்பூரத் திராவகம், அல்லது டர்பனடயின (Turpentine) முதலியவற்றில் ஏதாவதொன்றை உள்ளங்கால், உள்ளங்கைகளில் தேயத்துச் சூடுண்டாகச் செய்து, பின்பு சாம்பல், உப்பு, தவிடு, அல்லது மணல், முதலியவற்றில் எதையாவது வறுத்து ஒற்றடம் கொடுத்துவிடவும் வைத்தியருக்கு தெரிவிக்கவேண்டும்.

• உதிரப்பெருக்கு நிற்கிறவரை வேளைக்கு ஒரு தேயிலைக் கரண்டி வீதம் சமனசிங்கமார்க்கு சூதகப்பெரும்பாட்டு நிவாரணி (Menorol) யை தண்ணீரில் கலந்து மூன்றுமணி நேரத்திற்கொரு தடவை சாப்பிட்டு வரவேண்டும்.

ஜாதிக்காயை வறுத்துத் தூள்செய்து அதில் இரண்டு உளுந்து எடை எடுத்து 10 உளுந்து எடை படிக்காரத்தூளும் வெள்ளைச் சர்க்கரையும் கலந்து ஒரு ஔின் கிளாஸ் ஜலத்திலே கரைத்து ஒருமணி நேரத்திற் கொருதடவையாகக் கொடுத்து மிக்க பலன் கண்டதாக ஒரு கைதேர்ந்த வைத்தியர் சொல்லுகிறார்.

பருத்தியிலைச் சாற்றில் அரைச் சிரங்கை யளவு எடுத்து அதோடு சரிப்பங்கு நல்லெண்ணெய் கலந்து கொடுக்கலாம்; அல்லது நாவற்பட்டையை எருமைமோர்விட்டு இடித்துப்பிழிந்த சாற்றுடன் ஒரு கொட்டைப்பாக்களவு சந்தனம் போட்டுக கலக்கி மூன்றுநாள ஆறுநேரம் கொடுக்கலாம; அல்லது, பருத்தியிலைச் சாறு, கையாந்தகரைச்சாறு வகைகளு அரைச் சிரங்கையளவு எடுத்து, ஒரு வெருகடிப பிரமாணம் வெளளைச் சீனியும், அரை அவுன்ஸ நல்லெண்ணெயும் சேர்த்துக் கலக்கி ஒருமுறை கொடுக்கலாம. இச்சாபத்தியம. உப்பு, புளி, புகையிலை நீக்கவும.

சூதக ஜன்னி. (Hysteria.)

சோம்பலான ஜீவியம், உபத்திரவம், தாபம், சூதகபந்தம், காதற்கைகூடாமை, மிதமிஞ்சிய சந்தோஷம, துக்கம், பயம் முதலியவற்றால பித்தப பைபதிய ஜீரவு முதலியவை உண்டாவதுண்ட. ஸ்திரீகளுக்கு முக்கியமாய்க் காண்கிற இந்த நோவானது சூதக ஆரம்பமுதல அதுநிறுத்தற காலமவரை அவர்களை உபத்திரவிக்குமு. ஆதலால இதற்கு சூதக ஜன்னி எனறும பெயர. இந்த வ்யாதியை பிசாசு, சூனியம, வலல, மசவ்ஷடை யென்று சொல்லி மந்திர தந்திர பூசை முதலியவைகளைச் செய்வது ஸ்திரீகளை உபத்திரபபடுத்துவதுமை நாட்டு வழக்கம. இந்த உபத்திரவங்களால் மனதிற்கு உற்சாகம் பிறந்து வியாதி சுகமாவதுமுண்டு.

இலக்ஷணங்கள்:— இது நரம்பைப் பற்றின வியாதி. விட்டு விட்டு வரும. கைகாலகளில ஜீரவு, விரலகளை முடக்கிக்கொண்டு மாறிலடிதத்துக் கொளளுதல, மாறில உருண்டையாய் மேலுக்கு மேறி தொண்டையை யடைப்பதம்பால் மீதானறும். இடது பக்கமாய் அடிவயிறறில் வலதனபும், இரைச்சலுள காணும. ஜன்னி

வரும்போது மூத்திரம் தெளிவாயிரங்கும். வலி தணியும்போது கண்ணீர் வடிதல், அழுதல், அல்லது கைகக்குதல், சிலவேளை விடாத விக்கல் காணுதல், ஒவ்வொரு வேளை பிரக்ஞையற்று மூர்ச்சித்துவிழுதல், கொட்டாவி விடுதல், தெளிப்பு, நெஞ்சுதடித்தல் முதலியவை காணும்.

சிகிச்சை:—ஜன்னி கண்டிருக்கும்போது வஸ்திராபரணங்களைத் தளர்ச்சிசெய்து காற்றுள்ள இடத்தில் படுக்கவைக்கவேண்டியது. ஆக்கிராண உப்பை அல்லது ஆக்கிராணத்திரிப் புகையை முகரக் கொடுக்க வேண்டியது. குளிர்ந்த ஜலத்தை சிரசிலும், மார்பிலும் ஊற்றவேண்டியது.

நமது சூதக ஜன்னி நிவாரணியில் ஒரு தேயிலைக் கரண்டியளவு பதினைந்து நிமிஷத்திற் கொருதடவை சுகங்காணும்வரை கொடுத்துவரவேண்டும். ஜன்னி நின்ற பிறகு வியாதி மறுபடியும் வராமல் தடுப்பதற்கு நமது சுகபேதி மாத்திரையைச் சாப்பிட்டு மலச்சிக்கலை நீக்கவேண்டும். நாமபுகளுக்குப் பெலனும், தேக தாரூட்டியமும் விர்த்தியாகும்பொருட்டு நமது சிங்கவீரிய மாத்திரையில் மூன்றுவேளையும் போஜனத்திற்குமேல் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டு வரவேண்டும்.

வெண்ணீர்ப் புட்டிகளை பக்கங்களுக்கும் கால்களுக்கும் வைக்கலாம்.

ஐந்துபலம் பெருங்காயத்தை ஒருபடித் தண்ணீரில் விட்டு எட்டொன்றுப்க் காயச்சி வடித்து நாலுபலம் வெல்லமு சேர்த்து பாகு செய்து அதில் சுக்கு, மிளகு, கடுகு, வெள்ளைப்பூண்டு இலைகளின் பொடி வகை ஒன்றுக்குப் பலம் ஒன்று தூவி, 2 பலம் பசுவின் நெய் விட்டுக் கிண்டி மிளகுபதத்தில் இறக்கி வேளை ஒன்றுக்கு ஒரு களஞ்சி வீதம் கொள்ள, வாய்வு, வாதரோகங்கள, சூதக ஜன்னி முதலியவைதீரும். ம்வப்பம்பட்டைக் கஷாயமுங் கொடுக்கலாம. அலலது நாலு வராகனிடை சாமந்திப்பூவை காலபடி வெண்ணீரிலிட்டு மூடி பதினைந்து நிமிஷம் வரையில் ஊறவைத்து வேளைக்கு 2 மேசைக்கரண்டியளவு மூன்று வேளையும் கொடுக்கலாம்.

சூதகம் கிரமமில்லாவிட்டால் நமது சூதகபந்த நிவாரணியைக் கொடுக்கவேண்டியது. பொதுவாக மலச்சிக்கலை நீக்கித தாரூட்டியத்தை உண்டாக்ககூடிய ஔஷதங்களைக் கொடுத்து எபம்பாதும் மனதை சந்தோஷமாகவும, குதூகலமாகவும் வைத்திருந்து நல்ல காற்றுள்ள இடத்தில் வாசம் பண்ணச் செய்வது

தகுந்த முறையாகும். பெண்கள் சூதுவாருங் காலத்தில் அதிக மாய் கல்லி கற்பதும், கடுந்தொழில் செய்வதும், சூதக ஜன்னியைப் பிறப்பிக்கும். வெளிப்பிராந்தியங்களில் சூரிய வெளிச்சத்தில் ஓடி, அடிததிரிவதும், சுகமான நித்திரை, இரைப்பாறுதல், திருப்திகரமான போஜனம், முதலியவை சுகஜீவியத்தை உண்டாக்கும்.

சூதக சூலை.

இதுவே சூதிகாசூலை, தூரச்சூலை, சூதிகவாய்வு, இரத்தவாத பித்தகுன்மம், முட்டிருட்டு என்று சொல்லப்படும். இதில் குத்தல், சூடைச்சல், வேதனை, நோவு, வலி, சூலைக்கட்டு, வாதரோய் முதலியவை உண்டாகும்.

சூதகச் சூலையால் கஷ்டப்படுகிறவர்களின் தொகை அனந்தம். சிலருக்கு சூதுகாலைமுதல் மாதவிடாய் முற்றிலும் நின்றுபோகிற காலம் வரையில் இந்த வருத்தம் நீங்குவதில்லை. விவாகத்தினால் சிலருக்கு சௌக்கியமுண்டாகும். வேறு சிலருக்கோ அதிக வேதனை யுண்டாகும். இந்த வேதனை எவ்விடத்திலிருந்துண்டாகிறதோ அதையறிந்து சொல்வது கஷ்டம். அவ்விதஸ்திரீயைப் புருஷனிடத்திலிருந்து வேறுபடுத்தி வைப்பதில் சன்மையுண்டாகும்.

சூதகச் சூலையில் மூன்று பிரிவுகள் உண்டு. முதலாவது நாபியைப் பற்றிய சூலை. இரண்டாவது கர்ப்பாசயத்தில் இரத்தம் அதிகமாகிப் பிறக்கிற சூலை. மூன்றாவது சூதகம் வருகிற வழி மூடிக்கொண்டு காண்கிற சூலை.

சிகிச்சை:—1. இதை சொஸ்தமாக்குவது கஷ்டம். என்றாலும் வெண்ணீரில் உட்கார வைப்பதினாலும், கஞ்சாவை அல்லது கர்ப்பூரத்தை உள்ளுக்குக் கொடுப்பதினாலும் வேதனை நிற்கும்.

கஞ்சா சுத்தி:—சடைக்கஞ்சாவை வீரை ரசம்பு நீக்கி நீரிலிட்டு கொஞ்சநேரம் வரவைத்துப்பிசைந்து, நீரை வடித்துவிட்டு உலர்த்திக்கொண்டு, தூள்செய்து, அதில் ஒன்று அல்லது இரண்டு உளுந்து எடை கொடுக்க வேதனை தணியும். நித்திரையுண்டாகும்.

2. கர்ப்பூரத் தூளில் ஒன்றாமுதல் நாலு உளுந்து நிறை குளிகை செய்து கொடுக்கலாம். இது அதிகப்படின் விஷமிக்கும்.

3. பின்வரும் கர்ப்பூரச் சூரணமும் செய்துகொடுக்கலாம்.

செய்முறை:—கர்ப்பூரம் ஒருபங்கு, ஜாதிக்காய், ஏலம், லவங்கம், மல்லி, சந்தனம், சோம்பு, மிளகு இவைகளின் தூள் வகை ஒன்றுக்கு அரைப்பங்கு, சர்க்கரை மூன்றுபங்கு, இவைகளைச் சேர்த்து கலந்துகொண்டு பத்துமுதல் இருபது உளுந்து எடை தேனிலாவது நெய்யிலாவது கொடுக்க சூதகச்சூலை, நீர்க்கடுப்பு, எரிவு, நீரிழிவு, மேககாங்கை, நீரடைப்பு, பாண்டு, காமாலை, கண்காலெரிவு, சுரம், தாகம் முதலியவை தீரும்.

4. மீனெண்ணெய், அல்லது வேப்பம்பட்டைக் கஷாயம் கொடுத்து உடம்பைத் தேற்றவேண்டியது.

வேப்பம்பட்டைக் கஷாயம் செய்முறை :—வேப்பம்பட்டை உள்நார் பலம் ஒன்று, ஏலப்பொடி, கொத்தமல்லித்தூள், சோம்புத்தூள், சந்தனக்கட்டைத்தூள் வகைக்கு மாகாணிப் பலம் எடுத்து அரைப்படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி ஒரு கொதிவந்தவுடன் இறக்கிச் சூடாயிருக்கும்போதே வடிகட்டிக்கொண்டு கால் அல்லது அரை ஔளாக்கு வீதம் காலையிலும் மாலையிலும் கொடுக்கலாம்.

கை, கால் பிடிப்பு வேதனைகளுக்கு வெண்ணீர் ஒற்றடமிடலாம்.

சமது மகா சஞ்சீவித் தைலம் அல்லது ராயல்பாம் தடவலாம்.

கஞ்சா இலையை வதக்கி ஒற்றடமிலாம்.

ஊமத்தம் இலையை வதக்கிக் கட்டலாம்.

கடுகை முறுங்கைவேர் ரசம்விட்டரைத்துப் பற்றுப்போடலாம்.

தும்பையிலை ரசம் பூசலாம்.

உத்தாமணி ரசம் பூசலாம்.

கர்ப்பூரத் தயிலம் தடவலாம்.

ஆத்தியிலையை வதக்கி ஒற்றடமிடலாம்.

மாசிப்பத்திரி யிலையை வதக்கி ஒற்றடமிடலாம்.

சுக்கையும் பெருங்காயத்தையும் உரைத்துப் பற்றுப்போடலாம்.

அபின் உரைத்துப் பற்றுப் போடலாம்:

மான்கொம்பு உரைத்துப் பற்றுப் போடலாம்.

எட்டிக்கொட்டைத் தைலம், எருக்கந் தைலம், போன்தக்காய் கஷாயம், ஊமத்தந் தைலம் தடவலாம்.

ஒரு மெல்லிய துணியில் எலுமிச்சம்பழத்தை முடிந்து எண்ணெய் தடவி அனலில் காட்டி ஒற்றடமிடலாம்.

மருக்கொழுந்தை வதக்கி ஒற்றடமிடலாம்.

சாமந்திப்பூவை வதக்கி ஒற்றடமிடலாம்.

கரியபோளம், காசுக்கட்டி, அபின், சுக்கு, அரிசி இவைகளைச் சேர்த்து எலுமிச்சம்பழ ரசமிட்டு அரைத்துப் பற்றுப்போடலாம்.

வெண்துவாலை. (Leucorrhoea, or the Whites.)

இது ஸ்திரீகளுக்கு எந்த வயதிலும் சாதாரணமாய் உண்டாகக் கூடிய நோய். ஸ்திரீயின் மர்மஸ்தானத்திலிருந்து வரானமான திரவம் நீர்போலாவது, வெள்ளை பாயாவது, மஞ்சளாயாவது பச்சையாயாவது வெளியேறுவதுண்டு.

காரணம்:—வேலைக்கஷ்டம், போஜனக்குறைவு, கவலை, துக்கம், எக்கம், கழிச்சல், பெரும்பாடு, தீட்டடங்கல், கருவழிவு, மிதமிஞ்சிய சம்போகம், வெள்ளை, வெட்டையுள்ள புருஷரோடு சம்போகஞ்செய்தல், அக்கிரமக் கிரந்தியங்கள், அடிக்கடி பிள்ளை பெறுதல், நெடுங்காலம் பாலிகொடுத்தல், குளிர்ச்சி முதலிய காரணங்களால் பலவீனம் மேலிட்டு, நரம்புதளர்ச்சியுண்டாகி, உதிரத்தில் சுதந்துக் குறைவுதே இதற்குக் காரணம். சிறு குழந்தைகள் முதலாயக் குளிர்ந்த ஜலத்தில் காலை நனைப்பதனாலும், தலை நாவதத்தை யுண்டாக்கக்கூடிய காரணங்களினாலும், குளிர்ந்த கல் முதலிய ஸ்தானங்களில உட்காருவதனாலும், சரியான தேகாப்பியாசம, சுத்த ஆகாயத்தைச் சுவாசித்தல், இளைப்பாறுதல் முதலியவற்றை யொழித்து, வெகுநேரம் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருப்பதனாலும் இவ்வித நோய்க்கு ஆளாவதுண்டு.

சிகிச்சை:—பிச்சாங்குழலால் மர்மஸ்தானத்தில் உப்புக்கல தக வெந்நீர் அடித்துச் சுத்தம் செய்யவேண்டும். அப்படிச் சுத்தஞ் செய்தவுடன் ஸ்திரீ ஒருமணிநேரம் தூங்கவேண்டும். தூங்க முடியாவிட்டால் வெந்நீர் அடிக்கக்கூடாது. குளிர்ந்த ஜலம் ஒருநாளும் உபயோகிக்கவே கூடாது.

ஸ்திரீ வெளிறிப்பாதத்துக் கொழுத்துச் சோம்பலாயிருப்பதுடன், கால்கள் குளிர்ந்து, தலையைச் சுற்றிலும், கழுத்திலும் வியர்வையுங் கண்டால் கால் கார்ப் (Calc. Carb.) என்னும் ஔஷதத்திலும், ஸ்திரீக்கு வயிற்றில் குமட்டலும் ஓங்கின வயியுமிருப்

பதுடன், திடீரென்று கோபிக்கிறதலை சூளிர்ச்சியுண்டாகிறதாய மிருந்தால் பல்ஸ் (Puls) என்னும் ஔஷதத்திலும் பன்னிரண்டு மாத்திரை எடுத்து அரைக்ளாஸ தண்ணீரில் கலந்து பிரதிதினமும் நேரத்துக்கு ஒரு மேஜைக்கரண்டியளவு நாலைந்து தடவை சாப்பிடவேண்டும்.

கோழிமுட்டைத தோட்டைச் சுட்டுத் தூளாக்கி, அதில் பத்து குன்று மணிநிறை எடுத்துப் பாலில் கலந்து, சீனிபோட்டு, காலையிலும், மாலையிலும் சாப்பிட்டுவர வெண்குவாலை வியாதி சுகமாகலாம். இரண்டு வினாகனிடைப் படிக்காரத்தை ஒருபுட்டி கருவேலம் பட்டைக் கஷாயம் அல்லது மாதளம்பழுதோல் கஷாயத்தில் கரைத்துக்கொண்டு தினம் இரண்டொருதடவை யோனிக்குள் பீச்சிக்கொண்டு வந்தால் ரோகம் நீங்கும்.

பத்து குன்றுமணி நிறை வாலேந்தரம்பொளம் கொடுத்துக் கொண்டு வரலாம். ஒரு பணவிடை அப்பிரக செந்தூரம் கொடுக்கலாம். அன்னமீபத்தில் ஒரு குன்றுமணி நிறை எடுத்து மாத்திரைசெய்து தினம் இரண்டு அல்லது மூன்றுதடவை கொடுத்து வந்தால் இரத்தகளிதத்தினுண்டாகி வியாதியும் சுகமாகும். அப்ர செந்தூரத்தில் 5 குன்றுமணி நிறை தேனிலை கலந்து தினம் இரண்டுவேளை கொடுத்துக்கொண்டு வந்தால் இரத்தம் சுரந்து வியாதி நீங்கும். பல நண்பரின் வேண்டுகோளுக்கிணங்கி இந்த வியாதிகளென்று நாம் சுயமாய் செய்து வைத்திருக்கும் வெண்குவாலை நிவாரணி (Leucorrhoea Mixture) யைக் காலையிலும் மாலையிலும் சாப்பிடுவது சுகமுண்டாகும். அத்துடன் பிரமேக பிஸ்காரி பில்லைகளி லொன்றை ஆழாகுவெண்ணீரிலை கரைத்து. பிஸ்காரி குழாயால் அதை மர்மஸ்தானத்தினுள் செலுத்த, வெண்குவாலை முற்றிலும நீங்க சுகந்தரும்.

கடவுள் துணை

மானிட
மர்ம சாஸ்திரம்.

நான்காம் புஸ்தகம்.

மாதாவின் மாண்மை.

"முந்நாற்றைம்பதுதொடங்கிடநீது முந்நூறு நாளளவும்
அந்திபகலாயிசிவினை யாதரித்தும்—தொந்தி
சரியசீகுமந்து பெற்ற தாயார்."—பட்டணத்தார்.

இஃது

யாவர்க்கும்

சுகசெல்வ நன்மைகளையும் சுகிர்த பாக்கிய
போகிகஷத்தையும் நீடுழி பெருதவிக்க
விரும்பிய

கல்கத்தா சர்வகலா சங்கத்தின் தமிழ்ப் பரீக்ஷகரும்,
எக்ஸ் என் ஜான்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியருமாயிருந்தவரும்,
ஜோதிசாஸ்திரம், பூமிசாஸ்திரக்களின் பரந்த கர்த்தாவும்,
மானஸ மர்ம சாஸ்திரப் பண்டிதரும்,
சாமிவேல் ஸைத்தியசாலேத் தலைவருமாகிய

எஸ். சாமிவேல். பி. ஏ. அவர்கள்

இயற்றியது

சாமிவேல் பிரஸ்,

தென்காஞ்சி, இரங்கூன்.

1919.

All Rights Reserved.



மாதாவின் மாகுணமே.



மாதாவின் மாகூனிமை (The Dignity of Motherhood.)

இப்புஸ்தகத்தில் புத்திக்கூர்மையும் சௌந்தரியமுமுள்ள குழந்தைகளைப் பெறும்படித் தாய் தகப்பன்மார் அநுசரிக்க வேண்டிய சில விதிகளையும் அவற்றோடு பொருந்திய சில விஷயங்களையும் எடுத்துக் கூறுவோம். ஆனால் சிலர் சௌந்தரியமும் புத்திக்கூர்மையுமுள்ள பிள்ளைகளைப் பெறுதற்கும் ஒரு விதியுண்டோ? சகலமும் தெய்வச்சித்தத்தால் அல்லவோ ஆகிறது? மனுஷரால் என்ன ஆகக்கூடும்? என்பார்கள். வாஸ்தவந்தான். சகலமும் தெய்வச் சித்தத்காலானாலும், தெய்வம் நமக்குச் ச புத்தியையும் அறிவையும் கொடுத்திருக்கிறதே. அப்படியிருக்க, நம்முடைய அக்கிரமமான நடக்கையாலும் அறியாமையாலும் அங்கவீனமான பிள்ளைகளைப் பெற்றுவிட்டுத் தெய்வத்தின் மேல் பழிசுமத்துவது நமது மூடத்தன்மையன்றே! வேறு சிலர் எல்லாம் விதியின் பயனே. விதியின்படியல்லவோ நமக்குப்பிள்ளைகள் பிறக்கவேண்டும். விதியொன்றிருக்க நமது மதியால் ஒன்றை செய்யக்கூடுமோ! எனபார்கள். எல்லாம் விதியிருந்தால் வந்து சேருமென்று இரவுபகலும் பஞ்சணை மெத்தையில் படுத்திருந்தால் காரியம் கைகூடுவதெப்படி?

திருவள்ளுவ நாயனார் கூறியபடி "தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்." நம்மாலானமட்டும் கூடிய முயற்சி செய்வோமாயின் தெய்வமும் கூடி நின்று உதவி புரியும்.

சத்திய வேதாகமத்தில் யாகோபென்பவன் தன் மாமனாகிய லாபானின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது, அதற்குக் கூலியாகப் புள்ளியும் வரியுமுள்ள ஆடுகளை மட்டும் யாக்கோப் எடுத்துக்கொள்ளலாமென்று லாபான் யாக்குக் கொடுத்திருந்தான். 'யாகோப் பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளைவெட்டி இடையிடை



யே வெண்மை தோன்றும்படி பட்டையை உரித்துத் தான் உரித்த கொப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும் தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைப்பான். ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது பொலிவதுண்டு. ஆடுகள் அந்தக் கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியால், அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டன. பலத்த ஆடுகள் பொலியும்போது அந்தக் கொப்புகளுக்கு எதிரே பொலியும்படி யாக்கோப் அவைகளை அந்த ஆடுகள் கண்களுக்கு முன்பாகக் கால்வாய்களிலே போட்டுவைப்பான். பலஹீனமான ஆடுகள் பொலியும்போது அவைகளைப் போடாதிருப்பான்; இதனால் பலஹீனமுள்ளவைகள் லாபானையும், பலமுள்ளவைகள் யாக்கோபையும் சேர்ந்தன." இவ்விதமாய்த் தெய்வம் "நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும். நீ மேற்கேயும் கிழக்கேயும் வடக்கேயும் தெற்கேயும் பரம்புவாய். உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." என்று தாமாசீர்வதித்த யாக்கோபுக்கு ஐஸ்வரியம் விர்த்தியடைவதற்காகக் காட்டிக்கொடுத்த வழியன்றோ இது? இவ்விதமான கிரியைகள் செய்தால் இவ்விதமான குழந்தைகள் பிறக்கும் என்று தெய்வந் தானே அறிகுறியினல் காட்டியிருக்க அவருடைய ஞானத்தையறிந்து நடந்து ஆசீர்வதிக்கப்பட்ட குழந்தைகளைப் பெற்று வாழ்வதற்குப் பதிலாகக் கண்ணை மூடிக்கொண்டு கபோதிபோல் வழிதப்பித் திரிந்து தெய்வத்தின்மேல் போக்குச் சொல்லலாமா? ஆதலால் எமது சிற்றறிவுக்கெட்டியபடி பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கு மிருக்கும் சம்பந்தத்தையும், ஆசீர்வாதமான சந்தான உற்பத்திக்குரிய சில விதிகளையும் பிதாக்களும் மாதாக்களுமாயிருப்பவர்களுக்கும், பெற்றோராக விரும்புவோர்க்கும் எடுத்துக் காட்டினல் அவர்கள் அவ்விதிகளைக் கைக்கொண்டு சௌந்தரியமும் புத்திக் கூர்மையும், பராக்கிரமும் பொருந்திய பாலர்களைப்பெற்று வாழ்வார்களென்று நம்புகிறோம்.





தாயும் பிள்ளையும்.



சிசுவினது அவயவங்கள் யாவும் தாயினது அவயவங்களுக்குள்ளேயே ஆரம்பமாகி முற்றுப் பெறுகின்றன. கருத்தரிக்குங் காலமுதல் சர்வ ஞானமும் பொருந்திய கடவுளுடையசித்தத்தால் சிசுவினது அவயவங்களுக்குமேவண்டிய உபகரணங்கள் யாவும் அக்கருவைச் சுற்றிச் சேர்க்கப்பட்டு, அக்கருவிலேயே ஒன்று சேர்வதனால் எலும்பு, தசை, நாளம், நரம்பு, ரத்தாசயம், நுரையீரல், வயிறு, ஈரல், கண், காது முதலிய ஒரு மனுஷ சரீரத்திற்கு வேண்டிய சகல உறுப்புகளும் உற்பத்தியாகின்றன. அதோடு புத்தி, சித்தம், அன்பு, உணர்ச்சி முதலியவைகளைப்புகட்டி அவ்வுறுப்புகளுக்கு உயிரைக் கொடுக்கும் ஆத்துமாவும் வந்து சேருகின்றது இவ்விதமாய் மனுஷ உறுப்புகளுக்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாம் தெரிந்தெடுத்தது எந்தெந்த அவயவத்திற்கு எந்தெந்த வஸ்துக்கள் தேவையாயிருக்கின்றனவோ அந்த வஸ்துக்களை ஒன்று சேர்ப்பதனாலும், வேண்டாத வஸ்துக்களைத தள்ளிப் போடுவதனாலும் அப்படித தெரிந்தெடுக்கப்பட்ட வஸ்துக்களைக் கருவினது ஒவ்வொரு உறுப்போடும் சேர்ப்பதனாலும் சிசுவானது காளுக்கு நாள் பெரிதாகி ஒன்பதாம் மாதத்தில் மனுஷீகத்துக்கு வேண்டிய சகல உறுப்புகளோடும் குணங்களோடுமே வெளியேறுகின்றது. ஒரு சிறு முடைடையிலிருந்து ஒன்பது மாதத்துக்குள், இரண்டு காலை நிறுத்தி மேலே தூண்டி கையைப்பூட்டி, முதுகெலும்பாலினைத்து, முகட்டின் மேல் பழுக்கழிகளையிட்டு நாம்புகளாற் கட்டி, மயிர்த்தோலால் வேய்ந்து, புலாற் சுவரெடுத்து போக்குவாவுக்கு இருவாசலும் ஏழு சாளரங்களும், சாக்கிரம் முதலிய நான்குதள அடுக்கும் அவற்றின் மேலே சிகரமும் கூந்தலாகிய நீண்ட கொடியும் அமை

ந்த சித்திர மாடமாளிகையாகிய மனுஷனுக்கும் ஆச்சரியப்படத் தக்க அற்புதக்கினியைத் தெய்வம் தாயினுடைய வயிற்றிற்குள்ளே யே கடைப்பிக்கிறார். அவருக்கே சகல கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக. மனுஷனுடைய புத்திக்கெட்டாத விதமாய் சகல காரியங்களையும் நடத்துகின்ற சர்வ வல்லவரின் ஞானத்தை அளவிடக்கூடியவரு முளரோ? ஸ்திரீயினிடத்திற் பிறந்த ஒவ்வொரு மனுஷனும் இப்போது இருக்கும் சகல மனுஷரும் இனிமேல் பிறக்கப்போகும் சகல ஆன்மாக்களும் ஸ்திரீயின் அவயவத்திற்குள்ளிருந்து அந்த அற்புதமானவிதமாய் உதிக்க வேண்டுமென்பது ஈசன் ஏற்படுத்திய பிரமாணம். மனுஷ ஜாதியின் சகல நடவடிக்கைகளையும் விதியையும் நியமிக்கும் மனுஷருடன் பிறக்கும் ஒவ்வொரு சுவாபமும் ஸ்திரீயின் அவயவத்திற்குள்ளேயே உற்பத்தியாகிறது. ஒவ்வொரு குடும்பங்களும் ராஜ்யங்களும் ஜாதிகளும் இவ்வுலகத்தில் ஆண்டு அனுபவிக்கும் சகல கைங்கரியங்களும் அந்த அவயவத்திலிருந்து உற்பத்தியாகும்படி தெய்வம் விதித்திருக்கிறார். அண்டசராசரங்களையும் படைத்துக்காத்து ஆண்டருளும் அற்புத காதன தமது நியாயப் பிரமாணப் புஸ்தகத்தை அங்கேயே வைத்திருக்கிறார்.

"அன்னையர்களையு மருஞ்சகிகளையு மடுத்தவென் னுறவினர்களையும்
அன்னமோடருந்து மமுசுவைகளையு மாடுநீர் பூசுநீர்களையும்
வன்னமாந்துயிலும் வாசபூந்தவிசும் வருத்திடுமுறக்கமும் விடுத்தே
கன்னியாலுவிகலங்கினேன்மன்னுகாங்கொடுத்தணைப்பதின்கடனே."

என்று கதறும் காதலியின் அவயவத்தைப் பங்கப்படுத்துவது பர்த்தாவுக்கு ஏற்குமோ? உனதுடைய முழு இருதயத்தோடும் அன்பாடுமை ஆய் சேர்த்தணைத்து ஆலிங்கனஞ் செயயும் சரீரத்திற்குள்ளிருந்து உன்னிருதயத்திற்கு சந்தோஷத்தையும் இன்பத்தையுங் கொடுத்து உன் வீடடையே உனக்கு மோக்ஷமாகச் செய்யும் உன் இனிய புத்திரரின் சுகமும், மகிமையும், கனமும் உதயமாகவேண்டுமென்பது தெய்வத் திருச் சித்தம். மனுஷன் உறவோடும், உருக்கத்தோடும், உண்மையோடும் தனது தாயினிடத்தில் அன்பு கூர்வது ஆச்சரியமோ? தன் முழு சரீரத்தையும், புத்தியையும், மனசாட்சியையும், ஆன்மையும் உறபத்தி செய்த தனது அருமை மாதாவை ஆசையுடன் ஆசரிப்பது அரிய காரியமோ? மனுஷன தெய்வக் கட்டளைகளையும் ராஜகட்டளைகளையும் மீறி நடக்கலாம். ஆனால் தாயின்மேல் தனக்கிருக்கும் பாசத்தை முற்றிலும் நீக்குவது மிகவும் அரிது.

ஸ்திரீ பினவபவமாகிய உலகத்தில் சகல குணங்களும் தன்மைகளும் பொருந்திய ஓர் உயிருள்ள மனுஷனை உண்டாக்கக்

கூடிய சகல உபகரணங்களும் இருக்கின்றன. அவ்வுபகரணங்களை ஒன்றுசேர்த்துப் பக்குவப்படுத்தி ஒவ்வொரு அவயவத்திற்கும் வேண்டிய வஸ்துக்களைச் சேர்த்து, நீக்க வேண்டியவைகளை நீக்கி உறுப்புகளாக்கி அவற்றிற்கு உயிர் கொடுப்பதனால் மனுஷரும் ஸ்திரீகளும் உண்டாகின்றனர். மிகவும் கஷ்டமும், அருவருப்பும், மனுஷனையே பூதகிக் கெட்டாதகதும், மாட்சிமை தங்கியதும் சகலஜாதிபார் ராஜ்ஜியங்களினது அதிர்ஷ்டத்தையும் நியமிப்பதுமான இந்த அரிய தொழில் தாயினுடைய அவயவத்திற்குள்ளேயே ஆரம்பமாகி முடிவதுமல்லாமல் உருவமாக்கதத்தக்கதும் உயிர்கொடுக்கத்தக்கதுமான தாயின் அவயவத்திலிருக்கும் ஓர்விதசத்துவின் வல்லமையால சகலதொழில்களும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு உறுப்புக்குமவேண்டிய உபகரணங்களைச் சேர்த்து வேண்டாதனவைகளை நீக்கி ஒன்றை மேலொன்றாக. மாற்றிப் பக்குவப்படுத்தி மனுஷரூபத்தை உண்டுபண்ணும் இந்த சத்துவினது தன்மை இன்னது எனறு அறிவது மனுஷஞானத்துக்கு எட்டியதல்ல. மனுஷர் இப்பூமியின் பல இடங்களிலும் கண்டுபிடிக்கக்கூடிய வஸ்துக்களைச் சேகரித்து ஆரண்மனைகள், மாளிகைகள், கப்பல்கள், படடணங்கள், யந்திரங்கள், பஸ்தாக்கள், பாலங்கள் முதலியவைகளை உண்டுபண்ணக்கூடும். ஆனால் இவ்வுலகத்தின் பொருட்களைச் சேர்த்து ஸ்திரீ புருஷர் உருவஞ் செய்து அவற்றிற்கு ஆவியைக் கொடுப்பது மனுஷனது வல்லமைக்கு எட்டியதல்ல. இவ்வரிய தொழிலை நடப்பிப்பதற்கு ஸ்திரீயின அவயவமே தகுந்த ஸ்தானம் என்று தெய்வம் தெரிந்தெடுத்திருக்கிறார். ஆதலால் மனுஷர் அதை அலக்ஷியம் பண்ணுமல் மேணிக் காப்பது மிக அவசியம். "அணிலையும் பிதாவும் முன்னறி தெய்வம்." இதில் இவ்வுலகத்தில் நமது கண்ணுக் கெட்டிய தெய்வங்களில் அன்னையே விசேஷித்த தெய்வம் என்றும் அதற்குப் பின்புதான் பிதாவை வணங்கவேண்டியதென்றும் ஏனைவை சுட்டிக்காடடி யிருக்கிறாள்.



விக்டோரியா மஹாராணிக்கிருந்த சாம்ராஜ்யத்தினைப் பட்டத்தைவிடத் தாய்ப்பட்டமே விசேஷித்தது. ஏனெனில் அந்த அம்மாள் சக்கரவர்த்தினியாகச் செய்த தொழில்கள் மிகவும் சொற்ப காலத்திற்கு நிலைக்கக்கூடியவைகளும் மற்ற ராஜாக்களுங்கூடச் செய்யக்கூடிய வைகளுமன்றோ? ஆனால் தாயாராக அந்த அம்மாள் செய்திருக்கும் கிரியைகளோ மிகவும் அரியவைகள். இவ்வுலகத்திலுள்ள வஸ்துக்களைச் சேர்த்து அவற்றைத் தேவனைதரிலும் சற்றுத தாழ்ந்த உயிர்ப்பிராணிகளாய்ச் சிருஷ்

டித்து மகிமையினுலும், கனத்தினுலும் அலங்காரஞ்செய்து முடிசூட்டி தெய்வத்தின்சாயலை அவற்றின்மேல அழுத்தி இவ்விதமாய்த் தமது புத்திரனைப் பெற்றிருக்கிறார்கள். கருத்தரித்தபின் தகப்பனுக்கும் சிசுவுக்கும் நேரான சம்பந்தம் ஒன்றுமில்லை. விந்தானது தாயினிடம் சென்று அவயவ உற்பத்திக்கு அவசியமான உபகரணங்கள் சேருமிடத்தில் தங்குமட்டும் சிசு உற்பத்தியாகாது. ஒவ்வொரு உறுப்புக்குமுரிய விசேஷித்த தன்மைகளும் மனச்சாய்வுகளும் தாயைப்போலவே இருக்க வேண்டுமென்பது இதனுல் தெளிவாய் விளங்கும்.

சிசுவின் அம்சங்கள்

• சிசுவினது அவயவத்திற்கு வேண்டிய சகல வஸ்துக்களும் தாயினிடத்திலேயே இருக்கின்றன வென்றும் அவ்வஸ்துக்களைச் சிசுவின் உறுப்புகளோடு சேர்த்து அவற்றை வளரச் செய்யும் சத்தும் தாயினிடத்திலேயே யிருக்கிறதென்றும் நிரூபிப்பதற்காக சிசுவினது அம்சங்களெல்லாம் தாயின் அவயவத்தினுள் ஆரம்பமாகி அங்கேயே முற்றுப்பெற்றுகிறதென்று எடுத்துக் கூறினேம். முற்கூறிய சங்கதிகளை நிரூபிப்பதற்காக வேறொரு விஷயமும் எடுத்துக் காண்பிப்போம். அதாவது (சிசுவினது உறுப்புகளுக் கெலலாம் வேண்டிய உபகரணங்கள் தாயினுடைய உதிரத்தின மூலமாகவே வருகின்றன.)

குழந்தை பிறக்குமுன் அதன் அவயவத்திற்கு வேண்டிய உபகரணங்கள் எங்கிருந்து வந்தன? பிண்டம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருவதற்குக் காரணமென்ன? எனனும கேள்விகளுக்கு ஓர விடைமட்டும் கொடுக்கக்கூடும். அதாவது சிசுவுகு வேண்டிய உபகரணங்களைக் கொண்டு வருவதும் பிண்டம் பெரிதாவதற்குக் காரணமும் தாயின் உதிரமே. தாயின் உதிரத்தில் எதெந்த வஸ்துகளெல்லாம் சேர்ந்திருக்கின்றன என்னும் கேள்விக்கு விடை கொடுப்பது இங்கு அவசியமில்லை. சிசுவினது உற்பத்திக காலமுதல் அதன் உறுப்புக்களெல்லாம் உண்டாகித் தாயைவிட்டு நீங்கியிருக்கும் காலம் வருமவரையில் அச்சிசுவுக்கு வேண்டிய சகலவஸ்துகளையும் கொண்டுவந்து சேர்ப்பது தாயின உதிரமே யன்றி வேறொன்றுமல்ல என்னும் விஷயமே நாம முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது. வைத்திய சாஸ்திரிகள் ஸ்திரீயின் உதிரத்தைப் பரீக்ஷித்துப் பார்த்து அதில் மனுஷ அவயவத்திற்கு வேண்டிய ஒவ்வொரு வஸ்துவுமிருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஓர் மனுஷ அவயவத்திற்கு வேண்டிய எலும்புகள, மூளை, இருதயம், நரையீரல், கண், காது, நரைகள் முதி

லிய சகல உறுப்புகளும் தோற்றத்திலும், வடிவத்திலும், உபயோகத்திலும் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசமுள்ளவைகளாயிருந்தும் அவைகளுக்கு வேண்டிய சகல உபகரணங்களும் ஸ்திரீயின் இரத்தத்திலேயே இருக்கின்றன. அனால் அந்த சிசுவுக்கு யோசனை, புத்தி, சித்தம் முதலிய அறிவுகளையும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலிய ஐம்பொறி உணர்ச்சிகளையும் உண்டாக்கிச் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்திற்கும் உயிரைக்கொடுத்து அங்குமிங்கும் அசையுப்படிச் செய்யும் ஆத்மா எங்கிருந்து வருகிறது என்னும் கேள்விக்கு விடை கிடைப்பது மிகவும் அரிதேனும் அது எதாவது ஓர் ஸ்தானத்திலிருந்து வந்திருக்கவேண்டுமென்பது மிகவும் நிச்சயம். ஏனெனில் வித்தில்லாத சப்பிரதாயம் மேலுமில்லை, கீழுமில்லை. அதலால் ஆத்துமாவுக்கு உற்பதன ஸ்தானம் எது?

கருத்தரிக்கும் விதத்தைப்பற்றி நாம் சொன்னபொழுது புருஷனது சுக்கிலத்தில் கிருமிகள்போன்ற சிறு ஜந்துக்கள் இருக்கின்றனவென்றும், அவைகள் தாயின் சுரோணிதத்திலுள்ள முட்டையினுடன் சேர்வதால் அம்முட்டைக்கு உயிர் உண்டாகிக் கருத்தரித்து நாளுக்கு நாள் விர்த்தியடைகிற தென்றும் கூறினோம். இம்முட்டையினது உயிரே ஆத்துமாவாய்விர்த்தியாகிறதாக நாம் நினைக்க இடமுண்டு. ஏனெனில் சிசுவினது சரீரம் வளர வளர அதன் பத்தியும் நரம்புகளும் தெளிவாகிக்கொண்டே வருகின்றன. ஸ்திரீயின் உதிரத்தின் மூலமாய்க் கருவினிடம் வந்துசேரும் ஒவ்வொரு உபகரணமும் சரீரத்தை அப்படி வளரச்செய்கிறதோ, அதேவிதமாய் ஆத்துமாவையும் நாளுக்கு நாள் வளரச்செய்யும். ஆத்துமாவுக்குரிய உபகரணங்களும் தாயின் இரத்தத்தின் மூலமாகவே வந்து சேருகின்றன வென்று நினைப்பதற்கு இடமுண்டு. எப்படியிருந்தாலும் கருத்தரித்த காலம் முதல் குழந்தை பிறக்கும் வரையில் தாயின் உதிரத்தின் மூலமாய் வரும் உபகரணங்களால் சிசுவினது சரீரமும் ஆத்துமாவும் போஷிக்கப்பட்டு நாளுக்கு நாள் விர்த்தியடைகின்றன வென்பது வாஸ்தவம். ஆத்துமா இல்லாத சரீரம் கல் அல்லது மாக்கட்டை போல எப்படி விர்த்தியடையாதிருக்கின்றதோ அதேவிதமாய்ச் சரீரமில்லாத ஆத்துமாவும் விர்த்தியடையமாட்டாது. உயிர் கொடுக்கப்பட்ட ஓர் நுண்ணிய முட்டைமட்டும் தாயின் கர்ப்பத்தில் முதல் முதல் வந்து சேருகின்றது. அதற்கு அவயவங்கள் ஒன்றும் அமைக்கப்பட்டிராது. ஆனல் அதனிடத்தும் தாயினிடத்திலிருக்கும் சத்துவின் கிரியையால் ஒரு முழு மனுஷனைக் கூடிய வல்லமை மட்டும் அதற்கு இருகவேண்டும். ஒன்பது மாதத்திற்குள் அவ்வித்தானது சரீரமும் ஆத்துமாவும் பொருந்திய ஓர்

குழந்தையாகிறது. கண்ணும் காதும் சரியானபடி அமைந்தவுடன் ஆத்துமாவின் உணர்ச்சியும் விர்த்தியாகிப் பார்க்கவும் கேட்கவும் தொடங்குகிறது.

அப்படியே மூளையும் நரம்பும் உண்டானவுடன் ஆத்துமா யோசிக்கவும் நினைக்கவும் தொடங்குகிறது. இவ்விதமாய்ச் சரீரத்துடன் ஆத்மா வளர்ந்துமல்லாமல் சரீரம் எந்த ஸ்திதியிலிருக்கிறதோ அதற்குத் தக்கதாகவே ஆத்துமாவின் கிரியைகளுமிருக்கும். சரீரத்தைப் போலவே ஆத்துமாவின் ஒவ்வொருபாகமும் தாயின் உதரத்தை விட்டு வெளியேறு முன் முற்றுப்பெற வேண்டும். ஓர் குழந்தை கண், காது, கை, கால், தா முதலிய உறுப்புக்களில்லாமல் பிறந்தால் அது உலகத்திலிருக்குமளவும் அவ்வுறுப்புக்களை உண்டாக்குவதரிது. பிறவிக்குருடனுக்குப் பார்வையளிப்பது அற்புதமாகும். அவ்விதமாகவே ஆத்துமாவினது எந்த உறுப்பாவது சத்து அல்லது வல்லமை குன்றிய தாய்ப் பிறக்குமாயின், அது உலகத்தை விட்டுப் பிரியுமளவும் அக்குறைவை நிவிர்த்தி செய்வதரிது. எத்தனையோ குழந்தைகள் பிறக்கும்போதே அங்கஹீனமும் அவயவக்ஷீணமும், நோயுள்ளவைகளுமாய்ப் பிறக்கின்றன. அவற்றின் குறைகளை நீக்க யாரால் கூடும்? இப்பழியை யார்மேல் சுமத்தலாம்? இதற்குக் காரணம் யார்? பெற்றோரே-விசேஷமாய்த் தாயே அதற்குக் காரணம். தகப்பனும் தாய்க்கு ஒத்தாசையாயிருந்து அவள் மூலமாய்த் தன் குழந்தைக்கு இக்குறைவுகளை உண்டுபண்ணுகிறான். தாயும் தகப்பனுமாய் இருக்கவிரும்புவோமே! அறிந்தும் அறியாமலும் நீங்கள் செய்யும் அக்கிரமத்துக்கும் அடங்காத உங்கள காமவிகாரத்துக்கும் சாக்கியமாக நோயினாலும் அவயவக் குறைவினாலும் அவஸ்தைப்படும் உங்கள் பிள்ளைகள் கள்ளம்தாறும் உங்கள் முன் நிற்கவேண்டுமோ? "பெற்றோரின் பாவத்தைப் பிள்ளைகளிடத்தில் தெய்வம் மூன்றும்நான்காம் தலைமுறைமட்டும் விசாரிப்பார்." என்னும் சத்திய கட்டளை பொய்யாகுமோ? ஊற்றுக்கண் சுத்தமாயிருந்தாலல்லவோ அதிலிருந்து சுரந்து பாயும் நீர்த்தாரையும் சுத்தமாயிருக்கும். மனுஷரின் உற்பத்திக்குக் காரணஸ்தானமாகிய ஸ்திரீயினது அவயவம் சுத்தமும் சுகமுள்ளதுமாயிருந்தாலல்லவோ அதிலிருந்துண்டாகும் குழந்தைகளும் சௌக்கியத்தையும் சந்தோஷத்தையும் அடைவார்கள்.

கடைகியாக நாமறியவேண்டிய தென்னவெனில்:—மனுஷரின் ஆத்துமாவும் சரீரமும் விர்த்தியடைவதற்கு வேண்டிய உபகரணங்கள் தாயின் அவயவத்திலேயே இருக்கவேண்டுமென்பதும் அவ்வுபகரணங்களை ஒன்றுகச் சேர்த்துச் சகல உறுப்புக்களுமுள்ள

ஆத்துமாவும் சரீரமும் பொருந்திய ஒரு மனுஷனுக்கூடிய சத்து கருவுக்கு உண்டு என்பதுமே. இவ்விதமாய் நமக்கு இருக்கும் விருப்பங்களும் எண்ணங்களும் கிரியைகளும் நமது தாயின் அவயவத்தின் மூலமாய் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாயினது அவயவம் எந்த ஸ்திதியில் விருக்கின்றதோ அந்த நிலைமையுள்ளவர்களாகவே நாமும் சிருஷ்டிக்கப்படுகிறோம். ஆதலால் நாம் இவ்வுலகத்தில் இருக்கும்பொழுது அனுபவிக்க வேண்டிய விதிப்பயனைப் பிரமாவுக்குப் பதிலாகத் தாயே நமது கலேஓட்டில் எழுதியிருக்கின்றாள் என்று சொல்லலாம்.

ஸ்திரீயின் உதிரத்தில் என்ன வஸ்துக்களெல்லாமிருக்கின்றன? எந்த வஸ்துக்களைச் சாப்பிடுவதலால் அவளுடைய ரத்தம் சுத்தமுள்ளதாகும்?

நமது சரீரத்துக்கு என்னென்ன வஸ்துக்கள் தேவையாயிருக்கின்றனவோ அவற்றை நாம் அறியும்படி தெய்வம் நமக்குப் பசி, தாகம், விருப்பம் முதலிய உணர்ச்சிகளைக் கொடுத்திருக்கிறார். நமக்குத் தாகமெடுத்தால் நமது சரீரத்திற்கு ஜலம் தேவையாயிருக்கிறதென்றறிந்து நீரைப் பானஞ்செய்வதலால் தாகம் நின்றுவிடுகிறது. அப்படியே பசி எடுக்கும்பொழுது ஆகாரத்தை உட்கொண்டு சரீரத்திற்குத் திருப்தியை உண்டுபண்ணுகிறோம். குழந்தைகள் சர்க்கரையை அதிக அவாவுடன் சாப்பிடுகின்றன. ஏனெனில் அவற்றின் சரீரத்திற்குச் சர்க்கரை அதிகமாய்த் தேவையாயிருப்பதலேயே. கசப்புள்ள மருந்துகளைச் சாப்பிட்டு வியாதிகள் சௌஸ்தமாவதற்குக் காரணம் சரீரத்தில் சர்க்கரை முதலிய கசப்புக்கு நேர்விரோதமான வஸ்துக்களிருப்பதால் உண்டான வியாதிகளை நீக்குமட்டும் கசப்பை உண்டு சரீரத்தில் மிதமிஞ்சி யிருக்கும் சர்க்கரையின் தன்மையைக் குறைப்பதேயாம். அவ்விதமாகவே ஸ்திரீக்கு என்னென்ன வஸ்துக்களில விருப்பமும் தாகமும உண்டாகிறதோ அந்த வஸ்துக்கள் அங்கமாய் அவள் சரீரத்திற்கு வேண்டியவைகளாயிருக்கும். ஆனாலும் ஒரு வஸ்துவின்மேல் அதிகப் பிரீதியாயிருக்கிறதென்று மிதமிஞ்சிப் புசிப்பாளாயின் அது அஜீரணத்தை உண்டுபண்ணிச் சரீரத்திற்கு உபயோகப்படமாட்டாது. மேலும அடுப்புக்கரி, சாம்பல் முதலிய வஸ்துக்களைக் கர்ப்பிணிகள் சாப்பிடுவது வழக்கமென்று சிலஸ்திரீகள் யோசிப்பதலால் அவற்றின்மேல் அந்த ஸ்திரீகட்குக் கள்ளத்தினம் உண்டாகி அவற்றைச் சாப்பிடுவது வழக்கம். சில ஸ்திரீகள் அடுப்புக்கரியை மிதமாய்ச் சாப்பிடுவதலால் ஓர் விதமாய்த் தங்கள் சரீரத்திற்கு வேண்டிய வஸ்துவை எடுத்துக்கொண்ட

போதிலும், அவ்வித இழிவான வஸ்துக்களிலும், மிதமிஞ்சிச் சாப்பிடுவதனை யுண்டாகும் அஜீரணத்திலும் கெடுக்கப்பட்ட ரத்தமானது சிசுவிடம் சென்றுவதனால்தான் அச்சிசுவுக்கு அங்கஹீனமும் நோய்களு முண்டாகின்றன. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகுமே. உயர்ந்த வஸ்துச்சளை மிதமாய்ப் புசிப்பதனால் அவை ஜீரணமாகி சரீரத்தோடு சேர்ந்து பலவீனத்தைக் கொடுப்பதுமன்றி, உதிரத்தையும் சுத்தப்படுத்திச் சிறந்த குணமுள்ளதாக்கும். அற்ப சுகவீனத்தினால் சிசுக்களுக்குண்டாகும் நோய்களோ பிறந்தபின் நீக்குவது மிகக் கஷ்டம். ஆதலால் தன் அங்கஸ்திரீக்கும் கர்ப்பஸ்திரீக்கும் தக்கதாகச் சரீர சௌக்கியத்தையும் ரத்த சுத்தியையும் உண்டுபண்ணத்தக்க வஸ்துக்களை மிதமாய்ப் புசிக்கவேண்டும். நீர்த்தாரைகள் சுத்தமாயிருக்க வேண்டுமானால் அவற்றிற்கு மூலதாரமாகிய வஸ்திக்சண்ணீரிலிருக்கும் அசுத்தத்தை உண்டுபண்ணும் அசுத்த வஸ்துக்களையும் அடிக்கடி மூத்திரத்தை யும் நீக்கி அதை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். மனுவானது உயிரணுக்கும் நடத்தைக்கும் அவயவங்களுக்கு மெல்லாம் பலமளிக்கும் இன்பதுன்பங்களுக்கும் மூலகாரணமாகிய ஹிருதயம் சுரக்கும் வஸ்திக்கண் என்னப்படும் எத்தனோ ஸ்திரீகளின் அவயவமும் அசுத்தமும் தர்க்காந்தத்திற்கு வஸ்துவானதுமுமாயிருக்கின்றன. பல நோய்களுக்கும் உபத்திரவங்களுக்கும் உற்பத்தி ஸ்தானங்களாகும் அநேக ஸ்திரீகளின் அவயவங்களையும் வஸ்துவளி ஓர்பத்தியோகிப் பிறக்கும் குழந்தைகள் அனுபவிக்க வேண்டிய துன்பங்களையும் நாம் நினைக்கும் போது கர்ப்பமுடைய ஹிருதயம் திகில் பிடிக்கவில்லையோ? ஸ்திரீகளே! உங்கள் சரீர சௌக்கியத்திற்கு வேண்டிய வழிகளைக் கண்டுபிடித்து அவற்றின்படி செய்யுங்கள். அப்பொழுது உங்கள் சரீரமும் ரத்தமும் சுத்தமாகும். உங்களுக்குப் பிறக்கும் சந்தானமும் ஆரோக்கியமுள்ளதாயிருக்கும். "நீங்கள் என் உலகத்தின் சாபமாயிருக்கவேண்டும்" உங்கள் சந்ததி என் நோய்களால் அழுந்தவேண்டும்? ஸ்திரீயே! நீ நோயாளியாயிருந்தால் பிள்ளைபெற விரும்பாதே. எனெனில் அவ்வித்துப் பிள்ளையால் உனக்கு உண்டாகும் உபத்திரவம் உன் நோயின் உபத்திரவத்தைவிட எண்மடங்கு அதிகமாகும். அதோடமட்டுமா? அப்பிள்ளைக்குப் பிறக்கும் பிள்ளைகளும் அவ்வித நோய்களால் அழுந்தவேண்டுமே. நீ பலவீனமாயிருந்தால் பிள்ளைப்பேற்றை விரும்பாமல் தேக அப்பியாசங்களிலும், சுத்த உணவுகளிலும் உனக்குப் பலமுண்டாக்கப் பார். எனெனில் உன் பலவீனத்தில் பிறக்கும் பிள்ளைகள் பலவீனர்களாயிருப்பதுமன்றி உன் சரீரத்திற்கும் அதிகச் சோர்வை உண்டு பண்ணுவார்கள், அதற்குக் காரணம் யார்? நீயோ உன் பிள்ளையோ? உன் பிள்ளையல்ல, நீயே அதற்கு உத்

தாலாதம். தெய்வம் உனக்குச் சுயபுத்தியையும் சித்தத்தையுங் கொடுத்திருக்கிறார். ஆகலால் உன்னிடத்திலேயே கணக்குக் கேட்பார். சுகமுள்ள பிள்ளை பெறுவதற்கு உனக்குச் சரியான காலம் எது என்று கண்டுபிடிப்பது உன் கடமையே. கானல்ல என்புரு ஷனை அதற்குக் காரணம். என் புருஷன் சித்தத்திற்கு இணங்குவதே என் கடமையன்றே? என்பாயோ? உன் புருஷனுக்குக் கீழ்ப்படிவது உன் கடமையென்று எண்ணி அவன் உன்னைக் கிணற்றில் விழு என்று சொன்னால் அதற்குள் பாய்ந்துவிடுவாயோ? இருவர்க்கும் சுகத்தையும் சௌக்கியத்தையும் உண்டுபண்ணுகிற விஷயங்களில் அவன் சொற்படி கேட்டு நடப்பது உன் கடமை. ஆனால் உனக்கும் உனக்குப் பின்வருகும் சந்ததிக்கும் ஓயாத உபத்திரவத்தைக் கொடுக்கும் காரியங்களை அவன் செய்யச் சொன்னால் அவைகளுக்கு இணங்குவது உன் கடமையன்று. "அடாது செய்வார் படாது படுவாரோ."

"தேகந்தயங்கி விழிசொருகிச் சிந்தைகலங்கிச் சகிக்கவொண்ணாச்
சோகந்தொடங்கி மிகபலதலைபந் தொடியாமென்னைத் தழுவுருத்தி
மோகந்தீர்த்துத் துயர்தீர்த்து முனியாதின்ப நுகர்ச்சியளுறுத்
தாகந்தீர்த்து தவிக்கவிடல் தகுமோவுமக்கு கோமானே."

என்றுசொல்-நீ பிள்ளைபெறச் சக்தியற்றவளாயிருக்கும்போது மிருகத்தைப்போல மாம்ச இச்சையை நிறைவேற்ற இடங்கொடுப்பது நீசத்வமாகுமே. புத்தியற்ற அசைகமிருகங்கள் முதலாய கருத்தரிக்குங் காலம் வருமளவும் மாம்ச இச்சைகளை மட்டும் நிறைவேற்ற விருப்பங்கொள்ளுகிறதில்லையே. ஆனால, பெண் மிருகமே அவ்விதத இச்சைக்கு இடங் கொடுக்கிறதில்லை. புத்தியற்ற மிருகத்திலும் நீ தாழ்வா? ஐயோ நீ மனுஷியாய்ப பிறந்து உலகத்திற்குச் சாபத்தை உண்டுபண்ணுவதைவிட மிருகமாயப் பிறந்திருந்தால அல்லது பிறவாதிருந்தால் உனக்கு நலமாயிருக்கும். "கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று. அதனால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்." நீதி: 14: 27.

தாயின் தன்மைகள் பிண்டத்திற் ருவுதல்.

தனது உதாரத்தில உற்பத்தியாகும சிசுவின்மேல் தாய்க்கிருக்கும வல்லமையைக் காட்டுமபொருட்டு முந்தின அதிகாரங்களில சிலவினது அமசங்களெலலாம் தாயின் அவயவத்திலேயே ஆரம்பித்துப் பூரணமாகின்றனவென்றும், அச்சிசுவினது அம்சங்களுக்கு மேவணடிய உபகாரணங்கள் தாயின் உதாரத்தினிருந்தவரவேண்டுமென்றும் காணபித்தோம். இவ்விடத்தில் தாயினது உதாரத்தின் மூலமாய்ச் சிசுவிடம் வந்தசேரும உபகாரணங்களில் அதாயினது தன்மை பதிந்திருக்க மேவண்டுமென்பதை நிரூபிப்போம்.

தாயின் தன்மைகள் சரீரத்தினது தன்மை, ஆத்துமாவினது தன்மை என இருவகைப்படும். சரீரத்தின் தன்மை தாய்க்கிருக்கும் பலம், சௌக்கியம், சவுந்தரியம் முதலியவைகளால் தோன்றும். ஆவியின் தன்மையோ அவளுக்கிருக்கும் ஞானம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய அவளுடைய குணம், நடத்தை, விருப்பம், பாசம், அன்பு என்பவைகளால் தெரியவரும்.

தாயினது உதிரம் இருக்கும் ஸ்திதிக்குத் தக்கதாக அவளது சரீரத்தின தன்மையும் இருக்கவேண்டும் என்பது யாவர்க்கும் தெற்றென விளங்கும். எவ்வெனில் தாய் சாப்பிடும் அன்னமானது ரசமும் சக்கையுமாகப் பிரிந்து சக்கை, மலம், மூத்திரம், வியர்வையாக வெளியே வந்துவிடுகின்றது. ரசமோ உதிரமாக மாறி ரத்தக்குழாய்களின் மூலமாய் ஒன்றொன்று உறுப்புகளுக்கும் சென்று அவற்றிற்கு வேண்டிய வஸ்துக்களைச் சமதரிக்கின்றது. ஆதலால் ரத்தமானது எந்த ஸ்திதியிலிருக்கிறதோ அதற்குத்தக்கதாக தாயினது மூளை, இருதயம், நுரையீரல, வயிறு, ஈரல, கண், காது, தோல், நரம்புகள் முதலியவற்றின் தன்மைகளுமிருக்கும். தாயினது அவயவத்திற்கு வேண்டிய வஸ்துக்களைச் சமதரிக்கும தாயின் ரத்தமே சிசுவினது அவயவத்தையும் போஷிக்கின்றது. ஆதலால் தாயினது உதிரத்தில் பதுமகி யிருக்கும் அசுத்தமும் வியாதிகளும் தாயினது அங்கங்களுக்கு மட்டுமல்ல, சிசுவினது அங்கங்களுக்கும் செல்லுகின்றன. ஆகையினால சிசுவினது அபசங்களுக்குச் செலவும் உபகரணங்கள் குறைவுள்ளவைகளாயும் நோய்ப்பட்டவைகளாயு மிருக்கின் அச்சிசுவின அங்கங்களுக்குள் சென்ற பின்பும் குறைவுள்ளவைகளா யிருந்து அதற்கு ஞாயையும் உபத்திரவத்தையும் உண்டுபண்ணும்.

தாயினது உதிரமிருக்கும் ஸ்திதிக்குத் தக்கதாக அவளுக்குப் பிறக்கும குழந்தைகளின சரீரத்தினது ஸ்திதியும் இருக்கும எனபதற்கு நாம் அநேக அத்தாட்சிகளைக கண்டிருக்கின்றோம. எப்படியெனில்:— அதிகமாய் மாமிசத்தைத் தின்று தங்கள சரீரங்களை வளர்க்கும் சில ஜாதி ஸ்திரீகளுக்குக் குழந்தைகள் பிறந்தபின் பாலில்லாமற் போகுல புற்றுண்டுகளைப் புசிக்கும பசு, ஆடு முதலியவற்றின் பாலை எவ்வளவு பக்குவப்படுத்திக் கொடுத்தாலும், அவைகள் சரியானபடி ஜீரணித்துக் குழந்தைகளின் சரீரத்தில் சேராததால் அக்குழந்தைகள் நாளுகுநாள் மெலிந்தும்போவதை நாம் பார்க்கிறோம. அப்படியே கந்தமூல வஸ்துக்களைப் புசிக்கும் பிராமண ஸ்திரீகளின் குழந்தைகளுக்கு மாமிசம் புசிப்பவரின பாலினால் அதிக பிரயோஜனம் உண்டாகிறதில்லை. அக்குழந்தைகளுக்குப் பசுவின் பாலைப் பக்குவப்படுத்திக் கொடுப்பதும் அநேக விஷயங்களில் சிறந்ததாகும.

குழந்தை பிறந்த பன்னிரண்டு முதல் பதினெட்டு மணிக்குள் தன் தாயின் பாலேயை சாப்பிட வேண்டும் எனவும் ஏற்பாடு மிகச் சிறந்ததும் சாஸ்திர விதிகளுக்கு ஒத்ததுமாயிருக்கிறது. ஏனெனில்—தன் உதரத்திலிருந்து அசுவை வளர்த்த தாயின உதிரமே அது பிறந்தவுடன் பாலாக மாறி அக்குழந்தையை வளர்க்கும் சக்தியுள்ளதாயிருக்கின்றது. மேலும் கர்ப்பூல வஸ்துக்களைப் புசிப்பவர்களின் குழந்தைகட்கு மாமிசத்தை வாயில் வைத்த வுடன் அருவருப்புத் தோன்றி வாந்தி பண்ணுவதை நாம் பலதட வைகளில் காணுகிறோம். தாயினுடைய இரத்தத்தில் என்னென்ன வஸ்துக்கள் சேர்ந்திருக்கின்றன எனபதை அறிந்து கொண்டால, அத்தாயினது உதரத்திலிருந்து பிறந்த குழந்தையை வளர்க்கும் வஸ்துக்களை எளிதில் கண்டுகொள்ளலாம.

தலைவலி, வயிற்றுச்நாய், கண்டமாலை, பிளைவ, குஷ்டரோகம் முதலிய வியாதிகள் உண்டாவதற்குக் காரணம் இன்னதென்று திட்டமாய்ச் சொல்லமுடியாதாயினும் அவைகள் உண்டாகும் சரீரத்தில் ஏதோ ஒரு குறைவிருக்க வேண்டுமென்பது உண்மை. சற்றே வலி தோன்றுவதால் சரீரத்தில் ஏதாவது குறைவு உண்டாயிருக்கவேண்டும். மற்ற சாதாரண வியாதிகளும் மரணமும் சரீரத்தின் குறைவினால் மட்டும் உண்டாகாமல் மற்றும் புறக்காரணங்களாலும் உண்டாகலாம். ஆனால் மேற்குறித்த வியாதிகளும் அவற்ரு லுண்டாகும் உபத்திரவமும் மரணமும் அநேக மாயச சரீரத்தின குறைவினாலேயே உண்டாகின்றன. இவ்வியாதிகள் பாலரையும் குழந்தைகளையும் பற்றிப பிடிக்கின அவர்கள் தங்களாயுள் பரியந்தம அவற்றின உபத்திரவத்தை அனுபவித்தே தீரவேண்டும். அக்குழந்தைகள் பிறந்தபின் தாயானவள் எவ்வளவாய்க கவலையுடுத்திப் பாதரித்தபோதிலும் அவ்வியாதிகள் ஒருகாலம் தோன்றியபின் அவைகளை முற்றிலும் நிக்குவதரிது. ஆனால் கர்ப்பிணியானவள் சரியானபடி கவலையுடுத்த தன் சுகத்தைப் பேணுவதனல் பின்பு அவ்வியாதிகளால உண்டாகும் உபத்திரவங்களுக்குச் சற்று நீங்கியிருக்கலாம்.

இரண்டு குழந்தைகள் ஏக காலத்தில் ஒரே இடத்தில் பிறக்கின்றன. ஒன்று சுகமாகவும் பிரகாசமும் பருமனாயுந் துள்ளிக் குதித்து விளையாடுகின்றது. மற்றொன்று எழுந்திருக்கவும் சக்தியற்று நோயால வருந்துகின்றது. இதற்குக் காரணமென்ன? ஒரு குழந்தை தன் தாயினிடத்திலிருந்து நோய்க்கு எதிராத்து நிற்கத்தக்க சுகமேகத்தைப் பெற்றிருக்கின்றது. மற்றொன்றுகமோ அதன் தாய் எளிதில் நோயால வருந்தத்தக்க பலவீன சரீரத்தைக் கொடுத்திருக்கிறாள். இப்படி அக்குழந்தைகள் படும் உபத

திரவத்திற்கும் சாவுக்கும் காரணம் யார்? எல்லாம் தெய்வச்செய லால் நடக்கிறது எனறு சொல்வது போக்கேயாம். அது ஒருவன் மேலொருவனைக் கத்தியினால் குத்திப்போட்டு உன்னைக் குத்தினது நானல்ல தெய்வமே எனறு சொல்வதற்கு ஒப்பாகும். ஓர் ஸ்திரீக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. அவளுடைய சரீரமோ அதிகச் சுகமும சுறுசுறுப்பும் பலமுள்ளதா யிருந்தது. அவள் அறுபது வருஷம் உயிரோடிருந்து புத்திரர்களால் அதிக வருத்தப் படாமல் மரித்தாள். அவளுடைய பிள்ளைகளோ விவாகஞ்செய்த இரண்டு வருஷத்திற்குள் ஒருவனும் விவாகஞ் செய்வதற்கு முன னமே ஸ்திரீலோலனுடைய தினித்த பற்றவனும் அகாலமரணத்தினால் மரித்தார்கள். இதன காரணமென்ன? தாய் சௌக்கியமுள் ளவளா யிருக்க அவள் பிள்ளைகளுக்கு அகாலமரணம் எப்படி வந் தது? எனறு கேட்டால், தாய் சௌக்கியமுள்ளவளாய் இருந்த போதிலும் அகாலமரணத்திற்குரிய அறிகுறிகள் அவளுடைய ரத் தத்தில் கானறிப் படுகின்றன எனறும் சொல்லலாம். அதன் காரணத்தை விசாரிக்குமபோது தாயின் வயிற்றில் அக் குழந்தைகளிருக்கும்போது அவள் மிதமிஞ்சி வேலை செய்ததாக வும், அசுசிகளின் வளர்ததிக்குமவண்டிய சத்துக்களையும் பல த்தையும் மற்ற விஷயங்களில செலவழித்து விட்டதாகவும் தெரிய வந்தது. ஆதலால் அவளுடைய உதிரமானது சத்துக் குறைந்த தாக விருந்து அசுசுக்களுக்குள் சென்று அவயறறிற்குப் பல வீனத்தையும் வியாதியையும பிறப்பித்திருகக்கிறது. ஓயாத வேலை யினாலும ஓயாத முயற்சியினாலும தாயினது சத்துக்குறைந்து தளர்ச்சியடைகின்றது. அவ்விதமாகவே அக்குழந்தைகட்கும் சத்துவங்குன்றி ரோயுண்டாகின்றது. தாயானவள் தான் கர்ப் பிணியா யிருக்கும்போது நல்ல காறறைச் சுவாசித்து நற்பானங் களைப் பருகி, சுத்த உணவைபபுசித்து, அதிக கஷ்டமற்ற வேலை களைச் செய்வதனால தன குழந்தைகளின் அவயவத்திறகு வல்ல மையையும் சுறுசுறுப்பையும் வன்மையையும் உண்டுபண்ணு வாள். ஒவ்வொரு ஸ்திரீ புருஷரின் சரீரத்தின் நிலைமையைச்சற்று கவனிபபார்களாகின அவர்களபிறக்குமுன் தங்கள் தாயின வயிற் றில சிசுக்களா யிருககும்போது அவர்கள சரீர வளாச்சிக்கு வேண்டிய உபகரணங்களில தாயின் உதிரத்தினது ஸ்திதியும பதி திருக்க வேண்டுமென்பது தெளிவாய் விளங்கும். ஸ்திரீயே! நீ அசுத்த ஆகாயத்தைச் சுவாசித்து, ரோயுண்டாகும் உணவைப் புசித்து, உனக்குக கேடை உண்டாக்கும வேலைகளைச செய்து, மிதமிஞ்சிப் போகஞ் செயவதனால உன் உதிரத்தைக கறைப்படு த்தி பலவீனமாக்கும்படிபாழுது இவ்விஷயதனைப் பற்றி சற்று யோசித்துப்பார். இதோ! உன்னைச் சுறறிலும் அசாமான வியாதிகளால் அல்லலைப்படடுச் சிறுபிராயத்திலேயே மடியும்

ஆயிரக் கணக்கான குழந்தைகளின் கூக்குரலையும் புலம்பலையும் சற்று கவனித்தாள் கேள். அன்னையென் றழைக்கப்பட அவளு டன் காத்திருக்கும் அருமை நாயகியே! இதோ உன்னை மாதா வென்று பகிழ்ச்சியுட னழைக்கும் மதலை உன் உதரத்திலிருந்து மன்றாடிக் கேட்டுக்கொண்ட வின்ணப்பத்தை உன் மனதிலை கவனித்து உன் குழந்தைக்காக உள்ளிடத்திலிருக்கும் ஈவு ஊற் றைச் சுரக்கும் சௌக்கியபூமுள்ளதாய் வைக்கப்படாய். இயற்கை அமைப்புக்கு விரோதமான சாரியங்களைப் புத்தியினாய்ச்செய்து உன் உதிரத்தைக் கறுப்படித்தி உன் குழந்தையின் சௌக்கிய த்தை வீணைய்க் கெடுத்துவிடாதே.

இதுவரையில் தாய் சாப்பிடும் எண்தக்கலுக்குத் தக்கதாக அவளுடைய உதிரம் மாறி, அவ்வதிரத்தினது வேறுபிக்குத் தக்க தாக அதனல் போஷிக்கப்படும் சிசுவின் சரீரத்தினது தன்மையும் மாறும் என்பதைக் கவனித்தோம். இனிமேல் தாயினது புத்தி மாவின் தன்மைக்குத் தக்கதாக அவளுக்குப் பிறக்கும் குழந்தை களின் சுபாவமும் இருக்கும் என்பதை நிரூபிப்போம்.

குழந்தைகள் தாயின் சரீரத்தினது தன்மையைப் பெற்றுக் கொள்வது போலவே அத்தாயின் தன்மையும் அதந்தரித் தக்கொள்ளுகின்றனவோ என்னும் கேள்விக்கு நேரான விடை கொடுப்பது சற்று வருத்தமா யிருந்தபோதிலும், சிசு உற்பத்தி யாகிக்கும்பொழுது தாயினது அத்தாயின் தன்மை எப்படி யாக்கின்றதோ அப்படியே அவளுக்குப் பிறக்கும் குழந்தைக ளின் சுபாவமும் இருக்கும் என்பதைக்காட்டிலும் ஓரேக அத்தாட் சிகள் நம்முடைய அனுபவத்திலை அறியலாம். உதாரணமாக:— பலசாக்குக்கடை வைத்திருந்த ஓர் வாலிபன் ஒரு பெண்ணை விவாகம் செய்தான். விவாகம் செய்தபின் சிறிது காலமாய் இரு வரும் மிகச் சந்தோஷத்துடன் சுகித்திருந்தார்கள். அனைவ னும் தன் குடும்பத்துக்கும் போதுமான திரவியம் சம்பாதிக்க வேண்டுமென்னும் ஆசை மேலிடவே, சாதாரணமாய்த் தான் விற் க்கூடியதைவிட அதிகமான சரக்குகளை வாங்கிக் கட்டி வைத் தான். அக்காலத்தில் அவன் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்குப் பின் ஏறக்குறைய ஒரு வருஷகாலமாய்த் தான் வாங்கிய வஸ்துக்களைச் சிக்கிரம் விற்றுத் திரவியம் சம்பா திக்கும்படி இரவும் பகலும் விடாமுயற்சியாயிருந்தான். அவன் மனைவியோ மிகவும் பொறுமையும் அன்புமுள்ளவளா யிருந்து தன் புருஷனுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்துகொண் டிருந்தாள். ஆனல் அகவிலை மலிந்தபடியால் தங்களுக்கு நஷ் டம் நேரிடுமென்பதை அவர்களறிந்து இரவும் பகலும் கவலைப்

பட்டு வாங்கிய சரக்குகளை எவ்விதமாய் விற்கலாம் என்று ம
வருத்தமடைந்தார்கள். அப்படியே அவளுக்குப் பெருகவ்டம்
கண்டது. அக்காலத்தில் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை
பிறந்தது. இரு குழந்தைகளும் சௌந்தரியமும், சுகமும், பலமு
முள்ளவைகளாய் வளர்ந்தன. ஆனால் அவர்களுடைய குணங்க
ளிலோ அதிக வித்தியாசம் தோன்றிற்று. தாயும் தகப்பனும் சிறிது
காலம் சஞ்சலப்பட்டு இரண்டு மூன்று வருஷத்திற்குள் விடா
முயற்சியினாலும் யூகத்தினாலும் திரவியம் சம்பாதித்து முன்போ
லவே சந்தோஷமாய்க் காலங்கழித்து வந்தார்கள். அப்போது
ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்குப் பிற்பாடு நாட்செல்லச்
செல்ல மற்றக் குழந்தைகளும் பிறந்தன. ஆனால் மூத்தபையனே
வெகு வெடுவெடுப்பும் துடுக்குமுள்ளவனாயிருந்து தன்
தாணிக்கெட்டாத காரியங்களின் மேல் அவாவுள்ளவனாயிரு
தான். எவன் ஒருச்காலும் வேலையின்றி ஒழிந்திருக்கமாட்டான்,
எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவனாயிருந்து ஏதாவது ஒரு வேலை
யைச் செய்துகொண்டேயிருப்பான். பதின்மூன்று வயதில் தன்
னோடு வாசித்த பையன்களெல்லாரையும்விட அதிகப் புத்திக்
கூர்மையுள்ளவனாயிருந்து உபாத்தியாயர் சொல்வதை உடனே
கிரகித்துக்கொள்ளும் சக்தியுடையவனாயிருந்தான். பதினான்கு
வயதில் இவனுக்கு சரீரோகத்திற்குரிய குறிகள் தோன்றின.
ஏறவா அவன் சரீரம் மெலிவடைந்து, விருத்தாப்பியனைபோல்
தளர்ச்சியடைந்து பதினெட்டு வயதில் மரணமடைந்தான். இரண்
டாவது பிறந்த பெண்ணோ மிகவும் அபரிக்கையும் ஆரம்பமுதல்
நம்பிக்கையற்றவளாயிருந்தாள். அவளுடைய கண்கள் குழி
விழுந்து அவளுடைய முகத்தில் சந்தோஷமே தோன்றினதில்லை.
அவள் மிகச் சோம்பலும் எளிதில் அசைக்கப்படக் கூடியவளாய்
யிருந்தாள். அவளை எந்த வேலைகளிலும் எனக்கு வெட்கமா
யிருக்கிறதம்மா, என்னால் அந்த வேலை செய்யமுடியாது, நான்
என்றான் இந்த உலகத்தில் பிறந்தோமே வென்று உலகத்தின்
மேல் வெறுப்பும், வேலையில் பிரியமற்றவளாயும் யிருப்பாள். பதி
னைந்து வயதில் அவளுக்குருதுவாகமாயிற்று. அவளிடத்தில் அன்பும்
சுறுசுறுப்புமில்லாததை அவன் புருஷன்கண்டு அவளைத் தனியே
விட்டுத தூரதேசம் போய்விட்டான். சாதாரணமாய் அவளுக்
கிருக்கும் தர்க்குணம் மிகவும் அதிகரித்து ஓயாத துயரத்திலமிழ்
ந்து பைத்தியம் பிடித்தவள்போல் புலம்பிக்கொண்டிருப்பாள்.

"இப்பிறவிதனிற்பிரியா திருந்து சுகங்கொள்வது போலினியெக்காலு
மெப்பிறவியெடுக்கினுமா னுனைப்பிரியா திருப்பதுமெய்யென் றீரிப்போ
தப்பிதமாயடியள் தனியிருந்தேங்கி யுடல்விடுக்குந் தன்மைகாண
வொப்பினதோவுமதுமன தொருணமயிதோ வுவமையிலாதுயர்சோமானே."

" அஞ்சலென் றணைப்புறத்த வன்னை சொன்மறுக்கவும்
கொஞ்சு பைங்கிளிக்குறை கொடாதுளம் வெறுக்கவும்
பஞ்சணைப் புறத்தினை யும்பணை பதைக்கவும்
வஞ்சியே யெனையகன்செல் மாயமென்ன மாயமோ."

அவளுடைய தகப்பன் வீட்டில் சாப்பாட்டுக்குக் குறைவில்லாம லிருந்தபோதிலும் அவளைக்கண்டு பேசினால், ஐயோ கஷ்டமாயிருக் கிறதே, நான் செத்தாலும் நன்றே என்று புலம்பிக்கொண்டே யிருப்பாள். அவளுக்கு ஒரு குழந்தை இருந்தது. அக்குழந் தையை எள்ளளவும் பாதுகாக்கவில்லை. அதற்கு அன்னம் ஊட்ட வேண்டுமே, துணி உடுத்த வேண்டுமே என்னும் கவலை அவளுக் குச் சிறிதேனும் கிடையாது. வீட்டிற்கு வந்த மனுஷரிடத்தில் அன்பாய்ப் பேசி மரியாதை செய்கிறதுமில்லை. இவ்விஷயத்தைப் பற்றி அவள் பெற்றோரிடத்தில் இதன் காரணமென்ன, இவள் சிசுவா யிருக்கும்பொழுது உங்களுடைய தொழிலென்ன என்று விசாரித்தபொழுது அவர்களுடைய பூர்வோத்தரமும் சரித்திரமும் அறியவேண்டும். இவ்விதமாய் ஒரே தாய்க்குப் பிறக்கும் இரண்டு குழந்தைகளின் சுபாவம் ஒன்றுக்கொன்று விரோதமா யிருப்ப தற்கு, ஒவ்வொருகுழந்தையும் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போது அத்தாயினது ஆத்மா இருந்த ஸ்திதியே காரணம் என்பதை நிரூ பிக்க ஒவ்வொரு மனுஷருடைய குணமும் சுபாவமும் அத்தாட்சி யாகும்.

மனுஷரை ரக்ஷிக்கவும் அழிக்கவும் அரசாளவும் அவர்களுக் கு வேண்டிய அன்னவஸ்திரங்கள் வீடு முதலியவைகளை உண்டு பண்ணுவதற்குமுரிய வழிகளைக் கண்டுபிடிக்க மனுஷரது யோச னையும், புத்தியும் எவ்வளவு தூரமோ சென்று இருக்கின்றன. ஒரு வன் வானசாஸ்திரத்தில் நிபுணனாகிறான். வேறொருவன் பூமிசாஸ் திரத்திலும், மற்றொருவன் தத்துவம், வேதாந்தத்திலும், இன்னும் சிலர் அங்கணிதம், பீஜகணிதம் முதலிய பல சாஸ்திரங்களிலும் நிபுணராகின்றனர். இவ்விதமாய் மனுஷருடைய புத்தியும் ஆலோ சனையும் வெவ்வேறு வழிகளை நோக்குவதற்குக் காரணமென்ன? சிலர் பூர்வ ஜன்மத்தில் ஒவ்வொருவரும் செய்த கருமத்துக்குத் தக்கதாய் பிரம்மா ஒவ்வொரு மனுஷனுடைய தலையிலும் எழுதி வைத்த விதி என்னப்படும் ஊழ்வினையே என்பார்கள். தாயான வள் தனது உதரத்தில் சிசுவானது உற்பத்தியா யிருக்கும்பொ ழுது தனது ஆத்துமாவின் ஸ்திதியை அக்குழந்தைக்குட் புகட்டு வதே இதன் காரணம். பத்துவயதுள்ள ருக்மணி என்னும் ஒரு பெண் தன் வீட்டில் சற்று நேரமாவது தரிக்கிறதில்லை. ஒரு காட் டுக் குருவியைப் பிடித்துக் கூண்டில் வைத்தால், அது எப்படி குதித்துக் கொண்டு வெளியேறப் பார்க்குமோ அப்படிப்போல்

அங்குமிங்கும் ஓடிக்கொண்டு திரிவாள். வீட்டிற்கு வீடுபோய்த் தன் சிநேகிதிகளைக் கூட்டிக்கொண்டு அங்குமிங்கும் திரிவதேயல்லாமல் வேறென்றிலும் அவளுக்குப் பிரியமில்லை. சற்றுநேரம் வீட்டிலிருக்குப்படி செய்தால் பிடித்து அடைத்துப் போட்டதுபோலிருக்கிறதே என்று துடிப்பாள். அவள் தாயினிடத்தில் இந்தக் குழந்தை வயிற்றிலிருக்கும்போது நீ என்ன தொழில் செய்துவந்தாய், உன் புருஷனுடைய நடவடிக்கை என்ன என்று கேட்டதற்கு தன் புருஷன் மிக்க குரூரமுள்ள குடிகாரனாயிருந்தபடியால் அவனுடைய அடிக்குத் தப்பும்படி குழந்தையுண்டாயிருக்கும்பொழுது வீட்டுக்கு வீடுபோய்த் தன் வருத்தங்களைச்சொல்லி ஆறுதலடைந்ததாகவும் இவ்விதமாய்த் தன்னுடைய காலத்தை அயலார் வீடுகளிலேயே செலவழித்ததாகவுஞ் சொன்னாள். இவ்விதமாய் அயலார் வீடுகளுக்குப் போகும்படி தனக்கிருந்த ஆசையைத் தன்னுடைய குழந்தையின் மனதில் பதித்தனள். இப்படிப்பட்ட உதாரணங்கள் இன்னும் அநேகமுண்டு. அவற்றை இங்கு எடுத்துக் காட்டுவது அவசியமில்லை. அவற்றை ஒவ்வொருவரும் தாமே பார்த்து அறிந்துகொள்ளலாம்.

நன்மை, தீமை, கற்பு, உபவாசத்தினாலும் ஜெபத்தினாலுமுண்டாகும் நன்மை, இளமைப்பதனாலும் கண்டனையினாலுமுண்டாகும் பிரயோஜனம், மோக்ஷம், நரகத்தைப் பற்றிய அபிப்பிராயங்கள் முதலான பொதுவிஷயங்களைப் பற்றி, உலக முழுவதிலும் பரவியிருக்கும் நாலுஜாதி பாஷைக்காரரும், பலதேசங்களிலுள்ள பல மதஸ்தர்களும் ஒரே பொதுவான எண்ணங்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான அபிப்பிராயங்கள் ஆதிகாலந்தொடங்கிப் பலதேசங்களிலும் ஒரே மாதிரியாயிருப்பதால் நம்முடைய தலைமூளையில் பதிந்திருக்கும் முத்திரையே அதற்குக் காரணம் என்னலாம். இது சரி அல்லது தப்பிதம் இது நீதி அல்லது அநீதி என்று கண்டுகொள்ளுந் தன்மை சகல மனுஷருக்கும் ஒரே மாதிரியாயிருப்பதால் அனைவர்களும் யாதொரு காரணமுமின்றித் தற்செயலாய் உண்டாயினவென்று சொல்லவுங்கூடாது. ஒவ்வொரு மனுஷனுடைய நடை உடைபாவனைகளில் விகற்பமிருந்தபோதிலும் கண், கால், கைகள் முதலிய அவயவங்களை உடைத்தாயிருப்பதில் சகல மனுஷருக்கும் ஒற்றுமையிருப்பதுபோல், நன்மை தீமை, நீதி அநீதி, சரி தப்பிதம் முதலியவற்றை யுணரும் சுபாவத்திலும் சகல மனுஷரும் ஒத்திருக்கிறார்கள். ஆத்துமாவின் கிரியைக்குத் தக்கதாய் உதிரத்தினவஸ்திதியும் மாறுகின்றது. இந்த ஓட்டமும் உஷ்ணமும் ஆத்துமாவினது எண்ணத்திற்கும் உணர்ச்சிக்குந் தக்கதாய் அதிகரிக்கும். சரீரமானது ஆத்துமாவுக்காக இருக்கிறதேயன்றி ஆத்துமா சரீரத்துக்காகவல்ல, ஆத்துமாவே சதாகாலமும் அழி

வற்று எப்பொழுதும் வளர்ந்துகொண்டிருக்கிற ஓர் வஸ்து. நாம் சரீரத்தில் வஸ்துரூபந் தரித்துக்கொண்டிருப்பதுபோல் ஆத்துமா சிறிது காலத்திற்குச் சரீரத்தைப் போர்த்துக்கொண்டிருக்கிறது. ஆதலால சரீரத்தினது அற்ப சுகத்துக்காக அழியாத ஆத்துமாவை வெட்கப்படுத்தி இழப்பது நல்லதல்ல. சரீரத்துக்கு என்ன நேரிட்டபோதிலும் அழியாத நித்ய வஸ்துவாகிய ஆத்துமாவைப் பரிசுத்தமாய் வைத்துக்கொள்வது நமது கடமை. ஆயினும் சரீரமும் ஒன்றாயிருக்கும் மனுஷனில மாம்சத்திற்கும் ஆத்துமாவிற்கும் போராட்டமுண்டாகாது. ஆத்துமாவும சரீரமும ஒன்றுக்கொன்று உதவிசெய்கின்றன. சரீரத்தினது ஒவ்வொரு அரிசையக்கும் மூளை, இருதயம், வயிறு முதலியவற்றி லுண்டாகும் மாறுதலுக்குந் தக்கதாக ஆத்துமாவினது தணமையும மாறும். தலைவலி, பல்வலி, வயிற்றுநோய் முதலியவற்றால் சரீரம் வருந்தும் பொழுது ஆத்துமாவை அமைதியும் சாந்தமுமுள்ளதாய் வைத்துக்கொள்ள முடியாது. அவ்விதமாகவே ஆத்மாவினது தன்மைக்குத் தக்கதாகச் சரீரத்தினது தணமையும் மாறும. ஆத்மாவில் விசனம், துக்கம், மோகபம், புத்திகலங்குதல, மனச்சோர்வு முதலியவை உண்டாயிருக்கும்போது சரீரதையும் அவைகள் தாக்குகின்றன. சரீரத்தினது சுகமும் ஜீவனும மனுஷன் பிறகுமுன் அவனுடைய அவயவத்தில என்னென்ன உபகரணங்களை சேர்த்தனவோ, அதற்குத் தக்கதாயிருக்கும். அவ்விதமாகவே ஆத்துமாவின் சுகமும் வலிமையும் தாயின அவயவத்திலிருந்து பெற்றுக்கொண்ட சுபாவங்களுக்குத் தக்கதாக மாறும். இவ்விதமாக மனுஷனுடைய ஆத்துமாவும் சரீரமும் ஒன்றுக்கொன்று உதவிசெய்து ஒன்றின் ஸ்திதிக்குத் தக்கதாக மற்றதின் நிலைமையும் மாறும்.

சிசுவின்மேல் தாய்க்கிருக்கும் வல்லமை.

இவ்வுலகத்தில் ஒவ்வொரு மனுஷனும் அனுபவிக்கும் சுகதுக்கங்கள் அவன் சரீரத்தினது அமைப்புகளுக்குத்தக்கதாக விருக்குமென்றும், ஒவ்வொரு மனுஷனும் தாயின் கர்ப்பத்திலிருக்கும் போது தாய் எந்த ஸ்திதியி லிருக்கிறாளோ அதற்குத் தக்கதாக அவனுடைய சரீரமும ஆத்துமாவும் அமைக்கபடுமென்றும் கவனித்தோம். தாயினது இராஜ்ஜியமும் வல்லமையும் எவ்வளவு தூரம் வியாபித்திருக்கிறதென்றும், எவ்வளவு காலம் நிலைக்கத் தக்கதென்றும் யாரால் சொலலமுடியும? தாம்பரம முன்னுக்கு வரும் வழிகளைக் காட்டிக்கொடுக்கும் உபாத்தியும், நீதி நியாயங்களை அறிவித்து உணர்த்தும நியாய சாஸ்திரியும், நமக்கு இவ்வுலகத்தில் நடக்கும் சங்கதிகளை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசியும்,

தெய்வம் நம்மை வைக்கச் சித்தமாயிருக்கும் ஸ்திதியை எடுத்துக் காட்டி நித்தியானந்த வெளி ஒளியைத் தரிசிக்கும் மெய்ஞ்ஞான வழியைப் போதிகும் உபதேசியும், நமக்குச் சுகமாகிய மோக்ஷ வழியைக் காட்டி நம்மை இரக்ஷிக்கும் இரக்ஷகருமா யிருக்கிறாள்.

சர்வசமயசமரசக்கீர்த்தனை.

தாய் தந்தையரை நமஸ்கரித்தல்

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

கண்ணிகள்.

1. உற்றவரீர எனைப் பெற்றவரீரதினம்
உமக்கே நமஸ்காரம்
முற்றுமேநீர்செய்த உதவிக்கு நான் என்ன
மொழிவேன் உபசாரம்

2. பத்தியமாதம்என்னை வயிற்றிலேசுமந்து
பலதுயர் சகித்தீர
எத்தனைபிரான சங்கடமுடனேஎன
சன்றுநீர் வகித்தீரே

3. பெற்றீர்வளர்த்தீர் பெயரும்இட்டீர்ஜீவப்
பிரதிஷ்டை செய்வித்தீர
உற்றஉம்உதிரத்தை முலைப்பாலாகவே
ஊட்டியே உய்வித்தீர

4. தேனினும்அமிர்தினும் இனிதெனக்குநீர்
செப்பிய தாலாட்டு
வானினும்அமரர்க்கு வரும்மாஇதம்பால்
மங்களத் திருப்பாட்டு

5. மாந்தவியாதிகள் எனையணுகாமலே
மருந்துகள் புகாடுத்தீர
வாந்தியும்மலஜல அசுத்தமும்சகித்தனை
மார்புற எடுத்தீர.

6. உடல்உயிர்சகலமும் நீர்தந்ததெயன்றி
உண்டோ இனிவேறு
அடரும்உலகலாம் உமக்களித்தாலுமே
ஆமோ ஈகம்மாறு

7. சிவன்போல்நீர்என்னை வளர்த்திட்டஅருமையைச்
சேப்பலன்னல் ஆமோ
நாவேஆயிரம் இருக்கிணும்நீர்செய்த
நன்மையைச் சொல்லப்போமோ

8. கவலையெல்லாம்என் கவலைபல்லால்வேறு
கவலையொன்றறியீர
புவியிலேஎன்சுகம் அல்லதுஇவ்வுருவு
பொருளைக் குறியீர

9. பாலவியாதிகள் எனையணுகாமலே
பத்திபம் பிடித்தீர
காலமெல்லாம்பல விரதங்கள் அநுஷ்டித்துக்
கருமங்கள் முடித்தீர

10. இரவுமுழுதுமே தூங்காதிருந்துநீர்
எந்தனைக காத்தீர
அரவுமுதற்பல ஜந்துக்களால்வரும்
ஆபதனைத் தீர்த்தீர

11. தாணியில்என்சுகம் வேண்டியேநீர்பல
தருமங்கள் செய்தீர
கருணைசெய்கும்படி கடவுளைதுதித்துரற்
காணிக்கை செய்தீர

12. சற்றுநீர்என்னைமுன் மறந்திருந்தால்நான்
சடலம் பெருப்பீரே
உற்றஉலகிலே இந்நாள்மட்டும்நான்
உயிர்வாழ்ந்திருப்பீரே

13. காணுதியவத்தின் அருளாலவந்த
கண்கண்ட தெய்வம்நீரே
ஆணைப்பெண்ணையிரா அந்தத்தனையும்
அன்னதந்தை என்பாரே

14. எனக்கொருசுகமவரில் உமக்குவந்ததுபோல்
எக்களிப் படைந்தீர
எனக்கொருதுயாவரில் உமக்குவந்ததுபோல்
ஏங்கிஉள் ளுடைந்தீரே

15. பாலும்சோறும் பக்ஷணங்களுமன்னக்கிட்டுப்
பழஞ்சோறுண்டீரே
காலமில்லாமற்கல்ல சோமனுன்னுடுக்கநீர்
கந்தையைக் கொண்டீரே

16. சப்பிரமஞ்சத்தில் நான்படுத்துறங்கநீர்
தரையிலே படுத்தீரே
கைப்பொருளெல்லாம் என்னிமித்தம்பரி
காரிக்குக் கொடுப்பீரே

17. வாக்கால்உளருமன்ன மழலைச்சொற்கேட்டுநீர்
மகிழ்ந்தே துதித்தீரே
காக்கைக்கும்தண்குஞ்சு பொன்குஞ்சென்பதுபோல்
கரிசனம் பதித்தீரே

18. குற்றமனத்தனேயா செய்தேன்அவற்றைக்
குணமாய்க் கொண்டீரே
சற்றுநான்நோய்களில் அன்னம்நித்திரையின்றித்
தளர்ந்தமெய் துவண்டீரே

19. தோளினும் மார்பினும் இடையினுமெயனைத்
தூக்கிக்கொண் டலைந்தீரே
நீள்பஞ்சகாலத்தில் உள்ளேசோறெனக்கிட்டு
நீர்பசித துலைந்தீரே.

20. அயர்வலம்வேண்டிஇங் கொருவருக்கொருவர்
துணைசெய்வர் மெய்தானே
பயனென்றும்வேண்டா தனைநீர்வளர்த்திட்ட
பக்ஷம்என்சொல்வேனே

21. உறவினரெல்லாம் உம்மாலேவந்த
உறவினர் தாமலரோ
அறவெறிகாட்டும் குருவுமீமநீரெனில்
அயலினி எனசொல்வோம்

22. பலபொருள்எனக்குச் சம்பாதித்துவைக்கவே
பலவிதம் உழைத்தீரே
நிலமிசைஉம்முயிர்க் குயிர்நானேஎன்று
நினைத்துநீர் பிழைத்தீரே

23. தாரம்போலுல்மறு தாரம்வருவர்பெற்ற
தாயரும் அப்படியே
நீபோலுல்வேறு தாய்தந்தையர்யுந்து
நேருவ தெப்படியோ

24. தக்கபருவத்தில் எனை அடக்கிப்பாட
சாலையில் விட்டீரே
பக்கமெல்லாந்நிரிந் தெண்ணிலைபல
பாடுகள் பட்டீரே

25. இளந்தைப்பருவத்தில் என்னுல்வருந்துன்பம்
எல்லாம் பொறுத்தீரே
தளர்ந்த பருவத்தில் உம்மால்வருந்துன்பம்
சகிப்பது பெருஞ்சீரே

26. தக்கங்களெல்லாம் நீர்வகித்துக்கொண்டு
சுகம்னனக் களித்தீரே
மக்களேசகல பாக்கியமென்றெண்ணி
மனம்மிகக் களித்தீரே

27. மண்பிள்ளேஆயினும் தண்பிள்ளேயென்றெனை
மகிழ்ந்தாதரித்தீரே
பண்புடன்னன்பொருட்டாகநீர்பலரையும்
பணிந்துபசரித்தீரே

28. தெரியாமல்நான்செய்த பிழைபொறுத்தென்னிடம்
திருவருள் பதிப்பீரே
அருமேவுதாயகன் அருள்செய்யுப்படிஎன்னை
ஆசீர்வதிப்பீரே

1. இவ்வுலகத்திலுள்ள சகல ஜீவஜந்துக்களும் தாவர வஸ்துக்களும் உண்டாகி வளர்வதற்குரிய சில இயற்கைப் பிரமாணங்கள் உண்டு. மனுஷரும் இவ்வுலகத்திலிருக்குமளவும் அப்பிரமாணங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும. ஒவ்வொரு குழந்தையும் பிறக்குமுன் அதன் சரீரத்திலும் ஆத்மாவிலும் தன் சுகத்தையும் ஜீவனையும் காப்பாற்றும் வழிகளாக அப்பிரமாணங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவன அப்பிரமாணங்களைக் கைக்கொண்டு நடந்தால் அவன் சகல சம்பூர்ணமுடையவனுய்ரோய் கொம்பலமின்றி இவ்வுலகத்தில் வாழ்வான். ஆனல் அப்பிரமாணங்களை மீறி நடப்பானுயின் அவன் அப்படி நடக்குங்காலமெல்லாம் அவனுக்குச் சந்தோஷத்தையும் சௌக்கியத்தையும்

கொடுக்க இவ்வுலகத்தில் ஒருவராலும் முடியாது. அவற்றிற்குக் கீழ்ப்படுவதனால் பெரின்பமும் மோக்ஷானந்தமுமுண்டு. கீழ்ப்படியாவிட்டாலோ துன்பமும் நிச்சமுந்தான் கிடைக்கும். அவ்வியற்கைப் பிரமாணம் எவ்வளவு நீலையுள்ளதும் மாறுதலுடையதுமாயிருக்கிறதோ அவ்வளவிற்கு அதனை யுண்டாகும் தண்டனையும் மாற்றப்படக்கூடியதன்று. ஒவ்வொரு அவயவத்தின் கிரியையும் அதனுள் இருக்கும் ஓர்வல்லமையால் நடத்தப்படவேண்டும். ஒரு மனுவனுடைய கண், காது, சரல், மூளை முதலியவற்றை வேறொருவனுடைய சித்தம் அல்லது வல்லமையினால் நடத்தமுடியாது. ஒருவன் பசித்துக் குடித்தால் வேறொருவனுடைய பசியும் தாகமும் அடங்காது. அதலால் சுகஜீவியத்தை விரும்பும் ஒவ்வொரு மனுவனும் அவ்வியற்கைப் பிரமாணங்களைத் தானேகவே கைக்கொண்டு நடக்கவேண்டும்.

நீதியையும் நியாயத்தையும் உணர்த்தும் அந்தப்பிரமாணம் சகல நம்முடைய சரீரத்தில் புகட்டியதுயார்? நாம் கர்ப்பத்திலிருக்கும்போது ஒருக்கமான அன்பினாலும் ஓயாத சிக்ஷையினாலும் நமது சௌக்கியத்தையும் வாழ்வையும் தன்மனதிலே தியானித்துக்கொண்டிருந்தவளாகிய நமது தாயே. நமது உயிருக்கும் இரக்ஷிப்புக்கும் அவசியமாகிய இக்கட்டளைகளை அவள் நமது ஆத்மாவிலும், அத்மாவினது கிரியைகளை வெளிப்படுத்தும் சரீரத்திலும் பதித்திருக்கின்றாள். இப்பிரமாணங்கள் நமது இருதயத்திலும், ஈரல்களிலும், மூளை நரம்புகளிலும் சரீரத்தினது ஒவ்வொரு அவயவத்திலும் வரையப்பட்டிருக்கின்றன. நம்முடைய சரீரமும் ஆத்மாவும் முற்றிலும் அழிந்துபோகுமளவும் அந்தப் பிரமாணங்களை மாற்ற அல்லது நீக்க நம்மால் முடியாது. அப்பிரமாணங்கள் ஐஸ்வரியவானுக்கும் ஏழைக்கும், படித்தவனுக்கும் மூடனுக்கும், உயர்ந்தவனுக்கும் தாழ்ந்தவனுக்கும், யாதொரு வித்தியாசமுங் காட்டாமல் எக்காலமும் நிலைத்திருக்கும் நித்திய கட்டளைகளாயிருக்கின்றன.

போதகராலும், இராஜாங்கத்தாராலும், நியாய சாஸ்திரிகளாலும் உண்டாக்கப்படும் சகல கட்டளைகளையுங்காட்டிலும் தாயின் மூலமாய்த் தெய்வம் நமக்களிக்கும் இயற்கைப் பிரமாணத்தைக் கைக்கொள்வதனால் நமக்கு மகிமையும் கனமும் உண்டாகும். இவ்விதமாய்த் தாயானவள் தனது குழந்தையின் ஆத்மாவிலும் சரீரத்திலும் அதனுடைய சுகத்திற்கும் உயிரைக் காப்பாற்றுவதற்கும் வேண்டிய இயற்கைப் பிரமாணங்களைப் பதிப்பிக்கிறாள். ஆனால் தனது அறியாமையினாலும். தனது சரீரத்திலுள்ள நோய்களினாலும் தனது குமாரனுக்கு வியாதியையும் மரணத்தையும் உண்டு

பண்ணும் இயற்கைப் பிரமாணத்திற்கு நேர்விரோதமான சில விதிகளையும் வரைகின்றாள். அவற்றினால் சுகத்தையும் ஜீவனையும் கொடுக்கத்தக்க இயற்கைப் பிரமாணங்களை மீறி நடந்து வியாதிகளை வருவித்துக்கொள்ளும் சுபாவத்தையும் அபேக்ஷையையும் தன் குழந்தைகளுக்குக் கொடுக்கிறாள். நம் ஒவ்வொருவருக்கும் அன்பு, நீதி, உண்மை, சாந்தம், பொறுமை, தாழ்மை இவற்றினால் உண்டாகும் சுகமும் சந்தோஷமும் இன்னது என்று தெரியும். ஆனால் நமது சுகத்தையும் சந்தோஷத்தையும் கெடுக்கின்ற கோபம், வஞ்சகம், பொய், புரட்டு, உருட்டு, பொறாமை, பகை, அநியாயம், பொய், குரூரம் முதலிய துர்ச்சுபாவங்களும் நம்மிடத்தில் இருக்கிறதைக் காண்கிறோம். நமக்கு நன்மை செய்வதால் நமது ஆத்மாவுக்குத் திருப்தியும் சந்தோஷமும் உண்டாகுவென்று அறிவோம். ஆனால் பதிலுக்குப் பதிலும் தீமைக்குத் தீமையுஞ் செய்வதே நமது சுபாவம். எவனெனில் "நான் தர்க்கணத்தில் உருவாகினேன், என தாய் என்னை பாவத்தில் கர்ப்பந் தரித்தாள்." என்று நாம் சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஆம்! நற்குணத்தில் உருவாகி நமது தாய் நம்மைப் புண்ணியத்தில் கர்ப்பந் தரித்தால் நமக்குத் துர்ச்சுபாவம் எங்கிருந்து வரும்?

2. நாம் சுகத்தையும் சந்தோஷத்தையு மடையும்படி கைக்கொள்ளவேண்டிய பிரமாணங்களை நாம் பிறக்கு முன்னும் பிறந்த பின்னும் நமது தாயே நமக்குக் கற்றுக் கொடுக்கிறாள். ஒவ்வொரு மனுஷனும் இவ்வுலகத்தில் ஜனிப்பதற்கும் சுக துக்கங்களுக்குக் காரணமாகிய விதிகளை உண்டாக்குவதும் தாயே. தனக்கிருக்கும் அறிவினாலும் நற்குணங்களினாலும் தன் குழந்தைக்குச் சுகத்தைக் கொடுக்கும் வழிகளைப் போதிப்பதுடன் தன்னிடமுள்ள சுகவீனத்தினாலும், துர்க்குணங்களினாலும், கெட்ட சரீரத்தினாலும், தன குழந்தைகளுக்குப் பல வியாதிகளையும், உபத்திரவங்களையும் வருவித்துக்கொள்ளக்கூடிய வழிகளையும் காட்டிக் கொடுக்கிறாள். இவ்விதமாய்த் தனது குழந்தைக்கு நன்மை செய்யக் கற்றுக் கொடுப்பதோடு, தனது மூடத்தனத்தால் தீமை செய்யும் வழிகளையும் காட்டிக்கொடுக்கிறாள்.

3. இவ்வுலகத்தில் பிறக்கும் மனுப்புத்திரருக்கு இனி நேரிடப் போகும் சங்கதிகளைத் தாயே அன்றி வேறு யார் அறிவிக்கக் கூடும். அவளுக்கு அவ்வறிவு எங்கிருந்து வந்தது? நட்சத்திரங்களின் நிலையைக் கணித்துப் பார்த்ததாலா, அணுமார் உச்சாடனம் செய்ததாலோ, பக்ஷி சகுனம், பல்லி சகுனம பார்த்ததாலோ, அல்லது கௌசியர், அகஸ்தியர், நந்தீஸ்வரர் முதலியவர்

களின் ஜோசியங்களை ஆராய்ச்சி செய்ததனாலோ? அல்ல, அல்ல, சுய மன உச்சாடனஞ் செய்து தனது குழந்தை உற்பத்தியான நாள் முதல் பிறந்தநாள் வரைக்கும் தனது சரீரமும் ஆத்மாவும் இருந்த நிலைமையையும் செய்த கிரியைகளையும் உற்றுப் பார்ப்பதனாலேயேயாம். ஒரு காரண மிருந்தால் அதன் பலனாகிய காரியமும் வந்து சேரவேண்டும். தாயினுடைய நிலைமைக்குத் தக்கதாகப் பிள்ளையினுடைய ஸ்திரியுறுப்பும். "தாயைப் போல் பிள்ளை நூலைப்போல் சேலை." தாயிடத்திலிருந்து சுகமும், பிணியிலிருந்து பிணியும், அன்பிலிருந்து அன்பும் பகையிலிருந்து பகையும் உண்டாகவேண்டும். காரணமமைப்படியே காரியமமைப்படியே. தாய்க்கிருக்கும் எண்ணமும் சிந்தனையும் யோசனையும் எப்படியிருக்கின்றனவோ அப்படியே தனக்குப் பிறக்கும் குழந்தையினுடைய எண்ணமும், யோசனையும், சிந்தனையும் ஓரிடம் "விளையும் பயிர் முளையிலே தெரியும்." பிள்ளையின் தன்மையை நிலத்திலும் விதையிலும் அறியலாம். "பண்ணிய பயிரிலே புண்ணியந் தெரியும." குழந்தை தன் உதரத்திலிருக்கும்போது தனக்கிருந்த பிரதாபம், ஆசை, தன்னயம், கோபம், புத்தி, சற்குணம், துர்குணம் முதலியவற்றிற்குத் தக்கதாகவும், தன் சரீரத்தினது கிரியைக்கும் நிலைமைக்குந் தக்கதாகவும் தன் குழந்தையினது புத்தி சித்தமும் சரீரத்தின் நிலையாயும் இருக்குமென்பது நியாயம். கர்ப்பஸ்திரீ பொறுமை முதலிய நற்குணங்களை நிதானித்தல் முதலிய மேலான குணாதிசயமுடையவளாயிருக்கவேண்டும்.



• உலகமட்சியம் தமது மாதாவின் வயிற்றிலிருக்கும்போது அவருடைய தாயாரை நோக்கிப் பிறக்கப்போகும் பிள்ளையினது அற்புதக் கிரியைகளையும் அதனால் தனக்குண்டாகும் மகிமையையும் முன்னுரை அறிந்தாலென்ன" என்று அதனைத் தாயை மகிமைப்படுத்துகிறது. எல்லாவின் இடச்சுகமாகப் பிறவினில் களிகூறுகிறது.

அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையைக் கடாக்ஷிப்பார்த்தார். இதோ! இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னை பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர் மகிமைபாலவைகளை எனக்குச் செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு தலைமுறை தலைமுறைக்கு முள்ளது, தம்முடைய புயத்தினால் பராக்கிரமஞ் செய்தார். இருதய சிநேகத்தில் அகங்காரமுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களினின்று தள்ளி தாழ்மையான



வர்களை உயர்த்தினர். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். தம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் இரக்கஞ் செய்ய நினைத்து தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்" என்றாள். இவ்வசனங்களை நன்றாய்க் கவனித்து யாசித்தபடியே பரன்பின் அவற்றைச் சொன்ன அந்த பரிசுத்த மாதாவின் வயிற்றில் இயேசு என்னுஞ் சிசு பள்ளிகொண்டிருக்கையில் அந்த அம்மாளுக்கு இருந்த தெய்வ பக்தியும், தாழ்மையும், மனமகிழ்ச்சியும் இவ்வளவென்று அறிந்துகொள்வதோடு, தனக்குப் பிறக்கப்போகும் பரிசுத்த பாலகன, "தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டி"யைப் போன்ற சாந்தமும், "உன்னை ஒருகன்னத்தில் அடிக்கிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு." என்று சொல்லும் பொறுமையும், "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது." என்று சொல்லும் தாழ்மையுமுடையவளாயிருந்து, இப்பூமியின் குடிகளை இரக்ஷித்துக் காக்குந் திவ்ய பாலகன் பிறக்

கப் போகிறதென்றும் முன்னமே யறிந்திருந்தாள் என்று விளங்குகின்றதல்லவோ? ஆம! ஒவ்வொரு தாயும் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை தனது பாப்பதனிலிருக்கும் என்பது மாதங்களில் ஒவ்வொரு காலும் தான் செய்த கிரியைகளையும், தன் வீட்டில் நடந்த சுகதுக்கங்களையும், தன் மனதிலுண்டான எண்ணங்களையும், தன சரீரத்தினது ஸ்திதியையும் எழுதிவைத்துத தன் பிள்ளை பிறந்து வளர்ந்தபின் அவனுக்குக் கொம்பாளாயின் அதுவே அவனுடைய பிற்கால நிலைமையையுணர்த்தும் ஜாதகமாகும். மேலேறந்த ஜாதகம பலிக்காமற்போனாலும் இந்தஜாதகம் தவறாது. இது சத்தியம. இது உண்மை. பரீக்ஷித்துப பார்க்கவும.

ஒவ்வொரு மனுஷனும் இவ்வுலகத்தில் இருக்கும்போது மோக்ஷத்தையும் நரகத்தையுந் தாமே சுமந்து அவற்றின் இன்பதுன்பங்களை அனுபவிக்கிறான். நரகம் நமதிடத்திலிருக்குமாயின நாம் எங்கே போனாலும் நமக்கு உபத்திரவமும் துன்பமும கவலைகளும் உண்டாகும். மோக்ஷம் இருந்தாலோ எப்போழுதும் ஆனந்த பாகியமும் சௌக்கியமும் உண்டாகும. விபாதியை நரகம, சுகமே மோக்ஷம். ஒருவனுடைய சரீரத்திலும் ஆத்மாவிலுமிருக்கின்ற துக்குணங்களையும் நோய்களையும் நீக்கிவிட்டால அவனிடத்திலிருக்கும நரகத்தின நிலைமையை மாற்றி அவனுக்கு மோக்ஷானந்ததனை யளிப்பதாகும். நம்மிடம் பிளைவு, க்ஷயம் முதலிய நோய்களிருப்பின் நாம் எங்கே போனாலும் நோயாகி நரகத்திலாழ்ந்து போவோம். அப்படியே நம்மிடத்தில் மோகபம, மூர்க்கம, பொறாமை, சுமுசயம, காமவிகாரம், பொறாமைபோன்ற துர்க்குணங்களிருப்பின நமது மனம நரகமாகி நம்மை வாதைக்கும். மனுஷரை நரகத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு மோக்ஷத்தையருளுமதிகார் யார்? வியாதியிலும உபத்திரவத்திலும் நின்று மீட்டு நமக்குச் சுகத்தையும பொன்னபதனையும் அளிக்கும வல்லமை யாருக்கிருக்கிறது? மானிட மூதந்தை நோயினறுக் காக்கும ரக்ஷிபபின கிரியையை கிறமேவற்றத திதப்வம யாரை நியமத்திருக்கறார்? பெற்றோரை-விசேஷமாய்த தாயைய. ஒவ்வொரு மனுஷனது அவயவமும தனனுடைய தாயினது சரீரத்தினால பூரணமித்தி முடிவாகிறது. ஒவ்வொரு மனுஷ மூதகத்துக்கும் வேண்டிய உபகரணங்கள தாயின் ரத்தத்தின் மூலமாகவே வந்து சேருகின்றன. தாயின் ரத்தத்தில் என்னென்ன வியாதிகள் பதிந்திருக்கின்றனவோ, அவை குழந்தையின சரீரத்திலும் தாவும், என்னும் விஷயங்களை நாம முன்னமே கவனித்திருக்கிறோம. நாம் உறபவித்த நாள் முதல் பிறக்கும் காலமவரையில நம்முடைய தாயின்புதனியும, இருதயமும, அன்பும, பாசமும, விருப்பவெறுப்

புகளும் ளெவ்வித மாயிருக்கின்றனவோ அதற்குத் தக்கதாகவே நாம் பிறந்த பின் ம் நம்முடைய எண்ணங்களும், சிரிலைகளும், தினவுகளு மிருக்கும். அப்படியானால் நமது தாயைவிட நம்மை மோசந்தீர்ப்பதற்கும் நரகத்திற்கும் ஆளாக்கக்கூடிய சக்தி வேறு யாருக்கிறது? இவ்வுலகத்தில் பிறந்தும் உபாத்தியார், குருக்கள், தியாதிகர் மதுவகுலை உண்மை, சுதந்திரவுரிமை, அன்பு, பொறுமை, சாந்தம் முதலிய தன்மையுடையவர்களாக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாரும் எதிர்க்கும் பிரபாசத்தைவிட நம தாயானவள் தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் சௌக்கியத்தை தன் மனதிலெண்ணி ஒன்பது மாதகாலமும் சற்று கவனித்து நடப்பாளாயின் அதனாலுண்டாகும் பலனை மிகச் சிறந்ததாகும். உலகத்திலுள்ள சமாதானமும் மனுஷர்மேலுள்ள பிரியமும் உண்டாக்கத்தக்க வல்லமை தாயையன்றி மற்றொருவர்க்குமிலலை. அவளே நமக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறாள். தாயி னுடைய தன்னலமில்லாத சிசு சுதந்தரித்துக்கொள்ளுகிறது. ஒவ் வொருமனுஷனும் தனது தாயின தன்மையையும் சுபாவத்தையும் தன க்கு ஆடை ஆபரணமாகத் தரித்துக்கொள்ளுகிறான். சுகத்தையும் ஜீவனையும் விகாரிக்கத்தக்க இயற்கைப் பிரமாணங்களை யறிந்து அவற்றைக்கைக்கொண்டு நடப்பதால் நமக்குச் சுகமும் ரக்ஷிப் பும், மோக்ஷமும் கிடைக்குமென்றறிவோம். அவ்வியற்கைப பிர மாணங்களை நம்முடைய சரீரயாத்திரையில் பதித்து மரணத்துக்குத் தப்பும்வழிகளை நமக்குக் காட்டிக்கொடுக்கும்படி தெயவம் யாரை நியமித்திருக்கிறார்? மனுஷனையல்ல ஸ்திரீயையே, தகப்பனையல்ல தாயையே. தாயின்மேல் இவ்வளவு பொறுப்பான பாரத்தைத் தெய்வம் சுமத்தியிருக்க அதை யறியாமல் எத்தனைபேர் பெர் மூடதனத்தால் மோசம் போகிறார்கள். ஸ்திரீயே! உன பிள்ளை களை மரணத்தினை வாயினின்றும் மீட்டு ரக்ஷிக்கும் நிறமையைக்கட வுள் உனக்கு அளித்திருக்கிறார். அதை யறிந்தாலுட, அறியாமல் மோசம் போகாதே. உன குழந்தையை ரக்ஷிக்கும் வழிகளை யறி ந்து உன் சுகத்தையும் பலத்தையும் மேன்மைக்கொள. அப்பொழுது உன்வீட்டில் ஆசீர்வாதம்தங்கும. உன குழந்தைகள் நீக்கலனின் ரோமாய் நடப்பட்ட ஒலிவ மரக்கன்றுகள்போல் ஓங்கி வளருவார் கள். உன வீட்டிற்குச் சமாதானமும், உன்மனதிற்கு மகிழ்ச்சி யும் உண்டாகும. நீ பாக்கியமுள்ள புத்திரனைப் பெற்று உலகத் தாருக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணுமந்விசயத்தினை யாவர்க் கும் அறிவிப்பாய். "நான் நற்குணத்தி லுருவாக என தாய் என் னைப் புண்ணியதலத்தில் கர்ப்பந் தரித்தால் எனனைப் பரலோகத்திற் குச் சுதந்தரவாளியாக்கத் தக்க வேறெருரு ரக்ஷகரும் எனக்கு வேணுமோ? ஐயோ! நான் நற்குணத்திலுருவாக என் தாய்

என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள். ஆகலால் நான் நரகத் திற்காளானேன். எங்கே ஓடுகிலை? பாதகன் ஆனேன். தீமை எங்கும் என்னை மூடுப். ஆதரிக்க யாரால்கூடும்?" ஸ்திரீய இதை உன் குழந்தையின் அங்கலாய்ப்பைப பார். உன் குழந்தைகளுக்கு மோக்ஷத்தையும் நரகத்தையும் கொடுக்கத் தக்க வல்லமையைத் தெய்வம் உனக்கு அளித்திருக்கிறார், நீ கர்ப்பவதியா யிருக்கும் ஒன்பது மாதமும் பத்திரமாய்ப் பரலோகத்திற்குப் போகும ஏணி யில ஏறினால் உன் பிள்ளையைப் பரமராஜாவின் சிம்மாசனத்திற்கு ஆளாக்குவாய், தெய்வம் நன்மையினால் உன் வாயைத் திருப்தி யாக்கி, கிருபையினாலும் இரக்கங்களினாலும் உன்னை முடிசூட்டி வார், கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகும். திரும்பிப பாராதே, பூலோகமாகிய சோதோமைத் திரும்பிப் பாராதே, திரும்பிப் பார்த்தால் உப்புத் தூணாவாய். பக்தியுடனே பாலனை பேந்திப் பரலோக ஏணியில் மசல், அபபொ முது நீ பரமராஜாவைத் தரிசிப்பாய். உன் குழந்தையும் பாக்கிய முள்ளதாகும், அக்கம் பக்கம் உன்மனதைச் செல்லவிட்டு அஜாக் கிரதையாய் உன காலை கழுவவிடாதே. நழுவினால் நீயும் சாவாய் உன் பிள்ளையும் நரகத்துக்காளாகும். பாவத்தின் சம்பளம் மர ணம், பாவியின் முடிவு நரகம். உன் குழந்தைக்கு முதல் ரக்ஷ கர் நீயே, ரக்ஷிபபின கிரையையை நிறைவேற்ற நீ தவறினால் நரகத் தின வாயினிருந்து உன் குழந்தையை மீட்கத் தெய்வந் தாமே ரக்ஷகராக வரவேண்டும். நீ எளிதில நசுக்கக்கூடிய பிசாசின் சிரத் தை உடைக்க அவர் சிலுவைமரத்தில தொங்க வேண்டும். "முதற் கோணல் முற்றுங்கோணல்." ஆரம்பத்தில் எளிதில்முடிக்கக்கூடிய உன் குழந்தையின் சுகத்தையும் நன்மைபையுங் கருதாமல் சற்று கவலைத் தாக்ஷிபாய் இருந்தால் அயன் பெரியவனென பின்பு அவனுடைய நோய்களைத்தீர்க்க டாக்டர்களும், சன்மார்க்கத்தைப் போதிக்கக் குருவும், நித்திய ஜீவ வழியைப் போதிக்கப் போதக ரும், நரகத்திலிருந்து மீட்டு ரக்ஷிக்க ஒரு ரக்ஷகரும் ஏற்பட்ட போதிலும் "ஐயோ! நான் நன்மைசெய்ய விரும்புகிறேன், அதில் தீமையுங் கலந்திருக்கின்றதே. என ஆன்மாவைத்தை நாடுகிறது என் மாமிசமோ உலக இன்பத்தை நாடுகிறதே." என்று உன குழந்தையின் உடலுக்கும் மனதுக்கும் ஓயாத போராட்ட முண் டாகிறது. நீ தவளையையும் ஓணானையும் ஒன்றாய்ப் பிணைத்து விடுகிறாய. ஓணான் வெளிக்கிழுக்கிறது. தவளையோ தண்ணீருக்கு இழுக்கிறது. ஆகவே உலக இன்பத்திறகும் பரலோக இன்பத் திறகும் பாத்யதை யிலலாதவனாய் இருதாணியில் கால் வைதத வன்போல்தடுமாறியில் நாசமாகிறான். ஸ்திரீயே! இதற்குக் கார ணம் யார்? நீயே! உன் பாண்டதனைச் சுத்தப்படுத்தி உன் வழிக

னைக் காத்துக்கொள். நீயே உன் பிள்ளையைக் கடவுளொத்தாசையால் சுகத்துடனும் பலத்துடனும் மோக்ஷத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கத் தக்க சுகமான ஜீவவழி.

புருஷன் கடமை.

இவ்வுலகத்தின் கண்ணே உதித்த ஒவ்வொரு மனுஷனும் தான் இவ்வுலகத்தி லிருக்கும்போது பொதுவாக நிறைவேற்ற வேண்டிய சில விஷயங்கள் உண்டு. அவற்றுள் இல்லற வாசியாகி தனது மனதுக்கிசைந்த ஓர் புண்ணியவதியைத் தனது பிராண நாயகியாக ஒப்புக்கொண்டு அவள்மூலமாய் நற்பாலனைப் பெற்று கீர்த்தியுடன் வாழ்வதே விசேஷித்த கருமமாகும்.

மனுஷனைத் தெய்வம் சிருஷ்டித்த நோக்கமும், அவன் இவ்வுலகத்தில் நடத்த வேண்டிய கிருத்தியங்களும் அநேகமிருப்பினும் நாம் இவ்விடத்தில் கவனிக்க வேண்டிய விஷயம்:—இல்லற வாசியாக பரிணமனை நிறைவேற்ற வேண்டிய கிரியைகள் இவை யென்றும், அவற்றிலுங்கூடத் தனக்குப் புகழ்ச்சியையும் கீர்த்தியையும் நாட்டத்தக்க நற்புதல்வரைப்பெறும் விதமறிந்து அவற்றின்படி நடப்பது அவசியமென்றும் உணர்த்தினவே தை.

"பொன்னேமறந்தேன் புவிமறந்தேன் புவியினுளவெப் பொருள்கணிச்சை
தன்னேமறந்தேன் தமரொடெனைத் தாயைமறந்தேன் தாரமெனு
முன்னேமறந்தே னெனினிறந்தே னுண்மையுமொழியென் றுறுதிகொண்டு
வென்னேமறவா திருந்திடுவா யின்பக்கடலே யிளவனமே."

என்று ஓர் புருஷன் தன் காதலிக்கு உரைத்த பிரகாரம் இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம் சரியானபடி செல்ல வேண்டுமெனின் நாயகனும் நாயகியும் ஒருமித்து நடப்பவர்களாயும் ஒருவர்மேலொருவர் அன்பும் பாசமும் மிகுத்தவர்களாயு மிருக்கவேண்டும். ஆதலால் ஒவ்வொரு புருஷனும், நற்குணம் மிகுத்தவளும், நல்லகுலத்தில் பிறந்தவளும், நோய் நொடியில்லாதவளும், கூடியவரையில் கல்வியிற் சிறந்தவளும், தன் மனதுக்கு இசைந்தவளுமான ஸ்திரீயைத் தனக்கு மனையாளாகத் தெரிந்து கொள்வது அவசியம். அதன்பின் தானும் தன் மனையாளுமாய் ஒன்றுசேர்ந்து சகல நற்குணங்களையும் பூரணமாகப் பூண்ட ஓர் புதல்வனைப்பெறும் விதத்தையறிந்து அதன்படி நடந்தால் தெய்வம் அவாகளின் இஷ்டத்தை வாய்க்கச் செய்வார். அவர்களுக்குக் கீர்த்தியும் புகழுமுண்டாகும். ஆதலால் நற்புதல்வரைப் பெற விரும்பும் ஒவ்வொரு மனுஷனும் அதற்குக் காரண

கர்த்தாவாகிய தன் நாயகியைச் சௌக்கியமும் சந்தோஷமும் முள்ளவளாக வைப்பதும், தன்பேரிலவளுக்கிருக்கும் அன்பை மென்மேலும் மதிகரிக்கச் செய்யும் வழிகளை அறிவதும் மிக அவசியம். ஆதலால் முதலாவது புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள் இன்னின்ன வென்று எடுத்துக் கூறமுன், சாதாரணமாய் யாவருக்கும் விளங்கும் இரண்டு விஷயங்களை எடுத்துச் சொல்லுவோம்.



(1) மனுஷர் இவ்வுலகத்தில் உற்பத்தியாவதற்குக் காரணம் பெற்றோரே.

(2) தான் இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன ஸ்திதியிலிருக்கும்போது மட்டுமே கற்பவதியாகி ஒரு பிள்ளையைப் பெறக்கூடும் என்று சொல்லும் உரிமை ஸ்திரீக்கு மட்டுமேயிருக்கிறது.

இவ்விரண்டு விஷயங்களையும் ஸ்தாபிக்கக் கல்வி சாதுர்யம் வேண்டியதில்லை. ஏனெனில்:—அவை ஒவ்வொருவருக்கும் தெளிவாகவும் திட்டமாகவும் தெரியும். ஒரு குழந்தை இவ்வுலகத்தில் பிறப்பதற்குக் காரணம் தெய்வமோ? பெற்றோரா? தேவன் தான் காரணமென்று சொல்வது ஒருவனை வாளினால் வெட்டிவிட்டு அவனைக் கொன்றது தானல்ல கடவுளே யென்று சொல்வதையொக்கும். ஒரு ஸ்திரீ இன்ன இன்ன ஸ்திதியிலிருக்கும்பொழுதுதான் அவளுக்குக் குழந்தை பிறக்கவேண்டும், அவளுக்கு இத்தனை குழந்தைகள்தான் பிறக்கவேண்டும் என்றுசொல்லும் பாத்தியதை புருஷனுக்கல்ல, ஸ்திரீக்கேயுண்டு. ஏனெனில், பிரசவவேதனையைத் தன்னால்சகிக்கக்கூடுமோ, பிள்ளைபெறத்தக்க வலிமை தனக்கிருக்கிறதோ, தனது கர்ப்பத்தில் ஓர் சிசு உற்பத்தியாக்கூடிய விஷயங்களைச் செய்வது சரியோ என்று அறியக்கூடியது புருஷனல்ல ஸ்திரீயே.

" அன்புகொண்டவர்களிலாவலா யிணைந்தின்
தென்புகொண்ட பேதை கெற்பதிலில்வந்குறுள்
முன்புசொன்ன வாசகங்கள் முற்றிலும் மறந்திடின்
துன்புகொண் டிறப்புள்ளண்ட பேர்களென்ன சொல்வாரோ."

" கொண்டைக்கிசைந்த மலரணிந்து குவளைக்கிசைந்த மையணிந்து
தண்டைக்கிசைந்த நடைநடந்து சருகைபொலிந்த வடமணிந்து
அண்டத்தவர்கள் மயலணிந்து வியந்து துயரமிலந்தாலு
மண்டைக்கிசையா தெனக்கிலைந்த வன்னத்தருகி லாகேனே "

ஒருவன் ஸ்ரீயை விவாகம் பண்ணினவுடன் அவளை விவாகம் பண்ணியதன் நோக்கம் இன்னதென்று வெளியிடுகிறான். ஸ்திரீயோ தான் தாயாகத்தக்க பருவத்தை யடைந்தபோதிலும் உலகத்தாரெல்லாரும் நீ உன் புருஷனுக்குக் கிழ்ப்படிந்து அவனுக்கு உகந்த மனைவியாக வேண்டுமென்று சொல்லுதலும், புருஷன் தன்மேல் அன்புகூற வேண்டுமானால் அவனுடைய இச்சைக்கு இணங்கவேண்டும் என்று பலர்கற்பித்ததலும் புருஷன் தன் மாமிச இச்சையை நிறைவேற்ற இடங்கொடுக்கிறாள். ஆனால் தான் நினையாத நேரத்தில் அகஸ்மாத்தாய்க் கருக்கரித்து பிரசவ வேதனையாகிய பெரும் உபத்திரவத்தை யநுபவித்துக் கொள்வது மல்லாமல் தாயென்னும் பெரும் பாக்கியத்தையும் தன் தலைமேற் போட்டுக்கொள்ளுகிறாள்.

" இப்பிறவிதனிற்பிரிய நிருந்து சுகங்கொள்வதுபோ லினியெக்காலு
மெப்பிறவியெடுக்கினுநா னுனைக்காத் திருப்பதுமெய்யென் நீரிப்போ
தப்பிதமாயடியன் தனியிருந்தேங்கி யுடல்விடுக்கும் தன்மைகாண
வொப்பினதோவுமதுமன தொருமையிதோ வுவமையிலா துயர்கோமானே.

என்று புலம்புபவளின் ஸ்திதி எப்படி யிருக்கும். உன்னை நேசித்துக் கனப்படுத்தி உன் விருப்பத்தின்படி செய்வே னென்றும், இவ்வுலகத்தில் எனக்கிருக்கும் ஆஸ்தியை யெல்லாம் உனக்கே தத்தம் பண்ணிப போட்டேனென்றும் வாக்குக் கொடுத்த தனது பிருமை நாயகனில் தனக்கு வருத்தமும் துன்பமும் உண்டாகுமென்று கனவிலு மெண்ணி யிருப்பாளா? இதோ! தாயாக வேண்டுமென்னும் விருப்பமும் அதற்கென்று ஆயத்தமுமில்லாத தன் நேசபனையானை உபத்திரவத்திற் காளாக்கி விட்டான். தானிருக்கும் ஸ்திதியையும், தான் அநுபவிக்கவேண்டிய கஷ்டத்தையும், மரண இருளின் பள்ளத்தாக்கைத் தாண்டித் தான் கரையேற வேண்டிய திருப்பதையும அவள் நினைக்கும் போது அவள மனம் கொழுந்துவிட்டெரியாதோ? அவள் அங்கமெல்லாம் நடுக்கங் கொள்ளாதோ? தன்னை வருத்தத்திற்காளாக்கின தன் புருஷன்மேல் அன்புமிருக்குமோ? அவளுக்காகக் கவலை

யெடுத்து அவனைக்காப்பாற்றி ஆதரிப்பேன் என்று வாக்குக்கொடுத்த அவன் அவ்வளவு சீக்கிரத்துக் குள்ளாக உபத்திரவத்தை உண்டுபண்ணுவானென்று தன் மனதிலு மெண்ணியிருப்பாளோ?

" துணையென்றிருந்தே னெதிரொளாய்ச் சுகமுமறிந்தேன் றுயர்பதொள்
பிணையைப்பிரிந்த வன்றிலேநேர் பேதைதலங்கி வாடுவேனே
இணையில் விஜய னெனச்சிறந்த வின்பக்கடலே யெசமானே
யெனையிக்கால மறந்திருக்கி னர்வேறென்னை யணைப்பாரே."

" தங்கைகிகர்த்தா ளெவளேனுந் தவத்திலுயர்ந்தா ளெவளேனு
மங்கைரதியா ளவளேனு மனதுவருந்தி மாய்ந்தாலும்
பங்கைப்பெறுத லரிதான பங்கைக்கொடுத்த பரிவாய்நி
னங்கைசுமக்கு மெனக்கொழிந்தா லங்கைக்கடவா ராராமோ."

ஆ! ஆ! புருஷனே! உன் மனைவி உன்னை நேசித்துக் கனப்படுத்த வேண்டுமென்றால் உன் இச்சையை நிறைவேற்றமட்டும் எண்ணுமல் உன் காயகியின் சித்தத்துக்கு நிணங்கி நட. அப்பொழுதுதான் தாயாகக்கூடிய பாருமென்னவென்று அவளைதெரியப்படுத்துவாள். அப்படியிருந்து பிரயவேதனையால் அவளுக்கு உபத்திரவம் உண்டாகாமல் தன் புதல்வனைக் காங்களிலேந்தும் காலம் எப்போது வருபென்று ஆவலுடன் காத்திருப்பாள். உன் னிடத்திலும் அவளுடைய அன்பு பெருகும். அவளுடைய இருதயம் உன்னைப் போற்றும். ஏனெனில் நீ உன் சுய இச்சையையே பாராமல் அவளுடைய சுகதுக்கத்தையும் சௌக்கியத்தையுங் கருதி அவள் சித்தத்திற் கிணங்கி நடந்தாய். தன் புருஷனுடைய தாராகிருதமான நடவடிக்கைக்குப் பயப்படுகிற மனதில் அவன்மேல் அன்பும் பாசமும் எப்படியிருக்கும். தன் மனைவியை உண்மையாய் நேசிக்கும் ஒவ்வொரு புருஷனிடத்திலு மிருக்கும் ஓர் சிறந்த குணம் என்னவெனில்:—தனது ஆசா தன்மையை வெளியாக்கக் கூடிய அவயவங்களில் அடங்கிருக்கும் பொருளேயே. அவ்வவயங்களின் மூலமாய்த் தனது ஆசா தன்மையைத் தன் நேசமனையாருக்கு வெளியிடுவான். அவளும் அவனுடைய ஆத்துமாவையும் சரீரத்தையும் தன் முழு இருதயத்தோடும் நேசிப்பாள்.

" விண்ணூட் டவர்புகழ் மண்ணூட்டிறைவ விஜயவுனைக்
கண்ணூரக் கண்டவர் பெண்ணையின் கரமன்கணையழுந்தி
யண்ணூரி ரவிவுறங்கா வெனிலுருத்தா யிருந்த
வெண்ணற் சகிக்கத்தரமோ பிரிந்துங் கிருப்பதற்கே."

" பதிக்குப்பதியும் பருவமும் ரூபமும் பார்த்திடுபேர்
மதிக்குஞ் சிறப்பளித்திட்ட மன்னவனே நீமறக்கின்
துதிக்கு மிரக்கம் வையாமதவேள் கைதொடுகணைக்கும்
மதிக்கும் மிருட்கும் மறைவாயொழிய வகையில்லையே."

"உருவோபகலுன் குழலோவிரா வுயர்வான திங்கள்
திருவாள் வதனம் பாவையுநேத்திரம் செய்ய தப்பே
தருவாயமிர்த மொழிமெல மார்மினவ தான்றருவாய்
வருவாயல தணைப்பாய் மறந்தாலுயிர் வைத்திலனே." என்பாள்.

ஆனால் தன் மனைவி ஆபத்தாயில்லாம லிருக்கும் போதும், அவ் விதக் கிரியைகளால் உண்டாகும் முடிவைப்பற்றி அவளுக்குத்திகி லும் நடுக்கமும் பிடித்திருக்கும் போதும் அவளிடத்தில் தன் ஆண் தன்மையைக் காட்டப் புருவமுயின், அவளுடைய அன்பைச்சம் பாதிப்பதற்குப் பதிலாய்த் தனக்கு வெட்கத்தையும் அவமரியா தையையும் வருவித்துக் கொள்வான். சீமந்தினி! உன் மனை யாள் உன்னை நேசித்துக் கனப்படுத்தி உனக்காகக் கவலையடுக்க வேண்டுமென விரும்புவாயாயின் நீங்கள் கூடிக் கலந்து இன்பங் கொண்டாடுஞ் சமயத்தில் உனக்குத் தெய்வம் கொடுத்திருக்கிற ஆண்மையையும் சக்தியுத்தையும் உன் சுய இச்சையை நிறை வேற்றமட்டும் உபயோகிக்காமல் உன் நாயகிக்குச் சுகத்தையும், சந்தோஷத்தையும், சுதந்தரத்தையும் உண்டுபண்ணக்கூடிய விஷ யங்களில் மட்டும் உபயோகிக்கிறதாக அவள் உணரச்செய்.

"எந்தனுட மனதறிந்த பெண்ணேயுன்ற திருவிழியுந்
திருமுகமு மனதில்நிற்ப
வுந்தனை நான்மறப்பதில்லை யுணர்நிறக்கந் தானுமில்லை
யுனை நினைந்து
சிந்தைதனிற் பறந்தவர வெனவ்ணைமுண்டு சிறகில்லை
யாதலிறற் றினமுன்னைப்போற்
சந்தணத்தாற்பட மெழுதிப்பார்த்துப் பார்த்துத் தாமரையி
னீரதுபோற ளைம்புமேறனே."

உன்னுடைய முழு சக்திவழமும் பலமும் அவளுடைய வஸ்து வே யென்றும் அவளுக்கு இன்பத்தையும் சுகத்தையுங் கொடுக் கவே அவைகளை உபயோகிப்பதாகவுங் காண்பி. அப்பொ முது உன் வீட்டில மனமகிழ்ச்சியுண்டாகும். புருஷன் தன் சரீ ரத்தைத் தன் மனைவியின் சுகத்தை விரும்பிக் கட்டிக்கொள்ளு கிறனென்று ஸ்திரீ அறிவாளாயின அவனை மகிமைப்படுத்திக் கனப்படுத்துவாள். ஆதலால் உன் மனைவியின் சரீரத்திலும் மன திலும் எவ்வளவு பலமும் சக்திவழ மிருக்கிறதென்றும், அவள் சுகத்துடன் இவ்வுலகில் இருக்கவேண்டுமானல் எத்தனை பிள்ளை களைப்பெற்றால் போதும் எனபதையும் அறிந்து உன் மனைவியின் சித்தத்துக்கு இணங்கி நட.

தன் சித்தத்துக்கு இணங்கித் தான் ஆபத்தமா யிருக்கும் போது தன புருஷன் நடப்பிக்கும லீலைகளினல இன்பமனடந்து

அவனிடத்தில் அன்பையும், பாசத்தையும், கனத்தையுங் காட்டுகின்ற நாயகிக்கு, தான் ஆபத்தமில்லாமலிருக்கும் பொழுதும், பலஹீன முதலியவற்றால் குழந்தை பெற விருப்பமற்றிருக்கும் பொழுதும் புருஷன் தன் இச்சையைமட்டிம நிறைவேற்றக்கருதி அதே லீலைகளை நடப்பிப்பதால் அவனிடமில் வெறுப்பும், அருவருப்பு முண்டாகுமென்று கவனிதம்தாம். இனிமேல் நாயகியின் விருப்பத்திற்கு விரோதமாய்ச் செய்த லீலைகளால் உற்பத்தியான குழந்தையினது தன்மை எப்படியிருக்குமென்று கவனிப்போம்.

சிசுவானது தாய் வயிற்றிலிருக்கும்போது அதனுடைய அவயவத்திற்கு வேண்டிய உபகரணங்கள் தாயின் சரீர முழுவதும் ஊடுருவிச் செல்லும் ரத்தத்தினாலேயே வருகின்றன வென்றும் தாயின் சரீரமும் ஆத்துமாவும் எந்தெந்தக் காலத்தில் என்னென்ன ஸ்திதியிலிருக்கின்றனவோ அந்த நிலைமை அக்காலத்தில சரீரத்தை ஊடுருவிச் செல்லும் ரத்தத்தில் பதிகின்றது னன்றும் முன்னமே கூறியிருக்கிறோம். கர்ப்பகாலத்தில் தாய்க்கு நேரிடும் மாறுதல்களால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஆயுள் பரியந்தம் அனுபவிக்கவேண்டிய நடத்தைகளும் தன்மைகளும் உண்டாகின்றன. நாயகனும் நாயகியும் ஒருமித்துக் கலக்கும் பொழுது அவர்களுக்கிருக்கும் சுகவீனத்தையும் பலவீனத்தை அந்த கூடிணத்தி லுற்பத்தியாகுங் குழந்தைக்குக் கொடுப்பதால் அது உலகத்தில் வாழுங் காலமெல்லாம் நோயினாலும் பலவீனத்தினாலும் உபத்திரவப்படுவதுண்டு. ஸ்திரீ புருஷர்கள் தாங்களற் பமாயெண்ணி நடப்பிக்குங் கிரியைகளிலிருந்து எவ்வளவு பிரமாண்டமான விஷயங்கள் வந்து சேருமென்பதைக் கவனிக்காமல் தாங்களெவ்விதமோயிலமிற்றிலும் வேறொரு ஸ்திதியிலிருந்தாலும் தங்கள் மாமிச இச்சையை நிறைவேற்றுவதே பொயகாரியமென்றெண்ணி முன்பின் ஆலோசனையாமல் சற்றுநேரமே இன்பத்தை அனுபவிக்கின்றார்கள். சில சமயங்களில் ஸ்திரீயின் விருப்பத்திற்கு விரோதமாகவே புருஷன் பலவந்தம் பண்ணித் தன் காமவிகாரத்தைத் தீர்க்கிறான். அப்படி ஸ்திரீகளுக்குத் தங்கள் பலவீனகாலத்தில் ஒரு சிசு உற்பத்தியாகி அதனால் தானும் தன் குழந்தையும் நீடூழி உபத்திரவப்படுவதைவிட அபத நிமிஷ இன்பங்களை நீக்க வேண்டுமென்று அதிக விருப்பமிருக்கும். ஆனால் புருஷரோ தாங்கள் செய்யுங் கிரியைகளிலிருந்து உறபதியாகும் குழந்தைகளின் நன்மையைச் சற்றுங் கவனிக்கிறதில்லை. பிள்ளையென்ன பிள்ளை. "ஜலவாதைக்கொருபிள்ளை, மலவாதைக்கொரு பிள்ளை." அதையெல்லாம கவனித்துக்கொண்டு நடக்கயாரால் முடியும்? வட்டுச் சுரைக்காய் கறிக்காகுமா? என்று அநேகர் மிக இகழ்ச்சியாய்ப் பேசுவதுண்டு. மேலும் மற்றவர்கள் தங்களுக்கு எவ்வளவாய்ப் புத்தி போதித்தாலும் அவற்றிற்குச் செவி

கொடாமலும், தன் ஆத்மா சரீரத்தினது ஸ்திதியைக் கவனிக்காமலும், தான் பசியாயிருக்கும்பொழுதும், உணவுண்ட வுடனேயும் வேலைசெய்து சரீரம் அலுத்திருக்கும் பொழுதும், அதிக யோசனையிலும் எண்ணத்திலும் மூளையின் சக்தி குறைந்திருக்கும் பொழுதும், தன் மனைவி நோயிலும் அல்லது மனக்கவலை விசாரத்திலும் பலம் குறைந்து சக்தியற்றவளா யிருக்கும்போதும், அவளுக்குக் காமம் மிஞ்சி தனது சரீர இச்சையை மட்டும் நிறைவேற்றவந்த அவன் சருத்தாயிருக்கலாம். ஸ்திரீ தான் சக்தியற்றவளா யிருக்கிறதை யறிந்து பிள்ளைப்பேற்றை விரும்பாவிடினும் தன் கணவனுக்குக் கீழ்ப்படியவேண்டியது தன் கடமை என் றெண்ணுவதலுலும், தான் அவன் சித்தத்துக் கிணங்காவிடில் அவன் சோரம்போய் பரஸ்திரீகளின்மேல் மனம் வைப்பான் என் னும பயத்தினாலும் அவனுக் கெதிர் பேசாமல் அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படும் ஆட்டுக்குட்டியைப்போல் தனக்கு நேரிடும் துன்பத்தையும் தன் பிள்ளையிண பின்னிலைமையையும் மறந்து தன் கணவனிச்சைக் கிணங்குகிறாள். அதனால் கருத்தரித்து ஓர் குழந்தை உற்பத்தியாகிறது. அக்குழந்தைகுப் பலனைக்கொடுக்கத் தீக்க சக்தி தாய்க்கில்லை. அப்பலவீனத்தி லுற்பத்தியாகின விசனமும் கவலையுமுள்ள சரீரத்தில் வருகிறது. ஆ! அதின் பிறப்பு எப்படி யிருக்தும்? அதன் முடிவென்ன? ஸ்திரீ புருஷாளுக்கு வேண்டிய மனைசக்தியும் சுறுசுறுப்புமற்ற ஓர் பேதைமைத னை அல்லது மைபத்தியக்காரன் பிறக்கிறான். இல்லாவிடில் ஊனகால முடமான சப்பாணிப் பிள்ளைகள் பிறக்கின்றன. ஏனெனில், அக்குழந்தைகளின் அவயவத்திற்கு வேண்டிய உபகரணங்களும், சக்தியும், மனதிலும் சரீரத்திலும் கொஞ்சமேபாயிருக்கும் தாயினிடத்திலில்லை. நிலம் கொழுமையா யிருந்தா லல்லவா அதிலுண்டாகும் விருக்ஷங்கள் செழித்து வளரும். வறண்ட கற்பாறை நிலத்திலுண்டாகும விருக்ஷங்கள் சுருண்டு குறுகித்தான்போகும். தன சரீரத்தைதத் தூக்கிகொண்டு அங்குமிங்கும் நடந்து தன் வீட்டுவேலையை நன்றாய்ப் பாக்கத்தக்க சகதிபற்றாக் கட்டிலும் படுக்கையுமாய்க் கிடக்கும் எத்தனைபேர ஸ்திரீகள் கர்ப்பவதிகளாகிறார்கள். தன வீட்டுவேலை செய்யச் சக்தியற்றவளுக்குப் பலமும் சுகமுமுள்ள பிள்ளைப்பெறும் சக்தி எங்கிருந்துவரும். ஆகலால ஸ்திரீயானவள் தன்னிடதிலில்லாத பலத்தை எங்கிருந்து கொண்டு வருவாள்? ஸ்திரீயானவள் தன்னிடதிலிருக்கும ஜீவாதாரமாகிய சதுக்களை யெல்லாம ஒன்று சேர்த்துத் திரட்டி ஓரே யிடத்தில் செலுத்துஞ் சமயம் கருத்தரிக்கும் நிமிஷமே. சுக்கில சுரோணிதத்தைத தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு ஓர் புது ஜீவனைச் சிருஷ்டிக்கப் போகும் அந்த நிமிஷத்தில் அவள் முழுபபலமும் அவள் சரீரததின் சதுக்களும் ஒன்றுபத்திரண்டு ஜீவாற்பத்தியாகிய அருந் தொழிலைச் செய்ய ஆரம்பிக்கின்றன.

அந்நிமிஷத்தில்தான் அவளுடைய சரீரமும் ஆத்மாவும் சந்தோஷமும் பலமும் சௌக்கியமுமுள்ளவைகளாயும், சகல சம்பூரணங்களும் நிறைந்தவைகளாயு மிருக்க வேண்டும். அந்நிமிஷத்தில் அவள் மனதில் என்ன சாயல் படிகின்றதோ அவ்விதமாகவே அக் குழந்தையின் ரூபமும் அமைதல் உண்டாகும். ஸ்திரீயானவள் வேதனையினாலும் மனக்கவலையினாலும் களைப்படைந்திருக்கும் பொழுதும், புருஷனுடைய பலமும் ஆவியும் பல காரணங்களால் களைத்திருக்கும்பொழுதும் உற்பத்தியாகும் குழந்தையின் ஸ்திதி எப்படியிருக்கும்? புருஷன் தன் ஆண்மையையும் பலனையும் தன் பிள்ளைக்குக் கொடுப்பதற்குப் பதிலாய் அச்சிசு உற்பத்தியாகுங் காலத்தில் தனக்கிருந்த களைப்பையும் பலவீனத்தையும் அதற்குக் கொடுக்கிறான். அதனால் மந்தம் பிடித்த அல்லது பைத்தியமான பிள்ளை பிறக்கிறது. தன் முழுப்பலத்தையும் மற்றவேலைகளில் செலவழித்துப் போட்டு மிருதியாயிருக்கும் பலமற்ற ஆவியைத் தன் பிள்ளைக்குக் கொடுக்கிறான். தன் பிள்ளை நன்றாயிருக்க வேண்டுமே, அதற்குப் புத்திக் கூர்மையும் பலமுமுண்டாக வேண்டுமே என்னும் எண்ணம் அவன் மனதில் படிகிறதேயில்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம் தன்னிச்சை நிறைவேற வேண்டுமென்பதே. ஆதலால் தன் குழந்தையின் நன்மையைக் கருதி, கடினமான வேலையைச் செய்வதாலும், சோர்வை உண்டுபண்ணும் இன்பங்களினாலும், தன் சுகத்தைத் தேடித்துக் கொள்ளாமல், அவற்றை நீக்குவதற்குப் பதிலாய்த் தனது சிற்றின்பமே பெரிதென்றெண்ணி இரவெல்லாம் தூக்கமற்று நாடகம் பார்ப்பதனாலும், ராகிரி உண்டுபண்ணுகிற வஸ்துக்களைச் சாப்பிடுவதனாலும், ஸ்திரீ லோலனுய்த் திரிவதனாலும் தன் பலத்தைத் தேடித்துக் கொள்வதுமல்லாமல், தனது ஞாபக சக்தியும் புத்திக்கூர்மையும் மழுங்கிப்போயத் தன் வேலையைத் திறமையோடு நடத்தத் தக்க சக்தியற்றவனையும் விடுகிறான். இப்படியிருக்குந் தருவாயில் ஓர் குழந்தை அவனுக்குப் பிறக்கிறது. புருஷனே! அந்தக் குழந்தையின் ஸ்திதி எப்படியிருக்கும்? சாதாரணமாய்த் தான் எவ்வளவு பலமும் சௌக்கியமுமுள்ளவனாயிருந்தபோதிலும், அக்குழந்தை உற்பத்தியாகுங் காலத்தில் அவனுக்கிருந்த நோயையும் களைப்பையும் பலவீனத்தையும் தன் பிள்ளை உலகத்திலிருக்குங் காலமெல்லாம் அனுபவிக்க வேண்டிய நித்திய சுதந்தரமாகக் கொடுக்கிறான். இதைவிடத் தகப்பன் தன் பிள்ளைக்குச் செய்யக்கூடிய அக்கிரமம் வேறு உண்டோ? இதைவிடப் பெரிய தோஷமும் அவனால் செய்ய முடியுமோ! ஐயோ! அவனுக்குப் பிறந்த குழந்தை உயிரிருந்தும் சக்தியற்ற நடைப்பிணமாகிறதே. அந்தக் குழந்தைக்கு உண்டாயிருக்கும் சரீரம், இவ்வுலகமாகிய சிறைச்சாலையில் அதைக் கட்டிப்போடும் விலங்குக்கொப்பாகுமே. அதற்கு இவ்வுலகத்தில் சந்தோஷமும் மகிழ்ச்சியுமுண்டோ? ஆ!

அப்பிள்ளை பிறப்பதைவிடப் பிறவாதிருந்தால் நலமாகும். ஆதலால் ஒவ்வொரு மனுஷனும் இவ்வுலகத்திலிருக்குங் காலத்தில் தன் முழுப் பலத்தையும் சௌக்கியத்தையும் காட்டத்தக்க சமயம் சில உற்பத்தியாகும் அந்த நிமிஷமே என்பதை யோசித்து ஒழுகவேண்டும.

பந்தய ஓட்டத்திற்கென்று தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் மனுஷர் அதற்காகக் குறித்தகினத்திற்கு அதிக காலத்திற்கு முன் நல்ல உணவுகளை உண்டு, நற்பானங்களைப் பருகி, அக்கம் பக்கம் தங்கள் மனதையும் பலத்தையும் செல்லவிடாமல், நாள் தோறும் தங்கள சரீரத்தைக் காப்பாற்றிக், குறித்த நேரத்தில் தங்கள் முழுத்திறமையையுங் காட்டுகிறார்கள். இவைகளெல்லாம் எதன் பொருட்டு? ஒருவேளை சில வெள்ளிக்காசுகள் பரிசு கிடைக்கும் அல்லது ஜனங்களெல்லாரும் இன்ன ஊரில் இன்னான் அதிக பலசாலியென்று மெச்சிப் பேசிக்கொள்வார்கள். இந்த அற்பப் புகழ்ச்சியைச் சம்பாதிக்க ஒரு மனுஷன் அவ்வளவு ஆயத்தம் பண்ணிக்கொண்டானென்றால், சிறுஷ்டகர்த்தா "வெளிச்ச முண்டாகக்கடவது" என்று நினைக்க வெளிச்ச முண்டானதுபோல் ஒரு சிசு உண்டாகக்கடவது எனறு நினைக்க அதிலிருந்து ஓர் மனுஷன் உற்பத்தியாயி உனக்குப் புகழ்ச்சியையும் கீர்த்தியையும் உண்டுபண்ண விரும்புவாயாயின் நீ உன்னை எவ்வளவாய்க் கட்டிக் காத்துக்கொள்ள வேண்டும. ஓழுங்கான ஜீவனை உற்பத்தியாக்குங் காலத்தைமுன்னமே குறிப்பிட்டு நாயகனும் நாயகியும் அதற்கென்று தங்கள் முழு ஆத்துமாவையும சரீரத்தையும் முன்னமே ஆயத்தப்படுத்தி, குறிதகநேரத்தில் தங்கள் முழு ஆசையையும் அன்பையும் பலத்தையும் வெளிப்படுத்திச் செய்யும சம்போகத்தினால் உண்டாகும் பிள்ளை ஆரோக்கியமுடையதாயும் சகல பாக்கியங்களும் நிறைந்ததாயும் தீர்க்க ஆயுள் உள்ளதாயுமிருக்கும். ஏனெனில் குறிப்பிட்ட காலத்தில் கூடிய ஆயத்தத்துடன் கலப்பதால் தங்கள் குழந்தை இன்னின்ன குணலக்ஷயமுள்ளதாயும், சௌக்கியமும், புத்தி கூர்மையுமுள்ளதாயும் இருக்க வேண்டுமென்று முன்னமே தங்கள மனதிலெண்ணின தெய்வத்தை நோக்கிப் பயபக்தியுடன் பணிந்து தம சித்தத்தின்படி ஒரு குழந்தையைக் கொடுக்குமபடி அவரை நோக்கி மன்றாடிக் கொள்ளலாம். அப்பொழுது தெய்வமும் அவர்கள விருப்பத்தை வாய்க்கச் செய்வார்.

சித்திரம் வரைகிறவன் தான் இன்னின்ன ரூபத்தை வரைய வேண்டுமென்று தன மனதில் முன்னமே யோசித்து வைத்து அதற்கு வேண்டிய கருவிகளையெல்லாம் ஆயத்தப்படுத்தி, அதன

பின் வரையத் தொடங்குவான். அப்பொழுது அவன் மனதிலிருக்குஞ் சொரூபத்தைதத் தன் கையின் மூலமாய்ப் பலகை அல்லது கடுதாசியில் பதிந்து விடுவான். அப்பொழுது உலகத்தார் அவனை மெச்சி அவனைச் சித்திர மெழுதுவதில் பாண்டித்திய முடையவன் எனப் புகழ்வார்கள். அப்படி முன்னமே தன் மனதில் ஓர் சொரூபத்தைக் குறிப்பித்து வைக்காமல், ஏனைதாமே வென்று வரையத் தொடங்குகிறவன் கால், கை முதலிய அவயவங்களின் அளவுப் பிரமாணந் தப்பி அவலக்ஷணமான படத்தை எழுதுவான். தப்பித் தவறி அதிகப் பிரயாசத்தால் சற்று நல்ல படத்தை வரைந்தபோதிலும் முன்னமே தன் மனதில் குறிப்பிட்ட படத்தை வரைகிறவனுக்கு நிகராகமாட்டான்.

அப்படியே ஓர் வீடு கட்டத் தொடங்குகிறவனும் தான் கட்டப் போகும் வீட்டிற்கு முன்னதாக மாதிரி உருவப்படம் அமைத்து அதன்பிரமாணம், அளவு, சாயை, செல்லுஞ் செலவு இன்னதென்று முன்னமே தீர்மானித்து, அதற்கு வேண்டிய செங்கல், சுண்ணாம்பு, மரதினுசுகள், ஓடுகள் முதலியவற்றைமுன்னமே சேகரித்து ஆயத்தப்படுத்திக்கொண்டு வீடு கட்டத் தொடங்குவான். அப்படி முன்னமே ஆயத்தப்படுத்தாமல் செய்பவன் ஒரு சுவரை கட்டுவான். அதன்பின் இதில் வழியிருந்தால் நலமாயிருக்குமென்று கட்டியசுவரை இடிப்பான். பின்னும் சிறிதுதூரத்திற்குப் பின் வழியைவிட ஜன்னலேஉத்தமமென்று திரும்பக் கட்டத்தொடங்குவான். இவ்விதமாய் அனுதினபாரம் போடுமுன் சொற்பசித்தை எழுத்தால் மிகஎளிதில் முடியக்கூடிய அற்பவிஷயங்களை முன் யோசிக்காமல் தொடங்குவதலேல கஷ்டமும் நஷ்டமும் மனக் கவலையுமுண்டாகும். ஆதலால் இவ்வுலகதில் மனுஷன் செவ்வையாகவும் பெயர் நிற்கத்தக்கதாகவும் செய்ய விரும்பும் ஒவ்வொரு வேலையும் முன்னமே மனதிற் குறிப்பிடப்பட்டதாயும் ஆயத்தம் பண்ணப்பட்டதாயு மிருக்க வேண்டும். அப்படியிருக்க ஓர் துளி நீரை உலகமெல்லாம் நடுங்கி வணங்கத்தக்க ஓர் மனுஷனைச் சிருஷ்டிக்குந் தொழில் மிக எளிதோ? ஒரு அற்ப காரியத்தைச் செய்துமுடிக்க முன்னமே இவ்வளவு ஆயத்தப்படவேண்டுமென்றால் உலகத்திலுள்ள சகல தொழில்களிலும் அரியதும் மேன்மையும் மகிமையும் பொருந்தியதுமான ஒரு ஆத்துமாவும் சரீரமுமுள்ள மனுஷனைச் சிருஷ்டிக்குந் தொழிலுக்கு எவ்வளவு ஆயத்தமும் முன் யோசனையும வேண்டும்.

ஓர் குயவன் கையில் ஓர்பிடிக் களிமண்ணைக் கொடுத்தால் அவனதைச் சட்டியாகவேனும், பானையாகவேனும், குடமாகவேனும், அல்லது மனுஷர் வணங்கும் காளியம்மன், பிடாரி, வீரபத்திரன் முதலிய சொரூபங்களாகவேனும் தன் மனம்

போன போக்கின்படி செய்வான். அதைச் சட்டியாகச் செய்தால் ஏழைகள் அதைத் தாங்கள் சாப்பிடும் பாத்திரமாக்கி எச்சலாக்குவார்கள். பானையாகச் செய்தால் அடுப்பில் வைத்து நெருப்பு மூட்டிச் சோறு சமைக்கும் பாத்திரமாக்குவார்கள். அது கரியடைந்து போகும். குடமாகச் செய்தால் அதை அடுப்பேற்றிக் கரியாக்காமல் சுத்தமான ஸ்தானத்தில வைத்துப் பெண்கள் தங்கள் தலைகளிலும் இடுப்புகளிலும் எடுத்துக் கொண்டு திரியும் பாத்திரமாகும். ஆனால் காளியம்மன், பிடாரி அல்லது வேறே வழிபடும் உருவம் சிருஷ்டித்தால் ஜனங்கள் அதன்பக்கத்தில் போவதற்கஞ்சி பூமாலை சூட்டி இரவும் பகலுமதற்கு முன் பணிந்து நமஸ்காரஞ் செய்வார்கள்.



காளியம்மன்.

பெற்றோராக விரும்புவோரே! இதோ உங்களிடத்தில் கர்தனிதனைக் கொடுத்து அதை உங்களிஷ்டத்திற்கு வைப்பவிக்கிறார் கிறார். அதை மூடனாகவோ, பைத்தியக்காரனாகவோ, அங்கவீனமும் அவலட்சணமும் முள்ளாளனாகவோ, அல்லது வேறெந்தமனுஷனாகவோ சிருஷ்டிப்பது உங்கள் சித்தம். நாயகனும் நாயகியும் ஒன்றுசேர்ந்து நல்ல காலத்தில் ஆயத்தமுள்ளவர்களாய் இவ்வரிய தொழிலை முடிக்கவேண்டும். தங்களுக்குப் பிறக்கும் குழந்தையை மடையனாய் அல்லது சமூசாரியாய் அல்லது கஞ்சிபானங்களைக் கற்கும் சாஸ்திரியாய் அல்லது உலகத்தை நடுங்கச் செய்யும் ஓர் வீரனாய் அல்லது ராஜ்ஜியத்தை ஆளும் அரசனாய்ச் சிருஷ்டிக்கும் வல்லமையைத் தெய்வம் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தை ஜாக்கிரதையுடன் உபயோகிப்பீர்களாயின் உங்களுக்கு நல் வாழ்வும் நற்கீர்த்தியு முண்டாகும்.

"நெய்யால் விளக்கெரித்து நீண்ட தலம் புரிந்து பெற்ற பிள்ளை." என்று உலகத்தார் சாதாரணமாய்ச் சொல்லிக்கொள்வதன் கருத்தென்ன? இன்னின்ன குணதிசய முடையதாகவும்

இன்னின்ன ரூபலாவண்ணியம் பொருந்தியதாகவும் தங்களுக்கு ஓர் மைந்தன் பிறக்க வேண்டுமென்று முன்னமே தங்கள் மனதில் நிர்மானித்துத் தெய்வத்தை நோக்கிப் பிரார்த்தித்து உண்டான பிள்ளை என்று அர்த்தம். அவ்விதமாய்த் தவஞ்செய்து கூடிய ஆற்றலுடன் பெறும் பிள்ளைக்கு ஆயுள் குறைவுண்டோ? அழகு குன்றியிருக்குமோ? அங்கத்தில் பழுதுண்டோ? தெய்ல கடாக்ஷமும் கிடைக்காமற் போகுமோ? தமக்கு உதவி செய்வோர்க்குத் தெய்லம் தரும உதவி செய்யுமே. காம்படும் பிரயாசத்திற்குத் தக்கதாய்க் கடவுள் பலனளிக்காமல் விடார். என்றும் பதினறு வயதுள்ள மார்க்கண்டனைப் பெற விரும்புவோர் எவ்வளவு தவம் புரியவேண்டும். பிள்ளை வேண்டுமென்னும் ஆசையால் இரவும் பகலும் சொர்ப்பனத்திலுங்கூட அவர்கள் மனதில் சிசுவின் ரூபம் தோன்றுத நேரமுண்டோ? எவ்வளவு ஆயத்தமும் சுத்தமுமுள்ளோராய் அவனைப்பெற்றோர் தெய்வத்தைப் பிரார்த்தித்திருக்கவேண்டும்! பிள்ளை வேண்டுமென்று தவம் புரிவோர் சௌந்தரியமுள்ள பிள்ளைகளைப் பார்த்தவுடன் இவ்வித ரூபலாவண்ணியம் பொருந்திய குழந்தையைத் தெய்வம் நமக்குக் கொடுக்க மாட்டாரா வென்று அடிக்கடி மனதில் எண்ணமிருப்பார்களோ? தவம் புரிவோர் தங்கள் மாமிச இச்சையைமட்டும் நிறைவேற்றக் கருதி அடிக்கடி சம்போகமுஞ் செய்வார்களோ? அப்படி மிதமிஞ்சிய சம்போகத்தால் தப்பித் தவறிப் பிறந்த பிள்ளை தீர்க்க ஆயுளும் யௌவனமும் பொருந்தியிருப்பானே? எமனை வெல்லத்தக்க புத்திக் கூர்மையும் தெய்வத்தையும் தன் வசப்படுத்தித் தன் இஷ்டத்தை நிறைவேற்றத் தக்க சக்தியுமுடைய புத்திரன் தங்கள் மாமிச இச்சையைமட்டும் நிறைவேற்றக் கருதி வந்தானே வென்று கிரியைகள் செய்யும் பெற்றோர்க்குப் பிறப்பானே? ஆகா! இந்த ஏனைதாழை செய்கைகளால் பிறக்கும் பிள்ளைகள் "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வ"மென்று தங்கள் பெற்றோரை வணங்கிக் கனப்படுத்த இடமுமுண்டோ? அவர்கள் இவ்வுலகத்திலிருக்குங் காலமெல்லாம் நோயினாலும் பலவீனத்தினாலும் அழுந்தும்பொழுது தங்களை உபத்திரவத்திற்கு ஆளாக்கின பெற்றோரைச் சபித்துத் தூஷிப்பது நியாயமன்றோ? அவ்விதமாகப் பிறக்கும் பாலகன் வயது வந்து சுயபுத்தியும் பகுத்தறிவுமுள்ளவனாவுடன் தனக்கிருக்குங் குறைவுகளைக் கண்டறிந்து வெட்கத்துடன் தலை கவிழ்ந்து உலகத்தார் முகத்தைப் பார்க்க ஆசையற்றுத் திரிவது சகஜமாகும். ஏனெனில் அவன் சிற்றின்பத்திலும் உபத்திரவத்திலும் உற்பத்தியாகிப் பிறந்தான். தாய் குழந்தை பெற விருப்பமற்றவளாய்த் தன் புருஷனை நோக்கிக் கெஞ்சி மன்றாடித் தன் உபத்திரவதனை வெளியிட்டிருப்பாள். தகப்பனை

மிருகம்போல தன் காமமே பெரிதென்றெண்ணிக் கட்டாயப்படுத்தி யிருப்பான். தாயினது வருத்தமும் தகப்பனது சிற்றின்பமும் சேர்ந்து ஒரு குழந்தை யுண்டாயிற்று. ஆதலால் அதற்குச் சிற்றின்பத்தில் மிகப் பிரீதி. ஆனால் தாயின் நோயும் மனைவருத்தமும் சஞ்சலமும் வேறொரு பக்கத்தில் அவனை வதைக்கின்றன. ஆதலால் சிற்றின்பமும் உபத்திரவமும் சேர்ந்து அதிக உபத்திரவமுண்டாக்குகின்றன. அக்குழந்தை உற்பத்தியாகும்பொழுது அதைப் பெற்றோர்க்கு மாத்திரம் இச்சையே பன்றி வேறிச்சை யிருந்ததில்லை. ஆதலால் அது இருட்டு வீட்டிற்பிறந்த ஒரு குருட்டு எருமையா யிருப்பது சரியே. ஆனால் புருஷனே! உன் ஸ்திரீயின் ஸ்திதியை அறிந்து அவள் பிள்ளையுண்டாக ஆயத்தமாய் விருப்பமுற்றிருக்குங் காலத்தில் இருவரும் ஒருமித்துக் குறித்த நேரத்தில் கூடிச் சுகிப்பீர்களாயின் உங்களுக்குப் பரமானந்தமும் பேரின்ப சுகமுமுண்டாகும். "உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக கொடியைப்போலிருப்பாள். உன் பிள்ளைகள் உன்பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகள் போலிருக்கும். உனக்குப் பாக்கியமும் கனமையுமுண்டா யிருக்கும்."

காதலன்.

"பழகப்பழகப் பிரியாளைப் பவளஞ்சிறந்த விதழாளைத்
தழுவத்தழுவக் குழையாளைச் சலியாவின்பந் தருவாளை
இளகித்தருமம் புரிவாளை யென்னெஞ்சுள்ளே யுறைவாளைக்
கல்விக்கினிய சொற்றேனைக் கண்போல் பாவிப்பேனனே."

காதலி.

"பாலோதேனே முப்பழஞ்சேர் பாகோ வாகாமுனதுமொழி
வேலோசேலோ விழிகளுயர் விண்ணின் மதியோ வதனமென
நாலாவகையும் புகன்றுரைக்கு நண்பானின்பா லெனைத்தந்தேன்
மேலாம்பாக்யந் தந்தென்னை மீட்பதுவு முன்கடனே."

காதலன்.

"அன்னகடையை யிகழ்நடையா யமிர்தவசன மெனவுடையாய்
மின்னலொளிபோ லிடையுடையாய் விண்ணின்மதிபோ முகமுடையாய்
தன்னுங்குருவைத் தொழுதேத்தும் தோகாய்மயிலின் வனப்பிருந்த
வுன்னைநினைந்து வுறுகுமெனக் குயிர்தரவந் ததியாயோ."

என்று அன்பான்ய அன்பு பாராட்டும் புரு— பாலையம்ர [illegible]
தருமம் நடத்தத் தகுந்தவராவர்.

குழந்தை பிறந்தபின் அது பள்ளிக்கூடத்திற்குப் போகுமட்டும் தாயினை பராமரிப்பிலும் நடத்துதலிலும் அதற்குண்டாகும் நன்மை அனந்தமென்று சொல்லப்படும். அப்படியானால் அதன் அவயவங்களெல்லாம் தன் தாயின் வயிற்றில் உருவாகிக் கொண்டிருக்கும் பொழுது தாயினால் அதற்குண்டாகக் கூடிய நன்மை தீமைகளை இவ்வளவென்று யாரால் சொல்லக்கூடும்? ஓவ்வொரு மனுஷனது சரீரமும் ஆத்துமாவின் தன்மைகளும் சௌக்கியா சௌக்கியங்களும் நன்மை தீமையும் தன் மாதாவின் வயிற்றில் மதலையாயிருக்கும்போதே நியமிக்கப்படுகின்றன. தாய்க்கு எந்தெந்த விஷயங்கள் சௌக்கியா சௌக்கியத்தையும் இன்ப துன்பத்தையும் உண்டாக்குகின்றனவோ அவையெல்லாம் அத் தாயின் வயிற்றிலுருவாகும் சிசுவின் அவயவங்களிற் பதிந்துவிடுகின்றன. ஆகலால் தாய் சற்றுநேரம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் அவளுக்குப் பிறக்குங் குழந்தை உயிரோடிருக்குங் காலமெல்லாம் அதனிடத்தில் நிலைத்திருக்கும். தாயானவள் பிள்ளை பெற ஆயத்தமும் விருப்பமுமற்றவளாயிருக்கும்பொழுது அவனைக் கர்ப்பவதியாக்குவதால் அவளுக்கிருக்கும் வெறுப்பும் துன்பமும் கொஞ்சமல்ல. ஆனால் அவளுக்குப் பிறக்குங் குழந்தைக்கோ எப்பொழுதும் நீங்காத பெரும உபத்திரவம் உண்டாகின்றன. தான் வெறுப்புற்றிருக்குங் காலையில் கர்ப்பவதியாகிப் பெறும் பிள்ளையின்மேல் தாய்க்கு என்ன பாசமிருக்கும். அது ஜனிக்குமபோது அவளுக்கு வெறுப்புண்டாயிருந்தது. அது தன் வயிற்றிலிருக்குமபோது அவளுக்குப் பயமுந் திகிலுமுண்டாகின்றன. அது உற்பத்தியான நாள்முதல் தாயக்கு அனபும் பாசமும் உருக்கமு முண்டாங் அதற்கு உயிர் கொடுத்துக்கொண்டு வருவதற்குப் பதிலாய்த துக்கத்தினாலும் வருத்தத்தினாலும் அவள் மனம சோர்ந்து உதிரம்கெட்டு சிசுவின் சரீரத்தில் ம்பாய்ச் சேருகிறது.

"தாயாகிய பாவிக்கொரு தயவும் வரவிலையே
வேயாரிசை யுலவாயிடு மெழுகென்ன வுருக்கும்
போயாரினி யுரைசெய்குவர் பொய்யுக கிடைனவுகும்
நீயாகிலு மிறைவற்கு நிகழ்த்தாய் மடவனமே."

தன பிள்ளைக்குச் சுகமும் சௌக்கியமும் சந்தோஷமுமுண்டாக்கும வழிகளை நாடித தேடுவதற்குப் பதிலாக அதை எப்படி அழிகலாயம எப்படிக கொலலலாமென்று ம்யாசித்துக்கொண்டிருகிறாள். அதை அவள் ஒருககாலும் விரும்பினதேயில்லை. ஆனால கட்டாயத்தினாலும் பலவந்தத்தினாலும் அவள் புருஷனின அபபாரத்தை அவள்மேல சுமத்தினான. அப்பாரத்தை

எப்படி நீக்குகிறதென்று இரவும் பகலும் ஓயாது சிந்தையாயிருக்கிறாள். அவளிடத்தில் நீ பெறப்போகும் குழந்தை சுகத்தையடையும்படி நீ சந்தோஷமும் அன்புமுள்ளவளாயிருக்க வேண்டும் என்று சொல்வது அவள் செவியிலும் நுழையாது. அவருடைய சரீரமும் ஆத்துமாவும் பிள்ளைப்பேற்றின் உபத்திரவத்தையும் கஷ்டதசையுஞ் சகிக்க ஆயத்தமில்லாமலிருக்கும்பொழுது மற்றவர்களைப்போதனையால் அக்குழந்தைமேல் அன்புவைக்கவும், அந்தப் பாரத்தைத் தன்மேல் சுமத்திய கொடுந்தோஷிபாகிய அதனை தகப்பனை நேசிக்கவும் அவள் மனதைத் தூண்டமுடியாது. அக்குழந்தை உற்பத்தியாகுமுன் தன் புருஷனுக்கணவகச் சரீர இச்சையை நிறைவேற்ற இடமளிகாதிருந்த விஷயத்தில் அவள் குறைவாளியானபோதிலும், தனக்கு விருப்பமில்லாத காலத்தில் ஜனித்த குழந்தைமேல் அவளுக்கு வெறுப்புணடாயின் அக்குற்றம் அவளுடையதனறு. எனனில் இயறகையாகவே அவள் சரீரம் அதை வெறுகக்றது. புருஷனை! இவ்விதமாய் உற்பவித்துப் பிறக்கும் குழந்தை எபபடியிருககும்? உன் குழநதை கீழ்ப்படிதலின்று உனககு எதிர்த்து நிறகுமபொழுது அதன துர்ச்சுபாவங்கள் எவ்விதமாய் அதனிடததில் வந்தது எனறு நீ யோசித்ததுணடோ? அதற்குக் காரணம் நீயே. உனனையும் உன் மனைவியையு மல்லாமல் உன் குழந்தையின சுபாவஙகளுக்குக் காரணம் வேறொருவருமில்லை. துரசன சகவாசத்தால குழந்தைகள் கெட்டுபபோவதுணடு எனறு சொலலுவார்கள். ஆம், துர்க்குணத்தின் வித்து குழநதையில மறைந்திருந்தால அது வளருவதற்கு மேண்டிய துரசன சகவாசமாகிய மழை பெயதவுடன் அதன துர்க்குணஙகளாகிய முளைகள் கிளமபி வெளிப்படும. ஆதலால் உன் குழந்தைககு அழகும சௌகரியமும் சுறுசுறுபபுமுள்ள சரீரம்மா, அலலது அருவருப்பும் வியாதியும் நிறைந்து கறைப்பட்ட அவலசகுணமான சரீரம்மா எது கிடைகக்வேண்டும்? உன் குழந்தைக்கு உருக்கமும, உணமையும், நியாயமும, பச்சாதாபமும், மனமையுமுள்ள ஆதமாவா, அலலது கேவலமும், பொறாமையும, இழிவும், பொயயும நிறைநத ஆதமாவோ எது உண்டாகவேணடும? அது தெயவசசாயலை யணிநது ஞானம் பரிசுத்தம் பாக்கியம் உள்ளதாயப் பிறக்கவேண்டுமா, அலலது திருடன், கொளளைக்காரன, கொலைக்காரனாக வேணடுமா? புருஷனும் சகபபனுமாகிய நீ்ய இகசமகளஙகளை உன் மனதில் நிதானித்து உனக்கிஷடமானதை தெரிந்துகொள். அதற்குத்தரவாதி நீ்ய. உன் மனைவி ஓர் ஜீவனின ஆதமாவை தன்னிடம ஏற்றுகொண்டு அதை செமமையாய வளர்தது பிறப்பிக்கவும், அதனுடைய தும் உபதரவங்களைச் சகிககவும் ஆயத்தமுள்ளவளாயிருக்கும்

போதல்லாமல் வேறெந்தக் காலத்திலும் அவளைக்கர்ப்பவதியாக்க முயலாதே. சந்தோஷத்துடன் கர்ப்பவதியாகி, சாந்தமும், அன்புமாய் அதைச் சகிக்கும் தாயினது தன்மை மிகச்சிறந்ததும், மகிமை தங்கியதுமா யிருக்கிறது.

ஸ்திரீ தன் புருஷனிடத்தில் இவைப்பாறுதலையும் பூரண இன்பத்தையும் காடுகிறாள். அவனை ஆபத்துக் காலத்தில தனக்கு அடைக்கலமாகும் பலமான ஆரணைகப் பாவித்து, அவனிடத்தி லொதுங்கவும், அவனுக் கொதுக்கிடமாகவும், அவனை நேசிக்கவும், அவனால் நேசிக்கப்படவும், அவனிடத்தில் ஓடி அவனைத் தனக்குப் புகலிடமாகவற் றுக்கொள்ளுகிறாள். பயமற்ற அன்போடும் மாசற்ற விசுவாசததோடும் அவன மார்பில் சாய்ந்து, தன் முழு சரீரத்தையும் ஆத்மாவையும் அவனுக்கே தத்தம் பண்ணி, அவன் ஆளுகைக் குட்படுகிறாள். மாசற்ற அன்பும் அளவற்ற விசுவாசமு முள்ளவளாய்த் தன்னிடத்திற் கோடிவந்து தனனைப் புகலிடமாகக் கொள்ளும் ஸ்திரீக்குத் துரோகஞ் செய்து அவளால் சுமக்கக் கூடாத பாரத்தை அவள்மேல் சுமத்துபவனும், பாஸ்திரீகளின் மேல் மனம்வைத்து அவர்களுக் கின்பத்தைக் கொடுத்துத் தான் பெற்றுக்கொள்ளும் கோப்களோத் தன் மனைவிக்குக் கொடுப்பவனும், பிராண நாயகன் என்னும் சிறந்த நாமத்தைத தரிக்கப் பாத்திரராவாரோ? சுய இச்சையை நாடித் திரியும் மிருகத்திற்கு ஒப்பான லோபி மணவாளனுவானை?



தேவன் ஒவ்வொரு மனுஷனிடத்திலும் அவன் மனைவி பிள்ளைகளின் மூலமாக முகமுகமாய்ப் பேசித் தம்மை அவனுக்குக் காண்பித்து அவன் காதிற் பேசுகிறார். தெய்வத்திற்கும மனுஷனுக்கும நடுவில் இருக்கும் தீர்க்கதரிசிகள் மனைவியும் பிள்ளைகளுமம். அவர்கள் மூலமாய் அண்டசராசரங்களிலும் பரவியிருக்கும் தேவஞானி ஒவ்வொரு மனுஷனிடத்திலுமிறங்கி அவனுககு உயிரையும சுறுசுறுப்பையுங் கொடுத்து மனுஷீகத்துகுரிய வல்லமைகளை அவன் உபயோகிக்கும்படித் தூண்டிவிடுகின்றது. பூலோகத்தில் மனுஷர் கண்டுபிடிக்கும் ஞானமான வழிவகைகட்கும் அவர்க

ளுடைய ஆசாபாசத்திற்கும் காரணம் மனவி மக்களே. அவர் களினல் ஒவ்வொரு மனுஷனுக்கும் முன்னுக்கு வரவேண்டும் என் னும் விருப்பமுண்டாகி அதற்குரிய வழிகளும் கண்டு பிடிக்கப் படுகின்றன.

அவன் சுத்தமும் கீர்த்தி பெற்றவனுமாவதற்குக் காரணம் அவன் மனைவி மக்களே. ஒவ்வொரு மனுஷனுடைய நடக்கை களையும் சுபாவத்தையும் சீர்திருத்தச் செய்யும் தெவ வல்லமை அவர்களிடத்திலேயே மறைந்திருக்கிறது. ஒவ்வொரு மனுஷனும் தானும் தன் குடும்பமும் முன்னுக்குவரும் வழிகளைத்தேடி அவற் றின்படி செய்ய முயற்சிக்கிறன். அதலால் ஒவ்வொரு மனுஷ னும் இவ்வுலகத்தில் நாகரீகத்தைப் பரவச்செய்து மனுஷ ஜாதி களை உயர்த்தும்படி போதகன்மாராகவும், நியாய சாஸ்திரிகளாக வும், பிரகஸ்பதிபோன்ற வாய்ச்சாதுரியத்திலும் கல்வித்திறமை யிலும் முயற்சிக்கும் சகல காரியங்களிலிட புருஷனுகவும் பிதா வாகவும் இவ்வுலகத்தில் நாகரீகம் பரவும்படி அநேக காரியங்கள் செய்யலாம். இவ்வுலக ராஜாக்களும், சுவிசேஷகர்களும், நியாயப் பிரமாணம், வேதாகமம், சன்மார்க்கப் பிரமாணங்கள் முதலிய வற்றைப் பரவச் செய்து உலகத்தைச் சீர்திருத்தப் பார்ப்பது ஓர் மரமானது வளர்ந்தபின் அதன் பக்கத்துக் கிளைகளைக் கொய்து பகீரதப் பிரயத்தனம் செய்து அதை நேராக்குவதற்கு ஒப்பா கும். ஆனல் ஒவ்வொருபிதாவும் மாதாவும் தங்கள் தங்கள் பிள் ளைகளைச் சௌக்கியமும் சந்தோஷமும் நற்குணமுள்ளவர்களா கப் பிறப்பிக்க முயல்வதாலுண்டாகும் பலன், பயிரானது முளை கிளம்புமுன்னமே அதைச் செழிப்பாக வளரச்செய்ய எடுத்துக் கொள்ளும் அற்பப் பிரயாசத்தால் உண்டாகும் பெரிய நன்மை க்கு ஒப்பாகும்.

மனுஷனுடைய ஜீவியத்தை மூன்று பிரிவாக வகுக்கலாம்.

1. சிசுவாயிருக்குங் காலம். அதாவது தாயின் கர்ப்பத் தில் சஞ்சரிக்கும் ஒன்பது மாதங்கள்.

2. மனுஷ யிருக்குங் காலம். அதாவது பிறந்தநாள் முதல உயிர் துறக்கும் நாள்வரை.

3. ஜீவ ஆவியா யிருக்குங் காலம். அதாவது சரீரத்தை விட்டு ஆவி பிரிந்தபின் அனுபவிக்கும் நித்தியகாலம்.

இவ்வுலகத்திலுள்ள சகல கூட்டத்தாரும், மார்க்கத்தாரும், ராஜாங்கத்தாரும், கல்விச் சங்கங்களும், சாஸ்திரிகளும் மனுஷன் பிறந்தபின் அவனைச் சீர்திருத்தக்கூடிய விஷயங்களைக் கண்டுபிடித்த. இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்தபின் மனுஷரது ஆத்மா நல்ல நிலைமையில் இருக்கும்படி செய்யப் பலவிதமாய் முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், இவ்வுலகத்தில் இன்பத்தை அனுபவித்துப் பரலோக ராஜ்ஜியத்திற்குப் பாத்திரராகும்படி செய்யுஞ் சன்மைகளை ஒவ்வொரு மனுஷனுக்கும் பகட்டக்கக்க காலம் அவன் தன் தாயின் வயிற்றில் சிசுவாயிருக்கும் என்பதை மாதரை என்பதை அவர்கள் கவனித்து அறிந்து, அக்காலத்தில் மனுஷ ஜாதியைச் சீர்திருத்தக்கக்க வரிகளை அவர்கட்கு அதிமூலமாகிய பெற்றோர்க்குப் போதிக்கவேண்டும் என்னும் எண்ணம் ஒருகல்விச் சங்கத்திற்காவது ராஜாங்கக்காருக்காவது இதுவரையில் உண்டானதேயில்லை. இப்பொழுதுகான் மனுஷஜாதியார் மனுஷரின் தன்மை ஸ்பரத்தியாகும் அதிமூலம் பெற்றோராயிருக்கலாம் என்று சற்றே யோசிக்கத் தொடங்குகிறார்கள். இக்கொள்கையை மனுஷர் சரியானபடி கற்றறிவார்களாயின் தற்காலத்திலிருக்கும் நியாயக் கட்டளைகளும் மாறிப்போகும். பெற்றோரைப்போலப் பிள்ளைகளிடமிருந்து அவர்கள் கருக்குள் புகட்டிய தன்மைகளை வெளிவிடுவதற்காகத் தண்டனை விதிப்பது அநியாயமாக எண்ணப்படும். ஒவ்வொரு குழந்தையும் உற்பத்தியாகும்போது பொய், பொறாமை, களவு முதலிய பஞ்சமா பாதகங்களுடன் அதை உண்டாக்கி அது பிறந்தபின் பொய், களவு, கொலை முதலியவைகளைச் செய்வதற்காக அதைத் தண்டிப்பது கப்பிதமாகும். இயற்கையாக சுகமும், உண்மையும், அன்பு முதலிய தாயகுணங்களுமுள்ள மேன்மக்களை இயற்கையாகவே பொய், களவு, கொலை முதலிய அர்ச்சுபாவங்களைத் தரித்திருக்கும் அவஸ்டர்மேல் நியாயாதிபதிகளாக வைப்பது வீணாகும். ஏனெனில் சாதாரணமாய் நற்சுபாவங்களுடன் பிறப்பவர்களுக்கு துஷ்டர்களுடைய இருதயத்தில் குடி, பொய், மாமிச இச்சை முதலிய தர்ச்சுபாவங்கள், உண்மை, சாந்தம், கற்பு முதலிய நற்சுபாவங்களுடன் எவ்விதமாய்ப் போராடி மேற்கொள்ளுகின்றனவென்பதை அறிந்துணரமுடியாது. துஷ்ட நிக்கிரகமும், சிஷ்டபரிபாலனமும் செய்யவேண்டுமென்னும் ராஜநீதி முற்றிலும் மாறி துஷ்டரைச் சிக்ஷிப்பதற்குப் பதிலாகச் சான்றோர் அவர்கள்மேல் பரிதாபமுற்று, "பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்கிறதின்னவென்றறியாதிருக்கிறார்களே." என்று தங்கள் முழு இருதயத்தோடும் தெய்வத்தை நோக்கிப் பிரார்த்திப்பார்கள். பெற்றோரே பிள்ளைகளின் சுபா

யங்களுக்குக காரணர் என்னும் கொள்கையை உலகத்தார் உண்மையென்றறிந்தவுடன் மனுஷ ஜாதியை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்னும் விருப்பமுடையவர்கள் பெற்றோரின் சுகமே மனுஷ சுபாவத்திற்கு மூலகாரணமென்றறிந்து அதைப்பேணும் வகைகளைப் போதிப்பார்கள்.

சுருக்கம்.

இப்புஸ்தகத்தில் நாம் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் விஷயங்களை இங்கு சுருக்கிச் சொல்லுவோம் :—

தாயினது கர்ப்பத்தில் உற்பத்தியாகும் ஒவ்வொரு சிசுவினது அங்கங்களும் அத்தாயின் அவயவங்களில் சுரக்கும் சாரத்தினால் உண்டாக்கப்படுகின்றன.

இந்த சாரத்தை தாயிடமிருந்து மூலமாய்ச் செல்லும் இரத்தமானது சிசுவின் அங்கங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

இந்த வஸ்துவானது தாயினது அவயவங்களின் மூலமாய்ச் செல்லும்பொழுது அத்தாயினது மனதிலும் சரீரத்திலும் உண்டாகும் மாறுதல்களைப் பெற்றுக்கொண்டு செலலுகின்றது.

மனுஷருக்குண்டாகும் நானாவித குணங்களுக்கும் அஸ்திபாரம் தாயின் கர்ப்பத்தில் சிசுக்களாயிருக்கும்போதே உண்டாகிவிடுகின்றன.

கர்ப்பவதியாயிருக்கும் தாய்க்குப் பலசமயத்திலுண்டாகும் ஜம்பொறி உணர்ச்சிக்குத்தக்கவிதமாக ஒரு தாய்க்குப் பிறக்கும் குழந்தைகளின் குணங்களும் வித்தியாசப்படுகின்றன.

உதாரணமாய் :— தாயானவள் எவ்வித சுபாவமுள்ளவளாயிருந்தபோதிலும் கர்ப்பவதியாயிருக்குங்கால் செய்யும் கிரியைக்குத்தக்கதாகச் சிசுவினது சுபாவமுண்டாகிறது.

ஒவ்வொரு மனுஷனுடைய திறமையும் சுபாவமும், அவன் சிசுவாயிருக்குமபோதே நிர்ணயிக்கப்படுகிறது.

சாதாரணமாய்ப் பால்ய புருஷர் மனுஷிகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளைவிட நடுத்தர வயதுள்ளவர்களின் குழந்தைகள் யுகத்திலும், பலத்திலும், சிறப்புற்றனவாயிருக்கும்.

தாயுந் தந்தையும் எவ்வளவு புத்திக்கூர்மையும் திறமையுமுடையவர்களாயிருந்தபோதிலும் இயற்கைப் பிரமாணத்தையும்

சீர்மார்க்கப் பிரமாணத்தையும் மீறி நடப்பார்களாயின், அச்சமயத்தில் அவர்களுக்குப் பிறக்கும குழந்தைகள் அவர்களிடத்தாழ்ந்த புத்தியும் திறமையுமுடையவர்களாயிருப்பார்கள்.

பெற்றோர்களின குணதிசயம் எவ்வளவு கேவலமாயிருந்தபோதிலும், சற்சனருடைய சகவாசத்திலும், நற்போதகங்களுக்குச் செவிகொடுப்பதிலும், சேர்த்தியான இடங்களில் வசிப்பதிலும், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் அவர்களிடத்சிறந்த குணத்தையுடையவர்களாவார்கள்.

பெற்றோரிடத்திலிருந்து பிள்ளைகள் சுதந்தரித்துக்கொளுகும் அர்ச் சுபாவங்களையும் மந்தப்பிரகிருதிகளையும் கல்விப் பயிற்சியிலை முற்றிலும் நீக்குவதரிது. ஆனல் ஒருவிதமாய் சற்றுச் சீர்திருத்திக் கொள்ளலாம்.



மாதாகவப்போல வேட்டிவளாதது மாதரை மாதராக்களாக்கும் மாயிலை தன்னிய மருந்து சிங்கவீரிய மாத்திரையே.

கடவுள் துணை.

மார்மசாஸ்திரம்.

ஐந்தாம் புஸ்தகம்.

சிசு உற்பத்தி.

பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற —குறள்.

இஃது

பாலர்க்கும்

சுக செல்வ நன்மைகளையும் சுகிர்த பாக்கிய
போக்கிஷத்தையும் நீடுழி பெருகவிக்க
விருப்பிய,

கல்கத்தா சர்வகலா சங்கத்தின் தமிழ்ப்பரீக்ஷகரும், மத்ரஸ் சென்
ட்ரான்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியரா யிருக்கையரும், கணித சாஸ்திரம், பூமிசாஸ்
திரங்களின் விசேஷ கர்த்தாவும், மானஸ மார்ம சாஸ்திரப் பண்டிதரும்,
சாமிவேல் வைத்தியசாலைத் தலைவருமாகிய

எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.


புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,


தென்காஞ்சி, இரங்கோன்.

1920.

All Rights Reserved.



முட்டையில் கருவளர்ச்சி.




அண்டங்களை ஆட்டினவைக்கும் எல்லாம்வல்ல சகஜன் முட்டைக்குள் னிருக்கும் குஞ்சுக்கு அமுதளிக்கும் விதத்தைச் சற்று கவனிப்போம்.

வடிவம்:—கோழி முட்டை சாதாரணமாய் அடி பருத்தும் நுனி சிறுத்தும் னிருக்கும். அதைச் சற்றீற சார்வான இடத்தில் வைத்தால் நேரே உருண்டு போகாமல் வட்டஞ் சுற்றி நிற்பதற்குக் காரணமதுவே. மலையிலுச்சியில் வசிக்கும பக்ஷிகளின் முட்டைகள் சாதாரணமாய் இருபக்கங்களிலும் கூர்மையாயிருக்கும். ஆதலால் வதாவது காரணத்தால் தம் நிலை தவற நேரிடின மீராய் உருண்டுவிடாமல சிறு வட்டஞ்சுற்றிநின்று விடும். ஆனல் உருண்டை வடிவமான கூடுகளில் விடப்படும் முட்டைகளோ ஒன்மீறடொன்று நெருங்கித் தாய்வயிற்றிற்குள் அடங்கத்தக்கதாக உருண்டை வடிவமாகவே யிருக்கும்.

ஓர் முட்டையை உடைத்துப் பார்ப்போமாயின், அதனுள் வெள்ளைக்கருவும் மஞ்சள் கருவுமிருக்கும். மஞ்சள் கருவின் நடுவில் ஓர் சிறு புள்ளி தோன்றும். அதுதான் ஜீவாதாரம். முட்டையை எத்தனை தடவை உருட்டிப் பிரட்டினலும் இந்த ஜீவாதாரக் கரு மேற்பாகத்திலேயே நிற்கத்தக்கதாக சாகஷாத் ஜகதீசன் ஓர் அற்புத வற்பாடு செய்திருக்கிறார். இந்த வற்பாட்டினல் தாய் வயிற்றிலுள்ள உஷ்ணத்தை முட்டையினுள்ளிருக்கும் ஜீவாதாரக் கருவானது பெற்று நாளுக்குநாள் விர்த்தியாகின்றது. முட்டையின் மற்றப் பாகங்களாகிய மஞ்சட் கருவும் வெள்ளைக் கருவும் இந்த ஜீவாதாரக் கருவின் போஷணைக்காகவே அமைக்கப் பட்டிருக்கின்றன.

கோழி தன் முட்டையை அடிக்கடிப் புரட்டி வைக்கிறதை கவனித்தவர்கள் முட்டையின் எல்லாப் பாகத்திற்கும் சம உஷ்ணந் தாக்கும்படி அது அப்படிச்செய்கிறதென்று சொல்வார்கள். அப்படி சம உஷ்ணம் தாக்கவேண்டிய அவசியமில்லை யாதலால அவர்கள் சொல்வது தப்பிதம். ஆனல் முட்டையினுளனிருக்கும் மற்ற வஸ்துக்களால் ஜீவக் கருவின் வளர்ச்சிக்கு யாதொரு தடையும் நேரிடாதபடி சற்று இடம்விட்டுப் பெயர்வதவசிய மானதால் அப்படி கோழி தன் முட்டையை அடிக்கடிப் புரட்டுகிறது.



இனிமேல் முட்டையினுள்ளிருக்கும் ஜீவக்கரு விர்த்தியாகும் விதத்தைப் பற்றி சற்று கவனிப்போம். இதற்காகப் பத்து முட்டைகளை ஒரே நாளில் அடைவைக்கவேண்டும். ஒவ்வொருநாளும் கால்படிக் தண்ணீரில் ஒரு தேயிலைக் காண்டி யளவு உப்பைக் கலக்கி இளஞ் சூடானபின் இறக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இதில் கோழி முட்டையிலுள்ள குஞ்சுகள் சற்றுநேரம் உயிரோடிருக்கும். இந்தக் கண்ணீரில் பத்துநாளும் தினத்துக்கு ஒரு முட்டை வீதம் எடுத்து விரித்திருக்கும் அடிப்பாகத்தைத் தட்டி உடைத்துத் தோட்டை இரண்டாகப் பிளந்து அதனுள்ளிருக்கும் குஞ்சை எடுத்துவிட்டால் ஒவ்வொருநாளும் அண்டக்கரு விர்த்தியாகும் விதத்தைக் கற்றுக்கொள்ளலாம்.

முதல் நாள்:—ஒருநாள் அடைவைத்த முட்டையின் குறுக்காக ஜீவக்கருவில் ஒரு சிறு புள்ளி தோன்றும்.

இரண்டாம் நாள்:—குஞ்சு ஓர்விதநீரினுள் ஒரு புழுப்போல் தோன்றும் தலை, கண், இருதயம் முதலியவைகளும் தோன்றும். மஞ்சட் கருவிலிருந்து கோழிக்குஞ்சுக்கு ஆகாரங் கொண்டுபோகும் இரத்தக் காரைகளும் தெரியும்.

மூன்றும் நாள்:—வெள்ளைக்கரு சிறுத்திருப்பதும் இரத்தக் காரைகள் அதிகமாய்ப் பின்னிக்கொண்டிருப்பதும் தெரியும். மஞ்சட் கருவிலிருந்து ஓர் அகன்ற குழாயின் மூலமாய் குஞ்சுக்கு ஆகாரஞ் செல்லும். காது ஓர் சிறு துவாரமாய்த் தோன்றும்.

நாலாம் நாள்:—தலைபருத்து வளைந்து வாலின் பக்கம் மடங்கியிருக்கும். இரு இறகுகளும், கால்களும் சிறு கரும்புபோல் நீண்டிருக்கும்.

ஐந்தாம் நாள்:—தலை பருத்தும், இறகுகளும், கால்களும் பிரிந்தும் தெரியும். முட்டையின் அகன்ற அடிப்பாகத்திலிருக்கும் ஆகாய அறை விரிந்திருக்கும். இந்த அறை வரவர விரிந்து குஞ்சைச் சுற்றிலும் மூடிக்கொள்ளும். இதன் மூலமாகத்தான் குஞ்சுக்கு வேண்டிய காற்று உட்செல்லுகிறது. வெளியிலுள்ள ஆகாயம் முட்டையின் தோட்டிலுள்ள துவாரங்கள் மூலமாய் ஆகாய அறையிறுட்சென்று, அங்குள்ள மஞ்சள் கருவை யூடுருவ ஓடும் இரத்தக் காரைகளுக்குப் பிராணவாயுவைக் கொடுப்பதுடன், அங்குள்ள கரியமில வாயுவை வெளியே கொண்டு வந்து விடுகிறது. அடைவைக்காத ஒரு முட்டையை அவித்து உடைத்துப் பார்த்தால் அதன் அகன்ற அடிப்பாகத்தில் ஒரு பள்ளம்

தோன்றும். அதுதான் இந்த ஆகாய அறை. அடை வைத்த மூட்டைகளில் இந்த அறை நாளுக்குநாள் விரிந்து கடைசியில் கோழிக் குஞ்சைச் சுற்றிலும் பரவி அதற்குச் சுவாசப்பை (Allantois) யாகிறது.

ஒரு மூட்டையைச் சுற்றி வார்னிஷ் முதலிய ஏதாவது வஸ்து வைத்தடைவி வைத்தால் காற்று உட்செல்லக்கூடாதாதலால் குஞ்சு பிர்த்தியாகாமல் செத்துப்போகும்.

நாட்செல்லச் செல்ல ஒவ்வொரு அவயவமும் ஸ்திரமாகி ஒன்பதாம் நாளில் வெள்ளைக் கருவே யில்லாமல் போகும். மஞ்சள் கரு இன்னும் பெரிதாக யிருந்து அதிலிருந்து குஞ்சுக்குப் போகும் குழாயின் மூலமாய்க் குஞ்சைப் போஷித்துக்கொண்டு வரும். இதனல் வெள்ளைக் கருவானது மஞ்சள் கருவோடு சேர்ந்து அங்குள்ள இரத்தத் தாளைகள் மூலமாகவே குஞ்சுக்கு இரையா கிறதெனத் தெரிய வருகிறது. இப்பொழுது குஞ்சு ஒரு பகுதி போல் தோன்றும். இறகுகள், மூக்கு, விரல்கள் முதலியவை தோன்றும். இதுவரையும் தலை சரீரத்தைவிடப் பெரிதாகவே யிருக்கும்.

பதினறு நாள்வரை குஞ்சு மூட்டையில் குறுக்காய்க் கிடக்கும். பதினலாவது நாளில் குஞ்சு தன் நிலைபெயர்ந்து மூட்டையின் அகன்ற அடிப்பாகத்தில் தன் தலையை வைத்துக்கொண்டு நீட்டிக் கிடக்கும். மஞ்சள் கரு வாவரக் குறைந்து இருபதாம் நாளில் கோழிக்குஞ்சின் சரீரத்திலுட் சென்றுவிடும். அதன்பின்பு ஆகாரமில்லாமையால் மூட்டையிலுள்ளிருக்கும் குஞ்சு பறபறப் பெடுத்துத் தன் மூன்னிருக்கும் ஆகாய அறையின் மெல்லிய ஜவ்வைத் தன் மூக்கினல் கிழித்துவிடும். அந்த அறையிலுள்ள சுத்த ஆகாயத்தை முதல்முதல் சுவாசிக்கவே அதற்கு உயிரும் சக்தியும் அதிகரித்துத் தன் மூக்கின் ஒரு கொத்தினல் மூட்டைத் தோட்டை உடைக்கவும் அதனுள்ளிருந்து வெளியே நகர்ந்து வரவும் பலனடைகிறது. வெளியில் வந்து சற்றுநேரம் ஆயாசத்துடன் கிடந்து அதன்பின் எழுந்து ஓடவும் தன் தாய் கொத்திக் கொடுக்கும் இரையைத் தின்னவும் பழகும்.

கருத்தரிக்கும் விதம்.

ஸ்திரீகளுக்கு மாதாந்தா ருது காண்கிற காலத்தில் அல்லது அதற்குச் சில நாளைக்கு முன்னுவது பின்னுவது சினைப்பையிலிருக்கிற சுரோணிதக் குமிழ்களிலொன்று அல்லது இரண்டு சாதாரண

மாய்ப் பெருத்து மூற்றி வெடிக்கும். அத்தருணத்தில் சினைப் பாதையின் குஞ்சு முனை (Fimbriated Extremity) யானது சினைப்பையைக் கவ்விக்கொள்ளும். அப்போது வெடித்த சுரோணிதக் குமிழிலிருந்து வெளிப்படுகிற சுரோணிதமும் காதக்கருவும் சினைப்பாதையி லிறங்கி அந்த வழியாகச் சென்று கருக்குழியில் விழும்.

கருப்பையிலாவது, மூட்டைப் பையிலிருந்து சுரோணிதத்தைக் கருப்பையில் சேர்க்கும் சினைப்பாதையிலாவது சாதாரண மாய்க் கருத்தரிப்பதுண்டு. ஆதலால் சுக்கிலத்திலுள்ள கிருமிகள் சுரோணிதத்திலுள்ள மூட்டையை கருப்பையிலாவது சினைப்பாதையிலாவது சந்திக்கவேண்டும். கருப்பையினது வாயானது சுத்தம் முதலாய் உள்ளே செல்லாதபடி மிகவும் குறுக்கமாயிருப்பதால் சுக்கிலம் எப்பொழுதும் கருப்பைக்குள் செல்ல முடியாது. அப்படிச் சென்று சுரோணிதத்தோடு சேர்ந்தால்தான் கருத்தரிக்கும். அதுவல்லாமல் சுக்கிலத்திலுள்ள கிருமி சுரோணிதத்திலுள்ள மூட்டையோடு உயிருடன் போய்ச் சேர்ந்தால்தான் மூட்டைக்கு உயிர் உண்டாகிச் சிசுவாகும். சுக்கிலத்திலுள்ள கிருமிகள் உயிரோடு போய் மூட்டையில் சேருமபடி இந்திரியம் வெளியாகுங் காலத்தில் புருஷன் அசையாமல் அமைதலாய்ப் படுக்கவேண்டும். ஸ்திரீயும் சௌக்கியமாய்ப் படுத்துக்கொண்டு அதிகமாய் மூச்சை வெளியே விடாமல் புருஷன் பிரிந்தபின் குறைந்த பக்ஷம் பத்து நிமிஷமாவது அசையாமல் படுத்திருக்கவேண்டும். இப்படிப் பல தடவைகளில் செய்தால் சுக்கிலம் எப்பொழுது கருப்பைக்குள் இறங்குகிறதோ அப்போது கருத்தரிக்கும். மேலும் கருத்தரித்தபின் குறைந்தது ஒருமாதமாவது ஸ்திரீ அக்கம் பக்கம் அலைந்து கடினமான வேலைகளைச் செய்யாமல் அமைதலுமாய் இருக்கவேண்டும். அப்படிச் செல்லாமல் அங்குமிங்கும் ஓடித்திரிவதனாலும் வண்டிகளில் அதிகத் தூரம் பிரயாணம் பண்ணுவதனாலும் தரித்த கரு அழிந்துபோகும்.

சுக்கிலத்திலுள்ள கிருமிகளில் வரானமானவை சுரோணித மூட்டையினுள் பிரவேசித்ததால் பிறக்கும் குழந்தைகள் தகப்பனைப் போலிருக்கும். சொற்பக் கிருமிகள் மட்டும் பிரவேசித்தால் குழந்தை தாயைப்போலிருக்கு மென்று தற்கால சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கின்றனர்.


சிசு வுற்பத்திகாலம்.

குழந்தைகள் பெறவேண்டுமென்னும் விருப்பமுள்ளவர்கள் ஸ்திரீகளுக்குச் சரியானபடி கருத்தரிக்கும் காலம் எதுவென்று அறிய விரும்புவார்கள். ஆனதைப் பற்றிப் பற்பல தேசங்களிலு முள்ளவர்கள் தனித்தனியே வித்தியாசமான அபிப்பிராயம் சொல்லுகிறார்கள். பூர்வகாலத்திலிருந்த இந்துக்கள் மாதவிடாய் நின்றபின் பத்துநாள் வரைக்கும் கருத்தரிக்கும் என்று எண்ணங் கொண்டிருந்தார்கள். யூதருக்குள் மாதவிடாய் காணுவதற்குச் சில நாட்களுக்கு முன் முட்டைகள் வெளியாகின்றனவென்றும், ஆதலால் அக்காலத்திலேயே கருத்தரிக்க வேண்டுமென்றும் உத் தேசித்து வந்தார்கள். ஆனல் சற்காலத்தில் ஐரோப்பிய டாக்டர் கள் மாதவிடாயாகிற இரத்தத்தைச் சோதித்துப்பார்த்து அவை களில் சாதாரணமாய் முட்டைகள் இருக்கின்றனவென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆதலால் மாதவிடாயாவதற்குச் சில நாட் களுக்கு முன்தான் கருத்தரிக்கும் காலமாயிருக்கவேண்டுமென்று உத்தேசிப்பதற்கு இடமாகின்றது. என்றாலும் மாதவிடாய் ஆவ தற்கு நாலுநாளைக்கு முன்னும், மாதவிடாய் நின்ற ஆறுநாட்களுக் குப் பின்னும் ஸ்திரீ புருஷர் சேர்வதலால் கரு எவ்விதமும் தரிக் குமென்று உத்தேசிக்கலாம். அமாவாசியை பவுர்ணமி இந்தினங் களில் உற்பத்தியாகும் குழந்தைகள் பலக்குறைவும் அங்கவீன மும் அவலக்ஷணமுமாய்ப் பிறந்து அதிக சிரமத்தில் அகால மர ணத்தை யடையும். ஆதலால் இக்காலங்களில் சம்போகம்கூடாது.

கர்ப்பக்குறி.

ஸ்திரீயானவள் கர்ப்பவதியா யிருக்கிறனென்பதற்கு அடை யாளமாக அவளுக்கு மாதந்தோறும் வெளியாகும் மாதவிடாய் நின்றுவிடும். அதிகாலையில் வாயில் நீர் சுரந்து வாந்திமயக்கமுண் டாகும். கண்விழி சோர்ந்து மஞ்சள் அல்லது ஊதாவர்ணம் கண் களில் தோன்றும். நாட் செல்லச் செல்லச் சிறுநீர் நிறமாறி, ஸ்த னங்களிலும் பால் சுரக்கும். சரீரம் புஷ்டியும் மினுமினுப்பும் கொடுத்து முகத்தில் ஒருவித வசீகரம் தோன்றும். அநேகருக்கு முதல் மூன்று மாதங்களிலும் சிலருக்கு அதற்குப் பிற்பாடும் வாந்தி உண்டாகும். மாதவிடாய்க் காலங்களில் அதிக உபத்திர வப் படுபவர்களுக்கு அதிகமாய் வாந்தி காணும். சிலருக்கு வாந்தி காணவேமாட்டாது. பெரும்பாலும் பிள்ளை பெற்றவர்களுக்கு அதிக வாந்தி எடுக்காது. இரண்டாவது மாதத்தில் ஸ்தனங்கள் பருத்து நுனி கறுத்து வலியும் கொடுக்கலாம்.

கர்ப்பாசயத்தில் சிசு நிற்கும் நிலை.



முதல் மூன்றுமாதங்களிலும் சிசுவானது தாயின் புட்டி எலும்புப் பாகத்தில் தங்கியிருந்து நாலாவது மாதந்தான் தாயின் வயிற்றில் தரியும். ஆறுமாதத்தில் தொப்புள் பக்கம் வந்து சேருமு. ஏழாவது எட்டாவது மாதங்களில் அதற்குமேல் எழும்பித் தாயின் சரல் குலையிருக்கிற கடைவயிற்றெலும்பு மட்டும் வருவதாக அவளுக்கு மூச்சு முட்டும். குழந்தை பிறப்பதற்கு இரண்டுவாரத்திற்குமுன் சிசு கீழ் நோக்குவதால் தாய்க்கு மூச்சு முட்டாது. நாலரை அலல்து ஐந்தாவது மாதத்தில் சிசுவானது தாயின் புட்டிவயிற்றில் அசைவது தோன்றும். அக்காலத்தில தாய்க்கு ஒருவித உணர்ச்சியும் அடிக்கடி மயக்கமும் காணும். கருப்பையானது அடிக்கடி விரிந்து சுருங்குவதால் அடிவயிற்றில ஓர்வித லேசான வலியும் தோன்றும்.

கருவுற்ற ஸ்திரீயின் நிலைமை.

ஸ்திரீக்குக் கருத்தரித்த துவக்கத்தில் தன் இனத்தார்பேரிலும் இஷ்டார்மேலும் மிருக்கும் பாசமிருந்து அவர்களைப் போய்ப் பார்க்க வேண்டுமெனுகிற அவாவும், பிரயாணம் பண்ணுவதில் விருப்பமும், சரீரத்திற்கும் ஆவிக்கும் உற்சாகத்தைக் கொடுக்கும் அப்பியாசங்களைச் செயய அவாவும் உண்டாகும். நாட் செல்லச் செல்ல அதிக புத்தி தீக்ஷணியமும் பெறப்போகும் குழந்தைக்கு வேண்டிய உடுபபு முதலியனவைகளைச் சுவதரித்து வைக்கப் பிரியமுண்டாகும். அதன்பின்பு பேறுகாலத்தின் கஷ்டத்தைச் சகித்து ஓர் சற்புத்திரனைக் கண்டு களிகூறச் செய்யும்படி கடவுளை நோக்கி அடிக்கடி தியானித்துக் கொண்டிருப்பதையும் காணலாம்.

2, 3, 4, 5, பிள்ளைகள் ஜனிக்கும்விதம்.



சில சமயத்தில் ஏககாலத்தில் இரண்டு அல்லது மூன்று சுமாணிதக்குமிழ்களாகக் குவமாகி வெளிப்படுவதுண்டு. இது சம்பாககாலத்தில் கரிசுமாயின் சுகதிலக கருமிகள் அவரறிஞட் செல்லுவதால் இரண்டு அல்லது மூன்று சில சமயங்களில் நான்கு பிள்ளைகளும் பிறகின்றன. வேல்ஸ் தேசத்தில் ஒரு ஸ்திரீக்கு ஏககாலத்தில் 5 குழந்தைகள பிறந்தனவாம். விகடோரியா சகரவர்த்தினி அவர்கள் ஏழு பெண் குழந்தைகளை ஒரேசமயத்தில் பெற்றெடுத்தனர்களாம். அந்த ஏழு பெண்களும் முன்னர் இருமுறை அவதரித்து ஒரேசமயத்தில் 3 குழந்தைகள் பிறந்து உயிர்தரித்திருந்தனவாம். அவ்வாறு பிறந்த குழந்தைகள் மொத்தம் 22.

விநோதப் பிறவிகள்.

இங்கிலாந்திலுள்ள பிளைற்றன் கிராமத்தில் ஒரேசமயத்தில் பிறந்த விநோதமான இரட்டைப் பிள்ளைகள், பிறந்து பதினைந்து வருடமாகியும் இன்னும் உயிர்தரித்திருக்கின்றன. இந்த இருபிள்ளைகளும் முதுகுப் பக்கம் நீண்ட தசைப்பிடிப்பால் ஒன்றாய்ப் பொருத்தப்பட்டு சிரசு, கரம், கால், வயிறு முதலிய அங்கங்கள் வெவ்வேறாயிருக்கின்றன. ஆனால் அவயவ சக்திகளும் வெவ்வேறு குணங்களை யுடையதாயிருக்கின்றதைப் பற்றி டாக்டர்மாரும் ஆச்சரியப்படுகின்றார்கள். சாதாரணமாய இரட்டைப் பிள்ளை ஒட்டிப் பிறப்பதருமை. அப்படிப பிறக்க நேர்ந்தாலும் இரண்டு சிசுக்களின் சகாறற முஞ் குணமுஞ் செயலையும் ஒன்றுபோலவே யிருக்கும் இவ்வகை இரட்டைச் சிசு வெகுநாள உயிருடனிருப்பது அரிதினுமரிது.

இந்த இலட்சணங்களுக்கு மாறுப் நாம் மேற்கூறிய குழந்தைகளில் ஒன்று அழும்போது ஒன்று சிரிக்கின்றது. ஒன்று

விழித்து விளையாடிக்கொண்டிருக்கும்போது ஒன்று அயர்ந்துநித் திரை செய்கின்றது. நோய்களும் ஒன்றுக்கொன்று விகற்பப்பட்டிருக்கின்றன. ஒன்று எழுந்து தலைநிமிர்ந்து நிற்கும்போது மற்றது எழுந்தாலும் தலைகுனிந்து கொள்ளுகின்றதாம். இவைகளின் பேதத்தைக் கண்ட வைத்தியர் இவ்விரு குழவிசளுக்குமிடையேயுள்ள தசையை வெட்டி குழந்தைகளை வேறுபடுத்தலாமென்றும் அவைகளிலொன்று இறந்துவிடுமென்பதாக அபிப்பிராயப்படுகிறதனால் பெற்றோர் சம்மதிக்கிறார்களில்லையாம்.

விநோத சம்பவங்கள்.

1901-ம் வரு ஏப்பிரல்மீ 22-ம் தேதி வெளியான டெய்லி மெயில் (Daily Mail) பத்திரிகை சொல்வதாவது:—

இத்தாலியா தேசத்தில் குடிமதிப்பு (Census) எடுத்த சமயம் சில விநோத சம்பவங்கள் வெளியாகியிருக்கின்றன. டியூரின் பட்டணத்திலுள்ள ஓர் குடியானவனின் பெண்சாதி மேரிடன்ன என்பவள் தனது 19-ம் வயதில் விவாகமாகி இப்பொழுது 59 வயதாகியிருக்கிறாள். அவளுக்கு 34 புத்திரர் பிறந்தார்கள். அவர்களில் 31 பேர் உயிருடன் தம் பெற்றோருடன் ஏக குடும்பஸ்தராய் வாழ்கின்றார்கள்.

1897-ம் வரு மார்ச்சுமீ 5-ம் தேதி வெளியான டெய்லி மெயில் பத்திரிகை சொல்வதாவது:—

ஹாலந்திலுள்ள ஆர்ன்ஸ்கர்க் என்ற பட்டணத்தில் வசிக்கும் ஒருவன் தனக்கு 21-வது புத்திரன் பிறந்திருக்கிறான் என்றும், தன் புத்திரர் யாவரும் உயிரோடிருக்கிறார்களென்றும் குடிமதிப்பு எழுதுபவர்க்குத் தெரிவித்திருக்கிறான்.

1904-ம் வருஷத்தில் சூலை மாதத்தில் பிரசுரமான (Journ-Obstet) என்ற பத்திரிகையில் ஓர்ஸ்திரீ தனது முதல் புருஷனிடமிருக்குங் காலத்தில் முதல் தடவை இரட்டைப்பிள்ளை, பிற்பாடு நாலு பிள்ளைகள், பிற்பாடு மூன்று பிள்ளைகளாக மூன்று சூலில் 9 பிள்ளைகளைப் பெற்றாள். அதன்பின்பு வேறொரு புருஷனை விவாகஞ் செய்து ஒரே சூலில் 5 ஆணும் 1 பெண்ணுமாக ஆறு குழந்தைகளைப் பெற்றாள். ஆகவே நாலு சூலில் 15 பிள்ளைகள் பிறந்தனவாம். ஆதலால் ஒரே சூலில் பல குழந்தைகள் பிறப்பதற்குக் காரணம் தாய்தானென்று வற்புறுத்தப்படுகிறது.

டாக்டர் லாய்டு ராபர்ட்ஸ் (Loyd Roberts) என்பவர் ஒரு ஸ்திரீக்கு 15 தடவை இரட்டைப்பிள்ளைகள் பிறந்தது என்கிறார்.

டாக்டர் டாஸன் (Dawson) என்பவர் 1909-ம் வருஷத்தில் எழுதிய புஸ்தகத்தில் சொல்லியிருப்பதாவது :—ஒரு ஸ்திரீக்கு ஆறு தடவை பெண் குழந்தைகள் பிறந்தன அதன்பின்பு இரட்டைப் பிள்ளைகளாய் ஏழுதடவை ஆண் குழந்தைகள் பிறந்தன. அதன்பின்பு நாலுதடவை ஆண் குழந்தைகளே பிறந்தன. ஆக மொத்தம் 24 குழந்தைகள்.

1902-ம் வரு அக்டோர்பர்மீ 26-ம் தேதி வெளியான (Lloyd's Weekly News) என்ற பத்திரிகையில் கேப்ள்ஸ் நகரத்திற்குச் சமீபத்தில் வசித்த ஓர் இத்தாலிய ஸ்திரீக்கு 59 ஆணும் 3 பெண்ணும் பிறந்தன. அதில் மூன்று மூன்று குழந்தைகளாக 11 சூலிலும், நான்கு குழந்தைகளாக 3 சூலிலும், ஒரே சூலில் 6 குழந்தையும், ஒற்றைக் குழந்தையாக 11 சூலிலும் பிறந்தனவாம்.

வேறொருத்தி ஏழுதடவை இரட்டைப் பிள்ளைகள் பெற்று அதன்பின் இரண்டுதடவை ஒற்றைப் பிள்ளைகளைப் பெற்றாளாம். இன்னொருத்திக்கு 4 தடவை இரட்டைப் பிள்ளைகள் பெற்ற பின்பு ஐந்தாவது சூலில் மூன்று குழந்தைகள் பிறந்தனவாம்.

பெல்கிரேட் நகரத்தில் ஒரு ஸ்திரீக்கு ஒரு சூலில் 3 குழந்தைகளும், அடுத்த சூலில் 6 குழந்தைகளும் பிறந்தனவாம்.

மாட்ரிட் நகரத்தில் ஒரு ஸ்திரீக்கு ஒரு சூலில் 3 குழந்தைகளும் அடுத்த சூலில் 5 குழந்தைகளும் பிறந்தனவாம்.

1905-ம் வரு ஜனவரிமீ 28-ம் தேதி வெளியான (Lancet) என்ற பத்திரிகையில் சொல்லியிருப்பதாவது:—

கிண்லோ என்ற ஊர் சமுசாரி இரண்டு தடவை விவாகஞ்செய்தான். அவனுக்கு 72 குழந்தைகள் பிறந்தன. அவைகளில் முதல் பெண்சாதிக்குப் பிறந்தது 57. அதில் நாலுதடவை ஒவ்வொரு சூலிலும் 4 குழந்தைகள் வீதமும், 7 தடவை 3 குழந்தைகள் வீதமும், 10 தடவை இரட்டைப் பிள்ளைகளாகவும் பிறந்தன. இரண்டாவது பெண்சாதிக்கு ஒரு சூலில் 3 குழந்தைகளும், 6 சூலில் இரட்டைக் குழந்தைகளும் பிறந்தன என்று எழுதியிருப்பதால் ஒரே சூலில் பல குழந்தைகள் பிறப்பதற்கு ஆணும் காரணமாகயிருக்கலாம் என்று தெரிய வருகிறது. ஆனால் இவ்விதம் நேரிடுவது அபூர்வம்.

சினைப்பைகள் மாறிமாறி வேலை செய்தல்.

(The Alternate Action of the Ovaries.)

மாதாந்தர ருது காணும் காலத்தில் ஒருமாதம் வலதுசினைப் பையும், மறுமாதம் இடது சினைப்பையும் தன்னிடத்திலுள்ள முட்டையை வெளியாக்குகின்றது. இதற்கத்தாட்சி:—(1) மாதாந்தர ருது காலத்தில் இயற்கையில் ஸ்திரீகளுக்கு நோவில்லாதிருப்பினும்சிலருக்கு நோவணுகுவதுண்டு. அவ்வாகளைவிசாரித்தால் ஒருமாதம் ஒரு பக்கத்தில் நோவிருக்கும். மறுமாதம் அடுத்த பக்கத்தில் நோவிருக்குமென்று சொல்வாகள். சிலருக்கு ஒரு பக்கத்தில் மட்டும் ஒருமாதம் விட்டு மறுமாதம் நோவுண்டாவதுண்டு. ஏனெனில் மாதாந்தர ருதுவான சினைப்பையிலுள்ள முட்டை முதிர்ந்து வெளியாவதற்குக் குறி. அக்காலத்தில் எந்த சினைப்பையில் நோயுண்டோ அதில் நோவுகாணும். சிலருக்கு வலியேயிராது. அது சுக சரீரம். சிலருக்கு ஒரு பக்கத்தில மாதந்திரம் இரண்டு மாதத்திற் கொருதடவை வலியுண்டாகும். எந்தப் பக்கத்தில் நோவிருக்கிறதோ, அந்தப் பக்கதிலுள்ள சினைப்பையில் குமரா தம் எற்பட்டிருப்பதைக் குறிக்கும். அந்த வலியானது வலது அல்லது இடது முதுகெலும்பையொட்டி புட்டம் வரைக்குமிருக்கும். மாதந்தோறும் வலியுள்ளவர்களுக்கு இரண்டு சினைப்பைகளிலும் குமோதம் உண்டென்பதை யறியவும்.

(2) எந்தப் பக்கத்து சினைப்பையில் வலியிருக்கிறதோ அந்தப் பக்கத்திலுள்ள ஸதன்யத்திலும் நோவுண்டாகும். ஏனெனில், சிசுவுற்பத்திக்கு மூலாதாரமான சினைப்பைகளுக்கும் ஸ்தன்யங்களுக்கும் இயற்கையிலேயே தொந்தம் எற்படுததி யிருக்கின்றார் ஈசன். ஆகையால் ரூதக காலததில் எந்தப் பக்கத்தில் வலி காணுகிறதோ அந்தப்பக்கத்திலுள்ள ஸதன்னியத்திலும் அதிகார வேதனை யுண்டாவதால், ஸ்திரீ அந்தப் பக்கம் சரிந்துபடுக்கச் சக்தியற்றவளாகிறாள். வலது பக்கத்து ஸ்தனிபத்தில வலியுண்டாகிற காலத்தில் அந்தப் பக்கத்திலுள்ள சினைப்பையானது தடித்து, முற்றியிருக்கும் சினையை வெளிபாக்கும். ஆதலால் அவ்விதரூதகம் வெளிப்படுவதற்கு காலக்கு தினங்களுக்கு முன்னதாகவே சம்போகம் செய்து ஸ்திரீயும் வலது பக்கமாகவே சாய்ந்து படுக்கும் வழக்கத்தை அனுசரிப்பாளாயின், அக்காலத்தில் ஜனிக்கும் குழந்தை ஆணாகவே யிருக்குமென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

பசு கன்று யீன்ற மாதத்தில் உஷ்ணமீறி கதறும்பொழுது உடனே காளைபோடு சேர்த்து வந்தால் காளையும் கடாரியும்

மாறி மாறிப் பிறக்கும். இந்த இரகசியத்தை யறிந்தவர்கள் கன்று யீன்ற முதல் மாதம் காளைகள் பக்கத்தில் சோணிடாமல் தடுத்து இரண்டாவது மாதத்தில் அதற்கு உஷ்ணம் அதிகரித்து கதறும் பொழுது பொலிச்சலுக் கிடங் கொடுத்தால் முந்தின தடவை சன்ற கன்றின் வகையையே பிறப்பிக்கும். அதாவது காளையால் காளையும் கிடாரியாலல் கிடாரியும் பிறக்கும்.

பிறக்கப் போகுங் குழந்தை ஆணே பெண்ணே வென்று குறி சொல்லுதல்.

(The Fore-casting or Prediction of the Sex of the Coming Child, and the production of Sex at Will.)

பிறக்கப்போகுங் குழந்தை ஆணே பெண்ணே வென்று கணித்துச் சொல்வது மிக்க எளிதாயினும், சிற்சில காரணங்களால் தவறிவிடுவதுமுண்டு. ஏனெனில் சாதாரணமாய் 28 நாளைக் கொருதடவை மாதாந்தா ருது காணுவது கிரமமா யிருக்கச் சிலருக்கு 21 நாளிலும், சிலருக்கு 30 நாளிலும், இன்னுஞ் சிலருக்கு மாதமிரு முறையுமாக கரமந்தப்பி யெளியாகிறதால் கணிதம பிசகாகிவிடலாம். மேலும், மாதமொன்றுக்கு 28 நாளாக 10 மீ அல்லது 7 நாள் கொண்ட 40 வாரங்களாகிய 280 நாட்களே பூரண கர்ப்பத்திற்குரிய நாட்கள். இவ்வளவு சரியான கணிதத்திற் குரித்தானவை. அகாலப் பிரசவங்களும், பிண்ட சேதங்களும் கோர்ந்தவர்களுக்கு பின் பிறக்கப் போகும் குழந்தை இன்னதென்று கணித்துச் சொல்வது கஷ்டமான காரியம்.

பிறக்கப் போகுங் குழந்தை ஆணே பெண்ணேவென்று கணித்துச் சொல்வதறகும், தங்களிஷ்டமேபால் ஆண் அல்லது பெண் சிசுவைப்பெற விரும்புகிறவர்களுக்கு நடந்துகொள்ள வேண்டிய விதத்தைத் தெரிவிப்பதற்கும் முன அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள சில உண்டு. அதற காகக் கேட்கவேண்டிய

கேள்விகளாவன:—

(1) எத்தனை நாளைக்கொருடவை உனக்கு மாதாந்தா ருது காண்பதுண்டு?

(2) அவைகளெத்தனை நாள்வரை யிருக்கும்?

(3) மாதந்தோறும் சூதகம் கிரமமாய் வருகிறதுண்டா?

(4) சூதகம் வருகிற காலத்தில் எந்தப் பக்கத்திலாவது நோவுண்டா?

(5) உனக்கு அப்போது எந்தப் பக்கத்தில் நோவிருந்தது? அந்தக் காலத்தில் எந்த ஸ்தனத்தில் வலியிருந்தது?

(6 கடைசியாக, உனக்குச் சூதகம் வந்த வருஷம், மாசம், தேதியென்ன?

(7) கடைசியாக, உனக்குக் குழந்தை பிறந்த வரு, மீ, தேதியென்ன?

(8) கடைசியில் பிறந்த குழந்தை ஆணா பெண்ணா? அதற்கு எத்தனை மாதம் பால் கொடுத்தாய்? குழந்தை பிறந்தபின் உனக்கு சூதகமவந்த மாசம் தேதியென்ன?

(9) அந்தக் குழந்தை பிறந்தபின் எதாவது பிண்டச்சேதம் அல்லது அகாலப் பிரசவம் சேர்ந்ததுண்டா? எப்பொழுது?

(10) கடைசியாகக் குழந்தை பிறந்த தேதி தெரிந்தால் அதினின்று நாற்பது வாரங்களைப் பின்னுக்கக் கணிக்க அக்குழந்தை ஜனித்த அண்டக்கரு உற்பத்தியான சூதக மாதம் தெரியும். அந்தக் குழந்தை ஆண அல்லது பெண்ணென்று தெரிந்திருப்பதால் அந்த சூதக மாதத்தினின்று முறைமீய ஒன்றுவிட்டொன்று தளிக கணக்குப் பார்க்க பிறக்கப் போகும் குழந்தை ஜனித்த சூதகமாதம் தெரியும்.

சூதக கணித வாய்ப்பாடு.

7 நாள் கொண்டது 1 வாரம்.

4 வாரம் அல்லது 28 நாள்—1 சூதக மாதம்.

10 சூதக மாதம் அல்லது 280 நாள்—குழந்தை பிறக்கும் காலம். ஆகவே ஒரு வருஷத்திற்கு 13 சூதக மாதங்களாகும். இக்கணிதத்தைத தவறாமல கணிதத்துப் பார்த்தால் பிறக்கப் போகும் குழந்தை ஜனித்த அண்டக்கரு உற்பதியான தேதியில் ஆண கருவா, பெண்கருவா, வெளியாகியிருக்க வேண்டுமென்பதைத் திட்டமாய்க் கணித்துச் சொல்லலாம். சில உதாரணங்கள் கூறுவோம்:—

கடைசியாகப் பிறந்த குழந்தை தை மாசத்தில் ஆணாக ஜனித்திருந்தால் அடுத்த தை மாசத்தில் ஜனிக்கும் குழந்தை 14-வது சித்திரை மாசத்தில அதாவது இரட்டை மாசத்தில ஜனிப்பதால் பெண்ணாகயிருக்கும். விக்டோரியா மகாராணிக்கு 1840-ம் வரு

ஷம் நவம்பர்மீ 21-ம் தேதி ஓர் பெண்குழந்தை தலைப்பிள்ளை யாகப் பிறந்தது. இரண்டாவது குழந்தை எட்வர்ட் ராஜா 1841-ம் வருஷம் நவம்பர்மீ 9-ம் தேதி பிறந்தார்.

ஒரு ஸ்திரீக்கு 1901-ம் வருஷம் சூன்மீ 15-ம் தேதி ஒரு பையன் பிறந்தான். 1903-ம் வருஷம் சூன்மீ 12-ம் தேதியிலும் அதேதினமாக ஒரு பையன் பிறந்தான். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வதிபாதெனில் 1901-ம் வருஷம் சூன்மாசத்தில் ஒருத்திக்கு ஆண் பிறந்தால் அவளுக்கு அந்தத வருஷம் சூன்மாதத்தில் குழந்தை பிறந்தால் பெண்ணாகவிருக்கும். அது நீகஇ 1903-ம் வருஷம் சூன்மாசத்தில் பிறந்தால் அது ஆணாகவே யிருக்கும். அதற்குப் பதிலாய் மேமாசத்தில அல்லது சூலைமாசத்தில் அந்தக் குழந்தை பிறந்தால் அது பெண்ணாகவே யிருக்கும்.

தற்காலத்தில் ஆகாயவிமானம் தோன்றி யாவரையும் பிரமிக்கச் செய்வதுபோலும், (X Ray) எக்ஸ் ரே வெளிச்சத்தின் உதவியால் மனுஷ சரீரத்தினுள் படிந்திருக்கும் குண்டுகளின கணிக்கைகள், விழுங்கப்பட்ட வஸ்துமுதலியவை தங்கியிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து சத்திர சிகிச்சை செய்வதுபோலும, ஸ்திரீயின் வலது அல்லது இடப்பக்கங்களிலுள்ள சினைப்பைகள் மாறி மாறி ஒன்றுவிட்டொன்று மாதங்களில தம்மிலுள்ள அண்டக் கருவைப் பக்குவப்படுத்தி வெளியாக்குங் காலத்தை (Rentgen Ray) ராண்டஜன் ரே முதலிய வெளிச்சக் கருவிகளின உதவியால் கண்டுபிடிக்கும் காலம் சீக்கிரம் வெளிவரும். அப்பொழுது மகவாசையால் மனமேங்கித் திரியும் மன்னுந் மன்னரும் மற்றவர்களும் தக்கமக்குத் தேவையான புத்திரனை தமநிஷ்டம்போல பெற்று சுகிக்கும் சிலாக்கியத்தை யடைவர். அதுவரையில் நாம் இப்பொழுது குறித்துக் காண்பித்திருக்கும் கணிதத்தின் உதவியால் ஆண பெண பிறக்குங் காலத்தைக் கணித்து அதற்குரிய தகுடி யிரயத்தனங்கள் செய்து தமநிஷ்டம்போல் புத்திரனைப் பெற்று சுகித்து வாழ்வார்களாகவும்.

ஓம்! சுபம்!! சுபம்!!!

பொய்க் கர்ப்பம்.

ஸ்திரீகளுக்கு வாயுவானது அதிகரித்து சூதகத்தில் ஒருதினமேனும் வெளிவராவொட்டாமல் உள்ளேயே தடுத்து வயிற்றைப் பருக்கச்செய்து கொர்ப்பஸ்திரீகளுக்கு உள்ள குறிகளை உண்டாக்கும். இதை குண்மக்கட்டி, சோணிதக்கட்டி, இரத்த குண்ம

ரோகம், இரத்த வாத குன்ம ரோகம் என்பர். கர்ப்பஸ்திரீகளுக் கிருப்பதுபோலவே சூதகந் தடைப்படல், பசிமந்தம், ஸ்தனம் வயிறு மூதலியன பெருத்தல், தேகம் நிறம் மாறுதல். கலவியில் வெறுப்பு, வாந்தி, அரோசிகம். ஆயாசம், ஸ்தனங்களில் பால் சுரக்குதல், மார்பு திடித்தல். உதிரக்கட்டியானது கர்ப்பத்தைப் போலவே ஜகக்குத் தென்படுதல், சிலசமயங்களில் சிசுவைப்போலவே அசைந்துகொண்டிருக்குதல் முதலிய பல குறிகள் காணப்படும். மறிபட்ட இரத்தமானது கெட்டியாகத் திரண்டு கட்டினதினாலும் சூதகக்கட்டியானது சிசுவைப்போலவே வயிற்றில் சூலை முதலிய உபத்திரவங்களை யுண்டாக்கி விலாப்பக்கங்களில் பாய்வதும் அசைவதும் சிற்சிலவேளை கொஞ்சமாய் அசைவுங் குறியுந் தோன்றும். ஆனால் சிசுவைப்போல் விர்த்தியடையாது. சிலருக்கு பிரசவ வேதனைபோல் இடுப்புவலி கண்டு இரத்தக்கட்டி வெளிப்படுவதுமுண்டு. சிலருக்கு இதனாலேயே மரணம் சம்பவிக்கலாம். சிலருக்கு இக்கட்டியானது பருந்திலால் வெளிப்படும்.

மெய்க்கர்ப்பத்திற்கும் பொய்க்கர்ப்பத்திற்கும் உள்ள வித்தியாசங்களாவன:—

(1) கர்ப்பவதியின் அடிவயிறு ஆரம்பத்தில் கருக்குழியைச் சார்ந்து ஒட்டி உள்ளடங்கி பின்னர் கரு வளர வளர சிறுகச் சிறுகப் பருத்துக்கொண்டே வரும். கட்டியினால் தோன்றிய பொய்க்கர்ப்பமோ முதலிலேயே வயிற்றைப் பருக்கச் செய்யும்.

(2) கர்ப்பமானது மூன்றுமாதங்களுக்கு முன் அசையாது. பொய்க்கர்ப்பமோ அதற்கு முன்னதாகவே மெதுவாய் அசையும்.

(3) கர்ப்பத்தை விரல்களினால் அழுத்திப் பார்த்தால் னை அழுந்தாது, அழுந்தினபோதிலும் படிப்படியாகப் பழைய ஸ்திதிக்கே வரும். பொய்க்கர்ப்பமானால் உடனே உள்ளழுந்தி விடும். கையை எடுத்தவுடனே பழையபடி வந்துவிடும்.

(4) மெய்யான கர்ப்பமானால் பத்துமாதங்களுக் கதிகம் கர்ப்பத்திலிராது. சூதகக்கட்டியானால் நான்கு அல்லது ஐந்துவருஷமட்டும் வயிற்றில் தங்கியிருக்கும்.

(5) கர்ப்பஸ்திரீயின் சிறுநீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து ரண்டுநாள் வைத்திருந்து அதன்பின் அதனை வடிகட்டிப் பார்க்க, அதில் சிறுகிருமிகள் தோன்றினால் கர்ப்பமென்றும் இல்லையானால் கர்ப்பமில்லையென்றும் அறிந்துகொள்ளலாம்.

(6) ஸ்திரீயின் சிறுநீரைஎடுத்து அதில் பூனைக்காஞ்சூரி இலையைப் போட்டு ஓரிரவு முழுதும் வைத்திருந்து காலையில் எடுத்துப் பார்த்தால் அந்த இலையில் செம்புள்ளி தோன்றின் கருப்பமென்றும், கரும்புள்ளிதோன்றின் கருப்பமில்லையென்றும் அறிந்துகொள்ளலாம்.

(7) ஸ்திரீ இரவில் நித்திரைச்சுப் போகுமுன் ஒரு தேயிலைக் கரண்டி சுத்தமான தேனில் ஒரு தேயிலைக்கரண்டி சுத்த ஜலங் கலந்து குடித்துவிட்டு தூங்கினால் மறுநாட் காலையில் வயிற்றில் வலியிருந்தால் கர்ப்பமென்றும் வலியில்லாவிட்டால் கர்ப்பமில்லையென்றும் தெரிந்துகொள்ளலாம்.


(8) ஸ்திரீ நித்திரைக்குப் போகும்போது வெள்ளைப் பூண்டின் மேல்தோலையுறித்துவிட்டு அதனை மர்மஸ்தானத்திலுள்வைத்துக்கொண் டுறங்கி அதிகாலையில் எடுத்துப் பார்க்க வெள்ளைப் பூண்டின் வாசனையில்லையாயின் கர்ப்பமென்றும், வாசனையிருந்தின் கர்ப்பமில்லையென்றும் அறிந்துகொள்ளலாம்.


கர்ப்பத்தில் சிசுவளருதல்.


1. முதல் 5, வரையுள்ள படங்களில் முட்டையானது சினைப்பானை வழியாக கருப்பையினுள் வந்து சேர்ந்த நாள் முதல் அதைச்சுற்றி மாயைபடர ஆரம்பித்து கருவை முற்றிலுஞ்சுற்றிப் படரும் நாள்வரையுண்டாகும் மாறுதல்களைக் காட்டியிருக்கிறது.


சுக்கிலக் கிருமிகள் சுரோணித முட்டையில் சென்று கருவுயிர்த்த முதல் நாளில் சிசுவானது கண்ணுக்குத் தோன்றாத அணுவத்தனையா யிருந்தபோதிலும் வினாவில் வளரத்தொடங்கி பத்து நாளில் கடுகத்தனைப் பருமனும் பின் தண்டையுள்ளதாய்ப் பனிங்குபோல் தோன்றும். பன்னிரண்டாம் நாளில் மிளகளவு பெரிதாகி அதனுள்ளிருக்கும் நீரில் ஓர் வெள்ளைப்புள்ளி சற்று நீளமுள்ளதாய்க் கண்ணுக்குத் தோன்றும்.


இருபத்தோராம் நாளில் இலந்தைப் பழப்பருமனுய் உருண்டை வடிவானதுமாறிப் புழுவைப்போல் காலுகுன்றுமணி நீளமுள்ளதாய்த் தோன்றும்.
















3 வது மாதம்.



30-ம் நாள் தோற்றம் இதில் [illegible] வழியாய்ச் சென்ன [illegible] புக்குரிய சாரம் செல் [illegible] ண்பித்திருக்கிறது.

மூப்பதாம் நாளில் பிண்டமானது சுண்டைக்காய்ப் பிரமாணமான புழுவாய் அரை அங்குல நீளமுள்ளதாய்த் தோற்றும். அன்றியும் இரத்த சாங்களாலாகிய அழகான சொறசொறப்புள்ள போர்வை போன்ற புறக்கவசத்தால் மூடப்பட்டிருப்பதுடன், ஒட்சுவையும் பனிநீரும் இதற்குள் உண்டு. சரீரத்தைவிடத் தலை பெரிதாயிருக்கும்.

[illegible]ந்தவாரத்தில் சரீரத்தைவிடச் சிரசு பெரிதாகவும் நெற்றியானது இரண்டு புள்ளிகளுள்ளதாகவுந் தோற்றும் [illegible] வாரத்தில் நேத்திரங்களும் செவிகளும் முண்டாகி, ஆஸ்[illegible]மூளை, ஈரல் முதலியவைகளின் குறிதோன்றிப் பிண்டம் [illegible] அங்குல நீளமாகும்.




2-ம் மாதம்.

இரண்டாவது மாதத்தில் கண், காது, மூக்கு, வாய், நெற்றி, இருதயம், மூளை, ஈரல், கழுத்து முதலியவற்றின் குறி தோன்றிச் சரீரத்தில் மூன்றிலொருபாகம் சிரசாயிருக்கும். பிண்டம் எலிக்குஞ்சுபோல் ஒன்றரை அங்குல நீளமுள்ளதாயிருக்கும்.




[illegible] மாதம்.

மூன்றாவது மாதத்தில் கண்ணிமையானது கண்ணை மூடியிருப்பது தெரியும். உதடுகள் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கும். பிண்டமானது ஆண் பெண் என்று தெளிவாய்த் தெரியத்தக்கதாக ஆண் பெண் உறுப்புகள் தோன்றும். கைகால் விரல்கள் நன்றாய்த் தெரியும். சரீரத்தில் இரத்த ஓட்டமுண்டாகி இருதயம் பலக்க அடிக்கிறது கேட்கும். பிண்டத்தின் நீளம் நாலு அல்லது ஐந்து அங்குலம். நிறை இரண்டுமுதல் [illegible] அவுன்ஸ் வரை இருக்கும்.




4-வது மாதம்.

நாலாவது மாதத்தில் பிண்டத்திற்குச் சிசுவென்று பெயராகும். நீளம் ஆறு முதல் எட்டு அங்குலம். நிறை ஏழுமுதல் எட்டு அவுன்ஸ். மீதால் ரோஜா புஷ்பம்போல சிவந்து தசை வளர்ந்திருக்கும். கண், வாய, மூக்கு, முடி இலைகள் இருக்கும். இம்மாதத்தில் சிசுவானது தாயின் கர்ப்பதனில அழுன்றுகொண்டு வருவது தோன்றும். இக்காலத்தில வெளியாகும் சிசு சில நிமிஷங்கள் உயிர்வாடிருக்கும்.




5-வது மாதம்.

ஐந்தாவது மாதத்தில் சிசுவின் நீளம் எட்டு முதல் பத்து அங்குலம். நிறை எட்டு முதல் பதினொரு அவுன்ஸ்.




6-வது மாதம்.

ஆறுவது மாதத்தில் பன்னிரண்டடை அங்குலமும் ஒரு பவுன நிறையுமாயிருக்கும். சிசு, கண் பட்டைகளில் உரோமம் தோன்றும்.



7-வது மாதம்.

ஏழுவது மாதத்தில் ஒவ்வொரு அவயவமும் பூரணமாக வளர்ந்து முகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் முழுப்பாகமாய்த தலங்குவதாடு எலுபடுதலலாம உறுதியாகிச் சசு பூரணபபடும். பன்னிரண்டு முதல் பதினைஞ்சு அங்குலம். நிறை ஏறக்குறைய மூனறு பவுன. இக்காலத்தில் சிசு பிறந்து அதிக பதிரமாய்ப் பாதுகாக்கப்பட்டால் பிழைத்துக்கொள்ளும். ஆனல் அதிக பலவீன மாயிருப்பதால் அதை ஜலம்விட்டு ஸ்நானம் செய்விக்கமுடியாது. ஆகலால் கடற்காளானை (Sponge)த் தண்ணீரில் தோய்த்து மெதுவாய்த் தேகத்தைத் துடைத்தபடுதத வேண்டும். பால குடிக்கிற தாய் தனி மற்ற நோய்களி லெல்லாம் அமைதியாய்ந தூய்ய இடம் கொடுக்கவேண்டும். மேலும் அவ்விதக் குழந்தைக்குப் போதுமான அனல் உண்டாக்கக் கூடிய சக்தி இலலாதிருப்பதால தோழியானது தன் குழந்தையோடு தன் சட்டைக்குள வைத்து அனலுண்டாக்குமாப்போல குழந்தையைக் கம்பளித் துணிகளில சுற்றித் தாயின்முன் இடந்தரவேண்டும. அலலது வேறறருவர் மடியில் வைத்து அனலுண்டாக்க வேண்டும்.



எட்டாவது மாதத்தில் சிசுவின் நீளம் பதினேறு முதல் பதினெட்டு அங்குலம். நிறை நாலு முதல் ஐந்து பவுன். சரீரமெல்லாஞ் சிவந்து ரோமத்துவாரங்கள் மிக நுட்பமாக ஏற்பட்டு ரோமங்களும் சிறிய குருத்துகளாகத் தோன்றும்.

ஒன்பதாவது மாதத்தில் சிசுவின் நீளம் பதினெட்டு முதல் இருபதொரு அங்குலம். நிறை நாலு முதல் ஐந்து பவுன். சர்வாங்கங்களும் வளர்ந்து பருத்து வலுவேறி ரோமங்களெல்லாம் கன்றிப் வளர்ந்திருக்கும். சிசுவானது தன் இரு காங்களையும் முன்னுமேல் குவித்து, தலையையும் கால்களையும் மடக்கி அண்டவடிவமாக வளைந்துகொண்டு தலை கீழாய்ச் சாயு என்னப்பட்ட பையிலே அசைவாடிக் கொண்டும் அடிக்கடி புரண்டும் நீண்டும் நிமிர்ந்தும் குடித்துக் கொண்டிருக்கும்.

ஒன்பது மாதக் கெவின் தோற்றத்தைக் குறிப்பிடும் படத்தை 23-ம் பக்கத்தில் பார்க்கவும்.

கருத்தரித்தபின் கருப்பையின் மாறுதல்.

சினைப்பையிலிருந்து முட்டைச்சருவானது சருக்குழியில் வந்து சேரும்போது கோழமுட்டைக்குள் கருவிருப்பதும்போல் இரண்டு சவ்வுகளாலேற்பட்ட ஓர் பைக்குள்ளிருக்கும். அந்த இரண்டு சவ்வுகளும் உட்கவசம், புறக்கவசம் என்று சொல்லப் படும். சருதகங்கிலவுடன் கருப்பாசயம் மாறுதலடைகிறது. அதிலுள்ள இரத்தசாரங்கள் அதிவேகத்துடன் ஓடித நீரைக் ககருகன்றன. அந்த நீரிலிருந்து ஒரு ஜவ்வு உண்டாகிறது. அந்த ஜவ்வை இரண்டு புளாகளாகப் பிரிக்கலாம். மேற்புளை ஜவ்வு கர்ப்பாசயத்தாடும் கீழ்ப்புளைச் சவ்வு முன் சொலிய புறக்கவசத்தாடும் ஒட்டிக்கொளளுகின்றன. மேற்புளை ஜவ்வானது பிரசவமாகிறபரியந்தம் கர்ப்பாசயத்தின் ஜவ்வாகவே யிருந்து பிரசவமானபின் புறக்கவசத்தாடு ஒருபாகமும மற்றது அழுகம்காடும் வருகின்றது. கீழ்பபுளை ஜவ்வானது அதிக மெல்லியதாயினும், கரு வளர வளரப் பின்னும் மெல்லியதாகிறது. கருதகரிதத நான்குமாதபவரை இதுவும கருவும ஒன்றபட்டிருந்தாலும இவ்விரண்டையும் தனித்தனி பிரிகலாம். ஐந்தமாதத்திற்குப் பிறகு கரு முதிர்ந்துவருவதால இந்த ஜவ்வின அடையாளம தெரியாது.

மமற்புளை ஜவ்வு கருப்பையோடு ஆணைந்திருக்கிற ஸ்தானத்தில் அதி தீவிரமாய் வளர்வதால் அதிலிருந்தே நஞசு அல்லது மாயை உண்டாகின்றது.

மாயை.

இந்த மாயை பஞ்சுபோல் மிருதுவாய் இரத்த சாரங்களால் ஏற்பட்டுக் கர்ப்பாசயத்திற்கு உட்புறத்தில் கனத்த வட்டமாய் ஒட்டிக்கொண்டிருக்கும். மாயையிலிருகிற இரத்த சாரங்களின் குஞ்சம் கருப்பையின இரத்த சாரங்களுக்கு மதனியில் சென்று இரதத்தைக் கிரகிக்கினறது. மாயை ஒட்டிகொண்டிருக்கிற ஸ்தானம் ஒவ்வொருவருகும் விதநியாசமாக விருக்கும். சாதாரணமாய் இடது பகசம ஒட்டிக்கொண்டிருப்பது வழக்கம். சிசுவின நாபிகொடியோடு இது பொருதியிருப்பதால, தாய்க்கும் சிசுவுக்கும் சம்பநதத்தை உண்டுபண்ணுவது இந்த மாயையே. கருதகரித்த மூன்றாம மாதம வரை இமமாயையானது கருவின் உபாங்கமபோல் காணபபடாது. சிசு கருபபையில் இருக்கும் காலதில சுவாசிப்பதறகும, தாய் சாபபிடிம அன்னபானாதிகளின் சாரம சிசுவினிடம் சென்று அதைப் போஷிபபதற்கும இந்த மாயையே மூலாதாரம். இதிலுள்ள இரத்தசாரங்கள் தாயின் அனனசாரத்தை நாபிக்கொடி மூலமாய்ச் சிசுவினிடம் சேர்க்கின்றன. தாயின் கர்ப்பாசயததிலிருக்கும் ஒவ்வொரு பிண்டத்திற்கும் தனித்தனியே ஒவ்வொரு மாயை உண்டு. அதற்குள் அசேக


இரத்தக் குழாய்கள் பின்னிக்கொண்டிருப்பதால் ஓர் இரத்த வரி போல் தோன்றும். இதன் மூலமாகவே சிசு வளர்வதற்கு வேண்டிய ஆகாரமும் ஆகாயமும் உட்செல்லும். சிசு வளர வளர நஞ்சை அதைவிட்டுப் பிரிந்தபோதிலும் அதிலிருந்து சிசுவின் நாபிக்குச் செல்லும் இரத்தக் குழாய்களின மூலமாக உணவும் ஆகாயமும் சென்றுகொண்டிருக்கும். இதனடியில் சிசுவைச் சுற்றி ஓர் ஜவ்வு மூடிக்கொண்டிருக்கும். அந்தப் பைக்குளிருக்கும நீரில் சிசு மிதந்துகொண்டிருக்கும். சிசுவின் மெல்லிய சரீரத்தில் எந்தவித அடியும் அழுத்தலும் தாக்காதபடி அதைப்பாதுகாத்துக்கொள்வது அந்தநீரும், தாயின் அடிவயிற்றிலுள்ள உறுதியான மாம்சதசையுமே.

நாபிக்கொடி.

நாபிக்கொடி அல்லது தொப்புள் கொடியானது சிசுவின் நாபியையும் மாயையின் மத்தியிலும் ஒட்டிக்கொண்டிருக்கும். சில சமயம் மாயையின் ஓரத்திலும் ஒட்டிக்கொண்டிருப்பதுண்டு. இது 12 அங்குலம் முதல் 50 அங்குலம் வரை நீளமுள்ளதாயிருக்கும். சில சமயம் சிசுவின் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும். இந்தத் தொப்புள்கொடி சிசுவின் சரீரத்தினுடைய உட்புறத்திலிருக்கும் இரண்டு நாடிகளாலும் மாயையின்று இரத்தத்தைச் சிசுவிற்குத் திருப்பிக்கொண்டு வருகிற ஒரு நாளத்தினாலும் உண்டானது. இந்த இரத்த சாங்களெல்லாம் பிசின தன்மையுள்ள ஓர் வஸ்துவினால் ஒட்டப்பட்டு முறுக்குற்று நெளிந்திருக்கின்றன. சிசு ஜனித்தது சுமார் 20 நிமிஷம் சென்றபிறகு அதிலிருக்கிற நாடி துடிப்பு நின்றுவிடும். நாபிகொடியைத் துண்டித்த பிறகு அது 5, அல்லது 6-ம் நாளில் உலர்ந்து விழுந்துவிடும்.

பனி நீர்,

கருவானது கருக்குழியில் வரும்போது உட்சவ்வும் புறச்சவ்வும் ஆகிய இரண்டு ஜவ்வுகளால் உண்டான ஒரு பைக்குள் இருக்கும் என்று கவனித்தோம. அந்தப்பையில் ஓவிந்த நீருண்டு. அதற்கு உதயஜலம அல்லது பனிநீர் என்று பெயர். அந்தநீரில் கருமிதந்துகொண்டிருக்கும். அதில ஜலமும் உப்புகளும் உண்டு. சிலருக்கு அது குறைவாகவும் மற்றவர்களுக்கு அதிகமாகவும் இருக்கும். (1) ஆரம்பகாலில் சிசுவைப் போஷிப்பதற்கும், (2) உஷ்ணத்தைச் சமரசப்படுத்துவதற்கும், (3) கபசங்கினை யகற்றுவதற்கும், (4) கர்ப்பாசயத்தின் பழுதினாலும், அடி முதலியவற்றினாலும சிசுவுக்குக் காருதிகம் சேரிடாதபடிக்கும், (5) பிரசவ காலத்தில் சிசுவும் வழியான கர்ப்பாசயவாயை விசாலப்படுத்துவதற்காகவும் இப்படி போலாகும்படிக்கும், அளவற்ற ஞானமுடைய அற்புத கர்த்தாவான் உதய ஜலத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்.



ஆரம்பத்தில் சில பிரச்சினைகள் இருந்தபோதிலும் இரு சமயம் கலை மேலாகவும் இடைக்கும். ஆரம்ப சுற்றுப்பாதை சரிதத்தின் மறைப் பாகங்களை கடைபிடிக்கும் மாதத்தில் சிகரானது பெரிதாய் வளர்ந்து ஒவ்வொரு நாளும் ஒரு

கும் இவ்விதமாயிருப்பதால் பிரசவம் ஆரம்பிக்கும்பொழுதே குழந்தை எளிதில் சாத்தக்க ஸ்திதியிலிருக்கிறது. ஏனெனில் சிசுவின் கால் முன் வெளிவருவதால் தாய்க்கும் பிள்ளைக்கும் கண்டமுண்டு. கருப்பையின் இடம் அதிகச் சிறியதாயிருப்பதால் சிசுவானது கைகால்களை மடக்கிக்கொண்டு சுருண்டு கிடப்பதைப் பார்க்கிறோம். குழந்தை பிறக்கும் சமயத்தில் தாயின் சரீரக்கட்டுகள் தளர்ந்து கருப்பை சுருங்கி மொருக்குவதால் தாய்க்கு வலியுண்டாகும். அது ஆரம்பத்தில் லேசாகவும் அதிக நேரத்துக்குப்பின்னும் வந்துகொண்டிருக்கும். பிற்பாடு நேரஞ் செல்லச் செல்ல நப்பையானது அதிகமாய் மொருங்கிச் சுருங்குவதாலும், ஸ்திரீயின் அடிவயிற்றின் மாய்சதனை சுருங்கித் தள்ளுவதனாலும், யோனித்துவாரம் விரிந்து கொடுப்பதனாலும் வலி அதிகரித்து அடிக்கடி உண்டாகும். அப்பொழுது பிள்ளையைச் சுற்றியிருக்கும்பை உடைந்து அதனுள்ளிருக்கும் நீர் வெளியாகும். சிறிது நேரத்திற்குள் சிசுவின் தலைதோன்றி குழந்தை பிறக்கும். அப்போது ஞ்சுக்கொடியும் மற்றமுடைந்த ஜவ்வுகளும் வெளியேயும். அச்சமயத்தில் உடைந்த நிரத்தக் குமாய்களிலிருந்து உதிர தாராளமாய் வரும். பின்ப அதை நிறுத்தும்படி கருப்பை குவதால் அவைகளைஞ் சுருங்கித் தத்தம் ஸ்தானத்திற்கும். குழந்தை பிறப்பதற்கு முன் உண்டாகும் அதிகாரவலி நீக்கும்பொருட்டுத் தற்காலத்தில் குளோரபாரம் என்னும் ஷதத்தைக் கொடுப்பது வழக்கம். ஆரம்பத்தில் குளோரம் உபயோகிக்கச்கூடாதென்று அநேகர் தடுத்தபோதிலும் நீ நாயகமாகிய விக்டோரியா மகாராணியே இவ் வௌஷதத்திடங் கொடுத்துக் குழந்தை பெற்றார்களென்று பிரசித்தினவுடன் ஆங்கிலேய ஸ்திரீகளெல்லாரும் அப்பிரயோகத்திற்ங்கொடுத்துச் சுகமாய்ப் பிரசவித்து வருகிறார்கள்.

குழந்தை பிறந்தபின் சிலநாட்களாக மீகுந்திருக்கும் நஞ்சுபாகிபோல் உதிரத்தோடு சேர்ந்து வெளியேறும். இந்நாட்களில் அலட்சியமாய் உதிரப்பிரவாகம் உண்டாகாதபடிக்குக் கருப்பை சுருங்க வேண்டியது அவசியம். அதைகொண்டு கருப்பைக்குக் கிளர்ச்சி உண்டாகுப்படி குழந்தைக்குச் சீக்கிரம் பால்குடிக்கச் செய்யவேண்டும். அனல் இரண்டு மூன்றாள் வரைக்கும் சரியான பால்ஸ்தனங்களிலுண்டாகாதபடி பால் குழந்தைக்கு அதனல் பிரயோஜனமிராது. ஆனல் பிறந்து இருபத்தநாலு மணி நேரம் வரைக்கும் குழந்தைக்கு யாதொரு ஆகாரமும் தேவையில்லை. அப்புறத் தேவை யிருக்குமாயின் தேன்கொடுப்பது வழக்கம். பிற ஒரு அல்லது பதினான்கு நாள் வரைக்கும் ஸ்திரீயா படுக்கையிலிருந்து அந்தந்த அவயவங்

ஆண் தத்தம் ஸ்தானங்களில் சேர்வதற்கு இடங்கொடுக்கவேண்டும். அதற்குள்ளாக உதிரப்பெருக்கும் நின்றவிடும். அதன்பின்பு முறைந்தது இரண்டு வாரத்திற்குள் ஸ்திரீ கடினமான வேலைகளை யாரம்பிப்பதனாலும், மெத்தைப்படிகளில் ஏறி இறங்குவதனாலும் அடிக்கடி உறுப்புகளில் சில வெளியே வந்தவிடும். பிற்பாடு அவைகள் தத்தம் ஸ்தானங்களில் நிறுத்துவது கடினம். ஆகையால் பேறுகாலமான ஸ்திரீ கொஞ்சகாலைக்கு அதிகமாய் நடமாடாமல் ஓய்ந்திருக்கவேண்டும்.

ஆண் பெண் சிசு வுற்பத்தி.

அமதிஷ்டப் பிரகாரம் ஆண் அல்லது பெண் சிசுவைப் பெற்றிடும் தந்திரத்தையறிய ஒவ்வொருவருக்கும் ஆவலுண்டு. இதைப் பற்றிப் பலகாலங்களிலிருந்தவர்களும் பலவிதமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளில் அநேகம் அநுபோகத்திற்கு சமமையாதவைகளாயும் சாஸ்திரவிதிகளுக்கொத்துவராதவைகளாயு மிருக்கின்றன. உதாரணமாக:—

1. பூர்வகாலத்தச் சித்தர்களெழுதிய நூல்களில் புருஷனுடைய சுக்கிலம் ஸ்திரீயின் சுரதநீராகிய சுரோணிதத்தைவிட அதிகமாயின் ஆண்சிசு தரிக்குமென்றும்; குறைவாயின் பெண்சிசு தரிக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வபிப்பிராயம்,

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவித்த ஆறுசுரோணித மீதுகலந்து
பனியிலோர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து புகுந்தநிரண்டு

என்று பட்டணத்தார் கூறியதற்கும்,

அறுசுநுனி பனியனைய சிறியதுளி பெருகியொரு
வாகமாகியோர் பாலரூபமாய்.

என்று அருணகிரியார் சொல்வதற்கும் ஒத்துவராது. மேலும் தற்காலத்திலிருக்கும் டாக்டர்களும் கருப்பையில் பதன துளி அதிகமில்லாமல் தங்க இடமில்லையென்றும், கருத்தரிப்பதற்குச் சுக்கிலக்கிருமிகளும் சுரோணிதத்திலுள்ள சினையும்மே போதுமானதென்று மட்டுக்கில சுரோணிதத்திலுள்ள சுரதநீரானது சுக்கிலக்கிருமிகளை யும் சுரோணித முட்டையையும் கருப்பையில் கொண்டு சேர்ப்பதற்கன்றி வேறொன்றிற்கும் உதவாதென்றும் சொல்லுகிறார்கள். இது காரணமே, கருவளர்ச்சிக்குச் சுக்கில சுரோணிதம அவசியமன்று, அநேகர் அறியாமையால் தப்பெண்ணங்கொண்டு, ஸ்திரீகளுக்கு கருவைக்கலக்கி விடுவதையும் விளக்கும்.

2. நின்னுள் சிலர் மாதர்களுக்கு மாதவிடாய் வந்த காலம் நாள் முதல் பன்னிரண்டுநாளே கருத்தரிக்கும் காலமாகுமென்றும். அந்நாட்களிலே இரட்டித்த நாட்களில் கூடிக் கருத்தரிக்குமாயின் அது ஆணாக வலையுமென்றும், ஒற்றைப்பட்ட தினத்திலே கருத்தரிக்குமாயின் அது பெண்ணாக அமையுமென்றும் சொல்லியிருக்கின்றார்கள். ஆனல் தற்கால சாஸ்திரிகள் மாதவிடாயிரத்தைச் சோதித்துப் பார்த்து அதில் முட்டையிருப்பதைக் கண்டுபிடித்திருப்பதால் தூயாவதற்குச் சில நாட்களுக்கு முன்னமே கருத்தரிக்க வேண்டுமென்றும் சொல்வதால் முன் கூறப்பட்டது தப்பிதமென விளங்கும்.

3. வேறு சிலர் டாக்டர்மார் கூடி உறவாடி மாதவிடாய் கருக்குழியில் உதிக்குமபோது காயசனுக்குச் சூரியகலை அல்லது பின் கலை யென்கிற வலது நாசித்துவாரத்தில் சுவாசமோடிக்கொண்டிருந்தால் ஆண்சிசுவும், இடகலை அல்லது சந்திரகலை யென்கிற இடது நாசித்துவாரத்தில் சுவாசம் சென்றால் பெண்சிசுவும் தரிக்குமென்றும், இருகலையும் சமகுணமாய்ச் சுழிபுனை யோடினால் பெண்ணும் ஆணுமாய் இரட்டைப்பிள்ளை பிறக்குமென்றும் சொல்லுகிறார்கள். இவ்விபரீதாபிப்பிராயம் சரியாயிருந்தாலும் அநுபவத்திற் கேற்காது. ஏனெனில். தான் கூறுத்த பிரகாரம் சுவாசத்தை வலது அல்லது இடது நாசியிலோடச் செய்வது ஒருவேளை யோகாப்பியாசஞ் செய்பவர்களாலாகுமேயன்றி சாதாரணமானவர்கள் அவ்வாறு செய்யமுடியாது.

4. ஜெர்மனி அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள சில தேர்ந்த டாக்டர்கள் (1) புருஷனது வலது பீஜத்திலிருந்து வரும் சுக்கிலக் கிருமிகளிலொன்று ஸ்திரீயின் வலது சினைப்பையிலிருந்துவரும் முட்டையில் சென்றால் ஆண்சிசு தரிக்குமென்றும், (2) புருஷனது இடதுபீஜத்திலிருந்து வரும் சுக்கிலக் கிருமிகளிலொன்று ஸ்திரீயின் இடது சினைப்பையிலிருந்து வரும் முட்டையில் சென்றால் பெண்சிசு உற்பத்தியாகுமென்றும், (3) புருஷனது வலது பீஜ சுக்கிலக்கிருமி ஸ்திரீயின் இடதுசினைப்பை முட்டையில் சென்றால் அல்லது புருஷனது இடதுபீஜ சுக்கிலக்கிருமி ஸ்திரீயின் வலது சினைப்பை முட்டையில் தாக்கினால் கருத்தரிக்கவே மாட்டாதென்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதைப் பரீட்சித்துப்பார்க்கடிதால் என்னும் ஓர் அமெரிக்க டாக்டர் ஆண் நாயின வலதுபீஜத்தை யெடுத்துவிட்டுப் பெண்ணையோடு சேரவிட்டபொழுது குடியசளெல்லாம் பெண்ணைகளிருந்தனவென்றும், அப்படியே இடதுபீஜத்தை யெடுத்துவிட்டபொழுது ஆண்குட்டிகள் பிறந்தனவென்றுஞ் சொல்லுகிறார். இது உண்

மையா யிருக்கலாம். எளிதில் பரீட்சித்துப் பார்க்கலாம். சாஸ்திரிகளுக்கும் விகற்பமாகத் தோற்றவில்லை. ஆதலால் புருஷன் தனது வலதுபீஜத்தை ஓர் இணியிலை அல்லது காயகியின ஓர் இலையை தூக்கிக்கடடிகொண்டு சங்கமம் செய்யில அதில தரித்தப் பிறபபது ஆணகுமென்றும், காயகன் தனது இடதுபீஜத் தைத் தணியிலை மேல தாக்கக் கட்டிக்கொணடு சேர்வதால் பெண பிறக்குமமன்றும் மேறபடி டாக்டா டிாால என்பவர் எழு துகிறார். இவ்வபிபபிராயம் மேலே மூன்றுவது பாராவில் குறிப் பிட்டிருக்கும் சூரியகலை சந்திரகலை நியாயத்துக்கும் ஒத்ததாகவே யிருக்கிறது.

5. வேறு சிலர் புருடபாரியர் சம்போக சமயத்தில் வலது கன்னத்தில் முத்தியிட ஆண்சிசு தரிக்குமென்றும், இடது கன னத்தில முதத்தியிடப் பெணசிசு தரிக்குமென்று சொலலுகின் றனர்.

6. டாக்டர் பாக்மென் என்பவரின் அபிப்பிராயம் யாதெனில்:- தேனீயானது ஆரம்பத்தில் இடும் முட்டைகளினிருந்து பெண் ஈக் களும், கடைசியில இடும் முட்டைகளினிருந்து ஆண் ஈக்களும் வெளியாகின்றன. ஆதேபோலரியாய ஸ்திரீகளும் மாதவிடாயான துவக்கத்தில் கருத்தரிபபது பெண்ணாகவும், மாதாவிடாயாவ தற்கு முனனுள்ள சில நாடகளில கருத்தரிபபது ஆணாகவும் பிற க்குமெனபதையாம். இந்த அபிபபிராயம் நமது அநுபோகத்தி ற்கு ஒத்ததலல. (32-ம் பகுதம பார்க்கவும்)

7. ஐரோப்பாக் கண்டத்தில் அநேக நூற்றாண்டுகளாகக் கைக்கொணடு யரும வழகமும் ஒன்றாகும். அந்நியாயத்தனில, சம் போகம் முடிந்தவுடன ஸ்திரீயானவள் வலதுபக்கமாகச் சாயந்து படுத்துக் கொண்டால் ஆண் சிசு தரிக்குமமனபதும், இடதுபக்க மாய்ப படுத்துகொண்டால் பெண் சிசு தரிக்குமமனபதுமாம். இயற்கையிலமைய வலதுபக்கமாகச்சாய்ந்து படுப்பது ஸ்திரீகளின வழகக்கம். இடதுபக்கமாகச் சாயாது படுத்தால மைமிய ஸ்தனங் களை இருதயத்தில் அழுத்த இருதயம் படபடவென்று அடிப்ப துடன அந்த சப்தமும காதில் மிதானித்துக்கொண்டிருபபதால் ஸ்திரீக்கு அயர்ந்த நித்திரைகுப் பங்கமாகும். ஆகலில, பருத்த ஸ்தனங்களையுடைய ஸ்திரீகள வலதுபக்கமாகவே படுத்து நித் திரை செய்ய விரும்புவாகள. இதுகாரணமபற்றியே, உலகத் தில் பெண்குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளே அதிகமாய்ப் பிறக்கின்றன.

கன்று, காலிகள் வைத்து வளர்ப்பவர்கள் செய்துவரும் வழக்கமும் இந்த அபிப்பிராயத்தை அடுத்ததே. உதாரணமாக, ஓர் பசுமாட்டை அல்லது பெண் குதிரையை மலைச்சாரலில் கீழ்நோக்கிப் பார்த்துக்கொண்டு, சரிவில் ஒரு பக்கம் கட்டியும் ஒருபக்கம் பள்ளத்திலும் நிற்கத்தக்கதாக நிறுத்திவது வழக்கம். இப்படிச் செய்து பொலிச்சலுக் கிடங்கொடுத்தால் சுகமிலக்கிருமிகளெல்லாம் பள்ளத்தில் நிறகும் பக்கத்திலுள்ள கருப்பையில சாடுவதினல் அப்பக்கமே கருத்தரித்து வலதுபக்கமாயிருந்தால் ஆணுகவும், இடதுபக்கமாயிருந்தால பெண்ணுகவும் பிறக்கும்.

இந்த அபிப்பிராயம் உண்மையானதென்று ரூபிக்கடாக்டர் டக்கி (Tuckey) தமது அனுபோகத்தைச் சொல்லுகிறார். அதாவது:—

குழந்தைகள் பிறந்தவுடன் நஞ்சுக்கொடி விழாமலிருக்குஞ் சமயங்களில் அஸ்தப் பிரயோகத்தினல் அவற்றை வெளியாக்குகையில் பிறந்தது பெண்ணுயிருந்தால் தமதுகையை நேரே இடதுபக்கத்தில் போட்டு கருப்பையின் இடதுபாகத்தில் ஒட்டியிருக்கும் கொடியை நீக்கிவிடுவார். அதே பிரகாரம் ஆண்குழந்தை பிறந்திருந்தால் நஞ்சுக்கொடி கருப்பையின் வலது பக்கத்தில் ஒட்டியிருப்பதைத் தமது காங்களினல் சோதித்தறிந்ததாகக் கூறுகிறார்.

சிசு ஆணே பெண்ணேவென்றறியும் வகை.

ஆண் சிசுவுள்ள கர்ப்ப அடையாளம்:—கர்ப்பினி உட்காரும்போதும் எழுந்திருக்கும்போதும் அதிகமாய் வலதுகையையே ஊன்றிக்கொளளுதல், வலதுகைப்புறமாய்ச் சாய்ந்து படுத்திருத்தல், வலது ஸ்தனம் பருத்திருத்தல், அந்தஸ்தனத்தில் நிறைந்திருக்கும் பாலானது கலங்கலாகவும், வெண்மையாகவு மிருத்தல்; அந்தப பாலில் ஒரு துளியைத் தண்ணீரில் விடும்போது அது பாலி மிதத்தல், சிசு கர்ப்பத்தின் வலது பகுதியிருப்பதாகத் தோன்றுதல், கழுத்தடி தேயுதல, முகம் வர்ணமாறி வெளிறித் தோன்றுதல், நெஞ்செரிவு அதிகமாயிருத்தல், வயிறு பருத்துப் பளுவாயிருத்தல், உயர்வாகி வட்டமாயத தோன்றுதல், பிரசவகாலததில் காபிக்கும் அல்குலுக்கு மிடையில ஊய ஆரம்பித்துப் பின்பக்கமாய் இடுப்புக்குப் பாவுதல், ஆகிய இவ்வடையாளங்களினல் கர்ப்பத்திலுள்ள சிசு ஆணென்றறிந்துகொளளலாம்.

ண்டை சச்ச சிசுவுள்ள கர்ப்ப அடையாளம் :—மேற்சொல்லிய
கள் விட்டமல் மாறுபட்டுக் கர்ப்பஸ்திரீ உட்காரும்போதும் எழுந்தி
ரூனி மரி போதும் அதிகமாய் இடதுகையை ஊன்றிக்கொள்ளுதல்,
இடத்தின் கப்புறமே சாய்ந்து படுத்திருத்தல், இடதுஸ்தனம் பருத்
திருத்தல், ஒரு பாதத்திரத்தில் கொஞ்சம சுத்த ஜலம் வார்த்துக்
கர்ப்பஸ்திரீயின் முஷ்டிப்பாலில் ஒரு கனியை அதிலவிட்டால் அது
மிதக்காமல் கீழிறங்குதல், சிசு காபபததின இடது பக்கமிருபப
தாகத் தோன்றுதல், முகவசீகரமும், சரீரம் கொஞ்சம கறுத்தி
மிருத்தல், வயிறு மட்டமாகவும், சரிவாகவுமிருத்தல், அதிக
சோம்பலுண்டாதல், கேவலமான தின்பண்டங்களில பிரியப்படி
தல், அடிக்கடி பொய்ப்பசி தோன்றுதல, இடதுகண்ணில் பேதந்
தோன்றுதல், பிரசவகாலத்தில் தாபிக்கும் அலகுலுக்குமிடையில்
நோய் ஆரம்பித்து வயிற்றில் பாவுதல ஆகிய இவ்வடையாளங்
களினல் கர்ப்பததிலுள்ள சிசு பெண்ணென்று அறிதுகொளள
லாம்.

சிசுவின் ரூபபேத விளக்கம்.

ஸ்திரீ கர்ப்பதியான நாட்களின் தவக்கத்தில் அவன் மனதில்
பதிந்திருக்கும் ரூபம்ம சிசுவுக்குந் தாவுமாதலால் ஸ்திரீயானவள்
அதிகாலையில் பயக்கையை விட்டெழுந்திருக்கும்போது தன புரு
ஷன் முகத்தையாவது கண்ணாடியில தன முகத்தையாவது அவ
சியம் பார்க்கவேண்டும். அவ்வாறினறி இதரமானவர்களின முகத்
தில் விழித்தால் அவர்களைப போலம்வ சிசு அவதரிக்குமெனக்
கண்டிப்பா யறிபவேண்டும். மேலும், அக்காலதத்தில் ஸ்திரீ
கோபம், பயம், துக்கம், கவலை, விசாரம இவைகளை யுண்டாக்கும்
சங்கதிகளை மனதைவிட்டு விலகிலகற்றி எப்பொழுதும் ஆறுத
லாகவும் சந்தோஷமாகவும் சிரித்த முகமும் சீதளயுமாய் வாழ்ந்
திருப்பது அவசியம். பாலையங்கோட்டையில் ஓர் துரைசானி தன
வீட்டிற் கட்டியிருந்த கருங்குரங்கைக காலை மாலை பாதது வந்த
தால் அவளுக்குப பிறந்த குழந்தை கருங்குரங்கைப் போலம்வ
யிருந்தது. தூதத்துக்குடியில் ஓர் கமமாள ஸ்திரீ காலையிலெழுந்து
வேறு ஸ்திரீகளுடன் தண்ணீர் மொள்ளப போகுமபொழுதல்
லாம அக்கிணறறின் முன்னிருந்த வீட்டிலுள்ள கிரைபப பார்
த்து வந்தபடியால் அவளுக்குப பிறந்த பபண வெளளைக்கார ரூப
முடையதா யிருந்தது. யூஸ்டன் என்னும் பட்டணததில் ஓர்
கொர்ப்ப ஸ்திரீ ஒரு கனியைக கண்டி பயாததிகில் அவன மன
தில் பதிந்துபோனபடியால் அவள் பெற்ற பிளளைக்கு மேற்படி
யினியின் பேச்சு நடவடிக்கைகளை இருந்தனவென வாசித்திருக்கி

றோம். மேலும், பாரதத்தில் திருதராஷ்டிரன் தாயான்னவள் வியாசருடன் போகிக்கும்பொழுது வெட்கமிகுதியால் கண்ணை மூடிக் கொண்டதால் திருதராஷ்டிரன குருடாயப் பிறந்தானென்றும், பாண்டுவின் தாயானவள் அச்சத்தால் மனம் வேறுபட்டு உடல் வெளுத்து அலைந்தபோது தன் கணவனைக்கூடியதால் பாண்டுவின் சரீரம் வெண்குஷ்டம் நிறைந்ததுபோலிருந்ததாகவும் வாசிக்கிறோம். ஆதலால் உத்தம புத்திரனைப் பெற விரும்பும் தாய் எப்பொழுதும் தெய்வதாபத்தியும் சந்தோஷமுமுடையவளாயிருக்க வேண்டிய தவசியம்.

நாம் கவ ஓர் விஷயத்தை இங்கு கூறுவோம்.

எலுமிச்சம் பழம்போன்ற நிறமும், பாலிலாக் குழம்போன்ற பரந்த முகமும், சேற்கெண்டை மீனையொத்த நேத்திரங்களும், கருத்தடர்ந்து வளைந்த புருவமும், அகலமான நெற்றியும், நீண்ட நாசியும், சிறுத்த வாயும், கொவ்வைப் பழம்போன்ற உதடும், கிஞ்சித்துக் கறுப்புள்ள கன்னமும், வெண்மையான முத்தை நிகர்த்த பல் வரிசையும், மிகவும் நீண்டிராத தாடையும், சிறுத்த இடையும், காலளவு நீண்ட கூந்தலும், மிகவும் பருத்திராத தேகமும்,



ஆகிய சகல அழகும் பொருந்திய ஓர் சுந்தர மாதைக்கண்டு அவள் பெற்றோரின அழகெப்படியிருக்கிறதென்றறிய ஆவல்கொண்டு அவள் வீட்டுக்கேகி அவள் பெற்றோரைப் பார்த்தோம். அவள் தாயோ பனைமரத்தின் பாதிக்குப் பணியுயர்ந்திரு லெவ்வண்ணம் தோன்றுமோ அவ்வண்ணமாக நீண்ட உருவமும், மெலிந்த சரீரமும், கறுத்த நிறமும் பொருந்தினவளாயிருந்தாள். தகப்பனும் அவ்வளவு அழகு பொருந்தினவரல்ல. என்றாலும், இருவரும்

கண்டை சச்சரவில்லாமல் சமாதானத்துடன் காலங்கழித்தற்கு நம் கள் வீட்டில் எலுத்திருந்த பெண்கள் நாகரீகமில்லாத பரிசுத்த கன்னி மரியம்மாள் தனது வயிற்றில் தேவபாலகன் எந்திரிற்கும் சரூபத்தின்மூன் றிரவும் பகலும் பூசை செய்துகொண்டு வந்தனர். இப்படி யிருக்கும் காலத்தில் அந்த ஸ்திரீ சர்ப்பனையாகித் தேவமாதாவின் சரூபத்தை யெடுத்து வந்தவனென்ன விளங்கும். ஒரு நன்மகவீன்று களிப்பெனுங் கடலில் ஆளித்தனள் என்றறிந் தோம்.

இவ்விதமாக அழகுக் கெதிரிடையான ரூபலாவண்யமுடைய பெற்றோர்க்கு அஷ்ட லக்ஷணமும் பொருந்திய சர்வகுண சுந்தர மாது பிறப்பதற்குக் காரணம் யாதெனில், பித்தளை அல்லது செப் பச் சாமான்களுக்குத் தங்கம் அல்லது வெள்ளி மூலாம் பூச வேண்டுமெனில்:—மேற்படி தங்கத்தைத் திராவகத்தினால் நீரா க்கி மின்சார சக்தியால் எவ்வண்ணம் மேற்படி பித்தளை அல்லது செப்புச்சாமான்மேல் ஊட்டுகிறார்களோ அவ்வண்ணமாகவே ஸ்தி ரீயின் மனதிலும் பதிந்த ரூபமும் அழகும் அவயவத்திலுள்ள ஓர் சக்தியின் வல்லமையால் தன் சர்ப்பத்தி லைசலாடிக் கொண் டிருக்கும் மகா மெல்லிய சிசுவில் தாக்கி மாறுதல்களை யுண்டாக் குகின்றது. மேற்சொல்லிய மூலாமானது எவ்வளவு நேரம் மின் சார சக்தியால் ஊட்டப்படுகிறதோ அவ்வளவு திண்ணமுடையதா யிருக்கும். அதேமாதிரியாய்த் தாயின் மனதில் உறுதியாய்ப் பதி ந்த வஸ்துக்களும் அவளது ஜீவசக்தியால் சிசுவச்சுக் தாவுகின் றன. இவ்விஷயத்தில் யாம் அறிந்துகொள்ள வேண்டியதேதெனி னில்:—ஓர் தாயானவள் தன்னிடத்திலில்லாத அழகையும் சற் குணங்களையும் புத்தியையுங்கூடத் தனது மன உட்சாடனத்தால் தன் சிசுவிற்குக் கொடுக்கும் சக்தியவளிட முண்டு வென்பதே. சித்திரம், நிர்மாணம், சித்திரம் வரைதல் முதலிய வித்தைகளுக் குப் பேர்போன இத்தாலியா நாட்டில் ஏவ்வொரு சோயிலும் சிட்டிலும் வகைதேர்ந்த சிற்பிகளால் செய்யப்பட்ட தேவமாதா வின் திருக்கோலத்தை வைத்து வணங்குவார்கள். ஆதலால் அந் நாட்டிலுள்ள பிள்ளைகளெல்லாம் பரிசுத்த தேவமாதாவின் ரூபலா வண்ணியம் பொருந்தி யிருக்கிறார்களென்று போய்ப் பார்த்தவர் கள் சொல்லுகிறார்கள்.

பிரசவிக்கும் நாள்க் கணித்தல்.

ஸ்திரீயானவள் சாதாரணமாய் நாற்பது வாரமாகிய 280-நாள் கர்ப்பிணியாயிருப்பாள். சிலசமயங்களில் 300 நாளாவது

மூண்டு. பிரசவிக்கும் நாளை முன்னதாக அறிந்துகொள்ளக் கடைசியாக வீட்டுக்குத் தூரமான நாளோடு 3 மீ முன்னிட்டுக் கணக்குச் செய்து அதோடு 7 நாள் கூட்டிக்கொள்ள ஏற்படுகிற மாதந் தேதியே பின் பிரசவிக்குந் தினமாம். உதாரணமாக ஓர் ஸ்திரீயானவள் ஏப்ரல்மீ 29உ வீட்டுக்குத் தூரமானதாக வைத்துக்கொண்டு 3 மீ முன்னிட்டுக் கணக்கிட ஜனவரிமீ 29உ யாகும். அதோடு 7 நாள் கூட்ட பெப்ரவரிமீ 5உ யாகுமாம். ஓர் சமயம் இரண்டொருதினம் வித்தியாசப்படுவதுமுண்டு. மேற்குறித்த கணிதத்திற்கு மூந்திப் பிறப்பது ஆண்களவும், பிந்திப் பிறப்பது பெண்ணுகவு மிருப்பதைக் கவனித்திருக்கிறோம்.

கர்ப்பக் காலவளவு.

கடற்பட்சி	12	நாட்கள்.	பன்றி	17	வாரம்.
கோழி, வாத்து	21	,,	வெள்ளாடு	22	,,
கூஸ்வாத்து	29	,,	செம்மறியாடு	21	,,
கொக்கு	42	,,	ஈலமான் (Roe)	24	,,
சண்டெலி	24	,,	எருமை, குரங்கு	30	,,
குழிமுயல், முயல்	32	,,	மான் (Deer)	36-40	,,
வீட்டெலி	5	வாரம்.	பசுவகி	40	,,
பூனை	8	,,	மாடு	40	,,
காய், நரி	9	,,	குதிரை, ஒட்டை	13	மாதங்கள்
ஓனாய்	10	,,	காண்டாமிருகம்	18	,,
சிங்கம்	14	,,	யானை	24	,,

சிசு வுற்பத்தியைப் பற்றி இந்துசாஸ்திரங்களில் கூறியுள்ளது.

1. "என்றென்றெண்ணி யிருக்குமுயி ரிடர்ப்பட்டழியு மெழில்வரைக்கீழ்
ஒன்றுமொருவன் றனைப்போலக் கருப்பாசயப் பையுறுத்துதலால்
மன்றவுத்தி மறிந்தாழ்வான் வருத்தமென்ன வருந்தியிடும்
நின்றகருப் பாசயவுதக வெள்ளங்கொள்ள நிறையழிந்தே."

(பூர்வ ஜன்மவுணர்ச்சி காரணமாக, இனியேனும் அனேக நற்கருமங்கள் செய்து கடவுள் திருவடியை யடைவோமா! அதனால், பிறப்பு, இறப்புக்களினுலாய பெருந் துன்பத்தைப் போகடிக்கொள்வோம்; என்பது முதலாய பல எண்ணங்கள் கொண்டிருக்கும் உயிரானது:-(மாதாவின் கர்ப்பப் பைக்குள்ளே) கடமைவடிருக்கும்போது, அக்கருப்பாசயப்பை தன்னை நாற்புறமும் உறுத்துவ

தலைலே, அழகு பொருந்திய ஒரு மலியின் கீழே தங்கிய ஒரு அதன் பாரத்தைத் தாங்க முடியாது தண்பப்படுவதுபோலத் தண்பப்படும். அந்தக் கருப்பாசயப் பையில் ஜலம் பூரித்து அந் நீர் வெள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கும்போது, பெரிய சமுத்திரத்தில் வீழ்ந்து அழ்ந்து விடுகிறவன் தண்பப்படுவதுபோலத் தண்பப்படும். அப்போது, தான் நன்மைகள் செய்ய உத்தேசித்திருக்கும் நிறை (உறுதிப்பாடும்) அழியத் தகைப்படுகின்றது.

2. "அங்கியதனிற்றங்கி யிமையோமயத்த கும்பத்திற்
றங்குமொருவன் தபனம்போற்றபண மெய்துந்தாயுதரத்
தங்கிசுடவே யழலனைய சூசியதலைலாகத்தைப்
பங்கித்திடவே படுமிடரினிருநாற்குணிதம் பட்டழுங்கும்."

அக்கினியிலோர் இருப்புப்பாத்திரத்தை வைத்து அதிலிடப்பட்ட ஒருவன் காய்ச்சப்பட்ட வாசியினல் குத்தப்படுகையிலே படும் துன்பத்தைவிட எண்மடங்கு அதிகமாகச் சிசுவுக்கு உண்டாவது யாதெனில்:—தாயின் உதராக்கினி கலந்த கருப்பாயசப்பையை சிசுவை நாற்புறமும் உறுத்துவதனல் அதுபடும் துன்பமேயாம்.

3. "கருப்பாசயமேகட்டமதாமதனிலதிகங்கடுங்காவலும்
முரிக்கமிகவுமோகமுறமுன்னேயுணர்வுமந்நிலையே
மரிக்கஆலக்கரும்பெனவேயோனிவழியின்வலிதாலைய
நெருக்கப்பட்டகிலமிசையேதான்றுமுயிருனிலையுடனே."

மேலே யாம் கூறிய கருப்பாசயத்துன்பமே கஷ்டமாம். பிரசூத வாயுவினல் மேல் கீழாகச் சிசு நிலைமாறி, அத்தருணத்தே பூர்வ ஜன்ம உணர்ச்சியுங்கெட்டு, ஆலவாய்க் கரும்புபோல் யோனித் துவாரத்தில் நெருக்குண்டு நிலத்தில் வரும் தினபம் பெரிது. இத்தகைய பிறவித் துன்பங்கட்கு மானிடன் முதலில் உட்படுகிறன்.

"சிவதருமோத்தரம்."

சிசு இவ்வாறு உற்பத்தியாகிப் பூரண உறுப்புகளமைந்து வெளியே வருவதற்கு முன்னே ஒவ்வொரு நிலையிலும் அதற்கு ஆபத்து நேரிடக்கூடும். அப்போது அது பின்னப்பட்டுவிடும். ஸ்ரீ மணிவாசகப் பெருமான் என்பவர் அடியில் வருமாறு கூறுகின்றனர்:—

"மானிடப் பிறப்பினுள் மாதாவுதரத்து,
ஈனமில் இருமிச் செருவினிற் பிழைத்தும்.
இருமதி வினைவின் ஒருமையிற் பிழைத்தும்,
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்,

ஈரிருதிங்களில் பேரிருள் பிழைத்தும்,
அஞ்சுதிங்களில் மூஞ்சுதல் பிழைத்தும்,
ஆறுதிங்களில் நூறலர் பிழைத்தும்,
ஏழுதிங்களில் தாழ்புவி பிழைத்தும்,
எட்டுத்திங்களில் கட்டமும் பிழைத்தும்,
ஒன்பதில் வருதரு தன்பமும் பிழைத்தும்,
தக்கதசமதி தாயொடு தான்படும்,
துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்."

கருப்பாசயப்பை உறுத்தல், அதில் ஜலம் பூரித்தல், உதராக்கினியால் வேவுதல், பிரசூதவாயுவினல் மூரித்துத் தள்ளுண்டல், யோனித் துவாரத்தில் நெருக்குண்டல், என்னும் பஞ்ச அவஸ்தைகளுக்குச் சிசு மாதாவின் கர்ப்பத்திலே உட்பட்டு வருந்துவதாகப் பூர்வீக இருஷிகள் தம்மூடைய சாஸ்திரத்தில் கூறியிருக்கின்றனர். ஆகையால்தான் :—"இன்னுமோர் அன்னைக்கருப்பையிலே வாராமற் கா." என்று பெரியோர் கடவுளை நோக்கி விண்ணப்பஞ்செய்து கொண்டிருக்கிறார்கள்போலும்!

மிதமிஞ்சிய சம்போகத்தின் கெடுதி.

ஸ்திரீயும் புருஷனும் சுகமாயிருக்குங் காலத்தில் மிதமாய்ச் சம்போகஞ் செய்துவந்தால் கலியில் இன்பமுண்டாகும். நோயற்ற புஷ்டியான குழந்தை உற்பத்தியாகும். பத்துமாதத்திற்கொருமுறை சேர்ந்தால் ஸ்திரீயும் புருஷனும் நூற்றிருபது வயது வரையில் ஜீவித்திருப்பார்களென்று இருஷிவைத்திய சாஸ்திரங்கள் கூறுகின்றன. இது நிற்க "மாதத்திற்கிரண்டுமுறை மாதனைப் புணர்வது" என்றவாறு மாதமிரண்டுமுறை சேர்வதால் சுகக்கேடில்லாமல் வாழலாமென்று சில இல்லற சித்தாந்தங்களும் கூறுகின்றன. இவ்விருமுறை யேற்பாட்டையும் மறந்துவிட்டு "படித்த புஸ்தகம் மடித்தவுடன் பழைய குருடி கதவைத்திறடி." என்பதுபோல பழையபடியே கடிதடமே மோக்ஷலோகமாகப் பாவித்து வேறு விஷயத்தில் எள்ளளவேனும் மனதைச் செலுத்தாமல் "சுரப்பது உழக்கு இறைப்பது பதக்கு." என்பதுபோல் இரவும் பகலும் அதே வேலையாயிருந்தால் சுக்கில சுரோணிதம் முதிர்ந்து பக்குவமடையாமற் போவதால் வரவர அவர்களுக்கு இந்திரியம் உடைந்து, ஜலமாய் நீத்து, சக்திக் குறைவாகி, தாது நஷ்டமும் பலக்குறைவு முண்டாகி கருத்தரிக்கவே மாட்டாது. இதனுண்மை பொருளுக் காசைப்பட்டுக் கங்குகரையில்லாமல் சம்போகஞ் செய்துவருவதால் சந்ததியற்றிருக்கும் விலைமாதரால் விளங்கும். இதைப்பற்றியே:—

"ஒன்றைவிடோம் இரண்டடக்கோம்." என்றார் தேரையரும்,

ஆதலால் மிக்க அருமையான வஸ்துவாகிய தாதுவை வீணிற் செலவழிக்காமல் சுத்த ரத்தமுண்டாவதற்குரிய ஆகாராதிகளைச் சாப்பிட்டு வருவதுடன், எப்பொழுதும் பரிசுத்தமான காற்றைச் சுவாசித்து சம்போக காலந்தவிர மற்றக்காலங்களில் ஸ்திரீயும் புருஷனும் வெவ்வேறு படுக்கைகளில் நித்திரைசெய்து, பிரதினமும் காலை மாலை சரீரப் பயிற்சி செய்துவந்து, ஸ்திரீ சம்போகத்தில் மிதமும் கரமுமாயிருந்து வந்தால் சரீர ஆரோக்கியமும், தாதுபுஷ்டியும், சௌந்தர்யமும், தேஜஸ்காந்தியும், பலனும், நற்புத்திர பாக்கியமுமுண்டாகும். அவர்களிடத்தில் ஓட்டின கண்ணும், உட்குழிந்த கண்ணும், எலும்புபோன்ற இளைத்த சரீரமும் தோன்றமாட்டா. முதுமைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலுள்ள தேகபலனை அடைந்திருக்கலாம்.

"திண்ணை மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
பெண்ணின்பால் ஒன்றைப் பெருக்காமல் —உண்ணுங்கால்
நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி."[8]

"மாதத்திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறுவி ரோசனந்தான்
வருடத்திரண்டு விசை தைலந் தலைக்கிடுதல்
வாரத்திரண்டு விசையாம்
மூதறிவினெடு தனது வயதுக்கினோயவொரு
மொய்குழலுடன் சையோகம்
மூற்றுதயிர் காய்ச்சுபா னீர்மோருருக்குநெய்
மூதிரா வழுக்கை யிளநீர்
சாதத்து லெவளவாளுலும் புசித்தபின்
முகந் தனக்கு வாங்கல்
தனையாக வுண்டபி னுலாவலினை மேலவர்
சரீர சுகமா மென்பர்காண்."

என்றும் பெரியோரும் நமது சுகத்தைப் பேணும்பொருட்டுச் சரீரத்தைக் கட்டமேவண்டுமென்று சுட்டிக்காட்டியிருக்கின்றனர். ஆனால் சுகாதார நீதிப்படிக்கு ஒருவன் சம்போகஞ் செய்தபிறகு சரீரத்தில் உறசாகமும் பலமும்இருப்பதாகத் தோன்றினால், அப்போது தேகத்தில் சுத்த வீரிய சுகதியிருப்பதாய்த தெரிந்துகொள்ள வேண்டும. சம்போகத்திற்குப் பிறகு ஆயாசம், பலவீனம், தேக அசதி, பசிக்குறைவு, தலம்நாய, புததிமகதம முதலிய குறிகள் தோன்றினால, தான மிதமிஞ்சிவிட்டதாக அறிந்துகொண்டு போகதாகத்தை அடக்கவேண்டியது. இதைக் கவனித்து நடந்

தாஸ் வேறு சட்டதிட்டம் அவசியமில்லை. சமயத்திற் கேற்றபடி தன் புத்தியைக் கிரமமா யடக்கி ஆள்வதே பிரதானம்.

சம்போகங் கூடாத சமயங்கள்.

கடும் பசியாயிருக்கும்போதும், கடும்பிரயாணத்துக்குப் பின்னும், கடுமவேலைசெய்து களைப்பாயிருக்கும்போதும், எண்ணெய் ஸ்நானத்தன்றும், கூலிவாளுஞ்செய்து கொண்ட தினத்திலும், அமாவாசை பவுர்ணமிகளிலும், உண்ட உணவு ஜீரணமாகு முன்னும், சாராயம், கள், முதலிய லாகிரிப்பானங்களை யருந்தி மதிமயங்கியிருக்கும்போதும், நித்திரையைக் கெடுத்து அதிகநேரம் விழித்திருந்த பின்பும், மனைவியாகூலமா யிருக்கும்போதும், திகில் அல்லது பயம் மனதில் பதிந்திருக்கும்போதும, நீரிழிவு, காமாலை, குன்மம், தலைநோய், சுரம் முதலிய நோய்களால் பீடிக்கப்படும்போதும் ஸ்திரீ சமீபோகஞ் செய்யலாகாது. அப்படிச் செய்வதாலுண்டாகுஞ் சந்தானம் நெடுங்காலம் நிலைதழைத்திருக்கமாட்டாது. கருத்தரித்த பின்பு அடிக்கடி சம்போகஞ் செய்வதால் தரித்தகரு சேதமடைந்து அகாலப்பிரசவத்துக்கு இடமாகும் மாடு, நாய் முதலிய பகுத்தறிவில்லா மிருகங்கள் தத்தம இனமானது கர்ப்பந் தரித்த விஷயத்தை மோப்பத்தால் தெரிந்துகொண்டு அதன்பின் ஒருக்காலுஞ் சேர்வதேயில்லை. இம்மிருகங்களைவிட மனிதர் கேவலமா?

ஆகவே தன் மனைவி தனக்கே உரித்தானவளாதால் "என் பாணி என்சோறு, எந்தவேளையுஞ் சாப்பிடுவேன்." என்று தன் மனம்போன வண்ணம் சமீபோகஞ்செய்து தன் சுக்கிலத்தை நஷ்டப்படுத்துவதுமல்லாமல், தன் மனைவியின் உடம்பிற்கும் ஹானியை உண்டாக்குபவர் மதியீனர். புத்திமான்களோ தங்களிருவரின் சரீர சுகத்தைக் கவனித்துத் தம்மைப்போல் தம் மனைவியாரையும் பட்சமாய்ப் பரிபாலித்துக கால நியமப்படி சுகித்து எவ்விஷயத்திலும் எச்சரிக்கையாய நடந்துகொள்வார்கள். மிருக ஜாதிகளிலுங்கூட சங்கமகாலம் ஏற்பட்டிருக்கின்றது. அவைகளிற் சில வருஷத்திற்கோர்முறையும், வேறு சில ஆறுமாதங்களுக்கோர்முறையும், மற்றுஞ்சில மூன்றுமாதங்களுக்கோர்முறையுஞ் சம்போகஞ் செய்வது வழக்கம். மானிட ஜன்மிகளுக்கு மட்டும் சம்போகஞ் செய்ய வரையறையில்லையோ?

கருவழித்தல்.

கருவழித்தலானது எக்காலத்திலும் சகல ஜாதியாருக்குள்ளும் மிருந்து வந்த மகா கொடிய பாவம். இலோக்கருக்குள் கீர்த்தி பெற்ற அரிஸ்றட்ல் என்னும் சான்றோர், பெற்றோர் தாம் வளர்க்குந் தாணிக் கதிமான பிளைகள் பெறக்கூடாதென்னும் சட்டத்தை இராஜாங்கத்தார் ஏற்படுத்தவேண்டுமென்றும், கருவழித்தல் அவசியமென்றும் போதித்தார். பூர்வீகக் கிரேக்கருக்குள்ளும் ரோமர்க்குள்ளும இப்பஞ்சமாபாதகஞ் செய்வோருக்கு யாதொரு தண்டனையுங் கிடைக்காது பூர்வீக ரோமசக்ரவர்த்திகளிலொருவனின் கட்டளைப்படி அவர் சம்சாதரி மகள் கருவழித்தல் அதலை மாண்டாளென்று ரோமச் சரித்திரத்தில் வாசிதறிருக்கிறோம். தற்காலத்திலும் கருவழித்தலால் தாய்க்குண்டாகக்கூடிய உயிர்ச்சேதம், சுகவீனம், கொடுமை முதலியவற்றைப்பற்றி ஜனங்களுக்குள் அறிவு பரம்பியிருப்பதால இக்கொடுந் தொழிலைப்பற்றித் திகிலும் பயமும் யாவரிடத்திலும் உண்டு. இக்கொடுந் தொழிலின் தீமைகளை விவரித்துக் காட்டுவதால், அநேகர் அறியாமையாலடையும் மோசங்களினின்று விலகிக் கொள்வாரெனும நமபிக்கையால் இவ்விடத்தில் இதைப்பற்றி எழுதி எச்சரிக்கலாமேனும்.

தற்காலத்திலுங்கூடச் சீர்திருத்தமுள்ள பிரான்சு அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ளவர்கள் தங்களால் பராமரிக்கக்கூடிய பிள்ளைகளைவிட அதிகம் பெறுதபடி இம்முறையைக் கையாடி வருகிறார்களென்று அநேக புஸ்தகங்களில வாசித்திருக்கிறோம். விவாக நிலைமைக்குட்பட்ட அநேகர் பிள்ளைப்பேற்றின் உபத்திரவத்தைச் சகிக்க முடியாதென்றெண்ணி இப்படி பாதகஞ் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அவர்கள் சற்றென்கிலும் இதம்தாஷம் மனுஷருக்கும் தெய்வதற்கும் ஏற்காத பாவமென்றும், கடைசி நாளில் கடவுள் முன் அதற்காகக் கணக்குக் கொடுக்கவேண்டியிருப்பதோடு இச்சரீரத்திலுள்ள சந்தான சக்தியின்றிக்கொள்ளிக்குப் பிள்ளையற்றுப் போவார்களென்பதையும், இதவதாழில் புரிவோருடைய ஜீவனுக்கே ஆபத்து விளைவிலுண்டாகுமென்பதையும் அறிந்திருந்தால் இதைச் செய்யத் துணியார்களென்பதில் சந்தேகமில்லை.

இதுமட்டுமா? மாசற்ற தன் சிசுவைப் பிறக்குமுன்னமே அழித்தும்படிக்கு எண்ணங்கொண்ட மாதாவின் மனமானது வரவர கடினமாகிச்சகலவித தர்க்கிர்தனிபங்களையும் உடைத்தெறிவதற்குத் தூண்டிவிடும், பழி, பாவம் என்னுஞ் சிந்தையோ மனதில பதியாது, மனச்சாட்சியானது மழுங்கி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு

என்னும் ஸ்திரீகளுக்கிருக்கவேண்டிய சுவீகாரத்தன்மைகள் மாறி எந்த அக்கிரமத்தையும் செய்ய எளிதில் துணிந்துவிடுவார்கள். பிரசவத்தாலுண்டாகும் உயிர்ச்சேதத்தைவிடக் கருவழித்தலால் அதிக தாய்மார் மரித்துப் போகிறார்களென்றும், அப்படியே உயிரோடிருந்தாலும் தம உயிருள்ள காலமெல்லாம் நோயாளிபாகவே யிருக்கிறார்களென்றும் அநுபோகத்தில் நேர்ந்த டாக்டர்கள் சொல்லுகிறார்கள். எவ்வளவில், சாதாரணப் பிரசவத்திற்குப் பின் கருப்பையும் அதைச் சேர்ந்த அவயவங்களும் தத்தம் ஸ்தானத்திற் சென்று எளிதில் சுருங்கி தமது சுய பருமனையும் சக்தியையும் அடையத் தொடங்குகின்றன. கருவழிந்தபிற்பாடோ கருப்பை சரியான நிலையில் போய் நிற்பது கடினம். மேலும் கருப்பையும் சினைப்பையும் அவற்றைச் சுற்றியுமிருக்கும் மாமிச தசைகளும் பலவீனமாய் விக்கங்கொண்டு உடனே மரணத்தை யுண்டுபண்ணுதோபாதிலும் சில வருஷங்களுக்குப் பின்பாவது கருப்பையில் கொடியமேநோய்களையும் ரணங்களையும் உண்டுபண்ணுவது வழக்கம். கருவழித்தலால் அடிக்கடி உண்டாகும் அபாயங்களில் விசேஷித்தது யாதெனில், கருவழிந்தவுடன் நஞ்சின்னை முதலிய உறுப்புகளின் சில அம்சங்கள் முற்றிலும் வெளியேறாமல் சலபாகமாகும் வெளியேறுவதால் உள்ளே தங்கியிருக்கும் பாகமானது ரத்தத்தில் விஷமுண்டாக்கி மரணத்தை வருவிக்கும். சாதாரணப் பிரசவத்தில் சிசுவைச் சுற்றிகொண்டிருக்கும் இப்பைகள் பிரிந்து போய் அதனால் மோசமுண்டாகாதிருப்பது இயற்கைப் பிரமாணமாகும். ஆனால் கருவழிந்தவுடன இவ்விதம் இயற்கை அமைப்பின்படி நஞ்சினைபை முற்றிலும் வெளியேற வராமல கருப்பையினுள் பாகத்தில் சிறிது பாக மொதுங்கிக் கொஞ்சங் கொஞ்சமாயழுகி மகா வீச்சத்தையும் நோயகளையு முண்டாகுகி ஸ்திரீயானவள் மரணத்துக்குத தப்பினாலும் அவள சரீரம் கடுமிக்குலுத்து கெட்டுப் போகும.

துவக்கத்தில் கருவழித்தவர்களுக்குப் பிற்பாடி கருத்தரிப்பதரும். அப்படியே கருத்தரித்தபோதிலும் பூரணதிசையடைகாது முழுப்பிள்ளையாய்ப் பிறப்பது கஷ்டம். இவ்விதமாயப் பிறந்த பிள்ளைகள் அதிகச் சிறிதாகவும, தம உயிருள்ள காலமெல்லாம் பலவீனமும், நோய் தொமபலமும், அங்கவீனமுள்ளவர்களாகவும் இருந்து தம் உயிருள்ள காலமெலலாம தம் தாயின் அக்கிரமக் கிரியைகளுக்கு மௌனசாக்ஷிகளா யிருக்கிறார்கள. இவ்விதமாய் அவாகள் சந்ததி அடிமேயாடறறுப் போவதுடன் அவர்கள் உயிருக்கும அபாயமுண்டாகும். இதுமட்டுமா! கருவழிக்குமபடி உள்ள சாப்பிடும மருந்துகளெல்லாம் மகா கொடிய நஞ்சுகளாயிருப்பதால் கருவை அழிக்குமுன் தாயைமே அதிகமாயழிகுஞ் சக்தியும் அவைகளுகுண்டு.

ஆகையால் இவ்விதை அபாயங்களின்றி ஸ்திரீ விலகுவதற்கான வழியும், கருவழிவதால் அவற்றிலுண்டாகுங் கெடுதியையும், அதனல் தனக்குண்டாகும் அவஸ்தையையும் மரணத்தையும் பற்றிப் புஸ்தகங்கள் மூலமாயும் டாக்டர்கள் மூலமாயும் கற்றுக்கொள்ளுமறிவே அறிவாகும்.

கருத் தரிக்காதபடி செய்யும் விதம்.

வறுமை, நோய், சிற்றிடை, மெலிந்த தேகம், பலவீனம், அங்கவீனம் முதலிய காரணங்களால் அநேகர் பிள்ளைப்பேற்றை இச்சியாதிருப்பதுண்டு. இப்படிப்பட்டவர் விவாகநிலைமைக்குட்படாதிருப்பதே உத்தமம். சிற்சிலப்பப் பிரியரில் அநேகரும் பிள்ளைப்பேற்றை விரும்பாதிருப்பதுண்டு. அநேகமாய்ப் பேறுகாலத்தின் உபத்திரவத்தையும் பிள்ளைப்பேற்றின் கஷ்டத்தையும் எப்படி தாங்கப் போகிறோமென்று மனங்கலங்கு மநேக ஸ்திரீகள் மட்டில்லாக் காமவிகாரத்தில் அமிழ்ந்தியிருக்கும் தங்கள் புருஷரின் மாமிச இச்சையை நிறைவேற்றுவதற்கு இடங்கொடுத்தபோதிலும், பிள்ளைப்பேற்றால் தங்களுக்குக் கஷ்டம் உண்டாகுமென்று எண்ணிக் கருத்தரிக்காமலிருக்கும் உபாயங்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கையாட விரும்புகிறார்கள். இவ்விதமான அநேக தந்திரங்களைப் பிரான்சு, அமெரிக்கா, ஜர்மனி, இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ளவர்கள் கண்டுபிடித்து வந்தபோதிலும், அவற்றினால் சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் கஷ்டமேயன்றி லாபமொன்றுமில்லை யென்றுங் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவ்விதந்திரங்களையும் ஆக்ஷேபனைகளையும் இங்கு கூறுவோம்.

அமெரிக்காவில் பூரணஸ்தர் (Perfectionists.) என்று சொல்லப்படும் சிலர், ஸ்திரீ சம்போகஞ் செய்கையில் சித்தத்தைக் கட்டுப்படுத்தி இந்திரியத்தை நழுவவிடாமல் அடக்கிக்கொள்வதால் அற்பிற்கிணைந்து இன்பமது நல்கி அதனாலுண்டாகுங் கெடுதியினின்றும் நீங்கிக்கொள்ளலாமென்றும், பூரண சம்போகத்தைவிட இதனால் அதிக இனபமுஞ் சுகமுமுண்டாகுமென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனால், இவ்விதஞ் செய்வதால் இந்திரியம் தன் ஸ்தானத்தைவிட்டு நழுவி இரவில் தூங்கும்போது கழன்றுவிடுவதுண்டு. மேலும், ஆயிரம்பேரில் ஒருவனுங்கூட இவ்விதமாக இந்திரியத்தை அடக்கிச் சம்போகஞ் செய்யக்கூடிய விதமாய்த் தனது சித்தத்தை ஸ்திரமான நிலைமைக்குக் கொண்டு வரக்கூடியது அசாத்தியம்.

இன்னுமொருவிதம்:—விந்தைத் தலையில் விழவிடுவது. இது பார்வோன் காலத்தில் நடந்துவந்த தூர்வழக்கம். இவ்வழக்கம் இயற்கைக்கு மாறான மிருக சேஷ்டையாயிருப்பதால் மனுஷனின் ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் நஷ்டத்தை யுண்டாக்கக் கூடியதே யன்றி வேறல்ல.

வேறொரு வழக்கம்:—பிரான்ஸ தேசத்தில் மல்தூஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ரப்பர் குழாய்களை ஆணவது பெண்ணவது தரித்துக்கொள்வது. இது கருத்தரித்தலை நிறுத்தக்கூடியதுதான். ஆனால், இது இன்பத்தையாவது சுகத்தையாவது கொடுக்காது. மேலும், அவற்றினால் நிகம்பர், கருப்பையின் வாய் முதலியவைகளில் ரணங்களுண்டாகிஸ்திரீக்குப் பின் தொந்தரவை உண்டாக்கக்கூடியது. மேலும், இவற்றை ஒருதடவை உபயோகித்தவர் மறுதடவை உபயோகக்க விரும்பமாட்டார்.

வேறுசிலர் கடற்காளான் அல்லது ரப்பரினால் செய்யப்பட்டு இக்கிலீஷ் வைத்தியர்களால் விறகப்படுகிற சில வஸ்துக்களை, இந்திரியம் உள்ளே செல்லாதபடி கருப்பையின் வாயில் வைத்து அடைப்பதுண்டு. இதுவும் முன சொல்லப்பட்டதைப்போல் சிற்றின்பப் பிரியருக்கு இன்பத்தைக் கொடுக்கக்கூடியதல்ல. ஏனெனில், மகா உணர்ச்சியும் கூச்சமுமுள்ள கருப்பையின் வாயோடு லிங்கக் கலசமானது பொருந்துவதனால் பட்டுமே சம்போகவின்பம் உண்டாகக்கூடியது. ஆகலால, மேறசான வஸ்துக்கள் இன்பத்துக்கிடையூறுண்டாக்கும். மேலும, அவ்வஸ்துக்கள் சமபோக சமயத்தில கருப்பையின் வாயைவிட்டு விலகவுங் கூடியன.

வேறுசிலர் சுக்கிலக்கிருமியைக் கொல்லத்தக்க விதமாய்க் குளிர்ந்த ஜலத்தினால் அல்லது துவர்ப்பு மருந்துகள் கலந்த ஜலத்தினல சம்போகம முடிந்தவுடனே உபஸ்தத்தைச் சுத்திசெய்வதுண்டு. இவையெல்லாம் பற்பல தீமைகளைப் பற்பல சமயங்களில உண்டாக்கக் கூடியதாயிருக்கின்றன. கருப்பையிலுண்டாகும அநேக அபாய நோய்களுக்குக் காரணம இவ்விதப பிரயோகங்களே யென்றால் அதிசயித்து வருவதே.

தற்காலவைத்தியர்களால் அநேகமான அதிக நல்ல முறையாய் ஒப்புக்கொள்ளப்பட்டு வரும் முறை யாதெனில்:—மாதமொருதடவை மாதவிடாய் உண்டாவதைப்போல, சினைப்பையிலிருந்து ஒவ்வொரு சினையும் முதிர்ந்து மாதவிடாய்க்கு ஒரு வாரத்துக்கு முன்னிருந்து மாதவிடாய் நின்று பதினாள் வரையில்,

எதாவதொரு நாளில் வெளியாகிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், ருதுநின்ற பத்துநாளைக்குப் பின்பும், அடுத்த ருது வருவதற்கு ஏழுநாளைக்கு முன்பும் இருக்கிற மிகுதியான ஏழுநாளில் மட்டும் சம்போகஞ் செய்து வருவதால, கருத்தரிக்க மாட்டாதென்று அமெரிக்க டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்விதஞ் செய்துவரு மதேகர் குழந்தையில்லாமலிருந்திருக்கிறார்கள். ஆனல், மாதவிடாய் ஆரம்பகருக்குக் கிரமந்தப்பி வருவதனலும், ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேலான முட்டைகள் முதிர்ந்திருப்பதால் சம்போகசமயத்திலுண்டாகும் காமக்கிளர்ச்சியால் அது வெளியாவதனலும் கருத்தரிப்பதுண்டு. ஆகையால், இதையும் அதிக சிரமஷ்டமான நாநிரமாகச் சொல்வதற்கிடமில்லை.

ஸ்திரீ பால் கொடுக்கிற காலத்தில் சம்போகஞ் செய்வதால் கருத்தரிக்கமாட்டாதென்று அநேகர் எண்ணுவதுண்டு. இது சில சமயங்களில் தவறிப்போவதுமுண்டு. பால் கொடுக்கிற காலத்தில் ஸ்திரீயின் ஜனனேந்திரியத்திலுள்ள நரம்புகளின் சந்தானமும் ஸ்தனங்களிலுள்ள பால் சுரப்பிகளின்மேல் உபயோகிக்கப்பட்டு வருவதால் மாதவிடாய் நின்றிருந்தபோதிலும் சம்போக உத்தீபனத்தால் முட்டையானது வெளியாகிக் கருத்தரித்து விடலாம்.

யாவராலும் கையாடப்படக்கூடியதும், நிச்சயமானதும், யாதொரு கெடுதியை உண்டாக்காததும, சுலபமானதுமான ஒரே முறைமட்டும் உண்டு. அது யாதெனில்:—சம்போகமின்றியிருப்பதேயாம். ஸ்திரீ புருஷரள் இதன் நன்மையைக் கற்றறிந்துகொள்வார்களானல் அது கஷ்டமாயுந் தோன்றுது. கற்பு நிலைமையின் இனிமையையும் தன் சரீரத்தைக் கட்டியடக்கியாள்வதனல் தன் ஆத்மா, சரீரம், மனது முதலியவற்றிற்குண்டாகும் ஆநந்தத்தையும் ஒருவன் அனுபோகத்தினலாவது ஆராய்ச்சியினலாவது அறிந்துகொள்வானையின், தனக்குண்டாகும் சிற்றின்பசம்போகவிருப்பதை அடக்கியாண்டுகொள்ளக் கூடுமென்பதை அநேகர் அறிந்துகொள்வார்கள்.

சில கேள்விகளுக்கு விடை.

வினு:—வம்ச பரம்பரையாய் உண்டாகும் கெட்ட நோய்களையும் துஷ்ட குணங்களையும் முற்றிலும் அல்லது எவ்வளவேனும் விலக்க வழியுண்டோ?

விடை:—வம்ச பரம்பரையாய் உண்டாகும் நோய்களையும் குணங்களையும் உடனே நீக்க ஒருவராலும் முடியாதுதான்,

சுயமுயற்சியினாலும், சற்சன சகவாசத்தினாலும், சற்பழக்கங்களினாலும், தேகாரோக்கியத்திற்குரிய ஆகாராதிகளைபுண்டு நல்ல காற்றைச் சுவாசித்து வருவதாலும், எப்பொழுதும் தமது சரீரத்தையும் எண்ணத்தையுர் உணர்ச்சியையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதனாலும், சுத்த ஆகாயத்தில் தேகாப்பியாசம், சுவாசாப்பியாசம் முதலியனவை செய்து வருவதனாலும், சுகமாவோம் என்ற உறுதியாய் சுவாசித்துத் தன் முழு இருதயத்தோடும் அனுதினமும் பயிற்சியாடு தேடிக்கொள்வதனாலும், ஒருவாறு அனர்களை நீக்கலாம். மேலும், அவ்வித்து சிசுவில் தாக்காதபடி முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

வினா:—பக்திமான்களாயிருக்கும் பாதிரிமாரின் பிள்ளைகளிற் சிலர் பிரபல துஷ்டராயிருப்பதன் காரணமென்ன?

விடை:—குருமார் இரவும் பகலும் தேவசந்நிதியில் நின்று பணிவிடை செய்கிறவர்களாயிருக்கிறபடியால் "கோயிற் பூனை தேவர்க் கஞ்சமாட்டாது." என்பதுபோல் சடங்காசார ஒழுக்கங்களை அநுசரிப்பதில் அதிகமாக மனம் செல்லுகிறபடியினால், ஜெபத்தை அவசரமாய் முடிக்கவேண்டுமென்று அத்திரப்பட்டு வார்த்தைகளின் பொருளைக் கவனிக்காமல் படபடவென்று தங்களால் கூடிய சீக்கிரத்தில் முடிக்கப் பிரயாசப்படுவதனாலும், தேவாவியோடு அந்நியோந்யப்படச் சமயம் வாய்க்காமற் போய்விடுகிறதனாலும், சமயா சமயங்களில் தேவசந்நிதியில் பயத்தோடும் நடுக்கத்தோடுஞ் சென்று தேவ இரக்கத்தை உறுதியாய் நம்பிக் காண்கள் செய்த பலவிதமான அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்பி உத்தம ரட்சகரத்தோடும் உண்மையும் உயிருமுள்ள விசுவாசத்தோடும் தேவசமுகத்தைக் கிட்டிச் சேருஞ் சபையாருக்கு இருக்கிற பக்தியும் விசுவாசமும் எல்லாக் குருமாரிடத்திலும் காண்பதரிது.

கடவுளிடத்தில் நன்மையைப் பெறவேண்டுமென்று பிரார்த்தனைசெய்து பக்தி விநயத்தோடு கொண்டுவந்து சபையார் செலுத்தும் காணிக்கையை முற்றிலும் அல்லது ஒரு பாகத்தை உபயோகிக்கும்படி எலிசைப்போல அதிகாரம் பெற்றிருக்கும் சில குருமாருமுண்டு. அவர்கள் பிள்ளைகள் எப்படி ஏலியின் மக்களைப் போலாகக்கூடுமென்பதை எளிதில் யாவரும் அறிந்துகொள்ளலாம்.

குருமார் சபையாரெல்லாருக்கும் பொதுவாயிருக்கிறபடியால், தம்முடைய சபையைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய இஷ்டப்ப

டிக்கும் நடந்து அவர்களைத் திருப்திசெய்வது கூடாத காரியமாகும். ஆகவே "உதலுக் கொருபக்கமிடி, மத்தளத்துக் கிருபக்கமுமிடி." என்பதுபோல ஊரில் எப்பொழுதும் பலவிதமான சண்டைகள் அவர்களுக்கு நிகழ்ந்துகொண்டே வரும். குருபார் அதேகாலம் வீட்டிலிருக்கச் சமயம் வாய்க்கிறபடியால் அவர்களுக்கேரிடும் லாபநஷ்டம் யாவும் அவர்கள் பத்தினிமார்க்குக் கெரிக்கே யிருக்கும். ஆகலே, குருபார்க்கு கேரிடும் சண்டைகளெல்லாம் அவர்கள் பத்தினிமாரும் அனுபவித்து மிகவும் பகலாளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதுடன். தாவ்டத்தனம் செய்கவர்களைப் பற்றியே அடிக்கடி நினைத்துக்கொண்டு அவர்களை எவ்விதமாய் ஜெயிக்கலாமென்னும் யோசனை மிகுத்திருப்பதால் அக்காலத்தில் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அத்தவ்டத்தனம் பதிந்துவிடுவது சகஜமே.

சபையாரென்ன சொல்வார்களோ வென்னுமச்சத்தால் கோபிலுக்குச் சமமாய்ப் போய்க் கடனைக்காகத் தொழுதுவருபவர்களுக்குத் தெய்வபக்தி மிகுதலுக்குப் பதிலாய் கட்டாயத்தினாலாகும் ஓர்விக அஜாக்கிரதை மேற்படுமாதலால் அவர்கள் பிள்ளைகளுக்கும் அவ்வித சுபாவமுண்டாவது சகஜமே.

வினு:—சிசு உற்பத்தியில் புருஷன் பாகம் அனுபவத்தினையே யாயின் அவன் எவ்வித கடக்கையு முறவாவனையிருக்கலாமல்லவா?

விடை:—ஓர் ஆலமரத்தின் விக்தானது அனுபவத்தினையே யாயினும் எவ்வளவோ நிடத்தை மூடிக்கொள்ளத்தக்க கண்மையுடைய ஓர் பெரிய ஆலமரத்தின் சந்தெல்லாம் அவ்விந்துவுள்ளேயே யடக்கி யிருக்கிறது. அதுபோலவே மனுஷருடைய ஆத்ம சரீரங்களினது தன்மை அவர்கள் சரீரத்தின் ஏவ்வொரு பாகத்தையும் ஊடுருவச்செல்லும் உதிரத்திலும் பதிகின்றதென்று முன்னமே கவனித்தோம். ஆகலே எறக்குறைய எழுபது அல்லது எண்பது துளி உதிரத்திலிருந்தெடுக்கப்பட்ட சாரமாகிய ஓர் துளி நிந்தியத்திலும் அதையுடையவனது தன்மைகளெல்லாம் பதிந்திருக்கவேண்டும். மேலும், தகப்பனுனவன் சன்மார்க்கமும் பயபக்தியும் தயாதாக்ஷிணியமுமுடையவனாய் முத்தினைக் கருவில் வைத்த செல்வச் செங்கருப்புபோன்ற தன் பத்தினியாளிடத்தில் பாசம் வைத்து அவளை அன்புடனுதரித்து, அவளுக்கு வேண்டிய சகல விஷயங்களையும் சுவதரித்து அவளை எப்பொழுதும் சந்தோஷமாய் வைத்திருப்பதால் தனக்குப் பிறக்கப்போகும் புத்திரபாக்கியத்தையும் ஆசீர்வாதமுள்ளதாக்கக்கூடும்.

ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் உலகமுழு வதையும் கட்டி ஆசாண்டு வந்த கிரேக் ஜாதியார் கல்வி, பக்தி, சன்மார்க்கம் முதலிய சகல விஷயங்களிலும் புஜபலபராக்கிரமமே மேலானது என்று எண்ணிவந்தார்கள். அவர்களுக்குள் நோய் நொம்பலம் நிறைந்த அல்லது பலவீனமான குழந்தை பிறக்குமா னால் அப்போப்பட்ட பிள்ளைக்குத் தாயாயிருப்பதைவிடப் பிள்ளை யில்லாமலிருப்பதே நலமென்று எண்ணித்தாயே பத்துமாதம் சும ந்து பெற்ற தன் கர்ப்பக்கனியை மலையினுச்சிக்குக் கொண்டுபோய் அங்கிருந்து கீழே உருட்டித்தள்ளிக் கொன்றுவிடுவாளாம். ஆனல் அவர்களுக்குள் பலவீனமான குழந்தைகள் பிறப்பதரிது. ஏனெ னில், பெண்களாய்ப் பிறந்தவர்கள் சிறுபிராயத்தில் ஜிம்நேசியம் என்னும் தேகப்பயிற்சியிடம் முதலிய ஸ்தானங்களுக்குப் போய் தேகாப்பியாசம் செய்து தங்களுடைய சரீரத்தைப் பலப்படுத்திய பின்பதான் விவாகஞ்செய்ய இணங்குவார்களாம். ஓர் ஸ்திரீ கர்ப் பவதியா யிருக்கிறாள் என்று கண்டவுடன் அவள் புருஷன் அவள் மீது மகா அன்புபாராட்டி அவளுடைய சரீர சௌக்கியத்திற் கனுகூலமான சகல வைபவங்களையும் சவதரித்துக் கொடுப்ப துடன், அவள் மனதில் அழகான ரூபம் பதியத்தக்கதாக அவளி ருக்கும் அறை முழுவதையும் அழகாய்ச் சித்திரந் தீர்ந்த படங் களாலும் சிலைகளாலும் சிங்காரித்து வைப்பது வழக்கமாம்.

வினு:—பிள்ளைகளைகள் பெற்றோரின் சுபாவத்திற்கு நேர் விரோதமான தன்மையுடையவர்களாய்க் காணப்படுவதற்குக் காரணமென்ன?

விடை :—இவற்றின் காரணத்தை விளக்கிக் காட்டுவது கஷ்டமல்ல. அவர்களுடைய பெற்றோர் இயற்கைப் பிரமாணத்து க்கு நேர்விரோதமாய் நடந்து தங்கள் நடக்கையைச் சீர்திருத்திக் கொள்ளாமல் மனம்போனபடி நினைத்த வேளைகளில் தங்கள் இச் சையை நிறைவேற்றி யிருப்பார்கள். மற்றெவ்வளவோ சாஸ்திரங் களைக் கற்றிருந்தபோதிலும் ஜீவோற்பத்தி சாஸ்திரத்தை யறிந்து அதன்படி நடக்கவில்லை. தெய்வ சித்தத்தின்படியும் விதியின்படி யும் எல்லாம் நடக்குமென்று மனத்திண்ணமுள்ளவர்களாய், சரீ ரத்துக்கு நோய் அல்லது கஷ்டம் நேரிட்டிருக்கும்பொழுதும், மனதில் சந்தோஷமும் ஆறுதலுமில்லாத பலசமயங்களிலும் சேர்ந்ததனலே ஜனித்த பிள்ளைகளானதால் தாங்கள் ஜனித்த நேரத்தில் பெற்றோர் எந்த ஸ்திதியிலிருந்திருப்பார்களோ அதற் குத் தக்கதாகவும், தாயின் கர்ப்பத்திலிருந்த பத்துமாதங்களில் அவளனுபவித்திருக்கும் சகலவிஷயங்களுக்குந் தக்கதாகவும் அப் பிள்ளைகளின் குணதிசயங்களும் அழகும் பொருந்தியிருக்கலாம்.

கடவுள் துணை.

மாணிட

மப்மசாண்ஸ் திரம்.

அறுரும் புஸ்தகம்.

கர்ப்பக்கால சுகாதார விளக்கம்.

அற்ற லளவறிந் தூண்க—வஃதுடம்பு
பெற்ற வெனடி துய்க்குமா று—குறள்.

இஃது

யாவர்க்கும்

சுக செல்வ நன்மைகளையும் சுகிர்த பாக்கிய
போக்கியத்தையும் நீடுழி பெறுதலிக்க
விரும்பிய,


கல்கத்தா சர்வகலா சங்கத்தின் தமிழ்ப்பரீக்ஷகரும், ரங்கூன் சென் ஜான்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியரா யிருந்தவரும், கணித சாஸ்திரம், பூமிசாஸ் திரங்களின் சரித்தகர்த்தாவும், மானஸ மர்ம சாஸ்திரப் பண்டிதரும், சாமிவேல் வைதியசாலைத் தலைவருமாகிய

எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.

புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,
தென்காஞ்சி, இரங்கோன்.
1920.
All Rights Reserved.



மானிட மர்ம சாஸ்திரம்.


ஆரும் புஸ்தகம்.

சர்ப்பக்கால சுகாதார விதிகள்.

(Hygiene in Pregnancy.)

கர்ப்பிணியானவள் தன் சுகத்தைப் பேணிக்கொள்வதற் காதாரமான விதிகளை முன்னமே யறிந்து அவற்றின்படி செய்து வரின் அது "வெள்ளம் வருமுன் அணைபோடுவதற்கு" ஒப்பாகும். ஆனால் நம் தேசத்தவர்களோ சுகாதார விதிகளை யறியாதவர்களா யும் அவற்றின்படி செய்யாதவர்களாயு மிருந்து "வாணியனுக்குக் கொடாதவன் வைத்தியனுக்குக் கொடுப்பான்" என்பதற் கிணங்க வியாதியும் கஷ்டமும் நேரிட்டபின் "வந்தபின் காப்போன்" செய்வதுபோல் வைத்தியனுக்கு எவ்வளவோ பணத்தை வீணாய்ச் செய்தும் வியாதி தீராமல் கஷ்டப்பட்டு விலை மதிக்கப்படாத தம் கள் பிராணனையும் கூடச் சில சமயங்களில் இழக்கிறார்கள். ஆதலால், கர்ப்பிணியான ஒவ்வொரு ஸ்திரீயும் அறிந்து கடக்கவேண் டிய சில விசேஷித்த சுகாதார விதிகளை இவ்விடத்தில் எடுத் துரைப்போம்.

சுத்த ஆகாயமும் சூரிய வெளிச்சமும்.



நாம் ஜீவனோடிருப்ப தற்கு ஆகாரமும் சுத்த ஜலமும் எவ்வளவு அவ சியமோ அவ்வளவுசுத்த ஆகாயமும் சூரியவெளி ச்சமும் அவசியமே ம. கர்ப்பிணியானவள் தா னும் தன் பிள்ளையுமா கிய இருவருக்காகவும சுவாசிக்கிறாள். சுத்த ஆகாயத்தைச் சுவா சிப்பது ஒவ்வொருவருக்கும் அவசியமென்பது நமக்குத் தெரி யும். அப்படியானால் சர்ப்பிணிக்கு அது இருமடங்கு அவசியம். தாயானவள் அசுத்த ஆகாயத்தைச்சுவாசிப்பதனால் அவளுடைய

உதிரங்கெட்டு அது மூண்டதற்றுலிச் சிசுவிற்குப் பலவீனத்தையும் சுகயீனத்தையும் உண்டாக்கும். மேலும், படுக்கையறையை நன்றுயகடத்துக் கொண்டு நித்திரை செய்வதாலும், ஒரே அறையில் அநேகர் படுத்து நித்திரை செய்வதாலும், படுக்கையறையில் பன்னெணைன்னெய் விளக்கெரிப்பதாலுமா, அ றையிலுள்ள பிராணவாயு நீங்கி கரியமிலவாயு நிறைந்திருப்பதால் சுப்பினைக்கு பலவீனம் நேரிட்டு, குலவலி மலக்கோளாறு, வாந்தி, மயக்கம் முதலிய நோய்களுங்கூட உண்டாகி மரணத்துலும் சிலருக்கு அசௌகரியம் உண்டாகும். ஆதலால் நாம் படுக்கும் விசுகளின் நான்குபக்கங்களிலும் ஜன்னலாவது கதவாவது திருந்தால் கதந்த ஆகாயம் ஒரு பக்கத்திறப்பின் வழியாய் உள்ளேபுகுந்து, அறையிலுள்ள அசுத்தங்களை யெல்லாம் அடித்துக்கொண்டு எதிர்ப்பக்கத்தத் திறப்பின் வழியாய் வெளியே போய்விடும். இவ்விதமாய்க் காற்று உள்ளே வரவும் வெளியே போகவுந்தக்கதாகத் திறப்புகள் (ஜன்னல்கள்) இருக்கவேண்டும். ஆதலால் நாம் வசிக்கும் அறை அதிக ஒடுக்கமாயிருக்குபாதின் வெளியிலிருந்து உள்ளே வரும் குளிர்ந்த காற்றினால் ஜலதோஷம், இருமல் முதலிய வியாதிகள் உண்டாகும். ஆதலால் நாம் வசிக்கும் அறை சுத்த ஆகாயம் பரவிச் செல்லத்தக்கதாக விசாலமுடையதாயு மிருக்கவேண்டும். மேலும், நித்திரைசெயயும் அறையின் ஒரு பக்கத்தில் அடுப்புக் கரியும், சுடட சுண்ணாம்புக்கலலும குவித்து வைத்திருதால் அறையிலுள்ள கரியமிலவாயு முதலிய அதிக அசுத்தங்கள் நீங்கும். கர்ப்பிணி தினந்தோறும வருக்கு வெளியே கடத்துபோய் சுத்த ஆகாயத்தைச் சுவாசித்து வரவேண்டும். கடலருகில் அல்லது ஆற்றங்கரையருகில்போய் உலாவுவது அதிலும் நன்று. அவள் நடக்கும்போது நுரையீரல்கள் நன்றாய் விரிந்து போதுமான காற்றைச் சுவாசிக்கதக்கதாய் நெஞ்சு முனனேக்கி யிருக்கத்தக்கதாக நிமிர்ந்து நடக்கவேண்டும். அப்பொழுது அதிக ஆகாயத்தைச் சுவாசித்துச் சுகமும் பலமும் அதிகபபடும் குனிந்து நடப்பது நன்றனறு. அது சுவாசயரோகங்களுக்குக் காரணமாகும.

சுத்த ஆகாயத்தைதப் போலவே சூரிய வெளிச்சமும் மனுஷருக்கும் மற்ற ஜீவஜந்துக்களுக்கும் சகல தாவர வஸதுக்களுக்கும் அத்யந்த அவசியம். சூரிய வெளிச்சமே உயிர் எனனலாம். அது இல்லையானால் நாம் பிழைத்திருக்க முடியாது. ஜீவஜந்துக்களும மாண்டுபோம. மரஞசெடிகளும் பட்டுப்போம. இருளில் வளருகிற செடிகள் வளருதறப் பிரயோசனமற்றுப்போவதை நாம் பார்க்கிறோம். எப்போதும் வீட்டுக்குள்ளேயே இருக்கிறவர்களும் வெளிறிச் சரீர பலம் மனோபலம் குனறி வியாதிக்


குள்ளாகிறார்கள். வெளிச்சமே நமக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் கொடுத்துச் சுகமுள்ளவர்களாக்கும் தற்காலத்தில் பிளேக் எனப்பட்ட பெருவாரி வியாதி விஷ கிருமிகளை (Bacillus) யுண்டாக்கும் கிருமிகள் இருட்டறையில் ஒரு நிமிஷத்திற்கு ஆயிரக்கணக்காய் விருத்தியாகின்றனவென்றும், சூரியக் கதிர்கள் படும் இடத்தில் அவைகளெல்லாம் மாண்டு போகின்றனவென்றும் கண்டு பிடித்திருக்கின்றனர். மேலும், அமெரிக்காவில் சுறுசுறுப்பாகுங்களைச் சூரிய வெளிச்சமும் சுத்த ஆகாயமும் உலாவும் வெளிப்பிரகாரங்களில் பயிற்சி செய்வித்து அவர்களுக்குத் தருந்த ஔஷதமென்றுங் கண்டுபிடித்து அவ்விதமே நடத்தி செய்து வருகிறார்களாம். வீட்டிற்குள் வெளிச்சத்தைத விடாதவர்கள் வைத்தியரை வீட்டிற்குள் விடச்சொல்லுவதற்கும். ஆதலால், வெளிச்சம் வீட்டிற்குள் செய்யக்கூடியதை வைத்தியர் செய்யமுடியாது. ஆகலால், வெளிச்சமும் காற்றும் வீட்டிற்குள் தாராளமாய்ச் செலுத்தக்கதாக வீட்டின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்திருக்கவேண்டும். மேலும், கர்ப்பிணியானவள் பிரதினமும் வெளிச்சத்தில் சற்றுநேரமாவது உலாவி வருவது நலமை பயக்கும்.

ஸ்நானம்.

கர்ப்பிணி பிரதினமும் ஸ்நானஞ் செய்வது அத்யாவசியம். காப்பக்காலத்தில் மற்றியான மேற்கதில் 10-முதல் 12-மணிக்குள்ளாகத் தூணிர்ந்த ஜலஸ்நானஞ் செய்து உடனே தர்க்கிஷ் துவாலையால் (Turkish Towel.) ஐந்து நிமிஷம் நேரமுழுவதையும் அனலுள்ள [illegible] துடைத்து மேற்படி பின்பு சற்றுநேரம் [illegible] வேண்டும். குளிர்ந்த ஜலம் நேரடியில் படாவண்ணம் குளிர்ந்த [illegible] தூணிர்ந்த, பிரஷ்ணருக்கு, உதிரம் உடம்பெங்கும் பாய்ந்து [illegible] உதிரம் அதிகமாய் நேரில் படுவதால் [illegible] தூணிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ் செய்வதால் மேலும் முண்டாகும். ஆதலால், தூணிர் நாளுமுழுவதாய் மேலுள்ள சுறுசுறுப்பு இன வெயிலில் ஸ்நானஞ் செய்யவேண்டும். அதிகாலை மேலும் வெயிலில் ஸ்நானஞ் செய்வதால் யாதொரு பிரயோஜனமும் அடையமாட்டார்கள். அதிக நேரம் ஸ்நானஞ் செய்வதாலும் பிரயோஜனமில்லை. ஆதலால் ஒன்றரை அல்லது [illegible] நிமிஷத்திற்குள் ஸ்நானஞ் செய்வதே உத்தமம். சாப்பிட்டவுடனேயும் அதிக இளைப்பாயிருக்கும்போதும் ஸ்நானஞ் செய்யக்கூடாது.

ஆசன ஸ்நாநம். (Sitz-Bath.)

கர்ப்பிணிகளுக்கு ஆசன ஸ்நாநத்தால் அநேக நன்மைகளுண்டு. இதற்கென்று செய்யப்பட்ட தகரத் தொட்டிகள் அநேகம் ஷாப்புகளில் எளிதில் கிடைக்கும். அவ்விதத் தகரத் தொட்டியைவிட ஒன்றரை ஜாண உயரமுள்ள மரத் தொட்டி செய்து தரையிலிருத்தி ஒரு பிடி உயரத்தில் வைத்து அதில் முக்கால் பாகம் அதிகக் குளிர்ச்சியில்லாத தண்ணீர் நிரப்பி வைத்துக்கொண்டு கால், பாதம், மதாப்புளுக்கு மேலுள்ள பாகம் முதல்கொண்டு தண்ணியவிடாதபடிக்கும், இடுப்பும் அடிவயிறும் மட்டும் நன்னியத்தக்கதாகவும் இருபது நிமிஷநேரம் உடகார்ந்திருக்கவேண்டும். காலில் செருபபு மாட்டிகொண்டு மதாட்டிபபக்கத்தில போட்டிருக்கும் ஒரு பலகையில் மிதித்துக்கொள்ளவேண்டும். சரீரத்தின மேலபாகதனதைக கம்பளியால மூடிக்கொண்டு தொட்டிக்குள் உட்கார்ந்து ஜனனேந்திரியங்களின வெளிப்புறத்தைமட்டும் மெலசாய்த் தேய்த்துச் சுத்தஞ்செய்யலாம். அடிவயிற்றைக் கையினல் அல்லது விரல்களினல் தேய்த்து அல்லது



பிசைந்து விடலாம். பின்பு எழுந்திருந்து ஒரு துவாலையால சரதனதை துடைதததுவிட்டு இன்னொரு துவாலையாலும் கையினலும் தேகத்தை ஐந்து நிமிஷம் வரை நன்றாயத் தேயதது அனல் பிறக்கச் செயயவேண்டும். பின்பு சாப்பிட்டுகொண்டு இளைப்பாற வேண்டும். தாகமயிருந்தால் தாங்குவது நலம். தூங்குவிடில் இந்த ஸ்நானத்தால் பிரயோசனமில்லை. சரீரம் முழுவதிலும் ஜலத்தை ஊற்றி ஸ்நானஞ் செய்வதைவிட ஜனனேந்திரியங்களுக்கு மட்டும் ஸ்நானஞ் செய்விப்பதனல் அதிகப் பிரயோசன முண்டாகக்கூடுமோ வென்று சிலர் சந்தேகிப்பார்கள்.

சரீரத்தின் வேறெந்தப் பாகத்திலும் இவ்வளவு விசேஷித்த நரம்புக் கூட்டங்கள் முடிகிறதில்லை. சரீர முழுவதும் வியாபித்த மூளையோடு சம்பந்தப்பட்டிருக்கும் சகல நரம்புக் கூட்டங்களும் இவ்விடதத்திலேயே முடிகினறன. ஆகையால் ஜீவ விருக்ஷத்தின வேரகளெல்லாம ஜனனேந்திரியங்களிலேயே வந்தியிருப்பதாகச் சொல்லலாம். ஆகவே அந்த இடத்தில் மட்டும் குளிர்ந்த ஜல

ஸ்நானஞ் செய்வதால் சரீரத்திலுள்ள மூலாக்கினியின் கொதிப்பு களெல்லாம் நீங்கி, நாட்புகளுக்கு வலிமையுண்டாகும். சரீரத்தின் ஒவ்வொரு பாகங்களுக்கும் ஆரோக்கியமுமுண்டாகும்.

இது தேகத்திலுள்ள மாசுகளையும் துர்க்கந்தத்தைச் சுத்தப்படுத்தி ஆரோக்கியத்தைக் கொடுக்கும். மேலும, வயிற்றுச் சம்பந்தமான எல்லாவித வியாதிகள், மூத்திரகிரும்பு, மூளை இவற்றின் பலவீனம், நரம்பெலும்தளர்ச்சி, கால் ஐக வலி, இடுப்புவலி, பிடர்வலி, ஜனேந்திரியங்களின் தடுப்பு, புண் ணைக் கோகுதல், மூலம், கீர்க்கடுப்பு, மலச்சிக்கல், அஜீரணம், வயிற்றுப்பொபாக்கு, இன்னும் ஜனேந்திரியங்களில் உண்டாகக் கூடிய சகலவித ரோகங்கள், தூக்கமின்மை, முகக்குத்து, மயக் கம், தலைவலி முதலிய ஸ்திரீகளுக் குண்டாகக்கூடிய எல்லாவித வியாதிகளையும் சொஸ்தமாக்கிச் சரீர ஆரோக்கியத்தையும், தேகா ரோகியம், தேகதாருட்டியம், தேஜசு முதலியவைகளையும் உண் டாக்கி, மூளைக்கு வலுவைகொடுத்து, தேசார்ந்து தளர்ந்துபோன நாம்புகளுக்கு முறுக்கேறிப் பிருவாகி, வீரியத்தைக் கொடுக் குஞ் சஞ்சீவி என்று சொல்லலாம். இதனலுண்டாகக்கூடிய நன் மைகள் இன்னு மனேகம் இருக்கின்றன. சுருகச் சொல்லில்:- ஆண்களுங்கூட இவ்வித ஆசன ஸ்நானம் கிரமமாய்ச் செய்துவரு வதால், பல காரணங்களால ஆன தன்மையை யிழந்து புத்திசா தானத்திற்கு வலையறறுத் துக்கக்கடலில் ஆழ்ந்துகிடகும் துய ரத்தை நீக்கி ஆனந்தவமைடந்து ஆனந்தகடலில் மூழ்குவார் கள் என்பதற்கு ஆசையுபடவேயில்லை. ஆனல், ஸ்திரீபோகம் விரும் புகின்றவர்கள் சிறிதுகாலம் அதாவது இரண்டு நிமிஷத்திற்கு மேற படாமல் குளிர்ந்த ஜலத்தில் ஆசனஸ்நானஞ் செய்யவேண்டும். அப்படியாழுது நாம்புகளெல்லாம் புண்டாகி வீரிய விருத்தி யாகும். ஸ்திரீபோகத்தை மட்டுப்படுத்தித் தமது காமவிகாரத்தை அடக்க சக்தியுள்ளவர்கள் முப்பது நிமிஷத்திற்குக் குறையா மல் குளிர்ந்த ஜலத்தில் ஆசனஸ்நானம் செய்துவரவேண்டும். உஷ் ணமான ஜலத்திலல்ல குளிர்ச்சிக்குப் பதிலாகத் தளர்ச்சி உண்டா கும். கர்பிணி மாதர் மூன்றுதடவைக்குச் சரபரிட்டுடன்பாலுடன் இந்த ஆசனஸ்நானத்தை தினத்துக்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை செய்து இந்த அருமையான அற்புதச் சஞ்சீவியான பிர சவாசனத்தைப் பரீட்சித்துப் பார்க்கவேண்டியது அவசியம். வயி ற்றுவலி, ஜனேந்திரியங்கள் வீங்கியிருத்தல், இவைகளுக்கு நன் ருய்ச சுடுகின்ற வெந்நீரில் பத்து அல்லது பதினைந்து நிமிஷத்திற்கு ஆசனஸ்நானம் செய்துவருதல் நல்லது. சுகத்திற்காக ஆசனஸ்நா

நஞ் செய்கிறவர்கள் இரண்டு நிமிஷத்திற்கு மேற்படாமலும் விபரீதி நேரும்படி ஸ்நானஞ் செய்பவர்கள் ஐந்து நிமிஷத்திற்குக் குறையாமலும் ஆசனஸ்நானஞ் செய்யவேண்டும்.

கால்ஸ்நானம். (Leg-Bath.)



கால்ஸ்நானஞ் செய்வதற்குப் படத்தில் காட்டியிருக்கிற பிரகாரம் முழங்கால்வரை தண்ணீர் கொள்ளத்தக்க தொட்டி செய்யவேண்டும். இதற்கு லேசான சூடுள்ள இளவெந்நீர்போதும். தேகதிடமற்ற பயங்கானிகளுக்குண்டாகும் தாக்கமினமை, நெஞ்சு அடைத்தல், தலைவலி, மூளைக் கொதிப்பு, காக்கைவலி முதலியவற்றிற்கு இது அருமையான பிரயோகமாகும். மேலும் பாதங்களில் நீங்காதிருக்கும் மேகரணங்களுக்கும், முழங்கால் வீக்கம், கணுக்கால வீக்கம், கீல்வாதம் (Gout) முதலிய நோய்களுக்கும் இதனால் நன்மையுண்டு.

எண்ணெய்ஸ்நானம்.

திராவிட தேசத்தவர்கள் வாரத்திற்கு மும்முறை, இருமுறை, ஒருமுறையாவது அப்பியங்கன ஸ்நானஞ்செய்வதவசியமான வழக்கமாயிருப்பினும், மேலைட்டவரின் கலவிலையக் கருதி வருடவாசல் மேலைட்டையிற்று அயலார வழக்கங்களிலாதபடியால் நமதுரும் அதில் அலட்சியமனமுள்ளவர்களாதலால் இதைப் பற்றி எழுதுவதவசியமாகத் தோன்றுகிறது.

எண்ணெய் ஸ்நானமானது சரீரத்திலிருக்கிற எப்பொழுதும் தூசுவதற்று. சரீரத்தில் தூய்மையான எண்ணெய் முழுவதும் சரீரத்திலுள்ள மிகுதியான அழுக்கை கரைத்தெடுத்து சலநாளத்தின் பிரசரத்தை ஏற்படுத்துகிறபடியால், "எண்ணெயானது எலும்புக்குள்ளிருக்கிற மச்சுமாப்போல" என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது உண்மையே. சரீரத்தைப் பிடித்துப் பிசைந்து தேய்ப்பதால் தோலுக்கு உறுதியுண்டாகி அது நன் தொழிலுக்கமாயச் செய்வதற்கும், குளிர்ந்த காற்று முதலியவை சரீரத்தைத் தாக்காமல் அதைப் பாதுகாப்பதற்கும் சரீரத்திலுள்ள உஷ்ணந்தணிந்து கண்ணுக்குக் குளிர்ச்சியுண்டாகி சிரோபாரம் நீங்கிச் சுகமுண்டா

வதற்கும் இடமுண்டு. சரம்புகளுக்கும் ஆரோக்கியமுண்டாகி, தசக்கமின்மை, நாவறட்சி, தோல்வறட்சி, தாகம், கண் காலெரிவு, சரீரத்திலுள்ள அர்காற்றம் முதலியவை நீங்கும்.

வைகூரி முதலிய எள்ளிக தொற்றுவியாதிகளும் பரவிடாமல் தடுப்பதற்கு எண்ணெய் ஸ்நானம் ஒரு பிரதியாசனமானது.

சரீரபோஷக் வயிற்றுப்போக்கு, நீழிவு நோய் முதலியவற்றிற்கும் எண்ணெய் ஸ்நானம் மிகவும் நன்மையாயிருக்கும்.

மலேரியா முதலிய உஷ்ணரோகங்களுக்கு ஆரம்பத்தில் எண்ணெய் ஸ்நானஞ் செய்துவிட்டால் உஷ்ணம் உடனேயிறங்கி சீக்கிரம் சுகமுண்டாகும்.

கணச்சூடு முதலிய ரோகங்களால் மூளைக்கோளாறு முதலிய குழந்தைகளுக்கு இது சாஷ்டாகத்தை யுண்டாக்கும்.

அமெரிக்கா ஐரோப்பாவிலுள்ள வைத்தியர்களுங்கூட தற்காலத்தில் இக்கருத்தினின் ஆசாரங்களின் லாபங்களை அருமையான வென்னெய் கண்டு பிடித்து, அவற்றை அபபியாசித்து முயற்சிக்கின்றனர். அவற்றிலொன்று ஒலிவ் எண்ணெய தேய்த்த வெண்ணெய் முதலியவற்றைச் சரீரத்தில் அழுத்திய தேகத்தை ஸ்நானஞ் செய்து வருவதேயாம்.

எண்ணெய் ஸ்நானத்தால் அரோகமாய் நன்மையே யல்லாது தீமையில்லை.

பாதஸ்நானம். (Foot-Bath)



ஒரு சிறு தொட்டியில் இரண்டு விரற்கடைத் தண்ணீர்விட்டு அதில் அரைநிமிஷம் இருபாதங்களையும் வைத்திருக்க உடனே கவாலியினல் துடைத்து விட்டுக் கைகளினல் பிடிக்க ஏலவெல்லாம் பாதங்களுக்கு கன்றுப் உஷ்ணமேறி, தசக்கமின்மை, பாதக்குளிர்ச்சி, பாதத்திலதிவு முதலிய நோய்கள் நீங்கிச்சுகமாகும். வெந்நீரில் பாதஸ்நானஞ் செயயக் கால்களிலுண்டாகும் பாதவிரிவு, வரல்களிலுண்டாகும் சோறுப்புண் முதலியவை நீங்கும். தினமனிக்கு 15 நிமிஷம் பாதஸ்நானஞ் செயயச் சுலபமாகும்.

துருக்கி ஸ்நாநம் என்னப்படும் உஷ்ண ஸ்நாநம்
(The Turkish or Thermal Bath.)

இது சுகதேகிகளும், வியாதியஸ்தரும் உபயோகிக்கக்கூடிய அருமையான ஸ்நாநம். நரையிரல், சூடல், குஷ்டிக்காய் முதலியனவைகளைப்போல் சரீரத்திலுள்ள கழிவு பதார்த்தங்களை வெளியேற்றவும் சருமத்திலுண்டாகிய தோஷங்களால் சரீரத்திலுள்ள சில அழுக்குகளை வியர்வையாக வெளிப்படுத்தவும் சக்தி இதற்குண்டு. மேலும், இந்த ஸ்நாநத்தைப்போல் இரத்தத்திலுள்ள அசுத்தங்களை வெகு எளிதில் தோற்பாகரத்திற்குள் கொண்டுவரவும் இரத்த ஓட்டத்தைச் சமப்படுத்தவும் வேறொன்றுமில்லை. வியர்வை மூலமாக இரத்தத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் வெளியாகிவிடும். மேலும், நரம்புகளுக்கு தேஜோசக்தியமுண்டாக்கி மூளையிலுள்ள பலஹீனத்தை நீக்கித் தெளிந்த புத்தியுமுண்டாக்கும். கெட்ட இரத்தத்தினால் உண்டாகக்கூடிய சகலவிதமான நோய்களும் இதனால் தூரோக்கியமாகும். மருந்து சாப்பிடுவதனால் உண்டாகிற சகலவித கெடுதிகளுக்கும், சண்டமாலை, சந்தடோஷம், தோலின்மேலுண்டாகும் சகலவித வியாதிகள், முறைக்காய்ச்சல் முதலிய சகலவித ஜ்வரங்கள், இருமல், சுவாசகாசம், ஜலதோஷம், வாதம், வயிற்றுப்போக்கு முதலிய இன்னுமநேக நோய்களுக்கும் இது மகா சிறந்த சஞ்சீவி. இதற்கு வேண்டிய கருவிகள:-(1) பலகைபோட்ட கைநாற்காலி ஒன்று, (2) இரண்டு போர்வை, (3) ஒரு காப்பிக்கோப்பை, (4) ஒரு பாதஸ்நாநத் தொட்டி, (5) கொஞ்சம் மதுசாரம், (alcohol.) (6) ஒரு சிறு பழைய கம்பளித்துண்டு முதலியவைகளே.

நாற்காலியின்மேல் சிறு பழைய கம்பளியை முன்னுக்குத் தொங்கும்படியாக விரித்து, காப்பிக் கோப்பையில் மூன்று வீரம் கடை யுயரம் மதுசாரத்தை யூற்றி நாற்காலியின்கீழ் வைக்கவேண்டும். நாற்காலியின் முன் பாதஸ்நாநத் தொட்டியில் வெந்நீர் விட்டு வைக்கவேண்டும். நோயாளி வஸ்திரங்களை யெடுத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து பாதஸ்நாநத் தொட்டியில் கால்களை வைத்து நாற்காலியைச் சுற்றிக் கம்பளியினால் மூடிக்கொள்ளவேண்டும். இவ்விதம் ஆயத்தமானபின் ஒரு கிரீயிலுள்ள நெருப்பை யெடுத்து மதுசாரத்தில் நெருப்பு வைக்கவேண்டும். நெருப்பு புகருச்சி உபசாந்தமானால் கையில பற்றிக்கொளளுமாதலால் நெருப்புத் குச்சியினால் மதுசாரத்தில நெருப்பு வைக்கக்கூடாது. இவ்விதம நெருப்புகொளுத்தின மூன்று நிமிஷத்திற்குள் வியர்வை வியர்க்கும. இசசமயத்தில் இரத்தம் தலைக்கு ஏறித் தலை

பனிவாய்த் தோன்றினால் ஒரு துவாலையை இளவெந்நீரில் நனைத்துப் பிழிந்துவிட்டுக் கழுத்தைச் சுற்றிக் கட்டவேண்டும். மயக்கம்போல் தோன்றினால் வாளமாய் வெந்நீர்குடிக்கவேண்டும். அல்லது சுக்குக் கஷாயம் சாப்பிடலாம். வியர்வை காணுமலிருந்தால் அல்லது உஷ்ணம் அதிகமாயிருந்தால் குளிர்ந்த ஜலத்தில் ஒரு துணியை நனைத்து மேலே தேய்க்கவேண்டும். இவ்விதமாகப் பதினைந்து நிமிஷமிருந்து வியர்வை தாராளமாய்க் கண்டவுடன் துணியால் துடைத்துவிட்டுப் பின்பு குளிர்ந்தஜலம் அல்லது இளவெந்நீரில் ஸ்நானஞ் செய்யவேண்டும். ஸ்நானஞ் செய்யும்போது ஒரு ஆள் கையினால சரீரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் நன்றாய் அமுக்கித் தேய்த்துப் பிடிக்கவேண்டும். இது முடிந்தவுடன் ஒரு மணி நேரம் படுத்து நித்திரை செய்து இளைப்பாறவேண்டும். சுகதேகிகள் இதை வாரத்திற்கொரு முறையும் வியாதியஸ்தர் அடிக்கடியும் கையாடி வருவதுடன் மிகுந்த நன்றாய்ப் பிடிக்கவேண்டும். ஆரம்பத்தில் இது அதிக பலவீனமாய்த் தோன்றினாலும் வரவர பலத்தையும் ஆரோகியத்தையுங் கொடுக்கும்.

நாட்பட்ட வாதரோகத்திற்கு இதற்கு நிகரான ஔஷதமில்லை. பிரதினமும் இந்த ஸ்நானஞ் செய்வதால் வெளிறிய மருந்தகாத வாதரோகம, வாயு ரோகங்களெல்லாம் இதனால் குணமாகும். சரீரத்திலுண்டாகும் கொப்பளங்களெல்லாம் இதனால் நீங்கிப் பலமும் சுகமுமுண்டாகும. கர்ப்பிணியின் சரீரமெல்லாங் குளிர்ந்து விறைத்துக்கொண்டாலும, தோல் வறட்சியாய்த் தோன்றினாலும், மேற்சொல்லப்பட்ட எந்தவியாதியாவது தோன்றினாலும் பாதொரு பயமுமின்றி இந்த ஸ்நானம் உபயோகிக்கலாம்.

தேகாப்பியாசம்.



அசையாப் பொருளாகிய ஒரு மாமுங்கூடக் காற்றினால் அசைக்கப்பட்டாலன்றி உறுதியாய் வேரூன்றமாட்டாது. உபயோகிக்கப்படாத வஸ்துக்கள் அருப் பிடித்துக் கெட்டுப் போவதுபோல், நமது சரீரத்தின் ஒவ்வொரு அவயமும் அசைவாடாதிருக்கின் சிறுத்துப் பலவீனமடைந்து உபயோகமற்றதாகிவிடும். தேகாப்பியாசஞ் செய்வதால் நமது சுவாசக் கருவியாகிய நுரையீரல்கள்

நன்றாய் விரிந்து அதிக சுத்த ஆகாயத்தை உட்கொண்டு இரத்தத் திலுள்ள கறைகளை நீக்கிச் சுத்தப்படுத்தும். அப்படியே இரத்தா சயமும் உறுதியாகி இரத்தம் விரைவாய்ப் பரவிச் சரீரத்தை வள ர்க்கும். சர்மத் துவாரங்களின் வழியாய்த் தேகத்துக்குள் ளிருக் கும் அசுத்தங்கள் வியர்வை நீராக வெளிபபட்டுச் சரீரத்திறத ஆரோக்கியமுண்டாக்கும். மேலும், ர்தகாபபியாசத்தினால் மர்ம ஸ்தலங்கள் பலமடை—ந்து, பரிதீபனமதிகரித்து, சாபபிட்ட ர்பா ஜனம ஜீரணமாகி, சரீரத்துக்குப பலமுண்டாகும். அர்தக கர்ப பிணிகள வீடடிலர்லை மசியயாமலும மவளியிலர்ம்பாய் உலாவாமலு மிருந்து, எபபொழுதும் பாயும படுக்கையுமாயக் கிடந்து, சாப் பாட்டினமேல வாஞ்சையற்று ஜீரணக் கருவிகளையும் கெடுத்துக் கொள்ளுகிறபடியினால ர்பறுகாலத்தில் சாலலமுடியாத உபத் திரவ மனடவதுமனறி, ர்சுயாளிகளாய்ப் படுக்கையில் தங்கள் ஜீவனாலத்தைக கழிகக்வும் ர்நரிடுகிறது. ஆகயால, கஷ்டமில் லாப ர்பறுகாலத்தை மகிழ்சசியுடன ஒவ்வொரு வரும ர்தகாபபியா சத்தை அடைடை பண்ணலாக்கும். பிரதினமும சுத்த ஆகாய மிருக்குமிடத்தில சரீரத்தின ஒவ்வொரு அவயத்தையும பிரம்மா ஜனமான ர்தகாபபியாசத்தைத கிரமமாகச் செயது வரவேண்டும். ஆனால மட்டிக்கு மிஞ்சின கடின அபியாசங்களை செயயுதலும் கை விடுதியுணடாகும். ஒவ்வொரு யருமு தந்தம பலத்திறகும் சுகத்திறதுக்குக்தாக மிதமான ர்வலைகளசெய்யவேணடும். ஏனனில, அதிக கஷ்டமான ர்வலைசெயவதால ஒருகால அகாலப் பிரசவம ர்நரிடலும ர்நரிடும. அபபடி ஒருகடடளை ர்நரிடின் பிற பாடு ஒவ்வொரு முறையும அர்திகமாக அகாலப் பிரசவமர்நரிட இடமவகாடுகுமாதலால, அபபடிபபடடபாகள மிக ஜாக்கிரதை யாயிருந்து அடிக்கடி படுகையிலர்ல ர்ய யிருக்கவேணடியதாகும. மற்றவாகள் தஙகள் வீடடிலர்வலைகளை சுலபமாயச் செயது வருவ தால அடிகடி குனியவும, நிமிரவும, ந—க்கவும, ஓடவும, சாமா ன்களை எடுக்கவும வைகவும, மிதனைப்படிகளில் ஏறவும் இறங் கவும், முதலிய அப்பியாசஙகளைச் செயது கஷ்டமிலலாதபடி பல ன பெறலாம். ஆனால, காபபினிகள கனமான சாமானகளை நிமல் துக்குதலும, சாமதனிடன அலையகளை தள்ளுதலும் அதிகச் சர்ம முழுஙகாலலாலது மறறுபபடியாலது திரை எகாணடிருதி லும மிகத தளைபபு செயயும.

ஓர படசியானது தான முட்டையிடுவதற்கு முன கூணடு கட்டுவதுல மகா சாதனை எனறதுக மகானயதிர்பால, ஸ்திரீயும தன ர்பறுகாலதிறகுமுன தன வீடடிலர்வலைகளை மிக கவனமா ய்ப் பாரதது வர வேணடுமாகும. அவ்வித ர்வலைகள செயவதில பாதொரு கஷ்டமுமர்தானறாது. பிரதினமும குறைநத பஷ்ச

ருமணி நோமாவது சுத்தக் காற்று வீசும் வெளிப்பக்கங்களில் உலாவவேண்டும். விசையாய் நடத்தல் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்திற்கும் உற்சாகமாய் கொடுக்கும். கடமை ஸ்ரீ தோட்டத்தில் வேகமாய் செய்து வந்தால் அதிகமாய் வியர்வை, களைப்பு, பலவீனமாகுவை முதலிய யாவும் நீங்கி ஆரோக்கியமும் மனமகிழ்ச்சியுமுண்டாகும்.

சுவாசாப்பியாசம்.

நடக்கும்பொழுது வாயை மூடிக்கொண்டு நாசியில் சுவாசத்தைப் பத்தெண்ணுமட்டும் உள்ளேயிழுத்துச் சற்றுநேரம் வைத்திருந்து பின்பு மெதுவாய் நாசியின் மூலமாகவே வெளியேவிட்டு இவ்விதமாய் அடிவயிற்றிலிருந்து சுவாசத்தை மேலிழுத்துச் சுவாசிக்கப் பழகவேண்டும்.

மெத்தைப்படியில் ஏறி இறங்குவது.

இது கர்ப்பிணிக்கு மகா கண்மையைக் கொடுக்கக்கூடிய அப்பியாசம். ஆனால் அவள் ஏறி இறங்கும்போது கவனிக்கவேண்டிய சில குறிப்புகள் உண்டு.

1. மெத்தைப்படியில் ஏறத் தொடங்கும்போது வாயை மூடிக்கொள்ளவேண்டும்.

2. மெல்லிய கட்டை வஸ்திரத்தைத் தளர்த்தி உடுத்தியிருக்க வேண்டும்.

3. ஏறத் தொடங்குமுன் சுவாசத்தை உள்ளேயிழுத்துக் கொண்டு மூச்சுவிடாமல் ஏறி மெதுவாகப்படியின் உச்சுக்குப் போன பிற்பாடுதான் சன்னஞ் சன்னமாகச் சுவாசத்தை வெளியேற்ற வேண்டும

4. மெத்தைப்படி ஏறும்போது குனியாமல் நேரே நிமிர்ந்து கொண்டு கைகளை முன்னுக்குத் தள்ளி வைத்துக்கொண்டு நடக்கவேண்டும்.

ஐந்து நிமிஷம் மெத்தைப்படியில் ஏறி இறங்குவது அரை மணிநேரம் மற்ற தேகாபியாசஞ் செய்வதற்குச் சரியாகும்.

எச்சரிக்கை:—மெத்தைப்படியில் ஏறி இறங்கும்போது கால் தவறுமலும் படிதவறி மிதிக்காமலும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அகாலப் பிரசவத்திற்கிடமுள்ளவர்கள் இவ்வப்பியாசஞ் செய்யக்கூடாது.

தொடர்ந்தாரம் ரெயில் வண்டியிலாவது கப்பலிலாவது பிரயாணம் பண்ணுவதும், அங்குரிக்கும் டக்டக்கென்று அசைந்து கொண்டு போகும் கட்டைவண்டிகளில் ஏறிச்செல்வதும் நல்லதல்ல.

மேல்பிடித்தல். (Massage.)

மேல்பிடித்தல் அதிக நன்மையைக் கொடுக்கும் அப்பியாசமாகும். இது நாற்பகளுக்கு உறுதியை யுண்டாக்கி இரத்தவோட்டத்தை அதிகரிக்கச் செய்து தோலை மிருதுவாக்கக்கூடிய நல்ல அப்பியாசம். மேல்பிடித்தலாவது ஒரு கேஷக்காரி கர்ப்பிணியின் சரீரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் தனது கைகளால் பிடித்துப் பிசைந்து தேய்ப்பதாகும். இது நோயாளிகளுக்கும் பலவீனர்க்கும் மிக்க நல்லது. கர்ப்பஸ்திரீயின் வயிற்றில் பிள்ளை நிலைமாறு மல் ஜாக்ரதையுடன் கையால் பிடித்துவருவது மிகுந்த சுகந்தரும்.

வெது ஒற்றடம் (Hot Fomentation.)

சில நோய்களுக்கு வெந்நீரில் கம்பளித்துணியைப் பிழிந்து ஒற்றடம் கொடுப்பதுண்டு. வேறு சிலவற்றிற்குச் சுடுகளி, அல்லது சோற்றிலை ஒற்றடம் கொடுப்பார்கள். இவைகள் சீக்கிரம் குளிர்ந்து போவதால் பிரயோஜனமற்றுப் போகின்றன. இவைகளெல்லாவற்றையும் விட ஸுலப்புகளில் எளிதில் கிடைக்கக்கூடியதும், ரப்பரால் செய்யப்பட்டதுமான வெந்நீர்ப் போத்தல்கள் மிகப் பிரயோஜனமுள்ளவை. இவற்றில் கொதிக்கிற வெந்நீர் விடலாம். உஷ்ணம் அதிகநேரமிருக்கும். மேலும், அவைகள் மெதுவும் சரீரத்தின் எந்தப்பாகத்திலும் வைக்கக்கூடியவைகளுமாயிருக்கின்றன. இது ஒவ்வொரு வீட்டிலுமிருக்க வேண்டிய இன்றியமையாத சாமான்களில் ஒன்று. இவ்விக ஒற்றடமானது கைகால் முடக்கு, கணுக்களில் வீக்கம், தேகத்தில் வலி, கடுப்பு, குற்றல், உளைச்சல், தலைநோய், சிரோபாரம், கைகால் குளிர்ச்சி, மயக்கம், மலச்சிக்கல் வாய்வு, மாதவிடாய் நின்றிருத்தல், ருது கால்வலி முதலிய அநேக வியாதிகளைச் சுகமாக்குஞ் சஞ்சீவியாகும். கட்டிகள், சுவாசகாசம் முதலிய பல ரோகங்களுக்கு ஷாப்புகளில் கிடைக்கும் (Antephlogestin) அன்றிபிலோஜிஸ்டின் என்னும் களிம்பை வெண்ணீரில் சுடவைத்துக் கட்டிலில் அதை ஏறத்தாழ பன்னிரண்டுமணி நேரங்களுக்குக் குளிர்ச்சி யடையாமல் உஷ்ணமாகவே யிருந்து அநேகவிதமான வேதனைகளையும் வியாதிகளையும் நீக்கும்.

எச்சரிப்பு:—வேறு ஒற்றடம் கொடுத்த விடத்தில் குளிர்ந்த காற்றுப்படாதபடி கம்பளித துணியினால் மூடிவைக்கவேண்டும். அல்லது அந்த இடத்தை வெந்நீரால் கழுவி நன்றாய்த் துடைத்து விட்டுப் பழையபடி வஸ்திரம் உடுத்திக்கொள்ளலாம். மேற்படி வியாதிகளைச் சொஸ்தமாக்குவதற்கு மருந்துகள் சாப்பிடுவதனால் அநேக கெடுதிகள் நேரிடலாம். ஆனால் இவ்வொற்றடத்தால் யாதொரு கெடுதியும் நேரிடாது. வியாதியும் உடனே சுகமாகும்.

வேறு ஒற்றடங்கள்.

மேற்குறித்த ரப்பரால் செய்த வெந்நீர்ப்பை கிடைக்காவிடில் கல் போத்தலில் வெந்நீரை அடைத்து அதன்மேல் கம்பளித்துணியைச் சுற்றி வலியுள்ள இடத்தில் வைக்கலாம். செங்கல்லையும் சுடவைத்து அதேவிதமாய்க் கம்பளித் துணியில் சுற்றி ஒற்றலாம். வறுத்த உப்பு, மண், அல்லது தவிடு, சுடசாமபல, முதலியவற்றாலும் ஒற்றடங்கொடுக்க ஜலதோஷம், ருதுகாலவலி முதலிய மேற்குறித்த வியாதிகளுக்கு சுகமாகும்.

சுவாசாப்பியாசம். (Breathing Exercise)

சுவாசமே உயிர். ஆதலால் சுவாசித்தல் என்றால் உயிரோடிருத்தல் என்பதாகும். பிறந்த நிமிஷமுதல் நம அனைவருக்கும் சுவாசித்தல் வழக்கமாயும் இயற்கையாயும் போய்விட்டபடியால் நாம் அதைப்பற்றி நினைக்கிறதில்லை. ஆனால், சரியானபடி சுவாசிக்கும் விதத்தைக் கற்றறிந்து அதன்படி செய்வதால் அதிக நன்மையுண்டாகும். சுவாசமானது சிறுமூச்சு பெருமூச்சு என இருவகைப்படும் நம ஜீவியகாலத்தில் சுபாவகையாக ஒவ்வொருவரும் தொடிப் பொழுதும விடாமல் சிறுமூச்சாகும் ஆனால், பெருமூச்சைப் பற்றி நம்மில் அநேகர் கவனிக்கிறதேயில்லை. யோகாப்பியாசஞ் செய்வோரைமட்டுமல்ல அதன் தன்மையை அறிந்து சுவாசத்தை பழக்கத்தினால் மெல்ல உள்ளிழுத்துப் பகுவயாயப் பலவிடங்களிலும் சிறுதளவு மேலெழுப்பி நிறுத்தி நிலைக்கச் செய்தலுமே தவத்திற் கெலலாம் மேலான தவமென்றும, இதுவே முடிவானதென்றும கண்டு பிடித்திருக்கின்றனர்.

சுவாசாப்பியாசத்தை ஓர் சஞ்சீவிக்கு ஒப்பிடலாம். ஏனெனில், அதனால் தீர்க்காயுளும், சுகமும், இன்பமும், காந்தக் கவர்ச்சிக்காப்பான வல்லமையும் (magnetism,) தூரயிசனத்துக்கு உறுதியும், காயசித்தியும் உண்டாகக்கூடியவைகளாயிருக்கின்றன.

வாசப் பழக்கம் கஷ்டமானதல்ல. சிறுமூச்சுவிடுவது எவ்வளவு எளிதோ அவ்வளவு இலேசாகப் பெருமூச்சுவிடவும் பழகிக்கொள்ளலாம். மிகவும் சுத்த ஆகாயமுள்ள மைதானத்தில் நின்று ஒவ்வொரு காலுமே காலையிலும், மாலையிலும் நெடுமூச்சுவிடப் பயில்வது ஒவ்வொருவரும் அநுசரிக்க வேண்டிய முக்கிய கடமை என்றறிக. காற்றில்லாத அறைகளிலும், சுத்த ஆகாயமில்லாத இடங்களிலும் அவ்விதப் பயிற்சி ஆகாது. நெடுமூச்செண்பது யாதெனில், சுவாசப்பையில் இயற்கையில் பூர்த்தியாய் நிறையுமட்டும் சுவாசத்தை உள்ளேயிழுத்து, அங்ஙனமதை நம்மால்கூடிய நேரமட்டும் நிறுத்திப் பின்பு மிகுந்த சிறுதாய் வெளியே விடுவதாகும். சுவாசாப்பியாசஞ் செய்கோடக்கு ஆரம்பத்தில் அநேகமாய் ஓர் விதமயக்கமுண்டாகுமாதலால எதாவதொரு வஸ்துவை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு அப்பியாசிப்பது நன்று. காலையிலும் மாலையிலும் பத்து நிமிஷத்திற் கதிகமு இவ்வப்பியாசஞ் செய்யக் கூடாது.

ஸ்திரீபோகம் விரும்பிய ஆடவன் தன் ஆசையை மனம்போன போக்கில் போகவிடாமல் நினைப்பை மூச்சோடு பொருத்திக்கொண்டு வேறிடத்தில் நிறுத்தி ஸ்திரீயினபோகம் சுழன்றபினனா ஆடவன் தன் போகத்தைப் பிற்படுத்துதல் இருவருக்கும திருப்தியை கொடுக்கும. சுவாசாப்பியாசஞ் செய்வதால் சிறுகுழந்தைகள் முதல் வயோதியாவரை சகலரும அதை

கருவுற்றிருப்பவர்களின் ஆகாரம்.

II. தேஷ்டமாய்ச் சேர்க்கவேணடியவை.

கோழிக்குஞ்சு, ஆட்டிடலும்பு முதலியவற்றின் சூப்பு, மூட்டை, பிஞ்சோகத், புதியமாமிசம, மச்சம, அல்வா, பழையசோடி, பாயாஸம, சல்வரிசிகஞ்சி, பால்சேர்ந்த பானிதகஞ்சி, புதிய நெய், கற்கண்டு, தேன, திராசைஷப்பழம, கிச்சிலிப்பழம், மாதளம்பழம், பேயனவாழைப்பழம், சீமைபிலந்தைப்பழம், அத்திப்பழம, வாதுமைப்பருப்பு, கொட்டிக்கிழங்கு, அமிதராம, கருமபு, குலதுமப்பூ, ரோஜாபூ, பன்னீர், அரைக்கீரை, தூரைகீரை, சிறுகீரை, தூதுவளை, வல்லை, பொன்னாங்காணி, மணத்தக்காளி தவரை, சிறுபயறு, அத்திபிஞ்சு, அவரைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, பீர்க்கம்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, மாவடு, கோவைக்காய், வாழைக்கச்சல, வாழைபூ, வெண்டைப்பிஞ்சு முதலியவற்றையும், வாக்குருவி, காடை, கௌதாரி, கோழிகுஞ்சு, புறாக்குஞ்சு,

உடம்பு, உள்ளான், முசல், வெள்ளாடு முதலியவற்றின் மாமிசத்தையும், எளிதில் ஜீரணிக்கக்கூடிய வஸ்துக்களையும் உபோகஷ்ட மாய்ச் சாப்பிடலாம.

கால்பவுன் மாமிசத்திலுள்ள சத்து ஒரு முட்டையிலிருக்கிறது. ஆனால, அதை யதுஷ்ணம் மிவகளவுதால அஜீரணத்தை யுண்டாக்கும. ஆகலால, ம்லசாய் அளவபபாகம மவகவைதது மாடடி வணணணபுடன சாபபிடடு வதால சரீரதநற்கும, மூளைக்கும, உறுதிபையும பலனையுல மகாமக்கும. காபபிணி யுதி கப பலவ்ணமுளளவளா யிருதால முடலட, பால, சாகவை, இவறறை கனருயபுதது, ஒரு ம்தபல்லக காணடி ஜபபன, அலலது பிராதது ம்சாதது சாபபிடலாம.

பாலை சிறிது சிறிதாகச் சுவைத்து ஆத்திரப்படாமல மெதுவாக குடித்தால — நல உமிழ்நீருடன கலந்து எளிதில ஜீரணமாகும.

பழங்களைக் காலையில சாபபிடுவது உத்தமம, மத்தியானதது இல பழஙகளை, அலலது — மமம எனற அளவுக பணணுதல கூறு கனருர.

காபபிணிக்குத தாகமெடுதததால் பேரீசசமபழம, பச்சைத் திராடசைபபழம, கருபபு, அகாரகாரம, கமலாஙகா,மாதுளமபழம, எலுமிசசமபழபபானகம, இளவளாளிவிலாணைற உபயோகிக்கலாம.

டாகடா ஹரால்டபுருக எனபவர மலதது்ளயிலலாத பிளளைப் பெறல (Parturition Without Pain.) எனறும புஸ்தகம எழுதி யிருகக்கிறார. அதில அவர எளிய முறைகளையும, காயகறி வகைகளையும மற்றும் — மாயச சாபபிடுவதுடன மாமிசவகைகளை அதிகமாயச் சாபபிடாமலிருபபவர்களுக்கு கருவுறறிருகக்கும கால அதில மலபாதம, வாகவால ஏற்படும முதலிய மரணமுச சுகமாயிருபபதுடன பிறகாலதது்ளும ம்லதது்ளபதிகமாய இருகக்கிறதென பதை யெடுதது்ரைதது்ளார.

மேற்சொலலிய கனிவர்க்கஙகளை யாதொரு பயமுமினறிச் சாபபிடலாமவரலாம. சிலர் அவைகளால குளிர்ச்சி யுண்டாகுமென றது சொலவது தப்பிதம.

மிதமாய்ச் சேர்க்கவேண்டியவை.

உருளைக்கிழங்கு, சீமைத்தக்காளி, வெளளரிக்காய், வெங்காயம், அதிக நிதனிப்பான பதார்த்தஙகள், அதிக காரம் கூட்டிய

தானித்த பதார்த்தங்கள் முதலியவற்றையும், கருவாடு வகையில் காரைப்பொடி, சூறவை, கிழங்கான, சுறு, திருக்கணா, வரால், வள்ளரு, கெத்திலி, கச்சைக் கருவாடு, ஓலவாணச் சருகு முதலியவற்றையும், வேறுகாய் வகையில் இஞ்சி, கடுக்காய், நெல்லிக்காய், மாம்பிஞ்சு, எலுமிச்சம்பழம், கிளாக்காய், கச்சுநாரத்தங்காய் முதலியவற்றையும, தினையல் வகையில் பிரண்டை, புளியாரை, புதியது, பச்சைக் கொத்தமல்லி, வேப்பம்பூ, நாய்க்கடுகு, துவரம்பருப்பு, பச்சைப்பருப்பு முதலியவற்றையும், பலகார வகையில் இஞ்சி, காயம், மிளகு சீரகத்துச் செய்த தோசை, இட்டலி, பூரி, போனி, ஆப்பம், உப்பு, முதலியவற்றையும் மிதமாய்ச் சோக்க வேண்டும்.

முற்றும் நீக்கவேண்டியவை.

அதிகப் புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, கார்ப்பு (உரைப்பு) உள்ள பதார்த்தங்களையும், அதிகச் சூடுள்ள பதார்த்தங்களையும், சூதக விர்த்தி, மலம்பதி, நீர்ம்பதி, இவைகளை யதிகரிக்கக்கூடிய பதார்த்தங்களையும், மந்த பதார்த்தங்களையும், தாமதித்து ஜீரணமாகும் பதார்த்தங்களையும், ஓயின், பிராந்தி, விஸ்கி, பீர் முதலிய லாகிரி வஸ்துக்களையும், பன்றி, மான், வாத்து, முதலியவற்றின் மாமிசத்தையும், சுரல், கிழங்கு தினுசுகள், உபபுக்கண்டம், அன்னாசிப் பழம, மாம்பழம், பலாபபழம, பப்பாளிப்பழம், பழங்களின்தோல்கள, எட்டு நிமிஷத்திற்கு மேறபட அடுப்பிலவைததிருந்த காப்பி, தேயிலை முதலியவற்றையும் கட்டோடே நீக்கவேண்டும்.

நிறைன பல்பங்கள், சென்னாம் முதலிய விஷமுள்ள மருந்துகளை உபயோகிப்பதனல் கர்ப்பம் அழிந்துபோவதுண்டு. ஒரு வேளை அழியாமல் குழந்தை பிறந்தாலும அதி ஊனம் அல்லது செவிடு முதலிய ரோகமுடையதாயிருக்கும்.

கர்ப்பிணிகள் அநுசரிக்கவேண்டிய விதிகள்.

1. கர்ப்பிணிகள் அம்மை, சாம், பிளேக், விஷபேதி முதலிய தொத்து வியாதிகளுள்ள இடங்களுக்குப் போகக்கூடாது. அவ்விடங்களிலிருந்து யாரையுந் தங்கள் வீடுகளுக்கு வர இடங் கொடுக்கவுங் கூடாது. ஏனெனில், இவ்வியாதிகள் எளிதில் கர்ப்பிணிகளுக்குத் தாக்கி அகாலப் பிரசவத்தை உண்டுபண்ணுவதுடன் மரண வேதனைக்கும் ஆளாகவிடும்.

2. பிரதினமும் குறைந்த பட்சம் ஒருமணி நேரமாவது சுத்த காற்று வீசும் வெளிப்பக்கங்களில் உலாவிவருவதுடன் சி

ரத்திற்கு லேசான அப்பியாசங்களாகும் வீட்டுவேலைகளைச் செய்ய வருவதும் சமமான பேறுகாலத்திற்கு இடமுண்டாக்கும். அதிக உழைப்பான வேலைகள் செய்வதும், எளிதில் ஜீரணிக்கக் கூடாத போஜனம் அருந்துவதும், மிதமிஞ்சிய போகம் அநுபவிப்பதும், இரவில் அதிகநேரம கண் விழித்திருப்பதும், உஷ்ணத்தை உண்டாக்கும் வஸ்துக்களைப் புசிப்பதும், மெடுநேரம் பிரியா யிருப்பதும், அதிக பாரமான மூட்டைகளைச் சுமப்பதும், கனமான சாமான்களை மேலே தூக்குவதும், சிரமத்துடன் அலைகளைத் தள்ளுவதும், மிதமிஞ்சிக் கால்நடையாய் நடப்பதும், வண்டியில் பிரயாணம் செய்வதும், அதிக கோபம், பொறாமை, பகை, துக்கம், கவலை, பயம் முதலியவற்றிற்கு இடம் கொடுப்பதும், அகோரமானதும் பயங்கரமானதுமான காட்சிகளைக் கண்ணால் பார்ப்பதும், துக்க வீடுகளுக்குப் போவதும், ஆகிய இக்காரியங்களை முற்றும் நீக்கவேண்டும்.

3. கண்ணுக் கின்பத்தைக் கொடுக்கும் அழகிய படங்களினாலும், சொருபங்களினாலும் வீட்டை அலங்கரித்து அவற்றின் அழகு தன் மனதில் பதியத்தக்கதாக அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

4. கர்ப்பிணி மேடு பள்ளமான இடங்களிலும் காடுமுரடான இடங்களிலும் தாறுமாறுகக் கண்டபடி கண்டவிடத்தில் உட்காரக்கூடாது. சமமான தரையில் காலைநீட்டி உட்காருவது நலம்.

5. கர்ப்பிணி தனிமையான படுக்கையில் குளிர்ச்சியும் கனமுய் காற்று வரத்தக்கதுமான இடத்தில் நித்திரை செய்தால் கண்மையடைவாள். ஒவ்வொரு நாளும் மத்தியச் சாப்பாட்டிற்கு முன் சிறிதுநேரம் தூங்கிக்கொள்வது மிக உத்தமம். இரவிலும் எட்டு அல்லது ஒன்பதுமணி நேரம் கன்முய்த் தூங்கவேண்டும்.

6. உடை. பாவாடையாவது ரவிக்கையாவது இறுக்கிக் கட்டக்கூடாது. அடிவயிற்றிலும் மார்பிலும இறுக்கிக்கட்டினால் மோசமுண்டாகும். எனெனில், தாராளமாகச் சுவாசம் விடுவதையும இரதத ஓட்டத்தையும் அவைகள் தடுத்துச் சுகவீனமுண்டாக்கும்.

7. ஸ்நானம். கர்ப்பிணி பிரதினமும் மத்தியானத்தில் இளவெந்நீரில் ஸ்நானஞ் செய்யவேண்டும். அச்சமயத்தில் அவளுடைய முகம், தோள், அடிவயிறு, விலாப்பக்கம் முதலியவற்றை வேறொருவர் தேய்ப்பதால் தேகத்திற்கு மிக்க ஆரோக்கியமும் பலனுண்டாகும். இரவில் நித்திரைக்குப் போகுமுன் ஓர் மரத்தொட்டியில் இளவெந்நீர் ஆறுஅங்குல உயரத்திற்குவிட்டு அதில் இருநிமிஷம் பிரதினமும் ஆசனஸ்நானஞ் செய்து வருவதால் மிக நன்மையுண்டு. அது முடிந்தவுடன் ஒருமணிநேரம் படுக்கையில் இளைப்பாற வேண்டும்.

தனிப்பிரார்த்தனை.



கர்ப்பவதியாயுள்ள தனிமையா யிருக்கும் காலத்தில் அடிக்கடி தன் ஸ்திதியைக் கவனிக்கிறதும், ஆண்டவரிடத்தில் மன்றாடித் தனக்குச் சுகமும் சௌக்கியமும் கிடைக்கவும், பேறுகாலமாயிய பெரும் கடஷ்டசீர்த்தித் தன் உயிர்தப்பவும், தன்கர்ப்பக்கனி அஷ்டலக்ஷணங்களும் பொருந்தி ஆயுள் விர்த்தியும் புத்திகூர்மையும் பலவிதசற்குணங்களும் நிறைந்ததாய்த் தன் உதரத்துள்ளோர் தோறும் வளர்ந்தோறும்படியாகவும் மனம் கனிந்து கடவுளைப் பிரார்த்திப்பதும் வழக்கம். ஆகையால் தனி ஜெபத்தைப் பற்றிச் சில குறிப்புகள் இங்கு சொல்வதயசியம்.

நிஷ்களனதை புஷ்கள கடாட்சமே தமதபூரண மனோரூட்சமாகக்கொண்டு அந்தியும் சந்தியும் அவருக்கு மனோபூஜிதான்தோத்திரம் புரிந்து வருவதே ஜெபமாகும். நாம் சிறுபிராயமுதல் சாவவல்லபமும் பொருந்திய ஜெகதீசருடைய பாதாரவிந்தமகிமோக்ஷப் பக்திவியத்துடன் பூஜை செய்துவரக் கற்றிருக்கிறோம். ஆனல், சிலசோ தமது வாயினல்மட்டும் கிளிப்பின்னைப்போல ஜெபங்களையும் மந்திரகளையும் ஓதிவிட்டுத் தாம் கடவுளுக்குச் செய்யவேண்டிய கடமை முடிந்ததென்று எண்ணுகிறார்கள். அது ஜெபமாகமாட்டாது. ஜெபத்திற்கு வேண்டியது ஊக்கமும், நாம் கேட்பது கிடைக்குமென்ற உயிருள்ள விசுவாசமுமே. இதைப் பற்றியே உலக ரக்ஷகர் "உங்களுக்குக் கடுகளவு விசுவாசம் இருந்தால் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து கடசமுத்திரத்திலே போகக்கடவாயென்று சொன்னல் அப்படியே ஆகும் என்றும், கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்," என்றும் சொல்லியிருக்கிறார்.

பேபர் சக்ரவர்த்தி தன்மகனுடைய உமாயூன் வியாதியா யிருந்த போது தன் மகன் சொஸ்தமாகும்படியாகவும் அவனுடைய வியா தி தனக்கு வந்து பீடிக்கவும் ஊக்கத்தோடும் உறுதியோடும் ஜெ பித்துத் தன் மனதில் திடமாய் வேண்டி விரும்பியபடியினல், அவ ன் விருப்பத்தின்படியே உமாயூன் சுகமானதாகவும் அவ்வியாதி பேபருக்குத் தொற்றி அவர் மரணமடைந்ததாகவும் இந்தேச சரித்திரத்தில் வாசிக்கிறோம். இவ்விதமாக நாம் உறுதியான விசு வாசத்தோடு கேட்டுக்கொள்ளும் எந்தப் பிராத்தனையும் கேட் கப்படும் என்பதற்கு ஆசேஷபனையில்லை.

வாய்மையே விசுவாசமாகக் கொண்டால்—மருந்தென்ன
வையத்தியன் கைபட்டாற் போதும்.

என்று பெரியோர் சொல்லியிருப்பதுவும் உண்மையே.

விசுவாசத்தினாலுண்டாகும் சிலாக்கியங்களைப் பற்றி விவரித் துச் சொல்ல இந்த இடம் போதாதாயினும் விசுவாசத்தால் கூடாதவை மிகவும் சொற்பமென்றும் சம்பிக்கை யில்லாமல் ஒன்றுங் கைகூடாதென்றும் சுட்டிக் காட்டுவதவசியம்.

தனிமையான நேரத்திலே தனிமையான இடத்தில் யாவ ரோடும் சமாதானமான இருதயத்தோடு, தெளிவுமுகத்தில் முழங் காற்படியிட்டு, அல்லது சாஷ்டாங்கமாய்த் தரையில் விழுந்து குபிட்டு, அல்லது நின்றுகொண்டு இருகரங்களையுஞ் சிரசின்மே லுயர்த்தி நாம் கேட்கப்போகிறதைக் கடவுள் தம் சித்தப்படி பே லாய்க்கச் செய்வார் எனறும் உறுதியான விசுவாசத்தோடு ஜெபிக்கவேண்டும். சில வேளைகளில நாம ஜெபிக்குமபோது நம் முடைய எண்ணமானது கண்டமட்டும் அலையத்தொடங்கி ஜெப முழுவதையும் கெடுத்துவிடும. நமகிருக்கும் பலவீனங்களில் மிகுதியான பலவீனம இதுதானே. ஆதலால, ஆரம்பத்தில மன தக்குள்ளேயே சொலலி ஜெபிகிறதைவிட வாய்விட்டுச்சொல்லி அலலது பாடல்களால் துதித்து ஜெபிப்பது, எண்ணஞ் சிதறாம லிருப்பதறகு உதவியாகும். உனகது எது தேவையோ அதற் காக ஜெபி. அந்த நேரமே நீ பேசுவதைச் சற்று நிறுத்தி உன் சமீபத்திலிருக்கிற உன் தேவன் உன் ஜெபத்தைக் கேட்டுப் பதி லளித்து விட்டாரென்று நம்பி நீ கேட்டதைப் பெற்றுக்கொள் ளும்படி உன் இருகரங்களையும் ஏந்தி வறறுக்கொள்.

பாமபிதா இரக்கமும், உருக்கமுமனிறைந்தவர் என்பதைபறிந்து அவரைத் தேடிச் சேரும்போது சகலவித பயத்தையும் நீக்கி அவ ரே பூரணமாய் அன்புகூர்ந்து கறறுக்கொள். அப்பொழுது உன்

விசுவாசம் அதிகரிக்கும். உன் விசுவாசத்திற்குத் தக்க பலன் கிடைக்கும். கிடைத்திவிட்டதென்னும் நம்பிக்கை உன்மனதில் புகுந்தவுடனே ஆச்சரியப்படத்தக்க விதமாய் உன் விண்ணப்பம் கேட்கப்பட்டதைக் காண்பாய். மனஞ் சிதறாமல் மௌனமாய் ஜெபிக்கக் கற்றுக்கொள்வது மிகவும் நன்று. விசுவாசத்தோ டெழுந்தபோ. கர்த்தர் உன்னோடிருப்பார். நீ கேட்டதெல் லாம் வாய்க்கும்.

கடலமுதே தேனே யென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னை முகம்பார் நீ பராபரமே.

பாராயோ வெண்ணைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

ஓயாதோ வென்கவலை யுள்ளேயா னந்த வெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே.

உள்ள மறிவா யுழைப்பறிவாய் காணைழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்குவாய் கருணை யெந்தாய் பராபரமே.

எண்ணுத வெண்ணமெல்லா மெண்ணியெண்ணி யேழைநெஞ்சம்
புண்ணுறச் செய்தனினிப் போதும் பராபரமே.

தன்பக் கண்ணீரிற் றுலைந்தேதற் குன்னனந்த
வின்பக் கண்ணீர் வருவதென்னுள் பராபரமே.

படமுடியா தினித்தியாம் படமுடியாதாசே,
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழுதென்,
உடற்கவலை நீங்கி மிகக் களிப்பினெனை நினக்கே
உண்மையடன் கைகுவித்து ஸ்தோத்திரங்கள் புரிய.
திடமுடனே யருள்புரிவா யென் கண்ணுண் மணியே,
தேவசிகாமணியே யென் மாணிக்கமணியே,
கடல்போலுங் காருண்ய மிகுத்த சுவமணியே,
காத்திடு மன்மணியே பொன்மணியே சுயாஜமணியே.

கடவுள் துணை.

மாதர் மடல்

மாண்மிகு நாற்பது.

ஏழாம் புனர்தகம்.

கற்பகக்கால் தோய்ந்தனரும் பாரிகாரங்கனரும்.

மருந்தெனை வேண்டாவாம் யாக்கைக்
கருந்தெய்வற்றாஞ் போற்றிபுணர்ன் — குறள்.

இஃது

மானவர்க்குப்

சுகதேவ நன்னையகலாயுஸ் சுகிர்த பாக்கிய
போகசௌந்தரியமும் நீடுழி பெருகவிக்க
விரும்பிய,

கல்கத்தா சர்வகலா சங்கத்தின் தமிழ்ப்பரீக்ஷகரும், சங்கீத சௌந்தரிய பிரதாபினியா பிரசுரகரும், கவிராஜ நாயகம், பூமான் நிரஞ்சனி சோத்திரகர்த்தாவும், மானவ மாட சாலை ஸ்தாபகரும், சாமிவேல் வைதியநாதர் தலைவருமாய

எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.

புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,

கும்பகோணம், இரகுநாதன்.

1920

All Rights Reserved.



மானிட மர்ம சாஸ்திரம்.

ஏழாம் புஸ்தகம்.



கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்.

கர்ப்பிணிகளுக்கு வழக்கமாய் உண்டாகக்கூடிய சில வியாதிகளைத் தாங்களே சிகிச்சை செய்து சௌக்கியப்படுத்திக்கொள்ளக்கூடிய சில சமயோசித முறைகளைப் பற்றியும் அநுசரிக்கவேண்டிய விதிகளைப் பற்றியும் இங்கு எடுத்துரைப்பதை நன்மையாயிருப்பதாகும்.

வாந்தி.

கர்ப்பிணிகளுக்கு முக்கியமாய்த் தலைக்கத்தில் அதிகாலையில் வாந்தி உண்டாவது வழக்கம். ஆனால், காட்டில் வசிக்கிற நாகரீக மற்ற ஸ்திரீகளுக்குள் வாந்தி என்பதே கிடையாது. ஆகையால், வாந்தி பண்ணுவது இயற்கை என்று சொல்வது தப்பிதம். கர்ப்பஸ்திரீகள் தங்கள் ஆகாரத்தைப்பற்றிக் கவலையற்றிருப்பதே வாந்தி பண்ணுவதற்கு முக்கிய காரணம். கர்ப்பிணிகள் தாங்கள் சாப்பிடத் தகுந்த போஜனத்தை மாத்திரம் சாப்பிட்டு, சாப்பாட்டிற்கிடையில் மற்றெவ்விதமான பதார்த்தத்தையும் சாப்பிடாமலிருப்பதனால் இவ்விக வாந்தி வராதபடி தடுக்கலாம். 7—1

அதிகாலையில் படுக்கையி லிருந்துகொண்டே ஒருகோப்பை காப்பி, கடுதண்ணீர், அடுபால் அல்லது கஞ்சித்தண்ணீர் குடித் தபிற்பின்னும் சிறிதுநேரம் படுத்திருப்பது, இரவில் படுக்கைக்குப் போகுமுன் சாம்பேன் (Champagne) என்று சொல்லப்பட்ட திராட்சாரசம் ஒரு கிளாஸ் சாப்பிடுவது, இரவில் கனத்த போஜனம் சாப்பிடாதிருப்பது, அதிகாலையில படுக்கையினிருந்தெழுந்த வுடன் சிறிது நேரம் வெளியில் உலாவுவது, மேல்வயிற்றில் கடுகு போல்டூல்ஸ் அல்லது வதாவது ஒற்றடங்கொடுப்பது, ஒரு தேக்கரண்டி சுண்ணாம்புத் தெளிவுநீரில் காய்ச்சிய பீசுவின் பால்விட்டுச் சாப்பிடுவது முதலியவற்றை சமயத்துக்குத் தகுந்த பிரகாரம் கையாடுவதனால் வாந்தியை நிறுத்தலாம். இதுவுமல்லாமல், அதிகாலையில் படுக்கையிலிருந் தெழுந்தவுடன் ஒரு கிளாஸ் குளிர்ந்த தண்ணீர் அல்லது பனிக்கட்டி ஜலமும் சோடாவும்குடிப்பதும், வாசத் தன் தேகமுழுவதையும் தேய்த்து ஸ்நானஞ் செய்வதும், நல்ல சுத்த ஆகாயமுள்ள இடத்தில தேகாப்பியாசஞ் செய்வதும் அதிக பிரயோஜனமாயிருக்கும். பட்சிகளின் வயிற்றிலுள்ள கல்லுழி எனப்படும் கஸ்ஸரில் இருந்தெடுக்கப்பட்ட சத்துவாயு இங்குலிவின் (Ingluvin) எனும் ஔஷதத்தில் ஐந்து குன்றி மணி யெடை பாலிற்கலந்து போஜனமானபின் சாப்பிட்டுவர வாந்தி நின்று உணவு ஜீரணிக்கும். கொஞ்சம் தண்ணீரில் சோடாவும் சீனியுங் கலந்து அதனோடு கொஞ்சம் எலுமிச்சஞ்சாற்றை வற்றி நுரையுண்டானவுடன சாப்பிட வாந்தி சுகமாகும். அல்லது இஞ்சிக்குள் கறியுப்பு பொதித்து சுட்டு அரைத்துத் தேனிற் குழைத்துஞ் சாப்பிடலாம்.

அதிக வாந்தியிலுல் சாப்பாட்டின்மேல் அருவருப்பா யிருந்தால சாப்பிடுமுன் கொஞ்சம் தேன் அல்லது நெல்லிக்காய் ஊறுகாய் சாப்பிடுவது நல்லது. சிலருக்கு வாந்தியே நிற்காமல் கஷ்டமாவதுண்டு, அப்படிப்பட்டவர்கள் சப்பொழுதும் படுக்கையிலேயே யிருந்து, பால், பனிக்கட்டி முதலிய சீர்ப்போசனங்களோச் சிறிது சிறிதாக ஒருமணி அல்லது இரண்டுமணி நேரத்துக் கொருதடவை சாபபிட்டுவர வேண்டும். கோழிக்குஞ்சு சூப்பை (Soup) வடிகட்டிச் சிறிது சிறிதாகச் சாப்பிட்டு வரவேண்டும். எந்தஆகாரமும் அதிகமாய்ச் சாப்பிடக்கூடாது. வயிறு போகாவிடில்,

சாமிவேலின் சிங்கமார்க்கு
விரேசன பவுடர். (Purgative Powder.)
ஒரு பொட்டலத்தை அரைகிளாஸ் தண்ணீரில் கலந்து சாப்பிடவேண்டும்.—விலை அணா 4.
நமது வாந்தி நிவாரணி இவ்வித நோய்க்கென்றே தயாரித்து வைத்திருக்கிறது.—விலை ரூ. 1.

தின்பண்டத்திலாசை.

கர்ப்பிணிகளுக்குப் பலவித தின்பண்டங்களின்மேல் ஆசை உண்டாவது இயற்கை. ஆனால், சுகதேகமுள்ள ஸ்திரீகளுக்கு இவ்விதமான ஆசை உண்டாகாது. விசேஷமாய்த் தங்கள் கோரத்தை எப்படிச் செலவழிக்கிறதென்று றியாமல் சோம்பறிகளாயிருப்பவர்களுக்கும், தாங்கள் எதைக் கேட்டாலும் வாங்கிக் கொடுக்கக்கூடிய புருஷரையுடையவர்களுக்கும் இவ்விதமான ஆசை உண்டாகும். புருஷர்கள் இப்படி வாங்கிக் கொடுப்பதனால் தங்கள் ஸ்திரீகளின் சரீர சுகத்தைக் கெடுக்கிறதுமல்லாமல் கண்டமாலை முதலியரோகங்களுள்ள பிள்ளைகள் பெறுவதற்கும் இடமாக்குகிறார்கள். கர்ப்பிணிகள் எப்பொழுதும் சுறுசுறுப்பாயிருப்பதனாலும், தகுந்த சாப்பாடு சாப்பிடுவதனாலும் இவ்விதமான ஆசையை ஒழிக்கலாம்.

சில கர்ப்பிணிகள் சிலேற்றுப் பென்சில், சீமைச் சுண்ணாம்பு (Chalk), அடுப்புக்கரி, சாம்பல, மண முதலியவைகளில ஆசைப்படுவதுண்டு. இது அவர்கள் சுகத்திற்குக் கெடுதலை விளைவிக்குமாதலால் எப்படியாவது இவ்விதமான ஆசையை நீக்கவேண்டும். இவ்விதமான ஆசையுண்டாகும்போது ஒரு சிநேகிதியுடனே பேசிக்கொண்டிருத்தல், வெளியில போய் உலாவுதல், ஏதாவது கதை, பாட்டு முதலானவைகளைப் படித்தல், தையலேவலைசெய்தல் முதலியவைகளில ஏதாவதொன்றில தன மனதைச் செலுத்தி அவ்விதமான ஆசையை ஒழிக்கவேண்டும். அல்லது சிறிது பயற்றை அலலது அரிசியை வறுத்து வைத்துக்கொண்டும் சாப்பிடலாம்.

மயக்கம்.

இது சிலருக்குக் கர்ப்பிணியாயிருக்கும் காலமுழுவதிலும், வேறு சிலருககு சமயாசமயங்களிலும உண்டாவதுண்டு. பலவீனர்க்கே முகாயமாய் உண்டாகும். ஒரு ஸ்திரீக்கு மயகமுண்டானால அவளைக் குளிர்ச்சியான ஒரு தனி அறையில தலையைத் தணிவாகப் படுக்க வைத்து, உடுப்புகளைத் தளர்த்திவிட்டு, முகத்தில் ஜலம் எறிந்து, விசிறிபால் விசிறி, ஒரு கிளாஸ் ஜலம் அல்லது குளிர்ந்த ஜலம் குடிக்கக் கொடுப்பதனால மயகம் மீபாய்விடும். நமது ஆக்ராண உபபைப்பொன்ற அம்மோனியா உப்பு (Smelling Salts) முகரச செபதால் உடனே மூர்ச்சை தெளியும். உளளங்காலில், உள்ளங்கைகளில் குளிர்ச்சி கண்டால், உடனே நமது மகா சஞ்சீவித் தைலம் (Magnetic Balm.) அல்லது கற்பூரத்தைலம் (Turpentine) மீதப்படி உடனே உஷ்ணம்

காணும். மஞ்சள்பொடி அல்லது உழுந்துமாவை கற்பூரத்தோடு கலந்து தேய்க்கலாம். தைவேளை இலையையும் வெள்ளருளியையும் நட்டி பெருவிரலில் வைத்துக்கட்ட குளிர்ச்சி நீங்கி உஷ்ணமுண்டாகும்.

பலமுண்டாக்கத்தக்க மீனெண்ணெய், பால், தயிர், நெய், முதலிய நல்ல ஆகாரங்களைச் சாப்பிட்டால் சரீரம் பலமடைந்து அவ்வித மயக்கமுண்டாகாது. சுக்கு, சிற்றரத்தை, லவங்கம், சாதிக்காய், அக்காகாரம், சன்னலவங்கப்பட்டை, பெருலவங்கப் பட்டை, சாலாமிஸ்ரி, நிலப்பனங்கிழங்கு இவைகளில் வகைக்குப் பலம் ஒன்றெடுத்து சூரணித்து வடிகட்டி வைத்துக்கொண்டு, வாதனைமப்பருப்பு, பிஸ்தாபருப்பு, அக்ரூட்பருப்பு, சாரம்பருப்பு, முதலிய பருப்பினங்களில வகைக்குப் பலம் மூன்று எடுத்து மைப்போலரைத்து மேற்சொல்லிய சூரணத்தோடு கலந்து வைத்துக்கொள்ளவும். அதன்பின் ஆறுபடி பசுவின்பாலில் சிறு தீயிலிட்டு காய்ச்சி மர அகப்பையில் தளி பால் திரளும் பக்குவத்தில் முப்பது பலம் சீனியைக் கொட்டி தளி கரைந்தபின் பதத்தில் மேலே சுத்தப்படுத்தி வைத்திருக்கும் பதார்த்தங்களைக்கொட்டிக் கிளறி வைத்துக்கொண்டு காலையில் கொலிக்காய்ப் பரிமாணம் சாப்பிட்டுவர இருதயம், ஈரல், இரப்பை, மூளை இவைகளுக்கு வலுவேற்றி, மயக்கம், மூர்ச்சை, மாரடைப்பு, மூச்சுமுட்டல் முதலியவைகள் நீங்கி தேகாரோக்கியமுண்டாகும். இந்திரியவிர்த்தி, போகசக்தி, ஞாபகசக்தி முதலிய பல நன்மைகளுண்டாகும். மீனெண்ணெயில் ஒரு மேஜைக்கரண்டியளவு விட்டு அதில் 15-துளி ஜீவாமிர்தம் (Life Drops) கலந்து போஜனத்துக்குமேல காலையிலும், மாலையிலும் சாப்பிட்டுவர மிக்க நலமுண்டாகும். விலை ரூ. 1.

தூக்கமின்மை.

இது முக்கியமாய்ப் பலவீனமான ஸ்திரீகளில் சிலருக்குக் கர்ப்பிணியாயிருக்குந் தருணத்திலும், வேறு சிலருக்குக் கடைசியிலும் உண்டாவதுண்டு. பிரதினமும் ஸ்நானஞ் செயது, சுத்த ஆகாயமுள்ள இடத்தில் தேகாப்பியாசஞ் செயது, சுத்த ஜலதைப் பருகி, சுகமான போஜனம் புசித்து, குளிர்ந்த காற்றுள்ள இடத்தில இருகுவதனால் தூகமுண்டாகச் செய்யலாம். இதுவுமல்லாமல் படுக்கைக்குப் போகுமுன் கை, கால், முகம் முதலியவைகளை சுத்தமான குளிர்ந்தஜலதனில் கழுவுவதனால சிக்கிரம் நித்திரை வந்துவிடும். காப்பி, தேயிலை சாபபடுவது அசௌகரியம்


நிரைக்குத் தடையாயிருப்பதால் அவைகளை முற்றுமே நிறுத்த வேண்டும். இரவில் நித்திரைக்குப் போகுமுன் ஒரு கோப்பைச் சுடதண்ணீர் மாத்திரம் குடித்தால் நித்திரை நன்றாயுண்டாகும். இரவில் படுத்துக்கொண்டு தூக்கத்தைப் பற்றியே நினையாமல் தனக்கிஷ்டமான வேறொரு காரியத்தில் முழுவதுமாய் மனதைச் செலுத்தி யோசித்துக்கொண்டேயிருப்பதால், அலுவலை மல்லாக்கப் படுத்துக்கொண்டு கண்களைத் திறந்து தன் நெற்றிக்குச் சற்றுப் பின்னல் நேர் உயரத்திலிருக்கிற ஒரு வஸ்துவையும், தன கண்ணுக்கு முன்னுலிருக்கிற ஒரு வஸ்துவையும் மாறி மாற்றிப் பார்த்துக்கொண்டு கண்களைச் சுழற்றிக்கொண்டிருந்துவிட்டு, இரண்டு மூன்று நிமிஷத்திற்குப் பின்பு திடீரென்று கண்களைமூடி அதற்குப் பின்னும் அந்த மாதிரிக் கண்களைச் சுழற்றிக்கொண்டிருப்பதால் திடீரென்று தூக்கம் வந்துவிடும். அபின முதலிய தூக்கமுண்டாகக்கூடிய மருந்துகளைச் சாப்பிடுவதனல் தாயக்கும் பிள்ளைக்கும்கெடுதியுண்டாகும்.

மலச்சிக்கு.

அடிவயிறு பெருத்துச் சிறுதுடலை நெருக்குவதனலும், கொழுப்பான சாப்பாடு, காப்பி, தேயிலை முதலியவைகள் சாப்பிடுவதனலும், தேகாப்பியாசஞ் செய்யாமல் ம்சாம்பலா யிருப்பதனலும் சிலருக்கு மலச்சிக்கல உண்டாகுதுண்டு. இது இன்னும அனேக வியாதிகளுக்குங் காரணமாகிறது. தலைவலி, வயிறுவலி, நெஞ்செரிவு, குலைபதைத்தல், மயக்கம், மூலமூளை, தூக்கமின்மை முதலிய வியாதிகளுக்கும், இன்னும காப்பிணிகளுக்குண்டாகும் சகலவித ரோகங்களுக்குமு, பிரசவகாலத்தில் மிக்க வேதனையைக் கொடுப்பதுடன், அகாலப் பிரசவத்துக்குங்கூட இதுவே காரணமாகும். இவ்வளவு தீமையை விளைக்கும் மலச்சிக்கலை மிகளனிதில் நீக்கலாம். கோதுமை நொய்யைப பிரியமான மாதிரியெல்லாம் சமைத்துச் சாப்பிடல உத்தமம். பலகாரம், பணியாரம, மிட்டாய், காப்பி, தேயிலை முதலியவற்றை முற்றுமம நீக்கவேணும்ம். அத்திப்பழம், பேரீச்சமபழம், கிச்சிலிபபழம, அப்பிலஸ், திராட்சபபழ வற்றல், சீமை இலந்தைப்பழம முதலிய மலத்தை இளக்கக்கூடிய பழங்களையும், காய்கறி பதார்த்தங்களையும சாதாரணமாய் உபயோகிக்க வேண்டும். பிரியமானல் சிறிது பால் சேர்த்துக்கொளளலாம். ஆனல், சுத்த ஜலத்தை எபபோதும அருந்தி வருதல மிக சிரேஷ்டம. இவ்விதச் சாபபாட்டோடு பிராதினமும தேகாப்பியாசஞ்செய்து, இடுப்புக்குத் தண்ணீர்விட்டு, இரவில படுகைக்குப் போகுமுன் ஒரு புட்டி ம்சாடா அல்லது இரண்டு டம்ளர் குளிர்ந்த ஜலம் அருந்தி வருவார்களானல மலச்சிக்கல் உண்டாகமாட்டாது.

மலச்சிக்கலினால் அதிக உபத்திரவப்பட்டால் சரீரத்துக்குத் தகுந்தபடி, எல்லா இலகிலீஷ் ஸைத்திய சாலைகளிலும் கிடைக்கக் கூடிய ஏம்ஸ் புருட் சால்ற் (Enos Fruit Salt.) அல்லது சிறுமை அதிமதுரச் சூரணம் (Compound Liquorice Powder) ஒரு டீ ஸ்பூனிலைக் காண்டியளவு ஒரு கிளாஸ் குளிர்ந்த ஜலத்தில் கரைத்து இரவில் படுக்கைக்குப் போகுமுன் சாப்பிடவேண்டும். இவைகளெல்லாவற்றையும் விட இரண்டு டீ ஸ்பூனிலைக்காண்டி ஒலிவ் எண்ணெயை (Olive Oil) தினந்தோறும் படுக்கைக்குப் போகுமுன் சாப்பிட்டு வந்தால நல்லது. ஆமணக்கெண்ணெயைப்போல் இது வயிற்றைக் கலக்கிக் கடுத்து உபாதிசெய்யாது.


நிலவாரை, ரோஜாப்பூ, முதலியவைகளின் வெந்நீர் கஷாயம் சாப்பிட மலபந்தம் நீங்கும்.



சாமிநாவலின் சிங்கமார்க்கு

மலபந்த நிவாரணி.

(Constipation Cure.)



இரவில் படுக்கைக்குப் போகுமுன் மேற்படி நிவாரணியில் ஒரு டீ ஸ்பூனிலைக் காண்டியளவு சாப்பிட்டுவர அதிகாலையில் நன்றாய் மலசுத்தியாகும்.—விலை ரூ. 1.

வயிற்றுப்போக்கு.

மலச்சிக்கல் அதிகக்காலமாயிருந்துகொண்டே வந்தால் வயிற்றுப்போக்கு உண்டாகும். சில ஸ்திரீகளுக்கு மலச்சிக்கலில்லாமேல வயிறறுப்போக்கு உண்டாவதுண்டு. மலச்சிக்குக்கு மாதிரியே இதறகும லேசான சாப்பாட்டுடன், இடுப்புக்கு வெந்நீர் ஊற்றுவதும் நலலது. விளக்கெண்ணெயைக் கொஞ்சம் பாலில் கலந்து கொடுத்தால வயிற்றிலிருக்கும கனங்கத்தை வெளியேறறிவிடும். அதறகுப்பின 5 குன்றுமணி எடை டோவர்ஸ் பவுடர் வது (Dovers Powder,) அலலது சாமிநாவலின் சிங்கமார்க்கா குளோரடையிலுவது கொடுக்கச சுகமாகும்.—விலை ரூ. 1. இறைச்சி சுறறுகாலம் சாப்பிடக்கூடாது.

வயிற்றில் வலியுமிருந்தால் மணலை வறுத்துக் கம்பளித் துணியில் கட்டி அலலது சுடுதண்ணீரிலுய ஒறறடை கொடுக்கலாம். வயிற்றுபபாகு நின்றுவிட்டாலும, இலகுகதறகில் லேசான சாப்பாடு சாப்பிடவுமவள்ள மெள்ளதான பழைபபிரகாரம் சாப்பிடவேண்டும். எப்பொழுதும் பாதலைகளைச் சூடாக வைத்துக்கொண்

டிருப்பதும், அடிவயிற்றில் ஒரு அகல கம்பளிக் கச்சையைக்கட்டி யிருப்பதும் மெத்த நல்லது. பேதியைக் கட்டுவதற்கு காரள குரோரடயின் (Chlorodyne.) பத்துத் துளி ஒரு தம்ளர் ஜலத்தில் கொடுக்கலாம். எட்டுப்பலகு பாலும் ஒருபங்கு சுண்ணாம்புத் தெளிவு ஜலமும் கலந்து குடிக்கலாம். பட்சிகளின் வயிற்றில் கற் கள் சேர்ந்து ஜீரணமாகும் கல்லுழி ஒன்றுண்டு. இக்கல்லுழியி லிருந்து எடுக்கப்படும் சத்திற்கு இங்குலிவின் (Ingluvin.) என்று பெயர். இந்த இங்குலிவின் எனும் அவுடதத்தை மூன்றுமணிக் கொருதடவை பத்துக் குன்றுமணி யெடை எடுத்துப் பாலுடனு வது தண்ணீருடனுவது கலந்து காப்பிட உடனே சௌஸ்தமாகும்.



சாமிவேலின் சிங்கமார்க்கு

குடல்பலகாரி.

(Intestinal Antiseptic.)



)ரண்டு மில்லிகளை தினம் 3 வேளையும் சாப்பாட்டிற்குமேல் சாப்பிட்டுவர, அஜீரணம், வயிற்றுப்பிசம், புளித்த யேப்பம், வயிற்றோட்டம் முதலியவைகள் நீங்கி குடல் பலப்படும். இது மகா சிறந்த ஔஷதம். நாம் அநேகமாய் அனுபவித்துக் கை கண்டது. ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது. விலை ரூ. 1.

மூலரோகம். (Piles)

மூலரோக முண்டாவதற்கு முக்கிய காரணம் மலச்சிக்கலே. ஆகையால் கர்ப்பிணியானவள் மலச்சிக்கல் வராதபடி முன் கூறப் பட்ட முறைகளைக் கையாடி வருவாளாயின் இந்நோய் வரமாட் டாது. ஸ்திரீயானவள் எக்காலத்திலும் விசேஷமாய்த் தான்கர்ப் பிணியா யிருக்கும் காலத்திலும் தன் ஆகாரத்தைப்பற்றி அதிகக் கவலையாயிருப்பாளாயின், மற்றெல்லா வியாதிகளோயுமிட மிகத் தொந்தரவையும் அதிக வேதனையையும் தினந்தோறு முண்டாக்கக் கூடிய இக்கஷ்டமான வியாதி வராமல் தடுத்துக்கொள்ளலாம். இந்நோய் அதிகமாய் வருத்தினால் உஷ்ணமான ஒற்றடங்கொடுப் பதால் குணமாகும். மாசக்காய், அபினி இவ்விரண்டையுஞ் சேர்த்த களிம்பை (Ointment of galls and Opium.) மூலமுளையில் தடவி வந்தால் சௌஸ்தமாகும்.

கெந்தக லேகியம் (Confection Sulphur) உள்ளுக்குச் சாப் பிடலாம்.

சாமிவேலின் சிங்கமார்க்கு
மூலரோக நிவாரணியும் களிம்பும்.
(Pile Specific and Ointment.)

வெளிமூலம், உள்மூலமாகிய சகல மூலங்களுக்கும் காரணம் மலபந்தமே. நமது மலபந்த நிவாரணி அல்லது சுகபேதி மாத்திரையைக் கிரமமாய்ச் சாப்பிட்டு மலப்பிரவர்த்தியை ஒழுங்குபண்ணிக்கொள்ளவேண்டும்.

சாப்பிடும் விதம்:—மூலரோக நிவாரணியில் இரண்டு தேக்கரண்டியளவு போஜனமானபின் சாப்பிட்டு வருவதுடன். மூலரோகக் களிம்பை 3 அல்லது 4 தடவை மூலத்தில் தடவி காலையிலும், மாலையிலும் கர்பாலிக் லோஷனால் கழுவவேண்டியது. விலை மூலரோக நிவாரணி ரூ. 3. மூலரோகக் களிம்பு ரூ. 1. கர்பாலிக் லோஷன் ரூ 1.

பத்தியம்:—காப்பி, ஒயின், பிராந்தி, பிளகு, மசாலை, வாசனை வஸ்துக்கள், கிளர்ச்சியைத் தரத்தக்க ஆகாரம், விரோசன மருந்துகள் அருந்தக்கூடாது.

மூலம் கள்ளுகிற காலங்களில் பால், முட்டை, ரோஸ்ட் சொட்டி, சூப்பு முகலியவைகளைச் சாப்பிட்டு நோயாளி அமைதியாய்ப் படுக்கையிலிருக்க வேண்டும்.

சாமிவேலின் சிங்கமார்க்கு
மூலமுஷாக்கு லேகியம்.
(Pile-Hulva.)

இந்த லேகியத்தை நெல்லிக்காய்ப் பிரமாணம் காலை மாலை 20 நாள் சாப்பிட உள்முலம், இரத்தமூலம் முதலான சகல மூல வியாதியும் தீரும்.—விலை ரூ. 2.

சாமிவேலின் சிங்கமார்க்கு
மூலத்துக்குச் சூரணம்.
(Pile Decoction.)

இந்தச் சூரணத்தில் இரண்டு மேசைக்கரண்டியளவெடுத்து அரைப்படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி மாகாணிப்படியாக வற்றிய பின் இறுத்துக் கஷாயத்தை மத்தியானம் சாப்பிடவும்.

இதைச் சாப்பிடுங் காலத்தில் காலியிலும் மாலையிலும் மூலத்துக்கு லேகியம் நெல்லிக்காய்ப்பிரமாணம் சாப்பிடவும். விலை ரூ. 1.

சாமிவேலின் சிங்கமார்க்கு
மூலமுளைக்குப் புகைத்தூள்.
(Pile Fume.)

இத்தத்தூளில் ஒரு மேசைக்கரண்டியளவெடுத்து, அதில் தனி அதன்மேல் ஒரு அவாரமுள்ள கொட்டாங்கச்சியை வைத்து மூடி அதன் துவாரத்தின் வழியாய் அதிலை புகை வாயிற்பிடிக்க சகல மூலமும், ஆசனக்கடுப்புந் தீரும்.—விலை அணை 12.

தினவு. (Itching.)

அநேக கர்ப்பிணிகளுக்குத் தினவு உண்டாவதுண்டு. இதன் காரணமென்னவென்று சரியானபடி தெரியாவிட்டாலும் அசுத்தமே இதன் முக்கிய காரணமென்று சொல்லலாம். தினவு உண்டாகிற இடத்தை அடிக்கடி குளிர்ந்த ஜலத்தால் கழுவுதல், ஈரத்தணி, பனிக்கட்டி முதலியவைகளை அவ்விடத்தில் கட்டிவைத்தல், மஞ்சள் தூளைப்போட்டுக் கழுவுதல் முதலியவற்றால் அடக்கலாம். சிலவைத்தியர் வெண்காரக்கை (Borax) தண்ணீரில் கலக்கி அத்தண்ணீரினால் ஒரோகாளில் அநேகந்தடவை அவ்விடத்தைக் கழுவவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அனேக வினைகளெல்லாவற்றையுமவிடக் குளிர்ந்த ஜலத்தினால் கழுவுவதே மிக உத்தமம்.

அதிக நமைச்சல் கண்டால் வைந்தோலியா சவுக்காரம் (Vinolia Soap.) தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்வதுமல்லாமல், அரைப்படி சுத்தமான குளிர்ந்த ஜலத்தில் இரண்டு அவுன்ஸ் ஹஸெலீனைக் (Hazeline Lotion) கரைத்துக் கழுவினால் மிக்க அனுகூலத்தைக் கொடுத்துத் தவறாமல் சௌக்கியம் செய்துவிடும். லெட் லோசினையும் (Lead Lotion) இதே பிரகாரம் உபயோகிக்கலாம். காடியும் (Vinegar) தண்ணீரும் சமபாகங்கலந்து தினவுள்ள இடத்தை ஒரோகாளில இரண்டு மூன்று தடவை கழுவவேண்டும். தண்ணீரில உப்புக் கலந்து ஆசனஸ்நானம் செய்வது அதிக நன்மையைப் பயக்கும். நாலு அங்குல உயரமுள்ள தண்ணீரில் 15-நிமிஷம் உட்காரவேண்டும். காலில் செருப்புப்போட்டுக் கொண்டு நடவாமல் தொட்டிக்கு வெளியே தரையில் வைக்கவேண்டும். மேல்துணிகளை எடுத்துவிட்டு ஒரு சிறு போர்வையை மாத்திரம் போர்த்திருக்கவேண்டும்.



சாமிவேலின் சிங்கமார்க்கு
நமைச்சல் களிம்பு.
(Pruritis Ointment.)



தினவு உண்டாகிற யிடத்தை அடிக்கடி சோப் வெந்நீரினால் கழுவி நன்றாய்த் துடைத்துவிட்டு "நமைச்சல் களிம்பை" காலையும் மாலையிலும் தேய்த்துவர நமைச்சல் நீங்கிச் சுகமாகும். விலை ரூ. 1.

நெஞ்செரிவு.

கர்ப்பமான துவக்கத்தில் சிலருக்கு அடிக்கடி நெஞ்செரிவு உண்டாவதுண்டு. கர்ப்பிணியானவள் தன் ஆகாரத்தைப் பற்றியும் முக்கியமாய்த் தான் புசிக்கவேண்டிய அளவைப்பற்றியும் கவனிப்பாளாயின் நெஞ்செரிவு உண்டாகவேமாட்டாது. நூற்றில் ஒருத்தியைத் தவிர மற்றவர்களெல்லாரும் மற்றக் காலங்களிலிடத் தாங்கள் கர்ப்பிணிகளா யிருக்குங் காலத்தில் அதிகம் சாப்பிடுகிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நெஞ்செரிவு இருக்கிறதென்றறிந்தவுடனே சாப்பாட்டின் அளவைக் குறைக்கவேண்டும். அதிகாலையில் நெஞ்செரிவு உண்டாயின், அதற்கு முந்தின நாள் புசித்த ஆகாரத்தை நிறுத்திவிட்டு வேறு ஆகாரம் புசிக்கவேண்டும். தினவையானால் ஒருவேளை, அல்லது இரண்டுவேளைப் போஜனத்தை நிறுத்திவிட்டு குளிர்ந்தஜலம் மாத்திரம் சாப்பிட்டுவந்தால் மெத்த நல்லது. நெஞ்செரிவு துவங்கினவுடன் இரண்டு கிளாஸ் வெந்நீர் குடித்து வாந்திபண்ணினால் உடனே சுகமாய்ப்போகும். அப்படியே வாந்திபண்ணவிட்டாலும், அவ்வெந்நீர் வயிற்றினுள்ளேபோய் நெஞ்செரிவைக் கொடுக்கக்கூடிய வஸ்துக்களைக் கரையச் செய்யுமாதலால் உடனே நெஞ்செரிவு நின்றுபோம்.

நெஞ்செரிவு அதிகமாயிருந்தால் ஒரு தேயிலைக்கரண்டி கால் செயிண்ட் மெக்னிசியா (Calcined Magnesia) அல்லது அரைத் தேயிலைக் கரண்டி கார்போனேட் சோடா (Carbonate of Soda) ஒரு ஔன்ஸ் சுடுதண்ணீரில் கலந்து சாப்பிடல் நல்லது. நெஞ்செரிவு இன்னும் அதிகமாயிருந்து மலக்கட்டுண்டாயிருந்தால் கால் கால்பலம் செயிட்லிட்ஸ் உப்பு (Seidlitz Salt.) காலுபலம் ஜலத்தில் கலந்து சாப்பிடவேண்டும்.



சாமிவேலின் சிங்கமார்க்கு
குடல்பலகாரி.
(Intestinal Antiseptic.)



ஒவ்வொரு மாத்திரை போஜனத்திற்குமேல் சாப்பிட்டுவர நெஞ்செரிவு உண்டாகவேமாட்டாது.

முகவலி. (FACIAL NEURALGIA.)

உப்பையாவது மணலையாவது தலிட்டையாவது வறுத்து ஒரு துணியில் கட்டி வலிக்கிற இடத்தில் ஒற்ற வலி நீங்கும். கற்பூரத் தைலத்தை (Camphor spirits) அல்லது நமது மகா சஞ்சீவித் தைலத்தை (Magnetic Balm) பூசலாம். உள்ளுக்கு மருந்து சாப்பிடக்கூடாது.

முகத்தை வெந்நீரால் நன்றாய்க் கழுவிக்கொண்டு, நாலுசெங்கல்களை அடுப்புக்குள் போட்டு நன்றாய் உஷ்ணமேறினவுடன் ஒவ்வொன்றாய் எடுத்து அதன்மேல சாதாதுணியைச் சுற்றிக் குத்தெடுக்கிற பாகங்களில் ஒற்றடங் கொடுக்க அரைமணி நேரத்திற்குள் நீங்கும்.

கால்கை வீக்கம். (SWELLING OF FEET & LIMBS.)

கர்ப்பமாயிருக்கும் கடைசி மாதங்களில் அந்தரோகத்தில் கால்கை வீங்கியிருப்பதாகச் சிலருக்குத் தோன்றும் இது கர்ப்பாசயம பெரிதாகி இரத்தக் குழாய்களை அழுத்துவதனால் அவைகள் சரீரத்தின கீழ்ப்பக்கத்திலுள்ள இரத்தத்தை மேலே கொண்டு போவதனாலும், இரத்தம் தண்ணீராயிருப்பதனாலும உண்டாகிறது. மலச்சிக்கல் எவ்வளத்தால் உண்டாகிறதோ அதேகாரணங்களினால்தான் இவை உண்டாகிறபடியால அதற்குச் செய்த முறைப்படியே இதறகும் மிதமாய்ச் சாப்பிட்டுத் தன்மேகத்தைப் பேணிகொள்ளவேண்டும். இவ்வித வீக்கங்களோடு காதிரைச்சலாவது, கண்ணின்முன் ஒளி வீசுவது போன்ற தோற்றமாவது, நெற்றிவலியாவது இருக்குமாயின் உடனே ஸ்திரீயின் சிறுநீரை ஒருபாத்திரத்தில ஊற்றிக் காய்ச்சிப் பார்க்கும்போது முட்டையின வெள்ளைக்கருபோன்ற ஒரு வஸ்து அதில் காணப்படுமாயின் உடனே வைத்தியருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஏனெனில, அவைகள் ஜன்னிக்குக் குறிப்பாகும்.

வீங்கின பாகத்தைதக் குளிர்ந்த ஜலத்தில் தேய்த்துக் கழுவுவதனாலும், நாலு அங்குல அகலமுள்ள ஒருதுணியினால் அல்லது கமபளியினல் வீங்கின இடத்தை லேசாய்ப் பாதத்தில தொடக்கி மேலே சுற்றிக் கட்டுவதனாலும் வீக்கம வற்றும். பகல்நேரத்தில் ஒரு பட்டி மேல்ஜோடு போட்டு, அதன்மேல் நீண்டு சுருங்கத்தக்க (Elastic.) ஒரு மேல்ஜோடு போடுவது நல்லது. ஒவ்வொரு நாளும இரண்டு மூன்றுதடவை குறைந்தது அரைமணிநேரம்காலை முகலை கீழேயிருந்து மேலே தேய்த்துக்கொண்டிருந்தால மிக

வும் நல்லது. இரவிலே நித்திரை செய்கையில் கால்களைத் தலையணைமேல் வைத்துத் தூங்கச் சுகமாகும். பகலிலும் பாதங்களை உயர்ந்த ஸ்தானத்தில் நீட்டிக்கொண்டு உட்காருவதே உசிதம்.

பல்வலி,

கர்ப்பிணிகளுக்குப் பல்வலி உண்டாவதுமன்றிச் சில சமயங்களில் பல் சொத்தையாகிப் போவதுமுண்டு. இது சாதாரணமாய பல் அசுத்தத்தினாலும், அஜீரணத்தினாலும், வாயிலும் வயிற்றிலும் உண்டாகும் புளிப்பினாலும் உண்டாகிறது. ஆகையால் ஒவ்வொரு நேரமும சாப்பிட்டபின்பும் சாப்பிடுமுன்பும் பற்களையும் வாயையும் கண்ணுய்ச் சுத்தம்பண்ணவேண்டும். பின குறிப்பிட்டிருக்கும் நமது பல்வலி தீராவகத்தை உபயோகிக்கலாம்.

பல்வலி அதிகமாய்விட்டால், சொத்தைப் பல்லிருக்கிற பக்கத்திலுள்ள காதில் கொஞ்சம் பஞ்சை வைத்து அடைத்தால் சுகமாகும. அது சித்தியாகாத விஷயத்தில் வெறும் கிளோராபார்மில் (Chloroform) பஞ்சை நனைத்து அதை வலியுள்ள பக்கத்துக் காதினுள் வைத்து வலி நீங்கும்வரைக்கும் அடிக்கடி மாற்றி வைத்திக்கொண்டிருந்தால் சுகமாகும். இதற்கும் வலி நீங்காவிட்டால் ஒரு வெள்ளாத துணியைப் பிராந்தியில நனைத்து அதில் மிளகை அரைத்துப்பூசி வலியுள்ள பக்கத்திக் கன்னத்தில் மாற்றி மாற்றிப் போட்டிருக்கவேண்டும். அநேகமாய் இது நல்ல சுகத்தைக் கொடுப்பதுமல்லாமல், கடுகுபோற்றலைப்போல் எரிச்சலுண்டாக்காது. இவையுமன்றி, கற்பூரத்தைத் தூள்செய்து பொட்டலமாகக் கட்டி அதைச் சிறிது ஜலமுள்ள ஒரு பாத்திரத்தில் போட்டு ஒருநாள் முழுதும் மூடிவைத்துப் பின்பு அத்தண்ணீரால் வாய்கொப்பளித்து வரவேண்டும்.

இவைகளுக்கெல்லாஞ் சுகமாகாவிட்டால், இலங்கப்பூவும் கிளோராபார்மும் சேர்ந்த எண்ணெயில், (Oil of Cloves & of Chloroform.) அல்லது அபின் சாரமும் கிளோராபாமுஞ் சேர்ந்த எணணெயில (Laudanum and Chloroform.) கொஞ்சம் பஞ்சை நனைத்துப் பலலிலுள்ள துவாரத்தில வைகவேண்டும். அல்லது பத்துகிரேன் சீனக்காரத்தூளை அரை அவுன்ஸ் கிளோராபார்மில் கலக்கியும் போடலாம்.

பல்வலி எவ்வளவு தாங்க முடியாததா யிருந்தபோதிலும், பல்லை மாத்திரம் பிடுங்கவே கூடாது. ஏனெனில், அப்படிப் பல்லைப் பிடுங்குவதனல் சிலவேளைகளில் சுரங்கண்டு அகாலப்பிரளயம்

நோடுவதும் உண்டு. பல்வலியினல் முகம் வீங்கியிருந்தால் அக்கோனற் (Tincture of Aconite.) றை வீங்கின இடத்தில் பூசலாம். ஆனல, வெளிப்பிரயோகத்துக்கு மாத்திரமே இதை உபயோகிக்கவேண்டும்.

சாமிவேலின் சிங்கமார்க்கு

பல்வலி தீராவகம்.

(Instantaneous Toothache Cure.)



பல்வலி, பல்புழு, எகிறுவீக்கம், பல்கூச்சம், பல்லசைவு முதலியவற்றிற்குச் சிறிது பஞ்சை ஓர் குரும்பில் சுற்றிக்கொண்டு அதைத் தீராவகத்தில் நனைத்து வலியுள்ள இடத்தில் வைத்துவிடவும் உமிழ்நீரைத் துப்பிவிட வேண்டும். இப்படி இரண்டொரு தடவை வைக்க எவ்விதவலியும் உடனே நீங்கும். மகாசஞ்சீவித் தைலத்தை முகத்தின வலியுள்ள பகுதியில் தேய்த்து வேறு ஒற்றடங் கொடுத்து குளிர்படாமல் கம்பளித்துணியால் படத்தில் காண்பித்திருப்பதுபோல கட்டி வைக்கவேண்டும்.

விலை அணு 10.

நமது ரத்தின பல்தூளால் பல்துலக்கி வரவேண்டியது.

சாமிவேலின் சிங்கமார்க்கு

ரத்தின பல்தூள்.

(Diamond Tooh Powder.)

சுகந்த வாசனையுள்ள இந்த மனோகரத்தூளால் பிரதினமும் காலை மாலை பல்துலக்கிவர பல்வலி, பல்கூச்சம், பல்லசைவு, பல்லரணை, வாய்நாற்றம், பற்புழு, ஈறு கரைந்து இரத்தம் வடிதல், முதலிய பல நோய்கள் தீர்ந்து, பற்களுக்கு உறுதியும், பிரகாசமும் உண்டாகும். பற்களிலுள்ள பூச்சிகளைக்கானறு ஈரிலுள்ள புண்களை ஆற்றி வாய்க்குச் சுகந்த வாசனை கொடுக்கக்கூடிய அருமையான இந்தத் தூளை ஒரு தடவை உபயோகித்தவர்கள் எப்பொழுதும் உபயோகிக்க ஆசைப்படுவார்க ளென்பது உண்மை, பரீக்ஷித்துப் பார்க்கவும்.—விலை டப்பி 1-க்கு அணு 6.

சாமிவேலின் சிங்கமார்க்கு
பல் வேதனைக்குத் தூள்.
(Tooth-ache Powder.)

இந்தத் தூளில் சிறிதெடுத்து வேதனை யிருக்கிற இடத்தில் சற்று வேளை வைத்திருந்து அதன்பின் ஒருவாய் பாக்கு வெற்றிலை துவைத்து வலியுள்ள பக்கத்தில் அடக்கி வைக்க வலி நீங்கும். பொட்டலம் 1-க்கு விலை அணா 2. டசன் ரூ. 1—4—0.

தலைவலி.

முக்கியமாய்க் காப்பி தேயிலையே தலைவலிக்குக் காரணமென்று அநேக டாக்டர்கள் சொல்லுகிறார்கள். தகாத சாப்பாடு, சுத்த ஆகாயமில்லாத அறை, தேகாப்பியாசக் குறைவு, வெயிலில் திரிவது, ஸ்நானத்தில் நடப்பது, மழையில்நனைவது, மலச்சிக்கு, அஜீரணம் முதலியவைகளும் காரணமாயிருக்கலாம். சிலருக்கு உருளைக்கிழங்கு, வெண்டிணைய் முதலிய கொழுப்பான பதார்த்தங்கள் தலைவலியையுண்டுபண்ணும்.

கர்ப்பிணியானவள் தான் நடக்கவேண்டிய விதியைக் கவனித்து நடப்பாளாயின் தலைவலி வரமாட்டாது. மருந்து சாப்பிட்டால பிள்ளைக்கும் தாய்க்கும் கெடுதியுண்டாகும். ஆனல், சுடு தண்ணீர், சுடுகிற லெமன்னட் (hot lemonade) சாப்பிடுவதனல், அல்லது தண்ணீரில் உப்பைப்போட்டுச் சாப்பிடுவதனல் தலைவலி நீங்கும். இதுவுமல்லாமல, பிரதிதினமும் காலை மாலை ஆற்றங்கரை, கடற்கரைகளில் உலாவிச் சுத்த ஆகாயத்தைச் சுவாசிப்பதால் தலைவலி நீங்கும். சுரைக்காய், பூசணிக்காய், மொச்சைக் கொட்டை முதலிய மந்தம் செய்யத்தகக வாய்வு பதார்த்தங்களை சாப்பிடக்கூடாது.

பாதஸ்நானம் அதாவது பாதங்களைச் சுடுதண்ணீரில் 20 நிமிஷம் வைக்கத் தலைவலி நீங்கும்.

கொஞ்சம் வால்மிளகை நல்லெண்ணெயுடன் கலந்து கொதிக்க வைத்து நாடோறும் கொஞ்சங் கொஞ்சம் தலையில் பூசிவரத் தலைவலி நீங்கும். பிடரியில் கடுகுபற்றிடலாம். சந்தனத்தை மூலிப்பாலிற் குழைத்து நெற்றியில் பூசலாம்.

கருப்பை அழற்சி (Uterine Irritation.) யினலும் தலைவலி உண்டாவதுண்டு, அவ்வலியினல் உச்சியிலும் பிடரியிலும் எரி

பந்த நோயெடுத்த ஞாபகச்சக்தியையும் பார்வையையுங்கூட மங்கச் செய்யும். சாயந்தரம் அதிகரித்துப் படுத்தவுடன் லேசாகும். இதற்குப் பிரதினமும் வெந்நீரில் ஆசன ஸ்நானம் செய்யவேண்டும். பிடரிக்கு வேது ஒற்றடங் கொடுக்கவேண்டும். எப்போதும் சாய்ந்து உட்காரவேண்டும். தலையையும் பிடரியையும் கன்னுய்த் தேய்க்கிறதனலும் அழுத்திப் பிடிக்கிறதனலும் தலைவலி நீங்கும்.

சாமிவேலின் சிங்கமார்க்கு

தலைவலி பில்லை.

(Headache Tablets.)

நமது மகா சஞ்சீவித் தைலத்தை தலையில் பூசி, நமது சிங்கமார்க்கு (Samuel's Headache Cure) தலைவலி பில்லைகள் சாப்பிட்ட உடனே நிற்கும்.—விலை அணு 8.

சாமிவேலின் சிங்கமார்க்கு

தலைவலி பவுடர்.

(Headache Powder.)

வாயில்போட்டுச் சுடுகாப்பியாவது, தண்ணீராவது சாப்பிடத் தலைவலி நீங்கும். விலை அணு 2.

சாமிவேலின் சிங்கமார்க்கா

ஸ்நானத்தைலம்.

(Medicated Bathing Oil.)

இந்தத் தைலத்தை வாரமிருமுறை தேய்த்து ஸ்நானஞ் செய்து வந்தால் கண்காந்தல், கண்ணில் நீர்வடிதல். மேகத்தடிப்பு, பீனிசம், தலைவலி, ஜலதோஷம், கபாலசூலை, சிரசில் நீரேற்றம, கைகால் காந்தல், மேலசதி, காதுநோய், காதிரைச்சல் முதலிய நோய்கள் சுகமாகும். கொப்பஸ்திரீகளுக்குண்டாகும கைகாலெரிவு, விக்கம், தலைமயக்கம் முதலிய ரோகங்களும், ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகவாய்வு முதலிய சகல ரோகங்களும் சுகமாகும். நாலு நாளாக கொருதடவை இந்தத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானஞ் செய்ய மிக்க பயன்தரும்.—விலை ரூ 1.

ஸ்தனங்களில் வலி.

முதல் முதல் கர்ப்பிணியா யிருப்பவளுக்கு அடிக்கடி ஸ்தனங்களில் வலி தோன்றுவதுண்டு. அப்படி வலியெடுக்கிற பாகத்தை குளிர்ந்த ஜலத்தினால் கழுவித் துணியை நனைத்து அதில் கட்ட வேண்டும். அடிக்கடி ரவிக்கைகளை இறுக்கிக்கட்டுவது அதற்கு முக்கிய காரணமா யிருப்பதால், அவைகளைத் தளர்த்தியாக இரத்த ஓட்டம் தடைப்படாதபடி கட்டவேண்டும்.

ஏடிக்கலோன், (Eau-de-Cologne.) ஒலிவ் எண்ணெய், (Olive Oil.) இரண்டையும சமபாகமாய்க் கலந்து ஸ்தனங்களில் தேய்த்துப் புதுக்கப்பளித் துணியை அவைகளில் கட்டவேண்டும். இப்படித் தேய்க்கும்போது ஸ்தனங்களிலிருந்து பால்போன்ற வஸ்து வெளியாவதனால் அவ்வலி நீங்கும்.

வெள்ளாடுகைப் பசுவின் பால் மிட்டரைத்து ஸ்தனங்களில் பூசலாம்.

வலிப்பு.

அடிக்கடி நாட்டியசாலை, நாடகசாலை, பொருட்காட்சிச்சாலை முதலிய இடங்களுக்குப்போய் இரவில் அதிகநேரம் விழித்திருப்பதனாலும், காப்பி, தேயிலை அதிகமாய்ச் சாப்பிடுவதனாலும், கர்ப்பிணிகளுக்கு ஒருவித வலிப்பு வருவதுண்டு. கர்ப்பக்காலத்தில் மாதாரமேயன்றி எக்காலமும் சரியானபடி ஜீவிப்பதனாலும், எக்காலமும் தங்கள் நண்பனையும சுகத்தையும கருதி நடப்பதனாலும் இக்கொடூரமான வியாதிவர இடங்கொடாமலிருக்கலாம்.

சாமிவேலின் சிங்கமார்க்கு

காக்கைவலி நிவாரணி.

(Anti-Epileptic Mixture.)

காக்கைவலி திடீரென வந்து சிலருக்கு ஒரு நிமிஷம் மாத்திரம் இருக்கும். மற்றவர்கள் கீச்சுக்குரலிட்டு உரக்கக் கூவிக்கொண்டே ஸ்மரணையற்றுப் பூமியில் விழுந்துவிடுவார்கள். பின்பு உதறலும், பற்கடிப்பும, மூச்சுத்திணரலும் காணும். வாயிலிருந்து நுரைதள்ளும, விரல்கள் மடங்கியிருக்கும், கைகள் புரளும், பற்கள் கிட்டிக்கொள்ளும, காக்கு பறகளுகிடையில் சிக்கிகொண்டு காயப்படுவதுமுண்டு. பின்பு அயர்ந்த நித்திரை பிறந்து அரைமணி நேரத்திற்குள் எழுந்திருப்பதுண்டு. இந்தக் குறிகள் சிலருக்கு அற்பமாயும், சிலருக்கு அதிகாரமாயும் காணப்படுவதுண்டு.

ரோக நிதானம்:—சூதக ஜன்னிக்கும், அசதி ஜன்னிக்கும், காக்கைவலிக்கும் இருக்கிற வித்தியாசங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. காக்கைவலியில், அறிவு மந்தமாய் இல்லாயிருக்கும்; அசதி நின்றபிறகு அயர்ந்த நித்திரை பிறக்கும்; வாயிலிருந்து நுரை வெளிப்படும்; முகம் குரூபமடைந்திருக்கும். சூதக ஜன்னியில் மேற்கண்ட லக்ஷணங்களிராது. அசதி ஜன்னிரோகத்தில் வியாதி தாமதித்து, குமட்டை வாந்தி கண்டு, கைகால்கள் அசையாமலிருக்கும்.

சிகிச்சை:—நமது காக்கைவலி நிவாரணியைவிட இந்நோய்க்குத் தகுந்த பரிகாரம் கிடையாது. வலி காணுகிறுக்குங் காலத்திலேயே இவ்வௌஷதத்தில் ஒன்றரை தேக்கரண்டியளவு காலை போஜனத்திற்கு முன்னும் 3 தேக்கரண்டியளவு படுக்கைக்குப் போகு முன்னும் ஜலங்கலந்து சாப்பிடவேண்டியது.—விலை ரூ. 3.

குறிப்பு:—கொப்பஸ்திரீகள் இம்மருந்தை ஜாக்கிரதையுடனும், அளவுக்கு மிஞ்சாமலும், சமைய சமயங்களிலும் பத்திரம் உபயோகிக்க வேண்டும். சமய சமயத்திற்கு ஒதுக்கிக்கொள்ளாவிடில் இதை உபயோகிக்கக்கூடாது.

சமயோசித பரிகாரம்:—வலிப்புக் கண்டிருக்கும்போது ஆனை அகல பஞ்சணையினின்மல் படுக்கவைத்து, தலையுயர்த்தி, ஆடையாபரணங்களைத் தளர்த்தி, காயப்படாமல் பக்கத்திலிருப்பவர்கள் பிடித்துக்கொண்டு, பற்சந்தில் தண்ணீராவது, கொமபாவது வைத்து, நாக்குங் காயப்படாமல் செயது சிரசின்மல் ஈரத்துணியைப் போட்டு வைக்க வேண்டியது. ஜன்னல் கதவுகளைத் திறந்து காற்று செவ்வையாக வீசும்படி செய்யவேண்டியது. விசிறியிணலும் விசிறலாம். குளிர்ந்த ஜலத்தை முகத்தில் தாராளமாய்த் தெளிக்கவேண்டும். உடுத்தியிருக்கும் உடுப்புகளின கழுத்துப்பித்தான்களை கழற்றிவிடவேண்டும்.

எச்சி ஊறுதல்.

இது அநேக ஸ்திரீகளுக்கு உண்டாகிறது. இதற்காக அதிக கவலையெடுப்ப தவசியமில்லையாயினும், இது சிலருக்கு மிகவும் அதிகமாகி இரவில் படுக்கையிலிருந்தெழுந்து உமிழுத்தக்கதாக வந்துவிடும். ஆனால், கர்ப்பக்காலத்தில் தாங்கள் நடக்கவேண்டிய வழியைக்கவனித்து நடப்பவர்களுக்கு இவ்வித எச்சில் ஊறல் வரமாட்டாது. எதாவது துவர்ப்பு மருந்தினல் வாயைக் கொப்பளிக்கலாம்.

நீர்க்கடுப்பு.

கருப்பையானது மூத்திரப்பையை (Bladder.) நெருக்குவதனால் கர்ப்பிணிகளுக்குத் துவக்கத்தில் நீர் தாராளமாய்ப் பிரியாமல் அதிக வருத்தத்தைக் கொடுப்பதுண்டு. இவ்விதத அவஸ்தைக்கிடங்கொடாதபடி கிரமமாய் மலஜலம் கழிக்கவேண்டும். வெந்நீர் வைத்து உபஸ்தத்தை அடிக்கடிக் கழுவுவது மிகவும் நல்லது. பழம் சாப்பிடுவதனாலும், சோடா முதலிய குளிர்ச்சியான பானங்கள் அருந்துவதனாலும், அடிவயிற்றில் கட்டுப்போடுவதனாலும் நீர்க்கடுப்புச் சுகமாகும். சிலருக்கு அடிக்கடி ஜல உபாதைக்கு வருகிறதும் வழக்கம். பார்லித்தண்ணீர், (Barley-water.) அதிகமாய்க் குடிக்கவேண்டும். நீர்க்கடுப்பு அதிகமாயிருந்தால் முள்ளியிலை அல்லது பசலியிலைக் கஷாயத்தில் ஒருகொட்டைப்பாக்களவு சந்தனம் கலந்து கொடுக்கலாம். நன்னாரிவேர் அல்லது ரோஜாப்பூவைத் தண்ணீரில் அரைத்துக் கொடுக்கலாம். அரைமணி நேரத்துக்கு குறையாமல் வெந்நீரில் ஆசனஸ்நானம் செய்வதும் நல்லது.

மஞ்சட்காமாலை, (Jaundice.)

இது சாதாரணமாய் நாலாவது எட்டாவது மாதங்களுக்குமத்தியில் உண்டாவதுண்டு. இதுவும் வயிற்றிலுண்டாகும் குழப்பத்தினால்தான் உண்டாகிறது. இரத்தத்திலுள்ள பித்தமானது பித்தாசயத்தில் சேரத் தவறிப்போனதனால், சரீரமெல்லாம் பாவிக் கண்ணிழி, நகங்கள் முதலியவை மஞ்சள் வர்ணமடையச்செய்யும். மூத்திரமும் மஞ்சளாயிருக்கும். இது சில சமயம் சுரங்குளிரோடு சேர்ந்து வரும். இக்குறிகள் தோன்றினவுடனே கொஞ்சநாள் மிதமாய்ச் சாப்பிட்டுத் தேவையானால் மத்தியில் ஒவ்வொருதடவை சாப்பிடாமலிருந்தும், சுத்த ஜலம் அருந்தியும், நாள்தோறும் ஸ்நானம் செய்தும் வருவதனால் போய்விடும். இது வெகுசாய் மரணத்தை யுண்டாக்கு மாதலால் அதிகமாகுமுன்னவைத்தியரை அழைத்துப் பார்க்கவேண்டும்.

நமது ஆபீசில் விற்பனையாகும், ஈரல்பலகாரியில், ஒரு தேயிலைக்கரண்டியளவு தினம் மூன்றுவேளை சாப்பிட்டுவரின் பித்தம் சரியானபடி வெளியாகி, ஜீரணசக்தியையும், மலப்பிரவர்த்தியையும், ஒழுங்குபடுத்துவதினால் மஞ்சட் காமாலை, மயக்கம், கைகால் காந்தல் முதலிய பல நோய்கள் தீரும். இது ஓர் உன்னத ஔஷதமுறை. பலர் கையாடி பலனடைந்திருக்கின்றனர். விலை ரூ 1—8—0.

இரத்தவாந்தி.

கர்ப்பிணிகளுக்கு மாதவிடாய் நின்று போவதால் சிலசமயங்களில் சொற்பமாய் இரத்தவாந்தி காண்பதுண்டு. அடிவயிற்றில் ஈரத்துணியைக் கட்டிவதனலும், இச்சாபத்தியத்தோடு போஜனத்தை விலக்குவதனலும் நன்மையுண்டு. பால், பார்லித்தண்ணீர் (Barley-water.) பனிகட்டி (Ice.) மூன்றையுங்கலந்து சாப்பிடுவதுடன், மலலாந்து அசையாமல படுத்திருக்கவும் வேண்டும். இதற்கும் நிற்காவிடில் டாக்டருக்கு ஓளஷதப்பிவேண்டும்.

தொற்றுவியாதி.

வைசூரி, ப்ளேக், விஷூசிபதி, சுரம் முதலிய தொற்றுவியாதிகள் கர்ப்பிணிகளுக்கு வெகு லகுவாய்த் தொற்றிக்கொள்ளுமாதலால், அப்படிப்பட்ட வியாதியுள்ள இடங்களுக்குப் போகாமலும், அங்கிருந்து மற்றவர்களைத் தங்கள் வீடுகளுக்கு வரவிடாமலும் இருக்கவேண்டும். வைசூரி குத்திக்கொள்ளக்கூடாது. அப்படி ஏதாவது வந்துவிடில், புண்ணிபானியை நன்றுபச்சுத்த ஆகாயம் பரவும் அறையில் சுத்த வஸ்திரங்களால் மூடி எளிதில் ஜீரணிக்கும ஆகாரங்களாகிய பால், சோடா, கஞ்சி, சூப்பு முதலிய ஆகாரங்களைக் கொடுத்து, டாக்டரை வரவழைக்கவேண்டும்.

மாதவிடாய்.

சிலர் கர்ப்பந்தரித்து இரண்டு மூன்று மாதங்களுக்கு எப்போதும்போலாக வாயிலும் சிறிதாகவாய்ந்து மாதவிடாய் தோன்றுவதுண்டு. ஆனல், மூன்றுவது மாதத்திற்குப் பிற்பாடு தானுகவே நின்றுபோகுமே. அதற்குப் பிற்பாடும் வந்துகொண்டிருந்தால் வைத்தியருக்குடனே தெரிவிக்கவேண்டியது. சிலருக்குக் கர்ப்பிணியா யிருக்கும் ஒன்பது மாதமும் சாதாரணமாய் மாதருது வந்துகொண்டே யிருக்கும், அதைப்பற்றிப் பயப்படவேண்டியதில்லை.

வெள்ளை.

சிலருக்கு கடைசி மாதங்களில் வெள்ளை காண்பதாகிய உபத்திரவ மிருப்பதுண்டு. வெள்ளை யிருக்கும்போது பகலில் அதிகநேரம் ஒரு படுக்கையிலாவது மெத்தையிலாவது படுத்திருக்கவேண்டும். இரவில சீக்கிரம படுக்கைக்குப் போகவேண்டும். காலை மாலை உபஸ்தத்தை வெந்நீரில் கழுவவேண்டும். கடற்கரைப் பக்கங்களில் உலாவிக் கடற் காற்றைச் சுவாசித்தலும், பத்து நிமிஷம் கடல்ஸ்நானம் செய்தலும் மிகவும் நல்லது.

வெள்ளை அதிகமாயிருந்தால் கிளிசரின் ஆவ் போராக்ஸ், (Glycerine of Borax.) ஐப்போலவாத்த தவர்ப்பான தயிலம் உபயோகிக்கலாம். பிணமுருப ஏளஷதமும் எனிதில் செய்துகொள்ளலாம். எட்டுத் தேயிலாகாண்டி வாஸ்லீன (Vasline.) உருக்கி அதில் ஒரு தேயிலக் காண்டி சீனைக்காரத் தூளைப்போட்டு னைத் தகதெண்டு ஒரு மெல்லிய தூணியில் சிறு தயிற்றைக்கட்டி அத் தூணியை மேற்படி தயிலத்தில் நனைத்து வாரத்திறகு இரண்டு அல்லது மூன்றுமுறை இராக்காலத்தில உபஸ்தத்திலுள் செலுத்தி வைத்துக் காலையில் தயிற்றைப் பிடித்திழுக்க வந்துவிடும்.

வயிற்றில் வாய்வு திரண்டிண்டாகும் வலி.

எனிதில் ஜீரணிக்காத வஸ்துக்களைப் புசிப்பதால் குடலில் வாய்வு நிரண்டு வலியுண்டாகும். இதற்கு இரண்டுபலம் சுக்குக் கஷாயத்தில் முக்காலபலம் சிற்றாமணக்கெண்ணெயைக் கலந்து சாப்பிட்டால் மலம் சுத்தியாகி, வாய்வினால் உண்டான வலி நிவாரணமாகும். வயிற்றின்மேல்தாரப்பன்தைலம் (Oil of Turpentine.) அல்லது நமது மகா சஞ்சீவித்தைலம் தடவி அதன்மேல்வெந்நீரில் நனைத்துப்பிழிந்த கம்பளியால ஒற்றடம் கொடுக்கவேண்டும்.



நமது ஆபீசில் விற்பனையாகும், வயிற்றுவலி நிவாரணியில் ஒரு தேயிலக்காண்டியளவு இரண்டு அல்லது மூன்றுதனை சாப்பிட்டால், அஜீரணத்தினாலும், உஷ்ணத்தினாலும் உண்டாகும் வயிற்றுவலி உடனே நின்றுவிடும். நமது மகா சஞ்சீவித் தைலத்தை வயிற்றின்மேல் லேசாய்த் தடவுவதினாலும், குணமுண்டு.—விலை ரூ. 1.

ஜலதோஷம்.

கர்ப்பிணிகள் தங்களுக்கு ஜலதோஷம் பிடிக்காதபடி எச்சரிக்கையுள்ளவர்களாயிருந்தால், அதனால் சுரம் முதலிய மற்றநேகவியாதிகள் வராமல் தடுத்துக்கொள்ளலாம். ஆகையால் கர்ப்பிணிகள் பனியிலுங் காற்றிலும் போகக்கூடாது. தலையில் தாழம்பூ முதலானவைகள் வைக்கக்கூடாது. ஜலதோஷத்தினால் தலைநோவாயிருக்கும்பட்சத்தில் மேலகலவத்த ஓமத்தை வெள்ளைத் துணியில் கட்டி மோந்துகொண்டிருப்பதுடன், சுடுசாம்பலைத் துணியில் கட்டி உச்சந் தலையிலும், நெஞ்சுப் பக்கங்களிலும் ஒற்ற ஒற்ற ஜலதோஷம் தீர்ந்துபோம். ஜலதோஷம் முற்றி இருமல் உண்டாகிவிட்டால் சாப்பாட்டிற்குமேல் ஜேன்ஸ் எக்ஸ்பெக்டரன் (Jayne's Expectorant.) ஒரு தேயிலக்காண்டியளவு ஜலத்தில் கலந்து கொடுக்கலாம்.



நமது ஆபீசில் விற்பனையாகும், தொண்டைப் புகைச்சல் நிவாரணி (Samuel's Pine Expectorant.) யில் ஒரு தேயிலைக் கரண்டியளவு ஜலத்தில் கலந்துகொடுக்க மூச்சடைப்பு, இளைப்பு, இரைப்பு, வாட்டிருமல், சுரம், தலைவலி, நெற்றி, கண்களில் நோன்றும் வலி முதலிய பலவித நுரையீரல் சம்பந்தமான நோய்கள் தூரிதத்தில் நிவர்த்தியாகும்.—விலை ரூ 2.

இ ரு ம ல்.

இது சாதாரணமாய்க் கடைசி மூன்று மாதங்களில் கர்ப்பிணிகளுக்கு அதிக உபத்திரவமுண்டாக்கும். இதற்கு ஆளிவிதைக் கஷாயத்தைக் (Linseed Tea.) குடிப்பதனால், அல்லது விளாம்பிசின், (Gum Arabic.) ஒரு சிறு துண்டைச் சப்பி விழுங்குவதனால் அல்லது கொக்கேன் (Terebene or Cocaine Lozenges.) பில்லைகளைச் சப்புவதனால் சொல்லதமாகிவிடும்.



சாமிவேலின் சிங்கமார்க்கு

இருமல் மருந்து.

(Cough Tablets.)



இந்தப் பில்லைகளி லொன்றை வாயிற்போட்டு அடக்கிக்கொண்டு உமிழ்நீரைமட்டும் சாப்பிட்டுக்கொண்டிருக்க தொண்டைப் புகைச்சல், இருமல், கபம் முதலிய தொண்டையைச் சேர்ந்த சகல நோகங்களும் நிவாரணமாகும்.

20 பில்லைகளுக்கு விலை அணை 8.



சாமிவேலின் சிங்கமார்க்கு

தொண்டைப் புகைச்சல் நிவாரணி.

(Samuel's Pine Expectorant.)



நுரையீரலுக்குச் செல்லும் சுவாசக் குழாய்கள் வீங்குவதில் தொண்டை புகைந்து இருமல் காணும். சுரம், தலைவலி, இளைப்பு, மூச்சடைப்பு, இரைப்பு, வாட்டிருமல் முதலிய குணங்கள் தோன்றி, சிலசமயம் இரத்தம் விழும். பின்பு அது மஞ்சள் நிறமான சளியாக வரும். நெற்றி, கண்களில் வலி தோன்றும், காது தூரிதமாயடிக்கும். ஆனல் உறக்கிராது. நெஞ்சு, முதுகு பக்கங்களில் கை வைத்தால் இரைச்சல் தெரியும்.

தொண்டைப் புகைச்சல் நிவாரணி ஜலதோஷம் முற்றி இருமல் உண்டாகிவிட்டால் சாமிவேலின் பைன் எக்ஸ்பெக்டோரான்ட்

ஒரு தேயிலைக்கரண்டி ஜலத்தில் கலந்து சாப்பிட சகலவித தொண்டைப் புகைச்சல், இருமல், சீதளம், முதலிய பலவித நுரையீரல் நோய்களும் தூரிதத்தில் நிவர்த்திசெய்யும்.—விலை ரூ 2.

சாப்பிடும் விதம்:—சிறு தண்ணீரில் வயதுக்குந் தேவைக்குந் தக்கது ஒரு தேயிலைக்கரண்டியளவு கூட்டி அலலது குறைத்துக் கொடுக்கவேண்டும். சிறுவர்களுக்கு 5 முதல் 15 துளிவரை தண்ணீர் கலந்து கொடுக்கவேண்டும். நோயாளி அடிக்கடி ஸ்நானஞ் செய்து கம்பளித் துணிபோர்த்தி வறட்சியான இடங்களில் வாசஞ்செய்வது உத்தமம். மலமிர்த்தியும் கிரமமாகக் செய்ய வேண்டும்.

சாமிசலின் மீனெண்ணெய் விலை ரூ. 1—8—0.

இம்மருந்துகளை மிதமாய் உபயோகித்து வருவதுடன் நமது ஆபீசில் விற்பனைக்காக வைத்திருக்கும் சாமிசலின் சிங்கமார்க்கு வேதனைபோக்கி போல்ற்ரிஸ் (Pain-Kill Poultice.) அத்தாய் சுற்றியிருக்கும் தோலிலுள்ள வைரக்கஷனிலை சொலையை பிரகாரம், உஷ்ணமாகவி, மெஞ்சைஷ்சுஷமாய அளர்ச்சியும் வலியுமுள்ள பாகங்களில் அடைகளால் அடிதுல தினைத்துக்கு பூசி, அதற்குமேல் மெல்லியபஞ்சை பரப்பி, நீளத்துணியினால் கட்டுப்போட்டு வைத்திருந்து இருபதுநிமிஷ முதல் முக்குப்பின் அழித்தபின் பாதத்தால் களிபஞ்சாய ஒட்டிக்கொண்டு வருதுவிடும். நோவு தணிகிறபரியந்தம அத்தனைதம செய்ய நுரையீரலில உண்டாகும் அளர்ச்சிகள் நீங்கிச் சுகமுண்டாகும். விலை ரூ 1—8—0.

சுரம்.

இது மலச்சிக்கல், ஜலதோஷம், அலுப்பு முதலிய காரணங்களால் உண்டாகக்கூடியது, சுரத்திக்கு உடனே மருந்துசாப்பிடாவிட்டால் அகாலப் பிரசவ முதலிய தீவகுகளை விளவிக்குமாதலால் உடனே மருந்து கொடுத்துச சுகப்படுத்த வேணடும். கொயினை முதலிய கசப்பான மருந்து கொடுக்கக்கூடாது.

முற்றின இஞ்சியில் ஒரு துண்டெடுத்து அதோடு சிறிது சக்கரும் வெள்ளைப்பூண்டும் சேர்த்துத் தட்டிச் சாறபிழிந்து வடிகட்டி வைத்துக்கொண்டு தேனில சரசம் பண்ணிக் கொடுக்க சரமதணியும்.

இடுப்புநோய்.

கரு பருக்கப் பருக்கக் கருப்பையும் அதைச் சேர்ந்த நரம்பு களும் நீளுவதால் இடுப்பு நோய் உண்டாகும். அதற்கு டர்பன் றயின் தைலத்தையாவது, (Turpentine.) சவுக்காரத் தைலத்தை யாவது (Soap Liniment.) அல்லது ஒரு அவுன்ஸ் கற்பூரத்தை ஆறு அவுன்ஸ் இலுப்பெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சின தைலத்தையாவது அல்லது நமது மகா சஞ்சீவித் தைலத்தையா வது, ராயல்பாமையாவது பூசி வேது ஒற்றடங் கொடுக்கச் சுக மாகும். நமது வேதனுபேதினி போல்ரீஸையும் உபயோகிக்கலாம்.

நெஞ்சுதுடித்தல்.

பலவீனமான கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஐந்தாவது மாதத்தில் மார்பு தடதடவென் றடித்துக்கொள்ளும். சாதாரணமாய் வாயில் நீர் ஊறுதலும் வாந்தியுமில்லாதவர்களுக்கு இந்நோய் உண்டாகும். கவச்சாரத் திராவகம் (Ammonia.) ஈதர் (Ether.) இவைகளைக் கொடுக்கவேண்டும். அபசமனந்தமான மருந்துகள் மிகப் பிரயோசனமாகும். நல்ல காற்று வீசுமபடி செய்துகொள் வதும் நலம். கர்ப்பவதிபா யிருக்கும் காலத்தில்மட்டும் இவ்வித மாய் மார்பு தடதடவென்றடிப்பதால் மோசமில்லை. ஆதலால் அதைப் பற்றிப் பயப்படவேண்டியதில்லை. சிசு உள்ளேயிருந்து வளர்வதால கர்ப்பாசயமானது சில பெரிய இரத்தக்குழாய்களில் அழுத்த இரத்தாசயத்தில் குழப்பம் உண்டாவதால் மார்புதடிக் கும் ஸ்திரீ படுத்துக்கொண்டிருக்கும்பொழுது இது மிதமா யிருக்கும். காம்பவண்ட் ஸபிரிட்ஸ் ஆப லவண்டரில் (Compound spirits of lavender.) ஒருதிராம சாலவாலற்றயில் (Sal volatile) பதினைந்து திராம இவ்விரண்டையுங் கலந்து ஒரு தேயிலைக்கரண்டி எடுத்து அதோடு எட்டு மடங்கு தண்ணீர் சேர்த்துக் கொடுக்க சுகமாகும். இந்த மருந்தினால் யாதொரு தீமையும் நேரிடாது. கடினமான வேலை, நெடுநேரம் விழித்திருத்தல், நெருக்கமான அறை, மனக்கிளர்ச்சி முதலிய விஷயங்களைநீக்கி வெளியில் மெது வாய் உலாவுவதனாலும் சிரிக்கிதருடன் சந்தோஷமாய் வார்த்தை யாடுவதனாலும் அதிக நன்மையுண்டு.

இந்நோயினால் வருந்துபவர்களின் வசதிக்காக நாம்தயாரித்து வைத்திருக்கும் சாமிவேலின் சிங்கமார்க்கு இருதய பலகாரி யில் ஒரு மாத்திரையை காலுமணி நேரத்துக்கொருதடவை சாப்பிடுவா, இருதயம் படபடவென்று அடித்துக்கொள்வது, மயக்கம், ஆயாசம், இருதயத்துடிப்பு முதலிய சேஷ்டைகள் நீங்கி பலஹீனமடைந்த இருதயத்திற்கு வலிமையுண்டாகும். விலை ரூ. 1.

குறண்டவாதம். (CRAMPS OF THE LEGS.)

இது கர்ப்பமான ஐந்தாவது மாதத்திற்குமேல் கர்ப்பாசயமானது நரம்புகளில் அழுத்துவதனால் விசேஷமாய்க் கால்களிலே இராக்காலங்களில் உண்டாகும் வலி. ஒரு கைக்குட்டையைக் கயிறுபோல் மடித்துக் குறண்டவாத மிருக்கிற பாகத்திற்குச் சற்று மேல்கட்டிச் சிறிதுநேரம் அப்படியேவைத்திருக்கவேண்டும். அந்த யிடத்தில் டர்பண்டயின் (Turpentine.) அல்லது நமது மகா சஞ்சீவித் தைலத்தையாவது, ராயல்பாமையாவது தடவி கையினால் அழுத்தித் தேய்க்கவேண்டும்.

சில சமயங்களில் இந்தக் குறண்டவாதம் கர்ப்பிணியின் குடல், மூத்திர, அல்லது தொடையில் வருவதுண்டு. அப்பொழுது வறுத்த உப்பை ஒரு துணியில் கட்டி ஒற்றலாம். அதற்குப் பதிலாக ரப்பரால் செய்த வெந்நீர்ப்பை அல்லது கல் போத்தலில் வெந்நீரை அடைத்து அதன்மேல் கம்பளித்துணியைச் சுற்றி வலியுள்ள இடத்தில் வைக்கலாம். சுடுசெங்கலை அதேவிதமாய்க் கம்பளித்துணியில் சுற்றியும் உள்ளங்காலில் வைக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் நிராமல் வலி அதிகமாயிருந்தால் கற்பூரத் திராவகம், (Compound Tincture of Camphor.) ஒரு அவுன்ஸ் வெந்தயத் தண்ணீரில் (Dill water.) ஐந்து அவுன்ஸ் எடுத்துக் கலந்து ஒரு ஔன்ஸ் படிக்கைக்குப் போகுமுன் அவசியமானால் காலுமணிக் கொருதடவை கொடுக்கச் சுகமாகும். காலில் குறண்டவாதம் உண்டானவுடனே எழுந்து இரண்டு நிமிஷம் நடக்கச் சுகமாகும்.

பிண்டச்சேதம் அல்லது அகாலப்பிரசவம்.
(Abortion or Miscarriage.)

பிண்டச்சேதம் என்றால் குழந்தை சரியான காலஞ்சென்று பிறக்காமல் ஏழு மாதங்களுக்கு முன்னே பிறப்பது. ஏழுமாதத்திற்கும் ஒன்பது மாதத்திற்கும் மத்தியில் பிறந்தால் அகாலப்பிரசவம் என்று சொல்லப்படும். ஸ்திரீயின் சுகத்தைக் கெடுக்கக் கூடியவைகளில் அகாலப் பிரசவத்தைவிடக் கேவலமும் பயங்கரமும் வெறுக்கப்படத் தக்கதுமானது வேறொன்றுமில்லை. இது வழக்கமாய் விட்டதானால் ஸ்திரீயானவள் மறுபடியும் சுகதேகியாவானென்பது சந்தேகமே. பிண்டச்சேதம் முக்கியமாய்க் கர்ப்பமான முதல் பன்னிரண்டாவது வாரத்திற்குள் வரும்.

பூரண பக்குவமடைவதற்கு முன், உண்டாகும் கர்ப்பசேதத்தைப்பற்றி ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். ஏனெ

னில், இந்த மாதங்களில் குழந்தையும் சரியாய் வளர்ந்திருக்க மாட்டாது. கொப்ப வாயின் வாய் சரியாய் இறக்கமாட்டாது. நஞ்சானது தாய் சரீரத்தோடு பலமாய் ஒட்டிக்கொண்டிருக்கும். அதனல் ரத்தப் பிரவாகம் கண்டு, மரணத்தக்கு ஆளாச்கவுங் கூடும். ஆதலால் கொப்ப சேதச்குறிகள் தோன்றினவுடன், கை தேர்ந்த இங்கிலீஷ் டாக்டர்களுச்கு ஆளனுப்பி தெரிவிக்கவேண் டும். அவர்களே சமயத்துக்குத் தகுந்த பரிகாரம் ஆயுதப் பிர யோகங்கள் முதலியவற்றல் சிசுக்களை வெளியேற்றவும், நஞ்சு தங்காமல் எடுத்து அதனல் உண்டாகும் தீமைகளை விலக்கவுங் கூடும்.

கஞ்சு. சிசுவும் நஞ்சும் கொப்பப் பையைவிட்டு வெளியாகும் விதத்தைப்பற்றி இங்கு சுருக்கமாய்ச் சொல்லுவோம். சிசு கொப் பப் பையில் வளர வளர கொப்பப் பையும் விரிந்துகொண்டு வரு கிறது. இவ்விதம், ஒன்பதுமாத மளவில் நடக்கும், அதற்குமேல் கொப்பப் பை விரிய இடமில்லாமல் போய்விடும். ஆகவே விரி வதற்கு பதிலாக சுருங்க ஆரம்பிக்கிறது. அதனல் அதனுள்ளிருக் கும் குழந்தையும், இருக்க இடமில்லாமல், நெகைத்து, தன்னை வெளியாக்கிக்கொள்ள முயற்சிக்கின்றது. மேலே ஏற இடமில் லாததனலும், கொப்பப் பை சுருங்கி அமுக்குவதனலும், குழந் தையானது கீழே சுருங்கியிருக்கும் கொப்பப்பையின் அடிவாயை இறக்கு வெளியேற எத்தனிக்கிறது. அச்சச் சமயத்தில் கொப்பப் பையின் வாய் வலுக்குறைந்து தளர்ச்சியடைந்திருக்கிறது. கொப் பப் பையும் குழந்தை வசிக்கும் பனிக்குடமும் கொப்பப் பையின் அடிவாயில் மோதுவதனல் அந்த வாயானது விரிய ஆரம்பிக்கின் றது. இப்படிக் கொஞ்சம் வாய் இறந்ததும், பனிக்குடம் இந்த வாய்க்குள் இறங்கி கொப்பப்பை மேல் அமுக்கி கீழேயே தள்ளுவதனல் வெடித்து அதனுள்ளிருக்கும் நீரானது வெளியா கின்றது. பனிக்குடம் இறங்குமபோதே சிசுவின் ஓர் பாகமும் (முக்கியமாய் தன் சிரசும்) கூடவே இறங்குகின்றது. இப்படி மெல்மேலும் தள்ளப்பட்டு சிசு தாய் வயிற்றைவிட்டு வெளியா கின்றது. ஒன்பதாவது மாதக் கடைசியில் பூரண கொப்பமாவ தால் பழுத்த பழமானது மரத்திலிருந்து தானாக விழுவதுபோல் நஞ்சும் வெளியாகிவிடுகின்றது. ஆதலால் ஒன்பதுமாதமும் சிசு வானது கர்ப்பத்தில் தரித்திருந்து வெளியானல் தாய்க்கு யாதொ ரு கெடுதலும் சம்பவிக்க இடமில்லை. அப்படிக்கில்லாமல் எவ் வளவுக் கெவ்வளவு சீக்கிரமாய்ப் பிரசவம் ஏற்படுகின்றதோ அவ் வளவுக்குத் தக்கதாக தாயின் சரீரத்தில் கெடுதல்கள் சம்பவிக் கும். ஆகவே, ஏழாவது எட்டாவது மாதப் பிரசவங்கள் தாய் க்கு அதிக கஷ்டத்தைக்கொடுக்காது. ஐந்தாவது ஆறுவதுமாதப்

பிரசவங்களால் தாயின் சரீரத்திற்குக் கெடுதி கட்டாயம் உண்டாகும். ஆனல் 2, 3, 4-வது மாதங்களில் ஏற்படும் பிரசவமானது தாய்க்கு நிச்சயமாய் ஆபத்துகளை உண்டாக்கும். ஏனெனில் இந்த மாதங்களில் சிசு முற்றவில்லை. கொர்ப்பப் பையின் அடிவாயும் பலமாய் சுருங்கி மூடியிருக்கும். அந்த வாயைத் திறக்க சிசுவிற்காவது கொர்ப்பத்திற்காவது சக்தி போதாது. ஏனெனில் நஞ்சானது பழுத்த பழம்போலில்லாமல் கெட்டியாய் ஒட்டியிருக்கப்பட்ட காயாக விருக்கும். இது எளிதில் வெளியாகமாட்டாது. இதை வெளியாக்க முயன்றல் இரத்தம் பெருகி ஸ்திரீக்கு மரணத்தை யுண்டாக்கக்கூடும். அப்படியே மரிக்காதேபோனலும் அவள் உடம்பு கெட்டுப்போகும். சரீரம் வெளுத்து பலவீனமாகி இரத்தமற்று கெட்டுப்போகும்.

நஞ்சானது கொர்ப்பப் பையின் பல யிடங்களில் ஒட்டிக் கொள்ளக்கூடும். கொர்ப்பப்பையின் அடிவாய்ப் பக்கத்தில் ஒட்டிக்கொண்டால் அதிகமாய் இரத்தப்பிரவாகங் கண்டு தாய்க்குக் கெடுதியை யுண்டாக்கும். இரத்தம ஜாஸ்தியாய் வெளியாவதற்கு மூன்று காரணங்கள் உண்டு. 1. கொர்ப்பமுண்டாவதற்கு முன் வெளியான மாதாந்தரமுதவே வெளியாகி வாலாம். ஆனல் இது மிக அபூர்வம். 2 முதல் ஐந்துமாதம்வரை வெளியாகும் இரத்தம் சிசுவிற்குச் சேதம் ஏற்படப் போவதைக் குறிப்பிடும் முன்னடையாளமாகலாம். 3. ஆறுவது மாதத்திற்குப் பிற்பாடு உண்டாகும் இரத்த வெளிப்போக்கு சிசு வெளியாகப் போவதைக் குறிக்கும் முன்னடையாளமாக யிருக்கலாம். அல்லது நஞ்சானது கொர்ப்பப்பையின் அடிவாயில் ஒட்டிக்கொண்டிருப்பதைத் தெரிவிக்கக்கூடும். வலியில்லாமல் இரத்தம் மட்டுமே வெளியானல் நஞ்சு அடிவாய்ப் பக்கத்தில் ஒட்டியிருப்பதையே அதிகமாய்த் தெரிவிக்கும். எப்படியிருந்தாலும் வயிற்றிலுண்டாகும் வலியையும் இரத்தப்போக்கையும் நிறுத்த முயலவேண்டியது அவசியம். இல்லாத பக்கத்தில் கொர்ப்பப் பையை காலி செய்யவேண்டியது. இதற்குக் கைதேர்ந்த இங்கிலீஷ் மருத்துவர்கள் தகுந்தவர்கள்.

கர்ப்பச்சேதக் காரணம்:-முக்கியமாய் அதிக பருத்த அல்லது கொழுத்த தேகத்தையுடையவர்களுக்கும், மாதவிடாய் அதிகமாய்க் காணப்படுபவர்களுக்கும், கண்டமாலை, நீர்க்கோவை, பிளவை முதலிய நோய்களை யுடையவர்களுக்கும் பிண்டச்சேதம் உண்டாகும். இதுவுமல்லாமல் சுகதேகிகளுக்கும் அதிகமாகக் காப்பி தேயிலை சாப்பிடுவதனலும், அதிகடம்பமாக ஜீவிக்கிறதனலும், நாட்டிய

சாலை, நாடகசாலை, காட்சிச்சாலை முதலிய இடங்களுக்குப் போய் இரவில் அதிகநேரம் விழித்திருப்பதனாலும், அடிக்கடி விநோதக் கதைகள்வாசிப்பதனாலும் எக்காலத்திலும் தங்களுடைய மாம்ச இச்சையை நிறைவேற்றும்படி கர்ப்பஸ்திரீகளோடு சம்போகஞ் செய்யும் புருஷரை யுடையவர்களுக்கும், மலச்சிக்கல், வாந்தி, உடையை இறுகத்தரித்தல், திடுக்கிட்டுப் பயப்படுதல், மேலிழுத்தல், அதிகநேப்பு உண்டாகலேலேசெய்தல் முதலியவைகளாலும் மேகவியாதி, அதிசாரபேதி, இரத்தபேதி, பலவீனம், கொயினை, (Quinine.) எர்கட் (Ergot.) கஞ்சா, வெண்காரம் முதலான மருந்து சேர்த்தல், குங்குமம், கோரோசனை, கஸ்தூரி, பெருங்காயம், மூசாம்பரம், பாலேந்திரபலளம் முதலிய உஷ்ண மருந்து சேர்த்தல் முதலிய காரணங்களாலும், மேகரோக முண்டாயிருப்பவர்களின் நோய் பிண்டத்துக்கும் தாக்குவதனால் பிண்டம் இறப்பதனாலும், ஆசனத்தில் கிருமி உற்பத்தியாவதனாலும் உண்டாகிறது. இதுவுமல்லாமல் சிலர் மருந்து சாப்பிட்டு வேண்டுமென்றே அகாலப் பிரசவத்துக்குத் தங்களை ஆளாக்கிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் செய்வது மனுஷகொலை என்பதை உணராதிருக்கிறார்களோ? இதனைப்பற்றி 5-வது புஸ்தகத்தில் விஸ்தரித்துக் கூறியிருக்கிறோம்.

இதனாலுண்டாகும் தீமைகள். அகாலப் பிரசவத்தினால் ஸ்திரீகளுக்குண்டாகுந் தீமை மிகக் கொடியதும், ஸ்திரீயின் உயிருள்ளமட்டும் நீங்காததுமா யிருக்கிறது. ஒருதடவை அகாலப் பிரசவம் நேர்ந்த பெண்ணுக்குத் திரும்பவும் அப்படியே உண்டாவது சகஜம். மாதவிடாய் மட்டுக்கு மிஞ்சி அதிகமாயும், கிரமந்தவறியும் வருவதுமல்லாமல், அதிக வேதனையையுங் கொடுக்கும். ஒருவிதமான வலிப்பும் உண்டாவதுண்டு. அதுவுமல்லாமல், இப்படி அதிக வேதனையை யடைவதால ஸ்திரீயானவள் தன் ஜீவியத்தைத் தனக்குக் கசப்புள்ளதாக்கி எப்போதும் சந்தோஷமற்றவளாகவே காணப்படுகிறாள்.

தடுக்கக்கூடிய வழிகள். ஸ்திரீயானவள் தான் கர்ப்பவதியாயிருப்பதை யறிந்தவுடனே தன்னால் கூடியமட்டும் தன் மனதையும் சரீரத்தையும் சுத்தமாயும் சுகமாயும் வைத்துக்கொள்ளவேண்டும். ஸ்திரீயானவள் தன் வயிற்றிற்கேற்ற லேசான சாப்பாடு சாப்பிட்டுச் சுத்தப்பானம் பருகித் தினந்தோறும் ஸ்நானஞ்செய்து சுமுகதிரக்காற்று முதலிய சுத்த ஆகாயத்தைச்சுவாசித்து, காலாறும் தேகாப்பியாசஞ் செய்து அதிகமாகச் சூரிய வெளிச்சத்திலேயே ஜீவிப்பவளாயும், இறகுகளினால் செய்த மெத்தை, தலையணை, அதிக காற்றைபான அறை, காப்பி, தேயிலை, சாராயம் முதலான

உஷ்ண வஸ்துக்கள், வேறு எவ்விதமான மருந்து, சோர்வாளபேதி, மனத்திகில், சஞ்சலம், இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக புருஷ ரோடு கலந்திருத்தல் முதலியவைகளை நீக்கி நடபபாளாயின், இப் படிப்பட்ட அகாலப் பிரசவம் வராதபடி தடுக்கலாம். மற்ற ஸ்திரீ கள் பிரசவிக்கும் இடத்திற்குக் கர்ப்ப ஸ்திரீ போகக்கூடாது. போனல் அதே சிந்தனை மனதிலுதித்து அகாலப்பிரசவ முண்டா வதற் கிடமாகும்.

பிண்டச் சேதக் குறிகள். (முதலாவது) ஸ்திரீயானவள் சும்மாயிருக்கும்போதே யாதொரு காரணமுமின்றிக் தன் பலனும் ஆவியும் போய்விட்டதாக நினைக்கத்தக்கதாக ஓர்வித சோர்வு உண்டாகும். பசி தாகமில்லாமல சுறுசுறுப்பும், முறுகு, இடுப்பு, அடிவயிறு முதலிய இடங்களில வலியும், சமயாசமயங் களில வந்துகொண்டிருந்து வரவர அதிகப்படும். ஆனல் ஸ்திரீ யானவள் அதிக பலமுள்ள தேகத்தை யுடையவளா யிருந்தால் அவளுக்கு இரத்த ஓட்டம் விரைவாயிருப்பதாகவும், தாது விரை வாய அழிப்பதாகவும தேகத்தில் சிறிது வெதுவெதுப்பும், தாக மும், ஆகாதத்தின்மேல் வெறுப்பும், இடுப்புவலியும், கர்ப்பத்தில் ஓர்விதமான பலநுவும் உண்டாகும். இவ்வறிகுறிகள் அவரவர்கள தேகத்துக்குத் தக்கதாயிருக்கும்; எப்படியெனில், சிலருக்கு முது கிலும், இடுபபிலும் சிறிது வலி விட்டுவிட்டு அர்த்த நாட்களாக வருவதுண்டாகுமேயன்றி வேறொரு அடையாளமும் காணப் படமாட்டாது. முன்னம்ம ஒருதடவை அகாலப் பிரசவமான ஸ்திரீக்குத திருமபவும் அர்தகாலத்தில இவ்விதசிறிது வலிமாத் திரம்மிருந்தாலும, அதை அதிக ஜாக்கிரதையாய்ப் பார்க்க வேண்டும. இபபடி யிருக்கும ஸ்திரீயை ஒரு குளிர்ச்சியான அறையில ஓர் மெத்தையில படுக்கவைத்து மெலலிய துணியினல மூடிச சாபபாடடினம்மல் பிரியமிருக்குமானல் குளிர்ந்த கஞ்சியும் தண்ணீரும் மாததிரம் கொடுக்க வேண்டும. உடனே வைத்தி யருக்காளனுப்பிச் சிகிச்சை செய்யவேண்டும.

இரண்டாவது:-மூன் ஒருதடவையும் அகாலப் பிரசவம் நேரிட் டிராதவர்கள் முதலிலும இபபபிலும் சிறிது வலித்தான்றுவதை யெனுதாமேயவனறு நினைத்திகிலிறபடியினல், வாவர அவ்வ தனை அதிகமாக்க கடைசியாய இரத்தம கட்டியாய வெளியாகும். கருபபையிலிருகதும முட்டையானது கருபபையை விட்டுப பிரி ந்து விட்டபடியால இபபடி இரதத்கக் கட்டிகள் வெளியாகும். இதில வரது கவனிகதிறவைத்தியன அதிகக கவலையாயும் ஜாக் கிரதையாயும பாாக்கிறதலுலும ஸ்திரீயானவள் அதிக தைரிய முளளவளா யிருபபதலுலும இன்னும் நமபிக்கைக்கு இடமுன்

டென்று சொல்லலாம். இதிலும் ஸ்திரீயானவள் வைத்தியன் வரும்வரைக்கும் முதலாவது சொன்ன முறைப்படியே படுத்திருக்கவேண்டும். அவள் அடிவயிற்றில் துணியை நனைத்து மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டே யிருக்கவேண்டும். பனிக்கட்டித் தண்ணீரைப் பீச்சாங்குழல் மூலமாய் உள்ளே செலுத்தலாம். ஸ்திரீயானவள் தன் இடுப்புப்பக்கத்தைச் சிறிது உயரமாகவும் தலையையும் தோளையும் எப்போதும் தாழ்வாகவும் வைத்து மல்லாந்து படுத்திருக்கவேண்டும்.

கடைசியாக:—சிலசமயங்களில் இரத்தம் அதிகமாக வெளியாகும். அடிக்கடி அதிகாவேதனையும உண்டாகும். இதனால் பிண்டமானது முழுவதுமாகக் கருப்பையை விட்டுப் பிரிந்துவிட்டதாகத் தெரியும். இப்படியிருக்கையில் அகாலப் பிரசவத்தைத் தடுக்க முடியாது. ஆகையால வைத்தியன ஸ்திரீ சுகத்துடன் பிரசவிக்கத்தக்க முறைகளைக் கையாடவேண்டும.

இப்படி முன் சொல்லப்பட்ட விதிகளைக் கவனித்து ஸ்திரீயானவள் எப்போதும் தன் சுகத்தைப் பேணிக்கொண்டு முன்சொல்லப்பட்ட அறிகுறிகள் தன்னிடத்தில் காணப்படாதபடி கவலையாயுமிருந்தால, இப்போப்பட்ட பெரும் உபத்திரவத்தினின்றும் தப்பிதத்துக்கொள்ளலாம். முன்னம்ம ஒருதடவை அகாலப பிரசவம் உண்டாயிருந்தவர்கள் திரும்பவும் அந்தகாலத்தில சிலவாரங்களாகப் படுக்கை அலலது மெதனதில் படுத்துகொண்டு அங்குமிங்கும் அசையாமலிருக்கவேண்டும. அந்தாந்தரம பிண்டசம்சதம் முன்னடாகிக் கஷ்டபபட்டவளா யிருந்தால் காப்பபனபபானது பலப்பமும் வரைக்கும் புருஷசம்போகமிலலாதிருந்து பிறகு கர்ப்பந்தரித்தால் அவள் பூரணதினசயடைந்து குழந்தை பெறுவதற்குச் சந்தேகமில்லை. ஆகையால், சரீர சவுகரியதில பிரியமுள்ள ஸ்திரீகள் இந்த சுலபமான சிகிச்சைகளைக் கைகொள்வார்களானால, அதனால அவர்களுக்கு மிகவும நன்மை யுண்டாகும.

அகாலப்பிரசவ காலதில் ஸ்திரீக்கு வயிற்றுநோயுண்டானால் நமது வயிற்றுவலி நிவாரணியை மெதுவாக வயிற்றுநோயை நிறுத்தவல்லது. அது கைவசமில்லாவிடில அபினி மருந்தை இரண்டுமணிகொருதடவை ஒரு குன்றுமணியளவு மயக்க முண்டாகக் கசப்பும வரை கொடுத்து வரலாம். அதுவுமலலாமல, முன்சொன்னபடி ஸ்திரீயை அசையாமல படுத்திருக்கச்செய்து பத்துச் குன்றுமணி எடை சுத்தி பண்ணின வெள்ளைப்பூண்டுமணிகொரு தடவை குளிர்ந்த ஜலதில கலந்து கொடுக்கவேண்டும். இம்மருந்து வாந்திக்கிடமாகால் உடனே நிறுத்தி

விடலாம். தாகமதிகமானால் பனிக்கட்டி நீர் கொடுக்கவேண்டும். முன் சொல்லியவைகளுக்குஞ் சுகமாகாமல் இரத்தப்பிரவாகம் இன்னும் அதிகமானால் பிண்டத்தை வெளிப்படுத்தும்படி எத்தனம் பண்ணவேண்டும். இதற்காகத் தணியை கஷாயவியற்றின் மேல்போட்டு எர்கட் எக்ஸ்டிரேக்ட் (Extract Ergot Liquid.) ஒருவேளைக்கு முப்பது துளி வீதம் கொடுக்கவேண்டும். இதிலும் இரத்தம் நிற்காத பக்ஷத்தில் ஐந்து குன்றுமணியெடை வங்க உப்பு (Plumbi Acetas.) அரைக குன்றுமணி யெடை அபினியுடன் சேர்த்து மாத்திரை பண்ணிக் கொடுக்கவேண்டும். இதற்குங்கூட இரத்தப்பிரவாகம் நிற்காத பக்ஷத்தில் கருப்பையில் மிகுந்திருக்கும பிண்டத்தைக் கையாலாவது ஆயுதங்களாலாவது வெளிப்படுத்தவேண்டும்.

TRADE MARK
S S S
REGTD.

சாமிவேல் வைத்தியசாலை,
தென்காஞ்சி, இரங்கோன்,

SAMUEL MEDICAL HALL,
Thingangyun, Rangoon.


உலகப் பிரசித்திபெற்ற
சாமிவேலின் சிங்கமார்க்கு
ஜீவாமிர்தம் (Life Drops.)



இந்த ஜீவாமிர்தம் 15 முதல் 20 துளி வரை ஆண், பெண், குழந்தைகளுக்கு காலை மாலை வேளைகளில் உணவுக்கு முன்பு கொடுக்கலாம். இந்த ஜீவாமிர்தம் நீர்த்த நிலையில் இரத்தத்தை சுத்தி செய்து, இரத்தத்தில் கலந்து, இரத்தத்தை சுத்தி செய்து, இரத்தத்தை விருத்தி செய

சர்ப்பீமேஹிதம்:—எறக்குறைய பதினைந்து தினைய மலச் சிக்கலுள்ளவர்கள ஒரு தேயிலக்கரண்டி மீனெண்ணெயிலும் (*Cod-Liver Oil*) மலச்சிக்கலில்லாதவர்கள் அரை ஔன்ஸ் திராக்ஷாரசத்தில் (*Wine*) தண்ணீர் கலந்து, அல்லது தண்ணீரில் காலை மாலை சாப்பிட நோய்களெல்லாம் பறந்துபோய் சுத்த மாகித் தாதுபுஷ்டியும் திடகாத்திரமும் முண்டாகும். விலை ரூ. 1.

சாமிவேலின் சிங்கமார்க்கு சிரங்குக் களிம்பு. (Itch Ointment.)



பூதக்கண்ணாடியில் பெண்ணண்டின் தோற்றம்.

பல தினுசான சொங்குகள் உண்டு. அரிகாப்பன், செங் காப்பன், கருங்காப்பன், மண்டைக்காப்பன், கொள்ளிக் காப்பன், வெடிகாப்பன், ஊத காப்பன் முதலிய பலவகைச் சிரங்குகளுக்கும் காரணம ஓர்வகை வண்டு; இதில் பெண்வண்டானது மெல்லிய ல்தானங்களில் குழி பறித்து முட்டை யிடுவதினல் தினவுண்டாகும். இதைச்சொரிவதனல் பல இடங்களுக்கும் பரவும். இது தொத்து நோயானபடியால், ஓர் குடும்பத்தில் சொங்குள்ள யாவரும் ஏக காலத்தில் மருந்து போடவேண்டும. முதலாவதாக வஸ்திரங்களை அவிழ்த்து வெளியில் காற்றப்பட உலர்த்த வேண்டும். சிரங்கின் மேலிருக்கும் அசடுபோக சோப்புத் தேய்த்து வெந்நீரால் கழுவி சுத்திசெய்து, துடைத்துச் சிரங்குக் களிம்பை காலை மாலை இருவேளையும் மூன்றுநாள் போட்டு நாலாம் நாளில் சோப்பாவது, அல்லாவது தேய்த்து ஸ்நானம் செய்விக்க வேண்டும்.—விலை அணு 12.

சாமிவேல் வைத்தியசாலை,

தென்காஞ்சி, திருச்சோன்.

கடவுள் துணை.

மானிட
மர்ம சாஸ்திரம்.

எட்டாம் புஸ்தகம்.

மந்திர சாஸ்திரம்.

மங்கல மெண்ண மகிழ்வாட்டி மற்றுமு
ரங்கல ரென்ன மகட்பே றுமென்.

இந்து

பாலர்க்கும்

சுக செல்வ நன்மைகளையும் சுகீர்த்தி பாக்கிய
போக்கியத்தையும் நீடிழி வேந்தருவிக்க
விரும்பிய,

சுன்னத்தா சங்கலை சங்கத்தின் தமிழ்ப்பேரிலக்கரும், சங்கீத சென்
நாள்ஸ் கலாநிதி பிரதமசிரியரா விருத்தரும், வண்ண சாஸ்திரம், தமிழாக
நாடகங்களின் மிக்க சாத்தரவும் வாலை யர்ம சாஸ்திரப் பயிற்சி தருக,
சாயிவேல் வைத்தியராலேத் தமிழாக்கமாகிய

எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.

புதிய பதிப்பு.

சாயிவேல் பிரஸ்,
தென்காஞ்சி, இரங்கோன்.
1920.

All Rights Reserved.



மருத்துவ சாஸ்திரம்.

மானிட மர்ம சாஸ்திரம்.

எட்டாம் புஸ்தகம்.

கஷ்டமில்லாப் பிரசவம்.



"நீ வேதனையோடு பிள்ளைபெறுவாய்" என்று நமது ஆதித்தாய்க்கு விதிக்கப் பட்ட சாபத்தினால் எல்லா ஸ்திரீகளும் பேறுகாலத்தில் வேதனைப்பட வேண்டியது கடவுளின் நிர்ணயமாதலால் அவ்வித வேதனையை நிவர்த்தித்துக்கொள்ளும் வழிகளில்லை யென்று நினைப்பதனாலே அநேகர் அதைரியமடைவதுண்டு. இது வாஸ்தவமேயென்றாலும், கடவுளின் கிருபையும், லக்ஷ்மி கடாக்ஷமும் தங்கினவர்களென்றெண்ணப்படும் ஐசுவரியமும், நாகரீகமும், கல்வி ஆராய்ச்சியும் மிகுதியான பிரபுக்கள் வீட்டிலுள்ள செல்வப் பிள்ளைகள் மட்டும் அதிகாலஸ்தியடைகையில், தரித்திரம் பிடித்த நிர்ப்பந்தமான ஏழைகளும் காட்டில்திரியும் மிலேச்சரும் யாதொரு கஷ்டமுமில்லாமல் பிள்ளைகளைப்பெற்றுத் தூக்கித்தோளில் போட்டுக்கொண்டு திரிவதற்குக் காரணமென்ன? மேலும், "நீ உன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிப்பாய்." என்று ஆதாமுக்கு இடப்பட்ட சாபத்தினால் எல்லாரும் தம் முகத்தின் வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டுத்தானே ஆகாரம் புசிக்கிறார்கள்? மனுஷனுடைய உழைப்பைச் சாந்தமாக்கும் பொருட்டு எத்தனையோ விதமான யந்திரங்களும், கருவிகளும், மின்சாரசக்தியின் உபயோகங்களும் கண்டுபிடித்திருக்கிறார்களன்றே? அதேவிதமாய் "நீ வேதனையோடு பிள்ளைபெறுவாய்." என்ற சாபத்தையும் ஒருவாறு தணிக்கும் பொருட்டுப் பலவித உபாயங்களைக் கண்டுபிடித்துக் கையாடிவருகின்றனர்.

ஆகையால், பிள்ளைப்பேறு கடவுளின் சாபமென்று அசைதிய மடையக்கூடாது. பிள்ளைகளைப்பெறவும், பல்கிப்பெருக்கிப் பூமியை நிரப்புவதற்காகவுமே ஸ்திரீயைக் கடவுள் படைத்திருக்கிறானென்பது அனைவருக்குண்டாகும் மாதாந்தா ருதுவினால் தெற்

றைவிளங்கும். காரியமிப்படியிருக்க, பேறுகாலத்தில் வேதனை யடைவது, இயற்கைப் பிரமாணத்திற்குட்பட்டு நடவாததின் தண்டனையேயன்றி வேறல்ல. சுகமான ஜீவியத்திற்குரிய வழி களைக் கண்டுபிடித்து அதன்படி நடப்பவர்களுக்கு வேதனையே யிருக்கவேண்டிய அவசியமில்லை. பேறுகாலத்தில் மோசங்கள் நேரிட்டால் அதற்குக்காரணம் ஸ்திரீ அறியாமையினல் நடப்பித்த கிரியைகளே. வேதனையில்லாமல் பிள்ளைபெறும் மிலேச்சரின் நடவடிக்கை முறைகளைக் கவனித்துப்பார்த்தால், (முதலாவது) அவர்கள் சுத்த ஆகாயமுள்ள வெட்டவெளியில் அதிகமாய் வாசஞ்செய்கிறார்கள். (இரண்டாவது) அதிகமாய்ச் சரீரப்பாடு படுவதனல் தேகத்தை ஆரோக்கியமான ஸ்திதியில் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

இதனல் நாம் அறிவதுயாதெனில்:—நன்றாய் வீட்டுவேலை முதலியனவைகளைச் செய்து சரீரத்தைச் சுகமும் பலமுமான ஸ்திதியில் வைத்திக்கொண்டு, சுத்த ஆகாயத்தைச் சுவாசிக்கும் பொருட்டு அடிக்கடி வெளியில் உலாவித்திரிபவர்களுக்குப் பேறுகாலத்தில் யாதொருகஷ்டமும் நேரிடாதென்பதும், வேதனையானது பேறுகாலத்துக்கடுத்தது என்றறிவது தப்பிதமென்பதுமேயாம். ஆனல், யாதொரு நோயுமில்லாதபடி பிரசவிக்கும் நன்மையையடைய வேண்டுமானல் அதற்காகவேண்டிய சில முறைகளை நெடுங்காலம் கையாடவேண்டியது அத்யாவசியம். ஸ்திரீயானவள் தான் பிறந்த நாள் முதல் தன் பிள்ளைபிறக்கும் நாள்வரைக்கும் அனுசரித்து வந்திருக்கும் நடவடிக்கைகளும் கிரியைகளுமே அவள் பேறுகாலத்தில் யாதொருகஷ்டமும் நஷ்டமும் வேதனையுமில்லாமல் தப்பித்துக்கொள்ளும் வகையாகும்.

"அவரவர்வினையிலவரவர் வருவாரவரவர்வினையளவுக்கே
அவரவர்போகமென்றுதியாயிருக்கார் துணையதாகுவர்கள்."

என்று சொல்லியிருப்பதுபோல் அவரவருடைய கிரியைக்குத் தக்கதாக லாபநஷ்டங்கள் நேரிடுமென்பதைபறிக. விசேஷமாக கர்ப்பவதியாயிருக்குங் காலத்தில் தாயானவள் செய்யுங் கிரியை களுக்கும் அநுபோகத்திற்குத் தக்கதாகக் குழந்தைக்கும் பலவித மாறுதல்கள் உண்டாவதும் எளிதாய்ப் பிரசவிப்பதும் உண்டாகக் கூடியதென்பது யாவருமறிந்த விஷயமே. ஆரம்பத்திலேயே வைத்திபர்களுக்குத் தெரிவித்திருந்தால் எந்த வியாதியும் நீங்கி னளிதில். சொஸ்தமாகலாமென்று ஓர் பெயர்போன டாக்டர் சொல்லியிருக்கிறார். ஆகலால், "வெள்ளம் வருமுன் அணை போட்டுகொள்ள" என்ற பழமொழிப்படி கூடிய ஜாக்கிரதை

யாய் இயற்கைக்கு விரோதமின்றி நடந்து கொண்டு வருவதாலும், இப்புஸ்தகத்தில் சொல்லியிருக்கும் விஷயங்களை யநுசரித்து வருவதாலும் யாதொரு கஷ்டமின்றிப் பிள்ளைகளைப் பெற்றுச் சுகித்திருக்கலாம்.

இதை வாசிக்கும் ஸ்திரீயே! நீ கர்ப்பவதியாயிருந்தால் பேறுகாலத்தைப்பற்றி விபரீதமாயெண்ணிப் பயப்படாதே. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதுபோல், பயத்தினாலேயே அநேகருக்குச் சுகமும் பலனுங் கெட்டு ஆபத்திற் காளாகிவிடுகிறார்கள். பயத்திற்குக் காரணம் அறியாமையேயாம். அறியாமையே பயமாகும். பயத்தைத் தீர்க்கும் ஔஷதம் ஆராய்ச்சியாலும் அநுபோகத்தினாலும் உண்டாகுமன்றி மற்றவை. தனக்கு நன்றாய் விளங்கிய காரியத்தைப்பற்றி எவர்க்கும் பயமிராது. இவ்வுலகத்தில் நீ பயப்படவேண்டிய காரியங்களில்லையென்று நம்ப ஆரம்பித்தவுடன் சுகல நன்மைகளுங் உனக்குக் கிடைக்கும். ஆகலால் இச்சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை நன்றாய்க்கற்றறிந்துகொண்டவளாகி நீ பேறுகாலத்தைப்பற்றிய பயமெல்லாம் உன்னைவிட்டு நீங்கிச் சுகமும் பலனுமாய்ப் பிள்ளைகளைப் பெற்றுப் பெரும் பாக்கியவதியாவாய்.

பிரசவச் சின்னங்கள்.



இவ்வத்தியாயத்தில் பிரசவவேதனை எப்பொழுது ஆரம்பிக்குமென்பதை யறியக்கூடிய சில சின்னங்களை விபரித்துச் சொல்வதுடனே, காப்பவதிகாலத்தில் நடந்து கொள்ளவேண்டிய காரியங்களைப் பற்றியும் விவரித்துக் கூறுவோம். புதிதாய்க் கர்ப்பவதியான ஒவ்வொரு ஸ்திரீக்கும் இவை மிகவுபயோகமுள்ளதாயிருக்கும். முன்னமே குழந்தைகளைப் பெற்றும் பேறுகாலத்தின் வருத்தங்களை யநுபவித்தவர்களுக்கு யாதொரு பயமாவது மனோவியாகூலமாவது உண்டாகமாட்டாது. ஆனால், தலைப்பிள்ளைகளைப் பெறப்போகும் ஸ்திரீகளோ பேறுகாலம் கிட்டிவிட்டதே! என்னமோ ஏதோ! என்று சிலசமயம பயப்படுவார்கள். ஒவ்வொரு அறிகுறிகளும் அவளுக்குப் புதிது புதிதாய்த் தோன்றும். ஆதலால், தான உள்ளபடி அடையுஞ் வருத்தத்தைவிட அதிகமாகவே வருத்தமாயிருக்குமோவென்று பய

மூண்டாகலாம். ஆனல், பிள்ளே பிறந்தவுடன் இவ்வளவுதாணு பேறுகாலத்தின கஷ்டம். இதைப்பற்றி நாம எப்படியெல்லாம்மா எண்ணியிருந்தோமேயென்று ஆலசூயமாய் நினைப்பாள். இவ் வுலகத்தில் தாய்மாராகும் எல்லாஸ்திரீகளும் தங்கள் புத்திரரைப் பெறும்போது அடையும் கஷ்டந்தாமென இது. பாடில்லாயல் பலன் அநுபவிக்க முடியுமோ? புதிரச்செல்வம் அடைய வேண்டுமானல் அதற்குரிய சில கஷ்டங்களுமிருக்கும். ஆகலால், பேறுகாலதனைப்பற்றி விபரீதமான எண்ணங்கொள்ளாமல், இப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் விதிகளைமாத்திரம் கையாடி வருவோர்க்குப் பிரசவ வேதனையில நிஞ்சித்தும் கஷ்டமேயிராது.

பழுத்த பழமானது செடியிலிருந்து தானகவே விழுவது போல, கருத்தரித்த நாற்பது வாரம் அலலது இருநூற்றெண்பது நாளைக்குப்பின முன்னூறு நாளுக்குள்ளாகக் காப்பத்திலிருந்து சிசு வெளிப்படும். இச்சமயம் உண்டாகிற நோய்க்குப் பிரசவ வேதனையென்று சொல்வார்கள். பிரசவமாவதற்குச் சில நாட் களுக்கு முன் சில குறிகள தோன்றும். சிலருக்கு யாதொரு குறியுந் தோன்றுமலும் நோய் விசேஷமாயில்லாமலும் பிரசவிப் பாகள். சில சமயங்களில் ஸ்திரீ நடந்துகொண்டிருக்கும் போதே அல்லது உட்கார்ந்திருக்கும்போதே அல்லது தூங்கும் போதே குழந்தை பிறந்துவிடும். ஆனல சாதாரணமாய் ஏறக் குறைய பதினைஞ்சு தினங்களுக்கு முன்னே சில குறிகள் காணப் படும். வயிறு தாழ்ந்திருக்கும். அதனல் சுவாசம விடுவதில் ஸ்திரீக்கு யாதொரு கஷ்டமுமிராது. சரீரம் லேசாயிருப்பதாக தோன்றும். போஜனம் நன்றுப்ச் சாப்பிடுவாள். சாப்பாடும் எளிதில் ஜீரணிக்கும். ஆனல், கர்ப்பாசயம் கீழே இறங்கி மூத் திரப்பையையும் அடிவயிற்றிலுள்ள மற்ற அவயவங்களையும் நெருக்கி அமிழ்த்துவதனல் சிறுநீர் இறங்கும். ஆனல், நீர் தாராளமாய் வராது. சில சமயம இருமல் நகைப்பு முதலிய காரணங்களால் துணி நனையத்தக்கதாக நீர் தானேயிறங்கும். அடிக்கடி கூட அடிக்கடி மல விசர்ஜனமுமாகும். இவ்விதம் மலம் தாராளமாய் இறங்குவது மிகவும் நல்லது. ஏனெனில், சிறு குடலைச் சுத்தப்படுத்திக் குழந்தையின் சிரசு தாராளமாய் வெளியே வரும்படி இடம் உண்டாகிறது. பேறு காலத்திற்கு இரண்டு வாரத்திற்கு முன் இவ்விதம் மலந்தாராளமாய்ப் பிரியா விட்டால் மலச்சிக்கலுக்கு நாம் சொல்லியிருக்கும் முறைகளைக் கையாடவேண்டும். பேறு காலத்திற்குச் சில நாளைக்கு முன் கொஞ்சம் நோயுண்டாகிச் சளிபோன்ற உதிரம் வரும். நடக்கும் போது, கில்கள் நோகும். நிஜமான பிரசவவேதனை ஆரம்பிப்ப

தற்கு இருபத்துநாலு மணி நேரத்திற்கு முன்னே யோனியி லிருந்து சளிபோலுதிரங் கலந்த திரவம வெளிப்படும். இப்படி இரத்தம் வருவதற்குக் குறிகாண்ட லென்று பெயர். இதனுடன் யோனியெல்லாம் நனைந்து, தளர்ந்து, மிருதுவாகி, அகலமாவ தற்கு ஆரம்பித்துவிடும். பிறகு பிரசவவேதனை ஆரம்பிக்கும்.

பிரசவம்.

பிரசவமானது கிரமப்பிரசவம், கிரமாதீதப்பிரசவம் என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

கிரமப் பிரசவத்தில் தலையின் பின் உச்சி முதலில் தோன்றித் தாய்க்கும் சிசுவுக்கும் யாதொரு ஆபத்துமில்லாமலும் சரியான நேரக்காலங்களோடு சரியான காலத்துக்குள் பிள்ளை பிறக்கும்.

கிரமாதீதப் பிரசவத்தை ஆறு பிரிவாக வகுக்கலாம்.

1. நீடித்த பிரசவம்.

2. பிரசவகாலத்தில் சிசு தோற்றமில்லாமல் ஆசனம், கால், கை, நஞ்சுக்கொடி முதலானவைகளில் ஏதாவதொன்று தோன்றுதல்.

3. ஒன்றுக்கு மேற்பட்ட சிசுக்களாலுண்டாகும் பிரசவவேதனை.

4. ஜன்னிபோலுகூடிய பிரசவம்.

5. இரத்தப் பெருக்கோடுகூடிய பிரசவம்.

6. கருப்பை அல்லது அதன் பக்கங்களிலுள்ளவை பிரசவ நோய் உண்டாகும்போது வெடித்தல்.

கிரமப்பிரசவம்.

பிரசவவேதனை (1) சூட்டுவலி (2) பிரசவவலி என இரு வகைப்படும், இதை ஸ்திரீகள் வெகு குறிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது. சூட்டுவலி சாதாரணமாய் முன் வயிற்றில் தோன்றும். இளைப்பையாவது குடலாவது சீர்கெட் டிருத்தல், சாப்பிட்டபோஜனம் ஜீரணமாகாதிருத்தல், ஈரத்தில் நெடுநேரம் நிற்குதல், புத்தியீனமான செய்கைகளைச் செய்தல், நெடுநேரம் நடத்தல், முதலிய காரணங்களினால் இந்நோய் காண்ப

தண்டு. அது கிரமமாகவராது. குறி காணுவதுமரிது. எளிதில் ஜீரணிக்கத்தக்க வஸ்துக்களைப் புசித்துச் சுகமேபதி மருந்துகளையருந்துவதனால் இவ்வலிவராமல் தடுக்கலாம். இந்நோய பிரசவ காலத்திற்கு வெகு நாளைக்கு முன்னமே தோன்றுவதுண்டு.

சிகிச்சை. (1) இரண்டு சுக்குத்துண்டைக் கொஞ்சம் சீரகத்துடன் தட்டி வதக்கி அதில் அரைப்படி தண்ணீர் விட்டு வேகவைத்து ஆறாக்காக வற்றியவுடன் ஒரு கொட்டைப்பாக்களவு பசுவெண்ணெய் போட்டுக் குடிக்க நோய் நின்றுவிடும்.


2. ஒரு அவுன்ஸ் நல்லெண்ணெயில் ஒருதிராம் அபின் திராவகம், (Laudanum) கலந்து வயிற்றில் பூசவும்.

சரியான பிரசவவலி சூழ்ந்தை பிறக்கும் காலங்கிட்டிவிட்டதெனக்காட்டுங்குறி :—இந்நோய் முதலில் லேசாய் ஆரம்பித்தப் பிறகுகொஞ்சங் கொஞ்சமாய் அதிகரித்துக் கிரமமாகத் தோன்றும். பிரசவவேதனையை மூன்றுபாகங்களாக வகுக்கலாம். (1) கர்ப்பாசயத்தின வாய், யோனி முதலான இடங்கள விசாலமாதல், (2) சிசு உதயமாதல், (3) மாயை முதலான பிண்ட விசேஷங்கள் வெளிப்படுதல்.

முதற்பாகத்தில் கருப்பையின் முயற்சியேயுண்டு. இரண்டாம்பாகத்தில் வயிற்றுச் சதைகளும் சால்தாங்கியும், (Diaphragm) சகாயமாகும். அதுவே முக்கலுக்குக்காரணம். மூன்றாம்பாகத்தில் யோனித்தசைகள் சுருங்கி கஞ்சைவெளிப்படுத்தும்.

முதற்பாகத்தில் பிள்ளைநோய் அற்பமாய் ஆரம்பித்து வவ்வா விசேஷமாகும். கர்ப்பாசயம் மடிதடிமடித்து சிசுவை உதைத்து வெளிப்படுத்துவதற்குச் செய்யும் எத்தனமே இவ்வலிக்குக் காரணம். அதுமுதலில் தோன்றிக்கிரமமாய் அடிவயிற்றின் கீழ்ப்பாகம்வரையில் இறங்கும். வாயால் அறுப்பது போலவும் மெல்லுவது போலவுமிருக்கும். இருபது நிமிஷத்துக் கொருதடவை நோயுண்டாகும். பிரசவநோய் அற்பமாயிருந்தால் சிசு வெளிப்படத்தாமதிக்கும். வேதனை எவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கனுகூலம். ஸ்திரீ படுத்திருக்காமல் அங்குமிங்கும் உலாவி சீக்கிரம் வேதனையை அதிகரிப்பது நன்று. பிரசவகாலம் கிட்டநெருங்கநெருங்க வலியதிகமாகும். மூச்சுவிடமுடியாது. பல மாய்க்கொஞ்சம் முக்குவாள். இப்போது வாந்தியாதல் நல்ல குறி. ஏனெனில், கர்ப்பாசயத்தின்வாய் விசாலமாய் விட்டபோது வாந்திகாணும். ஆனால், காப்பிப்பொடி கலந்ததுபோல் கறுப்பாய்

வாந்தியாதல் பலவீனத்தைக் காட்டுங் கெட்டகுறி. இப்போது ஸ்திரீ அசதாரியமடைந்து ஆயாசப்பட்டு அழுவாள். ஒவ்வொரு சமயத்தில் பிதற்றுவாள். பற்கள் ஜில்லென்று குளிரினல் கட்டும். சிசுவின் தலை கர்ப்பாசயத்தின் வெளித்துவாரத்தில் வரும்போது குளிருதறல் உண்டாகும். வலியிருக்கும்போது வயிற்றின் மேல் கையை வைத்துப்பார்த்தால், கருப்பாசயம் கல்லைப்போல் திருத்தமாய்க் கைக்குத்தட்டுப்படும். வலிநின்றவுடனே மிருது வாயிருக்கும். ஆயாசத்தினல் தூங்கிவிடுவாள். திரும்பவும் ஒரு வலி உண்டானவுடன் விரலையோனிக்குள் செலுத்தி அங்குலப் பரீட்சையால் சிசு எவ்வளவு தூரத்திற்குள் உதயமாகுமென்றும் முதலாவது உதயமாவது சிசுவின் சிரசோ மற்றெந்தப் பாகமோ வென்றும் கண்டுபிடிக்கலாம். சாதாரணப் பிரசவத்தில் சிரசு முதலில் உதயமாகும். சில பிரசவங்களில் கால் அல்லது கை முன்னல் வரும்.




இரண்டாவது பாகத்தில், சிசுவானது நீர்த்திக்கொண்டிருக்கும் பனிக்குடம் உடைந்து வெளிக்கு வரும். இந்தப் பனிக்குடம் தளர்ந்தது ஸ்திரீக்குக் கஷ்ட நிவாரணமானதுபோல் தோன்றிச் சுவாசம் தாராளமாய்ச் செல்லும். சற்று நேரம் வலியில்லாதிருந்த போதிலும் சீக்கிரம் அதிகரிக்கவும் முக்கலும் உண்டாகும். ஸ்திரீயின் முகம்வாடிக்குரல் கம்மிக்கொண்டு பேசுவாள். கையால் எந்த வஸ்துவையாவது பிடித்துக்கொண்டு காலைச் சுவரின் மேல் உதைத்துக்கொண்டு முக்குவாள். இப்போது விரல்விட்டுப் பார்த்தால் குழந்தையின் சிரசு நன்றாய் வாலுக்குத்தென்படும். வலிவந்து நிற்கும்போதெல்லாம் சிரசு வெளியேவந்து உள்ளே போய்க்கொண்டிருக்கும். தலை யோனித்துவாரத்தில் வரும்போது ஆசனத்தினின்று மலம் வெளிக்குவரும். தலை யோனித்துவாரத்தின்று வெளியில் வரும்போது விசேஷ வலியுண்டாவதால் ஸ்திரீ ஒரு பெரியகூச்சல்போட்டுப் பெரியமுக்கு முக்கத் தலைவெளியில்

வரும். சுவாசாப்பியாசஞ் செய்யும் பழக்கமுள்ள ஸ்திரீகள் நன்றாய் மூச்சடக்கி முக்கக்கூடுமாதலால் கஷ்டம் அதிகமில்லாமல் குழந்தை பிறந்துவிடும். இதைப்பரீட்சித்துப் பார்க்கவும். அதற்குப்பின் சற்றுநேரம் நோய் நின்றிருக்கும். உடனே வலிகண்டு சிசுவின் மற்றப் பாகங்கள் பூர்த்தியாய் வெளியே வந்துவிடும்.

மூன்றுவது பாகம். குழந்தை பிறந்தவுடன் சற்றுநேரம் நோய் நின்று தைரியமுண்டாகும். கால்மணி நேரத்திற்குள் சொற்பவலி கண்டு மாயை (Placenta or after-birth) விழுந்து போம். இந்த மாயையுடனே சிறிது இரத்தங்கூட வெளியில் வரும். இதோடே பிரசவ வேதனை முடிந்ததாகும். பிறகு அடிவயிற்றைக் கையால் தடவிப்பார்த்தால் கர்ப்பாசயம் தேங்காய்ப் பிரமாணம் கைக்கு அகப்படும். இதற்குப்பின்பும் இரண்டொரு தினங்களுக்கு வலியிருக்கும். இந்த வலி நல்லது. பிரசவமான ஒரு மாதத்திற்கெல்லாம் கருப்பாசயம் கரைந்து சாதாரணமாய்த் தானிருக்கும் அளவிற்குவந்து தன்னிலையில் வந்துவிடும்.

பேறுகால ஆயத்தமும், நடந்துகொள்ளவேண்டிய விதமும்.



பிரசவகாலம் கிட்டிவிட்டதென்று ஸ்திரீ பயப்படாமல் தைரியமாய் கடவுளின் ஒத்தாசையை மன்றாடிக் கொண்டு அமரிக்கையாயிருந்து மருத்துவச்சியையும் வைத்தியரையும் அழைத்துவர ஆளனுப்பவேண்டும்.

அவர்களிருவரையும் முன்னமே நிர்மானித்து வைப்பது மிக்க நலம். அவர்கள் வேலையில் திறமையுள்ள அநுபோகஸ்தர்களாயும், வெகு சமீபத்தில் குடியிருப்பவர்களாயுமிருந்தால் வெகு உத்தமம். பேறுகாலத்திற்கு இரண்டு வாரத்திற்கு முன்னமே மருத்துவச்சியை வரவழைத்து வீட்டிலேயே வைப்பது மிகநல்லது. ஏனெனில், அவள் என்ன நேர்ந்தாலும் சமயோசித சிகிச்சைசெய்ய ஆயத்தமாயிருப்பாள். அவள் தொத்து வியாதிகளிருக்குமிடங்களிலிருந்து வரக்கூடாது. பிரசவ காலத்திற்கு அவசியமவேண்டிய எல்லா சாமான்களையும் முன்னமே ஜாக்ரதையுடன் தயார்செய்து வைத்துக்கொண்டால் மிகநல்லது. அவையாவன :—

குழந்தைக்குவேண்டிய துணிகள், குழந்தை பிறந்தவுடனே அதன்மேல் போடுவதற்கு ஒரு பெரிய கம்பளித்துணி, சிறுதுண்டுகள் அல்லது துவாலைகள் (Towels), வயிற்றுக்குக் கட்டுமிற துணி, கூர்மையற்ற குண்டூசிகள் (Safety Pins), பிரசவித்த ஸ்திரீக்குப் படுக்கை முதலியவைபோட மெழுகுசீலை அல்லது மெழுகுத்துணி (Oil Cloth), பிரசவவலியிருக்கும்போது பிடித்துக்கொள்ளும்படி விட்டத்தில் அல்லது கட்டிலில்போட ஒரு பெரியகயிறு, குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியை யறுக்க ஒரு மழுங்கல் கத்திரிக்கோல், தொப்புள்கொடியை இரண்டு சுற்றுப்போட்டுக் கட்டுவதற்குச் சன்னமான ஒரு நூல் கயிறு, ஒரு கார்பாலிக் சோப் (Carbolic Soap) வாஸ்லின் தைலம், (Vaseline) அல்லது விளக்கெண்ணெய் காண்டித் திராவகம், (Condy's fluid). ஆகிய இவைகள்தான் அவசியம். பிரசவம் மழை காலத்தில் அல்லது குளிர்காலத்தில் சம்பவிக்குமாயின் ஒரு அணற்சட்டி தயார்செய்து அதற்குமேல் உமிப்புகள், துண்டுகள், கம்பளி முதலியவற்றைத் தொங்கவிட்டிருந்தால் அவைகள் நன்றாய் உலர்ந்து உஷ்ணமாகவேயிருக்கும். வேண்டிய பொழுது எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம். வெந்நீர் குளிர்ந்த ஜலம் இரண்டும் சமீபத்திலேயே இருக்கவேண்டும்.

இரத்தப் பிரவாகம் அதிகமாகிறபோதும், பிரசவித்தபின் பல வினத்தினால் ஸ்திரீ ஆபாசமடையும்போதும் வேறுசில அவசரங்களிலும் டாக்டர் பிராந்தி உபயோகிப்பார். ஆகையால், ஒரு பாட்டல் பிராந்தியும் வாங்கிவைத்திருக்கவேண்டும். ஆனால், டாக்டர் அதை மருந்தாய் உபயோகித்தாலன்றி வேறெந்தக் காரணத்தாலும் அதைத்தொடவேகூடாது. அப்படி உபயோகத்தால் அதே கெடுதிகளுக்கிடமாகும்.

பிரசவவலி ஆரம்பித்தபிறகு ஸ்திரீக்குச் சாப்பாட்டின்பேல் பிரியமாதது. சாப்பிடச்சொல்லுதற் தப்பிதம். ஆனால் காப்பி, ஆரூட்சஞ்சி, அல்லது வேறெந்தக் கஞ்சியாவது கொடுக்கலாம்.

பிரசவகாலத்தில் மலஜலந் தங்காமல் செய்யவேண்டிய முறைகள்.

மருத்துவச்சியானவள் ஸ்திரீக்கு மலச்சிக்க விருப்பதாகக் கண்டால் பேறுகாலவலி ஆரம்பிக்கிற தருணத்தில் அந்த ஸ்திரீயின் குடல் சக்திக்குத் தகுந்த ஒரு காண்டி விளக்கெண்ணெய் கொடுக்கவேண்டும்.

அல்லது வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஆமணக்கெண்ணெயில் வேகவைத்து, அதில் கோழிமுட்டை ஒன்றை உடைத்துவிட்டுக் கிண்டிக் குழந்தை வலி கண்டவுடன் கொடுத்தால் மலம் சுத்தியாகிக் கஷ்டமின்றிக் குழந்தை பிறக்கும்.

அல்லது, பீச்சாங்குழலி (Fountain Syringe) னுலும் அரைப்படி வெந்நீரில் இரண்டு கழஞ்சி சோப்புக் கலந்து ஆசனத்திற் செலுத்த மலம் சுத்தியாகும். அப்படிச் செய்வதால் எளிதில் பிரசவமாகும். அவ்விதங் குடல் சுத்தப்படுத்தா திருந்தால், குழந்தை பிறக்குஞ் சமயத்தில் மலந் தானுகவே வெளியாகி அசுசிப்படுத்தும்.

இதேமாதிரியாகப் பிரசவமாகு முன்னமே அடிக்கடி மூத்திரம் பெய்துகொள்வதும் நல்ல சுகத்துக் கேதுவாகும். வெட்சுத்தினுல் நீரை அடக்கினுல் பிற்பாடு நீர் பிரிவது கஷ்டம்.

நீரிறங்காவிடில், படிகாரம், வெடியுப்பு, இந்துப்பு இவற்றில் வகைக்குக் கால்கழஞ்சி எடுத்துப் பொரித்து, நீர்முள்ளிக் கஷாயத்தில் ஒருமுறை குடிக்க நீர் பிரியும். அல்லது:—

ஸ்திரீயைத் தண்ணீர்க் கரையில் நிறுத்தி அவள் கண்முன் தண்ணீரை மறைத்திக்கொண்டிருந்தால் நீர் உடனே பிரியும்.

பிரசவ நிர்வாகம்.

ஸ்திரீ இருக்கும் அறை சுத்தக்காற்று உலாவத்தக்கதாய் விசாலமுள்ளதாயு மிருக்கவேண்டும்.

பிரசவ வேளையில் சத்தம், சந்தடி, கூக்குரல் ஆகாது. பிரசவ வேளையில் இரண்டு மூன்றுபேர் மாத்திரம் கூடியிருக்கலாமேயன்றி அநேகர் இருக்கக்கூடாது.

சிசுவின் தலை தெரியுமுன், ஸ்திரீயை முக்கும்படி பலாத்காரஞ் செய்யக்கூடாது.

வெளியுறப்பு விரைத்திருந்தால் ஒரு ஸ்திரீ வெந்நீரில் துணியை நனைத்து ஒற்றடங் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அல்லது ஆட்டுக்கொழுப்பை யோனிக்குள் பூசவேண்டியது.

பிள்ளை பிறக்கும்போது விடபத்தைத் தாங்கிக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிடில் அதுகிழிந்து, யோனிக்கும் கடைக்குடலுக்கும் ஒரு வழியுண்டாகும்.

மருத்துவச்சி விநோதமும் விளையாட்டுமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டே பிரசவிக்கும் ஸ்திரீயை உற்சாகப்படுத்தி மனைதரியத்தை விளக்கவேண்டும். "துன்பத்துக்குப் பின் இன்பம் வரும்." என்று இஸ்ரவேலின் இனிய சங்கீதக்காரனுடைய வசனங்களைப் போன்றவைகளை எடுத்துச் சொல்லி, அவளுக்காறுதலும் உற்சாகமும் முண்டாகத்தக்கதாகப் பேச வேண்டும். அவற்றிற் சிலவற்றை இங்கு கூறுவோம்:—

"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள்."

"நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி அவர்களைத் தேற்றி அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்."

"சாயங்காலத்தில் அழுகை தங்கும்; விடியற்காலத்தில் களிப்புண்டாகும்."

"நான் உபத்திரவப் படுங்காலத்தில் அவர் எனக்கு உதவி செய்தார்."

முதலிய சில ஆறுதலான வாக்கியங்களைச் சொல்லி, அவள் தன் இனிய நற்பாலனை இன்புறுங் காங்களில் ஏந்துங்காலஞ் சமீபித்து விட்டதென்று தேறுதல் சொல்லவேண்டும்.

மருத்துவச்சியினிடத்தில் ஸ்திரீயானவள் தன் தைரியத்தை, மனவிருத்தி, பிரசவ வேதனையின் இயற்கை இவற்றைப் பற்றி அவள் கேட்குங் கேள்விகளுக்கு ஒன்றையும் ஒளிபாமல் பரிவுகாமாய்ப் பதில் சொல்லவேண்டும்.

சிசு உதயமாதல்.

கருப்பை சுருங்கும்போது நோயுண்டாகிறது. பேறுகால வலியானது சாதாரணமாய் ஆறுமணி நேரமிருக்கும். இதில் முதல் நாலுமணி நேரமும் கர்ப்பாசயவழி முதலியவை விரிதல், கடைசி இரண்டுமணி நேரத்தில் சிசு உதயமாதல். சிசு பிறந்தவுடன் மாயை வெளியாகிவிடும். சில சமயங்களில் ஐந்து முதல் முப்பது நிமிஷம் வரையில் செல்லும். குழந்தை பிறக்க எவ்வளவு நேரஞ் செல்லுமென்று கண்டு பிடிக்க மருத்துவச்சி தன் விரலை விட்டுப் பரீட்சை செய்யவேண்டிய தவசியமாகையால், அதற்கு ஆக்ஷேபணை செய்யாமல் தன் தலையையும் புஜங்களையும் தளிவான ஸ்தலத்திலும், தொடைகளையும் முழங்கால்களையும் மடக்கிக் கொஞ்சம் உயரமாயும் வைத்துக்கொள்ளவேண்டும். மருத்துவச்சி வாஸ்லீன அல்லது விளக்கெண்ணெயைக் கையில் தடவிக்கொண்டு ஸ்திரீக்கு வலியுண்டாகும்போது தன் சுண்டுவிரலை யோனிக்குள் செலுத்திச் சற்றுநேரம் வைத்துக்கொண்டிருந்த பிறகு குழ

ன்தை எந்தக் கிடையி லிருக்கிறதென்றும், சிரோதயமாவதற்கு எந்நேரமாகு மென்றுஞ் சொல்லுவாள். கருப்பையின் வாயினுள் ஒரு விரல் செல்லத்தக்கதாக விரிந்திருந்தால் 24 மணி நேரத்திற் குள் குழந்தை பிறக்கும். இவ்விதப் பரீட்சை செய்வதில் யாதொரு உபாதையுமிராது. பிரசவ வேதனை பிரதம ஸ்திதியில் ஆரம்பித்திருக்கிற தென்றால் கர்ப்பிணி எழுந்திருந்து அறைக்குள் ளேயே உலாத்திக் கொண்டிருக்கலாம். அல்லது ஒரு நாற்காலி யில் உட்காரலாம். அவளுக்கு இத்தருணத்தில் காய்ச்சினபால், இறைச்சிரசம் (Soup) அல்லது பாலுந் தேயிலைத் தண்ணீருங் கலந்து குடிக்கக் கொடுக்கலாம். இத்தருணத்தில் ஸ்நானி வாங்தி செய்தால் அது நல்ல குறி. எவ்வனில், அது கர்ப்பாசயத்தின் வாயை அகன்று விரியுமபடி செய்கிறது. ஆயினும் வாந்தி அதி [illegible] ஞ்சும் சோடாதண்ணீர் குடிக்கக் கொடுக்க [illegible] க்கவே கூடாது. பிரசவ ஆரம்பத்தில் கர்ப் [illegible] டைகளை யுடுத்திக்கொண்டிருக்கலாம். ஆனல் [illegible] முன்னமே உடுப்புகளைக் கழற்றி எடுத்து [illegible] ரு டலெலிய வஸ்திரந் தவிர மறவெறுன்றும் தேக த்தி லிருக்க விடக்கூடாது. காலில் டெல்ஃஜாடு போட்டுக்கொண் டிருக்கலாம். பிரசவத்திற்காகப் படுக்கையின்மேல் ஒரு மெக்கின் ரூஷ் துணியாவது, தார் தடவின பெட்டுத் துணியாவது அல்லது பெழுகுத் துணியாவது விரித்திருக்க வேண்டும். (Hartman's Sanitary wood wool Towel) மிகச் சிலாக்கியமானவைகள். ஆரம்பத்திலேயே வலி அதிகமாயிருந்தால் வலி நிற்கும் வரையில் நாற்காலியிலாவது படுக்கையின ஓரத்திலாவது சாய்ந்துகொள்ள லாம்.

பிரசவ ஸ்திரீயை வைப்பது தேசத்திற்குத் தேசம் வித்தியா சப்படும். நமது நாட்டில் சில இடங்களில் உட்கார வைக்கிறார் கள். சில தேசத்தில் முழங்கால்மேல் நிற்க வைப்பதும், பிரான்ஸ தேசத்தில் மல்லாக்க வைத்து முழங்காலை முடக்கி வைப்பதும் வழக்கம். இங்கிலீஷ்காரர் ஸ்திரீயைக் கட்டிலின்மேல் இடது பக்கமாய்ப் படுக்க வைத்து, பிராஷ்டத்தைக் கட்டிலின் ஓரமாய் நகர்த்தி, முழங்காலை முடக்கி வயிற்றோடு அணைத்துத் தலையணை யைக் கால்களுக்கு மத்தியில் வைப்பதும் வழக்கம். இது எல்லா வற்றைப் பாகதிலும் மிகவும் நல்லது. ஸ்திரீக்கு நோய் வரும் போது அருகிலிருப்பவர்களின் கையைப் பிடித்துக்கொள்ளும்படி செய்யலாம். பிரசவ சமீப காலத்தில் போஜனம் கொடுக்கலாகாது.

சில நாட்டு மருத்துவச்சிகள் பேறுகாலவலி உண்டான ஆரம் பத்திலேயே பிரசவிக்கிற ஸ்திரீயை மூர்ச்சை யடக்கிக்கொண்டு பலமாய் முக்கச் சொல்லுவார்கள். இதனல் யாதொரு பிரயோச

னமும் மில்லை. ஆனல் ஸ்திரீயை களைக்கச் செய்து வீணன வருத்தமும் காலதாமதமும் உண்டுபண்ணும். மேலும் இப்படிச் செய்வதால் கருப்பை கிழிந்து அபாயம் நேரிடுவதுமுண்டு ஜனனேந்திரிய துவாரத்தில் சிசுவின் தலை தோன்றவே, ஸ்திரீக்குத் தேகம் குளிர்ந்து சிலிர்க்கும். அப்பொழுது உஷ்ணமான கஞ்சி, வெந்நீர் அல்லது தேயிலைத் தண்ணீர் கொஞ்சம் கொடுத்தால் அவளுக்குத் தேகத்தில் உஷ்ணம் பிறந்து சுகமுண்டாகும். இப்பொழுது பனிக்குடம் உடையாமலிருந்தால் மருத்துவச்சி கை நகத்தால் அதைக் குத்திக் கிழித்துவிடுவாள். ஆனல், அநுவசியமாய்க் குத்திக் கிழிக்கக்கூடாது. அப்போது ஜலம் வெகு வேகத்துடன் வெளிப்படும். அதிக வலியிருப்பதால் ஸ்திரீ பயப்படவாவது அழுவாவது கூடாது. ஆனல், வலியுண்டாகு[illegible] யடக்கி முக்கவேண்டியது. கையினல் ஏதா[illegible] பிடித்துக்கொள்வது நலம். ஸ்திரீ பலமாக மூ[illegible] குவதனல் சிசு கொஞ்சங் கொஞ்சமாய் வெளி[illegible] நின்று மறுபடியும் வலி காண்பதற்குள் சில நி[illegible] னல் சுகமுண்டு. பலனுவும் தெரியும். மருத்துவச்சி முதுகை அமுக்கினல் முதுகுவலி நின்று சுகமாயிருக்கும்.

தலை வெளிவந்ததே சில மருத்துவச்சிகள் சீக்கிரமாய்ப் பிரசவமாகுமென்றெண்ணங் கொள்வதனல் அல்லது தாங்கள் சும்மா உட்காந்திருந்தால் வீட்டிலுள்ளவர்கள் மதிக்காமல் மருத்துவச்சியின் உதவியில்லாமலே குழந்தை பிறந்ததென்று சொல்வார்கள் என்ற எண்ணத்தினல் அநுவசியமாய்க் குழந்தையின் தலையைப் பிடித்திழுப்பார்கள். அப்படிச் செய்கிறது நல்லதல்ல. குழந்தை தானுய் வெளிப்பட்டால் அபாயமுண்டாகாது. அப்படியில்லாமல் தலையைப் பிடித்துப் பலவந்தமாய் இழுத்தால் யோனியிலிருந்து இரத்தப் பிரவாகமுண்டாகிப் பிராணனுக் கபாயம் வரும். ஆகையால் இயற்கையான பிரசவத்தில் மருத்துவச்சி ஒரு அபாயமும் இன்றி ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டியதன்றிச் சுபாவமாய் நிறைவேறுகிற பிரசவத்தில் தாம் பிரவேசிக்கவே கூடாது. அப்படிப் பிரவேசித்துவிட்டுத் தாங்கள் அப்படிச் செய்யாவிட்டால் குழந்தை பிரசவமாகுதல் வருத்தமென்றும், தங்கள் சாமர்த்தியத்தினலேயே குழந்தையைச் சீக்கிரத்தில் வெளியேற்றும்படி செய்ததாகவும், நாட்டு மருத்துவச்சிகள் அறிவில்லாத ஸ்திரீகளுக்கு வீண் டம்ப வார்த்தைகள் சொல்வதுண்டு. ஆகையால், இச்சாஸ்திரத்தைப் படித்த அறிவுள்ள பெண்கள் அறிவில்லாத நாட்டு மருத்துவச்சிகளை உபாதை புண்டாக்குங் காரியங்களைச் செய்ய இடங்கொடார்கள்.

தலை வெளிக்கு வந்த சிறிதுநேரத்தில் மற்றப்பாகங்கள் தானே வெளியாகும். அப்படி வராதாமதித்தால் அல்லது சிசுவின் முகம் கறுத்து இரத்தங் கட்டியிருந்தால் உடனே தாயின் வயிற்றின் மேல் ஒருத்தியைக் கருப்பையைக் கையாலழுத்திப் பிடித்துக் கொள்ளச் செய்து, கையிலேச் சிசுவின் வுக்குளில் தூடுபோல் வளைத்துப் பிடித்து இழுத்தால் சிசு சுலபமாய் வெளிவரும். சிசு வைத் தீவிரமாய் இழுத்துவிட்டால் கருப்பை சீக்கிரத்தில் சுருங் காமல் இரத்தம் அதிகமாய் வெளிப்படும். குழந்தையின் சிரசு வெளியே வர வர கோய் அதிகப்படும். அப்போது ஸ்திரீ கட்டா யம் அழுவாள். பிரசவ வேதனையி லுண்டாகிற ஒவ்வொரு வலியும் வருத்தமும் மிக்க அவசியமானவைகளே. ஏனெனில், கர்ப்பா சயமும் தேகத்திலுள்ள தசை நரம்புகளும் குழந்தையை வெளி யில் தள்ள முயல்வதனால்தான் அவைகள உண்டாகின்றன. ஆகை யால், ஸ்திரீயானவள் இக்காலத்தில் தயரப்படாமல் பொறுமை யாகவும் தைரியமாகவு மிருக்கவேண்டும். பிரசவத்தின் இரண் டாம் பாகத்தின் கடைசியில் ஸ்திரீயின் இருதுடைகளுக்கும் நடு விலுள்ள டாகங்களை மருத்துவச்சி தாங்கிக்கொள்ளவதனல் அதிக உபகாரஞ் செய்கிறாள். மருத்துவ ஸ்திரீ பக்கத்திலில்லாவிடில் திடீரென்று குழந்தை பிறந்து கீழே விழுந்துவிட்டால் குழந்தை க்கு அதிகமாயடிபட்டுப் பிராணச் சேதமாவதுமாகும். கோய் கண்டிருக்கும்போது கர்ப்பிணி கூடியமட்டுஞ் சுருண்டு படுத்திருந் தால் அதிக நன்மையுண்டு. லாகிரிப் பானங்களை அருந்தவே கூடாது. ஓர் சமயம் குழந்தையை வெளியாக்குவதற்காக வைத் தியர் இடுக்கியை (Forceps) உபயோகப்படுத்துவாராஞல் அதைக் கண்டு ஸ்திரீ சற்றென்னலும் பயப்படக்கூடாது. இரண்டு கைகளையும் உள்ளே விடுவதற்குப் பதிலாக இடுக்கியை விட்டு எடுப்பது பிரசவ வேதனையை லகுப்படுத்தி நன்மையைக் கொடுக் கும். பிரசவ வேதனை கடினமாக விருந்தால் வைத்தியர் சிறிது குளோரபார்ம் (Chloroform) மயக்கவஸ்து கொடுப்பதுமுண்டு. அதில் மிகச் சிலாக்கியமுண்டு.

குழந்தை பிறந்தவுடன் வீரிட்டழுதால் அதன் சுவாசப்பை அகன்று குழந்தைக்கு மூச்சுவிட லகுவாயிருக்கும். பிறந்தவுடன் அசையாமல் கிடந்தால் அதன் காலிரலில் சுண்டிஞல் அல்லது முகத்தில் குளிர்ந்த ஜலத்தைத் தெளித்தால் உடனே அழத் தொடங்கும். குழந்தை பிறந்தவுடனே அது மூச்சுவிட லகுவா யிருக்குமபடியாக மல்லாத்திக் கிடத்தவேண்டும். குழந்தையின் வாயிலிருந்து கோழையை எடுத்து குட்டையினல் துடைத்துவிட வேண்டியது. குழந்தை அழ ஆரம்பித்தவுடனே குழந்தையின் தொப்புளுக்கும் தாயின் கர்ப்பத்திலுள்ள மாயைக்கு சம்பந்த

மா யிருக்கும் தொப்புட்கொடிக்கு மருத்துவச்சி ஒரு சிறு நூற் கயிற்றினல் குழந்தையின் நாபியினின்றும் இரண்டு அங்குலத் தூரத்தில் ஒரு கட்டும், அதினின்று இரண்டு அங்குலத் தூரத்தில் மற்றொரு கட்டுமாக இரண்டுகட்டு இறுக்கிக் கட்டவேண்டும். பிறகு முன்னமே தயாராய் வைத்திருக்கும் மழுங்கலான கத்தியி னல் அவ்விரண்டு கட்டுகளுக்கு மிடையில் தொப்புள்கொடியைக் கத்தரித்துக் குழந்தையைத் தாயினின்றும் வேறுபடுத்திவிடவேண் டும். அப்படிக் கட்டிக் கட்டி அறுக்காவிட்டால் இரத்தம் வடி ந்து குழந்தை இறந்துபோம்.

கட்டிக்கட்டாவிட்டாலும் குழந்தை ஜனித்த 20 நிமிஷத்தில் தொப்புட்கொடியின் நாடி ஓட்டம் நின்றுவிடும். அதன்பின் அறு த்து விடலாம். சிசுவை வேறுபடுத்தின பிறகு தாயின் வயிற்றை பரிசோதித்து இரட்டைப்பிள்ளை யிருப்பதும் இல்லாததும் தெரி ந்து கொள்ளவேண்டியது.

இனிமேல் குழந்தை தானகவே மூச்சுவிட்டு ஜீவிக்கக் கூடி யது. ஆதலால், அதை ஒரு கம்பளித் துணியினல் சுற்றி ஓரிடத் தில் படுக்க வைத்துவிட வேண்டியது. பிரசவித்த ஸ்திரீக்கு இப் போது சிறிது சூடான பாலாவது, தேயிலைத் தண்ணீராவது குடிக் கக் கொடுக்கலாம். ஆனல், அவள் இப்பொழுது அதிகமாய் அசையவாவது எழுந்து உட்கார்ந்துகொள்ளவாவது கூடாது. இனிக் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சொற்பமாக ஒரு வலியுண் டாகி மாயை வெளியே வந்துவிடும். இப்படித் தானகவே சிக்கி ரம் வெளியே விழாவிட்டால் மருத்துவச்சி அடிவயிற்றை ஒரு கையாலணைத்துக்கொண்டு கர்ப்பாசயத்தைப் பிடித்துக் கொண் டிருக்கவேண்டும். யோனியிலிருந்து தொங்கிக்கொண்டிருக்கும் கொடியை இடது கையால் மெதுவா யிழுத்தால் மாயையுடன் வெளிவரும். அதிக முரட்டுத்தனமா யிழுத்தால் கொடியறுந்து மாயை உள்ளே நின்றுபோய் அதிக உபத்திரவமுண்டாகப் பண் ணும். ஆகையால், கொடியில் நாடியடித்துக் கொண்டிருக்கும் வகையில் மாயை கருப்பாசயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற தென் றறிந்து அதை இழுக்கக்கூடாது. நாடி நின்றுபோய்க் கொடி ஜில்லிட்டுப் போய்விட்டால் மாயை கருப்பாசய சம்பந்தத்தை விட்டு விட்டதென்றறிந்து வலது கையின் இரண்டு விரலை உள்ளே விட்டுக் கொடியைப பிடித்துக்கொண்டு இடது கையால் வெளியி லிருந்து மெதுவாய் இழுக்கவேண்டும். மாயை விழுந்தவுடன் அதை ஒரு சட்டியில் போட்டு வைத்திருந்து சிறிது நேரத்திற் குள் அதை எரித்துவிடவேண்டும். அல்லது புதைத்துவிடவேண் டும். அது சீக்கிரம் நாற்றமெடுத்துச் சரீர சௌக்கியத்துக்குக்

கெடுதி செய்யுமாதலால் அதைச் சூதகா காகத்தில் வெகுநேரம் வைத்திருக்கக்கூடாது.

இனிமேல் உடனே ஸ்திரீயின் வயிற்றைக் கட்டவேண்டியது. இக்கக் கட்டுப் போடுவதின் கருத்தென்னவெனில்:—கர்ப்பாசயத்தைச் சுருங்கச் செய்யவும் இரத்தம் பெருகாமலிருக்கவும் வயிறு கோர ரூபமாகாம லிருக்கவுமே. அதற்காகத் துணியை இரண்டு மூன்று மடிப்பாய் மடித்துக்கொண்டு, கையில் பிடித்துக்கொண்டிருக்கும் கர்ப்பாசயத்தின்மேலே மெத்தையைப் போலப் போட்டு அதன்மேல் குட்டையினல் இடுப்பைச் சுற்றிக் கட்டி வயிற்றின் மேல் துணி நன்றாய்க் கட்டவேண்டியது. நாட்டு மருத்துவச்சிகள் இடுப்புக் கத்தரித்து விழுந்துபோனதுபோல பலமாயிழுத்துக் கட்டுவார்கள். இவ்வளவு மூரட்டுத்தனமாய்க் கட்டுவது தகாதசியமன்று. இரண்டு மூன்று சுற்றுப் போட்டுக் கட்டினல் போதும். பிரசவித்த ஸ்திரீயைப் படுக்க வைத்து ஆயாசப் பரிகாரஞ் செய்துகொள்ளுபடி விட்டுவிடவேண்டும். சிறிது கஞ்சியாவது காய்ச்சின பாலாவது சாப்பிடக் கொடுக்கவேண்டும். அவள் ஒரு வருடனும் பேசக்கூடாது. எழுந்து உட்காரவாவது நடக்கவாவது எவ்வளவும் கூடாது. அப்படிச் செய்தால் கர்ப்பத்தினிருந்து இரத்தம் அதிகமாய் விழுந்து மூர்ச்சை யடைவாள். அவளுக்குக் குளிர்ந்து கூதினல் ஒரு கம்பளியைப் போர்த்தவேண்டும். அதிகப் பலவீனமாயிருந்தால் பரிமள நவச்சாரத் திராவகம் (Spiritus Ammonia Aromaticum) பதினைந்து துளி நீரில் கலந்து கொடுக்கவேண்டும். இரத்தம விசேஷமாய்ப் போதல் எர்கட் திராவகம் (Extract Ergot liquid) முப்பது துளி கொஞ்சம் நீரில் கலந்து கொடுக்கவேண்டும். அடிவயிற்றில் கோபம் அதிகமாயிருந்தால் அபினித் திராவகம (Liquor Opii Sedative) பத்துத் துளி நீரில் கலந்து கொடுக்கவேண்டும்.

குழந்தையை வெந்நீரில் கழுவிக் கம்பளி அல்லது துணி மெத்தையின்மேல் படுக்க வைக்க வேண்டியது. புத்திரனைப் பெற்றதாய் இவ்வளவு வருத்தத்துடன் தான் பெற்றெடுத்த குழந்தையைப் பார்த்தவுடன் தான் பட்டதுபவித்த கஷ்டங்களெல்லாம மறந்து மனமகிழ்ச்சி யடைவாள்.

"நான் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன். என் தாயின் கர்ப்பத்திலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்." சங் 71:6.

பிரசவமானபின் உதிரப்பெருக்கில்லாமல் செய்யவேண்டிய முறை.

குழந்தை பிறந்தபின் மாயை வெளிவரும் வரைக்கும் அதிக ஜாக்கிரதையோடிருக்க வேண்டும். கஷ்டப் பிரசவம், இரட்டைப் பிள்ளைப் பிரசவம் முதலிய சில சமயங்களில் கருப்பாசயத்தில் பலமில்லாமற் போவதால் சிசு பிறந்தபின் இரத்தப் பிரவாகம் சாதாரணமாய் உண்டாகும். கருப்பாசயம் நன்றாய்ச் சுருங்காமற் போனாலும், நடுவில் மாத்திரம் சுருங்கினாலும், கருப்பையில் மாயை பலமாய் ஒட்டிக்கொண்டிருந்தாலும், அநேக குழந்தைகள் பெற்றஸ்திரீகளுக்கும், அதிக பலவீனமானவர்களுக்கும், உதிரப் பெருக்காகும் சரீரத்திலுள்ளவர்களுக்கும். குழந்தை பிறந்த வுடனும் மாயை விழுவதற்கு முன்னும் இவ்விதமான இரத்தப் பிரவாகம் உண்டாகும். இது திடீரென்றாவது படிப்படியாவது உண்டாகி உதிரமானது வெள்ளம்போல் வெளிவந்து தணிகளையும் படுக்கைகளையும் நனைத்துக் கீழே இடமெல்லாம் பாவும். இந்தச் சமயம் அடிவயிற்றின்மேல் கை வைத்துப் பார்த்தால் கெட்டியாய் விருத்தாகாரமாயிருக்கவேண்டிய சண்டுகைக்கு அகப்படாமல் கருப்பாசயம் பெரிதாயும் தளர்ச்சியாயு மிருக்கும். இதை உடனே நிறுத்தாவிடில் நாடி விழுந்துபோம். ஸ்திரீ மூர்ச்சையடைந்து மைகளையுங் கால்களையும் அங்குமிங்குமபோட்டுப் படுக்கையில் புரளுவாள். உடம்பெல்லாம் ஜில்லென்று வியர்வையுண்டாகி பேல்மூச்சுசெடுக்கும். இம்மாதிரியான இரத்தப்பிரவாகம் சம்பவிக்காமல் செய்யவேண்டிய விஷயங்களை இங்கு கூறுவோம்.

குழந்தை பிறந்தவுடன் கையை வயிற்றின்மேல் வைத்து அலாவணி நேரமாவது அழுச்சி அழுக்கிப் பிடிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் இரத்தப் பிரவாகம் அதிகமாய் உண்டாகாது. பிரசவித்தபின் பதினைந்து நிமிஷத்திற் கெல்லாம் நாடி ஒரு நிமிஷத்திற்கு நூறுதடவைக் கதிகமாய்ப் படபடவென்றடித்தல் இரத்தப்பிரவாகம் சம்பவிக்கு பெண்கிற குறியாகும். ஆனகையால் நாடி சரியான அளவுக்கு வருகிற வரைக்கும் வெகு ஜாக்கிரதையாய் வயிற்றை ஒரு கையில்ல் அழுக்கிப் பிடித்து தேய்த்துக் கொண்டே யிருக்கவேண்டியது. மற்றொரு கையால் குளிர்ந்த ஜலத்தை அடிவயிற்றிலும் நிதம்பத்திலும அறைந்தால் கருப்பை சுருங்கும். இப்படிச் செய்வதால் கர்ப்பத்தில் கட்டியிருக்கும் ரத்தம் வெளிக்கு வந்து விழுந்துபோம். அடிவயிற்றின்மேல் கையினல் தடவிப் பார்க்கும்பொழுது கருப்பாசயம் கைக்குத் தளர்ச்சியாய்த் தோன்றினல், உள்ளே கட்டிக்கொண்டிருக்கும் உதிரம் வெளிவந்து கருப்பாசயம் சுருங்கி இரத்தப்பிரவாகம்

நின்றபோம். ஆனல், மூரட்டுத்தனமாய் அமுக்குவதும் பிசைவதும் நன்றன்று. மாஸ்ய வெளியில் விழுந்தவுடன் எக்ஸ்ட்ரேக்ட் எர்கட் லிக்விடம் (Extract Ergotoe Liquidum) நாற்பது துளி அரைப்பலம் நீரில் விட்டுக் கொடுக்கவேண்டும். இதனுல் கருப்பாசயம் நன்றுய்ச் சுருங்கி இரத்தக் கொடிகளெல்லாம் நன்றுய் இழுத்துக்கொள்ளும். இடுப்பில் சீக்கிரமாய்க் கட்டுப்போடக் கூடாது. அரைமணிநேரம் கையினுல் அமுக்கியபின் வயிற்றிற்கும் இடுப்பிற்கும் துணியினுல் இழுத்துக் கட்டுப்போடவேண்டியது. கருப்பாசயத்தில் இரத்தம் கட்டிக்கொண்டிருந்தால் உள்ளே கைவிட்டு எடுத்தெறியவேண்டும். இப்படிச் செய்வதால் கருப்பாசயம் சுருங்கி இரத்தம் விழுதல் நிற்கும். தலையணையை எடுத்துவிட்டு நன்றுய் விசிறவேண்டும். அறையின் ஜன்னல்களை யெல்லாந் திறந்து சுத்தமான குளிர்ந்த காற்று வீசும்படி செய்ய வேண்டும்.

ஆலம் விழுது, ஆலங் கொழுந்து, ஆலம் பூ, ஆலம் வேர். ஆலாவேர் பட்டை, இவைகளைப் பசுவின் பாலிட்டு இடித்த ரசத்தில் அரைப்படி காலையில்மட்டும் சாப்பிட உதிரப் பெருக்கு நின்றுவிடும்.

பூங்காவியையும், உலர்ந்த மாதளம் பூவையும் சமமாகச் சேர்த்து சூரணஞ்செய்து ஒரு வராகனிடை இருவேளை வெண்ணெயில் கலந்து சாப்பிட்டுவரப் பெரும்பாடு முதலிய இரத்தப்பெருக்கு நிற்கும்.

பிரசவித்த ஸ்திரீயைப்பாதுகாக்கும்முறை.

TREATMENT AFTER DELIVERY.

கர்ப்பத்திலும் பிரசவத்திலும் உண்டாகக்கூடிய சகலவித ஆபத்துகளுக்கும தப்பித்துக் கொண்டபோதிலும், பிரசவித்த ஸ்திரீ இன்னும ஒரு மாதம் வரைக்கும் வெகு ஜாக்கிரதையுடன் தன் சரீர சௌக்கியதனதைக் காப்பாற்றிக்கொண்டு பிரசவித்தபின் உண்டாகும் அநேக அபாயங்களுக்கும் ஜாக்கிரதையாய்த் தப்பித்துக் கொள்ளவேண்டும்.

பிரசவித்த ஸ்திரீக்கு ஒருமணி நேரத்திற்குப்பின் ஆயாசந்தீர்ந்தவுடன் ஜனனேந்திரியத்தில் வைத்திருந்த துணிகளை எடுத்து விட்டுப் புதிதாய் உலர்ந்த வேறுதுணியை அதன்மேல் போடவேண்டும். மேலும் அவள் அடியில் கிடக்கும் துணிகளை யகற்றிவிட்டு உலர்ந்த திப்பட்டியை விரிக்கவேண்டும், பின்பு அவளுக்கு

நன்றாய் உலர்த்தி வைத்திருக்கிற வேறு மெல்லிய வஸ்திரத்தை உபயோகிக்க வேண்டும். மருத்துவச்சி இவைகளைச் செய்யும் போது பிரசவித்த ஸ்திரீ எழுந்து விடில் இரத்தப்பெருக்கு, கருப்பை வெளியில் பிதுங்குதல், சடுதி மரணம் முதலிய பிக்க கேடுகள் சம்பவிக்குமாதலால் படுக்கையிலேயே இருக்கவேண்டும். ஒரு மருத்துவச்சியானது புத்திசாலியான ஆபல்லிட்டு நண்பர்களாவது பிரசவித்த ஸ்திரீயின் பக்கத்திலிருக்கவேண்டும். ஏனெனில், பிரசவித்தவுடன் ஸ்திரீ பலவீனமடைவாள். ஆனால், சரீர பலமுள்ள ஸ்திரீகளுக்குப் பலவீனந் தோன்றுதிருக்கும். செல்லப் பிள்ளைகளாய் வளர்ந்த ஸ்திரீகளும் அதிகப் பலவீனத்தால் ஆயாசமடைவார்கள். பிரசவித்தவுடன் அநேக ஸ்திரீகள் நடுங்குவார்கள், உடனே தூங்குவார்கள். இவ்விதமான ஆபாசம் சிலருக்குப் பிரசவித்தபின் வெகுகாலமிருக்குமாதலால் அவர்களை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றவேண்டும். பிரசவித்தவுடனே நாடி குறைந்து நாற்பது ஐம்பது சடவை அடிக்கும். இவ்விதம் நாடி தாழ்வது நற்குணமே யல்லாது தற்குணமன்று. நாடி எண்பதுக்கும்மல் அதிகப்படுமாயின் தற்குணத்தைச் சேர்ந்தது. எப்போது நாடி நிமிஷத்திற்கு நூற்றுக்கு மேற்பட்டு அதிவேகமாய் அடித்துக்கொள்ளுகிறதோ அது சந்தேகத்துக்கிடம். பிரசவவேதனையுண்டானது முதல் பிரசவித்த சிறிதுகாலம் வரையில் உஷ்ண மதிகரித்துக்கொண்டு வரும். பின்பு உடனே உஷ்ணங் குறையும். பிரசவித்த இருபத்துநாலு மணி பரியந்திற்குப் பின் சில தினங்கள்வரை உஷ்ணம அதிகமாகவே யிருக்கும். நாற்பத் தெட்டு மணி நேரத்திற்குப்பின மார்பில் பால் சுரப்பதனால் சாதாரணமான உஷ்ணத்தைவிட ஒன்று அல்லது இரண்டு டிகிரி ஜாஸ்தியா யிருக்கும். இதற்குப் பால் சுரம் எனறு பெயர். பால் அதிகமாய்ச் சுரந்தவுடன் இச்சுரங் குறையும். மலச்சிக்கு, மற்ற வியாகூலம், பத்தியக்குறைவு முதலிய காரணங்களால்கூட உஷ்ணம் அதிகமாகும். உஷ்ணம் நூறு டிகிரிக்கு அதிகப்பட்டு நாடி பதிவேகமாய்த் துடித்தால் அது அர்க்குறியாகும்.

படுக்கைக்குப் பிரம்பு அல்லது நார்க்கட்டில் உத்தமம். சிறு பாயாவது கம்பளியாவது விரிக்கலாம். கட்டிலின்மேல் தேங்காய நார் மெத்தைபோட்டு அதன்மேல் பாதிவரைக்கும் மெழுகுத் துணி போடுவதால் அடியிலிருக்கும் மெத்தை கெடாது. மெழுகுத் துணிமேல கம்பளியாவது துணியாவது விரிக்கலாம். கட்டில் ஒரு முழ உயரமிருந்தால் போதும். சூதகாகிரகம எவ்வளவு சுதந்தமாயிருக்கிறதோ அவ்வளவு சௌக்கியமுண்டு. ஆதலால் அறை விசாலமாயும் காறறு சௌகரியமாய்ப் பரவத்தக்கதாயும் நல்ல சுகம் நமிர்ப்பு இல்லாததாயும் இருக்கவேண்டும். அதில்

அவசியமான வஸ்துக்கள் தவிர மற்ற எல்லாசாமான்களையும் வேறு அறையில் சேர்க்கவேண்டும். அந்த வீட்டில் நெருப்பு முதலானவை போட்டு சமையல் செய்யக்கூடாது.

ஒரு சிறு உஷ்ணமறியுங் கருவியை (Thermometer) சுவரில் தொங்கவைத்திருந்தால் அறையில் எவ்வளவு உஷ்ணமிருக்குமென்பதை லகுவில் அறியக்கூடும். சூதகாலத்தில் அறுபதிலிருந்து முதல் எழுபது டிகிரிவரை உஷ்ணமிருக்கலாம். ஆதலால், கணக்குப் போட்டுவிட்டது அதிக உஷ்ணமாயாவது அதிலாமல் அதிக குளிர்ச்சியாகவாவது வைத்திருக்கக்கூடாது. பிரசவித்த ஸ்திரீக்கு உபயோகிக்குங் கைக்குட்டைகளில் உட்வுல் டயாபர்கள் (Wood Wool Diapers) மாதாந்தர உபயோகத் துண்டுகள (Sanitary Towels) முதலியவை எந்த இங்கிலீஷ் வைத்தியசாலையிலுங் கிடைக்குமே. இவைகளை உபயோகப்படுத்துவது மகா சிலாக்கியம். ஏனெனில், இவைகள் மையூறுங் காகிதம் மையை உறிஞ்சுவதுபோல் ஸ்திரீயினுடைய விசாஜனங்களைத் தானுகம்ல இழுத்துக்கொள்ளுமே. அவைகளை அடிக்கடி அறையில் வைத்துக்கொண்டிருந்தால் நாற்றமடிக்காதிருக்கும். ஆகையால், அவ்வறை அடிக்கடி அலம்பி விடுவதோடு மாற்றிக்கொண்டேயிருக்கவும் வேண்டுமே. மாதாந்தர சுத்த காலங்களிலும் உபயோகப்படுத்துவதற்கு இவை சிலாக்கியமானவை.

பிரசவித்தவுடனே கருப்பை உறுதியாய் மூடிக்கொண்டு அடிவயிற்றில பந்துபோல் கைக்குக் காணப்படும். பந்துபோற் சுருங்காமல் தளர்ந்திருந்தால் கேடுதல்ல. பிரசவித்தவுடனே கருப்பையானது இருபது பலமும் ஒரு வாரத்துக்குப்பின் எட்டுப்பலமும் மூன்றுவது வாரத்திற்குப்பின நாலுபலமும் நிறையுள்ளதாயிருக்கும். இரண்டு மாதத்திற்குப்பின இயற்கையாயுள்ள நிறைக்கு வரும். பிரசவித்தது முதல் மூன்று வாரங்கள் வரைக்கும் அழுக்குத் திரவங் கருப்பையிலிருந்து வரும். முதல்நாளைக்கு இதனிரவம இரத்த நிறமாயும் வரவர சிவப்பு நிறமாறி வெண்சிவப்பு நிறமாகும். ஒரு வாரத்துக்குப்பின் பசுமை நிறமாகவும் மாறி மூன்றும் வாரக கடைசிவரை ஓர் நிறமாயிருக்கும். இது சிலருக கதிகமாயும் சிலருக்குக் கொஞ்சமாயுங் காணும். இது நாற்றமடிக்கத் தொடங்கினல் கருப்பையில் இரத்தம கட்டிக்கொண்டு அழுகியிருக்கிறதெனறறிந்து அதைப் போக்கடிப்பதற்குக் காண்டிஸ லோஷன, (Condy's Lotion) பிச்சாங்குழலால் விட்டு மாய ஸ்தானத்தைக் கழுவிச சுதஞ் செயயவேண்டுமே.

பிரசவித்த இரண்டு மூன்று நாளானபிறகு ஸ்திரீ மண்டியிட்டுக் கொண்டு நீராடலாம. இப்படி மண்டியிடுவதனல் கட்டி

கிற்கும் நிரவம் இலகுவாய்க் கழிந்துவிடும். பிரசவித்த மூன்று நாளைக்குப் பிறகு ஸ்நாீ அடிக்கடி படுக்கையில் உட்கார்ந்திருப்பதாலும் இதநிரவங்களை லேசாய் வெளியாகும். அழுக்குச் சரியாக வெளிப்படாவிட்டால் அது கர்ப்பாசயத்தில் தங்கி அழுகிப்போய் ரத்தம் அசுத்தப்படுவிஷமித்துச் சுரத்தையுண்டாக்கும். சுரமிருந்தால் வைத்தியரை அழைக்கவ்வண்டியது. அழுக்குப்படாவிட்டால குங்குமப்பூவை இரண்டு அல்லது மூன்றுமுறைகொடுக்கவும். காடுபுறங்களில் இடிமருந்து கொடுக்கலாம். பெருங்காயம், வாம்லந்தாம்பாளம, மிளகு, சுக்குவகைக்கு இரண்டிவராகனிை மீசர்த்திச்செய்த கஷாயதனில வ்வளக்கு ஆழாக்குக்கொடுத்து வர உதிரச்சிக்கல் நிவாத்தியாகும்.

சூதகர ரகதத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் நீங்கும்படி போதுமான வெளிச்சமும காற்றும்வர இடங் கொடுக்கவ்வண்டும. அம்மகர இருட்டறைக்குளமேலய பிரசவித்த ஸ்திரீயை வைப்பது அம்மக வ்கட்டுக்குக் காரணமாகிறபடியால் இதை இவ்விடத்தில வ்சேஷமாய்க் குறிப்பித்துக் காட்டுகிறோம். குழந்தை பிறந்த ஒருவாரதகக்கு இனஜன பதார்த்தங்கள், குழந்தை பிறந்த இடதக்கு வர இடம கொடுக்கப்படாது.

அவர்கள் நல்ல எண்ணத்தோடு வந்து பார்க்கவந்தபொழுதிலும் அவர்களால் விளையுவ கெடுதி அனரதம். இக்காலத்திலுண்டாகும் வியாதிகளுக்கெல்லாம் அசுரகமாய் அவர்களே காரணம். ஒரு அற்ப வாதனையால் அவள் மனமெல்லாம் குமும்பக்கூடியது. ஒரு அற்பக் காரணத்தினால் அவன் மனமெலலாம் பூரித்தது சகம்தாஷமான வாரத்தைகளைப் பேசி சம்பாஷித்துக்கொண்டிருக்க ஆசைப்படுவாள். அப்படிச் செயவதனல் தலைவலியுண்டாகி அம்மக கெடுதிகள் சேரும்ம். ஆகையால் ஒருவாரத்துக்குப் பிள்ளை பெறறவள் பார்க்கவந்த சிநேகதரிடத்தில் யாதொரு வாரதையும் பேசக்கூடாது; எழுந்து நடமாடவுகூடாது; யாதொரு வேலையுஞ் செயயவுகூடாது. இகுகட்டளைகளை மீறினால் மரணத்தகுந்தவான வ்நாயகளுண்டாகும். தப்பிறவும, அம்மக நாட்களாக அவஸ்தைப்பட வ்வண்டியதிருக்கும்.

பிரசவித்தபின் உண்டாகும் சுண்டுவலி.

சில ஸ்திரீகளுக்குப் பிரசவித்தபின் வலியுண்டானால் அதற்காகப் பயப்பட வ்வணடியதில்ல. பிரசவித்தபின் கர்ப்பாசயம் பந்தம்போல சிறுக்கும்போது இந்தச் சுண்டுவலி காணும். சிலருக்கு இது தோன்றுவதுமட்டாது, வேறு சிலருக்கு அதிகமாய்க்

காணும். முதல் பிரசவத்தில் இந்நோய் வழக்கமாய்க் காணுவ தில்லை. அநேகம் குழந்தைகளைப் பெற்றவர்களுக்குத்தான் இது பலவீனத்தினால் வழக்கமாய் உண்டாகும். கர்ப்பாசயத்திலுள்ள உதிரக்கட்டிகளெல்லாம், பூரணமாக வெளிப்பட்டு கர்ப்பாசயம் சிக்கிரஞ் சண்டுபோல சிறுத்துவிட்டால் இவ்வலி நிராது. இக் கட்டிகள் வெளிப்படுவதற்காகத்தான் கர்ப்பாசயம் உபாதிக்கப் படுதல் சண்டுவலி காண்கிறது.

குழந்தை பிறந்த இரண்டுமணி நேரத்திற்குள்ளாகத் தாய் பால் புகாடுத்தால் கர்ப்பாசயம் நன்றாகச் சிறுத்துவிடுவதுமல்லா மல், சண்டுவலியு முண்டாகவே மாட்டாது. இவ்வலி உண்டான போதிலும் ஸ்திரீ பொறுமையுடன இருக்கவேண்டும், ஏனெனில், சரீரத்திற்கு உபாதை யுண்டாகுகிற இரத்தக்கட்டிகளும் மற்ற வஸ்துகளும் கர்ப்பாசயத்தினின்றும் வெளியாவதற்காகத் தான் இவ்வலி உண்டாகிறது. இவ்வஸ்துக்கள் வெளியாகாவிட்டால் சுரமுண்டாகும். சிலருக்கு மூன்று நாட்களாகச் சண்டுவலி யிருக் கும. பிரசவித்ததபின் சுயம வாதபடி தடுக்கவேண்டியது முக்கிய மான காரியம. பிரசவித்தவுடனே செயயவேண்டிய வேலைகளை யெல்லாஞ் செயதுவிட்டபின ஸ்திரீ தூங்குமபடி செய்யவேண்டியது. சண்டுவலி அதிகமா யிருததால் வேது ஒற்றடததிற் சொல்லிய முறையின்படி (6-ம் புஸ்தகம்) அதிகச சூடான ஒற்றடங் புகாடுபபது நல்லது. சாபிருக்ககூடாதாகையால் வெந்நீரை விடச் சுடு செங்கல ஒற்றடம் நல்லது. சூடான வெந்நீரில் ஆசன ஸ்நானம (6-ம் புஸ்தகம்) மகா உததமப. இதற்கும் வலி நீங்கா விட்டால், கஷ்டப் பிரசவமானபின் அபின நிராவகம (Battley's Solution of Opium) பதினைந்து அல்லது இருபது துளிகள் தணணீர்ப் கலதது கொடுக்கவேண்டும. பிரசவித்த சில மணிக் குப் பின் வைததியர் கை பார்க்கவேண்டியது. மேலும் இரத்தப் பிரவாகம் இருகுகிறதா? நீர் இறங்கினதா? என்னும் விஷயங்க ளையும் அடிக்கடி விசாரிக்கவேண்டும். இவ்விதம் பதினைந்நாள் வரை அதிக ஜாக்ரதையாய்ப் பார்க்கவேண்டும். நாடி துரிதமா யடித்தால் உடனே உஷ்ணமறியும் கருவியால், (Thermometer) சுரம் இருக்கிறதா இல்லையாவென்று பார்க்கவேண்டியது. சில சமயங்களில் சிலநாளவரை சிறுநீர் தாராளமாய் இறங்குபுறதில்லை, அதுதணணீரில் கடற்காளானை (Sponge) நனைத்து அடிவயிற்றின மேல ஒற்றடம்போட நீர் இறஙகும. அதற்கும் நீர் இறங்காவிடில் வயிறு உப்பி அதிக கஷ்டமாகும. அப்போது வைதியர் சிலாக் கைகொண்டு (Catheter) மூதிரப்பையிலிருந்து சிறு நீரை வெளியில் இழுதது விடவேண்டும. இதில் சிரமம் ஒன்றுமில்லை. ஆதலால், அபாயமாய் முண்டாகும வெட்கத்தினால இப்படிச் செயவதற்கு அசைகூடாதென சொல்லக்கூடாது.

பிரசவித்தவளின் ஆகாரம் முதலியவை

பிரசவித்த இரண்டு மூன்று நாள்வரையில் கஞ்சி, சவ்வரிசிக்கஞ்சி, பால், தேத்தண்ணீர், வாட்டினகோட்டி முதலியவைகள் கொடுக்கவேண்டும். மூன்றுநாட் கழிந்தபிறகு குளுமந்த சாதத்தோடு மிளகு ரசம் அல்லது மாமிசரசம் சேர்த்துக் கொடுக்கலாம். இதன்பின் படிப்படியாய் வழக்கமான ஆகாரம் கொடுக்க வேண்டும்.

மற்றெந்தக் காலத்திலுமிட இக்காலத்தில் அதிக சுத்தம் அவசியம். ஏனெனில், பிரசவித்த ஸ்திரீக்கு வெளியாகும் தலாலையைக் கூடித் திரளுமிடிட்டால் அது நாறி அழுகிக் கெடுக்கக்கூடும். படுக்கையின் வஸ்திரங்களை அடிக்கடி மாற்றி சாம்படாமல் சுத்தமாய் வைக்கவேண்டும். ஏனெனில், குளிர்ச்சிபட்டால் ஒருவேளை வெளியாகும் அழுக்குக் கட்டிக்கொள்ளும். பிரசவித்த ஸ்திரீக்குச் போர்வையிட்டு சரீரம் உஷ்ணமாயிருக்கும்படி செய்ய வேண்டும். ஆதலால், தாயாள் ஒருத்தி பக்கத்திலிருந்து, பிரசவித்த ஸ்திரீயின் சுத்தத்தைப் பற்றி அதிகக் கவலையாயிருக்க வேண்டும். ஒவ்வொருநாளும் வெப்பமிட்ட அரித்த தண்ணீரில் மர்ம ஸ்தானத்தை இரண்டு வேளும் கழுவி வரவேண்டும். மர்ம ஸ்தானத்தின் வெளிப்பாகம் புண்ணாயிருந்தால் ஒவ்வொரு நாளும் அதிகம் தடவை வெந்நீரில் கழுவவேண்டும். உட்பாகம் புண்ணாயிருந்தால் காலையிலும், மாலையிலும் வெந்நீரைப் பிச்சாங்குழலால் உள்ளே செலுத்திச் சுத்திசெய்து வரலாம்.

ஒவ்வொருநாளும் வயிற்றிலே அதிக நோயிருக்கிறதோவென்றும், நிதனை, மலசலசுத்தி, தவறாமற்படுதல் எப்படியென்றும் விசாரித்தறியவேண்டும்.

பிரசவித்த இரண்டுநாள்வரை பலசுத்தியாகாதிருந்தால், மூன்றும் நாள் காலையில் பிரசவித்த ஸ்திரீயின் ஸ்திதிக்குத் தகுந்தபடி ஒரு பலைசக்காண்டி ஆமணக்கெண்ணெயைக் காப்பியில் கலந்து கொடுக்கலாம். ஸ்திரீக்கு ஆமணக்கெண்ணெயின்பேல் வெறுப்பாயிருந்தால் ஒரு தேயிலைகாண்டி கால்சயினட் மக்னிசியாவை (Calcined Magnesia) சுடுதண்ணீரில் கலந்து கொடுக்கலாம். பிச்சாங்குழலால் வெந்நீரை ஆசனவாயினுட் செலுத்திக் குடலைச் சுத்தி செய்யலாம். ஆனல் வெறெவ்விதபேதி மாத்திரைகளையும் உபயோகிக்கக்கூடாது.

பின்னே பெற்றபின் ஸ்திரீயின் தேகத்திலிருந்து, தலாலை, பால் என்னும் இரண்டு முக்கியமான நீர் வெளியாகும். இத்

துவாலையானது கருப்பை சுருங்கிச் சுருங்கி வருவதனாலே பெருத்திருந்த இரத்தக்குழாய்கள் ஒருக்குண்டு அதிலிருந்து சுரக்கும் இரத்தமேயாம். இது சிலநாளாய்ச் செந்நிறமாயிருந்து பின்பு பசுமையாய் வெளிறிப் படிப்படியாய்க் குறைந்துபோம். மூன்று வாரத்திற்குள் முற்றிலும் நின்றுவிடும்.

பத்துப் பதினைந்து நாட்சென்றும் துவாலை அதிகப்பட்டு ஆனைப் பலவீனப்படுத்துமாகில் பிராந்தி குடிக்கக் கொடுக்கலாம்.

அல்லது டைலூட்டெட் சல்பூரிக் ஆசிட் (Diluted Sulphuric Acid) பத்துதுளி கலாம்பாக்கஷாயம் (Infusion of Calumba) ஒரு அவுன்சிற் கலந்து ஒருநாளைக்கு இரண்டு தடவையாகச் சில நாட்கள் குடித்துவரத் துவாலை நின்றுபோம்.

ஆலம் விழுது, ஆலங் கொழுந்து, ஆலம்பூ, ஆலம்பேர், ஆவரை வேர், பட்டை இவைகளைப் பசுவின்பாலில் விட்டிடித்து அந்த ரசத்தில் அரைப்படி காலையில் மட்டுஞ் சாப்பிடத் துவாலை நின்றுவிடும்.

சிசு கருப்பைக்குள் இறத்தல்.

குறி. சிசுவானது கர்ப்பத்தில் இறந்துபோனால் வயிறு குளிர்ந்துவிடும். பாரமான சுமை கீழ் இறங்கினதுபோல் தோன்றும். வயிறு தளர்ந்து பருமன் குறையும். பிள்ளையின் அசைவு தோன்றாது. வயிற்றில் புரட்டலும் வேதனையும் உண்டாகும். வாயில் அரோசிகமுண்டாகும். மூச்சுவிடுங் காற்று நாற்றமெடுக்கும். மார்பு தளர்ச்சி கொடுக்கும். பசி குறையும். கண் குழி விழும். கண்ணைச் சுற்றி கருப்புவரி யிருக்கும். பிரசவ நோய் ஆரம்பித்தால் மர்ம ஸ்தானத்திலிருந்து அதிக நாற்றமான தடித்த நீர் வடியும்.

சிகிச்சை. 1. இரண்டு வராகனிடைக் குங்குமப்பூவை தண்ணீர்விட்டரைத்து உருண்டை செய்து கொடுக்கவும்.

2. இரண்டு களஞ்சி மூடக்கொற்றான் வேரை அல்லது கையாந்தகரை வேளைத் தண்ணீரில் அரித்து ஒரு முறை கொடுக்கவும்.

3. இரண்டு நருங்கைப் பிஞ்சையையும் உள்ளி இரண்டு கழஞ்சியையும தண்ணீரில் அரித்து ஒரு கிரெய்ன் அபினை உரைத்து கொடுக்கவும்.

4. லிச்யூட் எக்ஸ்ட்ராக்ட் ஆவ் எர்காட் (Liquid Extract of Ergot) இரண்டு திராமை ஒரு சோளங்கைத் தண்ணீரில் கலந்துகொடுக்கவும்.

5. அரைப்பலம் சுண்ணாம்பு வரை அரைத்து ஒரு ரூபாயளவு நாயுருவி வேரை வெந்நீரில் அரைத்துக் கலக்கிக் குடிக்கக் பரித்த பிண்டம் வெளிப்பட வந்துவிடும்.

இந்த மருந்துகளில் எதையேனுஞ் சாப்பிட்டபின் பிரசவம் சாதாரணமாய் நடக்காமல் கஷ்டப் பிரசவமென்று தோன்றினால் குறட்டிணல் (Forceps) இழுத்தால் வருமோ வாதோவென்று நிதானித்துக்கொள்ள வேண்டியது. அதற்கும் வராததுபோல் தோன்றினால் தலையில் சுவாரஞ்செய்து கிட்டிபோன்ற ஆயுதத்தினால் (Cephalotribe) தலையைக் கெட்டியாய் அழுத்தி எலும்பு களை நசுக்கிப் பிண்டத்தை வெளிக்குக் கொண்டு வருவது ஆங்கில முறை.

நஞ்சு தங்குதல்.

நஞ்சு விழுமம் போவதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அவையாவன:—

1. கருப்பை பிளசீனையை உலுத்தித்தள்ளினதால் பலவீன மடைந்து நஞ்சைப் பிரித்துத தள்ளச் சக்தியற்றுச் சுருங்காமல் போதல்.

2. கருப்பை ரமம் தப்பிச் சுருங்குதல்.

3. வியாதியால் நஞ்சு கருப்பையோடு ஒட்டிக்கொள்ளுதல்.

சாதாரணமாய்ச் சிசு பிறந்த அரைமணி நேரத்திற்குப் பின் நஞ்சு வெளியில் விழுந்துவிடவேண்டும். ஏனாறரை மணிக்குமேலும் நஞ்சு கருப்பையில் நின்றுவிட்டால் தகுந்தசிகிச்சை செய்யவேண்டியது. இல்லாவிடில் இரத்தப் பிரவாகம் அதிகமாகி ஸ்திரீகளுக்கு அபாயமுண்டாகும். அடிவயிற்றின்மேல் கையை வைத்துப் பார்த்தால் கருப்பை பந்துபோல் உருண்டையாய்த் தோன்றுமல தளர்ந்து பெரிதாய் வயிற்றின் பக்கமுழுதும் மிருக்கிறதகாத் தோன்றும்.

இச்சமயம் காபிக்கொடியை இழுத்தால் நஞ்சு வெளிவந்து போதிலும் கருப்பை சுருங்காமல் ஆரதப் பெருக்குண்டாகும். மேலும், கருப்பை உட்புறம் வெளிப்புறமாகிவிடும். இச்சமயம்

ஸ்திரீ இரத்தப்பிரவாகத்தால் சோர்வடைந்திருந்தால் கருப்பையில் கையைவிட்டு வஞ்சை எடுக்கலாகாது. கொஞ்சநேரம் நிதானித்து ஸ்திரீக்கு ஆயாசந் தீர்ந்தபிறகு வயிற்றைக் கையாலமர்த்தித் தேய்த்து அழுத்திப் பிடித்துக் கருப்பையைச் சுருங்கு படி செய்வதே முறையாகும். குளிர்ந்த ஜலத்தினால் வயிற்றின் மேற்புறத்தை நனைப்பதனாலும் இது சித்திபாகும். கருப்பைக்குள் கையை விடுவது தாய்க்கு அபாயமுண்டாகுந்தக்கதாயிருந்தபோதிலும், வேறுவகையில் நஞ்சு விழுவிடில் அவ்விதஞ் செய்யவேண்டிய கவசியமே. இதற்கு நஞ்சுக்கொடியை இடதுகையால் பிடித்துக் கொண்டு வலது கைவிரல்களைக் கூச்சாய்க குவித்துக் கொடிவழியாய் மர்ம ஸ்தானத்திற்குள் செலுத்திக் கருப்பைகுள் கொண்டு போய்க்கனத்தோடு நஞ்சை அணைந்திருக்கிற இடத்தைத் தடவித் தெரிந்து கொண்டு கருப்பையினுட் புறத்தோடு ஒட்டியிருக்கும் நஞ்சின் பாகங்கள் திரண்டு மத்தியில் வரும்படி வலித்து இழுக்கவேண்டும். பின்பு அதை விரல்களால் பிரயத்தஞ்செலுத்தி நஞ்சு முழுவதையும் மெதுவாய் வெளிக்குக் கொண்டு வரவேண்டும். காயப்பட நாளும் முயட்டுத்தனமில்லாமலும் நஞ்சு முழுவையும் அப்புறப்படுத்துவதே கவசியமானது சாமர்த்தியம்.

எதாவது கொஞ்சம் கருப்பையில் தங்கினால் அது அழுகிக் கருப்பையைப் புண்ணாக்கிவிடும். மேலும், அழுகின நஞ்சின் சாரம் சரீரத்திலுறி இரத்தங்கெட்டு அதனால் ஜுரம், அஜீரணம், கட்டிகள், வறட்சி முதலியனவை யுண்டாகி அநேகப் பலவீனமுண்டாக்கும். நஞ்சை வெளியே எடுத்தவுடனே அடி வயிற்றைத் தேய்த்துப் பிறகு வயிற்றைத் துணிபால் இழுத்துக் கட்டிவிடவேண்டும். கை உள்ளே போனதால் கருப்பாசயத்துக்கு மூடிக் கொள்ளும் பலமுண்டாகும். சில சமயம் மருத்துவச்சி வெளியில் தொங்கிக்கொண்டிருக்கும் தொப்புள் கொடியைக் கெட்டியாய்ப்பிடித்து இழுப்பதனாலும், அல்லது எர்காட் (Ergot) கொடுப்பதனாலுங்கூட கருப்பாசயம் நடுவில் மூடிக்கொள்வதால் மாயை வெளிவராது.

இதற்கு அபின் திராவகம் (Laudanum) இருபது துளியை ஒரு சோங்கரண்டியில் கலந்து ஒரு முறை கொடுக்க அரை மணி நேரத்தில் சுருங்கிய பாகம் விரியும். அப்பொழுது அதன் வழியாய்க் கையைச் செலுத்தி நஞ்சை நீக்கிவிடலாம். நஞ்சின் பாகம் தங்கிக்கொண்டால் அடிக்கடி காண டிஸ் ம்லாஷனை (Condy's Lotion) சுத்தி செய்யவேண்டும். அடிவயிற்றின்மேல் ஐஸினிலை மாவு போற்றில்ஸ் வைத்துக் கட்டிவரவேண்டியது.

நஞ்சு விழ உபயோகிக்கும் மருந்துகள்.

1. கொடிக்கள்ளியை வாட்டி ஒரு சோளங்கைச்சாற்றில் பத்து துளை வெடியுப்பு சேர்த்துக் கொடுக்கவும்.

2. வேப்பங் கொழுந்து, முருக்க கொழுந்து, கருவேப்பிலைக் கொழுந்து வகைக்கு ஒரு பிடி, கற்காய ஒரு கழஞ்சி கொஞ்சந் தண்ணீரில் அரித்து ஒருமுறை கொடுக்கவும.

3. லிக்யூட் எக்ஸ்ட்ராட் ஆப் எர்காட் (Liquid Extract of Ergot) ஒரு திராமை ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து ஒரு முறை கொடுக்கவும்.

நீடித்த பிரசவம்.

காரணம். பலவீனம், அதிகப் பருமன், விருத்தாப்பியம், மனோவியாகுலம், அதிக உஷ்ணம், அடிக்கடி கர்ப்பந்தரித்தல், நீர்சுகட்டு, இருபல், பனிநீர் அதிகப்பட்டிருத்தல், பனிக்குட ஜவ்வு உறுதியாயிருத்தல், பனிக்குடம் உடைபடாமல் போதல், பக்குவ காலத்திற்கு முன் பனிக்குடம் வெளிப்பட்டுவிடுதல், கர்ப்பாசயம் இடம் மாறுதல், கிரமமாய் நோயுண்டாகாமல் போதல், குடி; பயம், முதலிய காரணங்களால் இடுப்பு நோய் நேரப்பட்டிருந்து பிறகு சில தினங்கும்.

அவசரப்படாமல் கொஞ்சம் நிதானித்துக் காரணத்தை யறிந்து நிவாரணஞ் செய்யச் சவலறும் கிரமத்தில் வந்துவிடும். கொஞ்ச நேரம் மேதனினையைச் சுகித்துக்கொண்டிருப்பதால் ஸ்திரீயின் மனதைத் தேற்றி உற்சாகப்படுத்திக் கூடமாட்டு விஷயத்திற் காலங்கழிக்கச் செய்யவேண்டியது. மலபந்தமிருந்தால் பிச்சான் குழல் பிரயோகத்தால் மலசுத்தி செய்யலாம்.

கருப்பையின் வாய் விரியாமலிருந்தால் ஒரு மெல்லிய இறகை அல்லது கையை வாயிலிட்டுக் கும்மட்டலுண்டாகச் செய்யவேண்டியது. பனிநீர் பிரிந்திருந்தால் அதைச் செவ்வையாய்க் கண்டறிந்து நிச்சயமான பிறகு நகத்தால் கிறி நீர்க்குடத்தை உடைக்கவேண்டியது.

கருப்பாசயம் ஒரு பக்கமே ஒதுங்கியிருந்தால் மற்றொரு பக்கமாய் ஸ்திரீ படுக்கவேண்டியது. முன் பக்கம் சாய்ந்திருந்தால் மல்லாந்து படுக்கவேண்டியது.

1. அதிகப் பலவீனத்தால் நோய் பலமாய் வராவிட்டால் எர்காட் எக்ஸ்ட்ராட் (Ergot Extract) ஒரு திராமை ஒருசேரக் கைத் தண்ணீரில் கலந்து கொடுக்கவேண்டும். நோயுண்டாயிருக்கும்போது இம்மருந்தைக் கொடுக்கக்கூடாது.

மேலும் கருப்பையின் வாய் நன்றாய் மலராதிருந்தால் இந்த எர்காட் கொடுக்கக்கூடாது கொடுத்தால் அபாயமுண்டாகும். ஆகையால் அந்தத் துவாரம் நன்றாய் விரிந்திருக்கிறதா இல்லையா வென்று செவ்வையாய்ப் பரீக்ஷித்துக் கொடுக்கவேண்டும்.

2. இரண்டு திராகளினிடை குங்குமப்பூவைப் பெருஞ்சீரகத் தியாளத்தில் கரைத்துக் கொடுக்கலாம்.

3. வெண்காரம், லவங்கப்பட்டை, கொயினை மருந்துகள் நோயை அதிகப்படுத்திச் சிசுவை வெளிப்படுத்திக்கொண்டு வரும். இவையெலாவற்றிலும் எர்காட் மருந்து பிரதானமானது.

4. நோய் அற்பமாயிருக்கும்போது அடிவயிற்றைத் தடவிப் பார்த்தால் பந்துபோல உருண்டையாய்த் தோன்றுமே. ஸ்திரீ மல்லாந்து படுத்திருக்கையில் நோய் வருஞ் சமயத்திலே உள்ளங் கையினால அந்த உருண்டையான பாகத்தை அமுக்கச் சிக்கிரம் பிரசவமாகும். ஸ்திரீ உட்கார்ந்திருந்தால் மருத்துவச்சி அவளைத் தன் மார்பிலணைத்துக்கொண்டு தன்னிரண்டு கைகளால் வயிற்றின் மேல்பாகத்தை அமுக்கினால் பிண்டம் நழுவிக் கீழே விழுந்து விடும்.

5. கருப்பையின் வாய் மலர்ந்திருக்குமபோது மேற்சொன்னவைகளால் குழந்தை பிறக்காமற்போனால் குறடு (Forceps) கொண்டு சிசுவை வெளியேற்றவேண்டும். ஆனால், தேர்ந்த வைத்தியர்கள் மட்டும் அதை உபயோகிக்கலாம்.

6. சிவனர் வேம்பை ஆமணக்கெண்ணெயில் அரைத்துத் தொப்புளின்மேல் பூசுவது நன்று.

7. நித்திரை செய்தல், ஆகாரஞ் சாப்பிடுதல், இடுப்பு, அடிவயிறு முதலியவற்றைத் தேய்த்தல், முதலிபனை வயிற்றுநோவை அதிகப்படுத்தும்.

ஸ்திரீக்குத் தலைநோய், ஆயாசம், ஜுரம், வாந்தி முதலிய குணங்களிருந்தால் சிசுவைச் சிகிரம் வெளிப்படுத்தவேண்டும்.


கஷ்டப் பிரசவம்.

கஷ்டப் பிரசவத்திற்குக் காரணம் சில சிசுவால் உண்டாகின்றன. சில தாயின் கர்ப்பாசயத் தூவாரத்தை அணுசரிப்பது:—

1 சிசுவின் சிரசு பிதுங்கிப் பெரிதாய் இருத்தல்.
2. சிசுவின் எலும்புகள் மிகவும் பெரிதாயிருத்தல்.
3. சிரசு புண்டிருத்தல்.
4. முகம் உதயமாகுதல்.
5. நாபிக்கொடி குழந்தையைச் சுற்றிக்கொண்டிருத்தல்.
6. சிசுவின் வயிறு விம்மியிருத்தல்.
7. தாய்க்கு இடுப்பு; பிரஷ்டம், முதலியவற்றின் எலும்புகள் வளைந்துபோவது.
8.)டைக்குழி குறுகியிருத்தல்.
9. மூத்திரப்பையில் நீர் சேர்ந்து இடைக்குழியை அடைத்துக் கொள்ளல்-ஆகிய பல காரணங்களாம.

இவைகளுக்கு ஆயுத உதவியின்றிச் சிகிச்சைசெய்ய முடியாதாகையால் தகுந்த டாக்டர்களை அழைக்க வேண்டியதவசியம்.

ஆசன உதயம். (Presentation of Breech)



ஆசன உதயத்தில் காட்டுபலம் வெளிவரும். அபானவாய் ஜனன உறுப்புகள் முதலியவைகளாலும் அறியலாம். ஆசேதமாய் உதயமாகிறதைப் பிண்டமென்றும், சிரசென்றும் தெரியாமல் மயங்கவேண்டியதிருக்கும். மேலும் சிரசைப்போல் ஆசனம் மர்ம ஸ்தான மார்க்கத்தை விசாலப்படுத்தாது. இதில் ஆசனம் வெளிப்படுகிறவரையில் மருத்துவச்சி செய்ய வேண்டிய வேலை ஒன்றுமில்லை ஆசனம் வெளிக்கு வந்தபின்பு, சிசுவை வலது கையிலேந்திக் கொண்டிருந்தால் அது தானுய்த் திரும்பி வெளிப்படும், தொப்

புட்கொடி வெளியில் தெரிந்தவுடனே அதைக் கீழே சிறிது இழுத்து நடுவில் இருக்கும்படி செய்து பத்திரப்படுத்தவேண்டியது. அதில் நாடி நடை தடுப்பாயிருந்தால் சிசு மெதுவாய் இறங்கும்படி விட்டுவிடலாம். நாடி பலவீனமாயிருந்தால் பிரசவத்தைத் தீவிரப்படுத்தி நோயிருக்கும்போது சிசுவை வெளியில் இழுக்கவேண்டியது. மார்பு வெளிப்படும்போது கைகள் அதனோடு கெட்டியிருந்தால் மருத்துவச்சிக்குத் தொந்தரவில்லை. சிசை அணைந்திருந்தால் விலகிவிட்டு மெதுவாய் வெளிப்படுத்திவிட வேண்டியது. பலமாய் இழுத்தால் எலும்பும், மற்றும் மிருதுவான உறுப்புகளும் முறிந்து காயப்படும். கொடியில் நாடி நடை இருக்கும்போது கையிடலாகாது. தலை கர்ப்பாசயத் துவாரத்தில் வரும்பொழுதே இடதுகையின் இரண்டு விரல்களைத் துவாரத்தில் விட்டு மூக்கின் இருபக்கத்திலும், ஒரு விரலால் அணைத்துப் பிடித்து, தலையைக் கீழே அணைத்துக்கொண்டு, வலக்கை இரண்டு விரல்களையும் தொளிண்பேல் வைத்துச் சிசுவை இழுத்தால் வெளிக்குவரும். இதற்கும் வராவிட்டால் ஆயுதப் பிரயோகம் செய்து வெளியேற்ற வேண்டும். பிரசவம் முடிகிறவரையில் ஸ்திரீயின் வயிற்றைப் பிடித்து அழுத்திக்கொண்டிருந்தால் கஞ்சு சீக்கிரமாய் வெளிப்படும்.

பாத உதயம். (Presentation of Foot.)

சிசுவின் பாதங்களாவது முழங்காலாவது உதயமானால் ஆசன உதயத்திற்குச் செய்கிற சிகிச்சையே இவைகளுக்குஞ் செய்ய வேண்டியது. ஆசன உதயத்தைப் பார்க்கிலும் இவைகள் கொஞ்சம் கஷ்டத்தைக் கொடுக்கும். ஆனால், தொப்புட்கொடி நசுங்கி இரத்த ஓட்டம் தடைபட்டிருந்தால் சிசுவிற்கு காயம் வராமல் செய்வதே மருத்துவச்சியின் பிரதான முயற்சி.

அவஸ்த உதயம்.

சிசுவின் வலது கையாவது இடது கையாவது வெளியில் தொங்கிக்கொண்டிருக்கும். கைவரும்போது தந்திரயுக்தியால் கையைக் கருப்பைக்குள் செலுத்தி, பாதத்தையாவது முழங்காலையாவது கண்டு பிடித்துச் சிசுவைத் திருப்பி வெளிப்படுத்தாவிடில் தாயும் பிள்ளையும் அவமிருத்தாவார்கள்.

நாட்டு மருத்துவச்சிகள் இதற்குச் சிகிச்சை தெரியாதபடியால் கையைப் பிடித்திழுத்தால் குழந்தை வெளிக்கு வந்துவிடுமென்றெண்ணிக் கையைக் கழன்று வரும்வரையிலிழுத்துக் குழந்தையைக் கொன்று தாய்க்கும் அபாயம் உண்டாக்குவார்கள். இத

ற்கு மூதலாவது ஸ்திரீயின் மலமூத்திரங்களை நீக்கி இடதுபக்க மாய்ப் படுக்க வைக்கவேண்டியது. பின்பு டாக்டர் தமது வலது கையின் பின்புறத்தில் மட்டும் எண்ணெயிட்டு விரல்களைக் குவித்து, மர்ம ஸ்தானத்திற்குள் மெதுவாய்க் காயம்படாமல் செலுத்தி, கருப்பையின் வாயை மெல்ல நீக்கி, நீக்கி விரல்களை உள்ளே விடவேண்டியது. பிரசவ வேதனை நின்றிருக்கும்பொழுது கையை உபயோகித்து, வேதனை உண்டாயிருக்கிறபோது சும்மா யிருக்க வேண்டியது. மேற்சொன்ன விதமாய்க் கையைக் கருப்பைக்குள் உபயோகத்துக் குழந்தையின் முகபக்கமாய் மார்பின்மேலும் வயிற்றின்மேலுங் கொண்டுபோய்க் குழந்தையின பாதத்தைத் தடவித் தெரிந்துகொண்டு அதைப் பற்றிப்பிடித்து முன்புறமாகவே இழுத்து வெளிக்குக் கொண்டு வரவேண்டியது.


வைத்தியன் மெ கருப்பைக்குள்ளிருக்கும்போது பிரசவ மோய் கண்டால் அப்போது கையை விரித்துச் சேயின் உடம்பின் மேல் அசையாமல் வைத்துக்கொண்டிருக்க வேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் சிலசமயம் கருப்பை யழிந்துவிடும். குழந்தையின் பாதங்களைப் பிடித்து அதன் முதுகுபக்கமாய்த் திருப்பி யிழுத்தால் மூட்டு விலகிபோகும். ஆதலால் அப்படி இழுக்கக் கூடாது. இரண்டு பாதங்களையும் பிடித்து இழுப்பதே நலமது. ஆனால் இரண்டும் அகப்படுவது கஷ்டம். இரண்டும் அகப்படா விட்டாலும் ஒரு பாதத்தைப் பிடித்துத் திருப்பலாம். காலைக் கீழே இழுக்க, இழுக்க, கையானது மேல்மேல ஏறிவிடும். வேதனை யிலலாம விருக்குமபோது, குழந்தையைத் திருப்பிக் காலை வெளி யில் கொண்டுவந்து, பிறகு போய்வரும்போது குழந்தையை இழுக்க வேண்டியது. சில சமயங்களில் சில தாதை கர்ப்பத்தில் திரு ப்பி கையை உள்ளே இருத்துக்கொண்டு காலைஇழுப்பர், பிரசவ மாகும்.

பல பிள்ளைப் பிரசவம்.

குறி.

1. வயிறு விசேஷமாய்ப் பருத்திருத்தல்.
2. வயிறு இருபிளவாய்ப் பிளந்திருத்தல்.
3. இரண்டு சிசுக்கள் அசைவதுபோலத் தோன்றுதல்.
4. கருப்பை தீவிரமாய் மேலேயேறுதல்.
5. ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனி பனிக்குடமும், ஞ சாயிக்கொடியுமிருக்கும்.

ஒரு சிசு வெளிவந்தபிறகு வேறே சிசு இருக்கிறதோவென்று உள்ளும் புறமும் பரீக்ஷை செய்துகொள்ள வேண்டியது. இரண்டாம்பிள்ளை யிருந்தால் வயிற்றின் பருமன் முதற்பிள்ளை பிறப்பதற்கு முன்னிருந்த வண்ணமாகவே யிருக்கும். வயிறு பெரிதாயிருப்பதற்கு வேறு காரணங்களுமுண்டு. ஆகையால் உள்ளே பரீக்ஷை செய்வதவசியம். இரட்டைப்பிள்ளைப் பேற்றில் ஒன்றுக்குச் சிரசும், மற்றொன்றுக்கு ஆசனமும் பிரசன்னமாவது வழக்கம்.



முதல் சிசு பிறந்த சிறிதுநேரம் நோய் நின்று அரைமணி நேரத்தில் திரும்பவும் இடுப்பு நோய் ஆரம்பிக்கும். முதற்பிள்ளைக்குச் சென்ற நேரம் இரண்டாம் பிள்ளைக்குச் செல்லாது. மர்ம ஸ்தான மார்க்கம் விசால மடைந்திருப்பதால் பிந்திவரும் குழந்தைக்குத் தடையொன்றுமிராது.

சிலசமயங்களில் இரண்டொரு தினங்கள் பொறுத்தபின் மற்றொரு குழந்தை பிரசவமாகும். முதல் சிசு பிறந்தவுடன் அதன தொப்புள் கொடியைக் கட்டித் துண்டித்துவிட்டுப் பின்பு தாய்க்குக் கட்டியிருக்கிற வயிற்றுத் துணியைச் சிறிது பிருப்படுத்தவேண்டியது. தொப்புட்கொடி அறுக்குமுன் மேல்கொடியையும் நூல் கயிற்றால் கட்டி வைக்கவேண்டியது. இல்லாவிடில் கர்ப்பத்தி லிருக்கும் மற்றொரு குழந்தைக்கு அபாயம் வரும்.

சில சமயங்களில் கர்ப்பத் தவாரத்தில் இரண்டு தலைகளும் நெருக்கிக்கொண்டு சஷ்டப்பிரசவமுண்டாகும். இதில் ஒரு சிசுவின் தலையை மேலே தூக்கிப் பிரித்தவிட்டுக் குறட்டினால் (Forceps) பிடித்து வெளியாக்கவேண்டும்.

தலைப்பிள்ளைப் பிரசவத்தில் இரத்தம் பிரபலமாய்க் காண்பதுமுண்டு. சுமார் அரைமணிக்குள் இரண்டாவது பனிக்குடம் உடையாவிட்டால் அதை உடைத்தவிட வேண்டியது. அதனால் கெடுதி ஒன்றுமில்லை. பனிக்குடம் உடைந்த இரண்டுமணி நேரத்திற்குள் சிசு வெளியாகாவிடில், கையவிட்டுச் சிசுவை வெளிப்படுத்திவிடலாம்.

தொப்புள் கொடிப் பிரசவம்.

சிசுவின் சிரசுக்குமுன் தொப்புள் கொடி பிறங்கி வெளியில் வந்தால் அச் சிசுவின் தலையால் நசுக்குண்டு இரத்தவோட்டம் நின்று சிசு இறந்துவிடும். ஆனால் தாய்க்கு ஆபாயமில்லை. தொப்புள் கொடியில் நாடியோட்ட மில்லாதிருந்தால் குழந்தை இறந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. அப்பொழுது பிரசவம் தானுய் நடக்குமாபடி விட்டுவிடவேண்டியது.

தொப்புள் கொடியில் நாடி நடையிருந்தால் சிசுவிற்கு ஆபாயம் வராமல் முயற்சி செய்யவேண்டியது. கருப்பைத் துவாரம் ஈரங்குழப் மலருகிறவரையில் நீர்க்குடம் உடையாமல் வைத்திருந்து கைவிரலால் அல்லது ரப்பர் சலாக்கினால் தொப்புள் கொடியைக் கர்ப்பத்திற்குள் ஏற்றிச் சிசுவின் காலோடாவது கையோடாவது சேர்த்து வைக்கவேண்டியது. இதனலாகாவிடில் ஐதரீஸ்ன் கை கால் முழங்கால்மேல் வளையுமாபடி வைத்தால் தொப்புள் கொடி இருக்கவேண்டிய ஸ்தானத்திற் சேரும்.

சில சமயம் மர்ம ஸ்தானம் இழிந்து அந்தத் துவார வழியாய் ஐதரீயின வயிற்றுக் கொடிகள் அகப்படும். உத்தரவாயுவை கொடிக்கும் சிசுவின் தொப்புள் கொடிகளும் விந்தியாசமாகவும் பிடித்துச் சமயத்துக்குத் தக்கபடி யோசித்துச் சிகிச்சை செய்து சிசுவை எடுப்பது தேர்ந்த வைத்தியர்களின் கடமை.

ஜன்னியோடு கூடிய பிரசவம்.

பிரசவத்திற்கு முன்பும், பின்பும், பிரசவத்திலும் ஜன்னி சேரிவதுண்டு.

குறி. தலைக்கனம், காதிலைச்சல், கண் சிவந்திருத்தல், கண் முன் மின்மினிப்பூச்சி பறப்பதுபோல் தோன்றுதல். அடிக்கடி பெருமூச்சண்டாகும். ஸ்திரீ அயர்ந்த நித்திரை பண்ணுவாள். இக்குறிகள் சக்காலத்தில் கண்டாலும் உடனே வைதியருக்குத் தெரிவிக்கவேண்டியது. உடனே வைத்தியஞ் செய்யாவிடில் மயக்கமுண்டாகி முகம் விகாரப்படும். பற்கள் கட்டிக்கொள்ளும், கண்கள் சுழலும், பிரக்ஞை தப்பிச் சற்று நேரத்தில் அறிவு தெளியும். தலைச்சன் பிள்ளைப் பெறுகிறவர்களுக்கு ஆறுமாதத்திற்குமேல் இவ்வியாதி வரக்கூடியது.

பரிகாரம். 1. அரை அவுன்ஸ் சவுக்காரத்தை அரைப்படி வெந்நீரில் கரைத்துப் பிச்சாகுழல் மூலமாய் ஆசனவாய்க்குள் செலுத்தி மலத்தைப் போக்கவேண்டும்.

2. மூன்மயிலுள்ள இரத்தக்கட்டைக் குறைக்கும்படி. சோடையும், புயத்தையும் சரீரத்திற்கு மேலாயிருக்கும்படி உயர்த்திப் படுக்க வைக்கவேண்டும். பிராந்தி முதலிய லாகிரிவஸ்துக்கள் கொடுக்கக்கூடாது.

3. காலமெல் (Calomel) பத்து கிறெயினை நாவில் தடவி விழுங்கச் செய்யவும். உடனே நிலபாளைக் கஷாயத்தில் ஒரு அவுன்ஸ் பேதியுப்புச் சேர்த்துக் குடிக்கக் கொடுக்கவும்.

4. கற்பூரம், ஓமம், சடாமஞ்சி, குரோசானி வகைக்கு ஒரு வராகனிடை, அயின் கால்வராகனிடை, கஸ்தூரி அரைக்கால் வராகனிடை இவைகளைச் சேர்த்து அரைத்து, குன்றுமணிப்பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு இருமாத்திரை கொடுக்கவும்.

5. தலைவலி அதிகமாயுள்ள பால்சாம்பிராணி, கடுகு, மிளகு, குரோசானி, ஓமம் இவைகளைச் சேர்த்து அரைத்துக் கொடுக்க வைத்துத் தலையில் போடவும்.

6. பெருங்காயம், யாவனக்கோரோசனை, மிளகு இவைகளைச் சமமாய்ச் சேர்த்தரைத்த மிளகுப் பிரமாணம் உருட்டிக் கொடுக்கவும்.

அற்பகாம் அல்லது அனுதாபகரம்.

(Sympathetic Fever.)

இந்த அற்பகாம் பிரசவித்த ஸ்திரீகளுக்குக் காண்பதை வழக்கம். உண்டிப்பிசகு, குளிர்படுதல், இடத்தை மாற்றுதல், ஆபா

சம், சலவலி, சித்திராபங்கம் முதலியவற்றால் காலிலும் குடலிலும் உண்டாகும் அழற்சியே இது உண்டாவதற்குக் காரணம்.

பிரசவித்த மூன்று, நான்கு நாட்களுக்குள் கூதலுடன் கொடுமை சிறிதளவோ காய்ச்சலுண்டாகி வியர்த்துவிடும். சிலருக்கு மூன்றுக்காய்ச்சலாய் வரும். சிலருக்கு ஏழு, எட்டுநாள் வரை நிற்கும். இதன் ஆரம்பத்தில் குளிர், ஆயாசம், சிர அசௌகரியம், மார்பு அடைத்தல், தாகம், கொட்டாவி, நிமிர், தசை, முதுகு, கால், ஸ்தனம் ஆகிய இவைகளில் வலி முதலியவை தோன்றி ஸ்திரீக்கு நடுக்கமுண்டாகும். பிறகு உஷ்ணங்காணும். அல்குலில் வியர்வை தோன்றும். பால் சுரப்புக் குறையும், அல்லது நின்றுவிடும். அழுக்கும அவ்வளவாகவே பிருக்கும்.

சிகிச்சை. உணவின் பிசகால் உண்டானதென்று தெரிந்தால் மூன்று கிறெய்ன் கலோமல் (Calomel) கொடுத்துக் கொஞ்சநேரஞ் சென்றபின்பு நிலபாலைக் கஷாயமாகக் கொடுக்கவும். சலம ஒருமுறையில் நிற்காதிருந்தால் மலசலத்தினைச் சோக்கிக் காமற்ற மெல்லிய உணவு கொடுக்கவும்.

விடபக்கிழிவு. (Laceration of the Perineum.)

யோனிவாசலுக்கும் அபானவாசலுக்கும் இடையிலுள்ள தோலாலாகிய பகுதி விடபமென்று சொல்லப்படும். முதற்பிரசவத்தில விடபம் கொஞ்சமாய்க் கிழிவது வழக்கம. சிலருக்கு விடபம் முழுவதுமே கிழிந்துவிடும். குழந்தையின் சிரசு வெளிவரும் போது கையால் அடைக்காததனாலும் வேறு காரணங்களினாலும் உண்டாகும்.

சிகிச்சை. கிழிவு சொற்பமானால் மூழங்கால்களைச் சேர்த்துக்கட்டி வைத்திருந்தால் பொருந்திவிடும். அதிகமாய்க்கிழிந்தால் இங்கிலீஷ் வைத்தியர்கள் கிழிபட்ட உதடுகளைச் சேர்த்தது தைத்து எட்டுநாளைக்குப் பிறகு கூலக் கத்தரித்து எடுப்பார்கள்.

வியர்க்குரு உண்டாகும் சுரம் (Miliary Fever)

சிலர் சூடானபானங்களையும் காரமான ஆகார வகைகளையுஞ் சாப்பிடுவதால் உஷ்ணம் அதிகரித்து வியர்வையுண்டாகி, திடீரென வேதனைபோன்ற வியர்க்குரு, முகம், கழுத்து, முதுகு, சில சமயம் உடல், கை, கால்களிலுமுண்டாகும். இவ்விதச் சுரத்திற்குப் பெரியுப்புச் சாப்பிட்டுச் சுத்தமான காற்றில் உலாவிக் குளிர்ச்சியான உணவு உட்கொள்ளச் சுகமாகும்.

பிராணபாய மூர்ச்சை. (Fatal Syncope.)

சில சமயம் ஸ்திரீகள் பிரசவித்த இரண்டு மூன்று தினத்திற் குள் ஸ்நானம் முதலியவற்றிற்காக எழுந்து நடமாடுவதால் மூர்ச் சை யுண்டாகிக் கீழே விழுந்து மாணஞ் சம்பவிப்பதுண்டு. சில ருக்குப் பிரசவித்த ஒருமணி நேரத்திற்குள் வயிற்றில் நோயும், வாய்க்குமட்டலும், கனைப்பும் உண்டாகி மூர்ச்சை அடங்கும். முக வாட்டம் கொடுக்கும். நாடி மிட்டுவிடடு அடிக்கும். அாட்டல் புாட்டல் உண்டாகும். நாக்கு உள்ளே இழுத்துக்கொள்ளும். இதற்கு உடனே பரிகாரஞ் செய்யாவிடில் உடனே மரணமுண்டாகும்.

சிகிச்சை. ஒரு அவுன்ஸ் பிராந்தியில் சரி பங்கு தண்ணீர் கலந்து கொடுக்கவும்.

(Aromatic Spirit of Ammonia; ஒருதிராம் எடுத்து ஒரு சோஸுக்கு தண்ணீரில்கலந்து இரண்டாமணி நேரத்திற் கொரு தடவை இரண்டு அல்லது மூன்றுமுறை கொடுக்கவும்.

கருப்பை உட்புறம் வெளிப்புறமாதல்.
(Inversion of the Womb.)

நஞ்சை வெளிப்படுத்த நாட்டுப்புறத்து ஸ்திரீகள் முரட்டுத் தனமாய் இழுப்பதனால் இந்த சம்பவம் நேரிடும். இதை உடனே டாக்டர்களுக்குத் தெரிவித்துக் கருப்பையை முன்னி நந்தமாதிரி அதன் ஸ்தானத்தில் திருப்பிவிடவேண்டும். தள்ளிவிட்டவுடன் கொஞ்சம் தண்ணீரை உட்செலுத்திக் கையைக் கொஞ்சநேரம் கையதிருக்கவேண்டும். இவ்வாறிட்டால் மறுபடியும் கருப்பை திரும்பிவிடும்.

கருப்பை கீழுக்கு இறங்கிவிடுதல்.

பலவீனத்தினால் கருப்பையைத் தன்னிலையில் கட்டி வைத் திருக்கும் ஜவ்வுகளும், நரம்புகளும் தளர்ந்திருக்கும் சமயத்தில் பிரசவித்த ஸ்திரீயை அடிக்கடி உட்கார வைப்பதனாலும், எழுந்து நடமாட விடுவதனாலும் கருப்பை தன் இடத்தைவிட்டுக் கீழுக்கு இறங்கிவிடும். சிலருக்கு வெளியில வந்துவிடும்.

சிகிச்சை. ஸ்திரீயை இடதுபக்கம் படுக்கவைத்து முழங் கால் வரை முடக்கி வயிறுமேலுடையுமபடி செய்து வெளிகுறி திருக்கும் கருப்பைக்குமேல் எண்ணெய் தடவி உள்ளுக்கு மெது

வாய்த் தள்ளிவிடவேண்டியது. மறுபடியும் இரண்டாவஸ் ஸ்பஞ் சையாவது, துணியையாவது திவர்ப்புச் சலாபனைனில் கன்னத்தைக் கருப்பையின் வாயில் வைத்திவிடவேண்டும். இதைப் பிரதினமும் மூன்று தான்குதடவை எடுத்துத் தண்ணீரில் கழுக்கிவிட்டுப் பின்னும் முன்போல் வைக்கவும்.

பிரசவப் பயித்தியம்.

சிலருக்கு, பிரசவிக்குமுன், நிதனிப் பங்கம், மூலம் ஊதல், மிட்சியான பார்வை, கண் பிரகாசம், இரத்த பிதுவாய்க் கடடி பிருத்தலோபா லிருத்தல், இக்குறி+ள் கண்டால் பிரசவித்தபின் பயித்தியம் போனறு ஓர்ந்த மருஷி காணும். மனதடுமாறும். சந்தோஷமாவது, விசனமாயது இருக்கும். ஆடல், விடாபபேச்சு அல்லது மௌனம் உண்டி. குழந்தைக்குமை தன் புருஷனுக்கும் ஏதோ அபாயம் நேரிட்டதென்று எண்ணுவாள். எலலாரையும் சந்தேகயமாய்ப் பார்ப்பாள். குழந்தையின் மீது ஞாபகம் இல்லாமல போலதுண்டு. காதில இரைச்சல இருக்கும். மதகம் இளைக்கும். முகம் வெளுக்கும். நாக்கு வெளுத்தது அழுக்குப் படிந்திருக்கும். தூக்கம் அற்பமாயிருக்கும். தாகம் அதிகம். நாடி தாப்பலமாய் நடக்கும். மலம் கடடுபபட்டிருக்கும். இவ்விதக் குறிகளுடன் சுமாவது, கருப்பையில் வ்யாதியாவது கண்டால் இரண்டாய் நிரமாட்டாது. சரம் தாமதித்தால் சுகமாக்கலாம்.


சிகிச்சை. வாந்திக்குக் கொடுப்பது ல்லது. பிறு போவர்ன் பவுடர், செலினு மிகனர் இவைகளில ஒன்றைக் கொடுக்கவும். நல்ல வாட்டமும், மாமிசமும், ஏபின்முதலி பலைகளும் கொடுத்து ஆதரிக்கவேண்டியது. அனனிபரை ஆகல் விடாமலும். அதிக தொந்தரவு மபச்சுக்கிடம வைக்காமலும் இருட்டான இடத்தில் வைத்துச் சிலில் மோமத்தை சீக்ர சுத்தணீரைப் போட்டு வைகைக் கடவுன் இருபையால் நிலாம்.

விஷ சுரம். (Puerperal Inflammation.)

பிரசவ வேதனையில் வயிற்றை அதிகமாய்ப் பிசைதல், கஞ்சக் கொடியைப் பலமாய் இழுததல், குளிரபிடித்தல், ஏழுகினமான உணவு முதலிபயறறால பிரசவித்த இரண்டாம் மூனறும நாளில் காயசலும கூதலும் உண்டாகும். பால சுரக்காது. தலவலி இயாது. வயிறு பொருமும. கையையாது வல்நிரத்தைபாவது வயிறறின்மேல் தாங்கமுடியாது. சொற்ப அசையுங்கூட் வருத்தமாய் இருக்கும். விழி காய்ச்சல் இருக்கும. மூழங்காலகளின

மடக்கிக்கொள்வாள். மலக்கட்டும், மலக்கழிச்சலும், கடுமையான வாந்தியும், நெஞ்செரிச்சோயும், இளைப்பும், பெருமூச்சும் மயக்கமுஞ் சாதாரணம்.

ஸ்தனங்கள்.



குழந்தை பிறந்த இரண்டு மூன்றுமணி நேரத்திற்குள் தாய்க்குச் சிறப்புற் நிர்ணயிலருவானவுடன் ஸ்தனங்களிக்கவனிக்க வேண்டும். விசேஷமாய்த் தலைப்பிள்ளை பேறுகாலத்தில் முதல் மூன்றாநாள் பாலிருக்கமாட்டாது. ஆதலால், மூன்றும்நாளிலோ ஸ்தனங்கள் விம்மிப்பருத்து மிகவுங் கடினமாகி உபாதையுண்டாகுமே. சில சமயம் பால் சுரமுங் காணும். இச்சமயம் பார்த்துக் கவனிக்காவிடில், ஸ்தனங்களில் கட்டி புண்டாகிச் சில மாதங்களுக்குத் தாய்ப் பதித்த படுக்கையாய்க் கிடக்கவேண்டியது நேரிடும். மூலிக்காம்பைக் கையால் பிடித்துப் பார்த்தால் பாலிருக்கிறதாகக் கண்டால் குழந்தையை ஸ்தனபானம் செயிக்க வேண்டும். குழந்தைக்கு முதல் முதல் பால் கொடுக்குமுன்னமே தாயின் முலைக்காம்புகளை இளவெந்நீரால் கழுவித் துடைக்கவேண்டும். அப்படிச் செய்தால் முலைக்காம்புகள் வெடிப்பு மிருதுவாகிக் குழந்தை உறிஞ்சுதற்குடன் நிலருவாய்ப் பால் குடிக்க ஏதுவாகும். அவ்விதம் கழுவாமல் வியர்வை ரூற்றம் முதலியவை இருந்தால் சில குழந்தைகள் பால் குடிக்கவேமாட்டா. கழுவிச் சுத்தஞ் செய்தபின்பும் பால் குடிக்காதிருந்தால் கொஞ்சம் சர்க்கரைப்பாகை முலைக்காம்பில் தடவிப் பால் குடிக்கச் செய்யவேண்டும்.

முலைக்காம்பு வெடித்துப் புண்ணுகாதபடிக்குக் குழந்தை பால் குடித்தவிட்டவுடன் தன் விரல்களால் காம்பிலுள்ள பாலைப் பிதுக்கிவிட்டுக் கழுவி நன்றாய்த் துடைத்துவிடவேண்டும்.

ஸ்தனங்கள் விம்மிப் பருத்துக் கல்போல் உறுதியாயிருந்து வலியெடுத்தால் கொஞ்சம் ஆமணக்கெண்ணெயை லேசாய்ச் சுடவைத்து ஸ்தனங்களில் நடவி மெதுவாய்த் தேய்த்துவிடவேண்டும். வெந்நீர் ஒற்றடம் அடிக்கடி கொடுத்து எப்பொழுதும் உஷ்ணமாக வைத்துக் கொள்வதால் அதிக வலையுண்டு. ஸ்தனங்கள் விம்மிப் பருத்துத் தொங்கிலும் ஒரு துணியை நிரு

ஸ்தனங்களுக்கும் மேலிட்டு மேலே தூக்கிக் கழுத்தைச் சுற்றிக் கட்டவேண்டும். இப்படிச் செய்வதால் பால் கட்டி வேதனை உண்டாகாது.

குழந்தைக்குப் பால் கொடுக்கத் தாமதம் நேரிட்டால் பால் கட்டியதனால் ஸ்தனங்கள் கற்போலிறுகி முலைக்காம்புகள் இறுத்த உள்ளே போய்விடும். பின்பு முலைக்காம்பை வெளியேற்ற முடியாமல் ஸ்தனங்களில் கட்டி உண்டாகும்.

" கச்சிருக்கும்போது கும்பாளன் வைதுழக்கை
கச்சிருக்கும்போது மருத்தாளன்—கச்சிருக்கும்
கன்னூர் கும்பாளூர் காணவும்மான் வேம்பாளன்
தன்னூமலை யர சுக்கு."

" வெய்பை விரும்பக் கும்பாளத் தப்த வெக்கரும்பு
வேம்பாளத் தூன்னோப் பெற்றலரோ வெண்ணெய் நல்லிருடிச்
நாம்பால் வரியுண்ட மாலாய்ச்சோர் நாடுஞ்சேம்பில்
நாம்பாவியர் பிருத்தால் யாரை சோவது கன்றல்லவே.

முலைப்புண் ஆற்றும் வகை.

ஸ்தனங்களில் கட்டி உண்டானால் உடனே வைத்தியருக்குத் தெரிவிக்கவேண்டும். மேலும் பேதிகரந்தச் சாப்பிட்டுப் பிரவாத்தினைக் கிரமப்படுத்தவேண்டும். முலைப் புண்ணுக்குப் பிராந்தியையாவது வாஸ்திலினையாவது தடவலாம். வெங்காரம் ஒற்றடமும் பனிகட்டி ஒற்று—மும் மாற்றி மாற்றிக் கொடுக்கக் குணமுண்டாகும். முலைக்காம்பில அதிகப் புண்ணுயிருந்தால் விளாம்பிசினில் (Gum Arabic) அரை அவுன்ஸ் தான் எடுத்துச் சிறுகாலத்தனில் ஐந்து திராக்மினுடு கலந்து அந்தத் தூளில் கொஞ்சம் எடுத்து முலைக்காம்பிலுள்ள புண்ணில் கலக்கவேண்டும். இதற்குள் சமயகாலிடில் பிராந்தி, கிளிசரின (Glycerine) இரண்டையும் சமபாகம் கலந்து அவற்றை ஒரு மெல்லிய தணியில் நனைத்துப் பின்னே பால குடியாத சமயத்தில் முலைக்காம்பில் போடவேண்டும்.

பின்னே பால் குடிக்கவேண்டியபோது ஒரு கடற்காளாஞ்சி (Sponge) வெந்நீரில நனைத்து முலைக்காம்பைச் சுத்திசெய்தபின் பால் கொடுக்கவேண்டும். மேற்சொன்ன மருந்தன் யாதொரு தோஷமும் செய்யக்கூடியவையல்ல. ஆகையால், பிராந்தியையாவது கிளிசரினையாவது தனித்தாயினும் கலந்தாயினும் போலவதால் தாய்க்கும் பிள்ளைக்குஞ் சேருண்டி. அதிக வலியெடுத்தால் வீப்புகளில் விறகும் சப்பால் செய்த முலைக்காம்பை வாயில் போட்டுக்கொள்ளலாம்.

உலகப்பிரசித்திபெற்ற சாமிவேலின் சிங்கமார்க்கு ஸ்தன்யரோகப் பிரயோகம்.

(Cracked Nipple Paint.)

முலைக்காம்பும் அதைச் சுற்றியுள்ளிருக்கிறசோலையும் உலர்ந்து சுரசுரப்பாயிருக்கும். பிறகு அவைகள் வெடித்து ரணமாகும். சிலருக்கு முலைக்காம்பைத் தின்றுவிடும். இரத்தம் வடிகிறது முண்டு. பால் கட்டிக்கொண்டு உபாதிரவமுண்டாகலாம். இவைகளெல்லாவற்றிற்கும் எமது ஸ்தன்யரோகப் பிரயோகத்தைத் தடவி வர கூடிய சீக்கிரத்தில் சுகமுண்டாகும்.—விலை அணா 12.

ஸ்தனங்களில் பால் கட்டிக்கொண்டால் செய்யும் சிகிக்சை.

தாய்க்குப் பால் ஸ்ரமமாய் வருகிறதாயிருந்தால் ஒருசோடா போத்தலில சுடு தண்ணீர் விட்டு ஐந்து நிமிஷம் வைத்திருந்து பின்பு தண்ணீரைக் கொட்டிவிட்டு அதன் வாயினுள் முலைக்காம்பை நுழைத்து வைக்கும் பால் தானுகப் போத்தலினுள் வடிந்து விடும். இதற்குப் பதிலாக தாய்க்குட்டி சோபாவுக்கு மேலுறை பின்னே சோபாவதை விட்டுப் பால் குடித்துச் சிறுப்பும் வழுக்கம் மிக்கெடுத்து புஸ்—க்குப். இக்காலத்தில் தாய் தன போஜனத்தை மட்டுப் படுத்தி. கஞ்சி, பால், டப்பு முதலிய பால் சுரக்கக்கூடிய தனவினர் சேர்க்க வஸ்துகளைச் சாப்பிடக்கூடாது. பனிக்கட்டியை (Ice) ஒரு துணியில் சுற்றி ஸ்தனங்களில் ஒற்றுவதால் பால் சுரப்பு நிலைபெறுமிடம். சுறுசுறு வலியெனினையும் ஒரு துணியில் சுண்ணாம்பைப் போடலாம்.

பால் சுரப்பிக்குந் தந்திரம்.

பால் மிகு சொற்பமாய் வருமாறுல் ஆமணக்கிலைசுடனை அதற்கு அவற்றை உஷ்ணமாயிருக்கும்போதே ஸ்தனங்கள்மேல் வைத்துக் கட்டினால் பால் அதிகமாய்ச் சுரக்கும். ஓரிலந் தாமரையை ஒரு கொட்டைப்பாக்களவு அளாதுப் பசுமோரில் கலக்கிக் காலை மாலை ஏழுநாள்வரையில கொடுக்கப் பால்பெறும். அல்லது கருஞ் சீரகம் சாப்பிட்டுவரப் பால் பெறும். இக்காலத்தில் தாய்க்குக் கொகசோ, முட்டை; பால் இவைந்த புஷ்டியான ஆகாரம் கொடுக்கவேண்டும். இந்தவோட்டம் நன்றாய்ச் செல்லும்படி, சினிகை முதலிய தினிசுகளினால் ஸ்தனங்களை இறுக்கிக் கட்டக் கூடாது.

கன்றுப் ஜீரணிக்கத்தகாததும் காறபுவ்டிரைட் கொடுக்கக் கூடியதுமான ஆகாரங்களையும் கஞ்சி வகைகளையுஞ் சாப்பிடவேண்டும். பிர், எல் முதலிய மதுபான வஸ்துக்களைச் சாப்பிடுவதலும் பால் அதிகரித்தபோதிலும் அவற்றிலுல் தாய்க்கும் பிள்ளைக்குப் கெடுதியேயன்றி நண்மையல்ல.

கெல்லாக் (Kellogg) என்னும் அமெரிக்கல் டாக்டர் பால் கபப்பிக்குக் தந்திரமாக எழுதிவதை இங்கு கூறலாம். "பால் சுரக்கும் விதமாக மூலக்காமலைப் மைகிரல்களினுல் மெதுவாய் திரண்டித்தெரண்டிருந்தால் அதேமாய்ப் பால் சுரக்குமிடம், பின் மே பொறுத்தி அதேகஸ்திரீகளும், சிறுபெண்களும், ஆண் பிள்ளை களுங்கூட இவ்விதமாகச் செய்வதால் பால்சுரக்கு குழந்தைகளுக் குப் பால் கொடுத்து வளர்த்திருக்கிறார்கள், ருஷிய தேசத்தில் அதேகம் ஆண்கள் இவ்விதம் பால்கொடுத்துக்கொண்டு வருகிறார் கள், சில வருஷங்களுக்குமுன் ஒரு காப்பிரி அடிமையைப் பார்த்தேன், அவனுடைய மார்புகளில் ஏனதிரல் ஏராளமான பால்சுரக்கத் தன் எஜமாட்டியின் பிள்ளைகளுக்கெல்லாம் அவனே பால் கொடுத்து வருவானும்."

பால் கொடுக்கும் காலத்தில் மாதாந்த ருது தோன்றல்.

பால் கொடுத்துக் கொண்டிருக்கும் காலங்களில் ஸ்திரீயானவள் கர்ப்பமாகமாட்டாளென்பது சிலருடைய கொள்கை. ஆனால் அக்காலத்தில் மாதாந்த ருது தோன்றிவிட்டால் அவள் எப்படி யாவது கருத்தரிப்பா ளென்பது நிச்சயம். ஆகையால் அப்படிப் பட்டஸ்திரீயானவள் தன சுகத்தையும் தன் குழந்தையின சுகத் தையும் விரும்புவாளாயின், அவள் தன் புருஷனிடமிருந் திருக்கவேண்டியது அவசியம். ஏனெனில், அவள் சீக்கிரம் கருத் தரிப்பதால் பிள்ளைகுச் சரியான காலமட்டும் பால்கொடுக்க முடி யாமற் போவதுமல்லாமல் அடிக்கடி குழந்தை பெறுவதனுல் தன சொந்த சரீரத்தையும் பலவீனப்படுத்திக்கொள்ளுகிறாள்.

சிலர் மாதாந்தாருது தோன்றினவுடனே இனிமேல் தங்கள் பாலிலுல் குழந்தைகளுக்கு வியாதியுண்டாகுமென்று பால்கொடுப் பதை நிறுத்திவிடப் பிரயாசப்படுகிறார்கள். இது மகா தப்பிதம். ஏனெனில் மாதாந்தா ருது வெளிப்படுகிற காட்களில் தவிர மற்ற காட்களில் அந்தப் பாலிலுல் குழந்தைக்கு யாதொரு வியாதியு முண்டாகாது. ஆகையால் ஸ்திரீயானவள் சுகதம் வெளியாகும் காட்களில் மாமிசம் சேர்க்காமல் தன் சாப்பாட்டையும் மட்டும் பரித்தினுல் குழந்தைக்குச் சுகமுண்டு.

கர்ப்பிணிக்கு ஓர் வேண்டுகோள்.

இந்த புஸ்தகத்தை வாசிக்கும் பெண்மணியே! உன் அருமையான ஜீவனையும் உன் கர்ப்பக்கனியின் உயிரையும் காப்பாற்றும் பொருட்டு இப்புஸ்தகத்தை வாங்கி வாசிக்கிறாய். உனக்கு நான் சொல்வதைக் கேள். நீ எந்த ஸ்திதியில் இருந்தாலும் சரி, காட்டு மருத்துவச்சினி-த்திலும் அம்பட்டச்சினிடத்திலும் உன் அருமையான உயிரை ஒப்புவிக்காதே. தம்மைப்போன்ற ஸ்திரீ ஜாதியைரட்சிக்கும்பொருட்டு டப்ரின் பெருமாட்டி (Lady Dufferin) மின் வேண்டுகோளினாலும் பிரயாசத்தாலும் சர்க்கார் ஒவ்வொரு பெரிய ஊரிலும் தர்ம வைத்தியசாலைகள் ஏற்படுத்தி அவற்றில் சாஸ்திர நிபுணரும் கைதேர்ந்த அனுபோகஸ்தருமான ஸ்திரீலைத் தியர்களை (Lady Doctors) க் கொண்டு மருத்துவம் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே இந்நாளில் சொல்லியவண்ணம் சகலமும் ஒழுங்காய் நடக்கும். அங்கே போய்ப் பிள்ளைப் பெறுவது இழிவன்று. நீ எவ்வளவு சீமாட்டியாயினும் அங்குள்ள வசதி உன் வீட்டிலிருக்காது. ஆதலால், நான் சொல்வதை நம்பி அங்கு சென்று யாதொரு கிஞ்சனமுமின்றிச் சுகத்துடன் பிள்ளை பெற்றுப் பத்தாவது நாளில் உன் வீட்டிற்கு வந்து உன் பர்த்தாவு-னும் இனஜனப் பந்துக்களுடனும் கடவுளை நன்றியறிதலோடு ஸ்துதிப்பாயாக.



உலகப் பிரசித்திபெற்ற சாமிவேலின் சிங்கமார்க்கு
தொண்டைப் புகைச்சல் நிவாரணி.



(Bronchitis Cure.)

சாமிவேலின் தொண்டைப் புகைச்சல் நிவாரணி சகலவித தொண்டைப் புகைச்சல், இருமல், சீதளம் முதலிய நோயாரால் நோய்களைத் தரிதத்தில் நிவர்த்தி செய்யும்.—விலை ரூ. 2.

சாமிவேல் வைத்தியசாலை,

தெண்காஞ்சி, இரங்கோன்.

SAMUEL MEDICAL HALL,

Thingangyun, Rangoon.

கடவுள் சிலை.

மணிமேகலை

மற்றும் சாஸ்திரம்.

ஒன்பதாம் புஸ்தகம்

சிவபாலனம்.

"வட்டிலிலும் தொட்டிலிலு மாம்மேலும் பொன்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னை கலங்கவித்தாய்—முட்டை
சிறையிலிட்டுக் காப்பாற்றிச் சோட்டுக் குஞ்சு பண்ணினாள்."

இந்த

யாவர்க்கும்

கூடி செல்வ நன்மைகளையும் சுகித்து பாக்கிய
போக்கியத்தையும் நிறைவு பெறுதலை
விரும்பிய,

கல்கத்தா சர்வகலா சங்கத்தின் தமிழ்ப்பரீக்ஷகரும், சென்னை ஜான்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியரா யிருந்தவரும், கணித சாஸ்திரம், பூமிசாஸ்திரங்களின் மிகுத்த கர்த்தாவும், மானஸ மர்ம சாஸ்திரப் பண்டிதரும், சாமிவேல் வைத்தியசாஸ்த்ரி தலைவருமாகிய

எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.

புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,
தென்காஞ்சி, இரங்கோன்.
1920

All Rights Reserved.

மானிட மர்ம சாஸ்திரம்.

ஒன்பதாம் புஸ்தகம்.

சிசு பரிபாலனம். (Care of Infants.)

குழந்தை பிறந்தவுடனே வெளிக்காற்று அதன்மேல் படவே வீர்வீரென்றழுது மூச்சுவிடும். அவ்வாறு அழாதிருந்தால் உடனே பிரஷ்டத்தின்மேல் அல்லது பாதத்தில் ஒருவிரலால்தட்டவேண்டும் அல்லது சிறிது பிராந்தி சரீரத்தில் பூசினால் சுவாசம் வரும். இதற்கும் மூச்சு வராவிட்டால் ஒரு பாத்திரத்தில் வெந்நீரும் மற்றொரு பாத்திரத்தில் குளிர்ந்த ஜலமும் வைத்து முதலில் வெந்நீர்ப் பாத்திரத்தில் சிசுவை முழுக்காட்டிப் பின்பு குளிர்ந்த ஜல பாத்திரத்தில் முழுக்காட்டி இவ்வாறு மாறிமாறி முழுக்காட்டினால் சுவாசம் வரும். இதற்கும் சுவாசம் வராவிட்டால், குழந்தையை மல்லாக்கப் படுக்கவைத்து அதன் முழங்கைகளை மருத்துவச்சித் தன்னிரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு அவைகளைக் குழந்தையின் தலைக்குமேல் தூக்கவேண்டும். இப்படிச் செய்வதால் குழந்தையின்மார்பு அகன்று விஸ்தாரமாய்க் காற்றை நாசித் துவாரத்தின் வழியாய் உள்ளே சுவாசா சயத்திற்குள் செல்லும். பின்பு அதன் கைகளை மறுபடியுந்தணித்து அவற்றால் குழந்தையின் மார்பின் இரு பக்கங்களிலும் மெதுவாக அழுக்க வேண்டும். இப்படிச் செய்வதால் உள்ளே சென்றிருக்குஞ் சுவாசம் வெளியில் வரும். இவ்விதமாக நிமிஷத்திற்குப் பதினைந்து தடவை குழந்தையின் கைகளைத் தூக்கித் தூக்கி அமர்த்த, சுவாசம் உள்ளே பிரவேசித்து



வெளியில் வந்துகொண்டிருக்கும். இப்படிச் சிறிதுநேரஞ் செய்த பிறகு நன்றாய் மூச்சுவிட்டுப் பிழைக்கும். குழந்தை பிறந்தவுடனே அதன் இமைகளை ஓர் சுத்தமான மெல்லிய துணியினால் துடைக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் குழந்தைக்குக் கண் பொங்கிக் கண் நோயுண்டாகும். அதன்பின் குழந்தைக்கு வைலேலியா (Vinolia) சவுக்காரந் தேய்த்து நன்றாய்க்கழுவி வெந்நீர் ஸ்நானம் செய்வித்து ஓர் மெல்லியதுணியினால் நன்றாய்த் துடைக்கவேண்டும். ஓர் சிறிய வெள்ளைத் துணியை நெருப்பில் எரித்து அது பாதி வெந்தவுடன் அணைத்து அந்தக்கரித்துணியால் தொப்புள் கொடியைச் சுற்றிக் கட்டவேண்டியது. பிரதினமும் இதேமாதிரிப் புதிது புதிதாய்க் கட்டிக்கொண்டுவர ஒரு வாரத்தில் தொப்புள்கொடி விழுந்துபோம். கொடியினின்றும் அதிகமாய் இரத்தம்வரின் ஓர் மெல்லிய துணியால் தொப்புள்கொடி நூலையைக் கட்டிவுல் இரத்தம் நின்றுவிடும். கொடியை அறுத்துவிட்டால் மெதுவாயும் ஜாக்ரதையாயுங் கட்டவேண்டும். தொப்புள் கொடி விழுந்துபோனபின் தொப்புள்மேல் ஒரு குட்டையை மடித்துப் போட்டுக் கட்டிவுல் தொப்புள் பெரிதாகாது.

இதன்பின் குழந்தைக்கு உடுப்புப் போட்டுத் தாய்ப் பக்கத்தில் மிருதுவான படுக்கையின்மேல் படுக்கவைத்து மெல்லிய கம்பளியினால் முகந் தவிரச் சரீர முழுவதையும் போர்க்கவேண்டும். பின்பு, தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டும். பிறந்த இரண்டுமணி நேரத்திற்குள் பால் கொடுப்பதனால் தாய், சிசு இருவருக்கும் நன்மையுண்டு.

(முதலாவது) குழந்தை சரியாய்ப் பால் குடிக்குமாயின் தாயின் கர்ப்பாசயம் சீக்கிரம் சுருங்கிவிடுமாதலால் உதிரப் பெருக்கு உண்டாகாது. ஸ்தனங்களில் பால் கட்டாது. குழந்தைக்குப்பால் கொடுக்கத் தாமதம் நேரிட்டால் பால் கட்டுவதனாலே ஸ்தனங்கள் கல்லைப்போலிறுகி, முலைக்காம்புகள் சிறுத்து உளளே போய்விடும். பிற்பாடு குழந்தை முலைக்காம்பை இழுக்க முயன்றாலும் தாய்க்குச் சகிக்கமுடியாத வலியுண்டாகி முலைக்காம்பின் மிருதுவான மேற்றோல் வெடித்துப் புண்ணாகிவிடும். குழந்தைக்கும் பால் குடிக்க முடியாது. பால் சுரங் கண்டு குளிர், காவறட்சி, தலைவலி இவைகள் உண்டானால், லிட்லிஸ், (Seidlitz) பவுடரில் ஒரு தேயிலைக்காண்டி வெந்நீரில் கலந்து நாளொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு தடவை சாப்பிட்டு வந்தால் எவ்வித சுரமும் நீங்கும்.


(இரண்டாவது) முதலில் சுரக்கும் சீம்பாலுக்கும் பிறகு சுரக்கிற பாலுக்கும் மெத்த வித்தியாசமுண்டு. சீம்பாலைக் குடிப்பதனால் குழந்தையின் வயிற்றில் நிறைந்து தங்கியிருக்கும் கறுத்த பசளை நிறமான மலம் வெளியாகும். இந்தப் பால் குடிக்காவிட்டால் மலச்சுத்தி ஆகாது. "கல்லினுள் தேரைக்கும், கர்ப்பத்திற் பிள்ளைக்கும் கருத்திட னமுதளிக்கும்" கருணைகரன் குழந்தை பிறந்தவுடனே அதன் சரீரதத்துக்கும் ஸ்திதிக்கும தகுந்த ஆகாரத்தைத் தாயின் முலையில் அமைத்து வைத்திருக்கிறார்.

அப்படியிருக்க, அநேக நாட்டு மருத்துவ ஸ்திரீகள் வெற்றிலை ரசம், கள்ளிரசம் முதலிய பிரவர்த்தி மருந்துகளைக் கொடுத்துப் பிள்ளையின் வயிற்றைக் கெடுத்துவிடுகிறார்கள். ஐயோ பரிதாபம்! வாயில்லா ஜெந்துக்களை இவ்விதம் அவஸ்தைக்குள்ளாக்குகிறவர்களுக்குக் கொடிய தண்டனை விதிக்கப்பட வேண்டியது. இவ்வித ஔஷதங்களால் வயிற்றுவலி, வயிற்றுப்பிசம முதலியவை உண்டாகும். ஆனால், குழந்தையை ஸ்நானஞ் செய்வித்தவுடன் இரண்டு மூன்று மத்தியிலகரண்டி குளிர்ந்த ஜலம் கொடுத்து வந்தால் வாய் சுத்தமாகிப் புண்ணுகாதபடி செய்யும். ஆகையால், இதேவிதம் பிரதினமும் குளிர்ந்த ஜலபானம் பண்ணுவிப்பதால் அநேக நன்மைகளுண்டு. குழந்தையின் பசியையும் ஒருவாறு தணிக்கும். இவ்விதஞ் செய்வதால் குழந்தை அமைதலாய் நித்திரை செய்யும். அதற்குள் தாயுந் தன் களைப்புத் தீர்ந்து பால் கொடுக்க ஆயத்தமாகிவிடுவாள். தாய் அவ்விதம் ஆயத்தமில்லாமலிருக்கும்பொழுதும் குழந்தை தூங்கும்பொழுதும அவசியமாய் அதை எழுப்பித் தொந்தரவு செய்யக்கூடாது.


அநேக ஆட்டுக்குட்டிகள் பிறந்த இரண்டு, மூன்று, நான்கு நாட்களாக ஒன்றுந் தின்னுமல் துள்ளிக்கொண்டு திரிவதை நாம் பார்க்கிறோம். ஆகையால் உன்குழந்தை உண்பதற்கதில அமைதலாய்ப் படுத்துக்கொண்டு, மெதாய் மூச்சுவிட்டுத் தூங்கினாலுஞ் சரி, தூங்காவிட்டாலுஞ் சரி, அது சுகமாயிருக்கிறது. அது தானுப்பசியினால் அழுமவரை அதைத் தொந்தரவு செய்யக்கூடாது. பிறந்த இருபத்துநாலு மணி நேரத்திற்குள் அது பசியினால் அழும். அபபொழுது பால் கொடுத்து உபப்புமாற்றித் திரும்பவும தூங்கச் செய்யவேண்டும். இவ்விதஞ் செய்வதால சிசுவானது நன்றுப்பத் தூங்கிச் சீக்கிரம் புஷ்டியாகும். குழந்தை பிறந்து இரண்டு மூன்று நாள் வரையில் தாய்ப்பாலைய குடித்துக் கொண்டு வந்தால் வேறு பிரவர்த்தி மருந்துகள் ஒன்றும் அவசியமில்லை. ஆனால் கஷ்டப் பிரசவத்தினால் தாய்க்குக களைப்பு நேரிட்டுக் குழந்தைக்குப் பால்கொடுக்கச் சக்தியற்றிருக்கின், சர்க்கரை

யைத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி அதில் சில கரண்டியளவு குழந் தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குப் பிறகு கொடுக்கலாம். இவ விதமே மூன்றுமணிக் கொருமுறை சேர்வார்க்கலாம். இரண்டு மூன்று நாளையரை தாய் பால்கொடுக்கச் சக்தியற்றவளா யிருந் தால் பசுவின் பாலுடன் தண்ணீரும் சாக்கரையும் கலந்து காய்ச் சிக் கொடுக்கலாம். இதற்குப் பதிலாகப் பசுவின்பாலைத் தாய்ப் பால்மாதிரி செய்யும் முறையைக கையாடுவது மிக உத்தமம். குழந்தை பிறந்த முதல்வாரத்தில் தாய் ஒரு பக்கமாய்ச் சாயந்து படுத்துக்கொண்டு குழந்தைக்கு ஸ்தன்யபானம் செய்விக்கலாம. முதல் மூன்றுநாளும் குழந்தைக்குப் பால்குடிக்கத் தெரியாமல் வெகு சொற்பமாய்க் குடிக்குமாகையால் அதற்கு அடிக்கடி முலை கொடுக்கவேண்டும். குழந்தையின் சக்திக்குத கக்கது ஒன்று, இரண்டு அல்லது மூன்றுமணிக் கொருதடவை பால கொடுக்க வேண்டும். ஆனால் காலக்கிரமந் தப்பாமல் கொடுக்கவேண்டும். பகலில் சரியான வேளையில் பால் கொடுத்து வந்தால் இரவில் இரண்டொரு தடவைக்குமேல் பால் கொடுக்கவேண்டியதில்லை. ஆனால் முதலமாதம் இரவில மூன்றுதடவை பால் கொடுக்கலாம். அதற்குப்பின் இரவில் பால் கொடாமலே தூங்கச் செய்வது மிக வும் நலல வழக்கம. குழந்தை அழும்போதெல்லாம் பால்கொடுப் பது நல்லதல்ல. சில சமயம் தாகத்தால் அழும். அதற்குக் குளிர் ந்த ஜலம் குடிக்கக் கொடுக்க வேண்டும். குழந்தை பால குடிக்க மறுக்கும்போது தண்ணீர் அவசியம் குடிக்கும். இவ்விதம் தண் ணீர் குடிப்பது ஜீரணசக்தியை விர்த்தியாகும். குழந்தை ஒருவய தாகும் வரைக்கும் தாய்பாலைவிடச் சிறந்த ஆகாரம் வேறில்லை.

குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுத்தால் குழந்தை க்கு அஜீரணம், வயிற்றுநோய், வயிற்றுப்போக்கு முதலானவை உண்டாவதுமன்றித் தாயும் பலவீனமடைவாள். ஒரு மாதம் கழிந்தபின் பகலில் மூன்றுமணிக் கொருதாரும் இரவில் தாய் படுக்கைக்குப் போவதற்குமுன் ஒருதடவையும் மறுபடியும் விடி யல் சாமத்திறகு ஒருதடவையும் கொடுத்தால் தாய்க்கும் குழந் தைக்கும் ஆரோக்கியமுண்டாகும். இப்படிச் செய்வதால் தாய் க்கு ஆறு, அல்லது ஏழுமணி நேரம் நித்திரை கெடாமல் தேகா ரோக்கிய முண்டாகும். இதனடியில் குழந்தைக்கு ஆகாரம்வேண்டு மென்று தோன்றினால் ஒரு கரண்டி பசுவின்பாலில் ஒரு கரண்டி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சிக் கொடுத்தால் போதும்.



சுகதேகியின்பால்.



நோயாளியின்பால்

செவிலித்தாய் அனுசரிக்க வேண்டிய ஒழுங்கு.

தாய்க்குப் பாலில்லாமல் குழந்தைக்கு வேறு பால்கொடுக்க நேரிட்டால் அப்போது ஒரு தாதியை ஏற்படுத்தவேண்டும். தாதியானவள் சுகதேகியும், பலமுள்ளவளும், இளம்பருவமுடையவளும், நன்னடக்கையுள்ளவளும், மேக சம்பந்தமான வியாதியில்லாதவளும், மூன்று நான்கு மாதத்திற்கு மூன்தான் குழந்தை பெற்றவளுமாய் இருக்கவேண்டும். தாதியின் சொந்தக் குழந்தை நோயால் மெலிந்திராமல் பருத்திருந்தால் அவள் பாலில் நலல சத்து இருக்கிறதென்று அறியலாம். தாதிக்குப் புஷ்டியான ஆகாரம் பால், பாற்கஞ்சி முதலியனவையதேஷ்டமாய்க் கொடுக்கவேண்டும். மேலும் அவள் நல்ல காற்றில் உலாவிப் பிரதினமும் தேகாப்பியாசஞ் செய்துவந்தால் குழந்தைக்கு ஆரோகியமுண்டாகும். ஏயின், சாராயம், பிராந்தி முதலான போதை வஸ்துக்களைத் தாதி சாப்பிட்டால் ஒருசேரப் பால் அதிகப்பட்டபோதிலும் அதன் குணங் கெட்டுக் குழந்தையின சரீரத்திற்கு நஞ்சு சென்று அதன் சுகத்தைக் கெடுக்கிறதுமல்லாமல் குணதையுங் கெடுத்துக் குடிகாரனாக்கிவிடும். அதெப்படியெனில்:—ஓர் சிறு செடியின் பட்டையில் ஒரு எழுத்தைக் கத்தியினால் வெட்டிவைப் போமாயின் செடி வளர வளர அந்த எழுததும் விரிந்து செடி பெரிய மரமான வுடன் எழுத்தும் பெரிதாகிவிடும். இதே மாதிரி பால் கொடுக்கிறவளுடைய சுபாவமும் குணமையும், அவள் கொடுக்கும் பாலின் மூலமாய் சிசுவினுட்சென்று பதிந்து விடுமாதலால், தெய்வ பக்தியும், சற்குணமும், புத்தி தீக்ஷண்யமுமுடைய மாதைச் செவிலித் தாயாகத் தெரிந்துகொள்ள வேண்டும். தாதியானவள் மீனெண்ணெய் (Cod Liver Oil), முத்துச்

சுண்ணங் கலந்த மால்ட் (Malto Phosphate of Lime) முதலிய வற்றைச் சாப்பிட்டு வர தனக்கும் பிள்ளைக்கும் புஷ்டியும் பலமும் உண்டாகும். செவிலித்தாய் அளவுக்கு மிஞ்சிப் போஜனம் பண்ணினால் பிள்ளைக்கு அஜீரணமுண்டாகி வயிறு உப்பி மாந்தம் முதலான வியாதிகள் உண்டாகுமாதலால் பத்தியமாகவே யிருந்து கடலை, மொச்சை, கெட்டுப்போன மீன் முதலிய வாய்வு பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது.

பால் கொடுத்துவரும் ஸ்திரீ பிரதினமும் தான் சாப்பிடும் போது முத்து பஸ்பம் (Phosphate of Lime) இதில் இரண்டின்னரலால் ஒரு சிட்டிகை எடுத்து வெண்ணெயில கலந்து சொட்டியோடு சேர்த்துச் சாப்பிடவேண்டியது. இச்சுண்ணாம்பு தாய்க்குச் சௌக்கியத்தைக் கொடுப்பதுடன் பாலின் குணத்தையும் விர்த்தி செய்து குழந்தையின் தேகத்தைப் பலப்படுத்துகிறது. குழந்தைக்கு வாந்தி அல்லது பச்சை நிறமாய்க் கழிதல் முதலிய அஜீரண நோய்கள் உண்டாகுங் காலத்தில் தாய் இந்த முத்துப் பஸ்பத்தைச் சாப்பிடடு வருவதால் குழந்தைக்குச் சுகமுண்டாகும்.

பாலில்லாக் குழந்தைகளைக் காப்பாற்றும் வகை.



சரியான செவிலித் தாய கிடையாதபட்சத்தில் கழுதைப் பால் அல்லதுவெள்ளாட்டுப்பாலில் கொஞ்சம் சர்க்கரையும் மூன்றிலொருபாகம் வெந்நீர் அல்லது சுண்ணாம்புத் தெளிவுநீர் கலந்துகொடுக்கவேண்டும். இவை கிடையாத பக்ஷத்தில் பசுவின் பாலில் மூன்றிலொரு பங்கை இருபங்கு வெந்நீரில் கொஞ்சம் சர்க்கரையுங் கலந்து கொடுக்கலாம். மாந்தம், வயிற்றுப்போக்கு முதலியவை உண்டானால் வெந்நீருக்குப் பதிலாகச் சுண்ணாம்புத் தெளிவுநீர் சேர்ப்பதனால் குழந்தைக்கு ஆரோக்கியமுண்டாகும். குழந்தைக்கு யாட்டுப்பால கொடுக்கும் காலமெல்லாம் ஒரே பசுவின்பாலும்

காந்த பாலைக் கொடுப்பது நல்லது. அந்தப் பசு நாலு வயதுக்குக் கீழ்ப்படாததும், பத்து வயதுக்கு மேற்படாததும், ஒன்று அல்லது இரண்டு மாதத்திற்குமுன் கன்று போட்டதும், ககதேக மும், சாந்தமான குணமுடையதுமாய் இருக்கவேண்டும். அதைத் தினந்தோறும் குளிப்பாட்டி நல்ல தீனி போட்டு வெகு பத்திரமாய்ப் பார்த்து, ஒரே ஆள் குறித்த நேரங்களில் காலையும் மாலையும் பால் கறக்கவேண்டும். சில பசுக்களின் பால் குழந்தையின் சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாது. மேற்சொன்ன பிரகாரம் அதிகக் கவலையோடு பால் கறந்தபொழுதிலும் அதை உடனே போத்தல்களில் அடைத்துச் சில்போட்டு வைக்காவிடில் அநேக கிருமிகள் அதிலுற்பத்தியாகிக் குழந்தைக்கு அசௌக்கியத்தை உண்டு பண்ணும்.

ஆரம்பத்தில் பசுவின்பால் ஒருபங்கும் சுத்தஜல மிருபங்கும் சேர்த்தபோதிலும் நாட் செல்லச் செல்லப் பாலை அதிகப்படுத்திக் கொண்டு வரவேண்டும். நாலு மாதமானவுடன் பாலுந் தண்ணீரும் சமபாகங் கலந்து காய்ச்சிச் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க வேண்டும். நல்ல பசுவின்பால் அகப்படாவிட்டால் தகரத்தில் அடைத்து வருகிற கட்டிப்பாலை (Milk Maid Brand Condensed Milk) உபயோகப்படுத்தலாம். ஆனால், எதாவு தொருவிதப் பாலைத் தவிர வேறொன்றையும் ஆகாரமாகக் கொடுக்கக்கூடாது. தேவையானால் மூன்று மாதத்திற்குப்பின் மெல்லின்ஸ் பூட் (Mellin's food) அல்லது ஆலன் பரிஸ்பூட் (Allenbury's Food for Infants) அல்லது ஹார்லிக்ஸ் மால்டட மில்க (Horlick's Malted Milk) என்னும் பால்மாவைக் கொடுக்கலாம்.

குழந்தை பால் குடித்தானவுடன் பால் கொடுக்கும் புட்டியில் மிதமியா யிருக்கும் பாலைக் கொட்டிவிட்டுப் புட்டியையும் ரப்பர் மூடாய் அடைப்பான் முதலியவைகளையும் நன்றாய்க் குலுக்கிக் கழுவித் துடைத்துவிட்டுத் திருப்ப உபயோகிக்கும் வரையில் தண்ணீருள்ளேயே போட்டு வைக்கவேண்டும். இப்படிப் பால் புட்டியைச் சுத்தம் செய்யாவிடில் பால் புளித்துப்போய்க் குழந்தையின் வயிற்றில் நோய் உண்டாகும்.

குறித்த நேரங்களில் மட்டுமே குழந்தைக்குப் பால்கொடுக்க வேண்டும். பல் முளைக்கும்வரை இவ்விதம் புட்டிப்பால் கொடுத்து வரலாம்.

பசுவின் பாலைத் தாய்ப்பால் மாதிரி செய்யும் விதம்.



குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க முடியாத சமயங்களில் பசுவின்பாலைத் தண்ணீரும் சர்க்கரையுங் கலந்து காய்ச்சிக் கொடுப்பது வழக்கமா யிருந்தபோதிலும், இது அநேகங் குழந்தைகளுக்கு ஒத்துக்கொள்ளாமல் மாந்தம், வாய்ப்புண், முதலியவற்றை உண்டாக்குகிறது. டாக்டர் பிராங்கிலேன் Dr. Frankland ஸ்திரீயின் பால், கழுதைப்பால், பசுவின் பால் முதலிய பாலகளை வெகு நிட்பநுட்பமாய்ப் பரீக்ஷித்துப் பார்த்துப் பசுவின் பாலுக்கும் தாய்ப்பாலுக்கும் உள்ள வித்தியாசங்களைக்கண்டு பிடித்ததுடன், பசுவின்பாலைத் தாய்ப்பால் மாதிரியாக்கும் விதத்தையுங் கண்டு பிடித்திருக்கிறார். அவர் கண்டு பிடித்திருப்பது யாதெனில்:—

	ஸ்திரீ.	கழுதை.	பசு.
காசேய்ன் (Casein)	2·7	1·7	4·2
வெண்ணெய்	3·5	1·3	3·8
பாலின்சர்க்கரை (Milk Sugar)	5·0	4·5	3·8
உப்பு	·2	·5	·7

மேலே குறிக்கப்பட்ட அட்டவணையினல் பசுவின் பாலிலிருந்து மூன்றிலொரு பாகம் காசேய்னை (Casein) எடுத்துவிட்டு மூன்றிலொரு பாகம் பால் சர்க்கரை (Milk Sugar) சேர்ப்பதினல் அது ஏறக்குறைய மனுஷப் பாலுக்குச் சரியாய வரும். அதைச் செய்யும் விதமாவது:—

ஒரு பாத்திரத்தில் ஆழாக்குப் பசுவின்பாலைப் பன்னிரண்டு மணிநேரம் விட்டுவைத்து அதன்மேல் தங்கும் பாலேட்டை எடுத்து அந்த ஏட்டைப் புளிதாய்க்கறந்த இரண்டு ஆழாக்கு பசுவின் பாலில் போட்டு வைக்கவேண்டும். ஏட்டை எடுத்துவிட்ட ஒரு ஆழாக்குப் பாலோடு ஒரு சதுர அங்குலம் ரன்னற (Rennet) துண்டு சோத்து இந்தப் பாலிருக்கும் பாத்திரத்தை வெந்நீரில் போட்டுப் பால் கட்டிப்போகும்வரை பத்து அல்லது பதினைந்து நிமிஷம் வரைக்கும் வைத்திருக்கவேண்டும்.

பால் கட்டியாகத் தொடங்கினவுடனே அந்தான்னற் துண்டை எடுத்து ஒரு கோப்பையில் போட்டு வைத்தால் இதேமாதிரி இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதம் அதை உபயோகிக்கலாம்.

கட்டிப்போன பாலை நன்றாய்க் கடைந்து மோரை எடுத்து அதை ஒரு பாத்திரத்தில் விட்டுக் கொதிக்கக் காய்ச்சினால் இன்னுங் கொஞ்சம் காசேர்ன் திரளுமே. அப்படிக் கொதிக்கிற மோரை எடுத்து மெல்லீஸ் துணியிலால் வடிகட்டினால் தெளிந்த நீர் இறங்கும்.


இப்படித் தெளிந்த நீரில் 110 குன்றுமணி யெடை பால் சர்க்கரைத் தூள் (Milk Sugar) கலந்து முன் எடுபோட்டு வைத்திருந்த இரண்டு ஆழாக்குப் பாலோடு கலந்தால் அது முலைப் பாலுக்குச் சமானமான பாலாயிருக்கும். இந்தப் பாலைக் காய்ச்சின பன்னிரண்டு மணிக்குள் உபயோகிக்க வேண்டியது. அதற்குமேல் வைத்து உபயோகிக்கக்கூடாது. இந்தப் பால் செய்வதில் உபயோகிக்கப்படும் பாத்திரங்களெல்லாம் வெகு சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

இது முதலில் கஷ்டம்போல் தோன்றினாலும் சற்று கைபழகிக் கொண்டால் வெகு எளிதில் செய்யலாம். இதை முதலில் காண்டியினால் கொடுக்கலாம். குழந்தைக்குப் பால் புட்டியில் குடிக்கத் தெரிந்தவுடன் இரண்டு பால்புட்டி உபயோகிக்கவேண்டும். அதில் ஒன்றை உபயோகித்தவுடன் ரப்பர் காம்பை எடுத்துவிட்டுச் சோடாத தூள் கலந்த தண்ணீரில் போட்டுவைக்கவேண்டும். வேண்டியபொழுது அதைத் தண்ணீரிலிருந் தெடுத்துக் குலுக்கிவிட்டால் சுத்தமாகிவிடும். ரப்பர் காம்பைக் கையினால் சுத்தம் செய்யவேண்டும். ரப்பர் குழாயுள்ள பால்புட்டி உபயோகிக்கக்கூடாது.

நாலு வயது வரைக்கும் குழந்தையின் ஆகாரம்.

(Infant's Food up to four years of Age.)

முன்பல் இரண்டு முளைத்தவுடன் மெல்லின்ஸ்பூடும் (Mellin's Food) பாலும், சோட்டியும் முலைப்பாலுடன் கொடுத்து வரலாம். பதினெட்டு மாதமானவுடன் அரைவேக்காடாய்ச் சமைத்த கோழி முட்டை, நல்ல பால், சோட்டி, கொக்கோ, அசோளூட்மாவு அல்லது கான்ப்ளவர் சேர்ந்த கஞ்சி, ரவை, ஜவ்வரிசிக்கஞ்சி, புழுங்கலரிசி கொய்க்கஞ்சி, கோழுவரகுக் கஞ்சி முதலியவைகளைக்



கொடுத்து வரலாம். இரண்டு வயதானபின் நன்றாய்ச் சமைத்த சாதத்தில் குழைந்த பாசத்தை யெடுத்து மிளகு ரசம், பருப்பு ரசம் அல்லது மாமிச ரசத்தில் பிசைந்து இரண்டுவேளை கொடுக்கலாம். பிஸ்கோத்தும் கொடுத்துவரலாம். மூன்று வயதாகுமுன் குழந்தைகளுக்குப் பெரியவர்களைப்போல் ஆகாரம் கொடுப்பது பிக்க மதியீனமும் கெடுதியை யுண்டாக்கத்தக்க பாவமுமாயிருக்கிறது. ஏனெனில், அப்படிச் செய்வதால் குழந்தைகளுக்கு இரைப்பை, குடல், நாடிகள் முதலியவைகளைப் பற்றிய அநேக வியாதிகள் உண்டாகும். நான்கு வயதாகுமட்டும் மாமிசபோஜனம் கொடுக்கவே கூடாது. அப்படிக் கொடுப்பதனால் குழந்தைகளின் சுகம் கெட்டுப்போவதுமன்றி அவர்கள் குணத்தையும் கெடுத்துக் கோபம், மூர்க்கம், சண்டை, சச்சரவு செய்தல் முதலிய சுபாவங்களை யுண்டாக்கும். கேசன் என்னுமிடத்தில் (Giessen) என்னுமிடத்தில் பல பொருட்காட்சிச்சாலையில் (Museum) ஒரு காடிக் குட்டிக்கு ரொட்டி மட்டும் கொடுத்து வளர்த்த காலத்தில் மிகச்

சாந்தமும் அமைதியுமாய்ச் சிறு பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்ததாம். ஆனால் மாமிச போஜனம் சாப்பிட்ட சில நாட்களுக்குள் மிக மூர்க்கமும் வெறியுமுள்ளவளாகித் தேகு ளிர்ந்ததாக வாசித்திருக்கிறோம்.

குழந்தைகளுக்குச் சர்க்கரையால் செய்த கூழ்பி, வெல்லம், மிட்டாய், பாலேடு, பால்கட்டி, பிஸ்தா அல்லது தகரப் பாத்திரங்களில் அதிகநேரம் வைத்திருந்த பால் முதலியனவைகளைக் கொடுக்கப்படாது. குழந்தைகள் சில சமயம் வயிறு நிறைந்திருக்கும் பொழுது கள்ளப்பசியால் அழுதல் தொந்தரவுபடுத்துவதுண்டு. அதை நிறுத்தும்பொருட்டுப் பால் கொடுக்காமல் ஒரு காய்ந்த சொட்டித்துண்டைக் கையில் கொடுத்தால் அதைக் கடித்துக் கொண்டிருந்து அழுகை நின்று பசியைப் பற்றிய எண்ணம் மாறிப்போகும்.

பால் கொடுக்கத் தகாத காலம்.

தாயின் ஸ்தனங்களில் அதிகமாய்ப் பால் கட்டியிருக்கும் போது அந்தப் பாலின் தன்மை கெட்டுப்போய் மிக்க ஜலமாகவியிருக்கு மாதலால் குழந்தையின குடலைக் கெடுத்துவிடும். அதற்குப் பதிலாகப் புட்டிப்பால் கொடுப்பதே நலம். மேலும் ஒரு ஸ்தனத்தில் கட்டியுண்டாகியிருந்தால் அதிலுள்ள பாலைக் கொடுக்காமல் மறு ஸ்தனத்தில் ஸ்தன்யபானம செய்யக்கூடாது. மேலும், தாய் கடும் பிரயாணஞ் செய்திளைப்பும், திடீரென்ற சந்தோஷ செய்தி கேட்டவுடனும், அதிக விசனம், கோபம், வெறுப்பு, திகில், பயம், கடுக்கம், மனக்கிலேசம் முதலியனவைகளினிருக்கும் போதும் குழந்தைக்குப் பால் கொடுக்கவே கூடாது. அநேக ஸ்திரீகள் மற்றவர்களோடு சண்டைபோடுக் கொண்டிருக்கும்பொழுதே பால் கொடுக்கிறார்கள். இவ்விதமாய் ஆவேசத்துடனும் கோபத்துடனும் தன் சரீரத்திலுள்ள உதிரமெல்லாங் கொதித்துக் கொண்டிருக்கும்போது பால் உடனே விஷமாக மாறிவிடும். அவ்விதபாலைச் சாப்பிட்ட பிள்ளைகளில் அநேகர் பால் குடித்துக் கொண்டிருக்கும்போதே மூர்ச்சையடைந்து பிராணனை விட்டிருப்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். தாய்க்கு மார்பு துடித்தல், க்ஷயரோகம், தோலில் இரணம் முதலிய மேக சம்பந்தமான வியாதிகள், மிக்க பலஹீனம், முதலிய ஸ்திதியிலிருந்தால் அவள் பால் கொடுக்கவே கூடாது. தாய்க்குச் சுரம், வைசூரி, பிளேக் முதலிய தொற்றுவியாதிகளிருக்கும் பொழுதும், குழந்தை யுண்டாயிருக்கும்பொழுதும் பால் கொடுக்கவேகூடாது.

பால் மறப்பிக்குங் காலம்.









சிசுவானது எவ்விதமாய்த் தன் மாதாவின் உதரத்தினுள் ஒன்பது மாத காலமிருந்து வளர்ந்து விர்த்தியாகின்றதோ அதே விதமாக இவ்வுலகத்தில் தோன்றியபின்னும் ஒன்பது மாதங்களுக்குத் தன் அன்னையின் முலைப்பாலை அருந்தி விர்த்தியாக வேண்டுமென்பது சிருஷ்டி கர்த்தரின் நியமம். ஆதலால், ஒன்பது மாதத்திற்கு முன் குழந்தையைப் பால் மறப்பித்தால் அதற்குச் சரியான பலனும் தேகபுஷ்டியும் உண்டாகா. அதேவிதமாய் ஒன்பது மாதமானபிறகும் பால்கொடுத்து வருவதால் குழந்தை வெளிறிப் பலஹீன மடைவதுமன்றி அஜீரமுண்டாகி, மூளையில் சக்தி குறைந்து, மந்த புத்தியும், சில சமயங்களில் பைத்தியமும் முண்

டாகும். தாய்க்கும் முதல் ஒன்பதுமாத மட்டும் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகள் அணுகாமல் ஆரோக்கியமா யிருப்பாள். ஆனல் அதற்குப் பின் பால் கொடுத்துவரின் தாய்க்குச் சரீர சௌக்கியங் குன்றி, நாம்புத் தளர்ச்சி யுண்டாகி, கண்ணெளி படிழங்கி, செவிமந்தமாகி, வாய்ப் பேச்சு முதலாய்க் குளறிப்போகும். ஆனல் தாயின் சக்திக்கும் குழந்தையின் பலனுக்நந் தக்கதாகச் சில மாதங்களைக் கூட்டி அல்லது குறைத்துக் கொள்ளலாம். உதாரணமாக:—தாய் அதிகப் பலவீனமா யிருந்தால் ஆறு மாதத்தில் பால் மறப்பிக்கவேண்டும். குழந்தை பலவீனமா யிருந்தால் பத்து அல்லது பன்னிரண்டு மாதம் வரையில் பால் கொடுக்கலாம். ஒரு வருஷத்திற்குமேல் பால் கொடுப்பதால் தாய்க்கும் பிள்ளைக்கும் கெடுதி நேரிடுமேயன்றி நன்மை உண்டாகமாட்டாது.

ஆனல் திடீரென்று பாலை நிறுத்தாமல் சிறிது சிறிதாகப்பால் குடி மறப்பிக்க வேண்டும். ஆறுமாதமானவுடன் பாலை ஒவ்வொரு நோங்களில் நிறுத்தி அதற்குப்பதிலாக மெல்லின்ஸ்பூட் (Mellin's Food) கொடுத்து வரலாம்.

பால் வற்றச் செய்யவேண்டிய முறை.

பால் வற்றச் செய்யுங் காலத்தில் சிலசமயம் பால் கட்டிக் கொண்டு மார்பு விங்கிச் சுரம் வரும். ஆதலால் அக்காலத்தில் தாயானவள் சாப்பாட்டை வெறுத்துத் தண்ணீர் குடிக்கக்கூடாது. ஒரு மெல்லிய துணியை ஒடிக்கலான் (Eau-De-Cologne) நீர் வகத்தில் நனைத்து மார்பில் கட்டி வைக்க வேண்டும். இதற்குப் பதிலாக ஒடிக்கலானும் ஒலிவ் எண்ணெயுங் கலந்தும் மார்பில் போடலாம். இல்லாவிட்டால் பெல்லொடோனு, (Extract Belladona) எனனும் மருந்தை கிளிசரின், (Glycerine) என்னு மெண்ணெயில் கலந்து மார்பில் பற்றுப் போட்டால் மார்பு வீக்கத்தின் நோய் தீரும். பெல்லொடோனு பிளாஸ்றரை (Belladona Plaster) அல்லது சோப்பிளாஸ்றர் (Soap plarter) வெளியில் வாத்தக்கதாக நடுவில் சிறு துவாரஞ் செய்து ஸ்தனத்துக்குப் போடப் பால் வற்றிவிடும். சிலர் மல்லிகைப்பூ, கோஸ்கிளர், வேப்பிலை முதலியவற்றை வைத்துக் கட்டுவார்கள். வெற்றிலையை வதக்கிவைத்துக் கட்டினுலும் பால் வற்றிவிடும். கரியபோளத்தையு மரைத்துப் பூசலாம்.

பால் கட்டிக்கொண்டு தொந்தரை உண்டானுல் ஒரு உப்பு பேதிக்குக் கொடுக்க வேண்டும். எப்ஸம் சால்ற், (Epsom salt) சுக்குக் கஷாயத்தில் கலந்து காலையில் கொடுத்தால் ஐந்தாறு தட

லை நன்றாய்ப் பேதியாகிப் பால் வற்றிவிடும். பாலை வற்றச் செய்யும்படி வாயினலாவது அல்லது வேறெந்தக் கருவிகளினலாவது பாலை உறிஞ்சி எடுத்தால், பால் அதிகமாய்ச் சுரந்து கட்டியுண்டாகும்.

இக்காலத்தில் குழந்தை பால்குடிக்க ஆசைப்பட்டால் தாய் முலைக்காம்பில் வேப்பெண்ணெய் அல்லது கரியபோளத்தை அரைத்துப் பூசினல் அவற்றலுண்டாகும் கசப்பால் பிள்ளை பால் குடி மறந்துபோம். குழந்தையைத் தாயின் பக்கத்தில் அடிக்கடி வரவிடாமல் பிரித்து வைக்கவேண்டும். பால்குடி மறந்த பிள்ளையைத் திரும்பப் பால் குடிக்கச் செய்வது மதியீனம். கற்பூரத்தைத் தேங்காயெண்ணெயில் கலந்து இளஞ்சூடுண்டாக்கித் தினத்துக்கு மூன்றுதடவை அடியிலிருந்து காம்புக்கு நேராகத் தடவிவிட வேண்டும்.

குழந்தை தூங்கவேண்டிய நியமம்.

ஆரம்பத்தில் சில மாதங்களுக்குக் குழந்தையைப் பால்குடிக்குஞ் சமயந் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் தாயின்படுக்கைக்குச் சமீபத்திலுள்ள ஒருகட்டில் அல்லது தொட்டிலில் தூங்கவைக்கவேண்டும். ஏனெனில் தனிமையாய்ப் படுத்திருப்பதால் சுத்த ஆகாயம் எளிதில் சுவாசிக்கலாம். தாயுடன் குழந்தையைப் படுக்கவைப்பது மிகக் கெடுதி. குழந்தைகளைத் தூங்க வைக்கும்படிப் பால் கொடுப்பதும், தொட்டிலில் விட்டுத் தாலாட்டித் தூங்கப்பண்ணுவதும், கையிலாவது மடியிலாவது வைத்து ஆட்டித் தூங்கச்செய்வதும், தூங்கும்படி மருந்துகள் கொடுப்பதும் நல்ல வழக்கங்களல்ல. குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி, அது தானாகவே தூங்கும்படி செய்யவேண்டும். ஆரம்பத்தில் அழுதாலும் அதைக் கவனிக்கக்கூடாது. அப்பொழுது அது தானே யழுது வாய்மூடித் தூங்கிவிடப்பழகும். அது தூங்கினபின் அதை எழுப்பவே கூடாது. குழந்தையைக் குறித்த நேரங்களில் நியமமாய்த் தூங்கும்படி நாம்பழக்கினல் அதுவே வழக்கமாகிவிடும். தாய்க்கும் தன் வீட்டுக் காரியங்களைக் கவனிக்க நேரங் கிடைக்கும். இரவில் வெகுநேரங் குழந்தையைத் தூக்கமின்றி வைத்திருக்கக் கூடாது. மாலை ஆறு ஏழு மணிக்கெல்லாம் படுக்கையில் விட்டுவிட வேண்டும். குழந்தை படுக்குங் கட்டிலின் தலைப்பக்கம் ஜன்னலுக் கெதிராயிராமல் அதன் சமீபத்திலிருக்கவேண்டும். ஏனெனில் குழந்தை பிறந்த இரண்டு, மூன்று வாரங்களுக்கு அதன் கண் அதிகம் வெளிச்சந் தாங்காது. விழித்திருக்கும்போது இருக்கிறதைவிடத் தூங்கும்போது உடற்புகள் அதிகத் தளர்ந்தியாயிருக்கவேண்டும்.

குழந்தையின் உடை.

குழந்தையின் கை, பாதம் இரண்டையும் எப்பொழுதும் அனலாகவே வைத்திருக்க வேண்டும். ஆதலால், அதன் கை, கால், தோள் முதலியவற்றைக் கம்பளி உடுப்பால் மூடி வைக்கவேண்டும். மேலும், குழந்தையானது கைகளையும் கால்களையும் லகுவாய் ஆட்டி யசைக்கத்தக்கதாக உடுப்பு தளர்த்தியா யிருக்க வேண்டும். பாதங்களிற்போடும் கம்பளிமேல்ஜோடும் பெரிதாயும் தளர்வாயு மிருக்கவேண்டும். எந்தக் காரணத்தினாலும் குழந்தைகள் சாமான உடுப்புகளோ டிருக்கவே கூடாது. குழந்தைகளுக்குப்போடும் உடுப்பு அதிக மூடா யிராமல், லேசானதா யிருக்க வேண்டும்.

பிள்ளைகளுக்குக் குண்டூசி, சேவ்டி பின், (Safety Pin) முதலியவைகளை உபயோகிக்கவே கூடாது. ஏனெனில், அவைகளினால் அதிகத் தீங்கு உண்டாகலாம். அனுதவிடத் தாயானவள் ஒவ்வொரு பாகத்தையும் நூலினால் சேர்த்து வைத்துத் தைத்து விடல் நன்று.

ஒவ்வொரு நாளும் உடுப்பு மாற்றவேண்டும். அப்படித் தினந்தோறும் மாற்ற முடியாவிட்டால் இரவில் படுக்கைக்குப் போகுமுன், பகலில் போட்டிருந்த உடுப்பைக்கழற்றி அதிலுள்ள வியர்வை நாற்றம் முதலியவைகள் போகத்தக்கதாகச் சுத்தமான முள்ள இடத்தில் விரித்துப் போட்டுவிட்டு, அதிகாலையில் எடுத்து அத் திரும்பவும் உபயோகிக்கலாம்.

குழந்தைகளுக்குத்தலையில் தொப்பி போடவேண்டியது அவசியமில்லை. ஏனெனில் அவர்களின் தலை எப்பொழுதுப் குளிர்ச்சியா யிருத்தல் நல்லது. அதுவுமல்லாமல், தொப்பி போடுகிறதால் தலையில் அதிக வியர்வையுண்டாகி ஜலதோஷம் பிடிக்க ஏதுவாகும. ஆதல் குளிர்காலங்களில் பிள்ளைகளுக்கு ஜலதோஷமுண்டாகாதபடிக்கு, பெல்லியசம்பளித்துணியைத் தொப்பிமாதிரியாகத் தைத்துத் தலைக்குப் போடுவது நல்லது.

குழந்தையின் ஸ்நானம்.

குழந்தைக்குப் பிறந்தினமும் அல்லது ஒன்றுவிட்டு ஒருநாள் இளம் வெந்நீரில் வைநோலியா சோப், (Vinolia Soap) போட்டு ஸ்நானம் செய்விக்கவேண்டும். குழந்தைக்குப் பால்கொடுத்த வுடனே ஸ்நானம் செய்விக்கக்கூடாது. ஐந்து நிமிஷத்திற்கு

சாமிவேலின் சிங்கமார்க்கு

பாலாமிர்தம். (Infant Preservative.)

குழந்தைகள் உண்ணும் ஆகாரம் எளிதில் ஜீரணிக்காததால் பிள்ளைக்கு அஜீரணம், வயிற்றுப்பிசம், நெஞ்செரிவு, வயிற்றுப் பொருமல், வாந்தி, மலச்சிக்கல், வயிற்றோட்டம், வயிற்றுவலி, வாய்வாற்றம் பல ரோகங்களுண்டாகின்றன. இந்த உத்தம ஔஷதம் சாப்பிடிவருவதால் குழந்தைகளின் குடலிலொட்டிய பல நோய்களையும், வாய்ப்புண், பச்சையாய்க் கழிதல் முதலியவை களையும் நிவாரணஞ்செய்து, குழந்தைகளுக்கு அழகையும் வலு வையுந் தரும். பல் முளைக்குங் காலத்தில் இதைக் கையாடி வரு வதினால் அநேக நன்மைகளுண்டு. ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய அத்யாவசியமான ஔஷதங்களில் இந்தப் பாலா மிர்தமும் ஒன்று.

சாப்பிடும் விதம்:—ஒரு வாரத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு 2 முதல் 4 துளி, ஒரு வாரத்திற்குமேல் 3 முதல் 6 துளி, ஒரு மாதக் குழந்தைகளுக்கு 5 முதல் 10 துளி, மூன்று மாதக் குழந்தைகளுக்கு 10 முதல் 20 துளி, ஆறு மாதக் குழந்தைகளுக்கு 20 முதல் 30 துளி, ஒரு வருஷக் குழந்தைகளுக்கு 1 தேயிலைக் கரண்டி, ஒரு வருஷத்திற்குமேல் 1 முதல் 2 தேயிலைக்கரண்டி வரை பாலில் கலந்து கொடுக்கவும். பெரியவர்களுக்கு 2 தேயிலைக் கரண்டி.

விலை ரூ. 1.

சாமிவேலின் சிங்கமார்க்கு

பாலர் இருமல் நிவாரணி. (Children's Cough Relief)

இந்த மகா அருமையான ஔஷதம் ஓயாத இருமல், சளி, தினைச்சூடு, கக்குவான், வாந்தி, அஜீரணம், தலைவலி, வாய்வு, தொக்கத்திக்கினை முதலிய ரோகங்களை வெகு எளிதில் சுகமாக்கும். இதில் விலையுயர்ந்த பல அருமையான சரக்குகள் சேர்ந்திருந்தபோதிலும், இதனுல் பலனடையும் குழந்தைகளின் கன்மை யைக் கருதி சொற்ப விலைக்குக் கொடுக்கிறோம்.

சாப்பிடும் விதம்:—பெரியவர்களுக்கு ஒரு தேயிலைக்கரண்டி. ஒரு வாரத்துக்குட்பட்ட குழந்தைகளுக்கு 2 துளி. ஒரு வாரக் குழந்தைக்கு 4 துளி. ஒரு மாசக் குழந்தைக்கு 7 துளி. மூன்று மாசக் குழந்தைக்கு 15 துளி. ஆறுமாசக் குழந்தைக்கு 20 துளி. ஒருவருஷக் குழந்தைக்கு 30 துளி. இதைத் தண்ணீரில் கலந்து கொடுக்கவும்.

சிசு I-கு விலை ரூ. 1.

சாமிவேலின் சிங்கமார்க்கு

பாலர் சுர நிவாரணி. (Children's Fever Cure)

குழந்தைகளுக்குண்டாகும் ஜலதோஷத்தோடு கூடிய சுரம், சுவாசகாசம், இருமல், சோளை, கபம் முதலியவைகளை நிவாரணம் செய்யக்கூடியது. 1 மணி நேரத்திற்கொரு பில்லை வீதம் மூன்றுதடவை கொடுத்தபின் ஒன்றே அல்லது மூன்றுமணி நேரத்திற் கொருதடவை ஒவ்வொரு பில்லை கொடுத்துவரவேண்டியது.—விலை அணு 8.

கடவுள் துணை.

மானிட
மர்ம சாஸ்திரம்.

பத்தாம் புஸ்தகம்.

புத்திரச் செல்வம், ஆண் பெண் மலடு.

குழவினிது யாழினிதென்பர் தம்மக்கண்
மழலைச் சொற் கேளாதவர்.—குறள்.

இந்த

யாவர்க்கும்

சுக செல்வ நன்மைகளையும் சுகிர்த பாக்கிய
போக்கிஷத்தையும் நீடூழி பெருகவிக்க
விரும்பிய,

கல்கத்தா சர்வகலா சங்கத்தின் தமிழ்ப்பரீக்ஷகரும், சங்கூன் சென்
ஜான்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியரா யிருந்தவரும், கணித சாஸ்திரம், பூமிசாஸ்
திரங்களின் மந்திரகர்த்தாவும், மானஸ மர்ம சாஸ்திரப் பண்டிதரும்,
சாமிவேல் வைத்தியசாலைத் தலவருமாகிய


எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.

புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,
திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை.
1920.

All Rights Reserved.



கடவுள் துணை.

மானிட மர்ம சாஸ்திரம்.

பத்தாம் புஸ்தகம்.





புத்திரச் செல்வம்.

பகவானால் இப்பூமியின் கண்ணே சிருஷ்டிக்கப்பட்ட சகல சிருஷ்டிகளுக்கும் மேலானது மானிடப் பிறவியே. இந்த அருமையான மானிடப் பிறவிக்குக் கிடைக்கக்கூடிய எல்லாச் செல்வங்களிலும் மேலான செல்வம் புத்திரச் செல்வமே.

காஞ்சிப்புராணம்.

" மகவேபேரானந்தியாக்குமகவானுலகந்தனைவெல்லு
மகவின்மகவான்மூடிவின்மையெய்துமகவின்மகவழித்த'
மகவான்மேலேப்பதமுறுந்தென்புலத்தார்கடனைமாற்றுவது
மகவானன்றியில்லையெனவகுத்தான்றெரிந்துக்கண்ணுவனே."

நளவெண்பா.

"பொன்னுடையரேனும் புகழுடையரேனு மற்
றென்னுடையரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களவுந் தாமரைக் கைப் பூதாதஞ் செய்யவாய்
மக்களே யில்லாதவர்."

"சொன்னகலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிணிகிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி."

சீகாளத்திப்புராணம்.

"கண்ணில்யாக்கையுந்திங்களில்கங்குலுங்கண்போ
லெண்ணண்மந்திரியில்லரசாட்சியுமருளி
றிண்ணனெஞ்சமும்புலவரிலணவயுமொண்டும்பால்
வண்ணவாயினமக்களில்வாழ்வுமொப்பாமால்."

திருக்கூவப்புராணம்.

"மெத்துகின்றவிழுமியசீர்த்தியோ
டெய்த்தலின்றியிருணமையின்புந்தரும்
புத்திரற்பெறும்புண்ணியவாழ்க்கைதா
னத்தவத்தினுமாற்றச்சிறந்ததே."

திருக்கழுக்குன்றப்புராணம்.

"இறைவர்ஞானமுமேதமிலாமையும்
பொறையும்பூண்டபுதல்வர்ப்பெறுவதோன்
மறவரேனுமவணையவ்வல்வினை
பிறவியேழினும்பின்றொடராததோ."

காசி காண்டம்.

"எத்திருவுடையரேனுமின்னனிமழலைச்செவ்வாய்ப்
புத்திரனிலாதோர்என்றும்பொறியிலாயவர்மாற்றான்
மெய்த்தவம்புரிந்தமைந்தர்ப்பெறுவதேவிழைவர்யாரு
மூய்த்தான்மகவுமோர்ழ்பான்மையாயுரைப்பர்மேலோர்."

"மனைவிதன்கொழுநற்கின்றோன்மற்றவனருளினாலே
யனையவனயலாற்கின்றோனரும்பொருள்கொடுத்தக்கொண்டோ
னினிதுறுதெதத்தமைந்தன்மகனெனப்புகுந்தமைந்தன்
றனையசேய்தன்னுலாவியுய்ந்தவன்றனையாவார்."

பிரபோத்தராகாண்டம்.

" உத்தமர்கடமுடித்தபார்முழுவதுமொருங்கே
வந்ததாடொழுமரசியல்வளமெலாம்பெறினு
மிந்திராதியர்பெரும்பதத்திருக்கையெய்திடினு
மைந்தரின்றியேவாழ்வதுவாழ்வுமற்றன்றே."

நீதிநெறிவிளக்கம்.

" கற்புடைத்தன்புழுடித்தாண்மெய்ப்பூசி
நற்குணநற்செய்கையூண்டாட்கு—மகட்பே
றென்பதோர்செல்வமுமுண்டாயினில்லன்றே
கொண்டாற்குச்செய்தவம்வேறு.'

வில்லிபாரதம்:

" கல்லாமழலைக்கனிபூறல்கலந்தகொஞ்சு
சொல்லாலுருக்கியழுதோடிதொடர்ந்தபற்றி
மல்லார்புயத்தில்விளையாடுமிழ்ச்சிணைமந்த
ரில்லாதவர்க்குமனைவாழ்வினினிமையென்னும்."

" மெய்தானம்வண்மைவிரதந்தழல்வேள்விகாளுஞ்
செய்தாலுஞாலத்தவர்நற்கதிசென்றுசேரார்
மைதாழ்தடங்கண்மகளின்மூகமன்னுபார்வை
யெய்தாதொழியிற்பெறுமின்பமிலவணமில்லை."

வஞ்சியாபதி.

" பொறையிலாவறிவுபோகப்புணர்விலாவினைமேவத்
துறையிலாவசனவாவிதுலிலாக்கோலத்தாய்மை
நிறையிலாமாலைகல்விகலமிலாப்புலமைமன்னர்ச்
சிறையிலாகரம்போலுஞ்சேயிலாச்செல்வமன்றே."

கலடியார்.

" கிதலிதினப்பட்டவாலமரத்தை
மதலையாய்மற்றதன்வீழுன்றியாங்கு
குதலைமதந்தைதகட்டோன்றிற்றுன்பெற்ற
புதல்வன்மறைப்பக்கெடும்."

நீதிவெண்பா.

" கண்ணுக்கினியசபைக்குமணிகற்றோர்
விண்ணுக்கினியமணிவெய்யோனே—வண்ணமறுஞ்
சுந்தரமேயார்சயனத்தினியமணி
மைந்தன்மனைக்குமணி."

திருக்குறள்.

"மக்கண்மெய்தீண்டலுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ்செவிக்கு."

ஆகையால், இவ்வுலகத்தில் எய்தித இன்பத்தையும் வைபவத்தை யும் உடையவர்களாயிருந்தபோதிலும் இல்லற இன்பத்தின் ரகசியமாகிய புத்திரபாக்கியமில்லாதவர்கள் நடைப்பிணத்துக்கொப் பாவார்கள். "புத்திரரில்லா வீட்டில் போஜனம் செய்யக்கூடாது." என்பதும் "கொள்ளிக்குப் பிள்ளையற்றவனை சொத்து எவர் கைக் குப் போனாலும் விரோதியாகாது." என்பதும் இந்தக் கருத்தின கொள்கை. மேலும் இவ்வுலகத்தவர் ஆடைபாபரணம் உண்டி முதலிய விஷயங்களில் மாறுதலுற்று வேண்டியதற் கதிகமாய்க் கிடைத்தபோ அவற்ற "பொளிந்தமிழ்தில் அழுதமும் நஞ் சாம்" என்று சொல்லி வைராக்கியத்தை மேற்கொள்ளுகிறார்கள். ஆனல் தெவிட்டாத தெள்ளமுதமாயிய மானுட கர்ப்பத்தின் கனிகள் மட் டும் எத்தனை உதித்தாலும் "கொழுக்குச் சுளைக்காய் கனக்கு மோ?" என்று சொல்லி அவற்றை வளர்க்கும்பொருட்டு இரவும் பகலும் கண் விழித்துப் பத்தியம் பிடித்துப் பாலூட்டித் தாலா ட்டிச் சீராட்டிப் பக்குவமாய் வளர்த்த அவற்றின் அமிர்த மொ ழுகும் வாயினின்று புறப்படும் இன்சித பாஷையின சுவ்கி த ஸ்வரசையைக் கேட்டு ஆசை மேலிட்டு ஆனந்த மகிழ்ச்சிபால் பூரித்திருப்பார்களோ?

புறநானூறு.

"படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணு
முடைப்பெருஞ் செல்வமாயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறு கை கீட்டி
யிட்டுச் தொட்டுக் கவ்வியுந் தழந்து
நெய்யுடை யடிசின்மெய்ப்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்கும்
பயக்குறை யில்லைத நாம் வாழுநாளே."

ஆகவே "கடந்த ஞானியுங் கடப்பமோ மக்கள்மேல் காதல்."

குறள்.

"குழலினிது யாழினிதென்பர் தம்மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்."

எனச் சான்றோரும் அறைந்திருக்கின்றனர். நமது ஆதித்தாய் தகப்பன்மாருக்கு, நமதாண்டவர் கொடுத்த ஆதிக்கட்டளைகளி

லொன்று "நீங்கள் பல்கிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்." என்பதே. இந்த அருமையான கட்டளையை நிறைவேற்றுவதில் அளவிடப்படாத ஆனந்தப் பெருக்கை அனுபவித்து வைத்திருக்கின்றனர். "கெல்லுக் கிளைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்." என்றபடி ஒவ்வொரு ஜீவராசியும் விர்த்தியாவதற்காகப் பகவானால் அமைக்கப்பட்ட இந்த ஏற்பாட்டை மானிடர் தங்கள் மாமிச இச்சையை நிறைவேற்றுவதற்காகவும் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். இத்தெய்வக் கட்டளையை அறிந்தும் அறியாமலும் மீறி நடப்பதால புருஷனுக்கும் பெண் சாதிக்கும் பாசத்தை மூட்டி வளர்க்கும் தேஹதாக்களாகிய புதல்வர்களில்லாதவர்களாய் அநேகர் விசனத்தி லிமிழ்ந்து மனோவியாகுல மடைகின்றனர். இதை நீக்கும் வழியுண்டோவென்றும் பொருட்டு நாம் பிரசித்தியிலபற்ற அநேக ஆங்கிலேய டாக்டர்கள் எழுதிய நூற்களை வெகுசிட்டப் பட்டபாய் ஆராய்ச்சி செய்து அவற்றின் சாராம்சத்தை இங்கு கூறியிருக்கின்றோம்.

பெண்மலடு.

ஸ்திரீ புருஷர்கள் கூடிச் சம்போகஞ் செய்தபோதிலும் சந்தானமில்லாதிருப்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. அவற்றில் ஜனனேந்திரியங்களில் இயற்கையாயமைந்த அங்கவினத்தால் உண்டாகக்கூடிய மலட்டை நிவர்த்திப்பது அசாத்தியமாயிருந்தபோதிலும், மற்றநேக காரணங்களால் உண்டாகக்கூடிய மலட்டுத் தன்மையை ஓரளவாய் நிவர்த்திக்கலாம். ஆனால், அநேக ஸ்திரீகளோ தாங்கள் குழந்தையில்லாதிருப்பதற்குக் காரணம் தங்கள் ஜனனேந்திரியங்களில உண்டாயிருக்கும் நோய்களென் றறியாமல், தங்களைச் சுகதேகிகளாகப் பாவித்து ஈஸ்வராதித்தத்தால் அல்லது விதிவசத்தால் தமக்குப் புத்திரபாக்கியமில்லை யென்று எண்ணித் தாம் புத்திரரை அடைவதற்கு வேண்டிய வழிகளைத் தேடாதிருந்துவிட்டு தேவஸ்தலங்களுக்கு மாதாந்தம் போய் வருவதாலும், தீர்த்த யாத்திரை செய்வதாலும் குழந்தை ஜனிக்குமென்று எண்ணித் தமது வாழ்நாளையும் காசையும் வீணில் விரயமிடுகின்றனர். அவ்விதம் மாதாந்தம் நடந்து கால் சலித்த ஓர் ஸ்திரீ சொல்லி யழுததாவது:—

மாதமாதந்தோறும், நான்பாவி நான்தோஷி, மாதாந்தம்போனாலும்—என் மன்னவனுரில்லாமல் மாயாண்டியோர் மைந்தன் கொடுப்பாரோ.

ஆனால், அவர்கள் தேர்ந்த வைத்தியர்களிடம் தங்கள் ஸ்திதியை விளக்கிச் சொல்வார்களானின், அவர்கள் சொல்லும் யோசனைகளினாலும் உபாயங்களினாலும் புத்ர பாக்கியமடைந்து ஆனந்த முறுவர் என்பதற்குச் சந்தேகமில்லை.

விவாக நிலையைக்குட்பட்டும் பிரௌடையானது முதல் மாத குது நின்றுபோகுங் காலம்வரை குழந்தை யில்லாதிருப்பதே மல டென்னப்படும். பெண்மலடென்பது விவாகமான தமுதல் குழந் தையேயில்லா திருத்தலென்றும், விவாகமான பின் இரண்டொரு குழந்தைகளைப் பெற்றுவிட்டுப் பின்பு அநேக வருஷங்களாகக் குழந்தையிலா திருத்தலென்றும் இருவகைப்படும்.

பலமும் தேகாரோக்கியமு முடைய அநேகர் விவாகமான தவக்கத்தில் மிதமிஞ்சி அடிக்கடி சம்போகஞ் செய்வதே இதற்கு முதற்காரணம். இவர்கள் சரீர தத்வ சாஸ்திர விதிகளை முன்னமே யறிந்திருந்தார்களானால், இவ்விதமா யளவுக்கு மிஞ்சிச் சம்போ கித்துத் தங்கள் சௌக்கியத்தையும் பலனையுங் கெடுத்துப் புத்ர பாக்கியத்தையு மிழந்து அகால மரணத்திற்கும் ஆளாகமாட்டார் கள். இப்படிப்பட்டவர்கள் சுகாதார விதிகளையுங் கவனியாமல், கண்டதே காட்சி பெற்றதே பேறென்று நினைத்தவேளையெல்லாம தங்கள் மாமிச இச்சைக்கு இடங்கொடுத்து அடிக்கடி தரித்த கருவையும் அழித்துவிடுகின்றனர். காசுக்கு ஆசைப்பட்டு இர வும் பகலும் தங்கள்சரீரத்தை மற்றவர்கட்குவிற்கும் விலைமாதாக் குச் சந்தானமே யில்லாதிருக்கும் நிலைமையே இதற்கு அத்தாட்சி.

இப்படிப்பட்டவர்களுக்குச் சிறிது காலத்திற்குப் பின் கருப் பையில் உஷ்ணந்தாக்கி அழற்சியுண்டாகி (Inflammation of the Womb) க் கருப்பையின் வாய் திராட்சியாகி மகருங்கிவிடுமாத லால் சுகஸ்திரீயி உட்செல்ல தேறாதிராது. அதனல் கருத் தரிக்காமலே போய்விடும். இவ்வித காரணங்களால்தான் அநே கர் கலியாணமாகியும் காலேந்து வருஷம் பிள்ளையில்லா திருக்கி றார்கள்.

இன்றுஞ் சிலர் விவாகமான தவக்கத்தில் தமது இன்பத்தைக் கெடுத்து நேரிடுமென்று மெண்ணத்தால் பிள்ளைப்பேற்றை விரு ம்புகிறதே யில்லை. மேற்கூறிய காரணத்தால் அவர்கள் விருப்ப மும் நிறைவேறுகிறது. ஆனல், சில வருஷங்களுக்குப் பின் மக் கள்மேல் காதல் கொண்டு பிள்ளைப்பேற்றை விரும்புகிறார்கள். ஆனல் தாங்கள் முன் நடப்பித்த அக்கிரமக்கிரித்தியங்களுக்குத் தருந்த தண்டனையாக அநேகமாய்க் கர்ப்பம் அடைபட்டுப்போவ தண்டு.

வேறுசிலர் எவ்வளவாய் மிதமிஞ்சிய போகஞ் செய்தபோதி லும் கருத்தரிப்பதுண்டு. ஆனல் இரண்டொரு பிள்ளைகளுக்குப் பின் நின்றுபோம். இதற்குக் காரணம் கருப்பையின் வாய் கிழி ந்து போவதே. இப்படிப்பட்டவர்களுக்கு மாதாந்த ரு தி வெளியாகும்போது அதிக வேதனையுண்டாவது மல்லாமல் ஏரா ளமாய் வெள்ளையும் காணும்.

வேறு சிலருக்கு வயிற்றை இறுக்கி ஒட்டியாணம் போடுவது, அசுத்த ஆகாயம் உட்கொள்வது, தொற்பிபாசமின்மை முதலிய பல காரணங்களால் கருப்பாசயத்தின் தசைநாம்புகள் தளர்ச்சியடைந்து, பலவீனமாகிப் போவதால் தரித்த கருவானது கருப்பையில் தங்காமல் கழிவிடுகிறது.

வெள்ளை காணும்போது கருத்தரிப்பது அசாத்தியம். சொருசான ஜீவியம் பண்ணும் அநேக ஸ்திரீகளின் கர்ப்பாசயத்தின் வாயில் இரணமுண்டாவதால் அவர்கள் மலடாளார்கள்.

நெடுங்காலங் கெட்ட பழக்கங்களை அப்பியாசித்து வரும் ஸ்திரீகளுக்குப் புருஷர்மேலாசையில்லாமல் தங்கள் பூர்வ பழக்கங்களிலேயே ஆசையுண்டாகும். அப்படிப்பட்டவாகளுக்கும் பிள்ளையே பிராது.

மேலும் சரீர ஆரோக்கியம், மனோதிடனியம், சன்மார்க்க ஒழுக்கம் முதலியவற்றிற்கு அநுசரிக்க வேண்டிய ஆசாரவிதிகளைக் கைக்கொள்ளாமல் போவதனால் ஸ்திரீகளுக்குள் சாதாரணமாய்ப் பலவீனமுண்டாகிக் கருப்பையும் பலத்தாட்சியடைந்து தன் நிலைபிசகிப் பின்பக்கமாவது முன்பக்கமாவது மடங்கிக் கிடப்பதால், சுக்கிலம் அதன்வாயினுட் செல்வதற்கிடமில்லாமல் அநேகர் மலடாகிவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு மாதவிடாய் காலத்தில் கருப்பையின் தசைநாம்புகள் வெகு கடினமாயுழைத்து, அங்கு சேர்ந்திருக்கும் உதிரத்தை அதிக கஷ்டத்தோடு வெளியாச்சுவதால் அநேக வேதனையுண்டாகும்.

கருப்பை தன் நிலையை விட்டுப்பிரிந்து வெளியே தள்ளிக் கொண்டிருப்பதாலும் குழந்தை உற்பத்தியாகாது. கர்ப்பாசயத்தின் வாய்ப்பக்கத்திலுள்ள ஜவ்வு (Hymen) கிழிபடாதிருப்பதாலும், அதன் அருகில் தசை வளர்ந்து மூடிக்கொள்வதனாலும், வெள்ளை, வெட்டை முதலிய வியாதிகளால் பீடிக்கப்படுபவர்களுக்கு அந்த ரோகங்கள் சுகமானவுடன் கருப்பையின் வாய் சுருங்கி இறுகிக்கொள்வதனாலும், சினைப்பையிலிருந்து கருப்பைக்கு முட்டைக் கருவை கொண்டுவந்து சேர்க்கும் சினைக்குழல் (Fallopian tube) கிழிந்து போவதனாலும், சினைப்பையானது மேகவியாதி முதலான காரணங்களால் தனது தொழில் நிறை வேற்றச் சக்தியற்று அண்ட உற்பத்திக்குப் பங்கம் நேரிடுவதனாலும், இயற்கையிலேயே கருப்பையாவது சினைப்பையாவது முற்றிலுமில்லாமல் போவதனாலும் ஸ்திரீகள் மலடாளார்கள்.

இவ்விதமாய்ப் பல காரணங்களாலும் ஸ்திரீகள் மலடாவதற்கு விசேஷித்த காரணம் வெளிக்குத் தோன்றாத மேகரோகங்களே யென்று நெக்ரூத் (Dr Noeggarrath) என்னும் அமெரிக்க டாக்டர் சொல்லுகிறார். மேலும், அவருடைய அபிப்பிராய மென்னவெனில், ஓர் மனுஷன் மேக சம்பந்தமான வியாதியால் எக்காலத்திலேனும் ஒருதடவை பீடிக்கப்பட்டு வெளிக்கு மாத்திரம் சொஸ்தமடைந்ததாகத் தோன்றினபோதிலும் அவ்வியாதி, அவன் உயிருள்ள பரியந்தம் அவனைவிட்டு நீங்காமல் உள்நோயாகவே யிருக்கும். அந்த நோய்கண்டு சொஸ்தமாகி எத்தனை வருஷங்களானபோதிலும் அவன் விவாகஞ் செய்தவுடன் தன் மனைவிக்கு அந்த நோயை விட்டுவிடுவதால் அவள் மலடாகிறாள் பிள்ளை பெற்றாலும் அந்தப் பிள்ளைக்கும் அந்நோய் தாவும். சில சமயங்களில் அவன்செய்த மூடத்தனத்திற்கும் பாவத்திற்கும் தண்டனையாகச் சந்ததி உற்பத்தியாக்குந் தன்மையை அவன் இழந்துவிடுகிறான்.

மாதாந்தர ருதுகாலங்களில் மிதமிஞ்சிய இரத்தப் பிரவாகங் கண்டு கஷ்டப்படுகிறவர்களுக்கும், கொழுத்த சரீரமுடையவர்களுக்கும் குழந்தையில்லாமல் போகலாம். குழந்தை உண்டானாலும் அகாலப் பிரசவம் உண்டாகும்.

பொதுவான சிகிச்சை.

மேற்குறித்த பலவித மலட்டிற்கும் பொதுவான சிகிச்சையாதெனில், எந்தெந்த நோய்களின் காரணமாகக் குழந்தையில்லாமற் போகிறதோ அந்தந்த நோய்களுக்குப் பரிகாரம் தேடவேண்டும். அப்படிப்பட்டவர்கள் மிதமிஞ்சிய சம்போகத்தை நிறுத்தி, மாதவிடாயாகுமுன் சிலநாட்களிலும், மாதவிடாய் ஆகி நின்றபின் சிலநாட்களிலும் மட்டும் சம்போகஞ் செய்யவேண்டும்.

கருப்பையின் உட்பாகம் வீங்கியிருத்தல்.
(Endometritis)

குறிகள். பலவீனம், தாதுதனர்ச்சி, முகம் வெளிறியிருத்தல், ஜீரணசக்திக்குறைவு, கண் மங்கலாகிக் கண்ணைச்சுற்றி ஓர்விதக் கறுப்பு வட்டந் தோன்றுதல், தலைநோய், முதுகு பலவீனம், நீர்போன்ற திரவம் வெளியாதல், மாதாந்தர ருது சரிபாய்க் காணுதல் சொற்பமாய்க் காணுதல், இல்லாவிடில் தடைப்பட்டிருத்தல், ருதுகாலவலி முதலியனவைகளே.

காரணம். உடையை இறுகக் கட்டுதல், மாதாந்தர சுத காலத்தில் ஜலதோஷம் பிடித்தல், மிதமிஞ்சிய சம்போகம், அக்கிரமக் கிர்த்தியங்கள் முதலியவைகளாலும், குழந்தை பிறந்தவுடன் பால்கொடாமை விருப்பதனாலும் கருப்பையின உட்பாகத்தில் வீக்கங் காணும்.

நிவாரணம். காரணத்தை யறிந்து அதை நிவர்த்திக்கவேண்டும். லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாது. எளிதில் ஜீரணிக்கத்தக்கதும் சரீரத்துக்குப் பலனைக் கொடுக்கக்கூடியதுமான ஆகாரஞ் சாப்பிடவேண்டும். பழங்கள், தானியவகைகள், முட்டை, பால் வாளமாய் உபயோகிக்கவேண்டும். ஓமுதல், குதிரைவாலரிசி முதலிய வஸ்துக்களைத் தாக்குதல் முதலியவை ஆகாது. ஆனல், பிரதினமும் அதிகநேரம் சுத்த ஆகாயமுள்ள வெளியிடங்களில் சாந்தமான தேகாப்பியாசம் பிரதக்ஷிணமாய்ச் செய்துவர வேண்டும். இச்சாபத்தியம் மிக அவசியம். பல சுத்திக்கான ஏதுக்களை உபயோகித்து வரவேண்டும். உதாரணமாக, பழவர்க்கங்கள், காய்கரிவகைகள் முதலியவற்றைப் புசிப்பதனாலும், பிரதினமும் வயிற்றைக் கையிரல் பிசைந்து விடுவதனாலும், மல சுத்தியைக் கிரமப்படுத்திக் கொள்ளவேண்டும்.


பிரதினமும் அல்லது இரண்டுநாளுக் கொருமுறை அரை மணி நேரத்துக்குக் குறையாமல் வெந்நீரில் ஆசனஸ்நானம் செய்துவரவேண்டும். ஆசனஸ்நானம் செய்யும்போத, ஆசனஸ்தானத்துக் குபசீயாகிக்கும் வெந்நீரைவிடக் கொஞ்சம் சூடான வெந்நீரில் பாதஸ்நானமும் செய்யவேண்டும்

நாறு டிக்ரிக்குக் குறையாத சூடுள்ள வெந்நீரைப் பீச்சாங் குழல் வழியாய் மர்மஸ்தானத்துள் செலுத்திச் சுத்திசெய்துவரவேண்டும். ஆனல், மாதாந்தர சுதகாலத்தில் ஆசனஸ்நானமாவது பீச்சாங்குழலாவது உபயோகிக்கக்கூடாது. மருந்துகளோ பீச்சாங்குழல் மூலமாய் உபயோகிப்பதால் அதிக மோசமுண்டு. ஆதலால் மருந்துகள் உபயோகிக்கக்கூடாது.

கருப்பையின் அழற்சி. (Metritis.)

குறிகள். கருப்பை வீங்கியிருத்தலுக்குரிய குறிகளெல்லாம் விகறுகுதோன்றும். ஆனல் அதிகமாயிருக்கும். கருத்தரித்த ஆரம்பத்தில் காணப்படும் மீதாற்றங்களும் உண்டாகும். சரீரத்தைச் சுற்றிலும் முதுகின் கீழ்ப்பக்கத்திலும் வலியுண்டாகும். குடல்கள் கீழே இழுக்கிறதுபோல் பலவாய்த் தோன்றும்.


காரணம், மிகமிஞ்சிய சம்போகம், அக்கிரமக்கிரித்தியங்கள், கருத்தரிக்காதபடிப் பல கருவிகளை உபயோகித்தல், உடையை இறுகத் தரித்தல் முதலிய காரணங்களாலும், விசேஷமாய்க் குழந்தை பிறந்த சிறிது காட்களுக்குள் எழுந்து நடமாடுவதனல் கருப்பையானது சரியானபடி சிறுத்துத் தன் நிலைக்கு வராமல் விங்கி யிருத்தலினலும், கருப்பையில் அழற்சியுண்டாகி, வீங்கிப் பருவாகிச் சிலசமயம் உறைப்பு கீழே இறங்கிவிடும். இல்லாவிடில் கருப்பை பருவாயிருப்பதால் முன்பக்கத்தில் அல்லது பின்பக்கத்தில் படங்கி விழுந்து கிடக்கும். இவ்விதமாகக் கருப்பையானது படத்தில் காண்பித்திருக்கிறபிரகாரம், ஸ்தானம் பாதிக்கிடக்கும்.



நிவாரணம். கருப்பை விங்கியிருத்தலுக்குரிய நிவாரணங்களாகிய ஆசன ஸ்நானம், பீச்சாங்குழலால் வெந்நீரை மர்ம ஸ்தானத்துள் செலுத்துதல், அதிக உழைப்பினின்றும் இளைப்பாறியிருத்தல், இச்சாபதத்தியம், மோகத்தை மூட்டிவிடக்கூடிய விஷயங்களை நீக்கிவைத்தல் முதலியவைகளே இதற்கு நிவாரணங்களாகும். வெந்நீரேயன்றி குளிர்ந்த ஜலம் உபயோகிக்கக்கூடாது. மர்ம ஸ்தானத்திலிருந்து நீரவம் வெளியாகிக்கொண்டு இருக்குமாயின் வெந்நீரில் உடபு அல்லது சீனக்காரம் போன்ற துவர்ப்பான வஸ்துக்களை கலந்து பீச்சாங்குழலால் மர்ம ஸ்தானத்தில் செலுத்தி சுத்திசெய்யவேண்டும்.

கருப்பையின் வாய் விங்கியிருத்தல் நிவாரணம். ஆசனஸ்தானம், துவர்ப்பு மருந்து, வெந்நீர் முதலியவற்றை உபயோகிக்க வேண்டும். அதனுடன் கிளிசரினை (Glycerine) சமனமையாய் கலந்து டானின் (Tannin) பூசி கலக்கிய மருந்து ஒரு சிறு பஞ்சு உருண்டையை நனைத்து ஒரு தையலூசி கட்டி மர்ம ஸ்தானத்துக்குள் செலுத்தி வைக்கலாம். ஒருநாள் இப்படி வைத்திருந்து பின்பு நூலைப் பிடித்திழுக்கப் பஞ்சு வந்துவிடும். இப்படியே வேறு பஞ்சை இவ்விதமாய் உபயோகிக்கக் குணமுண்டாகும்.

கருப்பையின் உறுப்பு தள்ளுதல்.



2

குறி. சிற்சில சமயங்களில் முதுகின் பிற்பக்கம் வலியும், மர்ம ஸ்தானத்துள் ஓர்வித உணர்ச்சியும், சலாசயம், ஆசன பாகங்களின் உட்பக்கம் எரிச்சலுமுண்டாகும். நடக்கும்பொழுது அல்லது வேலை செய்யும்பொழுது அசௌகரியமாகத் தோன்றும். மாதாந்தரு துது ஏராளமாக அல்லது வலியுடன் காணும்.

காரணம். குழந்தை பிறந்த சிறிது காலைக்குள் மெத்தைப் படிகளில் ஏறி இறங்குவது, சாமான்களைத் தூக்குவது, ஓடி ஆடி வேலை செய்வது முதலிய பலகாரணங்களால் கருப்பையானது தானிருக்கும் நிலைதவறி மர்ம ஸ்தானத்தினுள் நகர்ந்துவிடும்.

நிவாரணம். முதலாவது. ஆசன ஸ்நானம், பிச்சாங் குழலால் வெந்நீரைச் செலுத்துவது முதலிய விதங்களால் கருப்பையில் உண்டாகும் வீக்கத்தைத் தணித்து வேதனையை நீக்கவேண்டும். கருப்பையை வெளியே தள்ளவிடாமல் தன் ஸ்தானத்தில் நிறுத்தி வைக்கும் பெஸ்சாரி (Pessary) முதலிய கருவிகளை இங்கிலீஷ் ஷாப்புகளில் வாங்கி உபயோகிக்கலாம். அது கிடைக்காத பக்ஷத்தில் நோயாளியைப் படுக்க வைத்திக கருப்பையைத் தன் ஸ்தானத்துள் செலுத்தி அது தன்னிலைக்கு வரதவுடன் கிளிசரினில் தோய்த்த பஞ்சுருண்டையால் தூலக்கட்டிக் கருப்பையின் வாயில் திணித்து அடைத்து வைக்கலாம். நோயாளி தாமே உபயோகித்துக்கொள்ளலாம். இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக, மர்ம ஸ்தானத்துள் தலைசாம்பு பஞ்சுண்டைந்தி கருப்பையை தன னிலையில் தாங்கிக் கொள்ளத்தக்கதாகி, உறுதியுண்டாக்கக்கூடிய கசாத்து முதலிய தேகாப்பியாசங்களை செய்து வரவேண்டும். அவற்றில் சிலவற்றை இவ்விடம் கூறுவோம்:—

நோயாளி தலையில் பாய்விரித்துப் படுத்துக்கொள்ளவேண்டும். பின்பு, பாதங்களைச் சரீரத்தின பக்கத்தினிழுத்துத் தலையில் மிதித்துக்கொள்ள வேண்டும். இப்போது நோயாளி தன இடுப்பைத் தலையில் படாதபடி உயர்த்திக்கொண்டு பாதங்களுமே தோள்களுமட்டுமே தலையில் படச் செய்யவேண்டும். இவ்விதம் இரண்டொரு நிமிஷம் நின்று தகைப்பானவுடன் இடுப்பைத் தரைக்குக் கொண்டு வரவேண்டும். அதிகத தகைப்புக்கு இடங் கொடுக்கக்கூடாது. பிற்பாடு சில நிமிஷங்களுக்கும் அப்படியே செய்து வரவேண்டும். நோயாளியின் சக்திக்குத தக்கது இரு பது, அல்லது முப்பது நிமிஷம் வரை இந்த அப்பியாசத்தைச் செய்துவர வேண்டும். இவ்விதமாய் இடுப்பை உயர்த்துவதால் அடிவயிற்றிலுள்ள இயந்திரக் கருவிகள் தத்தம் நிலையில உறுதியாய் நிற்கும். முதல் நாளிலேயே இதன் பிரயோசனம் தெரியும். பிரதிதினமும இரண்டு மூன்று தடவையாகச் சில நாட்களுக்கு இந்த அபபியாசம் செய்து வந்தால் விசேஷித்த நன்மையுண்டாகும்.

இன்னுமொரு அப்பியாசம் யாதெனில்:—நோயாளி தன் நெஞ்சு தரையில் படத்தக்கதாக முகங் குப்புறப் படுத்துக்கொண்டிருக்கையில் வேறொரு ஸ்திரீ அவளுடைய காலையும், இடுப்பையும உயர்த்துவதால் அடிவயிற்றுத் தசை மாமிசம உறுதியாகும். வேறுமொரு அபபியாசங்களும் செய்யலாம். உதாரணமாக:—முன்னுக்கும், பின்னுக்கும, பக்கங்களிலும் குனிவது. அடிவயிறுறைக் கையினால் பிசைதலுகொள்வது. படுத்துக்கொண்

டிருக்குமிடமோகு எதாவது பருவான வஸ்துக்களாக் னைகளிலுல் தலைக்குமேல் கீட்டுவது முதலிய அப்பியாசங்களைச் செய்துவரலாம். மேலும், கோயாளி படுத்திருக்கும்பழுது தன் வசதிக்குத் தக்கதாக இடுப்பைச் சற்று உயரத்தில் வைத்துத் தாங்குவது நலல் சுகமுண்டு.

டாக்டர்கள் மின்சார சக்தியிலுல் இவ்விதவியாதியைச் சுகமாக்குவது வழக்கம். பிரசினமும் இரவில் படுக்கைக்குப்போகு முன் மேற்கூறிய தேகாப்பியாசங்களைச் செய்து பின்பு பிறகுகாலம் அல்லது றுனின, (Tannin) கருவப்பட்டை முதலிய துவர்ப்பு வஸ்துக்களில் எனைமாவது கலந்த வெந்நீரிலுல் மர்மஸ்தானத்தைச் சுத்திசெய்து வருவதலுல் சுகமுண்டு.

இந்து சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் பெண் மலட்டின் குணங்களும் அவை நீங்கிச் சந்தானம் உண்டாகத்தக்க ஔஷத முறைகளும்.

காயகன் காயகிபோடு சேரும்போது காயகிக்குத் தலைவலி காணில் கருப்பாசயத்தில் பாசிபற்றி யிருப்பதலுல் கருத்தரிக்கவில்லையென்றும்; சம்போகத்தும்போது காயகிக்கு சீர முழுவதும் வலிக்குமாயின் கருப்பாசயத்தில் வாய்வு நிறைந்திருப்பதலுல் கருத்தரிக்கவில்லையென்றும்; சுரத காலத்தில காயகிக்கு நெஞ்சு வலி காணுமாயின கருப்பாசய மாக்கதை தசை மூடியிருப்பதலுல கருத்தரிக்கவில்லை யென்றும்; சம்போகத்தும்போது காயகிக்கு முதுகு நோயுண்டாகுமாகில் கருப்பாசயத்தில் கருமிகள் நிறைந்திருப்பதனுல் கருத்தரிக்கவில்லையென்றும்; சம்போக காலத்தில் காயகிக்கு கெண்டைச் சதையில் நீர்க்காணுமாகில் கருப்பாசயத்தில் கெட்ட உதிரம் தேங்கியிருப்பதலுல் கருத்தரிக்கவில்லை யென்றும்; மைதுனத்தில் காயகிக்கு வேப்பமுண்டானுல் கருப்பாசயதத்தில் கொழுப்படைந்திருப்பதனுல் கருத்தரிக்கவில்லையென்றும் அறிந்துகொள்ளவேண்டும.

சிகிச்சை. கருப்பாசயத்தில் பாசு பற்றியிருப்பின் பருத்திவிரைப் பருப்பும் கோழிப்பித்தும் சமன் சேர்த்தரைத்து இருவர் அந்தரங்கஸ்தானங்களிலும் பூசி உலர்ந்தபின சம்போகிக்கலாம்.

கருப்பாசயத்தில் வாயவு நிறைந்திருப்பின் கல்எலணவிளக்கெண்ணெயோடு பெருங்காயதனதைச் சேர்த்தரைத்து முன்போல் பூசிவரலாம்.

கருப்பாசயத்தில் தசை மூடியிருப்பின் திப்பிலி, சுக்கு கோழிப்பித்து இவை சேர்த்தரைத்து முன்போல் பூசிவரலாம்.

கருப்பாசயத்தில் கிருமி நிறைந்திருப்பின் இக்கப்பு, பெருங் காயம், தாளகம் சேர்த்து வெந்நீர் விட்டரைத்து முன்போல் நஸ்ய மிரவும். (எரிந்தால் நெய் தடவவும்.)

கருப்பாசயத்தில் கெட்ட உதிரம் நிரண்டிருப்பின் கடுக்காய், சர்க்கரை, பச்சைசக் கற்பூரம், புனுகு இவை சமன் வெந்நீர்விட்டரைத்து முன்போல் தடவி வரலாம்.

கருப்பாசயத்தில் கொழுப்பரைந்திருந்தால் அதிமதுரம், குங்குமப்பூ, சீரகம் வெந்நீர் விட்டரைத்து முன்போல் தடவி வரவும்.

ஆண்மலடு.

கருத்தரிப்பதற்கு மூலாதாரங்களான சுக்கில சுரோணிதங் களில் ஏதாவது பேதமுண்டானால் உருவுயிர்க்கத் தடையுறுவதே மலடெனப்படும். ஆயுற்றிலே ஜனனேந்திரியங்களில் இயற்கையா யுண்டாயிருக்கும் குறைவுகளினால் விவாக நிலைமைக்கு அருகா மலோர் சுபாவ மலடென்னப்படுவர். அவ்வித அங்கவீனங்களை நிவர்த்திக்க ஔஷதங்களில்லை,

ஆனால், சுக்கில சுரோணிதத்திலும் ஜனனேந்திரியங்களிலும் செய்கைப் பிசகுகளால் யாதேனும் தோஷங்களுண்டாகுமாயின் அது அசுபாவ மலடென்னப்படும். அவ்வித மலட்டிற்கு நிவா ரணமுண்டு. அதிலும் ஸ்திரீயின் ஜனனேந்திரியங்களிலும சுரோ ணிதத்திலுமே அநேகவித தோஷங்கள் அமைவதாலும் பெண்மலடே விசேஷமாய் மலடென்று சொல்லப்படும்.

எண்பத்தைந்து தொண்ணூறு வயதளவான ஆண்களின் சுக் கிலத்தில் கிருமிகள் தென்படுவதால் ஆண் மலடென்பது அபூர் வம். ஆனால், பலவித சீர்கேட்டினாலும், மேக ரோகத்தினாலும், விருத்தாப்பியத்தினாலும் வித்து விளைவு குறைவதனால் சுக்கில கிருமிகளின் வீர்த்தி குறையத்தாம் அவற்றின் வால்களின் நீள மும் குறைந்து விடுவதனால் அவற்றைச் சுழற்றியடித்து முன்னேக சக்தியற்றுப் போகின்றன. இவ்விதமாய்ச் சந்தான சக்தியற்றுப் போவதே மலடென்னப்படும்.

நபுஞ்சகத்தன்மை. (Impotency.)

இளம்பிராயத்தில் புத்தியீனமாய் அக்கிரமக் கிருத்தியங்கள் நடப்பிப்பதால் புருஷ சின்னத்திற்குப் போக சக்தியற்றுப் போ வதே பேடித்தனம் அல்லது நபுஞ்சகத் தன்மை என்னப்படும்.

மனுஷனுடைய சரீர செளக்கியத்திற்கும், திடகாத்திர தேஜசுக்கும், மனோவுற்சாகத்திற்கும், வீரிய காம்பீரத்திற்கும், விவேக நிசுதையத்திற்கும் மூலாதாரமானது அவனுடைய சுக்கிலமே. அந்த சுக்கிலத்தில் ஒருதுளியானது எண்பது துளி இரத்தத்தின் சாரமென்றும், சரீரத்தை ஊடுருவிச் செல்லும் சகலவித நாம்புக் கூட்டங்களும் பத்திதிசுஷணியத்தைக் கிரயிடமாகிய மூளையும்சுக் கிலத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறதென வென்றும் மூளையும் டஸ் தகத்தில் முன்னமே கவனித்தோம். ஆகையால், மனுஷ தேகத்தில் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கும் உதாம், நாம்பு, தசை, தாது முதலியவைகளில் எதேனும் மாற்றத்து அற்பக் கெடுதி உண்டாகுமாயின் தேக முழுமையும் வைகுணியமடையும்.

அவ்விதமனுஷனுக்கு நாட் செல்லச் செல்ல நாம்புகள் தளர்ச்சி யடைவதால் கோசவெழுச்சிக்குப் பங்கம் நேரிட்டுப் போக சக்தியற்றவனைவதால் நபுஞ்சகத் தன்மையடைகிறான்.

காரணம். 1. நெடுங்காலமாக மிதமிஞ்சிச் சம்போகஞ் செய்து வருவதால், சுகுகிலத்தில் நீர்வாற்பத்திக்குரிய சுகதிகுறைந்து ஒருவன் பெடியாகலாம். இப்படிப்பட்டவனும் சிலகாலங்களாக ஸ்திரீயை விட்டுப் பிரிந்து சம்போகத்திலுலசனையை ஒழித்திருப்பதால சுக்கிலமானது சரியானபக்குவமடைந்து புத்திரோற்பத்திக்குரிய சக்தியை யடையலாம்.

2. முஷ்டிமைதுனம், ஆசனப் புணர்ச்சி முதலிய அக்கிரமக் கிர்த்தியங்களால் ஆண்குறியிலுள்ள நாம்புகள் தளர்ச்சியடைந்து சுக்கில வீரியங் குறைந்து புருஷச்சின்னமும் வடி சிறுத்து வலைந்து பலனற்றுப் போவதனாலும் நபுஞ்சகத் தன்மையடையலாம்.

3. மேகரோகம் முதலிய கொடுமையான நோய்களால் சரீரத்தில் பெலனற்றுப் போவதனாலும், ஜனனேந்திரியங்கள் அழிந்து போவதனாலும் நபுஞ்சகத்தன்மையடையலாம்.

4. தலையில் வெட்டுக் காயங்கள், முள்ளந்தண்டை யூடுருவச் செல்லும் நாம்புகள் பழுதுபடுவதனாலும், சுக்கிலகோளம் முதலியவை நசுங்கிப் போவது முதலிய காரணங்களினாலும் விந்து வெளிப்படாத தடையுண்டாகி நபுஞ்சகத்தன்மையுண்டாகலாம்.

5. நெடுநாள் ஸ்திரீபோகத்தை நீக்கிவிட்டதனால் புருஷசின்னத்திற்குச் சரியான இரத்தசம்வாட்டம தடைப்படச் சுக்கிலத்தின் சுபபபுக் குறைந்துபோவதனால் போகசக்திபற்றுப் போகலாம்.

6. சிலர் தம் சரீரத்தையும், மனதையும், மூளையையும் ஓயாத உழைப்பில் செலுத்துவதனாலும், பயம், சோகம், விரோகூலம் முதலிய காரணங்களினாலும் மீபாகசக்தி குறைவுபடலாம்.

7. சிலருக்குக் கொழுப்பு அதிகரித்திருப்பதனாலும் ஆண் தன்மை குன்றிப் போகலாம். அப்படிப்பட்டவர்கள் மிதமாய்ச் சாப்பிட்டுத் தேகாப்பியாசஞ் செய்யவேண்டும்.

8. இவை எல்லாவற்றிலும் மேலாக ஒருவன் போக சக்தியில் யாதொரு குறைவில்லாத திடகாத்திரனாயிருந்தபோதிலும் அவனுடைய மனதின் ஸ்திதிக்குத் தக்க பேடித்தனமை யடையலாம். உதாரணமாக, சில வாலிபர் தாதுபுஷ்டி லேகியம் முதலியவற்றின் விற்பனைக்காக எழுதப்பட்டிருக்கும் பிரசுரப் பத்திரிகைகளை அடிக்கடி வாசித்துப் பார்ப்பதனால் தமக்கும் ஆண் தன்மை இருக்கிறதோ இல்லையோ என்று சந்தேகம் மேலிட்டுப் போக சக்தியற்றுப் போகலாம்.

ஒரு ஸ்திரீயைப் பார்த்தவுடன் அவள் உயர்ந்த ஜாதிப்பெண்ணாயிற்றே, மகா ரூபவதியாயிருக்கின்றாளே, பராக்கிரமசாலியாயிற்றே, காமகலா வல்லவளாயிற்றே, இவளுக்கு நாம் எம்மாத்திரம் என்று நினைப்பதனால் போக சக்தி குறைவுபடும். மேலும், இவள் விகார ரூபமாய் இருக்கிறாளே, அசுசியான ஆடையாபரணங்கள் அணிந்தவளாயிருக்கின்றாளே, நீச ஜாதிப் பெண்ணாயிற்றே, இவள் சரீரத்தில் துர்நாற்றம் வீசுகிறதே, இவள் பேய்பிடித்தவளாமே, கெட்ட நக்ஷத்திரத்தில் புஷ்பித்தவளாமே, இவளோடு சம்போகித்தால் என்ன விளையுமோ, இந்த யிடத்தில் யார் வந்து விடுகிறார்களோ, இங்கே குலதெய்வம் குடிகொண்டிருக்கிறதாமே, இதில் சம்போகஞ் செய்தால் எனை சபிக்குமோ என்ற எண்ணங்களில் ஒன்றேனும் இன்னும் இவைபோன்ற மற்ற எந்த எண்ணங்களும் மனதில் உதிக்குமாயின் போகத்திலிச்சையும், போக சக்தியுங் குறைந்துபோகுமே.

இப்படிப்பட்டவர்களுக்கு தாதுபுஷ்டி அதிகமாயும், புருஷ சின்னங்கள் முதலிய போகத்திற்குரிய கருவிகளில் யாதொரு விகார்ப்பமும் இல்லாதிருந்தும், அனைரியத்தினாலும், ஆத்ம சக்திக் குறைவினாலுமே போக சக்தியற்றுப் போகிறது. ஆத்ம சக்திக் குறைவினாலுண்டாகும் தாதுநஷ்டமே எல்லாவிதத் தாதுநஷ்டங்களிலும் மிகப்பெரிதானையால் எவ்வித காரணத்தினாலும் அனைரியப்படாமல் பூரண மகிழ்ச்சியோடுமே, தீரத்வத்தோடும் பலவித லீலைகள் செய்து ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்து, புளகாங்கித

இருதயத்தோடு இருவரும் மனமொத்துச் சம்போக கேளிக்கைகள் செய்யப் போகசக்தி விர்த்தியாகிச் சுகதான விர்த்தியுமுண்டாகும். ஆதலால் சம்போகத்திற்கு முன் ஸ்திரீ புருஷர் சந்தனம், ஜவ்வாது, புனுகு, அத்தர், பன்னீர் முதலிய பரிமளாதிகளைப் பூசிக்கொள்வதனாலும், கறமண மிகுந்த புஷ்பாதிகளைச் சூடிக் கொள்வதனால், கந்தாதி வஸ்துக்களையும், தாம்பூலாதிகளையும் வாயிலிட்டு மனதிற்கு வெறுப்பைத் தரத்தக்க வாய்நாற்றம், வியர்வை நாற்றம், சுற்றுழை நாற்றம் முதலியவற்றை நீக்கிப் பள்ளியறை, தமது சரீரம், வஸ்திரம் முதலியவற்றைச் சுத்தஞ் செய்து சம்போகத்திற்கு முன் இரத்தவிர்த்தியும் வீரிய விர்த்தியுமுள்ள ஆகாராதிகளை உட்கொள்ளுவதனாலும் இருவர் மனதிற்கும் சந்தோஷமும் மகிழ்ச்சியு முண்டாகச் செய்து கொள்ளவேண்டும்.

நபுஞ்சகத் தன்மையை விளர்த்திப்பதற்கு ஸ்திரீகளை தகுந்தவைத்தியர். "வேதல் காமத்திற்கின்பங் கூடி முயங்கப் பெறின்." என்று திருவள்ளுவர் சொல்வதுபோல காயகியானவள் புருஷனுடைய இச்சைக்கு உடனே இணங்காமல் வீதா ஓர் அற்பக்குற்றமிருக்கிறதாகப் பாவித்து, கோபக்குறிகள் காட்டி, அவனோடு சண்டைசெய்து, அவனிட்டு ஓடிப்போவாளாயின், அவனுக்குக் காமாக்கினி மூண்டு அவள் கோபத்தைத் தணிக்கும்படி பலவித சாது சல்லாப உல்லாச வார்த்தைகளாடிப் பலவித தினுசுகளினாலும் அவளை வசப்படுத்தி மேற்கொள்ளப் பார்ப்பான். கசுமால காமத்தினல் (Lust) மிருதுவாகவோ போல் சேர்ந்து அடையும் இன்பத்தைவிட இவ்விதமாய்ப் பிணக்குநீங்கித் தலைமேறகருத்தாகிக் கட்டித்தழுவி முத்தமிட்டு அகமுக புறமுக குளிர உண்டாகும் ஆனந்தப் பெருக்கோடு (Love) சம்போகஞ் செய்வதனாலுண்டாகும் சுகபோக வின்பமே சகலவித லெளகீக இன்பங்களிலும் மேலானதென்று காமநூலாசிரியர் கூறுகின்றனர்.

இப்படிப்பட்டவர்களுக்கு மதுபானத்தினாலும் பிரயோசனமுண்டு.

போகாந்த தாக சாந்தினி.

வெள்ளை நிறமான வெங்காயச் சாற்றில் ஆரஞ்சு மடங்கு தேன் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் விறக்கி வைத்துக்கொண்டு ஒவ்வொரு காலும் படுக்கைக்குப் போகுமுன் ஒரு பலஞ் சாப்பிட்டு வருவதனால் போகத்தின பின்னுண்டாகும் களைப்பு சோர்ப்பலம் முதலியவை நீங்கும்.

சம்போகத்திற்குப் பின் பாலில் தேன்விட்டுச் சாப்பிட்டு வருவதனாலும் நன்மையுண்டு.

சிகிச்சை.

இஷ்டித கபுஞ்சகத் தண்மைக்கு ஔஷதப் பிரயோகங்களினுல் அதிகப் பிரயோசனமுண்டாக மாட்டாது. எவ்விதத புஷ்டி லேகியாதிகளும் சஹாணப் பரிகாரங்களேயன்றி நெடுநாளைக்குப் பயன்படா. அவைகளால் பின்னுக்குக் கெடுதியேயன்றிப் பிரயோசனமில்லை. ஆதலால் கபுஞ்சகத் தண்மையுள்ளவர்கள் செய்யவேண்டிய விஷயங்கள் யாதெனில்:—

1. போகம். சிலகாலத்திற்கு இச்சாபத்தியமிருந்து எவ்விதகாரணங்களினுலும் மனதிற்குக் கிளர்ச்சியுண்டாகாமல் ஆறுதலாகவும் அமைதலாகவும் இருக்கவேண்டும்.

2. தேகாப்பியாசம். பிரதிதினமும் ஸ்திரீயும் புருஷனும் சூரியகாந்தி தங்கள் மேல் படத்தக்கதாக வெட்ட வெளியில் நீனித்து, தேகாப்பியாசமும் அலாசாப்பியாசமும் செய்தல வேண்டும். ரதம், குதிரை, பல்லக்கில் முதலியவைகளில் சவாரிசெய்வதும் மிக்க அனுகூலத்தைக் கொடுக்கும்.

3. ஸ்நானம். பிரதிதினமும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ் செய்து எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். வாரத்திற் கிருமுறையாவது குளிர்ந்த ஜலத்தில் பத்து நிமிஷம் ஆசன ஸ்நானஞ் செய்து வரவேண்டும்.

4. நித்திரை. அதிகநேரம் விழித்திராமல் குறித்த நேரங்களில் படுக்கைக்குப் போய் எழுந்திருக்கவேண்டும்.

5. போஜனம். தாதுபுஷ்டியைக் கொடுக்கத்தக்க வஸ்துக்களாகிய பால், பாலாடை, நெய், புதியவெண்ணை, சோட்டி, மச்சம், மாமிசம், மூளை, கோழிக்குஞ்சு, காடை, கௌதாரி, அடைக்கலான் குருவி, சூப்பு, பழவர்க்கங்கள் முதலியவைகளை நோயாளியின் ஜீரணசக்திக்குத் தக்கதாக அடிக்கடி கொடுத்து வரவேண்டும். ஒரே சோகத்தில் அதிகமாய்ச் சாப்பிடாமல் அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாகச் சாப்பிட்டு வரவேண்டும். மாமிசம் சாப்பிட்ட இரண்டுமணி நேரத்திற்குப் பிற்பாடுதான் பால் சாப்பிடலாம். சூப்பில் மிதக்கும் எண்ணெயை நீக்கிவிடவேண்டும். மாமிசத்தோடு கடுகு ரசாளமாய்ச் சேர்த்துச் சாப்பிடலாம்.

6. நீக்க வேண்டியவை. பன்றி இறைச்சி, நத்தை, கண்டகடைமுட்டை, கொழுத்த மாமிசம், புதுசோட்டி, பொரித்த இறைச்சி; உப்புக்கண்டம், கருவாடு, லாகிரி வஸ்துக்கள். ரூனிக்

(Tonic.) தாதுபுஷ்டி லேகியங்கள், ஊறுகாய்வகைகள், பானைழப் பழம், எளிதில் ஜீரணமாகாத வஸ்துக்கள் முதலியவைகளை நீக்க வேண்டும்.

7. மேல் பிடித்தல். பிரதினமும் படுக்கைக்குப் போகு முன் சரீரத்தை கனமுப்ப பிரைசுத்த மீமல் பிடித்தலிதல் மிக்க பிரயோசனமுண்டு.

8. ஔஷதங்கள். இயற்கைக்கு விரோதமாகப் போகுத்தினை அதிகப்படுத்திக்கொள்ளுகிற பொருட்டு ஔஷதங்கள் சாப்பிடுவது அயுக்தமென்றே சொல்லலாமென்கிறேம். இயற்கையில் அசக்தியில்லாதவர்கள் விவாகஞ் செய்துகொள்ளாதிருத்தலே உத்தமம். விவாகமான பிறகு அதை இழக்கப் பெற்றவர்கள் அந்தரங்கமாக வைத்தியரிடத்தில் தம் குறையை வெளிப்படுத்திப் பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும். ஔஷதங்கள் சாப்பிடுவது கூடுணப் பரிகாரமேயல்லாமல் நீடித்துப் பலன் தராவிட்டாலும். என்றாலும் பரிகாரத்தை நாடுவது மனுஷிக தன்மையாயிருப்பதனால் சில ஔஷதப் பிரயோகங்கள் இங்கு கூறுகிறோம்.

1. வாலிபத்தில் ஆண் தன்மை யிழுத்தவர்கள் நமது ராஜவீரிய மாத்திரையை உபயோகித்து வரலாம்.

2. நமது (Life Drops) ஜீவாமிர்தம் என்ற ஔஷதத்தில் பத்து முதல் இருபது துளி வரை காலையிலும் மாலையிலும் சாப்பாட்டிற்கு முன்பல் சாப்பிட்டுச் சம்போகஞ் செய்ய வீரிய விர்த்தி உண்டாகும். இம்மருந்தை அதிகமாகச் சாப்பிட்டால் ஆண்குறி அதிகமாய் எழுமதியீனத்தை யுண்டாக்கும். நரிவயதுள்ளவர்களுக்கு இது நல்ல மருந்து. இதில் பொன்வண்டு (Spanish Fly) எனறு சொல்லப்படும காந்தாரிடிஸ் (Cantharides), தனும் தீ முருகல் என்னப்படும பாஸ்பரஸ் (Phosphorus), நகஸ் வாமிக்கா (Nux-Vomica,) அயத்திராவகம் முதலிய அனந்த சிறந்த வீரிய விர்த்தி ஔஷதங்கள் அடைக்கப்பட்டிருக்கினறன.

3. வயது செல்லச் செல்ல சிரப்பெரி ஐோடிட் (Syrup Ferri Iodide) டைப்போலொத்த இரும்புசேர்ந்த ஔஷதங்களை புஷ்டியான ஆகாரத்தோடு சாப்பிட்டு வருவதால் பலன் உண்டு.

4. மின்சார சக்தியினல் டாக்டர்கள் சுகமாக்குவதுண்டு.

5. மிதமிஞ்சிய சம்போகத்தினலுண்டாகும் தாது நஷ்டத்திற்கு திஞ்சர் ஆவ் காந்தாரிடின் (Tincture of Cantharides)

பத்தமுதல் இருபது துளியை திங்ஸர் குளோரயிட் ஆவ் ஐயர்ன், நக்ஸ் வாமிக்கா (Tincture Chloride of Iron, Nux Vomica) முதலியவற்றோடு சர்க்கரை சாப்பிடன் சந்தான விர்த்தியுண்டாகும். நமது ஆபிஸில் விற்பனையாகும் ஜீவாமிர்தத் (Life Drops) தில் மேறகுறித்த ஔஷதங்களும்  டங்கி யிருக்கின்றன.

6. தங்கத்தை மெடிக்கடி சாப்பிட்டு வருவதனல் ஆண்களுக்குந் தாதுவிர்த்தி உண்டாவதுமன்றி, பெண்களுக்கும் சூதகம் தடைப்படல் நீங்கிச் சம்போக விருப்பம் உண்டாகும. ம்காசத் தளர்ச்சிக்கு இது நல்ல மருந்து. தங்க குளோராயிட்டில் (Gold Chloride) $\frac{1}{16}$ கிரையினை தண்ணீரில் கலந்து சாப்பிடலாம. ஆனல இது களை ஆகலய வெறு பத்திரமாய்க் கொடுக்கவேண்டும். இதை அதிகமாய்ச் சாபபிடுவிட்டால் முட்டையின் வெள்ளைக்கரு, பால முதலியவற்றை மாற்றுகச் சாப்பிடலாம்.

7. மேற்கூறிய ஔஷதங்களுடன் மிருகங்களின் மூளை, பீஜம், சினைப்பை முதலியவற்றிலிருந்து செய்யப்பட்டிருக்கும் (Cerebrim, Spermin, Oophorin) முதலிய சத்துக்களில் ஏதேதனும ஒன்றை மூபபது முதல் ஐமபது கிரேயின் சாப்பிடுவரத் தாதுபுஷ்டி யுண்டாகி, தோசமெலிவும் சோர்வும் நீங்கும்.

8. அனைகளில் விசேஷித்தது முட்டையின் மஞ்சள் கரு. இந்திரியம், நரம்பின அணுக்கள் முதலிய களுக்குள்ள வஸ்துக்களிலிருந்து இறக்கப்பட்ட சத்துவாகிய லெசிதின் (Lecithin) எனனும் ஔஷதம். எவ்வித நரம்புத் தளர்ச்சி, பலஹீனம, தோசத் தளர்ச்சி முதலியனைகளுக்கு கொடுக்கலாம். இதை மருந்து வியாபாரிகளில கிளிசிரால ஆவ் லெசிதின் (Glycerol of Lecithin) எனறு சொல்லி புட்டிகளில் அடைத்து விறபாகள். இதை வாங்கி ஒரு நேரத்திற்கு அரைத் தேயிலக்கரண்டியளவு பாலில் விட்டுப் பிரதிதினமும் மூனறுவனை சாப்பிட்டுவரச் சகல விதநரம்புத் தளர்ச்சிகளும் நீங்கி வரிய விர்த்தியுண்டாகும்.

9. நிலப்பனைக்கிழங்கு, தண்ணீர்விட்டான கிழங்கு இவற்றைப் பச்சையாக எடுத்து, அவற்றோடு முள்ளில்லாத இலவம் பிசின், நெருஞ்சில்விதை, நீர்முள்ளிவிதை, பெரும்பூனைக்காலி விதை, சர்க்கரை முதலியவற்றைச் சமனிடையாகச் சேர்த்து நசுக்கிப் பாலில் போட்டுக் காய்ச்சி இரவில் படுக்கைக்குப் போகுமுன் சாப்பிட்டு வருவார்களாயின் புருஷர்களுக்குச் சுக்கில விர்த்தியுண்டாகும்.

10. சிறு நெரிஞ்சிவிதை, சிறு பூலாங்காலிவிதை, நிலப்பனைக் கிழங்கு, தண்ணீர்விட்டாங்கிழங்கு, முளாளிலவம் பிசின், அதிமதுரம், சர்க்கரை, மீதன் சமன்சேர்த்து இடித்துப் பிசைந்துகொண்டு கொட்டைப்பாக்குப் பரிமாணம் இருசமவேளையும் சாப்பிட்டுவர இந்திரியக் கட்டுண்டாகும்.

11. (a) கோசத்தளர்ச்சிக்கு வெள்ளெருக்கன்பூ ஐம்பதைப் பசுவின் பாலில்ஊறப்போட்டுக் காய்ச்சி, பூக்குழைத்தவுடன் வடிகட்டி எடுத்துவிட்டு, பின்பு பாலை வற்றக் காய்ச்சி உறை வைத்து மறுநாள் கடைந்தெடுத்த வெண்ணெயோடு, கோரோசனை, பச்சைக்கற்பூரம், புனுகு இவற்றைச் சமனாகூட்டி, லிங்கத்திற் பூசிச் சம்போகஞ் செயய விந்திறங்காமல் ஆண்தன்மை அதிகரிக்கும்.

11. (b) ஆங்காரகாரம், லவங்கம், லவங்கப்பட்டை, பூராகம், (நாக்குபூச்சி) இந்திரகோபம் (மழைகாலத்திலாறும் வெகம் பூச்சி) இவை வகைக்கு ஒரு பலம், ஆமணக்கெண்ணெய், எருமைப்பால் இவை வகைக்கு மூன்று பங்குக் கணக்காயெடுத்து, பாலையும் எண்ணெயையும் சிறுகச் சிறுக நான்கு சாபம் விட்டாரைத்து வைத்துக் கொண்டு லிங்கத்தின்மேல் பூசிவர தளர்ச்சி மெலிவு முதலியன தீரும்.

12. மேலெட்டவரும் வெளிப்பிரயோகத்திற்காக பலவித ஆயுதங்களாக கண்டுபிடித்து ஆண்மையை அதிகரிகஞ் செய்து வருகிறார்கள். அவைகளில் விசேஷித்தது போலோன் (Bologene) பட்டணத்தில் சில்னஜினீர்வேலைபார்த்துவந்த பாலக்கஸன (Paul Gassen) எனபவரால் கண்டு பிடிகஞ்சப்பட்ட எரெகடார் (Erector) கமபிரெசர் (Compressor) குமுழயுலேட்டர் (Cumulator,) அலடிமா (Ultima) முதலிய கருவிகள். இவறறில்:—

(a) (Erector) எரெக்டரினல் புருஷசின்னத்தை யோனிக்குள் செலுத்திப பிறபாடு சம்போகத்தினல் கோபவெழுச்சி யுண்டாகச் செய்யலாம்.

(b) (Compressor) காமஉத்தீபனத்தால் இயற்கையில் சிலுக்குக கோசவெழுச்சி உண்டானவுடன் கமபிரசரை மாட்டிக் கொளவதால் ஆண்குறிக்கு வந்த இரத்தம் திரும்பப் போய்விடாமல் தடுக்கப்பட்டுக் கோசமானது தளர்ச்சியுறுமல் எவ்வளவு நேரமாளும் சம்போகஞ் செய்யலாம்.


(c) (Cumulator) சூயுமுயுலேட்டர் என்ற குழாயை ஆண் குறியில் மாட்டி அதனுள்ளிருக்கும் காற்றை வெளியாக்குவதனால் கோசத்தில் ஏராளமான இரத்தம் பாயச்செய்து எழுமபிவிடும். இதைக் காம உத்தீபணமே யில்லாதவர்களுங்கூட உபயோகிக்கலாம். ஆத்ம சக்திக் குறைவினால் போகசக்தியை யிழந்த ஓர் வாலிபன் இக்கருவியில்லாத நேரத்தில் தனக்குக் கிளர்ச்சியுண்டாகிறதில்லை யென்றும், அதை அவசரமாஞல் உபயோகித்துக் கொள்ளலாமென்று தன் பக்கத்தில் வைத்திருக்கும்போது இயற்கையான கிளர்ச்சி உண்டாகிவிடுவதால் அதைத்தான் ஒருபோதும் உபயோகிக்கவில்லை யென்றுஞ் சொன்னதாக (Dr. Vekhi) சொல்லுகிறார்.

(d) (Ultima.) அல்டிமா என்பது ஒருரப்பர் குழாய். திமிர்வாதம் முதலிய கஷ்டமான நோய்களில் அழுந்தினபலாகளுங்கூட இக்கருவியை உபயோகிக்கலாம்.

(e) (Electric Vacuum Developer.) எலக்டிரிக் வெக்கூம் டிவெல்பர். இதுதக் கருவியினுள் மேகாதனைச் செலுத்தி அதிலிருக்கும் ஆகாயத்தை நீக்கிவிட்டு மின்சார சக்தியை அதனுள் விடுவதனால் இரத்தம் ஏராளமாகச் சென்று மேகாசத்துக்கு வலியுண்டாகும. இவ்விதப் பிரயோகத்தோடு சுயாதார விஷயங்களையும் கவனித்து நடந்து சரியான ஔஷதங்களைச் சாப்பிட்டுவருவதால் மிதமிஞ்சிய போகத்திலாவது, திமிர்வாதம் முதலிய கொடிய நோகங்களினாலாவது, அக்கிரமக்கிரந்திபங்களினாலாவது குறைவுற்றிருக்குமே மேகாசம் பூர்த்தியான ஸ்திதிக்கு வரும்.

(f) (Pollution Ring.) ல்கலிதமோதிரம். இந்தமோதிரத்தின உட்பாகதத்தில் கூரிய முட்களிருககும். நித்திரைக்குப் போகும்போது இதைக் கோசத்தின்மேல் அணிந்துகொண்டால் இராவொழுக்கு நேரிடுஞ் சமயத்தில் கோசவெழுச்சியுண்டாக அதை அந்தக்கூரிய முட்கள் குத்துவதனல் உடனே விழித்துக் கொள்ளலாம்.


சாமிவேலின்

சிங்க  மார்க்கு

ஔஷத்தங்கள்.

உத்தம சஞ்சீவிகளென உலகப்பிரசித்தி பெற்றனவை.

சிங்க வீரிய மாத்திரை (The Lion Tonic Pills)



நாம் அநேக சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து அரும் பெரும் பிரயாசையுடன் கண்டுபிடித்ததும், அநேக தாதுவிர்த்தி ஔஷதங்களை ஒன்று சேர்த்து உண்டாக்கியதுமான சிங்க வீரிய மாத்திரைகளில் ஒன்று அல்லது இரண்டைதினம் மூன்றுவேளையும் போஜனமான கால்மணி நேரத்திற்குப் பின் சாப்பிட்டுவரின் மிதமிஞ்சிய சம்போகத்தினாலும் அளவிற்கு மிஞ்சிய மனோழுயற்சி செய்வதனாலும், சித்தினை பங்கத்தினாலும், நெடுநாள் வியாதியினாலும், நெடுநாள் பசித்திருப்பதனாலும், வெயிலில் அதிகநேரம் சஞ்சரிப்பதனாலும், லாகிரி வஸ்துக்களை அதிகமாய்ப்பானஞ் செயவதனாலும், சிறுபிராயத்தில் அறியாமையால் செய்த அக்கிரமக் கிரியைகளினாலும், உண்டாகும் மேகச்சூடு, மூலை, இருதயமாகிய இவைகளினுள்ள ஆண்மசக்திக்குறைவு, தாதுநஷ்டம், துர்சலத்தில் சுக்கிலம்வெளிகண்டுவிடுதல். போகிக்க ஆரம்பித்தக் குறிகள் பொருந்துவதற்கு முன்னமே கோசந்தளர்ந்து விந்து வெளிப்படுதல், ஆண்குறியில் உணர்ச்சி குறைந்து போகம் இன்பமாய்த் தோன்றுதல் போதல, போகசக்தி குறைதல், புணர்ச்சிக்குப் பின் ஆயாசமுண்டாவதுபோல் காணப்படுதல், சிலருக்கு இருதயதடிப்பு, தாகம் இவைகளுண்டாயிருத்தல், போகத்தில் விருப்பமில்லாமை, நீரிழிவு முதலிய

முகல தர்க்குறிகளும் நீங்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரிய விர்த்தி, போக சக்தி, இந்திரியக்கட்டு, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன வுண்டாகும். மற்றி, சோம்பல், அசதி, கர்ப்பலம், பசிமந்தம், அஜீரணம், இடுப்புவலி, துரிதஸ்கலிதம் முதலியவை நீக்கும். பரீட்சித்துப் பார்க்கவும். புஷ்டியான ஆகாரம் சாப்பிடுவது அவசியம். மருந்து சாப்பிடுவதற்கு முன்னும் சாப்பிட்ட பின்னும் அரைமணி நேரத்திற்குப் புகையிலை உபயோகிக்கலாகாது. இதற்கு வேறு பத்தியமே கிடைக்காது. இது (Gross) என்ற ஓர் அமெரிக்க ஆயுள்வேத பண்டிதர் கையாடி வந்த அருமையான முறை. 42 மாத்திரைகளடங்கிய சீசா 1 க்கு விலை ரூ. 3.

சாப்பிடும் விதம்.

1. இந்த மாத்திரைகளை எந்தக் காலத்திலும் போஜனஞ் செய்த கால்மணி நேரத்திற்குப் பின் சாப்பிடலாம். ஆனல் தூட் பண்ணியாவது தண்ணீரில் கரைத்தாவது சாப்பிடக்கூடாது. ஒவ் வொருவரும் தம்தம் தேகஸ்திதியை அறிந்து அதற்குத்தக்கவாறு வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் சாப்பிடலாம்.

2. துரிதஸ்கலிதத்தால் தேகம் இளைத்து மெலிந்து இருதயத்தடிப்பு, மறதி, சோம்பல், அசதி, இடுப்புவலி, அஜீரணம், பசிமந்தம் முதலிய குணங்கள் தோன்றுபவர்கள் காலையில் பசியாறிய பின் சிங்கவீரியமாத்திரைகளில் இரண்டை வாயில்போட்டுத் தண்ணீர் சாப்பிடவேண்டியது. மத்தியான போஜனஞ் செய்த கால் மணி நேரத்திற்குப் பின்பும் அதே பிரகாரம் சிங்கவீரிய மாத்திரைகளில் இரண்டை வாயில்போட்டு தண்ணீர் சாப்பிடவேண்டியது.

எவ்வளவு காலஞ் சாப்பிடவேண்டியது?

"சிங்கவீரிய மாத்திரையை" எவ்வளவு காலம் சாப்பிட்டுவந்தால் மேற்குறித்தகுணங்கள் தோன்றுமென பலர் கேட்கின்றனர். நோயாளியின் வயதுக்கும், சரீரத்திற்கும், நோயின் தன்மைக்குப், காலத்திற்கும் தக்கது பூரண சுகத்தின் குறிகள் 10 நாள் முதல் 3 மாதத்திற்குள்ளாகத் தோன்றும். காசுரதம் முதலிய தண்ணீர்த் தாணழிக்கும் கிரியைகளை அநேக வருஷங்களாக அப்பியாசித்து வந்ததினல் கெட்டு மெலிந்த சரீரமுடையவர்களுக்கு இரண்டொரு பாடல் மருந்து சாப்பிடுவதனல் பூரணசுக முண்டாகக் கூடுமோ? என்றாலும் ஒரு பாட்டல் சாப்பிட்டு முடிந்தவுடன் சுகம் தெரியுமென்று உறுதிபாய்ச் சொல்லுவோம். 'சிங்கவீரியமாத்திரைகளை" எக்காலத்திலும் எந்தச் சமயத்திலும் போஜனத்திற்குக் கால்மணிக்குப் பின்பு சாப்பிடலாம். பூரணசுகமுண்டாகிறவரை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குக் கிரமமாய் இம்மாத்திரைகளைச் சாப்பிட வேண்டிய தவசியம். ஆதலால் எப்பொழுதும் சில மாத்திரைகளைக் கையில் வைத்திருந்து கிரமமாய்ச் சாப்பிட்டு வருவது உத்தமம்.

எட்டாவது பதிப்பு.

மாணிட

மற்மசாஸ்திரம்.

பதினோராம் புஸ்தகம்.

ஆண்மையின் அறிவும் அதன் பிரியமும்

மலரிழை மெல்லிது காமஞ் சிலரதை
அறிவ தகலற் பவர். — குறள்.

திரு

யாவர்க்கும்

சுக செல்வ நன்மைகளையும் சுகீர்த்தி பாக்கிய
போக்கியத்தையும் நீடுழி பெருதவிக்க
விரும்பிய,

எக்மூர் சர்வகலா சங்கத்தின் தமிழ்ப்பரீக்ஷகரும், எக்மூர் என்
ஜூனல் கல்லூரிப் பிரதமாசிரியரா யிருந்தவரும், கணித சாஸ்திரம், பூமிசா
ஸ்திரங்களின் மர்ந்த கர்த்தாவும், மானுட தர்ம சாஸ்திரப் பண்டிதருமான,
சாமிவேல் வைத்தியசாஸ்த்ர நிலையருமான

எஸ் சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.


புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,

சென்னாஞ்சி, இரண்டோன்.

1920.

All Rights Reserved.



ஆண்மையின் அறிவும் அதன் மீகூடியும்.

ஆண்மையின் அழிவும் அதன்மீகியும்.
(THE LOSS OF MANHOOD & ITS RESCUE.)

நமது பிரசுரப் பத்திரிகையை வாசித்த சில நண்பரின் வேண்டு கோளின் பிரகாரம் வாலிபப் பிராயமானவுடன் ஒவ்வொரு ஆண்பிள் ளையும் அறியவேண்டிய ஆண்மையின் மாண்பைப் பற்றியும், அநேகர் அறிவீனத்தால் அக்கிரமத்துக்குள்ளாகி ஆண்மையை யிழந்து, புரு ஷத்துவங்குன்றி பெண்ணினும் பேதையாய்த் திரிவதற்குக் கார ணங்களைப்பற்றியும், அவற்றிற்கு நிவாரணங்களைப்பற்றியும் இதில் எழுதத்துணிந்தோம்.

ஐயோ! அறியாமையினலன்றே ஆயிரக் கணக்கான மானிடர் தமது சொந்தக் காங்களிலுல் தம்மைத் தாமே கொலைசெய்து கொ னெறி மார்க்கங்களை நாசமாக்கிவிடுகிஸ்றனர். அவர்களுக்கே இது.

அண்ட சராசரங்களிலும் நிறைந்திருக்கும் அற்புத ஜாதியே உன் அருள் ஒளி எங்கே? அந்தோ! அந்தகாரத்தில் மடியும் அநாதப் பாவியின் நெஞ்சில் அக்கிரமக் கிரந்தியங்களின் ஆபாசத்தைப்பற்றிய நிகிலையும், இப்பாதகப் படுகுழியில் பாழ்போகாமல் மீளும் வகை யையும் எவ்வண்ணம் எடுத்தலைப்பேன் எனமுயேன்? பெற்றோரே! பிதாக்களும் மாதாக்களுமானவர்களே! இன்னும் எவ்வளவு காலம் உங்கள் அசதியில் நித்திரைகொள்வீர்கள்? ஐயோ! அறியாமையா லன்றே உங்கள் அருமைப் புதல்வர் அக்கிரமத்தில் அழிந்துபோகின் றனர்! உன் பிள்ளை இயற்கையிலேயே சுகிர்தகுணம் வாய்ந்த தென்று எண்ணுகின்றனையோ? மோசம் போகாதே. ஜாக்கிரதையா யிரு உன் பிள்ளையின்மேல் எப்போதும் கண்ணைக்கமாயிரு. அவன் ல்ங்கிதன்யார் என்றுபார். மண்ணையோடு சேர்ந்த கன்றும் மலந்தின் றுமே. உன் பிள்ளை விளையாடுகையிலும் தூங்குகையிலும் நீ அதன் மேல் கவனமாயிருக்கிறுயா? ஆயிரமாயிரம் வாலிபர் பட்டணங்களி லும், கிராமங்களிலும், பள்ளிகூடங்களிலும், வெளிகளிலும் தவ்ட சகவாசத்தினல் கெட்டுப் பிஞ்சில் பழுத்த பழங்களாய் மாண்டுபோ கின்றார்களென்பதை மனதிலைவத்து எச்சரிப்புடன் பிள்ளையை வளர்க்கவேண்டும். பன்றி பலகுட்டி போட்டதுபோல் பிள்ளைகளைப் பெற்றுவிட்டு, நிச்சிராமையும், கவலைத்தாட்சியாயும் இருப்பாயாகில் உன் பிள்ளைகளின் தோஷங்கள் உன் தலைமேல் சுமையாகும். இவ் வுலோகத்திலும் மறு லோகத்திலும் கடவுள் உன்னிடத்தில் கணக் குக் கேட்பார்.

உபாத்தியாயரே! போதகசிரியரே! உங்கள் பள்ளிக்கூடங்களில் தன்னைத் தானழிக்கும் கிரியைகள் பாவும் விதத்தை அறியீர்களோ? அறிந்த பின் அதைப்பற்றி எச்சரித்தீர்களோ? உங்களுக்கு வெட் கமோ? உங்கள் கைகளுள் வாசிக்கும் அறியாப்பாலகர் தமது நேர சுகால் கெட்டுப்போகிறதை அறியீர்களோ? பாடம் படித்துக்

கொடுப்பதுமட்டும் போதுமென்றிருக்கிறீர்களோ? பக்தியும் புத்தியும் போதிப்பது உங்கள் கடமையன்றோ? கடவுளிடத்தில் கணக்குக் கொடுக்கும் நாளொன்றிருக்கிறதென்பதை யெண்ணி, ஜாக்கிரதையுடன் எச்சரித்துச் சன்மார்க்க வழியில் நடத்துவீர்களாக.

வாலிபருக்கு ஓர் வார்த்தை.

வாலிபனே! உன் பலத்திலும், அழகிலும், தாஷ்டீக சரீரத்திலும் பிரியப்படுகிறாயா? உன் வழிகளில் உனைனச் சீர்ப்படுத்த நானென்ன செய்யலாம் ஆத்திரத்துடன் உன்னிடம் பேசுகிறேன். உன்னைப் போன்ற வாலிபருடன் சஞ்சரிப்பதே என் தொழில். உன் வழிகள் எனக்குத் தெரியும். நீ கெட்டவனென்று நான் சொல்ல வரவில்லை. உன் மனோசக்திகளில் விசேஷித்த மாறுதல்கள் உண்டாகுங்காலமிது. நீ இனிமேல் சிறுபையனல்ல. தாஷ்டீக புருஷனாகிறாய். சீக்கிரத்தில் ஓர் குடும்பத்தைப் பரிபாலிக்கவேண்டிவரும். உன் சிநேகிதரில் சிலர் வீரபராக்கிரம தீரர்களாயிருக்கின்றனர். சிலரோ மெலிந்து தாழ்ந்து கூனிக்குனிந்து பலவீனராயிருக்கின்றனர். சிலர் புத்தி தீக்ஷணிய முள்ள சிகாமணிகளாய் இருக்கிறார்கள். மற்றவர்களோ மந்தப்புத்தியுள்ள மடையர்களாயிருக்கிறார்கள். சிலர் முன்னுக்கு வரவேண்டுமென்னும் ஆவலுடன் விடாமுயற்சியாய் இரவும் பகலும் உழைத்து அரிய பல வித்தைகளைக் கற்றுக்கொள்ளுகின்றனர் மற்றவர்களோ சோம்பேறிகளாய்த் தேம்பித் திரிந்து இரவும் பகலும் தின்பதும் உண்பதும், உறங்குவதும், விளையாடுவதுமே, தொழிலாய்த் திரிகின்றனர். பிற்காலத்தில் இவர்களில் எவர்களுக்கு மற்றவர்களை அடக்கியாண்டு வழிநடத்தும உத்தியோகங்களும், எவர்களுக்கு மற்றவர்களுக்கு அடங்கி ஆளப்படும் அடிமைத் தொழிலும் கிடைக்குமென்பது உனக்கு நன்றாய்த் தெரியும். உனக்கு எது பிரியம்? எஜமானை ஆளவோ அல்லது அடிமையாக உழைக்கவோ? திடகாத்திரமிரிய சம்பன்னனாய்விளங்கவோ அல்லது பெண்ணிலும் பேதையான பேடியாய்த் திரியவோ? உன் பிற்கால ஸ்திதியை நிர்ணயிக்குஞ் சமயம் இதுவே. எனென்று கேட்பாயோ? இக்காலத்தில்தான் ஜீவரத்னமாய் விளங்கும நாதவிந்துவானது உன்னிடத்திலிருக்கின்றது. இதில் ஒரு துளி உன் உதிரத்தின் என்பது துளியின் சாரமாம். மனுஷனுடைய லக்ஷணத்துக்கும், தீரத்துக்கும், வீரகாம்பீரத்திற்கும், புத்தி சாதுரியத்திற்கும் ஆதிமூலம் இதுவே. இதற்குத் தாதுவென்றும், சுக்கிலமென்றும, இந்திரியமென்றும் பல பெயர்களுண்டு. ஆகா! இதன் வல்லமையை என்ன சொல்லுவோம் இது இருக்குமிடததிலின்பம், போகும்போதுமின்பம், போனவிடத்துமின்பம், போய்விட்டாலோ தன்பம்.


செங்காமம் முற்பயக்கும் சின்னீர இன்பத்தின்—முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.”

இது ஒருவன் சரீரத்திலிருக்கும்பொழுது அவனுக்கு ஆண் தன்மை அதிகரித்துத் தேகபலமும், சித்தவலிமையும், நரம்புகளின் வலிமையும், தேகாரோக்கியமும் சகல ரூபலாவண்யமும் உதிக்கும். இது வெளிவறிவிட்ட சரீரத்திலோ நோய், தொம்பலம், பலவீனம், துன்பம் முதலியவை குலவையிட்டுக்கொண்டுவந்து குடியிருக்கும்.

குழந்தை பிறக்கும்பொழுதே அதை ஆணை பெண்ணேவென் றறியக்கூடிய குறிகளுண்டு. ஆனால் பன்னிரண்டு வயதாகுமட்டும் மற்ற அவயவங்களெல்லாம் பூரணஸ்திதிக்கு வரினும் ஜனனேந்திரி யங்கள் மட்டும் பக்குவ நிலைமைக்கு வருவதில்லை. அக்காலத்தில் சுக்கிலோற்பத்தியான போதிலும், இருபத்தைந்து வயது பரியந்தம் சிருஷ்டித் தொழிலைப் பூர்த்தியாய் நிறைவேற்றத்தக்க பூரணபக்குவ நிலைமைக்கு வருகிறதில்லை. ஐம்பது வயதுக்குமேல் காமாக்கினி தணியவாரம்பிக்கும். இவ்விஷயங்களை ஒருவன் கவனித்து நடப்பா னையின், அவனுக்குத் தீர்க்காயுளாங்குவதுடன், சரீரதாவ்மூகமும், சௌக்யமும், சந்தோஷமும் நீடித்து நிலைத்தாங்குமென்பது நிச்சயம்.

சற்றேகவனி. எண்பத்துநாலு வயதில் ஆங்கிலேய அரசாட்சி யின் அருமையான ராஜ்யபாரத்தைத் தன் சிரசின்மேல் தாங்கிவந்த கிளாட்ஸ்டன் (Gladstone.) மகா பிரபுவின் சரித்திரத்தை வாசித் திருப்பாய். சென்னை கிறிஸ்டியன் காலேஜில் நம் பாலியர்க்கு ஞான மிர்தத்தை ஊட்டியதிலேயே தம் காலமுழுவதையும் செலவிட்ட மில் லர் துரை (Dr. Miller) யைப்பற்றியும் உனக்கு நன்றாய்த் தெரியும்.

இன்னும் இதோ பார்! இந்தப்படம் யாருடையது?



தயாதாக்ஷண்ணிய ணதரிய சௌரியாதி சகல கல்யாண குண பூரண காருண்ணிய சாக்ஷாத் மஹாதேசனின பாதா ரவிந்தத்தை யனுதினமும் நி யானித்து ஞான நிஷ்டையிலி ருந்தவரும், அருள்பெற்ற பே ர்க்கெல்லாம் ஓழிபெறச்செய் யும் வேத நீதி சாஸ்திரோப தேசப் பீடமாகிய சர்வகலாசா லைகளை இந்தியாவின் பற்பல இடங்களிலு மமைத்து நம்பா லியர்க்கு ஞானமிர்தத்தையூட் டிக் கீர்த்தி நிரம்பப் பெற்ற வரும், சீமையிலிருந்து தென னிந்தியாவுக்குக் கலெக்டராக வரும் ஐரோப்பியருக்குத் தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளைக் கற்பித்ததே

யன்றித் தக்கணை நாட்டவர்களின் சன்மார்க்க பக்திவைராக்கிய சற்குணங்களை வெகுவாய்ப் பிரசாரஞ்செய்து ஆங்கிலேயர் மனதில நம் நாட்டவரைப்பற்றி நல்லெண்ணம புகச்செய்து வந்தவரும் சைவ சித்தாந்தம் என்னப்பட்ட இந்து வேதாகம தத்துவநூலின சமயக் கொள்கைகளை எதித்துவிவரிக்கும் அரியநூல்களையும், மாணிக்க வாசக சுவாமிகள், திருவள்ளுவநாயனார் முதலிய மகாத்துமாக்களின் திவ்விய சரித்திரங்களையும், இன்னும் திருவாசகம், திருக்குறள், நாலடியார், தனிப்பாசுரத்தொகை, இலக்கண சூஸ்திரமுதலிய அரிய நூல்களையும ஆங்கிலேய பாஷையில் தமதன்போடுபாடி அச்சிட்ட வருமாகிய மகாமகத்துவந்தங்கிய வேத சாஸ்திரியார் கனம் G U. போப்பையருடையது இவர் 1280-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 24-ந் தேதி யன்று நோவாஸ் கோஷியாவில் பிறந்தார். இவரது தகப்பனார் பினிமவுத் கப்பலின் சொந்தக்காரரும் வர்த்தகருமாயிருந்தார். டாக்டர் போப்பையர் 1840-ம் வருஷம் நமது நாட்டைச்சேர்ந்த திருநெல்வேலி ஜில்லாவில கல்விக்கு உறைவிடமாயிருந்த சாயல்புரத்தில தமது வேலையை ஆரம்பித்தார். பின்பு 1851-ம் வருஷம் தஞ்சையில் St. பீற்றர்ஸ் காலேஜை ஸ்தாபித்தார். அதன்பின்பு உதகமண்டலத்திலுள்ள ஓர் பாடசாலைக்குத் தலைமைப் போதனாசிரியராகப் பத்து வருஷம் வேலைசெய்தார். இக்காலங்களில் விடாமுயற்சியுடன்தமிழ்ப் பாஷையைக்கற்று விற்பன்னரானார்.

1860-ம் வருஷத்தில் தமது நாற்பத்தோராவது வயதில் கடைசியாய் இங்கிலாந்துக்குச் சென்று அவ்விடத்தில் ஆக்ஸ்போர்ட் (Oxford.) சர்வகலாசாலையில் தமிழ், தெலுங்கு பாஷைகளுக்குப் போதனாசிரியராயிருந்தார். இக்காலங்களில் தமிழ்ப்பாஷையைக் கற்பதில் மேலே ஓர்விதப் பிரீதியுண்டாகி, பூர்வீக கிரந்தங்களனேகத்தையும் நன்கு ஆராய்ச்சிசெய்து வந்ததுடன், குறள், நாலடியார், திருவாசகம் முதலிய அபூர்வ கிரந்தங்களுக்கு வியாக்கியானமும், இங்கிலீஷ் உரையும் செய்திருக்கின்றார். இவருடைய சிறிய இலக்கணத்தின் மூலமாக இவருடைய பெயர் தமிழ்நாட்டுப் பிள்ளைகள் ஒவ்வொருவர்க்குந் தெரியவரும். தமிழ்ப்பாஷை விர்த்திக்காகவும், தமிழ் நாட்டவர்களுக்குள்ளிருக்கும் சாஸ்திராதாத்தினங்களின் மேன்மையை ஆங்கிலேயர் அறியும் பொருட்டாகவும், ஆங்கிலத்திலும் பாடலாகப் பாடியிருப்பதோடு இவ்விதசாஸ்திரங்களையே ஆதாரமாகப் பூண்டிருக்கும் தமிழ்நாட்டவரின் நாகரீகமும் உயர்ந்ததாகவே யிருக்குமென மெச்சிப்பேசி எழுதியிருக்கிறார்.

இவர் ஸ்தாபித்த சாயல்புரம் வித்தியாசாலையின் அறுபதாம் வருஷக் கொண்டாட்டத்தில் அக்கல்லூரியின் மாணாக்கரில் சிலர் சேர்ந்து 1000 ரூபாய்வரை சேர்த்து, இராமகோன் கனதன வர்த்தகராயிருந்த கனம் பெ. மா. மதுரைப்பிள்ளை யவர்களின் ஆதரவால்

1093-ம் வருஷத்தில் கணம் போப்பையருக்கு கன்கொனடையாக அனுப்பியபோது அவர் இங்லாகிரியருக்கு எழுதிய பதிலாவது :—

"The Gift is especially valuable, since Tamil Publications in England cannot fail to entail very heavy expenses and my work has left me a poor man, especially since I have no pension whatever. I tell you this because I wish you all to feel that, in this respect I am your debtor, even as in other respects you are kind enough to say that you owe me something.....My own past life, now drawing to a close, seems like a dream, and I alone know how unprofitable it has been; but one thing I can affirm that I have never wavered in my affection for the Tamil people, their language and literature. I have hoped to help, in some humble way, to bring East and West nearer to one another and to prepare the way for His coming, who is "King of Kings and Lord of Lords." Pray for me that I may endure even to the end.....

I am now engaged in a final revision of my Kural, which I trust to make a thoroughly exhaustive work on that most valuable of all Tamil Publications, "The Sacred Kural." I should like to publish this entirely under the Patronage of the Chiefs of the Tamil People, with a dedication to the whole race, and to make it a really splendid monument of Tamil genius, but this seems difficult of realisation."


இவர் 1908-ம் வருஷம் பெப்ரவரிமாதம் 12-ம் தேதி உயிர்நீத்தார். இவர் சாகுமளவும் திருக்குறளின் புதிய பதிப்பை ஆங்கில யத்தில் மொழிபெயர்த்து அதை அச்சிடுகெனகாண்டு வந்தாரென்று கேள்விப்படுகிறோம். இவ்வளவு திடகாத்திர சாம்பீர சம்பன்னனாகவிருக்கும் ஆண்மையின மாண்பையும், நமது நாட்களில் இருபது வயதாகுமுன்னமே தங்க பஸ்பங்களும் டானிக்குகளும் (Tonic.) தேடும் ஆண் சிங்கங்களின் ஆண்மையழிவையும் ஒதனிப் பார்.

ஆம்! வாலிபருக்கு இன்பத்தில் அதிகப் பிரீதியுண்டு. அவர் களுக்குச் சாலக் கழிப்புற்றுத் துள்ளித்தகிக்குடன் கொக்களித்தி திரியும் ஆவல் அதிகமாயுண்டு. ஆடுவதும், ஓடுவதும், அலைவதும, திரிவதும், மல்யுத்தஞ் செய்வதும் ஒருவன் சரீரத்தைக் கெடுக்க மாட்டாது. ஒழுக்குமட்டுமே அவனைக் கெடுத்துவிடும். சிற்றின்பப பிரியத்தினுல் ஜீவாதினத்தை ஒழுக்கி விடுகிறவனை மட்டுமே தன் ஜீவன் சத்துக்குறைத்து திரிவான. ஐயோ! அம்மாணாதி வெகு ஆழமும் வெகு தரிதமுமாய் இருளின் பள்ளத்தாக்கில் அவனைக் கொண்டுபோய்ச் சேர்க்கும். ஓ! பயங்கரம! பாவத்தைப்பறனை நிழல்போல்விடாமல் தொடர்ந்துவரும் ஆத்மனைகளின் கனபாரத்தை உனக்குணர்த்தத்தக்க சக்தி உனக்கில்லையே. யாதொரு மூட்டைப் பொதியை எடுப்பதற்கு முன்னமே அதனைக் களைப்பித்துவிடும், தங்

கள் சத்துவத்திற்கு அதன் பருவ மிஞ்சினதோ ஒத்ததோவென்று கவனமாய்ப் பரீட்சித்தறிந்தபின் அதனைத் தூக்கிக்கொள்வார்கள் உலகத்தவர். அதுபோல் பாவச்செயல்களின் பயங்கரபருவை நீ அறிந்து விலகும்படி அவற்றை ஒளிக்காமல் உனக்கு விளக்கிவிடுகிறேன். அதன்பின் உன்னிஷ்டம்

கரசுரதம். (Masturbation.)

ஹஸ்தப் பிரயோகத்தினல் கோசத்தை இயக்கி ஆனந்திக்கும் தொழிலாகிய கரசுரதம் அல்லது முஷ்டிமைதினம் என்னும் தொழிலை அப்பியாசித்து வருவதனல் ஆண்குறியின் நரம்புகள் தளர்ந்து, கோசவெழுச்சிக்குக் காரணமாகிய ஏராளமான இரத்தத்தை அங்கேயே நிறுத்தும் சக்திபற்றுப்போய், சுக்கில விர்வுகு குறைந்து போகத்தின்மீது ஆசையில்லாமல் போவதோடு, இளைப்பை, ஈரல் இருதயம் குண்டிக்காய், சுக்கிலக் குமிழ், ஸ்கலிதக் குழல் பீஜம், ஆண்குறிமுதலிய உறுப்புகளில் கடினம் பலவித பீடைகள் உண்டாகி அதனல் அநேகதுன்பங்கள் விளைகின்றன. இப்படிப்பட்டவர்



களுக்கு அடிக்கடி தலைவலி, மறதி, மயக்கம், மந்தபுத்தி, மனக்கவலை உற்சாகமின்மை, வாக்கமின்மை, அனதரியம், சோம்பல், அசதி, அஜீரணம், வயிற்றுச்சிக்கல், வயிற்றுவலி, நெஞ்செரிவு முதலிய நோயகள் அடிக்கடி உண்டாவதுடன், தம்முடைய உயிரின் பேரிலேயே ஓர்வித வெறுப்பும், ஸ்திரீகளைக் கண்டால் ஓர்வித நடுக்கமும் உண்டாகும், பாரிசவாய்வும் உண்டாகும். இதுமட்டுமா? இராஜநீதிப் பிரமாணத்தை மீறி நடந்தவர்கள் மனுஷரின் கண்களுக்குத் தப்பிப் போய்க்கொள்ளலாம், ஆனல் தெய்வத்தால் நியமிக்கப்பட்ட இயற்கைப்

பிரமாணத்தை ஒருதடவை மீறினவன் அதற்குரிய தண்டனையை அநுபவிக்காமல் நீாது.

இந்த மகா கொடியபேயின் வாயிலகப்பட்டவன் தன்னைமீட்டுக் கொள்ள சக்தியற்றவனைப்போல் பின்வரும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றிச் சற்றும் அலனிக்காதவனைப், தன்னை அணிக்கும் அக்கினியின் பிரகாசகாந்தியா லிழுக்கப்பட்டுத் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளும் விட்டிலப்போல் திரும்பத் திரும்பத் தனது ஆபாச அக்கிரமச்சிர்த்தியைக் கனல் கடத்திவருகிறான. ஐயோ! பயங்கரம்! அவன் முடிவென்ன! * அவனுடையநேத்திரங்களிரண்டும் மழுங்கி, முள்ளந்தண்டின் உறுதி நீங்கிப் போவதால் உட்காரச் சக்தியற்று, இடுப்புவலி, முழங்கால்வலி,நாடைப்பு,கல்லடைப்பு, இரத்தவாழுக்கு, காக்கைவலி, மஞ்சட்காமாலை, மத்தியமோகம் முதலிய நோய்களுக்கு அவன் சரீரம் வாசஸ்தலமாகிவிடும். அப்பொழுது அவன் சரீரத்திலும் மனதிலும் முண்டாகும் வேதனையை என்னென்று சொல்லுவேன். புருஷத்தலம் தன்னைவிட்டு நீங்கிப்போனதை நினைக்க நினைக்க தன்னுயிரைத்தானே போக்கிக்கொள்ள நினைப்பாரெருசமயம். அலல் கலியாணத்தைப்பற்றியும் தன் தேகஸ்திதியைப்பற்றியும் நினைக்கும் போது மனதிலொருவித பயங்கரமுண்டாவதால் இருபதுவயது வாலிபனாயிருந்தபொழுதிலும் கலியாணப் பேச்செடுத்தவுடன் டானிக்கு (Tonic.) களையும், தங்கபஸ்பங்களையும், மனோஞ்சித மனமதபாணலேகியம், தாதுபுஷ்டிலேகியம், காமதேசரிக்குளிகை, வீரியஸ்தம்பனக்குளிகை முதலியவைகளையுந் தேடிப்பிடித்துபயோகிக்கிறான். இவ்வித அநுஷ்டானப்பரிகாரங்களினால் நாட்படுகளில் முறுக்கேறி விசேஷ போகத்தின் மேலாசையுண்டாக எல்லாஞ்சோர்ந்து ஐயாலைப்பேடியாக்கிவிடுகின்றன. அளவுகடந்த போகத்தை அநேகநாட்டலைவைத்து அல்லல் படுபவனைவிட அதிகமான ஈனதசையடைந்து இறுதியில் பாரிசவாய்வு முதலிய பலத்த ரோகங்களால் பீடிக்கப்படுகின்றன.

காரணங்கள்.

இவ்வளவு கெடுதியையும் உண்டாக்கத்தக்க ஹஸ்தப்பிரயோகமுதலிய தன்னைத்தானழிக்குஞ் செய்கைகளைச் சிறுவர் அப்பியாசித்து வருவதற்கு காரணங்களை இங்கு கூறுவோம்.

---

* தன்னைத் தானழிக்குஞ் செய்களைகளால் இவ்வித ரோகங்களுண்டாகுமென்று நாம் சொல்வதால் இவ்வித ரோகஸ்தர்களெல்லாம் அவ்வித தொழிலுடையவர்களென்பதாகாதென்க.

1. முதற்காரணம் தாயீதந்தையரே. குழந்தை உற்பத்தியாகுங் காலத்தில் தாய்தந்தையர் மிதபிஞ்சிய போகத்திற் சிடங்கொடுப்பதனல் அக்காலத்தில் தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியாயிருக்குங் குழந்தையும காமாதுராளுகிறன். "இதோ நான் அக்ருணத்தில் உருவானேன். என்தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்." என்று இஸ்ரவேலின் இனிய சங்கீதாதன் சொல்லியிருக்கும வண்ணம், பெற்றோரின் காமக்கிரியைகள் பிள்ளைக்குந தானிடுவதால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளையும் பத்து பன்னிரண்டு வயதானவுடன் தாதுவினுடைய தன்மை இப்படிப்பட்டதென்றும, அதுவே உயிர் நிலையென்றும், அதைக்காப்பாற்றுவதனலேயே புருஷோத்தமனென்ற வினங்கலாமென்றும் அறியுமுன்னமே இயற்கை வாசனையாலும், துஷ்டருடைய சகவாச தோஷத்தாலும் தம்மைத் தாமழிக்கும் செய்கையை அப்பியாசிக்கப் பழகிப் பிஞ்சிலேயே பழுத்த பழமாகிவிடுகின்றனர்.

2. குழந்தைகள் சாப்பிடும் சாப்பாடு. சிறுபிராயத்தில் வாய்க்கு ருசியானவைகளும், தாதுபுஷ்டியை உண்டாக்கக்கூடிய முட்டை, மாமிசம், நெய், மிட்டாய், அதிகமான உப்பு, தேயிலை, காப்பி, பால் முதலிய ஆகாரங்களை யூட்டுவதனல் பத்து வயதிலேயே காமக்கிளர்ச்சியுண்டாகி, அறியாப் பருவத்தில் அழிவுக்குரிய தொழிலைச்செய்ய ஊரம்பித்துவிடுகின்றனர்.

3. அடிக்கடி ஸ்நானஞ் செய்யாமல் அசுசியாயிருப்பதனலும், பஞ்சணை மெத்தைகளில் தூங்குவதனலும், மற்றவர்களோடுகூடத் தூங்குவதனலும், வீட்டிற்குள்ளேயேயிருப்பதனலும், சுத்த ஆகாயம் படாத அறைகளில் தூங்குவதனலும், தூங்குமபொழுது கம்பளிப்போர்வையைப் போர்த்துக்கொள்வதனலும், அஜீரணத்தினலும், வயிற்றில் கிருமிபற்றியிருப்பதனலும், மூத்திரத்தையடக்குவதனலும், இரவில் அதிக நேரஞ்சென்று போஜனம் செய்வதனலும், சிறுவயதிலேயே சுருட்டு முதலிய லாகிரிவஸ்துக்களைக் குடிக்கப்பழகுவதனலும், தூங்கும்பொழுது மல்லாந்து படுத்திருப்பதனலும் சிறுபிராயத்திலேயே ஜனனேந்திரியங்களுக்குக் கிளர்ச்சியுண்டாகித் தகாதனத் தானழிக்கும் அக்கிரமக் கிரியைகளுக்கு ஆளாக்கிவிடுகின்றன.

4. அநேக பெற்றோர் தமது மூடத்தனத்தால் தமதுபிள்ளைகள் சிறுவர்களாயிருக்கும்பொழுதே விளையாட்டுப் பாவனையாக அவர்களிடத்தில் பெண், மாப்பிள்ளைப்பேச்சு பேசுவதனலும், அவர்கள் மூன்றுகளிருந்தே தாங்கள் சந்தான சுகதோஷ கேளிக்கைகள் செய்வதனலும், போதனையினலும், சாதனையினலும் தமதருமைக் குழந்தைகளைக் கெடுத்துவிடுகிறார்கள்.

5. பெற்றோர்க்குச் சிநேகிதனெனவும், பாந்தல்தனெனவும் பாராமலுலகம் பிசாசின் மக்கள் பலர் அவர்களறியாமற் பிள்ளைகளின்

ஜனனேந்திரியங்களைப் பிடித்து விளையாடுவதனால் அறியாப் பருவத்தில் அழிவுக்கு ஆளாகும் வழிகளைக் காட்டிவிடுகின்றனர்.

6. செவிலித் தாய்மாரும், தாதிகளும் பிள்ளைகளின் அழுகையை நிறுத்தப் பொருட்டு அவர்கள் ஜனனேந்திரியங்களை அழுத்துவதனால் சாப் பழக்கங்களைக் கற்றுக்கொடுத்துவிடுகின்றனர்.

7 [illegible]தியாதி காரணங்களால் பழக்கப்பட்ட தாயர் அறிவிலேயே தம்மைமீறி தாமழுக்கும் துர்க்கிரியங்களைச் செய்விடுவார்களென்பதை அறியாமல், அதேக பெற்றோர் [illegible]தையா யிருந்துவிட்டு, தம் புத்தி புத்திரிகள் இயற்கையிலேயே மாசற்ற சுகிர்தகுணம் வாய்ந்தவர்களென்றும், அவர்களுக்கு யாதொரு புத்திமதியும் அவசியமில்லையென்றும் எண்ணுகிறார்கள். இதுமகா தப்பிதம். வெருஜாக்கிரதையுடனும் எச்சரிப்புடனும் பிள்ளைகளை வளர்க்கவேண்டியது பெற்றோரின் கடமை. ஆதலால் அவர்களுக்குப் பிரயோசனமாகத் தாம் கிரியங்கள் செய்யப் பழகின பிள்ளைகளின் தன்மைகளைப்பற்றிச் சில குறிப்புகளை இங்கு வரைவோம்:—

குறிப்புகள்.

1. தன்னைத் தானழிக்கும் தொழிலை அப்பியாசித்துவரும் பிள்ளைகள் சிறியோராயினும் பெரியோராயினும் அதை நிறுத்தினாலும் நிறுத்தாமலிருந்தபோதிலும் ஒருகால அதிக பசியும், மறுகால் பசியின்மையும், சாதாரண சாப்பாட்டில் வெறுப்பும், உபாதியும், ருசியுள்ளதுமான சாப்பாட்டின்மேல் விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள். இவ்விதமாய்ச் சாதாரண சாப்பாட்டை வெறுக்கிற பிள்ளைகள் துஷ்டகிரியங்களுக்கு ஆளானவர்கள் என்பது முதல் குறிப்பு. அவர்கள் இஷ்டப்படும் சில வஸ்துக்களைப் பெற்றோர் அறியும பொருட்டு இங்கு கூறுவோம்:—

ஓர் பெண்குழந்தை சுவரிலுள்ள சுண்ணாம்பை எடுத்துத் தின்கிறதையும, சிலேற்றுப் பென்சிலைக் கடித்துத் தின்கிறதையும் கண்டால் அவள் துஷ்டப்பிள்ளையென்று உடனே பறிந்துகொள்ளலாம். அதேமாதிரியாக ஒருபையன் வெறும உப்பை எடுத்துத் தின்றுகொண்டிருப்பானால் அல்லது சாப்பாட்டில் அதிகம் உப்பு சேர்த்து சாப்பிடுவானால், அல்லது சுருட்டை வழக்கமாய் உபயோகிப்பானால், அல்லது எலம், கிராம்பு, லவங்கப்பட்டை, குடிவகை முதலியவைகளை உபயோகிக்கப் பழகியிருப்பானால், அவன் தன்னைத்தானழிக்கும் தொழில்செய்யப் பழகினவன் என்றறிந்து கொள்ளலாம். இவ்விதமாய், விசித்திரப் பழக்கங்களும் விசேஷித்த வஸ்துக்களின்மேலில் அவாவும் ஒரு பையனுக்கு அல்லது பெண்ணுக்கு உண்டாகுமாயின் அவர்கள் இவ்வித கெட்ட பழக்கங்களை யுடையவர்களென்றறிந்து கொள்ளலாம்.

2. இன்னுமொரு குறிப்பு யாதெனில் :—தான் அப்பியாசித்து வரும் தர்ப்பழக்கம் தப்பிதமானதென்று அவன் பனச்சாட்சி அவனை அடிக்கடி வாதித்துக் கொண்டிருப்பதால், அவன் தனது பெற்றோர் அல்லது பெரியோர் முகத்தில்விழிக்க வெட்கமுற்று எப்பொழுதும் தனிமையாயிருக்க விரும்புவதுடன், பெரியோர் முன்வந்தால் நோய் எதிர்த்துப்பார்த்து வார்த்தையாட வெட்கி விழிகள் ஆட்டுக்கண்பட்டு, கீழ் நோக்கிய பார்வையுடன் நிற்பதைக் காணலாம். இவ்விதக் குறிப்பைக் கண்டவுடன் பெற்றோர் இதைக் கவனித்துப் பையனை மூர்க்கமாய்த் தூஷணவார்த்தைகளால் கோபிக்காமல் வெகு பட்சத்தோடும், சாந்தத்தோடும் அவனைத் தனிமையாய் நிறுத்தி இவ்வித செய்கைகளாலுண்டாகும் கஷ்டங்களை ஓவ்வொன்றாய் உதாரணத்துடன் எடுத்துக்காட்டி அது குற்றமென்று வற்புறுத்துவது பெற்றோரின் கடமை.

3. இன்னுஞ் சில குறிகள் எவையெனில் :—இவ்விதகிரியைகள் செய்யும் பிள்ளைகளுக்கு முகம் வெளிறிச் சிலசமயம் மோகப்பருக்கள் தோன்றுவதுண்டு. கைகள் குளிர்ந்து வியர்வுகாணும். வார்த்தைகள் குளறி ஞாபகசக்தி குறையும். இன்னும், சரீரம் முழுவதிலுமே அசௌக்கியமாகிவிடுவதால் வேலைசெய்யவாவது, படிக்கவாவது சக்தியற்றவனாவான். சிலகாலமாக இத்தொழிலை அப்பியாசித்தபின், தான் செய்வது துர்க்கிரியையெனக்கண்டு அத்தொழிலை நிறுத்தப் பிரயாசப்படுவான். ஆனால் அக்காலத்தில் இரவில் தூங்கும்பொழுது சொர்ப்பனங்கண்டு இந்திரியம் தானாகவே ஸ்கலிதமாகிவிட்டதைப் பார்த்துத் திகிலும் பயங்கரமும் உண்டாகும். இன்னும் நாட்செல்லச்செல்ல சொர்ப்பனங் காணுமலே ஸ்கலிதமாகும். இவ்விதமாகச் சரீரம் பலஹீனமடைவதால் பகலிலுங்கூட ஓழுக்கு நேரிட்டு வஸ்திரத்தைக் கெடுக்கும். இதனால் இளைப்பும் களைப்பு முண்டாகும். அப்பொழுது அவன் அதிகார வேதனையடைந்து நடுநடுங்கி, தன் சரீரத்தைப்பற்றிய நம்பிக்கையற்றுப்போய், அடிக்கடி கோபமடைவதுமன்றி, தனக்குப் பாரத்தையும் வருத்தத்தையுங் கொடுக்கும் தன சரீரதனை எவ்விதமாய்த் தொலைத்து விடுகிறதென்று எண்ணி எண்ணி ஏங்கித் தியங்கி மயங்கி நிற்பான்.

அவ்வித உபத்திரவங்களுக்காளாகி அவதிப்படும் வாலிபர்களுக்கு எழுதிவரும் ஆயிரக்கணக்கான கடிதங்களில் சிலவற்றுமட்டும் மற்றவர்களுக்கு எச்சரிப்பாக இந்த 11-ம புஸ்தகத்தின் கடைசியில் பிரசுரித்துக்கொடுக்கிறோம்.

பாமர வைத்தியர்கள்.

இப்படிப்பட்டவன் இந்தசமயம் பாமர வைத்தியர்கள் கையிலகப்பட்டு, அகாதமான பச்சைவெட்டு மருந்துகளைச் சாப்பிட்டுத்

தன் பொருளை நாசமாக்குவதுமல்லாமல் சரீரத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறான். எனெனில், தன் பெற்றோரிடத்திலாவது, குடும்ப வைத்தியர்களிடத்திலாவது தன் நிர்ப்பந்த வியாதியைப்பற்றியும் தன் வழக்கங்களைப் பற்றியும் வெளியிட வெட்கப்படுகிறான். ஆதலால் வர்த்தமானப் பத்திரிகைகளில பிரசுரஞ்செய்திருக்கும மருந்துகளை வாங்கும்பொருட்டு வீணுப்த் தன் காசை அழித்து மோசம்போகிறான். அவ்விதமாய் மோசம்போன ஒருவர் நமக்கெழுதிய கடிதத்தை மற்றவர்களின் உபயோகத்திற்காகத் தெரிவிப்போம்.

"ஐயா"

தாங்கள் சிலோன் முஸ்லிம் நேசன் பத்திரிகையில், "சுகவுற் பத்தி சிந்தாமணி" என்னும் "மானிட ஜனன மர்ம சாஸ்திரம்," பிரதி ஒன்றுக்கு ரூபாய் 5 எனறும, முன்பனம் அனுப்பினால் புஸ்தகத்தைக் கட்டாயம் இரெமாகப் பெறலாகுமென்றும் காம விசயங்களிருக்கும் சுலபமான வர்தமானத்தை நமக்கு எழுதிக தெரிந்துகொள்ளலாமென்றும் எழுதியிருக்கிறது. புஸ்தகம் இரு நாகக்கிடையாது. சமயத்தவறினாலென்பது எனக்கு கொஞ்சமும் விளங்கவில்லை. அதின் இரகசியத்தை உறுதியாழியாக எழுதினால் மட்டிலும் ரூபாய் 5 மணியாடர் செய்யப்படும். இல்லாவிடில செய்யப்பட மாட்டாது. என் புத்திக்கு ஒன்றும் புலப்படவில்லை. இதை எழுதுவதற்குக் காரணம் இத்தபிரகாரம் முஸ்லிம் நேசன் பத்திரிகையில் அநேக சாமான்கள் பிரசுரித்ததை எழுதி வருந்தி நான் மோசம்போயிருக்கிறேன். கல்கத்தா மேடிஸ் கம்பனியில், (Canadian Gold) கனேடியன் கோல்ட் மோதிரம் வருத்தியும், மோசம்போயிருக்கிறேன். அதைப்பற்றி முஸ்லிம் நேசனுக்கு மோசடியானதை என் பிரசுரித்தீர், என்பதாய்க கேள்விகேட்டதில் காசைக்கொடுத்தால் பிரசுரிப்பது நமக்குவேலை. அதின் விவரந்தெரியாது, என்று எழுதியிருக்கிறார்கள்."

பாமர பண்டிதர்களின பிரகடனங்களை வாசிக்க வாசிக்க ஓர்வித பயமும் திகிலும் உண்டாகி உள்ளபெலனையும் இழந்துவிடுகிறன. ஆதலால் அப்படிப்பட்ட துர்க்கிர்த்தியங்களுக்க காளானவர்களுக்கு நாம் சொல்லும் உபதேசமாவது :—

அறியாமையினால் அக்கிரமக் கிர்த்தியங்களுக் காளாகி அவஸ்தைப்படும் அருமைக்குழந்தாய்! "தன்மார்க்கன் தான்செய்த தன்மார்க்கத்தைவிட்டு நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில் அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான்." ஆதலால் முதலாவது உன் அக்கிரமங்களை விட்டுவிலகு. அதுவே சிறந்த ஔஷதம். அதில்லாமல் ஔஷதத்தால் பிரயோசனமில்லை. சிலர் நிறுத்த முடியவில்லையே என்னலாம். நிறுத்த முடியும், மனத்திட

மிருந்தால் வழியுமுண்டாகும். ஆதலால் திடசித்தத்தால் உன் வழி கஷ்டச் செல்லவபன்றது. கற்புள்ள மங்கையரைக் கெடுக்கவாவது, வேசியர் வீட்டிலே செலலவாவது விருப்பமில்லாத அநேக பக்திமான் களும், மரியாதையுள்ள மாணாக்கர்களும் இத்தூர்ப் பழக்கத்துக் காளாகித், கடைசியில் தங்கள் உயிர் குறைவதைக் காணவே அதை மீட்குப்படி தங்கத்தைக் கொட்டிக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார் கள். அவர்கள் பாமரர் இடத்தில் மோசம் போகாமல் திடசித்தத் தோடு தம்மைக் கட்டிக்கொண்டு கைதேர்ந்த வைத்தியர்களிடம் தமது விஷயத்தைத் தெரிவிக்க நிவாரணமுண்டு.

பூர்வீக வழக்கம்.

இத்தூர் வழக்கம் மோசேயின் காலத்திலிருந்ததாகவும் அதற்கு அக்காலத்திலேயே சில ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது. உதாரணமாக:—

லேவியராகமம் 15:16,17. "ஒருவனிலிருந்து இந்திரியம் கழிந்த தாண்டாலால், அவன் தண்ணீரில் முழுகவேணும்; சாயுங்காலமட்டும் அவன் தீட்டுப்பட்டிருப்பானாக, கழிந்த இந்திரியம்பட்ட வஸ்திரமும் தோலும் தண்ணீரிலால் கழுவப்பட்டு சாயுங்காலமட்டும் தீட்டாய் இருக்கவேண்டும்."

உபாகமம் 23:10,11. "இராக்காலத்தில் சம்பவித்த தீட்டினாலே அசுத்தமாயிருக்கிற ஒருவன் உங்களிடத்தில் இருந்தால், அவன் பாளையத்திற்கு வெளியே போய்ப் பாளையத்திற்குள் வராமல், சாயுங் காலத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சூரியன் அஸ்தமிக்கும்போது பாளையத்திற்குள் வரக்கடவன்."

இவைகளிலிருந்து நாம் அறிவது யாதெனில், இந்திரிய ஸ்கலிதமானது அசுசியானதென்றும், சுத்த ஆகாயமுள்ள வெளி இடங் களில் தேகாப்பியாசஞ் செய்வதும், ஸ்நானஞ் செய்வதுமே அதற்குப் பரிகாரமாக உபயோகப்பட்டி வந்ததென்பதுமே.

இத்தூர் வழக்கத்தைக் கண்டிக்கும்பொருட்டு ஆங்கிலேயத்தில் அநேக கிரந்தங்கள் எழுதப்பட்டிருப்பதுடன், இவ்வித சீர்க்கேட் டை நிறுத்தவதே சுயதேச நன்மையை ஸ்தாபிப்பதற்கு அஸ்திபார மென அறிந்து அநேக பிரசங்கிகள் எழும்பி ஊருராய்ச் சிறுவர் களுக்குப் பிரசங்கம் செய்து வருகின்றார்கள். சுதேச விர்த்தியை அபேக்ஷிக்கும் நம் நாட்டவர்மட்டும் இந்தப் பாவத்தொழில் பரவுத தற்கு இடங்கொடுத்து அஜாக்கிரதையாய் இருப்பது தகுதியாகு மோ? இதைப்பற்றி (Dr. Adam Clarke) டாகடர் ஆடம் கிளார்க் என்பவர் சொல்வதை இங்கிலீஷ் படிதத வாலிபருக்குப் பிரயோ சனமாக ஆங்கிலத்திலேயே கூறுவோம்:—

"The sin of self-pollution is one of the most destructive evils ever practised by fallen man. In many respects it is several degrees worse than common whoredom, and has in its train more awful consequences. It excites the powers of nature to undue action, and produces violent secretions which necessarily and speedily exhaust the vital principle and energy; hence the muscles become flaccid and feeble, the tone and natural action of the nerves relaxed and impeded, the understanding confused, the judgment perverted, the will indeterminate and wholly without energy to resist, the eyes appear languishing and without expression, and the countenance vacant; nutrition fails; tremors, fears and terrors are generated, and thus the wretched victim drags out a miserable existence, till, superannuated even before he had time to arrive at man's estate, with a mind often debilitated even to a state of idiotism, his worthless body tumbles into the grave and his guilty soul-guilty of self-murder-is hurried into the presence of its Judge.

ஓர் கேள்வி.

ஒருவன் சிற்றின்பச் சிந்தனை என்பதே இல்லாமல் இருப்பது சாத்தியமாகுமா? மனுஷனுக்கிருக்கும் சுபாவங்களிலெல்லாம் மகா வலிமையுள்ளது சிற்றின்பப் பிரியம். இப்பிரியத்தை ஞானமுடைய ஆனந்த சொரூபி நமக்குள் ஸ்திரமாய் காட்டாதிருப்பாராகின், இப்பூமியின் கண்ணை ஜனசமூகவிர்த்தி நிறைந்து சிக்கிரத்தில் நாசமாகுவிடும். ஆதலால நமனைமைப்போன்ற நம் ஆண்மகனைச் சிருஷ்டிப்பதற்கு மூலகாரணமானச் சுகப்பிரேம என்பதை ஒருவனுக்கு உண்டாகும சகலவித லௌகீக இன்பங்களிலும் மேலானதாய் இருக்கவேண்டுமென்பது சிருஷ்டி காத்தாவின் நிருசயித்தம். அதற்கு மாறுதலாகச் சரீரத்தைக் கட்டுப்படுத்துவது மகா கஷ்டமே. என்றாலும், பால் மகாமுனிவர் சொல்லியதுபோல "என் சரீரத்தை அடக்கி ஆண்டு வருகிறேன்." என்று சொல்லக்கூடிய சமர்த்தனைடைய மகாத்மாக்களும் உண்டு.

எத்தனையோ ஆயிரக்கணக்கான வாலிபர் வாய்மையும் தூய்மையும் பொருந்தினவர்களாய் விவாகமாகுமட்டுமே தம்மைத் தாம் அடக்கி ஆண்டு வருகின்றனர். எத்தனையோ தபோதனர்கள் சரியான நிட காதார புருஷர்களாயிருந்தும் போகத்தை முற்றிலுமே தொலைத்து விடுதே கேகைகங்கெடாமலே தீர்க்காயுளுள்ளவர்களா யிருக்கிறார் கள். அதற்குக்காரணம் அவர்கள் இறு பிராயத்திலேயே தமது சரீரத்தைக் கட்டியாண்டு ஜெயசிலராயதன் உச்சித மேன்மையைப்

பற்றிக் குரு உபதேசம் பெற்றவர்கள். மற்றவர்களோ துஷ்ட சகவாசத்தினாலும் சிறுநின்பக் கதைகள் வாசிப்பதனாலும் மனக்கிளர்ச்சி உண்டாகி மனம்போன போக்கெல்லாம்போய்க் கெட்டுப்போகின்றனர். எண்ணெயை வார்த்தால் நெருப்பு அணியுமோ?

ஒருவன் விவாகஞ் செய்யுமளவும் சம்போக இச்சையே இல்லாமல் தன் சரீரத்தை அடக்கியாளும்படிக் கைபாடவேண்டிய சில விஷயங்களை இப்பொழுது கூறுவோம்:—

1. ஒருவன் தான் பரிசுத்தனாயிருக்கவேண்டுமென்னும் திடசித்த வைராக்கிய முடையவனாயிருத்தலே முதல் உபாயம். சில சமயந் தவறி விழுந்தாலும் அதைரியப்படாமல் சுத்த ஜீவியஞ் செய்ய அடிக்கடிப் பிரயாசப்படின் அதுவே வழக்கமாகிச் சுத்த ஜீவியம் எளிதாகிவிடும். ஆதலால் ஆரம்பத்திலேயே தன் மாம்ச இச்சையை எதிர்த்து உறுதியான வைராக்கியத்தோடு போராடவேண்டும், எவ்வளவு பிரயாசையெடுத்தும் தர்வழக்கங்களை விட்டுவிடச் சாத்தியப்படவில்லையென்று போக்குச் சொல்லுவாயோ? வேறெவ்வித உபாயத்தினாலும் உனக்கு மீகூடியில்லை. அக்கிரமக்கிரியம் ஒன்றில் நிலைத்திருக்குமட்டும் எந்தவித அனிஷ்டத்தினாலும் பிரயோசனமுண்டாகாது. ஞானியாகிய சாலமோன் எழுதிய நீதிமொழிகள் ஐந்தாம் அதிகாரத்தை அடிக்கடி வாசித்துப்பார். அவர் சொல்வதைக்கேள். நீதி-5:20,22,23.


"என் மகனே, நீ பரஸ்திரீயின்மேல் மயங்கித் திரிக்த அந்நிய ஸ்திரீயின் மார்பைத தழுவவேண்டியதென்ன?

துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும், தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான்:"

"அவன் புத்தியைக் கேளாததனால் மடிந்து தன் மதிகேட்டின் மிகுதியினால் மயங்கிப்போவான்."

2. மதியூகி தனக்குவரப்போகும் தீங்கை முன்னமேயறிந்து விலகிக்கொள்வான். மூடனோ அகப்பட்டுக்கொள்வான். ஆயுத பாணியான ஓர் திருடன ஒரு வீட்டினுள் புகுந்தால் ஒடினவன் பிழைப்பான, எதிர்த்தவன் சாவான். ஆதலால் சோதனைக்கு விலகி, எப்போதும் உன சரீரத்தையும் மனதையும் வேலையில் செலுத்து. இரவில் தூங்கும்போது தூர் எண்ணம் உன மனதினுள் புகுந்தால் உடனே படுக்கையை விட்டெழுந்து இரண்டொரு நிமிஷம் உலாவி விட்டுக் குளிர்ந்த ஜலத்தினால் ஜனனேந்திரியங்களைச் சுத்தஞ்செய்து உட்கார்ந்து ஞான ராஜனின் யுக மொழிகளை வாசி.

3. பொல்லாத நினைவுகள் உன் மனதில் பிரவேசிக்கவிடாதே. ஏனெனில் "விறகு நெருப்பை வளர்ப்பதுபோல் நினைவுகள் ஆசைகளை வளர்க்கும்." அவ்விதமான எண்ணங்கள் வரின் உடனே உலகத்தை வெறுக்கவும் தெய்வத்தை நேசிக்கவும் தூண்டிவிடும் பாடல்களைப் பாடுவதனாலும், சன்மார்க்க புஸ்தகங்களை வாசிப்பதனாலும், சரீரத்தை உழைப்பில் செலுத்துவதனாலும் மனதைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளலாம்.



4. சாலமோன் ராஜா சொல்வதுபோல் "பட்டணத்தின் வீதிகளில் பல பக்கங்களிலும் கண்ணைச் செலுத்தாதே. இடங்கள் தோறும் உலாவித் திரியாதே. சோடனை அலங்காரமுள்ள ஸ்திரீயை நோக்காமல் உன் கண்களைத் திருப்பிக்கொள். அந்திய ஸ்திரீயின் அழகை இச்சையோடு பாராதே." ஏனெனில் கண்களே அநேக கேட்டிற்குக் காரணம். ஏவாளைக் கெடுத்ததும் கண்ணே. ஆதியாகமம் 3:6. அவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கிறதென்று கண்டு அதன் கனியைப் பறித்துப் புசித்துத் தன புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்.

தாவீதைக் கெடுத்ததும் கண்ணே. அவன் தாமரைமலர்போன்ற வதனமும், பிறைச்சந்திரன்போல் வில்லைக்குத்தமான கெற்றியும், கயல்போன்ற கண்களும், பொன்மயமான மேனியும் பொருந்திய ரூபலாவண்ணியமுள்ள ஓர் சுந்தரமாது நிர்வாணமாய் ஸ்நானஞ்செய்வதைத் தன்கண்களால் பார்த்தான். உடனே மனிதகாங்கிஷியால் வெந்தெரிந்து பயங்கரமான பரதார குற்றம், அர்மாதி, கொலைபாதகங்களாகிய மூக்குற்றங்களுக்காளானான்.

யோபு மகாத்மாவோ தமது காலத்தை வேலைகளில் இடைவிடாயல் செலுத்தித் தமது நேத்திரங்களை யடக்கிக் காப்பதில் வெகு ஜாக்கிரதையா யிருந்ததாக வாசிக்கிறோம். அவர் தேகப் பிரகிருதி சாஸ்திரத்தையும சுகாதார முறைகளையும் தூரமாய்க் கற்றறிந்தவர்போல் ஞானம் பேசுகிறார். உதாரணமாக:- யோபு 31:1.9-15. என் கண்களோடே உடன்படிக்கை பண்ணினேன் நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாய் இருப்பதெப்படி? என் மனம் யாதொரு ஸ்திரீயின்மேல் மயங்கி அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்ததுண்டானால் அப்போது என் மனைவி வெறொருவனுக்கு மாவரைப்பாளாக. வேற்று மனிதர்கள் அவள்மேல் சாய்வார்களாக. அது தோஷம். அது நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படும் அக்கிரமமாமே. அது பாதாளபரி

யந்தம் பட்சிக்கும் அக்கினியாய் என் சம்பத்தையெல்லாம் நிர்மூலமாக்கும். என் வேலைக்காரனுனலும், என் வேலைக்காரியானலும், என்னோடு வழக்காடும்போது அவர்கள் நியாயத்தை நான் அசட்டை பண்ணியிருந்தால், தேவன் எழும்பும்போது நான் என்ன செய்வேன். அவர் விசாரிக்கும்போது நான் அவருக்கு என்ன பதில் உத்தரவு சொல்வேன். தாயின் கர்ப்பத்தில் என்னை உண்டுபண்ணினவர் அவனையும் உண்டுபண்ணினரல்லவோ? ஒரேவிதமான கர்ப்பத்தில் எங்களை உருவாக்கினரல்லவோ? இவ்வசனங்களில் யோபு மகான் "கண்களே பாவத்தின் வழி" என்பதைக் குறிப்பிடுகிறார். லோத்தின் மனைவியும் சோதோமைத் திரும்பிப்பார்த்து அழிந்தாள். தீனரும் தேசத்துப்பெண்களைப் பார்க்கும்படி போனவிடத்தில் கற்பழிந்து தீமைக்குள்ளானுள்.

ஆதலால் அசுத்த எண்ணங்கள் உன் மனதில் பிரவேசியாமல் விருக்க வேண்டுமென்றால் அசுத்தமான எந்த வஸ்துவையும் பாராதபடி உன் கண்களைக்கட்டு. ஓ! உன்னை எற்பாடு :—அசுசியான புஸ்தகங்கள், அசுசியான ஆடல் பாடல்கள், அசுசியான நாடகங்கள் முதலிய சகலவித துர்விஷயங்களையும் உன் கண்களுக்கு மிலக்குவதோடு, உன் மனதைக் கறைப்படுத்தக் கூடியதும், துர்ச்சிந்தனையைமூட்டக் கூடியதுமான எந்த வஸ்துவையும் உன் கண்களால் ஏறெடுத்துப் பாராதே.

5. துர் இச்சை மனதில் புகவிடாமல் உன் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, கண்களினுல் கெட்டவிஷயங்களைப் பாராமலும், காதுகளினுல் சிற்றின்பக் கதைகள், பாடல்கள் துர்விஷயங்கள் முதலியவற்றைக் கேளாமலும், உன் வேலையிலேயே முழுமனதையுஞ் செலுத்தி, முன்னுக்கு வரவேண்டுமென்னுமாவலிலேயே உன் மனஞ் செல்லட்டும்.

6. ஓர் மந்திரம். எல்லாவற்றிற்கும் மேலாக உனக்குச் சேரிடமெ பொழுதெல்லாம், "தெய்வம், மோட்சம, நரகம், மாதா, சகோதரி, மனையாள், பிள்ளை." இந்த ஏழு வார்த்தைகளையும் பிரணவ மந்திரமாக உச்சரிக்க, பிசாசின் கெட்ட எண்ணங்கள் உன் மனதை விட்டு ஓடிப்போய்விடும். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்க மனந்துணிகையிலே தாயையும், சகோதரியையும், மனையாளையும், பிள்ளையையும் கெடுமுருவன் அப்படிப் பார்ப்பானென்று எண்ணுவை. உன் சரீரதனதையழிக்கும் செய்கைக்கு உன் கையை எடுக்குமபோது உன் மனையாளையும பிள்ளையையும நினை. எல்லாவற்றிலும விசேஷமாய்க் "கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். அதனுல மரணக் கண்ணிகளுக்குத் தப்பித்துக் கொள்ளும் வழிகளுண்டு."

7. மேற்சொல்லிய விஷயங்களோடு உழைப்பு, தேகாப்பியாசம், இளைப்பாறுதல், தூக்கம், ஜீரணமாகத்தக்க வஸ்துக்களை புசித்தல், முதலிய விஷயங்களைக் கவனித்து வருவதலால், நன்னேத் தானழிக்குங் கிரியையால் அழிந்த சரீரத்தைத் திரும்பவும் கட்டக் கூடும்.

8. மதுபானம். சாராயம் முதலிய லாகிரிவஸ்துக்களை உபயோகிப்பதால் சுயசித்த சுபாதீனத்தை யிழந்து, சமயத்துக்குத் தக்கது உற்சாகமும் உத்தீபனமும் அதிகரித்து, தகாத விஷயங்களைச்செய்ய ஏவி, சரீரத்தையும் தாதுவையும் கெடுத்துவிடுகிறது. இப்பழக்கத்தைத் திடீரென்று நிறுத்தமுடியாது. ஆதலால் சிறிது சிறிதாகக் குறைத்து மெள்ளமெள்ள முற்றிலும் நீக்கப் பிரயாசப்பட வேண்டும். முள்ளின்மேல் துணியைப் போட்டவன் மெள்ள மெள்ளத்தான் எடுக்கவேண்டும்.

9. புகையிலை. புகையிலையை உபயோகிப்பதும் சரீரத்திலுள்ள இரத்தத்தைக் கெடுத்து, கண்திருஷ்டியை மந்தப்படுத்து, காதுமந்தமாகி, கண்ணத்திற் குழிவிழுந்து, சுவாசங்கெட்டு, ஜீரணசக்திக் காதாரமான உமிழ்நீரை அடிக்கடி வெளியாக்குவதால் அஜீரணமுண்டாகி, தாதுவினுடைய தன்மையைக் கெடுத்து நீராக்கி உடைத்து வெளியாக்கிவிடும்.

"கண்புகையும் நெஞ்சுலரும் கைகாலயர்த்துவிடும்
சொல்லரிய மேனி வெளுத்துவிடும்—மெல்லமெல்ல
ஈரல் கருகிவிடும் இந்திரிய நஷ்டமாம்
பாரப்புகையிலையின் பண்பு." என்று கூறினர் பெரியோரும்

ஆதலால் புகையிலையை உபயோகியாமலிருப்பது உத்தமமாகும்.

10. தன்னேத்தானழிக்கும் கிரியையைச் செய்யத் தூண்டிவிடும் விசேஷ காரணம் ஒருவன் சரீரத்திலேயே உண்டு. அது யாதெனில்:—மலச்சிக்கலே. ஏனெனில் சுக்கிலாசயம் ஜலாசயத்திற்கும் மலக்குடலுக்கும் நடுவில் இருக்கிறது. மலக்கட்டிருக்கும் பொழுது சுக்கிலாசயத்தை அழுத்துவதால் அதன் நரம்புகளுக்குக் கிளர்ச்சியுண்டாகி இந்திரியம் தானேகவே வெளியாகிவிடும். ஆதலால் காய்கரி பதார்த்தங்கள், பழவகைகள் முதலியவற்றைச் சாப்பிட்டுக் குடலில் அழுக்குத் தங்காமல் காத்துக்கொள்ள வேண்டும். யாதொரு வியாதிக்கு மருந்துகளுஞ் சாப்பிடாமலே குடலைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஓர் உபாயமுண்டு. அதாவது மருந்து ஷாப்புகளில் (Fountain Syringe.) என்று சொல்லப்படும் பீச்சாங்குழல் சொற்பவிலையில் கிடைக்கும். அதில் கைதாங்கக்கூடிய சூடையுள்ள வெந்நீரை விட்டு ஆசனவாயினுட்

செலுத்த வயிற்றிலுள்ளிருக்கும் அசுத்தங்கள் நீக்கிப்போகும். அதைப்படி சுடுதண்ணீரைத் தாராளமாய் யாதொரு பயமின்றி உள்ளே செலுத்தலாம்.

மலச்சிக்கல் அதிகமாயிருந்தால் மோலாசஸ் (Molasses.) அல்லது காஸ்றயில் சோப் (Castile Soap.) தண்ணீரில் கலந்துகொள்ளலாம். ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாகத் தோன்றும். ஆனால் சற்றே பழகிக்கொண்டால் பேதி மாத்திரை எக்காலத்திலும் சாப்பிட மனம் வராது. இந்திரிய ஸ்கலிதம், மூலமூளை, நீர்க்கடுப்பு, மதுமேகம் முதலிய நோய்களுண்டாயிருக்கும் பொழுதும், சுக்கிலாசயம், சுக்கிலச்சுமிழ், நீர்தாரை, ஜலாசயம் முதலியவைகளிலுண்டாகும் அழற்சி, விக்கம் முதலியவற்றை நீக்குவதற்கு வெந்நீர்ப் பிரயோகத்தைப்போல் சீக்கிரத்தில் சுகங்கொடுக்கக் கூடிய அனுபவம் வேறில்லை.

மேற்கூறிய (Fountain Syringe.) என்ற பிச்சாங்குழலால் அனைப்பாக்குக் குறையாத வெந்நீரை ஆசனஸ்தானத்தில் செலுத்துவதால் மேற்கூறிய அவயவங்களுக்கு உஷ்ணந் தாக்கி அழற்சியையும் விக்கத்தையும் உடனே நீக்கும். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குச் சாதாரணமாயுண்டாகிற மூலமூளை, நீர்க்கடுப்பு, மேகரோகங்களுக்கு வாரத்துக்கிருமுறை இப்பிரயோகத்தை உபயோகித்துவரின், களரூபபருவத்திலிவர்களுக்குண்டாகக் கூடிய ரோகங்கள் நீங்கிச் சுகஜீவியமடைவார்கள்.

11. பிரதிதினமும் காலையில் குளிர்ந்த ஜலஸ்நானம் செய்துவருவதுடன் மாலையில் ஆசனஸ்நானமும் செய்துவரவேண்டும்.

12. அதிகாலையில் சுத்த ஆகாயமுள்ள வெளிப்பிராந்தியத்தில் உலாவிவருவதும் சுவாசாப்பியாசம் செய்துவருவதும் நன்மை பயக்கும்.

13. மிட்டாய், மச்சம், பன்றியிறைச்சி, லாகிரி வஸ்துக்கள் முதலியவைகளைக் கட்டோடே நீக்கவேண்டும்.

14. பிரதிதினமும் காலையில பத்துநிமிஷமும் மாலையில் ஐந்து நிமிஷமும் டம்பல் (Dumbells.) அப்பியாசஞ் செய்துவரவேண்டும்.

15. இரவில் தூங்கும்போது போர்த்துக்கொள்வதற்காகத் துணி உபயோகிக்கக்கூடாது.

16. மெத்தை முதலியவைகள் போடாமல் பாயில் படுத்துத் தூங்குவதே நலம்.

17. காலையில் விழிப்புத் தோன்றினவுடனே படுக்கையிலிருந்து எழும்பிவிடவேண்டும்.

18. இவையெல்லாவற்றிற்கும் மேலாக உன் ஜனனேந்திரியங்களைப் பற்றிய எவ்விதஎண்ணமும் உன் மனதில் தோன்ற இடங்கொடாதே. அவற்றின் தன்மையையும் விசேஷத்தையும் பற்றி படிப்பதுவுமில்லை. படித்தலின் அளவு சட்டைபண்ணக் கூடாது. உறுதியான நம்பிக்கையோடு சுத்த ஜீவியமுது செய்யப் பிரயாசப்படு. அப்பொழுது உன் ஆரோக்கியமான மாண்பு இன்னதென்றறிவாய்.

19. தூங்கும்பொழுது மல்லாந்து படுக்கவே கூடாது. வலதுகையைத் தலைக்குக் கீழ் வைத்துச் சாய்ந்து சரிந்து படுப்பது மகா உத்தமம். போகாப்பியாதிகளின் முறையும் இதுவே.

இந்திரிய ஸ்கலிதம்.

பிராயமானவுடன் ஒவ்வொருவர்க்கும் பிறங்களிலிருந்து சுக்கிலம் விர்த்தியாகி, இந்திரிய நாண்வழியாய் ஜலாசயத்திற்கு மீமலாகச் சென்று, ஜலாசயத்திற்கும் மலக்குடலுக்குமிடையிலிருக்கும் சுக்கிலாசயத்தில் சேருகிறது. இவ்விதச் சுக்கிலச் சுரப்பு அவரவரின் சரீர திடகாத்திரத்திற்கும், சாப்பிடும் ஆகாரத்திற்கும், மற்ற ஸ்திதிக்குந் தக்கது அதிகமாக அல்லது குறைவாக இருக்கும். சிலருக்கு இருபத்துநாலு மணி நேரத்தில் ஒரு அவுன்ஸ் சுரக்கும். மற்றவர்களுக்கு ஒரு மாதத்தில் அத்தளவு சுரக்கும். அத்தமாதிரியாய் ஒருவனுக்கு ஒரு சமயம் ஒரேகாளில் ஒரு அவுன்ஸ் சுரந்தாலும், மற்றச் சமயங்களில் அவன் ஸ்திதிக்குத் தக்கது ஒரு மாதத்தில் அவ்வளவு சுரப்பது கஷ்டம்.

சுக்கிலாசயத்தில் சுக்கிலம் நிறைந்தவுடன் அது வெளியாகும் வழி தேடுவது இயற்கைப் பிரமாணம். விவாகமாகாத சிலருக்கு இரவில் தூங்கும்போது சொப்பனங்கண்டு சுக்கிலம் வெளியாவதுண்டு. அப்படி வெளிபாகாதவர்களுக்கு சுகுகிலாசயத்தின் சுவரிலுள்ள இரத்தத்தாரைகளின் மூலமாய் இரத்தத்தோடு கலந்து சரீரத்துக்குத் தாஷ்டீகத்தையும் பளபளப்பையும் கொடுப்பதுடன், நாம்புகளுக்கு உறுதியையும் வலிமையையு முண்டாக்கும். அப்படிப்பட்ட மனுஷர் உலகத்தில் அபூர்வம்.

இருபது வயதுக்குப்பின் ஆரோகமாய் இராவொழுக்காகவே வெளியாகிவிடும். தேகத்தைச் சரியாய்க் கட்டுப்படுத்தித் தேகப்

பியாசஞ் செய்து வருவதுடன், மனதையும் சத்விஷயங்களில் செலுத்துவோருக்கு சமயாசமயங்களில் இரவொழுக்குண்டான போதிலும் அதனல் பலக்குறைவும் ஆயாசமுண்டாகாது. ஆனல் தன்னினத்தானழிக்கும் செய்கையையுடையவன் அதை நிறுத்தப் பிரயாசப்படும்பொழுது இரவொழுக்கு அடிக்கடி உண்டாகி, அதனல் தேகபலங்குன்றி, ஞாபகசக்தி குறைந்து, அசதி, மயக்கம், அஜீரணம் முதலியவைகளுண்டாகி, முகம் கறுத்து, கண் வெளுத்து, குழிவிழுந்து, பார்வை மங்கிப்போய், வெட்கி நடைப் பிணமாய்த் திரிவான்.

ஒருதடவை வெளிப்பறின இந்திரியம் எப்பொழுதும் வெளியேறுவதிலேயே நோக்கமாயிருக்கும். ஆரம்பத்திலேயே அதை ஜாக்ரதையாயிருந்து, சிற்றின்ப சிந்தனைகளை முற்றிலும்வெறுத்து சுத்த ஆகாயமும் மலசான சாப்பாடும் உட்கொண்டு, தமது சரீரத்தைச் சீர்திருத்திக்கொள்ளப் பிரயாசப்படவேண்டும். தவறினல் பின்பு எவ்வித ஔஷதத்தினலும் சரிடைவது கஷ்டம். இவர்களுக்கு ஆசனஸ்நாகத்தினல் அதிகப் பிரயோஜனமுண்டு. வயது மிகுதல், மலஜலப் பைதியம், சுக்பரோகம், பாரிசவாய்வு, காக்கைவலி, நபுஞ்சகத்தன்மை முதலிய பல ரோக்கங்கள் பீடிக்கும்.

சிகிச்சை.

1. நித்திரைக்குப் போகுமுன் மலஜலங் கழித்துக்கொள்ள வேண்டும். இரவிலும் காமகளர்ச்சி தோன்றினல், உடனே எழுந்திருந்து நீர்பெய்துவிட்டுக் குளிர்ந்த ஜலத்தினல் ஜனனேந்திரியங்களைக் கழுவவேண்டும்.

2. படுத்திருக்கும்பொழுது "இன்றைக்கு நான் கெட்ட சொர்ப்பனங் காணமாட்டேன். இந்திரியம் ஸ்கலிதமாகாது. என் சரீரம் பலமாகிவிட்டது." என்று தன் மனதிலேயே நூறுதடவை சொல்லிக் கொண்டு உறுதியான தீர்மானத்தோடு படுத்திருக்க வேண்டும். விழித்திருக்கும் பொழுது நம்மனதில் எதைத் தீர்மானித்திருக்கிறோமோ அதுவே ராகசுகத்தில நடந்தேறும்.

3. படுத்திருக்கும் மெத்தை அதிகக் கனமியாயிருக்கக் கூடாது. எவ்வளவு மெல்லியதோ அவ்வளவும் நன்று. கம்பளிப் போர்வையால் மூடுவதும் நன்றன்று.

4. மல்லாந்து படுப்பதும் நன்றன்று. எனெனில் மூள்ளந் தண்டை வாதிருவிச் செல்லும் நாம்புகளுக்குப் படுக்கையின் உஷ்

ணம் தாவிக் காமங்கிளர்ச்சியையுண்டாக்கும். மேலும் ஜலாசயத்தில் நீர்பெருகி, அதற்கும் மலக்குடலுக்கும மத்தியிலிருக்கும் சுக்கிலாசயத்தை நெருக்குவதால் கிளர்ச்சியுண்டாகும். ஆதலால் ஒரு பக்கமாய்ச் சாய்ந்து சரிந்து படுக்கவேண்டும். அப்படி வழக்கமில்லாதவர்கள் தலையிலை ஒரு சிறு பந்தாகச்செய்து, அதை ஒரு நூலில்கட்டி, பந்து முதுகுப் பக்க மிருக்கத்தக்கதாக வைத்து அந்த நூலை இடுபபில் கட்டிக்கொண்டால் மல்லாந்து படுக்கும் வழக்கம் நின்றுபோகும்.

5. பிரதினமும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்து, ஜனனேந்திரியங்களையும் குளிர்ந்த ஜலத்தில் கழுவவேண்டும்.

6. ஔஷதங்கள். மிதமிஞ்சிய சயம்போகத்திலும், தன்னைத் தானழிக்கும் அக்கிரமக் கிரித்தியங்களினாலும் முண்டாகும் இந்திரிய ஸ்கலிதத்திற்கு ஈஸ்தன்சிறப (Easton's Syrup.) அல்லது பாஸ்பிரஸ் பில்ஸ், (Phosphorus Pills) எனபவைகளில் ஒவ்வொரு மாத்திரை ஒருவேளைக்கு மூன்றுவேளை சாப்பிட்டுவர சுகமாகும்.

வயிற்றில் கிருமி பற்றியதால் உண்டாகும் இந்திரிய ஸ்கலிதத்திற்கு சன்ரோனயின், (Santonine.) சாப்பிட்டுக கிருமிகளை நீக்கச் சுகமாகும். ஆக்சைட் ஆப் ஓர்ப்மென்ற் (Oxide of Orpiment.) றில் நோதத்துக்கு ஒரு கிரேயின் வீதம் இருவேளை சாப்பிட்டுவர இராவொழுக்கு, பகலொழுக்குகள் நின்ற வீரிய விர்த்தியுண்டாகும். தனனைதானழிக்கும பசய்கையை நெடுங்காலமாய் அப்பியாசித்து வருவதால் நரம்புகள் குளிர்ந்து ஜனனேந்திரியம் மடைந்து, ஆண்குறி சிறுதளவுபோய வீரிய வாதத்துக்குறைவாயிருக்குமாயின் நமமுடைய சிங்க வீரிய மாத்திரையால் தபபாமல சுகமடையலாம்.

இதில் குறிப்பிட்டிருக்கும் ஔஷதங்களை எந்த இங்லீஷ் ஔஷத சாலையிலும் வாங்கலாம். தவறினால் இந்நூலாசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்திரிய ஸ்கலிதத்தை நிறுத்தும்பொருட்டு மருந்தொன்று தயாரித்தனுப்பும்படி அநேகர் கேட்டுகொண்டதின்பால் ஸ்கலித நிவாரணியைத் தயாரித்து தென்னாஞ்சியிலுள்ள சாமிநாவல் வைத்தியசாலையில் ரூ. 1—8—0க்கு விறபன்ன செய்துவருகின்றோம்.

சாப்பிடும் விதம்:—காலை, மாலை, போஜனமானபின் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் 12 நாள சாபபிடுவர இந்திரியஸ்கலிதம நாமப்படுமம். அதன்பின ஒருவாரம மருந்தை நிறுத்திவிட்டுப்பின்பு சிங்கவீரிய மாத்திரையை மூன்றுவேளையும போஜனத்திறகு மேல ஒன்று அல்லது 2 மாத்திரை வீதம சாப்பிட்டுவர வேண்டியது. சிங்கவீரிய மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3.

பிரமேகம். (Gonorrhœa.)

இதுவரையில் ஒருவன் தானேகவே தனக்குண்டாக்கிக்கொள்ளும் ரோகங்கள், அவற்றின பரிகாரம் முதலியவற்றைப்பற்றிக் கவனித்தோம். இனிமேல் மற்றவர்களோடு சம்பந்தப்படுவதால் உண்டாகும் நோய்களைப்பற்றிப் பேசுவோம்.

கூசாமல் சாவான பாவத்தைத் துணிந்து கட்டிக்கொள்ளுபவனே! பாவமே இன்பநிலையென்று எண்ணி, அதையடுத்துச் சூழ்ந்து தொடரும் பரிவாரங்களாகிய தீங்குகளுக்கெல்லாம் உள்ளாக உடன்படுகின்ற நிர்ப்பாக்கியனே! நீ உன்மேல் சுமத்திக் கொள்ளும் எடுபடாப் பாரச் சுமைக்கு உன் பலம்பற்றுமோ, பற்றாதாவென்று முந்திப் பரிசோதித்துப்பார். இல்லாவிடில் நசுங்கிப்போவாய். சாலமோன் ராஜா சொல்வதைச் சற்று கவனி.

நீதிமொழிகள், 5-3-14. "பரஸ்திரீயின் உதடுகள் தேன்கூடு போல் ஒழுகும்; அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும். அவள் செயலைகயின் முடிவோ எட்டியைப்போலக் கசப்பும், இருபுறமும் கருக்குள்ள படயமைப்போல் கூர்மையுமாயிருக்கும். அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும்; அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்பிடிக்கும். நீ ஜீவமார்க்கத்தைச் சிந்தித்துக் கொள்ளாதபடிக்கு அவளுடைய நடைகள் மாறி மாறி விகாரப்படும்; அவைகளை அறிவதுமுடியாது. ஆதலால் பிள்ளைகளே இப்பொழுது எனக்குச் செவிகொடுங்கள்; என் வாயின் வசனங்களைவிட்டு நீங்காதிருங்கள். உன் வழியை அவளுக்குத் தூரப்படுத்து; அவளுடைய வீட்டின் வாசலுக்கிட்டிச்சேராதே. சேர்ந்தால் உன் மேன்மையை அந்நியர்களுக்கும, உன் ஆயுள் காலத்தை க்ரூரருக்கும் கொடுத்துவிடுவாய். அந்நியர் உன் செல்வத்தினால் திருப்தியடைவார்கள்; உன் பிரயாசத்தின் பலன் புறதேசியாருடைய வீட்டில் சேரும். முடிவிலே உன் மாம்சமும் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து, ஐயோ! போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என்மனம் அலட்சியம் பண்ணினதே! என்போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம பண்ணினவர்களுக்கு என செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும, சங்கத்துக்குள்ளும் கொஞ்சங் குறைய எல்லாத் தீமைக்கு முள்ளானேனே! என்று முறையிடுவாய்."

துன்மார்க்க ஸ்திரீகளுடன் சம்போகஞ் செய்வதால் அவர்களிடத்திலுள்ள விஷசீர் சரீரத்தில் தாக்கி, பிரமேகம் (Gonor-

rhœa.) கொறுக்கு (Syphilis.) முதலிய மேகரோகங்களுண்டாகும். பிரமேக ரோகமானது வெள்ளை, வெட்டை, சிற்மேகம், தந்திமேகம், பிரமியம், மேககாங்கை, மேகச்சூடு எனப் பலவகைப்படும்.

ஆண்களுக்கு நீர்த்தாரையிலும், பெண்களுக்கு மர்மஸ்தானத்திலும் மிருந்து வெள்ளைநிறமான நீர் வடிவதற்கு வெள்ளை யென்று பெயர். (1) தன்மார்க்க ஸ்திரீயோடு சேர்ந்த நாள்முதல் எட்டாவது நாள்வரை எந்தநாளிலாவது வெள்ளைகாண ஆரம்பிக்கும். சிலருக்கு இரண்டொரு வாரங்களுக்குப் பின்பு காண்பதுண்டு. இந்த விவகாரிணல் நீர்த்தாரம் புண்ணாகிப்போவதால் ஆரம்பத்தில் நமைச்சலெடுத்து நீர்க்கடுப்புத் தோன்றும். பின்பு ஜலம் வடியும். அதை உடனே நிறுத்தாவிடில் சீழ் வடியும். (2) பின்பு மூத்திரப்பை, சுக்கிலக்குழம்பு முதலிய பாகங்களிலுண்டாகும் புண்ணிலிருந்து சீழ்வடியும். அது சிலருக்கு வெள்ளையாய், சிலருக்குப் பச்சையாய், வேறு சிலருக்கு பழுதை, சிவப்பு நிறமாய்த் தோன்றும். அக்காலத்தில் கோசமும், மூத்திரத் துவாரத்திலுள்ள சளிச்சவ்வும் வீங்கிவிடுவதால் நீர்த்தாரத்தில் எரிச்சலுண்டாகி நீர் அதிக வேதனையோடு இறங்கும். அடிக்கடி நமைச்சலுண்டாகிக் கொண்டிருப்பதால் அவ்விதரோகிகளின் கை எந்த நேரமும் ஜனனேந்திரியத்துக்கு தோதகமே போய்க் கொண்டிருக்கும். அவர்கள் வஸ்திரங்களிலும் வெள்ளையிறங்கிக் கறையாகும். இரவில் கோசம் விம்மி கோவையிடுவதால் நித்திரைக்குப் பங்கம் நேரிடும். இந்த ஸ்திரீயைத் தொட்ட கையினல் கண்ணைத் தொட்டால், கண் கெட்டுப்போகும். ஆதலால் எச்சரிக்கை. (3) "வெட்டை முற்றினற் கட்டை." என்பதுபோல், நாட் செல்லச் செல்ல வெள்ளை மூக்குச்சளிபோல் மாறிவிடும். அதற்குத் தந்திமேகமென்று பெயர். இதில் உபத்திரவக்குறிகள் அதிகமிரா. ஆனல் கவலைத்தாட்சியா யிருக்குமாகை. சிலருக்கு மூத்திரத் துவாரத்திலிருந்து இரத்தம் வடியும். அதற்கு இரத்தப் பிரமேகமென்பார்கள். முழங்கால் முதலிய மூட்டுகள் வீங்கினல் மேகப்பிடிப்பு அல்லது வாதரோகமென்றும், அரையில் கறிகட்டினல் அரையாப்பென்றுஞ் சொல்லப்படும்.

சிலருக்குச் சீழ்வடியாமல் மூத்திரம் விடும்போது மாத்திரம் எரிவுங் கடுப்பும், மூத்திரத்துவாரம் வீங்கிச் சிவந்து மிருக்கும். அதற்கு வறட்சிமேக மென்று பெயர். ஒருவனுக்கு வெள்ளை அடிக்கடி கண்டால் நீர்த்துவாரம் அடிக்கடி புண்ணாகிச் சுருங்கி விடுவதால் நீர்விடச் சக்தியற்று நீரடைப்பு காணும்.

ஸ்திரீகளுக்கு மர்மஸ்தானம், கருப்பையின் வாய், நிதம்பம் முதலிய இடங்களிலிருந்து மேகநீர் உண்டாவதால் மிகுந்த உபத்திரவமாகும். ஆனால் அவர்களுக்கு அதிக நமை உண்டாவதால் எத்தனையோ ஆயிரம் வாலிபரை இன்ப மொழிகளாலிழுத்து ஆசையை மூட்டி அவர்கள் காசைப்பறித்துக்கொண்டு அதற்குப் பதிலாய் மேகரோகத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். இத்தப்பொல்லாத விஷநீர் ஒருதடவை ஒருவனுடைய சரீரத்தில் பரவினால், அது ஆயுள்பரியந்தம் அவனைவிட்டு நீங்காமல் பதுங்கியிருந்து, மாசற்ற அவன் மனையாளிடஞ் செல்வதுமன்றி, பிள்ளைகளிடத்திலும் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் பரவும். அவன் சரீரத்திலும் பலமிருக்கிறமட்டும் பதுங்கியிருந்து, பலம் குறையுங் காலத்தில் மூலரோகம், நீர்க்கடுப்பு முதலிய பலரோகங்களாய்த் தோன்றும்.

சிகிச்சை.

மேகரோகமுள்ள ஸ்திரீயுடன் சேர்ந்தவுட்னே நீர்விடுவதனாலும், பீச்சாங்குழலால் நீர்த்தாரையில் நீரடித்துக் கழுவி விடுவதனாலும், லிங்கத்தை ஜலம்விட்டுக் கழுவுவதனாலும் பெரும்பாலும் ரோகம் அணுகாது.

1. மேக ரோகங்களுக்கெல்லாம் ஆரம்பத்தில் பலத்தைக் கழித்துக் குடலைச் சுத்திசெய்து கொள்ளவேண்டியது அவசியம். ஔஷதங்களைவிட (Fountain Syringe.) பிரயோகத்தினால் வெந்நீரை ஆசனவாயினுட் செலுத்திக் குடலைச் சுத்தஞ்செய்வது மிக நன்று.

2. பிரதினமும் இளவெந்நீரில் பத்தநிமிஷம் ஆசனஸ்நாநம் செய்யவேண்டும்.

3. வெள்ளை கண்டிருக்கும்போது ஸ்திரீகளைப் பார்ப்பதும், அவர்களை நெருங்குவதும், காமநூல்களையும் பாடல்களையும் படித்ததும் கேட்டலும் கூடாது. மேலும் காப்பி, தேயிலை, சாராயம் வாய்வு பதார்த்தங்கள், காரப்பண் பதார்த்தங்கள், மாப்பண்டங்கள், காரமான கறிவகைகள், புஷ்டியைத்தரும் போஜனம், மதி, கோழிக்கறி, மச்சம், புளி, புகையிலை முதலியவற்றை நீக்கி, காய்கறி பதார்த்தங்களோடு பால் சேர்த்துச் சாப்பிடுவது நன்று. ஆகாரத்தைச் சுருக்கி எளிதில் ஜீரணிக்கத்தக்க வண்ணங்களையே சாப்பிடவேண்டும். கஞ்சியான ஆகாரம் மிக நன்று.

4. காணும்போது இரவில் ஆண்குறிக்கு எழுச்சியுண்டாகிக் கூடாத வேதனையுண்டானால், எண்ணெயில் அல்லது குளிர்ந்த ஜலத்தில் நனைத்துப் பிழிந்த துணியைச் சுற்றி வைக்கலாம். நீர்த்துவாரத்தில் எரிச்சலுண்டாமுல் வினக்கெண்ணெய் தடவலாம்.

5. நீரொரிச்சல் தணியும்பொருட்டு சோடாவாட்டர், பார்லியரிசிக் கஞ்சி, சப்ஜா, வெண்டை, துளசி, எலுமிச்சை முதலிய பழவகைகளின் சாறையிலொன்றை வேறவைக்க ஜலம், வெடியுப்பு சேர்த்த கஞ்சித் தண்ணீர், யானைநெருஞ்சில் வேறவைக்க ஜலம், முதலியகொழகொழப்புள்ள ஜலங்களை (Mucilaginous drinks.) அடிக்கடி குடித்துக்கொண்டிருக்க வேண்டும். இராத்திரியில் வேதனை அதிகமாயிருந்தால் ஆண்குறியை அபினெண்ணெயில் தோய்த்து உபர்த்திக் கட்டிக்கொள்ளலாம். மிளகுதூளில் 10 குன்றுமணியெடை சாப்பாட்டில் கலந்து அல்லது தனிதாகச் சாப்பிடுவது உத்தமம்.

6. ஆரம்பத்தில் தண்ணீர்விட்டான் சிறுகுரு, நிலப்பனைக் கிழங்கு, துளசிவேர், அரிசிவேர், யானைநெருஞ்சி, சீரகம் இவைகளை, தனித்தனியும் சேர்த்தாதலும், கஷாயமிட்டுச் சாப்பிட முத்திராச்சுருக்கு நிற்கும்.

7. ஆரம்பத்திலேயே சில்வர் நைற்றிரேட் (Silver Nitrate.) அல்லது சிங்குளோரைடு (Zinc Chloride) இவைகளொன்றில் ஒரு குன்றுமணியெடை யெடுத்து காலு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து வைத்துக்கொண்டு இடதுகையால் ஆண்குறியைப் பிடித்துக் கொண்டு, பீச்சாங்குழலால் அந்த ஔஷதத்தை நீர்த்தாரையில் செலுத்திச் சற்றுப் பொறுத்து வெளிடக்கவேண்டும். நமது ஆபீசில் தயாரித்து விற்பனையாகும் பிரமேக பிஸ்காரி (Injection for Gonorrohea) பில்லைகளி லொன்றை ஆறுரூபாய் ஜலத்தில் கரைத்து பிஸ்காரி குழாயால் நீர்த்தாரையிலுட் செலுத்த நீர்த்தாரையிலுள்ள புண் ஆறி பிரமேக நோய் சுகமாகும்.

20 பில்லைகளுக்கு அணை 8.

பிஸ்காரி குழாய் (Syringe) புருஷருக்கு விலை அணை 8.

ஸ்திரீகளுக்கு விலை அணை 12.

விபரம்

வியாதியின் ஆரம்பத்திலும், நெடுநாள் சென்றபிறகுமேயன்றி நடுவில் ஆண்குறி வேதனையெடுக்கிற காலத்தில் பீச்சாங்குழல் பிரயோகம் செய்தால் நீரடைப்பு நோயுண்டாகும்.

8. ஆரம்பத்தில் சுகமாகாமல் ஆண்குறி வீங்கி, அதிகவேதனையைக் கொடுக்குமாயின், மூன்றுமணி நேரத்துக் கொருதடவை (Aconite) அக்கோனையிற அல்லது கன்ஞரிஸ் (Cantharis.) என்ற அஷ்டிமம் சாப்பிட்டுவர வீக்கம் நீங்கிச் சுகமாகும்.

9. இதற்குள் சுகமாகாமல். வியாதி நீடித்து மூன்றும் பருவமாயிய தந்திமேகஸ்திதியில் வந்துவிடில் சந்தனத்தைலம் (Sandal oil.) (Copaiba) முதலியவற்றில் 5-முதல் 8-துளியை ஓயினில் கலந்து ஒருநாளைக்கு மூன்றுதடவை சாப்பிட்டுவரத் தந்திமேகம் முற்றிலும் நீங்கிப்போகும்.

இவ்வௌஷதங்களை ஆண்குறி வீங்கியிருக்கிற காலத்தில் சாப்பிட்டால் வியாதி சுகமாஞலும், பிற்பாடு அசையாப்பு, வாதம் முதலிய ரோகத்தை உண்டாக்கும்.

10 மூன்றுவது பருவத்திலும் சுகமாசாமல் நாட்பட்ட வெட்டை (Gleet.) யாகிவிட்டால் (Zinc Sulphur.) ஒரு கிரேயினளவு அல்லது நமது பிங்காரி பில்லைகளிலொன்றை ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து, பீச்சாங்குழலால் ஈர்த்தாரையினுள் செலுத்தி, கைவிரலால் அடைத்து வைதத்துக்கொண்டிருந்து பின்பு வெளியாக்கச் சுகமாகும். உளறுக்கு (Nux Vomica) அல்லது கெந்தகம் (Sulphur.) சாப்பிட்டு வரவேண்டும்.

11. நெடுநாள் பட்ட வெட்டை நோயினால், வெளிக்கு அதிகக் கஷ்டம் தோன்றாது. ஆதலால் அநேகர் அஜாக்ரதையாய் இருப்பதுண்டு. ஆனால் "வெட்டை முற்றினால் கட்டைதான்." என்பதுபோல, இந்த நோய்பின்னுக்கு நீரடைப்பு, பேடித்தன்மை முதலியவைகளைக் கொண்டுவரும். ஆதலால் வெகு ஜாக்ரதையுடன் தேர்ந்த வைத்தியர்களிடம் சொல்லி அவிழ்தம் சாப்பிடுதல் அவசியம்.

நமது நண்பர் பலரின் வேண்டுகோளின் பிரகாரம் வெள்ளை, வெட்டை, தந்திமேகம் முதலிய தூர்நீர் சம்பந்தமான நோய்களை ஆச்சரியமான விதமாய் சுகமாக்கக்கூடிய சில ஔஷதங்களைத் தயாரித்து நமது சாமிவேல் வைத்தியசாலையில் விற்பனையாகி வருகிறோம். அவற்றின் விபரமாவது:—

1. பிரமேகதடை:—(Gonorrhœa Preventive.) பால்நீருடன் சேர்வதற்குமுன் இந்த வெண்ணெயை ஆண்குறியிலும், மலரிலும் தடவிக்கொள்ள வேண்டும். புணர்ச்சிக்குப் பின்பும் ஆண்குறியில காண்டில் புளுயிட் (Condy's Fluid.) விட்டுக் கழுவி

நீர்த்துவாரத்தைப் பிச்சாங்குழலால் சுத்திசெய்துவிட்டால் ரோகம் பெரும்பாலும் அடையாது. பிரமேகத்தைக் காண்டிஸ் புருயிட் செய்வதற்கு வேண்டிய பொட்டாஷ் ஆல் பொட்டாஸ் (Permagnate of Potash.) இவைகளை உபயோகிக்க வேண்டிய விதம் முதலியவை அடங்கிய டப்பா 1-க்கு ரூ 2.

பிரமேக நிவாரணி:—(Gonorrhœa Mixture.) வெள்ளை, கண்ட சில தினங்களுக்குள் இதை உபயோகித்தால் அண்டிவேளை மருந்திலேயே சௌக்யம பிறக்கும். ரைகண்டது. விலை ரூ 3.

பிரமேக நிவாரண குளிகை:— Gonorex.) இதுவும் தாதீர் சம்பந்தமான நோய்களை ஆச்சரியமான விதமாய் சொஸ்தமாக்கக் கூடியது. காட்டப்பட்ட பிரமேகத்துக்கும் இது நல்ல ஔஷதம். விலை ரூ 2—8—0.

பிரமேக பிஸ்காரி பில்லை:—(Injection for Gonorrhœa.) தந்திமேகம் அல்லது காட்சென்ற பிரமேகத்துக்கும் ஸ்திரீகளுக்குண்டாகும் வெண்துவாலை முதலிய ரோகங்களுக்கும் இந்த பில்லைகளி லொன்றை ஆழாக்கு ஜலத்தில் கரைத்து பிஸ்காரி குழாயால் ஒருநாளைக்கு ஒருதடவை நீர்த்தாரையிலுள் செலுத்த நீர்தாரையிலுள்ள புண் ஆறி சுகமாகும். நீர் பிச்சும்போது மூத்திரப்பையிலிறங்காமல் பீஜத்திற்கடியிலிருக்கிற கண்டை அழுத்தி பிடித்துக் கொள்ளவேண்டியது. அதில் நீர் இறங்கினால் எரிப்பாங்கொண்டு வேதனையுண்டாகும். தந்திமேகம் சிகிட்சைசெய்குட்படுவது மிகக் கஷ்டமே. ஆதலால் மருந்தை வெருநாள் உபயோகித்துவரவேண்டும்.

மது, மாமிசம், மச்சம், புளி, புகையிலை, போகம் முதலியவற்றை நீக்கி பிரமேக நிவாரண குளிகையும் உட்கொண்டு வருவதால் ரோகம் சுகுணத்திற்கு வரும்.

பாஸ்திரீகளோடு வியாபாரம் செய்தபோகமெல்லாவற்றற்கும் கமது சிங்கவீரிய மாத்திரையை உட்கொண்டு சுத்தமள்ள போஜனம் அருந்தி சமுத்திரக் காற்றில் உலாவி வந்தால சௌக்யம் பிறக்கும்.

20 பில்லைகளுக்கு விலை அணை 8.
பிஸ்காரி குழாய் (புருஷருக்கு) ,, 8.
ஷை (ஸ்திரீகளுக்கு) ,, 12.

எச்சரிப்பு:—பிரமேகவெள்ளை, வெட்டை நோய்களில் உபத்திரவப்படுகிறவர்கள் அவ்விதவிஷநீரைத் தொட்ட கையை உடனே சுத்திசெய்யவேண்டும். ஏனெனில் அந்தக் கையால் கண்களைத் தொட்டால், அந்த விஷநீர் கண்களில் பரவி, கண் வீக்கமுண்டாகிக் கண்ணைக் கெடுத்துவிடும்.

அரைபாப்பு.

அரையில் சாதாரண நாய்க் கட்டும் நெறிக்கும் தண்மார்க்கத் திலும் உண்டாகும் அரையாப்புக்கும் வித்தியாசம் யாதெனில்:— அரையின் மடிப்புக்குக் கீழ் இரண்டு மூன்று மாமிசக் குமிழ்கள் விங்கி நோவெடுப்பதால் அதற்கு நெறி என்ற பெயர். அரை யாப்பு அரையின் மடிப்புக்குமேல் ஓரோநெறியாய் மாத்திரம் பற்றி யிருக்கும்.

அரையாப்புக்கு ஆரம்பத்தில் அசையாமலிருக்கச் செய்து பேதிக்குக் கொடுத்துப் பின்பு கட்டி கரைந்து உள்ளடங்கும்படி யான முயற்சி செய்யவேண்டியது. அதற்கு வசப்படாவிட்டால் பின் குறிப்பிட்டிருக்கும் ஔஷதங்களி லொன்றை வைத்துக் கட்டி, கட்டியைப் பழுக்க வைத்துக் கீறி, சீழை வெளிப்படுத்தி, மேகரணைக் களிம்பு போட்டாற்றி வேண்டியது.

பேதி மருந்துக்குப் பதிலாய் (Fountain Syringe.) என்னும் பீச்சாங்குழலால் வெதுவெதுப்பான ஆனைத்துட் செலுத்திக் குடலைச்சுத்தஞ் செய்யவேண்டும். பிரதிதினமும் காலையும் மாலையும் இள வெந்நீரில் ஆனைஸ்நானம் செய்துவர வேண்டும். ஆரம்பத்தில் அதி கமாய் அசைவாடித ஸ்திரியாமல் படுக்கையிலேலே யிருக்க, மது, மாமிசம், மச்சம் முதலிபவற்றைநீக்கி, மிலசான ஆகாரமசாப்பிட்டு வரக் கட்டி கரைந்து உள்ளடங்கிப்போகும்.

கட்டிகரைக்கிற பற்றுகள்.

1. கட்டியின்மேல் நீல ஆயின்ற்மென்ற் (Blue Ointment.) தடவ வற்றாய்.

2. சேங்கொட்டையில் சுண்ணாம்பு தடவி, உலரவிட்டு, வினக்கல் காட்டி, அதிலிருந்து வடியும் தயிலத்தை எடுத்துக்கட் டியின்மேல் பூசவும். உலர்ந்தால பிசுபிசுத்துகொள்ளும்.

3. கோழிமுட்டையின் வெள்ளைக்கருவை நன்றுப்க் கடை ந்து, அதனோடு சுண்ணாம்பு, அபினபுப் புகையர், பனைவெல்லம் இவைகளைக் கலந்து உடனே போடவேண்டும். ஆரம்பத்திலேயே போட்டால் ஓரோ நேரத்தில் வற்றிப்போகும்.

4. கால்பலம் நவச்சாரத்தை அரைப்படி ஜலத்தில்கரைத்து அதில் தணியை நனைத்துக் கட்டியின்மேல் போட்டு நனைத்துக் கொண்டேவாக் கட்டிகரையும்.

5. தேன், சுண்ணாம்பு, அரிசிமா இவை கலந்துபோடக் கட்டி கரையும்.

6. வெந்நீர் முதலிய ஒற்றடங்கொடுக்க வேதனை தணியும். அதன்பின் நம்மிடத்திலிருக்கும் அரையாப்புக் களிம்பை கட்டியின்மேல தடவி துணியை மடித்தாவது, சப்பிஸ்லே அலுமினியப் பில்லையை வைத்தாவது இறுகக்கட்டி வைக்கக் கரைந்துவிடும். ஆரம்பத்தில நமது சைவசமிருக்கும் சர்வரோக சங்காரி மணமெனய் கொடுத்து மூன்றுநாள் உப்பில்லாப பத்தியங் காக்க கட்டி கரையும்.

7 இலுப்பைக்கட்டியோடு வெள்ளுருள்ளி சீரகத்துப் பூசலாம்.

8. பச்சைக்கொடுவேலி வேர்ப்பட்டை (நித்தியகல்யாணி வேர்) யையும் சுண்ணாம்பையும் சமனிடை அரைத்துப் பூச வற்றும். எரிந்தால் விளக்கெண்ணெய் தடவவும்.

9. கோவையிலையையாவது, நிர்பூலான் கொழுந்தையாவது, அவுரியிலையையாவது அரைத்துப் பசுவின் வெண்ணெயில் மத்தித்து விக்கத்திற் கட்ட மாறும்.

10. வெங்காயம், வெள்ளுருள்ளி, அழுக்காக்கிழங்கு இவை சமனிடை அரைத்துப்போட கட்டி கரையும்.

11. விராலியிலை, பத்திராக்கிரியிலை, புளையிலை இவை சமன் சேர்த்தரைத்துப் போட கட்டி கரையும்.

12. வெள்ளாப்பூண்டும் எருக்கன் பிஞ்சும் ஓர் நிறையாய் உமிக்காந்தலில் வதக்கப்பி அரைத்துப்போட கட்டி கரையும்.

13. பெலடோனா பிளாஸ்றர் (Belladona plaster.) நோவுள்ள இடத்தில் போட கட்டி அமுங்கவிடும. சோடி சாலிசைலற் (Sodi Salicylate.) உள்ளுக்குச் சாப்பிடவேண்டும.

14. அரையாப்புக் கட்டியின்மேல் சுத்திசெய்து அட்டையைக் கடிக்கவிட்டு உடனே எடுத்துவிடாமல் பத்திரமாயப் பார்த்து வெகுநேரம் சென்று எடுத்தால தார்நீர் வெளியேறி கட்டி கரைந்துவிடும்.

15. பழம்புளி பலம் ஒன்று, சேங்கொட்டை 10, இவைகளைப் பஞ்சுபோல் தட்டி விக்கத்தில் வைத்துக் கட்ட மாறும்.

16. வெள்ளாப்பூண்டும் வெள்ளருகும் அரைத்து விக்கத்தில் கட்ட மாறும்.

17. முடக்கொத்தான் இலை, சுண்ணாம்பு, வெல்லம் இவை களை அரைத்துப்பூச விக்கம் வற்றும்.

18. ஆதலினாலே கையத்தட்டி வைத்துக் கட்டத் தீரும்.

19. பெருங்காயத்தில் நல்ல பால்காயம் தெரிந்தெடுத்து அதை உமிழ்நீரில் உரசி வெற்றிலையில் தடவி கட்டியின்மேல் வைத்துக் கட்ட, பிளேக் கட்டிமுதல் சகலவிதமான கட்டிகளும் அமுங்கிப்போகும். (இது என் தாயாரின அனுபோகமுறை.) மேற்காட்டிய பற்றுகளில் ஒன்றைப்போட்டு நடுவு ஆபீசில் விற பனையாகும் சர்வரோக சங்காரி யெண்ணெயை உள்ளுக்குக் கொடுத்து பத்தியங் காத்திவர சகலவித கட்டிகளும் கரைந்தும்போகும்.

20. கட்டியைக் கரைப்பதற்கான இங்கிலீஷ் முறைகள்.

டிஞ்சர் ஆவ் ஐயோடின (Tincture of Iodine,) காம்பவுண்ட் ஐயோடின் ஆயின்மெண்ட், எமபிளாஸ்ட்ரம் பிராட்டாவி ஐயோடைட், எம்பிளாஸ்ட்ரம் ரிவினி (ஸ்டிகிங் பிளாஸ்டர்,) எம்பிளாஸ்ட்ரம் பிளமபி, அன்குவண்டம் பிளம்பி அசிடி, புளூ ஆயின்மெண்ட், லிதரட்டம ஐட்டார்ஜரி கம்பாவிட்டம், எம்பிளாஸ்ட்ரம் ஹைட்ரார்ஜரி முதலியவைகளை கட்டியின்மேல் போடவும்.

கட்டிபழுக்கிற மருந்துகள்.

1. சாம்பிராணியோடு கற்பூரம் சமம் சேர்த்து, அரைக்க மெழுகாகும். அதைத் தணியிற்றடவி கட்டியின்மேல் போட்டு வந்தால் கட்டி பழுத்து உடையும்.

2. ஆளிவிரைக்களி, அரிசிமாவின்களி, கோதுமைமாக்களி, புளித்த சோறு, அரைத்த எள்ளு முதலிபவற்றை அல்லது ஆமணக்கிலை, புளிச்சகீரை, சேப்பங்கழங்கு, ஊமத்தன் இலை, முள்ளுக்கீரை இவைகளிலொன்றை வதக்கிக் கட்டிக்கொண்டு வந்தால் கட்டி பழுதது உடையும்.

3. வெந்தயமும் ஆமணக்கு முத்தும் அரைத்துப் போடக் கட்டி பழுத்து உடையும.

4. குத்தியிலையும், கரியபோளமும் அரைத்துக் கட்டினால் கட்டி பழுத்து உடையும்.

5. நிராகைஷப்பழத்தைச் சாரயத்திலரைத்துப் பூசக்கட்டி கரையும் அல்லது உடையும.

6. காட்டுக்கிழங்கு, மஞ்சள், முள்ளங்கிழங்கு, பெருங்காயம் இவைகளிலொன்றை எருக்கன்பாலாலரைத்துபபோட வறறும், அல்லது பழுக்கும்.

7. சாமந்திப்பூ, செம்பையிலை இலை அரைத்துப்போடக் கட்டி கரையும் அல்லது பழுக்கும்.

8. தேள்கொடுக்குஇலை, கொச்சியிலை, கரியபோளம் இவை அரைத்துப்போட பழுக்கும்.

9. கஞ்சாயிலை, பஞ்சள், விழிதியிலை, சவுக்காரம், இவை கலந்தரைபோட கட்டி பழுக்கும்.

10. கருஞ் சீரகத்தை வெந்நீரிலரைத்துக் கட்டிவர, கட்டி பழுத்து உடையும்; பிள்ளைகளின் சிறுநீரிலரைத்துப்போட வீக்கம கட்டி கரையும்.

11. கறிஉப்பும் சவுக்காரமும் சமன் சேர்த்து காடிவிட்டரைத்துப் பற்றிட கட்டி உடையும். வீக்கம் வாடும்.

12. மஞ்சளோடு முருங்கையிலை சேர்த்தரைத்து விளக்கெண்ணெயிட்டு வதக்கி கட்டியின்மேற் போட கட்டி சிகிச்சம் பழுத்து உடையும்.

13. விளக்கெண்ணெயில் முலைப்பால்விட்டுக் குளப்பி அதில் பருத்திப்பஞ்சு தோய்த்து கட்டியின்மேல் போட்டுக்கொண்டு வந்தால் சீக்கிரம் பழுக்கும்.

14. சவுக்காரம், குண்டுமணிபருப்பு, காளித்தி வடித்த சாரசுண்ணாம்பு, மைசாகூழி, குங்கிலம் வகை 1-க்கு கால் சேர்; சோராங் கொட்டை 3 கலந்து எருக்கன்பால்விட்டு, 2 நாள் அரைத்து, உருண்டைகள் செய்து வைத்துக்கொண்டு, தேவையானபோது தண்ணீரில் தேய்த்து கட்டிமேல் தடவி அனல்காட்டவும். பிடித்துக் கொள்ளும்.

மேகாணைக் களிம்பு.

1. இரண்டுவிராகனிடை ரசகற்பூரத்தை எழுவிராகனிடை ஆட்டுக்கொழுப்பு அல்லது பன்றி நெய்யோடு சேர்த்து அரைத்துப்போடச் சகல மேகாணைமும் மாறும்.

2. தேங்காயெண்ணெயில் தென்மெழுகு சமம் சேர்த்து உருக்கி அதில் ஆறுபலம் எடுத்துக்கொண்டு அரைத்து ஒரு பலம் ரசகற்பூரமும், அரைப்பலம் சுண்ணாம்பும் சேர்த்து அரைத்துப் போடச் சகல ரணமும் ஆறும்.

3. வெள்ளைக்குங்கிலியம், தான்றிக்காய், மாச்சக்காய், கடுக்காய், காசுக்கட்டி, ரசகற்பூரம, விங்கம், மிர்தார்சிங்கி இவைகளைச் சமனிடை எடுத்து, பசுவின் வெண்ணெயிட்டு, மைப்போலரைத்து

உருட்டி, ஜலத்தில் ஒருநாள் நிதக்கவிட்டுப் பின்பு எடுத்து, அரையாப்பு, கண்டமாலை, விப்பருதி, பிளவை முதலிய எந்த ரணங்களின் மேலும் போட்டு இலவம்பஞ்சைப்போட மேகாணங்களெல்லாம் சருகுபோல் வாடிப்போகும். இதை நமது வைத்தியசாலையில் அணு 12-க்குப் பெற்றுக்கொள்ளலாம்.

4. மிர்தார்சிங்கி. கந்தகம், தத்தம், துருசு, ரசம், கற்பூரம், ரசகற்பூரம், ஏலம். கஸ்தூரி மஞ்சள், கார்போக அரிசி, நீரிடிமுத்துப் பருப்பு, காட்டுச்சீரகம் இவற்றை வகைக்கு கால்ரூபாயெடை எடுத்துத் தூள்செய்து ஒருபடி தேங்காய்ப்பாலில் விட்டுச் சிறு நெருப்பு எரித்துப் பக்குவத்தில் வடித்து வைத்துக்கொண்டு சர்வ மேக ரணங்களுக்கும் உபயோகிக்கலாம்.

5. பாங்கிச் சாம்பிராணி, மெழுகு, நல்லெண்ணெய் சமனிடை சேர்த்து சிறு தீயிட்டு உறுக்கி வடிகட்டிக்கொண்டு மேக ரணங்களுக்கு உபயோகிக்கலாம்.

மேக சஞ்சீவி.

1. சர்வரோக சங்காரி (Cure-all-oil) ஆயுர்வேதிய சாதகர்களால் பரம்பரையாக உபயோகிக்கப்பெற்ற அதிசயற்புத மகிமை பொருந்திய இந்த சர்வரோக சங்கார யெண்ணெயானது மானிட தேகத்தில் நோய்களுண்டாவதற்குக் காரணமான சகல அசுத்தங்களையும் நீக்கி இரத்தத்தைச் சுத்தி செய்வதால் சர்வ ரோகங்களையும் நிவர்த்தியாக்கும்.

இதைக் கண்டமாலை, யோனிப்புற்று, அரையாப்பு, பவுத்திரம், பாகுகிப்புண், கிரந்தி, மேகவூரல், கண்ணேசை, கண்ணப்புற்று, பிளவை, தடிப்பு, சூலை, நீரிழிவு, வெள்ளை, வெட்டை, குலவாய்வு, மற்றும் சகல வாய்வுகள், முடக்குவாதம், நடுக்குவாதம், மற்ற வாதங்களுக்கும் தொண்டைப்புண், காப்பன், கொர்ப்பப்பூச்சி, கொர்ப்பசூலை, மலடு முதலியவற்றிற்கும் உபயோகிக்கலாம்.

அளவு:—அவரவர் தேகநிடத்திற்குத் தக்கது 5-முதல் 12-துளிவரையிலும் அதிகாலையில் உள்ளங்கையில் விட்டு நக்கிவிடவும். மருந்து சாப்பிட அரோசிகந் தோன்றினால் மருந்து சாப்பிட்டவுடன் சிறிது அரிசியை வாயில் போட்டுக்கொள்ளலாம். வியாதியின் கடுமைக்குத் தக்கது 1-முதல் 7-நாள் வரை சாப்பிடலாம். மருந்து சாப்பிட்டு 1-மணி நேரத்திற்குப்பின் வெந்நீர் சாப்பிட ரண்டுரூப்பு பேதியாகும். பேதி அதிகமானால் அரிசிக்களிசியில்

சிறிது உப்புச் சேர்த்துச் சாப்பிட பேதி நின்றுவிடும். மத்தியானத்திலும் அதேமாதிரி அரிசிக்கஞ்சியும் பருப்புக் குழையலும் சாப்பிடவேண்டியது. இரவில் வெள்ளாட்டிறைச்சி, அல்லது மேற்படி சூப் சேர்த்துக்கொள்ளலாம். இப்படிமாத்திரியின் அகோரத்திற்குத் தக்கது 7-நாள்வரை சாப்பிட்டு வரலாம். பலஹீனமாகத் தோன்றினால் மருந்தை இரண்டு நாளைக்கு நிறுத்தி அதன்பின் சாப்பிடலாம.

பத்தியம்:—மருந்து சாப்பிடும் காலத்தில் ஸ்நானம் செய்யலாகாது. கல்லெண்ணெய், கடுகு, புளி, புளகயிலை, புலால், போகம், காப்பன்பதார்த்தம் நீக்கவும். பச்சரிசியால், வெள்ளெண்ணெய், அரிசிக்கஞ்சி, துவரம்பருப்பு, சிறுபயறு, தானமாய் உபயோகிக்கலாம்.

மருந்து சாப்பிட்டு முடிந்த மறுநாள் பகலின் நெய்யை அல்லது எருமை ஸ்நாநத்தைலத்தைத் தேகமத்தில் வெந்நீர்ஸ்நாநம் செய்யவேண்டியது.—விலை ரூ. 1.

2. (Syrup Ferri Iodide.) சிரப் பெரி ஐயோடிட் இரண்டு தோலம், பொட்டாஸ்ஸ் ஐயோடிட் (Potash Iodide.) முப்பத்திரண்டு கிரெய்ன், டிக்காக்ஷன் ஆல் சார்சாபரில்லா காட்டு ஆறௌன்ஸ் இவைகளைச் சேர்த்து வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் இரு முறை சாப்பிட்டுவர சகல மேஹரணங்களும் சமனாகும்.

3. பூரக்கட்டியை வெளிப்பருத்திச் சாற்றில் முழுதடவை சுருட்டெடுத்து எலுமிச்சங்கண்டு, ஆமணக்கெண்ணெயில் உரசி மூன்று நாள் காலை கொடுத்துவர அகற்றிவிடும். வெள்ளை, வெட்டை முதலிய சகலவித மேகசம்பந்தங்களும் தீரும். இம்மருந்தை வெள்ளை கண்ட ஆரம்பத்தில் கொடுத்தால் மிகுந்த பயன்படும.

4. நாம் பிரசுரித்திருக்கும் அரிய ஔஷத முறைகள் 1-ம் பாகம் இரண்டாம் பக்கத்தில் விசாலப்படுத்தியிருக்கும் முறைகளையும் கையாடலாம்.

பாங்கிரோகம். (SYPHILIS.)

மேகாணமானது கொறுக்கு, மேகப்புண், பாங்கிப்புண் என பலவகைப்படும். இக்கொடிய ரோகம் இருநூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவில் இல்லை. ஆதலால் சாஸ்திரிகள் நூல்களில் இதைப் பற்றிய பேச்சுகளோ கிடையாது. பாங்கிக்காரர்களால் இந்

நோய் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டதால் இதற்குப் பரங்கிப்புண் என்று பெயர். பிரமேக வெள்ளைக்கும் பரங்கி ரோகத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. பரங்கி ரோகமுள்ளவர்களோடு சகவாசம் பண்ணி, அவர்கள் ரணங்களிலுள்ள விஷநீர், சரீரத்திலுள்ள காயங்கள் மூலமாய் இரத்தத்தோடு கலப்பதனாலும், பெற்றோரிடத்திலிருந்தும், பரங்கிரோகம் பரவுகிறது.

முதல் பருவப் பரங்கி ரோகம் (Primary Syphilis.) இந்த ரணம் ரோகஸ்திரீயைச் சேரும்போது அவளுடைய மர்மஸ்தானத்திலிருக்கிற மேகரண விஷநீர் கோசத்தின்மேல் எவ்விடத்தில் படுகின்றதோ அந்த ஸ்தானத்தில் பிறக்கும். சையோகித்த 3-நாள் முதல் 20-நாளைக்குள் மலரின் மேலாவது, மலருக்கடியில் இருக்கும் ஜவ்வு மடிப்பிலாவது மலரை மூடிக்கொண்டிருக்கும் தோலுக்குள்ளாவது காண்பது வழக்கம். அடிக்கடி மேகரணங் கண்டு மேகநீரில் ஊறி இருக்கிற சரீரத்தில் மறுபடியும் கண்டால் அவ்வளவு கோஷ்டமாய் இருக்காது. ஸ்திரீகளுக்கு மேகரணம் அதிக உபத்திரவத்தை உண்டாக்காது.

மர்ம ஸ்தானத்தினுள் வெகுதூரத்தில் இருக்குமாயின் வெளிக்குத் தோன்றாது. ஸ்திரீயும் சுகதேகிபோல்தான் தோற்றுவாள். இவளின் கண்ணிக்குள் அகப்பட்டு மடிகிறவர்களுக்கு ஐயோ! மேக விஷநீரைப்போலச் சரீரத்தைக் கெடுக்கக்கூடியதும், தாதுக்கனையும் உளரூறுப்புக்கனையும் உடைக்கக்கூடியதுமான கொடிய ரோகம் உலகத்தில் வேறில்லை. இந்த நீர் சரீரத்தில் பரவினவே மேகச்சொரி, மேகச்சிரங்கு, மேகவாரல், மேகப்படை, மேகச்சூலை, கிரந்தி, அஸ்திரோகம், நேத்திரரோகம், சிரோரோகம், கண்டமாலை, விப்புருதி, ஆண்மலடு, பெண்மலடு, கருவழிவு, நீரடைப்பு, நீரிழிவு, கல்லடைப்பு, தசையடைப்பு, குஷ்டம் முதலிய மானிட சரீரத்திற்கு வரக்கூடிய சகலவிதமான ரோகங்களும் உண்டாகும். பரங்கி ரோகமுடைய புருஷனுடைய வியாதி பெண்சாதிக்குத் தொடர்ந்திருக்கும்போது அவளுக்குக் கருத்தரித்தால் அக்கருவிற்கும் விஷநீர் பரவி, காலந்துமாதங்களில பிண்டம் வயிற்றினில் மரித்து வெளிப்படுமே. இவ்வியாதியுடைய ஸ்திரீகளுக்குக் கருத்தரிக்காது. தரித்தாலும் கருவழிந்துபோம். குழந்தை பிறந்தாலும் சுகதேகமுடையதாயிருக்காது. பிறந்த ஒருமாதத்தின் பிறகாவது மேகநீர் தோன்றி ஆசனம் மர்மஸ்தானம் ஆகிய இடங்களில் தாம்பிர நிறமான ரணங்களுடன் வாயில் தத்திரோகமுங் காணும். அவ்விதக் குழந்தைக்குப் பால்கொடுக்கிற தாதிக்கும் கூட அந்த வியாதி தொடர்ந்து மூலக்காம்பில் ரணங்காணும். பின்பு தேகமெங்கும் மேகச்சிரங்கும், படைகளும் எழும்பும்.

வேசிகள் வீட்டை நாடித்தேடி அந்தராத்தில் செல்லும் ஆடவர்க்கு ஆண்டவரால் அளிக்கப்பட்ட அறியாத முத்திரை பாங்கி ரோகங்களாம். வேசிகளின் வீட்டுக்குப்போய் விஷநீர் வாங்கிக்கொள்ளாத மனுஷன், புலி, காடி, சிங்கம்முதலிய துஷ்ட மிருகங்களும், சர்ப்பங்களின் புசார்களும் நிறைந்த காட்டினுள் சென்று உயிரோடு மீளவும் வந்தவனுக்குச் சமானமாவான். ஒருதரம் இவ்விஷநீர் சரீரத்தினுட்சென்றால் அது அவன் உயிருள்ள பரியந்தம் அவனைவிட்டு நீங்காமல் பற்பல காலங்களில் பற்பலவித மாய்த் தோணறிக்கொண்டே வரும்.

மேகரணங்கள் நான்கு வகைப்படும். ஒருவகை ரணத்தைக் கடியில் கட்டியாய் கல்போ லிருக்கும். மறெருவகை ரணம் மிருதுவாய் இருக்கும். இன்னெருவகை ரணம் வெகு சீக்கிரத்தில் பாகிவிடும். நான்காவது வகை ரணம் அழுகித் துர்மாம்சம் உண்டாகும். இந்த ரோகமுள்ளவன் முற்றிலும் சுகமாகுமட்டும் விவாகஞ் செய்யவே கூடாது. செய்தால் அவனுங்கெட்டு அவனுக்குக் கழுத்து கொடுத்தவளும் நாசமாகி அவனுக்குப்பிறக்கும் பிள்ளையும் அழிந்துபோகும்.

சிகிச்சை. 1. ஒருநாள்விட் டொருநாள் நீராவி ஸ்நானம் (Vapour Bath.) செய்யவேண்டும். இரவில ஏன்பது மணிக்கு முன்னமே பூசன ஸ்நானம் செய்துவிட்டுச் சீக்கிரம் படுக்கைக்குப் போகவேண்டும்.

2. மது, மாமிசம், மச்சம், காப்பி, தேயிலை, புகையிலை முதலியவற்றை நீக்கிக் காய்கரி பதார்த்தத்துடன் எளிதில் ஜீரணிக்கத் தக்க கஞ்சி சாப்பிடவேண்டும.

3. பிரதினமும் சாப்பிடுவதற்கு இருபது நிமிஷத்திற்கு முன் மூன்றுவீவினையும் ஒருகோப்பை வெந்நீர் சாப்பிடவேண்டும்.

4. காப்பிக்குப் பதிலாக உலர்ந்த தித்திபிலைபயும் ரோஜாப் பூவையும் கஷாயஞ்செய்து பாலும் சர்க்கரையும் கலந்துசாப்பிட்டு வர மேகச்சூடு தணியும்.

5. பாங்கிரோகம் கண்ட மாத்திரத்தில் (Silver Nitrate.) அல்லை (Nitric Acid.) னல் புண் உண்டாகிய இடத்தில்சுடுவதனல் புண் காய்ந்து விழுந்துவிடும். விஷநீரும் அதோடு செத்துப் போம். ஆனல் அது பரவ ஆரம்பித்துவிட்டால் உள்ளுக்கு மருந்து சாப்பிட்டுத்தான் எடுக்கவேண்டும்.

சமத்துவ ஆயிஷ் விற்பனையாகும்

சாமிரவலின் சிங்கமார்க்கா

பரங்கிரோக மாத்திரை.

(Anti-Syphilitic Pills.)

பரங்கிரோகத்திலுள் இரத்தம்கெட்டு மேகரணங்கள் உண்டாகும். சகலவித இரணங்களுக்கும் காரணமான சுத்தமில்லாமலும போனமான போகஸ்ணயில்லாமலு மிருப்பதே. இந்தப் பரங்கிரோக மாத்திரைகளைச் சாப்பிடுவதிலுல் இரத்தம சுத்தமாகி ஜீரணசக்தி அதிகரித்து, தேடல் ஏழுங்காய்ந்த தன் தொழிலை நடத்தி மலவிர்த்தியாகும். இவைகள் இரத்தத்திலுள்ள விஷங்களையும், அழுக்குகளையும் நீக்கி சம்பந்தமான சகல மேகரணங்களையும் ஆற்றும்.

சாப்பிடும் முறை:—போஜனத்திற்குப்பின் ஒரு மாத்திரை வீதம் தினம மூன்றுவேளை சாப்பிடவேண்டும்.—விலை ரூ 2—8—0.

சாமிரவலின் சிங்கமார்க்கா

பரங்கிப்புண் களிம்பு.

(The Syphilitic Sores Ointment.)

இக்களிம்பு கார்சீர் சம்பந்தத்தாலுண்டாகும் சகலவித மேகரணங்கள், நீராத பரங்கிப்புண், அழுகி காற்றமெடுக்கும் கர்மாமிசம், நெருப்புப்பட்ட காயம், அலைபாப்பு, கண்டமாலை, ராஜபிளவை முதலிய சகலவித கொடிய ரணங்களையும் வெகு சீக்கிரத்தில் சுகமாக்கும்.—விலை ரூ 1.

பரங்கி ரோகத்திற்கு உள்ளுக்குக் கொடுக்கும் மருந்துகளில் விசேஷித்தது சமேம. பாமரப் பண்டிதர்கள் இதைச் சரியாயப் பக்குவஞ் செய்யாததால் ஆயுள் பரியந்தம் அழுந்தத்தக்க சில வியாதிகளுக்கிடமாக்கி விடுகிறார்கள். ஆனல் (Homeopathic.) ஔஷதங்களில (Mercurious Sol.) னவற ஔஷதத்தைச் சாப்பிடச் சுகமுண்டு. ஆனல் காட்டப்பட்டு இரண்டாவது பருவத்திற்கு (Secondary Syphilis.)வந்துவிட்டதாலுல்(Nitric Acid, Iodium Arsenicum, Sarsaparilla,) னன்னரி முதலிய ஔஷதப் பாம்பாகளுஞ் செய்யவேண்டும. இந்த இரண்டாம் பருவம் முதல் மூன்று வருஷத்திற்குள் நிற்கும். அதற்குப் பிற்பாடு மூன்றுவது பருவமடையும் (Tertiary Syphilis.) இக்காலத்தில் இந்தப் பயங்கரமான

ரோகம் கண், காது, மூக்கு, நாக்கு, நரம்பு, நரையீரல், எலும்பு முதலிய பல அவயவங்களையுந் தாக்கும். அப்போது சரீரம் அழுகி லயாத உபத்திரவமும் மரணமுமுண்டாகும். எலும்பு முதலாய் அழுகித் தண்டு தண்டாய்விழும். கல்கேறியா (Calcaria.) கந்தகம முதலிய ஔஷதங்கள் இதற்கு உபயோகிக்கலாம். இவ்வியாதிகளில் கஷ்டப்படுவோர் தேர்ந்த ஆயுள்வேத பால்கா பண்டிதர்களிடம் தமது நொம்பலத்தையும் அதன் சரித்திரத்தையும் பூராவாகச் சொல்லி அவர்கள் கொடுக்கும ஔஷதத்தைச் சாப்பிட்டுவர வேண்டும்.

மேக வாதரோகம்.

தர்விபாபாரத்தினால் விஷநீர் சம்பந்தமாகி முழங்கால் முதலிய மூட்டுகள் வீங்குவதால் அதற்கு மேக வாதரோகம் என்று பெயர். இதில் மூட்டுகள் வீங்கி கடுமுங் காய்ச்சலுண்டாகி அசைக்கக்கூடாமலிருக்கும். கை கால் பிடிப்புண்டாகி அசைக்கக்கூடாமலிருக்கும். இதரற்கு மேகப்பிடிப்பு, முடக்குவாதம், மேகவாய்வு, சூலைக்கட்டு எனப் பல நாமமுண்டு. இந்த வியாதியில் வேதனையானது இடமிட்டு இடம் மாறி மூட்டிலிருந்து மற்றொரு மூட்டுக்கு நிமிஷத்தில் போய்ப் பின்பு பூர்வஸ்தானத்திற்கு வருவதுண்டு. மலமும் பந்தப்படும்



சாமிவேலின் சிங்கமார்க்கா

வாதசங்காரன்.



(Rheumatism Mixture.)

சிகிச்சை. இதற்கு நம்முடைய சுதேசமிருக்கும் வாதசங்காரன் என்னும் ஔஷதம் கைகண்ட முறை. இந்த எமக்குச் காண்பித்த சிநேகிதர் ஔஷதங்களின் பெயரை வெளியாக்கக் கூடாதென்று கேட்டுக்கொண்டமையால் அதை (Patent Medicine.) ஆக ரூபாய் 3 அனுப்பினவர்களுக்கு மட்டிலும் ஔஷதமாக அனுப்புவோம். தேவையானவர்கள் வாங்கிப் பரீக்ஷித்துப் பார்க்கலாம். பலரால் புகழப்பட்ட ஔஷதமிது.

மேகவாத ரோகத்தினால் மூட்டுகள் வீங்கி, கால் பிடிப்புண்டாகி அசைக்கக் கூடாமலிருக்கும். மேகப்பிடிப்பு, முடக்குவாதம், மேகவாய்வு, சூலைக்கட்டு, மலபந்தம், வேதனையானது இடம் விட்டு இடம் மாறுதல், முதலிய ரோகங்களைக் கண்டித்து இரத்த புஷ்டியையும் தாதுவிர்த்தியையும் உண்டாக்கும் சஞ்சீவி.

சாப்பிடும் விதம்:—ஒரு மேஜைச்கரண்டி யளவு மருந்தை இருமடங்கு தண்ணீரில விட்டு தினம் இரண்டுமுறை சாப்பிட வேண்டும்.

இதைச் சாப்பிடும் காலத்தில் வாதரோசத் தைலத்தை வலியுள்ள இடங்களில் தேய்த்து வருவதால் உடனே சுகங்காணும்.

எச்சரிப்பு:—மருந்து சாப்பிடுமுன் சீசாவை நன்றாய்க் குலுக்கிச் சாப்பிடவேண்டும்.

பத்தியம்: மருந்து சாப்பிடுகையில் வெந்நீர் ஸ்நானம் செய்யவேண்டும். புளி, புகையிலை, மது, மாமிசம் நீக்கி மாக்கறிவகைகள் பசுவின்பால, நெய் உபயோகித்து வருவதால் சீக்கிரம் பலனடையலாம்.

சாமிவேலின் சிங்கமார்க்கா



வாதரோசத்தைலம்.


(Rheumos Ready-Relief.)



வாதரோகிகளின் உபயோகத்திற்கென்று மிக்க விலையுயர்ந்த வஸ்துக்களால் செய்யப்பட்ட இத்தைலத்தைக் காலையிலும், மாலையிலும் உபயோகித்துவர உடனே சுகங்காணும்.


உபயோக விபரம்:—எந்த யிடத்தில் உளைச்சலும் வேதனையும் இருக்கின்றதோ அந்தயிடத்தில் நன்றாய்ச் சாபபுத்தேய்த்து வெந்நீரினால் கழுவி கமபளித்துணியை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து விட்டு ஒற்றடம் கொடுத்ததபின் னன்றாய்த் துடைத்துவிடவேண்டும். அல்லது மணலை வறுத்து ஒற்றடம் கொடுக்கவேண்டும். அதன்பின் ஓர் சுத்தமான மெலலியதுணியை தைலத்தில் நனைத்து வேதனையுளள பாகத்தில் மெதுவாய் ஐந்து நிமிஷம தேயக்கவும். பின்பு அந்த துணியை வேதனையுள்ள இடத்தில் விரித்து அதன் மேல் கமபிளித்துணியால் சுற்றிக் கட்டி வைக்கவும். மறுநாட் காலையில் தைலதத்தை மாத்திரம் மெதுவாய்த தேய்த்து கட்டி வைக்க வேண்டியது. கழுவுவது அவசியமில்லை.—விலை ரூ 2—12—0.

சாமிவேலின் சிங்கமார்க்கா



மகா சஞ்சீவித் தைலம்.

(Magnetic Balm.)



1. குடிவாதம், நடுக்குவாதம், முடக்குவாதம், தலைநோய், சிரோபாரம், மயக்கம், மலச்சிக்கல், வாய்வு, குதிகாலவலி, ஜல தோஷம், கைகால்பிடிப்பு, உளைச்சல், சுளுக்கு, வலி, கைகால் குளிர்ச்சி முதலியவைகளுக்கு வறுத்த உப்பு, மண் அல்லது தவிடு

சுடுசோம்பல் முதலியவற்றால் ஒற்றடங்கொடுத்து இந்த சுஞ்சிவித்



தலத்தை நோயுள்ள இடத்தில் நன்றாய்த் தேய்த்து கம்பளித்துணியை சுற்றி வைக்க காய்மணி நேரத்திற்குள் வியர்வை கண்டு உடனே சுகமாகும். பல்லிக்கு சிறிது பஞ்சில் தலைத்து பல்லி லுள்ள தவாரத்தினுள் செலுத்திவைக்கவேண்டி யது. தவாரில்லாவிடில் சிறிது தலத்தை வலி யுள்ள பக்கத்திலும் கன்னத்திலும் கன்னத்திலும் தடவி வேறு ஒற்றடங் கொடுத்துக் காற்றுப்படாதபடி கம்பளித் துணியால் கட்டி வைக்க வேண்டும். காதுவலிக்கும் அந்தபிரகாரம் காதின்கீழ் தலத்தைத் தேய்க்கவேண்டும்.

2. ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, தும்மல், தினசவலி, முதலியவைகளுக்குச் சிறிது கவனப்பொடியிலும் நெற்றியிலும் தடவி முகர்ந்துபார்க்க அகோரமாய்கள் சூரியனைக்கண்ட பனிபோல் ஓடும்.

3. தொண்டைப் புகைச்சல், சளி, இருமல், காசரோகம், மூக்கடைப்பு, நெஞ்சில் சளிகட்டிக்கொண்டு மூர்ச்சைவிட முடியாமல் திட்டுமுட்டடித்தல், முதலியவைகளுக்கு ஒரு வெற்றிலையில் சிறிது தலத்தை (சுண்ணாம்புக்குப் பதிலாக) வைத்து வாயிலடக்கிக்கொண்டு உமிழ்நீரைச சாப்பிட்டுக்கொண்டிருக்க கபக் கட்டு நீங்கி நன்றாய் சுவாசிக்கக்கூடும். மேலும் நெஞ்சிலும் முதுகிலும் நமது தலத்தைத் தடவி காற்றுப்படாமல் கம்பளித்துணி போட்டு ஓர் சீசாவில் வெந்நீர் நிறைத்து முன்பக்கத்திலும் பின் பக்கத்திலும் போடடு வைப்பதுடன், ஒரு சிறு துணியில் தலைத் தைத் தடவி மூக்கினுல் முகர மூக்கடைப்பு விடும்.—விலை ரூ 1.



சாமிவேலின் சிங்கமார்க்கா

வாதசங்காரக் குளிகை.



(Gout and Rheumatic Pills.)

ஒவ்வொரு மாத்திரையைக் காலையிலும் மாலையிலும் சாப்பிட்டு மகாசஞ்சீவித் தலத்தை நோயுள்ள பக்கத்தில் தேய்த்து அதன்

மேல்வேது ஒற்றடம் கொடுத்து கம்பளித்துணியால் சுற்றி வைக்க அடியில் கண்ட வியாதிகளதமாகுமென்பது நிண்ணம்.

1. தேகமெங்கும் துடிக்கும் அடிவாதம், நடுக்குவாதம், கைகால் பிடிப்பு, தேகமெங்கும் ஓடி ஓடி குத்தும் ஒடுவாதம், கைகால் கனை கீட்டவும் முடக்கவும் முடியாது படுக்கையில் கிடத்தும் முடக்குவாதம் முதலியவைகளையும்,

2. குன்ம வியாதியால் சாதம் ஜீரணமாகாதிருந்தால் உண்டாகும் குன்மக்கட்டி, குன்மசூல, குன்மவாய்வு, குன்மமேயப்பம், குன்ம அஜீரணம் இவைகளையும் இன்னும் பல ரோகங்களையும் இம்மாத்திரையால் சுகப்படுத்தலாம்.—விலை ரூ 1.

சாமிவேல் வைத்தியசாலை,
தெண்காஞ்சி, இரங்கோன்.



SAMUEL MEDICAL HALL,
Thingangyun, Rangoon.

கடவுள் துணை.

மானிட
மர்மசாஸ்திரம்.

பன்னிரண்டாம் புஸ்தகம்.

சமயோசித சஞ்சிவி.

இஃது

யாவர்க்கும்

சுக செல்வ நன்மைகளையும் சுகீர்த பாக்கிய
போக்கிஷத்தையும் நீடுழி பெருதவிக்க
விரும்பிய,

கல்கத்தா சர்வகலா சங்கத்தின் தமிழ்ப்பரீக்ஷகரும், சென்னை
ஜான்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியரா யிருந்தவரும், கணித சாஸ்திரம், பூமிசா
ஸ்திரங்களின் யாந்தகர்த்தாவும், மானுஷ மர்ம சாஸ்திரப் பண்டிதரும்,
சாமிவேல் வைத்தியசாலைத் தலைவருமாகிய

எஸ். சாமிவேல், பி. ஏ. அவர்கள்

இயற்றியது.

புதிய பதிப்பு.

சாமிவேல் பிரஸ்,

தென்காஞ்சி, இரங்கோன்.

1920.

All Rights Reserved.



சாமிவேலின் சிங்கமார்க்கு

சிந்தாமணிபரிமள கூந்தல்தைலம்

(Chintamony Hair Oil)

இந்த அருமையான தைலம் கூந்தலை வளரச் செய்வதில் மிக ஆச்சரியமான குணமுடையது. இதைக் காலை மாலை தடவிவர மயிர்க்கால்களுக்குக் குளிர்ச்சியையும் போஷிப்பையும் தந்து, கூந்தலை அதி விரைவில் கருமையாயும், செழிப்பாயும், அடர்த்தியாயும் வளரச்செய்து, கண், மூளை, இவைகளுக்குக் குளிர்ச்சியையும் தந்து, பித்த மயக்கம், கண்ணில் நீர்வடிதல், திடீரெனக் காத்தல் முதலிய ரோகங்களையும் நிவர்த்தி செய்யும். சுகந்த வாசனையுள்ள இந்தத் தைலத்தை உபயோகித்தவரின் பருவம் வருமுன்; பித்தத்தால் நரைத்த மயிர்களும் காளைடைவில் கறுக்கும்.—விலை அணை 1 2.

சாமிவேலின் சிங்கமார்க்கு

முடிவளர்க்கிருதம்.

(Hair Cosmetic.)

பூச்சி, புழு வெட்டியதினாலேனும், வேறெந்தக் காரணத்தினாலேனும் உரோமம் உதிர்ந்துபோனால் அந்த இடத்தில் காலையிலும் மாலையிலும் இதைத் தேய்த்துவரின் உரோமம் அடர்ந்து வளரும்.—விலை ரூ. 1—8—0

சாமிவேலின் சிங்கமார்க்கு

உரோமசங்காரி.

(Hair Destroyer.)

இந்த மருந்தில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் கலந்து உரோமமுள்ள இடத்தில் மொத்தமாய்த் தடவி ஒரு கடிதாசிக் காற்றினாலாவது, மொட்டைக் கத்தியினாலாவது பனையோலைத் தண்டினாலாவது வழித்தால் ரோமங்கள் முழுவதும் இலகுவாய் நீங்கிவிடும்.—விலை ரூ 1.

சாமிவேல் வைத்தியசாலை,

தென்காஞ்சி, இரங்கோன்.

SAMUEL MEDICAL HALL,

Thingangyun, Rangoon.

மானிட மர்ம சாஸ்திரம்.

பன்னிரண்டாம் புஸ்தகம்.

சமயோசித சஞ்சீவி முறைகள்.

மரணம் செய்வது மனுஷர்களின் தொழில் மிருகமோ தானும் ஒவ்வொருவர்க்குமே தந்தம் சகோதரப் பெண்களைக் கூடிய மனப்முறைகள் கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் மனுஷர் வருமானமே மோசம் நேரிடக்கூடிய சம்பவங்களுமுண்டு. நிமோன்ற ஏற்படக்கூடிய ஆபத்துகளை நீக்கவும், நோயாளிகளுக்கு வேண்டிய வைத்தியங்கள் செய்யவும் அவர்களைப் பாதுகாக்கவும் ஒவ்வொருவர்க்கும் விசேஷமாய் ஸ்திரீகளுக்கு தெரியவேண்டியது அவசியம். இதற்காக ஸ்திரீகள் அறியவேண்டிய விஷயங்களாவன:—

(1) நோயுண்டாவதின் காரணங்களும் அவற்றிற்கான சமயோசித பரிகாரங்களும்.

(2) வீட்டைச் சுத்தமாகவும் தமது அந்தஸ்திற்குத் தகுந்த வண்ணம் அலங்கரித்தும் வைக்கவேண்டும்.

(3) பாலர் பரிபாலன வகைகளும் பலவித ஆகார வஸ்துக்களைத் தயார் செய்யும வகைகளும் தெரிந்திருக்க வேண்டும். பொதுவாக மற்றவர் உதவியை சுடாமல் தானே தனது வீட்டுக் காரியாதிகளை நடத்தவும் வேலைக்காரரிடத்தில் வேண்டிய காரியங்களை உற்ற சமயந்தில வாங்குகளைபோல், தன் கணவனுக்குச் சகாய உதவிகளையும் புரிந்து சேவற்று வாழும வகைகளைக் கையாடவும் தெரிந்திருக்க வேண்டும்:

தவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய சாமான்களாவன:—

(1) தேநீர்க்கரண்டி (Tea-spoon) பெரிய தேநீர்க்கரண்டி (Dessert-spoon) போசனக்கரண்டி (Table-spoon.)

(2) முள்முள் கொக்கு, மீன்பிடி கொக்கு, பன்னல் அறுக்கும் கத்தி.

(3) மூனைவலிலுள்ள கூர்மையற்ற கத்தரிக்கோல், சிறுகத்தி மேனாக்கத்தி, சவரக்கத்தி.


(4) பவுன்டன் சிரிஞ்சு (Fountain syringe) அல்லது இரிகேற்றர் (Irrigator) என்ற கருவி, காய்ச்சல் குச்சி (Thermometer,) மருந்து நிறுக்கும் தராசுப்பெட்டி, (Feeding Cup) என்னும் சோப்பை, (Bed-pan) கடற்காளான் (Sponge) வெந்நீர்ப்பை, (Hot-water bag) ஐஸ் பை (Ice-bag)

இவற்றோடு வீட்டில் எப்பொழுதும் தயாராய் வைத்திருக்க வேண்டிய ஔஷதங்களாவன:—

(1) ஜாதிக்காய், மாசக்காய், கடுக்காய், சுக்கு, மிளகு, சித்திரத்தை, வசம்பு, கடுகு, தேங்காயெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், பெருங்காயம்.

(2) டிஞ்சர் ஐயோடின் (Tincture Iodyne) சுமத குளோரடயின் (Chlorodyne) சுமத மகா சஞ்சீவித்தைலம் (Magnetic Balm) கர்பாலிக் ஆய்ல் (Carbolic Oil) டர்பன்டயின் (Turpentine) பினயில் (Phenyl) சோடா உப்பு (Soda Bicarb) கர்பாலிக் சோப்புக்கட்டி. சுத்தமான மெல்லிய வெள்ளைத் துணிகள், போரிக் பவுடர் (Boracic acid) ஷாப்பில் விற்கும் தூய்மையான பஞ்சு (Absorbent cotton.)

இரிகேற்றர். (Irrigator.)



இது ஒவ்வொரு வீட்டிலும் பிரக்கவேண்டிய அவசியமான கருவி. சுத்த இங்கிலீஷ் வைத்திய ஷாப்பிலும் கிடைக்கும். சுமத வைத்திய சாலையிலும் வாங்கலாம். இதில் ஜலம் விடும் பாத்திரமுடன் அதிலிருந்து வரும் ஒரு ரப்பர்குழாயும் உண்டு. அந்த ரப்பர் குழாயின் முனையில் இணைத்திருப்பது வஜைனல் டியூப் (Vaginal Tube) என்ற ஓர் கருவி. இதில் ஜலம் வெளிபாக ஐந்தாறு கண்களுண்டு. இந்தி

யின் ஜனனேந்திரியத்தைச் சுத்தப்படுத்துவதற்கு இது பிரயோ ஜனமுள்ளதாகுப. அதற்குப் பதிலாய் பகுதத்தில் காட்டியிருக் கும் ரெக்டல் (Rectal Tube) றியூப் என்ற குழாயை ஆசன வாயிற்குள் செலுத்தி மலக்கட்டை நீக்க உபயோகிப்பதுண்டு. இதில் ஜலம் வெளியேற ஒரே கண்தான உண்டு. இவைகளைத் தவிர யூற்றரயின றியூப் (Uterine Tube) என்ற மற்றொரு குழா யுமுண்டு. கெர்ப்பப் பையைச் சுத்தஞ் செய்வதற்காக இது மிக வும் நீளமாயிருக்கும். இந்த மூன்று குழாய்களில் எது அவசிய மோ அதைதாப்பர் குழாயில் இணைத்து உபயோகத்திக்கொள்ள வேண்டும். இது மிகவும் பிரயோஜனமுள்ள கருவியாயிருப்பத னால் இதன் உபயோகத்தைப் பற்றிச் சற்று விபரமாய்ச் சொல்லு வோம்.

1. எனிமா :மலக்கட்டினால் வயிற்றுவலியும் வயிற்றுப்பொரு மலும் முண்டாகி கஷ்டப்படுபவர்களுக்கு மலவிரிர்த்தி அவசியமா யிருந்தால் ரெக்டல் டியூபை ரப்பரில சேர்த்து எனிமா கொடுக்க வேண்டும். இதற்கு உபயோகப்படும் ஜலம் பலவகையுண்டு. அவை களாவன:—(1) 1-அல்லது 2-பைண்ட் இளவெந்நீரும் சோப்புமும். (2) வெந்நீரில் சோப்பைக் கரைத்து அதில் ஒரு மேசைக்கரண்டி சிற்றாமணக்கெண்ணெய் கலந்தது. (3) இளவெந்நீரில் சோப் பைக் கரைத்து அதில் இரண்டு மேசைக்கரண்டி டர்பண்டயின் (Turpentine) தைலம் கலந்தது.

1. மலக்கட்டினால் வயிற்றில் வேதனையுண்டானால் ஒரு பைண்ட் இளவெந்நீரில் சிறிது சோப்பைக்கரைத்து ஆசனவாயின் வழியாய இந்த ஜலத்தைச் செலுத்தினால் சிறுகுடல் பெருங் குடல் இவைகளை அலம்பிவிடும்.

2. இரண்டொருதரம் பேதியாக வேண்டுமானால் இரண்டு பைண்ட் இளவெந்நீரில் சோப்பு ஒரு சிறு கட்டியைக் கலந்து அதில் இரண்டு மேசைக்கரண்டி ஆமணக்கெண்ணெயைக் கலந்து உபயோகிக்க வேண்டும்.

3. மலக்கட்டினால் வயிற்றுப்பொருமல் உண்டாகி காற்று வெளியாகாமல் வயிற்றுவலி முதலியவை உண்டானால் இளவெந் நீர் இரண்டுபைண்ட், சோப்புக்கட்டி ஒரு சிறு துண்டு, டர்பன் டயின் இரண்டு மேசைக்கரண்டி கலந்து உபயோகிக்கலாம்.

எனிமா கொடுக்கும் மாதிரி:—சாதாரண ஜனங்கள் இதை தாங்களேதபுடன் உபயோகிக்கவேண்டும். பெரிய ஆட்களுக்கு

மட்டும் உபயோகிக்கலாம். முதலில் தனி வெந்நீரை விட்டு பாத்திரம் குழாய் முதலியவைகளை உள்ளும் வெளியும் நன்றுய்ச் சுத்தம் செய்து அதன்பின்புதான் உபயோகிக்கப் போகும் ஜலத்தை விடவேண்டும். ஜாஸ்தி சூடும் ஆகாது. குளிர்ச்சியும் ஆகாது. இளவெந்நீராயிருக்கவேண்டும்.

குடலுக்குள் ஜலமானது மெதுவாகச் செல்லவேண்டும். ஜாஸ்தி வேகமாகச் செல்லவிடக்கூடாது. இதற்காக இரிகேடர் பாத்திரத்தை நோயாளிக்கு அதிக உயரமான இடத்தில் வைக்காமல் படுக்கைக்கு இரண்டடி உயரத்தில் சுவர்களிலுள்ள ஆணியில் தொங்கவிடலாம். அல்லது யாரையாவது ஒருவர் உயர்த்திப் பிடித்துக்கொண்டிருக்கலாம். நோயாளி இடதுபக்கமாகப் படுத்திருக்க வேண்டும். ஆசனவாய்க்குள் நுழைக்கும் குழாயில் சிறிது ஆமணக்கெண்ணெயைத் தடவிக்கொண்டு ஸ்டாப் காக்கைத் திறந்து கொஞ்சம் ஜலம் வெளியாகும்படியாய்ச் செய்து, ஜலம் வெளியில் ஓடிக்கொண்டிருக்கும்போதே அடைத்துவிட வேண்டும். இப்படிச் செய்யாமல் போனால் குழாய்க்குள் காற்றுத் தங்கியிருந்து குடலுக்குள் சென்றுவிடும். காற்று உள்ளே தங்கினால் மோசம் உண்டாகும். இதற்குப் பின்புதான் ஆசனவாய்க்குள் குழாயை நுழைத்து (Stop-cock) ஸ்டாப் காக்கைத் திறந்தால் இரிகேடரில் உள்ள ஜலமானது குடலுக்குள் செலலும். ஜலம் சென்று கொண்டிருக்கும்போது நோயாளி முக்கக்கூடாது. இரிகேடரிலுள்ள ஜலம் முழுதுமாகாலியாகும்வரை வைத்திருக்கவும்கூடாது. ஐந்து அவுன்ஸ் ஜலமிருக்கும்போதே ஆசனத்திற்குள்ளிருக்கும் குழாயை எடுத்துவிட்டால் ஐந்து நிமிஷத்திற்குள் மல சுத்தியால் வயிறு சுத்தமாகிவிடும்.

கிளிஸரின் சிரிஞ்சு. (Glycerine syringe.)

இது ஒருவித பிச்காரி குழாய். இதன் முனையானது நீண்டு வளைந்திருக்கும். குழந்தைகளுக்கு மலச்சிக்கலினால் காய்ச்சல், வயிற்றுபொருமல், மாந்தம், தொட்டுமுடுதல், மாந்தவலிப்பு முதலிய பயங்கர வியாதிகள் உண்டானால் பேதி மருந்துகளை உள்ளுக்குக் கொடுப்பதை கொஞ்சநேரம் சென்றுதான் மலவிர்த்தியை யுண்டாக்கும். ஆதலால் அதற்குப் பதிலாக கிளிஸரின் என்ற மருந்தில் ஒரு மேசைகரண்டியளவு எடுத்து அதை சிரிஞ்சில் விட்டு ஆசனவாயினுட் செலுத்திவிட்டால் உடனே மலங்கழிந்து வியாதி நின்றுவிடும்.

---

3. காய்ச்சல் குச்சி. (Thermometer.)



இந்த உஷ்ணமறியும் கருவி ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய முக்கிய வஸ்துக்களில் ஒன்று. இது கண்ணாடியினால் செய்யப்பட்டது. இதனுள் ரசம் அடைத்திருக்கிறது. சுகதேகிகளுக்கு நாவில் வைத்துப் பார்த்தால் 97½ முதல் 98½வரை யிருக்கும். 99 முதல் 100 டிகிரி வரை காய்ச்சலென்றும், 100-முதல் 102 வரை லேசான சுரமென்றும், 102 முதல் 104 வரை கொடிய சுரமென்றும், 104-க்கு மேல் ஜன்னி ஏற்படக்கூடிய சுரமென்றும் சொல்லலாம். அதேபிரகாரம 97½ முதல் 96½ வரை குளிர் ஜன்னி ஏற்பட்டிருக்கிறதென்றும் சொல்லலாம். 96½-க்குக் கீழ் அல்லது 106-க்கு மேல் இருந்தால் ஆள் ஜீவிப்பது அசாத்தியம்.

97½ டிகிரிக்குக் கீழும் 105 டிகிரிக்கு மேலும் செல்லவிடக் கூடாது. சுரம் அதிகமாயிருந்தால் அதைத் தணிக்கும் வகைகளாவது நமது வியர்வைப் பலடனைரப்போன்ற வியர்வை யுண்டாக்கும் மருந்துகளைக் கொடுத்து சுரத்தைத் தணிக்கலாம். அல்லது ரப்பரினால் செய்த ஐஸ் பையில் (Ice-bag) பனிக்கட்டியை உடைத்துப் போட்டு நன்றாய் அடைத்துக்கொண்டு தலைபகுதிக்குமேல் ஒரு மெலுகுத் துணியை விரித்துக்கொண்டு அதன்மேல் நோயாளியைப் படுக்க வைத்து தலையின்மேல் ஒரு துணியை வைத்து அதன்மேல் ஐஸ் பையை வைக்க சுரம் சன்னஞ்சன்னமாய் இறங்கும். 102 டிகிரிக்கு வந்தவுடன் பையை எடுத்துவிடவும். இது சுரத்தைத் தணிக்கும் சுலுவான முறை. எவ்வித அபாயமும் நேரிடாது. பயப்படாமல் செய்யலாம். இந்த ஐஸ் பை எந்த இங்கிலீஷ் வைத்தியசாலையிலும் வாங்கிக்கொள்ளலாம். நமது ஆபீசிலும் கிடைக்கும்.

குளிர்ச்சி அதிகமாகிவிட்டால், கை, கால்களில் உஷ்ணம் உண்டாகும்படி நமது மூகா சஞ்சீவித் தைலம், அல்லது ராயல்பாம், அல்லது டர்பன்றயின, அல்லது கர்ப்பூரத்தைலம், அல்லது வேப்பெண்ணெய் சுடர்ந்தைலம் முதலியவைகளில் சமயத்துக்குக்கிடைக்கக் கூடிய ஏதாவதொன்றை கைகளிலும், கால்களிலும் நன்றாயத் தேய்த்து உஷ்ணம் பிறப்பிக்கவேண்டும். வெள்ளைப்பூண்டையும் தைவேளை இலையையும் தட்டிப் பெருவிரல்களில் வைத்துக் கட்டினால் அனல் பிறக்கும். இருதயம் தன் தொழிலைச் சரியானபடி நடத்திக்கொண்டு வரும்பொருட்டு அதிக காப்பித்தூள் வெந்நீரில் போட்டு சாரம் இறக்கி அதில் பிராந்தியைக் கலந்து அடிக்கடி கொடுத்து வரவேண்டும். ஷாப்புகளில் விற்கும் சிக்கனபிராத், அல்லது சாதாரண கோழிக்குஞ்சு சூப்பில் சிறிது பிராந்தி சேர்த்தும் கொடுக்கலாம். மணல், சாம்பல், தவிடு, உப்பு முதலானதை வறுத்து விலாப் பக்கங்களிலும் அடிவயிற்றிலும் ஒற்றடம் போடலாம்.

சரீரத்தில் காய்ச்சல் குச்சியை வைத்துப் பார்க்கக் கூடிய இடங்களாவன:—நாவின் அடிப்பாகம், அக்கிள்கள், ஆசன வாய், யோனித்துவாரம், கால்மூட்டு, மடிப்பு, அரையிடுக்குகள். நாவுக்கடியில் வைத்து பல்லால் கடிக்கவிடாமல் உதடுகளை மூடிக் கொள்ளச் செய்து பார்ப்பதுதான் உத்தமம். இதனால் டிகிரி தல்லியமாய்த் தெரியும். ஆனால் ஜன்னி கண்டு ஸ்மர்ணையற்றிருப்பவர்களுக்கும் குழந்தைகளுக்கும் நாவுக்கடியில் வைத்துப் பார்க்கவே கூடாது. ஏனெனில் வாயில் இந்தக் குச்சியை வைத்துப் பார்க்கும்போது பல்பட்டு குச்சி உடைந்துவிட்டால் கண்ணுடிச் சில்லுகளாலும் வாயில் சிதறிக்கிடக்கும் எச்சிலாலும் அநேக கெடு

தல்கள் ஏற்படலாம். ஆகையால் அவர்களுக்கு அத்தனில் வைத்துப் பார்ப்பதுதான் நலம். இது அவ்வளவு சௌகரியமாகக் காட்டாவிட்டாலும் சேதமுண்டாவதற்கு இடமில்லை. குழந்தைகளுக்கு ஆசனவாயினுட் வைத்துப் பார்ப்பது இதைவிட உத்தமம்.

காய்ச்சல் குச்சியை உபயோகிக்குமுன் அதில் ரசம் எத்தனை டிகிரி யிருக்கிறதென்று பார்த்து குச்சிப் பக்கத்தைப் பிடித்துக் கொண்டு உதறினால் ரசமானது 95 டிகிரிக்குக் கீழ் இறங்கிவிடும். அதன்பின்பு ரசமடங்கிய பாகத்தை அத்தனின் நடுமத்தியில் வைத்து புஜத்தை உடம்போடு சேர்த்துப் பிடித்துக்கொண்டால் ஒரு நிமிஷத்திற்குள் சரம் இத்தனை டிகிரியென்று கண்டுகொள்ளலாம்.

மருந்து நிறுக்கும் நிறைகள்.

1. நிறுத்தலளவை :—


1	மிரேயின்	= 1 உளுந்தெடை
2	,,	= 1 குன்றிமணி
4	,,	= 1 மஞ்சாடி யிடை
60	,,	= 1 திராம்
	,,	= 1 வராகனெடை
10	வராகனெடை	= 1 பலம் அல்லது 3 ரூபாயிடை

80	மிரேயின்	= 1 களஞ்சி
20	,,	= 1 ஸ்க்ரூப்பல்
1	திராம்	= ¼ களஞ்சி
8	திராம்	= 1 அவுன்ஸ்
1	அவுன்ஸ்	= 2½ ரூபாயெடை
16	அவுன்ஸ்	= 1 ராத்தல் (பவுண்)
1	ராத்தல்	= 40 ரூபாயெடை
1	வீசை	= 120 ரூபாயெடை

2. முகத்தலளவை அல்லது திராவகங்களின் அளவு


1	மினிம்	= 1 துளி
60	துளி	= 1 திராம்
1	திராம்	= 1 சிறு தேக்கரண்டி
2	திராம்	= 1 டிசட்ஸ்பூன் அல்லது 1 பெரிய தேக்கரண்டியளவு (Dessert spoon)
4	திராம்	= 1 டேபிள்சுக் கரண்டியளவு
		= அரை அவுன்ஸ்
8	திராம்	= 1 அவுன்ஸ் (2 டேபிள்சுக்கரண்டியளவு
1	அவுன்ஸ்	= 3/16 ஆழாக்கு
1	,,	= அரை ஒயின் கிளாஸ்
2	,,	= ⅜ ஆழாக்கு
	,,	= ஒரு ஒயின்கிளாஸ
4	,,	= ¾ ஆழாக்கு 2 ஒயின் கிளாஸ
6	,, அல்லது 3 ஒயின் கிளாஸ	= 1 ஆழாக்கு
12	அவுன்ஸ்	= கால்படி
24	,,	= அரைப்படி
48	,,	= ஒருபடி
12	,,	= ஒரு பயின்ட்
		= அரை சேர்
24	,,	= 1 சேர்
8	பயின்ட்	= 1 காலன்

மினிம் கிளாஸ் (Minim Glass.)



இந்தப்படம் ஒரு மினிம் கிளாஸ் தண்ணீரில் மிகவு நன்னாத்த வெளிப்பே எடுத்தால் ஜலம் சொட்டு சொட்டாக மேே விழுமல்லவா? இந்த சொட்டுக்கு மினிம் என்ற பெயர். 60 சொட்டு ஜலம் கொண்டது ஒரு தேபிகிலக்காணடி அல்லது ஒரு திராம் என்று சொல்லப்படும்.

அவுன்ஸ் கிளாஸ். (Ounce Glass.)



இந்தப்படம் ஒரு அவுன்ஸ் கிளாஸ். ஒருபக்கதில் திராம் அளவும், மற்றொரு பக்கத்தில் அவுன்ஸ் அளவும் போட்டிருக்கின்றது. எட்டு திராம்கொண்டது ஒரு அவுன்ஸ்.

குறிப்பு:—இக்காலத்தில் காண்டிகளும், ஔின் கிளாஸ்களும் பல மாதிரியாய்ப் பெரிதும் சிறிதுமாகச் செய்து விற்கப்படுவதால் நிரமமாக மேலே சொல்லிய அளவுள்ள காண்டி, கிளாஸ்கள் வாங்கி உபயோகிக்க வேண்டும். அல்லது தகாத்தில் இவைகளைச் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

குழந்தையின் வயதுக்குத் தக்கதாக மருந்து கொடுக்க வேண்டிய நிட்டத்தைக் காட்டும் அட்டவணை.

ஒரு வருஷத்திற்குட்பட்ட குழந்தைக்குக் கொடுக்கவேண்டிய அளவை ஒன்று ஆக வைத்துக்கொண்டால், அதாவது ஒரு வருஷத்திற்குட்பட்ட குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய பிரமாணம், ஒரு துளி அல்லது ஒரு மினிம் அல்லது ஒரு திராம் அல்லது ஒரு அவுன்ஸ் ஆக வைத்துக்கொண்டால்

1-க்கு மேல்		3	வயது வரை		1½
3	வயது முதல்	5	,,	,,	2
5	,, ,,	7	,,	,,	3
7	,, ,,	14	,,	,,	4

ஆக அளவில் இப்பிரமாணத்தின்படி அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குறிப்பு:—ஈரு மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அபின் சோந்த மருந்துகள் கொடுக்கலாகாது. ஏழு நாள் சேர்ந்த ஔஷதங்கள் அதிகமாய்க் கொடுத்தபோதிலும் கெடுதி செய்யாது.

நஞ்சுகளும் அவைகளுக்கு மறிவும்.
(Poisons, Antedotes & Emergency Remedies.)

வீடுகளில் பல உபயோகங்களுக்காக நஞ்சு வஸ்துவை வைத்திருக்கலாம். அநேக ஔஷதங்களும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாக முடியும். மேலும் மேற்பிரயோகத்திற்காக வைத்திருக்கும் தைலங்களில் அபின், அக்கோனைற், பெல்லடோனா முதலிய நஞ்சு மருந்துகளுமுண்டு. அவைகளில் ஏதாவது அறிபாலமியினாலாவது கைப்பிசகினாலாவது அளவு தெரியாமலாவது சாப்பிடக் கொடலாம். தற்கொலை செய்துகொள்ள எண்ணமுள்ளவர்கள் விஷத்தைச் சாப்பிட்டிருக்கலாம். அல்லது கொலை பண்ணுதற்கான நோக்கத்துடன் மற்றவர்களால் கொடுக்கப்பட்டிருக்கலாம். விஷம் இன்னதென்று கண்டு பிடித்தால் அதற்குரிய மருந்து வைத்தியத்தைச் செய்யவேண்டும்.

1. சகதேகியான புருஷனுக்குத் திடீரென்று மயக்கம், அசதி, புளம்பல், வாந்தி முதலான குறிகள் கண்டாலும் உடனே அந்தச் சமயத்தில் அவன் உட்கொண்ட ஆகாரம், பானம் இன்னதென்று கண்டு பிடிக்கவேண்டும். இதற்காக பக்கங்களில் கூடக்கும் சகல சாமான்களையும் டாக்டருக்குக் காண்பிக்கவேண்டும்.

அப்போப்பட்ட சமயங்களில் சமயோசிதமாய் செய்யவேண்டிய சில பக்குவங்களை அடியிற் கூறுவோம்:—

2. சகல நஞ்சுகளுக்கும் பொதுப் பிரயோகம்.

காலதாமதம் செய்யக்கூடாது. ஆத்திரப்படவும் கூடாது. கர்பாலிக் ஆசிட், (Carbolic acid) சல்பூரிக் ஆசிட் (Sulpuric acid) முதலிய வாயில் எரிச்சலை உண்டாக்கக்கூடிய நஞ்சுகளை சாப்பிட்டிருந்தால் வாந்திக்குக் கொடுக்கக்கூடாது. ஆலல் பால், முட்டையின் வெள்ளைக்கரு முதலிய பசபசப்புள்ள வஸ்துக்களைக் குடிக்கக் கொடுக்கவேண்டும்.

3. Antedotes we should always keep on hand.

நாம் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்கவேண்டிய விஷ முறிவுகள் யாதெனில்:-சோடா, (Soda,) மக்னீசியா, (Magnesia) சிலைக்கண்ணாம்பு, (Chalk.) முட்டை, பால். சோப்பு, கொழுப்பு, (Lard) சீனாக்காரம், (Alum,) கடுகு, (Mustard.) தேயிலை, காப்பி, எலுமிச்சம்பழம், காடி, (Vinegar) சணல்விரை (Flax seed) முதலியவைகள் எப்பொழுதும் மருந்துப்பெட்டியில்கைவசமிருக்க வேண்டும். அதோடு மயில்துத்தத்தைத் தூள்செய்து இரண்டு கிரேய்ன் வீதம் எடுத்துத் தாள்களில் மடித்து வைத்திருக்க வேண்டும். கொழுப்புச் சுரப்பிகளிலுள்ள பாஸ்பரஸ் (Phosphorus) ஐ பிள்ளைகள் தின்றுவிட்டால் அதை உள்ளுக்குக் கொடுக்கலாம்.

எந்த நஞ்சை உட்கொண்டாலும் உடனே வாந்திசெய்யும்படி வேண்டிய முயற்சி செய்து வயிற்றை வெறுமையாக்குவதே முதற் சிகிச்சை. வயிறு முற்றிலும் வெறுமையானபின்தான் அந்தந்த மருந்துக்குரிய முறிவுகளைக் கொடுக்கவேண்டும். வயிற்றில் ஒன்றுமில்லாவிட்டாலும் பாலைக் குடிக்கக் கொடுத்து வாந்திவரச் செய்யவேண்டும். எந்த நஞ்சைப் புசித்தாலும் உடனே தொண்டைக்குள் விரலைவிட்டுக் கூச்சமுண்டாக்கி வாந்தி செய்யலாம். அல்லது கறியில் போடும் உப்பை வெந்நீரில் அதிக கைப்பாகக் கரைத்து வயிறுகொண்ட மட்டும் குடிக்கக் கொடுத்தால் உடனே வாந்தியாகும்.

இரண்டு தேயிலைக் கரண்டி சிமைக்கலிகை கொஞ்சம் வெந்நீரிலரைத்துக் கொடுத்தால் வாந்தியாகும். ஆனால் உதடு, நாக்கு, வாய் முதலிய உறுப்புகள் உட்சென்றிருக்கும் வஸ்துவினால் வெந்து போயிருக்கிறதாகத் தெரிந்தால் வாந்தியை உண்டாக்கக்கூடிய வஸ்துக்களை உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது. வாந்தி எடுக்கும் போது வெளியாகும் வஸ்துவையும் நோயாளியின் பக்கத்தில் கிடக்கும் வஸ்துவையும் டாக்டருக்குக் காண்பிப்பதற்காகப் பத்தோபஸ்துசெய்து வைக்கவேண்டும்.

உட்சென்றிருக்கக்கூடிய விஷம் இன்னதுதானென்றறிய முயலவேண்டும். இதற்குள் டாக்டரை விரைவாய் அழைத்துவர ஆட்களை அனுப்பவேண்டும்.

4. நோயாளிக்கு உயிர் போய்விட்டதுபோல் தோன்றினால் மறுபடியும் உயிர்ப்பிக்கவேண்டிய முறைகளைக் கையாடவேண்டும். மூர்ச்சையாய்க் கிடந்தால் நமது ஆக்கினாண உப்பு

(Smelling salt) சல்லை (Carbonate of Ammonia) என்னும் மருந்தை நாசியில் காட்டவேண்டும். குளிர்ந்த ஜலத்தைத் தலை மாய் முகத்திலும் கெற்றியிலும் விடிக்க வேண்டும். தானே விழுந்து கொண்டிருந்தால் தூங்கவிடக்கூடாது. அப்படிச் செய்து தூங்க விட்டால் ஒரே தூக்கமாக முடிந்தாலும் முடியும். ஸ்திரியால் அசதி உண்டாகாமல் கையைப் பிடித்து நடத்திக்கொண்டே யிருக்க வேண்டும். நடக்க சக்தியில்லாமல் போனாலும் முகத்திலும் பின்னுமாக இழுத்துக்கொண்டே யிருக்கவேண்டும். விழித்திருக்கும்படி அடிக்கடி உடலைத் தட்டி எழைக்க வேண்டும். பேசச் செய்யவேண்டும். சூடான காப்பியை அடிக்கடி சாதாரணமாகக் குடிக்கக் கொடுக்கலாம். அதில் கொஞ்சம் தென்னம்பிள்ளை கால்களை வெந்நீரில் வைக்கலாம். இப்படிப் பலவகைகளிலும் தூங்காமல் விழிக்கச் செய்யவேண்டும்.

5. இழுப்புகள் வந்தால் முகத்திலும், தலையிலும், நெற்றியிலும் குளிர்ந்த ஜலத்தை எடுத்து அடிக்கவேண்டும்.

6. வாய், நாக்கு, உதடு முதலிய பாகங்கள் புண்ணாயிருந்தால் ஆமணக்கெண்ணெய், பால முதலிய வஸ்துக்களை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

7. உடம்பு குளிர்ந்து ஜாஸ்தியாக விபரீதமான லக்ஷணங்கள் உடம்பைத் தேய்த்துக் கம்பளியைப் போர்த்து வெந்நீர் ஒத்தடம் முதலான வைகளை கால்களுக்கு வைத்துச் சூடுண்டாக்க வேண்டும்.

இவ்விதம் டாக்டர் வருவதற்கு முன்னாலேயே காரியங்களெல்லாம் டிருந்து அவர் வந்தவுடன் நடந்த விஷயங்கள் யாவற்றையும் தெளிவாகச் சொல்லவேண்டும். உபயோகித்த மருந்துகளையும் சொல்லும்படி செய்யவேண்டும். நஞ்சு இவனென்று தெரிந்தவுடன் அதற்குத் தகுந்த சிகிச்சை செய்யவேண்டும்.

வீடுகளில் சாதாரணமாய் உபயோகிக்கப்படும் விஷ நாசனங்களைப் பற்றி மட்டும் இங்கு கவனிப்போம்.

1. அபின்: குறிகள்: தூக்கங்கொள்ளும். வாய் அதிகமாகும். அப்படியே தூங்கவிட்டால் அது ஒரே தூக்கமாக முடிந்தாலும் முடியும். முகம் வெளுத்திருக்கும். உடம்பு குளிர்ந்திருக்கும். வாயில் அபின் வாசனை தோன்றும். கண்மணியானது மிகவும் சுருங்கியிருக்கும்.

சிகிச்சை:—நோயாளியைத் தூங்கவிடவே கூடாது. அசதி வேண்டாருமுன கையைப் பிடித்து நடத்திக்கொண்டு போகவேண்டும். நடக்க சக்தியில்லாதிருப்பினும முன்னும் பின்னும் இழுத்துக் கொண்டாவது இருக்கவேண்டும். அடிக்கடி முதுகில தட்டி எழுப்பவேண்டும். முகத்தில் குளிர்ந்த ஜலத்தைத் தெளிக்க வேண்டும்.

2. பெல்லடோனா (Belladonna) அபினுக்குப் போலவே இதற்கும் செய்யவேண்டும.

3. அக்கினித் திராவகங்கள் என்று சொல்லப்படும் கர்பாலிக் ஆசிட், கெந்தகத் திராவகம், நைற்றிரிக் ஆசிட், ஹைட்ரோகுளோரிக் அலலது முரியாட்டிக் ஆசிட், அசற்றிக் ஆசிட் முதலியவைகளுக்கு:—

அடையாளங்கள்:-உதடு, வாய், நாக்கு, தொண்டை, வயிறு இவைகளில் மகா எரிச்சலுண்டாகும். வாந்தியுண்டாகும். மூச்சு முட்டும். வாய புளிப்பாயிருக்கும். உதடு, நாக்கு, வாய் முதலான பாகங்கள் புண்ணாகியிருக்கும். நாடி படபடத்து மெது வாய் அடிக்கும் மீகாயாளி எழுந்து விழுங்க முடியாது.

சிகிச்சை:—வாந்தி எடுப்பிக்கக்கூடாது. அவைகளால் மோசமுண்டாகும். சுலல் மீசாடா, சுண்ணாம்பு, (Chalk) மகனீசியா அலலது மீசாப்பை சுமார் இரண்டு ரூபா பெடை அரைக்கால்படி ஜலத்தில கலைத்து சிறுகச் சிறுக அவவளவையும் கால்மணி நேரத்திறகுள்ளாகக் கொடுத்துவிட வேண்டும். இவைகள் கிடைக்காவிட்டால நாட்டுச் சுண்ணாம்பையாவது அலலது சுவரிலிருக்கும் சுண்ணாம்பையாவது கொஞ்சம் கலைத்து அந்த ஜலத்தைக் கொண்டு வாயலம்பச் செய்ய வேண்டும. சுண்ணாம்பு கொடுத்தால் கொஞ்சம் எடுத்துப் பொடி செய்து பாலில கலைத்து உள்ளுக்குக கொடுக்கவேண்டும். முட்டையின் வெள்ளைக்கருவையும் கொடுக்கலாம். இவைகளைச் சாப்பிட்டபின வாந்தியுண்டாகும். வாந்தியானபின ஆமணக்கெண்ணெய், நல்லெணணெய், தேங்காயெண்ணெய், நெய் முதலிய எண்ணெயத் திரவங்களில ஏதாவது இரண்டு மூன்று காண்டி கொடுக்கவேண்டும்.

4. பாஷாணம், அடையாளங்கள்:—உட்சென்ற கால்மணி நேரத்திறகுள வாய்க்குறிகள் தோன்றும். நாவறட்சியுண்டாகும். ஈகமதிகரிக்குகும். நாக்கு சிவந்திருககும. மேல்வயிற்றில எரிச்சல்

உண்டாகும். மயக்கங் காணும். வாந்தியுண்டாகும். வெளியாகும் வஸ்து ஊதா அல்லது பச்சைநிறமாயிருக்கும். இரத்தக் கலப்புமிருக்கும். வயிற்றுப்போக்குடன் மலம் வெளியாகும் போது முக்குவான். கை கால்கள் இழுக்கும். வலியிருக்கும். தொண்டை உலர்ந்துபோகும். மூச்சு முட்டும். உடம்பு குளிர்ந்திருக்கும். வயிறு முழுஜமயும் புண்பட்டதுபோல் தொடமுடியாமல் வலிக்கும். நாடி ஒழுங்கில்லாமலும் பலவீனமாயும் ஓடும்.

சிகிச்சை:—இதற்குத் தாமதமே வாந்தியாகும் குணமுண்டு. என்றாலும் அதுவரை காத்திராமல் உடனே கொஞ்சம் வெந்நீரை யாவது பாலையாவது கொடுத்து அந்த விஷத்தினிலேயே வாந்தி செய்விக்கவேண்டும். வாந்திபானத்தின் பாலில் முட்டையையாவது மாவு திணுசுகளில் ஏதையாவது குழம்பாகக் கரைத்து இடைவிடாமல் கொடுத்துவரவேண்டும். பாலில்லாவிடில் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். அவிப்புக்கரியைத் தான்செய்த ஜலத்தில் கலந்தும கொடுக்கலாம். சிற்றாமணக்கெண்ணெயையும் குளிர்ந்த சுண்ணாம்பு ஜலத்தையும் கலந்து அடிக்கடி குடிக்கச் செய்யலாம். மிளகும் சிறுகீரையையும் கஷாயம செய்து கொடுக்கலாம். தயிரில் சந்தனத்தைக் கரைத்து உடம்பில் பூசினால் பாஷாணத்தின் வீறு தணியும். ஜவ்வரிசி முதலான பால் கலந்த கஞ்சிகளைக் கொடுக்க வேண்டும். சரீரம் பலத்தாட்சியடையுமுன் ஒரு தேயிலைக் கரண்டி பிராந்தியும் ஜலமும கலந்து ஒரு மணி நேரத்திற்கொரு தடவை கொடுக்கவேண்டும். கோழிமுட்டையை உடைத்துப் பாலோடு கலந்து கொடுக்கவேண்டும்.

5. சவ்வீரம். பாஷாணத்துக்குச் சொல்லிய முறிவுகள் இதற்குமாகும. ஆனால் முட்டையும் பாலுமே இதற்குச் சிலாக்கியமானது.

6. எட்டிக்கொட்டை. (Nux vomica, Strychnine) எட்டிக்கொட்டையின் சத்திற்கு (Strychnine) ஸ்டிரிக்டணன் என்று பெயர். எலி, நாய் முதலிய ஜந்துக்களைக் கொலையுவதற்காக ஷாப்புகளில் விற்கும பிஸ்கட்டுகளில ஸ்டிரிக்ட்ணன் (Strychnine) கலந்திருக்கும்.

அடையாளங்கள். கண்மணிகள் மிகவும் பெரிதாயிருக்கும். சுவாசம் சரியாய்விடமாட்டான். வாயில் கசப்பு இருக்கும. கால் கைகளும் சதைகளும் உறுத்திருக்கும். முகத்தில பயங்கரம் தோற்றமுள்ள சிரிப்பு காணும். தாடை அசைக்க முடியாது. பிடரி மதந்திருக்கும். சரீர முழுவதுமே நடுங்கிக்கொண்டிருக்கும்.

சிகிச்சை. உடனே வாந்தியை உண்டாக்கவேண்டும். உள்ளுக்குப் பாலைக் குடிக்கக் கொடுக்கவேண்டும். காப்பியை வெகு காரமாகச் செய்து குடிக்கக் கொடுக்கவேண்டும். அதன்பின் வாந்தி உண்டாவதற்காகக் கடுகு அல்லது சீனக்காரத் தூளை தண்ணீரில் கலந்து குடிக்கக் கொடுக்கலாம். அல்லது கோழி இறகை தொண்டையில விட்டு வாந்தியைப் பிறப்பிக்கலாம். பல் கிட்டிக் கொள்ளாதபடி ஓர் கட்டையை பல்லினிடையில் திணிக்கவேண்டும். எப்ஸம் ஸால்ட் (Epsom salt) தாராளமாய்க் கொடுத்து பேதியை உண்டாக்கலாம. அல்லது (Irrigator) இரிகேட்டர் என்ற குழாயினல் சோப்புத் தண்ணீரை வயிற்றினுள் செலுத்தி பேதியாகலாம். ஜன்னி இழுப்புக்கு (Chloroform) க்ளோரோபாரம் முகாச் செய்வது நல்லது. புகையிலை இதற்குத் தகுந்த முறிவு. புகையிலைக் கஷாயம் வைத்து அதில் அரை அவுன்ஸ் எடுத்து அதோடு கொதிக்கக்காய்ந்த சுத்தஜலத்தில் 20 அவுன்ஸ் கலந்து அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்துக் கொண்டு வந்தால் வலி குறைந்தும்பாகும். நிகோடின் (Nicotine) என்ற புகையிலை ரசத்தில் ஒரு துளி எடுத்து கொதிக்கிற வெந்நீரில் ஷெரிவைனேடு (Sherrywine) கலந்துகொடுத்தால் முறிந்து விடும். கோழிமுட்டை, அவுரி, கடுக்காய், கடுகு, பொட்டாஸ் புரோமைட் (Potash Bromide) முதலியவைகளும் அனுபவமான முறிவுகளாகும்.

7. ஊமத்தை. (Datura.) இலை காய் முதலியவைகள் மருந்துக்கு உபயோகப்படுகின்றன. இவைகள் அளவுக்கு மிஞ் சினால் விஷமிருக்கும், வாய், தொண்டை, உதடு முதலானவை உலர்ந்தும்பாகும, உமிழ்நீர் சுரக்காது, தொண்டை வலியால் எதையும் விழுங்கமுடியாது, தாகம் அதிகரிக்கும், முகம் சிவந்து கண்கள் நெருப்பு நிறந்து பயங்கரமா யிருக்கும், கண்மணிகள் சிவந்திருக்கும, பாலவை மங்கிப்போகும், உரத்த சத்தத்தோடு புலம்பமுண்டாகும், நடை தடுமாறும, சரீரம் உலர்ந்து மதத்துப் போயிருக்கும், வேர்வை கசியவே மாட்டாது, அடிக்கடி நீர் பிரிக்க விருப்பமுண்டாகும்.

சிகிச்சை, வாந்தி எடுக்கச் செய்யவேண்டும். சூடுள்ள காப்பி, தேயிலை தண்ணீர் முதலானவைகளை ஏராளமாய்க் கொடுக்க வேண்டும. பிராந்தியும் ஜலமும் கலந்து அடிக்கடி கொடுதது கொண்டிருக்கவேண்டும். கால கைகளில் சூடுண்டாகும்படி செய்ய வேண்டும. வெந்நீரில் ஒரு துணியை நனைத்துப் பிழிந்து கொஞ்சநேரம் வைத்து ஒத்தடம் கொடுக்கவேண்டும. அதன்பின்பு குளிர்ந்த ஜலத்தில் ஒரு துணியை நனைத்துப் பிழிந்துவிட்டு அதைமார்பின் உடம்பு

முழுவதும் லேசாய் அடிக்கவேண்டும். இவ்விதமாக மாறி மாறி செய்துகொண்டிருக்க வேண்டும்.

8. மண்ணெண்ணெய். (Kerosine Oil). முகம் வெளுத்திருக்கும். தாகம் அதிகரிக்கும். அடிக்கடி வெளுறுச்சு உண்டாகும். உடம்பு கைகால்களில் சுளிர்ச்சி உண்டாகும். உதடு, நாக்கு, வயிறு, வாய் முதலிய இடங்களில் எரிச்சல் உண்டாகும்.

சிகிச்சை. வாந்தியை உண்டாக்கவேண்டும். காப்பி, தேயிலை, பிராந்தி முதலிய வஸ்துக்களை கொடுத்து உடம்பில் சூடு உண்டாக்க வேண்டும். உள்ளுக்கு சிறுபயறு எண்ணெய் கொடுத்து மலத்தை வெளியாக்கினால் அதனால் மண்ணெண்ணெயும் சேர்ந்து வந்துவிடும். சுண்ணாம்புத் தெளிநீர் அடிக்கடி கொடுத்துவரவேண்டும். அப்பால் பாலும் முட்டையும் கலந்து கொடுத்து வரலாம்.

9. சீனக்காரம். (Alum) இதைக் கற்கண்டு என்றும் குமரன் தைகள் திவறுவதுவது சகஜம். இதற்கு சோடா, மாக்னீஷியா, காட்டுச்சுண்ணாம்பு, ஜலம் முதலியவைகளில் எதாவது கொடுக்கலாம்.

10. தீ முருகல். (Phosphorous) தீக்குச்சி மருந்து, எலி கொல்லி, (Rat Paste) முதலியவை இதனால் செய்யப்படுகிறது. குழந்தைகள் தீக்குச்சிகளை வாயில் வைப்பதனால் இதன் விஷக் குறிகள் தோன்றும். வாயை முகர்ந்து பார்த்தால் வெள்ளைப் பூண்டு வாசனை இருக்கும். தாகம் உண்டாகும். வாந்தியாகும். நீர் சரியாய் இறங்கமாட்டாது. புலம்பம் இருக்கும். ரத்தம் கூட வாந்தி செய்வான். வாந்தியான வஸ்துவை இருட்டில் கொண்டுபோய்ப் பார்த்தால் பளபளப்பாய் இருக்கும்.

சிகிச்சை. வாந்தி அதிகரிக்கவேண்டும். எண்ணெய்களையாவது, கொழுப்பு, வெண்ணெய், நெய் முதலிய வஸ்துக்களையாவது கொடுக்கக்கூடாது. ஆனால் பிராந்து டர்பண்டயின் என்ற மருந்தில் அரைத்தேயிலைக் கரண்டியளவு அரைமணி நேரத்திற் கொருதடவை கொடுக்கலாம். ஜர்மன், அமெரிக்கன் டர்பண்டயின் இதற்கு உதவாது. மயில் துத்தம் இரண்டு அல்லது மூன்று கிரேடன எடுத்து கால்மணி நேரத்திற்கு ஒருதடவை தண்ணீரில் கலந்து கொடுத்து வாந்தியை பிறப்பிக்க வேண்டும். இதுவே தீ முருகலுக்கு முறிவுமாகும். பால்துத்தம (Zinc Sulphate) இருபது கிரேய்ன் எடுத்து தண்ணீரில் கலந்து கொடுத்து, வாந்தியை பிறப்பிக்கலாம். பேதி உப்பு என்ற மக்னீசியம் சல்பேட் கொடுத்து மல

ந்தை வெளியாக்கலாம். முட்டையின் வெள்ளைக்கரு, பால் முதலியவைகளையும் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

11. சூட்டம் அல்லது கற்பூரம். (Camphor) மயக்கம், ஆயாசம், காதில் ஐரைச்சல், பலம்பல, வலிப்பு, திருஷ்டி குறைவு, மூச்சு மூட்டுதல், உடம்பு குளிர்ச்சி, ஆண் பெண் குறிகளில் எரிவு முதலிய குணங்கள் காணும்.

சிகிச்சை:—வாந்தி அதிகரிக்கவேண்டும். சிரசில் குளிர்ந்த ஜலத்தையும் வெந்நீரையும் மாற்றி மாற்றி விடவேண்டும். நன்றாய்த் தாங்கி வியர்த்துவிட்டால் சௌஸ்தமாகிவிடும்.

12. கஞ்சா. (Indian Hemp.) புத்தி தடுமாறி வாயில் வந்தபடி பிதற்றச் செய்யும். பலவிதமாய் சத்தம் போடுவான். பாடுவான் தலை பாரமாய் இருக்கும். சுவாசம் மிகவும் மிராவாய் எடுக்கும். நீர் ஜாஸ்தியாய்ப் பிரியும்.

சிகிச்சை:—வாந்தியை உண்டு பண்ணவேண்டும். எலுமிச்சம்பழ ரசம், காடி. சுடவைத்த பிராந்தியை தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். தலையில் குளிர்ந்தஜலத்தை குடம் குடமாய் ஊற்ற வேண்டும். ஈருள்ளி ரசமும் காடியும் கலந்துகொடுக்கலாம்.

13. ஜாதிக்காய். (Nut-Meg) மயக்கம், தலைசுற்றுதல், தாகம், புலப்பம் முதலியவை உண்டாகும். மூச்சு முட்டும். வாந்தியுண்டாகும். ஒரு இடத்தில் இருக்கமாட்டான். காப்பி தேயிலை தண்ணீர் முதலியவைகளை அடிக்கடி கொடுக்கவேண்டும்.

14. டர்பன்டயின் அல்லது கற்பூரத்தைலம். மூச்சு மூட்டும். வலிப்பு உண்டாகும். மூத்திரப்பை, ஆண் பெண் குறிகளில் எரிச்சல் உண்டாகும்.

சிகிச்சை:—வாந்தி மருந்துகளையும் கொடுத்து வாந்தியுண்டாக்கவேண்டும். மக்னீஷியம் சல்பேட் ஒரு அவுன்ஸ் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து கொடுத்து பேதியுண்டாக்கவேண்டும். பின்பு சுண்ணாம்புத் தெளிநீர் கொடுக்கவேண்டும். கோழி முட்டையை உடைத்துப் பாலோடு கலந்து கொடுக்க வேண்டும். பார்லி அரிசிக் கஞ்சியைக் கொடுப்பதும் உத்தமம்.

15. அம்மோனியா. காடியுந் தண்ணீரும் கலந்து கொடுக்கலாம்.

16. அயோடின் திராவகம். மாவு திணுசைகளில் எதையாவது தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். வடிகஞ்சியும் கொடுக்கலாம்.

17. ஈய திராவகம். ஈய பஸ்பம்: எப்ஸம் உப்புத்தண்ணீரில் கரைத்துக் கொஞ்சம் காடி கலந்து கொடுக்கலாம்.

18. சுண்ணாம்பு. சாம்பலும் நீரும் கலந்து கொடுக்கலாம். எண்ணெய் திணுசுகளில் எதையாவும் கொடுக்கலாம்.

19. காடிக்காரம். Silver Nitrate or Lunar-Caustic) கறிஉப்பைத் தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவேண்டும். பால், முட்டையின் கரு, குழகுழப்பான பதார்த்தங்களைக் கொடுத்து வயிற்றிலிருக்கும் விஷத்தை நீக்கலாம்.

20. அன்றிமோனி. (Antimony. Tartar Emetic) காசுக்கட்டித்தூள், மாச்சக்காய்த்தூள் முதலியவைகளை அரைதேக்கரண்டி எடுத்து அரைக்கோப்பை தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். காரமான தேயிலைத் தண்ணீரும் கொடுக்கலாம். சோகிக்குமளக்கெண்ணெய் கொடுத்து வாளமான வெந்நீர் குடிக்கவேண்டும். பிராந்தி உஸ்கி நல்லது.

21. பால் தத்தம். சோடாவைத் தண்ணீரில் கலந்து கொடுக்கவேண்டும்.

22. நேர்வாளம். காட்டாமணக்கின் பருப்பு முதலியவைகளுக்கு: புளித்தமோரில் எலுமிச்சம்பழரசத்தைக் கலந்து கொடுக்கலாம். பாஷாணத்திற்குரிய முறிவுகளைக் கொடுக்கலாம்.

23. மேற்பூசுத் தைலங்கள். இவைகளில் நஞ்சுச்சாக்குகள், அதிகமாகக் கலந்து இருந்தாலும் சொற்பமாகத்தானிருக்கும். அதுவும் வாந்தியில் வந்துவிடும். அவசியமானால் அரிப்பு, பெல்லடோனா முதலியவைகளுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளே இவைகளுக்கும் செய்யவேண்டும்.

24. காவிகிழங்குக்கு. சிறுகீரையும், மிளகும் கஷாயம் செய்து கொடுக்கலாம்.

25. சிவதைவேருக்கு. வேலம்பட்டைக் கஷாயம்.

26. மருதோன்றிக்கு. தான்றிக்காய் கஷாடம்.

27. அவுரிக்கு. கடுக்காய்க் கஷாயம்.

28. குன்றிமணிக்கு. பொரித்த வெங்காரம்.

29. கள்ளிப்பாலுக்கு. வாழைப்பட்டைச் சாறு.

30. எருக்கம்பாலுக்கு. வேலம்பட்டைக் கஷாயத்தில் மோரைக் கலந்து கொடுக்கலாம்.

31. சேங்கோட்டைக்கு. புளியைக் கரைத்து அதில் நல்லெண்ணெயைக் கலந்து கொடுத்து, தான்றிக்காயும் புளியிலையும் ஓர் நிஷ்பமாய் அரைத்து உடம்பில் பூசிலுல் வீறு தணியும்.

(அவுரி, நிலியாம் இதன் இலைக்கு குன்னி, பாம்புவிஷம் முதலிய மற்ற எல்லா விஷங்களையும் நீக்கும் குணமுண்டு.)

32. ஆகார தினுசுகள். (Cheese, meats, cenned goods) தற்காலத்தில் தகாங்களில் அடைத்துவரும் மீன், மாமிச வகையறுக்கள், பால்கட்டி முதலியனவைகள் நாட்சென்றவுடன் கெட்டு விஷமிருக்கும். அவைகளைச் சாப்பிட்டால் வாந்தி குமட்டல், ஆரோசியம், வயிற்றில் நோவு, ஆயாசம், பேதி முதலியவை சம்பவிக்கலாம்.

சிகிச்சை:—கடுகுத்தூள், படிகாரத்தூள், உப்பு அல்லது கொழுப்பு முதலியவற்றில் எதையாவது கொடுத்து வாந்தி செய்விக்கவேண்டும். அதன்பின்பு பேதி உப்பில் 1 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து மலத்தைக் கழிக்கவேண்டும். உஸ்கி அல்லது பிராந்தியைக் கொடுத்து சைரியம் கொடுக்கவேண்டும்.

33. காளான்கள். சாப்பிடுவதினுல் கைகால்கள் குளிர்ந்து வாந்தி காணலாம். இதற்கு வெந்நீரில் ஏராளமான உப்பைக்கரைத்து வாந்திக்குக்கொடுத்து அதன்பின்பு காரமானகாப்பி (Strong Coffee) உஸ்கி பிராந்தி முதலியனவைகளைக் கொடுக்கவேண்டும்.

34. புகையிலை. குழந்தைகள் புகையிலையைத் தின்றுவிட்டால் வாந்தி, மயக்கம், திருஷ்டி குறைவு, நாடி பலவீனம் உண்டாகி உடம்பு குளிர்ந்து இருக்கும். விபரீதம் உண்டாகும்.

சிகிச்சை:—வாந்தியை ஜாஸ்தியாக்கி நோயாளியை பேசாமல் படுத்திருக்கச் செய்யவும். டீ, காப்பி முதலிய உஸ்தேக்கனைக் கொடுத்து உடம்பில் சூடுண்டாக்கவேண்டும்.

சில சுலுவான முறைகள்.

SOME SIMPLE HOME REMEDIES.

உப்பு (Common Salt) கரிப்பு, கடுஉப்பு, கல்லுப்பு என்று சொல்லப்படும். இது பாவனம் எப்பொழுதும் உபயோகத்திலிருந்தாலும் இதன் அருமையான உபயோகங்களைப் பற்றி சிறிது சொல்லுவது அவசியம்.

1. பல்வலி, காதுவலி, முகத்துத்தல் முதலியவைகளுக்கு உப்பை வறுத்து ஓர் துணியில் பொதிந்து வேதனையுள்ள விடங்களில் ஒற்றடங் கொடுக்க உடனே சுகங் காணும்.

2. தலையில் சுடல்சளியிருந்து வருகம் வெளிப்படுவதற்கு:—இரண்டு தேயிலைக்கரண்டி உப்பை வாயிலேபோட்டு மென்று தின்னவேண்டியது. அதற்கு முடியாவிடில் உப்பைத் தண்ணீரில் நிரமாய்ப் போட்டுக் குடித்துவிட, உதிரப்பெருக்கு நின்றுவிடும். இரத்தவாந்தியும் சுகமாகும்.

3. சிசுக்களுக்கு உண்டாகும் இசை, மாந்தம் (Croup) முதலியவைகளுக்கு. ஒரு தேயிலைக்கரண்டி உப்பை சமபாகம் தேனில் கலந்து கொடுக்க மிக்க அனுகூலமுண்டு. இந்த மருந்தில் கண்மையே யன்றி கெடுதி சேரிடாது. அனுபவத்தை பார்க்கலாம்.

4. வயிற்றோட்டம், வயிற்றுக்கடுப்பு முதலியவைகளுக்கு. (Diarrhoea & Dysentery) சுத்தகாடியில் (காடி. Vinegar) கலந்து அதில் உபயைக் கரைத்துக் கொடுக்க வயிற்றோட்டம், சீதபேதி முதலியவை நின்றுவிடும். இதைக் கொடுப்பதற்கு முந்தினநாள் ஒரு வேளைக்கரண்டி ஆமணக்கெண்ணெய் கொடுத்தால் கட்டாயம் குணம் காணும். கைகண்டமுறை.

5. விஷபேதிக்கு. (Cholera Morbus) முன்சொன்னபிரகாரமே வெண்ணீரில் காடியைக் கலந்து அதில் உப்பைக்கரைத்து அதில் ஒரு தேயிலைக்கரண்டி யளவு காரமான மிளகைத் தூள் செய்து கலக்கிக் கொடுக்கச் சுகமாகும்.

6. அஜீரணம், வயிற்றுப்பிசம் முதலியவைகளுக்கு. (Dyspepsia and Stomach Troubles, வயிற்றிலுள்ள சீரணக் கோளாறுகளுக்கு உப்புநிலாக்கியமானது. அரைத்தேயிலைக் கரண்டி உப்பை குளிர்ந்த ஜலத்தில் கரைத்துக் காலைப் போஜனத்திற்கு முன் சாப்பிட வயிற்றிலுள்ள நோய்களெல்லாம் பறந்தோடும்.

7. வயிற்றுவலிக்கு (Colic) ஒரு தேயிலைக்கரண்டி உப்பை அரைகோபபை குளிர்ந்த ஜலத்தில் கரைத்துக் கொடுக்க வயிற்றுவலி உடனே நிற்கும்.

8. வீரிய (Tonic) விர்த்திக்கு. உப்பு மிக்க பிரயோஜனமானது.

9. பேதிக்கும் குடலைச் சுத்தம் செய்வதற்கும். (Purgative, Internal Antiseptic, & External Stimulant) உப்பில நாலு முதல ஆறு டிராம் (தேயிலைகரண்டி) வரையில் கொடுக்க பேதியாகும். குடல் சுத்தமாகி பெலப்படும்.

10. தீபனகாரி. 10 முதல் 20 கிரோயின் வரை தண்ணீரில் கலந்து கொடுக்க பசி தீபனம் அதிகரிக்கும.

11. வாந்திக்கு (Vomiting) 2 அவுன்ஸ் உப்பை வெந்நீரில் கலந்து கொடுக்க வாந்தியாகும்.

12. கிருமிகளுக்கு. (Worms) உப்பு கலந்த தண்ணீரை ஆசனவாயினுட பீச்சு, வயிறறிலுள்ள கிருமிகள் வெளிப்படும்.

13. வீக்கம், வாதம், கீல்வாதம், சந்துவாதம், வலி முதலிய வைகளுக்கு உப்பை வறுத்து ஒற்றடம் கொடுக்கலாம்.

14. நஞ்சு முறிவு. (Antedote for Poisons) காடிக்காரத்தை (Silver nitrate) விஷமிகுமபடி தின்றயர்களுக்கும், மதசாரம் Alcohol) மிதமிஞ்சி உண்டவர்களுக்கும் உப்பைக் கொடுக்க விஷம முறிதலிடும.

15. சமுத்திர ஸ்நானம். (Sea-bath) சமுத்திர ஸ்நானம் செய்யவேண்டியவர்கள் அளவான உப்பை ஒரு தொட்டி ஜலத்தில் கரைத்து ஸ்நானம் செயவதால சுத்தமாகி அதிகும் பலமும் உண்டாகும்.

16. பல் துலக்க. (Tooth-wash) உப்பு பல்லிலுள்ள அழுக்கை (Tartar) அகற்றும. உப்பையும் சோடாவையும் சமபாகம் கலந்து பல் துலக்குவதற்காக உபயோகிக்கும பல்பொடியாக்கலாம்.

17. வாய் கொப்பளிக்க. (Mouth-wash) உப்பை ஜாண்டி பாய்த் தண்ணீரில் கலந்து வாய் கொப்பளித்தால் ஈறுகளுக்கு உறுதியுண்டாகும்.

18. சுளுக்கு வீக்கங்களுக்கு. (Sprains & Swellings) உப்புத்தண்ணீரை தாராளமாய விடடுத் சுழுவ வீக்கம் வற்றி சுளுக்கு நீங்கிப்போகும்.

19. முடிவளர். (Hair Tonic) உப்புத் தண்ணீரில் முடி நன்றாய வளரும்.

20. பீனிசத்திற்கு. (Catarrh) உப்புத் தண்ணீரைக் கையில் விட்டுக்கொண்டு கரியிலால் உறிய பீனிசம் நிற்கத்தியாவ துடன் இன்புளுயன்சா எனப்பட்ட சுரங்கள் வராவொட்டாது. பார்த்தால் வெளிக்கு அற்பமாகத் தோன்றும். இம்முறை பீனி சத்தை நிவர்த்தியாக்கும் உன்னத ஔஷதமென்பதை அறியவும்.

21. கண் கழுவ. (Eye-wash) கண்பனி, கண் வீக்கம், முதலியவைகளுக்கு அடிக்கடி உப்புத் தண்ணீரினால் கழுவி வந்தால் வியாதி நீங்கி பார்வை தெளிவாகும். பரீக்ஷித்துப் பார்க்கவும்.

22. சீத சுரத்திற்கு. (Ague) அரை அவுன்ஸ் உப்பைத் தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும்.

23. சுழி ரோகத்தாலுண்டாகும் (Hives) கமைச்சலுக்கு உப்புத் தண்ணீரில் ஸ்நானம் செய்ய நீங்கும்.

24. நெஞ்சேரிவுக்கு. (Heart-burn) சிறிது உப்பை வாயில் போட்டு உமிழ்நீரைக் குடித்துக் கொண்டிருந்தால் நெஞ்சேரிவு விட்டுவிடும்.

25. தொண்டைப்புண். (Sore-throat) உப்புத் தண்ணீரை வாயில் விட்டுக் கொப்பளித்துக் கொண்டிருந்தால் தொண்டைப் புண் மாறிவிடும். வேறு ஔஷதம் தேவையில்லை.

26. உரம். (Manure) கஞ்சை, புஞ்சை, தென்னைமரம் முதலியவற்றிற்கு உப்பை உரமாக உபயோகிப்பது உலகவழக்கம்.

27. தீனிக்கு. மனிதரின் ஆகாரங்களில் உப்பைச் சேர்த்துக் கொள்வதைபோலவே ஆடு மாடுகளின் தீனியிலும் உப்பைச் சேர்த்தால் தீனியின் ருசி அதிகரிக்கும். இரத்தம் சுத்தியாகும். மலஜலம் நன்றாய் வெளியாகும் வியாதி அணுகாது. வயிறுறி யுள்ள பூச்சிகள் மடியும். ஆட்டுக்கு வரும் வாழ்க்கை நோய் வராது. சொரி, மயிர் உதிர்தல் முதலியவை யிராது. பால் அதிகரிக்கும். பசுமாட்டிற்குத் தீனியோடு உப்பைக் கலந்து போட்டால் பால் கிர்த்தியாகும்.

கெரோசின் எண்ணெய். (Kerosine Oil.)

1. விஷ முறிவு. நஞ்சான பூண்டுகளை உட்கொண்டவர்களுக்கு விஷம் நீங்குமளவும் மண்ணெண்ணெயை சரீர முழுவதிலும் தேய்க்க சுகங்காணும்.

2. பொடுகு. (Dandruff) சிறிது மண்ணெண்ணெயுடன் கிளிசரின் (Glycerine) கலந்து பூச்சிவெட்டிய இடத்தில் தேய்த்துவர பொடுகு நீங்கிவிடும்

3. பேன். (Lice) பேன்பற்றிய இடத்தில் மண்ணெண்ணெய் தேய்க்க பேன் முதலிய ஜந்துக்கள் அழிந்துபோகும்.

4. தொண்டைப்புண், முளைக்கு. (Quincy, Croup, Diphetheria) மண்ணெண்ணெயை உள்ளுமபுறம்பும் உபயோகிக்கலாம்.

5. சுவாசசயப் புண்ணுக்கு. (Sore-Lungs) மண்ணெண்ணெயில் பத்து துளியை தினம் மூன்று அல்லது நான்கு தடவை உள்ளுக்குச் சாப்பிட்டு வருவதுடன், ஓர் துணியில் மண்ணெண்ணெயைதோய்த்து இரவில் படுக்கப்போகுமுன் மார்பில் சுற்றிக் கட்ட நுரையீரலின் அழற்சி நீங்கி புண் ஆறும்.

6. ஜலதோஷம். (Colds) சர்க்கரைக் கட்டியில் ஒரு சிறு துண்டெடுத்து அதில் பத்து துளி மண்ணெண்ணெயைவிட்டு இரண்டு அல்லது மூன்றுமணிக் கொருதடவை சாப்பிட்டு வருவதுடன், தொண்டையிலும் மார்பிலும் மண்ணெண்ணெயைத் தேய்க்க சுகமாகும்.

7. பல்வலிக்கு. (Tooth-ache) சிறிது பஞ்சை மண்ணெண்ணெயில் தலைத்து சொத்தைப் பல்லின் துவாரத்தில் அழுக்கி வைக்க பல்வலி நீங்கும்.

8. பாம்பு கடிக்கு. (Snake-bite) கடித்த விடத்தை மண்ணெண்ணெயில் அமிழ்த்தி வைக்க விஷம் வெளியாகிவிடும்.

9. சொரிசிரங்கு முதலிய சர்ம ரோகங்களுக்கு:-மண்ணெண்ணெயும் ஒலிவ எண்ணெயும் சமன கலந்து பூசுவதால் சரீரத்தின் மேலுண்டாகும் சொரி, சண்டி, தினவு முதலிய சர்வ சர்மரோகங்களும் நீங்கும்.

10. தேமற்பனை, படர்தாமரை, வண்டுகடி, முதலிய மேகப்படைகளுக்கு:—சுத்தமான மண்ணெண்ணெயை அடிக்கடி மேலில் தடவி சில மணி நேரங்களுக்குப் பின் சவுக்காரம் வெந்நீர் முதலியவைகளினால் எண்ணெய் தடவிய பாகத்தைத் தேய்த்துச் சுத்தி செய்தல் பிரயோஜனமடையலாம்.

11. எறும்புப் புற்றுக்கு:—சிறிது மண்ணெண்ணெயை விட்டால் காரம் காங்காமல் எறும்புகள் மாண்டுபோகும். மூட்டுப் பூச்சிகளுமப்படியே.

12. துர்க்கந்தம் நிறைந்த சாக்கடைகளில் மண்ணெண்ணெயை ஊற்றினால் பலிச்சாரம், பிளேக் முதலியவைகளைப் பிறப்பிக்கிற விஷக்கிருமிகளைக் கொல்லும் சக்தி இதற்குண்டு.

13. வாதரோகத்திற்கு. (Rheumatism) நோயுள்ள இடத்தில் மண்ணெண்ணெயைத் தாராளமாய்விட்டுத் தேய்க்க வேதனை அடங்கும்.

14. மூட்டுப்பூச்சி கொல்லி. (Bed-bug Destroyer) (Oil of Pennyroyal) ஆயில் ஆவ் பென்னிராயல் ஒரு அவுன்ஸ், ஸ்பிறிற் ஆவ் டர்பனடயின் (Spirit of Turpentine) ஒரு பெரிய சீசா (quart.) மண்ணெண்ணெய் 3 பெரிய சீசா இவைகளைக் கலக்கு வைத்துக்கொண்டு எங்கெங்கு இடங்களில் மூட்டுப்பூச்சி வாசஞ்செய்து முட்டையிடுமோ அங்கங்கு இடங்களில் விட்டுவர அவைகள் அடியோடு நாசமாகும். முட்டைகளும் அழிந்து போகும்.

15. (Kerosine Emulsion) கெரோசின் எமல்ஷன் சாதாரண சோப் (Common Soap) அரைப்பவுண், தண்ணீர் இரண்டு பெரிய சீசா (Two quart) கெரோசின் எட்டுப் பெரிய சீசா. சுத்தமான ஜலத்தில் சோப்பைச் சீவிப்போட்டு அது முழுவதும் கரையும்வரை அடுப்பேற்றி கொதிப்புப் போடவும். அதன்பின்பு சோப்புத் தண்ணீரை அடுப்பிலிருந்திறக்கி வெகு தூரத்திற் கப்பால்வைத்து சூடிருக்கும்போதே எட்டு பெரிய சீசாவிலுள்ள மண்ணெண்ணெயைச் சன்னஞ் சன்னமாய்விட்டுக் கிளறிக்கொண்டே யிருக்கவேண்டியது. அதன்பின்பு அதை கண்ணுப்க்கடைந்து கொண்டிருந்தால் வெண்ணெய்போல் முழுவதும் மாறிவிடும். இந்த எமல்ஷனில் ஒருபாக மெடுத்து பதுப்பாகம் தண்ணீர் விட்டு நன்றாகக் கலந்து வீட்டுப்பக்கங்களிலுள்ள கோழிக்கூண்டு முதலிய பூச்சிகள் உண்டாகக்கூடிய இடங்களில் தெளித்தால்

பூச்சிகளெல்லாம் செத்து சுத்தமாகும். டல் பூண்டுகளிலும் பூச்சிகள் விழுந்தால் இதைத் தெளிக்கலாம். மேற்படி கலப்போடு ஒரு பயிண்டு கார்பாலிக் ஆசிட் (Crude Carbolic Acid) கலக்கவைத்திக்கொண்டால் பினாயுக்குப் பதிலாக வீடுகள் சாக்கடைகள் கக்கூஸுகள் முதலியனவைக் கழுத்தம் பண்ணுவதற்கு உபயோகிக்கலாம்.

கருநோச்சி.

வீட்டுத் தோட்டங்களில் இருக்கவேண்டிய செடிகளில் இது ஒன்று. அது இருக்கும் இடங்களில் விஷப் பூச்சிகள் அணுகாது. இலையை தணிகளோடு வைத்தால் பூச்சிகள் சேராது. அரிசி மூட்டையில் போட்டு வைத்தால் வண்டுகள் அணுகாது. பிரசவித்த ஸ்திரீகளுக்கும் சரம் முதலியநோய்களில் அழுந்தி சுகமானவர்களுக்கும் கொஞ்சம் நொச்சியிலையை ஒரு தவலை தண்ணீரில் காய்ச்சி ஸ்நானம் செய்து வைப்பது நாட்டுவழக்கம். இதனிலையை வதக்கி சில்வாதம், கை கால்களில் திமிர் முதலிய வாதங்களுக்கு ஒற்றடமிடலாம். நொச்சிச் சாற்றை கட்டிகளின்மேல் பற்றுப் போட்டு வந்தால் கணைந்து விக்கங்கள் தணியும். நொச்சிச் சாற்றை தலைச்சுற்று, பிடரி, நரம்பிழுப்பு முதலிய சிதளத்தால உண்டாகும் வியாதிகளுக்குத் தடவி தன்னுய்த் தேய்ப்பதினால் நிவர்த்தியாகும். வீடுகளின் மூலைகளில் போட்டுவைத்தால் சில்லரைப் பூச்சிகள் அணுகாது. படுக்கைக்குக் கீழ் பரப்பி வைத்தால் மூட்டுப் பூச்சிகள் வராது.

காயங்கள் (Wounds.)

திடீரென்று ஏற்படக்கூடிய ஆபத்துகளில் காயப்படுதல் ஒன்றாகும். ஆகலால் அவைகளுக்கு சமயோசித சிகிச்சை தெரிந்திருக்க வேண்டும். காயங்கள் இருவகைப்படும் அதாவது:—

1. உட்காயங்கள். அதாவது, சரீரத்தினுட் பாகத்தில் ஏற்படக்கூடியவைகள் வெளிக்குத் தோன்றாது.

2. வெளிக்காயங்கள். அதாவது, தோல்கிழித்து சரீரத்திற்கு வெளியில் இரத்தம் பாயும்.

காயத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருக்குமாயின் சுத்தமான துணியைக் குளிர்ந்த ஜலத்தில் நனைத்துப் போட்டுக் கொஞ்சநேரம் அழுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தால் இரத்தப் போக்கு நின்றுவிடும். அப்படி நிற்காத பக்ஷத்தில் அவ்விரத்தம்

வரும் பிரதான இரத்தக் குழாய் எதுவோ அதைத் துணியினால் லேசாகக் கட்டி உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தால் இரத்தம் வெளியாகாமல் நிற்கும். காயத்தில் மண் முதலிய அழுக்கு பட்டியிருந்தால் இளவெந்நீரினால் அதைக் கழுவிப் போடவேண்டும். பெரிய இரத்தக்குழாய்கள் சேதப்பட்டு இரத்தம் பீறிட்டு வெளியாவதால் காயத்தின்மேல் விரல்களால் அழுத்திப் பிடித்துக்கொள்வதுடன், காயப்பட்ட இடத்திற்குச் சமீபத்திலுள்ள இரத்தக்குழாயைத் துணியினால் கட்டவேண்டும். கயிற்றினாலாவது அதிகம் இறுக்கியாதலும் கட்டக்கூடாது. இதற்காக ஒரு பங்கு கர்பாலிக் ஆசிடில் 40 பங்கு சுத்த ஜலம் கலந்து அதில் சுத்த மெல்லிய துணியை நனைத்து காயத்தின்மேல் வைத்துக் கட்டுவது உத்தமம். ஆனால் நிதைத் தயார் செய்யுமுன் காலதாமதமில்லாமல் சுறுசுறுப்புடன் கிடைக்கக்கூடிய சுத்த துணியை சுத்தஜலத்தில் நனைத்தாவது கட்டி இரத்தப்பெருக்கைத் தடுக்கப் பிரயாசப்படவேண்டும். ஏனெனில் இரத்தமோ உயிர். இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தால் உயிர்க்குச் சேதமாகும். ஆகையால் தைரியத்துடனும் தாட்சண்யமுடனும் இரத்தத்தை நிறுத்தவேண்டும். அதன்பின் டாக்டருக்கு ஆளனுப்பவேண்டும்.

டாக்டர் இல்லாத இடத்திலுள்ளவர்கள் கர்பாலிக் ஜலத்தில் நனைத்துப் பிழிந்த பஞ்சினால் காயத்தைச் சுத்தம் செய்து ஏழு பங்கு பொராசிக் ஆசிட் (Boracic Acid) உடன் ஒரு பங்கு ஐடோபாரம் (Iodoform) கலந்த பொடியாய்க் கொஞ்சம் பஞ்சினால் எடுத்துக் காயத்தில் தூவி அதன் வாயைப் பொருத்தும்படியாய் அழுத்தி மூடி அதற்குமேல் கர்பாலிக் ஜலத்தில் நனைத்துப் பிழிந்த மெல்லிய துணியில் ஒன்றின்மேலொன்றாய் ஐந்தாறு துண்டுகளைப் போட்டு மூடி அதன்மேல் பஞ்சை வைத்துத் துணியினால் கட்டவேண்டும். துணியைக் கட்டும்போது காயத்தின்மேல் போட்டிருக்கும் துணிபாவது பஞ்சாவது நகர்ந்து போகாமல் பிடித்துக் கொள்ள வேண்டும். அதன்பின் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவேண்டும்.

காயத்தின்மேல் இரத்தம் கட்டி உறைந்திருந்தால் அதைக் கழுவக்கூடாது. ஏனெனில், அவ்வாறே இரத்த வெளிப்போக்கை நிறுத்தும்.

காயங்களின்மேல் சினி, சர்க்கரை, இஞ்சி, கற்பூரப்பொடி, மண்தூள், பச்சிலைகள் முதலியவற்றைப் போடுவதனால் அவைகளிலுள்ள விஷக்கிருமிகள் இரத்தத்தில் தாவி நுன்னி பிறப்பிக்கலாம். ஆதலால் அவைகளை உபயோகிப்பது நன்றன்று. காயப்

பட்டவர்களுக்கு பிராந்தி முதலான லாகிரி வஸ்துக்களைக் கொடுத்தால் இரத்தக் குழாய்கள் விரிந்து இரத்த வெளிப்போக்கை ஜாஸ்தியாக்கும். ஆதலால் லாகிரி வஸ்துக்களைக் கொடுக்கக் கூடாது.

காயங்கள் சிக்கிரம் ஆறுமல் சீல் வைப்பதற்குக் காரணம் அசுத்தங்களை யாதலால் கர்பாலிக் தண்ணீரை அதிகமாய் உபயோகிப்பதுடன் காயங்களைக் கைகளால் தொடுமுன், நமது கைகளையும் கர்பாலிக் தண்ணீரில் கழுவிக்கொள்ளவேண்டும்.

தற்காலத்தில் நடந்த ஐரோப்பிய யுத்தத்தில் காயங்களுக்கும், சஸ்திரமுறிவுகளுக்கும், கருந்குழல்களுக்கும், டிஞ்சர் அயோடின் (Tincture Iodine) உபயோகித்து வந்ததாக வரைகிறோம். ஆதலால் கர்பாலிக் ஆசிட்க்குப் பதிலாக டிஞ்சர் அயோடின், பினாயர்ஸ் பால்ஸம் என்று சொல்லப்பட்ட நமது வேட்டுக் காய மருந்தை (Soothing Balsam) யாவது உபயோகிக்கக் கூடுமானால் அதிசிக்கிரத்தில் குணம் காணலாம்.

உட்காயம் கண்டவர்களை அக்கம் பக்கம் அசையாமல் மல்லாந்து படுக்கவைக்கவேண்டும். அடிக்கடி குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கக் கொடுக்கவேண்டும். ஐஸ்கட்டித் தண்டுகளைத் தின்னச் செய்வதும் நல்லது. ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்துவைத்து காற்றோட்டம் இருக்குமாறாய்ச் செய்வதுடன், விசிறியால் வீசிக்கொண்டிருப்பதும் நல்லது. நோயாளி பேசக்கூடாது. பேசாமல் அமர்ந்து படுத்திருக்கவேண்டும். பிராந்தி முதலிய லாகிரி வஸ்துக்களையும், காப்பி முதலான பானங்களையும் குடிக்கக் கூடாது.

எலும்பு முறிவு (Fracture.)

எலும்பு முறிந்திருந்தால் நாம் செய்யவேண்டிய விஷயங்களாவன :—

1. முறிந்த எலும்பின் தூளிகள் சதைகளைக் கிழித்துப் போடும் ஆதலால் முறிவுபட்ட எலும்பைப் பற்றாபஸ்து செய்யும் வரை நோயாளி கொஞ்சமாகிலும் அசையாமல் இருக்கவேண்டும். இடம்விட்டுப் பெயரக்கூடாது.

2. முறிவுபட்ட இடத்தில் வெளிக்காயமிருந்து அதன்வழியாய் இரத்தம் வெளியாகிக் கொண்டிருந்தால், இரத்தப்போக்கை

சிறுத்தவேண்டிய உபாயங்களைக் காணாது இருத்தப்போக்கை சிறுத்தினபின்புதான் எலும்பின் முறிவைப்பற்றிக் கவனிக்க வேண்டும்.

3. முறிவுபட்ட இடத்திலுள்ள அழிசலைக் கிழித்து அல்லது கத்தரித்து எடுக்கவேண்டும். கை, கால் முதலான இடங்கள் முறிவுபட்டிருந்தால் முறிவுபட்ட எலும்பின் மேல்பாகத்தை யும் கீழ்பாகத்தையும் பிடித்து இழுத்துவிட்டால் எலும்புகள் தன்னிலைக்கு வரும். அப்படிபார்த்து அதை நிலைபிடித்துக் கொள்ள மற்றவர் முறிபட்ட எலும்பின் மேல்முனை முதல் கீழ் முனைவரை நீளமுளளதும் இரண்டு முனைகளுக்கு அகலமுளள தான இரண்டு பலகைத் துண்டுகளை எடுத்து உள் மெளனிப்பாக்கங் களில் பக்கத்துக்கொன்றாக வைத்து பலகைக்குமாதபடி துணி யினால் கட்டவேண்டும். பலகைத் துண்டுகள் உடனே கிடைக்காவிடில் பக்கத்திலுள்ள எதாவது நாற்காலி, களிகள், குடைகள் முதலிய எந்த வஸ்துவையும் உபயோகிக்கலாம்.

சுளுக்கு. (Sprains.)

இதை சாம்பு சுருண்டுசென்று முடுக்கிக்கொள்ளுதல் சாதாரண நோய் கள் உருவி வீட்டிவிடுகிறதுண்டு. இது தப்பிதம். வாதகால் மூட்டு களில் அனாகதம் சிறு எலும்புகளோ ஒன்றோடொன்று இணைத்தும் ஜவ்வுகளும் நாம்புகளும் உண்டு. மூட்டுகளில் எதாவது அறுந்து அல்லது கிழிந்து போயிருக்கும். அதனால் சில பாகங்கள் தொங் கிக் அவ்விடத்தில் இரத்தகட்டிப் பிடிப்பு ஏற்பட்டு அந்தப் பாகத் தில் தடவிப் பார்த்தால் சற்று தடிப்பாயிருக்கும். இதை சாமபு சுருண்டிருக்கிறதென்று சாதாரணமாவது மருத்துவர்களாவது சுலபமாகமோட்டாகி.

சிகிச்சை. சுளுக்கின பாகம் முழங்கை அல்லது முழங் காலுக்குக் கீழே யிருந்தால் ஒரு பாத்திரத்தில் பொறுக்கக்கூடிய வெந்நீரை வாத்து சுளுக்கின பாகத்தை அதில் காடிமணி நேரமும் அப்புறம் அதைக் குளிர்ந்த ஜலத்தில் காடிமணி நேரமும் வைத்திருந்து எடுக்கவேண்டும். வலி அதிகமாயிருந்தால் அபின் திராவக (Laudanam) த்தில் ஒரு துணியை நனைத்து வலியுள்ள பாகத்தில் வைத்து அதன்மேல் கம்பளித் துணியை நன்றாகக் கட்டி வைக்கவேண்டும். சுளுக்குள்ள பாகத்தை அதாவது மூட்டை மறுபடியும் அசைபாமலும் வைத்துக்கொண்டிருந்தால் வீக்கம் சீக்கிரம் வற்றி வலி நீங்கும். சாமந்திப்பூவை வதக்கி ஒற் றடமிடலாம். அழவண பிலையை அரைத்துப் போல்டிஸ் கட் டலாம். டிஞ்சர் அயோடினையும் (Tinc-Iodine) உபயோகிக்கலாம்.

முழிப்பெயர்வு. (Dislocation.)

ஒரு எலும்பின் முழியானது தன் ஸ்தானத்தை விட்டு சிலபெயர்ந்து போகும்பொழுது அதைப்பற்றி நகுந்த அறிவுள்ள டாக்டர்களுக்குத தெரிவிக்கவேண்டும். தணியைக் குளிர்ந்த ஜலத்தில் நனைத்து முழியைச் சுற்றி வைத்துவிட்டால் அதிக வீக்கம் உண்டாகமாட்டாது. வலியும் குறையும். முழியைத் தேய்க்க வாவது உறுவிவிடவாவது கூடாது. ஆபாசமிருந்தால் காப்பி, டீ, கஞ்சி முதலிய சூடுள்ள பானங்களை குடிக்கக் கொடுக்கலாம். நகுந்த டாக்டர்களை முழிபெயர்வுக்கு வைத்யம் செய்யக்கூடியவர்கள்.

மூர்ச்சை படைதல். (Fainting.)

ஒருவன் மூர்ச்சையடைந்து விட்டால் உடனே டாக்டருக்கு தெரிவித்துவிட்டு குளிர்ந்த தண்ணீரை தெற்றியிலும் முகத்திலும் அடிக்கவேண்டும். கார்பொனேட் அம்மோனியா (Carbonate of Ammonia) என்னும் மருந்தை அல்லது நமது தேசத்தில் ஸ்மெல்லிங் உப்பை (Smelling Salt) யாவது மூக்குப்பக்கத்தில் வைத்து முகாசு செய்யவேண்டும். உடம்பிலுள்ள துணிகளைக் கழற்றி விடுங்காற்றோட்டமுள்ள இடத்தில கிடத்தி, விசிறிகளால் விசிறவேண்டும். கோயாளியை உட்காரவாவது, நிற்கவாவது, ஜன்னியாய் அசையவாவது விடக்கூடாது. ஜனங்களும் பக்கத்தில்கூடி சத்தம்படக்கூடாது. ஞாபகம் வந்ததும், காப்பி, டீ முதலான வஸ்துக்களைக் குடிக்கக் கொடுக்கவேண்டும். மூர்ச்சை யடைந்தவனுக்கு ஞாபகம் வரும்வரை உள்ளுக்கு ஆகாரமாவது, மருந்தாவது கொடுக்கக்கூடாது. மூர்ச்சையின் காரணத்தை யறிந்து அதற்குத் தகுந்த சிகிச்சை ஏதாவது செய்யவேண்டும்.

தீப்பட்ட காயங்கள். (Burns and Scalds.)

கட்டியிருக்கும் துணியில் நெருப்பற்றிவிட்டால் ஓடக்கூடாது. உடனே கைகளினால் தேகத்தை அணைக்கவேண்டும். அல்லது ஒரு மூடுதிரை துப்பட்டியை அல்லது சாகையைச் சுற்றிக்கொண்டால் சுவாலை அணைந்துபோகும். லேசாய் அவிழ்த்தாவது கிழித்தாவது துணியை எறிந்துவிடக்கூடுமானால் அப்படிச் செய்யலாம். பக்கதில ஜலமிருந்தால் கொட்டி யணைக்கலாம். அங்குமிங்கும் ஓடிவதறுகுப பதிலாய்த் தரையில் படுத்துப் புரண்டால் அணைந்து போகும். புதனிசுவாதீனத்தைக் கைவிடாமல் தைரியமாய்ச் செய்யவேண்டிய சமயோசித முறைகளைக் கையாடி வாவேண்டும்.

நெருப்புப்பட்டவர்களுக்கு காயத்தின் வேதனையைத் தணித்து அதனுண்டான அதிர்ச்சியின் குணத்தை மாற்றி அதன் பின்புதான் இரணம் ஆறும்படியான பிரயத்தனம் செய்யவேண்டும். இரணத்தின்மேல் காற்றுப்படவிட்டால் வேதனையும் எரிச்சலும் அதிகரித்து இரணம் விரியும். ஆகையால் உபயோகங்களை மெல்ல இரணத்தில் படாமல் எடுத்துவிடவேண்டும். இரணத்தின்மேல் படிந்து பிடித்திருக்கும் துணிகளை அப்படியே விட்டுவிட வேண்டும். பின்னால் அதை எடுத்துக்கொள்ளலாம். மற்ற துணிகளைக் கத்தரியினால் வெட்டி எடுத்துவிடவேண்டும். கொப்புளித்திருந்தால் அவைகளை ஊசியினால் குத்தி ஜலத்தை வெளியேற்ற வேண்டும். தோலைக் கிழித்துவிடக்கூடாது. அப்பால் ஒரு டாக்டர், கான்புளார், அரரூட்மாவு, அல்லது கலராப்பத் தெளிவிய அரிசி, அல்லது கோதுமை மாவு முதலியவைகளில் ஏதாவது மேற்படி ரணங்களில் காலணைக் கனம் அடர்த்தியாகத் தூவி அதன்மேல் சுண்ணாம்பு தெளிந்த, தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சமபாகங் கலந்து அதில் இரண்டு சொட்டு கார்பாலிக் ஆசிட் விட்டு கனமுப் அடித்து வரும் வெண்ணெயைத் தாராளமாகப் போட்டுப் பருத்தியை ஒரு அலது வாணலிக்குறுத்து முதலான மிருதுவான வஸ்துக்கள் போட்டு மூடி துணியினால் லேசாய்க் கட்டவேண்டும். வேதனையின் அதிர்ச்சியினால் அதிக வருத்தம் சேரிட்டால் மேலே சொல்லிய பிரகாரங்களைச் செய்யுமுன் கொஞ்சம் ஒயினாவது, பிராந்தியாவது தண்ணீர் கலந்து கொடுக்கவேண்டும். இடைக்காலியில், கொஞ்சம் காப்பித்தான் அதிகமாய்ச் சேர்த்துக் கஷாயம் இறக்கிக் கொடுக்கலாம்.

சிதளங் கண்டு கைகால் குளிர்ந்திருந்தால், படுக்கையின்மேல் கம்பளியை விரித்து அதனமேல் கிடத்தி மேலேயும் மெலிய கம்பளியினால் போர்த்தி மூடவேண்டும். வெந்நீர் அடைத்த சீசாக்களை கம்பளித்துணியில் சுற்றி கால்களின் ஓரமாயும், பகைகளிலும் வைப்பது நலம். மூன்று வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வயதுக்கு அரைத்தூளி வீதம் அபின் நீராவது முதல்தடவை கொடுக்கும் பிராந்தி அல்லது ஒயினுடன் கலந்து கொடுக்கலாம். இரணத்திலிருந்து துர்வாசனையாவது, சீழ்வது உண்டாகாதிருந்தால் முதல்தடவை போட்ட பஞ்சை மூன்று நாள்வரை எடுக்கக்கூடாது. இரும்பு மருந்து போடுகிற சமயத்தில் காண்டிஸ் புளூயிட் (Condy's Fluid) அல்லது கார்பாலிக் ஜலத்தினால் இரணத்தின்மேல் போட்டிருக்கும் பஞ்சை நன்றாய் நனைத்து ஊறவிட்டு ஒரு பக்கமாயிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சாதித்து, அந்த இடத்திலுள்ள அழுக்கை சுத்தமான சாதனத்தினாலாவது, பஞ்சியினாலாவது ஒத்தி சுத்தி செய்து உடனே மறுபடியும்

தேங்கா யெண்ணெயும் சுண்ணாம்புத் தெளிநீருங் கலந்த காரன் (Carron Oil) எண்ணெய், அல்லது வைகமாலும் விஞ்சீட் ஆயிலும் சேர்ந்த நமது நெருப்புக்காயத் தைலத்தைப் (Burns and Scalds Cure.) தாராளமாய்ப் பஞ்சினல் மூடிவிட வேண்டும்.

ஓர் சமயத்தில் காயம் முழுவதிலுமுள்ள பஞ்சை எடுத்து விட்டு சுத்தி செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அதில் காற்றுப்பட்டு புண் கொதிப்புக் கண்டு விசாலிக்கும். ஆறவாட்செல்லும். தீச்சுட்ட புண்களுக்கும் வெந்நீராணங்களுக்கும் காற்று சத்துரு. ஆதலால் காற்றுப்படாமல் சிறுகச் சிறுக எடுத்துச் சுத்திசெய்து உடனே மருந்துதாராளம் பூசி மூடி வந்தால் அதிசீக்கிரத்தில் குணமாகும். ரணம் ஆறிவரும்போது வெள்ளோப் பிளாஸ்திரி (Simple Ointment) யுடன் தேங்கா யெண்ணெய் சேர்த்து உருக்கிக் குளம்பாகச்செய்து அதில் மெல்லிய துணியைத் தோய்த்து இரணத்தின்மேல் போட்டு வரலாம். தர்மாமிசம் வளர்ந்தால் மயில் துத்தத்தைத் தடவி களரத்தும்போகும். முழிகளில் அல்லது அவைகளுக்கருகில் இவ்விரணங்கள் சேரிட்டால் ஆறினபின் தழும்பு சுருங்கி, முழிகள் நீட்டி மடக்க முடியாமல் போவதுமுண்டு. அப்படியாகாதபடி மூன்றுவிரல் அகலமுள்ள மூங்கில் பத்தைகளின்மேல் துணியை மடித்து வைத்து முழிகளை நீட்டி அம்மூங்கில்பத்தைகளின்மேல் வைத்துக் கட்டி வைக்கவேண்டும். இக் கட்டுகள் சுமார் இரண்டு மூன்று மாசங்களுக்கிருப்பது நலம். கட்டு அழுக்காதல் சுத்தமான துணி மாற்றி வைத்துக் கட்ட வேண்டும்.

தீயாவது வெந்நீராவது பட்டவுடன் தேனை அல்லது கறுப்பு மையை (Ink) அவ்விடத்தில் தாராளமாய்த் தடவினால் கொப்பளமாகாமல் உஷ்ணத்தின் குணம் மாறிவிடும். புளியங்கொட்டையின் மேல்தோலை முற்றிலு தேவகாயைத் திருகின பூவுடன் சேர்த்து அப்பிசைந்து பிழிந்தால் தைலமிறங்கும். இத்தைலத்தைக் காரன் எண்ணெய்க்குப் பதிலாக உபயோகிக்கலாம்.

ரணம் ஜாஸ்தியாயிருந்து அதனால் வேதனை சகிக்கக்கூடாமல் அதிகமாயிருந்தாலும், அல்லது வேதனையைப் பார்ட்டாமல் பிராணமெகாண்டதுபோலிருந்து முகம் கறுத்து அடிக்கடி குளிர்ந்த ஜலம் கேட்டால் இவை பிராணனுக்கு அபாயத்தைக் காட்டும் குறிகளென் றறிய வேண்டும்.

ஒருவன் சுண்ணாம்புக்குள் விழுந்து வெந்தால் காடி (Vinegar) யில் தண்ணீரைக் கலந்து பூசவேண்டும். கண்ணுக்

சூள் சுண்ணாம்பு விழுந்தால் காடியில் லாளமான தண்ணீரிட்டுக் கலக்கி கண்ணைக் கழுவவேண்டும். கண்ணுக்குள் அக்கினித் திராவகங்கள் விழுந்தால் சுண்ணாம்புத்தெளிநீரை அல்லது சிலைச் சுண்ணாம்பு (Chalk) அல்லது சுவரிலுள்ள சுண்ணாம்பு அல்லது சோடாமாவைத் தண்ணீரில் கலந்து கண்ணைக் கழுவவேண்டும்.

கந்தகத் திராவகம் (Sulphuric Acid) பட்டால் தோல் கறுத்திடும்.

வெடியுப்புத் திராவகம் (Nitric Acid) பட்டால் மஞ்சள் நிறமாகும்.

கறியுப்புத் திராவகம் (Hydrochloric Acid) பட்டால் வெண்மை யாளாகும்.

தீ முருகல் பாஷாணம் (Phosphorus) பட்டால் வெந்து போகும்.


சிகிச்சை. பட்ட இடத்தை சவுக்காரம், சாம்பல், அரப்பு இவைகளின் கலவையை வெந்நீரில் கலந்து அதனால் கழுவி, பிறகு மெழுகு களிம்பு போட்டு வைத்துக் கட்டலாம்.


புகையிலை பட்ட சுண்ணாம்பு வெங்காய ஜலம் இவைகள் பட்டால் வெந்நீருடன் சவுக்காரம் கலந்து அதனால் கழுவி, களிம்பு போடவேண்டியது. சம்மோசத்துக்கு கோழிமுட்டையின் வெள்ளைக் கருவும், காயத்துக்காதத்துக்கு கற்பூரம் ஆலமுடி விட்டுக் கழுவி பிறகு போடவேண்டியதைப் போடலாம். காய்கறி பூண்டுகள் (Vegetable Irritants) பட்டுக் காயுண்டாகும் வைத்தியத்துக்கு தண்ணீரை வெந்நீரிலாவது போட்டு, பிறகு களிம்பு இடவேண்டியது: காஞ்சொறி பட்டதற்கு புளியிலை ஜலம்விட்டுக் கழுவினால் குணமடையும்.

விஷக்கடிகள். (Poisonous Bites.)

இவைகளில் முக்கியமானவை, (1) பாம்புக்கடி. (2) நாய், நரி, பூனை, எலி, ஓநாய் முதலிய மிருகங்களின் கடி. (3) தேனீ. தேள், நட்டுவக்காலி, குரங்கு முதலியவற்றின் கடி.

இந்தியாவில் 213 தினுசுப் பாம்புகளிருக்கின்றன. அவைகளில் விஷமுள்ளவை 33 தினுசுகள் மாத்திரமே. அவைகளிலும்





கூட 2 தினுசுப் பாம்புகளின் கடிதான் மஹா விஷமுடையது. அவையாவன; நல்ல பாம்பு. இது படமெடுத்து ஊடும சக்தியுடையது. மற்றொன்று விரியன் பாம்பு. இதற்குக் கூழவாலும் மூக்கோணைத் தலையுமுண்டு. எல்லாப் பாம்புகளின் நாசித்துவாரத்திற்குமேல் மூப்போல் மடிந்திருக்கும் செதிலுண்டு. இந்த இரண்டு விஷப்பாம்புகளுக்கு மாத்திரம அவை கிடையாது. விஷப்பாம்புகளுக்கு மேல்தாடையில் இரண்டுபற்களுண்டு. அவைகளில் துவாரமுண்டு. அத்துவாரங்களின் மூலமாய் விஷத்தை ஆழப்பதிக்கும சக்தியுடையது.

விஷப்பாம்புகள் கடித்தால் இரண்டு பற்கள் .. இவ்விதமாகப் பதிந்திருக்கும். இரண்டு பற்களுக்குமேல் :: இவ்விதமாகப் பதிந்திருந்தால் அவைகள் விஷப்பாயபுளன்று. அல்லது விஷப் பற்களினால் உண்டான கடிகளல்ல.

இந்தியாவில் வருஷந்தோறும் சுமார் 2000 ஜனங்கள் பாம்புக் கடியினல் மரணமடைகிறார்கள். ஆதலால் பாம்பின் விஷத்திற்குத் தற்கால ஆங்கில டாக்டர்கள் உபயோகித்துவரும் ஔஷதங்களை இங்கு குறிப்பிடுவோம்.

குறிகள் :—பாம்பு கடித்தால் உண்டாகும் குறிகளாவன:—வாந்தி, குளிர்ச்சி, தோல் மஞ்சள் நிறமாவது, நாசியில இரத்தம் வடிதல், காது மெதுவாகவும் ஒழுங்கீனமாகவும் அடித்தல், கடைசியில் ஜன்னிகண்டு பிரக்ஞையற்றுப் போகுதல், கடிபட்ட இடம் ஜல்தியில் தடிப்புண்டாயி பாவுதல், வேதனையும் அதிகமுண்டாதல்.

பரிகாரம். பாம்புதான் கடித்திருக்க வேண்டுமென் றென்னுவதற் கிடமிருந்தால் உடனே கையாடவேண்டிய சமயோசித சிகிச்சைகளாவன:—

1. கடிபட்ட இடத்திற்குச் சிறிது தூரத்திற்குமேல் ஒரு சிறு மரத்தண்டை வைத்து உறுதியான கயிற்றினால் இறுக்கக் கட்டிப் பின்பு அந்த மரத்தண்டைக் கையில் பிடித்து இரண்டு மூன்று தடவை முறுக்கி விஷம் சரீரத்தில் பரவவிடாமல் தடுக்கலாம்.

2. ஓர் கூர்மையான கத்தியை அடிப்பில் காயவைத்து சிறு வை மாதிரி கடிபட்ட இடத்தில் ஆழ்ந்தி கறும் ரத்தம் வெளி யேறும் வரை பிதுக்கவேண்டும்.

3. வாயில் புண்ணொன்று வெயிற்பாலது இல்லாதிருக்குமா னால் கடிபட்ட இடத்திலுள்ள இரத்தத்தை வாயினால் உறிஞ்சித் துப்பிவிடவேண்டும். இரத்தம் வாய்க்குள் விஷமு ஏறினாலன்றி வேறெவ்விதத் தீமையும் உண்டாகாது.

4. எவ்வளவு இரத்தத்தை வெளியேற்றுகிறோமோ அதைப் பிதுக்கி வெளியேற்றிவிட்டு பொட்மாங்கனேற் ஆப் போட்டாசியத் தில் (Permanganate of Potash) சிறிதை கடித்தினுள் செலுத் திக தேய்க்கவேண்டும்.

5. காயத்திலிருந்து இரத்தம் வடிதல் நின்றபின் அரை விரித்துப் பிடித்துக்கொண்டு பழுக்கக் காய்ச்சின இரும்பினால் காயத்தை சுற்றுடச் சுடவேண்டும். அல்லது தகுந்தபுத் தணலில் அதனம்மல் வைத்துச் சுடலாம். மருந்து தூவாக்கி மருந்தை வைத்துக் கொளுத்தலாம். அல்லது கற்பூரத் தூளிடலாம், அதனினித் தீராலக மெனவறிந்தபின் பற்றிரிக் தூளிடலாம் ஐந் தாறு துளி அதினுள் விடலாம். கற்பூரத் தூளிட விஷத்திற்கு முறிவாதால் அதனையே சிலாக்கியம்.

6. கயிறு கட்டக்கூடாத இடத்தில் கடிபட்டிருக்குமானால் கடிவாயை யிழுத்துப் பிடித்துக்கொண்டு காலந்தாமதியாமலும் அசையக்குலுக்காமலுமுள்ள பாகத்தை அறுத்தெடுத்துவிட்டு அப் பால் 5-வது நம்பரில் சொல்லிய பிரகாரத்தைச் செய்யவேண்டும்.

7. கோயானியை அரிக்கையாகப் பிரித்தலைத்த 30 துளி பிராந்தியும், 30 துளி ஸ்பிரிற்ஸ் அம்மோனியாவும் (Spirits of Ammonia) ஒரு தேக்காண்டி ஜலத்திற் கலந்து காலைமணி தோத் தோறு கொருமுறையாக நாலைந்துதட்டை கொடுக்கவேண்டும். ஆனால் கோயானிக்கு மயக்கமுண்டாகக்கூடிய அளவு கொடுக்கக்கூடாது.

8. விஷத்தின் குணம் அரையளவு தோத்திற்குள்ளாகக் காணுதவிஷபதத்தில் மேலேயிருந்து கட்டுகளைக் கொஞ்சம் கொஞ்

சமமாகத் தளர்த்திவிட்டுப் பார்க்கவேண்டும். கட்டு தளர்ந்தவுடன் விஷமேறுவதா யிருந்தால் விஷத்தின் குணம் மாறும்வரையாவது அல்லது கட்டுகளினடிப்பாகம் இரத்த ஓட்டமின்றி குளிர்ந்து கறுத்துப்போகும் வரையாவது திரும்பக் கட்டுகளை இறுக்கி வைக்கவேண்டும்.

9. தாது விழுந்து தேகத்தில் சிதளங்கண்டால் கெண்டைக் கால்சளியும் நெஞ்சிலும் கடுகுப் போல்ற்றீஸ் கட்டிப் பாதங்களிலும் விலாப்பக்கங்களிலும் வெங்நீரடைத்த சீசாக்களைக் கம்பளியிற் சுற்றி வைக்கவேண்டும். நோயாளிக்குத் தைரியஞ் சொல்லி உற்சாகப்படுத்த வேண்டும். இங்ஙாட்டு வழக்கப்படி தலையை விரித்துப் போட்டு நோயாளியைச் சுற்றி உட்கார்ந்து, மார்பிலும், வாயிலும், தலையிலும் அடித்து அழக்கூடாது. அதிக ஆத்திரத்தையும் துக்கத்தையுங் காட்டவுங் கூடாது.

10. பல இடத்தில் குத்திப் பார்த்து விஷமில்லையென்று நிர்மானித்தக்கொண்ட பிறகுதான் கட்டுகளை அவிழ்க்கவேண்டும். பல யிடத்தில் கீறிப் பார்ப்பதினால், அல்லது புண்வாயை முதலில் கத்தியினால் பெரிதாக்கிக் கொண்டு இரத்தத்தை வெளியாக்குவதினால், அல்லது புண்ணைத் தீயினால் அல்லது அக்கினித் தாவகத்தினால் சுடுவதினால் நோயாளி மரிக்கவிடமாட்டான். விஷத்தை எடுக்காமல் எறிஞ்சிட்டுவிட்டால் நிச்சயமாய் மரிப்பான். ஆகையால் மேற்சொன்ன உபாயங்களை பயமில்லாமலும், சுறுசுறுப்பாகவும், காலதாமதமின்றியும் செய்ய வேண்டும். எவ்வளவு சீக்கிரமாய் செய்கிறோமோ அவ்வளவு நன்மை உண்டாகும். மனிதனும் ஜீவிக்க இடமுண்டாகும். "ஆபத்துக்குப் பாவமில்லை" யென்றபடி ஜீவனுக்கு அபாயமிருக்கும்போது முன்பின் யோசிக்காமல் செய்யவேண்டும்.

இதனடியிற் கண்ட மருந்துகளையும் உபயோகிக்கலாம். உள்ளுக்கு சாராயம், கவச்சார ஜலநீர் (Liquor Ammonia) யூடிலான் (Eu De Luce) இவைகளில் ஒன்றை கடியுண்டவன் விரும்பும்படியான அளவுக்கு கொடுத்தச் சுகமாவதுமுண்டு. சிலர் பாலை அரைத்துக் கொடுத்து வாந்தியாகும்படி செய்கிறார்கள். பாம்பு கடித்த விடத்தில் கோழியின் தொடையில் ஒரு பாகத்தை பறித்து அந்தக் கோழியை ஒட்டி வைத்தால் விஷம் கோழியில்தானி அதை செத்தும்போகும். அதன்பின்பு மறுகோழியையும் அப்படியே செய்து விஷத்தை இறக்கி ஆளைப் பிழைப்பித்தனாய்ச் சிலர் சொல்லுகிறார்கள். கடியுண்டவன் உச்சியைக் கீறி தும்பைபிலை ரசத்தை அதில் விட்டுத் தேய்த்து உள்ளுக்கும் கொடுக்கலாம்.

ஆடு தீண்டாப் பாளையை அளவுத்து வெள்ளாட்டுப்பாலில் கலக்கி உள்ளுக்குக் கொடுத்தால் விஷம் இறங்கிவிடும். எருக்கன் பாலை கடித்தவிடத்தில் தடவி, எழு முதல் பத்து தினை மோரிலாவது தண்ணீரிலாவது கொடுத்தால் விஷம் இறங்கும்.

கொச்சி, தும்பை, குப்பைமேனி, ஊதலேலை, எருக்கிலை முதலிய இலைகளில் ஒன்றை வதக்கி சாற்றை கடிவாயில் விடுவது காட்டு வழக்கம். தினசியிலை சாற்றைக் கண்ணுக்கு அஞ்சனம் இடுவதும் உண்டு. பத்திராசிக் கிழங்கு அல்லது கசப்புக் கொவைக்கிழங்கை வாங்கித் தூள் செய்து இரண்டு காசியிடை எடுத்துத் தண்ணீரில் கலந்து கொடுத்தால் வாந்தியாகும்.

அருதாசெடி:—இதின் முற்றின வேரை பாம்பின் முன் போட்டால் படம்மடிக்காமல் அடங்கிக்கொள்ளும். அதைக்கொண்டு தான் பாம்பாட்டிகள் பாம்பைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

மண்ணுளிப் பாம்பு கடித்தால் கல்லெண்ணெயும் கூழும் கலந்து ஒருயாமம் வரையில் உள்ளுக்குக் கொடுப்பதண்டு.

பச்சைத் தவளை மாமிசத்தை உப்பு, கல்லெண்ணெய் அல்லது வெண்ணெயுடன் கலந்து தின்றால் சூல பாபம் விலகும் நிசம். மறுதினம் வரையில் நித்திரை கூடாது.

2. மிருகங்களின் கடி:—நாய், நரி, நரி, ஓநாய் முதலிய மிருகங்கள் பயித்தியங் கொண்டிருக்கும்போது மாத்திரம் கடித்தால் விஷமேயன்றி மற்றப்படி கடித்தால் விஷமாகாது. ஆதலால் கடித்த ஜந்துவை உடனே கொன்றுவிடாமல் பிடித்துக் கட்டி வைத்து பைத்தியங் கொண்டதோ அல்லவோ என்று அறிய வேண்டியது அவசியம்.

சிகிச்சை:—பாம்புக்கடிக்கு சொல்லி யிருக்கும் சிகிச்சையை யே இதற்கும் செய்யலாம். மேற்படி நாய் கடித்தால் அதின் விஷம் நாலு நாள் முதல் இரண்டு வருஷம் வரை கடித்த யிடத்தில் தங்கி யிருந்து அதன் குணத்தைக் காட்டும் தன்னுடையுள்ளதாலையால், பாம்பு விஷத்திற்குச் செய்வதைப்போல் இதற்குக் கட்டை வெகு நேரம இறுக்கி வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சிறு வயதுள்ளவர்களுக்கு சிகிச்சாத்தில் குறிகள் காணும். கழுத்து, மார்பு, இவ்விடங்களிலிருக்கிற சதைகளுக்கு இசிவுகாணும். தண்ணீரைக் கண்டால் பயமுண்டாகும். ஆகையால் ஜலரூபமாய் எதையும் கொடுக்கலாகாது. அசட்டல், புரட்டல், ஏக்கம், விகாரம், தளர்ச்சி, நித்திராபங்கம், நரம்புவலி முதலியபலவகள் கண்டு, முடிவில்

மரணமுண்டாகும். ஆகலால் கடித்த உடனே சிகிச்சை செய்ய வேண்டும். அல்லது இதற்காக காருண்ய சவர்ன்மெண்டார் பற் பல இடங்களில் ஸ்தாபித்திருக்கும் நாய் கடி வைத்யசாலை என் னும் (Pasteur Institute) க்குக் கொண்டுபோய் சிகிச்சை செய்ய வேண்டும். அப்படி செய்யாவிடில இந்த அசாத்திய ரோகம் சுக மாகாது. உயிருக்கு மோசமுண்டாக்கும்.

கடித்தவுடன் காயத்தை ராளமான சுத்த ஜலத்தினல் சுத் தம் செய்து காடிக்காரத்தை (Silver Nitrate or Lunar Caustic) வைதது செவ்வையாய்த் தேய்க்கவேண்டியது. காயத்தின் வயாரம் சிறிதாயிருந்தால் குருதியினற் கீறி சற்றாய் பெரிதாக்கிச் கொள்ள வேண்டும். அல்லது காடிக்காரத்தைத் தூள் செய்து உள்ளே செவ்வையாகச் செலுத்தலாம். காடிக்காரம் கைவசமில்லா தபோனல் இரும்புக் கம்பியைப் பழுக்கக் காயவைத்துக் கடி வாயினுள் செலுத்த வேண்டும். அல்லது கார்பாலிக் ஆசிட் (Carbolic Acid) போடலாம்.

வேதனையைத் தணிப்பதே முக்கிய பிரயத்தனமாதலால் குளோரபாரத்தை ஆக்கிராணம் செய்து வைக்கலாம். அபின், பிருசிக் ஆசிட, கஞ்சா இவைகளில் எதையேனும் கொடுக்கலாம். எருக்கமபால அல்லது எள்ளிப்பால்தடவுகிறதும், காயத்தினமேல் பைசாலை வைத்து பாதபணிஷபால் அடிதது, பிரண்டையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து காயத்துக்குக் கட்டுவதும நாட்டு வழக்கம். கடித்த நாயின தலையை அகஷணமே யறுத்து கடிபட் டவன் சிரசின்மேல் வைத்து 101 குடம் பச்சை ஜலம் விடுவது மலையாள சிகிச்சையாம. இத அசாதாரண ரோகதுக்கு, காயுருவி முளைகளைச் சர்க்கரை சேர்த்துப் பிசைந்து கொடுத்தால, சவுகரி யப்படுமென்று சொல்லுகிறார்கள்.

எலிகடி விஷம்:—எலிகள் ஒன்றோடொன்று சண்டைசெய் து கோபமா யிருக்கையில் தேகத்தின்மேல் விழுந்து கடித்திவிட் டால் அதில ஓர்வகை விஷமுண்டு. அதினல அமாவாசைதோ றும் தேகமெங்கும் வீக்குவதும, சுரமடிப்பதும், தேகத்தில் தடிப் புகள் காண்பதும் உண்டு.

சிகிச்சை:—இதறகு உடனே கடித்த இடத்திலுள்ள காயத் தை மேற்சொலலியபடி காடிக்காரத்தினல அலலது பழுக்கக் காய்ச்சின இரும்புக் கம்பியல சுட்டு கிரமபபடி சிகிச்சை ஆற்ற வேண்டும். கவலித தாம்சியினல் விஷம் தேகத்தில் வியாபித்து மேலே சொல்லிய தீர்க்குணங்களைக் காட்டினல் பின்குறித்த மரு ந்தை சாப்பிடக் கொடுத்து வரவேண்டும்.

அய திராவகம் (Steel Drops)	1 திராம்
குயினை (Quinine)	5 கிரெயின்
பேதி உப்பு (Epsom Salts)	1 திராம்
இப்பிக்காக் ஒயினை (Vin Ipecac	1 திராம்
ஸ்பிரித் குளோரபாம் (Spts-Chloroform)	30 துளி
காஞ்சிரத் திராவகம், எட்டி விதை டைத் திராவகம் (Tinct-Nucis Vomic	40 துளி

சுத்த ஜலம் சேர்த்து 3 அவுன்ஸ் கலக்கி 2 மணி அளவு தினசரி காண்குலேனா கொடுக்கலாம்.

குறிப்பு:—இந்த ஔஷதத்தை சாக்கடைப் கூடிய வயிற்றுப் போக்குடனிருக்கும், காயச்சல் கட்டியின்போதில் விக்கத்திற்கும் கொடுக்கலாம்.

ஓணான், அரணை:—முதலிய நஞ்சுகளினால் நேரிடைகள் பிடித்து விளையாடுவதுண்டு. இவைகள் கடித்தாலும் ஔஷத விஷம் கடிவாயில் சிலகாலம் இருந்து அப்பால் தேகத்திற் செலுத்தப்படுவதினால் கடித்த இரண்டொரு தினங்களுக்குள்ளாக உடம்பிலெதாவது முள்ளை எடுத்து விடுவதுபோல் கடித்த இடத்தில் காடிக்காரமாவது, காஸ்டிக்காவது கொண்டு சுடுவதே முக்கியமான சிகிச்சையாகும்.

தேள், கட்டுவெக்காலி, தேனீ, குளவி முதலியன கொட்டினதற்கு:—கொட்டினவுடன் கொடுவாய்க்கும்மல் கயிற்றால் கட்டிவிட்டு அடியிற் கண்ட மருந்துகளில் எதையாவது உபயோகிக்கலாம்.

நடுவில் அவாரமுள்ள ஒருசாகியின் அவாரத்தை கொட்டின இடத்தின்மேல வைத்து அழுத்தினால் ஒடிந்த கொடுக்கு மேலே வெளிப்படும். காடிக்காரம், (Silver Nitrate or Lunar Caustic) நவச்சார ஜலநீர், (Lint. of Ammonia) வலியுப்புத் திராவகம் (Potash Nitrate) இவைகளில் ஏதாவதை தடவினால் விஷம் முறிந்துவிடும். விஷம் மேலுக்கு ஏறிவிட்டால் எதுவும் பிரயோஜனமிராது. இப்படிக்கான காரமான அம்மோனியா திராவகமிடுக் குழைத்துக் கொட்டின இடத்தில் பூசலாம். மேலும், மின்சாரக்கம்பியை (Electric Shock) வைத்துக் கொட்டின இடத்தில் பிடித்தாலும் இரண்டொரு நிமிஷத்தில் நின்று போகும். சுகந்த சோஜா என்னப்படும் லில்லி (Lily) வெண்

புஷ்பங்களைப் புஷ்பிக்கும் செடியின் இழுங்கை உரசி கொட்டின வாயில் பூசி, மெருப்புச் சூட்டில் பிடித்தால் இரண்டொரு நிமிஷத்தில் வலி, கடுப்பு முதலிய சகலஉபத்திரவமும் நிற்கும். இதை விட சிலாக்கியமான ஔஷதம் வேறில்லை.

இதைத் தவிர, நாயுருவிப் பூண்டின் கொழுந்தைக் கசக்கித் தேய்க்கலாம்.

சுண்ணாம்பு, ஒட்டடை இலைகளைச் சேர்த்து அரைத்துப் பூசலாம்.

புளியங்கொட்டையைத் தோல் நீக்கிப் பருப்புத் தெரிகிற வரையில் தேய்த்து, கொட்டின வாயில் வைத்தால் ஒட்டிக்கொள்ளும். விஷம் அதில் இறங்கின பிறகு விரையின் நிறம் மாறி விழுந்து விடும்.

உருளைக்கிழங்கைக் கத்தியினல் சீவி அரைத்துப் போடுவதும் உண்டு.

பெருங்காயம் பூசலாம்.

கால், கைகளில் கொட்டி யிருக்குமானல் ஒரு பாத்திரத்தில் பொறுக்கக்கூடிய வெந்நீரை வார்த்து அதில் ஒரு சோங்கை உப்புப் போட்டு அதனுள் கொட்டின பாகத்தைச் சற்றுநேரம் வைத்திருந்தால் வலி, கடுப்பு நீங்கும்.

நீக்குச்சினின் அடியில் இருக்கும் சிவந்த மருந்தை ஐலத்தில் உரைத்துப் போட்டாலும் வலி நீங்கும்.

கோழியின் மலப்புகையைக் கொட்டின இடத்தில் கொடுக்கலாமென்றும், வெள்ளை குண்டுமணி வேரை வெந்நீரில் விட்டரைத்து, பிழிந்து வடிகட்டி, பஞ்சியில் ஊட்டிக்கொண்டு இடதுபக்கம் கொட்டினல் வலது மூக்கிலும், வலது பக்கம் கொடடினல் இடது மூக்கிலும் நசியம பண்ணத் தீருமென்றும், கடுவெக்காலி கொட்டலுக்கு, எட்டிவேரின பட்டையை அரைத்து பெரிய நெல்லிக்காய்ப் பிரமாணம், அரை ஆழாக்கு வெந்நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுத்து, கொட்டின இடத்தில் கத்தரிக்காயைச் சுட்டுக் கட்டும்படியாயும், ஜீவாசுஷாபர்தத்தில் கண்டிருக்கின்றது. குளோரபாரமாவது, ஈதர் என்னும மருந்தாவது தடவினல், சில விட்டு வேதனை வகு சீக்கிரத்தில் தணிந்துவிடும். கைகண்டது.

ஜலத்தில் அமிழ்ந்தினவர்களுக்கு சிகிச்சை.

ஜலத்தில் தவறி விழுந்தவர்கள் தமது உயிர் தப்பும்படி கை களையும் கால்களையும் அசைப்பதினால் சிக்கிரம் நிறைய தண்ணீரைக் குடித்து அமிழ்ந்து விடுகிறார்கள். அப்படிக்கில்லா மல் மூச்சை உள்ளடக்கி நிம்மதியாய் மல்லாந்து படுப்பதுபோல் பாவனை பண்ணினால் மிதந்துகொண்டே யிருக்கலாம். இதற்கிடை யில் பக்கத்திலுள்ள எதையாவது பிடித்துக் கரையேறலாம். இவ் வித ஆபத்துகளுக்கிடமில்லாமல் சிறு பிராயத்திலேயே நீந்தப் பழக்குவிப்பது பெற்றோரின் கடமை.

ஜலத்தில் அமிழ்ந்தினவர்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டு விட்டதென்று நினைத்துவிடக்கூடாது. கால்மணி, அரைமணி நேரம் வரை ஜலத்தில் அமிழ்ந்தி யிருந்தவர்கள் பிழைத்திருப்பதாக வும் தகுந்த அத்தாட்சி யிருக்கிறது. உடனே டாக்டருக்கும், கம்பளி, தப்பாவான வஸ்திரங்களுக்கும் ஆளனுப்பிவிட்டு, சுவா சம் விடச் செய்வது முதல்காரியமாகச் செய்யவேண்டும். அதன் பின்பு உஷ்ணமுண்டாகி, இரத்த ஓட்டம் பாவுதற்கான வழிக ளைச் செய்யவேண்டும்.

1. நோயாளியைக் குப்புறக் கிடத்தி அவன் நெற்றியை அவனது வலது முன்னங்கையில் வைத்து வாய் வழியாக ஜலம் வெளியேறும்படி இரண்டொரு நிமிஷம் அப்படிக் கிடக்கச் செய்ய வேண்டும்.

2. ஒரு பெரிய துணியை மடித்து, அல்லது ஒரு தலையணையை வயிற்றிற்கும் அடியில் வைக்கவேண் டும்.

3. நாசித்துவாரங்களையும், வாயையும் சுற்றுப் துடைத் துச் சுத்தம் செய்துவிட்டு வாயைத் திறந்து நாக்கைப் பிடித்து வெளியே இழுத்து, ஒரு துணியினால் அதைத்தாடையோடு சேர்த் துக் கட்ட வேண்டும். நாக்கு நழுவி மறுபடியும் வாயிற்குள் போகும்படியாய் விட்டுவிடக்கூடாது.

4. அநிசிக்கிரமாக நனைந்த துணிகளோத் களைந்துவிடவேண் டும். கூடுமானால் அவற்றை எடுத்துவிட்டு வேறு வஸ்திரம் போட வேண்டும்.

5. பிற்பாடு நுரையீரலினுள் சுவாசக் குழாயின் வழியாய்ப் போய்த் தங்கியிருக்கும் தண்ணீரானது வெளியேறுதற் தக்கதாக

அவன்மேல் முட்டிப்போட்டு அல்லது அவனுடைய விலாப்பக்கத் தினைக் கையிலல்ல நன்றாய் அமுக்கி ஆறு எண்ணும்வரை வைத்திருந்து பிறபாடு அவனை உருட்டி அப்படியே அமுக்கவேண்டும். இப்படித் திரும்பத் திரும்ப அமுக்குவதனல் சுவாசப்பை, சுவாசக் குழாய்கள், தொண்டை, வயிறு முதலான யிடங்களிலுள்ள ஜலம் வெளியேறும். இவ்வாறு வெளியேறும்வரை இப்படிச் செய்ய வேண்டும்.

6. உயிர்ப்பித்தல். (Artificial Respiration.)

(1) சரீரத்திற்குள் சென்றிருக்கும் ஜலம் வெளியானதும் சுவாசமுண்டாகவும், நாடிகள் அடிக்கச் செய்யவும் முயற்சிக்க வேண்டும். நோயாளியை மல்லாந்து படுக்க வைக்க வேண்டும். தலைக்கடியில் ஒன்றும் வைக்கக்கூடாது. கால்களைச் சிறிது உயர்த்தி வைக்கவேண்டும்.

(2) சரீரத்தின் மேலுள்ள எல்லா உடைகளையும் நீக்கிவிட வேண்டும்.

(3) ஒரு தலையணையை முதுகுப் பக்கத்தில் இரண்டு தோள் பட்டைகளுக்கும் நடுவில் வைத்து தோள்களை உயர்த்தவேண்டும்.

(4) நோயாளியின் தலைப்பக்கத்தில் முழந்தாளின்றுகொண்டு நோயாளியின் முழங்கைகளைப் பிடித்துக்கொண்டு நேரே தலைக்கு மேலாக மெதுவாய் உயர்த்தி ஒரு விநாடி வைத்திருந்து திரும்ப அவைகளைக் கீழே விலாப்பக்கமாகக் கொண்டுவந்து அவனத்தி இரண்டொரு நிமிஷம் விலாவுடன அமுக்கவேண்டும். இவ்விதமாக ஒரே அளவாய் நிமிஷத்திற்கு பன்னிரண்டு, பதினைந்து தடவை செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் கைகளைத் தலைக்குமேல் உயர்த்தும்போது சுவாசம் நுரையீரலுக்குள் தானிச் சென்று, கைகளைக் கீழே கொண்டு வந்து விலாவோடமுக்கும் போது சுவாசம் வெளியேற போகும். இவ்விதமாகச் செய்து வரவே, பத்து அல்லது பதினைந்து நிமிஷத்தில் சுவாசம் சுயமாக ஸ்தாபகமாகி விடுவதுமுண்டு சுபாவ சுவாசம் வந்துவிட்டதென்று நிறுத்திவிடக்கூடாது. சுபாவ சுவாசமும் சமமுடைய முயற்சி களும் ஒன்றுபோல் நடக்கவேண்டும்.

7. இவ்விதமாகச் செய்து சுவாசம் உண்டானவுடனே பக்கத்திலுள்ள சிலரைக் கொண்டு, கால், தொடை, வயிறு, விலா முதலான பக்கங்களை மேல்நோக்கித் தேய்க்கச் சொல்லவேண்டும்.

மற்றொருவனை கார்பனேட் ஆவ் அம்மோனியா (Smelling Salt) என்ற மருந்தை எடுத்து நாசித்துவாரங்களில் அடிக்கடி காட்ட வேண்டும். வேறொருவர் குளிர்ந்த ஜலத்தை எடுத்து அடிக்கடி முகத்திலும் நெற்றியிலும் பலமாய் அடிக்கவேண்டும்.

சுய சுவாசம் சரியானபடி ஏற்பட்ட பிறகு அரை அவுன்ஸ் பிராந்தியை அரை அவுன்ஸ் ஜலத்தோடுகலந்து கொஞ்சம் கொஞ்சமாய் வாயில்விட்டுக் குடிக்கச் செய்ய வேண்டும். கம்பளியினால் நோயாளியை மூடி வைக்கவேண்டும். அநேக பெரிய சீசாக்களில் வெந்நீர் நிரப்பி நன்றாய் மூடி கால்களிடையிலும் வெளிப்பக்கத்திலும் வைக்கவேண்டும். இப்படிச் செய்வதினால் உடம்பில் சூடுண்டாகும். சீசாக்கள் கிடைக்காத பக்ஷத்தில் செங்கல் கட்டிகளைக் காயவைத்து, அல்லது மணலை வறுத்துக் கட்டிப் பக்கங்களில் வைக்கலாம். ஆனால் சரீரத்தில் பட்டுப் புண்ணாகிடாமல் ஜாக்கிரதையாய் வைக்கவேண்டும்.

9. இனிமேல் நோயாளியை சித்திரை செய்யவிடலாம். கூச்சலிட்டு ஒருவரும் பேசக்கூடாது. ஆள் கூட்டமும் ஆகாது.

10. குறைந்தது காலிலுக்குமணி நேரம்வரை ஆட்கள் கூடயிருந்து பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் மூச்சு மறுபடியும் நின்றுவிடக்கூடும். அப்படி நின்றுவிடில் மறுபடியும் முன்போல் ஆரம்பித்துச் செய்யவேண்டும்.

தகாத வஸ்துக்களால் நேரிடும் அபாயங்கள்.
(Accidents with Foreign Substances.)

குழந்தைகள் தமது கையில் அகப்படும் வஸ்துக்களை தமது வாயில் போடுவது வழக்கம். சில சமயங்களில் அவற்றை விழுங்கி விடுவார்கள். ஆகலால் காயங்கள், வாசிகள், பொத்தான்கள், சிப்பிகள், பேனாக்கத்திகள், உருண்டைக் கற்கள், நிமபள், கோலி வகைகள், புளியங்கொட்டை முதலிய வஸ்துக்களை எடுத்து வாயில் வைக்கும் வழக்கத்தைப் பெற்றோர் கவனிக்கவேண்டியது அவசியம். இவற்றில் ஏதேனும் தொண்டைக்குள் சென்றுவிட்டால் வாயைத் திறந்து ஒரு மரச் சக்கையைப் பற்களின் ஒரு பக்கத்தில்கொடுத்து வாயை விரிவாக்கித் தொண்டைகருள் விசிலிட்டுப் பார்த்தால் விழுங்கின வஸ்து விசிலை மாட்டிக்கொண்டு வந்துவிடலாம். அல்லது அதனால் வாந்தியுண்டாகி அத்துடனே மேற்படி வஸ்துவும் வந்துவிடலாம். வாந்திக்கும் வெளியாகாமல் அந்த வஸ்து வயிற்றிற்குள்ளே போய்விட்டால் அதை மலத்தில

ன் வெளியேற்ற வேண்டும். இதற்காகப் பேதிக்குக் கொடுப்பது காட்டு வழக்கம். இது மகா தப்பிதம். அப்படிக்கொடுப்பதால் மலம் சுருங்கி வெளியேற நாணயம் முதலியவை உள்ளே தங்கிக் கொள்ளும். திரும்பப் பேதிக்குக் கொடுத்தால் பலவீனமுண்டாகும். ஆகையால் பேதிக்குக் கொடாமல் அதற் கெதிரிடையாக மலங்கட்டும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக ஜாதிக்காயைப் பாலில் உரைத்துக் கொடுக்கலாம். அரளுட்மா முதலிய மாவுக்களுஞ்சிகளைக் கெட்டியாகக் காய்ச்சிக்கொடுக்கலாம். கொட்டி, சோறு முட்டை முதலியவைகளையும் கொடுக்கலாம். இவற்றால் மலம்பெருகி இறுகும்போது அதனுள்ளே மேற்படி வஸ்துவும் சேர்ந்து வந்துவிடும்.

மீன்முள், ஊசி, ஆணி முதலிய கூர்மையான வஸ்துக்களை விழுங்கிவிட்டால் தொண்டையில் கையிட்டு மெல்ல எடுக்கவேண்டும். இரும்பு வஸ்துக்களை ஊசிக்காந்தத்தினால் வெளியேற்றலாம். வயிற்றுக்குள் போய்விட்டால் மலங்கட்டும்படி முன்சொல்லிய பிரகாரம் செய்து மலத்துடன் வெளியேற்றலாம். இப்படிச் செய்வதினால் குடலுக்கு அபாயமிராது. ஜாதிக்காய் உபயோகிப்பதுடன் பெரிகாரிக் (Peregoric or Tinc. Camp. compound) ஐந்து துளி ஒருதேக்கரண்டி ஜலத்தில் தினம் காலுள்ளவேளை கொடுத்துக்கொண்டு வந்தால் மலம் இறுகும்.

சுண்ணாம்பை விழுங்கிவிட்டால் உடனே வாயில் ஒளிந்திருக்கும் சுண்ணாம்பை எடுத்துவிட்டு காடி (Vinegar) யில் ஒரு பெரிய தேக்கரண்டியளவு உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். காடி கிடைக்காவிடில் எலுமிச்சம்பழச்சாறு அதேயளவு கொடுக்கலாம். அதுவும் கிடைக்காவிடில் சுத்தமான நெய்யாவது நல்லெண்ணெயாவது ஒரு கரண்டி கொடுக்கலாம். அதிகம் சுண்ணாம்பு விழுங்கியிருந்தால் திரும்பவும் கால்மணி நேரஞ் சென்று அதே பிரகாரம் கொடுக்கலாம். வாய் வேக்காட்டிற்கு நல்லெண்ணெயைத் தடவவேண்டும். அல்லது கரிமஞ்சளை அரைத்துப் பூசலாம்.

வெந்நீர் அல்லது சூடான எந்த வஸ்துவையும் விழுங்கிவிட்டால் உடனே கோழிமுட்டையையும் பாலையும் சர்க்கரை கலந்து அடித்து, கால்மணி நேரத்திற் கொருதடவை ஒருமேசைக்கரண்டியளவு கொடுத்துவர வேக்காடு தணியும்.

தொண்டையில் அந்நிய வஸ்துக்கள் சிக்கிக்கொள்ளுதல்.

(Foreign Substances in the Throat and Air-Passages.)

தொண்டையில் இரண்டுகுழாயுண்டு. ஒன்று போஜனம்செல்வது மற்றொன்று சுவாசக்குழாய். போஜனம் செய்யும்போது மிடரென்று ஏங்கினால் ஆகாரம் சுவாசகுழாயில் சென்றுவிடும். இதற்குப் புறமேறுகிறது என்று சொல்லுவார்கள். சில சமயங்களில் வாயிலுள்ளபோஜனம், அல்லது ஏதாவதுவஸ்து மிடரென்ன தொண்டைக்குள் மாட்டி சுவாசத்தை நிறுத்துவதுண்டு. சுவாசக்குழாய் திடீரென்று அடைபட்டுப் போவதால் பிராணனுக்கு அபாயம். ஆதலால் உடனே வாயிலுள் விரலிட்டு யாயிலுள்ள வஸ்துவை எடுத்துவிட வேண்டும். புறமேறினால் முதுகில் கழுத்துப் பக்கமாக குத்தவேண்டும். உச்சகதியிலும் தட்டலாம். இதற்கும் சரிப்படாவிடில் டாக்டரை வரவழைக்கவேண்டும். அவர் கழுத்தை யறுத்து அதிலுள்ள வஸ்துவை எடுத்து உயிர் கொடுக்கக் கூடியவர். அப்படிச் செய்யாவிடில் மூச்சு முடிந்து உயிர் போய்விடும்.

செவி, மூக்குகளில் அந்நிய வஸ்துக்கள்.

(Foreign Substances in the Ear and Nose.)

காது, நாசித்துவாரங்களில் குழந்தைகள் சிலேற்றுப் பென்சில், புளியங்கொட்டை, குன்றிமணி, ஆமணக்குக்கொட்டை, கடலை முதலிய வஸ்துக்களை செலுத்தி விடுவதுண்டு. இவற்றை எடுப்பது சிரமம். ஆதலால் உடனே டாக்டர்களிடத்தில் கொண்டு போய் விட்டால் அவர்கள் இவற்றிற்காகவே வைத்திருக்கும் ஆயுதங்களினால் லேசாய் வெளிப்பே எடுத்துவிடுவார்கள்.

இரண்வைத்தர் கிடைக்காத இடங்களிலுள்ளவர்கள் இரண்டொருவான் தேங்காயெண்ணெயாவது, விளக்கெண்ணெயாவது இரண்டு மூன்று துளி காதிலும், மூக்கிலும் காதுக்குள்விட்டு அடைத்துவைக்கவேண்டும். அப்பால் வெதுவெதுப்பான சுடுதண்ணீரில் உப்பைப் கலந்து அந்த ஜலத்தைப் பிச்காரி குழாயினால் காதினுள் செலுத்தி காதை காலைமணி நேரமாவது சுதந்தம் செய்து கொண்டிருக்க அழுக்கு முதலியவை முதலாவது வெளிப்பட்டு, பிற்பாடு உள்ளிருக்கும் வஸ்துவும் வந்துவிடும். அப்படி வாராவிடில் பற்றுக்குறட்டிலால் லேசாய் மெதுவாய் இழுத்துவிடலாம்.

நாசித்துவாரத்தில் ஏதாவது வஸ்துவை இட்டுக்கொண்டால் வாயினுள் விசேஷ்ச் செலுத்தி நாசியின் உள்துவாரத்தை அடைத்துக்கொண்டு அடைபட்டிராத மறு நாசித்துவாரத்தில் வாயை வைத்துப் பலமாக உறிஞ்சினால் அடைபட்டிருக்கும் வஸ்து உடனே வெளியே வந்துவிடும். நமது நாட்டு ஸ்திரீகளில் அனேகர் இப்பழக்கம் தெரிந்தவர்கள்.

யாவரும் எளிதில் செய்யக்கூடிய கைகண்ட சில ஔஷத முறைகள்.

மேகரணக்களிம்பு.

ஆமடா துரிசு துத்தம் பொரிகாரந்தான்
அப்பனே சாம்பிராணி கற்பூரத்தோடு
ஏமடா ஏரண்ட எண்ணெயிட்டு
இயல்பாக அரைத்திடவே களிம்பதாகும்
தாமடாபின் வளித்துச் சிமிழில் வைத்து
தப்பாமல் இலவினுடை பஞ்சிலூட்டே
ஊட்டப்பா நாள்மூன்று போட்டாயானால்
உத்தமனே தீரும்வகை சொல்லக்கேளாய்
போமடா அரையாப்பு கண்டமாலை
கொடிதான நகச்சுற்று பிளவையெல்லாம்
தாமடா கண்டவுடன் சருகுபோலே
பறக்குமடா இதுஉறுதி திண்ணந்தானே.

(ஏரண்ட எண்ணெய்—ஆமணக்கெண்ணெய்.)

இரத்த சுத்திக்கு.

கெட்ட இரத்தம் சரீரத்தில் பரவுவதனாலுண்டாகும் மோகப்பரு, வெண்கொப்பளம், கரப்பன், சொரிசிரங்கு முதலிய சகல ரோகங்களும் நீங்கி இரத்தம் சுத்தியாகி, தாதுபுஷ்டியும் பலனுமுண்டாகும்படி இரும்புத் திராவகமாகிய (Syrup Ferri Iodide.) என்னும் மருந்தில் ஒரு அவுன்ஸ் வாங்கி அதில் வயதிற்குத் தக்கதி லேறக்குறைய பதினைந்து துளியை மலச்சிக்கலுள்ளவர்கள் ஒரு தேயிலைக்கரண்டி மீனெண்ணெயிலும் (Cod Liver Oil) மலச்சிக்கலில்லாதவர்கள் அரை ஔன்சளவு திராக்ஷாசத்தில் (Wine) தண்ணீர் கலந்தும் காலை மாலை சாப்பிட ரோகங்களெல்லாம் பறந்து போய் ரத்தம் சுத்தமாகித் தாதுபுஷ்டியும் திடகாத்திரமுமுண்டாகும்.

அஜீரணத்திற்கு.

வயிற்றுப் பொருமல், உப்பிசம், அஜீரணம், வயிற்றோட்டம் முதலிய நோய்களுக்கு மேற்சொன்ன சிரப்பெரி ஐயோடிட் (Syrup Ferri Iodide) டில் பத்துமுதல் பதினைந்து துளிவரை வயதுகளுக்குத் தக்கதை அரை ஔன்ஸ் தண்ணீரில் தண்ணீர் கலந்து சாப்பிடச் சுகமுண்டாகும். சிறு பிள்ளைகளுக்கு (Chlorodyne) கிளோரோடயின் அல்லது ஓமத்தீராவகம் கொடுத்தல் நலம்.

கண் புருவத்தி லுண்டாகும் மைக்கட்டிக்கு.

ஒருசிறு வெள்ளைத்துணியில் ஒரு தேயிலைக்காண்டி சோடாத்தூள் எடுத்து அதைக் கொஞ்சம் வெந்நீரில் நனைத்து இராமுழுவதும் கண்கட்டி இருக்கும் கண்ணில் கட்டி விடியற்காலத்தில் எடுத்துப் பார்த்தால் கொஞ்சங்குறைய முழுவதும் சுகமாய்ப் போகும்.

காதுவலிக்கு.

கொஞ்சம் கொடிக்கள்ளி இலையை விளக்கில் வாட்டிக் காதினுள் பிழிவதினால் அல்லது திருநீற்றுப் பச்சையிலையின் சாற்றை காதினுள் விடுவதினால் காதுவலி நீங்கும்.

நெருப்புப்பட்ட புண்ணுக்கு அல்லது கொதிக்கிற நீரை கை கால்களில் கொட்டிக்கொண்டால்.

உடனே தேங்காயெண்ணெய் அல்லது கல்லெண்ணெயில் சமபாகம் சுண்ணாம்புத் தெளிநீர் விட்டு அடிக்க உண்டாகும் வெண்ணெயைப் போட சுகமாகும். நமது நெருப்புக்காயத் தைலத்தை உபயோகித்தால் உடனே சுகமுண்டாகும். விலை ரூ. 1.

கண்ணில் தூசி விழுந்தால்.

கண்ணில் ஏதாவது தூசி துரும்பு விழுந்து உண்டாகும் கண்கரிபடை நீக்குவதற்கு இரண்டுநிமிஷம் கண்ணை மூடிக்கொண்டிருக்கவேண்டும். அப்போது உண்டாகும் கண்ணீர் தூசியை ஒரு பக்கத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். அல்லது கண்ணைக் கையால் திறந்து பிடித்துக்கொண்டு இலவம் பஞ்சியினால் துடைக்கக் கண்கரிப்பு நீங்கும்.

வெறிநாய்க் கடிக்கு.

வெறிநாய் ஒருவனைக் கடித்துவிட்டால் உடனே கார்பாலிக் (Carbolic) என்னும் திராவகத்தினால் அக்காயத்தைச் சுடவோ

மும். அதை ஒரு பஞ்சியில் தோய்த்து காயத்தின் உள்ளேவிட் டுப் பின்பு கொஞ்சம் வெந்நீரினல் அதை நன்றாய்க் கழுவவேண் டும். கர்பாலிக் திராவகத்திற்கு புண் உள்ளே எப்பக்கமும் ஊடுரு வீச் சென்று, காயத்திலிருக்கும் நஞ்சை அழிக்குஞ் சக்தியிருக்கி றது. கர்பாலிக் திராவகத்திற்குப் பதிலாக பினயில், (Crude Phynyle) நன்றாய்த் தடவலாம். (Caustic Potash, Caustic Soda, Nitrate of Silver, Nitric Acid) முதலியவைகளில ஒன் றை உபயோகிக்கலாம். ஆனல அவைகள் அதிக வேதனையைக் கொடுக்கிறது மல்லாமல் ஆழ்ந்த தழும்புகளையும் உண்டாக்கும். இப்படி வெறிநாய் கடித்த உடனே சுடுவதால் வேதனை சுகமாகி நஞ்சு முழுவதும் வெளியாகிவிடும்.

அக்காயங்களைச் சுடுகிறதற்கு வேண்டிய ஏதுக்கள் சமீபத்தி லில்லாவிட்டால், உடனே கொஞ்சம் உப்பை நல்ல தண்ணீரில் கலந்து அதைக்கொண்டு அக்காயத்தைக் கழுவவேண்டும். காயப் பட்ட இடத்தின் மேற்பாகத்தைக் கயிற்றினல் கட்டவாவது, காயத்திலிருக்கும் நஞ்சை வாயினல் உறிஞ்சி எடுக்கவாவது, அல் லது கத்தியினல காயப்பட்ட இடத்தைச் சுறண்டவாவதுகூடாது. உறிஞ்சி எடுக்கும்போது ஒருவேளை உறுஞ்சுகிற ஆளுக்கே அந் நஞ்சு தொற்றிக்கொள்ளும். கத்தியினல் சுறண்டுவதனலும் அவ் விஷநீர் சுறண்டப்பட்ட இடங்களிலெல்லாம் பாய்பிடிக்கும்.

வாய்வுக்கு.

இஞ்சியைத் தோல் நீக்கிச் சிறுபில்லைகளாக நறுக்கிவைத்துக் கொண்டு, அதோடு வெள்ளைப்பூண்டு அரிசியையும், திராக்ஷப் பழத்தையும் சேர்த்து, மூன்றையும் சட்டியில் போட்டு வறுத்து சாரசம் பண்ணின தேனுக்குள் போட்டு, கொஞ்சம் சீனியையும் சேர்த்து ஒரு சிறு ஜாடியில் அடைத்து வைத்துக்கொண்டு, கால் டியினல் எடுத்துக் காலை மாலை சாப்பிட்டுவர, வாய்வுநீங்கி, வயி றோட்டம், அஜீரணம் முதலியவை சுகமாகும்.

சுரத்துக்கு.

கொச்சி இலையோடு ஒரு துண்டு வசம்பு சேர்த்து உரலில் போட்டு இடித்துப் பிழிந்து சாறெடுத்து காலை மாலை சாப்பிட சுரம் நீங்கும்.

பத்தியம்:—உப்பில்லாக் கஞ்சி.

நெடுநோட் சென்ற சுரத்துக்குக் குடிநீர்.

நிலவேம்பு, பேய்ப்புடல், இஞ்சி, கொத்தமல்லி, சுக்கு, திராக்ஷப்பழம், மிளகு, வெள்ளைப்பூண்டு இவைகளைச் சேர்த்து ஒன்று இரண்டாய்த் தட்டி இரண்டுபடி ஜலம்விட்டு இரவில் அலம்பப் போட்டு அதிகாலையில் இறுத்துச் சாப்பிட நெடுநாட்பட்ட சுரம், பித்தசுரம் முதலியவை நீங்கிவிடும்.

சிலருக்கு இம்மருந்து சாப்பிட வாந்தியும் பேதியும் காணும். அதைநியப்படக்கூடாது. இது என் தகப்பாரின் கைகண்ட அனுபவம்.

ரணங்களுக்கு.

1. கரியபோளத்தோடு ரூமிமஸ்தகி சமன் சேர்த்து சமன் வெண்ணெயில்விட்டு அரைத்துப்போட சர்வ ரணங்களும் ஆறும்.

2 ஆட்டுக் கொழுப்பும், மஞ்சள் மெழுகும் உருக்கி அதில் குந்திரிக்கத்தைச் சேர்த்துக் காய்ச்சிப் போட்டுவர சகல மேகரணமும் காய்ந்துபோகும்.

சுகபேதி மருந்துகள்.

1. சிற்றாமணக்கெண்ணெய் அல்லது நிலவாரை வெந்நீர்க் கஷாயமாவது சிறு அளவு சாப்பிட பேதியாகும்.

2. கொஞ்சம் எப்ஸம்சால்டை ஜலத்தில் கரைத்துச் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம். அல்லது, (Eno's Fruit Salt) ஏனேஸ் புருட்சால்ட் இரண்டு காண்டியளவு ஜலத்தில் போட்டுச் சாப்பிடலாம்.

3. கொஞ்சம் கற்கண்டுத் தூளை மூன்றுபலம் வெந்நீரில் கலந்து சாப்பிடலாம்.

4. அரைப்பலம் தேனை நான்குபலம் வெள்ளாடுபாலில் அல்லது பசுவின்பாலில் கலந்து குடிக்கலாம்.

5. ஆமணக்கெண்ணெயில் நாதுகுளி எஸன்ஸ் ஆவ் பெப்பர்மன்ட் (Essence of Peppermint) விட்டுச் சாப்பிட மனதிற்கு ஆரோக்கியமான சுகபேதி அளிப்பதாகும்.

கை காலெரிவுக்கு.

தாளகூப்படழத்தைப் பிழிந்தெடுத்த ரசத்தில், இரண்டுத் தனை சீனிகலந்து, காய்ச்சி வற்பத் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு இரண்டு ரூபாயெடை இருவேளையும் ஜலத்தில் கலக்கு சாப்பிட பித்தச்சூடு, கைகாலெரிவு தீர்ந்து குளிர்ச்சியுண்டாகும்.

உஷ்ண சாந்தி.

எலுமிச்சம் பழங்களைக் கால்மணி நேரம் வெந்நீரில் போட்டெடுத்துப் பிழிந்த ரசம் ஒருபங்கும, கற்கண்டுப்பொடி அல்லது சீனி மூன்றுபங்கும் சேர்த்துப் பாகுபதமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு வேளைக்குக் கொஞ்சம்விட்டு இருபங்கு தண்ணீர் கலந்து சாப்பிட உஷ்ணம் தணியும். கில்வாதம் தீரும். சூரத்திலுல் உண்டாகும் தாகத்திற்கு சுரமிருக்குமபோதும் கொடுக்கலாம்.

தேற்படைக்கு.

பொன்னுவளைவேரோடு சந்தனங்கூட்டிப் பூசத் தேமற்படை மாறும்.

கீல்வாதத்திற்கு.

எலுமிச்சம்பழச் சாற்றில் சீரகத்தை ஊறவைத்து எடுத்து உலர்த்தி வைத்துகொண்டு காலை மாலை வெருகடிப் பிரமாணம் சாப்பிட்டு வரப் பித்தக்காங்கை, கைகாலெரிவு, கில்வாதம் முதலிய ரோகங்கள் தீரும்.

ஸ்நாந நறுமணத்தூள்.

பூலாங்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், சந்தனம், பச்சிலை, சடாமாஞ்சி, வாய்விளங்கம், கசகசா, கார்போக அரிசி, கிச்சிலிக்கிழங்கு, கோரன்கிழங்கு இவை சமன் சூரணித்து, ஸ்நானம் செயகையில் சமபங்கித்தலம அல்லது பன்னீர் தைலத்தில் குழைத்துப் பூசி ஸ்நானஞ் செய்துவர கற்றுணை நாற்றம் முதலிய தீர்வாசனை நீங்கும்.

மண்ணெண்ணெய் விளக்கெரிய.

இவ்விளக்குகள் சிலசமயங்களில் புகைந்தும் மங்கியும் எரிவதுண்டு. அதற்குக் காரணம் திரிகளிலடைந்திருக்கும் அழுக்கே. அவ்வழுக்கை நீக்க திரி நின்றெரியும் தகளியைச் சோடாப்பொடி கலந்த வெந்நீரில சிறிதுநேரம் ஊறவைத்து எடுத்துக்கொள்வதுமன்றித் திரியையும் காயவைத்து எடுத்துக்கொண்டால் பிரகாசமாய் எரியும்.

உரத்த கபால இடிக்கு.

1. காரமான தேயிலைக் கஷாயத்தில் சிறிது எலுமிச்சம் பழச் சாற்றை யூற்றிக் குடிக்கக் கபால இடி நீங்கும்.

2. கஸ்தூரிமஞ்சளைச் சாம்பிராணியுடன் அரைத்துப் பற்றுப் போட்டால் தலைவலிக்குத் திராமான மருந்தாகும்.

3. கொச்சிச் சாற்றை நஸ்யத்தில் தெளிப்பதினால் நிவர்த்தியாகும்.

தலைவலிக்கு ஆவி.

துளசியிலை, வேப்பிலைக்கு, கொச்சியிலை, பெய்ப்பிலைக்கு இலை, உத்தாமணி இலை, எருக்கலம் பழுப்பு, சிறுகீரைவேர், இவைகளை சமன் நிறையாய் எடுத்து இடித்துத் தண்ணீரில் போட்டு வேக வைத்திறக்கித் தலையில் மூக்காடிட்டு ஆவிபிடித்து, ஆவி அடங்கினதின் பின் ஒரு சென்கல்லைப் பழுக்கச் சுட்டு அதிற் போட்டு மறுபடியும் முன்போல் ஆவி பிடித்தால் தொண்டை வர்தனத் தலைப் பாரம் நீங்கும். ஆவி பிடித்தபின் காற்றில் போகலாகாது.

ஒருத்தலைவலிக்குப் பத்து.

1. மிளகை மூலைப்பாலில் அரைத்துக் கொதிக்க வைத்து நசமாறும்.

2. எலுமிச்சம்பழத்தைச் சுட்டுச் சாறு பிழிந்து அதிற் சுக்கு, மிளகு, திப்பிலி சமன் நிறையாய் அரைத்து நெற்றியிலும் உச்சியிலும் நசத் தீரும்.

கைகாலி லடிபடுவதா லுண்டாகுஞ் சுளுக்குக்கு.

ஒரு சிறு துணியில் உப்பைக்கட்டி அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி, அந்தப் பொட்டலத்தை எடுத்து வேதனையுள்ள இடங்களில் ஒற்ற சுகமாகும்.

பல் அசைவுக்கு.

அரையாழாக்கு உப்பில் பாதி எடுத்து ஒரு அகலில் போட்டு அதன்மேல் ஒரு சோராங்கொட்டையை வைத்து அதன்மேல் மறு பாதி உப்பையும் போட்டு ஒரு ஓட்டினால் மூடி, சில செய்து இரு பது எருவில் புடமிட்டு அவ்வுப்பை எடுத்து, தினந்தோறும், பல் தேய்க்கையுடன் ஆலம்விளாரினால் உடனே பல்தேய்க்கிவர பல்லாட்டம், பல்வலி நிற்கும். பல்லும் விழுகிறதில்லை என்று கேள்விப் படுகிறேம்.

சகல கழிச்சலுக்கு.

ஜாதிக்காய், ஜாதிப்பதிரி, இலவங்கம், ஏலம், அதிமதுரம், அதிவிடயம், அபின், கஞ்சா, குரோசாணி, முத்தக்காசு, வெங்காயம், சீரகம், சிறுநாகப்பூ, புளியாரை, காட்டகத்திப்பூ, மாதுளம்பிஞ்சு, வாழைமுப்பூ சமன் கூட்டி யிடித்து அடுப்பிலேற்றி பிட்டவியலா யவித்தெடுத்து வாழைப்பூச் சாற்றிலாவது, மாதுளம்பழச் சாற்றிலாவது அரைத்து, மிளகுபோல் உருண்டைசெய்சர்க்கரையில் கொடுக்கத் தீரும்.

(2) புளியாரை, வாழைப்பூ சமனுய் இடித்துப் பிட்டவிய லாய் அவித்துச் சாறுபிழிந்து தேன் ஒரு துளிவிட்டுக் கொடுக்கத் தீரும்.

கக்குவானுக்கு.

நாதுவனைச்சாறும், ஆவினெய்யும் சமன் கலந்து கோவ்டம் ஒரு மிராகனிடை தட்டிப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும். மயிலிறகு, மிளகு, சாம்பல் சமன் கூட்டி பொடிசெய்து ஆவினெய்யில் மத்தித்துக் கொடுக்கத் தீரும்.

சுகபேதி எண்ணெய்.

சாரள்னி, முருங்கப்பட்டை, மூக்கரைச்சாறினை வேர் இலை கசீர்ச் சமனெடுத்து தட்டிச் சாறுபிழிந்து அதற்குச் சமன் விளக்கெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கக் கரப்பன், சொரிசிரங்கு, மலபந்தம் தீரும்.

மாலைக்கண்ணுக்கு.

1. மின்னிட்டான் பூச்சியையும் வெற்றிலையையும் கசக்கிக் கண்ணில் பிழியத் தீரும்.

2. மின்னிட்டான் பூச்சி, அருகு, வெள்ளைச்சாரடை வேர் சமன் நிறை எடுத்து சதாப்பிலைச் சாறு விட்டரைத்து, திரிபோல் உருட்டி முலைப்பாலில் உரைத்துப் போட்டால் தீரும்.

3. வேப்பிலையை மைப்போலரைத்துக் கோழிப்பித்திற்குக் கஷாயம் செயத்து உமிக்காந்தலிற் சுட்டு கவசம் நீக்கி உள்ளுக்குக் கொடுத்தாலும் அல்லது மேற்படி பித்தை முன்போல் வெளுப்பி றுடித்து மூன்றுநாள் கண்ணில் தூவினாலும் தீரும்.

4. வெள்ளாட்டுப் பித்தில் மிளகு சிலவற்றைப் போட்டு 40-நாள் கட்டித் தொங்கவிட்டு அதன்பின் மிளகை எடுத்து உரிகண்ணில் போடத் தீரும்.

5. இலுப்பைப் பூவையாவது, காட்டாமணக்கின் முத்தையாவது, அழிஞ்சி விரையையாவது, மகிழ வித்தையாவது முலைப்பாலில் உரைத்துப் போடத் தீரும்.

கிருமிகளுக்கு.

புரசம்விளை னிரண்டெடுத்து சாணத்தில் பொதுவைத்துக் காலையிலெடுத்து மேல் தோலை நீக்கிப் பசையின்மிசை அரைத்துக் கொடுக்கப் பேதியாகும். வயிற்றிலுள்ள பூச்சிகள் கூட்டோடு விழும்.

சிறு கிருமிகளுக்கு.

மிதிப்பாவையிலை ஒருபிடி எடுத்து அதோடு ஆறு மிளகு வைத்து நிகழ அரைத்துக் கெச்சக்காய் பிரமாணம் கொடுக்கச் சிறுகிருமிகளெல்லாம் வெளியாகும்.

